கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

## எட்டாந்தொகுதி.

பத்திராசிரியர்—மு. இராகவையங்கார்.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1909—1910.

162483

"செந்தமிழ்" எட்டாந்தொகுதியின்

# உள்ளுறை.

அருச்சுனனும் பாண்டியமரபும்:—பத்திராசிரியர். ௪௭௯.

அவுரங்கஸீப் தர்பாரில் ஒரு பண்டித சிரோமணி:— } ஸ்ரீமத்-வி. சுப்பிரமணியஐயர். ௫௬௭

ஆங்கில மொழிக்கலப்பு:—ஸ்ரீமத்-அ. பொன்னையாபிள்ளை. ௧௨௧.

இந்திய அரசர் போர் வீரம்:—ஸ்ரீமத்-சி. கணேசையர். ௫௯௯.

இந்தியா இறைமாட்சி:— } ஸ்ரீமத்-எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர். [௨௭, ௭௫, ௧௨௪.

இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்:—ஸ்ரீமத்-சி. கணேசையர். ௯௧.

இருகண்ணொருமணி:—ஸ்ரீ-மத்-சி. கணேசையர். ௩௨௭.

உள்ளத்துணர்வு:—ஸ்ரீமத்-இராமசாமிவன்னியர். ௧௬௯, ௧௯

உள்ளத்தெளிவு:—ஸ்ரீமத்-இராமசாமிவன்னியர். ௨௫௮.

ஐந்திணைமாக்கள் பூர்வவரலாறு:—ஸ்ரீமத்-Y. S. டேலர் போதகர். [௪௫௭.

ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய வரலாறு:— } ஸ்ரீமத்-சி-கு. நாராயணசாமி [முதலியார். ௧௯.

ஓர் ஆசங்கை:—ஸ்ரீமத்-இராமநாதச்செட்டியார். ௫௨௨.

கதாசரித்சாகரம்:—ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்கார். ௧௫, ௯௯, ௧௫௪. [௨௩௮, ௨௭௧, ௩௪௪, ௪௪௧, ௫௪௧, ௯௧௦,

கம்பர் மதம்:—ஸ்ரீமத்-மு. வேங்கடசாமி நாட்டார். ௪௫௦.

கம்பளிப் பூச்சியைப்பற்றிய குறிப்பு:— } சென்னைவிவசாயசங்கத்தார் ௪௩௨.

கம்போடியாபருத்தி:— } ஸ்ரீமத்-B. V. இராமகிருஷ்ணையர். ௩௦௮. சென்னை விவசாயசங்கத்தார். „ ௪௨௭.

காவைவேலன்கோவை:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௨௧௯, [௨௯௬, ௩௩௯, ௪௩௫.

கல்வி:—ஸ்ரீமத்-முத்துரத்தினமுதலியார். ௩௮௫.

கலிங்கத்துப்பரணியாராய்ச்சி:—பத்திராசிரியர். ௫௩௪.

சங்கீதசாஸ்திரம்:—இசைத்தமிழன். ௫௧௫.

சானசுருதியரசன் கதை:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௬.

சிதம்பரசுவாமிகள் சரிதம்:—ஸ்ரீமத்-சி. கு. நாராயணசாமி [முதலியார். ௪௧, ௮௪.

சிலகேள்விகட்கு விடை:— } ஸ்ரீமத்-எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர். [௨௦௭.

சிலதனிப்பாக்கள்:—ஸ்ரீமத்-அ. சிதம்பரமுதலியார். ௫௨௩.

சிவராத்திரிபுராண அரும்பத விளக்கமும் பாடபேதமும்:— } ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக் [கவிராயர். ௬௨௩.

ஜீவர்க்குரிய உபந்யாஸங்கள்:— } ஸ்ரீமத்-வி. சுப்பிரமணிய ஐயர். ௧௮௪, [௨௩௦, ௩௧௫, ௩௫௫, ௩௯௭.

சுக்ரநீதி:—ஸ்ரீமத்-வி. ஸ்ரீநிவாஸாசாரியர். ௪௦௯, ௪௭௪, ௪௯௯.

செல்வமில்லாமை:—P. G. ௨௫௪.

சேதுபுராண அரும்பத விளக்கம்:— } ஸ்ரீமத்-ஆ. மூ. சோமாஸ்கந்தபிள்ளை. [௧௬௪, ௧௯௬, ௨௭௯, ௪௫௨.

சோதிடகணிதம்:—ஸ்ரீமத்-சோமசுந்தர தேசிகர். ௯௫, ௯௭, ௨௧௫, [௨௬௧, ௩௦௩, ௩௬௩.

தணிகைப்புராண அருஞ்செய்யுள் விளக்கம்:— } ஸ்ரீமத்-ஆ. மூ. சோமாஸ்கந்த [பிள்ளை. ௫௭௨.

தமிழ்ச்சங்கமும் ஈழநாடும்:—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௫௦௧.

தமிழ்ச்சொற் பிரயோக விவேகம்:— } ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை. ௬௩.

தமிழ்நாட்டில் வழங்கும் கண்ணபிரான்சரிதங்கள்:— } பத்திராசிரியர். ௧௭௧.

தமிழர் சீனரா?:—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௬௩௮.

தஸ்யுக்களும் திராவிடர்களும் சுதேசமித்திரன்:— } ஸ்ரீமத்-மஹேசகுமார சர்மா [மொழிபெயர்ப்பு. ௬௩௧.



திணைமயக்கம்:—ஸ்ரீமத்-சி. கணேசையர். ௧௧௫

திருக்குறட்பரிமேலழகருரை விளக்கம்:— } ஸ்ரீமத்-சி. கணேசையர். ௪௮௯.

திருக்குறளாராய்ச்சி:—ஸ்ரீமத்-அ. கோபாலையர். ௪௭, ௧௩௨, ௨௨௯, [௨௮௮.

திருவலஞ்சுழி:—ஸ்ரீமத்-தி. ப. சுப்பிரமணிய ஐயர். ௫௫௭.

தொல்காப்பியத்துக்கண்ட பழைய வழக்குகள்:— } பத்திராசிரியர். ௩௭௫, ௪௨௩, [௫௯௫.

நமதுபுராதன நாகரீகம்:—Mr. M. P. மாஸ்கரன்ஹாஸ். ௩௨௯.

நமது பூர்வகாலக் கப்பற்றொழில்:—ஒற்றன் ௫௪௯, ௬௪௨.

நல்லைவெண்பா:—ஸ்ரீமத்-ச. கந்தையபிள்ளை. ௪௯௪.

நல்லொழுக்கம்:—ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். ௩௮, ௧௫௦, [௨௦௦, ௨௫௦, ௨௮௪, ௩௫௩, ௪௦௪, [illegible].

பக்தி:—ஸ்ரீமத்- G. V. கோபாலசாமி நாயடு. ௬௦௩.

பத்திராசிரியர் குறிப்பு:— ௨௯௨.

பாடசாலை:—ஸ்ரீமத்-தி. சதாசிவ ஐயர். ௪௪௭.

பிரமதேவரும் திருவள்ளுவரும்:—பத்திராசிரியர். ௫௩௯.

புத்தகக் குறிப்பு:—பத்திராசிரியர்:—௯௮, ௧௧௦, ௨௬௯, ௪௧௯, [௪௭௭, ௫௩௭, ௬௫௨.

புறத்திரட்டிற்கண்ட பாடல்கள்:—பத்திராசிரியர். ௬௦௯.

பெரியபுராண அரும்பத விளக்கம்:— } ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை. ௫௫, ௯௬, [௩௨௦, ௩௭௧, ௪௧௩.

பேரகத்தியம்-வடபதப்படலம்:—பத்திராசிரியர். ௪௮௧.

பொருள்கோடல்:—ஸ்ரீமத்-சி. கணேசையர். ௨௬௭.

மதுரைநாயக்கர் ஸமஸ்தானம்:— } ஸ்ரீமத்-சே. ப. நரசிம்மலுநாயடு. ௫௮௭, ௬௧௭.

மதுவிலக்கு:—Rev. M. P. மாஸ்கரன்ஹாஸ். ௫௨௪, ௫௭௯.

மாதவிவாதம்:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. கஅக.
மிளகு:—சென்னை விவசாய சங்கத்தார். சஉகூ.
முத்தமிடலின்வரலாறு:—ஸ்ரீமத்-வி. சுப்பிரமணியஐயர். ருOஎ.
மூவகையான்மாக்க ளிலக்கணம்:— } ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் கOஉ. ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர். சகூஉ.
மேகஸந்தேச பரிசிலனம்:—ஸ்ரீமத்-எம். துரைசாமிஐயங்கார். கநஎ.
வடமொழி வியாகரணத்திற்கண்ட சில சரித்திரக் குறிப்புகள்:— } (Late) கு. ஸ்ரீநிவாசசாஸ்திரிகள். உசரு.
வியாழமண்டலம்:—P. G. சுசஅ.
விவசாயக்குறிப்புகள்:—சென்னை விவசாயசங்கத்தார். ருகச.
விவசாயிகளால் ஆளப்படும் டென்மார்க்குதேசம். } "சுதேசமித்திரன்" நகூந.
வேள்புலம்:—பத்திராசிரியர். ருகூ.
ஐப்பானில் பாய்பின் னுதற்றொழில்:— } ஸ்ரீமத்-வி. சுப்பிரமணிய ஐயர். கO.
ஸ்ரீ இருந்தவளமுடையார்:—பத்திராசிரியர். ககக.
ஸ்ரீசங்கராசாரியசுவாமிகளது மணிரத்தினமாலை:— } ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர். நஎகூ.
ஸ்ரீமாந்- காந்தியும் தமிழர்களும்:—'சுதேசமித்திரன்' உகச.
ஸ்ரீவால்மீகருந் தமிழ்வழக்குகளும்:—பத்திராசிரியர். க.

---

"செந்தமிழ்" எட்டாந்தொகுதியில் வெளிவந்தநூல்கள்.

[முடிந்தது.]

ஞானமிர்தக்கட்டளை:—ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர். [பகுதி எ, அ, கூ, கO.

[முடியாதவை.]

அகப்பொருள் விளக்க மூலமுமுரையும்:— } ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத்தேவர். [பகுதி உ, ச, ரு, அ, கக.
சங்கரசோழனுலா:—பத்திராசிரியர். பகுதி க, ந, ரு, எ.

---



கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-அ.] சௌமிய-ஹு கார்த்திகை மீ [பகுதி-க.

## ஸ்ரீவால்மீகருந் தமிழ்வழக்குகளும்.

யான் முன்பெழுதிய "ஸ்ரீவான்மீகருந்தென்னாடும்" என்ற வியாசத்தில், தமிழ்நாட்டியல்புகளும், இடைச்சங்கத்துக் கபாடபுரம் முசிரி என்ற பழைய பட்டினங்களும் வான்மீகத்தில் குறிக்கப்பட் டிருத்தலை விவரித்தேன். இனி, அவ்வான்மீகிமுனிவர் வாக்கால் தமிழ்வழக்குகள் சிலவற்றினுண்மை தெரியவருதலை இவ்வியாசத் துக் காட்டுவேன்.

க. வடக்கிருத்தல்:—இவ்வழக்கினைப் புறநானூற்றில், "மறத்த கை மன்னன் வாள்வடக்கிருந்தனன்"(சுரு) "புறப்புண்ணாணி வடக் கிருந்தோனே" (சுசு) என வருதலால் அறிக. வடக்கிருத்தலாவது- உலகவின்பத்தை முற்றும் வெறுத்துப் பட்டினிகிடந்து உயிர்துறத் தலாம். இதனை "பிராயோபவேசவிரதம்" என்பர் வடநூலார். சங்ககாலில், இவ்விரதம், அரசராலும் புலவர்களாலும் கொடியதுக்க காலங்களில் நிகழ்த்தப்பெற்றது. சேரன் பெருஞ்சேரலாதன் என் பான், சோழன் கரிகாற்பெருவளத்தானோடு போர்செய்து முதுகிற் புண்ணுற்று அதற்கு நாணி, வடக்கிருந்தான். கோப்பெருஞ்சோ ழன், தன்மேற் பகைகொண்ட தன மக்களிருவரோடும் போர்க்கெ ழுந்தகாலத்தில், புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும்புலவரால் சமா தானஞ்செய்யப்பட்டுத் தன்னரசை அவர்கட்களித்துத் தான் வடக் கிருப்பானாயினன். அக்கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த செய்தி கேட்டு அவனுருயிர் நண்பர்களாகிய, பிசிராந்தையார், பொத்தியார் என்ற புலவர்களும் அவ்விரதம்பூண்டனர். அம்மட்டோ! தம்மூழி

ரினுஞ்சிறந்த வேள் - பாரியின் பெரும் பிரிவுக்காற்றாது புலவர் பெருமானாகிய கபிலரும்,

"மலைகெழு நாட மாவண் பாரி
* * *
இம்மை போலக் காட்டி யும்மை
யிடையில் காட்சி நின்னோ
டுடனுறை வாக்குக வுயர்ந்த பாலே."

என்று இரங்கக்கூறி, வடக்கிருந்து உயிர்நீத்தனர். வடக்கிருத்தலென்பது இங்ஙனம் பட்டினிகிடந்து உயிர்நீத்தலேயென்பதை அவ்விரதம்பூண்ட கோப்பெருஞ்சோழனைப் பூதநாதனார் என்ற புலவர்,

"உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழன்
முழூஉ வள்ளூர முணக்கு மள்ள
புலவுதி மாதோ நீயே
பலரா லத்தைநின் குறியிருந் தோரே." *

என்று பாடுதலானு முணர்க.

இத்தகைய அரியவிரதம் தற்கொலையாகாது சநாதன தர்மங்களில் ஒன்றாக அக்காலத்திற் கருதப்பட்டது. இராமாயணத்தில், அங்கதன், பிராட்டியை எங்குந்தேடியுங் காணாமையால், மற்றவானரர்களோடு உயிர்துறக்கத்துணிந்து, பின், தண்ணீர்குடித்துவிட்டுப் பூமியில் தெற்குமுகமாகப்பரப்பிய தருப்பையின்மேல் கிழக்குநோக்கியிருந்துகொண்டு பிராயோபவேச விரதம் பூண்டான்—என்று கிஷ்கிந்தாகாண்டம் ௫௩-ம் சருக்கத்திற் கூறப்படுகின்றது. ஆனால், "வடக்கிருத்தல்" என்னுந் தமிழ்வழக்குக் கேற்றசொல் வடமொழியிற் காண்டலரிதாயினும், அவ்விரதம்பூண்டோர் தம்மூர்க்கு வடதிசையிற் சென்று அதனைச்செய்தல் மரபென்று கருதத்தக்கது; என்னை? புண்ணியதிசையாகிய வடக்கே எல்லாச் சற்கருமங்கட்கும் ஏற்றவிடமாதலாலென்க. ஸ்ரீ ராமபிரான் பிரிவுக்காற்றாத அயோத்தியாநகரத்து ஜனங்கள் கூற்றாக, வான்மீகிமுனிவர், இராமனுடன்

* இதன்பொருள்:—ஆற்றிடைக் குறையுள், புள்ளிகொண்ட மரநிழற்கணிருந்து உடம்பாகிய முழுத்தசையை வாட்டும் வீரனே! நின் கருத்திற்கேற்ப நின்னோடு வடக்கிருந்தார் பலராதலால், யான் இதற்குதவாது பிற்பட வந்ததற்கு என்னை நீ வெறுக்கின்றாய் என்பது.



செல்லற்கியலாத நாம் "இவ்விடத்தே உபவாசத்தால் உயிரைவிடுவோம். அன்றி, கீழேவீழ்ந்து இறக்கும்வரை வட **திசைநோக்கிச் சென்றுகொண்டிருத்தலா**கிய மகாபிரஸ்தான விரதத்தை மேற்கொள்வோம்" என்று அயோத்தியாகாண்டம் ௪௮-ம் சருக்கத்திற் கூறியிருக்கின்றார். இதனால், பட்டினிகிடந்துயிர்துறப்போர் வடதிசைசேறல் மரபென்பது தெரியவருதலின், வடக்கிருத்தல் என்னுந்தமிழ் வழக்குத் தெளிவாதல் காண்க. பட்டினிகிடந்து உயிர்நீக்கும் விரதத்தில், வடக்குமுகமாகச் சென்றுகொண்டே இறத்தலொன்றென்றும், இதற்கு மகாபிரஸ்தானமென்பது பெயரென்றும்; மற்றொன்று வடதிசையில் ஓரிடத்தில் தங்கி இறத்தலென்றும், இதற்கு வடக்கிருத்தல் அல்லது பிராயோபவேசம் என்பது பெயரென்றும் உணர்க.

**௨. மலையாத்திக்கோடி:**—சோழவரசர்க்கு ஆத்திமாலை உரித்தாகச் சொல்லப்பட்டுள்ளது. இவர்கள் சூரிய வமிசத்தாராகவும், ஸ்ரீராமபிரானுடைய முன்னோர்களையே இவர்க்கு முன்னோராகவும் கூறப்படுதலைக் கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களால் அறிக. இச்சோழர்க்கு ஆத்தி சின்னமாகக்கூறப்பட்டிருத்தல் போலவே இராமவமிசத்துக்கும் ஆத்திச்சின்னங் கூறப்படுகின்றது. இதனை வால்மீகம், அயோத்தியாகாண்டம் ௮௪-ம் சருக்கத்தில், பரதனுடைய சைந்நியத்தைப்பார்த்துக் குகன் இக்ஷ்வாகு வமிசத்துச்சக்கரவர்த்திகளுடைய **மலையாத்திக் கோடியுடன் கூடிய மகாரதம் (கோவிதாரத்துவசம்)** ஈதோ தெரிகின்றது." எனக் கூறுவதால் உணர்க. இதனால், அவ்விக்ஷ்வாகு வமிசத்தவராகச் சொல்லப்படும் சோழர்கள் தம் முன்னோர் கொடியாகக்கொண்ட ஆத்தியையே தாம் மாலையாகத் தரித்தவராதல் தெளியப்படும். இனிச் சேரர்க்குப் பனம்பூமாலை கூறப்படுதற்கும் வான்மீகத்தால் ஓர் பொருள்கொள்ளக் கிடக்கின்றது. கிழக்கு மேற்குத் திசைகளின் எல்லையாக, முத்தலையும் பத்துத்தலையுமுடைய பனைமரங்கள் ஆண்டுத்தேவர்களால் நாட்டப்பட்டுள்ளன என்று, கிஷ்கந்தாகாண்டத்தில் வானரர்களை நாடவிட்ட சருக்கங்களிற் கூறப்படுகின்றது. சேரர், மேற்றிசையரசராதலின், கீழ்மேலோடிய தேசமுழுமைக்குந் தாங்களே உரியவரென்பதைச் சூசிப்பதற்கு அத்திசைகளில் எல்லையாகவைத்த பனையைத் தங்கள் சின்னமாகக்கொண்டனர் எனல் தக்கதுபோலும்.

**தமிழ்மக்கள் பூச்சூடுதல்:**—தமிழரசர் போர்க்குச் செல்லும்போது அதற்கென்று ஒருவகைப் பூவும், தங்குலத்திற்கென்று ஓர் அடையாளப் பூவும்—ஆக இருவகைப்பூவுடையரென்பது பழைய தமிழ் நூல்களால் அறியப்படுகின்றது, அன்றியும் நிரைகவர்தல் நிரைமீட்சி முதலாக நிகழும் போர்த்தொழில்களில் ஒவ்வொன்றற்கு ஒரு பூச்சூடிச்செல்லுதலும் மரபாம். இப்பூப்பற்றியே வெட்சி, கரந்தை, உழிஞை, வஞ்சி என அப்போர்த்துறைகள் பெயர்பெறுதலுங் காண்க. இவ்வாறே, அகப்பொருட்டுறைகளாகிய புணர்தல், பிரிதல் முதலியவைகளும், குறிஞ்சி பாலை என அவ்வந் நிலத்துக்கேற்ற பூப்பெயரானே வழங்கப்படும். இவற்றால் தென்னாட்டார் பூவணிவதிற் கொண்டிருந்த பெருவிருப்பம் புலனாம். இவ்வழக்கத்தையே, வான்மீகிமுனிவர், அயோத்தியாகாண்டம், கூகூ-ம் சருக்கத்தில் பரதன் கூற்றில்வைத்து "நமது யுத்தவீரர்கள் மேகங்களைப் போன்ற கறுத்த கேடயங்களுடன், **தென்னாட்டாரைப்போலத் தலைக்கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர்.**" எனக் கூறுதல் கவனிக்கத் தக்கது. சேனைவீரர் பூச்சூடுதற்குத் தென்னாட்டுமக்கள் சூடுதலை உவமையாக்குதலால், அம்மக்களை வீரராகக்கொள்ளுதலே பொருத்தம். அன்றிப் பொதுவில் ஜனங்களெனினுமாம். இங்ஙனம் பூச்சூடுதல் தென்னாட்டார்க்கு மிகச்சிறந்த வழக்கமென்பதை வால்மீகியார் நன்கறிந்து கூறுதல் கண்டுகொள்க.

**திருவெண்காடு:**—வால்மீகியார் தென்னாட்டைப்பற்றிக் கூறிய செய்திகளில் மிகமுக்கியமானது இவ்விஷயம். ஸ்ரீராமபிரான் கணையால், கரன் பூமியில் மாண்டுவிழுந்ததைக் கூறும்போது,

> ஸ பபாத கரோ பூமௌ தஹ்யமாந: சராக்நிநா ।
> ருத்ரேணைவ விநிர்தக்த: ச்வேதாரண்யே யதாந்தக: ॥

**இதன்பொருள்:**—சுவேதாரண்யத்தில் ருத்திரனால் தகிக்கப்பட்டு அந்தகன் மாய்ந்ததுபோல, கரன், இராமருடைய சராக்கினியால் தகிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான் என்பது. வான்மீகத்துக்கு உரையிட்டவர்களில் தீர்த்தர், சுவேதாரண்யமென்பது காவேரி கடலுடன் கலக்குமிடத்து உள்ளதென்பர். அஃதாவது இப்போதுள்ள திருவெண்காடென்னும் சிவஸ்தலமேயாம். காவேரிக்கரையிலுள்ள சுவேதாரண்யத்தில் அந்தகாசுரன் என்பவனைச் சிவபிரான் எரித்துக்கொன்றது புராணப்பிரசித்தி என்பர் திலகர். இப்பொருளில் அந்தகன் என்பதிலுள்ள தகரம் வடமொழியில் நான்காவதாம். அத்திலகரே அந்தகன் எனப் பாடங்கொண்டு, (இதனில், தகரம் முதலாவது). சுவேதாரணியத்தில், சிவபிரான் மார்க்கண்டேயருயிர்காத்தற்பொருட்டு யமனைக்கொன்ற சரிதம் அத்தலமான்மியத்துள்ளதாகலால் வால்மீகி அதனைக்குறித்தாரென்றுங் கொண்டார். இச்சரித்திரம் திருவெண்காட்டுக்கடுத்த திருக்கடவூரில் நிகழ்ந்ததென்பது பிரசித்தமாயினும், அவ்விருதலமும் சுவேதாரணியமென்ற பிரதேசத்தைச்சார்ந்து ஒரேசரித்திரத்துக்குரிமை பூண்டனவென்று கொள்ளுதல் இழுக்காது. திருக்கடவூர்போலவே, திருவெண்காட்டிலும் யமனையுதைத்தசரிதம் நிகழ்ந்ததென்பதற்கு, சம்பந்தமூர்த்திகள் தேவாரத்தில்,

> "வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
> மாலைமலி வண்சாந்தால் வழிபடுநான் மறையவன்றன்
> மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்றூத
> ராலமிடற் றானடியா ரென்றடர வஞ்சுவரே."

> "கோள்வித் தனைய கூற்றந் தன்னைக் குறிப்பினான்
> மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்து மாணிக்கா
> யாள்வித் தமர நுலக மளிப்பா னூர்போலும்
> வேள்விப் புகையால் வான மிருள்கூர் வெண்காடே."

என்ற பாசுரங்களில் அச்சரிதம் அத்தலத்துக்குரியதாகக் கூறப்படுதலே தக்கசான்றாம். இவற்றால், வான்மீகியார் வாக்கால் தென்னாட்டுத் தலமான்மியங் கூறப்படுதல் காண்க.

இன்னும் முற்காலத்தில் தென்னாட்டிலிருந்த கொடியவர்களாகிய அரக்கர்செய்கைகளில், அவர்களிறந்தால் எரிக்கப்படாது புதைக்கப்படுதல் ஒன்று. விராதன் என்ற அரக்கன் சாகுந்தருணத்தில் இராமலக்ஷ்மணர்களை நோக்கி, "என்னைக்குழியில் அடக்கஞ்செய்துவிட்டு க்ஷேமமாய்ப் போங்கள்; இறந்துவிட்ட அரக்கர்களை அடக்கஞ் செய்வதே பழமையான தர்மம்." என்று கேட்டுக்கொண்ட

தாக ஆரணியகாண்டம் நாலாம் சருக்கத்திற் கூறப்பட்டுள்ளது. இது, பழந்தமிழர்கொண்ட முறையுமாம். இனி வாதாபி இல்வலன் கதையை இராமபிரான் தம்பிளவற்கு எடுத்துரைக்குமிடத்தே, இல்வலன் பிராமணவேடந்தரித்து, தம்மவர்க்குரியதல்லாத ஸம்ஸ்கிருதபாஷையைப் பேசிக்கொண்டுவந்ததாகக் கூறுவதால், அரக்கர்கட்கு வடமொழி அந்நியபாஷையாயிருந்ததென்பது தெரியவருகிறது. இவ்வாறே, வான்மீகத்தால் அறியப்படும் தமிழ்வழக்குகள் சில குறிக்கப்பட்டன. சமயம்வாய்த்துழி மற்றுமுள்ளனவற்றை விளக்குவேன்.

பத்திராசிரியர்.

---

உ

சிவமயம்.

# சானசுருதியரசன் கதை.

சாமவேதசம்பந்தமாய் விளங்குஞ் சாந்தோக்கியோபநிடதத்திலே நான்காம் பிரபாடகத்திலே முதலாங்கண்டத்திலும், இரண்டாங்கண்டத்திலும், சேதுபுராணத்திலே முத்தீர்த்தச் சருக்கத்திலும் வித்தாரப்பெற இந்தச் சானசுருதியரசன்கதை சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டும் ஒன்றற்கொன்று சிறிதுவேறுபாடுளவாயினும் பொருண்முடிபில் வேறுபாடில்லை. இங்கே சாந்தோக்கியத்தை அநுசரித்து இடையிடை சேதுபுராணத்தையுந் தழுவிக்கூறுதும்.

முற்காலத்திலே பெருஞ்செல்வனும், பெருங்கொடையாளனும், தருமகுணசீலனுமாய் அரசனொருவன் இருந்தான். அவன் தனது நாட்டிலுள்ள நகரிகளிலும், வீதிகளிலும், நாற்சந்திகளிலும், பெருவழிகளிலும், மற்றையிடங்களிலும் அன்னசாலைகள் தாபித்து, அங்கே போக்குவரவுசெய்யுஞ் சனங்களை மதித்து இருத்தி அவர்களுக்கெல்லாம் அன்போடும் அன்னங்கொடுத்துப் பெரும்புகழ்படைத்து விளங்கினன். அவன்பெயர் சானசுருதி என்பர். சானசுருதி என்பது சனசுருதி என்பவன்மரபிற் பிறந்தவன் எனப்பொருள்படுந் தத்திதாந்தநாமம். புத்திரன் என்றும் அரசன்புதல்வன் என்றும், அதனாற் பவுத்திரன் என்னும் பெயரையும் அடைந்தான் என்றும் சேதுபுராணம் கூறும்.



## சேதுபுராணம்.

சானசுருதி யபிதானந் தாணிருபன் புத்திரன்சேய்
ஆனமுறையாற் பவுத்திரனென் றறையும்பெயரு மடைந்துள்ளான்
தீனர்விழைவு தீர்க்கையினாற் சிரத்தாதேய னெனப்பட்டான்
மேனிதழைப்ப வட்டுதவி வெகுபாக்கியனுந் தானானான்.

அபிதானம் - நாமம். சேய் - மகன். தீனர் - வறியவர். விழைவு - விருப்பம். சிரத்தாதேயன் - சிரத்தையினிலைப்பவன். சிரத்தை - தருமகாரியத்திலன்பு. அட்டுதவி - (உணவுகளைப்) பாகஞ்செய்துகொடுத்து. பாக்கியன் - பயனடைந்தோன்.

பருப்பின்பொருப்புநெய்க்நதியும்பழத்தோடலம்பும்பாற்கடலும்
விருப்பினறியகறிவகையும்வேண்டும்பிறவுமுனவாக்கிக்
கருப்புக்குறையுமுயிர்வளர்க்குங்காதலனைப்போற்கரைந்தன்பால்
திருப்பிகிறுவிவருவார்க்குஞ்செல்வாரெவர்க்குஞ்சிறந்தளிப்பான்.

கரு - புக்கு - உறையும். அனை - அன்னை. கரைந்து - அழைத்து. திருப்பி - மறித்து.

இந்தச்சானசுருதியரசன் இங்கப்பிரகாரம் அன்னதானஞ்செய்து பெருங்கீர்த்திபெற்று விளங்கும் நாள்களிலே இவனை ஆட்கொள்ளுமாறு கருதிய முனிவருந்தேவரும் அன்னப்பறவைகளின் வடிவங்கொண்டார்கள். பின்னர் அந்த அன்னப்பறவைகள் இந்தச் சானசுருதியரசன் வசிக்கும் மேல்வீட்டுக்குமேலே பறந்துபோயின. போகும்போது முன்னர்ச்செல்லும் அன்னத்தைப் பின்னர்ச்செல்லும் அன்னமநோக்கிப் பலாக்க! இந்த மேல்வீட்டில் இருக்கும் சானசுருதியரசனை நீ துதியாமற் செல்வது நீதியன்று; இவனோ தருமகுணசீலன். இவனுடைய காந்தி பாண்டும்பரந்து செறிந்திருக்கின்றது. துதியாதுபோகுங்கால், அது உங்கள் தோகைகளையெல்லாம் எரித்துவிடும் என்று சொல்லிற்று. பலாக்கன் என்பதற்கு உரைகாரர் கூறு

ம்பார்வையுடையவன் என்று பொருள்கூறுவர். பலாக்கன் என்பது சேதுபுராணத்திலும் வருகின்றது.

### சேதுபுராணம்.

நிற்றிநிற்றிநீபலாக்கநீடுசேர்மராளகா
வெற்றியோடுவிரகசானசுருதியிந்தமேனிலத்
துற்றுளானிவ்வாறுதானுணர்ந்திலாய்கொலுள்ளமேற்
சற்றுமெண்ணிலாமலந்தர்தம்மினேகுகின்றியால்.

மராளகன் - இராசவன்னம். மேனிலம் - மேல்வீடு. அந்தர் - குருடர். முன்னர்ப்பலாக்கன் என்றதும் அரசனை நோக்காமை கருதிப்போலும். முன்னர்ச்செல்லும் அன்னப்பறவை இவ்வார்த்தைகளைக் கேட்டு அதனை நோக்கி நீ இந்த அரசனை வியந்துபேசுவது நீதிதானோ? இந்தச்சானசுருதி யரசனோ சிறியன்! உண்மை தெளிகிலாதவன்! அறிவிலாத மருளன்! மூகன்! அவலன்! வஞ்சன் எனக்கு இவனை வியந்து கூறற்க. பண்டியிற்செல்லும் இரைக்குவமுனிவனையே பாக்கவியந்துரைக்குக. அம்முனிவன்போன்ற தருமகுணசீலனும் தத்துவஞானியும் இவ்வுலகில் வேறில்லை" என்று சொல்லிற்று.

### சேதுபுராணம்.

இறையினீடு மிவனிழைத்த தருமம்யாவு மீறுறும்
பிறையினோடு கட்டும்வேணி சரணிலன்பு பெற்றசீர்
மறையினோன் மனத்திலுண்மை ஞானமென்று மாய்வுறு
நறையநாடின் முனிரயுக்கு வன்றன்மேன்மை யறைதிநீ.

இவனிழைத்த தருமம் யாவும் என்றது சானசுருதியரசன் செய்த தருமங்களை. பிறையினோடு கட்டும் வேணி - சிவபிரான். மறையினோன் என்றது இரைக்குவமுனிவனை. நீ என்றது பின்னர்ச்செல்லும் அன்னத்தினை.

அந்த இரைக்குவ முனிவன் யாவன்? என்று பின்னர்ச்செல்லும் அன்னப்பறவை வினவிற்று. சூது விளையாட்டிலே பகடையென்னுந் தாயமடைந்தவனுக்குப் பின்னுள்ளதாயமெல்லாந் தானேவந்து சாருதல்போல உலகத்திலே சனங்கள் செய்யுந்தருமங்களின்



பலங்களெல்லாந் தானே வந்து தன்னையடையுந் தவவலியுடைய தத்துவஞானி எவனோ அவனே என்று முன்னர்ச்செல்லும் அன்னஞ் சொல்லிற்று.

இந்த அன்னங்கள் ஒன்றற்கொன்று தன்னைச்சுட்டிக் கூறிய சம்பாஷணையை மேல்வீட்டிலிருந்த சானசுருதி யரசனும் கேட்டுத் தன் செயல்களிலே வெறுப்புற்றுத் தன் குறைவையுஞ் சிந்தித்து இரைக்குவ முனிவனை எய்தி உய்திபெறவேண்டும் என்னும் இச்சையோடும் நித்திரைசெய்தான். பின்னர் வைகறையிலே நித்திரைவிட்டெழும்பும்பொருட்டு வைதாளிகர்கள் வந்து துயிலெடைநிலை பாடினார்கள். அரசன் அவர்களைநோக்கி இரைக்குவ முனிவன் என்று என்னை நீவிர் எண்ணியிருக்கின்றீர் போலும! இம்மங்கல கவிகளுக்கு யான் தக்கவனல்லேன். இரைக்குவன் எனப்படும் முனிவரே இதற்குத் தக்கவர். அவர் பிரமஞானிகள் வசிக்கும் பெருங்காடு, நதிதீரம், மலைச்சாரல் முதலிய தனியிடங்களிலே வசிப்பார். அவரைப் போய்த் தேடிப்பார்த்துக் கண்டுகொண்டு இருக்குமிடத்தை எனக்கறிவிக்கக் கடவீர் என்றான். வைதாளிகர் - பலவித தாளங்களோடுந் துயிலெடை நிலைபாடுவார்.

### சேதுபுராணம்.

மூடவனுன முனிவையெய்தி மூந்தைஞான மடையவே
கடலனென்று கெடியவேலை கையினீந்து வார்கள்போற்
படரிருட்க ழித்தெழுச்சி பாடுவார்கள் பாடல்கேட்
டெல்வருந்தி ஞெரின்மெல்ல வற்றெழுந்து பின்னரே.

மூடவனுன முனியை என்றது இரைக்குவ முனிவனை. மூந்தை ஞானம் - தத்துவஞானம். வேலை - கடல். எழுச்சிபாடுவார்கள் - வைதாளிகர்.

பின்னர் வைதாளிகர்கள் காடுகளிலும் மலைகளிலும் வேறுவேறிடங்களிலுந் தேடித்திரிந்து ஒருபடி இரைக்குவ முனிவனைக்கண்டுகொண்டு அவனிருக்கும் இடத்தை அரசனுக்குச் சொன்னார்கள். அரசனும் நன்றென்று மகிழ்ச்சியுற்று பசுக்கள் அறுநூறு, [illegible]சரம் ஒன்று, வண்டி ஒன்று என்னும் இவைகளோடு தனது குமரி

யையும் அழைத்துக்கொண்டு முனிவனிருக்குமிடம்நோக்கிச் சென்றான். சென்று முனிவனைக்கண்டு முனிசிரேஷ்டரே! இவைகளைப் பெற்றுக்கொண்டு பிரமஞானத்தை எனக்கருளல்வேண்டும் என்று பிரார்த்தித்தான். (சேதுபுராணம் சிறுமியைக் கொண்டுபோன செய்தியை விலக்கும்.)

இரைக்குவமுனிவன் "சேலுலாவு கடலுடுத்த செகதலப்பொருள்களாற், சாலுமோன முனிவர்சிந்தை தானிறைக்க லாகுமோ" என்றுசொல்லி அப்பொருள்களை வேண்டாமென்று முற்ற நீக்கிவிட்டுச் சானசுருதியரசனுக்குப் பிரமஞானத்தை உபதேசித்தான்.

தானதருமங்களை யடைதலினுந் தத்துவஞானத்தை யடைந்து கொள்ளுதல் விசிட்டம் என்பதும், தருமதாதாவினுந் தத்துவஞானி விசிட்டன் என்பதும் இதனாற்பெறப்படும்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.
சுன்னாகம்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# ஜப்பானில் பாய்பின்னுதற்றொழில்.

கைத்தொழில்வன்மையால் முன்னுக்குவந்த தேசம் ஜப்பான். ஐரோப்பாவிற்குப் பிரித்தானியா எப்படியோ, அப்படியே ஜப்பான் ஆசியாகண்டத்திற்கும். ஜப்பான்தேசத்துச் சிறுவர்கள் விளையாட்டாகச் செய்யும் நீர்ச்சக்கிரங்கள், பெரிய இயந்திரங்கள் ஓட்டச்சாதகமாயிருக்கின்றனவென்றால், அத்தேசத்துக் கைத்தொழில்வன்மை பெரிதும் ஆச்சரியிக்கக்கூடியதாகுமன்றோ? ஜப்பானியக்கொள்கைகள் பல அனுஷ்டிக்கப்பட்டால், நம்நாடு கைத்தொழில்களில் ஒருகால் மேம்படாதா? கைத்தொழிலபிவிருத்தி இந்தியாவில் உண்டாகவேண்டுமானால், சில விஷயங்களில் ஜப்பானின் மாதிரிகளைத் தள்ளாது கைக்கொள்ளல் வேண்டியதவசியமேயாம். ஜப்பானில் செய்யப்படும் கைத்தொழில் வேலைகள் பலவற்றில் பாய்பின்னுந்தொழிலைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். இவ்வேலை ஒவ்வொரு ஜப்பானிய வீட்டிலும் புருஷ, பெண்டு, பிள்ளைகளும் ஓயாது தம் ஒழிவு நேரங்களிலும், பிறசமயங்களிலும் செய்யும் வேலையாய் இப்போதும் இருந்துவருகிறது. இவ்வேலையைப்பற்றி முதன்முதலில் அவ்விராஜாங்கத்தில் 1888-ஆம் வருஷத்திற்றான் கணக்கெடுக்கப்பட்டது. அப்போது இவ்வேலை அங்கு அவ்வளவு மும்முரத்திலிருந்ததில்லை. ஆனால் நாளாவர்த்தியில் அக்கைத்தொழில்வேலை நன்குவிருத்திக்கு வந்தது. பின்னர் இப்பாய்களும், இவற்றின் மகிமைகளும் வெளியாகி, வெளியில்நானுதேசங்களுக்கும், ஏற்றுமதிசெய்யப்படும்படியாயிற்று. 1907-ஆம்வருஷத்தில் ஜப்பானிலிருந்து வேற்று நாடுகளுக்கு 22,000 பவுனிலிருந்து, 584,000-பவுன் வரையிலும் விலைமதிப்பான கோரைப்பாய்கள் ஏற்றுமதியாயினவென்றால் இக்கைத்தொழில் விருத்தி அப்போது எவ்வளவு விருத்திமுகத்திலிருந்திருக்கிறதென்பது சொல்லாமலே அறியலாம். பிரிட்டிஷ் வியாபாரிகளே இவ்விதக்கைத்தொழிலபிவிருத்திக்கு முதலில் காரணபூதராயிருந்தார்களென்றாலும், மற்றைய ஐக்கிய மாகாணங்கள் (United states.) பலவும், இக்கோரைப்பாய்களுக்குக் கிராக்கியுண்டுபண்ணினதால், பின்னும் அப்பாய் வியாபாரம் பலத்தது. ஜப்பானில் ஜங்கஸ் கம்மூனிஸ் (Juncus and communis) என்னும் லத்தீன் (Latin) பெயர்கொண்ட கோரைப்புற்களினால், இப்பாய்கள் பின்னப்படுகின்றன. இக்கோரைப்புற்கள், ஜப்பானின் நெல்வயல்களின் ஓரங்களில் விசேஷமாய்ப் பயிராகின்றன. இக்கோரைப்புற்களை அவர்கள் தகுந்த எருப்போட்டுப் பராமரிக்கிறார்கள். இவைகளை வளர்ந்தபிறகு வெட்டி, வெயிலில் காயவைக்கிறார்கள். இவைகளின் நீளங்களையும், குட்டைத்தன்மையையும் அநுசரித்து, தரவாரியாய் எடுத்து அவசியமானால் சாயத்திலேயும், தோய்த்தெடுத்து, பந்தோபஸ்தானவிடங்களில் சேகரித்து வைக்கிறார்கள். இவைகளைத் தறிகளினுதவிகொண்டு பலவிதப்பாய்கள் அலங்காரமான மாதிரிகளாயும் பின்னப்படுகின்றன. கைத்தறி நெய்வதில் அதற்கு நீரோட்டச்சக்தியும் (Water power) உபயோகப்படுத்தப்படுகின்றது. ஜப்பானின் சிறிதுபாகங்களில் பாய்பின்னும் ஜனங்கள் சொந்தத்தறியையோ, இரவற்றறியையோ, உபயோ

வப்பயிர்களுடன் நில்லாது, வர்த்தகசாலைகளிலும் புகுந்து, பாய் பின்னும் தொழிலைமேற்கொண்டு உஜ்ஜீவிக்கின்றனர். ஜப்பான்நாட்டு ஒவ்வொருவீட்டிலுமுள்ள ஸ்திரீ புருஷ சிசுக்கள்கூட இப்பாய் பின்னுந்தொழிலை இடைவிட்டு இடைவிட்டு, மாறிமாறிச் செய்வதாயிருக்கிறபடியால், பாய்பின்னும் வர்த்தகசாலைகளில், அவ்வளவு ஏராளமான வேலைநடப்பதில்லை. இப்படியாக வீட்டிலேயேபாய்பின்னுவதனால் அநுகூலங்களுமுள, பிரதிகூலங்களுமுள. வீட்டில்பாய் பின்னுந்தொழில் செய்தலினால், பாய்கள், அவ்வளவு ஒழுங்காயும், சரிசமானமாயுமில்லாமலிருப்பதுடன், பாய்க்கோரைகள் நேர்த்தியாகவுமிருப்பதில்லை. ஜப்பானியர், தாங்கள் பின்னும்பாய்களை, தங்களுக்கு வெளியிலிருந்து வாங்குபவரிடமிருந்து வந்திருக்கும் கிராக்கிகளுக்குத் (orders) தகுந்தவிதமாய்ப் பின்னுகிறார்கள். முந்தியவருஷங்களில் எவ்விதமானபாய்களுக்கு வெளிநாட்டிலிருந்து கிராக்கிகள் வந்து விற்றனவோ, அம்மாதிரியான பாய்களையும், பின்னித்தயாராய், ஸ்டோரில் (Store) சேமித்துவைக்கிறார்கள். பருத்திகலந்தகோடுபோட்ட (Striped Matting made in cotton wraps) 40-கெஜம் கோரைப்பாயின் ஒரு சுருள் 6-ரூபாவரை விலைகுறைந்திருக்கிறது. இப்பாய்களுக்கு வெளிநாட்டிலிருந்து கிராக்கி ஜாஸ்திவருவதனால், விலைவிதங்களும், இப்போது சற்று உயர்ந்து நிதானமேயில்லாதிருக்கின்றது. கொஞ்சகாலமாக கோரைப்புல் அகப்படுவதும் சிறிது அருமையாயிருப்பதனால், பாய்பின்னும் ஜனங்கள் கேழ்த்தரமான பாய்களை, மார்க்கட்டுகளில் விற்கப்பிரயத்தனப்பட்டதில் இப்பேர்ப்பட்ட பாய்க்கிராக்கியும் குறைந்துவிடப் பார்த்தமையால், ஜப்பான் கவர்ன்மெண்டார், உபயோகமற்றதான இவ்வித சரக்குகளை பெரும்பாலாய் வெளியேற்றி ஜப்பான் கைத்தொழிற்பெருமையைக் கெடுத்துவிடாமல் பார்த்துக்கொள்வதில் கவனம்வைக்க, அதற்கென்று ஒரு இனிஸ்பெக்டராபீஸ 1905-ஞல் ஏற்படுத்தினார்கள். இவ்விதபரிசோதனை ஆபீஸ் ஏற்பட்டதுமுதல் இதுவரையில், அப்பாய்ச்சரக்கின்மாதிரியில் யாதொரு அதிவித்தியாசம் இல்லையென்றுபொதுவாகச் சொல்லப்பட்டாலும், உயர்வுசரக்குகள் உற்பத்தியாகவும், தாழ்ந்த சரக்குகள் சேராமலிருக்கவும் ஏதுக்களிருக்கின்றனவெனவே சொல்லப்படுகிறது. கெட்டசரக்கு ஏற்றுமதிகள் முழுவதையுமே



இவ்வாபீசார் இந்நாட்டிலிருந்து நிறுத்தவல்லவரல்லராயினும், பாய்கள் முன்னைவிட நல்லதாய், ஏற்றுமதி செய்யவேண்டுமென்று, கண்டிக்க அதிகாரம் பெற்றுள்ளார்கள். ஆகவே, இம்மாதிரியான பரிசோதனை ஆபீசினால் பலன் உண்டென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது. இவ்விஷயத்தில், ஜப்பான், இந்தியாவுக்கு ஒரு நன்மதி புகட்டக்கூடியதாயிருக்கின்றது.

மேற்கூறிய மாதிரியான இனிஸ்பெக்ஷன் ஆபீசொன்று கோபி (Kobe) என்னும் பட்டணத்திலும் ஸ்தாபிக்கப்பட்டு, ஏற்றுமதியாகும் பாய்களனைத்தும் அவ்வாபீசில் பரிசோதிக்கப்பட்டுத்தான் வேற்றுநாட்டுக்குச் செல்கின்றன. இவ்வாபீசிலேயே, அப்பாய்கள் பின்னும் முறை, சாயம்போடுமுறை, பாய்பின்னச்சரக்குகள் தெரிந்தெடுக்குமுறை, ஓரம் பின்னும் முறை, நீளம் அகலம் கனம் இவைகளைப் பற்றிப் பரிசோதனைகள் செய்து, அத்தொழில் விருத்தியில் ஜப்பானியர்களை ஊக்கமுயர்த்தவும், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான பாய்பின்னுந்தொழில் நம்மிந்தியாவிலும், இல்லாது போகவில்லை. சென்னை இராஜதானியில் தென்னார்க்காடு ஜில்லாவில் முக்கியமாய்ப் பறங்கிப்பேட்டை, கடலூர் முதலியவிடங்களிலும், தஞ்சையில் சீகாழி தாலுக்காவிலுள்ள கொள்ளிடக்கரைக்கிப்புறத்திலுள்ள ஆ(னை)ணிக்காரன் சத்திரம், நம் நாட்டில் துருக்கர் வாசஸ்தானமாகிய தைக்கால் முதலியவிடங்களிலும், மேலைக்கரையில் பாலக்காடு, கள்ளிக்கோட்டை, திருநெல்வேலிக்கடுத்த பத்தமடை போன்ற சில கிராமங்களிலும், இப் பாய்வேலை வெகுநேர்த்தியாகவும், விதம் விதமாகவும் பின்னப்பட்டுப் பாயொன்று ரூபா 50, 60, 100, 150 வரையில் விலையில் மதிப்புப் பெற்றிருக்கின்றன. இப் பாய்களில் பட்டுகள் சேர்த்து வெகு நேர்த்தியாய்ப்பின்னும் மாதிரி மிகுதியும் சிலாகிக்கத்தகுந்தது. தினுசுக்குத்தகுந்தாற்போல விலைமதிப்பேறப்பெற்ற, ஒருமனிதன் படுக்கக்கூடிய அகலமும் நீளமுமுள்ள, ஒருபாயினை உள்ளங்கையில் சுருட்டிமடக்கி வைத்துக்கொள்ளும்படியான அந்தஸ்தில் செய்யப்படுவதென்றால், நம் நாட்டுக்கைத்தொழிலைப்பற்றிக் கேட்பானேன்! இவ்வருமையான பாய்களைத் தவிர்த்து கிராமங்கடோறுமுள்ள நிலங்களின் ஓரங்களில் யாதொரு செருவுமின்றி தானாகவே, ஜலத்திலும் வளர்ந்து கிடக்கும்கோரைப்

புற்களைக்கொண்டு நம் நாட்டு ஸ்திரீ புருஷர்களும் நேர்த்தியான கோரைப்பாய்களைப் பின்னி வீட்டுபயோகத்திற்குப்பெரிதும் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். மோட்டா (rough) வாகப் பின்னும் இப்பாய்கள் நம் நாட்டில் மழைக்காலங்களில் ஏழைச்சனங்கள் குளிரின் தடுப்புக்காகக் கம்பளங்களாய் உபயோகிக்கிறார்கள். கிராமத்துப் பிராமணஸ்திரீகளாற் பெரிதும் இப்பாய்கள் பின்னப்பட்டு, ஆசாரமான பொருள்கள் உலர்த்தற்பொருட்டு உபயோகப்படுத்தப்படுவதுடன், மழைகாலத்தில் ஈரமான தரைகளில் பாய்கள் கெட்டுப்போகுமே யென்ற பயமில்லாமல் உபயோகப்படுத்தப்படுகிறது. இவ்வித முரட்டுப்பாய்கள் 7-அடி நீளமும் 4-அடி அகலமுங்கொண்டது பாய் ஒன்று ஒரு ரூபா முதல் ஒன்றரை ரூபா வரையில் விலைக்ககப்படும். ஜப்பான் போன்ற கீழ்ப்பிரதேச நாடுகளிலொன்றாகிய நம் இந்தியாவிலும் அங்கு அகப்படும் மாதிரியான கோரைப்புற்கள் அகப்பட்டு, அவர்கள்போலவே, நம்வீட்டு ஸ்திரீகளும், செய்யுமியல்பினராயினும் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து, இப்பேர்ப்பட்ட அருமையான கைத்தொழிலை நம் நாட்டில் ஆதரிப்பாரின்றி விலக்கவிடப்பட்டிருப்பது நம்மவர்களுக்குப் பெரிதும் கௌரவக்குறைச்சலேயாம். சிக்கனச்செலவும், கைத்தொழில் வேலையுமன்றே, ஒருநாட்டைப் பெரிதும், முன்னுக்குக்கொண்டுவருவதாயிருப்பது என்பதற்கு நம்தேசம்போன்ற ஜப்பான் நாடே உதாரணமாய் எதிரில் நிற்பது தெரிந்தும், நம்மவர் சுகஜீவனஞ்செய்யு நெறியையறியாது, கைத்தொழில் வேலைகளென்றால்: ஏனோதானோவென்றிருப்பதும், நம் நாட்டுத்தலைவர்கள் இருந்த இடந்தெரியாமல் மறைந்தேபோன கைத்தொழில்களைக் கிளப்ப பலத்த முயற்சிகள் செய்யாதிருப்பதும், நம்தேசம் முன்னுக்குவரும் வழியை நாடுவதன்று. கோரைப்பாயைத்தவிர்த்து, மெத்தென்றிருக்கும்படியான நயமான தாழம்பாய்கள் நம்நாட்டுக்கடற்கரையோரங்களிலுள்ள ஊருக்கர்களாற் பின்னி விற்கப்படுகின்றன. இக்கைத்தொழிலாளிகள் தமக்கு வேண்டிய சிறு முதல்களில்லாமலும், இதனை ஆதரிப்பார் யாருமில்லாமலுமன்றோ திடீரென தாம் தம் ஜீவனோபாயத்திற் குற்றதாகிய அக்கைத்தொழிலைவிட்டு அடிமைத்தொழில் செய்ய நேரிடுகின்றது. நம் நாட்டு ஜனங்களுக்குச் சுகமாய்க்காலம் தள்ளக்கூடிய விதம் நேரிதாய வொன்



று வேண்டுமானால், நம் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து, நசித்துப்போய்க்கொண்டிருக்கின்ற அதியற்புதமான கைத்தொழில் வேலைகளையும், இப்போது, இங்கும் அங்கும் பிரபலமாய் இல்லாமல், சோர்ந்தாற்போற் கிடக்கும் இப் பாய்முடைதல் வேலையையும் தக்கபடி சிரத்தையெடுத்து முன்னுக்கு இலகுவாய்க்கொண்டுவந்து, நம் நாட்டு ஜனங்களை மோரீசு, சிங்கப்பூர் போய்க் கேவலமான அடிமை நிலையில் ஜீவிக்க வழிவிடாது; நம் நாட்டிலேயே கௌரவமாகத் தங்கள் கைத்தொழிலினாலேயே அவர்கள் ஜீவிக்க உதவிசெய்யவேண்டும். ஜப்பான் மாதிரியைப்பின்பற்றி நம் நாட்டுச் சரக்குகள் வேற்றுநாடு போகும்போது பட்டாயும், பிறரால நன்கு மதிக்கும்படியான வேலைப்பாட்டுடனேயும் போகும்படியான சட்டதிட்டங்களைத் தங்களுக்குள்ளே செய்துகொண்டும், நம் கவர்ன்மெண்டாரின் உதவிகொண்டும், நம் நாடு ஜப்பான் நாடுபோன்று விருத்தியடையும்படியாய்ப் பார்க்கவேண்டும். இப்படி நாம் கைகோத்து வேலைசெய்து கைத்தொழில்களை யபிவிருத்தி செய்தாலல்லது நமக்குச் சுகமாய்க் காலந்தள்ள நேரிய வழிகிடைக்காமல், என்றென்றைக்கும் இன்றிருந்த ஸ்திதியிலேயே இருக்கநேரிடும்.

வீ சுப்பிரமணிய ஐயர்.

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

ரு-வது சதுர்த்தாரிகாலம்பகம் க-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

அவர் சொல்லியதைக் கேட்ட பிராமணர்கள் ஒருவர்க்கொருவர் ஆராய்ந்து பார்க்குங்கால் தங்கள் தங்கள் குழந்தைகளனைவரும் உயிரோடிருப்பதைக்கண்டு பட்டணத்திலுள்ள மற்றனைவரையும் விசாரித்ததில் எல்லோரும் தங்கள் குழந்தைகளும் சௌக்கியத்துட னிருப்பதாகவே கூறினர். அதையறிந்த பிராமணர்கள்

ஷியோ! அவ்வோர் குழந்தைகளு முயிரோடிருக்கும்போது இவர் யாருடைய குழந்தைகளைப் பக்ஷித்தனர். மூடர்களான நாம் வீணாய் இவ்வநாதப் பிராமணரைத் தூஷித்தோமே யென்று சொல்லும் பொழுதே அந்த ருத்ரஸ்வாமி யென்பவர் நாமிந்த அபவாதத்தினி ன்றும் நீங்கித் தூய்மை யடைந்தோம். இனி யிவ்வூரிலிருத்தல் த காதென்று கருதி யக்ஞரத்தினின்று வெளியேற எத்தனித்த னர். ஆனால் நல்ல மனத்தினையுடைய வொருவர் துர்ஜனர்களா லுண்டாக்கப்படும் நிலைமையினால் மனம் வேறுபட்டால் விவேகமற்றவர் தேசத்திலிருக்க எவ்வண்ணம் பற்றாதுண்டாகும். பின்பவ்வூரிலு ள்ள பிராமணர் வைசியர் முதலியோர்கள் சென்று ருத்ரஸ்வாமியி னது கால்களில் வீழ்ந்து வணங்கி நீர் வேறிடம் செல்வது நியாய மன்றென்று மிகவும் பிரார்த்திக்க, அவர் அவ்விடத்தில் வசித்தனர். இவ்வாறு துர்ஜனர்கள் சாது ஜனங்களுடைய நல்லொழுக்கத்தைக் கண்டவுடன் ஒரு காரணமுமின்றித் துவேஷமுற்று வாயில் வந்த படி பொய்யான தூஷணங்களை யவர்மேலேற்றி யுரைக்கின்றனர். இப்படி யிருக்க அத்துஷ்டர்கள் ஏதேனும் குறை கூறுதற்குரிய ஸ ந்நிதிடம் பெற்றால் எரிகின்ற தீயில் மிகுந்த நெய்யைப் பெய்ததாய் முடியும். ஆதலால், தேவதத்தே! நீ யென்னை துன்புறச்செய்யாதி ருக்கக் கருதுவாயாயில் ஒளிர்கின்ற புதிதாகிய இந்த யௌ வனதசையில் துர்ஜனர்களெளிதிலபவாதஞ்சொல்லுதற்குரிய கன் னித் தன்மையோடு நீடித்தனிஷ்டத்தின்படி யிருப்பது சரி யன்று என்று அரசன் தன் புதல்வி கனகரேகையிடம் சொல்ல அவள் நிலைபெற்ற நிச்சயத்துடன் கூடியவளாய் மறுபடியு மரசனை நோக்கி தேவ பிதா, அந்தக் கனகபுரியை யெந்தப்பிராமணனல்லது க்ஷத்திரியன் பார்த்திருக்கின்றானோ அவனை விரைவிலழைத்து வந் து அவனுக்கென்னை மணம் புரிந்து கொடும். யானிதைப் பற்றி முன்னரே சொல்லியிருக்கின்றேனே யென்றனள். அதனைக்கேட் ட அரசன் திடமான சித்தத்தையுடைய தன் புத்திரியை பூர்வ ஜன் ம ஞானமுடையவளென்றெண்ணி யிவளை மனதிற்கிசைந்த கணவ னுடன் சேர்ப்பதற்கு வேறுபாய மொன்றுங்காண்கிலனாய் அதுமு தல் தேசத்தி லெங்கணும் புதிதாய் வருகின்றவர்களை விசாரிப்ப தற்காக வுதவியும் அவ்வரசனெப்பொழுதும் பறை யறையும்படி



புத்திரவளித்தனன். அந்த வுத்தரவின்படி வேலைக்காரரும், பிராம ண க்ஷத்திரிய ஜாதியர்களில் யாரேனு மொருவர் கனகபுரியென்னும் நகரத்தைப் பார்த்திருந்தாற் சொல்லவேண்டும். அவருக்கு மகாரா ஜா தன்னுடைய கன்னிகையைக்கொடுப்பதோடு யௌவராஜ்யத்தை யுங் கொடுப்பதாய் உத்தரவு செய்திருக்கின்றாரென்றடிக்கடி சொ ல்லிக் கொண்டு எங்கும் பறை யறைந்தனர். அப்போது ஒருவ ராவது கனகபுரியைப் பார்த்திருக்கின்றவராகப்படவில்லை.

கதாசரித் சாகரத்தில் 5-வது சதுர்த்தாரிகாலம்பகத்தில்

க-வது தரங்கம் முற்றிற்று.

---

## 2-வது தரங்கம்.

இஃதிப்படியிருக்கக் காலைப்பருவத்தோடிருக்கின்ற சக்திதேவ னென்றபிராமணன் தான் கருதிய ராஜகன்னிகையா லவமானமடை ந்து மன வருத்தமுற்றவனாய் நாம் கனகபுரியைப் பார்த்ததாய்ப் பொய்மொழி கூறியதாலவமானத்தை யடைந்தோமேயன்றி ராஜ குமாரியை யடையவில்லை; அவளை யெப்படியாவதடையவேண்டும். ஆதலால், நமது பிராணன்போனாலும் சரி கனகபுரியைக் காணுமள வும் பூமி முழுவதும் சுற்றவேண்டும்; அதனைப்பார்த்து வந்திந்த ராஜ கன்னிகையைக் கைக்கொள்ளாவிடில் நமது பிராணனிருந்தென்ன பயனென்றாலோசித்து ப்ரதிக்ஞை செய்துகொண்டு அந்த வர்த்த மானபுரத்தினின்று மப்பார்ப்பான் தென்திசையைப்பற்றிப்ரயாண மாயினன். இவ்வண்ணம் முறையே அத்திசையை நோக்கிச் செல் கின்ற அவன் தனதாசையைப்போலவே யெளிதிலடைய முடியாத தும் நெடியதுமாயிருக்கின்ற விந்தியமகாரண்யத்தில் ப்ரவேசித்தனன். அப்போது அவ்வனமானது காற்றிலசைகின்ற மரங்களின் மெல் லிய தளிர்களால் சூரியகிரணங்களால் தபமுற்றிருக்கின்ற தன்னை வீசுகின்றதுபோலக்காணப்பட்டது. (அன்றியும்) மிகுந்த திருடர்க ளாலுண்டாகுமவமதிப்பின் துக்கத்தைச் சகியாது, கொடிய சிங்கமு முதலியவற்றால் கொல்லப்படும் மிருகங்களின் பேரொலிகளால் எப் போதுமலறிக்கொண்டிருப்பதுபோலவும், ஒருபுறத்தில் பெரிதாயு

பாலை நிலத்தினின்றும் தன்படியே வெளியேறிவருகின்ற அத்யுக்கிரமான கிரணங்களால் ஆதவனுடைய கொடிய கிரணங்களையும் வெல்லக் கருதுகின்றது போலவுமிருந்தது. ஜல சம்பந்தம் சற்றுமில்லாமையாலெளிதில் விபத்தை விளைக்கின்றதும் ஓயாமல் கடந்து சென்றாலும் தூரமாகவிருக்கின்ற இடத்தினையுடையதுமான அந்தமகாரண்யத்தில் அவன் பலநாட்களில் நெடுந்தூரமான வழியைக் கடந்துபோய் ஏகாந்தமான வோர்புறத்தில் குளிர்ந்து தெளிந்த ஜலத்தினையுடைய மிகப்பெரியதோர் தடாகத்தினைக் கண்ணுற்றனன். அது வெண்டாமரை மலராகிய குடையுடனும் ப்ரகாசிக்கின்றஹம்சங்களாகிய சாமரங்களுடனுங்கூடி யுலகிலுள்ள தடாகங்களனைத்திற்கும் மேலாயிரசாட்சிபுரிவது போலிருந்தது. அதில் அவன் சந்தோஷத்துடன் ஸ்நானம்முதலியவற்றைமுடித்துக்கொண்டுவெளியேறிவருங்கால் அத்தடாகத்தின் வடபக்கத்தில் மிகுந்த கனிகள்நிரம்பி அழகிய விருக்ஷங்களுடன் கூடியதோராச்ரமத்தைக்கண்டுசெல்லும் ஆங்கோராசமரத்தின்கீழ் அநேகதாபசர்கள் புடைசூழ விருத்தராய் வீற்றிருக்கும்சூர்யதபசென்ற பெயருள்ளவொரு முனிவரைப்பார்த்தனன். அவர் தன்வயதின் வருஷங்களாகிய நூற்றாண்டுகளையெண்ணிக்கணக்கிட்டுமுடித்திருக்கின்ற முடிச்சுகள் போன்றதும் முதுமையால் வெளுத்திருக்கின்ற காது நுனியிற்றொங்குகின்றதுமான ஜபமாலையுடன் பிரகாசித்தனர். அப்பார்ப்பானம்முனிவரை நமஸ்கரித்த வண்ணமே யவரிடஞ்சென்றான். அவரும் அதிதிகட்குச்செய்யுமுபசாரத்தைச் செய்தவனை மகிழ்வித்துக் கனி முதலியவற்றால் பசி தீரவுண்பித்து அருமையோடு குழந்தாய்! நீ யெங்கிருந்து வருகின்றாய் எவ்விடத்திற்குப் போகின்றாய் சொல்லென்று கேட்டனர். அதற்கவன் ஐச்வரியம் முதலிய அறுகுணங்களும் நிறைந்த ஐயனே? யான் வர்த்தமானபுரத்தினின்றும் வருகின்றேன். கனகபுரியென்னும் நகரத்தைப்பார்த்து வரவேண்டுமென்ற ப்ரதிஜ்ஞையோடு வெளியேறினேன். அந்நகர மெவ்விடத்திலிருக்கின்றதோ வறிகின்றிலேன். ஸ்வாமீ! தாங்களறிந்திருப்பீர்களாயின் எனக்கதனைச்சொல்ல வேண்டுமென் றம்முனிவரிடத்தி லந்த சக்திதேவனென்பவன் வணக்கத்துடன் தெரிவித்தனன்.

(தொடரும்.)

உ

சிவமயம்.

## ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய வரலாறு.

(முன்றொடர்ச்சி.)

---

பின், புலவர் தம்மைக் கொல்லவந்த பழிகாரரை நோக்கி, ஓ! செங்குந்தத் தலைவர்காள்! அடியேன் புகல்வதைப் பொறுமையோடுங் கேண்மின்கள். பெரும்புலவர்களாயுள்ளோர் தேவர்களையும் அரசர்களையும், தமக்காதரவாயுள்ள பிரபுக்களையும், அபிமானத்தாலேனும், பொருள்வேட்கையாலேனும், தனியே புராணங்களேயாக, பிரபந்தங்களேயாக, அவர்களது சரித முன்னிலையில் வர்ணித்துப் பாடுதல் மரபு. ஓர் குலத்தினை அக்குலத்தினர் வேண்டுகோளாலேனும், தன்னிச்சையாலேனும் வறிதே வருணித்தல் யாதுபயன்?

"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்." (நாலடியார்)

என்னு மான்றோர் வாக்கியம் நீங்களறிந்துள்ளதே. ஆதலால் நான் நமது குலத்தை வருணிக்கமாட்டேன். தம்மைத் தாமே பாடிக்கொண்டார்களென்னும் அபவாதத்தையும் நமது குலத்திற்குத் தரமாட்டேன். "வேளாளர் ஏர்பூட்டாவிட்டால் வேதியராதியர் வேறற்றுப்போவாரென்றும்," "வன்னியர் சிலையேந்தாவிட்டால் வையகமுற்றும் வரம்பற்றுச் சிதையு"மென்றுங் கற்பனைசெய்து பாடுவது எனது வழக்கமன்று. உள்ளதையே கூறி யாவரையும் உறுதிகொளச் செய்வேன். தங்குலத்தி லபிமானமும், பிறகுலத்தில் வைடம்மியமும் வகிப்பவன் யானன்று. எனதியல் பிவ்வண்ணமாயினும், உலைவாயை மூடலாம் ஊர்வாயை மூடுதலரிது. மேலும், சோழராஜாக்களாற் கிடைத்துள்ள செல்வம் எண்ணிலவாதலின், எனக்குப் பொருளாசையுமில்லையென்பதை இவ்வுலகே உணர்த்தும். ஒவ்வோர் சமயத்தரும், தத்தஞ்சமயத்தையே மேலெனக் கூறி வாதித்

தல் போல, ஒவ்வொரு சாதியாருந் தத்தஞ் சாதியையே மேலாகக் கூறி வாதிடுதல் வழக்கு. அவ்வழக்கு முடிவிலிழுக்காமென்றதற்குச் சான்று. அவ்வக்குலத்தினரது தொழில் சிறப்பின்மையாம். இத்தகைய சமயத்தையுஞ் சாதியையும்பற்றி, ஓர் பிரபந்தங் கூறுமிடத்து, அப்பிரபந்தத்தால், யாதேனுமோர் அற்புதம் விளையின் அதுவே, மற்றையெல்லாவற்றினு மேலெனக் கொள்ளுதல் சாமியமாகுமன்றோ? அடியேன் கவிஞர் பரம்பரையாகிய செங்குந்தர் மரபிற் றோன்றியுள்ளேனாயினும், என் வாக்கில் சத்தியலட்சுமியும், சாரதாதேவியும், சாஸ்வதமாகக் குடிகொண்டிருப்பது மெய்யேயாமேல். அவர்கட்கு சகஸ்ரநாமார்ச்சனையின் பொருட்டு நங்குலத் தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் சிரங்களைப் பரிசாகத் தருவிரேல், நமதாயுதமாகிய ஈட்டியைச் சுட்டி ஈட்டியெழுபது எனவோர் பிரபந்தம் பாடிமுடித்து இவ்வுலகினரை வியக்கச்செய்கிறேன் என்றனர்.

இவ்வாறு கூத்தர் தலைப்பிள்ளைகளின் தலைப்பரிசு வேண்டியதைச் செவியுற்ற செங்குந்தர்கள், வியப்புந் திகைப்புங்கொண்டு ஒன்றுந் தோன்றாது வாளாவிருக்க, புலவர் தமது மரபிற்றோன்றிய முன்னோருடைய வீரசூரச் செயல்கள் பலவற்றை எடுத்தெடுத்து விளக்கி, அவர்களை ஒருமுகமாக இணங்கும்படி பிரசங்கித்தனர். அஃதுணர்ந்த * கைக்கோளர்கள் அதிக உற்சாகங் கொண்டவர்களாகி யாவரும் ஒருமனதாகச் சம்மதித்து அவ்வாறேயாகுக வென்று கூறிக் கூத்தரால் ஓர் நன்னாளைக் குறித்துக்கொண்டு விடைபெற்றுச் சென்றனரென்ப.

பின்பு, கூத்தர் தமதருமை நண்பரான சோமனிடம் சடிதில் விடைபெற்று உறையூரடைந்து, இராசராச சோழனைக்கண்டு புலனில், ஆலூர்ச் செங்குந்தர்கட்கும் தமக்கும் நடந்த சம்பாஷணையையும், தமக்காகச் சோமன் காட்டிய நன்றியின் விசேடத்தையும், இனித்தாம் நடத்தப்புகுங்காரியத்தையும், அது நடைபெறுங்காலத்

* கைக்கோளரென்பது ஒழுக்கத்தின் கொள்கையோரென்ப. கைக்கோள்ரென்னுந் தொழிற்பெயரின் தனிவினையாகிய கோள்வென்னும் பகுதி கோளெனக் கெட்டு பலர்பால் அர் விகுதிபுணர்ந்து கோளர் என்றாயிற்று. (இலக்கணக்கொத்து. வினையியல். உ-வது சூத்திரம்.)



தையும் விளம்பினர். அதுகேட்ட வேந்தன் வியந்த சிந்தையனாய்க் கவிப்பெருமானின் புலமையாற்றலுக்குப் பெரிதுங் களித்து அத் தெய்விகம் நிகழும் சுதினத்தை எதிர்பார்த்திருந்தனனாக.

கூத்தர்பால் விடைபெற்றுச் சென்ற செங்குந்தர்கள் இனி ஆக வேண்டியிருக்கும் பெருவிஷயத்திற்காக ஓர் சபைகூட்டி, அதிற் பிரபந்தம் பாடும்பொருட்டு உத்தேசித்துள்ள காரியாதிகட்குச் செய்ய வேண்டுவன இஃதென்று ஓர் தீர்மானஞ்செய்து அதனை ஓர் திருமுகமாக்கித் தங்களைப்பொருந்த நாட்டினர் பலர்க்கும் விடுத்தனர்.

திருமுகம் பெற்ற நாட்டாருள் * ஒருநாட்டாரொழிய ஏனையரெல்லாம் திருமுகத்திற் குறித்தபடி மிக உற்சாகத்துடன் தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் சிரங்களைக் கண்டித்து, அவைகளை வண்டிகளிலுய்த்து உறையூரிலுள்ள சோழனது அரண்மனைக்குக்கொண்டு வந்து கூத்தருக்கு அறிவித்தனர்.

அஃதுணர்ந்த கூத்தர் செங்குந்தவீரர்களின் தீரம் பொலியசெய்கைக்கும், வாய்மையாகிய மேம்பாட்டிற்கும் பெரிதும் வியந்து, அவர்கள் கொணர்ந்துள்ள சிரங்களைச் சோழ வேந்தனது சபாமண்டப வாயிலில் சிங்காதனம்போல் அடுக்கி இரத்தப்பாவாடைவிரித்து அலங்கரித்து வையுங்கள், அவ்விடத்து யாம் வருவோம் என்று கூறினர். அவ்வாறே யவர்கள் அரசனது சபாமண்டப வாயிலை யடைந்து அங்குள்ளோர் யாரும் பயந்து நடுங்கிப் பிரமித்து வியக்கும்படியாக ஆயிரத்தெண்மர்களது சிரங்களை வரிசைப்படச் சிங்காதனம் போலடுக்கிக் கூத்தர் வரவுக்கெதிர் பார்த்திருந்தனரென்ப.

இவை, ஈட்டியெழுபதென்னும் நூலில்,

"வாக்கின் காதலைவர் தம்பிரான்
நாக்கின் காதலன் தன்னி லேறியே
தூக்கின் காதலன் தொழுங் கவிக்கெஞ்
சிரக்கின் காதலைச் சேர்செங் குந்தமே."

* இந்நாட்டினர் தலைகொடுத்தற் கஞ்சினாரதலால் யாவரும் "தலைகொடா மரபினர்" எனவழங்கப்பெற்று, மற்றைய நாட்டினரோடு மணவினையாதிகளிற் சம்பந்தங்களைப் பெறாது திருமலையாயக்கன் பட்டினத்திற் கருகே தங்குலவொழுக்கங்களிற் குன்றாது தனியே யிருப்பவரென்றறிக.

"வேட்மோ ரூடரி தாய வேணியர்
சூட்டோன் வாரிசத் துணைக வேத்தியே
யாட்கே சென்னியை யலர்த்தி யேயெனக்
காட்டேற் கேயரி கவின்கைக் குந்தமே."

"வட்டமா ரவையுழை வந்த மேலவ
ரிட்டபா வாடை கண்டிசை பெருதமண்
முட்டவர் துயிர்பெறீஇ மொய்த்த னேமெனக்
கட்டளை குந்தர்சிர் கழறி யேத்தினர்."

எனவரும் செய்யுட்களால் செங்குந்தர்கள் கூத்தர் பாட்டுக்குத் தலைபரிந்து ஆசனமிட்டு இரத்தப்பாவாடை விரித்தமை யுணரப் படும்.

இராசராசச் சோழன் தமது சம்ஸ்தான வித்துவானாகிய ஒட்டக்கூத்தரால், நடைபெறவிருக்கும் தெய்விகங்களைக் காணவேண்டி மந்திரி, பிரதானியர் பந்துவர்க்கத்தினர், வித்வஜனர், கடைகாப்பாளர், கருமாதிகாரர் ஆதிய தமக்குரிய அங்கங்களோடும், மற்றும் அங்குவந்து குழுமிய நகரமாக்களுடனேயும், சபாமண்டபத்தை யடைந்து அவரவர்க்குரிய இருக்கைகளிலிருந்தனர்.

அது சமயம் கூத்தர், தமது நித்யகர்மானுஷ்டானங்களை விதிப்படி முடித்துக்கொண்டு, உபாசனாமூர்த்தியைப் பூசித்து அப்பூஜா கோலத்துடன் தமக்குரிய பல விருதுவரிசைகளோடு மங்கலவாத்திய முழங்கச் சபாமண்டபத்திற் கெழுந்தருளி அங்கு தமக்கமைத்துள்ள சிரச் சிங்காதனத்தின்மீதிவர்ந்து பதுமாசனமிட்டு வீற்றிருந்து, இனிக் கூறப்புகும் நூலிடையூறின்றி இனிது நிறைவேறுமாறு இருகரங்களையுந் தமது சிரத்தின்மீது கூப்பிக் கலைமகளாரைத் துதித்து, வணங்கி முதலில் விநாயகர் காப்பும், பாயிரமுங்கூறிப் பின்,

"பூதலம் வாழ்க குந்தர் பொலிவுடன் விளங்க நான்கு
வேதமெந் நாளு மோங்க வேதியர் பசுக்கள் பல்க
மாதவர் வளவன் செங்கோல் வளமைகுன் றாது நிற்க
வேதமே யறையும் பொன்னி யுறந்தையுஞ் சிறக்க மாதோ." (௧)

எனத்தொடங்கி,



"செந்தமிழ்க் காகப் போந்து சிவந்தபா வாடை யாக
நந்தமக் கிடென்கா லெந்த நகரமு முனம் வியந்த
வந்தரத் தமரர் வாழ்த்தி பணிமலர் மாரி பெய்தா
ரிந்தச்செங் குந்தர் பெற்ற விசையெவர் பெற்ற ரம்மா" (௭௦)

எனவரும் எழுபது பாக்களால் தமது குந்தக்குலத்தைப் புகழ்ந்து "ஈட்டியெழுபது" என்னும் நூலியற்றித் தாமிருந்த சிரச்சிங்காதனத்தினின்றும் இழிந்தன ரென்ப. இதுவே,

"பூவார் புவனையிற் சோமன் றரும்பழி போன பின்பு
நாவாணர் போற்றிய நாடகங் கேட்ப நலமுடனே
யாவாணர் செங்குந்த ராயிரத் தெண்டலை கொய்திரத்தப்
பாவாடை யிட்ட துலகமெல்லாம் புகழ் பாலித்ததே."

(பாயிரம்)

எனவரும் ஈட்டியெழுபதாற் குறித்ததாகும். இச்செய்தி நிகழ்ந்தது, குமாரகுலோத்துங்கன மகன் இராசராசன் காலத்திலென்பதை,

"முத்தமி ழிராசரா சேந்திரன் முன்னமே
சுத்தவீ ரத்திறந் துலங்கு தற்கொரு
பொய்த்தலை கொடுத்தலிற் புகழ்பெ றூதென
மெய்த்தலை கொடுத்தன வீரக் குந்தமே." (௧௦)

எனவருமாற்றா னுணர்க. இவனது அரசாட்சிக்காலம் கி. பி. 1162 முதல், 1200 மேற் சிலவாண்டுகள் வரையும் எனவறிக.

இவ்வீட்டியெழுபதென்னும் பிரபந்தத்தைக் கல்வித்திறமுடைய சோழனும் மகிழ்ந்து கேட்டனனென்பதை.

"கோட்கவி கொண்டு மாக்கள் கொடுக்கதமிழ்க் கூற கீத்து
தாட்கவிப் புதியவாட்டர் தலைக்கடை தாந்து சாட
வாட்கவிக் கொண்ட மன்னன் வளவனு மகிழ நாமே
நாட்கவி பாடு நாட்போ லிருப்பது பெரிய நாடே. (௨)

எனவருதலா னுணரப்படும்.

இப்பிரபந்தம் உறையூரின்கண்ணே பாடப்பட்டதென்பது, இந்நூல் முதற்செய்யுளாகிய "பூதலம் வாழ்க" எனவரும் செய்யுட்.

டொடக்கத்தே, "வேழமே யனையும் பொன்னி யுறந்தையுஞ் சிறக்க மன்றோ" எனவரும் சுற்றடியானுணரப்படும்.

பாண்டிய பல்லவ சக்கரவர்த்திகள் தங்களுடைய ஆட்சிக்கு முக்கிய இராஜதானியாக மதுரையையும், காஞ்சியையும் வகுத்துக் கொண்டதுபோல், சோழசக்கரவர்த்திகள் தங்கள் ஆளுகைக்கு உறையூர், தஞ்சை முதலான நகரங்களை இராஜதானியாகக் கொண்டாரென அறிதல் வேண்டும். இவ்வுறையூரை டாலமி 'சோர்னாஸ் இராஜாங்கப்பட்டணமான ஓர் தௌரா' என்கிறார். உறந்தை என்பதும் இதுவே. இந்நகரம் காவிரியாற்றின் தென்கரையிலுள்ளது. இக்காலத்திலும் உறையூரென்ற நாமத்தையே வகித்து திரிச்சிராப்பள்ளிக்குப் பக்கத்தே உள்ளது. சுமார் 1300 வருஷங்களுக்கு முந்திய அக்காலத்தில் இப்பட்டணம் ஓர் கோட்டையாலும், அதன் வெளியே ஓர் அகழியாலும், அதன் புறம்பே ஓர்காவல் மரக்காவலும் சுற்றப்பட்டிருந்தது. சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில்,

"உறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கி"

என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும், இந்நகரத்திற்குக் கோழியூர் என்று பெயராம். "முற்காலத்து ஓர் கோழி யானையைப் போர் தொலைத்தலான் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழியூர் என்பது பெயராயிற்று" என்று அடியார்க்குநல்லார் சொல்லியிருக்கிறார். சிலப்பதிகாரத்தில் மேற்படி காதையில்,

"முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர்"

என்றுள்ளது. இவ்வளஞ் சீரும் சிறப்பும் பெற்றிலங்கிய இந்நகரில் இத்தகைய தெய்வீகங்கள் விளங்கிப் புகழ்தற்குரிய சிறந்த நிலைக்களமாக விருந்ததென்றால் அள்ளிடற் பாலதோ?

பின், கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தர், மீண்டும் அச்சிரச் சிங்காதனத்தைப் பார்த்து சரஸ்வதி தேவியினுடைய திருவுருவை மனதிற் தியானித்து,



"கலைவாணி நீயுலகி லிருப்பதுவுங் கல்வியுணர் கவிஞர் லோரை
நிலையாகப் புரப்பதுவு மவர்நாவில் வாழ்வதுவு நீசமே யன்றோ
சிலைவாண னாவிருந்தா யிரம்புலவர் தணிந்துமுயர் சிவ னூற்றுன்
தலையாவி கொடுத்திலேஞ்செங் குந்தருயிர் பெற்றிடநீ தயைசெய் வாயே."

என்னும் பாடலைப்பாடிப் பிரார்த்திக்க, முன்னம் அவ்வுடம்பைவிட்டு அனுப்பப்பட்ட தலைகள் சென்றுமீண்டும் அவ்வுடம்போடுசேர்ந்து, ஒன்றியிட மாண்டபிள்ளைகள் மீண்டெழுந்தனர். இவ்விபவத்தை அரசனுதிய அவையினர்யாரும் கண்டுவியந்து இது கவிச்சக்கரவர்த்தியல்லபந்தானோ? செங்குந்தவீரர்களின் மாறுபடாத வீரந்தானோ? கலைமகளாரின் சிறந்த திருவருளேயோ? எத்தகையர்க்குமற்புதத்தை விளக்குமித்தினக்காட்சி புதுமைபுதுமை எனக் கொண்டாடினர்.

இவ்வாறு துணியப்பட்டதலைகளையும், உடல்களையும் ஒட்டப் பண்ணிய காரணத்தால் அதுமுதல் இவர்க்கு "ஒட்டக்கூத்தர்" என்று பெயராயிற்றெனவறிக. (ஒட்டன், ஒட்டுதற்றொழிலையுடையவன்; ஒட்டனாகிய கூத்தனென்க.)

இத்தகைய ஒப்புயர்வற்ற சிறப்புத்தமக்கும், தமது சாதிக்கும், அக்கைக்கோளர்களால் உண்டானமையை,

"நிலைதந்தார் புலியினுக்கும் யாவருக்கு * மானமதை நிலைக்கத்தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சிவனுஞ்செப்பிட வென்றே கையிற்றந்தார்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த சென்கவிக்கு விலையாகத்தான்
தலைதந்தாரெனக் கொட்டக்கூத்தனெனும் பெயரினையுந் தாந்தந்தாரே"

என்று இவர்தாமே புகழ்ந்து கூறியுள்ளார். இவ்வரலாற்றில் செங்குந்தர்கள், தமிழின் மாட்டுவைத்திருந்த பேரபிமானமும், இணையற்ற சூரத்தன்மையும், மனத்துணிவும், ஆத்மத்தியாகமும், விளங்குவதோடு, ஒட்டக்கூத்தருடைய தெய்வப்புலமையும், உண்மைநிலையும், உறுதிப்பாடும், அவரிடமிருந்த சரஸ்வதிகடாக்ஷமும், மற்றும் அவரது உத்தமகுணவிசேடங்களும் நன்கு விளங்கும்.

இப்புலவர் பெருமான் இயற்றிய பிரசித்தமான நூல்கள்:—உத்

* 'அபிமானம் நிலைக்கத்தந்தார்' எனவும் பாடம்.

தாராமாயணம், ஈட்டியெழுபது, வீரபத்திரப்பரணி எனவழங்கும் தக்ஷயாகப்பரணி, அண்டத்துப்பரணி, அரும்பைத்தொள்ளாயிரம், காலாயிரக்கோவை, குமாரகுலோத்துங்கசோழன்கோவை, மூவருலா, மற்றுமாம்.

கூத்தர், கோவை, உலா, அந்தாதிபாடுவதில் ஒப்புயர்வில்லாமல் மிகச்சிறந்தவராவர். இதனை,

"வெண்பாவிற் புகழேந்திபரணிக்கோர்சயங்கொண்டான் விருத்தமென்னும்
ஒண்பாவி லுயர்கம்பன் கோவையுலா வந்தாதிக் கொட்டக்கூத்தர்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காச லாதொருவர் பகரொணாதே"

எனப்பிற்காலத்தார் பாடிவைத்துள்ளதானறிக.

இவ்வளவே ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய வரலாறும். இப்பெரியாரது காலம் இற்றைக்கு (1020) ஆயிரத்திருபது வருஷங்களுக்கு முந்தியதாமெனக் கொள்க. இக்காரணத்தால் ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய காலமும் இதுவேயாம். விநோத "ரஸமஞ்சரி" மெட்ரிகுலேஷன் (டெக்ஸ்ட்டின்) தமிழ் நோட்சு முதலியவற்றிலும், ஈட்டியெழுபது பாடிய வரலாறுகள் முன்னுக்குப்பின் முரணாகவும், கற்பனை முதலிய கட்டுரைகளாலும்; செறிவுற்று, அதன் உண்மை நிலைகண்டறிந்து மகிழ்தற்கேதுவின்றி மலினமடைந்து நிற்கின்றதை, "தமிழ்நாவலர் சரிதை, விக்கிரமசோழனுலா, அரும்பைத் தொள்ளாயிரம், தமிழ்ச்செய்யுட் சிந்தாமணி" ஆகிய நூல்களின் ஆதாரங்களை மேற்கொண்டு, முற்கூறிய மாறுபாடிய குற்றங்களை முற்றும் நீக்கி, அவற்றின் உண்மைச் சரிதம் இதுவாகுமெனத் தெள்ளியநடையில் இங்கு நன்குவிளக்க முயன்றதாமென்க.

இதனைச்சிறிய செங்குந்தகுலமணிகள் அன்புடனேற்று மகிழ்ந்தின்புறுவாராக. தபம்.!

ஒட்டக்கூத்தர் திருவடிவாழ்க.
ஈட்டியெழுபது பாடிய வரலாறு முற்றிற்று.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோவை.

# இந்தியா இறைமாட்சி.

இவ்வியாசத்தின்கண்ணே இவ்விந்தியாதேசத்தின் மாட்சியும், அரசர்கண்மாட்சியுங் கூறப்படுதலான், இது இந்தியா இறைமாட்சி என்னும் பெயர்த்தாயிற்று. அல்லதூஉம் மாட்சிமைதங்கிய நம் இந்தியா சக்கரவர்த்தியவர்களின் மாட்சியைக் கூறப்பெறுதலானே இப்பெயர்த்தாயிற்றெனினும் ஏற்புடைத்தென்க.

இந்தியா என்பது இப்பரதகண்டத்தின் ஒரு பெரும்பாகமாம். பல நகரங்களையுடைத்தாகிப் பரந்து செழித்த ஒரு பாகத்தையே தேசம் எனக்கூறுப. தேசம் நாடு என்பன ஒருபொருட்சொற்கள். முதற்கண் பொதுவகையானே நாட்டினிலக்கணங்களைக் கூறுதும்.

நாடு என்பது:—குன்றுதவிளையுளும் அறிவோரும் கேடில்லாச் செல்வரும் உடைமையும், அளவிறந்த பொருளுண்மையாற் பிறதேயத்தாராலும் விரும்பப்படுதலும், வேற்றுத்தேயமன்பதைகளும் ஆன்மேதிமுதலியவும் தமதேயத்தே பகைவந்து நலிவுறுத்தற்கஞ்சியாதல், அரசன் கொடுங்கோற்கஞ்சுற்றுதல் வறுமையான் மெலிவுற்றுதல் தன்பாற் போந்திறை கொண்டக்கால் அவ்வத்தேயத்துத் தொல்வாழ்வினும் நல்வாழ்வுபெற்றினிதிருப்பக்கோடலும், அரசர்க்கிறுக்கும் இறைப்பொருளைத் தண்டத்தலைவர்கொள்ளப்போதரு முன்னரேகொண்டுசென்று கொடுத்தலும், மிக்கபசியுந் தொக்கபிணியும் புறப்பகையும் உட்பகையும் * எட்டுவகையிடரும் சோரமையும் மண்மீதூற்றுநீரும் கொண்மூவூற்றுநீரும் வான்வறந்துழியும் வளந்தருமலையும், அதன்கட்போதரும் யாறும் அழியாநகரிகளும் ஆகிய உறுப்புக்களையுடைமையும் புண்ணிய பாவநன்மைதீமைகளை விதித்தன செய்து விலக்கியன தவிர்ந்து விளங்கும் மன்பதைப்பெருக்கமுடைமையும் இன்னும் இத்தகைய பலவும் ஒருதேயத்திற்குச்சிறந்த இலக்கணங்களென ஆன்றோர் கூறுப. மழை பனி வெயில் காற்று

* எட்டுவகையிடராவன—"விட்டில் கிளி காய்வாய் வேற்றரசு தன்னரசு-நட்டம் பெரும்பெயல்காற்றெட்டு." என்பது புறப்பொருள் வெண்பாமாலையுரை.

முதலியவற்றுள் சிறப்பாயிருந்து எல்லாவிதப்பொருள்கட்கும் ஏற்ற பெற்றித்தாய்த் தன்கண் வாழ்வார் தமக்குவேண்டும் பொருள்களையா ண்டுப்பெறலாமெனத் தேடிவருந்தாவண்ணம் பல்வகைப்பொருள்க ளும் மல்கப்பெற்றதே நாடென்பது. இன்னதொருபொருளையெவ் வழிக்கொள்வாமென உசாவி அரிதின் முயன்று பிறநாட்டகத்துக் கொண்டுவப்ப அப்பொருளைத்தான் நல்காற்றுநாடு நாடன்றாம்.

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு."

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு."

எனத் தேவர்பணித்தமை காண்க.

2. நமதுதேசம்:-நாட்டிலக்கணங்களாக மேற்கூறிய அனைத்தா னும் பொலிவுபெற்று விளங்குவது நம் இந்தியாதேசமேயாம். இமய மலையைப்போன்ற மலையும், கங்கைநதியைப்போன்ற யாறும், எல்லாப் பொருள்களும் நிரம்பின குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற நானிலவளங்களும், தத்துவசாஸ்திரவுணர்ச்சியும் மற்றும்பற்பல கலை களும் நம்நாட்டுக்குவாய்த்தவாறு வேறெந்நாட்டுக்கும் வாய்க்க வில்லையென்பது யாவரும் ஒப்பத்தக்கதொன்றேயாம்.

3. அரசன்பாற்குடிகளன்பு:— "ஆங்கமைவெய்தியக்கண்ணும் பயமின்றே, வேந்தமைவில்லாத நாடு." எனத்தேவர் கூறியாங்கு ஒரு தேயமானது எல்லா நலத்தானும் சிறப்புற்றிருப்பினும் அரசனொடு ஒற்றுமையுடையதாய் அரசன்பாற்குடிகளன்பும் குடிகள்பாற்கு அரசனருளும் பொருந்தப்பெறுக்கால் முற்கூறிய நலங்களால் யா தோர் பயனுமின்றி, மதியிலா வானமும் மக்களில்லா மனையும் கண்ணி லா முகமும் பதியிலா மாதும், பொருளிலார் இளமையும் போலவதி தாமன்றோ? நம் தேசத்தார் அரசர்பக்கத்து எவ்வகையான அன்பு செலுத்திவருகின்றனர்? என்பதை ஆராய்வாம். இவ்விந்தியாதேசமா னது பண்டுதொட்டே நிறைந்த அன்புசெலுத்திவரும் கோட்பாடு கொண்டுள்ளது. இவ் அன்பைச்செலுத்தற்குக் காரணம் கடவுளே யென்னும் முழுநோக்குடையது. ஆகவே இந்தியர்களின் அன்பிற்



குறைவிடம் கடவுளேயாம். இத்தகைய கடவுளாகவே அரசரைப் பாவித்துள்ளது தேசமாதலின் இத்தேசத்தாருக்கு அரசர்பக்கலு ள்ள தாய அன்பை வரம்பிட்டுக்கூறல் முடியுமாறன்றே. இந்தியர்க ளின் ராஜபக்திப்பெருவெள்ளத்தைக் கண்டேயன்றோ பொய்யா மொழி முதலிய நீதிநூல்களிலும், மற்றும்பல பெருநூல்களிலும் அரசனைத் தெய்வமென்றே கூறக்காண்கின்றோம்.

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப்படும்." (திருக்குறள்.)

............அனைவோர்க்குந்தெய்வம்.

இலைமுகப்பைம்பூணிறை. (நீதிநெறிவிளக்கம்)

இன்னும் எத்தனை மேற்கோள்வேண்டுமெனுங் காட்டலாம்.
"திருவுடைமன்னரைக்காணிற் றிருமாலைக்கண்டேனே யென்னும்."
(திருவாய்மொழி.)

என்று பெரியாரும் பணித்தனர்.

"இளையரினமுறையரென்றிகழாநின்ற
ஒளியோடொழுகப்படும்."

என்னும் திருக்குறளுரையில் "ஒளி—உறங்காநிற்கவும் தாமே உலகங் காக்கின்ற அவர் கடவுட்டன்மை. அதனோடுபொருந்த ஒழுகலா வது அவர்கடவுளும் தாம் மக்களுமாயொழுகுதல்" என்று ஆசிரி யர் பரிமேலழகரும் அரசரைக் கடவுளாகக்கொள்ளுமாற்றை நன்கு விளக்குவாராயினர். இக்கருத்துப்பற்றியே,

"உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்."

என்றார் திருத்தக்கதேவரும். கடவுளில்லையெனக் கூறும் நாத்திக ரும் சிலருண்மையால் அரசரைக்கடவுளராகக் கருதுவதானே குடிக ளெல்லாரும் அவர்பால் அன்புடையராய் ஒழுகுவரென்பது யாங் ஙனம் பெறுதும்? என்னின் நன்று கடாயினாய்; புண்ணிய பாவ நன்மை தீமையுணர்வுடைமை நாட்டிலக்கணமாக மேலே கூறின மையால் அது கடாவன்றுதலறிக. அல்லதூஉம் இத்தகைய போலிக்

கடாக்கட்கும் இடர்தராவண்ணம் மற்றோருதாரணமுகத்தானும் குடிகளன்புடைமையை முதியோர் விளக்கியிருத்தல் காட்டுதும்.

ஆத்திகர் நாத்திகர் ஆண் பெண் முதலிய எத்திறத்தாரும் தத்தம் உயிர்மீது அன்பு பூண்டொழுகுதல் கண்கூடாம். ஆதலின் தம் "மன்பதைகட்கு மன்னவனே உயிர்" என்று கூறியிருக்கின்றனர். பல்வகைப்பொருள்கள் உற்றார், பெற்றார் மனைவிமக்கள் உடம்புமுதலிய யாவற்றினும் மேம்பட்ட உயிரைமதித்து அன்புசெலுத்துவதும், ஏனையவற்றையெல்லாம் துறந்தாகுதல் உயிரைக்காக்கமுற்படுந்தன்மையும் எவ்வெவர் மாட்டும் அனுபவத்தாலறிந்துள்ளாமன்றே. அரசனுக்கோரிடுக்கணுற்றுழித் தமக்குரிய பிறவெல்லாவற்றையும் நீத்தாதல் அவனைக்காக்க முற்படுங்குடிகளது பேரன்பை விளக்குதற்கன்றே அரசனையுயிராகவும் குடிகளையுடம்பாகவும் முதியோர் கூறிவைத்தனரென்க. இதனை,

"நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே
மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்."

என்னும்புறப்பாட்டானும் "மலர்தலையுலகிற்குயிரெனச்சிறந்த அரசனதியல்பு" என்னும் ஆசிரியர் பரிமேலழகர் மொழியானும் நன்கு தெளிக.

4. அரசர்பாற்பழகுமுறை:—அரசர்பாற்பழகுங்காலும், சேவகஞ்செய்யுங்காலும், அவரிளையரென்றுதல், எளியரென்றுதல், இனமுறையரென்றுதல், நம்மை நன்குமதித்துள்ளாரென்றுதல் வரம்பின்றி நெருங்கி மனம்போனவாறெல்லாம் பேசலாகாதென்றும்; எக்காலத்து என்சொல்லுவரோ யாதுசெய்வரோ என்ற அச்சத்துடனே அவரைச்சார்ந்தொழுக வேண்டுமென்றும், அவ்வாறொழுகாக்கால் பல்வகைப்பட்ட இடுக்கண்களும் முடிவில் உயிர்க்கிறுதியும் வருதல் கூடுமென்றும் மேலோர் வலியுறுத்துரைத்திருக்கின்றனர்.

"இளையரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.
கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்" (திருக்குறள்.)



"அரசு நெருப்பு மனையுறை பாம்பும்
முழையுறை சீயமு மென்றிவை நான்கும்
இளைய வெளிய பயின்றன வென் றுள்ளி
இகழி னிழுக்கந் தரும்." (ஆசாரக்கோவை.)

"இகழினிகழ்ந்தாங் கிறைமக னொன்ற
புகழினு மொக்கப் புகழ்க—இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதை." (நீதிநெறிவிளக்கம்.)

"முன்னவனருளைப்பெற்றுமும்மையுந்துறந்தோரேனும்
மன்னவன்சொன்னவாறேசொல்வதுவழக்காறு." (திருவிளையாடற்புராணம்)

இவற்றால் அரசரிடம் பழகுங்கால் எத்துணைக்கருத்துடன் குறிப்பறிந்தொழுகவேண்டுமென்பது பெறப்படுவதாம்.

5. அரசனைப்பகைத்தலடாதென்றல்:— எக்காரணத்தானுவது அரசனைப்பகைத்தவர் அவனாட்டுறினும், பிறநாட்டுப்புகினும் உய்தி கூடார். பெருமை அறிவு முயற்சி என்னும் மூவகை ஆற்றலும் நிரம்பப்பெற்றவேந்தர்க்கு ஊறுசெய்யக் கருதுவது யமனைக்கையாலழைத்துத்தம் உயிரைக்கொடுத்தலை யொப்பதன்றிப் பிறிதில்லை. ஆதலின் அரசன் கருத்துக்கிசையுமாறே நடத்தல்வேண்டுமன்றிப் பகைத்தால் உயிர்க்கிறுதிவரையுள்ள கேடனைத்து மெய்துமென அச்சுறுத்திக்கூறி முறைப்படுத்தியது நம் இந்துதேசவேதமன்றோ?

"யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்துசெறப் பட்டவர்."

கூற்றத்தைக்கையால்விளித்தற்றாலாற்றுவார்க்
காற்றாரின்னா செயல்." (திருக்குறள்.)

"......மன்னர் புதல்வரைக் கண்டாலன்ன அச்சமுங்கொண்டு"

(திருவிளையாடற்புராணம்)

மேற்கூறிய விடயங்களான் நம் இந்தியா தேசவாசிகளான குடிகள் தம் வேந்தரிடத்து வைத்துள்ள பெருமதிப்பும் பேரன்பும் அச்சமும் ஆகிய உயர்குணங்கள் இத்துணைச் சிறந்தனவாயிருந்தன வென்று நன்குதேறலாமன்றோ? இவ்வகையாக ராஜபக்தியிற் சிற

த்து "மன்னவனெப்படி மன்னுயி ரப்படி" என்ற பழமொழியுடைய நாம் வாழ்ந்த நம் தேசமானது, தற்போது வெகுகாலமாக ராஜ விசுவாசமற்றதென்று மதிக்கவேண்ணாமல், ராஜத்துவேஷமுடைய தென்று கூறும்படியிருக்கின்றது. இந்தியா மாதி முன்னிலும் ராஜபக்தி அதிகமாகக்கொண்டவர்கள் இந்தியர்கள் என்று கூறத்தக்க காலம்வந்தாலன்றி நம் முன்னுக்குவர முடியாது. இது சாமான்ய வசனமன்று. மநுஸ்மிருதி ஏ-வது அத்தியாயம் கூ-வது சுலோகத்தில், "அவ்வரசனோடு எவன் புத்தியில்லாமையால் துவேஷித்துக் கொள்கிறானோ அவன் தானாகவே அழிந்துபோகிறான். அரசனும் அவன் அழிவைக்குறித்து, ஆலோசிக்கிறான்." எனவும், கூ-வது சுலோகத்தில். "ஆதலால் அவ்வரசன் எதை அநுஷ்டிக்கும்படியாயும், எதை நீக்கும்படியாயும் ஏற்பாடு செய்கிறானோ அதை ஒருவரும் தடுக்கக்கூடாது" எனவும், அ-வது சுலோகத்தில் "அவ்வரசன் சிறுவனாகவிருக்கும்போதிலும் அவனை மனிதனென்று அவமானம் செய்யக்கூடாது. ஏனெனின் மேலான தேவர்களின் கூட்டமே அந்த அரசனுருவமாக இருக்கிறதல்லவா" எனவும் கூறப்பட்டிருத்தல் பிரத்தியட்சமன்றோ? இவற்றைக் கவனித்தால் நாம் ஒவ்வொருவரும் அரசர் சட்டங்களைப் பெறுவாறும் அதைச்செய்யுங் கடமையுடையவர்களென்று விளக்கவில்லையா? இவ்வாறான நீதிநூல்களை யெல்லாம் சிறிதும் சிந்தியாது விடுவது முறையன்றென்பது மட்டுமா! அவற்றை யெழுதிவைத்த நம் முன்னோரையும் அவமதித்ததாகுமல்லவா? தற்போது நமது சாருண்ய கவர்ன்மெண்டார் நம்மீது வைத்த பேரருளால் நமக்குச் சில சுதந்தரங்களைக் கொடுத்திருக்கின்றனர். அவற்றைவிடுத்தமைக்கு நன்றிபாராட்டாது அதிகவுரிமையைப் பெறவும், அரசரைப்போலாகவும், கருதுவதான பேராசைகொண்டு அவரது புத்தியால் சிலர் புரியும் முறையற்ற ராஜத்துவேஷ காரியங்களால் இத்தேசமுழுதுமே ராஜதுவேஷமுடையதென்ற பேர்பெறலாயிற்று. ஆதலால் பிரஜைகளாகிய நாம் அரசன் சட்டங்களை வணக்கவொடுக்கத்துடன் அச்சட்டங்களை மீறுபவர்களை நம் விரோதிகளாகவே பாவித்து ராஜரீகத்தை புரிவார்க்குச்சிறிதும் இடந்தாராமலும் அவர்கள்பேச்சுக்குச் செவிசாயாமலும் புறக்கணித்து ஒதுக்க வேண்டும். இவ்வாறொழுகுதலே நமது நிகழ்கால எதிர்கால க்ஷேம



த்துக்கு ஏற்ற பெற்றியாவதுடன் புகழ் புண்ணியங்கட்கும் பொருந்துவதாகும். இந்தியர்கள் எக்காலத்தும் இவ்வுண்மைகளை மறக்கலாகாது.

பிரஜைகளின் ராஜபக்தி முறைவகைகளை மிதுகாறும் எடுத்துக் கூறினும். இனி, அரசிலக்கணங்களையும் நமது பண்டையரசர்களின் தன்மைகளையும், தற்காலம் இராஜாங்கத்தாரால் நமக்குண்டான நலன்களையும் மற்றும் பொதுவகைகளையும், நீதிநூல் முதலானதாலும் பூர்வசரித்திரங்களாலும், தற்கால அநுபவ வகையாலும் இனிதெடுத்து விளக்குவாம்.

6. **அரசிலக்கணம்:—** அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என்னும் ஆறங்கங்களையுடைமையும், அஞ்சாமை பழிதூக்கம் அறிவுடைமை கல்வி இவைகளைக் கோடலும், ஓதல் வேட்டல் ஈதலென்னும் பொதுத் தொழிலினும், படைக்கலம்பயிறல் பல்லுயிரோம்பல் பகைத்திறந் தெறுதல் என்னும் சிறப்புத் தொழிலினும் வழுவாது நிற்றலும், பகைவரையழித்தல், நிறைகோடல், தன்னுடைய பனித்தல் முதலியவற்றால் மண் பொன் நெல் முதலிய பொருள்வருவாயைப் பெருக்கித் தொகுத்தலும், பகைவர் கள்வர் சுற்றத்தாரின்னா செய்வாராகியவராற் கவராமற் காத்தலும், கடவுளர் அறவோர் வறியரென்றிவர்க்கு அறப்பொருட்டாகவும் கரி பரி யுடை நாடு அரண் முதலியவற்றிற்குப் பொருட்பொருட்டாகவும், மண்டபம் வாவி செய்குன்று இளமரக்கா என்றிவற்றிற்கு இன்பப்பொருட்டாகவும், முகமலர்ந்து இனியகூறி அப்பொருளைக் கொடுத்தலும், காட்சிக்கெளியனாதலும், கடுஞ்சொற்கூறாமையும், இடித்துரை பொறுத்தலும், கல்விபயில்வாற் பெரியாரைத் துணைக்கோடலும், இறைமாட்சியிற்றிறம்பாதிருத்தலும், உறவினர், பகைவர், பொதுமனர் என்றியாரிடத்தும் ஒருபடித்தாய் நிற்கும் செங்கோலுடைமையும், இன்னோரன்ன பிறவும் அரசரிலக்கணங்களாக ஆன்றோர் கூறுப.

அரசாட்சியென்னும் பத்திரவுருவத்துக்கு மந்திரிகளே கண்களாகவும், குடிகளே கால்களாகவும், நட்பாளரே வலிய புயங்களாகவும், ஒற்றரே செவிகளாகவும், நீதிநூல்களே உணர்ச்சியாகவும், அறிவே வாயாகவும் கூறப்பட்டுள்ளனவென்பதை,

"மந்திரக் கிழவர் கண்ணா மக்கடன் றூண்களாகச்
சந்தர வயிரத் திண்டோள் தோழராச் செவிகளொற்றா
அந்தர வுணர்வுநூலா அரசெனு முருவுகொண்ட
எந்திர மிதற்கு வாயாத் தூதுவ ரியற்றப்பட்டார்"

என்னும் சூளாமணிச்செய்யுள் விளக்குவதாம். இவ்வாறாகியவுருவகத்துள்ளே யடங்கிய பொருட்சிறப்பு மிகவியக்கற்பாலதாம்.

"கற்றமாந்தரைக்கண்ணெனக்கோடலும்"

என்ற திருத்தக்கதேவர் மொழிப்படி கல்வியறிவிற்சிறந்த மந்திரிகளே அரசனுக்குக் கண்ணென்றார். கண்ணானது எல்லாப்பொருளையும் உள்ளவாறுகாணும் இயல்பிற்றாதல்போல் அரசன் மந்திரிகள் சொல்வழிநின்றே எல்லா விஷயங்களையும் உள்ளவாறறிந்து கோடலைக் குறிப்பித்தவாறுமாம். எல்லாவுறுப்புக்களையும் தாங்கி நிற்பவை தாள்களேயாதலின் குடிகள் தத்தம் தொழில்வலத்தாற் பொருளீட்டித் தென்புலத்தாராதிய அனைவரையுங் காத்தற் குரியராதலின் அன்னவரையே கால்களாகக் கூறினர். அரசர் ஒற்றாலறிந்தவழியும் உண்மையை நேரேகாணவேண்டி ஒதுக்கிடத்தே வேற்றுருக்கொண்டு தம் தோள்களே தமக்குத் துணையாகத் தமித்துத் தங்கியுணரும் பெற்றிநோக்கித் தோள்களையே துணைவராகக் கூறினர் என்ப.

"ஒற்றிற் றெரியாச் சிறைப்புறத் தோர்தமனைப்
பொற்றேரிணை யாத்தெரிதர்தங் குற்றம்
அறிவறி தென்றஞ்சுவதே செங்கோன்மை"

என்னும் நீதிநெறிவிளக்கமும் இக்கருத்துப்பற்றியதேயாம். அரசர் தமது கண்கள் செல்லாத பரப்பில் நிகழ்வன வெல்லாவற்றையும் ஆண்டாண்டுச்சென்று கண்டுவந்து கூறுபவரே ஒற்றராவர். அரசர்கேள்வியானே அவற்றை நேரிற்கண்டாங்கு அறிதல்வேண்டுமாதலின் ஒற்றரையே செவிகளாகப் புகன்றனர். "அரசர்க்குச் செவிகண்" என்ற உலகவழக்குமொழியும், "கண்ணிற்சொலிச்செவியினோக்குமிறைமாட்சி" என்னும் நீதிநெறிவிளக்கத் திருவாக்கும் இவண் கவனித்தற்பாலவாம்.



மநு முதலிய விதிநூல்கள் கூறுமாறே அரசர் எல்லாவற்றையும் முடிவுசெய்ய வேண்டுமாதலின் அந்நூல்களையே விதி வகுக்கும் உணர்வாகக் கூறினர். "ஒற்று முறைசான்ற நூலு மிவையிரண்டும், தெற்றென்க மன்னவன் கண்" என்ற செந்நாப்போதார் திருவாக்கும் காணலாம். அன்றியும்,

"மண்ணியல் வளாகங் காக்குமன்னவர் வணக்கலாகாப்
புண்ணிய நீரரேனும் புலவராற் புகலப்பட்ட
நுண்ணிய நூலினன்றி நுழைபொருளுணர்தல் தேற்றார்
எண்ணிய துணிந்து செய்யுஞ் சூழ்ச்சியு மில்லையன்றே"

என்னும் சூளாமணிச்செய்யுளும் இக்கருத்தையே வலியுறுத்துவதாமென்க. சந்திவிக்கிரகங்கட்கு வேற்று வேந்தரிடைச்சென்று தான் வகுத்துக் கூறுவாருங் கூறியது கூறுவாருமாகித் தூதரை வாயாக மொழிந்தது மிகப்பொருத்த முடையதாமென்க. இத்தூதுவர் கூற்றெல்லாம் அரசன்கூற்றாகவே வேற்று வேந்தரும் பிறரும் கோடல் கூடுமாதலின் இவ்வாறு சொல்லினர். இவ்வாறே அரசர் தன்மை பலவுள. அவையிற்றை முற்றவுணர்த்தலியலாமையின், அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் சுருக்கி வகுத்துக்கூறி மேற்சொல்வாம்.

7. **அரசர் தர்மம்:**— அரசராவார் தம்மாலும், தமது பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வராலும், விலங்கினங்களாலும், குடிகட்கு அச்சமுறாவாறு புரத்தல் முதலியன அரசர் தருமங்களாம். குடிகள் வறுமையாற்றளர்வுற்றபோதுங் கருணையின்றி இறைப்பொருளை நெருக்கி வாங்குவித்தல் முதலியன அரசரால்வரும் அச்சமாம். தண்டத் தலைவராதியோர் பரிதானங்கோடலாதிய பரிசனத்தால்வரும் அச்சமாம். தமதாக ஒருவர் கொண்டுள்ள பொருளைப் பிறர் கவர்தல் கூறையாடுதலாதிய கள்வரால்வரும் அச்சமாம். பைங்கூழையழித்தல் பசுக்களைக் கோறலாதிய விலங்கினங்களான்வரும் அச்சமாம். இவ்வைவகைப் பயமுந்தீர்த்தல் அரசர்கடமையாமென்பதை,

"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ"

(பெரியபுராணம்)

"பரிசனம் பகைவர்கள்வர் படர்தரு முயிர்கடாமென்
றலை செயக் கிடத்திறுறு முலகிடை யிடையூறெய்தா
வரிசையிற் காத்து நீநிலவுழக்கின்றோர்தம்மை மொத்திக்
கரிசறப் பொருளுங் கோடல் காவலர் தருமமென்றான்"

(விநாயகபுராணம்)

என வருபவற்றால் நன்கு தெளியலாம்.

(இன்னும் வரும்.)

எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்,

---

௨

# நல்லொழுக்கம்.

---

## ஆறும் அதிகாரம்

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

அவர் விடுதலைபெற்றுத்தன் கல்வித்தேர்ச்சியின் ஸ்தானத்தைத் திரும்ப அடைந்தபொழுது அவர் நெடுநாட்சிறையிலிருந்ததைப் பற்றிய சமாசாரத்தை எதிர்பார்த்துக்கொண்டு அவருடைய பிரதம பிரசங்கத்திற்குப் பெரிய கூட்டமானது கூடிற்று. ஆனால் டி-லீயன் (De-Leen) என்பவர் குற்றஞ்சாட்டினவர்மீது தோஷங்கூறுதலன்னம் மிகவும் புத்தியும் சாந்தமுமுள்ளவராயிருந்தனர். "ஹெரி-டைஸ்-பேமஸ் (Heri-dice Bames) என்னும் வழக்கமான வாய்பாட்டால் ஐந்துவருஷங்களுக்குமுன்னர்த் அக்கரையாய்த் தடைப்பட்டிருந்த பிரசங்கத்தைத் திரும்பத்தொடங்குதலை மாத்திரம் செய்து தன் உபந்நியாசவிஷயத்தினுள் நேரே பிரவேசிப்பாராயினர்.

ஆனால் கோபக்குறிப்பைக் காட்டுவது நியாயமட்டுமல்ல, அவசியமுமானபடியான சமயமும் சந்தர்ப்பமும் இருக்கின்றன. பொ



ய்மை, தன்னயம்பாராட்டல், இரக்கமின்மையாகியவற்றைக்காணின் கோபிக்கக்கூடாதவர்களாயிருக்கிறோம். தன்வெளியிடக் கடமையில்லாத சங்கதிகளினுங்கூட உண்மையான உணர்ச்சியுள்ளமனிதனுக்கு எவ்விதமான அற்பத்தனம் அல்லது இழிவைக்கண்டமாத்திரமே எரிச்சலுண்டாவது இயற்கை. "நின்றையான கோபம்பற்றிச் சலனப்படாத மனிதர்களுடன் எனக்குக்காரியமின்று" என்று பெர்தஸ் (Perthes) என்பவர் சொன்னார். உலகத்திற்கெட்டவர்களைவிட நல்லவர்கள் மிகுந்திருக்கின்றனர். கெட்டவர்கள் தாங்கள் அதிக தைரியமுள்ளவர்களாயிருப்பதினாலே மாத்திரம் வெற்றிபெறுகின்றனர். நிர்மாணபுத்தியுடன் தன்வல்லமையைச் செலுத்துகிற மனிதனிடத்திற் பிரியப்படாமலிருக்கக்கூடவில்லை. அவன் அவ்விதமாய்ச் செலுத்துகிற காரணத்திற்காகவே, வேறொன்றினுக்குமல்ல, நாம் அவனுடைய பக்ஷத்தை ஆதரித்தல். அநேகமுறை வாய்பேசிய தற்காகப் பச்சாத்தாபப்பட்டிருக்கின்றேன். ஆனால் பெரும்பாலும் மௌனமாயிருந்ததற்காகவும் துக்கப்பட்டிருக்கிறேன்."

நியாயமானதை விரும்புகிறவன் அநீதி அல்லது அநீதியான செய்கையைக் கண்டு கவனியாதிருத்தல் கூடாது. அவனுக்குச் சிரத்தை இருந்தால்தான் பூரண இருதயத்துடன் சிரத்தையாகவே பேசுவான். ஓர் கௌரவமான ஸ்திரீ யெழுதியது வருமாறு:—

"ஓர் மேன்மையான சித்தமானது அயோக்கியதையை நிந்திக்கக் கற்பிக்கின்றது. விலக்கப்பட்ட லாபங்களை எதிர்பார்த்தலையும், பொய்புகறலையும், தீயவைசெய்தலையும், மனசிற் பிறர் கெடுதலைத் தங்கவைத்தலையும், சுவாதீனமான சித்தத்தை அடிமைபோற் பந்தப்படுத்தலையும் நிந்திக்கப்பழக்குகின்றது."

ஆயினும் நாம் படபடப்புடன் நிந்தியா வண்ணம் காத்துக்கொள்ளல் வேண்டும். மிகவும் நல்லவர்கள் ஆத்திரங்கொண்டு செய்யவேண்டிய பாரத்தை உடைத்தாயிருக்க நேரிடுகின்றது. அவர்கள் உண்மையாயிருக்கச்செய்யும் குணம் தானே, பெரும்பாலும் அவர்களைப் பொறுமையற்றவர்களாகச் செய்கின்றது. "மனோசம்பந்தமாய்க் கடவுளளித்த பாக்கியங்களிற் புத்திசம்பந்தமான பொறு

மைதான் மிகவும் அருமையானது. நாம் கற்றுக்கொள்ளவேண்டிய கடைசிப் பாடமாவது, நமக்குத்தானே அதிருசியமாகின்ற கஷ்டங்களில் நம்பிக்கை வைப்பது என்று மிஸ் ஜுலியா வெட்ஜ் உட் (Miss Julia-wedge-wood) செப்புகின்றனள்.

பொறுமையற்ற படபடப்புக்குணத்தைச் சீர்திருத்துவதற்குச் சிறந்த கருவியாவது, விவேகமும் நம்வாழ்க்கையின் விரிவான அநுபவமும் அதிகப்படுவதேயாம். நல்லுணர்ச்சியை வளர்த்துக்கொண்டாற் சன்மார்க்கம்பற்றி அகப்பட்டுக்கொள்ளத்தக்க சிக்குமுக்குகளினின்றும் தப்பித்துக்கொள்வது இயல்பாகின்றது. அந்த நல்லுணர்ச்சியாவது முக்கியமாய்த் தன்னை உடையவரை உலகானுபவமான காரியங்களில் நீதியும், தீர்மானமும், விவேகமும், தர்மமும் கலந்து நடக்கும்படி இறைமைப்படுத்துகிற மனோசுபாவமாகின்றது. ஆதலால் அறியாமையும், கொஞ்சத்தனமுமுள்ள மனிதர்கள் இரக்கமும், பொறுமையு மற்றவர்களா யிருத்தல்போல, அறிவும் அநுபவமுமுள்ளவர்கள் மிகவும் சகிப்பும் பொறுமையுமுள்ளவர்களாக என்றுங் காணப்படுகின்றனர். பெருந்தன்மையும் உதாரத்துவமுமுள்ள மனிதர்கள் தங்களுடைய அநுபவஞானத்திற்குத் தக்கவண்ணம், மற்றவர்கள் நல்லொழுக்கத்தை வழுவிப்பதில் அசந்தர்ப்பங்கள் வந்து மேலிடுவதற்கும், மனக்கலர்ச்சி முதலியதோஷங்களுக்கு இடங்கொடுக்கத்தக்க பலஹீனமும் தவறத்தக்கதுமான, சுபாவங்களுமாகிய குறைகளையும் பிரதிகூலங்களையும் அவர்கள் உடைத்தாயிருப்பதற்கும் போக்குவிடச் சம்மதப்படுகின்றனர். "நான் செய்திருக்கக்கூடாத குற்றத்தைப்பிறர் செய்திருப்பதாகக் காணவில்லை" என்று கீதி (geethe) என்பவர் கூறினர். அப்படியே விவேகமும் நன்மையுமுள்ள மனிதன் ஒரு குற்றவாளியைப் பந்தாயத்தில் வைத்து டைபர்னு (Tyburn) க்கு இழுத்துச்செல்லக்கண்டபொழுது.......... ஒழுக்கமானது பெரும்பாலும் நாந்தாமே செய்துகொள்ளும் தன்மையாகவே எப்பொழுதும் இருக்கும். உற்சாகமுள்ளவன் உலகத்தை உற்சாகமுள்ளதாகவும், துக்கமுள்ளவன் துக்கமுள்ளதாகவும் செய்துகொள்ளுகிறான். நம்மைச்சுற்றி யிருப்பவர்களுடைய குணங்களில் நம்முடைய சொந்த சுபாவமே பிரதிபலித்திருக்கக்கா



ண்பது வழக்கம். நாம்தானே திருப்தியற்றவர்களாயிருப்பின் அவர்களையும் அப்படியே பார்க்கின்றனம். நாம் அவர்கள்விஷயத்தில் இரக்கமும் தர்மமுமின்றியிருப்பின் அவர்களும் நம் விஷயத்தில் அப்படியே யிருப்பார்கள். கொஞ்சக்காலத்திற்குமுன்னர் சாயங்காலம் உலாவித்திரும்பிவந்த ஒருமனிதன் தனக்குப்பின்னே ஒரு குரூபமான பையன் வந்ததாகச்சந்திப்புக்குப் போய்வரும் ஓர் போலீஸ்சேவகனிடம் முறையிட்டான். அது அவனுடைய சொந்தச்சாயையாகவேயிருந்தது. மனுஷ்யவாழ்க்கையானது நம் ஒவ்வொருவருக்கும் அப்படியேயிருப்பது வழக்கமாயிருக்கிறது. அனேகமாய் அது நமது சொந்தபிரதிபலனாகவே யிருக்கிறது.

நாம் பிறருடன் சமாதானமாயிருந்து அவர்களுடைய மரியாதையைக் காக்க விரும்பினால் அவர்களுடைய தன்மை விஷயத்தில் மதிப்பை உடைத்தாயிருத்தல் வேண்டும். ஒவ்வொருமனிதனுக்கும் உருவத்திலும் இலட்சணத்திலும் விசேஷம் இருப்பதுபோலவே நடையிலும் ஒழுக்கத்திலும் விசேஷம் உண்டு. அவர்கள் நம்முடன் நடந்துகொள்வதிற் சகிப்பை உடைத்தாயிருக்கும்படி அவர்களிடம் எதிர்பார்க்கிறதைப்போல அவர்களுடன் நாமும் நடந்துகொள்வதிற் சகிப்பை யுடைத்தாயிருத்தல்வேண்டும். நம்முடைய சொந்தவிசேஷ குணங்கள் நமக்குத் தெரியாமலே நம்மிடமிருக்கின்றன. தென் அமெரிக்காவில் ஓர் கிராமமுண்டு. அதிற் சகலமானவர்களுக்கும் கண்டத்திற் சாதாரணமாய்ப் புடைப்பு இருந்தபடியால், அது இல்லாதவர் குரூபியாய் மதிக்கப்படுகின்றனர். ஓர்நாள் இங்கிலீஷ்காரரின் கூட்டமானது அந்த ஸ்தலத்தின் வழியே போயிற்று. அப்பொழுது ஒரு கூட்ட ஜனங்கள் முழுமையும், இந்த ஜனங்களைப்பாருங்கள்! பாருங்கள்!! அவர்களுக்குத் தொண்டைப்புடைப்புகள் இல்லையென்று கூவிக்கொண்டு பரிகாசம் செய்யக் கூடினார்கள்.

அநேகர் தங்களையும் தங்களிடத்திலுள்ள விசேஷங்களையும் பற்றி மற்ற ஜனங்கள் என்ன நினைக்கின்றனர் என்று அறிய மிகவும் ஆத்திரமுள்ளவர்களா யிருக்கின்றனர். சிலர் கெட்ட குணத்தின் பாகத்தை எடுத்துக்கொண்டு தாங்களே நிதானித்து மிகவும் கேவலமானதை யூகிக்கின்றனர். ஆனாற் பிறர்பால் தர்மகுணமின்மையா

வது அதுவென்னபடியே இருக்குமிடத்து நம்மிடத்திற்றானே தர்மமும் சற்குணமின்மையின் பிரதிபலனுந் தானிருப்பதாகப் பலதிருஷ்டாந்தங்களால் வெளியாகின்றது. நாம் நம்மைத்தானே தொந்தரவுக்குட்படுத்தும் கேட்டிற்குக் காரணம் நமது சொந்தஎண்ணமாகவே பெரும்பாலும் சம்பவிக்கின்றது. நம்மைச் சூழ்ந்திருப்பவர்கள் நம்மைத் தர்ம ஹீனராய் நினைப்பினும், அவர்கள்பேரில் நாம் சிறிதும் கோபித்துக்கொள்வதற் காரியங்களைச் சேர்த்திருத்திக்கொள்ள மாட்டோம். அங்ஙனம்புரிவதால் நாம் அவர்களுடைய கெட்டசுபாவம் அல்லது வீண் எண்ணத்திற்கு நம்மை அடிமையாய் இலக்காக்கிக் கொள்ளத்தான் செய்கிறோம். நம்முடைய வாயினின்றும் புறப்படுகிற தீமையானது பெரும்பாலும் நம் மார்பினுள்ளே விழுகின்றது.

தங்களாழ்நாளின் செழிப்பான அநுபவத்தில் உதித்த ஞானநிறைந்ததும் ஆச்சரியகரமானதுமாய் அடியிற்காணப்பட்டபோதனையை பெரியவரும் நல்லவருமான தத்வஞானியாகிய பேரடே (Faraday) என்பவர் தன் இஷ்டராகிய தேர்ச்சிபெற்ற டின்டால் (Tyndall) என்பவருக்கு வரைந்த ஓர் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். அதுவருமாறு "நான் ஒரு விருத்தன், இதனால் அதிகமான அநுபவத்தைப் பெற்றிருக்கவேண்டியவன். நான் சொல்வதைக்கேளும். நான் இளமையாயிருக்குங்காலத்தில் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைப் பெரும்பாலும் மாறுபடக்கிரகித்தேன். அவர்கள் அக்காலத்தில் அபிப்பிராயப்பட்டதாக நான் நினைத்தவண்ணம் அவர்கள் அபிப்பிராயப்படவில்லையென்றுணர்ந்தேன். மேலும் கோபக்குறியானவார்த்தைகளைத் தோற்றினவிடத்து, நம் கிரஹணசக்தி கெஞ்சித்தமர்தமானதாகவும், பக்ஷமானவைகளாகவுந் தோற்றுமிடத்து, புத்திசூழ்ச்சிக்கூர்மையானதாகவும் இருப்பது நன்மையென்பதைப் பொதுவிதியாகவைத்துக்கொள்ளல்வேண்டும், யதார்த்தமான உண்மையானது அந்தியத்தில் தலங்காமற்போகாது.

(இன்னும் வரும்.)

---



திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரசுவாமிகள் சரிதம்.

(முற்றொடர்ச்சி.)

இனிச் சிதம்பரசுவாமிகள் மதுரையினின்றும் போந்து விருத்தாசலமடைந்து குமாரதேவர் நிஷ்டையிலிருக்கக் கண்டு, அவரைவலஞ்செய்து வணங்கி வடதிசைநோக்கிச் செல்லுகையில், "பொம்மையபாளையம்" என்னும் ஊரிலே, சதுரக்கள்ளிப்பாலையே உண்வாகக்கொண்டிருக்கும் சிவாநுபூதிச் செல்வராகிய "பாலைய சுவாமிகள்" சிதம்பரசுவாமிகளது அநுபவநிலையைக் கேள்வியுற்று அவரைப்பார்க்க விருப்பமுற்றிருக்கையில், தாமும் அவரைக்காணுமாறு அப்பாளையம் நோக்கி வருகையில், இருவரும் ஒருவரையொருவர் எதிர்வரக்கண்டு அளவளாவித் திருமடத்தின்கணிருந்து, சுபாநுபவத்தைக் குறித்து நெடுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்து பின் ஸ்நானஞ்செய்து சிவார்ச்சனைமுடித்து, அவருடன் புசித்து விடைபெற்று திழியனூர் வழிகொண்டு சென்றனர். அங்ஙனஞ் செல்லுமிடையில் அவ்வூர்ச் சோலையில் *பாவோடிக்கொண்டிருந்த

---

* பாவோடுதலென்பது:—நெய்வார் தொழிலென்றது. இது செங்குந்தர் குலத்திற்குரியது. ஒருகாலத்து ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் இம்மரபினர் பொருட்டு, தேவர், முனிவர்களை நெய்தற் கருவிகளாகவும், தாம் நெய்வோராகவுமிருந்து நெசவுத்தொழிலைச் செய்துகாட்டி, அக்குலத்தினர்க்கு ஜீவனார்த்தமாக வைத்தருளுமாறு, கொடுத்ததாக ஓர் செய்யுள் காணப்படுகின்றது. அது வருமாறு:—

"செங்கண்மாலுந் தியந்தாமரையினூல் வாங்கித்திங்கள் வட்டத்திழைத்துத்
தேவாலகாகவே சிலமுனிவர்பாவோட சேர்ந்தவிழை விழுதுதோயீந்து
பங்கயன்றன்முகம் படமரமதாகவே பச்சைமால் முன்றண்டதாய்ப்
பரிவாலக்தியன் விழுதுகோலணியதாய்ப் பணிசேடன் வலிகயிறதாய்
வெங்கட்சடாமுனி விசைக்கோலதாய் வேதவின்முனி மிதிப்பலகையாய்
மேலான மகதிமுனி நாடாவிலோட முன்விரித்த பாவதனைநெய்து
சங்கரன் மதலையிப்பவநிலாத்தொழிலைச் சமைத்தாய்மினைவிண்ணுளோர்
சயசயெனவாழ்த்தக்கையேற்றுக் கைக்கோளர்சருவகாலமும்வாழியே."

அன்றியும்,

"பானலச் செந்நாப் புலவன்செங் குந்தரைப் பார்த்த பின்னர்க்
கானலம் வாசி நலங்காண செஞ்சங் கசிந்துருகி
தானலம் பாநல மோடே கலைநல நோக்கியந்தன்
மேனல மென்ற பொருணலந் தேர்ந்து விளம்பினனே."

(செங்குந்தர் மரபு விளக்கம்.)

என்வும்,

"ஐயாம நுய்தொழில் லேதென்ன வுயர்குறன் சொல்வன் குவர்க்குச்
செய்தொழில் கற்பித்தமைத்த சேட்டக்கை."

(செங்குந்தர் திருக்கைவழக்கம்.)

என்வும் வருமாற்றுணர்க.

* செங்குந்தருள் இருவினையொப்பு மலபரிபாகமு நேரிட்டிருந்த ஒரு விதந்துவாகியநரைமூதாட்டி தம்மைக்கண்டு பணிந்துபசரித்திட்ட புற்கையமுதத்தைப் புசித்து, அம் மூதாட்டியின் வேண்டுகோட்கியைந்து, சிலநாளங்குவசித்துப் பின்னர், "யாமிதுபோது ஜீர்ணோத்தாரணஞ்செய்யவேண்டிச்செல்கின்ற திருப்போரூர்க்குவருக" என்று கட்டளையிட்டுத்திருப்போரூராகிய பனங்காட்டையணுகி, அங்குவள்ளைப்பூடால் நிறைந்த ஓடையில் நீராடி, நியமங்கள் முற்றிப் பனங்காட்டின் நடுவில் ஒரு பெண்பனை மூலத்திற் சுயம்புவாய் முளைத்திருந்தருளிய முருகக்கடவுளைத் தரிசித்துத் திருப்போரூர் பிரணவ மலைச்சாரலில் வேம்படிவிநாயகர் கோயிலில் வசித்திருந்தனரென்ப.

இங்ஙனம் வசிக்கும் நாட்களிலொன்றில், ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் குமாரதேவரைப்போல எழுந்தருளிவரக்கண்டு அச்சமுற்று விரைந்தோடித் திருவடி தொழுதுநின்று, அங்கவற்கணம்மை யருளியதை விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்டு அக்குருமூர்த்தி "ஆயின், யாமிருவரும் சுவாமியைத் தரிசிப்போம் வருக." என்றருளி, இருவரும், பெண்பனையை அணுகா நிற்கையில் "சுவாமிகள், ஆசிரியரை நோக்கி, சுவாமி! ஆதியில் இவ்வாலயம் எவ்வாறிருந்தது." என, குமாரமூர்த்தி அவர்நெற்றியில் திருநீறுசாத்தித் திருவருள்நோக்கஞ் செய்து, "ஆலயம் முதலியவற்றைப் பார்ப்பாயாக" என்றனர்.

என்றவப்போழ்தே ஆலயம், கருப்பக்கிரகம், மண்டபம், மதில் கோபுரவாயில், தேவிமார் சந்நிதி, துவஜஸ்தம்பம், மாடவீதி, மடாலயம், தீர்த்தமுதலிய யாவும், தமது கண்ணுக்கு இலக்காகக்கண்டு, அவையனைத்தும் சிற்பநூல் முறைப்படி சிறப்பாக விளங்குதலைக் குறித்து வியப்புற்றனர். ஆசிரியராய் எழுந்தருளிய மூர்த்தி அவ்வாலயத்துட் சீடருடன் புகுந்து மூலஸ்தானத்திற் சுயம்புவாய் வீற்றிருந்த தம்மைத்தாமே அஞ்சலி முகிழ்த்தாராயினர்.

அப்போது முருகக்கடவுளாகிய ஆசிரியரது திருவடிகளை எதிரகக்கொண்டு வடதிசையாய்ச் சாஷ்டாங்கமாய்ச் சரணம்புரிந்து எழுவதற்குமுன், ஆசிரியராய் எழுந்தருளிய மூர்த்தி திருவுருக்கரந்

* செங்குந்தர் - பகைவரது உதிரத்தாற் சிவந்த ஈட்டியையுடையவர்.



தனர். சிதம்பரதேவர், கட்புலனாகிய ஆலயம் முதலிய யாவும் மறைந்து பனைமரத்தடியிற் சுவாமியைப் பழையபடியே இருக்கக் கண்டு, அந்த அற்புதத்தைக்குறித்துப் பரவசமடைந்து வியந்த சிந்தையராயினர்.

இங்ஙனம் தமது குருமூர்த்தியாய் எழுந்தருளித் தரிசனந்தந்த குமாரதெய்வத்தின் திருவருட் திறத்தை நினைக்குந்தோறும், பேரானந்தப் பெருவாருதியிலாழ்ந்தி, போக்ஷசாதனந்துய்த்தற்கு முருகன் அருள்கூட்டுமளவும், இத்தலத்தே வசித்திருத்தல் வேண்டுமெனக்கொண்ட மனத்தராய்ப் பிரபஞ்சத்தில் மாயாரூபமாக விளங்கும் பந்தபாசங்களில் மனத்தைப் புகவிடாது, அமலனருள் கூடப்பெற்றோர் உலகில் பித்தர் பேயர்போல் நடித்து,

"வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர்பற் றற்றவரே"

என்று பகன்றுவைத்த பட்டினத்தடிகளின், உண்மைவாக்கைத் தழுவியவராய் அவ்விடத்தே வசிப்பாராயினர். இவ்வாறு ஆசிரியராய் வந்து ஆட்கொண்ட காரணத்தால் அந்நாள் தொடங்கிச் * சரணசம்பந்தம் நடந்து வருகின்றது.

இதன்பின், சிதம்பரசுவாமிகள் † "நெஞ்சுவிடுதூது" என்னும் பிரபந்தமியற்றி "அருணையிற்" குடிகொண்ட தமது ஆசிரியரான குமாரதேவர்க்கு அனுப்பிவிட்டு, முன்போல விநாயகர் கோயிலில் வசித்திருந்தனரென்ப.

இவரிங்ஙனம் வேம்படி விநாயகர் கோயிலில் வசித்திருந்த சமயத்து முன், "திருப்பேரூரில்" வதிந்திருந்த ஞான குரவராகிய "சாந்தலிங்கசுவாமி"களிடத்துத் தமது ஆசிரியர் மூலமாகப் பெற்றுவந்த

* சரணசம்பந்தமெனப்படுவது குரு சீடனது சிரசின்மேல் தமதுபாதங்களை வைத்து அருள்செய்தல் எனவறிக.

† நெஞ்சுவிடுதூது எனப்படுவது சிதம்பரசுவாமிகள் தமது மனத்தைக் குமாரதேவனென்னுஞ் சற்குருவின் பக்கல் தூதுவிடுவதாகப்பாடிய பிரபந்தம். அதன் ஈற்றில், " சற்குமாரதேவன் றருங்குவளை மாலை நெஞ்சே, யிற்பெறவே வாங்கிவா வின்று" என்றது காண்க.

"வைராக்கியசதகம்" "வைராக்கியதீபம்" "அவிரோதவுந்தியார்" "கோலைமறுத்தல்" முதலான வேதாந்தசாத்திரங்களுக்குச் சம்பிரதாய விதிவழுவாத சிறந்த உரையியற்றி முடித்துப்பின், கண்ணுடைய வள்ளலாரியற்றிய, "ஒழிவிலொடுக்கம்" என்னும் அரியபெரிய ஞானநூலுக்குப் புலவோர் போற்றித்துதிக்கும் பெற்றியுடைத்தான திப்பிய உரையொன்று இயற்ற முயலுகையில், அந்நூலின் முதற்செய்யுளாகிய,

"வேதாகமப்பவுரி வீசுங்*களாசநிலை
ஆதாரவெற்பிலபிடேகம்—போதத்
திருளிலெழுபானுவென தொழிவிலின்பக்
கருணைபொழிவானெடுத்தகை."

எனக்காணப்படுஞ் செய்யுளில் "களாசம்" எனவரும் பதத்துக்குப் பொருள்தோன்றாது மயங்கி முருகக்கடவுளைப் பிரார்த்திக்க, அக்கடவுள் நரைமுதிர்ந்த ஓர் விருத்தகோலத்துடன் எதிர்தோன்றி பிரம்பை நீட்டி "இதனைக்கொள்வாய்" என்று கூறி மறைந்தனர். புலவர் பெரிதும்மகிழ்ந்து அதுதொடங்கி அந்நூலுக்கு உரையியற்றி இனிது முடித்திருந்தனரென்ப.

இன்னணம் சிதம்பரதேவர் அத்தலத்து வசித்துவருங்காலத்து, இவரது பெருமித குணமும், சிறந்த பத்திநெறியும், நிறைந்த கவிப்புலனும் நாடெங்கும் பரவ, அஃதுணர்ந்த அன்பர் பலரும் வந்து தரிசித்துத் தேவர் மகிமைகளை யுள்ளவாறுணர்ந்து, பணிந்து புகழ்ந்து போற்றியதால் பின்னும் சுவாமிகள் பெரும்புகழ் வானதியின் பெருக்கென நிலவத்தொடங்கியது. இதனிடையில் ஓர்நாள் சிதம்பரதேவர் மாலைக்கடன் முடித்தற்பொருட்டுப் பிரணவமலைச் சாரற்கணித்தாயுள்ள தீர்த்தத்திற்கு வருகையில் சில கள்வர்கள், சுவாமிகளணிந்திருந்த உருத்திராக்ககண்டிகை, பொன்பட்டாடை முதலிய ஆபரணங்களை அபகரித்துப்போவானெண்ணிச் சுவாமிகளை யணுகலும், திடீரெனக் கண்கள் தெரியாமல் மயங்கவும், அன்னோர்கள் திடுக்குற்ற மனத்தராய் நடுங்கிச் சுவாமிகளைநோக்கித் "தாங்கள் இன்னாரென்றும் செய்யவந்த காரியம் இன்னதென்றுஞ் சொல்லி நமஸ்கரித்து நாங்களபசாரப்பட்டதை மன்னித்தருள வேண்டுமென்று சரணமடைய, அன்பே ஓருருவெனத்தோன்றிய சைவசமயப்பெரியராகிய சுவாமிகள் திருவுளமிரங்கியவராய்க் கள்வரை நோக்கி! "நீங்களிதுவரையிற் சம்பாதித்தபொருளிற் செலவுசெய்தது போக மீந்துள்ள பொருளையெல்லாம் குன்றமெறிந்த நங் குமாரக்கடவுளுக்கு அர்ப்பணமாக்குவீர்களாயின் உங்கட்குக் கண்கள் தெரியுமாறு சுவாமி கடாக்ஷிப்பார்" என்று கூற, "அவ்வாறே அர்ப்பணஞ் செய்தோ"மென்று சொன்னவுடனே மறைந்த கண்கள் நன்றாய்த் தெரியவே, சுவாமிகளடிபணிந்தெழுந்து தோத்திரஞ்செய்து பொருளைக் கொணர்ந்து தந்து போயினர்.



பின்னொருசமயம், இச்சுவாமிகள் அவ்வூரில் பிக்ஷைவாங்கியுண்டு வசிக்கு நாட்களிலொன்றில், இரவுஒருவீட்டுப் புறந்திண்ணையிற் படுத்துத் துயில்கொளுஞ் சமயத்து அன்பர் ஊளக்குறையை அகற்றத்தோன்றிய அறுமுகவன் றொண்டனின் அன்பின்றிறத்தை உலகினர்க் குணர்த்துவானெண்ணி, ஆலயத்தில் தமது திருமேனியின்மீது அன்பர்கள் சாத்திவைத்திருந்த பட்டாடையைச் சிதம்பரதேவர்க்குக் குளிர்நலியாதபடி அவருடம்பின்மேற் போர்த்துவிட்டுச் சென்றனராக, பின்பு அந்த அதிசயத்தைக்கண்ட அனைவரும் அவரைச் சுவாமியின் விசேஷாநுக்கிரகம் பெற்றவரென்று அறிந்து கொண்டாடி மகிழ்ந்து உபசரிப்பாராயினர்.

மற்றொருசமயம், திருப்போரூர்க்கு வடபாலுள்ள "கண்ணுவப்பேடு" என்னுங் கிராமத்தில் நெடுநாளாய்க் கண்தெரியாதிருந்த ஓர் குயவன் தனது பிள்ளைகளாற் சுவாமிகளின் மகிமையைக்கேட்டு அவரிடம் வந்து அட்டாங்க நிலந்தோய வீழ்ந்து, பணிவுதோன்றத் தழுதழுத்து வாழ்த்திக் குறையிரக்க, கருணைக்கோருறைவிடமெனத் திகழும் சுவாமிகள் அன்புகூர்ந்தவராய் "நீர் விரும்பியபடி ஸ்ரீசுப்பிரமணியக் கடவுள் கடாட்சித்தருளுக" எனச் சிந்தித்தவுடன், அவனுக்குக் கண்கள் தெரிந்தன. அக்குலாலனது வேண்டுகோளால் அவனது சிறுகுடிலின்கண் ஓர் புளியமரநீழலில், நெகிழுவைத்துக் கொண்டு வீற்றிருந்து, அதன் வடகிழக்கிலுள்ள "காலவாக்கம்"

* களசம் – பிரம்பு.

என்னும் ஊரிலிருந்து வந்து சரணமடைந்த ஓர் முடவனைத் திருநீற்றால் பவித்திரனாக்கி, மீண்டும் அநேகர்க்குச் சுரம், சூலை, வயிற்றுவலி, மகோதரம், குடல்வாதம், குஷ்டம் முதலிய வன்னோய்களையும் நெகிடித் திருநீற்றால் நிவர்த்திசெய்தனரென்ப.

இங்ஙனம் பல அற்புதங்களை விளைத்தும், அன்பர் பலர் போற்றிப் புகழ்ந்து கொண்டாடிச் சிறப்பிக்கத்திகழ்ந்தும் வருங்காலத்து, ஆதியில் தாம் உத்தேசித்திருந்த ஆலயத்திருப்பணியை நிறைவேற்ற நினைந்து தாம் அளித்ததிருநீற்றாலும் திருவருள் நோக்கத்தாலும் கொடுந்துன்பம்நீங்கிச் சுகம்பெற்ற பலருஞ் செலுத்திய காணிக்கைகளையும் முன்னர்க் கள்வர் தந்துபோன திரவியமுதலியவற்றையுங் கொண்டு தாமும் அடிமையாய் ஏவற் பணிசெய்தும் அதனால் வந்த வருவாயைக்கொண்டும் ஆலயத் திருப்பணியை ஆரம்பித்து முதன் முதல் ஆலயகர்ப்பக்கிருகம் கட்டத்தொடங்கினர். அதுசமயம் முற்கூறிய கிளியனூர் மூதாட்டி தனது சரீரப் பிரயாசையால் சேகரித்த ஒரு பொன்னைக் காணிக்கையாக வைத்துத்தண்டமிட சுவாமிகள் அம்மூதாட்டியினது பேரன்பையுள்ளுவந்து அப்பொன்னைத் திருக்கரங்களாலேற்று நெற்றியிலும் சிரத்திலும் கண்களிலும் வைத்து வைத்து ஆனந்தமுற்று அதனைக்கர்ப்பகிருகத்தின் * சிகரவேலைக்கு உபயோகித்தனர். அப்போது தரிசனார்த்தம் அங்குவந்த "தஞ்சாவூரரசன்" அவ்வற்புதத்தைக்கண்டு இரண்டுபை வராகன் கொண்டுவந்து காணிக்கையாகச்செலுத்த, எட்டுநாளைக்குப்பின்னர் திருவுளந்திரும்பி அதனைத் திருப்பணிக்கு உபயோகித்துக்கொள்ளும்படி கட்டளையிட்டனரென்ப.

(இன்னும் வரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்.

கோவை.

---

* இதனைக் குமாரக்கடவுள் திருமேனித்தொண்டுக்குபயோகப்படுத்தினரெனக் கூறுவாருமுளர்.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருக்குறளாராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

---

௫௪௩. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

இதன் விசேடவுரையில் "மாதவர் நோன்பு மடவார்கற்புங் காவலன் காவலன்றித் தங்காவாகலின் ஈண்டறமென்றது அவையொழிந்தவற்றை" என்றச்சுப்பிரதியிலுள்ளவாக்கியம், சில ஏடுகளில் "மாதவர் நோன்பு மடவார்கற்புங் காவலன்காவலன்றித் தங்காவலானாக லின் ஈண்டறமென்றது அவையொழிந்தவற்றை"—என்றுகாணப்படுகிறது.

ஆசிரியர், மேல் ௫௪௨-ம் குறளாற் குடிகளின் வாழ்க்கைக்குச் செங்கோலே காரணம் என்று செங்கோலின் சிறப்புக்கூறி, அச்செங்கோல் (குடிகளின் வாழ்க்கைக்குக்காரணமாவதன்றித்) தோற்றமுமிறுதியுமற்று அநாதியாய்ச்சிறந்துள்ள வேதம் அறம் என்பவற்றிற்குங்கூட அவை நடைபெறுதற்குக்காரணமாகிய அத்துணையேனும் தன்னடைபேற்றினுக்குக்காரணமாகப் பிறிதொன்றையும் வேண்டாது நிலைபெற்றதுஎன் அதன் ஒப்புயர்வற்றசிறப்பு இக்குறளாற்கூறுகின்றாரென்பது, இக்குறளின் உரையாலும் விசேடவுரையாலும் நன்குபுலப்படுகின்றது.

இதனுள், அறங்களெல்லாம் நடைபெறுதற்குச் செங்கோலே காரணம் எனப்பொதுப்படக் கூறியிருப்பினும், "உரனென்னுந்தோட்டியானோரைந்துங்காப்பான்" (கு-௨௪) எனவும், "தற்காத்து" (கு-௫௬.) "மகளிர், நிறைகாக்குங்காப்பேதலை" (கு-௫௭.) "ஒருமைமகளிரேபோல" (கு-௯௭௪.) எனவும் கூறியவாற்றால் 'தம்மனத்தினாலே தம்மைத்தாமே காத்துக்கொள்ளுங் காவலானாகும் மாதவர் நோன்பு மடவார்கற்பு என்னுமிரண்டுஞ் செங்கோலில்வழியும் பிறகலாதாம்

வார், சீதாபிராட்டியார், கண்ணகி முதலாயினோர்மாட்டு நிகழ்க்காண்டலின், ஏற்புழிக்கோடலான் அவ்விரண்டையுமொழித்துப் பிறவறங்களையே கொள்ளவேண்டுமென்பார் "மாதவர்நோன்புமடவார்கற்பும்" என்னும் வாக்கியங்கூறுகின்றாராகலின் அச்சுப்பிரதிப்பாடம் அவ்வாறு பொருள்கொள்ளற்கேலாமையான் ஏட்டுப்பாடமே பொருத்தமுடைத்தாம்.

இனி ஏட்டுப்பாடக்கருத்து "மாதவர்நோன்புமடவார்கற்புங், காவலன்காவலின்றெனினின்றால்" என்னும் மணிமேகலைவாக்கியக் கருத்தோடு மாறுபடுகிறதனாற் கொள்ளத்தக்கதன்றெனின்;—செய்யுள்நடையை வசனத்தில் பொருந்திய இடங்களில் அழகாக அமைத்துக்கூறுதல் ஆசிரியர் பரிமேலழகர்வழக்கமாகலின் அவ்வழக்கப்படியீண்டுங்கூறுவார், இவ்விஷயத்தில் தங்கருத்து வேறுபாடுடைமை தோன்ற மணிமேகலைவாக்கியத்து ஈற்றிலுள்ள "காவலின்றெனினின்றால்" என்பதைமாற்றிக் "காவலன்றித்தங்காவலானாகலின்" என்று கூறினர்; ஆகலான் இதுவேகொள்ளத்தக்கதாமென்க. ஈண்டுக்கருத்துரைக்கு மேற்கோளாகப் பிறவும் காட்டலாம்; "பொருண்மொழி 'தான்சிறிதாயினுந் தக்கார்கைப்பட்டக்கால், வான்சிறிதாப்போர்த்துவிடும்' மாகலின்" எனவும், "ஈட்டியபொருளைக் காத்தலுமாங்கே கடுந்துன்ப' மாகலின்" எனவும், அ௩௩-ம் குறளுரைகளிற் கூறியவண்ணமே ஈண்டும் "காவலன் காவலின்றெனினின்றாகலின்" என்று கூறியிருப்பார்; அவ்வாறு கூறின்பின்னுள்ள "ஈண்டறமென்றது அவையொழிந்தவற்றை" என்பதனோடும், இதன் பின்னுள்ள "வேதமுமறனுமறந்தியாயினும்" என்னும் வாக்கியத்தோடும் மாறுபாட்டுப் பயனில் கூற்றாய்முடியும்.

ஆகவே ஏட்டுப்பாடமாகிய "மாதவர்நோன்புமடவார்கற்புங்காவலன்றித் தங்காவலானாகலின் ஈண்டறமென்றது அவை யொழிந்தவற்றை" என்பதே ஆசிரியர் பரிமேலழகரெழுதியவாக்கியமெனக்கொள்ளற்பாற்றென்பதாம்.

ருஅரு. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
உகாஅமை வல்லதே யொற்று.

இதன் விசேடவுரையில் "கடாவென்பது கடுக்கும்பெயரெச்சத்தெதிர்மறை" என்னும்வாக்கியம் அச்சிடப்பட்டிருக்கிறது. இதில்



"கடுக்கும்பெயரெச்சம்" என்பதற்குப் பொருள்விளங்காமையானும் "கடுக்கும் என்னும் பெயரெச்சத்தெதிர்மறை" யென ஏடுகளிற்காணப்படுதலானும் "கடாவென்பது கடுக்கும் என்னும் பெயரெச்சத்தெதிர்மறை" யென்றேபடிக்கவேண்டுமென்பதாம்.

சாருரு. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

இதன்விசேடவுரையீற்றில் "பிற்றொடர்தற்குச் செய்வானாயின் அவைபோல்வனவுஞ் செய்யாமை நன்றெனப்பிறரெல்லாமியைபறவுரைத்தார்" எனவும் "பிற்றொடாதற்கு"......உரைத்தார்," எனவும் அச்சுப்பிரதிகளில் உள்ளவாக்கியம் சில ஏடுகளில் "பிற்றொடர்க்குச்..........உரைத்தார்" எனக்காணப்படுகிறது. இப்பாடபேதங்கள் இவ்வாக்கியத்தின் முதற்சொல்லளவிலேயாம். சில ஏடுகளில், "பிறறொடாதறகு......உரைத்தார்" எனக்காணப்படுவதேமுன்னைய இரண்டு பாடத்திற்குங்காரணம். அது 'பிற்றொடர்தற்கு' எனவும் 'பிற்றொடாதற்கு' எனவும் படிக்க இடங்கொடுக்குமென்பது, ஏட்டுப்பழக்கமுள்ளவர்களுக்கெல்லாமினிது புலனாம். இவற்றுள் 'பிற்றொடர்தற்கு' எனனும்பாடம் பொருட்கியைபின்மையின் கொள்ளத்தக்கதன்று. பின்னிரண்டுபாடமும் பொருளால் வேறுபாடிலவேனும் 'பிற்றொடாதற்கு' என்பதன்கண் 'அது' என்பதுபொருளின்றிநின்றுவற்றுதலோடு, படிப்பவர்கள் மயக்கவுஞ்செய்தலின் "பிற்றொடர்க்குச்........உரைத்தார்" என்னும் பாடமே இயைபுடைத்தாம்.

இனி "பிற்றொடர்க்குச் 'செய்வானாயினவை போல்வனவுஞ் செய்யாமை நன்'றெனப் பிறரெல்லாமியைபறவுரைத்தார்" என்பதன்பொருள்;— பிற்றொடர்க்கு என்றது - இக்குறளை "எற்றென்றிரங்குவசெய்யற்க" எனவும், "செய்வானேன்மற்றன்ன செய்யாமைநன்று" எனவும் இருதொடராகப் பிரித்துப்பொருள்கூறியவற்றுட் பிற்றொடராகிய "செய்வானேன் மற்றன்னசெய்யாமை நன்று" என்பதற்கு என்றவாறு. "செய்வானாயின் அவைபோல்வனவுஞ் செய்யாமை நன்று என" என்றது—ஒருகால் எற்றென்றிரங்கும் வினைகளைச் செய்வானாயின் பின் அவைபோல்வனவற்றையுஞ் செய்

யாமை நன்று என்று என்றவாறு; இது அறுவாதம். பிறரெல்லாம் - தருமர், மணக்குடவர் முதலிய வுரையாசிரியர்களெல்லாரும். இயைபற - அதிகாரத்தோடு பொருந்தாமல். உரைத்தார்-என்க.

எனவே மேலேகாட்டிய ஏட்டுப்பாடமே கொள்ளத்தக்கதென்பது போதரும்.

௭௫௪. அறனீனும் இன்பமும் ஈனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

இதன் விசேடவுரையில் "இலனுகவென்பது இன்றியெனத்திரிந்து நின்றது" என்றச்சுப்பிரதிகளிலுள்ள வாக்கியம் சில ஏடுகளில் "விரவுவினையாயவின்றி யென்பதிலனுக வெனத் திரிந்து நின்றது" என்று காணப்படுகிறது.

இன்றி யென்பது இருதிணைப்பொதுவினையாகலன், ஆசிரியர் உரையில் 'தீதின்றி' என்பதற்கு (அரசன்) கொடுங்கோன்மையிலனுக எனஎழுதி, "அதனை விரவுவினை (இருதிணைப்பொதுவினை) யாய் இன்றி யென்பது இலனுக எனத்திரிந்து நின்றது என்னும் வாக்கியத்தால் விளக்குகின்றார். ஈண்டுத்திரிந்து நிற்றல் - பொதுமையிற்பிரிந்து உயர்திணை யுணர்த்திநிற்றல். இதனை "முன்னிலைவியங்கோள் வினையெஞ்சுகிளவி,..................அம்முறை நின்றவாயெண் கிளவியும், * திரிபுவேறுபடூஉஞ் செய்தியவாகி, யிருதிணைச்சொற்கு மோரன்ன வுரிமைய" என்னும் (தொல்-சொல் - வினை-௨௫) சூத்திரத்தானும் அதன் சேனுவரையருரையானும் அறியலாம். இவ்வாறுசெம்பொருள் கொள்ளக்கிடக்குமிடத்து அதனைவிட்டு "இலனுக வென்பது இன்றியெனத்திரிந்து நின்றது" எனக் கொள்ளுதல் கூடாமையின் "விரவுவினையாய இன்றி யென்பது இலனுகவெனத்திரிந்து நின்றது" என்னும் ஏட்டுப்பாடமே கொள்ளத்தக்கதாம்.

௭௫௮. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

---

* "செந்தமிழ்" தொகுதி-௨, பகுதி-௩, ௧௨௪-ம் பக்கத்தீறுபார்க்க.



இதன் விசேடவுரைத் தொடக்கத்தில் "கைத்துண்டாகவொன்று செய்வானெனக் கூட்டுக." என்றொரு வாக்கியம் ஏடுகளிற் காணப்படுகின்றது. ஆசிரியர் அவ்வாறு கொண்டுகூட்டி உரைகூறியிருத்தலானும், "ஒன்றென்பது வினையாதல் செய்வானென்றதானுற் பெற்றும்" எனப் பின்னர்க்காணப்படும் வாக்கியத்தானும் "கைத்துண்டாக வொன்று செய்வானெனக்கூட்டுக" என்னும் வாக்கியம் விசேடவுரைத் தொடக்கத்தில் இருக்கத்தக்கதேயாம் என்பதுபோதரும்.

௭௭௧. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

இதன் உரையில் "தெவ்விர் என்னைமுன்னின்று கன்னின்றவர் பலர்—என்பதற்கு "பகைவீர் இன்றிங் கென்றலைவனெதிர் போரேற்றுநின்று அவன்வேல்வாய்வீழ்ந்துபின்கல்லின் கண்ணே நின்றவீரர் பலர்" என்றச்சிடப்பட்டிருக்கிறது. இவ்வாக்கியத்துள்ள 'இன்றிங்கு' என்பது சில ஏடுகளில் 'இன்றினூங்கு' எனக் காணப்படுகிறது.

"இப்பாட்டு நெடுமொழிவஞ்சி" என்று ஆசிரியர் விசேடவுரையிற் கூறியிருக்கிறார். நெடுமொழிவஞ்சியென்பது ஒருவீரன் போர்க்களத்தே தன்னரசனுக்கு மாறேற்று வந்துநின்றுள்ள படைவீரரைப் பார்த்துத் தன்னுண்மையை யறியாதாரை யறிவித்தலாம். அன்றியும், போர்முடிந்தபின்னரே அற்றைப்போரிலிறந்த வீரருக்குக்கல்நடுதல்கூடும். இங்கே 'கன்னின்றவர் பல'ரென்றதனால் அற்றைநாளின் முன்னே நடந்தபோர்களில் எதிர்த்து இறந்து கல்லின்கண்ணே நின்றவரைக் கூறினனும். ஆகவே 'இன்றினூங்கு' என்பதே பொருந்தமுடைத்தாம். இன்றினூங்கு—இன்றெதிர்த்து நின்றுள்ள வுங்களினுமதிகமாக. இதனால், அன்றெதிர்த்து நின்றவர் தொகையினும் முன்னாட்களிலெதிர்த்து நின்றவர் தொகையதிகம் என்பதைக் கூறினனென்பதும் புலப்படுகின்றது; 'இன்றிங்கு' என்னின் இவ்விடயம் புலப்படாதாம்.

மேலேகண்ட காரணங்களால் "பகைவீர் இன்றினூங்கென்றலைவனெதிர்போரேற்றுநின்று அவன்வேல்வாய்வீழ்ந்து பின்கல்லின்

கண்ணேனின்ற வீரர்பலர்" என்பதே பொருட் சிறப்புடையதாக லான் அவ்வாறே படிக்கவேண்டுமென்பதாம்.

௭௯௨. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான்கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந்தரும்.

இதன் உரையில் 'ஆய்ந்தாய்ந்து கேண்மைகொள்ளாதான்' என்பதற்கு 'குணமுஞ் செய்கையு நல்லனென்பதும் அல்லனென்பதும் பலகாலராய்ந்தும் பலவாற்றானாய்ந்தும் ஒருவனோடு நட்பு கொள்ளாதவன்' என்றச்சிடப்பட்டிருக்கிறது. இதற்குச் சிலஏடுகளில் 'குணமுஞ்செய்கையு நல்லனென்பது பலகாலும் பலவாற்றானுமாராய்ந்து ஒருவனோடு நட்புக்கொள்ளாதவன்' என்று காணப்படுகிறது. ஈண்டுப்பொருள்நோக்கம் நட்புக்கொள்ளுதற்கண்ணேயாகலின், ஆராயவேண்டியதும் குணமுஞ்செய்கையும் நல்லன் என்பதேயாம். 'ஆய்ந்தாய்ந்து' என்னும் அடுக்குக்குப் 'பலகாலும் பலவாற்றானும் ஆராய்ந்து' என்றார். எனவே 'குணமுஞ்செய்கையும் நல்லன் என்பது பலகாலும் பலவாற்றானுமாராய்ந்து ஒருவனோடு நட்புக்கொள்ளாதவன்' என்னும் ஏட்டுப்பாடமே பொருட்சிறப்புடையதென்பது போதரும். இதனை, உற்றுநோக்குவார்க்கு "(ஆராயாது) குணமுஞ் செய்கையுந்தீயானொடுகொள்ளின் அவற்குவரும் பகைமையெல்லாந் தன் மேலவாய்ப்பின் அவற்றானிறந்துவிடுமென்பதாம்" என்னும் விசேடவுரைவாக்கியமும் வலியுறுத்தும்.

௮௭௧. பகையென்னும் பண்பிலதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

இதன் உரையில் 'ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்றன்று' என்பதற்கு 'ஒருவன்விளையாட்டின்கண்ணேயாயினும் விரும்புதலியற்கைத் தன்றென்றுகூறும் நீதிநூல்' என்பது அச்சுப்பிரதிப்பாடம். ஏடுகளில் இதற்கு 'ஒருவன் விளையாட்டின்கண்ணேயாயினும் விரும்புதலியற்கைத்தன்று நீதிநூல்' என்று காணப்படுகிறது. 'அதனை விளையாட்டின்கண் வேண்டினுஞ்செற்றமே விளைந்து மெய்யாமாகலின் நகையேயுமென்றும், வேண்டாமை தொல்லையோர் துணிவென்பார் நீதிநூல்மேல்வைத்துங் கூறினார்' என ஆசிரியர் விசேடவுரை



கூறுதலான் இதற்கேற்ப "ஒருவன் விளையாட்டின்கண்ணேயாயினும் விரும்புதலியற்கைத்தன்று நீதிநூல்" என்றே உரைகூறியிருக்கவேண்டும். அதனால் ஏட்டுப்பாடமே கொள்ளத்தக்கதாம்.

௮௮௨. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

இதன் உரையில் 'வாள்போல் பகைவரை அஞ்சற்க' என்பதற்கு 'வாள்போல எறிதுமென்று வெளிப்பட்டுநிற்கும் பகைவரை யஞ்சாதொழிக' என்றச்சிடப்பட்டிருக்கிறது. இதற்குப்பல ஏடுகளில் 'வாள்போல எறிதுமென்று வெளிப்பட்டுநிற்கும் பகைவர்பகையினையஞ்சாதொழிக' என்று காணப்படுகிறது. "மறைந்துநிற்கும் பகைவர்நட்பினை அஞ்சுக" என்று பின்னர் வருதலின் அதற்கேற்ப முன்னர் 'வெளிப்பட்டுநிற்கும் பகைவர்பகையினை அஞ்சாதொழிக' என ஆகுபெயர்ப்பொருள் கொள்ளுதலே பொருத்தமுடைத்தாம். இதனை வலியுறுத்தவிசேடவுரைத்தொடக்கத்திலே "பகைவர் ஆகுபெயர்" என்றொருவாக்கியமும் ஏடுகளிற்காணப்படுகிறது. இவ்வாக்கியத்தையடுத்து "முன்னேயறிந்துகாக்கப்படுதலான்" என்றுதொடங்கியுள்ள வாக்கியத்துக் 'காக்கப்படுதலான்' என்பதும் பகைவர் பகையினையே சுட்டுதல் காண்க.

௯௧௨. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின்மகளிர்
நயன்றூக்கி நள்ளாவிடல்.

இக்குறளிலுள்ள 'நள்ளாவிடல்' என்பது சிலஏடுகளில் 'நள்ளார் விடல்' என்று காணப்படுகிறது. "ஒல்லுங்கருமமுடற்றுபவர்கேண்மை, சொல்லாடார் சோரவிடல்" (௮௧௮.) என்புழிப்போல ஈண்டும் 'நள்ளார்விடல்' எனமுற்றெச்சமாக் கூறலே சிறப்புடைத்தாம்.

இனியிதன் விசேடவுரைவாக்கியத்தீற்றில் அச்சிடப்பட்டுள்ள "அவ்வறிவு அவரைவிடுதற்கு உபாயமென்பது தோன்றப்பின்னள்ளாவிடல் என்றுங்கூறினார்" என்பது அச்சுப்பிரதிகளிலுள்ளவண்ணம் தமிழ்ச்சங்கத்துள்ள ஏடுகள் ஒன்றிலேனுங் காணப்பட்டிலது. "அவ்வறிவரை விடுதற்கருமை தோன்றப்பின்னள்ளார்விடல் என்று

ங்கூறினார்" என்று சிலஏடுகளிற் காணப்படுகிறது; (சில ஏடுகளில் இரண்டோரெழுத்துக் கூட்டியுங்குறைத்துமெழுதப் பட்டுப் பொருளறியவிடமின்றிக்கிடக்கின்றது.) இதனுள் 'அவ்வறிவரை விடுதற் கருமை' யாவது—அவர்க்கு அது சாதிதருமமாதலை நூலானேயன்றி அவர் செயலானும் அறியும் அறிவுண்டாகும்வரை அவர்நட்புவிடுதற் கருமை. 'பின் நள்ளார்விடல் என்றுங்கூறினார்' என்றிருத்தலினாலே 'விடுதற்கு' என்பது அவர்நட்பையே குறிக்கும். இதனால், "அவ்வறிவு அவரைவிடுதற்கு உபாயமென்பது தோன்றப்பின்னள்ளாவிடல் என்றுங் கூறினார்" என்னும்பாடங்கொள்ளுதல் உசிதமின்மைபெறப் படும். அன்றியும், அவரைவிடுதற்குபாயம் இக்குறளிற் கூறப்பட்டதென்பது ஆசிரியர் கருத்தாகுமேல், ௫௫௦-ம் குறளில் "அப்பற்று விடுதற்குபாயம் இதனாற்கூறப்பட்டது" என்றதுபோல இதனீற்றினும் "இதனான் அவரைவிடுதற்குபாயங் கூறப்பட்டது" என்பர். அவ்வாறு ஒன்றுங் கூறாதுவிட்டு அடுத்தகுறளீற்றில் "இவைமூன்று பாட்டானும் அவர்சொல்லும் செயலும் பொய்யென்பது கூறப்பட்டது," என்று கூறுகின்றார். இதனானும் அப்பாடம் உசிதமில்லாததென்பதுபோதரும்.

ஆகவே ஏட்டுப்பாடமாகிய "அவ்வறிவரை விடுதற்கருமை தோன்றப் பின்னள்ளார்விடல் என்றுங்கூறினார்" என்பதே சிறப்புடைத்தாம். இதனினுள்ள 'நள்ளார்விடல் என்றுங்கூறினார்' என்னும் அனுவாதமும் மூலத்து 'நள்ளார்விடல்' என்னும் பாடத்தை நிலையுறுத்தும்.

(இன்னும் வரும்.)

அ. கோபாலையன்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(௫௫௭) பெரியகடலினும் மிகமுழங்கிவிளங்கும் மதத்தையுடைய யானையையுரித்துப் பொருந்தியதோலை அணிந்தவருடைய பக்கத்திலே சூழ்வோர்நெருங்குதலால் வீதிவிடங்கப்பெருமான் மகிமூஞ் செல்வத்தையுடைய திருவாரூரினொருவீதியிலே சிவலோகம் முழுதுங்காண உள்ளது.

(௫௫௮) நம்பியினுடைய தூதரானவர் பரவையாருடைய அழகிய இரத்தினமழுத்திய வாயிலைக்குறுகுவாராய் முன்னரே ஒருசேரத் தம்பக்கத்தே அணைந்தோர் புறத்தே நிற்ப.

(௫௫௯) செறியவடைத்த கதவமதன்முன்பு - நெருங்கப்பூட்டிய கதவத்தின் முன்னரே. சிறிதுந்துயிலாது நித்திரைவிழித்தபரவாருடைய திருமுன்னே.

(௫௬௦) இளம்பிறைவாழ்கின்ற சடைமுடியையுடையாரைப் பொருந்திய பூசையின் தொண்டைச்செய்யும் ஆதிசைவர் அத்தயாமத்தில் இங்கேவந்ததென்னையோவென்று பயத்தைப்பொருந்தி உமாதேவியைப்பாதி வடிவினுடைய சிவனாவதறியாதே எண்ணாட்பிறைபோன்ற நெற்றியையுடைய பரவையாரும் பதைத்துவந்து கதவைத் திறந்தார்.

(௫௬௧) பொருந்திய உரிமையையுடைய சுந்தரமூர்த்தி நாயனாரது தூதராய் வாயிலின்முன்னே நின்றவரைக்கண்டு வணங்கி முழுதும் உறங்குகின்ற அத்தயாமத்தில் அடியேனையாளுஞ் சிவபெருமானிங் கெழுந்தருளினாற்போல அழகிய நூலையணிந்த மார்பையுடையவரோ, எய்தவேண்டியதென்னையென்றார். வாயிற்றூதர் என்பதில் வாயில் என்னும்மொழி தூதரைவிசேடித்து நின்றது.

(௩௪௨ ஆயிரம் முகங்கொண்டு உலகத்தை யழிக்கவந்த கங்காநதியை மறைத்த சடையை மறைத்த சிவபெருமானாகிய அந்தணர் அருளிச்செய்வார்.

(௩௪௪) பங்குனி உற்சவத்திற்கு முன்னரேபோலப் பொருள் கொண்டு வருவாராய். சங்கிலித்தொடக்கைப் பொருந்தினோருக்கு.

(௩௪௫) வருத்தத்தை ஒழிதற்கல்லவா.

(௩௪௬) ஒற்றியூர் உறுதி பெற்றார் - ஒற்றியூரை அறுதிபெற்றார்.

(௩௪௭) நகையும் உட்கொண்டு. திருவிளையாட்டின் மேவி-திருவிளையாட்டில் விரும்பி.

(௩௪௯) சிவபெருமானாகிய தூதரைப் போகும்படிவிட்டு நல்ல நெற்றியை யுடையாளது புலவியை நீக்கி. விருப்பத்தோடு இசைவைக் கொண்டுவருவதையே.

(௩௫௦) வழியிலெதிர் கொள்ளச் செல்வர். மன்மதன் பொழிகின்ற பூமழை வீழ.

(௩௫௧) மகிழ்ச்சியாலிரவு பகலாய்த்தோன்ற.

(௩௫௪) வண்ணத்தையும் அடியாளான 'பரவையார்' மறுப்பாள், நாங்கள் அடிமைக்கு எண்ண ஆர் என்பதை இன்றறிவித்தனென்று.

(௩௫௫) மார்க்கண்டேயனாகிய பார்ப்பானப்புதல்வனுக்காக யமனைக் கொன்று அப்புதல்வனை நிலை நிறுத்தினீர். நான் உமக்கு மிகை இன்றைக்காகில் என்னதான் செய்வீர் இதுவும் போதாதென்றார்.

(௩௬௦) விடையை எம்பெருமான் முன் என்செய்ய மறுத்தேனென்பார்.

(௩௬௮) நம்பிதூதர் - சிவன்.

(௩௬௯) அடியையும் முடியையும் விட்டுணுவும் பிரமாவும் நாடுதற்கு அருளாதார்.



(௩௭௪) பந்தமும் வீடும் நீர் அருள்செய்யுமாறே இப்பொழுதுஞ் செய்தீர்.

(௩௮௨) ஒருவருள் ஒருவரை விரும்பும்.

(௩௮௭) சிவபெருமான் அடிமையா முறையராகி வந்தாரா? அங்ஙனம் வந்தாராயின் இந்திரனும் விட்டுணுவும் பிரமாவும் நேரே அறியவொண்ணாத எம்பெருமானிசைந்தால்தூதாக ஏவப்பெறுவதா? இதனுக்கு மனம் நடுங்காதவனை யான் எதிரேகாணும் நாள் என்றாளென்று.

(௩௮௮) நெருங்கிய வைரம் பற்றிவிழு மனத்தராய்.

(௩௮௯) அழிவில்லாத புகழோடுயரும் ஏயர்கோன் கலிக்காமனாயனாருடைய எண்ணமாகிய பேறிதைப் பெற்றவராய்க் கேட்டு இப்பிழைக்குடன் படுவாராகி இதற்குப் பிராயச்சித்தத்தை வேண்டுபவராய்.

(௩௯௦) நாதரும் அதனைக்கேட்டு - சிவபெருமானுமதனைக் கேட்டு.

(௩௯௩.) எம்பிரானே, என்பிதா. அவர்பிதா, நம்முடையகிளைஞரெல்லாங் கடவுள், நீயே யென்று வழி வழி சார்ந்துவாழும் இவ்வுலகத்தில் மிக்க வாழ்க்கையையுடைய என்னை நின்று வருத்துஞ் சூலையைப் புதிதாக ஆண்டுகொண்டவனொருவன்வந்து தீர்ப்பான்.

(௩௯௬) மதித்த மனதிற் பொருந்திய விருப்பத்தால்.

(௩௯௭) சிவனருளாற் பொருந்துஞ் சூலையும் அவர் மாட்டுக் கேட்டகலக்க வார்த்தையும் மனத்தை வருத்த. அவர் மாட்டுக்கேட்டகேதமென்றது "சுந்தரனாலன்றி இந்நோய் நீங்காது" என்றதை.

(தொடரும்)

ஜி. சதாசிவம் பிள்ளை.

# புத்தகக்குறிப்பு.

ஜனநிர்மாணம்:—இப்பெயர்கொண்ட அரியநூலொன்று சென்னைச்சுதேசமித்திரன் ஆபிசிலிருந்து எமக்கு அனுப்பப்பட்டுளது. இந்நூல், அனிபெஸண்டு அம்மையாரால் 1907—08, வருஷங்களில் சென்னையிற்செய்யப்பட்ட அரிய பிரசங்கங்களின் தமிழ் மொழி பெயர்ப்பு. ஜனநிர்மாணம், பொதுப்பான்மை, தேசத்துக்குற்ற கல்விமுறை, மதசம்பந்தமான கல்வியின் ஆவசியகம், யுகதர்மம், சர்வமத சகோதரத்துவம் கிழக்கும், மேற்கும், மானவரக்ஷகர் என்ற தலைப்பெயர்கொண்ட எட்டுப்பிரசங்கங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. நம் நாட்டைப்பற்றியும், நம் உயர்ச்சிக்குற்றவைகளைப்பற்றியும், நம் ஒழுக்க வழக்கங்களிலும் மனோபாவங்களிலுமுள்ள கொள்கைகளைப்பற்றியும் தம நீண்ட அனுபவத்திற்கண்ட ஆழ்ந்த கருத்துக்கள்பல உலக சரித்திரத்துடன் பொருத்தி இவ்வம்மையாரால் உபந்நியசிக்கப்பட்டுள்ளன. எடுத்துக் கொண்ட சித்தாந்தத்தை எண்ணிறந்த தக்க காரணங்களுடன் படிப்போர் நெஞ்சிற் பசுமரத்தாணிபோற் பதியும்வண்ணம் எடுத்துச் சொல்லும் மாட்சி மிகவியக்கத்தக்கது. இவ்வொரு நூலைப்படித்தலால், நாம் எண்ணிறந்த உண்மைகளை எளிதில் அறிந்துகொள்ளக்கூடுமென்பது திண்ணம். இவ்வரிய உபந்நியாசங்கள் ஆங்கிலத்தில் நிகழ்த்தப்பெற்றவையாதலால், தமிழ்மக்கள் அவற்றின்சொற்சுவையை உள்ளபடியே அறிந்துகொள்ள இயலாமற்போயினும், ஏறக்குறைய அவற்றின் சொற்பொருட்சுவைகளை நம்மவர் அறிந்து மகிழும்வண்ணம் இம்மொழிபெயர்ப்புநூல் விளங்குகின்றது. இந்நூலை நமக்குபகரித்தவர் சென்னைச் சுதேசமித்திரன் பத்திராசிரியராய், தமிழ்நாட்டார் பொருட்டே தம்முடல்பொருளாவிகளை அர்ப்பித்துழைத்துவரும் ஸ்ரீமாந்-ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களே. இவர்கள், இந்நூற்கு எழுதிய முகவுரையில், இப்பிரசங்கங்களின் மாட்சியை உள்ளபடியே வியந்து பாராட்டியிருத்தலோடு, இவற்றைத்தாம் மொழிபெயர்த்தமைக்குற்ற காரணங்களையும் விளக்கியிருக்கின்றார்கள். இவர்கள் முன்பும் இத்தகைய அரிய உபந்நியாசங்கள் பல மொழிபெயர்த்துதவியது பலரும் அறிந்தது. இவ்வரியநூல் ஞானவிருத்தியைவிரும்புவோரெல்லாரும் பெற்றுப்படித்தற்குரியதாதலால், இது நம்மவர்க்கு நல்விருந்தாயிருக்குமென்றே நம்புகிறோம்.

**இதன் விலை ரூ 1.**

**பத்திராசிரியர்.**

ஏனையபுத்தகங்களைப்பற்றி அடுத்தமுறை குறிப்பெழுதப்பெறும். ப—ரீ.

THE REGISTRAR OF ... 4-FEB ..10 ... MADRAS

உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-அ.] சௌமிய-ஸ்ரீ மார்கழி மீ [பகுதி-உ.


## வேள்புலம்.

யான் "செந்தமிழில்" முன்பெழுதிய "வேளிர் வரலாறு" என்ற வியாசத்துள், சங்கநூல்களிலே வேளிர் எனப்படுவோர் இன்னாரென்பது முதலிய வரலாறுகள் என்னறிவிற் கெட்டியவரை விளக்கப்பட்டன. அவ்வாராய்ச்சி தமிழறிஞர்பலர் கவனத்தைக் கவர்ந்ததுபோலவே, கொழும்பு ஸ்ரீமாந்-வி. ஜெ. தம்பிப்பிள்ளையவர்களாற், பல கீழ்க்குறிப்புக்களுடன் நன்கெழுதப்பட்ட அதன் ஆங்கில மொழிபெயர்ப்பை "ராயல் ஏஷியாடிக்" சங்கத்தாரும் (Royal Asiatic Society) ஏற்று, அவ்வியாசத்தைத் தங்கள் சங்கத்துச் சிலோன் பகுதிப்பத்திரிகையில் *வெளியிட்டுக்கொண்டார்கள்.

அவ்வாராய்ச்சியில், பழைய வேளிரென்போர் மகதநாடாண்ட ஆந்திரரும், அவர் வகையினராகிய சளுக்கரும் ஹொய்சள வேளாளருமாவர் என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் காட்டப்பட்டன. அவ்வேளிரது பூர்வதேசத்தைப்பற்றி, முன்பு அறியப்படாத செய்திகள் சில இப்போது தெரியவருவதால் அவற்றை ஈண்டுக் குறிப்பிடுவேன்.

வேளிர் கூட்டத்தவருள் ஒருவரான சளுக்கரைப், பழைய நிகண்டாகிய திவாகரமும், பிங்கலந்தையும் **வேள்புலவரசர்** என்று கூறுகின்றன. † இதனால், அவர் புராதனநாடு, **வேள்புலம்** எனத்

* Journal, Royal Asiatic Society, (Ceylon) Vol. XXI. No. 61—1908. † **"வேள்புல வரசர் சளுக்கு வேந்தர்"—திவாகரம்.**

தமிழர் வழங்கியதொரு தேசமென்பது விளங்கும், இனி, இவ் வேள்புலம் யாதென ஆராய்வோம். சளுக்கவேளிர் முற்காலத்தில் பம்பாய் மாகாணமுழுமையும் ஆண்ட பேரரசர் என்பதும், அங்கிருந்தே அவர்கள் தென்னாட்டுக்குவந்தாட்சிபுரிந்தவரென்பதும் சரித்திரப் பிரசித்தமானவை. இவருள் பம்பாய்ப்பிரதேசத்திருந்தவர்களை மேலைச்சளுக்கரெனவும், சென்னைமாகாணத்தவரைக் கீழைச் சளுக்கரெனவும் சரித்திராசிரியர் வழங்குவர். மேலைச்சளுக்கருக்கு 'வடபுலத்து * வாதாவித் தொன்னகர'' மும், கல்யாணியும் தலைநகரங்களாம். இவை முறையே பம்பாய் நைஜாம் இராஜ்யங்களில் உள்ளன. இவ்வாறு சளுக்கரசரது, பூர்வதேசம் பம்பாய்ப் பிரதேசமெனத் தெரியவருதலால், அவரது நாடாகக் கூறப்பட்ட "வேள்புலம்" என்பதும் அம்மாகாணத்தையே குறிப்பதாகல் வேண்டும் என்பது விளங்கும். வேளிரது ஆதிநாடு பம்பாய் மாகாணத்துத் துவாரகையென்பது "உவராவீகைத் துவரையாண்டு, நாற்பத்தொன்பது வழிமுறை வந்த, வேளிருள் வேளே" என இருங்கோவேளைக் கபிலர் பாடியதனாலும் அறிக. (புறம் - ௨௦௧.)

முற்காலத்தில், தமிழ்மக்கள் பம்பாய்மாகாணத்தையே வேள்புலமென அழைத்துவந்தனரென்பதற்கு, அங்குள்ள நகரங்கள்பல வேள் என்ற சொல்லடியாக வழங்கிவருதல் சிறந்தசான்றாகின்றது.

நிஜாம் ராஜ்யத்தைச்சார்ந்து அதன் வடமேற்கெல்லைப்பக்கத்துள்ளதும், அரங்கபாத் தாலூகாவைச் சார்ந்ததும், பம்பாயின் வடபாகத்தையொட்டியுள்ளதுமான எள்ளூரா (Elloora) என்ற பிரபலமான குறிஞ்சிநிலத்தூர் ஒன்று உண்டு. அவ்வூரை வெருள், எருள் என ஜனங்கள் சிதைத்து வழங்குவர். அது ஏலாபுரம் என்னும் வடமொழியின் திரிபென்பர் டாக்டர் பண்டாரகர். இதனை ஆக்ஷேபித்து, டாக்டர் பிளீட் துரையவர்கள்(Dr. Fleet) அவ்வூர் வேளூர் வேளூரகம் எனப் பழையசாஸனங்களிற் கூறப்படுதலைத் தக்க காரணங்களோடு காட்டி விளக்கியிருக்கின்றனர்.†

* Badami.

† Bombay Gezetteer, Vol. I. Part II., page 391.



இவ்வாறே, பம்பாய் மாகாணத்து, ஷோலாபூர் (Sholapur) ஜில்லாவிலுள்ள ஒருநகரம் வேளாபுரம் (Velapur) என்ற பெயர் கொண்டுளது. இன்னும், வேளிரின் ஆதியிருப்பாகிய பம்பாய்க்கு வடபாலில், கத்தியவார் (Kathiavar) கச்சு (Cutch) பிரதேசங்களில் பேலா (Bela) என்னும் பெயர்வாய்ந்த ஊர்கள் பலவுள.* அவ்வாறே அங்குள்ள அஹமெட்நகர்த் தாலூகாவில் (Ahemednagar) வேளாபுரம் (Velapur) எனவும், பூனாஜில்லாவில் வேளகம் (Belha)‡ எனவும் நகரங்கள் காணப்படுகின்றன. இனி, அம்மாகாணத்தின் தென்பாகத்திலுள்ள முக்கியமான ஒருஜில்லாவும் நகரமும் பேல்காம் (Belgaum) எனப் பெயர்பெறுதலைப் பலரும் அறிவர். பேல்காம் என்ற நகரம் வேள்கிராமம், என அப்பக்கத்துச் சாஸனங்கள் பலவற்றில் உள்ளதெனவும், அது † வேள்வலம் வேணுகிராமம் வேணுபுரம் எனவும் வழங்குவதுண்டென்றும், சாளுக்கியரின்சகோதர வகுப்பினராகிய கடம்பர்க்கு அது முக்கியநகரமாய் விளங்கியதெனவும் சரித்திராசிரியர் கூறுவர். அப்பக்கத்து லக்ஷ்மேசுவரத்தையடுத்துள்ள ஓரூர் வேள்பட்டி (Belhutti) ‡ என்ற பெயர்வாய்ந்துளது.

இங்ஙனமே பம்பாய் மாகாணத்தை ஊன்றிநோக்குமிடத்து, ஆங்குள்ள நகரங்கள் பல வேளென்ற சொல்லடியாக வழங்குதலை நன்றாகக்காணலாம். பிற்காலத்தில் பம்பாய் மாகாணத்தினின்று மைசூர்ப்பிரதேசத்தை யடைந்த பேளாளர் என்ற வேளிர்கள் ஆண்ட நகரங்களும் பேளூர் பேளாபுரம் எனப்பெயர்வாய்ந்து கன்னடநாட்டில் உள்ளன.

இவற்றால், வேளிர்க்குரிய நாடானமைபற்றிப் பம்பாய்மாகாணம் "வேள்புலம்" எனத் தமிழ்ப்பெயர் வாய்ந்தமை பெறப்பட்டது. "வேள்" என்ற தமிழ்ப்பெயர் முருகக்கடவுள், மன்மதன், சளுக்கரசர்—இவர்கட்கு முன்னாள் முதலே வழங்குவதென்பது,

* See Indian Postal Guide.

† Bombay gezetteer Vol. I. Part II. Page 305.

‡ வகாரம் பகாரமாகவும், பகாரம் ஹகாரமாகவும் பாஷாந்தரத்தில் வழங்கும்.

"தாரகாரியுஞ் சளுக்கியர் வேந்தனும், வேனி லாளனும் வேளென லாகும்" என்னும் பிங்கலந்தையால் அறியலாம். அன்றியும் தமிழ் நாட்டைச் சூழ்ந்துள்ளனவாகச்சொல்லப்படும் கொடுந்தமிழ் நிலங்களில் ஒன்றான வேணாடு என்பது வேள்புலமாகிய பம்பாய் மாகாணத்தையே குறிப்பதாகல்வேண்டும். இவ்வாறே கொடுந்தமிழ் நாடுகளில் ஒன்றும், பம்பாய் மாகாணத்தைச்சேர்ந்ததுமான கொங்கணம் தமிழரசாட்சிக்குட்பட்டிருந்ததென்பது புறநானூற்றில் கொண்கானங்கிழானைப்பற்றியபாட்டால் * அறியக் கிடத்தலின், அக்கொங்கணத்துக்கு வடபாலதாகிய வேள்புலமும் முன்பு தமிழ்வழங்கிய நாடாகவிருந்ததெனக் கருதுதலே பொருந்தும். பஞ்சதிராவிடம் என்பதில் மகாராஷ்டிர தேசமும் அடங்குதல் இக்கொள்கையை வற்புறுத்துதல் காண்க. தமிழ்மக்கள் பம்பாய்மாகாணத்தை "வேள்புலம்" "வேணாடு" என அழைக்க, ஆரியமக்கள் அதனைத் "தண்டகாரணிய தேசம்" என வழங்குவாராயினர். இதனை மகாராஷ்டிர தேசத்து பிராமணர் விசேடகிரியைகளிற் செய்துகொள்ளும் சங்கற்பக் கட்டுரைகளிலே, "மகாராஷ்டிரதேசே" என்னாது "தண்டகாரண்ய தேசே" † என வழங்குதலாலறிக. பதிற்றுப்பத்திற் சேரனொருவன் செய்திகூறுமிடத்தில்வரும் "தண்டாரணியத்துக் கோட்பட்டவருடையைத்—தொண்டியுட்டந்து கொடுப்பித்து" என்ற அடிகளினுரையில், "தண்டாரணியம்—ஆரிய நாட்டிலுள்ளதோர் நாடு" என எழுதப்படுதலால், தண்டாரணிய நாடு என்னும் ஆரியமக்கள்வழக்குப் பழையதமிழ்நூலிலும் பயிறல் காண்க.

பத்திராசிரியர்.

---

* புறநானூறு. பாட்டு, ௧௫௬.

† Dr. Bhandarkar's History of Dekken. pp. 136.

உ

சிவமயம்.

# தமிழ்ச்சொற் பிரயோகவிவேகம்.

தமிழிலே வழங்குஞ் சில சொற்களினது பொருளாற்றலையும் அச்சொற்கள் அமைக்கப்பட்ட இயல்பையும் காரணத்தையும் உற்று நோக்கும்போது அவற்றை அமைத்தபுலவர்களது விவேகமும் சாதுரியமும் உலகியலுணர்ச்சியும் எத்துணைச்சிறப்புடையனவென்பது நன்கு புலப்படும். ஒரு சித்திரகாரனுடைய சாதுரியமும் விவேகமும் நுண்ணிய அவதானமும் மனோதருமமும் அவன்தீட்டிய சித்திரத்தை நோக்குந்தோறும் புலனாவதுபோல ஆன்றோரது அறிவாற்றலும் சாதுரியமும் மனோதருமமும் கூர்ந்த உலகியல் அவதானமும் அவர்களுடைய சொற்பிரயோகங்களை நோக்குந்தோறும் புலப்படும்.

எப்பொருளையும் ஊன்றிநோக்குவோர்க்கே அதன் அமைப்பியல்பு நன்குபுலனாகி அதிசயம் விளைப்பதாம். அங்ஙனம்நோக்குமியல்பில்லார்க்கு அதுசாமானியமாய் அதிசயம் விளைப்பதாகாது. அதனால்விளையும் இன்பத்தையும் அவர் அறியார். உலகத்திலே விவேகிகளென யாவராலும் பாராட்டி உச்சிமேற்கொள்ளப்படுவார் உலகியல் முறையை ஊன்றிநோக்கி அவதானஞ்செய்த அநுபவசாலிகளேயாவர். அவர்களே ஏனோர்க்கெல்லாம் அறிவுச்சுடர்காட்டும் தீபமாகவுள்ளவர். அவர்களே ஏனோர்காணாது விடுத்த அரும்பொருளெல்லாமெடுத்துக் காட்டி அவைகளுக்குக் குறியீடுசெய்பவர்கள். அக்குறியீடுகளே அரும்பெருஞ்சொற்களாக வழங்குவனவாம்.

அறியாதபொருளைக் கண்டவிடத்துப் பெயர்வினவுவதும் அறியாத சொல்லைக்கேட்டவிடத்துப் பொருளை ஆராய்வதும் மக்களியல்பாம். பெயர்கேட்டவிடத்தும் பொருள்கண்டவிடத்தும் உளதாம் இன்பம் பெரும்புதையல் கண்டான் இன்பத்தினும் பெரிதாம்.

காட்சிப்பொருள் கருத்துப்பொருளெனப்படும் இருவகைப் பொருள்களுள்ளே கருத்துப்பொருட்காட்சியே அரியதுஞ்சிறந்தது

மாம். அதனைவகுத்தலும் குறியீடுசெய்து வழங்கலும் மிக்க அருமையும்பொருமையுமுடையனவாம். இவ்வாறு ஆன்றோர் தாங்கண்ட கருத்துப்பொருளுக்குக் குறியீடாகவழங்கிய சொற்களினது சிறத்தையும் வனப்பையும் சிலவுதாரணங்களால் விளக்குதும்.

துன்பத்துக்குப் பரியாயமாகவுள்ள பெயர்களுள்ளே, அலக்கண், இடுக்கண், புன்கண், பழங்கண், உறுகண் என்பன ஓரிற்றுச் சொற்கள். இவையைந்தும் துன்பத்தின் காரியமாகக் கண்களிலே நிகழும் நிகழ்ச்சியை விளக்குஞ்சொற்களாகிப் பின் அந்நிகழ்ச்சிக்குக் காரணமாகிய துன்பத்துக்குப் பெயராயின. துன்பம் வந்தவிடத்துக் கண்ணினது இயல்புபலவாறாகத்திரியும். அவ்வியல்புகளுள்ளே ஒன்று சுழற்சி. அதுவன்றிக்கண்ணில் நீர்நிரம்பித்ததும்பும். அலம் என்பது சுழற்சிக்கும் நீருக்கும் பெயராதலின் அலக்கண் என்பதற்குச் சுழற்சிமையுடையகண் நீர்ததும்புங்கண் எனப் பொருள் விரிக்கப்படும். துன்பம் வந்தவிடத்துக்கண்கள் ஒடுங்கி விகாரப்பாட்டினையடையும்; அச்செய்தி இடுக்கண் எனப்பட்டு அதன் காரணமாகிய துன்பமும் அப்பெயர் பெறுவதாயிற்று. இடுக்கற்கண் இடுக்கண்ணென மருவுவதாயிற்று. இடுக்கல் ஒடுக்கல். * புன்கண்ணென்பது துன்பம்வந்தவிடத்துண்டாம் ஒளியிழந்துகண்மெலிதலாகிய விகாரப்பாட்டினை யுணர்த்துஞ்சொல்லாய்ப்பின்னர் அதன் காரணமாகிய துன்பத்துக்குப் பெயராயிற்று. பழங்கண் என்பது துன்பம்வந்துற்றவிடத்துத்தன்பிரகாசமும் மலர்ச்சியுமிழந்து தளர்ச்சியையடையுங்கண்ணின் இயல்பைக் குறித்தலிற் றுன்பத்துக்குப்பெயராயிற்று. பழமை இங்கே தளர்வு. உறுகண் என்பது துன்பத்தால் கலிந்த கண்கள் விழித்தொன்றையு நோக்கலுறு மடல்கள் ஒன்றோடொன்று பொருந்தப்பெற்றனவாய் நிற்குமியல்பினையுணர்த்துஞ் சொல்லாம். அஃது அவ்வியல்புக்குக் காரணமாகிய துன்பத்துக்குப்பெயராயிற்று.

இன்னும் இவ்விற்றுச்சொற்கள் தறுகண் வன்கண் எனச்சிலவுள. தறுகண்ணென்பது புறம்பெயரவொட்டாது நிறுத்தியகண். தறுதல் நிலைப்படல். பகைவர்மேற்சென்றகண்ணைப்புறத்தேகுடவிடாது அவர்மீதே நிறுவுதல் வீரர் இயல்பாதலின் தறுகண் என்பது வீரத்

* திருக்குறள், 1222-உரை.



துக்காயிற்று. *வன்கண் என்பது அருளோக்கி மருளோக்கி அசையாதகண். அதுவும் சினம்வீரம் அருளின்மை முதலியகாரணம் பற்றிக் கண்ணினிடத்தேநிகழுஞ் செய்தியாதலிற் கொடுமை வீரமுதலியவைகளுக்குப் பெயராயிற்று.

இவ்வாறே தமிழிலுள்ள சிலசொற்களின் ஆக்கக்காரணத்தை யன்றி ஆராயுமிடத்து அவற்றினது அருமையும் நன்மையும்பொருட்டுணிவும் நன்குபுலப்பட்டு அவற்றைப் பொருட்சுவைதோன்றப் பிரயோகிக்குமிடமும் முறையும் ஐயந்திரிபறத்தெளிந்து துணியப்படும்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

---

## சோதிட கணிதம்.

### பாயிரம்.

இந்நாளில் சோதிடசாத்திரத்தை ஆங்கிலம்படித்த வகுப்பார் அவ்வளவாக நம்புவதில்லை. அவர்கள் இது பொய்யென்றும் சிலர் கட்டுப்பாட்டினால் ஏற்பட்டதென்றும் தமக்குத்தோற்றியவாறு பேசுகின்றனர். அதற்குற்றகாரணங்கள் யாவெனயோசித்தனரோ? இல்லை. மகாவித்துவானாகிய வராகமிஹிராது பிரகத்ஜாதகமென்னும் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த காலஞ்சென்ற ஸ்ரீமத்-ந. சிதம்பரையரவர்கள் அதன்முகவுரையில் "நகைப்புக்கு இடமாக்குவதைத் தவிர்த்து அதைப்பற்றி ஒருகணமேனும் யோசிப்பதில்லை. இந்தவிஷயத்தை எப்படி ருசுப்படுத்துகின்றீர்கள்; அதை எப்படி ருசுப்படுத்துகின்றீர்கள் என்றுகேட்டால், அவர்களது சாதாரணபுத்தி சொல்லும் என்கின்றனர். இச்சாதாரணபுத்தி என்பது ஒருவிஷயத்தைப் பற்றி ஆராய்ச்சிசெய்யச்செய்ய அதைப்பற்றிய அபிப்பிராயம் மாறுமென்பதை அறிவதில்லை. அன்றியும் ஒருகாலத்திய அறிவு மற்றொரு காலத்திற் பேதப்படுகின்றதென்பதையும், ஒரு ஜாதியாரின்நோக்கம்

* திருக்குறள், 682-உரை.

மற்றொரு ஜாதியாரின் நோக்கத்திற்கு விரோதமாயிருக்கின்றதென்பதையும்கவனிப்பதில்லை. எங்கு சரியானசாக்ஷியம் கிடைக்கின்றதோ அதனைப்பற்றி ஆராய்ச்சிசெய்யவேண்டியதவசியம். இன்ன ஜோசியர் இன்னமாதிரிசொல்லுகிறார். அது தவறிவிட்டது; ஆகையால் சோதிடம் என்பது ஒரு சாத்திரம் என்று சொல்லுதல்தகாது. சோதிடம்வல்லார் அறிந்தவராக இருக்கலாம்; ஆனால் அநேக வழுக்கள் காலதேசத்தால் உண்டாயிருக்கலாம் என்று கொள்ளவேண்டும்.

இச்சாத்திரத்திற்கு மற்றொரு மறுப்பாவது, இவ்வுலகத்தின் வடகோடியிலும் தென்கோடியிலும் ஒரு ரேகையிற்பிறந்த இருவருடைய ஜனனபாவங்கள் ஒன்றாகத்தானே இருக்கவேண்டும். அப்படி இல்லை, இராமலிருப்பதற்குக்காரணம் என்ன என்கின்றனர். சாத்திரத்தின் மூலத்தார் விதிகளை அறியாமையால் இப்படிச்சொல்லுகின்றனர். கிரகஸ்திதிகள் ஒன்றாக இருக்கலாம். கிரகத்தைமாத்திரம் கொண்டு ஜாதகனுடைய பாவங்களைச்சொல்லுவதில்லை. ஜனனகாலமாகிய லக்னந்தான் இதினின்றும் எக்காரியத்தையும் நடத்துவது, ஆகையால் வடபாகத்திலுள்ளவனுக்கும், தென்பாகத்திலுள்ளவனுக்கும் அப்பாகத்தில் காலம்மாறுவதால் எல்லாம் மாறிவிடும். இங்கே சிம்மத்தில் 20-பாகம் ஏற்பட்டிருக்குமாயின் அந்த இடத்தில் கும்பத்தில் இருபதுபாகமாயிருக்கும். அப்பொழுது எவ்வளவு வித்தியாசமேற்பட்டுவிடும். அக்ஷாம்ச வித்தியாசத்தால் (Longitude) காலம் மாறுகின்றது. அல்லது ஒரே அக்ஷாம்சரேகையில் பிறந்தாலும் உத்தராம்ச ரேகையால் மாறுதலுண்டாகின்றது. இப்போது லக்னம்என்பது என்ன? அதுமத்தியரேகையிற்சேரும் பாகம். அப்பொழுது ஒருசமரேகையிலிருந்தபோதிலும் மத்தியரேகைக்குப் போய்ச்சேருங்காலத்து வித்தியாசமேற்படுமன்றோ; ஆகையால் அக்ஷாம்சத்தாலாவது, உத்திராம்சத்தாலாவது காலவித்தியாசம் ஏற்பட்டு, லக்னவிறழ்ச்சி உண்டாகி அதன்மூலமாய்ப் பலன்கள் வித்தியாசப்படுகின்றதென்பது அநேகருக்கு புதுமையாகவிருக்கும் என்று எழுதிக்கொண்டுபோய் ஜாதகம் கணிப்பித்தற்கு இக்காலத்தியபஞ்சாங்கத்தில் அநேகவழுக்களிருக்கின்றனவென்றும், எழுதியிருக்கின்றார். சோதிடத்திற்கு வானசாத்திரமும் அதன்மேல் கணிதமும் அவ



சியம். இப்பொழுது கும்பகோணத்து மடத்திலும், சென்னைரெகுநாதாசாரியாராலும் கணிக்கப்படும்பஞ்சாங்கங்கள் சரியானபடி வானசாத்திரத்தின்பேரில் கணிக்கப்படுகின்றனவாகும், ஆயினும் அவைகள் மேல்நாட்டு வானசாஸ்திரத்தினால் கணிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு மேஷோச்சம் சரியான இடத்தில்இருக்க இந்துக்களுக்கு மேஷராசி ரேவதிநக்ஷத்திரத்திலிருக்கிறது. இப்பொழுது ரேவதிநக்ஷத்திரமே தோன்றவில்லை. அன்றியும் இவ்வான்மீன் சரியான இடத்திற்கு (Vernal Equinox) 20-பாகைதள்ளி நிற்கிறது. இதினின்றும் கணிக்கப்படுபவைகளுக்கு நாராயணஸ்புடம் என்றும். சரியான இடத்தினின்றும் கணிக்கப்படுபவைகளுக்கு சாயனஸ்புடம் என்றும்பெயர். இதன்வித்தியாசத்திற்கு அயநாம்சம் என்றுபெயர். ஆயினும் இந்த அயனாம்சம் சரிவரத்தெரியவில்லை. வானத்தைப்பார்த்தும் தெரிந்துகொள்ளக்கூடவில்லை. 1883-ம் வருடம் ஜனவரிமீ முதற்றேதியில் அவரவர்கள்கொண்ட அயனாம்சம் என்னவெனில்,

| | பாகை. | கலை. | விகலை. |
|---|---|---|---|
| சென்னை கும்பகோணம். | 22 | 2 | 39 |
| வாக்யம் | 22 | 41 | 44 |
| சித்தாந்தம். | 20 | 46 | 15 |

சிதம்பரையரவர்கள் கண்டது $20^{\circ}\, 23'\, 8''$-க்கும் $20^{\circ}\, 25'\, 22''$-க்கும் இடையிலுள்ளதாக விருந்தது. இதன் மத்திபம் 20-பாகை 24-கலை 15-விகலை. இந்த சரியான அயநாம்சத்திற்கும் அவரவர்கள்கொண்ட அயநாம்சத்திற்குமுள்ள வித்தியாசம்.

| | | பாகை. | கலை. | விகலை. |
|---|---|---|---|---|
| சென்னை கும்பகோணம். | + | 1 | 38 | 24 |
| வாக்யும். | + | 2 | 17 | 29 |
| சித்தாந்தம். | + | 0 | 22 | 00 |

இதனாலுண்டாகக்கூடிய கிரக வித்தியாசங்களாவன:—

பிந்தி.

| | நாள். | மணி. |
|---|---|---|
| சூரியன் | 1 | 16 |
| சந்திரன் | 0 | 3 |
| செவ்வாய் | 3 | 3 |
| புதன் | 0 | 10 |
| குரு | 19 | 17 |
| சுக்கிரன் | 1 | 0 |
| சனி | 48 | 23 |
| இராகு கேதுக்கள் | 31 | 0 |

இதனால் பஞ்சாங்கங்களில் காண்கிறபடி கணித்த ஜாதகங்கள் வித்தியாசப்படத் தடையென்னை ?

அன்றியும் இன்னொரு பெருத்த தவறியாதெனில், எல்லோரும் எல்லாவிடத்திற்கும் இராசிமானநாழிகைகளை மேஷம் $4\frac{1}{4}$ (சவ) ரிஷபம் (சஞ) $\frac{3}{4}$-என்ற பழையபாடத்தையே உபயோகிக்கின்றனர். இது தேச அக்ஷாம்சத்திற்கேற்றபடி ஏற்பட்டிருக்கின்றது. இவைகளைத் தீர்த்து லக்னத்தை நிர்ணயித்துக்கொண்டு மற்றவைகளைக்கணித்துக்கொண்டு ஜாதகபலம் பார்க்க ஏற்பட்டால் தவற வழியேயில்லை.

இக்கணிதம் சிலரிடமே இருப்பதால் அவர்கள் வெளியிடுவது மகா கஷ்டம். ஆயினும் எமக்கு கிடைத்தபடி இப்போது செந்தமிழ் வாயிலாக வெளியிடத்துணிந்தது யாதுகாரணத்தாலெனின் தெரிந்த பெரியோர்கள் குற்றம் குறைகளிருப்பின் அவைகளைத் திருத்துவித்து உலகோபகாரமாகச்செய்விப்பார்களென்றெண்ணியே எழுதத் துணிந்தேன். பெரியோர்கள் மன்னிப்பார்களாக.

இலக்கணவிளக்க பரம்பரை,
**சோமசுந்தரதேசிகன்.**

(இன்னும் வரும்.)

---



ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

## ரு-வது சதுர்த்தாரிகாலம்பகம் உ-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

அதற்கவர் ஹேவத்ஸா! யானிந்த ஆச்சிரமஸ்தானத்திற்குவந்து எண்ணூறுவருஷங்களாயின. ஆகியுமிதுவரைக் கனகபுரியென்னும் நகரமொன்றிருப்பதாகக் கேள்விப்பட்டதுமில்லையே யென்றம்முனிவர் சொல்லலுமவன் மிகவருத்தத்துடன் கூடியவனாக அம்முனிவரை நோக்கி ஸ்வாமீ! அந்நகரமொன்றுண்டென்பது, தங்களாலு மிதுவரை கேள்விப்பட்டதில்லையென்றால் அதனைக்காணவேண்டுமென்று கருதிப் பூமியைச் சுற்றித்திரிகின்ற யானிவ்விடத்தி லுயிரிழந்தவனாயினேன் என்று மறுபடியும் கூறினன்.

பின்பு அம்முனிவரதனைக்கேட்டதும் முறையே சற்றுநேரமாலோசித்தறிந்து வத்ஸா, என்னிடத்திலுனக்கு நம்பிக்கையிருக்குமாயின் நான் சொல்வதைச்செய் இங்கிருந்து நூறுயோஜனைதூரத்தில் காம்பில்யதேசமென்றொரு தேசமிருக்கின்றது. அத்தேசத்தில் மூன்றுபர்வதங்களிருக்கின்றன. அவற்றுள் உத்தரமென்கின்றபெயரினையுடையதோரு மலையிருக்கின்றது அதிலுமோர் ஆச்சிரமமிருக்கின்றது. அந்த ஆச்சிரமத்தில் எனது மேன்மைதங்கிய ஜ்யேஷ்டப்ராதாவான தீர்க்கதபஸென்பவ ரொருவரிருக்கின்றார். அவரிடஞ்செல்வாயாகில் அவர் மிகவும் முதியவராக விருத்தலாலொருவேளை யந்நகரத்தை யறிந்திருக்கலாமென்றனர். இவ்விதஞ்சொல்லியதைக்கேட்டதும் சக்திதேவனென்பவன் ஸ்வாமீ, தங்களுத்திரவின்படியே செய்கிறேனென்றுசொல்லி ஒரு புகலுமில்லாதிருந்த தனக்கோரவலம்பங்கிடைத்ததென்ற வெண்ணத்துடனன்றிரவை யவ்விடத்திற்கழித்துவிட்டு மறுநாட்காலையி லங்கிருந்துபிரயாணமாகிப் பற்பலவனாந்தரங்களைக்கடந்து பலநாட்கழித்தபின் காம்பில்யதேசத்தை யடைந்து அங்கிருக்கின்ற உத்திரகிரியைச்சார்ந்து அம்மலையின்மீதேறி அவ்விடத்திலிருக்கின்ற ஆசிரமத்தில் வசிக்கும் தீர்க்கதபசென்னும் முனிவ

னைக்கண்டு வணங்கி மகிழ்வுற்றவனாக அம்முனிவர்செய்தவிருந்துபசாரத்தைப் பெற்றுக்கொண்டு அவரருகிலிருந்தனன்.

அப்போது அவர் குழந்தாய், நீ யெங்கிருந்துவருகின்றாய்; இவ்விடம் வந்த காரணமென்னவென்று கேட்க அவனம்முனிவரைப்பார்த்து அறகுணங்களும் நிறைந்தபோநிதியே யான் வர்த்தமானபுரத்தினின்றும் வருகின்றேன். அவ்வூரரசனது புதல்வி, கனகபுரியென்னும் நகரத்தைப்பார்த்து வந்தவனைத்தான் விவாஹஞ்செய்துகொள்வதென்றுப்ரதிஞ்ஞைசெய்திருக்கின்றாள், நான் அந்தராஜகுமாரியையடைவதற்காகக் கனகபுரியைப்பார்த்து வரவேண்டுமென்ற வெண்ணத்துடன் புறப்பட்டேன். ஆனால் அந்நகரமெவ்விடத்தி லிருக்கின்றதோ ஏதொன்றுமறிந்திலேன். யானோ அவ்விடம்போய் வரவேண்டியதும் அவசியமாகவே யிருக்கின்றது. இதனைப்பற்றிச் சூர்யதபசென்னு மகரிஷியிடம் வந்துதெரிவித்துக்கொண்டதில் அவர்தான் இதுவரை யந்நகரத்தின் பெயரைக் கேட்டதேயில்லை யென்றும் என்னைத்தங்களிடம் போகும்படியுமுத்திரவுகொடுத்தனுப்பினார். ஆதலாலிவ்விடம்வந்தேனென்று தெரிவித்தனன்.

இவ்வாறு சக்திதேவன் சொல்லியதைக்கேட்ட அம்முனிவர் அவனைப்பார்த்துப் புத்திரா, எனக்கிவ்வளவுவயதாகியுமிப்போதுதான் கனகபுரியென்னுமொரு நகரமிருப்பதாகக்கேட்டேன். ஆனால் எனக்கு தேசாந்திரங்களினின்றும் வருகின்றவெவ்வெவர்களோடும் பழக்கம் கிடையாது. ஆதலாலந்நகரத்தைப்பற்றி யானிதற்குமுன் கேட்டிருப்பதேயில்லை. அதனைக்காணுதலோ தூரத்திலென்றே நினைக்கின்றேன். அன்றியும் அந்நகரமானது நிச்சயமாய் வெகுதூரமாயிருக்கின்ற வொருத்வீபாந்தரத்திலிருத்தல்வேண்டும். வத்ஸா, அதனைக்காண்கின்ற விஷயத்திலுனக்கோருபாயம்சொல்கின்றேன் கேள். சமுத்திரத்தின் மத்தியத்தில் உத்தலமென்னும் பெயரினையுடையதொருத்வீபமிருக்கின்றது. அதில் மிகுந்தசெல்வத்தையுடையவனும் நிஷாதஜாதியர்கட் கதிபதியுமான சத்யவ்ரதனென்றபெயருடையவொருவனிருக்கின்றனன்.

அவனுக்கு த்வீபாந்திரங்க ளெல்லாவற்றிலும் போக்குவரத்துண்டு. அவனொருவேளை யந்நகரத்தைப் பார்த்திருக்கலாம்,



அல்லது கேட்டாவதிருப்பான். ஆதலாலிப்போது முதலில் சமுத்திரத்தின் சமீபத்திலிருக்கின்ற விடங்கபுரமென்னும் நகரத்திற்குப் போகவேண்டும். அந்நகரத்தினின்றும், யாரேனுமொரு வணிகனைப் பற்றிக்கொண்டு கப்பல் மார்க்கமாய் நிஷாதபதியான சத்யவ்ரதனிருக்குமிடம் போய்ச்சேர்ந்தா லிஷ்டசித்தியைப்பெறலாமென் றம்முனிவர் சொல்லவும், அந்த சக்திதேவனக்க்ஷணமே யப்படியே செய்கிறேனென்றுசொல்லி, முனிவரைப் புகழ்ந்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு அந்த ஆசிரமத்திலிருந்து வெளியேறி அநேக யோஜனை தூரங்களையும், பற்பலதேசங்களையுங் கடந்துசென்று சமுத்திரத்தின் கரைக்கோர் திலகம்போல் விளங்கும் விடங்கபுரமென்ற நகரத்தையடைந்து அவ்வூரில் சமுத்திரதத்தனென்னும், வணிகன் உத்தலத்வீபத்திற்குப் போகிறானென்பதை விசாரித்து அவனிடஞ்சென்று சக்திதேவனவ்வணிகனைச் சிநேகஞ்செய்துகொண்டான்.

பின்பு அவ்வணிகன்புறப்படும்போது சக்திதேவன் தானும் கூடவருவதாகச்சொல்ல அவனும் சம்மதித்து தங்களிருவர்க்கும் வழிக்குவேண்டு முணவுபதார்த்தங்களை நிரம்பவெடுத்துக்கொள்ள இருவரும் கப்பலின்மீதேறிக் கடல்மார்க்கமாய்ப்பிரயாணமானார்கள்.

பின்னர் அக்கப்பலானது நெடுந்தூரங்கடந்து அந்தஉத்தலத்வீபத்தையடைவதற்குச் சிறிது தூரஞ்செல்லு [illegible] கொடியாகிய நாவுடன்கூடி முழங்குகின்ற கரியமே [illegible] கதவடிவம் ஆகாயத்திற் கிளம்பிற்று. அச்சமயத்தில், தூலமான பொருள்களை உயரவெடுத்தெறிகின்றதும், கனத்தபொருள்களைக் கீழேகொண்டமிழ்த்துகின்றதுமாகிய *ப்ரசண்டமாருதமும் விதியின் ஆரம்பம்போல வீசிற்று. அத்தகைய பெருங்காற்றினாலடிபட்ட அலைகள், சிறகுடன் கூடியமலைகள் தங்களிருப்பிடமாகிய சாகரத்தையவமதிக்கின்ற காற்றின்மீதுள்ளகோபத்தினாற் கடலினின்றுமெழுந்தனபோலெழுந்தன. எழுதலும், அம்மரக்கலமானது க்ஷணநேரமாகாயத்திற் செல்கின்றதும், க்ஷணநேரம் கீழேவருகின்றதுமாய்த் தனவான்களுடைய உயர்வுதாழ்வுகளின் மாறிமாறி வருந்தன்மையைக் காண்பிக்கின்றதுபோலிருந்தது.

* ப்ரசண்டமாருதம் - பெருங்காற்று. விதி - ஊழ்.

அந்த க்ஷணத்தில் வணிகர்கள் அலறியழுகின்ற வோசைகளால் மிகவும் நிறைந்துள்ள அக்கப்பலானது அவ்வோசையின்மிகுதியைப்பொறுததுபோல வயரக்கிளம்பிவீழ்ந்து பார்தாக்கியுடைபட்டது. அதிலிருந்த வணிகர்பலரும் நீரில்மூழ்கிமாய்ந்தனர். அப்பொழுது அம்மரக்கலத்துக்கதிபதியான சமுத்திரதத்தனென்பவன், உடைந்து கிடந்தவொரு பலகையின்மீதேறி யுயிரோடு தெய்வகதியால்வந்த மற்றோர்கப்பலிலேறிக் கரைசேர்ந்தனன். அவருள் சக்திதேவனென்பவன் சமுத்திரத்தில்வீழ்ந்து பரிதபிக்குங்கால், ஒரு பெரிய மீன்வந்து குகைபோன்ற தன்வாயைத்திறந்து அவனை அவயவங்களிலொன்றையும் குறைபடுத்தாது அப்படியே விழுங்கிற்று.

விழுங்கினவுடன், தன்னிஷ்டப்படி கடல்நடுவிற்சஞ்சரிக்கின்ற அம்மச்சமானது ஊழின்புணர்ப்பினாலுத்தலத்வீபத்தின் சமீபத்தையடைந்தது. அவ்விடத்திற் செம்படவர்தலைவனாகிய அந்தச்சத்யவ்ரதனுடைய வேலைக்காரர்கள்வந்து வலையைவீச அம்மீன் விதிவசத்தினாலவ்வலையிலகப்பட்டது. அவர்களும் மிகப் பெரியசரீரத்தையுடையவதனையிழுத்துக்கொண்டு சந்தோஷத்துடனப்போதே தன்னெஜமானரிடம் செல்ல, அந்த சத்யவ்ரதனும் அத்தகையமீனைக் கண்டு தானும் மிகமகிழ்வுடன் தன்வேலைக்காரர்களாலதனைக்கீறும்படிசெய்ய அதன்வயிற்றினின்றும் ஜீவனுடன் சக்திதேவனென்பவன் மற்றுமோராச்சரியமானகர்ப்பவாசத்தையனுபவித்தவனாக வெளியேறினன்.

அவன் வெளிவரும்போதே அங்கிருக்கின்றவர்களை யாசீர்வதித்துக்கொண்டுவரவும் காளைப்பருவத்திலிருக்கின்ற அவனைப்பார்த்து ஆச்சரியத்துடன் கூடிய சத்யவ்ரதன், ஓ பிராமணரே, நீர் யார்? யாதுகாரணத்தினாலெவ்வண்ணமாகவிம்மச்சத்தின்வயிற்றிலிருக்கும்படி யுமக்குநேர்ந்தது. உமது விருத்தாந்தமென்ன, மிகவுமத்புதமாகவிருக்கின்றதென்றனன்.

அதைக்கேட்டுச் சக்திதேவன் செம்படவர்தலைவனாகிய சத்தியவ்ரதனைநோக்கி யான் பிராமணன் சக்திதேவனென்று என்பெயர். வர்த்தமானபுரமென்றநகரத்தினின்றும் புறப்பட்டேன். யான்கனகபுரியென்னும்நகரத்திற்கவசியம்போகவேண்டும். ஆனாலந்நகரமின்னவிடத்திலிருக்கின்றதென்பதையறியாதவனாக நெடுநாள் வெகுதூரம் பூமியைச்சுற்றியலைந்தேன். பின்பு தீர்க்கதபசென்ற முனிவரிடம்வந்து தெரிவிக்க அம்முனிவர் அந்நகரத்தினைக்கேட்டிருப்பதில்லையென்றும் அதுத்வீபாந்தரத்திலிருக்கக்கூடுமென்றும் கருதி அதனையறியவேண்டுமென்றால் உத்தலத்வீபத்தில்வசிக்கின்ற நிஷாதபதியான சத்தியவ்ரதனிடம்போகவேண்டுமென்றுத்திரவளிக்க அப்படியேயானும் கடல்மார்க்கமாகவரும்போது கப்பலுடைந்து சமுத்திரத்தில் மூழ்கி மச்சத்தினால்விழுங்கப்பட்டு இப்பொழுது இங்கு வந்தேன் என்றுசொல்லிய சக்திதேவனைக்குறித்து ஐயா பிராமணரே, யான்தான்சத்தியவ்ரதன் உம்மாற்குறிக்கப்பட்ட வுத்தலத்வீபமிதுதான். ஆனால் நான் வெகுதீபாந்தரங்களைப் பார்த்திருக்கின்றேன். அந்தக்கனகபுரியை மாத்திரம்பார்த்ததில்லை. நீர்கருதுகின்ற அந்நகரம் த்வீபாந்தரத்திலிருப்பதாய்க் கேட்டிருக்கின்றேன் என்று சொல்லலும் சக்திதேவன் இதென்ன ஆச்சரியமிவருமதனைப் பார்த்ததில்லையென்கின்றாரே என்று நினைத்து முகம்வாடிக் கலக்கமுற்றான்.



அதனைக்கண்டு மறுபடியும் சத்தியவிருதன், வெகுதூரத்திலிருந்து நம்மையேதேடி வந்திருக்கின்றானிவனென்று பிரீதியால் ஓ பிராமணரே, நீர்வருத்தமடைதல்வேண்டாம். இன்றிரவுமாத்திரமிவ்விடத்திற்றங்கியிரும். நாளைக்காலையிலேதேனுமோருபாயஞ்செய்கின்றேன். உமதிஷ்டத்தைநிறைவேற்றுதற்கென்று அவன்மனம்மகிழும்படி சொல்லி போஜநத்திற்காக அதிதிகளை யுபசரித்தன்னமளிக்கின்ற பிராமணர்கள் மடத்திற்கனுப்ப, அந்த சக்திதேவனுமவ்விடம் சென்றங்குள்ள வொரு பிராமணனன்புடனளித்த அன்னத்தை புஜித்துவிட்டு விஷ்ணுதத்தனென்ற பெயருடன்கூடிய பார்ப்பானுடன் கவிகள் விஸ்தரித்துக் கூறியிருக்கின்ற கதைகளைப்பேசிக்கொண்டிருக்குங்கால் அந்தப்ரஸ்தாவத்தோடு ப்ரஸ்தாவமாய் விஷ்ணுதத்தன் உமது விருத்தாந்தம் யாதென்றுகேட்க, சக்திதேவன் தன்தேசம் குலம் விருத்தாந்தமிவற்றையெல்லாம் அவனிடம்சொல்லலுமுடனே யவன் சக்திதேவனைத்தழுவிக்கட்டிக்கொண்டு கண்களிலானந்தபாஷ்பம் பருகக்கண்டத்தின் குரல்மாறுபட்டுச் சொற்கள் தத்தளிக்கும்

படி அப்பா சக்திதேவா, நீ யென்மாமன்மகனன்றோ தைவகதியானுன்னை யிப்போது காணப்பெற்றேன். நாமிருவருமோரேதேசத்திற்பிறந்தவர்கள். யானந்ததேசத்தினின்றும் முன்பேபாலியத்திலிவ்விடம் வந்துவிட்டேன். நீ யினிமேற்கவலைப்படவேண்டாம். பலதீபாந்தரங்களினின்றும் வருகின்றவணிகர்கள்மூலமாய் அந்நகரிருக்குமிடத்தைக்கேட்டுத்தெரிந்து சீக்கிரத்திலுனதிஷ்டத்தை முடித்துக்கொள்ளலாமாதலால்,நீ யிவ்விடத்திலேயிரு என்றுசொல்லி விஷ்ணுதத்தன் தன்வம்சத்தின் விருத்தாந்தத்தையுந்தெரிவித்து அவனுக்கு வேண்டுமுபசாரங்களைச் செய்து மகிழ்வித்தனன்.

சக்திதேவனும் தான் வழியிலடைந்த சிரமத்தையெல்லாம் மறந்து சந்தோஷமடைந்தான். ஒருவனுக்குமுகமறியாததேசாந்தரத்தில் பந்துஜனங்களைக்கிட்டுதலானது நிர்ஜலதேசத்திலமிருதப்ரவாஹம் கிடைத்ததுபோலாகின்றது. அப்போதவன் தன்னிஷ்டசித்தியை சமீபத்திலிருக்கின்றதாகவே கருதினன். ஏனெனில் ஒருகாரியத்திற் பிரவேசித்தவனுக்கு அதனிடையில் ஒரு நன்மை கிடைக்குமாயின் அது தன்காரியம் நிறைவேறுமென்பதற்கறிகுறியாகின்றதுல இல் பின்பு அன்றிரவினில் நித்திரையின்றிப் படுக்கையிலிருந்தவண்ணமே தானெண்ணிய காரியம் முடிவுபெறவேண்டுமேயென்றுகவலையுற்றிருக்கின்ற சக்திதேவனைக்குறித்து அவன் பக்கத்திலிருக்கின்ற விஷ்ணுதத்தன் நீ யெண்ணியகாரியம் முடிவுபெறுங் கவலைப்படவேண்டாமென்று அவன் நம்புதற்குரியகாரணங்களையெடுத்துக்காட்டி விநோதத்தை யுண்டுபண்ணிப் பின்வருமாறு ஒருகதைசொல்லத்தொடங்கினன்.

முற்காலத்தில் யமுநாநதியினருகிலிருக்கின்ற பெரியதோரகிரகாரத்தில் பிராமணர்களிற்சிறந்த கோவிந்தஸ்வாமியென்னும் பெயரினையுடைய ஒருவரிருந்தனர். நற்குணங்கள் நிறைந்த அந்த அந்தணருக்கு ஒத்தகுணமுள்ளவர்களான அசோகதத்தன் விஜயதத்தனென்ற இரண்டு புதல்வர்கள் முறையே ஜனித்தனர். அவர்கற்பினிற்சிறந்த தன்மனைவியோடும் நற்குணங்கள்வாய்ந்த தன்புத்திரர்களோடும் கூடி யில்லறத்தின்வழுவாதொழுகிவந்தனர். இவ்விதம் சிலநாள் கழிந்தபின் அவ்வூரில்வசிக்கின்ற அவர்கட்குக் கொடிய துர்ப்பிக்ஷம்



நேர்ந்தது. அதனால்கோவிந்தஸ்வாமியென்பவர் மனவருத்தமுற்றவராய்த் தன்மனையாளை நோக்கி ஹேப்பிரியே, இத்தேசமானது பஞ்சத்தின் கொடுமையினால் மிகவும் நலிவடைந்துவிட்டது. ஆதலால் யான் நமதுமித்திரர்கள் பந்துக்களிவர்களுடைய வறுமையைக்காணுதற்காற்றுதவனாகயிருக்கின்றேன், நமக்குள்ள வுணவுபதார்த்தங்களினின்று மெவரெவர்கட்கெவ்வளவு கொடுக்கப்படுமோ வதனையவர்கட்குக் கொடுத்துவிட்டித்தேசத்தினின்று . வெளியேறிச்சென்று வசிப்பதற்குக் காசிநகரத்தைச்சார்தல் வேண்டுமென்றனர்.

(தொடரும்.)

---

# இந்தியா இறைமாட்சி.

(முற்றொடர்ச்சி.)

---

8. அரசர் காக்குமுறை:—குழந்தைகளைப் பெற்றோர் காப்பது போலக் குடிகளை அரசன் காக்கவேண்டும். அளத்தற்கரிய அறிவு அன்பு கண்ணோட்டங்களைப்பொருந்தல் வேண்டும். இனையர் ஆட்சிக்குட்பட்ட குடிகள் அடுப்புத்தீ வெம்மையும் ஆதித்தன் வெம்மையுமல்லது பிறிதுவெம்மை யறியாராய் இன்புற்றுவாழ்வர் என்ப. இதனை, "காவல்குளவிகொள்பவரினோம்புமதி" என்னும் நரிவெரூஉத்தலையார் வாக்கானும், "அறிவும் ஈரமும்பெருங்கண்ணோட்டமும் (அளத்தற்கரியை) சோறுபடுக்குந்தீயொடு செஞ்ஞாயிற்றுத்தெறலல்லது பிறிதுதெறலறியார் நின்னிழல் வாழ்வோரே" என்னும் குறுங்கோழியூர் கிழார் வாக்கானும் தெளிக.

9. இறைப்பொருள் கோடல்:—தம் நாட்டுவிளைவுப் பொருள்களில் தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தான் என்ற ஐவர் பாதுகாப்பின் பொருட்டாக ஐந்துகூறுகுடிகள் கொள்ள அரசர் ஆறிலொரு கூறுதிறைகொள்ளவேண்டு மென்பதூஉம், அதைத்தானும் குடிகள் வருந்தாவாறு அறநோக்கிப்பெற்றுக் கோடல்வேண்டுமெ

ன்யதூஉம் அவ்வாற்றாற்கொண்ட பொருளே அறத்தையும் இன்பத்தையும் பயப்பதாமென்பதாமென்பதூஉம் ஆன்றோர் கருத்தாம். இவ்வாறாதலே,

"ஊறின்றுவகையுள் வைகவுயிரோம்பி
ஆறிலொன்றுஆறுதளித்துண்டு—மாறின்றி
வான்காவல் கொண்டான் வழிநின்று வைகலும்
தான்காவல் கொண்டல் தரும்"

என்று ஐயனாரிதனார் கூறுதலானும்,

"அறனீனு மின்பமு மீனுந்திறனறிந்து
தீதின்றி வந்தபொருள்."

என்ற பொய்யில்புலவர்கட்டளையானும் செவ்விதுணரத்தகும். இஃதன்றியும் வைத்தாரிறப்பப் பன்னாள் நிலத்திற்கிடந்து பின்னர்க் கண்டெடுக்கப்பட்ட நிட்சேபப்பொருளும், தாயத்தாராதி உரியவரில்லாப் பொருளும், கலத்தினும்காலினும்வரும் பண்டங்கட்கு விதிக்கும் சுங்க இறைப்பொருளும், பகைவரையடர்த்து அவர்பாற்கொள்ளுந் திறைப்பொருளும் ஆகிய இவைகளும் அரசர்க்கேயுரியனவாம். இதனை,

"உறுபொருளும் உல்குபொருளுந் தன்னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன்பொருள்."

என்னும் வள்ளுவதேவர் வாக்காற்காண்க. இங்ஙனம் தமக்குரிய இறைப்பொருளை அரசர்கொள்ளு முறையை மிகப் பொருத்தமான ஒரு உதாரணத்தால்விளக்கியிருத்தலைக் காட்டுதும். அதாவது ஒரு மாநிலத்தில் விளைந்த நெல்லை யறுத்துவைத்து ஒருயானைக்குக்கவளமாகக்கொடுப்பக்கொள்ளின் அந்நெல் அக்கரிக்குப் பன்னாளுணவாகும். நூறுசெய்யில் விளைந்தநெல்லேயாயினும் அவ்யானைதானே சென்று உண்ணுமாயின் அதன் வாய்ப்படும் நெல்லினும் பலவற்றையதன் கால்கள் சிதைத்தொழிக்கும். அரசனும் அறிவுடையனாய் முறையுணர்ந்து இறைகொள்ளின் அவன்நாடு சிறிதாயினும் கோடிபொருளைக்கொடுத்துத் தானும் செழிக்கும். அல்லாக்கால் அவனும் பொருள்பெறான். உலகமுங்கேடெய்தும் என்பதே. இது:—



"காய்நெல் லறுத்துக் கவளங்கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடைவேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவனாகி வைகலும்
வரிசை யறியாக்கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டநச்சின்
யானைபுக்க புலம்போலத்
தானு முண்ணானுலகமுங் கெடுமே."

என்னும் புறப்பாட்டிற் கண்டது.

10. இறைப்பொருள் கொள்ளாமை:—இங்ஙனம் கொள்ளற்பாலவாய இறைப்பொருளைக் கொள்ளாது விடுங்காலமுமுண்டு. அது அரசர்குடும்பத்திற் சுபகாரியங்கள் நிகழ்வுழி அவர்க்குளதாய மகிழ்ச்சியைத் தம்தேயத்துக்குடிகளெல்லாரும் அடையுமாறு "நான்பெற்ற இன்பம் பெறுகவிவ்வையகம்." என்றதிருமந்திர வாக்குப்படியே இறைப்பொருள் திறைப்பொருள் சுங்கப்பொருள்களைக்கொள்ளாது விடுதலும் பண்டாரத்திற்கிடக்கும் பொருளையும் கண்டாருங் கொள்ளத்திறந்து விடுதலுமாம். அப்போது சிறைவிடுதலுமாகிய இவை பண்டைவழக்காறேயாமென்க.

"சிறைவிடுமின் சிறைக்களமுஞ் சீத்திடுமினேழாண்டு தேயத்தீட்டும்
இறைவிடுமினயல்வேந்தர் திறைவிடுமினிருநிதியமீட்டமாயத்
துறைவிடுமினாலயமு மறப்புறமும்பெருக்குமெனத்தொழாரைக்காய்ந்த
கறைவிடுமினயில்வேலான் வள்ளுவனைக்கூய்முரசங்கறங்கச்சாற்றி."

எனமலையத்துவசபாண்டியன் மகட்பேறுற்றுழிக்கொண்ட பெருமகிழ்ச்சியால் இவைசெய்தான் எனக்கூறும் பரஞ்சோதிமுனிவர்வாக்கும்,

"இறைதவிர்ந்திடுபோர் யாண்டொரேழ்திறை
நிறைதருகலைதாணீக்கி யாவையும்
முறைகெடவறியவர் முகந்துகொள்கென
அறைபறையென்றனனரசர் கோமகன்."

எனத் தசரதசக்கரவர்த்திபுத்திரப்பேறற்றுழிச்செய்தமையைக்கூறும் கம்பநாடர்வாக்கும் இவற்றிற்குப்போதிய சான்றாதல் பெறப்படும். அன்றியும் குடிகள் விளைவஃகலால் செழிப்பற்றுத் தளர்வுற்றுழியும் இறைகொள்ளாது விடுதல் நீதிநூலார் கோட்பாடேயாமென்பதை,

“குடிதளர்வுற்றகாலை கொள்பொருளறிலொன்றும்
விடுவதுசெய்துதங்கள் விழுக்குறைமுறைசொல்வார்க்குத்
தடையறக்காட்சிநல்கித் தண்ணியவின்சொற்காட்டி
வடுவறவிடித்துச்சொல்வார் வன்மொழியேற்றல்வேண்டும்.”

என்னும் விநாயகபுராணத்தாற் றெரியக்கிடக்கின்றது. இங்ஙனம் இறைவிடுதலும் சிறைவிடுதலும் நூற்பிரமாணங்களாற்காட்டலொன்றே. இப்போதும் நம்மையாளும் மாட்சிமைதங்கிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இவ்வாறு இறையையும் சிறையையும் விடுத்து வருகின்றார்களல்லவா? விளைவுபெறாக்கால் குடிகள்வருத்தநோக்கிப் பகுதிப்பொருள் கொள்ளாதுவிடுதல் சட்டத்தின் பாற்பட்டதொன்றாகவே யமைந்துள்ளதாகும். நம் இந்தியா சக்கரவர்த்தியவர்கள் முடிசூட்டுமகோற்சவகாலத்திலும் மற்றும் ராஜகுடும்ப சுபகாலங்களிலும் எத்தனையோ பேரைச்சிறைச்சாலை விட்டோட்டினரன்றே? இத்தகையநீதிமுறைகளை நாம் கண்கூடாகக்கண்டிருந்தும் நம்மரசர்பாற் செற்றங்கோடல் ஆராய்ச்சிக்குறைவேயன்றி வேறென்னாம்?

11. **காட்சிக்கெளியராதல்:**—வலியரான் நலிவெய்தினார் முறைவேண்டிவந்துழி அரசன் துயில்கின்றான், வாசநீர்தோய்கின்றான் பூசை பயில்கின்றான் பல்சுவைய உண்டி அயில்கின்றான் என்று கடைகாப்பாளராற் றள்ளுண்ணப்பெறாதவாறு பேரத்தாணிமண்டபத்தின்கண்ணே சான்றோர் சூழக்காலந்தவறாதுவீற்றிருந்து காட்சிகொடுத்துக் குறைகேட்டு இனியகூறி முறைபுரியவேண்டும்.

“காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லனல்லனேல்
மீக்கூறுமன்னனிலம்”

என்பது வள்ளுவர்திருவாக்கு. நம் ஆங்கிலராஜாதிகாரிகள் எங்கும் ஒருபடித்தாக நியதிசெய்துள்ளகாலத்தில் யாவர்க்கும்பொதுவிடத்திருந்து குறையுடையார் விண்ணப்பத்தையேற்றுச்செய்வன



செய்யுமாறு ஏற்பட்டிருக்கும் பிரிட்டிஷ் சட்டமுறை மிகப்பாராட்டற்பாலதேயாம். இதற்குவேறு சான்றுகூறவேண்டா. மன்னன் நிலம் மீக்கூறும் என்றதேவர்வாக்கின் படியன்றே இந்தியா. சக்கரவர்த்தியவர்கள் அரசாட்சியிடம்பரவுவதாயிற்று. சூரியாஸ்தமனமில்லாத தேசம் நமது பிரிட்டிஷ்கவர்ண்மெண்டாருடையதன்றே! இக்கருத்தை,

“எந்தமன்னர்நாட்டினிலுமிரவியஸ்தமனமில்லா திருத்தலுண்டோ
சொந்தமுறுமிவர்நாட்டினிரவியொளியெப்போதுந்தோன்றுமாதோ”

என நம் நாட்டுப் புலவரொருவர் நன்குபாராட்டிக் கூறியிருக்கின்றனர். ஆங்கிலபாஷையிலும், “The sun never sets in the British Empire” என்றபழமொழி வழங்குவதாகும்.

12. **இடித்துரைபொறுத்தல்:**—காமம் வெகுளிகடும்பற்றுள்ளம் மானம் உவகை மதமெனப்பட்ட அறுவகைக்குற்றமும் முறைமையிற்கடிந்து காவற்சாகாடு உகைத்தற்குரிய அரசர், தீநெறிவிலக்கிநன்னெறிச்செலுத்தும் பேரறிவுடையாரைத் தமக்குத்துணையாகக்கொண்டு மழையினது இன்மை மிகுதிகளானுங்காற்றுத் தீப்பிணியென்றிவற்றானுறுவதாகிய துன்பங்களை உற்பாதங்களானறிந்து கடவுளரையும் தக்கோரையுநோக்கிச்செய்யும் சாந்திகளால் நீக்கியும், பகைவர் கள்வர் சுற்றத்தார் வினைசெய்வார் இன்றிவர்களானுறுந் துன்பங்களைச் சாமபேததானதண்டமாகிய நால்வகையுபாயங்களுமேற்றவாற்றானீக்கியும் முறைசெய்யுங்கால் அவர் தமக்குத்தக்க இன்ன தகாதன இன்னவென இடித்துக்கூறுபவரை ஐம்பெருங்குழுவென்பார்.

“மந்திரியர் புரோகிதர் சேனாபதியர்
தந்திரத் தூதர் சாரணரென்றிவர்
அந்தமிலரசர்க் கைம்பெருங் குழுவே”

என்பது பிங்கலந்தை. அரசர் அத்தாணிமண்டபத்து வீற்றிருக்குங்கால் இவ்வைவகையாரும் சூழவிருத்தல்வேண்டும். இவரையில்லாத வேந்தன் பாகனில்லாத யானைபோல நெறியல்லா நெறிச்சென்று கேடுகூடுமென்பார். இதனை,

“இடிப்பாரையில்லாத வேமரா மன்னன்
கெடுப்பாரிலானுங் கெடும்”

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு"

எனவரும் வள்ளுவரானறிக.

13. **மந்திரத்தலைவரைத்தேர்தல்:**—மேற்கூறியாங்கே ஐம்பெருங் குழுவினரும் அரசர்க்கு இன்றியமையாத் துணைவரேயாயினும் இவருள் வைத்து, அமைச்சர்களே மிகச்சிறந்தவராவர்.

"...சமைத்ததோள்வலி தாங்கினராயினும்
அமைச்சர் சொல்வழியாற்றுத லாற்றலே"

எனக்கம்பநாடர் கூறியவாறு அரசர் எத்துணை நுண்மாணுழைபுலம் பெற்றவராயினும் மந்திரத்தலைவர் கூற்றைமேற்கொண்டு உலகியல் நடாத்தற்குரியராதலின் அவரைத்தெரிந்துகொள்ளுங்கால் பலவாற்றானும் நன்கு ஆராய்ந்து தெளிவுறுக்கொள்ளவேண்டும். இங்ஙனம் ஒருவரை ஆராயுமிடத்து புரோகிதராதியரை விட்டு அவரால் இவ்வரசன் அறமேவானன்மையின் இவனைப்போக்கி அறனுமுரிமையுமுடையானொருவனைவேந்தாக்கற்கெண்ணினம். இதுதான் யாவர்க்கு மியைந்தது. நின் கருத்தென்னையோவெனச் சூளுறவோடு சொல்வித்தறிதலாகிய அறவுபதையானும்; சேனைத்தலைவராதியரைவிட்டு அவரால் இவ்வரசன் இவறன்மையுடையனாதலின் இவனைப்போக்கியீகையுமுரிமையுமுடையானொருவனை வேந்தாக்கற்கெண்ணினம். இதுதான்யாவர்க்குமியைந்தது. நின் கருத்தென்னையோவெனச் சூளுறவோடு சொல்வித்தறிதலாகிய பொருளுபதையானும்; தொன்றுதொட்டு உரிமையொடு பயின்றுளோர்தவ முதுமகளைவிட்டு அவளால் உரிமையுள்ள இன்னாள் நின்னைக்கண்டு காமுற்றுக் கூடவேண்டி என்னை விடுத்தனள். அவளைக்கூடுதியாயின் அதனால் நினக்குப்பேரின்பமேயன்றி அரசசெல்வமுங் கைகூடும். நின் கருத்தென்னையோவெனச் சூளுறவோடு சொல்வித்தறிதலாகிய இன்பு உபதையானும்; ஒருநிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையரை அவனில்லின்கண் அழைப்பித்து, இவர் அறைபோவாரெனவ்வெண்ணற்குக்குழீஇனரென்று தான் காவல்செய்து, ஒருவனால் இவ்வரசன் நம்மைக்கொல்வான் சூழ்கின்றமையான் அதனை நாமே முற்படச்செய்து நமக்கினியகாவலனொருவனை வைத்தல் எண்டையாவர்க்கு மியைந்தது. நின்கருத்தென்னையோ எனச்சூளுறவோடு சொல்வித்தறிதலாகிய அச்சவுபதையானும் அவர்மனநிலையையாராய்ந்து அவற்றிலொன்றானும் திரிபிலராயின்பின்பு தெளிந்துகொள்ளப்படுமென்பர். இதனை,



"அறம்பொருளின்பமுயிரச்சநான்கின்
றிறந்தெரிந்து தேறப்படும்"

என்னும் தேவர் வாக்கானும் அதன் உரையானும் காண்க. இங்ஙனம் பொதுவகையாற்றேறிய உபதைகளான்கானுந்திரிபிலராயினும், அவர்மாட்டுவைத்த வினைவகையானுந் தேர்ந்துகொள்ளவேண்டும். என்னை? சீவகன்பிதாவான சச்சந்தன் என்னுமரசனின் மந்திரியாகிய கட்டியங்காரன் அரசனுக்குக் கண்ணுமிடுகவசமும்போற் காரியஞ் செய்தொழுகினனாயினும் அவன்மாட்டுச்சின்னாள் அரசுரிமையை வைத்தலான் அவ்வரசவின்பத்தை வெஃகினன்றிமறந்து வேந்தனைக்கொன்றுதானே அரசனாயினான், என்பதாலென்க. இதனைத் தெரிந்தன்றே பொய்யில் புலவரும்,

"எனைவகையாற்றேறியக்கண்ணும்வினைவகையால்
வேறாகுமாந்தர் பலர்"

என்று கூறுவாராயினர். ஆகவே அரசன் ஐம்பெருங்குழுவினரைச் செவ்விது தெரிந்து தெளிந்து நியமித்து முறைபுரியவேண்டுமென்பதாயிற்று.

நமதுதேசம் ராஜப்பிரதிநிதிகளாகியமந்திரிகளானே ஆளப்பட்டு வருவதாதலினானும் நமது சுகதுக்கங்களனைத்தும் அவர் குணஞ் செயல்கட்குட்பட்டனவாதலினானும் நமதுமேன்மைதங்கிய பிரிட்டிஷ்கவர்ண்மெண்டார் இந்த மந்திரியர் இத்தனையாண்டுவரைதான் முறை நடத்தற்குரியர் எனக்காலவரையறை செய்திருப்பதும், அவர்க்கு மேல் பார்லிமெண்டு சபையார் பரிசீலனை ஏற்படுத்தியிருப்பதும் அவரது அதிமதிநுட்பத்திறத்தைக் காட்டுகின்றனவல்லவா?

14. **முறை கேட்டல்:**—குறைபாடுடையோர் மனம்புண்பட்டு வெதும்பிவந்து கூறுவனயாவும் அமைதியுடன் செவிகொடுத்து சினத்தானும் அவலத்தானும் அன்னோர் கூறுஞ்சொற்கொடுமைகளைக்கவனியாது உண்மைகாணுஞ் சிந்தனைகொண்டு தாமினிது கூறிக்கேட்ட

லே விசாரணையியல்பாம். பாண்டியன் நெடுஞ்செழியன் பொற்கொல்லன் சொற்கேட்டுக் கோவலனைக் கொல்வித்தகாலை அக்கோவலன் மனைவி கண்ணகியென்பாள்போந்து வாயில் காப்பாளராற்றன்வரவை மன்னற்குணர்த்தி அழைக்கப்பட்டு மவனெதிர்போந்து தான்குறை கூறியவாசகங்களும் பாண்டியன்சொற்களும் இம்முறையை நன்கு புலப்படுப்பனவாதலின் அவற்றையீண்டுத் தருகின்றாம். கண்ணகி அரமனை வாயிலிற் போந்து நின்று,

வாயிலோயே வாயிலோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
யிணையரிச் சிலம்பொன்றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப்பாயேயறிவிப்பாயே. (என்றதூஉம்.)

வாயிலான்—கணவனை யிகந்தாள் கடையகத்தாளே—என

பாண்டியன்—வருகமற்றவட்டருகவீங்கென
வாயில்வந்து கோயில் காட்டக்
கோயின் மன்னனைக் குறுகினள் சென்றுழி

பாண்டியன்—நீர்வார்கண்ணை யெம்முன் வந்தோய்
யாரையோநீ மடக்கொடியோய்—எனத்

கண்ணகி—தேராமன்னா செப்புவதுடையேன்
எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநாநடுங்க
வாவின் கடைமணி யுகுநீர் நெஞ்சு சுடத்தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச்சிறப்பினிசை விளங்கு பெருங்குடி
மாசாத் துவன்றன் மகனையாகி
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்
சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரேஎனப்



பாண்டியன்—பெண்ணணங்கே? கள்வனைக்கோறல் கடுங்கோலன்று
வெள்வேற் கொற்றங் காண்என—ஒள்ளிழை

கண்ணகி—நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் சிலம்பு மணியுடை யரியே எனத்

பாண்டியன்—தேமொழியுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச்சிலம்பு முத்துடையரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம்புடைப்ப
மன்னவன்வாய் முதற்றெறித்ததுமணியே மணிகண்டு
தாழ்ந்தகுடையன் றளர்ந்த செங்கோலன்
பொன்செய்கொல்லன் றன்சொற்கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென்னாயுள் என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே"

என்பது (சிலப்பதிகாரம்.)

இங்கே துயருற்றுப்போந்த கண்ணகி இன்ன இடத்து இன்னவாறு பேசவேண்டுமென்ற முறைகருதாது வாயிலோன்பால் வந்து "அறிவு அறைபோகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன்வாயிலோயே" என்றுகூறியதும், அவள்வரவுகேட்டசெழியன் அக்கணமே தாழாது "வருகமற்றவட்டருக" எனக்கட்டளையிட்டதும், அவள் தன்னிடைப்போதாலும் அழுமுகத்தளாதல் கண்டு இரக்கமுற்று "நீர்வார்கண்ணையெம்முன்வந்தோய், யாரையோநீ மடக்கொடியோய்" என இன்சொற்கூறி வினவுதலும், அவள் மன்னவனிவனென மதிக்கிற்றிலளாய் "தேராமன்னா செப்புவதுடையேன்" எனக்கொதித்துக் கூறலும், அவ்வாறு இழிப்புரை கூறிய அவளைச்சினவாது "பெண்ணணங்கே - கள்வனைக்கோறல் கடுங்கோலன்று - வெள்வேற்கொற்றங்காண்" எனவேந்தன் நயம்பட்டசொற்கூறுதலும், அதுகேட்ட அவள் "நற்றிறம்படராக்கொற்கைவேந்தே" என இழித்துரையாடலும், அவள் சிலம்பினின்று முத்துத்தெறிப்பக்கண்டமன்னன் தாழ்ந்தகுடையனாய்த்தளர்ந்தசெங்கோலனாய் "பொன்செய்கொல்லன்றன் சொற்கேட்டயானோ அரசன் யானே கள்வன், மன்பதைகாக்குந்தென்புலங்காவல், என்முதற்பிழைத்தது,

கெடுக என்னுயுள்" எனமயங்கி வீழ்தலும் இன்னபிறவும் எத்துணை அருமைவாய்ந்துள்ளன என்பதுயாம் கூறுமலே யறியத்தக்கனவாமன்றே? அன்றியும் குறையுடையளாகிய கண்ணகிதன்னை இன்னளெனக் கூறுமிடத்து "புள்ளுறுபுன்கண்தீர்த்தோன் அரும்பெறற்புதல்வனை ஆழியின்மடித்தோன், புகார் என்பதி" என்றுதன் நாட்டரசர் மனுநீதியைச் சிறப்பித்துக்கூறிய அழகு இச்சந்தர்ப்பத்தில் மிகவும் வியக்கத்தக்கதாகின்றதன்றோ? இவற்றால் குறையுடையார்வந்து முறையிடுங்காலை அவர் மனங்கொதித்துக் கூறும் கடுமொழிகளனைத்தையும் பொறுமையுடன் செவிகொடுத்துக் கேட்டலும் தாம்விடை கூறுங்கால் நயமொழியே கூறவேண்டுமென்பதும் அரசர்தன்மையாமென்பது பசுமரத்தாணிபோல் நாட்டப்படுமென்க.

(இன்னும் வரும்.)

எம் கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

## சிதம்பரசுவாமிகள் சரிதம்.

(முற்றொடர்ச்சி.)

"அரசனது செல்வம் குடிகள்பிரையாசையாலீட்டியதன் பகுதியாதலும், கைக்கோளப்பெண்ணின் செல்வம் தானே தேகப்பிரையாசைப்பட்டு ஈட்டியதுமாகிய வேறுபாட்டைக் கருதி அவற்றின் ஏற்றத்தாழ்வை அறிவொழுக்கங்களிற் சிறந்தவரான சுவாமிகள் தாம் நன்குமதித்துப் பேசியவற்றாலும், உபயோகித்த வகையாலும் உலகுக்கு உணர்த்தினரென்பதாம். கைத்தொழிலின் உயர்வு இங்கு விளக்கப்பட்டது; "நும்மெய்வருத்திக் கைசெய்துய்ம்மினோ" என்ற திருவாய்மொழியையுங்காண்க.

இவ்வாறு அன்பர்களால் விநியோகிக்கப்பட்ட காணிக்கைகளைக் கொண்டு கோயிற்றிருப்பணிகளை யாதோரிடையூறின்றி இனிது



நிறைவேற்றி, மந்திரலோபங்களின்றிய யந்திரஸ்தாபனமமைத்துக் கிரியா லோபமாதிய குற்றங்களைந்து கும்பாபிஷேக முதலியன முடித்து நித்திய நைமித்தியங்களை நடத்திவந்தனரெனக் கூறுப.

முன்னர் "நெஞ்சுவிடுதூது" என்னும் பிரபந்தமியற்றி ஆசிரியர் பாலனுப்பிவிட்டு ஆலயத்திருப்பணி நடத்திவருங்காலத்துப்பிள்ளைத்தமிழ், அலங்காரம், மாலை, தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி முதலிய பல சிறு நூல்கள் அடங்கியதான "திருப்பேரூர்ச் சந்நிதிமுறை" என்னும் ஓர் நூலையும், சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஈசுவரனது பஞ்சகிருத்தியங்களையும் விளக்குவதான "பஞ்சாதிகாரவிளக்கம்" என்னும் வேதாகமநூலொன்றுமியற்றி முடித்தனர். பின், திருத்தொண்டர் அறுபத்துமூவரிலொருவராய "திருமூலர்" என்னும் நாயனாராலியற்றியதும், சைவசமயத்துப் பன்னிரு திருமுறைகளிற் பத்தாந்திருமுறை யெனப்படுவதும், பெரும்பாலும் உருவகமும் பரிபாஷையும் பொதிந்த செய்யுட்களுடையதுமான "திருமந்திரம்" எனப்படும் அரியநூலுக்கு ஓர் உரையியற்றவு முயன்றனர். அஃதுணர்ந்த பொனனின் ஆசைமிகுதியுடையானொருவன் உளங்களித்து உலகத்தைப் பொன்னாக்குவிப்பேனென்று எண்ணங்கொண்டதைக் குமரவேள் அறிந்து அந்நூலுக்கு உரையியற்றவேண்டாமெனச் சிதம்பரப்புலவரைத் * தடுத்தனரென்ப.

"இரசவாதம் முதலிய சித்திவகையாற்பொன்செய்யுமாசையுடையானொருவன், பற்பல சித்திகளைக்கூறியுள்ள அந்நூலை மேல்நோக்காகப்பார்த்து அதன்பொருளை உள்ளபடி உணர்ந்தால் அச்சித்திபெறலாமென்று எண்ணினனாதலின், இவர் அதற்கு உரைசெய்யக் கருதினரென்று அறிந்தவளவில் மிக்கமனமகிழ்ச்சியும், அது தவிர்ந்தனரென்றவளவில் மிக்கமனவருத்தமுங் கொண்டனனென்க. அத்திருமந்திரநூலில்,

"வெள்ளியுருக்கிப் பொன்வழியோடாமுன்
கள்ளத்தட்டனார் கரியிட்டு மூட்டினார்

---

* இதனை வேதாகமங்களின் மறைபொருள்கள்பல இந்நூலிற் பொதிந்திருத்தலால் அவற்றைக்குருபாரம்பரையாக அறிதலன்றி அதிகாரிகளல்லாதவரும் எளிதிலறியுமாறு வெளியிடுதல் தகாதென்பதுபற்றி முருகபிரான் இதற்கு உரைசெய்யக்கூடாதென மறுத்தாரெனவறிக.

கொள்ளிபறியக் குழல்வழியே சென்று
வள்ளிய னாவிலடக்கி வைத்தானே.''

"செம்பு பொன்னாகுஞ் சிவாயநம வென்னில்,"
"வாறேசெபிக்கில் வருஞ்செம்பு பொன்னே,
"பொன்னான மந்திரம்புகலவு மொண்ணாது,"
"பொற்பாதத்தானையே செம்பு பொன்னாயிடும்,"
"மறையொன்றுகண்டதுருவம் பொன்னாமே,''
என்றவைபோல்வன அவன் மனத்தைக் கவர்ந்தனவென்க.

முன்தாம் வீற்றிருந்த புளியமரத்தின் தென்கிழக்கில் ஒரு பரினாமம் நிருமித்து, அதன்வடபாலிருந்த சிறுகுளத்தைத் தடாகமாக்கி அதன்மேல்பால் ஓர் சிற்றாலயங்கட்டுவித்து அதில் விநாயகப்பிரதிஷ்டையும், வேலாயுதப்பிரதிஷ்டையுஞ்செய்து அப்பிள்ளையார்க்குச் "சுந்தரவிநாயகர்" என்றும், தடாகத்திற்கு "வேலாயுததீர்த்த"மென்றும் பெயர் தந்தனர்.

பின்னர் கிளியனூர் அம்மைமேல் அருள்புரிந்து "ஞானம்மை'' எனத்தீட்சாநாமந்தரித்தனர். அந்த ஞானம்மை நெடுநாளிருந்து ஓர் ஏகாலிப்பெண்ணுக்கு அநுக்கிரகஞ்செய்து சுவாமிகள் கட்டளையால் கிளியனூரையடைந்து "நிஷ்டானுபவம்'' என்னும் சாஸ்திரமியற்றி அநுபூதியிலொடுக்கமுற்றனள். ஏகாலியம்மையும் விசேஷஞானத்தோடு சிலகாலம்வாழ்ந்து அவ்வூரிலொடுக்கமுற்றனள். இவ்விருவர் சமாதிகளும் அவ்வூரில் இந்நாளளவும் அடியார்களால் ஆராதிக்கப்பட்டு வருகின்றன.

"பூவிருந்தவல்லி'' என்னும் ஊரைச்சார்ந்த "கோவூரிலே'' வேளாளர் மரபிற்றோன்றிய திரிபுராந்தக முதலியார் புத்திரர் "சிவசங்கரம்'' என்னும் பெயருள்ள ஓர் சிறுபிள்ளையை இளமைப்பருவத்திலேயே திருப்போரூர் முருகக்கடவுள் ஆட்கொண்டருள, அச்சிறுவன் சென்னியில் சடைவளரப்பெற்றுப் பித்தனைப்போல் ஓடியும்பாடியும் கூத்தாடிக்கொண்டிருந்தனன். இந்த ரகசியமறியாததந்தை ஆயுர்வேதியரைக்கொண்டு ஔஷதமுதலியவற்றால் தக்கசிகிச்சைசெய்தும், அம்மயக்கம் நீங்காமையால் திருப்போரூரடைந்து சிதம்பர



தேவரைப்பணிந்து புத்திரனை எதிரிற்கிடத்தி முறையிட்டனர். பிள்ளையின் குறிப்பையுணர்ந்து "ஆயுமுதந்துணைசெய்யும்" என்றருளிய வண்ணம் ஆண்டவர் கிருபையால் பிள்ளைக்கு அம்மயக்கம் நீங்கினதால் தந்தை மகிழ்கூர்ந்து புத்திரனைச் சுவாமிகளிடத்தில் ஒப்புவித்து விடைகொண்டனர்.

பின்பு அப்பிள்ளைக்குச் சுவாமிகள் சிவலிங்கதாரணமுதலியவற்றை யநுக்கிரகித்துத் திருநீற்றுப்பையும், வேலாயுதமும் ஓர் தட்டுங்கொடுத்துக் "குழந்தாய்! இன்றுதொட்டு மடாலயத்தில் பிட்சையேற்றுத் திருப்பணியை நடத்திவருக" என்று கட்டளையிட்டபடி சிவசங்கரசுவாமிகள் முயன்று நித்தியகட்டளை பிரமோற்சவ முதலியவற்றைச் சிறப்பாக நடத்திவந்தனர்.

இங்ஙனம் நிகழப்பெற்றுவருமிடையில் வைகாசிமாதமொன்றில் வைசாகபௌர்ணமையில், தாம் சமாதியில் நிரதிசயானந்த நிலையிற் கலவாமற் கலந்துநிற்குஞ் செவ்விவருவதுணர்ந்து, அதற்கு முன்னாளாகிய சுவாதிநட்சத்திரத்தில் மஹேசுவரபூஜையும், மறுநாள் வைசாகத்தில் ஸ்ரீ சுப்பிரமணியமூர்த்திக்கு மஹாபிஷேகமும், மூன்றுநாட்டொடங்கி வேம்படி விநாயகர்க்கும், பிரணவமலைத்தியாக கைலாசநாதர் சந்நிதிமுதலியவற்றிற்கு முறைப்படி அபிஷேகாதிகளுஞ் செய்வித்துத் தரிசனஞ்செய்து வரக்கடவை என்று கட்டளையிட்டு, அன்று மஹேசுவரபூஜையை நடத்திக்காட்டி மறுநாள் வைசாக பௌர்ணமியாதலால் அபிஷேகாதிமுதலியவற்றை நடத்துவிக்கும்படிக்குச் "சிவசங்கரதேவரை" ஆலயத்திற்கனுப்பித்தாம் வேலாயுத தீர்த்தத்தில் மூழ்கிச் சிவபூஜையாராதனைமுடித்து ஒடுக்கத்தில் நிஷ்டைகூடியிருந்தனர்.

அப்பொழுது முப்பதாமாண்டுதொடங்கித் தொண்ணூறுமாண்டளவும் நாடோறுந் தவறாமல் "திருவருணகிரியை"ப்பிரதக்ஷிணஞ்செய்துவந்த "சோணாசலதேவர்" தாம்விரும்பியாங்கு "அருணகிரீசர் குருமூர்த்தமாய் மானிடச்சட்டைதாங்கி ஓர் ஆதிசைவரைப்போல் தோன்றிக்கட்டளையிட்டவாறு'' திருப்போரூர்க்குவர, அதை ஞானநோக்கத்தாலறிந்து வரவுபார்த்திருந்த சிதம்பரசுவாமிகளைச், சோணாசலதேவர் அடைந்து சரணஞ்செய்து,

*

"எடுத்தசன னங்கடொறு மீன்றெடுத்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டில்—[illegible]த்தமணிப்
பைந்நா கணைத்துயின்மா[illegible] பாலாழியுஞ் சிறிதாம்
மன்னு சிதம்பர தேவா." (தமிழ்நாவலர்சரிதை.)

"நவகுணமு முக்குறும்பு நவைகண் மற்றனைத்துந் தீர்த்து
பவகுணஞ் சற்றுந்தாங்காப் பரமயோகிகளாய் நின்ற
சிவகுணச் செல்வர்போற்றுஞ் சிதம்பரதேவா வென்ற
னவகுணம் போக்கியாள்வ தையநின் கடனதாமால்"

என்றுபாடித் துதித்துவணங்க, சுவாமிகள் கருணைகூர்ந்து அவர் கோரிக்கையை நிறைவேற்றியருளித் தாம் பூஜாதிரவியங்களுடன் நிலவறைவழியாக சமாதிஸ்தானத்திலிறங்கி ஒடுக்கமுற்று நின்றனர். அச்சமயம் ஆலயத்தில் கர்ப்பூர தீபாராதனை நடந்துவரும் வேளையானதாகலால் சிதம்பரசுவாமிகள் ஆண்டவர் சந்நிதியில் அஞ்சலியஸ்தராய்த்தோன்றி மூலஸ்தானத்தில் மறைந்திடக்கண்டு சோணாசலதேவரும், வேதியர்முதலிய பலரும் விஸ்மிதமடைந்தவர்களாய்ப்பெரிது ஆனந்தமுற்று ஹரஹரவென்னும் ஆரவாரத்துடன் பரவசமாயினர்.

சிவசங்கரதேவர் ஆண்டவர் அபிஷேகாதி திருப்பணிகளை அமைதியுடன் முற்றமுடித்துப் பரிணமித்திற்கு வருகையில், ஆசிரியர் மரணதசையிலமர்ந்த முறைமைகளைக் கேள்வியுற்று அடக்கற்கரிய ஆராமைமேற்கொண்டு ஆசிரியர் ஒடுக்கமுற்ற சந்நிதியினின்று,

"இக்கலியுகத்தி லெழுந்த வென்குருவே
யின்பமே யன்பினு ணிறைந்த
முக்கனிரசமே முதிர்சுவை யமுதே
மூதறிவே மறைப்பொருளே
சர்க்கரையொடு கற்கண்டென ருசிக்குந்
தயாளுவேதமிய னென்றனக்குத்
துக்கசாகரத்தைத் தொலைத்தருள் புரிந்தாய்
துயரியெங் கொளித்தனையோ."

என்னும் இதுமுதலிய செய்யுட்களால் மனமுருகித்துதித்துத் துயரப்படக்கண்ட சோணாசலதேவர் ஓடோடியும்வந்து ஆராமையை ஒருவாறாற்றி, அவரைச்சுவாமிகளது ஆசனத்திலிருத்தி ஆண்டுதோறும்



வைகாசபௌர்ணமியிலும், அதற்கு முன்னாளிலும் பௌர்ணமிக்குப் பின்னுள்[illegible]ம், மகேசுவரபூஜை அபிஷேகமுதலியவற்றைத்தவறாமல் நடத்தவேண்டுவதென்று சிதம்பரசுவாமிகள் கட்டளையிட்டருளிய முறைமையைத் தெரிவித்துத் தாமும் அமுதுகொண்டுவிடைபெற்றுத் திருவண்ணாமலைக்குச் சென்றனரென்ப.

இனிச் சிதம்பரசுவாமிகள் ஆதீனத்தில் இரண்டாவதுபட்டம் பெற்ற சிவசங்கரதேவர் முதலிய பரம்பரை விருத்தாந்தங்களை அச்சிடப்பட்டுவழங்கும் சரிதமுகத்தானறிக.

இவ்வளவே சிதம்பரசுவாமிகள் வரலாறாகத்தெரிந்தவை. இச்சரிதங்களால் சிதம்பரசுவாமிகள் தெய்வப்புலமைவாய்ந்த பெரியாரிலொருவரென்பதும், அங்கயற்கண்ணம்மையாலும், ஆறுமுகக்கடவுளாலும் வலிந்தாட்கொண்ட பேரடியாரென்பதும், ஞானசமாதிகூடி யோகானுபவமறிந்து தத்துவநிலையுணர்ந்த வித்தகரென்பதும், குறையிரந்த வன்பர்களுளக்குறையை அகற்றுந் திருவுளங்கனிந்த திப்பியமூர்த்தியென்பதும், குமரவேளெழுந்தருளக் கோயில்புதுக்கிய கொற்றவர்போற்றும் நற்றவச்செல்வரென்பதும், நாமசளருளும் நலஞ்சிறந்த கவிகள்வாழ்த்தும், நாடிப்பெற்ற கோடிப்புண்ணியரென்பதும், மற்றும் இவரது உத்தமகுணவிசேடங்களும் நன்குவிளங்கும்.

இவர்பெயர் சிதம்பரக்கவிராயரென்றும், சிதம்பரதேசிகரென்றும், சிதம்பரசுவாமிகளென்றும், இலக்கணச்சிதம்பரநாதமுனிவரென்றும் வழங்குவர்.

இனிச்சிதம்பரமுனிவரர்கால மின்னதென்பதை ஆராய்வோம்.

"ஆய்ந்தவின்பம் வாய்ந்துள நிறையச்
சாந்தையன்பதம் யாந்தொழுவோமே"

என்று வைராக்கியதீப உரையிலும்,

"போந்தே முயிர்க்குயிராந்துணை யொத்த
சாந்தையர் தம்பத மேந்துகருத்தே"

என்று வைராக்கியசதக உரையிலும், ஆசிரியர் வணக்கங்கூறுவதால் இவர்சாந்தலிங்கசுவாமிகள் மாணாக்கரென விளங்குகிறது. தமது

ஆசிரியரான குமாரதேவர்க்குச் சாந்தலிங்கசுவாமிகள் ஆசிரியராக விளங்குதலைக்குறித்து அன்பின்மிகுதியாலும், ஆசிரியரின் குரவரென்ற விசேடத்தைக் குறித்தும், மேற்கூறிய நூலுரைகளில் சிதம்பரதேவர் சாந்தலிங்கர்க்கு ஆசிரியர் வணக்கங்கூறினமை உணர்ந்துகொள்க. இக்காரணத்தால், சிதம்பரதேவரும், குமாரதேவரும் சாந்தலிங்கசுவாமிகளும் ஒருகாலத்தவராவர். இவர்கள்காலம் கி. பி, 17-ம் சகாப்தம் என்பர்.

கச்சியப்பமுனிவர், தொட்டிக்கலைசைச் சுப்பிரமணியசுவாமிகள், காஞ்சீபுரம் சரவணபத்தர், சிதம்பரபத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை, முதலாயினோர் சிதம்பரமுனிவர் சகபாடிகள். இவர்கள்யாவரும் திராவிடமகாபாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீமத்-சிவஞானமுனிவரிடத்துத் தமிழ்ப்பாடங்கேட்டுக்கொண்டவராவர்.

தொட்டிக்கலைசைச் சுப்பிரமணிய சுவாமிகள் காலத்தைக்குறித்து மதுரை செந்தமிழ்ப்பத்திரிகை, தொகுதி ரு-பகுதி ௧௨-ல், பத்திராசிரியர் ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்களால் நிர்ணயித்தபடி இற்றைக்கு ௧௧௭-வருடங்களாகின்றன. இந்நூற்றுப்பதினேழு வருடங்களையே ஸ்ரீமத்-சிவஞானயோகிகளின் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவராய இலக்கணச் சிதம்பரநாதமுனிவர்க்குக் கூறவேண்டியதாகின்றது. ஆகவே சிதம்பரசுவாமிகளின் காலம் இற்றைக்கு 117-வருடங்களுக்கு முந்தியதெனக் கொள்வதே பொருத்தமுடைத்தாம்.

சுபம்!

சிதம்பரசுவாமிகள் சரிதம் முற்றிற்று.

சி. கு. நாராயணசாமி முதலியார்.

கோவை.

---

உ

சிவமயம்.

# இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

## பொழிலிறுத்தபடலம்.

மீட்டினி யெண்ணும் வினைவேறுமுள தன்றோ
லோட்டியிவ் வரக்கரை யுலைத்துரிமை யெல்லாங்
காட்டிமிது வேகரும மன்னவர் கடும்போர்
மூட்டும்வகை யாவதுகொ லென்றுமுயல் கின்றான்.

என்னும் ரு-ம் செய்யுளில், "ஓட்டியிவ்வரக்கரையுலைத்துரிமையெல்லாங் - காட்டுமிதுவே" என்பது "ஓட்டியிவ்வரக்கரையுலைத்தென்வலியெல்லாங் - காட்டுமிதுவே" எனக்காணப்படுகின்றது. "உரிமையெல்லாம்" என்பது பொருட்பொருத்தமுடைய தன்றாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை.

சோனைமுதன் மற்றவை சுழற்றிய திசைப்போ
ரானைநுக ரக்குளகு மானவடி பற்றா
மேனிமிர விட்டன விசும்பின்வழி மீப்போய்
வானவர்க ணந்தன வனத்தையு மடித்த.

என்னும் ௧௧-ம் செய்யுளில் "சோனைமுதன் மற்றவைசுழற்றிய" என்பது "சோனைமுகிலொத்தயல்சுழற்றிய" எனக்காணப்படுகின்றது. அயலிற் சுழற்றியனகுளகான; மேனிமிரவிட்டன நந்தனவனத்தை மடித்த" எனப்பொருள்கொள்ளுமிடத்து அயல் என்னும் சொல்லும் "சுழற்றிய" என்னும்வினைக்கு "சோனைமுகிலொத்து" என்னும் உவமையும் இயைந்து வருதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. "சோனைமுகிலற்று" என்னும் பாடத்திற்கு தம்மீது படியப்பெற்ற முகில்கள் நீங்கப்பெற்று எனப்பொருள்கொள்க.

ஷை

தேனுறை துளிப்பசிறை புட்பல சிலம்பப்
பூநிலை மணித்தரு விசும்பினிடையே போய்

மேன்முறை நெருக்கவொளி வாளொடு வில்வீச
வானிடை நடாயநெடு மானமென லான.

---

என்னும் உக-ம் செய்யுளில், "பூநிறைமணித்தருவிசும்பினிடையேபோய் - மேன்முறை நெருக்கவொளி வாளொடுவில்வீச - வானிடைநடாயநெடு மானமென லான" என்பது "பூநிறைமணித்தருவிசும்பின்மிசைபோவ-மீன்முறைநெருக்கியொளிவாளொடுவில்வீச - வானிடைநடக்கு நெடுமானமெனலான" எனக்காணப்படுகின்றது. தேனுறைதுளித்தலும் புட்பலசிலம்பலும் விமானத்திற்கும் பொதுவாய் வருதலின்பின்னையதேபொருத்தமுடைத்து. விமானம்-புஷ்பகவிமானம். பூநிறைதருவிசும்பின் மிசைபோவ, இராவணனுடைய புஷ்பகவிமானம் ஆகாயத்திற்செல்லுதல் போலிருந்ததென்பதுகருத்து. முன்னர்க்கடறுவுபடலத்தில் "அண்டகோடிபோமரக்கனூற்றைப் - புட்பகவிமானந்தானவ்விலங்கை மேற்போவதொத்த" என உவமைகூறி, இங்கே இலங்கையினின்றும் வானிற்போவதற்கு உவமை கூறிய ஆசிரியரது அதிநுட்பமதி எவராலும் வியக்கத்தக்கது. இங்ஙனமே இவர் இந்நூலின் பற்பலவிடங்களிலும் முன்னர்க்கூறிய உவமையையே பின்னரும் வெவ்வேறு விதமாக உவமித்துக்கூறியிருக்கின்றார். அங்ஙனம் கூறினும் அவைகள் கூறியது கூறலாகாமல் மிகநுண்ணிதாகப்புணர்த்தியது எவராலும் செயற்கரியதும் அதிசயிக்கத்தக்கதுமேயாம். அங்ஙனம் உவமைபுணர்த்தியதை கார்காலப்படலத்து சா-ம் செய்யுண்முதலியவற்றில் போரின்தொடக்கமாக உவமித்து "ஆர்த்தெழுதுகள் விசும்படைத்தலானுமின் - கூர்த்தெழுவாளைப் பிறழ்ங்கொட்பினும் - தார்ப்பெரும் பணையின்விண்டழுங்குதாலினும்-போர்ப்பெருங்களமெனப்பொலிந்ததும்பரே" எனக்கூறிப், பின்போரின் தொலைவாக உவமித்து "மூளமர்தொலைவுறமுரசவிந்தபோல் - கோளமைகோண்முகில் குமுறலோவின - நீளடுக்கணையெனத் துளியுநீங்கின - வாளுறையுற்றெனமறைந்தமின்னெலாம்" என ௬௪ கoகூ-ம் செய்யுளிற் கூறுதலாலறிக. இன்னும் இவர் கூறும் வருணனைகளெல்லாம் முன்கூறியவற்றிற்கு பின்கூறியவைகளினையுடையவைகளாயும் ஒன்றற்கொன்று வேறான கருத்தமைந்தவைகளாயுமே இருக்கும். அது மிதிலைக்காட்சிப்படலத்து ௩அ-ம் செய்யுளில் "மருங்கிலாநங்கையும் வசையிலையனு - மொருங்கிய விரண்டுடற் கொயிரொன்றாயினர் - கருங்கடற்பள்ளியிற் கலவிநீங்கிப் போய்ப் - பிரிந்தவர் கூடினாற்பேசல் வேண்டுமோ" எனச்சீதையினதும் இராமரதும் உயிரொன்றானமையைக் கருங்கடற்பள்ளியின் நீங்கினமையை ஏதுவாகக்கொண்டு சிறப்பித்துக் கூறியவர், பின்நகர்நீங்குபடலத்து உ௯௩-ம் செய்யுளில், "துறந்துபோமெனச்சொற்ற சொற்றேறுமோ - வுறைந்தபாற்கடற்சேக்கையுடனிரீஇ - யறந்திறம்பு மென்றையனயோத்தியிற் - பிறந்தபின்பும் பிரிவிலளாயினள்" என அதனையே வேறோர்விதமாகப்பிரியாமையாக்கி அதனையே ஏதுவாகக்கொண்டு சீதையின் பிரியவிரும்பாமையைச் சிறப்பித்தலாலறியப்படும். இங்ஙனமே இக்காப்பியம் இவ்வகையான அலங்காரமுடையதாயிருத்தலைமிக நுண்ணிதாகவோர்ந்துணர்க.



௬௪

பாடலம்படர் கோங்கொடு பன்னிரைப்
பாடலம்பனி வண்டொடு பஃறிரைப்
பாடலம்புயர் வேலையிற் பாய்ந்தன
பாடலம்பெறப் புள்ளினம் பாறவே.

என்னும் ௩௪-ம் செய்யுளில், "பாடலம்பெறப்புள்ளினம் பாறவே" என்பது "பாடலம்படப்புள்ளினம்பார்ப்பொடே" எனக்காணப்படுகின்றது. முன்னையதுபொருட் சிறப்பின்றாதலிற் பின்னையதே சிறப்புடைத்து. புள்ளினம்பார்ப்பொடுபாடலம் படப்பாய்ந்தன என்க. அலம் என்பது போதும் என்னும் பொருள்பட வந்தது. அது "ஆசலம்புரியைம்பொறிவாளியும்" என இவ்வாசிரியர் முன்னர்க்கூறியதனானும் பெறப்படும்.

இன்னும் ௬௪ படலத்துச் "சொல்லிடவெளியதன்றால்" என்னும் ௬௭-ம் செய்யுளின் பின்னர் ௬௯-ம் செய்யுளும், அதன்பின்னர் ௬௮-ம் செய்யுளும் காணப்படுகின்றன. ௬௯-ம் செய்யுளும் சோலைகாப்போர் கூற்றாதலின் பின்வருதலே சிறப்புடைத்தென்க. ௬௭-ம் செய்யுளில் "சிதைந்ததென்றார்" என்பது "சிதைந்ததன்றே" எனவும், ௬௮-ம் செய்யுளில் "மன்னவன் முறுவல்செய்தான்" என்பது "மன்னவன்மொழியும்வேலை" எனவும், ௬௯-ம் செய்யுளின்பின்னர்,

> வருங்கதம் வணங்கி யன்னு ரியம்பிய வார்த்தை கேளா
> அருக்குல அருமுனிவர் கன்மலே சிதறத் தேவர்
> மருக்குதி வழித்து சேவ மாகட லிரைப்புத்நீரச்
> சினத்துவாய் மடித்துத் தீயோன் கனைத்திவை செப்பலுற்றான்.

என் ஒரு செய்யுளும் காணப்படுகின்றன. இவைகளும் பொருத்தமாதல் இயைபுநோக்கியுணர்க.

## இங்கிரர் வதைப்படலம்.

---

> புல்லிய முறுவ லோன்றுப் பொறுமையுஞ் சிறிது மொங்க
> வெல்லேயி லாற்றன் மாக்க ளெண்ணிறந் தாரை யேவி
> வல்லேயி னகலா வண்ணம் வாயையும் வழியை மாற்றிக்
> கொல்லலீர் குரங்கை யோட்டிற் பற்றுதிர் கொணர்தி ரென்றான்.

என்னும் உ-ம் செய்யுளில், "எல்லேயிலாற்றன்மாக்களெண்ணிறந்தாரையேவி" என்பது "எல்லேயிலரக்கர்தம்மிலிசைந்தகிங்கிரரைநோக்கி" எனக்காணப்படுகின்றது. படலத்திற்கியைந்துவருதலிற்பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை உ-ம் செய்யுளின்பின்னர்,

> என்றலு மிருகை கூப்பியிருநுதல் படியிற் றோயச்
> சென்றடி பணிந்து மண்ணுந் தேவருந் திசையுமுட்க
> வென்றியன் றெனினும் வல்லே விரைந்துநாம் போகிவீரந்
> துன்றிய குரங்கைத் தூக்கித் தருதுமென் றுரைத்துப்போனார்.

என ஒருசெய்யுள் காணப்படுகின்றது. உ-ம் செய்யுளினிறுதிக்கியைந்து வருதலினிதுவும் பொருத்தமுடைத்து.

ஷை

> இருகுழுஞ் சினத்துத் தேவர் தானவ ரென்னுந் தெவ்வ
> ரிருகுறும் பெறிந்து நின்ற விசையினார் வசையெவ் றெண்ணிப்
> பொருகுறும் பென்று வென்று புணர்வது பூவுண் வாழ்க்கை
> யொருகுறுங் குரங்கென் றெண்ணி நெடிதுநா ணுழக்கு நெஞ்சர்.

என்னும் ௬-ம் செய்யுளில், "இருகுறும்பெறிந்துநின்றவிசையினார்வசையென்றெண்ணி- பொருகுறும்பென்றுவென்றுபுணர்வது" என்பது "இருகுறும்பெறிந்துநின்றவிறற்கிது வசையாமீதோர் - பொருகுறும்பென்றுவென்று புகல்வது" என்பதும் பொருட்சிறப்புடையனவாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. குரங்கு என்பதற்கு ஆகாரம் விரித்துப் பொருள்கொள்க.



ஷை

> பொன்னின்று கனலுந்தெய்வப் பூணினர் பொருப்புத் தோளர்
> மின்னின்ற படையுங்கண்ணும் வெயில்விரிக்கின்ற மெய்ய
> ரொன்னென்றாக் கேன்னென் னென்று ரெய்திய தறிந்தி லாதார்
> முன்னின்றார் முதுகுதீயப் பின்னின்றார் முடுகு கின்றார்.

என்னும் கூ-ம் செய்யுளில், "முடுகுகின்றார்" என்பது "மூசிக்காய்வார்" எனக்காணப்படுகின்றது. முதுகுதீய என்பதற்கு இயைந்துவருதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

> தூளியினிமிர்படலம்போ யிமையவர் விழிதுற வெம்போர்
> மீளியி னினமென வன்றாள் விரைபுலி நிரையென விண்டோ
> யாளியி னணியெனவன்றே லலேகடல் விடயென வஞ்சா
> வாளியின் விசைகொடு திண்கார் வரைவரு வனவென வந்தார்.

என்னும் கஅ-ம் செய்புளில் "தூளியினிமிர்படலம் போயிமையவர் விழிதுறவெம்போர் - மீளியினினமெனவன்றாள் விரைபுலிநிரையென" என்பது "தூளியினிமிர்படலம்போய்ச்சுரர் விழிபொதுளுறவெம்போர் - மீளியர் வெகுளியொடஞ்சா விரைபுலி நிரையென" எனக் காணப்படுகின்றது. "அஞ்சா" என்பது "அன்னார்" எனவுங் காணப்படுகின்றது. "பொதுளுற" என்பதும் "மீளியர்" என்பதும் பொருட்கியைபுஞ் சிறப்புமுடைமையிற் பின்னையனவே பொருத்தமுடையன. மீளி என்பதற்குச் சிங்கம் என்றல் பொருந்தாது.

சி. கணேசையர்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(௩௯௮) அவனிங்குவந்து தீர்ப்பதன்முன் நான் மாயப் பற்றி நின்று என்னை நீங்காத பாதகத்தையுடைய சூலையைப், பொருந்திய இவ்வயிற்றோடுங் கிழிப்பேனென்று உடைவாளினாலே கிழிக்க, உயிரோடும் சூலை தீர்ந்தது. மாயக் கிழிப்பேனென்று கூட்டுக.

(௩௯௯) நாயகரோடு சகமரணஞ் செய்தற்கு விரும்பும் பொழுது.

(௪௦௦) நாயகருடைய செய்கையை மறைத்து, நாயகரை நம்பியாரூர் அணையும் பொழுது மிக அலங்கரித்து எதிரே போமென்று கூற, நிலை பொருந்திய வாயிலில் தீபத்தையும் பூரண கும்பத்தையும் வைத்து.

(௪௦௨) ஆகமத்தின் பகுதிகளையுடைய அருச்சனைகளை யெல்லாம் குணத்தில் வழாமை பொருந்திய நான்கு வேதங்களிற் றொடர்ந்த வாய்மையையுடைய நம்பியாரூரர் அங்கீகரித்துக் கொண்டு.

(௪௦௫) வெறுப்புப் பொருந்திய மனத்தை யுடையராய்க்குறிய உடைவாளைப்பிடிக்க, ஆளாகவுடைய சிவ பெருமானுடைய திருவருளால் அவருமுய்ந்து கண்பராய்.

(௪௦௯) மாற்றல் - இடல்.

(௪௧௦) உள்ளுணர்வான ஞானம் முதலிய நான்கு பாதங்களினுண்மையைத்தெளிந்த இனிய தமிழாற் கூறுந் திருமூலநாயனாருடைய பெருமையைக் கூறலுற்றேன்.

## திருமூலநாயனார் புராணம்.

(௧) அந்திக்காலத்துதிக்கும் இளம்பிறையையணிந்த சிவபிரான் எழுந்தருளியிருக்கின்ற கைலையில் முதன்மைவிளங்கும் கோயிலுக்கு



முதன்மைபொருந்திய தலைவராகி இந்திரன் விட்டுணு பிரமா முதலாம் தேவர்களுக்கு முறைமையை அருளும் திருநந்திதேவருடைய திருவருளைப்பெற்ற நான்கு வேதங்களையறிந்த யோகி ஒருவர்.

(௩) நெருங்கிய சடையிற் சிவபிரானணிந்த சுத்தமாகிய நீர் செறிந்த கங்கையினது அன்னங்கள் நிறைந்த அகன்ற நீர்த்துறையினரிய கரையின்பக்கத்தே.

(௪) நெடிய கங்கைத்துறையிலாடிப் பிறவித்துறையாகிய நெடிய கடலினின்று, ஏற்றுவிக்குஞ்சிவன் மகிழ்ந்தருளும் காசியைவணங்கித் துதித்து.

(௫) ஆடுகின்ற அரங்கையுடைய திருவாலவனத்தை வணங்கித் துதித்து.

(௬) நல்ல பதியிலிருக்கின்ற யோகசாதனையையுடைய முனிவர்களை விரும்பிப்போய் பொன்னம்பலத்தைச் சூழ்ந்த திருவீதியையுடைய அழகிய க்ஷேத்திரமாம் பெரும்பற்றப் புலியூரில் வந்தடைந்தார்.

(௮) விசாலித்த நிலைபொருந்திய மாளிகையையுடைய அந்தப் புரத்திலிருந்து வணங்கிப்போய் வலிய இடபத்தின்மேல் வருகின்ற சிவபிரான் அமுதுசெய்ய அஞ்சாது நஞ்சைக்கொடுத்ததென நினைத்துப் பூமிக்கு வளத்தைத நிறைத்துக்கடல்வயிற்றை நிறைவியர்த காவிரியின் கரையை அணைந்தார்.

(௯) பசுவினரிய கன்றுறையுந் திருவாவடுதண்டுறையையடைந்து.

(௧௦) கரைப்புறவில் - கரையிலுள்ள புறவில்.

(௧௧) வினைப்போக நீங்க வாழ்நாளைக் கொடுந்தொழிலையுடைய ஞமனுண்ண அழிந்து பூமியில் வீழ்ந்தான்.

(௧௩) தாம் முயற்சிசெய்த பிராணவாயுவை அடக்குதல் வழியாகத் தம்முயிரை யவனுடம்பிற் பாயும்படிசெய்தார்.

(௧௪) நிரந்து - நிரையாய்.

(௧௫) பூக்கள்விரிந்த குளிர்ந்த முல்லையினீழலிலினிதாகக்காத்தார். புறங்காத்தல் ஒருசொன்னீர்மைத் தாய்க்காத்தலை யுணர்த்திற்று.

(௧௭) சூரியனஸ்தமித்த பின்னருந்தாழ்த்தாரென்று பொருந்திய அச்சத்தோடுபோய்.

(௨௨) தெரிந்த காப்பிடத்தில் வைத்தபழைய உடற்பொறையைக்காணார்.

(௨௩) குளிர்ந்த சந்திரனையணிந்த சடையையுடைய சிவபிரான் தாந்தந்த ஆகமத்தின் பொருளைப்பூமியில் திருமூலருடைய வாக்கால் தமிழாய்வகுப்ப நினைத்த அத்திருவருளால் அச்சரீரத்தை மறைப்பிக்க அளவிறந்த அறிவையுடைய திருமூலர் சிவனருளென நினைந்தார்.

(௨௪) சூழ்ந்த அந்தக்குலத்துள்ளவர்களாய்த் தொடர்ந்தவர்களுக்குத் தொடர்பின்மையை முழுதுங்கூறியருள அவர் திரும்பிப் போனதற்பின், மிக்கவிருப்பத்தையும் கோபத்தையும் வேரோடுகளைந்த திருமூலரானவர்.

(௨௫) மேலைத்திசையில் மிகவுயர்ந்த அரசின்கீழ் யோகாசனமாயிருந்தருளிச் சிவயோகத்தில்நின்று இருதயகமலத்திலே உள்ள சிவத்தோடுகலந்திருந்தார்.

(௨௭) தசையையுடைய உடம்பில் பிறவியாகிய விடமானது தீர்ந்துலகமுய்ய ஞானமுதலாகிய நான்கு பாதங்களுமலர்ந்தநல்ல திருமந்திர மாலையை.

## தண்டியடிகணாயனார் புராணம்.

(௧) சிவனுடைய மறைபாட ஆடுகின்ற மாற்றுயர்ந்தபொன் போன்ற பாதங்களை மனத்துக்கொண்டகருத்தின் கண்ணேக்கும் குறிப்பேயன்றிப் புறக்கண்ணுலும் விஷயத்திற்கண்ட உணர்வுதுறந்தார்போலப் பிறந்தபொழுதே கண்குருடர். அகநோக்காற்பாதமேயன்றி ஏனையவற்றை நோக்காதவாறுபோலப்புறநோக்காலும் நோக்கும் விடயங்களை நீங்கினவர்போலக் கண்காணாதவர்.



(௫) குளத்தினடுவே குறியை நட்டுக்கட்டுங் கயிற்றைக்குளக்கரையின் இறக்கமான இடத்தே நடுதறியோடு இசையக்கட்டி இடையே தடவி.

## மூர்க்கநாயனார் புராணம்.

(௧) அரங்கிற் பெண்களும் புடவைக்கொடிகளும் விழவிற்காக ஆடும்.

## சிறப்புலிநாயனார் புராணம்.

(௧) காவிரிநாட்டிலே பெருமைமிகும் அழகிய பதியாதெனில், பூமியிலுள்ளோரில் இன்மையினாலே இரந்து சென்றோர்க்கு இல்லையென்னுமலீயும் தன்மையராகிய என்றும், நன்மையேமிக்க வேதியரைச் சீகாழித்தலைவர் அருளிச்செய்த மறைத்திருவாக்குப்பரந்த திருவாக்கூராம்.

(௨) கரியமுகில்முழக்கந் தாழ வேதவொலி முழக்கமிகும் பொலிவு மலிந்த வீதியிலிட்ட அகிற்புகைத்தூபம் தாழ நல்யாகசாலையிலுள்ள ஓம ஆகுதித்தூபம் உயரும்.

(௩) கரும்பைச்சூழ்ந்த கமுகவேலியையுடைய.

## சிறுத்தொண்டநாயனார் புராணம்

(௧) உருவைக்காட்டுஞ்செயலை மன்மதனொழியக்கண்பொழிகின்ற சிவந்த அக்கினிவருகின்ற நாட்டம் பொருந்திய அழகிய நெற்றியையுடைய சிவபிரான் மகிழ்ந்தருளும் பதியாதெனில், கரியகண்களையுடைய கடைசிப்பெண்கள் வயல்களிலே தங்களிப்பைக் காட்டுகின்ற காவிரிநதிசூழ்ந்த திருநாட்டில் வளத்தைக்காட்டுந் திருச்செங்காட்டங்குடியாம்.

(௨) நெடியசடையையுடைய சிவபெருமானது விபூதியினடைவால் உலகத்தில் வளர்கின்ற உயிர்களுக்கெல்லாம் உயர்ந்த காவற்றொழிலைப் பூண்டு. உயிர்காவற்றொழிலென்றது வைத்தியத்தொழிலை.

(௪) பள்ளத்திற்கு நீர்பாயும்படி வைத்தமடையாய்.

(௫) அரசனுக்காகப் படையெடுத்துப்போய் வடதிசையிலுள்ள வாதாவியென்கின்ற பழையநகரந்துகளாக, பகடு - யானை,

(க) விருத்தி - சருவமானியம்.

(கo) தம்முடைய மனக்கருத்துக்கிணங்க இசைந்துகொண்டு உம்முடைய நிலைமையை அறியாமை உய்த்தீர், சரிதல் - ஒழுகல்.

(கஉ) வேதங்களுக்குக் காரணராகிய சிவபெருமானது அடியார் வேண்டியமெய்த்திருத்தொண்டைச் செய்யக்குற்றமற்ற குடியிற்பிறந்த திருவெண்காட்டு நங்கை என்னும் விருப்பத்தையுடைய மனைவியாருடைய கருத்தொருமிக்கவரும் பெருமையையுடைய. செய்ய நின்றவரும் எனமுடிக்க.

(கச) திருவமுது - அன்னம். பாய்தயிர் - தோய்தயிர். உண்ணிசமுதம் - உண்கின்ற நீராகிய அமுதம்.

(கரு) வழிபாட்டால் மேன்மைபொருந்திய பரஞ்சோதியார் அவ்வடியார்முன் மிகச்சிறியராயடைந்தார்.

(கஎ) தவத்தையுடைய பரஞ்சோதியார்க்கு மிகுந்த அழகிய மனையறத்தின் மூலமாய்.

(கஅ) அருமைபொருந்திய புத்திரர் பிறந்தபொழுது அலங்கரிக்கப்பட்ட பெருமையோடு சுற்றங்களிப்பப்பெறுதற்கரிய புதல்வனைப் பெற்றுவருகின்ற மகிழ்ச்சி தாதையாருடைய மனத்திலே அடங்கா வண்ணம் வளர அழகுமலிந்த மெய்யாடல் விழாவைச் செங்காட்டங்குடியிலுள்ளோரெடுப்ப. மணி என்ற சீண்டுப்புதல்வனை.

(ககூ) நல்ல மங்கலவாத்தியம் முழக்கப்பட, வேதகோஷம் ஆசாய்த்தை அளக்கப்பிட்டார்கள்.

(உo) சுருள்மயிர் பொருந்திய நுதலிற்சுட்டி, இருகாதுகளிலும் இரத்தினக்குதம்பை பொருந்திய திருக்கண்டத்தில் காண்.

(உக) இதழ்கொண்ட கொன்றைமாலையை முடித்த நெடிய சடையை அழகுபொருந்தக்கடலைப் பருகி முகந்தெழுந்த கரியமேகச் சுருள்போலத் தொடர்ந்த புறமயிர்சுருண்டு இருண்டுபெற்றைபோலச் செறிந்து அசைந்து நெருங்கிப்படர்கின்ற சாய்தலையுடையகுழற்சிபொருந்திய குஞ்சியாகப்பரப்பி. சடையைப்பரப்பி எனமுடிக்க.

162403



(உஎ) கருமைக்குக் கருமைசெய்தாற்போன்ற அழகு விளங்குகின்ற பம்பையினது சாய்தலினுனியிற்பரப்பும் நீலநிறப்பிலானவை முகிலினிடையிடையே பொழிந்த நக்ஷத்திரப்பரப்பைப் போலத்திரளான நிரையையுடையவண்டுகள் பரந்தாரவாரிக்கும்படி தோன்ற.

(உஅ) பக்கத்தே திருமுடியிற்செருகு. மந்திக்காலத்திளம்பிறையைச் சிறிய வடிவத்தையுடைய பூரணசந்திரனுக்குத் திரும்பவுஞ் சாத்தியதுபோல.

(உகூ) கொடிய சூரியமண்டலமும் விளங்குகின்ற சந்திரமண்டலமும் அந்த அக்கினிமண்டலமும் உடனணைந்தவாறுபோல அழகை வளர்திருக்காதில் சங்குமணிக்குழையைவைத்து அதினுள்ளே செவ்வரத்தமலரைச் செறித்த திருத்தோடு பக்கத்தேசிறக்க.

(ஙo) கருமைபொருந்திய நஞ்சைமறைத்தருளக் கடலிலுள்ள அமுதக்குழி கிரையாகிய அசைகின்ற ஒளியையுடைய வெண்டிரட்கோவையையுடைய அழகிய வடமணிந்தாற்போல.

(ஙக) சூரியன் கடலிற் குளித்தபின் உண்டாகின்ற செவ்வொளியை அந்திக்காலத்துப்பரம்பும் நெருங்கிய இருட்பொழுதுபடர்ந்து அணைந்து சூழ்வதுபோலத் தம்முடைய பழைய பானைத்தோலைக் கொண்டு அமைத்துச்சாத்தும் பவளத்திருமேனியின் நீலநிறச்சட்டையினணி விளங்க.

(ஙஉ) மிக்கெழுகின்ற அன்பர்களது அன்புதிருமேனியில் விளைந்ததென்ன எனும்புமணியால்.

(ஙங) பேரருளின் திறத்தைக்கண்டு சிவனுடைய அருளையே பேணும் அடியார்களே வருகின்ற அன்பின்வழிநிற்பரென்று.

(தொடரும்)

ஜி. சதாசிவம் பிள்ளை.

5ட
031ம 211ம02

# முகவுரை.

## மூவகை யான்மாக்களிலக்கணம்.

இது, மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குக் கிடைத்த திருவாவடுதுறையாதீன வேட்டுப்பிரதியிலுந் தருமபுரவாதீன வேட்டுப்பிரதியிலுமிருந்தது; இதனை யுற்றுநோக்கும்போதுள்ள விஷயங்களெல்லாஞ் சிவஞானசித்தியார் எட்டாஞ்சூத்திரமிரண்டாங்கவிக்குவரைந்த மறைஞான தேசிகருரையினுஞ் சிவாக்கிரயோகிகளுரையினுஞ் சித்தாந்தப் பிரகாசிகை முதலியவற்றினுங் காணப்பட்டது. எழுதுவோராலே நேர்ந்த வழுக்கள் பலவாயிருந்தன. அவைகளைச் சிற்றறிவிற்கியன்றவாறு பிரதிகளைத்தழுவித் திருத்தஞ்செய்து, யாழ்ப்பாணம் புலோலி ஸ்ரீமத் தில்லைநாதநாவலரவர்களிடத்திலும் வாசித்தியன்றவரை திருத்தஞ்செய்துகொண்டு, தமிழ்ச்சங்கத் தக்கிராசனாதிபதியாகிய பாலவனத்தம் ஜமீந்தார் மகாகனந்தங்கிய பொ. பாண்டித்துரைச்சாமித்தேவரவர்களுக்குத் தெரிவிக்க அவர்களும் பார்வையிட்டியன்றவரை திருத்தஞ்செய்து முன் நான்காம்வருடத்துச்செந்தமிழ்ப் பத்திரிகையிற் பொதுவாக வுயிரிலக்கணம்வரைந்துவெளியிட்டிருப்பதற்கியைய அவ்வுயிர்களின் வகையிலக்கணமும் வெளியிட வேண்டுவது கற்போர்க்குப் பேருபகாரந்தானென்றார்கள்; அதனைச் செந்தமிழ் வாயிலாக வெளியிடலாயிற்று.

இங்ஙனம்,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,

சைவநூற் பரிசோதகர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.



திருச்சிற்றம்பலம்.

# மூவகை யான்மாக்களிலக்கணம்.

அநாதியாயுள்ள ஆன்மாக்கள் எண்ணுதற் கருமையவாயினும், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னு மூவகையுளடங்கும்.

இவர்களில் விஞ்ஞானகலர் பக்குவரென்றும், அபக்குவரென்றுமிருவகையினராவர். அவருள் பக்குவர் பரமுத்தரென்றும், அபரமுத்தரென்று மிருவகையினராவர். இவர்களுள் பரமுத்தருக்குச் சிவன் நிராதாரமாகவுயிர்க்குயிராய் நின்று மலத்தையடர்த்துத் திருவருளைக்கொடுப்பன்; அப்பொழுது பரமுத்தியையடைவார்கள். அபரமுத்தர் சிவனநுக்கிரகித்தும் மலபரிபாகமந்ததையினாலே அதிகாரமலத்துடனே கூடி அதிகாரத்தைப் பண்ணுவார்கள். அவர்களாரெனில்; அணுசதாசிவர், அட்டவித்தியேசுரர், சத்தகோடிமகாமந்திரர்கள். இவர்களுக்குத் தநுகரண புவனபோகங்களெல்லாஞ் சுத்தமாயையிலேயுண்டாம்.

இவர்களில் அணுசதாசிவர் சிவாநுக்கிரகத்தாற் சாதாக்கிய தத்துவத்திலிருந்து சுத்தமாயாபுவனத்திற் பக்குவர்க்கநுக்கிரகத்தைப் பண்ணுவர். அட்டவித்தியேசுரர் ஈசுரதத்துவத்திலிருந்து அசுத்தமாயாகிருத்தியம் பண்ணுவர். சத்தகோடி மகாமந்திரர்களில் மூன்றரைக்கோடியர் சுத்தவித்தையிலிருந்து பிரகிருதியிற் பக்குவான்மாக்களுக்குத் தநுவையதிட்டித்துச் சிவனநுக்கிரகிக்குமிடத்துக் காரணகாரணமாயிருந்து மகாப்பிரளயத்தே முத்தியையடைவார்கள். மற்றை மூன்றரைக்கோடிபேரும் முன்சொல்லப்பட்டவர்களுடனே சிவனாலே அநுக்கிரகம்பெற்று பிரபஞ்ச சிருஷ்டி முடிந்தவுடனே முத்தியையடைவரெனவறிக.

இனி அபக்குவர்கள் கேவலிகளாய் மலத்திலழுந்தி மலபரிபாகம் வருமளவுமிப்படியே கிடப்பார்கள்.*

* இவர்களுக்கு விஞ்ஞானகலத்துவம் வருகிறதெங்ஙனமெனில், ஆசாரியனுற்றீக்கையிற் கலாதத்துவமளவாகக் கன்மங்களைச் சோதிக்கப்படுகையாலும், மாயையினதும் ஆன்மாவினதும் வியாபாரங்களைப்பிரித்தறிகின்ற ஞானத்தினாலும், ஆதாரயோகதியானத்தியாலும், மிகுந்த தவத்தினுடைய சித்தியினாலுங், கன்மாநுகுணமாகத் தநுவையெடுத்துக்கன்மங்கள் புசித்துத்தொலைந்த காலத்தாலும், வைராக்கியத்தாலுஞ், சந்நியாசாநுட்டானத்தாலும், எல்லாக்கன்மங்களும் நசிக்க அவைகட்காதீனமாயிருக்கிற மாயையுமின்றி யாணவமலமொன்றுஞ் சேட்டித்து நிற்கையினாலுமுண்டாவதெனவறிக. எனவும் பாடம்.

இனிப்பிரளயாகலரும் பக்குவர் அபக்குவரென இருவகையின ராவர். அவருட்பக்குவர் பரமுத்தரென்றும், அபரமுத்தரென்று மிருவகையினர். இவர்களுள் சிருஷ்டிகாலத்திலே சிவனநுக்கிரகித்த வுடனே பரமுத்தர் முத்தியடைவார்கள். அபரமுத்தர் மலபரிபாக மந்தமாயினாலே அதிகாரங்களிலிருப்பர்கள். அவர்களாரெனில், மாயாதிகாரிகளாகக் கலாதத்துவத்தின்மேலேயிருக்கிற மண்டலேசுராதியுருத்திரரெண்மர், குணதத்துவத்தின் மேலேயிருக்கிற குரோதராதியெண்மர், குணதத்துவத்திற்குள்ளே பிரகிருதிதத்துவங்களிருபத்துநான்கிற்கும் அதிபதியாகிய ஸ்ரீகண்டருத்திரரொருவர், பிரமர் முதலாயினோர்க்குத் தலைவராய்ப் பிரமாண்டத்துக்குப் புறம்பே பத்துத்திக்கினுந் திக்குக்குப் பத்துப்பேராய், இந்திராதி திக்குபாலகர் பதின்மரையும் அதிட்டிக்கிறவர்களாய், பிரமாண்டதாரராயிருக்கிற கபாலீசர்முதலிய உருத்திரர் நூற்றுவர், இந்நூற்றுவரையும் அதிட்டிக்கிற வீரபத்திரர் ஒருவர் ஆக நூற்றுப்பதினெண்மராம். *

இவர்கள் பிரகிருதிமாயாமத்தியிலே அதிகாரம்பண்ணுகிறவர்கள், அனாதிஞானத்தாலே பிரகிருதிக்குமேலே இருத்தியவர்களைப் பண்ணுவிக்கின்ற அபரமந்திரேசுரரென்னும் பெயருடையராய் இருப்பார்கள். இவர்கள் கலாதிகளுடனே கூடியிருந்தும் அவைகள் இவர்களை வாதியாமலிருக்கிறதெவ்வாறெனில், பாம்பின்கழுத்திலே கிடந்திருந்தாலும் அஃது அதனைவாதியாததுபோலவெனக. அதுபோலவே இவர்களும் கலாதியைத் தங்கள்வசமாகப்பண்ணிக்கொண்டிருப்பார்கள். இவர்களுக்குப் பிரளயாகலத்துவம் வருகிறதெவ்வா

---

* இந்நூற்றுப்பதினெண்மரின் வகையைக் காஞ்சிப்புராணம், திருமேற்றளிப்படலம், ௩௰-ஆவது செய்யுளில்,

"அண்டங்காத்தமருருத்திரர் நூற்றுவருட்சீ
கண்டன்வீரன்குரோதனே முதற்கருதெண்மர்
மண்டலத்திறை யேசிருவாலருமுழுத்திப்
பன்னிருவரை புரிந்திடப்பட்ட மந்திரிகள்."

எனக்கூறியதனுக்காண்க.



றெனில், * சாங்கியஞானத்தாலும், பிரளயகாலத்திற் கலையகன்றதினாலும் வருமெனவறிக. †.

இனி அபக்குவராவர், சாங்கியஞானமுமற்றுப் பிரளயகாலத்திலே கலையகன்று சிருட்டிகாலம் வருமளவும் மலத்துடனே கேவலிகளாய்க் கிடந்து, சிருட்டிகாலம் வந்தவுடனே கன்மத்துக்கீடாகவரப்பட்ட நூலசூக்கும சரீரங்களைப்பெற்றுப் புவனங்கடோறுஞ் சஞ்சரிக்கிறவர்களாம்.

இனிச்சகலராவார்:— கலாபந்தத்தையுடையவர்கள். இவர்களுக்குச்சகலத்துவம் வருகிறதெவ்வாறெனில், ஆணவமுதலிய மூன்றுபாசத்துடன்கூடி, ஆணவத்தாற்றடுக்கப்பட்ட ஞானக்கிரியைகளையுடையராய், மாயையினாலே மோகித்து, நானாவிதமான கன்மங்களையும் புசித்து, அவற்றைப்புசிக்கிறகாலத்தி லாகாமியமேறிச் சஞ்சிதமாகக்கட்டுப்பட அதனையும் புசித்துத்தொலைக்கை காரணமாகப் ‡ புரியட்டகரூபராய்ப் பிராகிருதமானவடிவையெடுத்து அதனாலுண்டான போகங்களைப்புசிக்கிறதினாலாமெனவறிக.

இவர்களும் ¶ மூன்றுபேதத்தராவர். அவரிற்பக்குவருக்குச் சிவன் ஆசாரியமூர்த்தியை அதிட்டித்து § எழுவகைத்தீக்ஷையினாலும் பாசமோசனம் பண்ணுவன். அவ்வெழுவகையாவன: நயனதீக்ஷை, பரிசதீக்ஷை, வாசகதீக்ஷை, பாவனாதீக்ஷை, சாஸ்திரதீக்ஷை, யோகதீக்ஷை, ஔத்திரிதீக்ஷை என்பனவாம்.

---

* சாங்கியஞானமாவது, பிரகிருதியையும் புருடனையும் பகுத்தறியும் விவேகஞானத்தால் அவித்தை நீங்கவே முத்தியென்பது.

† ஆசாரியனாற் றீக்ஷிதரான சகலர் பிரகிருதியையுமான்மாவையுமுள்ளபடியறிந்த ஞானத்தினாலே அந்தப்பிரகிருதியினின்று நீங்கினவராய்ச் சிருட்டிகாலத்திற் பிராகிருததேகத்தை யெடாமல் மாயாசரீரத்தைப்பொருந்தி அச்சரீரத்தினுண்டான கன்மபலங்களை அந்தப்புவனங்களிற் புசித்துத் தீக்ஷையாற் குணதத்துவத்திற்கு மேலுண்டான கன்மமுமாணவமுமாகியவிரண்டுடன் கூடியிருத்தலால் வருவதெனவறிக." என்றும் பாடம்.

‡ புரியட்டகரூபம் - சூக்குமசரீரம்.

¶ மூன்றுபேதம்—அதிபக்குவம், மந்தபக்குவம், அபக்குவம்.

§ எழுவகைத்தீக்ஷையாவன:— "பலவிதமாசான்பாசமோசனந்தான் பண்ணும் நயனங்கள் பரிசம் வாசகமானதஞ் சாத்திரம் யோகமௌத்திரந்தியமெனுமனவழுற்றினைத்திரியிரண்டுதிறனும்." எனச்சிவஞானசித்தியாரிற் கூறியதுங்காண்க.

அவற்றுள் நயனதீக்ஷையாவது:— ஞானக்கண்ணாலேபார்த்து ஆறத்துவாக்களிற்கட்டுண்டிருக்கிற கன்மங்களைக்கெடுத்துச் சந்திரனைப்பற்றிய இராகு விலக்கம்போல மலப்பற்று நீங்கச்செய்வது. பரிசதீக்ஷையாவது:— பஞ்சப்பிரம சடங்கங்களையும், பஞ்சாக்கரத்தையும் வலக்கையினாலே நியாசம் பண்ணிச்சோதிமயமாகப் பண்ணுவது. வாசகதீக்ஷையாவது:—பஞ்சாக்கரப்பொருளாயிருக்கிற திரிபதார்த்தங்களையும் விளங்க வுபதேசிப்பது. பாவனாதீக்ஷையாவது:—மனோபாவனையால் ஞானந்தாரகவைப்பது. சாஸ்திரதீக்ஷையாவது:— ஐயந்திர ஞானநூலாற்கேட்டல் சிந்தித்தல் தெளிதலை யுண்டாக்குவது. யோகதீக்ஷையாவது:— அட்டாங்கயோகங்களினாலுங் கருவிவசத்திற் செல்லாமல் ஞானநிட்டையுண்டாக்குவது. ஔத்திரிதீக்ஷை:—கிரியைஞானமென இருவகைப்படும்; அவற்றுள் கிரியையாவது:—குண்டமண்டலாதிகளிட்டுச்செய்வது. ஞானமாவது:— அக்குண்டமண்டலமுதலான கிரியைகளை மனோபாவனையாற்செய்வது. இவற்றின்விரிவைச் சிவஞானசித்தியார் முதலிய நூல்களினும், ஆகமங்களினுங்காண்க.

இனி, முற்கூறிய விஞ்ஞானகலர் அபக்குவர், பக்குவர் என்னுமிருவகையில், அபக்குவம்—ஆமம். அவை நென்முதலிய தானியங்கள். பக்குவம் - புசிக்கப்படுவன. அவை சோறுகறிமுதலானவைகள், இத்தன்மைபோல ஆன்மாக்கள் சஞ்சாரத்துக்குக் காரணமாகிய மலமும் பக்குவமெனவும், அபக்குவமெனவு மிருவகைப்படும். ஆதலால் அவ்விஞ்ஞானகலரும் பக்குவமலரும் அபக்குவமலருமென இருவகையாயினரென்க. இவருள் பக்குவமலர் மலபரிபாகமிகுதியாற் சிவனாலே அநுக்கிரகம்பெற்றுச் சாயுச்சியத்தையடைபவர். அபக்குவமலர், மலபரிபாக மந்ததையாலே சிவன் அவர்களுடைய ஞானக்கிரியைகளை விளக்கி அநுக்கிரகஞ்செய்யப்பட்டிருக்கும்போதுஞ் சுத்தாத்துவாவுக்கதிகாரிகளாகையால் அதிகாரமலத்தைப்பொருந்தியிருப்பவர்கள். இந்த அபரமுத்திபெற்றவர்களியாவரெனின், உத்தமராகிய பிரணவர், சதாக்கியர், சிவர், தீர்த்தர், காரணர், சுசிவர், சூக்குமர், காலர், தேசசர், அம்சு எனக்கூறிய அணுசதாசிவர் பதின்மரும், அதோமாயா புவனத்துள்ளார்க்குப்பக்குவம் வந்தவிடத்து அநுக்கிரகஞ்செய்து சாதாக்கியத்துவமாகிய சதாசிவத்



துவத்திற் போகங்களைப்புசித்து அச்சதாசிவ மூர்த்தியைச்சூழச் சேவித்துக்கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு அந்தத்தத்துவபோகத்தில் வைராக்கியம்பிறந்தால் அப்பொழுது சிவன் பிரசன்னராகி யநுக்கிரகஞ்செய்யச் சிவபதத்தையடைவர்கள்.

இனிமத்திமராகிய அட்டவித்தியேசுரராவார் யாவரெனில், அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சிகண்டி, ஸ்ரீகண்டர். இவ்வெண்மரும் ஈசுரதத்துவத்திலிருக்கும் மகேசுரனைச் சூழ்ந்திருந்து மாயையிற் கீழுண்டாகிய சிருட்டியாதி கிருத்தியங்களைச் சிவனேவலாற் செய்வர்கள்.

ஆனாலிவர்களெண்மருந்தம்மிலொத்திருப்பரோவெனின், முந்திய அநந்ததேவநாயனார்க்கு அதிகாரத்தில் வைராக்கியம்பிறந்தால் அவரைச் சிவன் சங்காரகாலத்திலே மோக்ஷத்தையடைவிப்பன். அதன்பின் அவர்க்கடுத்த சூக்குமர் அவ்வதிகாரத்தைப்பெற்றுக் கிருத்தியங்களை அவரைப்போலச் செய்வர். மற்றவர்களுமிவ்வாறடைவே அதிகாரத்தைப்பண்ணுவர்கள். ஆதலாற்றம்மிலொவ்வாரென்க. எல்லார்க்கும் பிந்திய ஸ்ரீகண்டருடையபதம் பாழ்கிடவாமற்சிவன் விஞ்ஞானகலராதற்குப் பக்குவமுண்டானவர்களிலொருவரையடைவே யெண்மரிற் குறையாமற் கூட்டுவன். இதற்குமேற்கோள் ரௌரவம், மதங்கம், பௌட்கரம், சர்வஞ்ஞானோத்தரம், வாயவ்வியம், சுவச்சந்தம், இரத்தினத்திரய மென்பவைகளிலறிக.

இனி அதமராகிய சத்தகோடிமகாமந்திரர்களிலே மூன்றரைக்கோடிபெயரை மலபரிபாகமிகுதியாலே கீழுள்ள கிருத்தியங்களிலும் மேலுள்ள போகத்திலும் வைராக்கியம்பிறந்து வெறுப்புண்டாகையால், விஞ்ஞானகலர் விஷயமாகவும், * மாயாகர்ப்பாதிகாரிகள் விஷயமாகவுஞ், சிவன் † நிராதிகரணமாகத் தீக்ஷைபண்ணுதற்குக்காரணமாகப்பண்ணி, அவர்களை மகாப்பிரளயத்திலே முத்தியையடைவிப்பன்.

---

* மாயாகர்ப்பாதிகாரிகள்—கலாமத்தகத்திலிருக்கு மண்டலேசர் முதலிய வுருத்திரர்கள்; மாயை—எண்டேப்பிரகிருதி மாயையென்க.

† நிராதிகரணம்—ஆதாரமில்லாமை.

மற்றைமூன்றரைக்கோடிபெயரையுஞ் சிவன் அதோமாயையிலுதிக்குங் ஆலகாரியங்களுக்குக்கர்த்தாவாக்கிச், சுத்தவித்தையிலுண்டான போகங்களைப்புசிப்பித்துத், திதிகாலத்திற் சகலர்நிமித்தமாகவாசாரியராகவதிட்டித்துக் கொண்டநுக்கிரகஞ்செய்யுங்கன்மத்துக்குக்காரணபூதராகவிருக்கச்செய்து மகாப்பிரளயத்திலே முத்தியையடைவிப்பன்.

முற்கூறிய அபக்குவரான விஞ்ஞானகேவலிகளாவார் யாவரெனில்,

ஆணவமிகுதியா லளவற்ற ஆன்மாக்கள் ஞானக்கிரியைகள் மிகவு மறைப்புண்டு மலபரிபாகம் வருமளவுஞ் சுத்தவித்தைக்குக் கீழாக அசுத்தமாயைக்குமேலாக நடுவேநெடுங்காலங் கேவலத்தைப்பொருந்திக்கிடக்கையால், முத்தான்மாக்களெனப்பெறுமல் விஞ்ஞானகேவலிகளெனப் பெயர்பெற்றிருப்பவர்கள். ஆதலால் விஞ்ஞானகலர்நால்வகையரெனவறிக இதற்குமேற்கோள் காமிகத்து மிருகேந்திரத்துமறிக.

முற்கூறிய பிரளயாகலர் பக்குவமலர் அபக்குவமலரென விருவகையரில், பக்குவமலர்க்கநுக்கிரகஞ்செய்யுமுறை யெவ்வாறெனில், மலபரிபாகமிகுதியாலே சிலர்க்கு எல்லாக்கன்மமும் பக்குவமாயுள்ளவளவிற் சிவன் தீவிரதீவிரதரமென்னுஞ் சத்தியைப்பதித்து * நிராதாரதீக்ஷையாற் றிருக்கண்சாத்தி அவர்கள் பாசத்தைச்சேதித்து ஞானக்கிரியைகளைப் பிரகாசிப்பித்து மோக்ஷத்தையடைவிப்பன்.

மற்றையபக்குவரைக் கன்மாநுகுணமாகப் போகத்தைப்புசித்துத் தொலைக்கையின்பொருட்டுப்புரியட்டகதேகத்துடன் பௌதிகதேகமாகிய யோனிகடோறும் பிறந்துழன்று திரிந்து மலகன்மங்கள் பரிபாகமானவாறே சிவன்சத்தியைப்பதித்து அவர்களறிவைவிளக்கி மோக்ஷத்தையடைவிப்பன். புரியட்டகத்துடனே கூடினவர்களுட் சிலரை அனந்ததேவநாயனார் அப்புதத்துவத்தில் அமரேசமாதியாகிய புவனங்களிலிருக்கும் குய்யாட்டகராகிய வெண்மர்க்குந், தேயுவில் அரிச்சந்திராதி புவனங்களிலிருக்கும் அதிகுய்யாட்டகர்க்கும், வாயுவில் தெய்யாதியாகிய குய்யாதிகுய்யாட்டகர்க்கும், ஆகாசத்தில் வத்திரபதாதிபுராகிய பவித்திராட்டகர்க்கும், அகங்காரத்திற் சகலாண்டாதியாகிய தாணுவட்டகர்க்கும் ஆகப்புவனாதிபர்களாற் பதின்மருக்கும் அடைவே அதிபராக்கி † யோசியாநிற்பர்.

* நிராதாரம்:- அதிகாரத்தொடு சம்பந்தமின்மை. † யோசித்தல்- கூட்டுதல்.



இதற்குமேற்கோள் - விசுவத்தும், மிருகேந்திரத்துங், கிரணத்துமறிக.

முற்கூறிய சகலராவார் யாவரெனில், தேவர்களிருடிகள் மானிடர் முதலாயினரெனவறிக. அவர்கள் அதிபக்குவர், மந்தபக்குவர், அபக்குவரெனமூவகையாவர். அதிபக்குவராகிய தேவர் தானவர் முதலாயினரைச் சிவன் தீக்ஷையால் மந்ததரமுதலிய நால்வகைச் சத்தியைப் பதித்துத், திவ்யமான திருமேனியை யதிட்டித்துக்கொண்டு, அவர்கள் பாசத்தைச்சேதித்து, ஞானக்கிரியைகளை விளக்கித், திதிகாலமுடியுமளவும் சுத்தாத்துவாவிற் போகங்களைப்புசிப்பித்து, மகாசங்காரத்தில் மோக்ஷத்தையடைவிப்பன். தேவர் முதலென்பதனால் எ...ம்பிருகவெனவறிக. சிவன் மந்தபக்குவராயுள்ள * வைநயிகர்கள் முதலாயினோரை மந்ததரம் மந்தமென்று சொல்லப்பட்ட சத்தியைப்பதித்து, ஆசாரியனையதிட்டித்து, அவர்க்கநுகுணமான தீக்ஷையைச் செய்து, அவர்கள் யாதொருபதத்திலேயிருந்து போகம்புசிக்க விரும்பினார்களோ அந்தப்பதத்திலே அவர்களையோசியாநிற்பன்.

மலபரிபாகம்வாராத அபக்குவரை அவர் செய்தகன்மத்துக்கீடாகப் புவனசரீரத்தை யெடுப்பித்துப் போகங்களைப் புசித்துத்தொலைத்தவாறே மலபரிபாகம் பிறப்பித்து, ஆசாரியராற் றீக்ஷையைப்பண்ணி மோக்ஷத்தையடைவிப்பன். இதற்குமேற்கோள் காமியங்கிருகப்படலத்தும், சூக்குமத்துஞ், சுவாயம்புவத்தும், மிருகேந்திரத்துஞ், சிந்திய விசுவத்துமறிக.

"விஞ்ஞானர் நால்வருமெய்ப் பிரளயாகலத்
தஞ்ஞானர் மூவருந்தங்கு சகலத்தி
னஞ்ஞானர் மூவருமாகப் † பதின்மராம்
விஞ்ஞான ராதியர் வேற்றுமைதானே."

என்னுந் திருமந்திரத் திருவிருத்தத்தானும் மூவரையுந் தொகுத்துப் பதின்மரெனவறிக.

மூவகையான்மாக்களிலக்கணம்

முற்றிற்று.

* வைநயிகர்—விநயசீலர்.
† பதின்மராவார்—விஞ்ஞானகலரில் அபரமுத்தர் மூவகையினர், அபக்குவரிற் கேவலிகளொருவகையினர், ஆக நால்வர். பிரளயாகலரிற் பரமுத்தர், அபரமுத்தர், அபக்குவர் ஆகமூவர். சகலரில் அதிபக்குவர், மந்தபக்குவர், அபக்குவர் ஆக மூவர், எனக்காண்க.

## புத்தகக்குறிப்பு.

லண்டன், பிரிட்டிஷ்மியூஸிம் லைபிரெரி தமிழ்ப்புஸ்தக காட்டலாக்:—(A Catalogue of the Tamil Books in the Library of the British Museum.) இப்பெயர்வாய்ந்த புஸ்தகமொன்று, பிரிடிஷ் மியூஸியம் லைபிரேரியன் L. D. பார்னெட் துரையவர்களால்(M. A.) இச்சங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுகாறும் வெளியிடப்பட்ட நூல்களின் ஆசிரியர், பதிப்பாளர்முதலியோரை அகராதிப்படவைத்து அவ்வவர் வெளியிட்ட நூல்கள் குறிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் சிறந்த புஸ்தகங்கள் இத்தனை வெளிவந்திருக்கின்றனவென்பதை, மற்றை விவரங்களுடன் இதனிடைக்காணலாம். நம் நாட்டுப்பிரசுரங்கள் எவையேனும், இப்பெரும் புத்தகசாலைக்கு ஒருபிரதி சேரவேண்டுமென்பது ராஜாங்கத்தாரது கட்டளையென்பதைப் பலரும் அறிவர். இப்புத்தகத்தின் முகவுரையில், துரையவர்கள் தமிழ்ப்பாஷையையும் அதனிடை விளங்கும் சிறந்த நூல்களையும்பற்றி ஆராய்ந்து எழுதியிருப்பது, அவரது தமிழ் ஞானத்தின் உயர்வைப் புலப்படுத்துகின்றது. சிற்சிலவிடங்களில் தவறுகள் காணக்கூடுமாயினும், இப்புஸ்தகமமைந்துள்ள சிறந்தமாதிரியை நோக்கும்போது அவையொருபொருட்டாகா. துரையவர்கள் நம்சங்கத்தை அபிமானித்துத்தாம் வெளியிட்ட புத்தகப்பிரதியொன்றனுப்பியதற்கு இச்சங்கத்தார் நன்றிகூறுகின்றார்கள்.

மற்றும் எமது பார்வைக்குவந்த நூல்களாவன:—

(1) ஆரியமத உபாக்கியானம்:—திருநெல்வேலி, ஸ்ரீமாந்-வ. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களியற்றியது. புஸ்தகம்கிடைக்கும் விலாசம்: ஜனரல்ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை. விலை அணா 2.

(2) ஸர் வால்ட் ஸ்காட் இயற்றிய ஐவன்ஹோ சாரசங்கிரகம். ஸ்ரீ-S. பஞ்சாபகேச சர்மா B. A., அவர்களியற்றியது. விலாசம்:—ஸ்ரீ-V. ராஜகோபால ஐயங்காரவர்கள், தமிழ்ப் பண்டிதர், N. H. S. No. 24. ஐயங்கார் தெரு, கும்பகோணம். விலை அணா ஆறு.

(3) கண்ணம்மாள் அல்லது பஞ்சாயத்து நாடகம்:—டி. வே. திரு, ஸா. இராகவாசாரியாரவர்கள் இயற்றியது. விலாசம்: R. நடேசையர், ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸ், நாகபட்டணம். விலை அணா 6.

(4) மனம்போல வாழ்வு:—ஸ்ரீ-வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்களியற்றியது. விலாசம்: ஸ்வாமி வள்ளிநாயகம், 1, மெக்லீன் தெரு, மதுராஸ், E. விலை அணா 8.

(5) ராஜம் அய்யர் சரிதை:—ஸ்ரீ-வ. எஸ். கஸ்தூரி ரங்கய்யர், B. A., L. T., அவர்கள் செய்தது. விலாசம்: ஜெனரல் சப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை. விலை அணா 8.

(6) திருக்குறள் வசனம்:—தஞ்சாவூர்ஜில்லா, திருமுல்லைவாயில் சப் போஸ்ட் மாஸ்டர், பு. து. இரத்தினம் பிள்ளையவர்கள். விலை ரூ 1.

என்பனவைகளே. இவற்றை அனுப்பியவர்கட்கு பெரிதும் நன்றியறிதற் கடப்பாடுடையேம்.

பத்திராசிரியர்.

உ

கடவுள் துணை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
17 MAR 1910
MADRAS

# செந்தமிழ்.

தொகுதி-௮.] ஸௌமிய-ஸூ தை மீ. [பகுதி-௫.

## ஸ்ரீ இருந்தவளமுடையார்.

சிலப்பதிகாரம், துன்பமாலையில் வரும்,

"ஆயர் முதுமக ளாடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்துங் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமா லடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினாள்."

என்ற அடிகளில், மாதரியென்னும் ஆயர் முதுமகள் ஆய்ச்சியர் குரவை முடிந்ததும், வையையாற்றின் கரையிடத்துள்ள நெடுமாலைப் பூசிப்பதற்குச்சென்றாள் என்று கூறப்பட்டுளது. "வையை நெடுமால்" என்பதற்குச் சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் ஸ்ரீ இருந்தவளமுடையார் என்று விளக்கம் எழுதினர். அடியார்க்கு நல்லார் அத்திருமாலை "அந்தரவானத் தெம்பெருமான்" என்றார். இளங்கோவடிகள் "நீடுநீர் வையை நெடுமா லடித்தொழ" எனப் பொதுப்படக் கூறுதலால் மதுரையிற் பிரபலமான திருமாலைப்பற்றியே அவர் குறிப்பிடுகின்றார் என்பது புலப்படும் இங்ஙனம், உரையாளர் கூறியபடி இருந்தவளமுடையார், அந்தரவானத் தெம்பெருமான் என்ற திருநாமங்களுடன் வையைக்கரையில் திருமால் கோயில்கொண்ட விஷயம், இப்போது கூடன்மாநகரிற் காண்டல் அரிதேயாம். ஆயினும், திருமாலது நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாய் மதுரையைச்சார்ந்து விளங்கும் கூடலழகரைப்பற்றியே மேற்கூறியவிஷயங்கள்யாவும் அமைந்துகிடக்கின்றன. இதனையீண்டாராய்வோம். அரும்பதவுரையாசிரியர் "வையைநெடுமால்" என்

புதற்குக்கூறிய "ஸ்ரீ இருந்தவளமுடையார்" என்ற திருநாமம், கூடலழகர்க்கு இப்போது வழங்கவில்லையேனும் அப்பெருமானது இருந்த திருக்கோலம், ஆங்குவந்து தரிசிப்போர்க்குப் பேரானந்தந் தரத்தக்க வண்ணம் இன்றுமுண்மையால், அக்காரணம்பற்றியே வழங்கியதாகல்வேண்டும். இருந்தவளமுடையார்—இருந்த திருக்கோலத்தின்வளப்பமுடையார். திருமாலைத் துதிக்கும் பெரியோர்கள் அப்பெருமானது நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்களைச் சிறப்பித்தல் இயல்பாதலுங் காண்க. இனி, இருந்த திருக்கோலத்தோடு திருமால் எழுந்தருளிய பதியை இருந்தவளமெனவும், அப்பெருமானை இருந்தவளமுடையார் எனவும், கொள்ளலுமாம். திருவாலவாயுடையார், திருவாப்புடையார் எனச் சிவபிரானைக்கூறும் வழக்கும் நோக்குக.

இனி, தொல்காப்பியம், செய்யுளியலில், "கொச்சகமராகம்" என்ற சூத்திரத்தே, பேராசிரியர்காட்டியதும் திருமாலைப்பற்றியதுமான பரிபாடற்பகுதியாகிய

"வாஅ னெழிலி மழைவள நந்தத்
தேனார் சிமய மலையி னிழிதந்து
நான்மாடக் கூட லெதிர்கொள்ள வானா
மருந்தாகுந் தீநீர் மலிதுறை மேய*
இருந்தையூர் அமர்ந்த செல்வநின்
திருந்தடி தலையுறப் பரவுதுந் தொழுதே."

என்ற அடிகளில், இருந்தையூர் என்பது, மதுரையைச் சார்ந்து வையைக்கரைக்க ணுள்ளதெனவும், அவ்வூரில் திருமால் திருக்கோயில் கொண்டவாறும் கூறப்பட்டுள்ளன. அரும்பதவுரைகாரர்கூறிய இருந்தவளமென்னும் மதுரைப்பகுதியே இருந்தையூரென்னும்பெயரால் பரிபாடலில் வழங்கலாயிற்றென்பதை இஃது எளிதில் விளக்கக்கூடியது. இருந்தையூர்-இருந்தவூர் என்பதன் மரூஉ. திருமால் திருப்பதிகளில் ஒன்றாகிய "நின்றவூர்" போல இதனைக்கொள்க.

* "மலிதுறையெம் விருந்தையூர்" என்று அச்சுப்பிரதியிலுள்ளதாயினும், இச்சங்கத்துத் தொல்காப்பியவுரைப் பிரதிகளில் "மலிதுறைமேய விருந்தையூர்" என்றே காணப்படுகின்றது.



"இருந்தையூர் அமர்ந்த செல்வ" என, திருமாலது இருந்த திருக்கோலம் குறிப்பிடப்படுதலும் கவனிக்கத்தக்கது. இவ்வாறு இருந்தையூர் இருந்தவளம் என்ற பெயருடன் மதுரைப்பக்கத்து வேறு ஊரொன்றுங் காணப்படாமையால், நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய கூடலழகர் சந்நிதியுள்ள திவ்யதேசத்திற்கே, அப்பெயர் முற்காலத்தில் வழங்கியிருக்கவேண்டு மென்பது வெளியாகிறது.

இவ்விருந்தையூர் போலவே மதுரையைச்சூழ்ந்து பலஸ்தலங்கள் முற்காலத்திருந்தனவென்பது,

" வடதிரு வால வாய்திரு நடுவூர்
வெள்ளி யம்பலம் நள்ளா றிந்திரை
பஞ்சவ னீச்சரம் அஞ்செழுத் தமைத்த
சென்னி மாபுரம் சேரன் திருத்தளி
கன்னிசெங் கோட்டம் கரியோன் றிருவுறை
............ ............ ஒருபரங் குன்றம்
சூழ்கொள விருந்த கூடலெம் பெருமான்."

என்னும் கல்லாட (௬௧) அடிகளானும்; "நான்குமாடங் கூடுதலின் நான்மாடக் கூடல் என்றாயிற்று; அவை, திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்" எனக்கலித்தொகை, ௯௨-ம் பாட்டில் எழுதிய நச்சினார்க்கினியர் உரையாலும் விளங்குகின்றது. இவற்றிற்கண்ட பல பெயர்கள் இக்காலத்து வழங்கக்காணாமைபோல, இருந்தையூர் என்ற வழக்கும் அரிதாயிற்றெனவுணர்க. கல்லாடத்தில், "கரியோன் றிருவுறை" எனவும், சிலப்பதிகாரத்தில், "உவணச்சேவ லுயர்த்தோனியமமும்" எனவும் (ஊர்காண்காதை) கூறப்பட்டவை, "வையை நெடுமால்" பதியாகிய இவ்விருந்தையூரையே குறித்ததாகக் கருதத்தக்கது. இருந்தையூர்க் கருங்கோழியார் என்ற புலவரதூரும் இதுவேபோலும்.

இனி அடியார்க்குநல்லார், வையைக்கரையினெடுமால்" என்பதற்கு "அந்தரவானத்தெம்பெருமான்" எனக்கூறியதும், கூடலழகர் விஷயமாகவே கொள்ளல் தகும். என்னை? ஷை திருக்

கோயில் மேல்விமானத்தில், கிடந்த திருக்கோலத்தோடு அப்பெருமான் எழுந்தருளியிருத்தலால் என்க.

இனி, வையைக்கரையினெடுமால் என்று சிலப்பதிகாரங்கூறுமாறு, கூடலழகர் சந்நிதி, வையைக் கரைக்கணன்றி மதுரைக்கு மேல்புறமுளதே எனின் :—மதுரையின் இருபக்கத்தும் அந்நதி சூழ்ந்து சென்றதாகவே முன்னை வழக்குண்மையால் தென்பக்கத்தும் அதன்போக்கு உள்ளதேயாகும். தென்பாலிலுள்ள வையைப் பிரிவு இக்காலத்துக் "கிருதமாலை" எனவழங்கப்பெற்றுக் கூடலழகர் கோயிற்பக்கத்தோடுகின்றது. மதுரைக் கோட்டையைச்சுற்றி மாலைபோல் ஓடுதலின் அதற்கு இப்பெயர் வழங்கியதென்பர்.

"வேக மாதலின் வேக வதியென்றும்
மாகம் வாய்ந்தத னால்வையை யென்றுந்தா
ராக லாற்கிருத மாலைய தாமென்றும்
நாகர் முப்பெயர் நாட்டு நதியரோ."

என்பது கூடற்புராணம். கலித்தொகையிலும் (மருதக்கலி-௨,)

*"இருநிலம்—தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்றொன் றறியாத புனழ்சூழ்ந்த வயலூரன்"

என, இவ்வையை, மாலைசூழ்ந்ததுபோல மதுரையைச் சூழ்ந்து நின்றபடி நன்கு விளக்கப்பட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. இவற்றால், "நீடுநீர் வையைநெடுமால்" என்ற சிலப்பதிகாரத்தொடர், அரும்பதவுரையாசிரியர் அடியார்க்கு நல்லார் இவர்களுரைத்தாலும் பரிபாடற்பாட்டாலும் இப்போதுள்ள கூடலழகர் சந்நிதியையே குறித்ததாகல் உய்த்துணர்க.

பத்திராசிரியர்.

---

* "பெரிய நிலமடந்தை தான், ஒரு பூமாலையைச் சூழ்ந்துகொண்டிருந்த தன்மைபோல, அழகு பொலிவுற்ற வையையாற்றினது நீர்சூழ்ந்து மதிலைப் பொரும் பகையன்றிப் பகைவர் போரால் வளைத்தலைச் சிறிதும் அறியாத புரிசை சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையையுடையவன்" என்பது நச்சினார்க்கினியர் உரை.

சிவமயம்.

# * திணைமயக்கம்.

அஃதாவது குறிஞ்சி, நெய்தல், பாலை முல்லை, மருதம் என்னும் ஐவகை நிலங்களும் தம்மிடத்துள்ள † கருப்பொருள்களானே ஒன்றோடொன்று மயங்குதல். இதனைத் தங்காப்பியங்களிலமைத்துக் கவிசெய்தோருள் இரகுவம்மிசகாரர் செய்தது மிகவுஞ்சிறப்புடையது. அது ‡ பாலையொழிந்த ஏனை நான்குதிணைகளுள் ஒருதிணையே தனித்தனி ஏனைமூன்றுதிணைகளோடும் மயங்கினதாகச் செய்யப்பட்டுளது. அது மட்டோ! அதனோடு § மடக்கு என்னுஞ் சொல்லலங்காரம் அமைத்துச் செய்யப்பட்டுளது. அதனையாம் "செந்தமிழ்" கற்போர்க்கு உபயோகமாகும்பொருட்டு இங்கே எடுத்துக்காட்டுதும்.

## குறிஞ்சித்திணைமயக்கம்.

கடுப்பொதி நயனவாளிக் குறத்தியர் காமர் கண்ணி
தொடுப்பமென் றுகை மாறிச் சூடல்புன் னாகஞ் சோரா
தெடுப்பவிக் கார நேர்கொண் டவவே யார மேறக்
கொடுப்பநற் கண்டில் வெண்ணெய் கொள்வதோ வாவின் வெண்ணெய்.

இதன்பொருள். நஞ்சுபொதிந்த கண்ணாகிய பாணத்தையுடைய குறத்தியர்களால் (நெய்தனிலமகளிர்க்கு) அழகுபொருந்திய மாலையைத் தொடுத்தற்கு மென்மையான நாகப்பூக்களைக்கொடுத்துத்தாம்

---

* திணை ஈண்டு நிலத்தை உணர்த்திற்று.

† கருப்பொருள்களாவன தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி, யாழின்பகுதி முதலியன.

‡ "அவற்றுள்—நடுவணைந்திணை நடுவணதொழியப்-படுதிரைவையம்பாத்தியபண்பே" எனத்தொல்காப்பியனார் கூறியது கருதி இவர் பாலையை ஒழித்தனர்போலும்.

§ மடக்காவது எழுத்துக்களின் கூட்டம் இடைவிட்டும் விடாதும் பின்னும்வந்து வேறுபொருடருவது. அதனை "எழுத்தின்கூட்டமிடைபிறிதின்றியும் - பெயர்த்தும் வேறுபொருடரின்மடக்கெனும் பெயர்த்தே." என்பதனானறிக.

சூடுதற்கு புன்னைமலர்கள் சோர்வின்றி எடுக்கப்படுகின்றன; இன்னும் அவர்களால் (மருதநிலத்துள்ள) கரும்புகளை நிறைய எதிரே பெற்றுக்கொண்டு சந்தனமரங்கள் மிகக்கொடுக்கப்படுகின்றன; இன்னும் அவர்கள் கண்டில் வெண்ணெய்கள் முல்லைநிலத்துள்ளார்க்குக் கொடுக்கப்படுகின்றன. (அவர்களிடத்தில்) பசுவின்வெண்ணெய் வாங்கப்படுகின்றது, என்றவாறு.

நாகம், கண்டில் வெண்ணெய் என்பன குறிஞ்சிநிலத்துக்குரிய மரவிசேடங்கள். அது "நடுக்குறுசந்தஞ்சிந்தூரத்தொடுநரந்தநாகங்-கொக்கையார்வேங்கைகோங்குபச்சிலைகண்டில்வெண்ணெய்" என்னும் இராமாவதாரச்செய்யுளானறியப்படும். "நரந்தநாகநள்ளிருணாறி", என்னுங்குறிஞ்சிப் பாட்டில் (கூச-ம் வரி) நாகம் என்பதற்கு நகப்பூ என நச்சினார்க்கினியர் கூறியதனானும் நாகம் மரவிசேடமாதல்துணியப்படும்.

இதனால் குறிஞ்சிநிலம் தனக்குரிய பண்டமாற்றினால் ஏனை மூன்று நிலங்களோடும் மயங்கியதாகக் கூறப்பட்டது. எங்ஙனமெனின்; குறிஞ்சிநிலத்திலுள்ள மகளிர் தம் நிலத்துக்குரிய நாகம் முதலிய மூன்றையும் கொடுத்து முறையே நெய்தல், மருதம், முல்லை என்னும் மூன்றற்குமுரிய புன்னைமுதலிய மூன்றையும் பெற்றுக் கொள்வார்கள் என்பதனாலேயாம்.

| | | |
|---|---|---|
| நாகம்<br>ஆரம்<br>கண்டில்வெண்ணெய் | குறிஞ்சிக்குரியன. இவைமரம். | புன்னைகம்நெய்தற்குரியது இக்கு மருதத்திற்குரியது ஆவின் வெண்ணெய்முல்லைக்குரியது. |

இனி இதன்கண் முதலடியொழிந்த ஏனைமூன்றடிகளிலும் நாகம், ஆரம், வெண்ணெய் என்பவைகளால் மடக்குஎன்னுஞ் சொல்லலங்காரமும் அமைத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. இம்மடக்கு இரண்டாமூன்றாமடிகளில் இரண்டாமைந்தாஞ்சீர்களிலும், நான்காமடியில் மூன்றுமாறுஞ்சீர்களிலும் வந்தன.

முல்லைத்திணைமயக்கம்.

நீக்குமா னழைக்கு மாயர் நீடிசை நிறைய வூது
மூக்கமென் றளவே யாலை யோசைய தளவே யுந்த
வாக்குதீங் கொன்றை மீன்பா டரவத்தீங் கொன்றை மாற்ற
தேக்குவே யேனற் காப்பின் பிறத்தவே யகற்று மன்றே.



இ-ள். கட்டினின்றும் நீக்கிய பசுக்களை அழைக்கும் ஆயர்கள் நெடிய இசை நிறையும்படி ஊதுகின்ற ஊக்கத்தையுடைய மெல்லிய முல்லைக்குழலோசை கருப்பாலையினோசையினளவைத்தள்ள; இன்னும் அவர்களால் இசையைப்பெய்து ஊதப்படுகின்ற இனிய கொன்றைக்குழலோசை மீன்படுதற்கனுண்டான (பறை) ஒலியின் தீமையை மாற்றிவிட; இன்னும் அவர்களால் இசையை நிறைத்து ஊதப்படுகின்ற வேய்ங்குழலினோசை தினைக்காவலின்பகுதியான ஓசைகளை நீக்கும் எ - று.

மேன் நீட்டல்விகாரம். சிலப்பதிகாரர் கூறிய "ஆம்பலந்தீங்குழல்," "கொன்றையந்தீங்குழல்," "முல்லையந்தீங்குழல்" என்னும் மூன்றையும் இந்நூலாசிரியர் இச்செய்யுளிலமைத்துக் கூறுமிடத்து "ஆம்பலந்தீங்குழலை" நீக்கி, "வேய்ங்குழல்" ஒன்றுகூட்டிக்கூறினர் போலும். அன்றி; "ஆம்பல்கீசகம் வேல்வேரலரியமைதிகிரிவேழ-மேம்படுவரை மூவெட்டுமூங்கிலாம் வெதிருமப்பேர்" எனச்சூடாமணிநிகண்டிட் கூறியவாறு 'ஆம்பல்'—மூங்கிலெனக்கொண்டு 'வே' எனக்கூறினரெனினுமமையும். வே எனக்கருவிகூறலின்-முன்னையவற்றைப்பண்என்றல் சிறப்பின்று. மீன்பாடரவம் என்றது மீன்கோட்பறையினொலியை, அது "கலவர்மீன்படுத்தெழுப்புசாப்பறையொலிகறங் கநீதெனத்தன்னு-ளலவர்சாலிகொய் தண்ணுமைத்தும்பொலியடக்கிமேலெழ" என்பதனானறியப்படும். காப்பின்பிறத்த ஓசை என்றது தட்டை, குளிர், தழலையாதியவற்றினோசையை; அது "தட்டைகுளிர்தழலைதாங்கித்தினைபுனத்தைக் - கிட்டவுருவண்ணங்கிளிமுதற்புள்ளோச்சினளே" என்பதனானறியப்படும். இவ்வாறே கம்பரும் "புன்றலைப்புனங்காப்புடைபோதரச் - சென்றிசைக்கும்" என்றார். தளவு, கொன்றை, வே என்பன ஆகுபெயர்கள்.

இதனால் முல்லைநிலம் தனக்குரிய இசைக்குழல்களால் ஏனைமூன்று நிலங்களோடு மயங்கியதாகக் கூறப்பட்டது. எங்ஙனமெனின்; முல்லைநிலத்துள்ள ஆயர்ஊதும் இசைக்குழல்களினோசையால்முறையே மருதம், நெய்தல், குறிஞ்சி என்னு நிலங்கள் மூன்றற்குமுரிய ஆலையோதை முதலிய மூன்றையுமகற்றுமென்பதனாலேயாம்.

| | | |
|---|---|---|
| தளவு<br>கொன்றை<br>வே | முல்லைக்குரியன<br>இவை பண். | ஆலை மருதத்திற்குரியது<br>மீன் நெய்தற்குரியது<br>ஏனல் குறிஞ்சிக்குரியது |

இனி இதன்கண் முதலடியொழிந்த ஏனைமூன்றடிகளிலும் தளவு, கொன்றை, வே என்பவைகளால் மடக்குஎன்னுஞ் சொல்லலங் காரமு மமைத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. இம்மடக்கு இரண் டாமூன்றாமடிகளில் இரண்டாமைந்தாஞ் சீர்களிலும், நாலாமடியில் முதலாம் நான்காஞ் சீர்களிலும் வந்தன.

மருதத்திணைமயக்கம்.

நீங்கருஞ் செவ்வித் தாய நிறைவள மருத மாக்கள்
தாங்கொளுங் கானற் றேனிற் றழைப்பன கானற் றாழை
யாங்குழு மமலை யார்க்கூ யழைப்பன வமலை வேழம்
பாங்கொடி சாற்றா லோங்கும் பசுங்கொடி முல்லை யன்றே.

இ-ள். அடைந்தோர் விட்டுநீங்குதற்கரிய செவ்வியையுடைத்தாய நிறைந்தவளத்தைக்கொண்ட மருதநிலமாக்கள் கொள்ளுகின்ற மணம்பொருந்திய நல்லதேனால் கழிக்கரைகளிலுள்ள தாழைகள் தழைப்பன; அங்கே அவர்கள் உழுகின்றஒலியினால் அக்குறிஞ்சிநிலத்துள்ள மலைகள் எதிரே கூப்பிடுவன; அவர்கள் கரும்புகளைப் பக்கங்களிலே ஒடிக்கின்ற சாற்றினால் பசியமுல்லைக்கொடிகள் வளரும். எ - று.

இதனால் மருதநிலந் தனக்குரிய தேன்முதலியவற்றை உபகாரஞ்செய்தலால் ஏனை மூன்றுநிலங்களோடும் மயங்கியதாகக் கூறப்பட்டது. எங்ஙனமெனில்; மருதநிலமாக்கள் செய்யுந் தேன்கோடல் முதலிய தொழில்களால் முறையே நெய்தல், குறிஞ்சி, முல்லையென்னும் நிலங்கள் மூன்றற்குமுரிய தாழைதழைத்தன் முதலியமூன்றும் நிகழ்தலினாலேயாம்.

| | | |
|---|---|---|
| தேன்கோடல்<br>உழுதல்<br>வேழமொடித்தல் | மருதத்திற்குரியன<br>இவை தொழில். | தாழை நெய்தற்குரியது<br>மலை குறிஞ்சிக்குரியது<br>முல்லை முல்லைக்குரியது. |

இனி இதன்கண் முதலடியொழிந்த ஏனைமூன்றடிகளிலும் கானல், அமலை, கொடி என்பவைகளால் மடக்குஎன்னுஞ் சொல்லலங்



காரமுமமைத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. இம்மடக்கும் முற் செய்யுளிற் கூறியவாறு வந்தது.

நெய்தற்றிணை மயக்கம்.

கயற்குல வதோமுகாநற் கழிக்கரைக் கைதை மென்னீ
றயற்கணியடலை யாய்த்தா ரநற்கணி கொள்ளத் தேனை
நயக்கரு விளைகொண் டொண்பூ நவக்கரு விளைப்ப வேட்டை
வயற்கயல் குருகெ னுமா மலர்க்கயன் மருளு மாதோ.

இ-ள். கயற்கூட்டங்களைக்கொண்ட அதோமுகத்தையுடைய நல்ல கழிக்கரைகளிலுள்ள தாழைகளின் மெல்லியநீற்றைச் சிவனுக் கணியப்படும் விபூதிபோல பூக்களையுடைய அழகிய நல்லவேங்கைகள் கொள்ள; அத்தாழைகளின்றேனை நல்லகருவிளை ஏற்று ஒள்ளியபூவாகிய புதியகருவை உண்டாக்க; அத்தாழைகளின்பூவை வயலிலுள்ள கயல்கள் குருகென்றுகருதி தாமரைமலர்களுக்கருகே ஒளிக்கும், எ - று.

அதோமுகம்---ஆற்றுநீர்க்கழிமுகம்.

இதனால் நெய்தனிலம் தனக்குரிய தாழையினீறுமுதலியவற்றைக்கொள்ளப்படுதலால் ஏனைமூன்று நிலங்களோடும் மயங்கியதாகக் கூறப்பட்டது. எங்ஙனமெனில்; நெய்தற்குரிய கைதையினீறு முதலியவற்றை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம் என்னும் மூன்றற்குமுரிய கணிமுதலிய மூன்றும் கொள்ளுதலினாலேயாம்.

| | | |
|---|---|---|
| கைதைநீறு<br>அதன்தேன்<br>அதன்பூ | நெய்தற்குரியன. | கணிகுறிஞ்சிக்குரியது<br>கருவிளை முல்லைக்குரியது<br>வயற்கயல் மருதத்திற்குரியது. |

இனி, இதன்கண் முதலடியொழிந்த மூன்றடிகளிலும் கணி, கருவிளை, கயல் என்பவைகளால் மடக்குஎன்னும் அலங்காரமும் அமைத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. இம்மடக்கும் மேற்கூறியவாறு வந்தது.

இவைகளேயன்றி, இன்னும் நான்கு நிலங்களும் மாலைபோல ஒன்றோடொன்று தொடர்ந்து மயங்கியதாகவும் ஓர் செய்யுள் கூறப்பட்டுளது. அதனையும் ஈண்டுத்தருகின்றாம்.

கொடிச்சியர் குறிஞ்சிப் பாடற் காய்ச்சியர் குரவை தூங்கு
மடிச்சிலம் பொலிக்கு வேட்குங் கடைசிய ரகத்த வன்ன
நடைக்கெதிர் கலாபம் விம்ம வளத்தியர் தம்மி னுளுந்
தொடிக்கர மெறிந்து நக்கு நடப்பன தோற்றத் தெங்கும்.

இ - ள். நெய்தனிலமெங்கும் கொடிச்சியர்களது குறிஞ்சிப் பாடலுக்கு ஒப்ப இடைச்சியர்கள் குரவையாடுகின்ற அடிகளிலணிந்த சிலம்பினோசைக்கு விரும்புகின்ற கடைசியரிடத்தவாகிய அன்னத்தினடைக்கு எதிரே கலாபம் ஒலிக்கும்படி அளத்தியர்கள் தம்முள் நாடோறும் வளையலையணிந்த கைகளை ஒன்றோடொன்று அடித்துச் சிரித்து நடக்கின்ற தோற்றத்தையுடையன. எ-று.

எங்கும் தோற்றத்த எனமுடிவுசெய்க. அகரம்விகாரத்தாற் றொக்கது. குறிஞ்சி-ஓர்பண். குரவை-கைகோத்தாடல். கலாபம் பதினாறு கோவையணி. இதில் கொடிச்சியர், ஆய்ச்சியர், கடைசியர், அளத்தியர் என நானிலப்பெண்களையும் கூறியதோடமுறையே அவர்களுக்குரிய குறிஞ்சிப்பாடல், குரவைதூங்குமடிச்சிலம்பொலி, அன்னத்தினடை நடத்தல் என்பவைகளைத் தொடர்ச்சியாகக் கூறி, நானிலத் திணைமயக்கம் கூறியவா றுகாண்க.

கொடிச்சியர் குறிஞ்சிநிலமகளிர்
ஆய்ச்சியர் முல்லைநிலமகளிர்
கடைசியர் மருதநிலமகளிர்
அளத்தியர் நெய்தனிலமகளிர்.

இங்ஙனமே ஏனைய கவிகள் கூறிய திணைமயக்கங்களினும் இவ்விரகுவம்சகாரர் கூறிய திணைமயக்கம் மிகவுஞ்சிறப்புடைத்தாதல் காண்க.

சி. கணேசையர்.

---



# ஆங்கில மொழிக்கலப்பு.

இதனைக்குறித்துச்சென்ற ஆவணிமாதத்துச் "செந்தமிழ்" லே சில கூறியிருந்தேம். யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலுமுள்ள சில பத்திராதிபர்களும் இவ்விஷயத்தைச் சிந்தனைசெய் திருக்கின்றார்களென்பது அவ்வவர் பத்திரிகைகளா லறியக்கிடக்கின்றது. யாம் விரும்பியவாறே பத்திராதிபர்கள் இதனைச்சிந்தித்துத் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டதற்காகப் பெருமகிழ்வடைகின்றேம்.

பத்திரிகையின் அருமை பெருமைகள் இத்துணையவென எடுத்துக்கூறற் பாலனவல்ல. அஃது ஓர் விஷயத்தைப் பரவச் செய்தலில் வாயுதேவனினும் மிகுந்த வேகமுடைய்து; அதனைச்சனங்கள் மனதிற் பதியச் செய்தலிற் பேராசிரியனை ஒத்தது; அதனைச் செய்வித்து முடித்தலில் அரசனை நிகர்த்தது; எங்கும் நின்று எல்லாவற்றையும் செய்து முடிக்கும் பேராற்றல் படைத்தது பத்திரிகையே யன்றிப் பிறிதொன்றில்லை. ஆதலால் அவற்றை நடத்தும் பத்திராதிபரே உலகத்தவர்களின் உயர்வு தாழ்வுக்கு முக்கிய காரணர். ஆதலால் பாஷை நலம் குன்றாது பாதுகாக்கும் பாஷாபிமானியும் அவரே.

உலகத்திலே எத்தேசத்துச் சுவபாஷை தன்னலம் குன்றாது வளருகின்றதோ, எச்சாதியார் அதனைத்தன்னலம் குன்றாது வளர்க்கின்றார்களோ, அத்தேசமும் அச்சாதியாரும் மேனிலை பெய்துவர் என்பது நிச்சயம்; இதற்குச் சான்றாக ஜப்பான் ஜர்மனி முதலிய தேசங்களைக் காணலாம். இத் தேசத்தார் தத்தம் பாஷைகளிற் கொண்டிருக்கும் அபிமானமும் அவற்றை விருத்தி செய்யும் வகையும் இத்தன்மைய என்பதைப் பத்திரிகைகள் வழியாகவே அறிந்திருக்கின்றேம். ஆதலின் எங்கள் சீர்திருத்தத்திற்கும் மேனிலைக்கும் காரணம் நம் சுவபாஷையே யாம்.

தெளிந்த பாஷை இல்லாவிட்டால் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் படிப்போருள்ளத்தில் நன்கு பதியச் செய்தல் கூடாது.

ஒருவன் சுவ பாஷைச் சொற்களினாற் பொருள்களை இலகுவாக விளக்கிக்கொள்ளுதல்போல அந்நிய பாஷைச் சொற்களினால் விளங்கிக் கொள்ளமாட்டான். ஆதலினால் ஆங்கிலமொழிகளுக்கியைந்த தமிழ் மொழிகளைச் செய்து கொள்ளல் படிப்போருக்குப் புத்தி மயக்கத்தை உண்டாக்குமென்றல் ஒரு சிறிதும் பொருந்தாது. தமிழறிவு மாத்திர முடையார்க்கு ஆங்கிலமொழிகள் வாளா தொனியை மாத்திர முண்டாக்கு தலன்றி உண்மையளவிற் கருத்தைப் புலப்படுத்த மாட்டா. ஆதலின், தமிழ்ப்பத்திரிகைகளில் கூடியவரை தமிழ்மொழிகளைத் தேடியமைத்தலே சிறப்பாகும்.

தமிழ் மொழிகளைச் செய்து கொள்ளுதற்கு வேண்டிய சில உபாயங்களை முன்னேயே கூறியிருக்கின்றோம். அப்புதுச் சொற்கள் முதன்முதல் ஜனங்களுக்குத் தெளிவை உண்டாக்கமாட்டாவாயினும், சிலகாலத்துள் வழக்கிலகப்பட்டுப் பழைய சொற்கள் போலாதல் திண்ணம். அச்சிலகாலம் பன்னூற்றாண்டுகளன்று, சிலவருடங்களேயாம். வேண்டுமாயின், புதுத்தமிழ் மொழிகளை உபயோகிக்குங்கால் அவைகட்கியைந்த ஆங்கில மொழிகளை எழுதி இவை பிறைக்குறியாலடைத்து விடலாம். சிலகாலம் செல்ல இவ்வழக்கத்தை நீக்கிவிடுதல் வேண்டும். 'பிரதிகாவலர்' என்பது பொருளைத் தெளிவிக்க மாட்டாதாயின், "பிரதிகாவலர்" (Viceroy) என்று எழுதி விடுக. இது பத்திராதிபர்களுக்கும் நிருபர்களுக்கும் பெருங்கஷ்டமன்று. பயனை நோக்குங்கால் அதனைக் கஷ்டமென்று ஒருவரும் கொள்ளமாட்டார்கள்.

"மயிர் விலக மலை விலகும்" என்பதோர் பழமொழியுண்டு. பத்திராதிபர்கள் இச்சிறுகஷ்டத்தை நீக்கிவிட, ஆங்கில மொழிக்கலப்பு நீங்கிவிடும் என்பதற்குச் சந்தேகமின்று. இதனைத் தங்கள் பத்திரிகைகளில் அநுசரித்தல் மாத்திரமன்றிக் காலத்துக்குக் காலம், பத்திராதிபர்கள், ஆங்கிலமொழிக் கலப்புத் தீங்குபயப்பதென்று பத்திரிகை வழியாகப் போதித்தும் வருவாராயின், அது, மதிப்பென்று கருதி ஆங்கிலமொழிகளைப் பிரயோகிக்கும்போதெல்லாம் அம்மொழிகளில் வெறுப்பை உண்டாக்கும். வெறுப்பு



உண்டாக, தமிழ்மொழிகளில் நாட்டங்கொள்வர். கொண்டக்கால் அம்மொழிகள் வந்து கூடுதல் தமிழ்மக்கட் கருமையன்று.

ஆங்கில மொழிக்கலப்பு நீங்குதல் நலம் என்பதோர் எண்ணத்தை மனத்துதிக்கச் செய்தலே பத்திராதிபர்கள் செய்யவேண்டிய உதவியாம். இது சித்திக்க நம் நோக்கமுஞ் சித்திக்குமென்க. நெடுங்காலமாக வழக்கில் வந்த ஆங்கில மொழிகளையொழித்துத் தமிழ் மொழிகளை வைத்து விளக்குதல் அசாத்தியம் என்ற எண்ணத்தை முற்றும் ஒழித்தல் வேண்டும். பண்டைக்காலந் தொட்டு வழங்கிவந்த எத்தனையோ காரியங்கள் இப்பொழுது முழுதும் மாறியிருத்தல் யாவருமறிந்த விஷயமே.

வடமொழிகளும் தமிழ் மொழிகளும் கலந்து வழங்கி வருதல் பண்டைக்காலந் தொட்டுள்ள வழக்காய் விட்டது. சங்ககாலத்துப் புலவர்கள் வடமொழிகளை இயன்றவளவு விலக்கியே வந்தார்கள். பிற்காலத்துப் புலவர்கள் அவற்றை நூல்களிற் கணக்கின்றி நுழைத்து விட்டார்கள். அதனால் அக்கலப்பை நீக்குதல் அரியதாயிற்று. வடமொழிகள் கலந்திருத்தல்போல ஆங்கிலமொழிகளையும் கலந்து விட்டால், நம் தமிழ்ப்பாஷை மற்றப்பாஷைகளினுதவியன்றித் தனித்தியங்கு மாற்றலுடையது எனப்படும் புகழ்ச்சிபோய், தமிழ் என்பதோர் தனிப்பாஷை இல்லை எனப்படும் இகழ்ச்சியுண்டாமன்றோ? ஆரியபாரசீகச்சொற்கள் கணக்கின்றிக்கலவாததற்குக் காரணங்கள் பல உளவெனினும், அக்காலங்களிற் பத்திரிகைகளில்லாதிருந்தமையும் நம்மவர் அப்பாஷைகளைக் கல்லாதிருந்தமையும் முக்கிய காரணங்கள் என்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்.

தற்காலம் அரசபாஷையாதலாலும், சீவியத்துக்கு முக்கிய வழியாயிருத்தலாலும் மற்றைச் சாதியாரையும் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் அறிந்து திருந்துதற்கு வழியாயிருப்பதினாலும் ஆங்கிலபாஷை அவசியங் கற்கவேண்டியதொன்றேயாம். அவ்விஷயத்தில் ஒருபொழுதும் குறைகூறப் புகுந்தேமல்லேம். ஆங்கில மொழிகளைத் தமிழ்ப்பாஷையோடு கலந்து வழங்காதிருத்தல் வேண்டுமென்பதே எமது வேண்டுகோள். மொழிகளைக் கலத்தலே

*

யன்றி வசனங்களை ஆங்கில நடையில் எழுதுவதையும் ஒழித்தல் வேண்டும். மற்றைய பத்திராதிபர்களும் பெரியோர்களும் இவ்விஷயத்தைச் சிந்தித்துத் தத்தம் கருத்துணர்த்தல் நலம் என்றவர்களை வேண்டுகின்றோம்.

அ. பொன்னையா பிள்ளை.

---

# இந்தியா இறைமாட்சி.

(முற்றொடர்ச்சி.)

---

15. ஒறுத்தல் :— அரசர் தந்நாடு தலையளித்தற்கண்ணே ஒழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇனாரை நடுரெனக்கோல் கோடாது, பிறரெனக்குணங்குன்றாது ஒப்பநாடி அதற்குத்தக ஒறுக்கவேண்டும். காலிற்றளை பூட்டியும் பிரம்பாதியவற்றாற்புடைத்தும் துன்புறுத்தலும், பொருளைக் கோடலும், கொலை செய்வித்தலுமென அவ்வொறுத்தல் மூவகைப்படுமென்க. இவ்வொறுத்தல் நன்னெறிச் செல்வார்க்குத் துன்பந்துடைத்தற் பொருட்டேயாதலின் பைங்கூழ் வளர்ச்சிக்கு இடுக்கண் விளைக்குங்களைகளைக் களைவதோடொக்குமென்க. இதனை, "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்-களைகட் டதனொடு நேர்." என்னும் பொய்யாமொழியாற் காண்க.

அறத்திற்கு மாறாக அல்லவை புரிந்தார் யாவராயினும் அவர் குறைதெரிந்துழிக் கண்ணோடாது தறுகண்மையுடையராயிருந்து தண்டஞ்செய்தலே வேந்துமுறையாம். மனுச்சோழன் தன் அருமந்த ஒரு மைந்தன் பசுவின் கன்றின்மீது தேரூர்ந்து கொன்றமைப் பொருட்டுப் பிராயச்சித்த பரிகாரஞ்செய்யலாமென மந்திரிகூறிய போது அதைக்கொள்ளானாய்,

"என்மகன்செய்பாதகத்துக்கிருந்தவங்கள்செயவிசைந்தேன்
அன்னியனோருயிர்கொன்றாலவனைக்கொல்வேனானாற்



றென்மனுநூற்றொடைமனுவாற்றுடைப்புண்டதெனும்வார்த்தை
மன்னுலகிற்பெறமொழிந்தீர்மந்திரிகள்வழக்கு." பெரியபுராணம்-

எனக்கூறி மைந்தனைத்தன் தேர்க்காற்படுத்திக் கொன்றானென்ற அற்புதக்கதையை யாவரேயறியார்?

"ஒருமைந்தன் றன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தார்வேந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்"

என்னும் பெரியபுராணத்தானும்,

"ஆவின்கடைமணிநெஞ்சுசுடத்தான்றன்
அரும்பெறற்புதல்வனையாழியின் மடித்தோன்"

என்னும் சிலப்பதிகாரத்தானும் இச்சரிதம் இனிதுபுலப்படுமாறறிக.

"எய்தியகுற்றத்தோர்கள்யாவராயினுங்கண்ணோடா
தைதெனநாடிநீதியறந்தலைபிழையர்த்தண்டஞ்
செய்வதேசெங்கோலாகுஞ்செய்யகோலின்றேலென்னும்
உய்திசெய்மழையான்மக்களுறுபயனுற்றபோதும்"

என்ற விநாயக புராணமும் இக்கருத்தையே வலியுறுத்துவதாமென்க. பாண்டியன் கோவலனை ஆராயாது கொல்வித்த தன் பிழையையுணர்ந்து தானேதன்னுயிர் நீத்தமையும், பொற்கைப்பாண்டியன் தன் கையைக் குறைத்த செய்தியும் இவைபோல்வன பிறவும் இந்தியாதேசத்துப் பண்டை அரசர்களின் ஒறுப்பு முறையை இனிது விளக்குவனவன்றோ?

16. செங்கோல் :— மேலேகூறியவாறு நிறைகோலொப்பச்சமஞ்செய்து சீர்தூக்கி அரசர்முறை செய்தலே செங்கோலாம். நடுநிலை குன்றாது தக்காங்குநாடி முறை செய்யுங்கால் இருவர் கூற்றையும் பன்முறை கேட்டும், கரியுரைப்பாரியல்பை அறிதிறனாய்ந்தும், நீதிநூல் விதியை நன்கு தெளிந்தும் விசாரணை முற்றியபின் முறை செய்தலேயியல்பாம். "கண்ணாரக் கண்டதும்பொய் காதாரக்கேட்டதும்பொய், தீரவிசாரித்ததே மெய்" என்பது நம் நாட்டுப் பெண்

பலாருங் கூறும் பழமொழியன்றோ? தாம் உண்மையறிந்த வழியும் பிறரொப்புமாறெல்லாஞ் செய்வன செய்து ஏற்ப முடிவு கூறுதலே அரசர் கடமையாம். கரிகாற்பெருவளத்தானென்ற சோழன் தம்முன் மறுதலையாயினாரிருவர்வந்து குறைகூறி முறைவேண்டிய போது, அவ்வேந்தன் ஆண்டினிளைஞனாதலின் யாங்ஙனம் முடிவுண்மைகண்டு கூறுமென ஐயுற்றாராக, அதுகண்ட அப்பொன்னியந்துறைவன் தான் நரைமுடித்து வந்திருந்து முறைசெய்தானென்று கூறுவர். இதனை,

"இளமை நாணி முதுமை யெய்தி
யுரைமுடிவு காட்டிய வுரவோன்"

என்னு மணிமேகலையானும்,

"உரைமுடிகாணானிளமையோனென்ற
நரைமுதுமக்களுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான்சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம்படும்."

என்னும் பழமொழியானும் அதனுரையானுங் கண்டுதெளிக.

17. செங்கோலே வெற்றி:— இங்ஙனம் ஏற்ற பெற்றியின் நடாத்தும் செங்கோலே அரசர்க்கு வெற்றியாகுமன்றி படைகளால் வருவது வெற்றியன்றென்பர். எத்துணைப்படைப் பெருக்கமுடையனாயினும் அரசன் செங்கோலனாகாக்கால் அவன் வெற்றிபெறுமாறில்லையாம். அப்படைகளே யரசனைக்கொன்று களைவனவாயினுமாகும். இதனானன்றே,

"வேலன்றுவென்றிதருவது மன்னவன்
கோலதூஉங்கோடாதெனின்" எனத்தேவரும்,

"கடுஞ்சினத்தகொல்களிறும், கதழ்பரியகலிமாவும்,
நெடுங்கொடியநிமிர்தேரும், நெஞ்சுடையபுகன்மறவருமென
நான்குடன்மாண்டதாயினுமாண்ட
அறநெறிமுதற்றேயரசின்கொற்றம்"

என மதுரை மருதனிளநாகனாரும் கூறுவாராயினர். படை கொடி குடை முரசு புரவி களிறு தேர் தார் முடி இவையாவும் செங்கோல் வேந்தர்க்கேயுரிய வென்பதை யுணர்த்துங் கருத்தானன்றே,



"படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோலரசர்க் குரிய."

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். இங்கேதெரிவுகொள் செங்கோல்என்ற விசேடணம் மிகவும் பாராட்டற்குரியதாம். இச்செங்கோலே அரசரைக்காப்பதென்பதை,

"இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டா செயின்."

என்றவள்ளுவதேவர் கூற்றாலறிக. அரசன் குடிகளைக்காக்கச் செங்கோல் அவனைக்காக்குமென்னும் இக்கருத்துத்தான், வேலன்று வென்றிதருவதென்பதன் கண்ணும் அறநெறிமுதற்றே அரசின்கொற்றம் என்றதன் கண்ணும் விளக்கியவாறாகும். இதுவொன்றோ! செங்கோல்வேந்தன் தேயத்து இயல்பிற்றுன்புறுத்துவனவாகிய அரவு முதலையாதியவுஞ் சார்ந்தவர்க்கிடுக்கண் செய்யாவென்பர் இளங்கோவடிகள்.

"அரவுஞ் சூரு மிரைதேர் முதலையும்
உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோற் றென்னவர் காக்கு நாடென
எங்கணும் போகிய விசையோ பெரிதே."(என்பது சிலப்பதிகாரம்.)

18. கோடுங்கோல்:—அரசன்கோல்பகைவரெனச் சினங்கூர்ந்தும், நமரெனக்கண்ணோடியும் ஏதிலரெனவாளாவிருந்தும் ஒருபாற் கோடுமாயின் அவன்றனது பண்டைச்செல்வத்தை யிழந்துமேல்வருவாய்க் கேதுவாகிய குடிகளையுமிழந்து தானுங்கெட்டொழிவானென்க.

இராவணன் சூரபன்மன் முதலிய கொடுங்கோலரசர் எத்துணையோ செல்வமும் படையும்பெருமிதமும் படைத்திருந்தும் அவர்கதி எவ்வாறாயிற்று? இன்னுங்கொடுங்கோன்மையாற் பரிபவப்பட்டொழிந்த வேந்தர் கடற்கரை மண்ணினும் பலராமன்றே! கொடுங்கோலரசன் கீழுற்ற குடிகள் அவன்கேடு சூழ்ந்து அறம்பார்த்துறை

மெனவும் கூறியுள்ளார். யாவர்க்கும் உயிரிற்சிறந்தபொருள் இல்லையாதல்போல அரசர்க்குக் குடிகளிற்சிறந்த பொருள்பிறிதில்லாமையால் இவ்வாறு கூறினர். இதனை,

> "மன்னுயிரெல்லா மண்ணாள் வேந்தன் றன்னுயிர்"

என்ற மணிமேகலையானும்,

> "வைய மன்னுயி ராகவும் மன்னுயி
> ருய்யத் தாங்கு முடலன்ன மன்னன்"

என்ற இராமாவதாரத்தானும் அறியத்தகுமெனக் காண்க.

பிறிதின்கிழமைப்பொருள்களில் மக்களிற்சிறந்ததொன்றில்லை. தற்கிழமைப்பொருள்களில் உயிரிற்சிறந்ததொன்றில்லை ஆதலின் அரசராவார் தம்மக்களைப்போலவும் உயிரைப்போலவும் குடிகளைப்பாதுகாக்கவேண்டுமென நம்முன்னோர் கூறுவாராயினர்.

21. பொதுவகை:—அரசர் விஷயமாகவும் குடிகள்விஷயமாகவும் தனித்தனியாகப் பலவிஷயங்களையெடுத்துக் கூறினோம். இனி இருவருக்கும் பொதுவான தருமத்தைக் கூறுவோம். மேலேகூறியவகையால் அரசனே குடிகளுக்கு உயிரெனவும் குடிகளே அரசனுக்குயிரெனவும் விளக்கினோமன்றே. ஆகவே ஒருவருக்கொருவர் உடலும்உயிரும்போலவும், உயிர்க்குயிராகவும் பரஸ்பர ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்பதே நூலோர்கொள்கையாமென்க. உடலில்வழி உயிரில்லை. உயிரில்வழி யுடலில்லை. அரசனில்வழிக் குடிகளில்லை. குடிகளில்வழி யரசனில்லை. இம்முறையைக் கவனித்து நாமெல்லாரும் அரசர்மாட்டு அன்புபூண்டொழுகவேண்டும். அரசரும் நம்மீதுகருணைபாலித்தொழுகவேண்டும். இங்ஙனம் ஒருவர்பாலொருவர் அன்புற்றுவாழ்வதே பொதுத்தருமமென்க.

22. பிரிட்டிஷார் செய்த நன்மைகள் :— மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் அரசரால் நாம் பெற்ற நன்மைகள் அளப்பில உண்டு. அவற்றை யொன்றிக் கவனித்து நன்றிபாராட்டுவதன்றோ நமது கடமையாவது? பண்டைக்காலத்தார் கண்டுங்கேட்டுமில்லாத புகைவண்டி, புகைக்கப்பல், தந்தி தபால் முதலியவற்றால் நாமடைந்துள்ள நன்மையை யாவர்தான் அறியார்! துரைமார்க்கங்களில் திருட்



OFFICE 17 MAR 1910 MADRAS

டர்களை யொழித்து வெயிற்கொடுமையையும் நீக்கினர். வையை நதி பெருகிய காலத்து பரிதவித்த சோழனைக் கடவுள்வந்து கரையேற்றியதாகவன்றோ திருவிளையாடல் கூறுகின்றது. எத்தனை பெரிய நதிகளில் எப்பெரு வெள்ளத்திலும் தடையின்றிச் செல்லும் பாலங்களைக் கட்டிவைத்துள்ளார்கள். முற்காலத்திலிவைகளுண்டா? பத்திரிகை நடாத்துஞ் சுதந்தர விஷயம் எவ்வளவு விசாலமான அறிவைக்கொடுத்திருக்கின்றது. மதவிஷயத்தில் அவரவர் இஷ்டப்படி நடப்பதான பெரும்பாக்கியம் அளத்தற்கரிதன்றோ! முன்னை வேந்தர் காலத்திற் கழுவிலேற்றப்பட்டும், கத்தியால் வெட்டப்பட்டும் வந்தது மதக்கோட்பாட்டாலன்றோ? பலவகையான ரசாயன சாஸ்திர அறிவும் வேறு பலசாஸ்திர ஆராய்ச்சியும் நமக்கு யாராற் கிடைத்தன? தரும வைத்தியசாலைகளெத்தனை?

யூனியன், தாலூக்கா போர்டு, டிஸ்டிரிக்டுப்போர்டு, முனிசிபாலிட்டி முதலான நகரபரிபாலன கர்த்ருத்துவம் நமக்குக்கொடுத்தவர் யாவர்? சதியென்னும் உடன்கட்டையேறுதல் நரபலிகொடுத்தல் என்னு மிகக் கடுந்தொழில்களை விலக்கியவர் யாவர்?

இந்தவகையாக எண்ணிறந்த நன்மைகளை நமக்குச்செய்தவர் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரல்லவோ? இவர்கள் செய்த நன்றியையெல்லாம் வகைவிபரமாக எடுத்துக்கூறினால் ஒரு பெரும்புத்தகமாமே.

> "இன்னுமிவராளுகையினிந்தியர்களடைந்தநன்மைக்கெல்லையுண்டோ
> மன்னியசிர்ஜக்கோர்ட்ஜூட்ஜியவரிலுமுதன்மைவகுப்புலாவில்
> என்னசந்தேகமுந்தவிர்க்கும் அட்வகேட்ஜனரல்முறை வினைநடாத்த
> நன்னயஞ்சேர்பார்லிமெண்டெல்தானம்இவைஇந்தியர்கள்கண்ணத்தந்தார்"

என்று ஒரு புலவர் கூறியது பொய்யன்றே.

இங்கிலத்தவர்க்கு அன்னையிற்சிறந்த நமது விக்டோரியா சக்கரவர்த்தினிப்பெருமாட்டியவர்கள் கட்டளையிட்டருளிய பத்துக்கட்டளைகளும் (?) திரங்களும் பிரஜைகளாகிய நாம் அநுபவித்துவரப்பெற்ற பாக்கியம் போல் வேறெந்நாட்டார் பெற்றுள்ளார்? வேறெப்பேரரசர் தம் குடிகளுக்கு இவ்வாறு சுதந்தரமளித்துள்ளார்? நம்மனோரின் க்ஷேமமே தம் அரணாகக்கொண்டு நமது மனோபீஷ்டப்படிக்கேற்ற

வாறு நன்மைகளைப் புரிந்து லோக்கல் செல்வ் கவர்ன்மெண்டு அதிகார சுதந்தரத்தையும் நமக்குக் கொடுத்து நம்மோடு பல்லாற்றானும் ஒற்றுமையுற்று ஆளும் நமது பிரிட்டிஷ்ராஜாங்கத்தாரை வெல்லும் வல்லபம் எத்தேய அரசர்க்கும் ஒரு சிறிதுமில்லையேயாம். இதற்குப் போதிய சான்று,

> " மறுமனத்தானல்லாதமாநலத்தவேந்தன்
> உறுமனத்தானகியொழுகின்—செறுமனத்தார்
> பாயிரங்கூறிப்படைதொக்காலென்செய்ப
> ஆயிரங்காக்கைக்கோர்கல் " என்னும்

பண்டையோர் செய்யுளே கூறாநின்றது. ஆதலால் இத்தகைய பன்னலங்களும் ஒருங்கே நிறைந்து விளங்கும் நமது காருண்ய பிரிட்டிஷ் அரசர் நீணெடுங்காலமிருந்து மாநயம்பெற்று நாமுய்யுமாறு செங்கோல் செலுத்திவரும்படி கருணை பாலிப்பான் எல்லாம் வல்ல இறைவனருளை வாழ்த்திப்போற்றுவோமாக.

> இந்தியாதேசமென்றென்றும்வாழிய
> சந்தரமழைபெய்கசளிப்புநீடுக
> இந்தியாசக்கரவர்த்தியின்றபல்
> மைந்தருங்கிளைகளும்வாழ்வும்வாழ்கவே.

எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்.

---

உ
திருச்சிற்றம்பலம்.

# திருக்குறளாராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

---

கூருக. இற்பிறந்தார்கண்ணல்லதில்லையியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

இதன் விசேடவுரைத் தொடக்கத்திலுள்ள "இல்லுக்குடியென்பன ஈண்டுயர்ந்தவற்றின்மேல" என்னும் அச்சுப்பிரதிவாக்கியம், சில ஏடுகளில் " இல்லுக்குடிகுலமென்பனவொருபொருள ; ஈண்டுயர்ந்தவற்றின்மேல" என்றுகாணப்படுகிறது.



ஆசிரியர் பரிமேலழகர் இக்குறளில் " இற்பிறந்தார் " என முதலிலே வந்துள்ள " இல் " என்பதற்கு விசேடவுரை கூறத்தொடங்கி, அதிகாரப்பட்டமையினாலும், சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல் என்னும் அழகுபற்றியும், இவ்வதிகாரத்து 2-வது 8-வது குறள் முதலியவற்றுள் (உயர்குடி, உயர்குலம் என்று பிரித்துச் சொல்லப்படாது " இல் " என்பதுபோலவே) வந்துள்ள. " குடி " " குலம் " என்பவற்றையுமெடுத்துக்கொண்டு இம்மூன்றும் ஒரு பொருளவென்றும், இவை (உயர்வு தாழ்வு என்பவற்றைக் குறியாது) பொதுப்பட 'இல்' 'குடி' 'குலம்' என்று கூறப்பட்டிருப்பினும் இவ்வதிகாரத்து வந்துள்ளவையெல்லாம் உயர்ந்தவற்றையே குறிக்குமென்றும் கூறி விளக்குகின்றாராகலின் "இல்லுக்குடிகுலமென்பனவொருபொருள ; ஈண்டுயர்ந்தவற்றின்மேல" என்னும் ஏட்டுப்பாடமே கொள்ளத்தக்கதாம். " ஈண்டுயர்ந்தவற்றின்மேல " என்பதிலுள்ள " ஈண்டு " என்பதனால் அதிகாரத்தைச்சுட்டாது இவ்வதிகாரத்து முதற்குறளையே சுட்டினாரெனக் கொள்வோமெனின்,—இக்குறளில் " குடி " என்னுஞ்சொல் இன்மையின், இல் என்பது ஈண்டுயர்ந்ததின் மேற்று என்று கூறவேண்டுமேயன்றி ' இல்லுக்குடியென்பன ஈண்டுயர்ந்தவற்றின்மேல ' என்று கூறலாகாமையான் அது பொருந்தாதென்க.

கூகூ0. சான்றவர் சான்றாண்மை குன்றினிருநிலந்தான்
றாங்காது மன்னோ பொறை.

இதன் விசேடவுரையில் " அவர்க்கதுகுன்றாமையும் அதற்கது தாங்கலும் இயல்பாகலான் அவை யென்றும் உளவாகாநின்றன வென்பது தோன்ற நின்றமையின் மன் ஒழியிசைக்கண் வந்தது." என்றுள்ள அச்சுப்பிரதி வாக்கியத்துள் " அவை " யென்றது இன்னவற்றைச் சுட்டிநின்றதென விளங்கவில்லை. அது இவ்வாக்கியத்திலேயுள்ள ' குன்றாமை ' ' தாங்கல் ' என்பவற்றைச் சுட்டிநின்றதெனின் 'தலையைச்சுற்றி மூக்கைப்பிடித்தல்' போல் இவ்வளவு சுற்றாது " அவர்க்கது குன்றாமையும் அதற்கது தாங்கலும் இயல்பென்பது தோன்றநின்றமையின் மன்ஒழியிசைக்கண் வந்தது' என்று கூறுதலேயமையும் ; பிறசொற்கள் நின்று வற்றுதல்ாம்; ஆகவே அது பொருந்தாதென்க.

இனி, இவ்வாக்கியம் ஏடுகளிற்பெரும்பாலும் "அவர்க்கது குன்றுமையும் அதற்கது தாங்கலும் இயல்பாகலான் அவை யெஞ்ஞான்றும் உளவாகா வென்பது தோன்ற நின்றமையின் மன்ஒழியிசைக் கண்வந்தது *" என்று காணப்படுகின்றது. இவ்வாறு கூறின் 'அவை' என்பது மூலத்துள்ள "சான்றவர் சான்றாண்மைகுன்றுதல்" "நிலம் பொறைதாங்காமை" என்பவற்றைச்சுட்ட, இவ்வாக்கியம்,—'அவர்க்கது (சான்றவர்க்குச்சான்றாண்மை) குன்றுமையும் அதற்கது (நிலத்திற்குப்பொறை) தாங்கலும் இயல்பாகலான், சான்றவர்சான்றாண்மை குன்றுதலும் நிலம்பொறைதாங்காமையும் எஞ்ஞான்றுமுளவாகா'வென்பது தோன்ற நின்றமையின் மன் ஒழியிசைக்கண் வந்தது' என்று பொருள்பட்டுநின்று ஒழியிசைப் பொருண்மையை நன்குவிளக்குதலான் பின்னர்க்காட்டிய ஏட்டுப்பாடமே சிறப்புடைத்தாம்.

௧0௧௧. கருமத்தா னாணுத னாணுத் திருநுத
நல்லவர் நாணுப் பிற.

இதனுரையில் "பிறதிருநுதல் நல்லவர் நாணு" என்பதற்கு "அஃதன்றி மனமொழி மெய்களதொடக்கத்தான் வருவனவோவெனின் அவையவையாவனவல்ல அழகிய நுதலினையுடைய குலமகளிர் நாண்கள்" என்றச்சிடப்பட்டிருக்கிறது. இதனுள் "அவையவரான வல்ல" என்பது சில ஏடுகளில் "அவையாவனவல்ல" என்று காணப்படுகிறது. முதலில் "நன்மக்கள் நாணுவது இழிந்த கருமங் காரணமாக நாணுதல்" என்றிருத்தலின் அதற்கேற்ப "மனமொழி மெய்களதொடக்கத்தான் வருவனவோவெனின் அவை (நன்மக்களுடையன) ஆவனவல்ல" என்றுரைத்தலே நன்குபொருந்தமுடைத்தாகலானும் "அவையவரானவல்ல" வென்பது 'பிறநாண் (நன்மக்களிலக்கணமு) அவருக்கும் உரியது' குலமகளிர்க்கும் உரியது என்று பொருள்பட்டு, பின்னுள்ள "பிறகுலமகளிர் நாணென்றதனான் ஏனையது நன்மக்களுணென்பதூம்......பெற்றாம்" என்னும் விசேடவுரை வாக்கியக்கருத்தோடு மாறுபடுதலானும் ஏட்டுப்பாடமாகிய "அஃதன்றி மனமொழி மெய்கள தொடக்கத்தான் வருவனவோவெனின்,



* அவையாவனவல்ல; அழகிய நுதலினையுடையகுலமகளிர்நாண்கள்" என்பதே கொள்ளத்தக்கதாம்.

மேலும் இக்குறளின் விசேடவுரையிலே "அவர்க்கு நாண் கேடெய்துமென விலக்கப்பட்டமையானும் அவர் பெயராற் கூறப்படாமையானும் அஃதுரையன்மையறிக" என்னும் வாக்கியத்து "அவர் பெயராற் கூறப்படாமையானும்" என்பது பல ஏடுகளிலும் "அவர் பொதுப்பெயராற் கூறப்படாமையானும்" என்று காணப்படுகிறது. இதனுட் 'பொதுப்பெய' ரென்பது மூலத்திலுள்ள (பெண்பாலார்க்கெல்லாம் பொதுவாகிய) "திருநுதல் நல்லவர்" என்பதனைச் சுற்றிநின்று வாக்கியத்திற் கழகுபயத்தலின் இப்பாடமே சிறப்புடைத்தாம்.

௧0௩0. இடுக்கண்கால் கொன்றிடவீழு மடுத்தூன்று
நல்லாளிலாத குடி.

இதன் விசேடவுரையில் "வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்து பயன்படுதலும் அல்லாவழிக்கெடுதலுமுடைமையின் மரமாக்கினர்." என்பதன்பின் மேற்கோளாகக்காட்டியுள்ள "தூங்குசிறைவாவலுறை" என்னுஞ்செய்யுளின்அடியும் அச்சுப்பிரதிகளிற் காணப்படுகின்றன; மதுரைத் தமிழ்ச்சங்கத்துள்ள ஏடுகளிலெல்லாம் "தூங்குசிறைவாவலுறை தொன்மரங்களென்ன, வோங்குகுல நையவதனுட் பிறந்த வீரர், தாங்கல் கடன்" என்பதுகாறுமே எழுதப்பட்டு இதன்பின் "என்றார் பிறரும்" என்று வாக்கிய முடிவுபெற்றிருக்கிறது. மேற்கோட்செய்யுளில் அவ்வவ்விடத்திற்கு வேண்டிய பாகங்களை மட்டும் எடுத்துக்காட்டிப் பிறவற்றை விட்டுவிடுதல் ஆசிரியர் பரிமேலழகர் வழக்கமாதலின் அவ்வாறே யிவ்விடத்தும் "வளர்ப்பாரைப்பெற்றவழி....................மரமாக்கினர்" 'தூங்குசிறைவாவலுறை தொன்மரங்களன்ன, வோங்குகுல நையவதனுட் பிறந்த வீரர்தாங்கல் கடன்' என்றார் பிறரும்" என்பதே பொருத்தமுடைத்தாம்.

---

* "அவையாவனவழிவ" என்பதும் பாடபேதம்; இதுவும் பொருந்தும்.

இவ்வாறே முன் கூஎ0-ம் குறளின் விசேடவுரையிலச்சிடப்பட்டுள்ள திருவாய்மொழிப் பாசுரத்தின் "நன்றாய்..................எல்லாமீர்த்து" என்னும் முதலடியும், கடையடியின் ஈற்றிலுள்ள "அதுவே வீடுவீடாமே" என்பதும், உகூரு-ம் குறளின் விசேடவுரையிலச்சிடப்பட்டுள்ள கலித்தொகைச் செய்யுளின் "நெஞ்சத்திற் குருகிய கரியில்லையாகலின்" என்னும் 4-ம் அடியின் ஈற்றிலுள்ள "ஆகலின்" என்பதும் ஏடுகளிற் காணப்படாமையிற் றள்ளத்தக்கனவாம்.

க0௩ச. பலகுடைநீழலுந்தங்குடைக்கீழ்க்காண்ப
ரலகுடைநீழலவர்.

இதன் உரையில் "பலகுடைநீழலுந் தங்குடைக்கீழ்க்காண்பர்" என்பதற்கு "பலவேந்தர் குடைநிழலதாய மண்முழுதினையுந்தம் வேந்தர் குடைக்கீழே காண்பர்" என்றச்சிடப்பட்டிருக்கிறது. இதனுள் "தம் வேந்தர் குடைக்கீழே" யென்பது சில ஏடுகளில் "தம் மரசன் குடைக்கீழே" என்று காணப்படுகிறது. முன்னது பன்மை, பின்னதொருமை, என்பதன்றி இவை தம்முட்பொருள் வேறுபாடுடையன வல்லவாயினும், விசேடவுரையில் "ஊன்றுசான் மருங்கினீன்றதன் பயனே என்றதனால் தம்மரசனுக்குக் கொற்றம்பெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பரென்பதாம்" என்று ஆசிரியரே விளக்கியிருத்தலான், அதற்கேற்ப வுரையிலும் "தம்மரசன் குடைக்கீழே காண்பர்" என்பதே பொருத்தமுடைத்தாம்.

க0சரு. நல்குரவென்னுமிடும்பையுட்பல்குறைத்
துன்பங்கள்சென்றுபடும்.

இதனுரையிலே "பல்துன்பங்கள் சென்றுபடும்" என்பதற்கு "பல்துன்பங்களும் வந்து விளையும்" என்றச்சிடப்பட்டிருக்கிறது. ஏடுகளிலோ "பல துன்பங்களும் விரைந்து விளையும்" என்று காணப்படுகிறது. "செலவு விரைவின்கண்வந்தது" என்னும் விசேடவுரை வாக்கியத்திற்கேற்ப நிற்றலின் "பல துன்பங்களும் விரைந்து விளையும்" என்னும் ஏட்டுப்பாடமே பொருத்தமுடைத்தாம்.

க0சுச. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு.



இதன் விசேடவுரையீற்றிலே "இதனான் அந்நெறி யல்லதனைச் சால்புடையார் செய்யாரென்பது கருத்து" என்றச்சிடப்பட்டுள்ள வாக்கியம் சில ஏடுகளில் "இதனான் அந்நெறியல்லதனைச் சால்புடையார் செய்யாரென்பது கூறப்பட்டது" என்று காணப்படுகிறது. முன்பின் முறையைத் தழுவி நிற்றலின் ஏட்டுப்பாடமே போற்றத்தக்கதாம்.

(இன்னும் வரும்.)

அ. கோபாலையன்.

---

ஸ்ரீ:

# மேகஸந்தேச பரிசீலனம்.

[பண்டித எம். துரைசாமிஐயங்கார்; ஆயுர்வேத பூஷணர், திருச்சிராப்பள்ளி]

---

கவிகுலதிலகனான ஸ்ரீகாளிதாஸனால் இயற்றப்பெற்ற காவியங்களுள் பதங்களிற் குறைந்ததும், பொருள்களில் விரிந்ததும், ரஸ விலாசங்களில் ரமணீயமானதும் இம்மேகஸந்தேசமென்னும் காவிய ரத்னமே. இதைப்படித்தறிந்த பண்டிதர் பலரிருப்பினும் பெரும்பான்மையோர் முனைப்புல்மேய்பவராக விருக்கின்றனரேயன்றி அரும் பொருள் அனைத்தும் உணர்ந்து இரஸப்பெருக்கின் ஆழத்தில் அமிழ்ந்து அடித்தடம் போய் கவியின் அந்தரங்கத்தை அறிந்தவர் அரிது. இம்மேகஸந்தேசத்தின் அரிய விஷயங்களைக் கவியுடன் கூடப் பழகியவர்போல் நன்குணர்ந்தவருள், ஸ்ரீமான் பண்டித கிருஷ்ணமாச்சாரியார் (திருச்சி) போன்ற வித்வான்கள் வெகுபேர் இலரென யாம் தைரியத்துடன் சொல்லத்துணிவோம். அவர் எழுதியிருக்கும் மேகஸந்தேச முகவுரையைக் கண்ணுறுக்கும் கற்புடையோர் அனைவரும் அந்தரங்கத்தில் அடங்காமகிழ்ச்சியடைவரென்பது திண்ணம். அங்கு கூறப்பட்டுள்ள விஷயங்களை தமிழ்ப்பண்டிதரும் கண்டு களிக்கட்டுமென்று யாம் இங்கு எழுதப்புகுந்தனம்.

இம்மேகஸந்தேசமென்னும் காவியத்தை தர்பணகாரர் முதலியோர் கண்டகாவிய மென்கின்றனர்; தண்டியின் அபிப்பிராயத்தை அநுசரித்தவரோ மஹாகாவிய மென்றே கருதுகின்றனர்.

தனது அதிகாரத்தில் அஹங்காரங்கொண்டமையால் தன் யஜமானன் சபிக்க, அதனால் மங்கிய மகிமையை யுடையவனை குபேரனிடம் பணிவிடை செய்யும்யக்ஷனொருவன் (யக்ஷன் என்று தேவர்களில் ஒருஜாதி) ஸ்ரீராமன் வஸித்த சித்ரகூட பர்வதத்திலிருக்கும் ஆச்ரமங்களில் ஆங்காங்கு வாஸம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஒருக்கால் ஆடிமாதத்து முதல் தினத்தன்று மேகத்தைக் கண்டு, கண்களிரண்டினும் நீர்ததும்ப வெகுநேரம் ஆலோசித்துவிட்டு, வெகுபிரயாசத்துடன் தனதுசோகத்தை அடக்கிக்கொண்டு, தன் மனதுக்கிசைந்த மனைவி உயிர்பிழைத்திருப்பதை விரும்பியவனாய், இராமகிரியிற் கொண்டு அளகாபுரிவரையில் ஆதியில் வழியையும்அதன்பின்பு ஸந்தேச (செய்தி) விஷயங்களையும் மொழிந்து, தன்பிரியமுள்ள பத்தினியினிடத்திற்கு மேகத்தை தூதனுப்புகிறான் என்கிற இக்கதையின் வரலாறு மிகவுமினிது.

ஸீதையினிடம் இராமன் ஹநுமானைத்தூது அனுப்பிய விஷயத்தை மனத்தில் வைத்துக்கொண்டு கவி மேகஸந்தேசத்தை யியற்றியதாகச்சொல்லுகின்றனர்; என மல்லிநாதனென்னும் பிரஸித்த வ்யாக்யாதாவால் சொல்லப்படுகிறது. இது யுக்தமேயாம். மஹாகவிகளது வாக்கில் மறைவிடமாகவாவது மஹாபுருடர்களுடைய சரித்ரவர்ணனைகளின் வாஸனையுமின்றி, மற்றஸாதாரணகவிகளுக்குப்போற் குறிப்பான வுத்தேசமேதுமின்றி, ஏதோ தோன்றியவாறு சொல்லுவதில் விருப்பம் எப்பொழுதும் உண்டாகமாட்டாது. அவ்வாறே பட்டபவபூதியானவன் தான் கற்பனைசெய்த சரித்திரமாகிய மாலதீமாதவத்தில் நாயகனை மாதவன் என்கிற பெயருடன் அழைத்து, 'குவலயதளச்யாம:' (கருநெய்தற் புஷ்பம் போற் கரியதிருமேனி வாய்ந்தவன்) என்று அவனை வர்ணித்து, தனது மனத்தில் மறைந்துள்ள கருத்தை யுணர்த்துகிறான். இக் கவிராயனோ (காளிதாஸன்) வான்மீகிமாமுனிவரது மேன்மையான மொழிகளென்னும் அமுதத்தை அனவரதமும் அருந்தியவனாய்த், தன்னுடைய காவ்யங்களெல்



லாவற்றிலும் சொற்பொருள் அனைத்தாலும் ஸ்ரீமத் ராமாயணத்தையே அநுசரிக்கின்றான் என்பது மேதாவிகளுக்குத் தெரியாததல்ல. கண்ணாடியில் நமது ப்ரதிபிம்பத்தைக் காண்போமானால் அது எவ்வகையிலும் நம்மை உருவத்தில் அநுகரிப்பதாகவேயிருப்பதுடன், நாம் பார்க்கும் திசையை அது பாராமல் நமக்கு எதிர்முகமாயிருந்துகொண்டு நாம் பார்க்கும் திசைக்கு எதிரிடையான திக்கையே அது பார்க்கின்றதானாலும், அப்பிரதிபிம்பம் நம்மை அநுகரணம் செய்வதில் அணுவளவேனும் குறைந்ததாக நாமொருபொழுதும் நினைப்பதில்லையன்றோ? அவ்வாறே தென்திசையை நோக்கிச் சென்ற ஹநுமானை அநுகரணம் செய்வதற்காக மேகத்திற்கு வடதிசையை நோக்கிய பிரயாணமானது இச்சந்தர்ப்பத்திற் சற்றேனும் தூஷணமாகமாட்டாது; ஆனால் அது மறைபொருளையே உயிராகவுடைய மஹாகவியினது மொழிகளுக்குப் பொருந்திய பூஷணமேயாம். அவ்விதமே மஹாகவியான காளிதாஸன் இக்காவ்யத்தில் பதம் பொருள் இரண்டாலும் இராமாயணத்தைத் தான்பின்பற்றுவதாக நன்கு குறிப்பிடுகின்றான். அஃதெங்ஙனமெனில்:—

முதன் முதலில் தானே கவி ப்ரியதமையை விட்டுப்பிரிந்தவனை யக்ஷனை 'கச்சித்' (ஒராளொருவன்) ஒன்று சொல்லிக்கொட்டு இந்நாவினால் கவிலவொண்ணாத மகிமைவாய்ந்த ஓர் மஹாபுருடனையே நாயகனாக வேற்படுத்துகிறான் என்பதானது, நன்று நம்பக்கூடியதேயாம். "ஜநகதநயாஸ்நாநபுண்யோதகேஷு," 'ராமகிர்யாச்ரமேஷு,' 'ரகுபதிபதைரங்கிதம்,' "தசமுகபுஜோச்ச்வாஸிதப்ரஸ்தஸந்தே:" 'இத்யாக்யாதே பவநதநயம் மைதிலீவோந்முகீ ஸா' என்கிற பதங்களைப் பிரயோகிக்கின்ற இம் மஹாகவியானவன் இராமாயணக் கதையையே நிச்சயமாய் இங்கே கொண்டு கோஷிக்கின்றான் என்பது எந்தப் பகுத்தறிவுள்ள படிப்பாளியின் புத்தியிற்றான் புலப்படாமலிருக்கக்கூடும்? மேலும் இராமாயணத்திற் கூறியவாறே ஹநுமானுக்குச் சொன்ன கஜம், கிரிசிகரம் முதலிய த்ருஷ்டாந்தங்களையும், இஷ்டம் வாய்ந்தவிதம் உருவமெடுத்துக்கொள்ளும் வியப்பையும் இங்கு மேகத்தினிடமும் தொடுக்கின்றமையாலும், வானரங்கள் செல்லுவதற்கு சுக்ரீவன் சொல்லிய வழிகளைப்போல்

இங்கு மேகத்துக்கும் அறிவிக்கின்றபடியாலும், கைலையங்கிரிமேல் அமைந்திருக்கும் அளகாபுரியைச் சுவேலபர்வதத்தின் உச்சியிலிருக்கும், இலங்காபுரியைப்போல் ஆலோசிக்கவேண்டியிருப்பதாலும், இலங்கையில் ஹநுமான்போல் மேகமானது அளகையில் அந்திப்பொழுதிற் பிரவேசிக்கவேண்டுவதைப்பிரகடனம் பண்ணுவதாலும், ஹநுமான்போல் மேகமும் இரவில் அங்கங்கே ஒடுங்கிக்கொண்டு அங்கு போய்ச்செய்திகளைச்சொல்லவேண்டிய விதங்களை விவரிப்பதாலும், அசோகவனிகையின் மத்யத்தில் ஆதரிப்பாரின்றி வீற்றிருக்கும் ஜானகியின் மிகவுந்தீனமான அவஸ்தையை வர்ணிக்கும் வான்மீகியை அநுஸரித்துச்சற்றும் ஏற்றக்குறைவின்றி அம்முனிவர் மொழிந்த விசேஷணங்களையே இக் காவ்யத்தின் நாயிகைக்கும் உதகரிக்கின்றமையாலும், செய்திகளைச் சொல்லியனுப்புமிடத்துக் குறிப்பிட்ட அபிஜ்ஞான தானத்தை யிங்குங்கொண்டு தொடுப்பதாலும் இம்மஹாகவியானவன் தனதுள்ளத்திலிருக்கும் எண்ணங்களனைத்தையும் போதுமாறு புலப்படுத்துகிறானென்பது ரஸிகர்களின் மனதுக்கு மறைவிடமானதல்ல.

இதையெல்லாங்கருதியே கவிகளுக்கெல்லாங் கவியும், வேதாந்திகளுக்கு வேதாந்தியும், ஞானிகளுக்கு ஞானியும், பக்தருக்குப் பக்தரும், வாதிகளுக்கு வாதியும், சாந்தருக்கு சாந்தரும், ஆனதுபற்றியே கவிதார்க்கிக ஸிம்ஹமென்றும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரென்றும், பலபிருதுகளைப் பெற்றவருமான ஸ்ரீவேதாந்ததேசிகர் வெளிப்படையாகவே, ஸீதாராமர் ஸம்பந்தமான (ஸீதாராமவ்யதிகரஸகம்) ஹம்ஸ ஸந்தேசமென்னும் மேகஸந்தேசத்தை யொத்த காவ்யத்தைத்தான் செய்தருளினார். தான்பின்பற்றுவதால், கவி ஸார்வபௌமனான காளிதாஸனிடத்தில் தனது கௌரவாதிசயத்தைப் பிரகடனம் பண்ணுவதானது இந்த ஸ்ரீநிகமாந்த குருவினது இயற்கைத்தன்மையேயாம். ஆனதுபற்றித்தான் ரகுவம்சத்துக்கு ஸமகக்ஷியாக யாதவாப்யுதயத்தைச் செய்யவிரும்பியவரான வேதாந்ததேசிகர், ரகுவம்சத்தைப்போல் தமது காவ்யத்திலும், முதற்பாகத்தை அநுஷ்டுப்சந்தஸ்ஸென்னும் விருத்தங்களில் தொடங்கி 'வாகர்த்தாவிவ' என்கிற பத்யத்தில் கவிசக்ரவர்த்தியினாற் பிரயோகிக்கப்பெற்ற 'வந்தே' என்கிற பதத்தையே 'வந்தே ப்ருந்தாவனசரம்' என்று முதல் பத்யத்தில் பிரயோகித்து காவ்யத்தையெழுதத்தொடங்கினார். 'வாகர்த்தாவிவ' என்கிற ச்லோகத்துக்கு வ்யாக்யார்த்தங்களையும், ரஸவிசேஷங்களையும் எடுத்துக்காட்டி அந்த ச்லோகத்தின் அரும்பொருள்கள் ஸ்ரீமாந்-அப்பய்ய தீக்ஷிதரவர்களால் தமது சித்ரமீமாம்ஸையென்னும் கிரந்தத்திற் கூறப்பட்டவாறே 'வந்தே ப்ருந்தாவனசரம்' என்கிற பத்யத்திற்கும், தம்மாற் செய்தருளப்பெற்ற யாதவாப்யுதயவ்யாக்யானத்தில் அவ்விசேஷங்கள் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றதென்பது ரஸிகர்களாலறியப்படுவது அஸாத்தியமானதல்ல. அங்ஙனமே 'ஜாதம் வம்சே புவநவிதிதே' என்கிற ச்லோகத்தில் மேகத்துக்கு விசேஷணமாக பிரயோகித்த 'ஜாதம் வம்சே' என்பனித 'வம்சே ஜாதஸ்ஸவிதுரநகே' என்று முதல் பத்யத்தில் கதாநாயகனுக்கே விசேஷணமாகச் சேர்க்கின்றமையாற் சொற்பொருள் முதலியவற்றால் எவ்வகையிலும் காளிதாஸனது காவ்யங்களில் கவிதார்க்கிக ஸிம்ஹமானவர் தமக்கு அபரிமிதமான ஆதராதிசயத்தை அறிவிக்கின்றார். தமக்கு பகவத்பக்தி பரிபூர்ணமாயிருப்பதால் அமிருதபீஜமான அநுஸ்வாரத்துடன் கூடிய வகாரத்தை ஆதியிலுடையதான 'வந்தே' என்கிற பதத்தைத்தான் யாதவாப்யுதயத்தில் முதல் சுலோகத்தின் ஆரம்பத்தில் நிர்தேசம் செய்தார். ஹம்ஸஸந்தேசத்திலும் 'ஜாதோ வம்சே' என்று மொழிந்தாற் பதங்களுக்கு இடையில் தளர்ச்சியுண்டாகின்றமையால் அதைப்பரிகரிக்கும் நிமித்தம், தூதனாகவேற்படுத்திய மேகத்திற்கு விசேஷணமாகச் சொல்வதைப் பார்க்கிலும், நாயகனுக்கே அவ்விசேஷணம் மிகவும் விசேஷமாகப் பொருந்துவதை உத்தேசித்து 'கச்சித்' ஓராளொருவன்' என்று ஊர் பெயர் முதலிய குறிப்பு ஏதுமில்லாத அப்ரஸித்தனைப்போல் உரைப்பதை ஸகியாதவரும் பரமபாகவதருமான ஸ்ரீவேங்கடநாதாசாரியர் அமிருதபீஜமான அநுஸ்வாரத்துடன்கூடிய வகாரத்தை முதன்முதலில் மொழிந்தனரென்பது, மிகவும் ஊக்கத்துடன் ஆலோசிக்கும் மேதாவிகளது மனதில் மகிழ்ச்சியை உண்டாக்குமென்பது திண்ணம். ஆனால் அன்னியர் மிதித்தவழியிற் செல்லாமலிருப்பது, அல்லது பிறர் மிதித்துப்பழகிய பாதையையே தான் பின்னும் விசேஷமாகப் பரிஷ்காரம்செய்து அதனால்ஸஞ்சரிக்கின்றார் என்னும், இச்

ஸம்ப்ரதாயமானது ஸ்ரீவேதாந்த தேசிகரது இயற்கைத்தன்மையேயாம். ஆனதுபற்றித்தான் பெரும்பான்மையான விடங்களில் மேகஸந்தேசத்திற்கும் மேலாக ஹம்ஸஸந்தேசத்தில் ரஸம் முதலியவைகளில் விசேஷமான சமத்காராதிசயங்கள் அதிகமாய் அனுபவிக்கப்படுகின்றன. ஸ்ரீவேங்கடநாதார்யன் மேகஸந்தேசத்தில் எவ்வளவு பத்யங்களோ அவ்வளவே பத்யங்களை தமது ஹம்ஸஸந்தேசத்திலும் செய்தருளியிருக்கின்றார் என்பது மிகவும் வியக்கத்தக்கதேயாம். (மே. மு. ஆ. 63 ; இ. ஆ. 47 மொத்தம் 110· ஹம். மு. ஆ. 60; இ. ஆ. 50 மொத்தம் 110.) 'தசேந்த்ரியாநநம் கோரம்' என்கிற ப்ரமாணத்தை அனுசரித்து 'தர்போதக்ரதசேந்த்ரியாநநமனோ நக்தஞ்சராதிஷ்டிதே' என்று தான் இயற்றியவராக, ஹநுமத்ஸந்தேசத்தின் ஆந்தரமான அர்த்தமாகிய ஆத்யாத்மிக விஷயத்தை அந்தரங்கத்திற் கொண்டவரான வேதாந்தசேதிகர் ஹம்ஸஸந்தேசத்தில் ஆத்யாத்மிகமான அர்த்தங்களை அறிவிக்கக்கூடியவைகளான 'நிசாகிரமீ' முதலிய ஸாங்கேதிக பதங்களை ப்ரயோகித்திருக்கின்றவாறே, இங்கு மேகஸந்தேசத்திலும் 'ப்ரக்ருதிபுருஷ' முதலிய அவ்விதபதங்கள் அதிகமாய் வழங்கப்பட்டிருக்கின்றனவென்பதை வித்வான்கள் தாமே விசாரிக்கப் புலப்படும்.

காளிதாஸனும் இச்சிறிய மேகஸந்தேசமென்னும் காவ்யத்தில் பதம் பொருள் இரண்டினும் இனிமையும், வர்ணனைகளின் விசேஷமும், வ்யாக்யார்த்தங்களின் வியப்பும், ரஸபரிபோஷணையும், மற்றும் சமத்காராதிசயங்களும் மிகவும் இன்பமாகவே இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனதுபற்றி இதில் ஒப்பற்ற சாதுர்யங்களின் சிறப்பை அனுபவித்துத்தனது அஸாதாரணமான ஆதரத்தை அறிவிக்குமாறு பார்ச்வாப்புதயத்தை இயற்றிய கவி, மேகஸந்தேசபத்யங்களிலிருந்து ஒவ்வோர் அடியை யெடுத்துக்கொண்டு, பத்யமொவ்வொன்றிலும் சேர்த்து, சுலோகங்களை யெழுதி கிரமமாக மேகஸந்தேசம் அனைத்தையும் தனது காவ்யத்திலுள்ளடக்கித் தன்னைப் பின்பு கிருதார்த்தனாக வெண்ணினன். இங்ஙனமே நேமிதூத காவ்யகர்த்தாவும், மேகஸந்தேசத்தினின்று ஒவ்வொரு பத்யத்தினுடையவும் நான்காவது பாதத்தை யெடுத்துத் தான் எழுதிய காவ்யத்தின் ஒவ்வொரு சுலோகத்தினுடையவும், நான்காவது பாதமாகச் சேர்த்துத் தன்னுடைய க்ரந்தத்தை முடித்துத் தன் காவ்யத்திற்கு மேலான மங்களத்தையும்; ஒப்பற்ற பரிஷ்காரத்தையும் செய்துகொண்டான். அவ்விதமே பவபூதியும் 'கச்சித் ஸௌம்ய,' 'தைவாத் பச்யே:' என்கிற சுலோகங்கள் இரண்டினால் மேகஸந்தேச காவ்யத்தின் பொருள்கள் அனைத்தையும் எடுத்துரைத்து மாலதீமாதவத்துக்கு மேலான மேன்மையை மனத்தில் எண்ணுகிறான்.

இக்காளிதாஸனே ஸந்தேச காவ்யங்களுக்கு மார்க்கத்தை யுபதேசித்த மஹாகவியாவான். ஸ்ரீமத் ராமாயணத்திலும் ஸ்ரீபாகவதத்திலும் காணப்படும் ஸந்தேச (தூதனுப்புவது) பத்ததியானது முதலில் இம்மஹா கவியினால் தானே ஸரஸமான கவிதைக்கு ஸஞ்சாரத்திற்குரியதாக பரிஷ்கரிக்கப்பட்டது. இதையனுஸரித்து உலகத்தில் ப்ரவர்த்தித்த ஸந்தேச காவ்யங்களுள், ஸ்ரீமத்-வேதாந்த தேசிகர் இயற்றிய ஹம்ஸஸந்தேசமும், உத்தண்ட சாஸ்திரிகள் செய்த கோகில ஸந்தேசமும், லக்ஷ்மீதாஸன் இயற்றிய சுகஸந்தேசமும் ஸுப்ரஸித்தங்கள். உத்தவதூதம் முதலிய சிலவற்றின் பெயர்கள் மாத்திரம் கேட்கப்படுகின்றனவேயன்றி நாம் அவைகளைக் கண்களாற் கண்டதில்லை. மனோதூத வாததூதம் முதலியவைகள் பலவகையிலும் வேறுபாடான மாதிரிகளாயும், ரஸம் முதலியவைகளிற் குறைந்தவைகளாயுமிருக்கின்றனவாதலால் அவைகளை இங்குயாம் எண்ணிக்கையிற் சேர்க்க விரும்புகிறோமில்லை.

பெரும்பாலும் பெயர்பெற்ற ஸந்தேச காவ்யங்கள் மந்தாக்ராந்தை யென்னும் விருத்தத்தைக்கொண்டே இயற்றப்பட்டிருக்கின்றன. இதே விருத்தத்தை இவ்விஷயத்தில் ஆதரித்ததற்குக் காரண மின்னதெனக் காண்பதற்கு யாம் இங்கு முயலுவோம். ஆலங்காரிகராவது, சந்தச் சாத்திரங்களைச்செய்தவராவது இலக்கண நூல்களில் ஓரிடத்தும் ஒருபொழுதும் இவ்விஷயத்தை விசாரித்தவரல்லர். இது அவரவர் இஷ்டத்தைப் பொருந்தியதென்பார் சிலர். நாமோ, மந்தாக்ராந்த விருத்தத்தில் ஒவ்வோர் அடியிலும் முதலில் நான்காவது எழுத்திலும், பின்பு ஆறிலும், அதன்பின் ஏழிலும் யதியென்னும் ஓய்விடம் ஏற்பட்டிருப்பதால், விரஹவேதனையால் சோர்

திருக்கும் இக்கதாநாயகனுக்கு ஸந்தேச (செய்திசொல்லும்) ஸமயத்தில் கிரமமாகச் சற்று நின்று நின்று மூச்சுவிட்டுச் சொல்வது சுலபமாயிருக்குமென்றெண்ணி, மிகவும் அநுபவசாலியான மஹாகவியினால் இவ்விருத்தம் விரும்பப்பட்டதென்றே கூறுவோம். ஆனது பற்றியே இவ்விருத்தம் கிரமமாக ஏறுவதற்கு மெதுவாய் ஆக்ரமிக்கக்கூடிய ரீதியாய் இருப்பதால் 'மந்தாக்ராந்தா' என்னும் பெயரால் அழைக்கப்படுவதாக யாம் கருதுகின்றனம். சொற்ப அக்ஷரங்களையுடைய விருத்தங்களிற் சொல்லவேண்டிய விஷயம் முழுதிலும் கூறமுடியாததுபற்றியும், மிகவும் அதிகமான அக்ஷரங்களையுடைய நீண்டவிருத்தங்கள் மனத்துக்கு வெறுப்பையுண்டாக்குபவைகளானாலும், அவ்விரண்டாலும் காரியமாகாதென்றெண்ணி, நடுத்தரமான பதினேழு எழுத்துக்களடங்கிய விருத்தத்தை விவேகியான கவி விரும்பியதற்குக் காரணமாகுமென்பது எமது அபிப்பிராயம். பவபூதி முதலியவர்கள் சிகரிணீ விருத்தத்தில் விசேஷித்ததுபோல், காளிதாஸனும் இம் மந்தாக்ராந்தா விருத்தத்தில் மேன்மைவாய்ந்தவனாகிறானென்பான் க்ஷேமேந்திரன்.

இதிற் சாபத்தினால் நேர்ந்த பிரிவாற்றாமையின் காரணமாகவுண்டான விப்ரலம்பச்ருங்காரமே ரஸம் * விப்ரலம்பச்ருங்காரத்தை வர்ணிப்பதில் காளிதாஸனது திறமையோ நிகரில்லது. விப்ரலம்பமின்றி சம்போகத்தினால் ஏற்படும் ச்ருங்காரத்திற்கு இனிப்பென்பது எப்பொழுதும் உண்டாவது அரிது. "நவிநா விப்ரலம்பேந ஸம்போக: "புஷ்டிம்ருச்சதி" (விப்ரலம்பமின்றி ஸம்போகச்ருங்காரம் புஷ்டியடையா) என்று அதேபொருளைப் பண்டிதர் பலர் பகர்ந்திருக்கின்றனர். மேலும் சாபத்தினால் விரஹ விஷயத்தில் விப்ரலம்பச்ருங்காரத்தைப் பிரயோகிப்பதில் இம்மஹா கவிக்குப் பேராவலுண்டு. அங்ஙனமே சாகுந்தளத்திலும், விக்ரமோர்வசீயத்திலும் இவ் விப்ரலம்பத்தை மிகவும் இனிதாக இணைத்திருக்கின்றனன். ரஸத்திற்கேற்றவாறே நாயகனுக்கும் நாயிகைக்கும் அந்தந்த தசைகளை வெகு திறமையுடன் இக்கவிராயன் செப்பியிருப்பது புல்லறிவாளர்களின் புத்திக்கும் புலப்படாமலிராது.

*ஸம்போகச்ருங்காரம், விப்ரலம்பச்ருங்காரம் என்று ச்ருங்காரம் இருவகைப்படும். ஸம்போகமென்பது சேர்ந்திருப்பது, விப்ரலம்பம் பிரிந்திருப்பது.



இப்பாரதகண்டத்துப்பண்டிதருக்காவது கவிகளுக்காவது பெரும்பாலும் தாம் வஸிக்குமிடத்திற்கு மிகவும் அருகிலுள்ள தேசாந்தரங்களைக் குறித்துங்கூட வரலாறு சற்றேனும் தெரியவராதென்று அனைவரும் அறிந்த விஷயமேயாகும். ஆனால் இம்மஹாகவிக்கோ தேசாந்திர விஷயமான பரிசயமும் பூகோள சாஸ்திரத்திலுண்டான நுண்ணறிவும் அஸாதாரணமும் ஆச்சரியகரமுமான தென்பதை மேகத்திற்குச்செய்திசொல்லி அனுப்புமிடத்து மார்க்கங்களைமொழிந்திருக்கும் மாதிரியை ஆராய்ந்து பார்க்கும் அறிஞர் எவர்தான் அங்கீகரிக்காமலிருக்கமாட்டுவர்.

ரஸமயமான இச்சிறு ஸந்தேச காவ்யத்திற்கு சற்றேறக்குறைய இருபது வ்யாக்யானங்கள் இருக்கின்றன. அவற்றுள்குணங்கள் அனைத்திலும் எவ்விடத்தும் மிகச் சிறந்தது மல்லிநாதனது வ்யாக்யானந்தானென விவாதமேதுமின்றி வித்வான்களெல்லோரும் ஒருங்கே கொண்டாடிக் கூத்தாடுகின்றனர். நம் தேயத்து வித்வான்களுக்கு மல்லிநாத மஹோபாத்யாயரிடத்து வேதபுருஷனிடம் போல் கரைபுரண்டல்லவோ கௌரவபுத்தி குடிகொண்டிருக்கின்றது? அவனுரைத்த பொருளனைத்தும் தனக்குத்தானே ப்ரமாண பதவியைப் பெறுகின்றதென்னும் ஓர் அசையாத அபிமானத்தினால் அவனது மொழிகளில் நல்லது பொல்லாதது, ரஸமானது விரஸமானது என்பவை முதலிய விசாரமேனும் செய்வதும் பெரும் பாதகத்தொழிலெனப் பாவித்தவர்களாயும், அவ்வாறு விசனிக்க முயன்றவர்களை விஷயத்தை யுணராமலே கண்களை மூடிக்கொண்டு வெகு தூரமெடுத்தெறிந்து அவமானப்படுத்துகிறவர்களாயுமிருக்கும் கேவலம் கிளிப்பிள்ளைகளைப்போல் கேட்டகல்வியை மட்டும் காதுபிளக்கக் கதறுகிற போலிப்பண்டிதர்; இப்பெரும் நாகரிகம் வாய்ந்த காலத்தும் இப்புவிதனில் இன்னும் இருக்கின்றனரேயென்று எமது மனம் வியப்புறுகின்றது. மல்லிநாதனைவிட வ்யாக்யான மெழுதுவதில் வேறொரு வித்துவான் உளனென்று யாம் ஒருக்கால் சொல்லப்புகில், அந்தோ அந்தக்ஷணமே அரைகுறையாயு மறியாத பண்டிதரென்னும் பேதையரின் பரிஹாஸத்திற்குப் பாத்திரராவோமென்பது ப்ரத்யக்ஷமானதேயாம். இவ்வித்வான் வெகு காவ்யங்களுக்கு வ்யாக்யான

மொழிபெயர்ப்பினென்றும் வெகுவிஷயங்களைக் கேட்டுக் கற்றறிந்த பெரும் கற்புடையோனென்றும் இம்மல்லிநாத மஹோபாத்யாயரிடத்து எமக்கும் உண்மையாகவே கௌரவபுத்தி மிகவும் அதிகமாயுண்டு. ஆனால் காவ்யங்களுக்கு வ்யாக்யானமெழுதுவதில் வித்வான்களெல்லாரும் ஒருங்கே கொண்டாடும் அவ்வளவு அளவற்ற புகழுக்கு இவன் அருகனுவென்பதில்தான் எமக்குப்பலமான ஸந்தேகமேற்படுகின்றது. ஏனெனில் இவனது வ்யாக்யானங்களிற் பலவிடங்களில் தவறுதல்கள் அடிக்கடியுண்டாயிருப்பதையும், அவனுரைத்திருப்பதைவிட அவ்வியாக்கியானமெழுதவேண்டிய க்ரந்தத்திற்கு விசேஷமாகாரணத்தை விவரிப்பதும், அர்த்த புஷ்டியைப் பிரகடனம் பண்ணுவதும், லலிதத்திலும் பரிபூர்ணமாயிருப்பதுமான வேறு வ்யாக்யானத்தையும் யாமறிவோம். மேலும் மல்லிநாதனுக்குமுன் ஐந்தாறு வ்யாக்யாதாக்களாலாவது வ்யாக்யானமெழுதப்படாத அவ்விதமான காவ்யமொன்றுக்கும் மல்லிநாதனால் புதிதாக வ்யாக்யானம் வரையப்பட்டதென்பதில்லை. முன் ஒருவராலும் இயற்றப்படாத வ்யாக்யானமென்னும் விஷயத்தை ஒருவன் தான் முதன்முதலாகவே வரையத்தொடங்கியிருந்தால் வ்யாக்யாதாவுக்கு ஒப்பற்றபுகழைப் புகட்டலாகும். பிறர் சென்ற பழகியபதவியில் அதை அனுசரித்தொழுகுவது மிகவும் அனைவருக்கும் எளிது. வெகு வ்யாக்யான க்ரந்தங்களில் இங்குமங்குமாய் இறைந்திருக்கும் பொருள்களின் திரள்களை ஓரிடத்திற் சேர்த்துக்காட்டுவது, அல்லது காவ்யவ்யாக்யானம் இயற்றுவதற்கு ஆரம்பித்த அந்தணருக்குள் இம் மல்லிநாத மஹோபாத்தியாயரேமுதல்வராக ஏற்பட்டது என்னும் இவைகளுள் ஏதேனுமொன்று இவ்வனம் பிறரால் பெறக்கூடாத புகழுக்கு மூலபூதமான முகாந்தரமாகவேண்டும்.

(தொடரும்)

---

உ

# சோதிடகணிதம்.

(முற்றொடர்ச்சி.)

## பீடிகாவிதிகள்.

இப்பூகோளத்தை 360-பாகம் வகுக்கப்பட்டிருக்கிறது. இது ஹிந்து, ஆங்கில சகலபண்டிதர்களுக்கும் சம்மதம்.

பாகையென்பது இந்த 360-ல் ஒருபாகம். ஆங்கிலத்தில் டிகிரி (Degree) என்றும் ° இக்குறியிட்டும் எழுதுவது.

கலையென்பது விகலை 60-கொண்டதும், பாகையின் 60-ல் ஒரு பாகம். ஆங்கிலத்தில் மினிட் என்றுசொல்லுவது. (மணி, மினிட்டு, செகண்டுகளை இதனுடன் கலக்கக்கூடாது).

விகலையை ஆங்கிலத்தில் செகண்டு என்றும் ‖ என்றகுறியிட்டும் எழுதுவது.

இராசியென்பது பூமண்டலத்தை மேற்கூறிய 360-பாகையில் 12-கூறாகச்செய்து அதிலொன்று. இவைகளுக்குத்தான் மேஷாதி இராசியென்றபெயர். இராசியொன்றிற்கு 30-பாகை.

தனம் என்றால் கூட்டுதல். ருணமென்றால் கழித்தல். புஜாகோடியென்பது ஒன்றுமுதல் 3-ராசிவரையில் புஜாவென்றும், 3-ராசிமுதல் 6-இராசிவரையில் கோடியென்றும், 6-க்குமேல் 9-வரையில் புஜாவென்றும் 9-க்குமேல் 12-வரையில் கோடியென்றும் பெயர்.

ராசியொன்றுக்கு வாக்கியம் எட்டாகவும், வாக்கியம் ஒன்றுக்கு பாகை $3\frac{3}{4}$-ஆகச் செய்து பின்னால் கொடுக்கப்படும் சா சமஸ்காரம் செய்வது.

### II. அதிகாரம்.

நமக்குவேண்டிய வருஷம், மாதம், தேதி, வாரம், நாழிகை வகையராக்களைத் தெரிந்துகொண்டு அந்தத்தேதியுள்ள வருஷத்தி

ற்குபிரபவாதி சென்ற வருஷத்தொகையில் 1789-கூட்ட சாலிவாகனசகாப்தம்.

[இந்தத்துருவம் கலி 5000-வருஷத்திய பிரபவாதிக்கு இந்த அறுபதுவருடம் சென்றபிறகு 1789-டன் 60-கூட்டிக்காணவேண்டியது.]

மேற்கண்ட சாலிவாகன சகாப்தத்துடன் 3179-கூட்ட கலிவருடம். கலிவருடத்தை 365-ல் பெருக்கியதொகையுடன்; (இந்தப்படி பெருக்கிய எண்களாகும்.)

மறுபடியுடன் கலியுகவருஷத்தை 4-னால் வகுத்துவந்த ஈவை மேலே வைத்திருக்கும் நாளுடன் கூட்டிக்கொள்ளவும்.

மறுபடியும் கலியுகவருடத்தை வைத்து 5-னால் பெருக்கிவந்த தொகையில் 1237-கழித்துவந்த மிச்சத்தை 576-னால் வகுக்கவந்த ஈவுநாள் பாக்கியை 60-ல் பெருக்கி முன் 576-ல்வகுக்கவந்த ஈவு நாழிகை.

மறுபடியும் பாக்கியை 60-ல் பெருக்கி 576-ல் வகுத்துவந்த ஈவு விநாடி.

மறுபடியும் பாக்கியை 60-ல் பெருக்கி 576-க்கு கொடுத்துவந்த ஈவு பரை—இதில்வரும் மிச்சம் 15, 30, 45-ஆகவேதான் மீதம்வரும். (இல்லாவிட்டால் கணக்கில் தப்பிதமிருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம்.)

இந்த நாழிமுதலியவற்றை மேலேவைத்திருக்கும் நாளோடு கூட்ட இஷ்டமான (நமக்கு வேண்டிய) வருஷப்பிரவேசதினமாகும்.

மேலே வருஷப்பிரவேசத்திற்குவந்த கலிதினத்தை 7-னால் வகுத்துவந்தமிச்சத்தை வெள்ளிக்கிழமைமுதலாக எண்ண வந்ததுபோக மறுதினம் வருஷப்பிரவேசதினம். பகலில் பிரவேசமானால் அன்றையதினம் முதல்தேதி. இரவில்பிரவேசமானால் மறுநாள்முதல்தேதி, கண்டவாக்கியத்தோடு எந்தமாத சங்கரமணம் (கூடுதல்) வேண்டுமோ அதற்குமுன்மாதத்திய மாதவாக்கியத்தைக்கூட்ட இஷ்டமான மாசப்பிரவேசமாகும்.



பிறகு எந்தத்தேதிக்கு வேண்டுமோ அதற்கு முன்தேதியைக் கூட்டி கலிதினத்துடன் கூட்டி நாழிவிநாடி முதலியவற்றைத் தள்ளிவிட்டுப் பாக்கித்தினங்களிலிருந்து 1683112-கழித்த மிச்சம் நவக்கோளுக்குக்கண்டமாகும். இந்தப் பாக்கிவந்த கண்டத்தை 7-னால் வகுத்துவந்த மிச்சத்தை செவ்வாய்க்கிழமை முதலாகவெண்ண மறுதினம் ஜநந கிழமைவரும்.

## III. அதிகாரம்.

## சூரியமத்தியகணிதம்.

மேலேகண்ட கண்டத்தை 31-ல் பெருக்கி 11323-னால் வகுத்துவந்த ஈவைத்தள்ளிவிட்டு, சேஷத்தை 12-ல் பெருக்கி 11323-ல் வகுக்கவந்த ஈவு ராசி; மிச்சத்தை 30-ல் பெருக்கி 11323-ல் வகுக்கவந்த ஈவு பாகை; மிச்சத்தை 60-ல் பெருக்கி மேலேகாட்டிய வகுக்குமெண்ணால் வகுத்துவந்த ஈவு விகலை. இதற்குமேல் மிச்சம்வருவது பாதிக்குமேற்பட்டால் ஒரு விகலையாகவும் இல்லாவிட்டால் தள்ளியும்விடவேண்டியது.

மறுபடியும் நவக்கோள் கண்டத்தை 10026-ல் பெருக்கவந்த ஈவு, கலை. மிச்சத்தை விகலைக்குக்கொண்டுவந்து மீதத்தைத்தள்ளிவிட்டு இந்த ஈவை மேலேவந்த இராசி பாகைகளில் சேஷபாகைகலைகளைக் கழித்துவிட்டு மிச்சமிருப்பது கண்டசேஷராசி, பாகை கலைகளென்று சொல்லப்படும். இது ஜநநதேதிக்குமுன் வரையிலாயிற்று. நாழிகை விநாடிகளுக்கு, சூரியனுடைய 59-கலை 8-விநாடியிற் பங்கிட்டு மேலிருப்பனவற்றோடு கூட்ட சூரியமத்தியமாகும்.

(இன்னும் வரும்.)

இலக்கணவிளக்க பரம்பரை,
சோமசுந்தரதேசிகன்.

உ

சிவமயம்.

# நல்லொழுக்கம்.

## ஆறும் அதிகாரம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

எதிர்த்தகட்சிக்காரர் குற்றத்திலிருந்தால் அதட்டி உத்தரம் சொல்லப்படுவதினும் பொறுமையுடன் சொல்லப்படின் அதிசீக்கிரம் தெளிவடைகின்றனர். நாம் சொல்லக்கருதுவதெல்லாங்கூடி கட்சி பற்றிய கருத்துக்களைக்கவனிப்பதில் மழுங்கலும் நல்லெண்ணத்தைக் கவனிப்பதில் தீவிரப்படுவதும் மேலானதாக விருக்கின்றதென்பதேயாம். சமாதானத்திற்கிசைந்த காரியங்களைப்பின்பற்ற முயற்சிப்பதால் ஒருவனுக்குத்தன்னிடத்தில் தானே மிக்கஇன்பத்தை உடையவனாகின்றனன். நான் எதிர்க்கப் பட்டபொழுது, எத்தனையோ முறை எனக்குள் கோபம் ஜனித்து அநீதியாகவும் முகச்சுழிப்புடனும் நினைத்திருக்கிறேன் என்பதை நீர் எண்ணமுடியாது, ஆயினும் அத்தகைய மறுமொழிகளை அடக்குவதில் முயன்று வெற்றிபெற்றிருக்கிறேனென்று நம்புகிறேன். அதினால் யாதொரு நஷ்டமும் எனக்கு இல்லையென்பது எனக்குத்தெரியும்”

சித்திரவேலைக்காரராகிய பர்ரி (Burry) என்பவர் ரோம் (Rome) பட்டணத்திலிருக்கையிற் படம்சித்தரிப்பதையும் படவியாபாரத்தையும் பற்றி சித்திரத் தொழிலாளிகள், சித்திரப்பிரியர்களுடன் வழக்கப்படி மூர்க்கமான சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். அதன்பேரில் தர்க்கவாதயோக்யதையும், என்றும் உதாரகுணமுமுடைய அவருடைய இஷ்டனும் சுதேசியுமாகிய எட்மண்டு பர்க் (Edmund-Burke) என்பவர் அவருக்குபக்ஷமாயும் புத்திசாலித்தனமாயும் எழுதியது வருமாறு:— அன்புள்ள சிநேகிதனே! நான் சொல்வதைநம்பும். உலகத்திலுள்ள கெட்ட குணங்களுடன் மற்



போர்செய்யத்தக்க ஆயுதங்களும் உலகம் நமக்கு இணங்கியும், நாம் உலகத்திற் கிணங்கியும் இருப்பதற்குக் கருவியான குணங்களும் எவையெனில் மிதமாயிருத்தல், சாந்தம், மற்றவர்களிடம் தாக்ஷண்யம், நம்மைத்தானே நாம் மிகுதியும் அவநம்பிக்கை செய்கையுமாம். இவைகள் சிலர் எண்ணக் கூடியபடி அற்பசுபாவத்தின் குணங்கள் அல்ல. ஆனாற் பெருந்தன்மையும் மேன்மையுமான தன்மையுள்ள சற்குணங்களாகும். அவைகள் நமக்கு ஆறுதலையும், பாக்கியத்தையும் உதவுகிற அளவிற்கு நம்முடைய சுபாவத்தை மேன்மைப் படுத்துகின்றன. ஏனென்றால், நம்மைச்சூழ்ந்தவர்கள் ஒவ்வொருவரிடத்தும் சண்டை சல்லியம்செய்து, வழக்காடிக்காலங் கழிப்பதைப்போல நன்கமைப்பெற்ற ஆன்மாக்களுக்கு அயோக்கியமானவை வேறொன்றின்று. நம் இனத்தார்களுக்காக வின்றெனினும் பெரும்பாலும் நம்சொந்த நன்மைக்காகவாவது அவர்களுடன் சமாதானமாயிருத்தல் வேண்டும்'

மன அடக்கத்தின் பெருமையை அறிந்ததிலும், அதனைமற்றவர்களுக்குவாக்குவாதத்துடன்போதித்தமையிலும், பர்ன்ஸ் (Burns) கவிஞருக்கு மேற்பட்டவர் இல்லை. ஆனால் அதனை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்ததில் அவர் மிகவும் துர்பலமுள்ளவராய் இருந்தார். மற்றவர்களுக்கு வருத்தமுண்டாகுமாறு கடுமையும் சாதுர்யமுமான அவதூறுகளைச்சொல்லி இன்பப்படாமலிருக்கக்கூடவில்லை. அவர் உபயோகித்தவொவ்வொருபத்து பரிகாசமொழிகளுக்கும் நூறு சத்துருக்களைத்தனக்கு உற்பத்திசெய்துகொண்டனர் என்று சொல்வதுபுனைந்துரையன்றென, அவருடைய ஜீவசரித்திரக்காரர் ஒருவர் செப்புகின்றனர். ஆனால் இவ்வளவோடல்ல. இரங்கப்படத்தக்க பர்ன்ஸ் (Burns) என்பவர் தன் இச்சைகளை அடக்கி ஆளக்கூடவில்லை. ஆனால் அவைகளுக்குப் போதுமானபடி இடங்கொடுத்தனர்.

“ஆலோசனையற்ற அவருடையகுற்றங்கள் அவரைத்தாழ்மைப்படுத்தி அவருடையபெயருக்குத்தோஷமுண்டாக்கிற்று. சாராயக்கடையிற்சந்தோஷம் கொண்டாடுதற்குப்பூர்வம் உத்தேசிக்கப்பட்டு ஆனால் இளைஞருடைய மனசுகளில் அந்தரங்கமாய் அசுத்தத்தை விதைத்துவாராநின்றதுமானபாடல்களை பஹிரங்கத்துக்குக் கொண்டு

வராமல் நிறுத்தும்படியான அடக்கம் அவருக்குஇல்லாமற்போயிற்று. உள்ளவாறே இந்தக்கவிஞர் அனேகநேர்த்தியான கவிகளை உண்டாக்கியிருந்தபோதிலும், அவருடைய தூய்மையான கவிகளால் உண்டாகிய நன்மையைப்பார்க்கிலும், அவருடைய துன்மார்க்க கிரந்தங்களாலெழுந்த தீங்குஎவ்வளவோ அதிகமென்றும் அவருடைய அயோக்யமானபாடல்களை யோக்யமான பாடல்களுடன்சேர்த்து நாசப்படுத்துகிற விஷயத்தில், அவருடைய சகல கிரந்தங்களையும் நாசப்படுத்திவிடுவது மிகவும் நல்லகாரியமாயிருக்கும் என்றும் உறுதியாய்ச்சொல்வதுபுனைந்துரையன்று.

பிரான்சுதேசத்தின் பர்னஸ் என்று சொல்லப்பட்ட பிராஞ்சர் (Branger) விஷயத்திலும் இதே அபிப்பிராயம் உபயோகப்படுகின்றது. பிராஞ்சர் (Beranger) உம் அதேவிதமான தீக்ஷணமுள்ள தூஷணயோக்கியமான யூகத்தைஉடையவராயிருந்தார். அவருடைய காமஇச்சையும், வெகுஜனப்பிரியத்தின் விருப்பும், அப்படியேயிருந்தது. பிரான்சுக்காரரின் பிலுக்குத்தனத்தின் அதன் உச்சஸ்திதிவரை முகஸ்துதிசெய்யுங்கால் அவனுடைய தேசத்தார் விரும்பிய துன்மார்க்கங்களை வெகுதிறமையாய் எழுதிவகுத்தனர். பிராஞ்சர் (Branger) உடைய பாடல்களும் தையர்ஸ் (Thiers) உடையசரித்திரமும்பிரான்சுதேசத்தில் நெப்போலியன் (Napoleon) ஸ்தானத்திற்குரிய, வம்சத்தைஸ்தாபிப்பதற்குப் பெரும்பாலும் அதிகவேலை செய்தன. ஆனால் அநுபிராஞ்சர் (Brangeɪ) உடைய அனேகபாடல்கள் உண்டாக்குவதாக எண்ணப்படுகிற சன்மார்க்கத்தீங்கோடு ஒப்பிடப்படுகையில் மிகவும் அற்பமான தீங்காயிருந்தது. ஏனெனில் பிராஞ்சுக்காரருடையகுடும்பங்களில் அவைகள் செய்வதுபோலத் தாராளமாய் எங்கும்பரவி ஒரு ஜாதியை அசுத்தமாக்கிக் கொடுப்பதற்குப்போதுமான ஆபாசமும் துன்மார்க்கமுமான சொரூபங்களை விளக்குகின்றன.

பர்ன்ஸ் (Burns) என்பவர் இருபத்தெட்டாவது வயசில் எழுதிய நேர்த்தியான கவிகளிலொன்று "எ-பார்ட்ஸ் எப்பிடேப் (A-Bards-Epitaph) என்னும் பெயரையுடையது. முன்னுணர்ச்சியினாலேயே தன்னுடைய சொந்த ஒழுக்கத்தை விவரிக்கின்றது. இதோ ஒரு உண்மையும் பரிசுத்தமுமான உறுதிமொழியாயிருக்கின்



றது. தன்னுடைய சொந்த சித்தத்திலிருந்தும், வெளிப்படுத்திய ஒரு பகிரங்கமான விஞ்ஞாபனம், உண்மையும், கவிலெட்சணம் பொருந்தியதும், மனுஷத்தன்மையுமான தோஷ அங்கீகாரம் தீர்க்கதரிசனரூபமாகிய சரித்திரம்" என்று அதைப்பற்றி வேர்ட்ஸ்வொர்த் (Words-worth) சொல்லியிருக்கிறார். அது கீழ்க்கண்ட அடிகளில் முடிகின்றது.

"வாசிப்பவனே, கவனி—உன்னுடைய அறிவானது துருவத்துக்குமேல் மனோராஜ்யம்செய்து உயர்ந்தபோதிலும் அல்லது இந்தப் பூமியின்துவாரத்தைக் கீழ்நோக்கி இருண்டு தோண்டினபோதிலும் முன்யோசனையும் எச்சரிக்கையுமுள்ள மன அடக்கமானது ஞானத்தின்மூலமாய் இருக்கிறதென்பதை அறிவாயாக."

பர்ன்ஸ் (Burns) என்பவருக்கு நேர்ந்த துன்மார்க்கங்களிலொன்று அது உண்ணலாயிருந்தது. அது இன்னும் அனேக விதமான துன்மார்க்கங்களை விளைவிக்கத்தக்கதாயிருப்பதால் அது துன்மார்க்க சிரேஷ்டமாகச்சொல்லப்படலாம். அவர்குடிகாரராயிருந்ததுவிசேஷமில்லை. ஆனால் குடிகாரர்க்குரிய இழிவானகூட்டத்துடன் சேர்ந்து குடியின் துன்மார்க்கக்கவளர்ச்சிக்கு இடங்கொடுத்து, அதினால் தன் முழுச்சுபாவத்தையும் கீழ்ப்படுத்திக் கொண்டனர். ஆனால் இரங்கப்படத்தக்க பர்ன்ஸ்(Burns) மாத்திரம் அவ்வாறிருந்தாரன்று. ஏனென்றால் அந்தோ, தற்காலத்தில் நிகழ்கின்றது போன்றே அவருடைய காலத்தும், சகலதுன்மார்க்கங்களையும்விட குடியைப்பற்றிய அடங்கா அவாவானது மிகவும் பரவியும், ஜனப்பிரியமாயும் இழிவுறுத்துவதாயும், அழிவுண்டாக்குவதாயுமிருந்தது.

தன்பிரஜைகளை அவர்களுடைய சம்பாத்தியத்தினின்றும் மூன்றில் ஒருபாகம் அல்லது அதிகம் கொடுக்கும்படி கட்டாயம்பண்ணுவதுமின்றி, அவர்களை மிருகத்துல்யமாக்கிக் கீழ்மைப்படுத்தி, அவர்களுடைய குடும்பங்களின் சமாதானத்தையும் சௌக்கியத்தையும் கெடுத்து வியாதியையும் அகால மரணத்தையும் விளைக்கத்தக்க விதைகளை விதைக்கும்படியான வியாபாரச் சரக்கைக் கொள்ளும்படிக்கும் விரும்புகிற ஓர் கொடுங்கோல்மன்னன் இருப்பதாக எண்ணிக் கொள்வோம். (தொடரும்.)

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

## ௫ வது சதுர்த்தாரிகாலம்பகம் உ-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

அதற்கவளுமப்படியே செய்கிறதென்றுசம்மதிக்க அவ்வந்தணர் தங்களுடைய ஆகாரத்திற்கென்று வைத்திருந்த நெல்முதலியதானியங்களைப்பந்துஜனங்கட்குப் பங்கிட்டுக்கொடுத்துவிட்டுத் தன்மனைவி புதல்வர் வேலைக்காரர்களோடுமத்தேசத்தினின்றும் வெளியேறினர். உலகத்தினிலுத்தமர்கள் தன்னைச்சேர்ந்தவர்களுடைய ஆபத்தைக்கண்டு சகிக்கமாட்டார்களன்றோ. அவரிவ்விதம்புறப்பட்டுப் பாதசாரியாய்ச் செல்லுங்கால் வழியில்ஜடையுடன் கூடியவராயும், பஸ்மத்தினால் வெளுத்த சரீரத்தையுடையவராயும், அர்த்தசந்திரனையணிந்த சிவபிரானைப்போன்றவருமான வொருமகாவிருதரான யோகியைக் கண்ணுற்றனர். சமீபத்தில் வந்தவுடன் அவரை ஞானியென்றறிந்து நமஸ்கரித்து சினேகத்துடனவரிடத்தில் தனது புத்திரர்களின் நன்மை தீமைகளைப்பற்றிவினவ அந்தயோகீச்வரர் கோவிந்தஸ்வாமியைப்பார்த்து ஓ பிராமணரே? உமது புதல்வர்களினிநல்லநிலைமையையடைவார்கள். ஆனாலிவ்விருவரில் இளையகுமாரன்விஜயதத்தனைப் பிரியும்படி உமக்குச் சம்பவிக்கும்; பின்பு அசோகதத்தனுடைய ப்ரபாவத்தினால் மறுபடியும் உங்கட்கு விஜயதத்தனுடன்கூடுதலுமுண்டாகும், என்றுசொல்லிய ஞானியின்வாய்மொழிகளைக்கேட்டதும் கோவிந்தஸ்வாமியானவர் ஒரேகாலத்தில் சுகத்தையும் துக்கத்தையும் ஆச்சரியத்தையுமுடையவராய் அந்தயோகியை வந்தனவழிபாடுகள்செய்து அவரதனுமதியைப்பெற்றுக்கொண்டு காசிநகரத்தையடைந்து அதன் வெளிப்பக்கத்திலிருக்கின்ற சண்டிகையின் ஆலயத்திற்சென்று தேவியைப்பூஜைமுதலியவற்றாலுபசரித்துப்பகற்பொழுதைக்கழித்தனர். அன்றுசாயங்காலம் அவ்வாலயத்திற்கு வெளி



யிலிருக்கின்றவிருக்ஷத்தினருகில் காஷாயம்பூண்டு தீர்த்தயாத்திரைக்கென்று புறப்பட்டுத் தேசாந்தரங்களினின்றும் வந்துதங்கியிருந்த ஜனங்களுடன் தானுங்குடும்பசகிதராயாங்குவசித்தனர். அம்மரத்தின்கீழுதிர்ந்து பரந்துகிடக்குமிலைமுதலியவாகிய வழிப்போக்கர்கட்குரிய படுக்கையிற்படுத்து வழிநடந்துவந்த சிரமத்தினாலன்றிராத்திரியில்பதிகர்கள்யாவருமயர்ந்துறங்குங்கால் கோவிந்தஸ்வாமியினுடைய இளையகுமாரன் விஜயதத்தன் யாதொருகாரணமுமின்றி திடீரென்றெழுந்தவுடன் அவன்சரீரத்தில் மிகக்கொடிய குளிர்காய்ச்சலுண்டாயிற்று. சீக்கிரத்தில் விஜயதத்தன் தன்பந்துஜனங்களைவிட்டு நீங்குதற்குக் காரணமானஜ்வரத்தினால் ரோமங்கள் சிலிர்த்து நடுக்கமுற்றவன் பயத்தினால்நடுங்குகின்றவன்போற் காணப்பட்டனன்.

குளிரினாற் பீடிக்கப்பட்ட அவன் தன்பிதாவையெழுப்பி ஐயா, இப்போதுகொடியகுளிரும் காய்ச்சலுமென்னைப் பீடிக்கின்றது. ஆதலாலிந்தக்ஷணமே விறகுகளைக்கொணர்ந்து குளிரைப்போக்கத்தக்க தீயைவளர்க்கவேண்டும். இல்லாவிடிலெனது குளிருமடங்காது; இந்தஇராப்பொழுதையும் கடக்கமுடியாது என்றனன். அதனைக் கேட்டகோவிந்தஸ்வாமி துன்பத்தினாற் கலங்கினவராய் வத்ஸா! இந்த நடுராத்திரிவேளையில் விறகெங்கேயகப்படுமென்றனர். அதற்கவன் ஐயனே, அப்படியானலிதோ சமீபத்தில் ஜ்வலித்துக்கொண்டு தீயெரிகின்றதாய்க் காணப்படுகின்றதே அத்தீயிலெனதவயவங்களைக் காயச்செய்து குளிரையேன் போக்கிக்கொள்ளலாகாது? ஆதலால் நடுக்கத்துடனிருக்கின்றவென்னைச்சீக்கிரம் கைத்தாங்கலில்விட்டுக்கொண்டுபோய்ச்சேர்த்தல் வேண்டுமென்றனன். தன்புத்திரன் சொல்லியதைக்கேட்டு கோவிந்தஸ்வாமி மறுபடியும் விஜயதத்தனை நோக்கி வத்ஸா! இது மயானத்திலுள்ளசிதையிற் பற்றியெரிகின்ற தீயின்வெளிச்சமேயன்றி வேறில்லை; ஆதலாற் பிசாசுமுதலியவற்றாலதிபயங்கரமான அவ்விடத்திற் குன்னையழைத்துச்செல்வதெப்படி. நீயோ சிறுவனாயிருக்கின்றாயென்றனர்.

சினேகத்துடன்கூடிய பிதாவினது சொற்களைக்கேட்டதும் வீரனான அவ்விஜயதத்தன் சிரித்துத்தன் பிதாவைமறுத்து ஹேபிதா, அற்பமான பிசாசுமுதலியவற்றாலென்னை யென்னசெய்யமுடியும்;

னாலே வல்லபமுடையவனுமல்லேன் அதைரியஸ்தனுமல்லேன். ஆதலாலேயமில்லாதென்னையவ்விடத்திற்கழைத்துச்செல்ல வேண்டுமென்றுக்கிரகத்துடன்சொல்ல கோவிந்தஸ்வாமியானவர்நாமினித்தடுத்தாலும் பயனில்லை கேட்கமாட்டானென்று நினைத்து அவனை மயானத்திற்கழைத்துச்சென்றனர். அச்சிறுவனும்தன்சரீரத்தைபனிவிற்காய்ச்சிக்குளிரைநீக்கிக்கொள்வதற்காக அக்கினிஜ்வாலையின் புகையாகிவிரிந்ததலைமயிரினையுடையது மநரமாம்சங்களைக் கிரகித்துப்பக்ஷிக்கின்றதுமான விராக்கதர்கட்குரிய அதிதேவதையானது தானேபிரத்தியக்ஷமாய் விளங்குகின்றதுபோலுமிருக்கின்ற சிதையையணுகிச்சென்றனன். அங்கு க்ஷணநேரமிருந்து வருத்தந்தீர்ந்தவுடன் அவன் தன் பிதாவினிடத்தில் ஐயனே? இதோ எரிகின்றசிதையினடுவில் வட்டமாய்க்காணப்படுகின்றதே இஃதென்னவென்றுகேட்கப் பக்கத்திலிருக்கின்ற பிதாவாகியகோவிந்தஸ்வாமியானவர் புத்திரா? இஃது இறந்துபோனமனிதனுடைய கபாலம்; சிதையின்மத்தியிற்பற்றியெரிகின்றதென்றனர். உடனேயச்சிறுவன் தன்சாகத்தைப்போலும்நுனியிற்பற்றியெரிகின்ற வொருகொள்ளிக்கட்டையையெடுத்து அக்கபாலத்திலடித்துப் பிளந்தனன். அப்படியடித்ததனலக்கபாலத்தினின்றும் மிகுதியாய்வெளியேறிய தசையானது அம்மயானத்திலுள்ள அக்கினிபுருஷனாற் கொடுக்கப்பட்ட விராக்கதத்தன்மைக்குரிய சித்தியைப்போல அவ்விஜயதத்தன் வாயினில்வந்து வீழ்ந்தது. உடனேயச்சிறுவன் தன்வாயில் வீழ்ந்தமாம்சத்தைப்பருகலும்மேல்நோக்கிய கேசங்களுடனும் பெரிதாய்வளர்ந்திருக்கின்ற ஏற்றப்பற்களுடனும் கூடி அந்தஅக்கினிஜ்வாலையிற்றோன்றியதோர் கத்தியையும் கைப்பற்றியவனாகவோரிராக்கதவடிவத்தை யடைந்து அக்கபாலத்தினையெடுத்து அதிலுள்ள மாம்சத்தைமறுபடியும் பருகி உடலெலும்புகளிற்பற்றிக்கொண்டெரிகின்ற தீயின்ஜ்வாலைபோற் பிறழ்கின்ற தனது நாவினாலக்கபாலத்தைத் தழாவினன்.

பின்பு அத்தலையோட்டினைத் தூரத்திலெறிந்துவிட்டு அவன் தன் பிதாவான கோவிந்தஸ்வாமியையே கொல்வதற்காகக் கத்தியுடன் கோபாவேசங்கொண்டெழுதலும் அப்போதம்மயானத்தினின்றும் ஹே கபாலஸ்போட ராஜனே, இவர் உமதுபிதா கொல்லத்தக்கவரல்லர். நீரிங்கேவாருமென்று ஒருசொல்லுண்டாயிற்று. அச்சிறுவன்



அதனைக்கேட்டுக் கபாலஸ்போடனென்ற பெயரையுமடைந்து தன் பிதாவைவிட்டுநீங்கியிராக்கதனாகவேமறைந்தனன். அங்ஙனம்மறைதலும் அவன்பிதா கோவிந்தஸ்வாமியானவர் ஹாபுத்ரா! ஹா நற்குணங்கள் நிறைந்த விஜயதத்தா, எங்கே மறைந்தாய் ஹா! ஹா! என்ன கஷ்டம் நேர்ந்தது; இனி யுன்னை யெங்கே காண்பேன் என்றலறியழுதுகொண்டு அவ்விடத்தினின்று சண்டிகையினதாலயத்திற்கு வந்து காலையிற் றன்மனைவியிடத்திலும் ஜ்யேஷ்டகுமாரனன அசோகதத்தனிடத்திலும் நடந்த விருத்தாந்தத்தை முழுவதும் சொல்லி அவர்களுடன் மேகமின்றியிடி வீழ்ந்ததுபோலுங் கொடிதாயிருக்கின்ற துக்காக்கினியில் அழுந்திப்பரிதவித்தனர்.

அதனைக்கண்டு தேவியினது தர்சனத்திற்காக வந்த காசிநகரத்திலுள்ள மற்றைய ஜனங்களுமிவர்களோடொத்த துக்கத்தினையுடையவர்களாய் வருத்தமுற்றனர். அப்பொழுது சண்டிகாதேவியினது பூஜாநிமித்தமாய் வந்த சமுத்திரதத்தனென்னும் பெயரையுடைய மேன்மை தங்கிய ஒரு வணிகன் அவ்வாறுதுக்கத்தினால் வருந்திப்பரிதபித்துக் கொண்டிருக்கின்ற கோவிந்தஸ்வாமியைக்கண்டு சமீபத்தில் வந்து அவ்வந்தணரைப் பலவிதமாய்ச் சமாதானஞ்செய்து உடனே அவர்களனைவரையும் தனது கிரகத்திற்கழைத்துச் சென்று ஸ்நான போஜனாதிகள்செய்வித் தவர்களையுபசரித்தனன். ஆபத்தையடைந்தவர் விஷயத்தில் தயைபுரிவது பெரியோர்கட்கியல்பான காரியமன்றோ. அப்போது கோவிந்தஸ்வாமியும் முன்பு ஞானி சொல்லிய மொழிகளை நினைத்துத் தன்புத்திரனை மறுபடியுமொருவாறடையலாமென்ற எண்ணத்துடன் தன் மனைவியுடன் தைரியத்தையடைந்தனர். அதுமுதல வரை யவ்வணிகன் தன் கிரகத்திலேயே வசிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க அவர் தன்மனைவி மைந்தனிருவருடன் அந்நகரத்தில் வணிகன்வீட்டினில் வசித்தனர்.

அப்படி வசிக்கின்றகாலத்திலவருடைய மற்றொருபுத்திரனன அசோகதத்தனவ்வூரிலேயே கற்க வேண்டுங்கல்வி யனைத்துங்கற்றுக் காளைப்பருவத்தினனாய்க் கைச்சண்டை செய்வதில் மல்லர்களொருவருமிவனுக்கிணையில்லை யென்னும்படி யொருவராலும் ஜயிக்கப்படாதவனாகப் புவியினிற் பிரசித்தி பெற்றனன். ஒருகாலத்தில் அந்

நகரில் நடக்குந் திருவிழாவிற் பற்பல தேசங்களினின்று மனேக மல்லர்கள் வந்து கூடினர். அவர்களில் தெக்ஷிண தேசத்தினின்று வந்த கியாதிபெற்ற வொருமகாமல்லன் அந்தக்காசிநகரத்திற்கதிபதியான ப்ரதாபமுகுடனென்றவரசன் முன்பு வந்திருந்த மல்லர்களனைவரையும் ஜயித்து வெற்றியடைய அவ்வரசன் ஆலோசித்துத்தான் வணிகன்மூலமாய்க்கேட்டிருந்த வசோகதத்தனை யழைத்துவரும்படி செய்து அம்மல்லனுடன் போர்புரியும்படி உத்தரவளித்தனன். அம்மல்லனும் புஜங்களைத் தட்டி யட்டகாசஞ்செய்துகொண்டு அசோகதத்தனோடு யுத்தத்திற் காரம்பித்தனன். உடனே அசோகதத்தனும் மிகவும் கோபாவேசத்தோடு பாய்ந்து ஒரேபிடியாய்ப் பிடித்து அவன் கையைமுறித்து அவனைக் கீழேவீழ்த்தி வெற்றிபெற்றனன்.

அவ்விடத்திலம்மகாமல்லன் வீழ்ந்ததனாலுண்டான வோசையானது யுத்தபூமியும், அசோகதத்தன்செய்தபோருக்கு மகிழ்ந்து நன்றாயிருக்கின்றதெனச்சொல்லிய வொலிபோற்காணப்பட்டது. வெற்றியடைந்த அசோகதத்தன்பராக்கிரமத்தைக்கண்டவ்வரசன் சந்தோஷித்து அவனுக்கு மிகுந்த விரத்தினம்முதலியபொருள்களைச் சம்மானமாயளித்து அவனையெப்போதும் தன்பக்கத்திலேயே வைத்துக்கொண்டான். அதுமுதலசோகதத்தனும் அரசனதன்பிற்குரியவனாகிச் சிலநாட்களில் மிகுந்த செல்வத்தையடைந்தனன்.

நன்றாய்ப்பகுத்தறிகின்ற அரசன் சூரத்தொழிலையுடையவனுக்கு நிதியாகவே யிருக்கின்றானுலகில். இப்படியிருக்கின்றசமயத்திலொருநாள் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசிதினத்தன்றவ்வரசன் அந்நகரத்திற்கு வெளியில் தூரத்திலுள்ள சிவாலயத்திற்குச்சென்று சிவபிரானைப்பூஜித்து வணங்கித்திரும்பி யிரவினில் மயானத்தின்பக்கத்தையடுத்திருக்கின்ற வழியினில் வரும்போது அம்மயானத்தினின்றும் ஹேப்ரபுவே! யான்தண்டித்தற்குரிய அதிகாரியால் பொய்யாய்க்கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டுததுவேஷத்தினாலிவ்விடத்தில் கழுவிற்போடப்பட்டேன்; இன்றோடுமூன்றுதினங்களாகின்றன. பாபியாகிய எனதுயிரின்னும்போகவில்லை; யான் மிகவும் தாகத்துடனிருக்கின்றேன். இப்போதெனக்குத் தண்ணீர்கொடுக்கும்படி செய்யவேண்டுமென்றுமிகவுமிரக்கத்தையுண்டுபண்ணுகின்றதும் ஆச்சிரியகரமுமா



ன வாக்கொன்றுண்டாயிற்று. அச்சொல்லைக்கேட்டது மிரக்கத்துடன் அவ்வரசன் தன்பக்கத்திலிருக்கின்ற அசோகதத்தனைப்பார்த்து இந்நிலைமையில் வருந்துகின்றவனுக்கு நீதான்சென்று தண்ணீர்கொடுக்கவேண்டுமென்றனன். அதற்கவன் அரசே, இந்த இராத்திரிவேளையில் வேறுயார்தானங்கு செல்லத்தக்கவர்களிருக்கின்றனர். யானொருவனே போய்வருகின்றேனென்றுசொல்லி யசோகதத்தன் தண்ணீரையெடுத்துக்கொண்டு அங்கிருந்துசெல்லலும் அரசன்தன்னகரம் போய்ச்சேர்ந்தனன்.

உடனே வீரர்களிற் சிறந்தவனாகிய அவ்வசோகதத்தனென்பவன், செல்லுதற்கரிய விடத்தினையுடையதும், மிகுந்தவிருளினாலெங்கும் நிறைந்திருக்கின்றதும், நரிகள் கவ்வியிழுத்தெறிந்து கிடக்கின்ற மாம்சங்கள் சந்தியாகாலமாகிய பூதத்திற்குப், பலியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன போலக் காணப்படுகின்றதும், சிற்சில விடங்களில் ஈமவிறகினிற் பற்றியெரிகின்ற தீயின் வெளிச்சமாகிய ஜ்வலிக்கின்ற தீபங்களாற்பிரகாசிக்கின்றதும், பெரிய வேதாளங்கள் கொட்டுகின்ற கைத்தாளமாகிய வாத்தியத்தினையுடையதும், கிருஷ்ணபக்ஷவிராத்திரியாகிய இராக்ஷச ஸ்திரீக்கு வசிப்பதற்குரிய வீடுபோன்றதுமான அம்மயானத்தினிற் பிரவேசித்து அரசரிடம் தண்ணீர்வேண்டுமென்று கேட்டது யாரென்று பெரியசத்தமிட்டுச் சொல்லிக்கொண்டு அவன்போகும்போது யான்தான் தண்ணீர் யாசித்தேனென்னுஞ் சொல்லோர் பக்கத்திற்கேட்கப்பட்டது. அது கேட்டதும் அச்சொல் வருகின்ற விடத்தைக் குறித்துச்செல்லவங்கோர்பக்கத்தில் ஈமவிறகினிலெரிமூட்டப்பட்டிருக்கின்றது. அதனருகில்கழுமரத்திலேற்றப்பட்டிருக்கின்றவொருவனைக்கண்டான். அக்கழுமரத்தின்கீழ் கண்ணுங்கண்ணீருமாய் யழுதுகொண்டுநிற்கின்றவளும், உயர்ந்தவாபரணங்களணிந்திருக்கின்றவளும் சர்வாங்கசௌந்தரியத்துடன் கூடியவளும், தன்னாலிதற்குமுன் கண்டறியாதவளுமான ஒரு ஸ்திரீ இரவிற்கதிபதியாகிய சந்திரன் கிருஷ்ணபக்ஷத்தினால் க்ஷீணதசையையடைந்து மறைந்துபோய்விட, அவனது கிரணங்களாலழகிய விரவென்னும் மங்கைதன் கணவன் பிரிவினையாற்றாதுடன்கட்டை யேறுதற்கு வந்திருக்கின்றவள்போற் காணப்பட அவளைப்பார்த்தவுடனவ் வசோகதத்தன் தாயே! நீயார். எதற்காக

வின்கழுதுகொண்டிவ்விதமிருக்கின்றாயென்று கேட்க, அவள் அவனைப்பார்த்து நண்பனே, லக்ஷணத்தையிழந்த அபாக்கியவதியாகிய யான் இதோ கழுவினிற் போடப்பட்டிருக்கின்றவருடைய மனைவி. இவருடைய சிதாரோகணஞ்செய்துயிரை மாய்த்துக்கொள்ள நிச்சயித்திருக்கின்றேனிங்கு. ஆனாலிவரது பிராணன் வெளியேறுதற் சூரியகாலமொன்றினைமாத்திரமெதிர்பார்க்கின்றேன். ஐயோ! இன்றோடு மூன்று நாளாகியு மின்னு மிவர் பிராணன்போகவில்லையே. அன்றியுமிவர் தண்ணீர்வேண்டுமென்றடிக்கடி யாசிக்கின்றனர். யான் தண்ணீரும் கொணர்ந்திருக்கிறேன். ஆனாலுன்னதமாயிருக்கின்ற கழுமரத்திலிவர் வாயினில் தண்ணீரிடுவதற்கு முடியாதவளாகக்கீழே நின்றுகொண்டு இருக்கின்றேனிதென்ன பாவமோவறியேனென்று சொல்ல, அவள் சொற்களைக் கேட்டதும் வீரனானவ்வசோகதத்தன் அம்மா நீயொன்றும் சிந்திக்கவேண்டாம். இதோ என் கையிலு மரசர் கொடுத்தனுப்பிய தண்ணீரிருக்கின்றது. நான் குனிந்துகொள்ளுகிறேன். எனது முதுகினிற் கால்களை வைத்தேறி நின்றுகொண்டிவருக்கு ஜலத்தைக் கொடுக்கவேண்டும். ஆனாலாபத்காலத்தினில் ஸ்திரீகள் அன்னிய புருஷனைத் தீண்டுதல் தூஷணமாகாது என்றனன். அதனைக்கேட்டதுமவள் நல்லதப்படியே செய்கின்றேனென்று தண்ணீரைக் கிரகித்துக்கொண்டு கழுமரத்தின் கீழ்க்குனிந்துநிற்கின்றவசோகதத்தன்முதுகில் மிதித்தேறினள். பின்பு க்ஷணநேரத்தினில் அங்கிருந்து பூமியிலு மசோகதத்தன் முதுகிலும் நினைப்பின்றி யிரத்தத்துளிகள் வீழ்ந்தன. வீழ்தலும் அவ்வீரனானவசோகதத்தன் குனிந்து நின்றவண்ணமே மெல்லவுயரப்பார்த்தலும் அந்த ஸ்திரீ கழுவிற் போடப்பட்டிருக்கின்ற மனிதன் மாம்சத்தைக்கத்தியினாற் சேதித்தடிக்கடி புண்ணுகின்றதைக்கண்டு, ஓகோ! யிதென்ன விபரீதமாயிருக்கின்றதெனவெண்ணிக் கோபத்தோடு அவளைப் பூமியிற்றள்ளிச் சிதைத்துவிடவேண்டுமென்று ஒலிக்கின்ற சிலம்புகளையுடைய அவள் கால்களைப்பற்றலும் அவள் விரைவில் கால்களையுதறிக்கொண்டு தன் மாயையால் ஆகாயத்திற் கிளம்பிக் கண்ணிற்குத் தோன்றாது ஓரிடத்தில் மறைந்தனள்.

மறைதலு மசோகதத்தனவளது காலைப்பற்றி யிழுக்குங்கால் மெனர் காலினின்று கழுவி வீழ்ந்த விலை மதிப்பற்ற விரத்தினமய



மான காற்சிலம்பொன்றைத் தன்கையில் வைத்துக்கொண்டு, முதலிலழகியதாயுமிடையிற்றன்னைக் கீழ்ப்படுத்துகின்றதும், முடிவில் முற்றிலும் மாறுபட்டுப் பயத்தை விளைவிக்கின்றதுமான துர்ஜனர்கள் கூட்டுறவைப்போன்ற அவளைக் கண்ணிற்காணாது சிந்தையுடன் அழகிய பாதசரம்மாத்திரம் தன்கையிலிருப்பதைக்கண்டு ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் சந்தோஷத்தையுமடைந்தனன். பின்பம்மயானத்தினின்று மசோகதத்தன் நூபுரத்துடன் தன் கிரகத்திற்கு வந்து சேர்ந்தனன்.

மறுநாட் காலையிலெழுந்து அவன் ஸ்நானம் செய்துவிட்டரமனைக்குச் செல்லலுமரசன் அசோகதத்தனை நோக்கிக் கழுவிற்போடப்பட்டிருந்த மனிதனுக்குத் தண்ணீர் கொடுத்தனையாவென்றுகேட்க அவனப்படியே செய்தேனென்று சொல்லியந்தக் காற்சிலம்பையரசனிடம் கொடுத்தனன். அதனைக்கண்டதுமரசன் ஆச்சரியத்துடனிஃதெங்கிருந்து கிடைத்ததென்றசோகதத்தனைக் கேட்க, அவன் முதனாளிரவினில் அற்புதமாயுமதிபயங்கரமாயு நடந்த தன் விருத்தாந்தத்தை முழுது மரசனிடம் மொழிந்தனன். அரசனுமிவனுக்கிணையொருவருமில்லையென மதித்து அவனது பராக்கிரமத்திற்கு மிகவும் மகிழ்ந்து அந்நூபுரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அந்தப்புரத்திற்குச் சென்று அதனைத் தன் தேவியிடம்கொடுத்துப் பாதசரம் கிடைத்த விருத்தாந்தத்தை விஸ்தரித்துச் சொல்ல அவள் அதனை விலைமதித்தற்கரிய இரத்தினங்களாலமைந்த திவ்யாபரணமெனக் கண்டறிந்து தனிமையில் அசோகதத்தனைப் புகழ்வதில் மிக ஆவலுற்றவளாய்ச் சந்தோஷித்திருந்தனள். இவ்வாறு சிலநாட் கழிந்தபின் அரசன் தன் மனைவியினிடத்தில் ஹே தேவி! நம்மிடத்திலிருக்கின்ற அசோகதத்தன் ஜாதியினாற்போலவே கல்வியினாலும் சத்தியத்தினாற்போலவே ரூபத்தினாலும் மேலானோர்களிலும் மேலானவனாகவே இருக்கின்றான். ஆகலாலிவன் நமது புத்திரியாகிய நற்குணமுள்ள மதனலேகைக்குக் கணவனாக ஆவானாயின் அது மிகவும் மங்களகரமாயிருக்குமென்பதெனதெண்ணம். ஆனால் வரனிடத்திலித்தகைய குணங்களமைந்திருத்தலையே பார்த்தல்வேண்டும். செல்வமோ க்ஷணத்தில் பங்கமடையத்தக்கதாயிருக்கின்றது. ஆதலால்

வீரனை இவனுக்கே நமது கன்னிகையை மணம்புரிவிக்க நினைக்கின்றேனென்றனன்.

இப்படிச் சொல்லிய அரசன் மொழிகளைக்கேட்ட ராஜபத்தினியானவள் ஆதரவோடு அரசே! இவ்வசோகதத்தன் நமது புதல்விக்கிசைந்த கணவனென்பது தக்கதேயாம். அன்றியும் மதனலேகையும் நம்முடைய அசோக வுத்தியானத்தினில் ஒருநாளசோகதத்தனைக் கண்டு அவன் வடிவழகிற் கீடுபட்டுத்தன் மனத்தினைப் பறிகொடுத்தவளாய் ஒன்றிலும் விருப்பமில்லாது சிலதினங்களாகயாதொன்றையுஞ் செவிகொடுத்துக் கேளாமலும் எவற்றையுங் கவனித்துப் பாராமலுமிருக்கின்றாளென்பதையவள் தோழிகள் மூலமாயறிந்து யானிரவிற் கவலையுடன் நித்திரையின்றியிருக்க விடியற்கால வேளையிற் சற்றயர்ந்துறங்கும்போது ஸ்வப்னத்தில் ஒருதேவஸ்திரீ வந்தென்னை நோக்கிக் குழந்தாய்! நீ கவலைப்படவேண்டாம்; உன் புதல்வி மதனலேகையானவள் ஜன்மாந்திரத்திலேயே அசோகதத்தன் மனைவியாக வேற்பட்டவள். ஆதலால் அவளை மற்றொருவருக்கு மணம்புரிவித்தலாகாது என்றனள். யானதைக்கேட்டதும் விழித்துக்கொண்டு தெய்வமகளிர் கூறியதிலுள்ள நம்பிக்கையினால் உடனேமதனலேகையிடம் சென்று அம்மா உன்மனதின்படியேசெய்விக்கிறேனென்று குழந்தை மதனலேகையை வருந்தாதிருக்கும்படி சமாதானஞ்செய்திருக்கின்றேன். நானே கருதிய விஷயத்தை இப்பொழுதுதாங்களுமென்னிடம் சொன்னீர்கள். ஆதலால்ருதுகாலத்தையடைந்த பூங்கொடியானது விருக்ஷத்தினைச்சார்ந்து மேன்மையடைவது போல் மதனலேகையும் அசோகதத்தனையடைந்து மேன்மையடைவாளாக. என்று தன்மனைவி சொல்லலுமரசன் சந்தோஷத்துடனசோகதத்தனையழைத்து அவனுக்குத் தன்புதல்வியைச் சிறப்புடன் மணம்புரிவித்தனன். அப்பொழுது அரசிளங்குமரியாகிய மதனலேகைக்கும், அந்தணன் புதல்வனான அசோகதத்தனுக்கு முண்டான சேர்க்கையானது திருவிற்கும் பணிவுடைமையென்னும் பண்பிற்கு முண்டான சேர்க்கைபோல் ஒருவர்க்கொருவர் அழகுசெய்தற்கிடமாயிருந்தது. இப்படியிருக்குங்காலொருநாளரசன்தேவியானவள் தன்கணவனிடத்தில் அரசே, நமது அசோகதத்தன்கொணர்ந்த மணிநூபுரமானது மிகச்சிறந்ததாயிருப்பினும் அதுஒற்றையாகவிருக்கின்றமையா



லணிந்துகொள்வதற்கு யோக்கியமில்லாதிருக்கின்றது. ஆதலாலதற்கிணையாய் மற்றொன்று முயர்ந்தரத்தினங்களினாற் செய்விக்கவேண்டுமென்றனள். அதனைக்கேட்டவுடனரசன் சுவர்ணவேலைக்காரர் முதலானோர்களை யழைத்து அவர்களிடம் அந்த வாபரணத்தைக்கொடுத்து இதற்கொப்பாகவின்னுமொன்று செய்யவேண்டுமென்றனன்.

அவர்களந்தக் காற்சிலம்பைப் பார்த்ததும் மிகவுமாச்சரியத்துடன் மகாராஜ! இது தேவர்களுடைய சிற்பமேயன்றி மனுஷியர்களாலியற்றப்பட்டதன்று. ஆதலாலெங்களாற்செய்யமுடியாது. அன்றியும் விலைமதித்தற்கரிய வித்தகைய ரத்தினங்களுமிவ்வுலகினிற் கிடையாது. ஆனாலிந்தப் பாதசரமெங்கிருந்து கிடைத்ததோ அவ்விடத்திலேயே மற்றொன்றையும் விசாரித்துப் பார்க்கவேண்டுமென்றனர். அதைக்கேட்டரசன் தன்தேவியுடன் இதற்கிணையாவதொரு நூபுரமியற்றமுடியாதென்பதை நினைத்து வாட்டமுற்றிருக்குங்காலப்போதங்குவந்திருந்த அசோகதத்தன் அதனைக்கண்டவுடனே அரசனைப்பார்த்து மகாராஜ! தாங்களிதற்காகக் கவலைப்படவேண்டாம். நானேயிதற்கிணையான பாதசரமின்னுமொன்றுமக்குக் கொணர்ந்து கொடுக்கின்றேனென்று பிரதிக்கினைசெய்ய அரசன் இவனது சாகசகிருத்தியத்தினாலென்ன தீங்குவிளைந்துவிடுமோவென்று சந்தேகித்து அசோகதத்தனிடத்துள்ள அன்பினால் அவனைத்தடுத்தும் கேளாது அவன தான்செய்தநிச்சயத்தினின்றுமமாறாது அந்த நூபுரத்தைத்தன் கையில் வாங்கிக்கொண்டு மறுபடியும் மயானத்திற்குச்சென்று கிருஷ்ணபக்ஷசதுர்த்தசியிரவினில் எந்தஇடத்தில்முன்பு காற்சிலம்பைப்பெற்றானோ அவ்விடத்தையடைந்து, மிகுந்த சிதையின்புகையினால் மலினமாயிருக்கின்றனவும் கயிற்றினாற் கழுத்திற் சுருக்கிடப்பட்டுக் கொப்புகளில்தொங்குகின்ற மனிதர்களையுடையனவுமான அங்குள்ள விருக்ஷங்கள்போல இராக்கதர்களாலெங்கும் சூழப்பட்டிருக்கின்ற அம்மயானத்தில் தான் முன்புகண்ட ஸ்திரீயைக்காணாது ஆலோசித்து மற்றொரு நூபுரத்தைப் பெறுவதற்கு அவன் இப்பொழுது நரமாம்சவிக்கிரயம் செய்வதுதானுபாயமென்று கருதியங்குள்ள மரத்திற்றொங்குகின்ற ஒருபிரேதத்தைக் கயிற்றையவிழ்த்தெடுத்துக்கொண்டு மகாமாம்சம் வேண்டுகின்றவர்கள் வாங்கிக்கொள்ளலாமென்று கூறிக்கொண்டசோகதத்தனங்கு திரிந்தனன்.

(இன்னும் வரும்.)

உ

சிவமயம்.

# சேதுபுராண அரும்பதவிளக்கம்.

## காப்பு.

(௧) தடாமணி - பெருமைபொருந்திய மணி. இராமசேது, ஸ்ரீ இராமபிரானால் ஸ்தாபிக்கப்பட்ட சேது. தடவென்பது தடாவெனத்திரிந்து நின்றது. "தடவுங்கயவுக்களியும்பெருமை" என்பது தொல்காப்பியம்.

(௨.) தம்மைவழிபடும் அன்பர்களைத் தொடர்கின்ற துன்பமாகிய மலைதுகளாகத்துளைக்கும் மேல்வருந் தம்மை வழிபடாத அன்பர்களை வருத்துகின்ற அத்துன்பத்துக்குத் தலைவருமாகிய ஐந்து திருக்கரங்களையும மூன்று திருக்கண்களையுமுடைய வெற்றிமிகுகின்ற சாட்குண்ணியர் பூமியெங்கணும் எக்காலமும் எங்களைப்பிறவிக்குவித்தாகிய ஆணவத்தாலாய எல்லாத்துன்பத்தினின்றுங்காக்க.

## கடவுள் வாழ்த்து.

(௧.) பூமாது-இலக்குமி. புலமைசான்ற - அறிவின்மிக்க. இருளாலிக்கும் - இருளைக்கெடுக்கும். நகை நிலவு தவழ் - ஒளிபொருந்திய சந்திரன் தவழ்கின்ற. வளர்தில்லையம்பலத்துள் - இருபைவளர்கின்ற பொன்னம்பலத்துள். வாமநீங்கா - இடப்பாகத்தை நீங்காத. தேமாது - சிவகாமி.

(௨) செந்தாமரையாசனியாகிய இலக்குமிக்கு நாயகராகிய விஷ்ணு தாமரைப்பூவாகிய வாசனத்திருந்த பிரமா முதலியோர் காண இலங்கைக்கரசனாகிய இராவணனுடைய உயிரைக்கொன்றமையாலாகிய பழியைக்கெடுக்குமுகத்தால் சிவனே ஆன்மாக்களையடிமையாக வுடையராம் என்னும் வேதத்தின் உண்மையான அந்தரங்கத்தை எல்லாருக்கும் வெளிப்படுத்தும்படி அனைவரோடுமணைந்து



கந்தமாதனத்தில் அருச்சித்துத் துதிக்கும் கங்கையைத்தரித்த சடைமுடியையுடைய இராமநாதசுவாமியுடைய உபயபாதங்களாகிய செந்தாமரை மலர்களை வணங்கி வாழ்வாம். யாவர்க்கும் வெளிசெய்வானெனக்கூட்டுக.

(௩.) குளிர்தலும் வெதும்புதலும் பொருந்துதலாலும் சாயாத்தகைமை படைத்தலாலும் நஞ்சை நீக்கித் தலைவனுக்கு எந்நாளும் உண்ணும் அமுதைக்கொடுத்தலாலும் இமயம், மேரு, மந்தரம் என்னுமிவற்றை யொருவி நெற்றிநாட்டத்தையுடைய சிவபெருமானைச் சேர்ந்தும், வெளுத்தலால் கைலாயகிரியையும் இகழ்ந்து, கவுணியர்குலத்தவதரித்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்க்குத் தமிழ் சுரக்கும் தோற்றத்தாலே அழகியமுலை பொதியமலையைநிகர்க்கும் என்னும் இளமையையுடைய பர்வதவர்த்தனி அம்மையுடைய தாமரைமலர்போலும் பாதங்களை மனத்துள்வைப்பாம்.

இமயந்தண்ணென்றிருத்தலேயன்றி வெச்சென்றிராமையானும், மேருச்சாயுந்தகைமை படைத்ததேயன்றிச் சாயாத்தகைமைபடையாமையானும், மந்தரம்விடத்தையீந்தமையானும் அவற்றிற்கு உவமேயமாதலைநீங்கியும், நாயகரைச்சேர்ந்தோர் பசப்பூர்ந்தமேனியராயிருப்பர், அங்ஙனமாகக்கைலைமலை நாயகரைச்சேர்ந்தும் சேராதார்போல வெண்ணிறம் பொருந்தலால் அதனையிகழ்ந்தும் என்க.

(௪.) பிதாவாகிய பரமசிவனுடைய திருச்சடையிற் பொருந்திய கங்கைநீரை உட்டொளை பொருந்தியகையால் வாங்கிவிடுத்து, வெள்ளியபிரமகபாலத்தை உருட்டிவிளங்குகின்ற வெண்கோட்டால் வளைந்த பாலசந்திரனை உழுது, மேருவின் சிகரங்களைப்போற்றமைந்த வெட்டுப் புயங்களுங்குழையும்படி தாக்கி, நெடியகால்களையுடைய விஷ்ணுவாகிய இடபத்தைமுனிந்து கைலையங்கிரியில் இருக்கின்ற திரிநேத்திரங்களையுடைய பிதாவோடுங்கீழ்ப்படியாது, விளையாடித்தன்னன்பருடைய மாட்சிமைபொருந்திய மனமாகிய தறியினின்றுலாவுகின்ற தெய்வத்தன்மைபொருந்திய யானையை நினைந்திறைஞ்சி வழுத்துவாம்.

(௫.) விளங்குகின்ற பார்வதிதேவியாருடைய கலசம்போலும் முலைப்பாலின் வாசத்தையுடைய வாயாகிய குமுதமலரானது அவரு

டைய நாயகரின் வேதங்களைக்கொழிக்கும் அழகுவிளங்குகின்ற முகமாகிய தாமரைமலரில் விளங்கச்செய்த விநாயகருடைய உட்டுளை பொருந்திய கையைப்பிடித்தேறி, நெற்றிப்பட்டத்திலுலாவி இவர்கள் மூவரும்மகிழ விஷ்ணுவோடு தேவர்குழாங்களிப்புமிக உலகத்தை மூடுங்கபாலத்தையுடைய நீலமணிபோலும் மயிலையூர்கின்ற வீரக்கழல்பொருந்திய பாதங்களையுடைய வெற்றியையுடைய கந்தசுவாமியை வழிபட்டு மனத்துள்வைப்பாம். முகமலர்கமழச்செய்தல் - முத்தமிடலால் என்க.

(௬.) கவளவுணவையுண்கின்ற மதத்தையுடைய யானைத்தோலாகிய போர்வையைமூடும் சிவபெருமானுடைய புகழைவிரிக்கின்ற கலைகளையெல்லாம் பவளம்போலும் அதரத்திலிருத்தும், பசியகுதலைமொழியாற் காட்டுகின்ற பசியவளையலையுடையாளைப் பிரமாசேருகின்ற பருமமென்னுமாபரணத்தையணிந்த அல்குலையும் அசைகின்ற அழகிய இடையையும் இளநிலாவைவீசுகின்ற வெள்ளிய பற்களையுமுடைய பேரழகையுடையாளை வெண்டாமரையிதழில் வெண்மையாகிய சந்திரனுக்கு நடுவேயிருக்கின்ற வெள்ளிய அன்னம்போலும் பேரழகையுடைய சரஸ்வதியை மயக்கத்தை நீக்கிப்பாதங்களில் வணங்குவாம்.

(௭.) பிரமனிருக்கின்ற மலர்கூம்பாதும், இந்திரனுடைய சுவர்க்கத்தினிலைமை குலையாதும் மருதைப்பிளந்த பாதங்களையுடைய விஷ்ணு அறிதுயில் கொள்ளும் பாற்கடல்சுருங்காதும், மான், பிரம்பு, மழுப்படை, அழகிய உடைவாள் என்னுமிவற்றைத்தாங்கிச் சருப்பகுண்டலத்தையணிந்த திருக்காதையுடையவரும், துளியைச் சிதறுகின்ற நீரையுடைய கங்கையைச்சூடும் நெற்றிநாட்டத்தையுடைய எந்தலைவரும், புத்திமுத்திகளைத்தருகின்ற தலைவருமாகிய சிவபெருமானெழுந்தருளியிருக்கின்ற திருக்கைலையைக் காவல்பூண்ட திருநந்திதேவரை நம்மனத்தில் விரும்பிவாழ்வாம்.

முகிழாது குலையாது, சுருங்காது என்னுமெச்சங்கள் காவல் பூண்ட என்னுஞ்சொல்லோடு முடிகின்றன.

(அ.) அழகிய சங்கக்குண்டலம் விளங்கத்தழைந்த காதும், ஒப்பற்ற இடபமும் முதலான பலநீக்கமற்ற தோற்றங்கள் மிகுகின்ற



வடையாளங்களைப் புகன்று துதித்து. உவமைநீங்கிய சோதிசொரூபரை மனத்துக்கதீதராகிய கிருபைக்கண்ணரை கூன்பாண்டியனுடைய உடலினுள்ள சுரநோய்நீங்க அழகுமிகுகின்ற வெள்ளிய நுண்ணிய விபூதியை அள்ளிச்சாத்துகின்ற சிவந்தவிரலால் தன்பிதாவாகிய சிவபாதவிருதயருக்கு.

“தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியெனுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.”

என்று சுட்டிக்காட்டிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய சிறிய திருவடிகளின் பெருந்தகைமையைச் சிந்திப்பாம். அடையாளங்கள் புகன்றுபோற்றிச் செங்கைவிரல்கொடு குறித்துத் தெரிக்குமெனக்கொள்க.

(௯) தேவர்களையும் முனிவர்களையும் துழாய்மாலைபொருந்திய மார்பில் இலக்குமியையுடைய விஷ்ணுவையும் பிரமதேவரையும்செல்வம் மிக்கோரெவரையும் அடிமைகொள்கின்ற நெற்றிநாட்டத்தையுடைய சிவபெருமானை முன்னீங்கியிருந்த எண்ணந்தோன்றலால் இடபந்தீட்டிய நெடியகொடியின்றகைமை எல்லாத்திக்கெல்லைகடோறுஞ் செல்லத் தமிழ்வேதமாகிய தேவாரத்தைப்பாடுகின்ற திருநாவுக்கரசு நாயனாருடைய புகழ்மொழிகளை யெழுதிப்படித்து நயந்து அவர் செய்த திருத்தொண்டை வியந்துவாழ்வாம். தோன்றப்பாடுமெனக்கொள்க.

(௧0) மகரந்தம் பொருந்திய மலரை வைத்து முடித்த கூந்தலையுடைய பரவையாருடைய இரண்டு தனங்களின் மேல் மயலாகிய சலதோஷத்தாலாகிய தளர்வுநீங்க வேதைக்கொண்டு விரும்பும் நெறியை விரும்பி விஷ்ணுவும் பிரமாவும் பின்றொடராத சிதாகாசத்தை எவரும் எதைக்கொண்டும் அறிதல் அரிதான எங்குமான பரம்பொருளை நெருங்கிய இருளையுடைய இராக்காலத்திலே திரும்பத்துதாகக் கொண்ட சுந்தரமூர்த்திநாயனாரை யெம்மை யடிமைகொள்வீரென்று வேண்டியவருடைய பாதங்களைத்தழுவித் தொழுதலைச் செய்வாம்.

தனத்துணைமேல்விரும்பி யெனவும், மயற்குளிர்வின்றளர்வு நீங்கவேதுகொண்டு விழையும் நெறிவிரும்பி யெனவுங்கொள்க.

மயற்குளிர்வின்றளர்வு நீங்க - மயலாலாகிய சலதோஷத்தாலாந்தளர்வு நீங்கும்படி. வேதுகொண்டு - தனமாகிய வேதைக்கொண்டு விழையும் நெறிவிரும்பி - விரும்புகின்ற நெறியைவிரும்பி தூதை வேதாக்கொண்டெனல் பொருந்தாது.

(கக) செழியர் குலபதி - அரிமர்த்தன பாண்டியர். மாடு - பொன். சம்புப்பழிவிரவு - சம்புவாகிய பழிவிரவ. வந்தி - மலடி.

(கஉ) பரபதம் - முத்தி.

(கங) அலகைத்தேர் - பேய்த்தேர். பொல்லாத இபமுகத்துப்புத்தேள் - பொள்ளாப்பிள்ளையார் - அகலச் சீர்சொன்ன என முடிக்க.

(கச) முதலாயுள்ள தொண்டர், தருந்தொண்டர் எனக்கொள்க. தனபடை எதுகைநோக்கி தன்னடையென்றாயது.

## அவையடக்கம்.

(ங) முதியவ்வப்பழங்காதை - முதிர்ந்த அந்தப்புராணம்.

(ச) ஓர்க்கம் - சுருக்கம். உறவி - எறும்பு.

(ரு) தாழையங்கானளக்கர்வண் சேதுவின் காதையை - தாழைக்காட்டையுடைய கடலிலுள்ள அழகிய சேதுவின் சரித்திரத்தை யானளக்க வென்றெண்ணியபின்னர், பறவைகள் வானளக்க இங்கூர்வன மாநிலந்தானளக்க.

(எ) கண்டதால் - கண்டதனால். நவியம் - மழு.

(அ) ஆதிவெற்பு - மேரு. கோதிலானின்குளப்படிநீர் - குற்றமற்ற பசுவின் குளம்படி நீர்.

(கூ) சொல்வகுத்துப் பொருணிலைதோற்றி - சொல்லால் வகுத்துப்பொருணிலையைத்தோற்றுவித்து. அச்சொல் வகுப்புக்கடந்தவன் தொல்புகழ் - அந்தச்சொல் வகுப்பைக்கடந்தவனுடைய பழையபுகழை. சொல்வகுத்தல் - சொல்லால் வகுத்தல், சுருதியுமில்லை - வேதத்தாலுங்கூடாதாம். சொல்வகுத்தலருமை, சொல்லால்வகுத்தலோவருமை. சூழ்ந்திடா - அவ்வருமை என்னைச்சூழ்ந்திடமாட்டாவாம். (தொடரும்.)

ஆ. மூ. சோமாஸ்கந்தபிள்ளை.

---

உ

குமரன் றுணை.

# * உள்ளத்துணர்வு.

உள்ளம் என்பது உணர்வெனும் அறிவு சூக்குமமாய் நின்று விளங்கும் இடமாம். நினைத்தல் மறத்தலாதியவைகள் உள்ளத்துக்கே சுபாவமான தருமமன்று. அறிவெனும் மூதற்கருவியின் இயக்கத்தால் உள்ளம் தொழிற்றுணமாய் இருக்கின்றது. உள்ளத்தையும் உணர்வையும் ஒன்றுபடச்செய்வது ஞானமாகும். அது கன்மபரிபாகத்துக்குத்தக வழியையே நோக்கிச்செல்லும் ஓர்நெறி. உள்ளம், உணர்வு, ஞானம், வழி இந்நான்கும் ஒருமித்து எல்லாம்வல்ல முழுமுதலின் இலக்கணத்தை ஒருவாறு சாத்திரவாயிலாக ஐயந்திரிபறத்தெரிந்துகொள்ளல் பேறறிவாகும். அச்சாத்திரத்துணைகொண்டே யுத்திவகையானும் அநுபோகவகையானும் உண்மை இன்மை தெரிந்து யதார்த்தநிலைமைகண்டு தெளிதல் சித்தாந்தமாகும். ஞானநூல் ஆராய்வதினும் மெய்ம்மை அறிந்து பொருள் விரித்துக்கொண்டுபோதல்தான் திவிரமாகும். தத்துவநியதிகளைந்து உள்ளத்திலக்கணம் உணர்விலக்கணம் ஞானத்தினிலக்கணம் வழியினிலக்கணம் இவையெல்லாங்கடந்து முழுமுதற்றன்மையெய்திநிற்கும் கடவுளினிலக்கணம் இவ்வைந்தினிலக்கணத்தையும் தெள்ளத்தெளிய ஞானாசிரியன் வாயிலாக வுபதேசமுகத்தா யுள்ளத்துணர்ந்து கடைப்பிடித்தல் பேறறிவுக்குள்ள ஓர் அரிய தொழில். அப்பேறறிவை எழுப்ப உரிமைபூண்டு நிற்பது ஞானசாத்திர வுணர்ச்சியாகும். இடையிடையே கலங்கும் நிலைமைகொண்ட வுள்ளத்துக்கு உண்மையை அறிவுறுத்தி மெய்ம்மையைக் காட்டுவது புண்ணியமிகுதியால் வளர்ந்தோங்கிப் பேறறிவின்பாற்படுத்தும் ஞானம். இஞ்ஞானம் கன்மபரிபாகத்தாற் சிக்குண்டு மலினமெய்தி நிலையாமை நிலைமை என்பவைகளைத் தெரியாது மேகத்தால் மறைத்துள்ள சூரியனைப்போல சூரிய

---

* இது, இற்றைக்கு 20-வருஷத்துக்கு முன், காலஞ்சென்ற சுந்தரஸ்வாமிகள் எழுதிவைத்திருந்தவைகளில் ஒன்றாகும்

னது கிரணக்கற்றைகள் நமக்குத்தெரியாது சூரியன்மட்டும் மண்டலங்காட்டுவதொப்பப் பேரறிவின் சொரூபம் முழுவதூஉம் நமது உள்ளத்துக்குத் தோன்றாமல் அதன் வீக்ஷண்யம் மட்டும் காட்டுவதாக நமது நினைவுக்கு எட்டுவதுதான் அஞ்ஞானமாகும். கன்மபரிபாகத் தொடர் ஆன்மாக்களுக்கு எப்பவும் தொந்தமாகவுள்ளது. அஃது சன்னஞ்சன்னமாகவே மலையருவியென விடையறாது தொந்தப்பட்டு வருகின்றது. அக்கன்மபரிபாகத்தொடரையறுக்க அதிக தீவிரஞான முதிர்ச்சி வேண்டும்.

அருட்பெருஞ்செல்வராகிய நமதுபட்டினத்தடிகளும் ஒவ்வோர் ஆன்மாவும் கன்மத்துக்குத்தக்கவாறு ஒவ்வோர் சனனத்து ஏழுதடவை பிறத்தல் வேண்டுமென்றனர்; அஃதை (வருமேழ்பிறவியுமானிடத்துதித்து) என்பதாலறிக. என்னைபொனசல்டு ஆராயின், கருமத்தினது தொந்தமே நெடுக இழுத்துச்செல்லுவதாகயிருக்கின்றது. நுணுகவுணர்வார்க்கு இலேசாக இவ்வுண்மை விளங்கிக்கிடக்கும். சொல்லிலக்கணங்கூறத் தொடங்கிய பவணந்தியாசிரியனாரும் (உடல்கொள்ளுயிர்க்குணம்) என்பதால் உடம்பொடு புணர்த்தலென்னும் ஓர் யுத்திவகையான் அரியகுறிப்பாற் காட்டுவதை நம்புலமையாளர்கள் அறிந்ததேயாம். உள்ளம் என்பதுக்குச்சித்தம் என ஓர் பெயர் உளது. அறிந்திடும்பொருட்குச் சித்தமென்று சொல்லப்படுவது அதனுள்ளுறைப்பொருளாகும். சிற்றுணர்வு, பேருணர்வு என்னும் இவைகள் நின்றுநிலவி விளங்குதலால் உள்ளத்துக்குச்சித்தம் எனப் பேர்நிறுத்துவாராயினர் ஆன்றோர். மணிவாசகர் சித்தத்துட்டித்திக்குந்தேனே. எனத்தாம் திருவாய்மலர்ந்தருளியதில், பற்பலவிசேட நுண்பொருள் அமைந்துகிடக்கின்றது. அதாவது, சித்தம் என்பதனுள், அகம், புறம், என இருவகைப்பாகுபாடு உள்ளன. அகம்+உள்ளிடம் - புறம்+உள்ளிடத்துக்குப் புறவிடம்=புறவிடத்து அஞ்ஞானமிகுதியால், உலகத்தோற்றங்கண்டு இவைகளே நிலைமையுடையன வென்றுமகிழ்ந்து, உண்மைதோன்றாமல் கொலைகளவாதிய தீயவொழுக்கிற்றலைப்பட்டுப் பேரறிவின் உருவுகாணாது, சிற்றுணர்வின்மயமாகவே காணப்பட்டு நிற்பதற்கு இடம் புறமாகும்.

(இன்னும் வரும்.)

இராமசாமிவன்னியன்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
12 APR 1910
MADRAS.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-அ.] சௌமிய-௵ மாசி மீ. [பகுதி-ச.

## தமிழ்நாட்டில் வழங்கும்
## கண்ணபிரான் சரிதங்கள்.

ஸ்ரீமகாபாரதம் பாகவதமுதலிய இதிகாசபுராணங்களிலே, கண்ணபிரான் அவதரித்தருளி உலகை உய்யக்கொண்ட சரித்திரங்கள் முழுதும் கூறப்பட்டுள்ளன. இச்சரிதங்கள் பலவற்றைத் தமிழ்நாட்டாரும் முற்காலமுதலே அறிந்து போற்றிவந்தவரென்பது பழையநூல்களால் அறியக்கிடக்கின்றது. ஆயினும், வடநூல்களினின்று சிறிது வேறுபாடுடையனவும், அந்நூல்களால் அறியப்படாதனவுமான சிலகதைகள் தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றன. இவ்வாறு வழங்குதற்குத்தக்க ஆதாரங்காண்டல் இப்போதரிதாயினும், முன்னிகழ்ச்சியே கன்னபரம்பரையாகத் தமிழ்நாட்டில்வந்து வழங்கலாயிற்றென்று கொள்ளத்தக்கது. இங்ஙனம் வழங்கும் சரிதங்களில் முக்கியமானவை:—நப்பின்னைப்பிராட்டியார், குருந்தொசித்தது, குடக்கூத்து, சீமாலிகன்கதை, ததிபாண்டனும் தயிர்த்தாழியும் மோக்ஷம்பெற்றது—என்பவைகளாம். இவற்றை ஒவ்வொன்றாகக் கூறுவேன் :—

### க. நப்பின்னைப்பிராட்டியார்.

கண்ணபிரான்மணந்த பிராட்டிமார்களிலே, தமிழ்நூல்களில் மிகுதியும் சிறப்பித்துக்கூறப்படுவோர் நப்பின்னைப்பிராட்டி என்னுந்திருநாமமுடையார். இதனை, "நிலமகட்குக் கேள்வனு நீணி

ளக்கிரணக்கற்றைகள் நமக்குத்தெரியாது சூரியன்மட்டும் மண்டலங்காட்டுவதொப்பப் பேரறிவின் சொரூபம் முழுவதுமுடம் நமது உள்ளத்துக்குத் தோன்றாமல் அதன் விஷயம் மட்டும் காட்டுவதாக நமது நினைவுக்கு எட்டுவதுதான் அஞ்ஞானமாகும். கன்மபரிபாகத் தொடர் ஆன்மாக்களுக்கு எப்பவும் தொந்தமாகவுள்ளது. அஃது சன்னஞ்சன்னமாகவே மலையருவியென விடையறாது தொத்தப்பட்டு வருகின்றது. அக்கன்மபரிபாகத்தொடரையறுக்க அதிக தீவிரஞான முதிர்ச்சி வேண்டும்.

அருட்பெருஞ்செல்வராகிய நமதுபட்டினத்தடிகளும் ஒவ்வோர் ஆன்மாவும் கன்மத்துக்குத்தக்கவாறு ஒவ்வோர் சனனத்து வெழுதடவை பிறத்தல் வேண்டுமென்றனர்; அஃதை (வருமேழ்பிறவியுமாணிடத்துதித்து) என்பதாலறிக. என்னையெனக்கொண்டு ஆராயின், கருமத்தினது தொந்தமே நெடுக இழுத்துச்செல்லுவதாகவிருக்கின்றது. நுணுகவுணர்வார்க்கு இலேசாக இவ்வுண்மை விளங்கிக்கிடக்கும். சொல்லிலக்கணங்கூறத் தொடங்கிய பவணந்தியாசிரியரும் (உடல் கொள்ளுயிர்க்குணம்) என்பதால் உடம்பொடு புணர்த்தலென்னும் ஓர் புத்திவகையான் அரியகுறிப்பாற் காட்டுவதை நம்புலமையாளர்கள் அறிந்ததேயாம். உள்ளம் என்பதுக்குச்சித்தம் என ஓர் பெயர் உளது. அறிந்திடும்பொருட்குச் சித்தமென்று சொல்லப்படுவது அதனுள்ளுறைப்பொருளாகும். சிற்றுணர்வு, பேருணர்வு என்னும் இவைகள் நின்றிலங்கி விளங்குதலால் உள்ளத்துக்குச்சித்தம் எனப் பேரிறுத்துவாராயினர் ஆன்றோர். மணிவாசகர் சித்தத்துட்டித்திக்குந்தேனே. எனத்தாம் திருவாய்மலர்ந்தருளியதில், பற்பலவிசேடநுண்பொருள் அமைந்துகிடக்கின்றது. அதாவது, சித்தம் என்பதனுள், அகம், புறம், என இருவகைப்பாகுபாடு உள்ளன. அகம் + உள்ளிடம் - புறம் + உள்ளிடத்துக்குப் புறவிடம் = புறவிடத்து அஞ்ஞானமிகுதியால், உலகத்தோற்றங்கண்டு இவைகளே நிலைமையுடையன வென்றுமகிழ்ந்து, உண்மைதோன்றாமல் கொலைகளவாதிய தீயவொழுக்கிற்றலைப்பட்டுப் பேரறிவின் உருவுகாணாது, சிற்றுணர்வின் மயமாகவே காணப்பட்டு நிற்பதற்கு இடம் புறமாகும்.

(இன்னும் வரும்.)

இராமசாமிவன்னியன்.

OFFICE 12 APR 1910 MADRAS.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-அ.] சௌமிய-௵ மாசி ௴. [பகுதி-ச.

## தமிழ்நாட்டில் வழங்கும் கண்ணபிரான் சரிதங்கள்.

ஸ்ரீமகாபாரதம் பாகவதமுதலிய இதிகாசபுராணங்களிலே, கண்ணபிரான் அவதரித்தருளி உலகை உய்யக்கொண்ட சரித்திரங்கள் முழுதும் கூறப்பட்டுள்ளன. இச்சரிதங்கள் பலவற்றைத் தமிழ்நாட்டாரும் முற்காலமுதலே அறிந்து போற்றிவந்தவரென்பது பழையநூல்களால் அறியக்கிடக்கின்றது. ஆயினும்; வடநூல்களினின்று சிறிது வேறுபாடுடையனவும், அந்நூல்களால் அறியப்படாதனவுமான சிலகதைகள் தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றன. இவ்வாறு வழங்குதற்குத்தக்க ஆதாரங்காண்டல் இப்போதரிதாயினும், முன்னிகழ்ச்சியே கன்னபரம்பரையாகத் தமிழ்நாட்டில்வந்து வழங்கலாயிற்றென்று கொள்ளத்தக்கது. இங்ஙனம் வழங்கும் சரிதங்களில் முக்கியமானவை:—நப்பின்னைப்பிராட்டியார், குருந்தொசித்தது, குடக்கூத்து, சிமாலிகன்கதை, ததிபாண்டனும் தயிர்த்தாழியும் மோக்ஷம்பெற்றது—என்பவைகளாம். இவற்றை ஒவ்வொன்றாகக் கூறுவேன்:—

### க. நப்பின்னைப்பிராட்டியார்.

கண்ணபிரான்மணந்த பிராட்டிமார்களிலே, தமிழ்நூல்களில் மிகுதியும் சிறப்பித்துக்கூறப்படுவோர் நப்பின்னைப்பிராட்டி என்னுந்திருநாமமுடையார். இதனை, "நிலமகட்குக் கேள்வனும் நீணிரை

நப்பின்னை - யிலவலர்வா யின்னமிர்த மெய்திறு னன்றே." (சிந்தாமணி) "வையு மளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப் - பெய்வளைக் கையாணம் பின்னைதானும்" (சிலப்பதிகாரம்) "மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையு, மாடிய குரவை" (மணிமேகலை) "ஏர்ப்பின்னை தோள்முன் மணந்தவன்" (திருக்கோவையார்) "பின்னை தோண்மணந்த பேராயா" (திருவாய்மொழி) "உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்-உத்தர மாமதுரைக் கச்சென்ப" (திருவள்ளுவமாலை) என்பன முதலாகவரும் பிரமாணங்களால் உணர்க. இப்பிராட்டியைப் பின்னை, பிஞ்ஞை, நீளை எனவும் வழங்குவர். நேமிநாத விருத்திகாரர் "பாலேதிணையே" என்னும் வெண்பாவுரையில், 'உப்பக்கநோக்கி' என்னும் திருவள்ளுவமாலைப்பாட்டை எடுத்தோதி "இதனுள் உபகேசியார்-நப்பின்னைப் பிராட்டியார் என்று உரை கூறுதலால் 'உபகேசி' என்னும் பெயரும் இவர்க்குண்டென்பது தெரிகின்றது. நப்பின்னை என்பதிலுள்ள "ந - சிறப்புப்பொருளுணர்த்துவதோர் இடைச்சொல்; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற்போல; நம்பின்னை, விகாரமுமாம்" என்பர் நச்சினார்க்கினியர். (சிந் - நாமக. எசு.)

இப்பிராட்டியை, ஆயர்குலமகளெனவும், கண்ணபிரான் ஆயர் மணமுறைப்படி கன்யாசுல்கமாக வைக்கப்பட்ட எழுவிடைகளைத் தழுவியடர்த்து இவளை மணம் புரிந்தனரெனவும் தமிழ்நூல்கள் கூறும். கூர்நுதிக் கோட்டினையுடைய இமிலேறுகளைப் பறையறைந்து வெளியில் விடுத்து, அவற்றைத் தழுவிப் பிடிப்பானுக்கே மகட்கொடுப்பதென்னும் மணவிதி, ஆயர்களது தொன்றுதொட்ட மரபென்பது, கலித்தொகை முல்லைப்பகுதியை நோக்குவார்க்கு நன்கு விளங்கும். இவ்விதிப்படி பெருமான் விடையேழடர்த்து மணந்த சரித்திரத்தை ஆழ்வாரும், "ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்திமி லேற்றுவன்கூன்—கோட்டிடை ஆடினை கூத்தயர் ஆயர்தங் கொம்பினுக்கே" என்றும், "நிறைவின்றிக் குறைவில்லா நெடும்பணைத்தோண் மடப்பின்னை, பொறையினால் முலையணைவான் பொருவிடையேழடர்த்துகந்த" என்றும் பணித்தார். இங்ஙனம், கண்ணன் பின்னையை மணந்தபின் அவளுடன் கூடி நிகழ்த்



திய சரிதைகள் பலவென்றும், அவற்றைப் பழைய தமிழ்மக்கள் "பாலசரிதை நாடகம்" என்னும் பெயராலழைத்தும், நாடகமாக நடித்தும் வந்தனரென்றும், சிலப்பதிகாரத்தாற் றெரியவருகின்றது. இவ்வாறு, அந்நூலில்வரும் ஆய்ச்சியர் குரவையில் நடித்துக்காட்டப்பட்ட பாலசரிதை, ஆயர்பாடியில், தாதெருமன்றம் என்ற விடத்தே, யசோதைப்பிராட்டியாரும் பிறருங் காணுமாறு, கண்ணபிரானும் நம்பிமூத்தபிரானும் (பலராமர்) பின்னைப் பிராட்டியை மத்தியமாகக்கொண்டு ஆடிய அற்புதக் குரவையேயாம். இதனை "ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தன்முன்னாடிய பாலசரிதை நாடகங்களில் வேனெடுங்கட் பிஞ்ஞையொடாடிய குரவை" எனவும்.

"மாயவன்றன் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடும்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
வாய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தத்
தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே"

எனவும் சிலப்பதிகாரத்து வருதலானும், "மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையும்—ஆடிய குரவையிஃ தாமென வேத்தியும்" என்னும் மணிமேகலையடிகளானும் அறியலாகும். இங்ஙனமாடிய குரவைச்சிறப்பை இளங்கோவடிகள்,

"கதிர்திகிரி யான்மறைத்த கடல்வண்ண னிடத்துளாள்
மதிபுரையு நறுமேனித் தம்முன்னோன் வலத்துளாள்
பொதியவிழ் மலர்க்கூந்தற் பிஞ்ஞைசீர் புறங்காப்பார்
முதுமறைதேர் நாரதனார் முந்தைமுறை நரம்புளர்வார்"

எனப்புகழ்தலுங் காண்க. குரவையாவது பலர்கூடிக் கைகோத்தாடுதல் என்பர். இப்பிராட்டி, ஆயர்குலமகளென்பதே முன்னையோர் கருத்தென்பது "நீணிரை நப்பின்னை" (சிந்தா) "ஆயனுக்காய் மங்கை வேயதோள் விரும்பினாய்" (ஆழ்வார்) என்பவற்றானும் சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவையானும் பிரசித்தமாம்.

இனி, வடநூல்களை ஆராயுமிடத்து—கண்ணன் மணந்த மகளிர் பல்லாயிரவரென்றும், அவருள் தலைசிறந்தார்:—ஸ்ரீ ருக்மணிப் பிராட்டி, சத்தியபாமை, ஜாம்பவதி, காளிந்தி, மித்திரவிந்தை, சத்

தியை, பத்திரை, லக்ஷ்மணை—என்னும் அஷ்டமகிஷிகளென்றும், அவருள்ளும் முதலிருவருமே கண்ணனால் மிகவுமுகந்தருளப்பெற்றவரெனவும் தெரியவருகின்றன. பாகவதத்துக்கண்ட இவ்வெண்மரில், பத்திரை, மித்திரவிந்தை, சத்தியை என்னு மூவர்பெயர்க்கும் பிரதியாக மாத்திரி, லக்ஷ்மணை, நாக்னஜிதி என வேறுபெயர்கள் விஷ்ணு புராணத்துக் கூறப்படுகின்றன. இவர்களுள் சத்தியை எனவும் நாக்னஜிதி எனவும் பெயர் பெற்ற நங்கை அயோத்தி நாட்டரசனான நக்னஜித் என்பான் மகளென்றும், பேரெழில் வாய்ந்த அம்மகளைக் காதலித்து அரசர்பலரும் தன்னைத்துன்புறுத்திவந்தமையால் நக்னஜித்தரசன், தன் நிரைகாவலனும் யசோதைப் பிராட்டிக்குத் தம்பியுமாகிய கும்பாண்டன் என்பவனிடமுள்ள கொடிய விருஷபங்களேழையும் தழுவிப்பிடிப்பவற்கே தன்மகளை மணம்புரிவிப்பதாக நிச்சயிக்க, அவ்வெருதுகட்கஞ்சி அரசர்கள் மகட்பேசலைத் தவிர்ந்தொழிந்தாரென்றும், அக்காலத்துக் கண்ணபிரான் அவ்வரசன்பாற் சென்று அவனாற் கன்யாசுல்கமாக வைக்கப்பட்ட விடையேழினையுந் தழுவியடர்த்து, சத்தியை என்ற அக்கன்னியை மணம்புரிந்தாரெனவும், ஸ்ரீமத்-பாகவதங் கூறுகின்றது. இச்சரிதத்தால் க்ஷத்திரிய அரசனாகிய நக்னஜித்தின் மகளே கண்ணனால் விடை தழுவி மணக்கப்பெற்றவர் என்பது போதரும். இவ்வரலாறு நப்பின்னைப் பிராட்டி விஷயமாகத் தமிழ் நூல்கள் கூறுவதோடு பெரிதும் ஒற்றுமைபெறினும், ஆயர்குலத்தினளாகக் கூறப்பட்ட அவள் க்ஷத்திரியகுலத்தாளாகக் காணப்படுவதுமட்டும் வேறுபடுகின்றது. ஆயினும், தன் நிரைகாவலனாகிய கும்பாண்டன் மகளையே நக்னஜித் தன்மகளாக அபிமானித்து வளர்த்திருத்தல் கூடுமாயின், இச்சரித்திரம் தமிழ்வழக்கோடு பொருந்திவிடும். அவ்வாறு வடநூலிற் சொல்லப்பட்டிலதேனும், "நீளாதுங்கஸ்தனகிரி" என்னும் திருப்பாவைத் தனியனுக்கு வியாக்கியானமருளிச்செய்யுமிடத்தே, ஸ்ரீ பிள்ளைலோகம் ஜீயர் "இவளும் யசோதைப்பிராட்டி சகோதரரான கும்பர் குமாரத்தியாக அவதரித்தபடி" எனக்கூறியும், "மிதிலைதேசத்தே, நந்தகோபன் மைத்துனனும் மிகுந்த ஆநிரையுடையோனும் யசோதையார்க்குத் தம்பியுமான கும்பகனுக்கும் அவன் பாரியை தர்மதை என்பார்க்கும் ஸ்ரீதாமா என்ற புத்திரனும் நீளை

REGISTERED 12 APR 1910 MADRAS.



என்ற கன்னிகையும் பிறந்தார்கள்" என்னுங் கருத்துடைய புராண சுலோகங்களை உதகரித்தும் போந்தமையால், கும்பகனென்ற ஆயர் தலைவனுடைய மகளே நீளை என்ற நப்பின்னைப்பிராட்டியார் என்பது வலியுறுகின்றது. தமிழ் வழக்கும் வடவழக்கும் ஒற்றுமை பெறுவதற்கு இங்ஙனம் இயைத்துக்கொள்ளுதலே பொருத்தமாம்.

இனி, கண்ணன் பலராமர்களோடு சேர்ந்து நப்பின்னைப்பிராட்டி, ஆயர்பாடியில் தாதெருமன்றத்தே குரவைக்கூத்தாடியதாகத் தமிழ்நூல்கள் கூறுமாறு பாகவதம் விஷ்ணுபுராணமுதலிய வடநூல்களிற் காண்டலரிது. ஆனால், அப்புராணங்களில் கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்தபின்னர், கண்ணன் கோபியர்களெல்லாருடனும் சேர்ந்து "ராஸக்கிரீடை" செய்தருளினாரென்று கூறப்பட்டுள்ளது.

இனி, கண்ணனுடைய அஷ்டமகிஷிகளிலொருவராய் அப்பிரானால் விடை தழுவிக்கொள்ளப்பட்ட சத்யவதி என்ற பிராட்டியைப்பற்றி-அவர் கல்யாணவரலாறு தவிர - வேறு புகழ்ச்சியேனும் பிரஸ்தாபமேனும் பாகவதமுதலிய புராணங்களிற் காணப்பட்டிலது. பழைய தமிழ் நூல்களோ, கண்ணனுடைய ஏனை மனைவியரைப்பற்றிக்கூறுவதினும், நப்பின்னையோடு அப்பிரான் புரிந்த லீலைகளையே மிகுதியாகக் கூறுகின்றது. இவற்றையெல்லாம் நோக்கும்போது, நப்பின்னைப் பிராட்டியைப்பற்றி வடநாட்டார்க்குத் தெரிந்ததினும அதிகமான வரலாறுகள் தமிழ்நாட்டிற் பழங்காலமுதலே வழங்கலாயினவென்பது நன்குணரப்படுகின்றது.

## ௨. குருந்தொசித்தது.

கண்ணபிரானது 'பாலசரிதை'களில் குருந்தமரத்தை ஒசித்ததும் ஒன்றாம். இதனை "பரப்புற்ற, கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தாற் பாடுதும்" "கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்" (சிலப்பதிகாரம்) எனவும், "காமருசீர்த் தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉம்...........பூவைப்பூ வண்ணனடி" (திரிகடுகம்) எனவும் வருவனவற்றாலும்,— "குருந்த மொன்றொசித்தானொடுஞ் சென்று கூடியாடி விழாச்செய்து" "கொங்கலர்ந்த

மலர்க்குருந்த மொசித்த கோவலன்" என்னும் ஆழ்வார்கள் திருவாக்காலும் அறியத்தக்கது. இவ்வாறு குருந்தொசித்த சரித்திரமொன்று தமிழ் நூல்களிற் பிரபலமாக வழங்குதல்போல, வடநூல்களிற் காண்டல் அரிதாம். "கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தான்" என்பதற்கு அடியார்க்கு நல்லார், "கொல்லையில் வஞ்சத்தால் வந்துநின்ற குருந்தை ஒசித்தவன்" என்று உரைகூறுதலால், குருந்தரூபமாகத் தம்மைக்கொல்லவந்த அசுரனொருவனைக் கண்ணன் முறித்துக் கொன்றருளினர்—என்பது சரித்திரமாகத் தோற்றுகின்றது. இவ்வாறே, அசுராவிஷ்டமான குருந்தென்று ஆழ்வார் பாசுரங்கட்கும் வியாக்கியானம் எழுதப்பட்டுள்ளதென்பர். இனி சீவக சிந்தாமணி நாமகளிலம்பகத்தில் (கஅ௦.)

"நீணிற வண்ண னன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ண னேக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானை வேந்தே விரிபுனற் றொழுனை யாற்றுட்
கோனிற வளையி னார்க்குக் குருந்தவ னொசித்த தென்றான்"

என்னும்பாட்டும், "மாயோன் பலதுகிலைக் கவர்ந்து தம்முனாகிய பானிறவண்ணன் (பலராமர்) நோக்கின் பழியுடைத்தென்றுகாண், தொழுனை (யமுனை) யாற்றிலே கோவியர்களுக்குக் குருந்தொசித்தது." என்ற நச்சினார்க்கினியருரையும், முற்கூறிய குருந்தொசித்த வரலாற்றை வேறுவிதமாகக் கூறுவதாகும். கண்ணபிரான், யமுனையில் நீர்விளையாட்டயர்ந்த கோவியருடைய துகில்களை அவரறியாமற் கவர்ந்து பக்கத்துள்ள குருந்தமரத்திலொளித்துப் பின் அம்மகளிர் வந்து வேண்டத் துகில்களையளித்து, அக்குருந்தையுமுறித்துச் சென்றாரென்னும் வரலாறு இப்பாட்டிற் கூறப்படுகிறது. இவ்வாறே "குருந்திடைக்கூறைபணியாய்" என்று பெரியாழ்வாரும், "நீரினிற் குடைந்து பாரில் நிகரிலாக் கலன்கள் பூண்ட, நாரியர் துகிலை வாரி நலனுறுங் குருந்திலேறி" என்று பிறருங் கூறினர். இனி பாகவத முதலிய நூல்களில் கண்ணன் துகில்களை ஒளித்த மரம் கடம்பு என்றே கூறப்படுகின்றது. அன்றியும் அக்கடம்பு அசுராவிஷ்டமானதென்று அந்நூல்களிற் கூறப்படவில்லை. ஆனால், கண்ணன் திருவடிதீண்டப்பெற்றதனால் நற்கதி பெற்றதாகச் சொல்லப்பட்டுளது.



இவ்வாறு, குருந்தமரத்தைப்பற்றிய இரண்டு வரலாறுகளும் வடநூல்களிற் காண்டலரிதாகவும், தமிழ்நூல்களில் அது வழக்குமிகப்பெற்று மிருத்தல் காண்க.

## ௯. குடக்கூத்து.

கண்ணபிரான் பேரனும் பிரத்தியும்நன் மகனுமாகிய அநிருத்தன், சோணிதபுரத்தே பாணாசுரன் மகளான உஷாதேவியைக்காதலித்து அவளோடிருத்தலை அவ்வசுரன்கண்டு அவனைச்சிறைப்படுத்த, அச்செய்தி தெரிந்து கண்ணபிரான் அவ்வசுரனுடன் பெரும்போர் புரிந்து தம்பேரனைச் சிறைமீட்ட வரலாறு புராணங்களிற் கூறப்பட்டுளது. பழைய தமிழ் நூல்களில், இச்சரித்திர சம்பந்தமாக இரண்டு கூத்துக்கள் கூறப்படுகின்றன. அவை, குடக்கூத்து, பேடு என்பன. குடக்கூத்தென்பது, கண்ணன் பேரனை அநிருத்தனை, தன்மகள் உழைகாரணமாக வாணன் சிறை வைத்தபோது, அப்பிரான் அவ்வசுரனது சோ (சோணிதபுரம்) என்ற நகரிற் சென்று குடங்கொண்டாடியதைக் குறிப்பதென்பர். "இதனை வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோ னாடிய குடமும்" என்ற சிலப்பதிகார அடிகளானுணர்க. "குடங்களெடுத் தேறவிட்டுக் கூத்தாட வல்லவெங் கோவே" என்ற பெரியார் திருமொழியும் இதனையே கருதியதுபோலும்.

இனி, 'பேடு' என்னுங் கூத்தாவது, கண்ணபிரான் மகனாகிய பிரத்தியும்நன் (இவனைக் காமனென்று தமிழ் நூல்கள் கூறும்.) உழைகாரணமாக வாணனாற் சிறைவைக்கப்பட்ட தன்மகன் அநிருத்தனைச் சிறைமீட்டு வாணனது சோநகரத்துப் பேடியுருவங்கொண்டு ஆடியதென்பர். மணிமேகலையில் "வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி—நீணில மளந்தோன் மகன்முன் னாடிய பேடிக் கோலத்துப் பேடு" என வருதலால் அறிக.

இவ்விரண்டு சரித்திரங்கட்கும் ஆதாரம், வடநூல்களிலிருந்து இப்போது விளங்கக் கூடவில்லை.

இனி, ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய நூல்களில் வழங்கும் கண்ணன் வைபவங்கள் சிலவற்றுக்கும் வடமொழிப் பிரமாணமில்லையெ

னக் கூறுவர். அவை சீமாலிகன் தலையறுப்புண்டது, ததிபாண்டனும் அவன் தாழியும் மோக்ஷம் பெற்றது—என்பவை.

## ௪. சீமாலிகன் தலையறுப்புண்டது.

சீமாலிகனென்பான் ஓர் இடையன். இவன் கண்ணனுக்கு உசாத்துணைவனாய் உடனிருப்பவன். இவனுடன், கண்ணன் சம்பாஷித்துக்கொண்டு செல்லும்போது அப்பெருமானது கரத்திருந்த சக்கராயுதத்தைத் தான் தூக்கிச்செல்லும்படி தன்னிடம் கொடுக்குமாறு இவன் கண்ணனைப் பலமுறைகேட்க, பெருமான் "அது தலையை அறுத்துவிடு" மென்றுகூறியும் கேளானாய் அவ்விடையன் வற்புறுத்த, முடிவில் சக்கரத்தைக் கண்ணன் அவன்கையிற்கொடுக்கும்படி நேரவும், உடனே அஃது அவன் தலையை அறுத்துத்தள்ள அவன் மோக்ஷித்தனன் என்பர். இது

"சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய்
சாமாறவனைநீ யெண்ணிச் சக்கரத்தாற் றலைகொண்டாய்"

என்ற பெரியாழ்வார் திருமொழியானும் அதன் வியாக்யத்தானும் அறிந்தது.

## ௫. ததிபாண்டனுக்குந் தாழிக்கும் வீடளித்தது.

கண்ணபிரானது அற்புத லீலைகளிலே, அப்பிரான் ததிபாண்டனுக்கும் அவன்தாழிக்கும் மோக்ஷமளித்த வரலாறும் ஒன்று. அஃதாவது:—கண்ணன், இளம்பருவத்தோர்நாள் வெண்ணெய் களவுகண்டபோது, தாயான யசோதைப்பிராட்டியார் அறிந்து வெகுண்டு பிள்ளையைத் தண்டிக்கவெண்ணி அப்பிரானைப் பிடித்தற்கோட, கண்ணனும் அதற்கஞ்சியதுபோல் நடித்துத் தாய் கைக்கு அகப்படாமற்றப்பித் ததிபாண்டனென்னும் இடையனதகம்புக்கு ஒளித்துக்கொள்ள, அவ்விடத்தைநோக்கி யசோதையார் விரைந்து வருதலறிந்து அங்கிருந்த அவ்விடையனை நோக்கி, "என் தாய் என்மேல் வெகுண்டு வருதலால், யான் அவள் கண்களிற் புலப்படாவாறு உன் பக்கத்துள்ள தயிர்த்தாழியை என்மேல் கவிழ்த்துச் சிறிது நேரம் என்னை ஒளித்துவை" என்று இரந்து வேண்டிக்கொண்டனர். அவ்வார்த்தைக்குத் ததிபாண்டனும் இணங்கி தன் தாழிக்



குள் பெருமானை வைத்து மூடிவிட்டுப் பக்கத்திலிருந்தனன். பிள்ளையைத்தேடிவந்த யசோதையார் அங்கிருந்த இடையனிடம் கண்ணன்வந்த செய்தியை உசாவ, அவன், "இங்கே கண்ணன் இல்லை" என்னவும், அவளும் 'வீடு வந்ததும் பிள்ளையைத் தண்டிப்பேன்' என்றுகூறி முறுமுறுத்துக்கொண்டு திரும்பினள். அவள் சென்றதும் ததிபாண்டன், கண்ணனை வெளியில் விடாமல், தான் மூடிவைத்த தாழியின்மேற் சடக்கென்று ஏறி உட்கார்ந்துகொண்டனன். அவ்விடையன் இங்ஙனம் செய்ய, உள்ளிருந்த பெருமான், தாய் சென்றுவிட்டமையால் தன்னை வெளியேவிடுமாறு அவ்விடையனை வேண்டினர். இடையனோ, ஜன்மாந்தரங்களிற் செய்த பெருந்தவப் பேற்றால் ஞானவானாயிருந்தமையால், ஸர்வேசுவரன் இவ்வுலகில் அவதரித்து மிக எளியனாக யாவர்க்கும் அருள்புரிந்து வருங்காலத்தேயே தானும் பெரும்பேறடையக்கருதி, தம்மை வெளியில் விடுமாறு வேண்டிய பெருமானை நோக்கி, "எனக்கு தேவரீர் மோக்ஷமளித்தாலன்றி வெளியில்விட ஒருப்படேன்" என்று கூறித் தாழியை முன்னினும் பலமாக அழுத்திக்கொண்டான். உள்ளிருந்த கண்ணன், புன்முறுவல்கொண்டு, அவ்விடையனிலையை உணர்ந்தவராதலின், அவனுக்குப் பரமகிருபைசெய்யத் திருவுளங்கொண்டு, அவனை நோக்கி, "உனக்கு மோக்ஷமளித்துவிட்டேன்; இனி என்னை வெளியில் விடலாமே" என்றார். அதுகேட்ட இடையன் பெருமான் தனக்கருளிய பெரும்பேற்றுக்கு மகிழ்ந்தனனாயினும், வேறு சிந்தையுடையனாய், மறுபடியும் அத்தாழியைவிட்டொழியாது அதிகமாக அதனை அமிழ்த்திக்கொண்டு உட்காருவானாயினன். உள்ளிருந்த பெருமான் இடையனை நோக்கி "நீ கேட்டபடி முத்தியளித்த பின்பும் என்னை வெளியில்விடாது தாழ்ப்பதேன்" என்று அவனை உசாவ, "ஸ்வாமி! தேவரீர் அடியேன்பாற் பரமகிருபை செய்வதற்கு உற்றதுணையாயுதவிய இத்தாழியைத் தனியேவிட்டு நீங்கேன்; ஆதலால் இதற்கும் யான் பெற்ற பேற்றை அளித்தாலல்லது இந்த சமயத்தில் உம்மைவிடுவது தவறாகும்" என்று அவ்விடையன் பெருமானதிசயிக்கக் கூறினன். அதுகேட்ட பகவான் "இவ்விடையன் நம்மைக் காரியங் கொள்ளுமாறென்னே" என வியந்து, தம் நிரேதுக பரமகிருபையால், அவன் விருப்பின்படி "தாழிக்கும் வீடுதந்தேன்" என்றரு

வீச்செய்ய, ததிபாண்டனும் மூடிய அத்தாழியை நீக்கிக் கண்ணனை வெளியேறவிட்டு, தான் தன்றயிர்த்தாழியுடன் * மோக்ஷம் பெற்ற னன்—எனக் கண்டுகொள்க. இச்செய்தி, திருக்கோளூர்ப் பெண் பிள்ளை ஸ்ரீஇராமாநுஜரைநோக்கி, "இங்குண்டு என்றேனோ பிரக லாதாழ்வானைப் போலே; இங்கில்லையென்றேனோ ததிபாண்டனைப் போலே" எனக் கூறிய வார்த்தையாலும், ஆசாரிய இருதயத்தும் அதன் வியாக்கியானத்துங்குறிக்கப்படுதலாலும் தெரியவருகின்றது. வில்லிபுத்தூராரும் "அருச்சுனனுந்—தாழிதனக்குமுன் வீடுகொடுத் தருள் தாளிணை யைப்பிடியா" என்று கூறினர். திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்காரும் திருவரங்கத்துமாலையில் (ருங)

"சிந்திக்க நெஞ்சில்லை வாயில்லை நாமங்கள் செப்பநின்னை
வந்திக்க மெய்யில்லை வந்திரு போதுமொய்ம் மாமலர்ப்பூம்
பந்தித் தடம்பொழில் சூழரங் காததி பாண்டனுன்னைச்
சந்தித்த நாண்முத்தி பெற்றதென் னோதயிர்த் தாழியுமே"

என்ற பாட்டில் இவ்வினிய சரிதத்தைக் குறிப்பிட்டனர். "அரங்கா! பண்டங்களைக் கொள்ளுதற்கன்றி உன்னைச்சிந்தித்தற்கு உதவாத நெஞ்சையும் (கழுத்து), அவற்றை வெளியில் விடுதற்கன்றி உன்னு மங்களைச் செப்பற்குதவாத வாயையும், நின்னைத்தாழ்ந்து வந்திக்கத் தகாத மேனியையுமுடையதாய் அசித்தாயிருந்ததொரு பாண்டமும் வீடு பெறச்செய்தது உனது பரமகிருபை எனின், உண்மையில் உன் னைச் சிந்தித்தற்குரிய நெஞ்சும், உன் நாமங்கள் செப்பற்குரிய வா யும், வந்தித்தற் குரிய மேனியுமுடையராய்ச் சித்தாயிருக்கும் எம் போலியர்க்கு அது வாய்க்காததென்னோ" என்பது இப்பாட்டின் கருத்தாதல் காண்க. இச்சரித்திரத்தை, வேறுவிதமாக எம்பிரான் சதக முதலியவை கூறும். அஃதாவது:—

---

* "இந்த ஜீவனைச் சரீரமாகவுடைய நான் அசித்துக்களிற் பிரவேசித்து அவற்றின் நாம ரூபங்களைப் பிரகாசிப்பிக்கிறேன்" (சாந்தோக்கியம்) என் பது பகவத்வாக்கியமாதலின், தாழிக்கும் ஒருவகை யாத்மாவுண்டென்றும், அது மோக்ஷம் பெற்றதென்றும் கூறுவர்.



திண்ணமுடன் கோபாலா மனையில் வெண்ணெய்
திருடினதைக் கண்டவர்கள் துரத்தும் போது
கண்ணில்லாத் ததிபாண்டன் மனையிற் புக்குக்
கண்கொடுத்துச் சாடியிற்போந் தொளித்துக் கொள்ளப்
புண்ணிகராங் கண்வேண்டேன் கதிதா வல்லாற்
போகவிடே னெனச்சாடி மூடிக் கொள்ள
எண்ணரிய பரமபத மவனுக் கீந்தாய்
இறைவநா ராயணனே எம்பிரானே.

என்பது.

இவ்வினிய வரலாறுகள் புராணங்களிற் காணப்படாதனவா கித் தமிழ்நாட்டில் வழங்கி வருதல் கவனிக்கத்தக்கது. இவ்வாறு வடநூல்களில் காண்டற்கரியனவாய், தமிழ்நாட்டிற் பெரு வழக் குப் பெற்றுள்ள கண்ணன்சரிதங்கள் வேறு சிலவுமிருக்கக்கூடும். இவற்றுக்கு, வடநூலாதரவுகள் உள்ளனவாயின், அவற்றை அறிந் தோர் அறிவிக்க வேண்டுகிறேன். இராமபிரான் சரிதங்களிற் சில வும் வடநூலாதரவின்றியே இவ்வாறு தமிழ்வழக்கில் உள்ளன. அவற்றைச் சமயநேர்ந்துழி எழுதுவேன்.

பத்திராசிரியர்.

---

உ

சிவமயம்.

## மாதவிவாதம்.

மரம், செடி, கொடி, புல்லு என்று வைத்தியநூலார் சிலர் வகு த்த தாவரவர்க்கம் நான்கனுள்ளே மாதவி என்பது எவ்வருக்கத்தின் பாற்படும்? மரவருக்கத்தின் பாற்படுமா? கொடிவருக்கத்தின்பாற் படுமா? சங்கடைப்புலவர்களுள்ளே ஒரு சாரார் மாதவி என்பது மரவருக்கத்தின் பாற்படும் என்று வாதஞ்செய்வர். மற்றொருசா ரார் மாதவி என்பது கொடிவருக்கத்தின் பாற்படும் என்று வாதஞ் செய்வர். இவருள்ளே மரவருக்கத்தின் பாற்படும் என்று வாதம்புரி

வோர் கந்தபுராணத்திலே வள்ளியம்மை திருமணப்படலத்துள்ளபாட்டுக்களுள்ளும் ஒன்றெடுத்துக்காட்டுவர். அதற்கு உரையுந்தீட்டுவர்.

கந்தபுராணம்.

ஆதிதன்மொழி துணைவிகேட் டஞ்சியே யையர்க்கு
நீதி யன்றுதண் பனைமட லேறுத னீரிம்
மாத வித்தருச் சூழலின் மறைந்திரு மற்றென்
காதன் மங்கையைத் தருவனென் றேகினன் கடிதின்.

மாதவி என்பது குருக்கத்தி. "அதிமுத்தம்வாசந்திகுருகுநாகரியிவை குருக்கத்தியாகும்" என்று பிங்கலநிகண்டுகாரரும், "குருகுநாகரி வாசந்திமாதவி குருக்கத்திப்பேர்" என்று சூடாமணிநிகண்டுகாரரும் கூறுவர். ஆரியநிகண்டு காரருள்ளே அமரசிங்கர் என்பவர் மாதவியின் பரியாய நாமங்கள் பலகூறி "மாதவீலதா" என்றே முடிப்பர். லதா என்பது தமிழ்மொழியிலே இலதை என்று தற்பவமாக வழங்கப்படும். இலதை - கொடி.

அமரகோசம்.

அதிமுக்தః புண்ட்ரகஸ்ஸ்யாத் வாஸந்தீ மாதவீலதா ॥

இங்கே கூறப்பட்ட பெயர்கள் நான்கு; அவை அதிமுத்தம், புண்டிரகம், வாசந்தி, மாதவி என்பன. அதிமுத்தம் என்பது பிங்கலநிகண்டிலே அதிகம் எனவும், முத்தம் எனவும் இருபெயராக்கி அச்சிடப்பட்டன. அதிமுத்தம் - முத்தர்களை வென்றது. புண்டிரகம் - புண்டிரதேசத்திலே முளைத்தலுடையது. வாசந்தி - வசந்தகாலத்திலே மலர்விரிதலுடையது. மாதவி - மது என்னும் பருவமாசங்களிலே மலர்விரிதலுடையது. மது - சித்திரை வைகாசி.

காளிதாசமஹாகவி செய்த புட்பபாணவிலாச காவியத்துக்கு உரைகூறிய உரையாசிரியரும் மாதவியைக்கொடி என்றே கூறுவர். இறையனாரகப்பொருளுரையும், சிலப்பதிகாரமும் மாதவியை எங்ஙனம் கூறும்? அவைகளும் கொடிஎன்று கொண்டுதான் கூறும். "கடிக்குருக்கத்திக் கொடிப்பிடித்து" என்பது இறையனாரகப்பொருளுரை. "கோத்தை மாதவி கொழுங்கொடியெடுப்ப" என்பது சிலப்பதிகாரம்; ஊர்காண்காதை, திருவானைக்காப்புராணம், தேவாரம் முதலியன எங்ஙனம் கூறும்? அவைகளும் கொடியென்று கொண்டுதான் கூறும்.



திருவானைக்காப்புராணம்.

கூர்த்தநுதிப்பனிமுல்லை கோதையர்தமியலொளியிற்
சீர்த்தநகைமுகையொப்புச் சிவணுதமானத்தால்
ஆர்த்தவிதழ்நெகிழ்ந்துடைவவவர்செயற்கையொளிநகைக்கு
நேர்த்திலமென்றுடைந்தொழிவ நெடுங்கொடிமாதவிமுகையும்.

திருமாணிகுழித் தேவாரம்.

நேடுமயனொடுதிருமாலுமுணராவகை நிமிர்ந்துமுடிமேல்
ஏடுலவுதிங்கண்மதுமத்தமிதழிச்சடையெம்மீசனிடமாம்
மாடுலவுமல்லிகைகுருந்துகொடிமாதவிசெருந்திகுரவின்
ஊடுலவுபுன்னைவிரைதாது மலிசேருதவிமாணிகுழியே.

இங்ஙனமே வடமொழியிலுந் தென்மொழியிலும் பலநூல்கள் மாதவி என்பது கொடிவர்க்கத்தின் பாற்படும் என்று கொள்ளுமாறு வெளியாகக் கூறுகின்றன. ஆதலால் யாமும் அதனைக் கொடிவருக்கத்தின் பாற்படும் என்றே கொள்ளுதும். அங்ஙனமாயின்; மேலே வந்த "மாதவித்தருச்சூழலின்" என்னும் கந்தபுராணத்தோடு முரணாதோ? எனின்; முரணாது. என்னை! அதன்பொருள் வேறுவகையாகக் கூறப்படும். என்னையெனிற் கூறுதும். மாதவித்தருச்சூழலில் - மாதவிக்கொடி படர்ந்து மூடியிருக்கும் மரச்சூழலில் எனவே பொருள்கொள்க. இப்பொருள் கொள்ளுங்கால் மாதவியை மரம் என்பார் வாதம் நிரர்த்தகம் என்னும் நிக்கிரகத்தானமாயத் தூரம் போய்விடும்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

# சிறுவர்க்குரிய உபந்நியாசங்கள்.

## நன்னடக்கை.

ஆசாரலக்ஷணோ தர்ம: ஸந்தஸ்சாசாரலக்ஷணா:॥
ஆகமானாம் ஹி ஸர்வேஷாம் ஆசார: ச்ரேஷ்ட உச்யதே॥
ஆசாரப்ரபவோ தர்மோ தர்மாதாயுர்விவர்த்ததே॥
ஆசாரால்லபதே ஹ்யாயுராசாரால்லபதே ச்ரியம்॥
ஆசாராத் கீர்த்திமாப்னோதி புருஷ: ப்ரேத்ய சேஹ ச॥

சிறுவர்களே? இந்தப்பக்கத்தின் றலைப்பிலிருக்கிற வார்த்தைகளை நீங்கள் வாசிக்கமுடியாது. ஏனெனில், அவைகள் ஸமஸ்கிருத வார்த்தைகள். உங்களுக்கு ஸமஸ்கிருதம் தெரியாது., ஒருக்கால், கொஞ்சம்பெரியவராகும்பொழுது அதை நீங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு இந்துக்குழந்தைக்கும் சிறிதுஸம்ஸ்கிருதந்தெரியவேண்டும்; ஏனென்றால், உங்களுடைய திவ்வியமான வேதபுராண இதிஹாஸகிரந்தங்கள் அப்பாஷையிலேயேதான் எழுதப்பட்டிருக்கின்றன. பூர்விக இருஷிச்ரேஷ்டர்கள் அப்பாஷையைத் தான்பேசிவந்தார்கள். மேலே எழுதப்பட்டிருப்பன உங்களால் வாசிக்கமுடியாதாகையால் அவைகளின் பொருளை நான் உங்களுக்கு விளங்கச்சொல்லுகிறேன்.

பகவத் பக்தனாக நாமிருக்கவேண்டுமானால் நம் நடக்கையில் மிக்க பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்று இவ்வார்த்தைகள் கற்பிக்கின்றன. நன்னடக்கையே எல்லாவற்றிலுஞ்சிறந்தது. நன்னடக்கையே தருமம். தருமமே மதம்-மதம் அல்லது தர்மமே நம் வாழ்வை அழகுபடுத்திச்சிறப்பிப்பது. நன்னடக்கையினாலேயே நாம் சந்தோஷமாக வாழ்கிறோம். இம்மையிலும் மறுமையிலும் நற்பயன்களுதவுவதும் நன்னடக்கையேயாம். இத்தகைய நன்னடக்கையைப் பற்றியேதான் உங்களுக்குச்சொல்ல விரும்புகின்றேன். உங்களைச் சந்தோஷிக்கச்செய்வதும், துன்புறச்செய்வதும் சிலபொருள்களேயாம் என்பது நீவிர் அறிந்த விஷயம். சிலவேளைகளில் நீங்கள் கோபிஷ்டராயும், சில சமயங்களில் சொல்லியபடி நடக்காத முரடராயுமிருக்கிறீர்களாயினும் உங்களில் அநேகர் நல்லவராகவேயிருக்க முயலுகிறீர்கள். ஒருக்கால், நீவிர் கோபங்கொண்டபொழுது அப்படிச் சினந்துவிட்டமைபற்றிப் பின்னால் பெரிதும் வருத்தமுறுகிறீர்கள். மிகவும் அமைதியாயிருந்திருக்கவேண்டுமென்றும் விரும்புகிறீர்கள். உங்களுடைய கீழ்ப்படியுந்தன்மையில்லாமையைப்பற்றி நீங்கள் அடிக்கடி வருத்தப்படுகிறீர்கள். நன்னடத்தையைப்பற்றிக் கற்பிக்கும்படியான கதைகள் பலவற்றைக் கூறுகிறேன். இக்கதைகள் உங்களை நல்லவராக்கும். உங்களது நல்வழிக்கான மார்க்கங்களையும் அவைகள் உங்களுக்குணர்த்தும். இத்தகைய கதைகள் உங்களது சிறந்த வேதப்புத்தகத்திலுள்ளன. நீங்கள் மிகச் சிறிய குழந்தைகள்; இக்கதைகளும் படிக்கச்சாத்தியமானதுமன்று; இக்கதைகளில் நீண்ட கடினமான வார்த்தைகளிருக்கின்றன. இவைகளை எளிய நடையில் குறுக்கித் தெளிவாய் எழுதினால் நீங்களே அவற்றை அடிக்கடி படித்தறிந்துகொள்ளவியலும்.



பண்டைக்காலங்களில் நற்குணம் வாய்ந்த மனிதரும் ஸ்திரீகளும் எவ்விதம் தம் வாழ்நாள்களைக் கழித்தனர் என்பது இக்கதைகளினால் நன்கு தெரியலாகும். இக்கதைகளில் சிறு குழந்தைகளின் நற்குணங்களும் அவர்கள் எல்லாரிடத்தும் எவ்வளவு சாந்தசீலராயிருந்தார்களென்றும், அவர்கள் பரமேச்வரனையும், ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவையும், பெருந்தேவர்களையும் எப்படி நேசித்தார்களென்பதும், கடவுளர்கள் இச்சித்தவண்ணமாய் அவர்கள் எப்படிச்செய்தார்கள் என்பதும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்களது நன்னடக்கையைப்பற்றி முன்னர் அறிந்து நாமும் அவர்களைப்போலவே ஆக முயலுவோமாக.

இவ்வழகிய உலகத்தினையும், பிரகாசமான சூரியகாந்தியையும், குளிர்ந்த விருக்ஷங்களையும், முதிர்ந்த கனிகளையும், நம்முணவிற்குரிய தான்யவகையினையும், நமக்குபயோகமாயுள்ள பிராணிகளையும், நமக்குச் சுத்தமான இனிய பாலைத் தருகிற சாந்தமான பசுவினையும் நீங்கள் அறிவீர்கள்! இவைகளெல்லாம் நமக்குக் கடவுளால் கிருபைகூர்ந்து அளிக்கப்பட்ட பெருங்கொடைப் பொருள்களாம். அவை

னால் நாமடையும் பயன்களுக்குத் தகுந்தாற்போன்ற நன்மையினை நாமும் அவற்றிற்கு அளித்தலும் வேண்டாவோ? நாமவைகளுக்கு யாது கொடுக்கமுடியும்? அவைகளிடத்தில் வேண்டிய பொருள்களெல்லாமிருந்தாலும், நாமவைகளுக்கும் நம்மாலானது சிறிதுகொடுப்போம். நமது நற்செய்திகளும், நல்லெண்ணங்கள், நல்வார்த்தைகளே நாம் அவைகளுக்குக் கொடுக்கக்கூடிய பொருள்களாம். இவற்றைத்தான் ஆசாரமென்று சொல்வது. இப்பதம் பொருளாவது சிறிது சிரமந்தான். ஆனால், அதன் அர்த்தம் நல்லவை என்பதுதான். பிறருக்கும் நமக்கும் ஒருசேரப் பேரின்பத்தைக்கொடுக்கும்படியான நன்னடக்கையே என்று பொருள் கூறலாம். நற்செய்கைகள் பலவகைப்பட்டன. உங்களைக்காட்டிலும் சிறியோரிடத்திலும், உங்களில் வலிகுறைந்தவரிடத்திலும், உங்களையொத்தவயதினரல்லாத உங்களுடைய சிறிய நண்பரிடத்திலும், உங்களது நற்செய்கையைக்காட்டவேண்டும். மிக்க ஏழைகளுக்கு அல்லது, நீங்கள் செய்வனவற்றை அறியாதவர்களுக்கும் நீங்கள் நல்லவற்றைச் செய்யமுடியாது. உங்களுடைய தாய்தந்தையர் ஆசாரியர் வயதுமுதிர்ந்தோர், அரசன் முதலியோர்களுக்கும் நீங்கள் நல்லன செய்தல் முடியும்.

அதி ஸத்ய ஸந்தர்களாயும் மிகக் கீழ்ப்படிதலுள்ளவர்களாயும், மிகச்சாந்தசீலராயும், அதி ஸ்வயநலங்கருதாதவராயுமிருக்கத்தகுந்த நற்காரியங்கள் பலவற்றை நாமே செய்துகொள்ள வியலும். எக்காலத்தும் பொய்யைத்தள்ளி மெய்யைத் தழுவவும் பிறிதொன்றிற்கும் தீங்குபுரியாதிருக்கவுமிருக்க நாம் முயற்சிக்கலாம்.

> "பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
> யெல்லா வறமுந் தரும்."

நமக்கு நாமே செய்துகொள்ள வேண்டிய நற்காரியங்கள் இவைகளேயாம். பிறகு ஈச்வர ஸம்மதத்திற்குவந்ததாய் நடக்கவேண்டிய நல் நடத்தை யொன்றுமுண்டு. நாம் செய்யும் எக்காரியங்களினும், உத்தியோகத்திலும், விளையாட்டிலும் ஈச்வரனைத் த்ரிகரண சுத்தியுடன் ஸ்மரிக்கவேண்டும். அவருக்குத் தொண்டுபுரிய முயற்சிப்பதிலும், ஈச்வரனுக்கே செய்யும் பணிவிடைகளில் மனப்பூர்த்தியாய்க் கலந்து செய்வதிலும் எப்போதும் ப்ரீதியாயிருக்கவேண்டும். நீங்கள் தக்க பருவமடைந்து பெரியவராகும்போது பகவத்கீதை என்னுமோர் அழகிய ஸத்க்ரந்தத்தைப் படிக்கலாகும். நாம் செய்யும் எக்காரியங்களையும், நாம் உண்ணும் எவற்றையும் நாம் கடவுளர்க்கு அர்ப்பணம் செய்யும் எவற்றினையும், அந்நியர்க்கு நாம் கொடுக்கும் கொடைகளையும், நாம் தியாகம் செய்யும் எவற்றையும், பகவானுக்கே அர்ப்பணம் செய்யவேண்டுமென்றும், இதுதான் பகவதாராதனையென்றும், இதுதான் பக்தியென்றும், ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா தமது பகவத் கீதையில் கூறுகின்றார். நற்செயல்களைப் பற்றிய இத்தகைய அருங்கதைகள் பலவற்றைஇனி நாம் படிப்போம். பலஹீனர், கதியற்றவர் முதலியோர்களுக்குச் செய்யக்கூடிய நற்காரியங்கள், எல்லா மனித ஜீவவர்க்கங்களுக்கும் செய்யக்கூடிய நற்காரியங்களைப்பற்றியும் சொல்லவேண்டிய விஷயங்களிலிருந்து நாம் தொடங்குவோம். உலகத்தின் மனிதர்கள், ஸ்திரீகள், சிறியகுழந்தைகள், பிராணிகள் புழுக்கள் முதலான ஸகல ஜீவவஸ்துக்களுக்கும் நாம் உதவிபுரிய முற்படவேண்டும். எல்லாப் பொருள்களையும் நேசிப்பதும், ஜீவப்பிராணி யாதாமொன்று வருந்தும்போது நாமும் வருத்தமடைவது மேலானது. பிறவுயிர்க்கு ஒருக்காலும் துன்பஞ்செய்யாமையே மேலானது.

> "எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
> மாணா செய்யாமை தலை."

இம்மாதிரியான பிறவுயிரின் மேலுள்ள நேசம்தான் கருணைகடாட்சம் என்னும் சிறந்த சாரமாகும்.

கருணைகடாட்சம் அல்லது அருளுடைமை என்னும் நீண்ட வார்த்தைக்கு நேசமும் பரிதாபமும் என்று அர்த்தமாகும். வருத்தமுறுகிற எந்தப்பிராணியினிடத்திலாவது ஒரு சிறுவன் இரக்கப்பட்டு அதற்கு ஏதேனும் சிறிது உதவிசெய்ய முயற்சித்தால், அவன்தான் அருளுடைமை என்ற ஆசாரத்தையுடையவன் என்று சொல்லப்படுவான். வருத்தமுறுபவர்பால் பரிதபித்து அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யுஞ் சிறுகுழந்தையோ, வயதுவந்தமனிதனோ, மனுஷியோ, அவன் அல்லது அவள் அருளுடையார்கள்

என்று சொல்லப்படுவார்கள். விச்வாஸமாய் நோயாளிகளுக்குரியவற்றைச் செய்தும், வலியற்றவர்களுக்கும் உதவி செய்தும், பசியாளர்களுக்கு முகமலர்ந்து அன்னமிட்டும் வருவோமானால் நாமே தயாளசீலர் ஆவோம். பட்சமுள்ள அற்பகாரியங்களும், மதுரமானசொற்களும், மேலுள்ள ஸ்வர்க்கத்தைப்போலப் பூமியையும் சகல இன்பங்களையும் ஒருங்கே அனுபவிக்கும் மோக்ஷவீடாக்குகின்றது.

## COMPASSION.

## அருளுடைமை.

### ரந்திதேவன் என்னும் நல்லரசன் சரிதை.

——:0:——

தன்னுயிர்போல் மன்னுயிரிடத்து இரக்கங்காட்டியருளிய ஒரு மகாராஜனின் அழகிய சரித்திரம் பழைய கிரந்தமொன்றில் சொல்லப்பட்டிருப்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஒருகாலத்தில் ரந்திதேவனென்னும் மன்னனொருவனிருந்தான்; அவன் ஸங்க்ருதி என்பவனுடைய குமாரன். எப்பொழுதும் வேண்டிய திரவியமும் ஆகாரமும் ஏழைகளுக்குக் கொடுத்துவந்ததினால் அவன் நல்ல அரசன் எனப் பேர்பெற்றனன். பசியுள்ளவர்களுக்கு ஆஹாரம் போட்டுக் காப்பாற்றவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு தன்னிடத்திலுள்ள எல்லாவற்றையும் பிறருக்குஅளிப்பதுடன் சில வேளைகளில் அப்படிச்செய்வதில் தானுந் தன்னில்லாளுங்கூட உபவாஸமாயிருப்பதுண்டு.

ஒரு காலத்தில் அம்மன்னன் தானும் தன்னுடனிருப்பவர்களும் அநேக நாட்கள் ஆஹாரமின்றி மிகவும் பசியுற்றிருந்தார்கள். யாரோவொருவர் கொஞ்சம் ஆஹாரமும் கொஞ்சம் இனிய பாலும் நெய்யும் கோதுமையும் தண்ணீரும் அவர்களுக்குக் கொணர்ந்தார்கள். அவ்வாஹாரத்தையுட்கொள்ள அவர்கள் உட்காரப்போகையில் பசியுற்றிருக்கும் பிராமணனொருவன் அவர்களிடையில் திடீரெனத்தோன்றித் தனக்கு ஆஹாரங் கொடுக்கும்படி வேண்டினன். ரந்திதேவன் அந்த பிராமணனுக்கு ஆஹாரமளிக்கப் பிரியமுற்றவனாய் அவனுக்கே முதலில் உணவளித்தனன். உணவுண்ட பிராமணன் சென்றபிறகு பாக்கியிருந்த உணவைத் தங்களுள் ஸரிபாகமாகப்பகிர்ந்தான். அவன் தன்னுடைய பாகத்தை அருந்த உட்கார்ந்ததுதான் தாமஸம். பசியுள்ள ஆத்திரனொருவன் தனக்காஹாரம் கேட்டான். ரந்திதேவனே அப்பொழுது தான் ஆஹாரங்கொள்ளாவிட்டாலும், அவனுக்குக் கொஞ்சம் ஆஹாரங்கொடுத்தான். ஆத்ரனும் சிறிதுணவருந்தித் தன்வழிச்சென்றான்.



மிஞ்சியிருந்த சொற்ப ஆஹாரத்தை ரந்திதேவன் உண்ணவாரம்பியாததற்கு முன்னமேயே நாய்க்கூட்டமொன்றுடன் ஒருமனிதன் வந்து தனக்கும் ஏதாவது ஆஹாரம் வேண்டுமென்று வேண்டினன். வேண்டலும் இந்நல்லரசன் எஞ்சியிருந்த ஆஹாரமுழுவதையும் அம்மனிதனுக்கும் அவன் நாய்களுக்கும் பங்கிட்டுக்கொடுத்த பின்னர் ஒரு கிண்ணம் தண்ணீர்தான் கடைசியில் பாக்கியிருந்தது. பசியாறின நாயும் மனிதனும் தம்வழிச்சென்றபிறகு, தாஹத்தால் மிகுதியும் தளர்வுற்றிருக்கிற அரசன் கடைசியில் பாக்கியிருக்கிற தண்ணீரை யருந்தலாமென்றெண்ணினன். அதே நிமிஷத்தில் ஒரு எளிய பிச்சைக்காரன் எனக்கு நாவறண்டு போகிறது, மிக்க தாகமாயிருக்கிறது, தண்ணீர்வேண்டுமென்று மன்றாடினன். அப்பிச்சைக்காரன் ஜாதிப்ரஷ்டனாகிய நீசனையும் களைத்துப்போன தௌர்ப்பாக்கியனையுமிருந்தான்.

உதாரகுணமுள்ள இவ்வரசன் தான்சாப்பிட எண்ணியிருந்த நீரை அவ்வெளிய பிச்சைக்காரனுக்கீந்தான். அவ்வெளியவன் மிகவும் சுலபமாய் நீரை அருந்துவதற்குதவியாய் அப்பாத்திரத்தைத் தன் கையினால் பிடித்துக்கொண்டிருந்த அரசன் "பசி தாஹமொன்றும் எனக்குக் கிடையவே கிடையாது, மற்றவர்களுடைய துன்பத்தையும் துக்கத்தையும் நான் பொறுமையாய்ப் பொறுக்க கிருபாநிதியாகிய ஹரி கடாக்ஷிக்கவேண்டுமென்றும் மற்றவர்களுடைய கஷ்டங்களில் ஒத்தாசை செய்து ஸந்தோஷிப்பாக எனக்கு மனவலி, கடவுள் கொடுக்கவேண்டுமென்றும் மனங்கசிந்து கூறினர்.

பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்ரர்களிடத்தும் ஹீந ஜாதிகளிடத்தும் நாம் எவ்வளவு தயையோடிருக்கவேண்டுமென்றும், எல்

லாவற்றிற்கும் எங்ஙனம் நாம் உதவிபுரியவேண்டுமென்றும், ரந்திதேவனால் நாம் நன்கறிகிறோம். இந்த நல்ல ரந்திதேவன் செய்த விதமாய் நம்முடைய எல்லா ஆகாரத்தையும் அந்நியருக்குக் கொடுக்க முடியாவிட்டாலும் பசியுற்றவர்க்குச் சிறிதேனும் அடிக்கடி உதவலாம். கஷ்டப்படுவோரிடத்தும் நோயுற்றவரிடத்தும் சிறு குழந்தைகள்கூடத் தங்களுடைய அன்புள்ள செய்கைகளை அடிக்கடி செய்யக் கூடியவர்கள். நம் சொந்த மனிதராயினும் அந்நியராயினும் பணக்காரராயினும் ஏழையாயினும் பிராமணராயினும் ஜாதிப்ரஷ்டராகிய புலையராயினும் பாலரிடத்தும் நாம் அன்பும் விசுவாஸமும் உடையராயிருத்தல்வேண்டும். 'எம்மனிதன் நம் உதவியை வேண்டினானாயினும் அத்தகையோனை நம் ஸஹோதரனாகப்பாவித்து அவனுக்குதவி புரியவேண்டும்.

## 2 உபகாரம்.

கரியசிற்றெறும்பொன்று தன்னால் தூக்கவாவது அசைத்துருட்டவாவது முடியாத பெரியதொரு கோதுமைத் தான்யத்தைக் கண்டது. ஆதலின் தன்னெதிர்ப்பட்ட மற்றொன்றினை அத்தான்யத்தைத் தன்வளைவரையிற் கொண்டு சேர்க்க உதவிபுரியுமாறு மன்றாடிக்கேட்டுக்கொண்டது.

எனக்கு என்வேலை தலைக்குமேலிருக்கின்றது உனக்கு அத்தான்யம் தேவையானால் நீயேதான் அதை உருட்டி உன்வளைக்குக்கொண்டுய்க்கவேண்டுமென்றது. இப்படிக் கோபத்தோடு ஸ்வயநலங்கருதியே பதில் சொல்லிக்கொண்டுபோய் ஓரிடத்தில் ஸாவகாசமாய்ப் படுத்துறங்கலாயிற்று.

அப்பொழுதுதான் அவ்வழியே போய்க்கொண்டிருந்த மற்றொரு சிற்றெறும்பு தன்னுடைய ஸஹோதரன் உதவிவேண்டுவதை யறிந்து இரக்கப்பட்டு அது வைத்துக்கொண்டிருந்த சுமையை வளை கொண்டு சேர்ப்பதில் வேண்டிய ஒத்தாசையைப் புரிந்தது. இதைக் கேட்க நேரிடும் இளஞ்சிறுவர்கள்யாவரும் இக்கதையினால் நற்பயன் அடையமுயற்சிசெய்யக்கடவர்கள். நற்புத்தியையடைய [illegible] சிறுவர்கள் நல்ல ஸ்வபாவமுள்ள மற்றைய ஸஹோதர [illegible] யமுற்



புக்கு உதவிய நல்லெறும்பினால் நற்புத்தியடையக்கடவர். மேலும் சிறு பிராணிகளே ஒன்றுக்கொன்று பக்ஷமுள்ளவைகளாய் நடந்து கொள்ளுமானால் குழந்தைகள் உண்மையாய் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டுமென்பது சொல்லாமலே அமையுமன்றோ?

(இன்னும் வரும்.)

சுப்பிரமணிய ஐயர்.

---

உ

குமரன் றுணை.

# உள்ளத்துணர்வு.

(முற்றொடர்ச்சி.)

அகம் என்பது ஞானமுதிர்வுதலையெடுப்பபேருணர்வு நின்று திருவருட்சத்தியால் தன்மயமாய் நிற்கும் இடம் அகமாகும். தித்தித்தல்-இனித்தல். எவ்வகைச்சுவையினும் தேன்-தையிலவடிவாகவும் இடையறாச் சுவைதருவதாயுமிருத்தலின், தேனே என்றனர். அப்பொடுபெய்தவுப்புப்போல சிவனும் சீவனுந்தானாந்தன்மையெய்தி அபின்னமின்றியுண்மை காணுதலினால், தேனேயென உவமையாகு பெயராக்கிக்கொண்டனர். நாவழிநுகருந்தேன் கண்டமாத்திரையே யாதலின், அதுசிறும்பேரும் இன்றென்பதுபோதர சித்தத்துட்டித்திக்குந்தேன்என்றதென்க. ஆன்றோர் முடிபுகூறுமிடங்களிற்றான் உண்மைதோன்றும்; என்னுள்ளத்துள்ளிருக்குமின்பவெள்ளப்பெருக்கே, "சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே" என்ற பெரியார் வாக்கியங்களெல்லாம் இரகசியவிடமாகும். அபக்குவவான்மாக்கட்கு தெளிவுபொருந்தல் இயலாத காரியமாகும். ஓர் இளம்பருவத்தன் தான்சிற்றின்பம் நுகருங்காலத்து ஓர் இளம்பருவமடந்தையினை, உருவாதிகளையேநோக்கி நோக்கி விரகம் அதிகரித்து அம்மடந்தையைத்தழுவுந்தன்னுள்ளமும் விரும்பஅறிவும்அதன்வசப்பட்டு பே

றிவைமறைத்து விஷயாதிகளிற்செலுத்தியுள்ளம் உவத்தலைச்செய்தல்போலப் பேரறிவும், பரிபக்குவகாலத்து உள்ளத்தைத்தன்பால் இழுத்துநல்லுண்மைதெரிவித்து சிற்றுணர்வைத்தன்மயமாக்கி நிர்மலப்பட்டதாய், சிவச்சீவத்தன்மைதோன்றாமல், தானே அதுவாய் கருவிகரணமடங்கி, ஐக்கியத்தன்மையெய்துதல் பேரறிவின் வினையாகும். (வினை+தொழில்.)

“தனக்கோரிலக்கணத்தைத்தான்கூறுமென்னே
எனக்கைந்திலக்கணமுமேனுரைப்பீரென்னே.”

என விட்டுநூல்முழங்குவதும் நாம் அறியத்தக்கது. கூத்தாடுபவன் தன்னை அரிச்சந்திரனாகவும், சந்திரமதியாகவும் அலங்காரஞ்செய்துகொண்டு ராசீகத்துக்குத்தக்கபடி உரையாடி நடிக்கினும் உள்ளபடியே அவன் அரிச்சந்திரனுஞ்சந்திரமதியும் ஆகான். பாவனைமட்டும் அவர்களைப்போலக் காட்டுகின்றான். அதுபோலவே, என்னது நின்னது என்னுடைமை நின்னுடைமை எனவுரிமை பாராட்டிக்கொண்டாடினும் தமக்கோர் சுதந்தரமும் எஜமானத்தானமும் பெறானென்க, எவ்வகைப்படிப்பினும் மனமிறக்கக்கற்றல் ஒருவகைப்படிப்பாகும். அஃது, ஏனையவைகளைப்போறலன்று. விசேடவிழுமையெய்தியதாகும். அறிவு நூலாய்ந்து படித்தலுக்குப் பாலுண்குருகை உவமம் ஆக்கல் பண்டைப்புலனெறிவழக்கென்க.

“பற்றுவதேபற்றிபணியறநின்றொன்றுணர்ந்து
நிற்பாரேநீணெறிச்சென்றார்.”

என்ற குமரகுருபரரின் அருமைத்திருவாக்கும் ஈண்டு ஊகிக்கத்தக்கதொன்றாம். அன்றி கம்பநாட்டாழ்வாரும், ஞானிகளுணர்வினென்றாய் - என்கின்றனர். உள்ளத்துணர்வு அமைதிபெற்று தந்நிலையுறுமேல் அஃதே முடிந்தபொருள்என்பதுதான் தெள்ளியார்திறனமை கூற்றாம்.

“எல்லாமும் வலதிந்த மலமாயை ஏழையாம் என்னாலடக்கவசமோ” என நம் தெய்வத்திருவருளாளராகிய ஸ்ரீமத் - தாயுமானசுவாமிகளும் கூறினராவர். எவ்வடக்கத்துள்ளும் மனவடக்கமே கைத்துணையாற் கடனீந்துவதன்னவோரரும்பெருஞ்செயலாகும்.



தவமிழைத்தல் முதலியனவெல்லாம் மனவொற்றுமைபெறற்பொருட்டேயாகும். அகம், புறம் எனப்பகை இருவகைய. அகப்பகைக்குப் பேராற்றல் அதிகமாகும். புறப்பகை யொரோவழிநீங்குநிலைமையதாகும். “புறப்பகைகோடியின் மிக்குறினுமஞ்சார் அகப்பகையொன்றஞ்சிக்காப்ப” என்றபெரியார் அருமைவாக்கும் ஈண்டு யூகிக்குந்தகைமையதாகும். அகப்பகை, சிதைதல் உறுவதுக்கு அரியதொரு தீவிரஞானத்துணைபெறல் வேண்டுவதவசியமாகும். ஆகவே இதுகாறுங்கூறிய விஷயங்களான் மனத்தூய்மைபெற்றிருக்க முயலவேண்டுவது முக்கியமானதொரு காரியமென்க.

கெடுக்கவல்லதுங் கெட்டவர் தங்களை
எடுக்கவல்லதும் இம்மனம்;

என்று கூறிப்போந்த நமது ஸ்ரீசிவப்பிரகாசத்தின் றெள்ளியகருத்தும் நுணுகி உணரற்பாலதாகும். உள்ளத்தினிலக்கணத்துக்கு உணர்வே சம்பந்தமுடையதென முற்கூறியவைகளை நெடுகக்கவனிக்கவேண்டியதொன்றாகும். உள்ளம் தானம் எனவும் உணர்வுதானி யெனவும் அமைத்துக்கொள்ளல் வேண்டும், சைவசித்தாந்த பரமாசாரிய பரஞ்சோதி விருடியாரும் “உள்ளமெனுங் கூடத்திலூக்கமெனுந்தறிநிறுவி” என்கின்றனர். உணர்வின தியக்கமில்லாவிடின் உள்ளம் அசையா நீர்மைய. தண்ணீர்போல தனக்கோராற்றலில்லாதிருக்குமென்க. உள்ளமெனுங்கூடம் என்றதனால் தானம் எனமுன்னர்யாமும் தாபித்ததாகும். உள்ளத்துள் உணர்வு ஊன்றுதலடைந்து யதார்த்த நிலைமையை நிச்சயித்துச் சொரூபவுருக்காணும்போதுதான் பேரின்பம் வாய்க்குமென்ப.

முற்றத்துறந்தார்க்கு மெய்யுணர் விற்றோன்றுவதேயின்பம்
இறந்தவெலாந் துன்பமலாதில்.

என்ற ஆன்றோர் கூற்றும் ஆராயத்தகுவதொன்றாகும். இன்பம்மெய்யுணர்வின்கண்ணதே என்பது அனுபவவாளரின்தெளிவு. மெய்யுணர்வின்மயமாக சனிக்கு மின்பமேயின்பமாகும். அவ்வின்ப வாயிலாகக் காட்சி பெறப்படுமென்க. பேரறிவாளரனைவரும், சுருதி, யுக்தி, அனுபவம் எனமுத்திறத்ததாய்ப்பாகுபடுசெய்ததனுள், அனுபவம்என்பது கடைப்பாகத்தமைந்தது. அனு

பவமில்லாதாயின் முன்னையவிரண்டாலும் ஒருசிறிதும் பயனில வாய் முடிந்துவிடும். எக்கருமங்களினும் அனுபவிகளே நிலைதெரிந் தொழுகு பவர்களாவர். அவற்றினும் சிவானுபவம் சீரும் பேரும் எய்தியதாகலின், இஃது அவசியமுள்ளதெனப் பெறப்படுகின்றதெ ன்க. "வருத்தம் பிள்ளைபெறுப் பேதையறிவாளோ" என்பது நியா யமான உரையாகும். சுருதியோடு நிற்பவர்சிலர். யுக்தியோடு நிற் பவர் சிலர். அனுபவத்தோடு நிற்பவர் சிலர். இம்மூன்று மொருங் கே கொண்டு நிற்பவர் சிலர். ஆகவே, மூவகைச் செயலும் ஒன் றோடொன்று தொடர்புடைய தென்பது இதனால் விளக்கப்பட் டதாகும். உள்ளமும் உணர்வும் அனுபவத்தோடு ஒன்றுந்தன்மை பெறுங்காலத்துத்தான், அற்புதக்காட்சி கண்டேன் கண்டேனென, பெரியார் திருவாய்மலர்ந்தருளுவது. சொரூபநிலைகாணாது ஆடினும் பாடினும் அஃது ஒரு புண்ணிய மாத்திரையன்றி முடிபான ஒருவகை யைக்காட்ட வியலாதென்க.

பாடிப்படித்துலகிற் பாராட்டி நிற்பதற்கோ
தேடியெனை யடிமை சேர்த்தாய்

என்றருளிய தெய்வப்பெரும்புலமையாளர், தெள்ளத்தெளிந்த பெரிய அனுபவமுளராதலின், ஆண்டாண்டு குறிப்பால் விளக்கு கின்றனர். "சித்தமிசைகுடிகொண்ட வறிவான தெய்வமே" எனவும், "எனதுள்ளங்கவர்கள்வன்" எனவும், "உள்ளத்தினுள்ளே யொளித்தி ருக்கும் பேரமுதே" எனவும், குறிப்பான் மெய்ம்மை நிலைகாட்டி யனவெல்லாம் ஆழ்நினைக்கத்தக்கதாகும். மெய்யுணர்வோராயினும் ராஜஸ, தாமஸ, குணங்கள் நடுவில் தோன்றிமயக்கிவிடுவதியல்பு. மயக்கவே மெய்யுணர்வு மறைப்பட்டு தன்னிலை தோன்றாதாய் விடு மென்க. கம்பர் பம்பை வருணனை கூறுமிடத்தும்,

காசடை விளக்கிய காட்சித் தாயினு
மாசடை பேதமை யிடைமயக்கலா
லாசடை நல்லுணர் வனையதாமெனப்
பாசடை வயின்றொறும் பரந்தபண்பது.

[illegible]கின்றனர். அதாவது அப்பொய்கை மாசு அடை பேதமை— [illegible]றம்பொருந்திய அவிச்சையானது, இடை—நடுவில்நின்று, மயக் கலால்—மயங்கச்செய்தலாலே, ஆசு அடை—அற்பத்தன்மையை (இடையிலே) அடைந்த, நல்லுணர்வு—நல்லமெய்யறிவை, அனையது ஆம்என—போன்றது என்னும்படி, காசு அடை—முத்துக்கள் தன் னுள்) பொருந்தியிருத்தலை, விளக்கிய—(வெளியேநின்று காண்போர் கு) விளங்கச்செய்த, காட்சித்து ஆயினும்—(மிகத்தெளிந்த) தோ ற்றத்தையுடையதாயிருந்தாலும், பசு அடை—பசியஇலைகள், வயின் தொறும்—இடையிடங்கள் தோறும், பரந்த—பரவப்பெற்ற, பண் பது—தன்மையுடையது. (எ-று.) உணர்வுக்கு மயங்குகின்ற சுபா வம் அமைந்ததாகும். மயங்காது ஒரே படித்தாய் உள்ளத்தோடொ ன்றி நன்னிலையுறற்கே தீர்த்தம் மூர்த்தம் முதலிய சாதனங்களை முன்னர்ச் செய்துகொள்ளலாகும். உண்மைநெறி கடைபிடித்தொழு கிய நமது, ஸ்ரீகுமரகுருபரசுவாமிகளும், நீதிநெறிவிளக்கக்கடை வெண்பாவில், முடிபுரை கூறுபவர் போல இலேசாகக் கூறியருளிய தென்னையெனின்,



ஐயந்திரிபின் றகன்றுத்தியிற்றெளிந்த
மெய்யுணர்ச்சிகண் விழிப்பத்தூங்குவார்—தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்.

என்பதாம். இதனுள் சுருங்கச்சொல்லி விளங்க வைத்திருப்பது அறி வாளர் அறியத்தகுவதொன்றாம். இதனை விரிக்கின் இன்னும் பலதி றப்பட்டு நிற்குமாதலான், இதனோடு முடிபு காட்டி முடிக்கலாயி ற்று, சுபம் சுபம்.

ஒரு வேண்டுகோள்:—உள்ளத்தெளிவு, என்னும் பெயர்பூண்ட வியாசம் ஒன்று, சைவசித்தாந்த சாத்திரச்சாரமாக, யானெழுதிவரு கின்றதை, அடுத்த பிரசுரத்தில் வெளியிடுவேன். அடுத்தடுத்து என்னைத் தூண்டிவரும் எனது அருமை நண்பர்கள், அதுகாறும் பொறுக்க வேண்டிக்கொள்கின்றேன்.

இராமசாமிவன்னியன்.

---

உ

சிவமயம்.

# சேதுபுராண அரும்பதவிளக்கம்.

(முற்றொடர்ச்சி.)

## திருநாட்டுச்சிறப்பு.

(க) வடக்கெல்லையாய் நின்ற வடவேங்கடத்தினெடியதென்றிசையினலைவு நீங்கும்படி பூமியை நேராக நிறுவுதற்கு வருகின்ற வகத்திய முனிவரமர்ந்த தென்றலையுடைய பொதியமலைதரும் பொருநை நதியின் வளம் மலிகின்ற சால்பையுடைய வொப்பற்ற பாண்டிநாடு முதன்மை வளர்கின்ற தமிழ்வழங்குமிரண்டெல்லையுளொன்றாகிய தென்குமரிதன்கண் ணெல்லையாகிப்பொருந்தும் தென்பால்மலயமலை எனக்கூட்டுக.

(உ) கிருபையின் மிகுதியாலருளுங் கலைஞானங்களினெண்ணைப்பொருந்திய (அறுபத்துநான்கு) திருவிளையாடல்களையுடைய நினைத்தற்கரிய பரமபதியை மீனாக்ஷியம்மையாரோடு நெருங்கிச்சூழ்ந்து, அலங்கரிக்கப்பட்ட பூக்களைச்சொரிந்து, வணங்கித்தேவர்கள் செலற்கிடமின்றிப் புறத்தே நிற்க, அலங்கரிக்கப்பட்ட முத்துவடம்பொருந்திய, அழகிய ஸ்தனங்களையுடைய பெண்களுடன் ஆடவர்கள் உள்ளே சென்று வணங்குகின்ற மதுரையாகிய பழைய ஊரை அந்தத் திருநாடுடையது.

(௩) உயர்ந்தசுடராகிய ஞானத்தை யொப்பற்ற மூன்று ஸ்தனங்களையுடைய பெண்ணாகப்பெற்றுக்காத்து, அந்தமில்லாத வானந்தமானது அருளினாலே திருவுருக்கொண்டு, முடியைத்தரித்து, அரசுரிமையை நடாத்தி, அழகுமுடிந்த தமிழையுடைய சங்கப்புலவர்க்கெதிரே நின்று விடைகூறச்செய்த விந்தமதில் சூழ்ந்த மதுரையினுயர்ச்சியை யென்னாலும் பிறராலுஞ் சொல்லலாகுமா ?

(௪) வலிமை பொருந்திய பாண்டியனுடைய சந்ததியை வளர்க்கும் பாண்டி வளநாடானது வணங்காத (கீழ்ப்படியாத) எளிய சம



ணர்களாகிய நீசர்களுடைய பணியினாற் கூன்பாண்டியன்மீது சென்ற கொடியசுரநோயை நீக்கவந்த திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் இருந்த திருமடம் விளங்குகின்ற காட்சியையுடைய, நீக்கமின்றிப் பொன்னையுடைத் தெறியுந் திரைபொருந்திய வைகைநதியின் வடபாகத்திற் பொருந்திய திருவாப்பனூரையுடையது.

(௫.) பாடகமென்னும் மாபரணம் பொருந்துந் திருவடிகளையுடைய உமாதேவியாரது முலைப்பால் நீங்காத வதரமாகிய பவளத்தையுடைய பாலகராகிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரோடு கோட்டமாகிய மனத்திற் பொய்யையுடைய சமணர்கள் வாதுகுறித்தபொழுது எதிரேறிய பாடலையுடைய, வளையலையணிந்த கையையுடைய மாயைபொருந்திய பெண்கள் தன்னாயகரோடுங் குடைந்து ஸ்நானஞ் செய்கின்றதுறை செறிந்த நீர்பொருந்திய வைகைக்கரையிலுள்ள திருவேட்களம் என்னுஞ் சிவஸ்தலமும், சொல்லுகின்ற தமிழையுடைய அழகிய பாண்டிநாட்டினிடத்ததாம். ஏடகம் - ஏடுசேர்ந்த விடம்.

(௬.) அலர்கின்ற தாமரைகளையுடைய தடாகங்களின் பக்கங்களினும், இதழ்படிகின்ற சோலைகளின் பக்கங்களினும், பளிக்கறை சூழுமிடங்களினும், பெண்களும் அப்பெண்களில் மனம்படிந்த நாயகர்களும்போலத் துதிக்கையாற் றழுவும் மதமாகிய கான்யாறு வட்டப் பெண்யானைகளும், ஆண்யானைகளும் கலந்து விளையாடுகின்ற, கொடுங்குன்றமென்னும் மலையும், வளம்பொருந்திய வயல்களையுடைய பாண்டிநாட்டிலுண்டு.

(௭.) முத்தையுடைய ஊருகின்ற சுரிமுகத்தையும் வெண்மை நிறத்தையுமுடைய சங்கங்கள் தவழ்ந்துகூடி வீட்டின் முன்றில்களெங்கும் பூங்கொத்துப்பொருந்திய கூந்தலையுடைய பெண்கள் கால்பெயர்க்க விடமின்றி விளங்குகின்ற, மந்தரமலையாகிய மத்தூருகின்ற பெரிய திருப்பாற்கடலைப்போலப் பரந்த மலர்களையுடைய குளிர்ந்த நீர்பொருந்திய வாவிகள்சூழ்ந்த திருப்புத்தூரும், மேகம் மழையைப் பொழியும் பொதியமலை பொருந்திய தமிழையுடைய பாண்டிநாட்டிற் பொலிந்து விளங்கும்.

(௯.) மணமாகிய வாயிலைக்கடந்து கண்டிக்கப்படாத பேரொளியாய்ப் பேரின்பமாய் எவருஞ்சிந்திக்க அசிந்தனையையகன்று, பின்சிந்தனையொழிய அவர்மனத்தே நீங்காமற்புகும் ஏகனை அடியார்களுடைய கூட்டமாகிய வாயிலைப்பெறுகின்றவர்கள் கொள்ளும்படி கொடுக்கும் பெருந்தகைமையால் எவர்களுந் துதிக்கின்ற திருப்புனவாயிலைத் தமிழையுடைய பொதியமலைதரும் பொருநைநதிசூழ்ந்த பாண்டிவளநாடு தானுடைய தவத்தை முற்காலத்திற் செய்ததுபோலும். ஆயில்+அகன்று+சிந்தனை+ஒழிய+அகலாது+அகம்+புகுதும்+ஒன்றெனக் கூட்டுக.

(௧௦) சோபானம் - கற்படி, வேலைத்தானப்பேர் நிலம் - கடல்சூழ்ந்த கருமபூமி, ஞானப்பேர் பேர் - பெருமை.

(௧௧) உரைசால்புரை - சொல்லுதல் மிக்க உவமை.

(௧௨) பருத்த இலக்கணச்சுழியால் மேன்மை பொருந்தும் மத்தகத்தையுடையயானை பாதலத்திற் புகப்பாய்ந்தது - படர்கின்ற ஆழமாகிய ஆற்றின் அழகிய சுழிக்கு முன்னிரைகொள்கின்ற வண்டெளாளிபொருந்திய வளையலையுடைய பெண்களினுரோமத்தைக் காட்டுஞ்சுழிபொருந்திய வெண்டிரையையுடைய சுத்தமாகிய ஆகாயகங்கையைத் தரித்த சிவபிரான் வாழுகின்ற திருச்சுழியலானது, சோழர்வலியசேரர் என்னுமிவர்களுடைய அழகிய நாட்டிலுளதோ இல்லை, பின் பாண்டிநாட்டிலுளதாம்.

பருத்த சுழியில் மிதக்கும் எனினுமமையும்.

(௧௩) குன்றம் கரம்படைத்தனைய என மாற்றுக. வள்ளிமுன்னர் - வள்ளிநாயகியாரை விவாகஞ்செய்தற்குமுன்னர். சரங்குன்றமெனத்தகைய வளிவிழிப்பூண்முலைக்கயமான் - பாணத்தையும் மலையையும்போன்ற தகைமை பொருந்திய வரியையுடைய கண்ணையும் ஆபரணம் பொருந்திய முலையையுமுடைய தெய்வயானை.

(௧௪) பொற்றுலம் - பொன்னுலகம். எழுபுவனமுற்று முற்றுலம் - எழுபுவனங்கள் முழுதையும் அழிக்கும் நஞ்சு. துயில்கூர்தும்பி - நித்திரைசெய்கின்ற யானை.

(௧௫) வேதத்தை வாயாற்சொன்ன பிரமாவும் மதித்தற்கரிதாயளவிறந்த நிலையையுடைய மாண்பினதாய் மூங்கிலீன்ற வொப்பற்ற முத்து அழகிய நிலவை விட்டெறிப்ப விளங்குகின்ற நெல்லையானது, தீயின்றுற்போலத் தளிர்த்த இனிய மாவின் குளிர்ந்த பழமுடைந்த செந்தேன் மணக்குங்காயையீன்ற வாழைகள் பொருந்திய பாண்டிநாட்டினழகைத் தெரிக்கும்.

(௧௬) சொல் நாடு நெறி - சொல்லையாராயுநெறி. தென்னாடு - அழகிய நாடெனவும், தென்றிசையிலுள்ள நாடெனவும் பொருள்படும்.

(௧௭) முன்னு - முதலாக.

(௧௮) கொடையாளர்கள் தாம் பிரதியுபகாரங்கொள்ளுமாசையிலராயினும், கொடைக்குணம் விடாமையால் வள்ளியோரிடத்து ஏற்று வழங்குதல் போல. அள்ளல் - சேறு.

(௧௯) மின்னுவாள் விளக்கம் - மின்னலாகிய வொளியையுடைய விளக்கு. பன்னிறப்படைவில் - இந்திர தனு.

(௨௦) பார்முகம் வெயர்வுற்றென - பூமியில் முகம் வெயர்வுற்றாற்போல. புயலின்றுரை - மழைத்துளி.

(௨௧) நிலையிலா நீர்மை - நிலையாத குணம். மலயமாசயிலம். பொதியமலையானது விலையிலாமணி வெண்முத்து பொன்னென்னுமிவற்றோடு மருளியை வழங்கியதென முடிக்க.

(௨௨) கோடு - கரை. வாரிதி - கடல் இருமுடிபாக்குக.

(௨௫) தளிர்கள்பொருந்திய கொடிகள் சுற்றிய வலிமைபொருந்திய நெடிய கொம்புகள் பின்னலால் நெருங்கிய மரங்களை யகழ்ந்து செல்கின்ற பொருநையினினிய நீர் நெருங்கிய மலர்களையுடைய மரங்களைச்சாய்க்கா தொழுகலானுறையுங் கூட்டிலுள்ள பறவைகளென்றும்போலப் பறவாமலிருப்பன.

(௨௬) உரிஞ்சி - உரிஞ்சு, குறடு - கட்டை.

(௨௭) ஒலிக்குந் திரையையுடைய கடலிற்றான் சமூகப்பட்டுத்தருகின்ற முத்தை நிரையான மூங்கிலீன்ற முத்தென்று சொல்லும் வசனங்களை மனத்திற்கொண்டாற்போல, ஒலிக்கின்ற நீரைக்கொண்ட பொருநையானது பொதியமலை தருகின்ற முத்துக்களையெல்லாங் கரையிற்பொருந்த வொதுக்கும்.

(௨௮) குறிஞ்சி தான்பெற்ற குடைகின்ற நீரையுடைய பொருநையாகிய பெண்ணை வருணற்குக் கொடுக்கும், நடக்கின்ற விவாகக்காட்சியைப் பார்க்கும் விருப்புற்றாற்போலக் கழியையுடையும் போதில் அதனோடு முல்லை முதலிய இடைநிலத்துப்பொருள்களெல்லாம், இனத்தாலியைந்தன.

(௩௦) பற்றுக்கோடான மேலைத்திரை யென்னுமொரு குடிப்பிறப்பைக்கருதி உவமையில்லாத வருணனுடைய திண்டோளைப் புணராத வைகை பக்கத்திலுள்ள வாய்க்கால்களை நிரைத்து வயல்களிலெங்கும் பொங்கிப்பரந்து எழுகடலைப்போல முழங்கி உழவர்கள் வந்தார்கள். தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரம்பற்றிப் பேசினர் என்க. (தொடரும்.)

ஆ. மு. சோமாஸ்கந்த பிள்ளை.

---

உ

சிவமயம்.

# நல்லொழுக்கம்.

## ஆறாம் அதிகாரம்.

—[X]—

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

அப்படிக்கானால் சகியாதகோபத்தினால் எத்தனை கூட்டங்கள், எத்தனை அணிவகுப்புகள், உண்டாய்விடும். சுவாதீனத்திற்காக எத்தனை வாக்குவளமுள்ள பிரசங்கங்கள், உபந்நியாசங்கள் எழுந்துவிடும். கொடுமையும் இயற்கைவிரோதமுமான கொடுங்



162403

கோன்மையை ஆக்ஷேபித்தவிஞ்ஞாபனங்கள் பிறந்துவிடும். ஆனால் அத்தகைய கொடியோன் ஒருவன் நமக்குள் உள்ளவாறே இருக்கின்றனன். அக்கொடியோன் அடங்கா அவாவேயாம். மனிதர்கள் அதனுக்கு அடிமையாயிருக்கச் சம்மதிக்கையில் ஆயுத வன்மையாவது, வாக்குபலமாவது கூட்டக் கையெழுத்தாவது அதனை எதிர்க்கமுடியாது.

இந்தக் கொடியோனுடைய பலத்தை சன்மார்க்க சாதனங்களாகிய தன்னை சிக்ஷித்தல் தன் மரியாதை, தன்னை வயப்படுத்தலாகியவற்றால்தான் வெல்லக்கூடும். எந்த ரூபமான அவாவின் கொடுங்கோன்மையையும் எதிர்ப்பதற்கு வேறெந்த மார்க்கமுமில்லை.

விஷய இச்சைகளில் தங்களைத் தாங்களே விட்டுக்கொள்ளுகிற ஜனங்களுடைய ஒழுக்கத்தை மதச்சீர்திருத்தச் சபைகளாவது ஜனசம்மதத்தைக் கிரஹிக்கும்படிக்கு வியாபகமான சொற்சக்தியாவது, இராஜரீகத்தின் சீர்திருந்திய ரூபமாவது, கல்விச்சாலைகளிற் கற்றுணர்ந்த கல்வி மிகுதியாவது, உயர்வுபடுத்தமாட்டா. இழிவான இன்பத்தைத் தொடர்தலானது, யதார்த்த இன்பத்தை இழிவாக்குகின்றது. அது ஜனங்களுடைய நீதிநெறிகளை வேருடன் களைந்து, ஊக்கங்களை நாசப்படுத்தி, ஆண்மையையும் திடத்தையும் கீழ்ப்படுத்துகின்றதுபோலவே ஒவ்வொரு மனிதன் விஷயத்திலும் செய்கின்றது.

மன அடக்கத்தின் தைரியமானது, அனேக வழிகளிற் பிரகாசிக்கின்றது. ஆனால் யோக்கியமாய் வாழ்வதினும் வேறொன்றிலும் அவ்வளவு பரிஷ்காரமாவது அன்று. தன்னய மறுப்பில்லாதவர்கள் தங்கள் சொந்த நன்மைபற்றிய இச்சைகளுக்குட்படுகிறதுமட்டுமல்ல, ஆனால் தங்களை ஒத்த சித்தமுடையவர்களுடன் கட்டுப்பட்டிருப்பது வழக்கம். மற்றவர்கள் செய்கிறதை இவர்களும் செய்கின்றனர். இவர்களும் முடிவை எதிர்பாராமல் தங்கள் பக்கத்தவர்களைப்போலவே செலவு செய்து தங்கள் வகுப்பினர் ஏற்படுத்திய, தரத்திற்குப்பொருந்த வாழ்தல் வேண்டும். ஆகவே, அனைவரும் தங்கள் வருமானத்திற்கு மிகவும் அதிகமாகவே வாழத்தக்க மாதிரியை விரும்புகின்றனர். ஒவ்வொருவரும் மற்றவரைத் தம்முடன்

இழுத்துக்கொள்கின்றனர். அவர்களுக்கு அதனை நிறுத்துதற்குத் தக்க சன்மார்க்க தைரியம் கிடையாது. தாங்கள் மிதமின்றி வாழ்தலாற் பிறருக்குக் கெடுதலிருந்தபோதிலும், அவர்களுக்கு அந்த இச்சையைத் தடுக்க முடியவில்லை. கடனானது அவர்களைப் பந்தப்படுத்துகிறவரை, வரவரக்கடனைக் கவனிக்காமற் கொள்வாராகின்றனர். இதிலெல்லாம் மிகுந்த சன்மார்க்க கோழைத்தனமும், இழிதகைமையும், ஆண்மையுள்ள சுவாதீன ஒழுக்கமின்மையும் வீற்றிருக்கின்றன.

நியாயமான எண்ணமுள்ள ஒரு மனிதன், தான் இல்லாத விதத்தை இருப்பதாகத் தோற்றுவிக்கவாவது, தனக்கு உள்ள செல்வத்தைவிட அதிகச் செல்வமுடையவனாகப் பாசாங்கு செய்யவாவது தன்னுடைய சக்தி இடங்கொடாத நிலைமையில் வாழ இச்சிக்கவாவது, பின்வாங்குவான். மற்றவர்களுடைய சொத்தைக்கொண்டு அயோக்யமாய் வாழ்தலினும், தன் சொந்த வகையைக்கொண்டு, யோக்யமாய் வாழும்படியான தைரியத்தை உடையவனாயிருப்பான். தன் வரவிற்கு மிஞ்சிய வாழ்க்கையின் தரத்தை நிலைப்படுத்த முயற்சிப்பதிற் கடன்படுகிறவன் பரிஷ்காரமாய்ப் பிறனுடைய சொத்தைப் பறிக்கிற மனிதனைப்போன்ற அயோக்யமான சுபாவத்தையுடையவனாகின்றனன்.

அனேகருக்கு இந்த அபிப்பிராயம் அசம்பவமாகத் தோற்றலாம், ஆனால் எவ்விதமாய்ப் பரீக்ஷித்துப் பார்த்தாலும் நிலைத்து நிற்கும். பிறரைக் கெடுத்து வாழ்வது அயோக்யமட்டுமன்று; வார்த்தையிற் பொய்யானது எப்படியோ, அப்படியே செய்கையிற் பொய்யாகவுமிருக்கின்றது. கடன்காரர்கள் பொய்யர்கள் என்னும் ஜார்ஜ் ஹெர்பர்ட் (George Herbert) என்பவருடைய பழமொழியானது, அநுபவத்தில் நியாயமாயிருக்கின்றது. நாம் உடைத்தாயிராத வஸ்துவை உடைத்தாயிருப்பதற்கும், நாம் உண்மையில் இல்லாத விதமாய் இருக்கவும் வேகப்படுவதானது சமஸ்தமான துன்மார்க்கத்திற்கும் மூலமாயிருக்கின்றதென்று ஷேப்ட்ஸ்பர்க் (shafetsburg) என்பவர் ஏதோஒரு இடத்திற் கூறுகின்றனர். மிராபியூ (Mirabeau) [illegible] மிகவும் அபாயமான வாக்கியத்தில் நம்பிக்கைவைத்தல் கூடாது.



ஆனால் சன்மார்க்கத்திற்குரிய வெகு சொற்பமான அம்சத்தையும் நெருங்கப் பின்பற்றுதலானது, ஆண்மையும் மேன்மையுமான ஒழுக்கம் அனைத்தினுக்கும், அஸ்திவாரமாயிருக்கின்றது.

கண்யமுள்ள மனிதன் தன் வருமானத்தைச்செட்டாகச் செலவிட்டுத்தன் வாழ்க்கையை யோக்கியமாய்க் கழிக்கின்றனன். அவன் தன் இயற்கையான ஸ்திதியைவிட அதிக ஐசுவரியவானாகக்காட்ட இச்சிக்கிறதில்லை. அல்லது கடன்பட்டு நஷ்டக்கணக்கு உண்டாக்குகிறதுமில்லை. சொத்து சுருக்கமாயும் இச்சை அதற்குள் அடங்கியுமிருக்கப்பெற்றவன் எளியவனல்லன். அதுபோலவே தன்தேவைக்குப் போதுமானதைவிட அதிக வகையுள்ளவன் ஐசுவரியவானாகவேயிருக்கின்றனன். ஏதன்ஸ் (Athens) பட்டணத்தின் வழியே ஆடம்பரத்துடன் கொண்டுபோன மிகுந்த ஐசுவரியத்தையும், ஆபரணங்களையும் விலையுயர்ந்த தட்டுமுட்டுச் சாமான்களையும் 'சோக்கிரேட்ஸ் (Socrates) என்பவர் பார்த்தபொழுது, "எனக்கு விருப்பமில்லாத எத்தனைசாமான்களை நான் பார்க்கிறேன்" என்று சொன்னார். "தன்னயம் பாராட்டுதலைத்தவிர மற்றெதையும் நான் மன்னிக்கக்கூடும்" மிகவும் எளிமையான நிலைமையிலுங்கூட எனது உனது என்பதைப் பற்றிய பெருமை நிகழ்கின்றது. தங்களுடைய குடும்பசம்ரக்ஷணையைத் தங்கள் வரவினுக்குள் ஒழுங்குபடுத்துமுன்னுணர்வுமட்டுமிருக்குமானால் மிகவும் ஏழைகளைத்தவிர மற்றவர்களுக்குத் தங்கள் தினசரித வாழ்க்கையிற் பணம் பணமென்னும் எண்ணமேவருவதற்கு அவசியமில்லை" என்று பெர்த்தஸ் (Perthes) மொழிந்தனர். சால்திரத்திற்காகப் பண அபிமானத்தைவிட பேரடே (Faraday) என்பவரைப்போல மேலானபயனைக் கருதி பணவிஷயத்தில் ஒருமனிதன் அஜாக்கிரதையாயிருக்கலாம். ஆனாற் பணத்தாலெய்தும் போகங்களை உடைத்தாயிருக்க விரும்பினால் அவன் அதை யோக்யமாய்ச் சம்பாதித்தல்வேண்டும். கொடுக்க வகையில்லாமல் வழக்கமாய்க் கடன்வாங்குகிறவர்களைப்போல மற்றவர்களுடைய சம்பாத்தியத்தைக்கொண்டு, காலக்ஷேபம் செய்யக்கூடாது. எப்பொழுதும் கடனில் முழுகியிருந்த மேஜின் (Maginn) என்பவர் (Wine) சாராயத்திற்காக என்ன கொடுத்தார் என்று கேட்கப்பட்டபொழுது அவர் தன

க்குத்தெரியாதென்றும், ஒரு புஸ்தகத்தில் ஏதோ பதிவுசெய்துகொண்டனர் என்றும் விடையளித்தனர்.

இவ்விதமாய்ப் புஸ்தகத்திற் பதிவு செய்தலானது, இழந்த மனமுடைய அனேகருக்குக் கேடாகப் பலித்திருக்கின்றது. அவர்கள் தாங்கள் தற்சமயம் செலுத்தத் தகுதியின்றிச், சாமான்களைக் கடனுக்கு வாங்கும் இச்சையைத் தடுக்கக்கூடவில்லை. சிலசமயங்களில் வாங்கப்பட்ட கடன்களைத் திரும்ப வாங்குவதற்குக் கடன்காரர்களுக்கு அதிகாரம் கொடுக்கிற சட்டமானது முற்றும் எடுபடும் விஷயத்தில் ஜனங்களுக்கு மெத்த நன்மையாயிருக்கலாம். ஆனால் வியாபார முயற்சியிற் கடன்காரர் தீராப்பக்ஷம் முடிவில் சட்டப்படி வசூல்செய்யும்படிக்கும், கடனாளி கடன்வாங்கும்படிக்கும் வேண்டிய ஊக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிட்னி (Sidney) என்பவர் ஓர் புதிய இடத்திற்குப்போனபொழுது அவர் உயர்ந்த பறுவரவுள்ளவரென்று ஸ்தலசமாசாரப் பத்திரிகைகளிற் பிரசித்தமாயிற்று. அவருக்கு வியாபாரம் கொடுப்பதற்கு நாலுபக்கத்திலும் தேட ஆரம்பித்தனர். ஆனால் அவர் தன்னுடைய புதிய ஆகந்துகர்களிடம் உடனே, ஏமாற்றமற் சொன்னதாவது "நாங்கள் பெரிய மனிதர்களேயல்லம். எங்கள் கடனையிறுத்துவிடுகிற சாதாரணமான யோக்கியதையுடைய மனிதர்கள்தான்."

செட்டுத்தனமில்லாவிடினும் முற்றிலும் யோக்கியமாயிருந்த ஹேஸ்லிட் (Hazlitt) என்பவர் ஒருவருக்கொருவர் வேற்றுமையில்லாத இரண்டு வகுப்பு ஜனங்களைப்பற்றிப் பேசுகின்றனர். அவர்கள் தங்கள் சொந்தப்பணத்தைத் தங்கள்கைவசம் வைக்கக்கூடாதவர்களும், மற்றவர்களுடைய பணத்தினின்றும் தங்கள் கைகளைத் தடுக்கமுடியாதவர்களுமாய். முற்கூறப்பட்டவர் என்றும் பணப்பிரியத்தில் இருக்கின்றனர். ஏனென்றால் அதை நிவிர்த்திக்க விரும்பினாற்போல் முதலிற் புலப்படுகிற எந்தப்பொருளின்மீதாவது, தங்கள் பணத்தைப்போட்டுவிடுகின்றனர். பிற்கூறப்பட்டவர் தங்கள் சொந்தத்திலிருந்ததைச் செலவுசெய்துவிட்டுத் தங்களுக்குக் கடன் கொடுக்க மனமுள்ளவர்களிடத்திலெல்லாம், இடையறாது கடன் வாங்கிவருகின்றனர். கடைசியிற் கடன் கொள்வதில் உண்டா



கிய அவர்களுடைய யூகமானது, அவர்களுக்குக் கேடாக முடிவது வழக்கம்.

அத்தகைய பிரதானமான துர்ப்பாக்கியமுள்ளவரில் ஷெரிடன் (Sheridan) என்பவர் ஒருவர். அவர் கடன் வாங்கியும், தன்னை நம்பினவர் ஒவ்வொருவரிடத்திலும் கடனுக்குட்பட்டும் தன் செலவு விஷயத்தில் உற்சாகமும் அஜாக்கிரதையுமுள்ளவராயிருந்தனர். வெஸ்டு மினிஸ்டர் (West Minister) நாட்டுக்காக அவரைக்கோரிய பொழுது முக்கியமாய்ச் சாதாரணமான கடன்கோளினின்றும் ஜனங்களுடைய திருப்திக்குறை எழுந்தது. அனேக ஏழை ஜனங்கள் தங்களுக்குச் செல்லவேண்டிய கடன் சீட்டினுக்குப் பணம் கேட்டுக்கொண்டு அவருடைய பிரசங்க ஸ்தலத்திற் சூழ்ந்து கூடினர், என்று லார்ட் பால்மேர்ஸ்டன் (Lord Palmerston) என்பவர் தம் கடிதம் ஒன்றிற் கூறுகின்றனர். அவருடைய சகல கஷ்டங்களின் நடுவே ஷெரிடன் (Sheridan) என்பவர் எப்பொழுதும்போல மிகவும் அற்பசித்தமுடையவராய்த் தன் கடன்காரருக்கு வருத்தமுண்டாகும்படி பலவிதமான பரிகாச மொழிகளைக் குழறினர். அவரால் நடத்திய போஜனப் பந்தியில், லார்ட் பால்மர்ஸ்டன் (Lord Palmerston) உம் உள்ளபடியே கூடவிருந்தனர். அதில் தற்காலமிருந்த ஷெரிப் (Sheriff) உடைய உத்யோகஸ்தர்கள் பந்தி விசாரணை வேலைக்காரராக உடைதரித்து வேலை பார்த்தனர்.

ஷெரிடன் (Sheridan) உடைய சொந்தக் கடன்காரர் விஷயத்தில் அவருடைய சன்மார்க்கமானது எவ்வளவு தளர்ந்திருப்பினும் பொதுப்பண விஷயத்தில் எவ்வளவோ தூரம் யோக்கியமுள்ளவராயிருந்தனர். ஒருக்கால் லார்ட் பைரன் (Lord-Byron) என்பவரும் கூடஇருக்க நேரிட்ட ஒரு போஜனப்பந்தியில், உத்யோகத்தை எதிர்த்துத்தங்கள் கொள்கைகளையே பிடிவாதம்செய்து விக்ன் (Whigs) என்னும் கக்ஷிக்காரருடைய முரட்டுத்தனத்தைப்பற்றி ஓர் வியாக்கியானம் செய்ய நேரிட்டது. அதில் ஷெரிடன் (Sheridan) என்பவர் கூர்மையாகத் திரும்பிச் சொன்னதாவது, "ஐய பொதுப் பணத்தினின்று தற்காலத்திலாவது, பிதிரார்ஜிதமாகவாவது மானியம், அல்லது சம்பாத்தியமாகக்கிரஹித்து, வருஷம் ஒன்றுக்கு

ஆயிரம் ஆயிரமாகத் திரட்டுகிற இந்த லார்ட் (Lord) என்னும் பிரபு அல்லது அந்த ஏர்ள் (Earl) என்னும் பிரபு அல்லது மற்றொரு மார்க்குவிஸ் என்னும் பிரபுவாகிய இவர்களுக்குத் தங்கள் தேசாபிமானத்தைப்பற்றிப் பெருமை பாராட்டுவதும், மனக்கவர்ச்சியைத் தடுப்பதும், எளிதாயிருக்கின்றது. ஆனால் அவர்களுக்கு ஒத்தபெருமையும் குறைந்தபக்ஷமும் ஒத்த சாமர்த்தியமும், சமானராஹித்யமுமில்லாத இச்சைகளையுமுடையவர்கள், எத்தகைய துர்மனக்கவற்சியினின்றும், நீங்கியிருக்கிறார்களென்பதை அவர்கள் அறியார்கள். அதுவுமின்றி ஒரு ஷில்லிங்குஎன்னும் எட்டணா நாணயத்தைத்தங்கள் சொந்தமாகச்சம்பாதிப்பதுஎவ்வாறென்பதைத்தங்கள் ஆயுளில் உணர்ந்தவர்களாகவுமிலர்.

அந்நாளையிற் பொதுப்பண விஷயமான நியாயத்தன்மையானது, மிகவும் குறைவு பட்டிருந்தது. அரசாங்க சம்பந்தமான திருட்டு, கௌரவக்குறைவாய் எண்ணப்பட்டதில்லை. அந்தக்கக்ஷிகளின் தலைவர்கள் பொதுப்பணத்தைத் தாராளமாய் உபயோகித்துத் தங்கள் கக்ஷிக்கு ஆள்சேர்ப்பதில் ஐயப்படுவதில்லை. “தன் சொந்த உதாரத்வகுணத்தால் மற்றொருவருடைய பணத்தினின்றும் பாலம் கட்டிய பெரிய மனிதனைப்போலப் பிறருக்கு நஷ்டமுண்டாக்கித் தாங்கள் தாராளமாயிருந்தனர். லார்ட் கான்வால்லிஸ் (Lord Ccrn-wallis) என்பவர் ஐயர்லாந்து (1reland) தேசத்துக்கு லார்ட் லிப்டினெண்டு (Lord–Lientenent) ஆகநியமிக்கப்பட்டபொழுது நேப்பியர்களின் தந்தையாகிய கர்னல் நேப்பியர் (Colonel–Napier) ஐ சேனையில் கணக்குகளை ஒத்துப்பார்க்கும் உத்யோகத்தை வஹிக்கும்படி சட்டாயம் செய்தனர். “எனக்கு ஒரு யோக்கியமான மனிதன்வேண்டும், என்னைச்சூழ்ந்துள்ள கழுகுகளினின்றும் பலாத்காரமாய்க்கொள்ளக்கூடிய ஒரே பொருள் இவர் தான்” என்று பிரபுசொன்னார்.

(இன்னும் வரும்.)

---

# சிலகேள்விகட்கு விடை.

என் நண்பரொருவர் எனக்கெழுதிக்கேட்ட கேள்விகளும் அவற்றுக்கு யானிறுத்த விடையும் “செந்தமிழ்”க்கேற்றவையென்று வெளியிடலாயினேன். அக்கேள்விகளாவன:—

(1.) காளமேகப்புலவர், அடை சொல்லில்லாமல், ஒன்றுமுதல் பதினெட்டுவரையில் வரப்பாடிய வெண்பாவைத் தளைசீர்கெடாமல் அலகிடுமாறெங்ஙனம் ?

(2.) வெண்பாவினுள், ஓரடியில் ஐஞ்சீர்களும் நாலசைச்சீர்களும் வருதல் கூடுமா ? இவற்றுக்கு யானிறுத்தவை வருமாறு:—

1. ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு வேழெட்டு
வொன்பதுபத் துப்பதி னொன்றுபன்னி—ரண்டுபதின்
மூன்றுபதி னான்குபதி னைந்துபதி னாறு
பதினே ழுபதினெட் டு.

இதன் முதலடியிற் குற்றியலுகரங்களின் முன்னர் உடம்படுமெய்பெறுதல் “தன்முகமாகத் தானழைப்பதுவே” என நன்னூற் சூத்திரம் ௯௦௯-ல் உடம்பொடு புணர்த்திருத்தலால் சிறுபான்மை கொள்ளப்படும். இவ்விதி கொள்ளாக்கால், இவ்வெண்பா ஒழுங்குபடுமாறு காண்டலரிது.

2. வெண்பாவினுள் ஓரடியில் ஐஞ்சீர்களும் நாலசைச்சீர்களும் வருதல்கூடும். அவை பெருவழக்கல்ல, சிறுவழக்கினுமிக்கருமையது. கடைச்சங்கமருளிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய ஐந்திணையைம்பது என்னும் நூலில் பாலைத்திணைக்கண் பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லிய,

“உதிரந் துவரிய வேங்கை யுகிர்போ
லெதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க—வெதிருநர்க்
கின்பம் பயந்த விளவேனில் காண்டொறுந்
துன்பங் கலந்தழியு நெஞ்சு.”

என்னும் வெண்பாவினுள், இரண்டாமடி ஐஞ்சீரான் வந்திருக்கின்றது. இதிற்கிலக்கணம் :—"வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும், ஐஞ்சீ ரடியு முளவென மொழிப." என்னுந்தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்துப் பேராசிரியர், "வெண்டளைவிரவியும், ஆசிரியம் விரவியுமென்றது என்னைடெனின்—அவ்வைஞ்சீரடி வெண்பாவோடு விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் வரும் என்றவாறு"

"கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
வொண்செங் குருதியி னூடு கிடப்பதே—கெண்டிக்
கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்னா
ளழுதகண் ணீர்துடைத்த கை.

என்னும் வெண்பாவினுள், இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தது" எனவும் கூறியவாற்றானும், நச்சினார்க்கினியர் "வெண்பாவோடுங்கலிப்பாவோடும் விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் ஐஞ்சீரடிகளுமுள என்று கூறுவர் புலவர் என்றவாறு" எனவும், "கண்டகம்பற்றி... ............கை"

"கிடங்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத்
தடங்கட் டடங்கட் டளிரியலார் கொல்லார்—கிடங்கில்
வளையாற் பொலிந்தகை வையெயிற்றுச் செவ்வா
யிளையாடன் கண்ணேக்கு மென்று."

இவற்றுள் இரண்டாமடி ஐஞ்சீரடிவந்தவாறு காண்க." எனவுங் கூறியவாற்றானும் நன்குணரக் கிடக்கின்றமையால், வெண்பாவினுள் ஐஞ்சீரடிகள் வருதல் கூடுமென்பது பெறப்படுகின்றது.

வெண்பாவினுள் யான் மேற்கூறிக்காட்டியாங்கு நாலசைச்சீர் வருதல் பெருவழக்கன்றாயினுஞ் சிறுவழக்கினுள் அருகி வழங்கிவருகின்றது. இதற்கிலக்கணம் பின்னர்க்கூறு மிலக்கியச்செய்யுளிற் காணப்படுகிறது. அஃது "குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி, நிலாவணங்கு வெண்மணன்மே னின்று,—புலானுணங்கல் - கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர், உள்ளம்புக் காப்ப துரை." என்பதாம். இவ்வெண்பாவை—கோ+வின்+மையோ—எனப்பிரித்து வஞ்சியுரிச்சீர்வந்த செய்யுளென்று காரிகை



காரர் முதலாயினோர் குற்றங்கூறிக்களைகின்றார். அங்ஙனம் வஞ்சியுரிச்சீர்வந்த செய்யுளொன்று ஆன்றோர் வாக்கினதாக வழங்காது. வழுவியமைந்தமைக்கு உதாரணச்செய்யுட்கள் செய்யப்பட்டு வழங்குதல் இலக்கண வழக்குமன்று. ஆகலான், மேற்கண்ட சீரை கோ+வின்+மை+யோ எனப்பிரித்து நான்கசைச் சீராகவே கொள்ளல்வேண்டும். இங்ஙனம் வலியுறுத்தல் யாதுகாரணம்பற்றியோவெனின், எல்லாப்பாக்களுக்கும் பொதுவாகலின் நான்கசைச்சீரைப் பொதுச்சீரென்பதாகலான், காயீற்றுரிச்சீர்போல நேரீற்றுப்பொதுச்சீரும் வெண்பாவிலருகி வருதல் பெறப்படுகின்றது. ஆயினும், நாம் வேண்டுமென்றே இங்ஙனம் அமைத்துச்செய்யுள் செய்தலமை யாதுயாதாயினும் முட்டுப்பாடற்ற தோரிடத்திலமையும். "அசையுஞ்சீருமிசையொடுசேர்த்தி, வகுத்தனருணர்த்தலும் வல்லோராறே" என்ற தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்திற்கொப்ப முடிப்பதே கற்றோரியார்க்கு முடம்பாடாம்.

எப். கே. எப். அதுல்காதிறு ராவுத்தர்.

---

ஸ்ரீ

# புறத்திரட்டிற் கண்ட பாடல்கள்.

## சாந்திபுராணம்.

1. தானத்துக் குரித்து மன்று தானமிந் நீயிற் சால
வினத்தி னுய்க்க நிற்கு மெச்சத்தை யிழக்கப் பண்ணு
மானத்தை யழிக்குந் துய்க்கின் மற்றவர்க் கடிமை யாக்கு
மூனத்து நரகத் துய்க்கும் பிறர்பொரு ளுவக்கில் வேந்தே.
(வெஃகாமை.)

2. ஆனை யூற்றின் மீன்சுவையி னசுணமிசையி னளிநாற்றத்
தேனைப் பதங்க முருவங்கண் டுடுக்கணெய்து மிவையெல்லாங்
கான மயிலின் சாயலார் காட்டிக் கெளவை விளைத்தலான்
மான மார்ந்த வெவன்கொலோ வரையா தவரை வைப்பதே.
(புணர்ச்சிவிழையாமை.)

3. பிணவுக்கு வெழுதாக மெரிகொளுவ லீர்த
துனிபவுறு வடிவொடுறு துயரம்விளை விக்குங்
கினியுறவு தருமரிய புகழினை யழிக்குங்
களவுநனி விடுதலற மென்றதரு தென்றான்.

(கள்ளாமை.)

4. விண்ணி னின்பமும் வீதல் கேட்டுமால்
மண்ணி னின்பமு மாய்தல் காண்டுமோ
லெண்ணி னின்பமா மீறி லாததே
நண்ணி நாமினி நயக்கற் பாலதே.

(மெய்யுணர்தல்.)

5. கனிந்தநெய்க் கவளங் கையில் வைத்துடன் கழறுவாரை
முனிந்திடு களிறு போல்வார் முத்தியை விளக்கு நீரார்
மனங்கொளத் துறந்தி டாதே வால்குழைத் தெச்சிற் கோடுஞ்
சுணங்கனைப் போலும் நீரார் பற்றிடைச் சுழலு மோர்.

(அவாவறுத்தல்.)

6. ஆயிரங் கதிருடை யருக்கன் பாம்பினா
லாயிரங் கதிரொடும் விழுங்கக் கண்டுமோ
லாயிரங் கண்ணுடை யமரர் கோனுமோ
ராயிர மமைச்சர்சொல் வழியி னுயவே.

(அமைச்சு.)

7. தோளுமென் முலையு மல்குற் பாரமு
நாளு நாளு நவின்று பருகிலாக்
கேள்வன் மார்க்கும் பகைஞர்க்கு மொத்தலால்
வாளும் போல்வரவ் வாணெடுங் கண்ணினார்.

(பொதுமகளிர்.)

8. ஆசை யல்குற் பெரியாரை யருளு மிடைப்புஞ் சிறியாரைக்
கூச மொழியும் புருவமுங் குடிலமாகி யிருப்பாரை
வாசக் குழலு மலர்க்கண்ணு மனமுங் கரிய மடவாரைப்
பூசல் பெருக்க வல்லாரைப் பொருந்தல் வாழி மடநெஞ்சே.

ஷெ



## நாரத சரிதை.

—:o:—

1. வெவ்விட மமுதென விளங்கு கண்ணினார்க்
கெவ்விட முடம்பினி லிழிக்கத் தக்கன
வவ்விட மாடவர்க் கமிர்த மாதலா
லுய்விடம் யாதினி யுரைக்கற் பாலையே.

(புணர்ச்சி விழையாமை.)

2. பெற்றவை பெற்றழி யருந்திப் பின்னரு
மற்றுமோ ரிடவயின் வயிறு தானிறைத்
திற்றைநாள் கழித்தன மென்று கண்படு
மொற்றைமா மதிக்குடை யரசு முண்டரோ.

(செல்வநிலையாமை.)

3. புழுமலக் குருடருண் மூழ்கிப் புலால்கமழ் வாயிற் றேய்த்து
விழுமவை குழவியென்றும் விளங்கிய காளையென்றும்
பழகிய பிறவுமாகிப் பலபெயர் தரித்த பொல்லாக்
குழுவினை யின்பமாகக் கொள்வரோ குருடிர்ந்தார்.

(தூய்தன்மை.)

4. அருந்திய குறையிற் றுன்ப மாக்கவை நிறையிற் றுன்பம்
பொருந்துநோய் பொறுத்த றுன்பம் பொருந்தியே போகத்தக்க
மருந்தினுக் குளுற்ற றுன்ப மற்றவை யறுத்த றுன்ப
மிருந்தவா றிருத்த றுன்பம் யார்கொலோ துன்பமில்லார்.

ஷெ

5. வல்லென்ற சொல்லும் புகழ்வாய்மை வழீஇய சொல்லு
மில்லென்ற சொல்லு மிலனாகிய யாவர் மாட்டுஞ்
சொல்லும் குறையின்மையிற் சோரு மின்மையாலே
கொல்லென்ற சொல்லு முரைகற்றிலன் கொற்றவேலான்.

(இறைமாட்சி.)

*

6. மன்னன்மேவு கோயின்மேரு மானமற்றி பண்ணெலா
மென்ன லாய வூரிடத்தி லங்குமாளி கைக்குலம்
பொன்னின் மேரு வின்புறப் பொருப்பு நேர மாண்புறத்
துன்னு நேமி வெற்பை யென்ப சூழ்மதிற் பரப்பையே.

(அரண்.)

## இரும்பல்காஞ்சி.

——:o:——

1. நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழனுறிக்
காலை யிருள்சீக்குங் காய்கதிர்போற்—கோல
மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்று
னணிச்சே வடியெம் மரண். *

(கடவுள் வாழ்த்து.)

2. ஆர்கலி ஞாலத் தறங்காவ லாற்சிறந்த
பேரருளி னாற்குப் பெறலருமை—பாதமோ
வார்திரைய மாமகர வெள்ளத்து நாப்பணும்
போர்மலைந்து வெல்லும் புகழ்.

(வலியறிதல்.)

## பரிபாடலுறுப்பு.

1. உலக மொருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலாற் றூக்க—வுலகனைத்துந்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவ
னான்மாடக் கூட னகர்.

(நகர்.)

2. மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீறூர் பூவி
னிதழகத் தனைய தெருவ மிதழகத்
தரும்பொகுட் டனைத்தே யண்ணல் கோயில்
தாதி னனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண் பறவை யனையர் பரிசில் வாழ்நர்

---

* இப்பாட்டை, இக்காலத்தார் நளவெண்பாக் காப்புப்பாட்டுக்களோடு ஒன்றாக அச்சிட்டிருக்கின்றனர்.



பூவினுட் பிறந்தோ னாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
வேம வின்றுயி லெழுத லல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியி னெழாதெம் பேரூ ரிருந்துயிலே.

ஷை

3. தன்றமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லா
நின்று நிலைஇப் புகழ்பூத்த லல்லது
குன்றுத லுண்டோ மதுரைக் கொடித்தேரான்
குன்றமுண் டாகு மளவு.

ஷை

4. ஈவாரைக் கொண்டாடி யேற்பாரைப் பார்த்துவக்குஞ்
சேய்மாடக் கூடலுஞ் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வா ரெனப்படுவார் மற்றையார்
போவாரார் புத்தே ளுலகு.

ஷை

5. செய்யாட் கிழைத்த திலகம்போற் சீர்க்கொப்ப
வையம் விளங்கிப் புகழ்பூத்த லல்லது
பொய்யாத லுண்டோ மதுரைப் புனைதேரான்
வையையுண் டாகு மளவு.

ஷை

6 கார்த்திகைக் காதிற் கனமகர குண்டலம்போற்
சீர்த்து விளங்கித் திருப்பூத்த லல்லது
கோர்த்தை யுண்டாமோ மதுரைக் கொடித்தேரான்
வார்த்தை யுண்டாகு மளவு.

ஷை

# ஸ்ரீமாந்-காந்தியும் தமிழர்களும்.

கல்கத்தாவில் மிஸ்டர் ராமானந்த சாடர்ஜியால் பிரசுரிக்கப்படுகிற மாதாந்தப் பத்திரிகையாகிய "மாடர்ன் ரிவியூ"வில் தென்னாபிரிகாவில் இந்தியத் தலைவராக விளங்கும் ஸ்ரீமாந்-காந்தி தமிழ்ப்பாஷையைப்பற்றி எழுதுவதாவது:—

"இந்த சச்சரவில் (டிரான்ஸ்வால் சச்சரவு) தமிழர்கள்செய்த காரியத்தைப்போல் வேறு எந்த இந்திய ஜாதியும் செய்யவில்லை. ஆதலால் வேறு யாதொரு காரணமும் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு என் திருப்தியை நன்கு உணர்த்துவதற்காக மாத்திரமாவது அவர்களுடைய புஸ்தகங்களை ஊன்றிப் படிக்கவேண்டும். சென்ற மாதம் அவர்களுடைய பாஷையைக் கவனமாகப் படித்துவந்தேன். அதைப் படிக்கப் படிக்க அந்த பாஷையிலுள்ள அழகு அதிகமாகத் தெரிகிறது. அது சேர்த்தியானதும் அமிர்தம்போன்றதுமான பாஷை. நான் படிப்பதிலிருந்து எனக்குத்தெரிவது என்னவெனில்—தமிழர்களின் மத்தியில் பூர்வகாலத்திலும் இப்போதும் அநேக புத்திமான்களும் ஞானவான்களும் இருந்திருக்கிறார்கள். முடிவில் இந்தியாமுழுமையும் ஒரே ஜனங்களாக ஏற்படவேண்டுமானால் சென்னை ராஜதானிக்கு வெளியில் உள்ளவர்களும் தமிழ்ப்பாஷையைத் தெரிந்துகொள்ளவேண்டும்."

"தமிழ்ப் பாஷையைப்பற்றி ஸ்ரீமாந்-காந்தி சிலாகித்துப் பேசுவதையன்றி, தமிழர்களும் அவரின் நன்மதிப்பைப் பெற்றிருப்பது நமக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது"

சுதேசமித்திரன்.

உ

சிவமயம்.

# சோதிடகணிதம்.

(முற்றொடர்ச்சி.)

## மாதவாக்கியம் வருமாறு.

| மாதம். | நாள். | நாழி. | விநாடி. | சங்கேதவாக்கியம். |
|---|---|---|---|---|
| சித்திரை | 30 | 55 | 32 | சூரமுன்கூறி |
| வைகாசி | 62 | 19 | 44 | நூறுகோடி |
| ஆனி | 93 | 56 | 22 | போதாயாறார் |
| ஆடி | 125 | 24 | 34 | நூறுபிரை |
| ஆவணி | 156 | 26 | 44 | உண்டான்குலாவன் |
| புரட்டாசி | 186 | 54 | 6 | வென்றன்தூதுவன் |
| ஐப்பசி | 216 | 48 | 13 | நீறுபூசேரல் |
| கார்த்திகை | 246 | 18 | 37 | பேசிநாற்கற்றார் |
| மார்கழி | 275 | 39 | 30 | தையல்கூட்டமர்யால் |
| தை | 305 | 6 | 46 | சோமர்குண்டென்றார் |
| மாசி | 334 | 55 | 10 | பெற்றதுண்டோமின் |
| பங்குனி | 365 | 15 | 31 | குருநீதினில் |

## 2-வது அதிகாரம்.

## நவக்கோள் மத்தியஸ்புடம் செய்ய சூரியமத்திய கணிதம்.

—:(o):—

முன் நவக்கோளுக்கு கண்டமெனவந்த எண்ணை 31. (முப்பத்தொன்றில்) பெருக்கி 11323-ல் வகுத்து வந்த மிச்சத்தை 12-ல் பெருக்கி 11323-க்கு ஈந்து வந்தபலம் ராசியாகவும், மறுபடியும் மிச்சத்தை 30-ஆல் பெருக்கி வகுக்கு மெண்ணிற் கொடுத்தும் பெற்ற பலம் பாகையாகவும், மிச்சத்தை 60-ல் பெருக்கி அதே 11323-ல் வகுத்துவந்த பலம் கலையாகவும், மிச்சத்தை 60-ல் பெருக்கி 11323-க்கு ஈந்து வந்தபலம் விகலையாகவும்கொண்டு, சேஷம் பாதிக்கு மேற்பட்டால் ஒன்றாகவும், பாதிக்கு குறையுமாயின் நீக்கி விடவும். இதற்குக் கண்டராசி பாகை, கலை, விகலை யென்பர்,

குறிப்பு:—மேலே முதன்முதல் 31-ல் பெருக்கி 11823-க்கு யெடுத்து வந்த பலம் க்ஷேபலமே.

சேஷமறியும்படி:— மேலே ஏற்பட்டிருக்கும் நவக்கோள் கண்டத்லத வைத்து 10026-ல் வகுக்க வந்த ஈவு கலை, மிகுந்த சேஷத்தை 60-ல் பெருக்கி 10026-க்குக் கொடுத்து வந்த பலம் விகலை. இதற்கு சேஷராசி, பாகை, கலை என்று பெயர். கலை ஜாஸ்தியாகவிருந்தால் இராசி, பாகைகளாகச்செய்துகொள்ளவும்.

மேலேவந்த கண்டராசி' பாகை, கலை, விகலைகளில் சேஷராசி, பாகை, கலைகளை கழித்துவந்த ராசி, பாகை, கலை, விகலைகளுக்கு கண்டசேஷ ராசி, பாகை, கலை, விகலை யெனப்பெயர்.

இனி, நித்தியகதி காண, சூரியனுக்கு நித்தியகதி 56 நாழிகை 8 விநாடியாக, ஜனன நாழிகை விநாடிக்கு எவ்வளவாயிற்றெனக் கண்டு பிடித்து மேலே வைத்திருக்கும் கண்டசேஷ இராசி, பாகைகளுடன் கூட்டவும். இந்த தொகையே சூரியமத்தியமாகும்,

இதேமாதிரியாக ஒவ்வொரு கிரகத்திற்கும் கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையிற்கண்டபடி செய்து, அதிற்சொல்லிய துருவத்தையும் கூட்டி வந்ததுதான் மத்தியஸ்புடம்.



அட்டவணை.

| கிரகங்கள். | பெருக்கும் எண். | வகுக்கும் எண். | கண்டசேஷம் வகுத்தல். | கூட்டுவது, கழிப்பது. | நித்யகதி. | | | துருவம்சேர்த்தன. | | | மந்தோச்சம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ராசி | பாகை | கலை | ராசி | பாகை | கலை | ராசி | பாகை |
| சூரியன் | 31 | 11323 | 10026 | கழித்தல் | ,, | 59 | 8 | 12 | ,, | ,, | 2 | 18 |
| சந்திரன் | 600 | 16393 | 2920 | கழித்தல் | 13 | 10 | 35 | 6 | 19 | 17 | ,, | ,, |
| துங்கன் | ,, | 3232 | 768 | ஷை | ,, | 6 | 11 | 11 | 28 | 8 | ,, | ,, |
| செவ்வாய் | ,, | 687 | 1866 | கூட்டுதல் | ,, | 31 | 26 | 11 | 13 | 34 | 3 | 28 |
| புதன் | 100 | 8707 | 191 | ஷை | 4 | 5 | 33 | 10 | 25 | 1 | 7 | ,, |
| குரு | 10 | 13323 | 1940 | கழித்தல் | ,, | 4 | 59 | 5 | 28 | 44 | 6 | ,, |
| சுக்கிரன் | 500 | 112349 | 543 | கழித்தல் | ,, | 36 | 8 | 6 | 6 | 18 | 3 | ,, |
| சனி | ,, | 10766 | 4526 | கூட்டுதல் | ,, | 2 | ,, | 4 | 1 | 58 | 7 | 26 |
| இராகு | ,, | 6795 | 813 | ஷை | ,, | 2 | 11 | 2 | 21 | 27 | | |

3-வது கொடுத்த துங்கன் என்பது சந்திரஸ்புடத்தில் வேண்டியிருப்பதால் அதன் அம்சமும் கூறப்பட்டது.

மந்தோச்சமென்பதும், பின் ஸ்புடத்தில் கழித்துச்செய்யவேண்டியது.

3-வது அதிகாரம்.

## சூரியஸ்புடம்.

—:(o):—

மேலதிகாரத்தில் பெற்ற சூரிய மத்தியத்தில் மந்தோச்சம் கழித்து, மீதிநின்ற இராசி பாகை கலைகட்கு இரணதனமறிந்து (அஜாதிதுலாதி யறிந்து) புஜாகோடிசெய்து வாக்கியம் கண்டுவந்த பலன் முழுவதையும் வாக்கியத்தின் கலைகளோடு கூட்டிவந்த பாகை கலைகளை சூரிய மத்தியத்தில் கூட்டல் கழித்தல் செய்ய சூரிய சுத்த ஸ்புடமாகும்.

| | கலை | விகலை | வாக்கியம் | | | வாக்கிய பலன்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 8 | 8 | 9 | 72 | 8 | 17 | 116 | 4 |
| 2. | 17 | 9 | 10 | 78 | 6 | 18 | 119 | 3 |
| 3. | 25 | 8 | 11 | 85 | 7 | 19 | 122 | 3 |
| 4. | 33 | 8 | 12 | 91 | 6 | 20 | 124 | 2 |
| 5. | 41 | 8 | 13 | 97 | 6 | 21 | 126 | 2 |
| 6. | 49 | 8 | 14 | 102 | 5 | 22 | 128 | 2 |
| 7. | 57 | 8 | 15 | 107 | 5 | 23 | 129 | 0 |
| 8. | 64 | 7 | 16 | 112 | 5 | 24 | 129 | 1 |

## சந்திரஸ்புடம்.

---

சந்திரமத்தியத்தில் துங்கமத்தியத்தைக் கழித்து, மீதி நின்ற இராசி பாகை கலைகளுக்கு இரணதனமறிந்து புஜாகோடி செய்துவாக்கியங்கண்டு வந்தபலனை ஷை வாக்கியத்திற் கூட்டி வந்த கலைகளை சந்திரமத்தியத்தில் கூட்டல் கழித்தல் செய்ய சந்திரசுத்தஸ்புடமாகும்.

(இன்னும் வரும்.)

சோமசுந்தரதேசிகன்.
இலக்கணவிளக்க பரம்பரை,

---

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 13 MAY 1910 MADRAS.

தொகுதி-அ.] சௌமிய-ஹூ பங்குனி மீ. [பகுதி-ரு.

## கரவைவேலன் கோவை.

### உபநியாசம்.

இக்கோவை, யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஏறக்குறைய நூற்றைம்பது வருடத்துக்கு முன்னிருந்த சின்னத்தம்பிப்புலவர் என்பவர் செய்தது. மறைசைத்திரிபந்தாதி, கல்வளையமகவந்தாதி, பறாளாய்ப்பள்ளு முதலிய பிரபந்தங்கள் செய்தவரும் இந்தச் சின்னத்தம்பிப்புலவரேயாவர். கரவைவேலன்கோவை என்பது யாழ்ப்பாணத்திற் கரவெட்டி என்னும் இடத்திலே பெருஞ்செல்வரும் பெருங்கொடையாளருமாய்அப்பொழுதுவாழ்ந்தவேலாயுதப்பிள்ளை என்னும் பிரபுவைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு அகப்பொருளின் துறைவகையமைத்துக் கட்டளைக்கலித்துறையிற் செய்த காரணம்பற்றி வந்தபெயர். அவர் தக்கோர் பலர்முன்னிலையில் இக்கோவையைக் கேட்டுக் கவிக்கொரு பொன் கொடுத்தார் என்பது கர்ணபரம்பரை.

மறைசைத்திரிபந்தாதியும், கல்வளையமகவந்தாதியும் யாவராலும் நயந்தும் வியந்தும் பேணிப்படிக்கப்பட்டு யாண்டும் பரந்து வருகின்றன. அச்சிலும் ஏறின. இக்கோவையோ தேடிப்படிப்பாரும், நாடிக்கேட்பாரும், [illegible]காத் தெழுதிவைப்பாரு மின்மையாற் பழுதடைந்து தமிழ்நாட்டிற்பரந்து நிலைபெறுதல் செல்லாதாயிற்று. இக்கோவைப் பெயரைத்தானும் ஈண்டு வழங்கக்கேட்டல் அரிது. பின் கவிகள் வழங்கக் காண்பது எங்கே! ஆயினும், அவர் வழித்தோன்றலாகிய ஸ்ரீ சிதம்பரநாதப்பிள்ளை என்பவர்

பூர்த்தி ஒரு பிரதி கிடைக்கப்பெற்றுத் தாமெழுதிக்கொண்ட கவிகள் என்று சிலபல கவிகள் அனுப்பிவைத்தனர். பழுதின்றி முழுதுமமைந்த பிரதிகள் அகப்படுமாயின்; அச்சிடுவித்து வெளிப்படுத்திவிடுவதும் அவர் கருத்து. பிரதிகள் வைத்திருப்பவர்கள் அவர் கருத்துக்குத் துணைபுரிதல் ஆவசியகம் என்பது எமது கருத்து. சில கவிகள் வெளிப்படுமாயின்; பிரதிகளினிருக்கையையும், தாரதம்மியங்களையும் வெளிப்படுத்திவிடுதலுங் கூடும். ஆதலின் இடையிடை சிலகவிகளை வெளிப்படுத்துதும்.

தற்கால மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியும், அருங்கலை விநோதரும், பழந்தமிழ்நூற் பரிபாலகரும், செழுந்தமிழ்க்கவி யருமை அறியுஞ் சீமானும் நமது நண்பிற்சிறந்த சேது குல சிகாமணியுமாகிய ஸ்ரீமாந் - பாண்டித்துரைத்தேவரவர்களும் மற்றைச் சங்கப்புலவர்களும் இந்தச் செந்தமிழ்ப் பத்திரிகையிலே அடிக்கடி வெளிப்படுத்திவரும் பழந்தமிழ்ப் பிரபந்தங்களோடும், பழந்தனிக் கவிகளோடும் இக்கவிகளையும் ஒன்றாகவைத்து நன்கு நோக்கி இனிமையுடையனவாயின்; அவற்றிற்போல இவற்றினும் விநோதமுறுக. இனிக் கவிகளிற் செல்லுதும்.

## ஐயம்.

ஐயமாவது கண்டுக் காணப்பட்ட இம்மாது மாநுட மகளோ? மலையரமகளோ? என்பன முதலியனவாகத் தலைவன் மனத்தின்கட் டோன்றும் பலதலையாய உணர்வு.

### செய்யுள்.

க. கங்கா தரன்சிலை யோரத மோசவி ழம்பணியோ
வெங்கா ளபோசன சாலைய தோவியன் முத்தமிழும்
மங்காமல் வந்த கரவையில் வேலன் வரையில்வை
சிங்கார வல்லியர் வாழ்பதி யாதெனத் தேர்கிலமே.

கங்காதரன்சிலை - மேருமலை. (கங்காதரன்) இரதம் - பூமி, (கங்காதரன்) வெங்காளபோசனசாலை - பாற்கடல். கங்காதரன் - சிவன். சிலை - வில்லு. பணி அலரி. காளம் - நஞ்சு. இயைச - இசைந்த. சிங்காரம் - புணர்ச்சி, ஆபரணம்.



கங்காதரன் சிலையோ என்பதனால் மலையரமகளோ? என்றும், இரதமோ என்பதனால், மாநுடமகளோ என்றும், பணியோ என்பதனால் நாகருலகுறைமகளோ? என்றும் காளபோசனசாலையதோ என்பதனால் நீரரமகளோ? என்றும், ஒன்றின் இலக்குமியோ? என்றும் கருதி ஐயப்பாடுற்றான் என்பது தெளியப்படும்.

## துணிவு.

துணிவாவது கண்ணிமைத்து இருநிலம் காலுந்தோய்தல் முதலிய காரணத்தாற் பெண்ணிவள் மாநுடப்பிறப்பினள் என்று தன்னுள்ளே நிர்ணயஞ் செய்வது.

### செய்யுள்.

௨. பூவென்ற மாவலங் கேசனை நாளைக்குப் போர்புரிய
வாவென்ற வீரன் கரவையில் வேல மகிபதிமேற்
பாவென்ற வாணிப் பவனச்செல் வாய்மடப் பாவையிவள்
ஏவென்ற காதள வோடிய பார்வை யிமைக்கின்றதே.

பூ - பூமி. இலங்கேசன் - இராவணன். மகிபதி - அரசன். பா - செய்யுளின்பம், ஆகுபெயர். வாணி - வார்த்தை. ஏ - அம்பு. "இலங்கேசனை நாளைக்குப் போர்புரிய வாவென்ற வீரன்" என்பது, முதலாம் போரிலே இராவணன் நிராயுதனாய் நின்றபோது ஸ்ரீ இராமபிரான், அவன் மேல்இரங்கி, "இன்றுபோய்ப் போர்க்கு - நாளைவா வென நல்கினான்" (முதற்போர்) என்று இராமாயணத்திற் கூறிய கதையைக்காட்டி நின்றது. வீரம் முதலியகாரணம் பற்றிப்பாட்டுடைத்தலைவனைப் புருடோத்தமன் என்று பாடுதல் கவிமரபு.

## முன்னிலையாக்கல்.

முன்னிலையாக்கலாவது தலைவன் தலைவியை முன்னிலையாக்கிக் கூறுதல்.

### செய்யுள்.

௩. பாடாம லோசை யடியாமற் செம்மணிப் பந்தகழக்
காடாம லூசலு மாடாமற் பாங்கிய ரயற்றொரீஇ
கூடாம னின்றதென் வெங்கலிமூடிக் குவலயங்கள்
வாடாமல் வந்த கரவையில் வேலன் வரையணங்கே.

று வினாவிநிற்றல். இடத்து - இடமுடையது; குறிப்பு வினைமுற்று. இயற்று என்பதுமது.

### செய்யுள்.

௮. விடைதாங்கி னான்சிலை யோவண்ண லேநிரை மேய்த்துமலைக்
குடைதாங்கி னானுந்தி யோவணை யோகொற்ற மேவலரைச்
சடைதாங்க வைத்த காவையில் வேலன் றடஞ்சிலம்பிற்
படைதாங்கும் வேல்விழி யாரிய லேது பகரெனக்கே.

விடைதாங்கினான் சிலையோ என்பதனால் நின்னை வருத்திய மாதினிடம் மலையோ என்றும், மலைக்குடை தாங்கினா னுந்தியோ என்பதனால் தாமரைமலரோ என்றும், அணையோ என்பதனால் நாக ருலகோ என்றும் வினாவினன் என்பது பெறப்படும். இடம் என்பது வருவிக்கப்பட்டது.

விடைதாங்கினான் -- இடபத்தினாலே சுமக்கப்பட்ட சிவன். சிலை - வில்லு. நிரை - பசு. மலைக்குடைதாங்கினானுந்தி - தாமரைப்பூ. (அவன்) அணை - சர்ப்பம்.

## பாங்கன் தலைவனை வியத்தல்.

### செய்யுள்.

௯. சிந்தா மணியன்ன வேலன் காவைச் சிலம்பின்மின்னாள்
தந்தா வளத்துணை பாயவும் பார்வைச் சரந்தைக்கவும்
மைந்தா ரணிமுடிக் கண்ணியிற் பட்டும் படாதவர்போல்
வந்தா ரவர்ப்புக ழின்வேணுஞ் சேடனும் வாணனுமே.

தந்தாவளம் -- யானை. தந்தாவளத்துணை என்றது யானைக் கொம்புபோன்ற இரண்டு தனங்களையும். பார்வைச்சரம் - கண்களாகிய அம்புகள். கண்ணி - வலை. இத்தலைவர் செயலைப்புகழும்படி தொடங்கின் ஆயிரம் நா வேண்டுமென்பார் சேடன் வேண்டும் என்றும், அவ்வகை நாக்களாற் சொல்லும் புகழுரைகளை வரைவு செய்தற்கு ஆயிரம் கரங்கள் வேண்டும் என்றும் கூறினார். இவ்வாறே சேதுபுராணகாரரும் "ஆயிரங்கவை நாவர வஞ்சொல—ஆயிரங் கரவாணன் பொறிக்கினும்" என்றார்.



## புகழ்தல்.

புகழ்தலாவது கலவியின் மகிழ்வு பெற்ற தலைவன் தலைவியைப் புகழ்ந்துரையாடுதல்.

### செய்யுள்.

௧௦. மொழிகண்ட முச்சங்க முத்தமிழ் நூல்கண் முதுமதியால்
வழிகண்ட நீதிக் காவையில் வேலன் மணிவரைமேற்
சுழிகண்ட வுந்திப் பசுந்தோகை யஞ்சனந் தோயுமிரு
விழிகண்ட பின்னல்ல வோபய மானது வேலையுமே.

மொழிகண்ட - நன்மொழிகளாற் செய்யப்பட்ட. வழிகண்ட - முறையே உணர்ந்த. உந்தி - கொப்பூழ். பயமானது என்பது சிலேடை. அது நீர்மயமாயிற்று எனவும், அச்சமடைந்தது எனவும் பொருள்படும்.

(இவை இடையிடை தெரிந்தெடுத்த கவிகள்.)

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# திருக்குறளாராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

---

௫௫௬. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்
மன்னாவா மன்னர்க் கொளி.

இதன் உரையிலே "மன்னர்க்குமன்னுதல்செங்கோன்மை" என்பதற்கு "அரசர்க்குப் புகழ்கடாம்நிலைபெறுதல் செங்கோன்மையானாம்" என்றச்சிடப்பட்டிருக்கிறது. சில ஏடுகளில் இதற்கு "அரசர்க்குப் புகழ்களானிலைபெறுதல் செங்கோன்மையானாம்" என்பது உரையாகக் காணப்படுகிறது.

இவ்விரண்டினுள் ஆசிரியர் பரிமேலழகர்கொண்ட பாடம் யாதென்பது ஆராயத்தக்கதாம். அவ்வாறாராயுமிடத்து,—விசேடவுரையில் "மன்னுதற்கேது புகழாதல் 'இந்நிலத்து மன்னுதல் வேண்டினிசைநடுக' என்பதனானுமறிக." என்றொருவாக்கியம் எல்லா அச்சுப்பிரதிகளிலும் ஏட்டுப்பிரதிகளிலுங் காணப்படுகிறது. அதனால் அவ்வாக்கியம் ஆசிரியர் பரிமேலழகர் கூறியதென்றே கொள்ளவேண்டும். அவ்வாக்கியத்துள் "மன்னுதற்கேதுபுகழாதல்" என்றதனால் (அரசன்) நிலைபெறுதற்குப் புகழ் காரணமென்றாராம். அச்சுப்பாடமாகிய "அரசர்க்குப்புகழ்கடாம் நிலைபெறுதல் செங்கோன்மையானும்" என்பதனாலே, அரசன் நிலைபெறுதற்குப் புகழ்காரணமென்பது புலப்படாமையால், அஃது ஆசிரியர் பாடமன்றாம். அஃதவர் பாடமெனின் "மன்னுதற்கேதுபுகழாதல்" என்னும் விசேடவுரைவாக்கியங் கூறார். ஆகவே ஆசிரியர் கொண்டது அச்சுப்பாடமன்றென்பது போதரும்.

இனி, ஏட்டுப்பாடம் ஆசிரியர் கொண்டதெனின்,—"அரசர்க்குப் புகழ்களால் நிலைபெறுதல் செங்கோன்மையானும்; அச்செங்கோன்மையில்லையாயின் அவர்க்கு அப்புகழ்கள்தாம் உளவாகா" என்பது இக்குறளின் பொருளாய் "செங்கோன்மையாலே புகழ்நிலைபெறும்; புகழால் அரசன் நிலைபெறுவான்" என்பதும், "கொடுங்கோன்மையுடையானுக்குப் புகழில்லை; புகழில்லையேல் அவனும் நிலைபெறான்." என்பதும் கருத்தாகிச் செவ்வனேயமைவுபெறும். பெறவே "அரசன் நிலைபெறுதற்குப் புகழ்காரணம், புகழ்நிலைபெறுதற்குச் செங்கோல் காரணம் ஆதலால் அரசன் நிலைபெறுதற்குச்செங்கோல் பரம்பராகாரணம்." என்பது சித்திக்கும். அன்றியும் "மன்னுதற்கேதுபுகழாதல் 'இந்நிலத்துமன்னுதல் வேண்டினிசைநடுக' என்பதனானுமறிக" என்னும் விசேடவுரைவாக்கியத்துள் "மன்னுதற்கேது புகழாதல்" என மூன்றாவதன் ஏதுப்பொருண்மையை ஆசிரியர் பரிமேலழகரே விளக்கியிருத்தலான், அதற்கேற்பவுரையிலும் "புகழ்களால் நிலைபெறுதல்" என மூன்றாவது விரித்துக்கூறுவதே அவர்கருத்தாம். மனிதர் நிலைபெறுதற்குப் புகழே [illegible]த்காரணம் என்பதனை "[illegible]மன்வாழ்க்கை[illegible]தெனினும், மலரவன்வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய், வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா



புகழ்கொண்டு, மற்றிவர் செய்யும் உடம்பு." என்னுஞ்செய்யுளால் நீதிநெறிவிளக்கநூலாரும் விளக்கியிருக்கின்றார்.

ஆகவே, மேலேகாட்டிய காரணங்களெல்லாவற்றானும் "அரசர்க்குப் புகழ்களானிலைபெறுதல் செங்கோன்மையானும்" என்னும் ஏட்டுப்பாடமே ஆசிரியர் பாடமென்பதும், அதனால் அவ்வேட்டுப் பாடமே கொள்ளத்தக்கதென்பதும் தெற்றென விளங்கும்.

௧௦௮௬. கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண்.

இதன் விசேடவுரையில் "நட்டாரைக் கழறுவார்க்குத் தாஞ் செம்மையுடையராதல் வேண்டலிற் கோடாவென்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்றதனக்கும் இடைநின்று விலக்குங்காலுஞ் சிறிதிடைபெறின் அதுவழியாக வந்து அஞர் செய்யுமாகலின் மறைப்பினென்றுங் கூறினர்." என்றச்சுப்பிரதிகளிலுள்ள வாக்கியத்தின் ஈற்றிலுள்ள "கூறினர்" என்பது "கூறினன்" என்று சிலஏடுகளிற் காணப்படுகிறது. இவ்வாக்கியத்துள் "செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்றதனக்கும்" எனத்தலைவனைச் சுட்டியிருத்தலின் (அவன்) "கூறினன்." என்று முடிப்பதே பொருத்தமுடைத்தாம். மேல், ௧௦௮௭-ம் குறளின் விசேடவுரையிலும் பிறண்டும் இவ்வாறே தலைவன் கூற்றாகக் கூறியிருத்தல் காண்க.

௧௦௯௬. உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர் சொ
லொல்லை யுணரப்படும்.

இதன் விசேடவுரையில் "தன்குறைமுடிக்கக் கருதியே சேட்படுகின்றமை குறிப்பானறிந்து உலகியன்மேலிட்டுக் கூறியவாறு." என தச்சிடப்பட்டுள்ள வாக்கியத்திலுள்ள "சேட்படுகின்றமை" என்பது சில ஏடுகளில் "சேட்படுக்கின்றமை" என்று காணப்படுகிறது. இக்குறளுரையின் அவதாரிகையில் "தோழி சேட்படுத்தவழி அவள் குறிப்பறிந்த தலைமகன்றன்னுள்ளே சொல்லியது" என்றிருத்தலின் அதற்கேற்ப விசேடவுரையிலும் "தன்குறைமுடிக்கக்கருதியேசேட்படுக்கின்றமை குறிப்பானறிந்து உலகியன்மேலிட்டுக் கூறியவாறு." என்பதே சிறப்புடைத்தாம்.

*

ககருஉ. இன்கணுடைத்தவர் பார்வல்பிரிவஞ்சும்
புன்கணுடைத்தாற் புணர்வு.

இதன் விசேடவுரையில் "புன்கண்என்னுங்காரியப்பெயர் காரணத்தின் மேலதாயிற்று." என்றொருவாக்கியம் அச்சுப்பிரதிகளிலெல்லாங் காணப்படுகின்றது. இவ்வாக்கியம் சில ஏடுகளில் "புன்கணென்னுங் காரணப்பெயர் காரியத்தின் மேலாயிற்று" என்று காணப்படுகிறது.

இவ்விரண்டு பாடத்துள்ளுங் கொள்ளத்தக்கது யாதென்றுராய்வோம்:—"புன்கணென்னுங் காரியப்பெயர் காரணத்தின்மேலதாயிற்று" எனின், துன்பத்திற்கு அச்சங் காரணமாகவேண்டும். ஈண்டுத்தலைமகன் பிரியாதிருக்கவும், அவன்பிரிய எண்ணியிருத்தலை அவன் குறிப்பினாலறிந்த தலைமகள், பிரிவினாலுண்டாகுந் துன்பத்தை நினைந்து அச்சமுற்றாளாகலின் அச்சத்திற்குத் துன்பங்காரணமாயிற்றேயன்றித் துன்பத்திற்கு அச்சங்காரணமாகவில்லை. அதனால் அது (அச்சுப்பாடம்) பொருந்தாதாம். இனி,

"புன்கணென்னுங் காரணப்பெயர் காரியத்தின் மேலாயிற்று" எனின், அச்சத்திற்குத் துன்பங்காரணமாகும். மேலேசொல்லியவண்ணம் தலைமகள், தலைமகன் குறிப்பினாலே அவன்பிரிய எண்ணியிருத்தலை யறிந்தாள்; அறிந்தவுடன் பிரிவினாலுண்டாகுந் துன்பந் தோன்றிற்று; அது தோன்றினவுடன் அச்சமுண்டாயிற்று. எனவே துன்பத்தோற்றம் அச்சத்திற்குக் காரணமாயிற்று. ஆதலால் இப்பாடம் பொருத்தமுடைத்தாம்.

இவற்றால் "புன்கணென்னுங் காரணப்பெயர் காரியத்தின் மேலாயிற்று" என்னும் ஏட்டுப்பாடமே கொள்ளத்தக்கதென்பது போதரும்.

ககஎ0. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண்.

இக்குறளிலுள்ள "செல்கிற்பின்" என்பது அச்சுப்பிரதிகளிலே "செல்கற்பின்" என்றே காணப்படுகிறது. இதுவும் என்முன், செந்



தமிழ் எ-ந் தொகுதி கக-ம் பகுதி ருருகூ-ம் பக்கத்திற்காட்டிய குறள் எஅ0. "புரந்தார்கண்ணீர்மல்கச் சாகிற்பிற்சாக்கா, டிரந்துகோட்டக்கதுடைத்து." குறள்-ககூ0. "ஏதிலார்குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற், றீதுண்டோமன்னுமுயிர்க்கு." என்பவற்றையும் "அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கல்லால் வினைதான், சிறந்தானென்றேவற்பாற்றன்று." என்னும் ருகரு-ம் குறளினையும் ஒத்ததாகலின், ஏட்டுப்பாடமாகிய "உள்ளம்போன்றுள்வழிச் செல்கிற்பின்" என்பதே கொள்ளத்தக்கதாம். ஆகவே இப்பாடம்பற்றி இதன் உரையிலும் விசேடவுரையிலும் அச்சிடப்பட்டுள்ள "செல்கற்பின்" என்பவற்றையும் "செல்கிற்பின்" என்றே திருத்திக்கொள்ளல்வேண்டும்.

(இன்னும் வரும்.)

# பிழை திருத்தம்.

## திருக்குறளாராய்ச்சி

செந்தமிழ், தொகுதி-அ. பகுதி-க, ந.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| சகூ | கூ | பறவுரைத்தார் | வுரைத்தார் |
| சகூ | உந | வுறைத்தார் | வுரைத்தார் |
| ருo | கச | யாய் | யாய |
| ருக | ச | னென்றதானாற் | னென்றதனாற் |
| ருந | உந | சோராவிடல் | சோரவிடல் |
| கநரு | க0 | சுற்றிநின்று | சுட்டிநின்று |
| கநரு | உஎ | மரஙகளன்ன | மாங்களென்ன |

அ. கோபாலையன்.

உ

# சிறுவர்க்குரிய உபந்நியாசங்கள்.

(முற்றொடர்ச்சி.)

## 3. இன்னா செய்யாமை.

துன்பமுறுபவரிடத்து நாம் இரக்கங் காட்டுவதுடன், நம்மால் எவ்வுயிரும் துன்புறுவண்ணம் பார்க்கமுயலுதல் நமது தவறாக் கடப்பாடாகும்.

அஹிம்ஸா பரமோ தர்ம: (கீதை.)

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் பிறவுயிர்களுக்கு ஹிம்ஸை செய்யாதிருத்தலே உத்தமோத்தமமான பரம தர்மமென்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். அ ஹிம்ஸை என்பதினாலுண்டாகும் அர்த்தமென்ன? நம்மாற் கூடியான வரையில் பிறவுயிர்களை ஹிம்ஸிக்காதிருக்க முயலுதலென்பதேயாம். இளஞ்சிறுவர்கள் பிராணிகளையும் தம்மோடாத்த சிறுவர்களையும் அடிக்கடி துன்புறுத்துகின்றார்கள். இஃதேனெனில், தாம்செய்வது இன்னதென்பதைச் சற்றுநின்று, அவர்கள் யோசிக்கிறதில்லை. இப்படியே தாம் செய்வது இன்னதென்பது கருதாமல், அவர்கள் பிறவுயிர்க்குத் தீங்கு புரிகிறார்கள். வலிமையுடைய சிறுவனொருவன், அங்ஙனம் வலியில்லாத இளையோனைத் தன் புயவன்மைகொண்டு துன்புறுத்தல் அடாததேயாம். ஜீவப்பிராணிகள் தமக்கு நாம் செய்கிற இன்ப துன்பங்களை யுணர்ந்து நமக்குச்சொல்லும் சக்திபடைத்திருக்கவில்லையாதலின்; நாம் எல்லாப் பிராணிகளிடத்தும் தயைகாட்ட வேண்டியதும் அவசியமாகும். எளிய நாய், பூனைபோன்ற பிராணிகள் நம்மருகேயிருந்தால், அவை நம்மைவிட்டு விலகுமாறு அவற்றை யுதைத்துத் தொந்தரை செய்தல் கூடாது. குதிரை தன்னாற் கூடியவளவு பாரமான சுமையைத் தாங்கிப்போம்போது நாம்



அதனை அடித்துத் தொந்தரைசெய்தலும், செய்யத்தகாத காரியமாகும்.

கடவுளின் படைப்புப் பொருள்களாகிய எல்லாப் பிராணிகளிடத்தும் பக்ஷமாய் நடந்து, அவை நம்மைப்போலவே துன்பங்களை யுணருகின்றனவென்பதையும் நம்மனத்திற் பதிக்கவேண்டும். சிலவேளைகளில் எங்கும் தப்பியோடிவிடாதபடி கழுதையையோ ஒரு குதிரையையோ அவற்றின் இரண்டு அல்லது மூன்று கால்களையும் கயிறுகொண்டு இறுக்கிக் கட்டிவிடுகின்றார்கள். முன்னங்கால்களில் இரண்டினைத் தளர்த்திக்கட்டினால் அதனால் அந்தப்பிராணிகள் வருந்தா.

ஆனால், இக்கால்கள் இறுகப்பிணிக்கப்பட்டபொழுதும், அல்லது முன்னங்கால்களோடு பின்னங்காலொன்றும் சேர்த்திறுக்கப்பட்டபொழுதும் அவ்வேழைப்பிராணி மிக்கதொந்தரைக்குள்ளாகி, அமைதியின்றிக் கஷ்டப்படப்பார்ப்பதற்கு கொடுமையாகவே தோன்றும். எவராவதொருவர் உங்களை அடித்தாலல்லது கிள்ளினால், நீங்கள் வருத்தமுறுகிறீர்கள். ஏன் அங்ஙனம் நீங்கள் வருத்தமுறுதல் வேண்டும்? ஏனெனில், உங்களுடையதேகத்தில் மெல்லிய நரம்புகளிருக்கின்றன; இம்மெல்லிய நரம்புகள் அடிபட்டபொழுது அல்லது வருத்தப்பட்டபொழுது, அவைகள் உணர்ச்சிமிகுந்த பாகமாகிய மூளைக்குச் செய்தியை யறிவிக்கின்றன. நம் மூளை இத்தொந்தரையை ஸஹியாது, எனக்கு வருத்தமாயிருக்கிறதென்று நாமே கூறுகிறோம். எல்லாப்பிராணிகளுக்கும்; இத்தகைய மெல்லிய நரம்புகளிருக்கின்றமையால் அவை பேசக்கூடுமானால் தாமும் வருத்தமுறுகின்றனவெனலாம். ஆதலின், நாம்பிராணிகளை அடித்தலாவது, அவற்றின்மேற் கல்லெறிதலாவது, அவற்றை உதைத்தலாவது, அல்லது எவ்விதமாயினும், அவற்றைத்துன்புறுத்தலாவது, செய்யக்கூடாது. நமக்குவேண்டியபடி அவற்றை யுபயோகித்தலுடன், அவற்றைப் பக்ஷமாய்நடத்தலும் இன்றியமையாதது.

## 4. துளாதாராவும் ஜாஜலியும்.

இப்பொழுது இன்னா செய்யாமையைப்பற்றி உங்களுக்கு மற்றோர் கதைகூறுகிறேன்.

ஒரு காலத்தில் ஜாஜலி என்னும் பெயரிய பிராமணன் ஒருவனிருந்தான். இவ்விப்ரன் அல்ப ஆகாரமருந்தியும் கந்தைகளையுந் தோல்களையுமன்றி வேறொன்றையும் தன்னுடையாக உடுத்துக்கொள்ளாமல் ஒரு காட்டில் வசித்துவந்தான். இம்மாதிரியாகப் பலவாண்டுகள் ஆங்குக்கழித்துப் பெருந்தவங்கள் பலவற்றையுமிழைத்தான். ஆனால் தான்செய்துள்ள தவப்பெருமையினாலும் பிறவற்றினாலுமிகக் கர்வங்கொண்டு தன்னிலுமிக்கார் இப்பூமண்டலத்தில் எவருமிலரென்று இறுமாப்படைந்தான். ஒருநாள் நான் மிகக்கீர்த்தியடைந்தேன், இவ்வவனியிலுள்ள, சராசர ஜீவப்பொருள்களில் என்னிலுமிக்காராவது, எனக்கு ஸமானமுள்ளவராவது இவ்வுலகில் உளரோ? இல்லை யில்லையென்று சொல்லிக்கொண்டு கர்விப்பானானான். இப்படியிவன் எண்ணமிட்டதுதான் தாமசம்.

இம்மாதிரியான வார்த்தைகளை மொழிதல்தவிர, நாள்முழுவதும் பண்டங்கள் வாங்குவதும் விற்பதுமான தொழிலையுடையோனும், உன்னிலுமனேகாயிரமடங்கு நல்நடத்தையிலும், ஞானத்திலும் மிக்கவனுமான துளாதாரனென்னும் நாமமுடையானொருவனுளனாயினும், நீ கூறியமாதிரியான வார்த்தைகள்பகர அவனே தகுதியல்லனெனின் நீ கூறத்தகுமோ என்று ஆகாயத்தில் அசரீரி யொன்று கணீரென்று மொழிந்தது. இவ்வார்த்தையைக் கேட்டலும், ஒருபுறம் கோபமும், மற்றொருபுறம் ஆச்சர்யமுமுற்றவனான அந்தணன், தன்னைக்காட்டிலும் ஸகல விஷயங்களிலும் ஒரு சாதாரண வர்த்தகன் மிக்கானென்று கேட்கப் பொறாதகர்விஷ்டனாய் அன்னோனைப்பற்றி ஆராய்வானாயினன். ஆதலின் அத்தகைய துளாதாரனைப் போய்க் கண்டுபிடித்து அவன் இத்தன்மையனென அறியலுற வேண்டி வெளிப்புறப்படலாயினான்.

பன்னாட் கழித்து வாராணசி என்னும் சிறந்த க்ஷேத்திரத்தில் அவனைக்கண்டான். கடைத்தெருவில் துளாதாரன் தன்னுடைய வியாபாரத்தைச் செய்துகொண்டிருந்தான், அந்தணனைக்கண்ட மாத்திரத்தில் அவன் உடனே தன்னிருக்கையை விட்டெழுந்து அவனுக்கு விதிப்படி வந்தனங்கள்செய்து தன்னிடத்திற்கு வந்தவரலாறு யாதென்றுவினவினான். ஜாஜலியும் தன்னுடைய எண்ணத்தின் மேலும், கூறியவார்த்தைகளின் மேலும், ஆகாயத்தின்கண்ணே எழுந்த அசரீரிமொழிந்தவாக்கினை அவனுக்குரைத்தலும், ஞானக்காட்சியினால் அவனுடைய பூர்வஜன்மத்தினையும் பிறவற்றையும் நன்குணர்ந்த துளாதாரன் அவற்றை அவ்விப்பிரனுக்கு எடுத்துரைத்தான். ஜாஜலியும் இவற்றைக்கேட்டலும் மிக்க ஆச்சரியமடைந்தவனாய், விசேஷமாய் ஓயாமல் வாங்கிவிற்கும் தன்மையினையுடைய வர்த்தகனுடைய மகனாகிய துளாதாரன் இத்தன்மையான அபூர்வஞானக்காட்சியை யடைந்தவரலாற்றினைத் தனக்குவிளங்கவுரைக்கும்படி அந்தணன்கேட்டுக்கொண்டான். பிறவுயிர்க்கு இன்னாசெய்யாமை என்னும் சிறந்த விரதத்தையேதான் மேற்கொண்டொழுகிவந்ததே தான் இத்தகைய மேன்மையான ஞானவானானதற்குக் காரணமென்று அந்தணனுக்குத் துளாதாரன்கூறினன். தன்னுயிர்போன்ற மன்னுயிர்களுக்குத் தன்னாற்கூடுமான வரையில் தீங்குபுரியாமலும் எல்லாவற்றிற்கும் நன்மையையே புரிவதில் அவன்முயற்சித்தும் வந்தனன்; அவன் ஒருபொழுதும் ஒருவரிடத்திலும் சாத்திரத்தைக் கொள்ளவாவது ஒரு பொருளினிடத்தில் செய்தலும் இல்லை. தொன்றுதொட்ட பெரியோர்களால் அநுஷ்டிக்கப்பட்ட இவ்விதமான மார்க்கந்தான் நல்வழிக் குரித்தானதென்றும் இப்படித்தான் மன்பதைகள் தம் வாணாளை வீணாளாக்காது கழிக்கவேண்டுமென்றும், சிறந்தஞானமடைதற்கு இதுதான் ஹேதுவானதென்றும் துளாதாரன் எடுத்துக்கூறினான். எல்லாச்சிறந்த நன்கொடைகளிலும், மேலான பெருந்தவங்களிலும், பிறவுயிர்க்குத் தீங்குபுரியாமையே விசேஷமானதர்மமாகும். இத்தகைய தொழிலைக்காட்டிலும் மனிதனின் சிறந்தகடமை வேறின்றாகுமென்பது திண்ணம்.



"சிறப்பீனுஞ்செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார்கோள். (திருக்குறள். ௩௧௧.)

பின்னும் அநேகவிஷயங்களைப்பற்றி ஜாஜலிக்குத்துளாதாரன் உபதேசித்தான். யாகத்திற்காவது உணவுக்காவது ஜீவப்பிராணிகளைக் கொல்லவாவது மற்றப்படி அவற்றை அடித்து ஹிம்ஸித்துக்காயப்படுத்தவாவது கூடாதென்றும் அந்தணனுக்குப் போதித்தான்.

"அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்
கொலைப்பாலுங் குற்றமே யாம்."

அவ்வாட்டைப்பாருங்கள்! ஆ! ஆ! அது எவ்வாறு தன்குட்டிகளையன்புடன் போஷிக்கின்றது! என்று துளாதாரன் கூறினான். பசு தன் கன்றுக்குட்டியை யெவ்வளவோ அன்புடன் நேசிக்கின்றது. இவற்றையறிந்தும் மனிதர்கன்றைப் பசுவினின்றும் பிரித்துப் பசுவைத் துன்புறுத்துகின்றனர். குதிரைகளையும் எருதுகளையும் பாரமான பளுவை யிழுக்கச்செய்து அவற்றை யெத்தகைய தொந்தரைகளுக்குள்ளாக்குகிறார்கள். இவ்வாறு பிராணிகளைத் தொந்தரைசெய்யவேண்டுமென்று சிறந்த வேதசாஸ்திரங்கள் கூறுகின்றனவல்ல. பண்டைக்கால ஆசாரியர்கள் பல்லோரும் எல்லாப்பிராணிகளிடத்தும் நாம்தயையாயிருக்கவேண்டுமென்றே போதிக்கின்றார்கள். இவ்வாறான உபதேசங்கள் பலவற்றைத் துளாதாரனிடமிருந்து கேட்க, ஜாஜலி மிக்ககளிப்புற்றவனாய்த் திரும்பவும் அநேக கேள்விகள் அவனைக்கேட்டு அவன் பதிற்சொல்ல, மிகக்கவனத்துடன் கேட்டுணர்ந்தான். இன்னாசெய்யாமையினாற் போதரும் ஞானப்பெரும்பயன்களைப்பற்றிச் சாதாரண வர்த்தகன் குமாரனாகிய துளாதாரன் என்போன் சொல்ல, அந்தணஜாஜலியும் நன்குணர்ந்துகொண்டான்.

இத்தகைய துளாதார ஜாஜலியும் சீக்கிரத்தில் நிரதிசயாநந்தத்தையநுபவிக்குமிடமாகிய பரமபதத்திற்கு, இம்மண்ணுலகை நீத்துச்சென்றனர் என்று மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் நன்குகூறப்பட்டிருக்கின்றது.

"பலதுளிபெருவெள்ளம்" என்பதுபோல எண்ணிலாத பரமாணுக்கள் ஒன்றுசேர்ந்து இப்பெரிய புவனமும் பிரம்மாண்டமானகடலுமாயிருக்கின்றன.

மனிதருடைய சிறிய பணிவுள்ள பல நற்காரியங்கள் பின்னர் நித்திய இன்பத்தையநுபவிக்கும்படியான பரமபதத்திற்கொண்டுய்க்கின்றன.



## 5. பரமதர்மம்.

உத்தமோத்தமமான பரமதர்மம் அஹிம்ஸையே என்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா ஸ்ரீமத்-பகவத்கீதையில் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார், என்று முன்னமொருமுறை சொன்னோமன்றோ? பிறவுயிர்க்குக் கொடுமைநாடுவோன் பக்திமானாகமாட்டான். நம்மாற்கூடியவரையில் பிறவுயிர்க்குத் துன்பம் புரியாமலிருக்க முயற்சித்தால் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா திருவாய்மலர்ந்தருளியபடி நாமெவரும் நடந்தவராவோம். சிலவேளைகளில் நாம் பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யவேண்டி வரும்.

நாம் நோயாளியாயிருந்தால் நம்மைச் சுகப்படுத்துமாறு நம்மை அப்பொழுது ஹிம்ஸிக்கவேண்டிய காரியங்களைச்செய்து துன்புறுத்த நேரிடும். இவ்வாறே பிராணிகளுக்குச் சிலவேளைகளில் துன்பத்தைச்செய்ய நேரிடும். அப்பொழுது நாம் அவற்றிற்குத் தொந்தரை கொடுப்பதனால் உண்மையிலவை யாதானும் பயனடைகின்றனவா என்பதையோர்ந்து அவற்றையவ்வாறு தொந்தரைக்குள்ளாக்கவேண்டுமேயன்றி, நாம் அவை இம்மாதிரியாய் அவஸ்தைப்படுமென்பதையாவது அல்லது அவை அவஸ்தைப்பட்டால் நமக்கென்னவென்று எண்ணியாவது அவற்றின் நலங்கருதாமல் நாம் அவற்றைத் தொந்தரைபடுத்தல் நன்றாகாது. இம்மையில் எந்தப்பிராணிகளையும் அச்சுறுத்தித் துன்பஞ்செய்யாதிருக்கிறவன்தான் இறந்த பின்னர் எவற்றினாலும் பயமுறுத்தப்படாமல் ஸுகப்படுவான் என்று மனுதர்மசாஸ்திரி என்னும் பெரியவர் கூறுகின்றார்.

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்" (திருக்குறள்.)

பிறவுயிர்களுக்கு மனோவாக்குக் காயங்களினால் சிறிதேனும் துன்பத்தையே நினையாமலும், செய்யாமலுமிருந்த சிறந்த ஆசாரியர்களையும், ரிஷிகளையும்பற்றி வேதாகம சாஸ்திரங்களில் எண்ணிறந்தகதைகள் கூறப்பட்டிருக்கின்றன. அத்தகைய பெரியோர்களுக்கு அழகிய பெயரொன்றுமுண்டு. யோகியென்று சொல்லப்படும் அப்பெயர் மன்னுயிர் நண்பன் என்று பொருள்பெறும். மலைப்பாந்

திரங்களிலுள்ளகாட்டுமிருகங்கள் அவரைத்தாக்கா. பாம்புகள், விஷ ஜெந்துக்கள் முதலியவற்றினூடே அவைகளால் தீங்குறாமல் அவர் ஸஞ்சரிக்கக்கூடும். பட்சிகளெல்லாம் அவரிடத்திலேயேவந்து சரண மடைந்து புகலிடம் பெறுகின்றன. பயமறியாப் புள்ளிமான்களும் அவர் கையினின்று மாகாரம் பெறுகின்றன. உலகத்துயிர் யா வற்றின் மேலும் வாஞ்சைவைத்துள்ளவர், மன்னுயிர் நண்பர் எனப் படுவார்.

தன்னுயிர் போலும் மன்னுயிர்களை மதிக்கிறவர்களும், பிறவுயிர் களுக்கு உள்ளளவேனும் தீங்குபுரியாதவர்களும், தமக்குண்டாகும் கோபத்தை யடக்குகிறவர்களும் இம்மையினும் மறுமையினும் பே ரின்பத்தை யடைகிறார்கள். எல்லா வஸ்துக்களையும் சிறிது பெரி தென்றுபாராமல் ஒவ்வொரு வஸ்துவின் மீதும் எவன் அன்புபாராட் டுகிறானோ அவனே ஈச்வரனை உண்மையாய் த்யானம் செய்பவன் என்று கருதப்படுவான். ஏனெனில், நம்பால் அன்பு பாராட்டுகிற ஈச்வரன் எல்லாவற்றையும் ச்ருஷ்டித்து எல்லாவற்றிடத்தும் ஒரே தன்மைத்தான அன்பையே பாராட்டுபவராகின்றார்..

மகத்தான யோகிகள் செய்தவண்ணமே நாமெல்லோரும் செய் யவியலாதாயினும், பின்சொல்லிய வண்ணமாய் சிறு குழந்தைகள் கூட பெரியயோகிகள் செய்ததைப்பின்பற்றிச்செய்யலாம். நமக்குத் துன்பஞ்செய்தவரிடத்தும் நாம் தயையாயிருக்கவேண்டும்.

"கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்"

## 6. பிழைபொறுத்தல்.

---

சிலவேளைகளில் சிறுகுழந்தைகள் ஒருவரோடொருவர் கோபித் துக்கொள்ளுகிறார்கள். ஒரு சிறுவனின் விளையாட்டுக்கருவியையோ ஆபரணத்தையோ மற்றவனெடுத்து விட்டால் அவனுக்குவரும் கோ பத்தைப் பார்த்தால் வெகுப்ரமாதமாய் விடுகிறதுடன், அவன்மற்ற வனை அப்படிச்செய்ததற்காக அடித்தும்விடுகிறான். முற்காலத்துப் பெரியோர்கள் நமக்குப் போதித்துள்ள மார்க்கங்களைச் சேர்ந்ததா



இப்படிச்செய்வது? அங்ஙனமன்று. தமக்குத்துன்பம் புரிந்தவர் களையும் அவர் க்ஷமிக்கத்தயாராயிருந்தார்கள்; பிறர் அவர்களைத்துன் புறுத்தினாலும் அவர்களுக்கு இவர்பிரதியாகத் துன்பஞ்செய்தார்க ளில்லை. நமக்குத்துன்பஞ் செய்தவர்பாலும் நாம் நன்மையே செய்ய வேண்டுமென்று வேதசாஸ்திராகமங்களில் அழகானவார்த்தைகளால் கூறப்பட்டிருக்கின்றன.

பிறவுயிர்களிடத்து வெறுப்புறுதவனும், பிறவுயிர்களை நேசிப்ப வனும், அவற்றினிடத்துக் கருணையும்பொறுமையு முடையவனும், எனக்கு அருமையுள்ள நண்பனாவான். பெரியர் பிறர்தமக்குத்துன் பஞ்செய்த காலத்தும் அவற்றை ஸஹித்துப்பொறுத்தார் என்ப தைப்பற்றிய கதைகள் அநேகமுள்ளன. திருதராஷ்ட்ர மன்னனின் ஸஹோதரனாகிய விதுரனைப்பற்றி ஈண்டுக்கூறுவாம். இவ்வரசனுக் குத் துரியோதனன் என்னும் பெயரிய குமாரனொருவனிருந்தான். அவன் நற்குணமுடையோனாயும் சாந்தசீலனாயுமில்லாது தன்னுடை ய தாயாதிகளாகிய பாண்டவர்களோடு எப்பொழுதும் சண்டையிட் டும் அவர்களை மிகக்கேவலமாகவும் நடத்திவந்தான். அவர்களிடமி ருந்து அவர்களது இராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டதுமல்லாமல் அவர்களைக் காட்டிற்கு துரத்திவிட்டான். அப்போது திருதராஷ் ட்ரமன்னன் தான் இந்தஸந்தர்ப்பத்தில் ஒழுகவேண்டிய விதம் என் னவென்று தன்னுடைய ஸஹோதரனாகிய விதுரனையோசனை கேட் டான். தாங்கள்தாயாதிகளாகிய பாண்டவரோடு ஸமாதானமாய்ப் போகவேண்டுமென்றும், அவர்களது இராஜ்யத்தை மீண்டும் அவர் களுக்கே கொடுத்துவிடவேண்டுமென்றும், துர்யோதனனும் அவனை ச்சேர்ந்தவர்களும் அப்பாண்டவர்களுடைய மன்னிப்பை வேண்டிக் கொள்ள வேண்டித் துர்யோதனனுக்குப் புத்திபுகட்டவேண்டுமென றும், விதுரனும் திருதராஷ்ட்ரனுக்குக் கூறினன். தன்னுடைய பிள்ளைகளை நிந்திக்க ஸமாதானமில்லாதவனான திருதராஷ்ட்ரன்தன் னுடைய ஸஹோதரன் விதுரன்மேல் மிகவும் சினந்துகொண்டான். விதுரன்பால் அவமதிப்பான வார்த்தைகள் பல மொழிந்ததுடன் நில்லாமல், அவனிடத்துக்கு்ரமாயும் பொய்யானவார்த்தைகள் பல பகர்ந்தும் திருதராஷ்ட்ரமன்னன் அவனை மிகுதியும் நிந்தித்தான். கடைசியில் ஹிருதயபூர்வமாய் மிகக்கோபத்தோடும் அவன் விதுரனை

விட்டகன்றுபோனான். விதுரரும் அம்மன்னனைப் பதிலுக்குப்பதில் கோபியாமல் மிகுதியும் மனவருத்தமுற்றார். பின்னர் இவர்பாண்டவரிடஞ்சென்று அரசன் கோபித்தவரலாற்றை அவர்களுக்குச் சொல்லித், தம்மால் கூடியவரையில் சாந்தசீலராயும், புத்திமான்களாயுமிருக்க முயலுதலே தக்கதென்று அவர்களுக்குப்புத்திபுகட்டினார்.

(இன்னும் வரும்.)

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

## ரு-வது சதுர்த்தாரிகாலம்பகம் உ-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

—:o:—

உடனே யக்கக்ஷணத்தில் ஹே! மகாசத்துவத்தையுடையவனே! அதைக்கொண் டிப்போ தென்னுடன் வா என்று தூரத்தில் ஒரு பெண் கூறுகின்றசொல் அவன்காதில் வீழ்ந்தது. அதனைக்கேட்டது மவனச்சொல்வருகின்ற விடத்தை நாடிச்சென்று அங்கொரு பெண்ணைக்கண்டு அவளைப்பின்பற்றிச் செல்லலும் சிறிது தூரத்திலொரு விருக்ஷத்தின்கீழ் அநேகம் மங்கையர்கள் புடைசூழ்ந்துநிற்க அவர்கட்கு நடுவில் உயர்ந்த வோராசனத்தில் இரத்தினமயமான ஆபரணங்களணிந்துகொண்டு பிரகாசிக்கின்றவளும் நீரில்லாவிடத்திற் றாமரைத்தடாகம்போல் அம்மயானத்தில் நேர்தற்கரிய நிலையையுடையவளுமாக ஒரு பெண்ணிருக்கக் கண்டனன்.

அப்போது அசோகதத்தன்முன் சென்றவள் அவனை மடந்தையர் நடுவிலுல்லாசமாய் வீற்றிருக்கின்ற பெண்ணினருகி லழைத்



துச்செல்ல, அசோகதத்தன் அவ்வாறு ஆசனத்திலிருக்கின்றவளைப் பார்த்து யானிவ்விடத்தில் நரமாம்ச விக்கிரயஞ் செய்துகொண்டிருக்கின்றேன்; வேண்டுமாகிற்பெற்றுக்கொள்ளலா மென்றனன். அதற்கு அவ்வழகிய வுருவத்தினையுடைய நங்கையானவள், ஹே! மஹா சத்துவத்தையுடையவனே! இந்த மாம்சத்தை வாங்க வேண்டுமென்று விதற் கென்னவிலை கொடுக்கவேண்டு மென்றனள். உடனே அசோகதத்தனென்னும் வீரன், தன் கையிலிருக்கின்ற மணிநூபுரத்தைக்காட்டி யிதற்கிணையான மற்றொரு பாதசரம் யாரெனக்குக் கொடுக்கின்றனரோ அவருக் கிந்தமாம்சத்தைக் கொடுக்கின்றேன். அஃதிருந்தாற் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாமென்று முதுகில் பிரேதவுடலை வைத்துக்கொண்ட வண்ணமே மொழிந்தனன்.

அதைக்கேட்டு அவள், இதற்கிணையான மற்றொரு காற்சிலம்பு மென்னிடத்தி லிருக்கின்றது; ஆனால் உன்கையில் வைத்திருக்கின்ற இந்த நூபுரமும் என்னுடையதுதான். முன்பு நீ யிதனையென்னிடத்தினின்றபகரித்துச்சென்றாய். கழுவிலேற்றப்பட் டிருந்தவனுடைய பக்கத்திலிருந்தவளும் யானேயன்றி வேறில்லை. இப்பொழுது நான் வேறுருவத்துட னிருக்கின்றமையாலென்னை நீ யறிகின்றிலை; இந்த மாம்சத்தினாலென்ன பிரயோஜனம். இஃதெனக்கு வேண்டுவதில்லை. ஆனாலிப்போது நான் சொல்லுகின்றபடி செய்வாயாகில் இந்த நூபுரத்துக்கொப்பான என் மற்றொருகாற் சிலம்பையுந் தருகின்றேனென்று சொல்ல, அவ்வீரன் அதற்கிணங்கி நீ யெதைச் சொல்கின்றாயோ அதனைக்ஷணநேரத்திற் செய்துமுடிக்கின்றேனென்றனன். அப்படி யவன் சொல்லியபின், அவள் ஹே! நற்குணங்கள் நிரம்பிய உத்தமனே, யான் சொல்வதைக்கேள்; பருவதங்களிற் சிறந்த ஹிமாலயத்தின் சிகரத்தில் திருகண்டையென்னும் பெயரையுடைய தொரு பட்டண மிருக்கின்றது. அதில் இராக்கதர்களுக்கு அரசனான லம்பஜிஹ்வனென்னும் பெயருடன்கூடிய சிறந்த வீரனொருவனிருந்தனன். நான் அவனுடைய மனைவி, வித்யுத்சிகையென்று பிரசித்திபெற்றுள்ளேன். யான் நினைத்த நினைத்த வுருவத்தை யெடுக்கும் வல்லமையுமுடையேன். இப்படியிருக்கின்ற எனக்

தொரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தை பிறந்தபின் சொற்பகாலத்தில் என்பர்த்தா தைவகதியால் ஜாலஸ்போடனென்னு மரசன் முன்பு யுத்தத்திலிறந்தனர். பின்பெனது பர்த்தாவுக்குரிய நகரத்தை சந்தோஷத்துடன்கூடிய அவ்வரச னெனக்கே கொடுத்தனன்.

ஆதலா லிப்போது யானென் புதல்வியோடு அந்நகரத்திலேயே சுகமாயிருக்கின்றேன். எனது புத்திரியோ யிப்போது புதிதான யௌவனத்தை யடைந்திருக்கின்றாள். ஆதலா லவளுக்குத்தக்க சிறந்த வீரனை வரன் கிடைக்கவேண்டுமே யென்ற கவலையு மென்மனதை யடைந்திருக்கின்றது. அதுபற்றி யன்று கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி யிரவினில் அரசருட னிவ்வழிச்சென்ற வுன்னைக்கண்டு இந்த யுவாவான வீரன் நமது புத்திரிக்கிசைந்த கணவனென இங்கிருந்த வண்ணமே ஆலோசித்தேன். ஆதலாலிவனை யடைவதற்கோருபாயமென் செய்யக்கூடுமென்று கருதி, கழுவிலிருக்கின்றவள் சொல்லுஞ் சொற்களென்ற வியாஜத்தினால் தண்ணீர் வேண்டுமென்று யாசித்துன்னை ஸ்மசானமத்தியில் விணில் வரும்படி செய்து மாயையினாற் காண்பிக்கப்பட்ட வுருவம் முதலியவற்றையுடைய ப்ரபஞ்சம் அநித்தியமெனக் கூறுகின்றவளாக அவ்விடத்திலுன்னை க்ஷணநேரத்தில் வஞ்சித்தேன். அன்றியும் மறுபடியுமுன்னை யிங்கிழுப்பதற்காக யுக்தியினாலெனது ஒரு பாதசரத்தையும் சங்கிலிக்கண்ணிபோற் போட்டுவிட்டு யானங்கிருந்து மறைந்து போயினேன். இப்பொழுதோ யிவ்விதமிங்குவந் துன்னை யடைந்திருக்கின்றேன். ஆதலால் நீ யெங்கள் கிரகத்திற்கு வந்து எனதழகிய யுவதியான புத்திரியைப் பாரியையாக அடைந்து மற்றொரு நூபுரத்தையும் வாங்கிக்கொள்ளென்று அந்த ராக்ஷஸப்பெண் சொல்ல அவ்வீரனுமப்படியே செய்கிறேனென்று சொல்லி யவளுடைய சித்திப்ரபாவத்தினால் ஆகாய மார்க்கமாய் அவளோடந்நகரத்திற்கேகினன்.

ஹிமாலயத்தின் சிகரத்தில் சுவர்ணமயமாய்ப் பிரகாசிக்கின்ற அந்நகரமானது, ஆகாசமார்க்கத்திற் செல்லுதலாலுண்டான வருத்தத்தைத் தீர்த்துக்கொள்ளுவதற்காக சூரியபிம்பமே யசைவின்றியவ்விடத்தில் தங்கியிருக்கின்றதுபோற் காணப்பட்டது. அந்நகரத்தில் அசோகதத்தன் தனது சாகசகிருத்தியத்தின் பயனே யுருவுடன்



தோன்றியதுபோலிருக்கின்ற ராக்ஷசராஜன் புத்திரியான வித்யுத்ப்ரபை யென்பவளைப் பாரியையாக அடைந்து தன்மாமியினது சம்பத்தினால் சுகத்தை யனுபவித்துக்கொண்டு, அவ்வித்யுத்ப்ரபை யெனும் காதலியோடு அவ்விடத்திலேயே சிலநாள் வசித்தனன்.

பின்பவன் ஒருநாள் தன் மாமியாரிடத்தில் யானிவ்விடம் வந்து பலநாட்களாயினமையா லிப்போது காசிநகரம் போய்ச்சேர்தல் வேண்டும். அவ்விடத்தி லரசன்முன்பாக யான் உன்னுடைய காற்சிலம்புக் கிணையான மற்றொரு நூபுரத்தைக்கொணர்ந்து தருகின்றேனெனப் பிரதிக்கினைசெய்துவந்திருக்கின்றேனாதலால், நீ எனக்கு வாக்களித்தபடி மற்றுமொரு பாதசரத்தையுங் கொடுக்க வேண்டும்; நான்போய்விட்டு மறுபடியும் வருகிறேன் என்றுசொல்ல, அவளும் அப்படியே செய்யென்று மற்றொரு நூபுரத்தைக் கொடுத்ததுமன்றித் தன்னிடத்திலிருந்த சுவர்ணமயமான ஒரு தாமரை மலரையுமவன் கையிற் கொடுத்துத் தனதுசித்திப்பிரபாவத்தினாலசோகதத்தனை யங்கிருந்து ஆகாயமார்க்கத்தினால் அம்மயானத்திற் கொணர்ந்துவிட்டுத் தான்முன்பு தங்கியிருந்த விருக்ஷத்தடியிலிருந்தபடியே அவனைப்பார்த்து யான் எப்பொழுதும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி யிரவினிலிங்கு வருகின்றேன். ஆதலால் நீ மறுபடியுமெந்தெந்த திதிவேளையி லிங்குவருவாயோ அவ்வக்காலங்களி லென்னை யிந்த ஆலமரத்தினகீழ்க்காணலாம் என்றனள்.

அதைக்கேட்டு அசோகதத்தனு மப்படியேசெய்கிறேனென்று அந்த ராக்ஷசியிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அம்மயானத்தினின்று மப்போதே தன்பிதாவினது கிரகம் வந்துசேர்ந்தனன். அப்பொழுது இளையகுமாரனான விஜயதத்தனை விட்டுப்பிரிந்ததனாலுண்டான வருத்தத்தை யிரட்டிக்கும்படி செய்த அசோகதத்தனது பிரிவினால் மிகவும் துக்கிதர்களாகவிருக்கின்ற அவன் தாய்தந்தைய ரிருவரும் நினைப்பின்றி யசோகதத்தன் வரவும் சந்தோஷத்தை யடைந்தனர். அசோகதத்தன் வந்துசேர்ந்தானென்ற சமாசாரத்தைக்கேள்வியுற்ற அவன் மாமனான அரசனுமக்ஷணமே யங்கு வருதலும், அவ்வரசனை யசோகதத்தன் வணங்க அரசனும் சாகசகிருத்தியத்தையுடைய அசோகதத்தனைத் தி[illegible]ற்கஞ்சினவை

போல மயிர்க்கூச்சலுடன் கூடியிருக்கின்ற தனதவயவங்களா லவளைத் தழுவிக்கொண்டு நெடுநேரம் மகிழ்ச்சியடைந்தனன். பின்பவ்வரசனுட னசோகதத்தனென்பவன் சந்தோஷமே உருக்கொண்டு செல்கின்றதுபோ * லரமனைக்குட்சென்று கணகணவென்றொலிக்கின்ற ஓசையால் அசோகதத்தனுடைய பராக்கிரமத்தைப் புகழ்கின்றவை போன்ற அழகிய நூபுரங்களிரண்டையு மரசனிடங் கொடுத்து இராக்ஷஸர்களுடைய கோசக்கிரகத்திலுள்ள திருமகள் கையி லுல்லாசத்துடன் வைத்திருக்கின்ற தாமரை மலரைப் பறித்துக்கொணர்ந்திருக்கின்றதுபோற் காணப்படுகின்ற அழகிய கனகாம்புஜத்தையு மரசனிடங்கொடுத்தனன். பின்பரசன் தன் தேவியோடு வீற்றிருந்து சந்தோஷத்தினால் அசோகதத்தனிடத்தில் நடந்த காரியம் யாதென்று கேட்க, அவன், கேட்பவர் செவிகட்கினிமையை விளைவிக்கின்ற அத்தகைய தன் சரித்திர மனைத்தையும் மொழிந்தனன்.

உலகத்தி லொருவன் சாகசகிருத்தியத்தை மேற்கொள்ளாவிடில் விசித்திரமான தன்சரித்திரத்தை யுச்சரித்தலால் ஆன்மாக்களுக்கு † சமத்காரத்தை யுண்டுபண்ணுகின்ற தூயபுகழானது அவனா லெப்படி யடையப்படுமென்று சொல்லிக்கொண் டவ்வரசன் அங்கு தன் மருமகனை அசோகதத்தனாற் பயன்பெற்றவனாகத் தன்னைக் கருதினன். அப்போது நூபுரங்களிரண்டையும் அடைந்த அரசனது தேவியும் அவ்வாறே கருதினள்.

அசோகதத்தன் வந்துசேர்ந்தசமயத்தில் நடந்த மஹோத்சவத்தில் வீணைமுதலிய வாத்தியங்களின் முழக்கத்துடன்கூடிய இராஜகிரகமானது அசோகதத்தன் குணங்களை யெடுத்துக் கானஞ்செய்கின்றதுபோல் விளங்கிற்று. மறுநாளவ்வரசன் அசோகதத்தன் கொணர்ந்த பொற்றாமரை மலரைத் தன்னாலியற்றப்பட்ட தேவாலயத்திலுள்ள அழகிய வெள்ளிக்கலசத்தின்மீது வைத்தான். வெளுத்தும் சிவந்துமிருக்கின்ற அக்கலசம் தாமரை மலரிரண்டும் அரசன்

* இதனை அரண்மனையென்னாது, அரமனையென்றே வழங்கவேண்டுமென்பது பிரயோகவிவேக நூலுட்கண்டது.

†. சமத்காரமாவது - உலகிலில்லாத வஸ்துவைக் காணுதலாலுண்டாகும் மனமகிழ்ச்சிக்கு ஹேதுவாய் விளங்கும் வியப்பு.



அசோகதத்தனிவ் விருவர்களுடைய * புகழும், † ஒளியும் போற் பிரகாசித்தன.

அத்தகைய கனகாம்புஜத்துடன் பிரகாசிக்கின்ற வெள்ளிக் கலசத்தைக்கண்டு மகேச்வர பக்தனான அவ்வரசன் மலர்ந்தகண்களுடன் கூடியவனாக பக்திரசத்தின் ஆவேசத்தால் ஓ ஹோ! இப்போது பொற்கமலத்துடன் உன்னதமாய்த் தோன்றுகின்ற வெள்ளிக்கலசமானது சிவந்த நிறத்தையுடைய சடைமுடியுடன் விபூதியினால் வெளுத்த வுருவத்தினையுடைய பரமேச்வரன்போலன்றோ ப்ரகாசிக்கின்றது. இதற்கிணையா யின்னுமொரு கனகாம்புஜம் கிடைக்குமாயின், இந்த இரண்டாவது வெள்ளிக்கலசத்தின்மீதும் வைத்துத் தரிசிக்கலா மென்றுசொல்ல, அதைக்கேட்ட அசோகதத்த னுடனே அரசனை நோக்கி, ஹே! தேவ, நானுமக்கின்னுமொரு தாமரை மலருங் கொணர்ந்து தருகின்றேனென்றனன். அதற்கரசன் வேறொரு தாமரச் புஷ்பம்வேண்டாம். நீ சாகசகிருத்தியஞ் செய்யாதே யென்றனன்.

பின்பு சின்னாட்கழிந்ததின்மேல் அசோகதத்தன் மற்றொரு பொற்றாமரைமலரு மரசற்குக் கொணர்ந்து கொடுக்கவேண்டுமென்று நினைக்க மறுபடியு மத்தகைய கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசிதினம் வந்தது. அன்றுதினம், அசோகதத்தன் ஸ்வர்ணகமலத்தி லெண்ணங்கொண்டிருக்கின்றானென்பதை அறிந்து ஆகாசமாகிய தடாகத்திற்குப் பொற்றாமரை மலராயிருக்கின்ற சூரியன், தன்னையு மொருவேளை கவர்ந்து செல்வானோ வென்ற பயத்தினாற்போல அஸ்தகிரியின் சிகரத்தையடைய அப்பொழுது சந்தியாகாலத்திற் சிவந்திருக்கின்ற மேகங்களாகிய மாம்ச கண்டங்களைத் தின்னவேண்டுமென்ற கர்வத்தினாற்போல, க்ஷணநேரத்திற் புகைபோற் கருநிறத்தினையுடைய இருள்களாகிற இராக்கதர்களெங்கும் பரவவும், பிரகாசிக்கின்ற தீபவரிசைகளாகிற பல்வரிசைகளுடன் விளங்குகின்றதும் பயங்கரமானதும் மிகக்கொடியதாயுமிருக்கின்ற, இராத்திரி யென்னு மிராக்ஷஸியினது வாயானது திறக்கவும், அசோகதத்தனென்பவன் தன்மனைவி

* புகழ் - கீர்த்தி. † ஒளி - ப்ரதாபம்.
புகழை வெளுப்பாகவும், ஒளியைச் சிவப்பாகவும் கூறுதல் நூலோர்மரபு.

யாகிய இராஜபுத்திரி நன்றாயுறங்கின சமயம்பார்த்து அவ்வரமனையினின்றும் மெல்லவெளியேறி மறுபடியு மந்தமயானத்தையடைந்து, அங்குள்ள ஆலமரத்தின்கீழ் வந்திருக்கின்ற தன் மாமியாகிய இராக்ஷஸ ஸ்திரீயைக்கண்டனன்.

அவளுமிவனை நல்வரவுகூறி யுபசரிக்க மறுபடியுமவளுடன் அக்காளையாகிய அசோகதத்தன் அவர்கட்கிருப்பிடமாகிய ஹிமாலயத்தின் சிகரத்தை யடைந்தனன். அவன் வரும்வழியை யெதிர்பார்த்திருந்த அவனது மனைவி முதலானஜனங்கள் சந்தோஷிக்கும்படி சிலகாலமங்கு தன் காதலியுடனிருந்துவிட்டுத் தன் மாமியைப்பார்த்து அவள் முன்பு கொடுத்ததுபோன்றதான இன்னமொரு கனகாம்புஜமுமெனக்கு எங்கிருந்தாவது கொடுக்கவேண்டுமென்றனன்.

அதைக்கேட்டது மவள் வேறொரு கனகாம்புஜமேதெனக்கு; ஆனாலெங்க ளரசனாகிய கபாலஸ்போட னென்பவருக்கு ஒருதடாகமிருக்கின்றது. அதிலெங்கு மித்தகைய ஸ்வர்ண கமலங்களுண்டாகின்றன. அதினின்றும் அவர் சந்தோஷத்தினா லென்கணவருக்கொரு தாமரைமல ரளித்தனர் என்று சொல்ல அசோகதத்தன் ஆனாலந்தத் தடாகத்திற்கென்னை யழைத்துச்செல, நானே அதினின்றும் பொற்றாமரை மலரைப் பறித்துக் கொள்வே னென்றனன்.

(இன்னும் வரும்.)

---

## பிழைதிருத்தங்கள்.

### கதாசரித்சாகரம்.

| தொகுதி. | பக்கம். | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௮ | [illegible] | ௧ | வல்லப | அற்பபல |
| ,, | ௧௨[illegible] | ௪ | இவருடைய | இவரோடு |



# வடமொழி வியாகரணத்திற்கண்ட சில சரித்திரக் குறிப்புக்கள்.

[இவ்விஷயம், "பிரம்மவித்யா" பத்திராதிபராக விளங்கிய ப்ரும்மஸ்ரீ: கு. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் அவர்களால் எழுதப்பெற்ற "ஸம்ஸ்கிருதபாஷை" என்ற வியாசத்தின் ஒரு பகுதியாகும். ப-ர்.]

முன்னரே அக்காலத்தில் பற்பல பாஷைகளிருந்தனவெனவும், சம்ஸ்கிருதபாஷை ஆரியர்களுக்குள் தேசபாஷையாயிருந்ததென்றும் எடுத்தோதினோமல்லவா? ஆதலாற்றான் ஆசிரியர் பாணினியார் எங்கும் உலகவழக்கச் சொற்களுக்கு இலக்கணங்கூறவெழுந்து "பாஷையில்' என்று மெதுவாகக் குறித்துவருகிறார். அதிகமாயுள்ளது முன்னரே எடுத்தோதப்பட்டது. அக்காலத்தில் நான்குவருணங்களென்னும் பாகுபாடு நன்றாக நிலைபெற்றிருந்தது. ஆதலாற்றான் அவர் சூத்திரங்களில் நான்கு வருணத்தவர் பெயரையும் தனித்தனியே எடுத்திருக்கிறார். அக்காலத்திற்றானே பிராமணர்களும் க்ஷத்திரர்களும் தத்தம் ஆசாரங்களை விட்டொழிந்தாரெனவெளியாகின்றது. "ஆயுதஜீவிஸங்காஞ்ஞ்யட்வாஹீகேஷ்வப்ராஹ்மணராஜந்யாத்" என்றும், "ஶூத்ராணாமநிரவஸிதாநாம்" என்றும், இரண்டு சூத்திரங்களை அவர் எழுதியிருக்கின்றார். இச்சூத்திரங்களிற் கண்டபடி படைத்தொழிலைக் கைக்கொண்ட பிராமணரும் கூட்டத்தில் வெளியான சூத்திரரும் உண்டெனவெளியாகின்றது. இத்தென்னாட்டில் இப்பொழுதும் சற்சூத்திரரெனவும், அசற்சூத்திரரெனவும் இருவகை வேற்றுமைகளிருந்துகொண்டிருக்கின்றன. இடையர் நாவிதர் இவர்களிடம்போல சற்சூத்திரர் என்னுஞ்சொல் இவர்களுக்கு இடுகுறிச்சொல்லன்று. மனுமுதலியோரால் இவர்கள் அநுலோமமுதலிய ஜாதிகளாகவே குறிக்கப்பட்டவர்கள். இனி அவர்களை சற்சூத்திரரெனவும், மற்றவர் அங்ஙனமல்லாதவரெனவுஞ் சொல்லுவோமாகில் அசற்சூத்திரரெனத் தச்சன், கருமான், வண்ணான்,

தந்துவாயன் இவர்களை ஆசிரியர் பதஞ்சலியார் கூறிய கூற்று அவலமாகுமன்றோ? அவ்வாசிரியர் யாகக்கிரியையி லதிகாரமற்ற நற்சூத்திரர்களாகக் குறிப்பிடுகிறார். மற்றைய சூத்திரர்களுக்குப் பஞ்சயக்ஞியங்களில் அதிகாரமுண்டென ஆசிரியர் கையடனார் கூறுகின்றார். அக்காலத்தில் ஆரியாவர்த்தத்திற்குத் தெற்கிலும் வடக்கிலும் சூத்திரர்கள் குடிகொண்டதாகப் பாஷ்யம் குறிப்பிடுகின்றது. ஆதலால் அக்காலத்தில் சற்சூத்திரரென்பவர் தென்னாட்டில் பஞ்சயக்ஞாதிகாரிகளெனவும், அவ்வதிகாரம் பெறாத தச்சன், கொல்லன் முதலியோரெனவும், அசற்சூத்திரரென்பவர் சண்டாளரெனவும், மிருதபர் (அதாவது மிருதபமென்னும் உயிர்நீங்கிய ஜந்துக்களையுட்கொள்பவர்; மிருதம்-உயிர்நீங்கியது பர்-உட்கொள்வார்) எனவும் வழங்கப்பட்டார்கள். "அவர்கள் டோம்பர் எனப்படுவார்கள்." என்று ஆசிரியர் கையடனார் கூறுகின்றார். இத்தென்னாட்டில் தொம்பரென இப்பொழுதும் வழங்குகின்றார்கள். ஆதலாற்றான் தென்னாட்டில் சற்சூத்திரனென்னும் பதம் பெரும்பான்மை மாமிசமுதலியவற்றையொழித்த ஒருவகை ஜாதியாரிடம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதே சூத்திரத்தில் பெரும்பட்டணங்களில் சண்டாளர்கள் மிருதபர்கள் முதலிய ஜனங்களுடன் கலந்தே ஆரியர்கள் குடியிருந்ததாகத் தெரியவருகின்றது.

மாபாடியகாரர் "பெரும்பட்டணங்களில் ஆரியர்களின் நடுவில் சண்டாளர்களும் மிருதபர்களுங் குடியிருப்பார்கள்." என்றார். ஆரியர்களால் கந்தேசத்தினின்றாவது, தம்மினங்களினின்றாவது யக்கியமுதலிய கிரியைகளினின்றாவது, பாத்திரத்தினின்றாவது, வெளியேற்றப்பட்டவர்களும், வெளியேற்றப்படாதவர்களுமான இருவகைச் சூத்திரர்கள் அக்காலத்திலுண்டென்பது வெள்ளிடைமலைபோலத்தெள்ளிதிற் புலப்படும். அவர்களுள் தச்சன், கருமான் முதலியவர்களுஞ் சேர்ந்தவரென்றே ஏற்படுகின்றது. ஆதலாற்றான் ஆபஸ்தம்ப முனிவரும் "ஆரியர்கள் திட்டித்த சூத்திரர்க"ளென ஒருவகைச் சூத்திரரைக் குறிப்பிட்டார். அக்காலத்திற்றானே நமது தேசத்தில் விக்கிரக ஆராதனை செய்யப்பட்டுவந்தது. பதஞ்சலி மாபாஷ்யத்தில் "ஜீவிகார்த்தெசாபண்யெ" என்னுஞ்சூத்திரத்தில்



சிவன், கந்தன், விசாகன் இவை பூஜைக்கெனக்கொண்ட பிரதிமைகளின் பெயர்" என்றிருத்தலாலெனக. இன்னும் பற்பலவிசேஷங்கள் மாபாஷ்யத்தைப் படிப்பவர்களுக்குக் கரதலாமலகம்போல் விளங்கும். சூத்திரம், மாபாஷ்யம் இவை பிறந்தகாலத்தில் ஆரியர்கொண்ட தர்மநிலையும், பாஷைகளின் பெருமையும், கடவுளை அவர்கள் வழிபட்ட வழியும் சொல்லப்பட்டுள்ளன.

அக்காலத்தில் கன்மமார்க்கம் யோகமார்க்க மிரண்டும் பூர்ணமாக அனுட்டானத்திலிருந்தன. ஆதலாற்றான் பெரும்பான்மையும் கன்மகாண்ட வசனங்கள் பாஷ்யத்திலெடுத் துதகரிக்கப்படுகின்றன. அவ்விதம் அக்காலத்தில் அதர்வணவேதம் வழங்கிவந்தது. சிலர் ஆசிரியர் பதஞ்சலியார் தாமே அதர்வணவேதியென ஊகிக்கின்றார்கள். அஃது எங்ஙனமெனில், அவ்வாசிரியர் வேதவாக்கியங்களை முறையே எடுத்துச்சொல்லுமிடத்து "ஶந்நோதேவீரபிஷ்டயெ" என்று அதர்வணத்தின் முதல் வாக்கியத்தை முன் குறிப்பிட்டார். மேலும், "ஓம் என்றுரைத்து 'சம்' முதலியவாக்கியங்களைப்படிப்பான்." என்று வேதவாக்கியங்களைக் குறிப்பிடுமிடத்தும், முதலில் 'சம்' என்று அதர்வணவேதத்தின் முதற்சொல்லையே எடுத்தாராதலின் அவரது சுவசாகை அதர்வணமென்றே புலப்படுகின்றது. இப்பாஷ்யம் யாஸ்கர் நிருத்தம் செய்தபிறகே உண்டானது. ஆதலாற்றான் ஆசிரியர் "உணாதயோபஹுலம்" என்னுஞ் சூத்திரத்தில் "பெயர், வினைச்சொற்களிற்பிறந்தனவென நிருத்தங்கூறுகின்றது" என்றார். இதனால் "நாமாநி ஆக்யாதஜாநி" என்று யாஸ்கர் நிருத்தத்திற் கூறியவாக்கியத்தை மேற்கோளாகக் காட்டுவதாயிற்று. அக்காலத்தில் பிராமணர்கள் பெரும்பான்மையும் வெண்ணிறங்கொண்டவர்களாக விருப்பார்களெனத் தோன்றுகின்றது.

ஆதலாற்றான் பாஷ்யகாரர் "நஞ்" என்னுஞ்சூத்திரத்தில் "கரிய நிறத்துடன் கடையிலுட்கார்ந்தவனைக் கண்டவன் அந்தணனெனக் கருதுவானோ" என்றார். அக்காலத்தில் அத்துவைதமதம் சிறிது வழங்கிவந்ததாகத் தெரியவருகிறது. அவரே பிரபஞ்சம் மித்தை என்றும், சத்தை என்பது உபாதிகளின் வேறுபாட்டால்வேறு

பமென்றும், அண்டமான சத்தமொன்றே உலகமாகத்தோன்றியதென்றும், "ஸ்ஃபோடவாதஸூத்ரே-ஸம்ஷிதா" என்பதாதிகளான சூத்திரங்களில் "கானீர்போலும், கந்தர்வ நகரம்போலும், ஆராய்ந்தால் அசத்தாயொழியும்" என்றும், "இங்ஙனமாயின் ஸ்போடம் சத்தம் தொனிசத்தகுணம்" என்றும், அவர் கருத்தை வெளியிட்டாராதலாலெனக. அங்ஙனமே "வண-ரீதி-ஸ்தா-ஸூசு" என்றற்றொடக்கத்துச் சூத்திரத்தில் "பஸ்ராவதாதா த்ரயம் விதூ்ராயோதிஷ்டஷ்வ" என்று சிற்சில புராணவசனங்களை எடுத்தோதுவதாலும், 'ஜீவிகாவெ-ஷ்வ' என்னுஞ்சூத்திரத்தில் பூஜைக்கென ஏற்பட்ட பிம்பங்களின் பெயரைக்குறிக்குமிடத்து "ஶிவ꞉, ஸ்கந்த꞉, விஶாக꞉" என்று சைவப்பிரதிமைகளைக் குறிப்பிடுவதாலும் இவர் சிவபக்தரென்பதும் ஓர்வழி வெளியாகின்றது. ஆதலாற்றான் தென்னாட்டில் பற்பலசிவாலயங்களில் பதஞ்சலிபிம்பம் பிரதிட்டிக்கப்பட்டிருக்கின்றது. மற்றைப்பெரியோர்கள் இவர் ஆதிசேஷனம்சமெனக் கூறுகின்றார்கள். ஆதலாற்றான் அவரதுபிம்பம் கொப்புள்வரையிற் சர்ப்பம்போற் காணப்படுகின்றது.

அன்றியும், முண்டகோப நிடதத்திற்கு ஸ்ரீ: சங்கராசாரியர் உரைசெய்யுமிடத்துச் சிரோவிருதமென்று அக்கினிக்கப்பரையேந்துமோர் விரதத்தை அதர்வணவேதிகள் கொள்வார்களெனச் சொல்லியிருக்கின்றார். அங்ஙனமே சில பெரியோர்கள் சிதம்பர க்ஷேத்திரத்தில் அக்கினிக்கப்பரையைத் தலையிலேந்திய பதஞ்சலிமாமுனிவரைக் கண்டதாகவும் கூறுகின்றார்கள். இவைமுதலான காரணங்களால் அவர் அதர்வணவேதி என்று மீண்டுந் துணியப்படுகின்றது. இதனால் அதர்வணவேதமென்பது புதியதெனச்சொல்வது அவலமாயிற்று. இவர்கொண்ட அத்துவைதமதம் ஸ்ரீ: சங்கராசாரியர் கொண்ட அத்துவைதத்தின் ஒற்றுமையைச்சிறிதும் பெற்றதன்று; என்னையெனின், இவர் சித்தாந்தம் சில சாங்கியர்கள் கொண்டதாகமது ஆசிரியர்கள் வழங்கும் "குணத்தின் கூட்டமே திரவிய" மென்னும் வாதம் "தஸ்யாவஸ்தௌ" என்னுஞ்சூத்திரத்தில் இவரால் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஸ்ரீநாகேசபட்டர் மஞ்ஜூஷா கிரந்தத்தில் இதுவே பாஷ்யகாரர் சித்தாந்தமென்றுங் காட்டு



கின்றார். இதே சூத்திரத்தில் "மூற்கற்பத்திற்றோன்றிய டித்தன்" என்பதாதி வசனங்களால் அக்காலத்திற்றானே மறுபிறப்பு உண்டென்னும் நம்பிக்கை நம்மவர்க்குண்டாயிருந்தது. இவரது திவ்ய சரித்திரம் ஒருவாறு ராமபத்திர தீக்ஷிதரெழுதிய பதஞ்சலிவிஜயத்திற் காணலாம். மேலும் "கைவிட்டெறிந்த கல் கைவேகமுள்ளவரையில் மேலேபோய் மீண்டுந்தன்னினமான மண்ணின்கண்ணே விழும்" என்றற்றொடக்கத்தனவான பற்பலவாக்கியங்களால் பூமியிலுள்ள ஆகர்ஷணத்தைப்பற்றி (Gravity) சிறிது குறித்திருக்கின்றார்.

மகாபாஷ்யகாலத்தில் பௌத்தர்கள் மதம் இத்தேசத்திற் பரவிவந்ததாகத் தெரியவருகிறது. ஆதலாற்றான் ஆசிரியர் பதஞ்சலியார் தொடக்கத்திற்றானே பௌத்தர்களின் வசனத்தை ஒன்றெடுத்தெழுதினார். அவ்வசனம் வைதிகசன்மத்தை ஒருவழி நிந்திக்கின்றது: பிறகு 'நீவிர் இதை மயக்கத்தால் வெளியிட்டீர்; மயக்கமில்லாத மற்றைறும் சொற்கள் பிரமாணம்" என்று பதஞ்சலியார் எழுதியிருக்கின்றார். இதனால் பௌத்தமதத்திலும் அநேக விஷயங்கள்பிரமாணங்களாக அக்காலத்தவர் ஒப்பினரென்று வெளியாகின்றது. அதற்கு உரையாசிரியராகவெழுந்த ஸ்ரீமந்-நாகேச பட்டாசாரியர் இஃது பௌத்தாவதாரத்திலுள்ள ஸ்ரீமந்-நாராயணனது வசனமென்றார். இனி "வதஸிமாமெகவட்" என்னுஞ்சூத்திரத்தில் "ஒருவன் சொல்லுகின்றான், நிகழ்காலமில்லை" என்றற்றொடக்கத்துச் சிலசெய்யுட்களால் பௌத்தர்களுக்குள் ஏகதேசியான யோகாசாரரென்பவரின் மதங் குறிப்பிடப்பட்டது. ஆயின், அக்காலத்தில் அம்மதம், தழைத்தோங்கியதென்பதற்குத் தடையாதுமில்லை அதில் முதலில் எடுத்துக்கூறிய வசனத்தில் "தத்ரபவத꞉" என்று பெரியோர்களைக் குறிக்குஞ் சொல்லால் அப்புத்ததேவரை முனிவர்மகுடமணியான ஆசிரியர் பதஞ்சலியார் எடுத்தோதுவதால், அக்காலத்தில் அப்புத்தமுனி பெற்றபெரும்புகழ் வெளியாகின்றது. இவ்விதமான பலவிஷயங்கள் அதேவியாகரணத்தில் ஆராய்பவருக்குத் தெற்றெனப்புலப்படும்.

உ

சிவமயம்.

# நல்லொழுக்கம்.

## ஆறும் அதிகாரம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

அற்பக் கொள்ளையினால் ஆளுதலை நிந்திக்கும் விதத்தை முதலிலே ஏற்படுத்தினவர் லார்ட் சாதம் (Chatham) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய பெரிய குமாரரும் தன் ஆளுகையில் அவ்வாறே யோக்யமாயிருந்தனர். கோடிக்கணக்கான பணம் பிட் (Pitt) என்பவரின் கைக்கு வந்து செலவாகையிலும் அவர் ஏழையாயிருந்ததைத் தவிர வேறில்லை. அவர் ஏழையாகவே இறந்தனர். அவர்மீது பகைகொண்டு, அவதூறு எழுதினவர்களுள் ஒருவராவது, அவருடைய யோக்யதையைப்பற்றிச் சந்தேகம் கூறத்துணிவுற்றவர் எக்காலத்துமில்லை.

முற்காலங்களில் உத்யோகத்தின் லாபங்கள் மிகுதியாயிருந்தன. பதினாறுவது நூற்றாண்டின் கீர்த்திபெற்றவராகிய ஆட்லி (Audly) என்பவர்தான், கோர்ட் ஆப் வாட்ஸ் (Court of wards) ல் கிரயத்துக்குவாங்கிய உத்தியோகத்தின் கிரயம் என்ன என்று கேட்கப்பட்டபொழுது, "உடனே சுவர்க்கத்திற்குப்போக இச்சிக்கிற எவனுக்கும் சில ஆயிரங்கள்; பிராயச்சித்தஸ்தலத்தில் இருக்கவிரும்பாதவனுக்கு அதிலும் இருமடங்கு; துன்மார்க்கப் பிசாசுக்குப்பயப்படாதவனுக்கு எத்தனைமடங்கு என்பது ஒருவருக்கும் தெரியாது." என்று சொன்னார்.

ஸர்வால்ட்டர்ஸ்காட் (Sir-Walter-scott) என்பவர் தன்னுடைய அந்தரங்கமான சுபாவத்தில் யோக்கியமுள்ளவராயிருந்தார். அவர் தம்முடைய கடன்களை அல்லது தான் உட்பட்ட வியாபாரச்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 MAY 1910

சாலையின் கடன்களை நிவிர்த்திக்க பலமாயும் தீர்மானபுத்தியுடனும் செய்த முயற்சிகள் அவருடைய ஜீவசரிதத்தில் மிகவும் பெரியசங்கதியாக நமக்கு எப்பொழுதும் விளங்குகின்றது. அவருடைய புஸ்தகங்களை அச்சிட்டு வெளிப்படுத்துபவர்கை முறிவுற்றபொழுது அவருக்கும் கெடுதல் நெருங்கிவிட்டது. அவருடைய பெரிய துன்பத்தில் அவருக்காக இரங்காதவர் கிடையாது. அவ்வருடைய கடன்காரர்களுக்கு, ஒழுங்குசெய்வதற்குப் பணங்களைத்தாங்களே திரட்டும்படியான சிநேகிதர்கள் முற்பட்டனர். "கூடாது, இந்தவலதுகையானது, அவ்வளவையும் வேலைசெய்து தீர்த்துவிடும்" என்று அவர் கௌரவமாய்ப்பேசினார். "நாம் மற்றதையெல்லாம் இழந்துவிடுகிறதானால் நம் கண்யதைக்காவது தோஷமின்றிக் காத்துக்கொள்வோம்" என்று ஒரு இஷ்டனுக்கு எழுதினார். மிதமிஞ்சியவேலையால்தன் சௌக்கியமானது கெட்டுவரும்படியான காலத்திலும் தன்கையில் இறகுபிடிக்க முடியாதவரை அவர்தானே சொல்லிக்கொண்டபடி, புலிபோல் எழுதிக்கொண்டிருப்பாராயினர். தான் அதிக உழைப்பெடுத்ததால்தன் உயிருக்கு நஷ்டம் வந்தபோதிலும், தன் கண்யதையையும் தன் மரியாதையையும் காத்துக்கொண்டனர்.

ஸ்காட் (Scot) என்பவர், உட்-ஸ்டாக் (Wood-Stock) தனக்கு மரணத்தைக் கொடுக்குமென்று நினைத்த, லைப் ஆப் நெப்போலியன் (Life of Napoleon) குவார்ட்டர்லி (Quarterly) என்னும் வர்த்தமானப் பத்திரிகைக்கு விஷயங்கள், 'கிராக்னிக்கில்ஸ் ஆப் தி கானன் கேட் (Chronicles of the Conon gate) புரோஸ் மிஸ்ஸெல்லெனிஸ் (Prose Miscellanies) டேல்ஸ் ஆப் எ கிராண்ட்-பாதர் (Tales of a Grand-father) ஆகிய புஸ்தகங்களைத் துன்பமும் துக்கமுங் கெடுதலுமுள்ள காலத்தில் எவ்விதமாய் எழுதிவிட்டனர் என்பதை எல்லாரும் அறிவர். அந்தக் கிரந்தங்களின் விற்றுமுதலானது கடன்காரர்களுக்குச் செல்லாயிற்று. என் கடன்காரர்களிடத்திலிருந்து வருகிற வந்தனங்களாலுண்டாகிய ஆறுதலான எண்ணத்துடனும் கண்யமும் யோக்கியமுமான மனிதனைக் என் கடமையைச் செலுத்துகிறதை உணர்ந்த உணர்ச்சியுடனும் நான் இப்பொழுது நித்திரை செய்யக்கூடியதுபோல அயர்ந்த நித்திரை செய்திருக்கமாட்டேன். நீண்டதும் இளைப்பிக்கத் தக்கதும்

இருண்டதுமான மார்க்கத்தின் வழியே செல்லவேண்டியிருக்கிறது. ஆனால் அது குற்றமற்ற கீர்த்தியைத்தருகின்றது. நான் துன்பத்தின் மத்தியில் இறப்பேனென்று உத்தேசிக்கிற வண்ணம் இறப்பினும்; கண்ணியதையுடன் சாவேன். என் வேலையை நான் நிறைவேற்றுகிறதானால், என்னையுற்றவரனைவருடைய வந்தனத்தையும், என் சொந்த மனச்சாக்ஷியின் நன்குமதிப்பையும் பெறுவேன்" என்று எழுதினர்.

அப்பால் பக்கவாதத்தால் திடீரென்று முடங்குகிறவரை, அவருடைய கட்டுக்கதைகளை முற்றும் பரிசோதித்துண்டாகிய தி பேர் மெய்ட் ஆப் பெர்த் (The fair-maid of perth) ஜீயர்ஸ்டீன் (Geïerstein) பின்னும் டேல்ஸ் ஆப் கிராண்ட்-பாதர் (Tales of Grand-father) என்னும் உபந்நியாசங்கள், ஜீவியசரித்திரங்கள், மத உபதேசங்களாகிய பிரபந்தங்களை வெளிப்படுத்தினர். ஆனால் இறகு பிடிக்கத் தகுதியடையுமாறு போதுமான பலத்தை எய்திய உடனே 'லெட்டர்ஸ் ஆப் டிமானலோஜி' (Letters of Demonology) 'விட்ச்கிராப்ட்' (Witchcraft) 'லார்ட்னெர்ஸ் சைகிளோபேடியா' (Lardners Cyclopaedia) வுக்கு, ஸ்காட்டிஸ் சரித்திரத்தின் ஓர் பாகம் அவருடைய பிரான்சுக்காரரின் சரித்திரத்தில் (Tales of Grand-father) இந்நாலாவது பாகமாகிய இவைகளை எழுத ஆரம்பித்தனர். அவருடைய வைத்தியர்கள் அவரை வேலை செய்யக்கூடாதென்று சொல்லியும் பயனில்லை. அவர் தாம்கொண்ட பிடிவாதத்தை விடவில்லை. "என்னை, வேலையை நிறுத்தும்படி சொல்வதற்குப் பிரதியாக மோல்லி (molly) என்பவர் ஒரு பாத்திரத்தை அடுப்பின்மீதுவைத்துப் பாத்திரமே சுடாதே" என்று சொல்லலாம். நான் வேலையின்றி யிருக்கிறதானால் நான் பைத்தியம்பிடித்தவனாகவேண்டும்!" என்று டாக்டர் ஆபர்க்கிராம்பி (Dr. Abercrombie) என்பவரிடம் சொன்னார்.

இவ்விதமான கனத்த முயற்சிகளாற் கிட்டிய லாபங்களால் அவருடைய கடன்கள் விரைவில் இறங்குவதைக்கண்டு பின்னும் சிலவருஷங்களின் வேலையாற் கடன் நீங்கிச் சுவாதீனப்படுவதாக நம்பினார். ஆனால் அப்படி நேரவில்லை. கடினமான திமிர்வாதத்தாற் படுக்கை



யிற் கிடைபடுகிறவரை மிகவும் நொந்த சாமர்த்தியத்துடன் கௌண்ட் ராபர்ட்ஸ் ஆப் பேரிஸ் (Count Roberts of Paris) ஐப்போன்ற நூல்களை உண்டாக்குவாராயினர். அவருடைய கலப்பையானது உழவுசால் முடியும் பருவத்தை யடைந்ததாக இப்பொழுது உணர்ந்தார். அவருடைய சரீரபலம் போய்விட்டது. அவருக்குத் தன் இஷ்டப்படி சஞ்சரிக்க முடியாது. ஆயினும், அவருடைய தைரியமும் விடாமுயற்சியும் ஒருபோதும் தளரவில்லை. "மனதில் இல்லையானாலும், சரீரத்தில் மிகவும் துன்பப்பட்டிருக்கிறேன். நான் கீழே படுத்து விழியாமலே தூங்கலாமென்று பலமுறையும் விரும்புகிறேன். ஆனால் எனக்குச் சக்தியிருக்குமாகில் அதையும் போராடி வெல்வேன்" என்று தன் நித்தியசரித்திரப் புத்தகத்திற் பதிவாராயினர்.

அவருடைய கைச்சாமர்த்தியம் போய்விட்டபோதிலும் 'கேஸில் டேஞ்ஜரஸ்' (Castle Dangerous) என்னும் நூலை எழுதுவதற்குப் போதுமான பலத்தைத் திரும்பப்பெற்றவராயினர். அப்பால் ஆறுதலையும் சௌக்கியத்தையும் விரும்பி இத்தாலியா (Italy) தேசத்திற்குக் கடைசிமுறைபிரயாணமாயினர். நேப்பிள்ஸ் (Naples) பட்டணத்திலிருக்கையில் ஓர் புதிய கட்டுக்கதை உண்டாக்குவதிற் காலைப்பொழுதில் வெகுநேரம் செலவிட்டனர். ஆகிலும் அந்தநூல் வெளிக்கு வரவில்லை.

ஸ்காட் (Scott) என்பவர், அப்பாட்ஸ் போர்டு (Abbots ford)க்குத் திரும்பவந்து இறந்தனர். அவர் திரும்பவந்ததின்பேரில் "நான் அதிகமாய்ப் பார்த்திருக்கிறேன். என் சொந்த கிருகத்தைப்போல் அதிக விருப்பத்தைக் கொடுக்கத்தக்கது வேறொன்றுமில்லை என்று சொன்னார்." அவர் தமக்குத் தெளிவான ஓர் சமயத்தில் அவர் சொன்ன கடைசி வாக்கியம் அவருக்கு யோக்கியமானதாயிருந்தது. "என் காலத்தில் நானே மிகவும் அதிகமாய் எழுதிய கிரந்தகர்த்தாவாய் இருந்திருக்கிறேன். எந்த மனிதனுடைய சக்தியையாவது குழப்பாமலும் அவனுடைய கொள்கைகளைக் கெடாமலும் இருக்க முயன்றிருக்கிறேனென்பதையும், என் மரண காலத்தில் நீக்கிப்போடவேண்டுமென்று நான் இச்சிக்கும்படியான

யாதொன்றையும் நான் எழுதியிருக்கவில்லையென்பதையும் நினைக்க, எனக்கு ஆறுதலுண்டாகின்றது." என்று அவர் தம்மருமகனை அழைத்து "லாக்ஹார்ட் (Lock Hart) ஏ உன்னிடம் பேசிக்கொள்வதற்கு எனக்கு ஒருநிமிஷம்தா னிருக்கின்றது. என் அன்பனே நல்லொழுக்கமுள்ளவனாயும், தெய்வ விசுவாசமுள்ளவனாயும், நல்ல மனிதனாகவும் இருப்பாயாக. நீ இவ்விடத்திற்கிடக்க நேரிடுங்கால்' வேறொன்றும் உனக்கு எவ்வளவு ஆறுதலையும் கொடுக்கமாட்டாது" என்று சொன்னார்.

(இன்னும் வரும்)

---

உ

# செல்வநிலையாமை.

——[X]——

உலகத்திலுள்ள எவ்வகைப்பட்ட அருமையான பொருள்களையும் நாம் எளிதில் அடைவதற்குச் சாதகமாயிருப்பது செல்வமேயாம். பெறுதற்கரிய மானிடப்பிறவியை யெய்தப்பெற்ற ஒவ்வொருவனும் அடையற்பாலதாகிய தருமார்த்த காம மோக்ஷ மென்னும் சதுர்வித புருஷார்த்தங்களுள் முன்னைய மூன்றாகிய தருமம், அர்த்தம், காமம் என்பவற்றுள் நடுவணதாகிய பொருளொன்றை மாத்திரம் ஒருவன் அடையப் பெறுவானேயாயின் அவனை யேனைய அறமும் இன்பமும் தாமே வந்தெய்தும். இக்கருத்தை யமைத்தே,

> " நடுவிலா வையத்து மன்னியமூன்றி
> னடுவண தெய்த விருதலையு மெய்தும்."

என்று அறிஞர் கூறியுள்ளார். உலகத்தில் எத்தகைய அறத்தைப் புரிவதற்கும் எத்தகுதிய இன்பத்தை அனுபவிப்பதற்கும் இன்றியமையாத கருவியாயுள்ளது செல்வமென்பதை ஒருவரும் மறுக்கார். அறம் புரியாவிடத்து வீடு அடைதல் கூடாதாகலின் அவ்வறத்துக்குச் சாதகமாய் நிற்கும் பொருள் வீட்டுக்கும் சாதகமானதென்பது சொல்லாமே அமையும். சர்வேசனது திருவடிச்செல்வமொன்று நீங்கலாக, உலகத்திலுள்ள அரும்பொருள்கள் யாவும் இமைப்பொழுதில் மாய்ந்துவிடத்தக்கனவென்பது மேலோர் கூறிய சித்தாந்தம். இதற்கு இலக்கியமாக நிற்பவை யாக்கை, இளமை, செல்வம் முதலியன. உலகத்தில் பெறுதற்கரியனவாய் நிலையாமையிற் சிறந்தனவாயுள்ள எல்லாப்பொருள்களிலும் யாக்கை, இளமை, செல்வம் என்னும் இம்மூன்றும் சிறந்தன. அவற்றுள் நிலையாமையில் மிகச்சிறந்தது செல்வமேயாம். மக்கள் ஆயுள் நூறு வயதென்றும் இளமைப்பருவம் முப்பது வயதென்றும் அறிஞர் யாக்கைக்கும் இளமைக்கும் ஒரு காலவரையறை நிர்ணயித்திருக்கிறார்கள். அங்ஙனம் செல்வத்துக்கு ஒரு காலவரையறை எவரேனும் ஏற்படுத்தியிருப்பதாக நாம் யாண்டுங்கண்டதில்லை. ஏனைப் பதார்த்தங்களைவிட, செல்வத்தினிடத்து நமக்கு அதிக அவா இருத்தற்கு இரண்டு காரணங்களுண்டு. முதலாவது—மேலே எடுத்துக்காட்டியபடி எவ்வகைப்பட்ட பதார்த்தங்களையும் எய்துவதற்குச் செல்வம் பெருங்கருவியாயிருக்கிறபடியினால் அதனிடத்து ஆன்மாக்களுக்கு அதிக விருப்பமுண்டாகின்றது. இரண்டாவது—கிடைத்த செல்வம் நீடித்து நம்மிடம் நிற்குமாயின், அதனிடத்து வாஞ்சை குறையும். அது வெகு சீக்கிரத்தில் உடையானை விட்டகலு மியல்பினையுடையதாதலின், அதனிடத்துண்டாகும் அவா பெரிதாயிருக்கின்றது. எந்தப்பொருளானது அதிசீக்கிரத்தில் அகலும் தன்மையதோ அது மிக்க அவாவை விளைவிக்கின்றதென்பது அனுபவசித்தம். மனோதத்துவ சாஸ்திரமும் இவ்விஷயத்திற்குச் சாட்சிபகரத்தக்கது. மாதர் இன்பத்தை மகாமேருவைப்போல் நம்மைநினைக்கச் செய்வதும் அதை அடிக்கடி அவாவும்படி நம்மைத் தூண்டுவதும் எது? அவ்வின்பத்தின் நிலையாமையேயாம். அது க்ஷணநேரத்தில் ஒழிகின்றபடியாற்றான் அதனை மீண்டும் அடையவேண்டும் எனனும் பேரவா ஆன்மாக்களிடத்தில் நிகழ்கின்றது. இதுபோலவே செல்வத்தின் அநித்தியமே அதனை நாம அவாவுதற்குக் காரணமாயிருக்கின்றது. செல்வம், தரித்திரம் என்னும் பதங்கட்குச் சில தமிழ்ப்புலவர்கள் ஒரு விநோதமான உரை கூறுவதுண்டு. செல்வம் தன்னை உடையானைக் கண்டஎப்போதும் செல் (வோம்) வம் (யாம் உன்னை விட்டுப்போவோம்) என்றும், தரித்திரம் தன்னையுடையானை

போக்கி தரித்தி (ரோம்) ரம் (யாம் உன்னிடத்தில் எப்போதும் தரித்து இருக்கமாட்டோம்) என்றும் கூறுவதாகப்பொருள் உரைப்பர். இந்த உரை அப்பதங்களின் உண்மைப்பொருள் அல்லவாயினும், அதில் ஒருவகை யதார்த்தம் மாத்திரம் இனிது விளங்குகின்றது.

இறுதியிலே காரியமாயமையும் இன்பத்தினிடத்து நாம்கொள்ளற்குரிய ஆசையானது - அவ்வின்பத்தை யடைவதற்குக் கேவலம் காரணமாக மாத்திரமுள்ள செல்வத்திடத்தில் பொருந்தியிருப்பது மனிதனுடைய மனோதத்துவ லட்சணமாயிருக்கிறது. காரியத்தை மறந்து கருவியினிடத்தே பேரவாக்கொண்டிருத்தல் மனதுக்குற்ற ஒருவித இயற்கை என்பது மனோதத்துவ சாஸ்திரிகளின் கருத்து. ஆகையினாற்றான் அநேகர் அறத்தைப்புரிந்து இன்பத்தை நுகர்ந்து முடிவில் வீட்டை அடைவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யாமல், அவற்றிற்குக் கருவியாயுள்ள பொருள்களோடு ஒழிந்து வாணாளை வீணாளாக்கி மரிக்கின்றனர். செல்வம் வந்தகாலத்துக் காலதாமதமின்றி, நமக்கும் பிறர்க்கும் பெரும்பயனைத் தரத்தக்க கருமங்களை வெகுசீக்கிரத்தில் நாம் செய்து முடிக்கவேண்டியதென்ற எண்ணத்தைக்கொண்டே ஜகதீசன் அதற்கு அவ்வளவு நிலையாமையைத் தந்திருக்கின்றார். இதனை உணரு மதுகையில்லாச் சிலர்,

"உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி"

என்னும் அமுதவாக்குக்கு உதாரணமாகின்றார்கள். செல்வத்தினிடத்து மனிதர்களுக்குண்டாயிருக்கும் பேராவைக்குறித்து ஒரு சிறுகதை சொல்லப்படுகின்றது. அதாவது:—

ஒரு ஊரில் தனபாலகனென்றொரு வணிகன் இருந்தான். அவன் மேலும் மேலும் பொருளை ஈட்டுதலிலேயே அவாக்கொண்டிருந்தானேயன்றி அதில் எவ்வளவையும் பிறர்க்கு வழங்குவதுமில்லை, தானும் அநுபவிப்பதுமில்லை. ஈன்றியில் செல்வமென்று மூதறிஞரால் இகழ்ந்துரைக்கப்பட்ட தன்மையை நச்சுமரம் பழுத்ததுபோன்ற அவனுடைய செல்வம் பெற்றிருந்தது. அறிவில்லாத



வன் தன்பொருளை என்னது என்னது என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றான், அவனுடைய பொருளை யானும் என்னது என்னது என்று சொல்லிக்கொண்டு இருப்பேன், அப்பொருள் என்னதன்று; தன்னதுதான் என்று அவன் கூறுவதற்கும் நியாயமில்லை; ஏனெனில், அப்பொருள் அவனதாயிருக்குமாயின், அவன் அதனைப் பிறருக்குக்கொடுப்பான், தான் அநுபவிப்பான், அங்ஙனம் அவன் செய்வதில்லை, யானும் அவனிடத்துள்ள அப்பொருளைப் பிறருக்கு வழங்குவதுமில்லை, அநுபவிப்பதுமில்லை; ஆகலின் அப்பொருளை என்னதென்று யானும் சொல்லிக்கொண்டு திரியலாமே என்னும் அருமைக் கருத்தமைந்த,

"எனதென தென்றிருக்கு மேழை பொருளை
எனதென தென்றிருப்பன் யானுந்—தனதாயிற்
றானு மதனைவழங்கான் பயன் துவ்வான்
யானு மதனை யது."

என்னும் அற்புதகவி அவ்வணிகன் பொருட்டே செய்யப்பட்டதுபோலும். மேன்மேலும் செல்வம் தனக்குச் சேரவேண்டுமென்று ஏக்கங்கொண்டு அவன் செல்வநாயகியாகிய இலட்சுமியை அல்லும் பகலும் பிரார்த்தித்துவந்தான். அப்பிராட்டி அவனுடைய நல்வினைக்கீடாக அவனுக்குச் செல்வத்தை விருத்திசெய்துகொண்டே வந்தனள். இப்படியிருக்க, தனபாலகன் தன்னுடைய செல்வத்தையெல்லாம் ஒருநாள் பார்த்து ஐயோ! இஃது ஒருகாலத்து என்னை விட்டகலுமோ? என்று துக்கித்து, அன்று இலட்சுமிப் பிராட்டியை நோக்கி அதிவிநயத்துடன் பிரார்த்திக்கவே அவள் பிரசன்னமாகி உனக்கென்ன வரம்வேண்டுமென்று வணிகனை வினவினள். அம்மே! ஒன்றுவேண்டும், இந்தச் செல்வம் என்னிடத்திருப்பதற்கு நீ என்னிடத்துத் தங்கியிருப்பதே காரணமாகும்; நீ என்னை விட்டகலுங்காலத்து இச்செல்வமும் என்னைவிட்டகலும்; நீ என்னைவிட்டு வேறொருவனிடத்தில் போவதாயிருந்தால் இன்ன தினத்தில் என்னைவிட்டகலுவேனென்று என்னிடத்து முன்பாகச் சொல்லவேண்டியதோடுங்கூட, போகும் தருணத்திலும் அப்பா! போகின்றேன் என்று என்னை நேரில் கண்டு சொல்லிவிட்டுச் செலவு பெற்றுக்கொண்டும்

போகவேண்டியதென்று குறையிரந்தான். தனபாலகன் நெடுங்காலமாகத் தன்னிடத்தில் அதிக பக்தி பாராட்டி வந்தவனாதலின் பிராட்டியாரும் அவ்வேண்டுகோளின்படி அப்படியே ஆகுக என்று உறுதிமொழிகூறி மறைந்தனள். சிலகாலஞ் சென்றபின்பு வணிகன் அடியில் வருமாறு தனக்குள் சிந்திக்கலாயினான். "திருமகள் என்னைவிட்டகலும்போது என்னை நேரிற்கண்டு, போகின்றேன், என்று சொல்லி என்னிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ஏகுவதாய் உறுதிமொழி கூறினள்: அத்தேவியார் சொற்றவறாள்; நான் உயிரோடிருந்தாலன்றோ என்னை நேரிற்காண்பாள்; நான் இறந்துபோவேனாயாகில் தன் வாக்குத்தத்தப்படி என்னைப்பார்க்க அவளுக்கு இசையாது என்னிடத்தில் சொல்லாமலே அவள் என் வீட்டைவிட்டகலக்கூடாதன்றோ? ஆகவே இச்செல்வம் என் இல்லத்தைவிட்டகலுவதற்கிடமிராது." என்று குயுக்திபண்ணிக்கொண்டு ஒரு பாழ்ங்கிணற்றில் வீழ்ந்திறந்தான்.

நிலையில்லாச் செல்வத்தினிடத்து அப்புல்லறிவாளனுக்கிருந்த பேரவா அவனுடைய அகாலமரணத்துக் கேதுவாயிற்று. "செல்வமொன்றுண்டாக வைக்கற்பாற்றன்று." என்று பெரியோர் கூறிய பொய்யாமொழியை உணராது அவன் வீணாக மரித்தனனே! பரிதாபம்!

---

௨

# உள்ளத்தெளிவு.

(முற்றொடர்ச்சி.)

---

உள்ளத்துக்கண் தெளிதலெனப் பொருள்பட்டு நிற்கும்; தெளிதலென்பது சிவஞானசித்தாந்த சாத்திரங்களான் எல்லாம் வல்ல முழுமுதலினிலக்கணம் இனைத்தெனவும், அம்முழுமுதலினருண் மாட்சியான் பலதரப்பட்ட ஆன்மாக்களினிலக்கணம் இனைத்தெனவும், அவ்வான்மாவினது யதார்த்த நிலைமை தோன்றவொட்டாது



செம்பிற்களிம்பென மறைத்து அஞ்ஞானமிருத்தியாற் பந்தபாசத்தினிலக்கணம் இனைத்தெனவும் யூகித்து நுனித்துணரற்படுவன தெளிவுசான்ற தெள்ளியார் செயலாகும். உள்ளம் உலகமயக்கால், அதன் வசப்பட்டு அறிவையுமதன்பாலிழுத்து ஒருமைப்படுத்துக்காட்டுவது ஓர் அரும்பெரிய வியல்பு. அறிவினுக்குப் பாகுபாடுகாணும் வன்மை நிலைபெற்றிருப்பினும் ஞானசாத்திரம் முதிர்ச்சியிலாதொழிந்ததான் பாலொடுகலந்த நீரெனப் பேதமிலாது நிற்குமென்க.

நான் ஆர். என் உள்ளம் ஆர். ஞானங்கள் ஆர். என்னையாரறிவார். என்றதோரரும்பெருந்திருவாக்கின்படி நானியார். நானாவித பேதமாக அதி அற்புதமாகத் தோன்றிமெய்ம்மைபோற் காணப்படும் இப்பிரபஞ்சங்கள் யாவை. இவற்றிடையில் யான்வந்து பிறந்தது என். அப்படிப்பிறந்து பலவகையான துன்பங்களை அனுபவித்து வருத்தமடையும்போதும் இடையிடையே, அவற்றைமறந்து எப்போதும் நான் இவ்வுலகத்திற்றானே சாசுவதமாய் இருப்பது என். என்பெண்டாட்டி பிள்ளை, சொந்தக்காரர், பிறர்கள் என்னுமிவர்க்கும் எனக்கும் உள்ளதொடர்பு என்னை? ஏனையோர்களிடத்திலெல்லாம் அன்புள்ளவனாக யான் ஒழுகாது, என் மனைவிமக்களிடத்து மட்டும் யான் கணக்கில்லாத அன்புகொண்டுநிற்பது என்ன அறியாமை. யான் இறக்குங்காலத்து அவர் அவ்விறப்பினை நீக்குவரா? அன்றி யான் பிறக்குங்காலத்து அவர் அப்பிறப்பினை நீக்குவரா? யான் துன்பத்தையடையுங்காலத்து அவர் அத்துன்பத்தை நீக்குவரா? இவர்களெல்லாம் ஐயோ, எம்மைப்போலவே துன்பமடைகின்றார்கள், பிறக்கின்றார்கள், இறக்கின்றார்கள், இறப்பார்க்கு இறப்பாரும்; துன்பமடைவார்க்குத் துன்பமடைவாரும், துணையாவதெவ்வண்ணம். ஐயோ! இத்துன்பத்தினின்றும் எவ்வாறு நீங்குவேன். இறக்கவேண்டும் என்பதனை நினைக்குங்காலத்து, என்மனம் பகீர் பகீரெனத் துணுக்குறுகின்றதே. எனவிவைபோன்ற பிறவற்றையும் காட்டி உண்மை சாதித்தொழுகும், பேரறிவாளரனைத்தாரும், இடித்திடித்துக்கூறினராவர். (பூவினிற்கந்தம் பொருந்திய வாறுபோல்) எங்கு நிறைவுள்ள பரம்பொருள் இன்னதெனக் கண்டு நிலைமைபெறுவது தான் தெளிவாகும்.

.........................,திருமாலொடு நான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென் னுள்ளே. (தேடிக்)

என நம் சைவத்திருமறை கூறுவதுமீண்டு ஆராயத்தக்கதாகும். அங்ஙனமாயதேவனை என்னுள்ளே தேடிக்கண்டுகொண்டேன் என்றிருப்பது தெளிதலடைந்த விடமென்க.

முழுஞானமாணிக்கமான திருமூலரென்பார்—(சென்றேபுகுங் கதியில்லை நஞ்சித்தது — நின்றேநிலைபெறநீர் நினைந்துய்ம்மினே) என்கின்றனர். அன்றி, (தலையாகச் செய்வானுந்தான்) என்பதுங்கருதற்பாலதாகும். தெளிவில்லாதவர் மனம மருண்டவுணர்வினது சம்பந்தத்தால் யாவும் நான் நான், எனச்சுழல்கின்றது. ஆகவே, அம்மருட்சி பற்பல சனனந்தொட்டே தொடர்ந்தாகும். பஞ்சினைமலைமலையாகக்குவித்து ஒருசிறுதீப்பொறியிடின், முற்றும் எரிந்தடங்குதல்போல, கணக்கில்லாத பிறவிகளில் புண்ணியபவஞ்சமமெய்தியேதோசிறிது தவமிகுதியான் ஆருமுணர்வுதோன்றி அது பாசபந்தத்தாற்றுக்குண்ணாது, உண்மைதெளிந்து சிவோகம் பாவனை செய்தலாற்றான் தெளிபு உள்ளத்தின்கண்ணே நழுவாதிருக்குமென்க. சலனமில்லாது நிலைமைகடைப்பிடிப்பதுக்குத்தான் சிவஞானசாத்திரமாய்தல்வேண்டும். இங்ஙனஞ்சாத்திரவாராய்ச்சி யில்லாமலே, தெளிபுபெற்றாரில்லையோவெனின், நன்றுசொன்னாய். அக்காலத்து அசையாவுள்ளம் பெற்று ஒரேபடித்தாமுற்றவர்களும், (உணர்ந்தவருளத்திலுணர்த்தியவுணர்வே) என்பதால், அறிவினுக்கு காற்றுடிபோன்ற சுழற்சி அமைந்ததாகும். காற்றுநின்றவிடத்து, அது அசையாதிருத்தலைப்போல, விடயத்திற்பற்றாது நிற்கும்போது மெய்ம்மை, பொய்ம்மை, என்பதன் பகுப்பு இன்ன இன்னவெனத்தோன்றும், உள்ளம் சலனத்தையடையும்போது சாத்திரவுணர்ச்சி உடைசோர்ந்தவிடத்துதவிபுரியுங் கரம்போலக் கைதூக்கிவிடும் என்க. (செய்கருமம் வல்லரேயாயினும் வளம்பெறார்) நூலுணர்ச்சியில்லார் என்பது உண்மையேயாகும். மெய்யறிவினையெழுப்பி நன்னிலை ஈதென அறிவிப்பது நூலுணர்ச்சியேயாகும். நூலுணர்ச்சி குன்றி ஒருவன் உள்ளத்தெளிவுபெற நினைப்பானேல் தண்ணீர்நிலை காட்ட மண்குதிரையைத் துணை பெற்றதுபோலாம். மெய்யறிவினாற்றான் உண்மைதெளிபு, இவையனையபிறவும் விளங்குமென்க,



ஐயறிவறிந்தவையடங்கினவரேனு
மெய்யறிவிலாதவர்கள் வீடதுபெறாரே.

என்பது தெள்ளிய தீவிரவுரையாகும். நிமிடத்துக்குநிமிடம் மாறுதலடையுந்தன்மையும், சலிப்புங்களிப்பும், அளவில்லாதனவாய் உள்ளத்துக்குடைமையாகிநிற்கின்றன. சித்தசுத்திபெற்றுநிற்க வேண்டும் எனப்பெரியார் முடிபுரை கூறுவதனைத்தும், இவ்வுள்ளத்தெளிபுதான் மனவடக்கம்பெறின், நாவடக்கமமையும்; நாவடக்கமமைய வியவகார மொழியும், வியவகாரமொழிய மனோலயம் எய்தும், எய்தவே சிவச்சீவபேதமுணர்ந்து மயப்பட்டு தெளிதலடைந்து நிற்றலாகுமென்க. (தொடரும்.)

நா. இராமசாமிவன்னியன்.

---

உ

# சோதிடகணிதம்.

(முற்றொடர்ச்சி.)

## வாக்கியபலன்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 20 | 19 | 9 | 16 | 17 | 17 | 270 | 9 |
| 2. | 39 | 20 | 10 | 183 | 16 | 18 | 278 | 8 |
| 3. | 59 | 20 | 11 | 198 | 15 | 19 | 285 | 7 |
| 4. | 78 | 19 | 12 | 213 | 15 | 20 | 291 | 6 |
| 5. | 97 | 19 | 13 | 226 | 13 | 21 | 295 | 4 |
| 6. | 115 | 18 | 14 | 239 | 13 | 22 | 298 | 3 |
| 7. | 133 | 18 | 15 | 252 | 13 | 23 | 300 | 2 |
| 8. | 150 | 17 | 16 | 261 | 9 | 24 | 301 | 1 |

## குஜஸ்புடம்.

மேல்நின்ற குஜமத்தியத்தில் மந்தோச்சம்வாங்கி இரணதனமறிந்து புசாகோடிசெய்து வாக்கியம் கண்டுவந்த பலனைப் பாதிசெய்து குஜமத்தியத்தில் கூட்டல் கழித்தல் செய்ய அர்த்த மந்தமாம்.

இந்த அர்த்தமந்தத்தில் சூரியமத்தியத்தைக்கழித்து, இரணதனமறிந்து கர்க்கிஜா மகரஜா கண்டு புஜாகோடிசெய்து வாக்கியம் கண்டுவந்த பலனைப்பாதிசெய்து அர்த்தமந்தத்தில் கூட்டல் கழித்தல் செய்ய அர்த்த சீக்கிரமாம்.

ஷை அர்த்தசீக்கிரத்தில் மந்தோச்சம்வாங்கி இரணதனமறிந்து புஜாகோடி செய்து வாக்கியங்கண்டுவந்த பலன் முழுவதையும் குச மத்தியத்தில் கூட்டல் கழித்தல் செய்ய பூர்ணமந்தமாம்.

மேலேகண்ட பூர்ணமந்தத்தில் சூரியமத்தியத்தைக் கழித்து இரணதனமறிந்து கர்க்ஙிஜா மகரஜாகண்டு புஜாகோடிசெய்து வாக்கியங்கண்டு வந்தபலன் முழுவதையும் மேல்பூரணமந்தத்தில் கூட்டல் கழித்தல் செய்ய குசசுக்தஸ்புடமாகும்.

## வாக்கியபலன்கள்.

——:o:——

| | மந்தசா. | | மகரசா. | | கடகசா. | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 40 | 40 | 90 | 89 | 434 | 434 | |
| 2 | 81 | 41 | 179 | 89 | 837 | 403 | |
| 3 | 124 | 43 | 267 | 88 | 1193 | 356 | |
| 4 | 167 | 43 | 356 | 89 | 1494 | 301 | |
| 5 | 211 | 44 | 443 | 87 | 1737 | 243 | |
| 6 | 255 | 44 | 532 | 89 | 1942 | 205 | |
| 7 | 300 | 45 | 618 | 86 | 2084 | 142 | |
| 8 | 344 | 44 | 705 | 87 | 2198 | 114 | |
| 9 | 388 | 44 | 791 | 86 | 2282 | 84 | |
| 10 | 430 | 42 | 875 | 84 | 2342 | 60 | |
| 11 | 472 | 42 | 960 | 85 | 2389 | 38 | |
| 12 | 513 | 41 | 1044 | 84 | 24[illegible] | 2[illegible] | இதுமுதல் கிரமம் வக்கிரம் என்பர். |
| 13 | 552 | 39 | 1126 | 82 | 2494 | | |
| 14 | 558 | 36 | 1209 | 83 | 2398 | 6 | |
| 15 | 622 | 34 | 1296 | 89 | 2382 | 16 | |
| 16 | 653 | 31 | 1368 | 78 | 2353 | 30 | |
| 17 | 682 | 29 | 1448 | 80 | 2322 | 39 | |
| 18 | 707 | 25 | 1525 | 77 | 2282 | 49 | |
| 19 | 729 | 22 | 1600 | 75 | 2237 | 45 | |
| 20 | 747 | 18 | 1674 | 74 | 2188 | 49 | |
| 21 | 761 | 14 | 1746 | 72 | 2134 | 54 | |
| 22 | 771 | 10 | 1816 | 70 | 2077 | 67 | |
| 23 | 778 | 7 | 1886 | 70 | 2014 | 63 | |
| 24 | 780 | 2 | 1952 | 66 | 1952 | 62 | |



இதுவரையிற் சொல்லி வந்ததைச் செய்து கீழே காட்டுகின்றேன்.

இந்த சௌமியவரு தைமீ 23உ ஸ்திரவாரம் இரவு 1மணி 20. நிமிஷத்திற்கு தஞ்சாவூர்ஜில்லா திருவையாற்றில் ஒருகுழந்தை ஜநநமானதாக எடுத்துக்கொள்ளுவோம். அதற்கு 42. சௌமியவருஷம்வரையிற் சென்ற பிரபவாதிதொகை 1789 கூட்ட சாலியவாகன சகாப்தம் 1831+3179 கூட்ட கலியாப்தம். இதனை 365ல் பெருக்கக்கூடியது.

| | நாள். | நாழி. | விநாடி. | தார்ப்பரை. |
|---|---|---|---|---|
| | 1828650 | | | |
| மறுபடி கலியாப்தத்தை 4ல் வகுக்கக்கூடியது | 1252 | 30 | | |
| புனரபிகலியாப்தத்தை 5ல் பெருக்கி 576-ல் வகுத்து நாழி விநாடி தர்ப்பரை வரையிற் கிடைத்தது. | 41 | 20 | 31 | 15 |
| மொத்தம் ... | 1829943 | 50 | 31 | 15 |

ஆக இந்த சௌமிய வருடம் 50 நாழிகை 31 விநாடி 15 தர்ப்பரைக்கு பிறந்தது. இது வாக்கிய பஞ்சாங்கத்தில் ஒத்திருப்பதைப் பார்க்கலாம். இனி, கிழமை சரியாயிருக்கின்றதாவென்று பார்க்க. 7ல் வகுத்துவந்த மிச்சத்தை வெள்ளிக்கிழமை முதலாக எண்ணிய மறுதினம் வருஷப்பிரவேசமாகும். இதன்படி 7-க்கு கொடுக்க கிடைத்தமிகுதி 3-க்கு ஆதிவாரத்தன்று மறுதினம்உதயாதி 50-31 க்கு ரவிபிரவேசம்.

இதற்குமேல் தைமீப் பிரவேசத்திற்கு மார்கழிமாத வாக்கியமான 275. 39. 30. விநாடியைக்கூட்டக் கிடைப்பது 1830219. 30. 1. 15. இதனையும் ஒப்பிடுகமேல், முதநாட்டெய்தி வரையிற் சேர்க்கக்கூடியது:..........1830241. 30. 1 15. அல்லது 1830242

இதனின்றும் கழிக்கவேண்டியது. 1683112

மிகுதி 147130

இதுதான் நவக்கோள் கண்டமென்பது.

இனி சூரியமத்தியஸ்புடம் செய்ய.

147130 தை, 31-ல் பெருக்கி 11323-க்கு கொடுத்துப்பெற்ற மீதம் 9184. இதனை இராசி பாகைகலைக்கு கொண்டுவர ராசி பாகை கலை 12, 30, 60ல் பெருக்கி வகுக்கு மெண்ணுன 11323க்குக் கொடுத்து

| | ராசி. | பாகை. | கலை. |
|---|---|---|---|
| | 9 | 21 | 59 |
| பின்னும் 147130தை 10026க்கு கொடுத்து கழிக்கவேண்டியதற்கு | ,, | ,, | 15 |
| (இது ஜனனத்திற்கு முதல்நாள்வரைமிகுதி இராசி | 9 | 21 | 44 |

இனி அன்றை நிமிஷம் வரையிற் கிடக்க.

திருவையாறு கும்பகோணத்திற்குமேற்கிலும் தஞ்சைக்குவடக்கிலுமிருப்பதால் சுவதேச அக்ஷாம்சம் 11 என்றே கொள்ளுவோமாயின் இதற்குரிய மேஷாதி இராசிமான நாடி விநாடிகள் முறையே மேஷமுதல், 273, 306, 329, 321, 305, 300, 318, 321, 289, 261, 254, மீனம் ஈறாகநிற்கும். 23உ இரவு 1-மணி 20-நிமிஷத்திற்கு புதிய ஸ்டாண்டார்டு டயத்திற்காக 9-நிமிஷம் நீக்க 1-மணி 11-நிமிஷத்திற்குக் கிடைத்தது நாழிகை 47. 57½ விநாடி, இதற்கு உதயாதி மகாலக்னத்தில் நிற்பது நாழிகை விநாடி 8 முதற் கூடியது 45, 30, துலாப்போக, விருச்சிகத்திற்கு செல்லு 2 நாழி 27½ நித்தியகதி 59 பாகை 8 கலையாக 47 நாழிகை 57½-க்கு கூடிய பாகை கலை 47 18. இதனை முன்பெற்றவைகளுடன் சேர்க்க கிடைத்தது. இராசி 9, 22, 31, 18,

இதுசூரிய மத்திமம். இதனின்றும் மந்தோச்சமான 2. 18. கழிக்கக் கண்டமீதம் 7, 4, 31-க்கு தனம். புஜா வாக்கியம் 9ம் கலை 46. வாக்கிய பலன் 72, அடுத்த 8ல் 46 கலையைப் பெருக்கி 225-க் கீந்து வந்த ஈவு கலை. இது 2 ஆக பலன் 74 அல்லது ௦ 1. 1 14. இதனை சூரியமத்தியத்தில் கூட்ட 9. 23, 45.

| | R | ௦ | 1 |
|---|---|---|---|
| ஆக சூரிய சுத்தஸ்புடம் இராசி | 9 | 23 | 45 |



முன்பக்கத்தில் சூரியசுத்தஸ்புடம் இதுவெனக் காட்டினோம். இனி சந்திரனுக்கு-நவக்கோள்கண்டமான 147130-ஐ 600-ல் பெருக்கி 16393-க்கு ஈந்து சேடத்தை R ௦ 1 12, 30, 60-ல் பெருக்கி வகுக்குமெண்ணுல் வகுத்துக் கண்டது இராசி R ௦ 1 1—7—13.

மறுபடி கண்ட சேஷவகுக்கு மெண்ணுன 2920-ல் 147130-ஐ வகுக்கவந்த கழிக்கவேண்டியதொகை 1 0—0—50

| | | | | |
|---|---|---|---|---|
| மிகுதி | 1 | 6 | 23 | |
| இதனுடன் நாள் ஒன்றுக்கு நித்தியகதி 13 பாகை 10 கலை 35-விகலையாக 47-நாழிகை 57½ விநாடிக்குக் கூடியது பாகை ... | R 10 | ௦ 56 | 1 28 | 11 o |
| | 6 | 19 | 17 | |
| துருவக்கூட்ட சந்திரமத்தியம். | | | | |
| ஆக இராசி ... | R 8 | ௦ 6 | 1 36 | |

இந்தச் சந்திரமத்தியத்தினின்றும் துங்கமத்தியத்தைக்கழிக்க:—

| | இராசி | பாகை | கலை |
|---|---|---|---|
| நவக்கோள்கண்டமான 147130-ஐ 3232-ல் வகுத்துவந்த மிச்சத்தை 12, 30, 60-ல் பெருக்கி வகுக்க வந்த ஈவு ... | 6 | 8 | 15 |
| மறுபடி நவக்கோள் கண்டத்தை கண்டசேஷ வகுக்கு மெண்ணுன 768-ல் வகுக்கவந்தது | 0 | 3 | 11 |
| போக | 6 | 5 | 4 |
| நித்தியகதி | 0 | 0 | 5 |
| துருவம் | 11 | 28 | 8 |
| துங்கமத்தியம் ஆக இராசி | 6. | 3. | 17 |

[இந்த துங்க மத்தியம் கூடுதல் 18-இராசியாக வந்தபடியால் எப்பொழுதும் 12-இராசிக்கு மேற்பட்டு வருமாயின் அவைகளைப் பன்னிரண்டில் கழித்துவிடவேண்டியது.]

சந்திர மத்தியமான இராசி 8. 6. 36 நின்றும்.
துங்க மத்தியமான இராசி 6. 3. 17 நீக்க நின்றது.

இராசி 2. 3. 19 ருணம்.

புஜா

இப்புஜாவுக்கு இராசி ஒன்றுக்கு 8 வாக்கியமாகக் கூடியது 16 வாக்கியம், போக பாக்கி நிற்கும் பாகை 3, கலை 19 ஐயும் கலையாக்கக்கூடியது 199-க்கும் வாக்கிய பலனிலிருக்கும் இரண்டாவது கலத்திற்குக் கீழுள்ள மிச்சத்தாற் பெருக்கி 225-க்கு ஈயவரும் கலையை முதல் ஸ்தானத்துடனிருக்கும் கலையுடன் கூட்ட வாக்கிய பலனையால் இப்பொழுது 16-வது வாக்கியத்திற்குக்கொடுக்கப்பட்டிருப்பது 261-9-க்கு மிச்சமான 199 ஐ 9ல் பெருக்கி 225க்குக் கொடுத்துக்கண்டது 8 ஆகையால் ஆக கூடிய கலை 269-க்குப் பாகை 4 கலை 29 ஆகிறது.

இதனை சந்திரமத்தியத்தில் ருணமாகையால் கழிக்கக் கிடைத்தது இராசி
R ō l ō l R ō l
8 6 36-4 29-8 2 7

இதுதான் சந்திர சுத்தஸ்புடம். அதாவது ஜனனகாலத்தில் சந்திரன் 9-வது இராசியில் 2 பாகை 7 கலையிலிருந்திருக்கின்றார். அதைக்கொண்டு மூலநக்ஷத்திரம் உதயமாகி முதல் பாதத்தில் 1 பாகை 13 கலைபாக்கி நிற்கிறதென்றேற்படும்.

## செவ்வாய் சுத்தஸ்புடம் செய்ய.

நவக்கோள் கண்டமான 147130 ஐ 687ல் வகுத்து மிச்சத்தை 12, 30, 60ல் பெருக்கி வகுத்து வந்தது இராசி 1-28-41 (R ō l) மறுபடி கண்டசேஷமான 1866-ல் வகுத்துவந்ததைக்கூட்ட 0-1-19
ஆக இராசி 2—0-00
நித்தியகதி 47 57½ விநாடிக்குக் கூடியது 0—0-25
அருணம் இராசி 11-13-34
ஆக செவ்வாய் மத்தி இராசி 1-13-59



குஜமத்தியமமான இராசி 1-13-59 நின்றும்
மந்தோச்சம் இராசி 3-28--0 நீக்க
மிகுதி 9 15 59 இது தனம்

கோடியாகையால் 3 இராசியிலிருந்து கழிக்க கிடைப்பது இராசி 2-14-1-க்கு வாக்கியம் காணவேண்டிய எண் இராசி இரண்டுக்கும் 16-ம் 14 பாகை 1 கலைக்கு வாக்கியம் ஒன்றுக்கு 3¾ பாகையாக 3-க்கு 11 பாகை 15 கலைபோக பாக்கி 2-46 அல்லது 106 கலைகள். இதின் பலன் 472- 42. 42-ல் 106ஐ பெருக்கி 225க்குகொடுக்கக்கிடைத்ததிற்பாதி பாகை 4-6 (ō l) இதனை குஜமத்தியத்தில் கூட்ட இராசி 1-18-5 இதற்கு அர்த்தமந்த மென்பர்.

இரண்டாவது சம்ஸ்காரம்:— அர்த்தமந்தமான 1-18-5-ல் சூரிய மத்தியத்தை அதாவது 9 இராசி 22-31 கலையைக் கழிக்கக் கிடைத்தது 3-25-34 ருணம். கோடி.

கற்கிஜா

வாக்கியம் காண கோடியாகையால் 3-ல் கழிக்க கிடைத்த இராசி 2-4-26-க்கு 17 வாக்கியம்போக 41 கலை மிச்சம் 17-க்கு கற்கிஜா 2322 30-க்கு கூடுதல் 2328-க்கு பாதி—19 பாகை 24 கலையை அர்த்தமந்தமான 1 - 18 - 5-ல் கழிக்கப்பெற்றது 0-28-41 கலை அர்த்த சீக்கிரம்—

மூன்றாவது சம்ஸ்காரம்:— மேலேவந்த அர்த்த சீக்கிரமான 0-28-41-ல் மந்தோச்சம் இராசி 3-28 போக மீதம் 9-0-41-க்கு தனம், கோடிக்கு 23 184 வாக்கியம் 778—2-க்கு 13 பாகையை குஜமத்தியத்தில் கூட்ட
R ō l ō R ō l
1 13 59 + 13 பாகை ஆக 1 26 59
இதனை பூர்ணமந்தமென்பர்.

4-வது சம்ஸ்காரம்:— பூர்ணமந்தத்தில் சூரியமத்தியத்தைக் கழிக்க
R ō l R ō l R ō l
1 26 59— 9 22 31 4 4 28-க்கு ருணம், கோடி, கடகஜாவுக்கு கூடியது பலன் 2411 கலை அல்லது இராசி
R ō l
1 10 11.

இதனை பூர்ணமந்தத்தில் கழிக்கக்கிடைத்தது 0 16, 48 கலை. இது தான் குஜசுத்தஸ்புடம்.

## புதஸ்புடம்.

—:(o):—

1. சூரியமத்தியத்தில் புதமத்தியத்தைக் கழித்து ருணதனமறிந்து கர்க்கிஜா மகரஜாகண்டு புஜாகோடிசெய்து வாக்கிய பலனைப் பாதிசெய்து மேல்வந்த சூரியமத்தியத்தில் கூட்டல் கழித்தல்செய்ய அர்த்த சீக்கிரமாம்.

2. மேலே வந்த அர்த்த சீக்கிரத்தில் மந்தோச்சம் வாங்கி ருணதனமறிந்து, புஜாகோடி செய்து வாக்கியங்கண்டு வந்த பலனை முழுவதையும் சூரியமத்தியத்தில் கூட்டல் கழித்தல் செய்ய பூர்ண மந்தமாம்.

3. மேல்வந்த பூர்ணமந்தத்தில் புதமத்தியத்தைக் கழித்து ருணதனமறிந்து புஜாகோடி செய்வதையும் கர்கிஜாமகரஜாகண்டு வந்தபலன் முழுவதையும் பூர்ணமந்தத்தில் கூட்டல் கழித்தல் செய்ய புதசுத்தஸ்புடமாகும்.

இதன்படி மேல்வந்த நவக்கோள்கண்டம் 147130 ஐ வைத்து

| | R | ° | ' |
|---|---|---|---|
| செய்த புதமத்தியஸ்புடம் இராசி | 5 | 11 | 44 |
| இதற்கு முதலாவது சம்ஸ்காரப்படி அர்த்த சீக்கிரம் | 9 | 12 | 23 |
| இரண்டாவது சம்ஸ்காரப்படி பூர்ணமந்தம் | 9 | 19 | 3 |
| மூன்றாவது சம்ஸ்காரத்தால் புதசுத்தஸ்புடம் | 8 | 28 | 25 |

(இன்னும் வரும்.)

சோமசுந்தரதேசிகன்.

இலக்கணவிளக்க பரம்பரை.

## புத்தகக் குறிப்பு.

ஸ்ரீ மகாபாரத மொழிபெயர்ப்பு:—ஸ்ரீ வேதவியாஸபகவான் அருளிய வடமொழி மகாபாரதம், கும்பகோணம், நேடிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந்-இராமாநுஜாசாரியரவர்கள் அரிய முயற்சியால் மொழிபெயர்க்கப்பெற்று சஞ்சிகைரூபமாக வெளிவருதலை முன்னரும் குறிப்பிட்டிருக்கிறோம். இம்மொழிபெயர்ப்பில், ஆதிபருவம் சபாபருவம் முற்றுப்பெற, இப்போது சாந்திபருவந் தொடங்கப்பட்டிருக்கிறது. சபாபருவத்துக்குப்பின் சாந்திபர்வம் தொடங்கும்படி நேர்ந்த காரணத்தைப் பதிப்பாசிரியரே குறித்திருக்கின்றனர். இத்தகைய பெருமுயற்சி இனிது நிறைவேறுமாறு, தமிழ்நாட்டார் ஊக்கியுதவல் அவர்கடமையாமென்று நாம் மறுபடியும் வற்புறுத்தல் மிகையாகாது. இப்போது வெளிவரும் பகுதிகளெல்லாம், நூற்பெருமைக்கேற்றவண்ணம் சிறப்பாக அச்சலங்காரமும் பெற்று விளங்குகின்றன.

திருக்குறள் வசனம்:—தெய்வப்புலமைத் திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறளில், அறத்துப்பால் பொருட்பால்கட்கு, மூலத்திற்கு நேரான பொழிப்புரையாக்கி, எளியநடையில் இவ்வசனம் அமைக்கப்பட்டது. இவ்வசனம், பண்டிதர்க்கு வேண்டாததாயினும், ஏனையோர்க்குத் திருக்குறட்கருத்துக்களை ஒருபடியாக விளக்கத்தக்கதேயாம். இஃதெழுதியவர், திருமுல்லைவாயில் ஸப்-போஸ்ட்மாஸ்டர் மகா-௱-௱-ஸ்ரீ பு. து. இரத்தினம்பிள்ளையவர்கள்

இதன் விலை ரூ. 1—0—0.

பத்திராசிரியர்.

சிவமயம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முன்றொடர்ச்சி.)

(௩௪.) பிரமனுடைய கபாலத்தைத் தரித்த இடத்திருக்கையாலணைத்த விளங்குகின்ற ஒளியையுடைய மூவிலைச் சூலமானது அழகிய திருத்தோளின் மிசையே பொலிய.

(௩௬.) மனைக்குள்ளாரோ - வீட்டிலுள்ளாரோ.

(௩௮.) விட்டால் நீங்குவார்போலிருந்தாரென்று அஞ்சியிரைந்து இல்லறக்கடனையுடைய.

(௩௯.) வம்பென - புதிதாக.

(௪௦.) உத்தராபதி - வடதேசம்.

(௪௫.) விபூதியையணிந்த சாதனத்தவர்முன் வணங்கப்போதேனும்.

(௪௮.) அன்புகூருந் தொண்டரே ஆறுமாசங்கழிந்தால் பசுவை வீழ்த்திட்டுண்பது, அதற்குரிய நாளும் இன்று.

(௪௯.) முன்னரே பசுநிரையையு முடையேன்.

(௫௦.) உண்பதஞ்சுபிராயத்துள் உறப்பின் மறுவிலதாயின்; இன்னும் புண்பட்டநோவில் வேலெறிந்தாற் போலும் புகல்வதொன்றுள தென்பார்.

(௫௪.) தாய்பிள்ளையைப் பிடிக்கமகிழ்ந்து பிதா அரிந்து சமைக்கப்பெறில், என்றார். (தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

---

26 JUN 1910 ... MADRAS.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௮.] சாதாரண-ஹூ சித்திரைமீ. [பகுதி-௬.

## பொருள் கோடல்.

நல்லிசைப்புலமை வாய்ந்த கவிகளாற் செய்யப்பட்ட காப்பியங்களிலுள்ள கவிகளுக்குப் பொருள்கொள்ளுங்கால், அவற்றை நாம் பொதுவாக நோக்காது மிகநுண்ணிதாக ஆழ்ந்துநோக்குதல்வேண்டும். அவ்வாறு நோக்கிற்றான் அவற்றின்பொருள் நமக்கு இனிது புலப்படும். அங்ஙனம் நோக்குமிடத்தும் அவற்றின்பொருள் இனிது புலப்படாதாயின்; அக்காப்பியங்களுள் அவற்றின் பொருளை விளக்குதற்கேற்ற வேறுசெய்யுள்கள் கூறப்பட்டுள்ளனவோ என ஆராய்ந்துபார்த்தல் வேண்டும். கந்தபுராணம் இராமாவதாரம் முதலிய பெருங்காப்பியங்களிலே இவ்வாறுபொருள் கோடற்கிலைந்தனவாய் எத்தனையோ பல செய்யுள்களுள்ளன. அவற்றுள் ஒன்றை இங்கே எடுத்து விளக்கிக்காட்டுதும்:—

"புடையகலொருத்தல் புல்லப் போவதோர் பிடியின் மேவ
மடவரல் வெருவ லோடு மற்றது கண்டோர் வள்ள
லிடையக தேரு மாவும் யானையும் படையுங் கொண்டீர்
கடகரி யொன்றற் கஞ்சுங் காரணம் யாதோ வென்றான்."

என்பது கந்தபுராணத்திலுள்ள ஒரு செய்யுள். இதில், "இடையகதேருமாவும் யானையும்படையுங் கொண்டீர்." என்பது ஆராயத்தக்கது. 'இடையகல் தேரும் மாவும் யானையும் படையும்' என்றது சதுரங்கத்தை. இவற்றுள் படையென்றதற்கு உரைகாரர் வேற்படை என்று பொருள் கூறினர், இன்னும் உரை சொல்பவர்களும் அங்ஙு

னமே சொல்லுகின்றார்கள். யானைமுதலியவற்றிற்கினமன்றாதலின் அது பொருந்தாது. என்னுங்கால் சினைப்பொருளையே எண்ணுதல் வேண்டும். அது;

"செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்
கப்பொரு ளாகு முறழ்துணைப் பொருளே."

என்னும் (தொல் - சொல். கரு-ம்.) சூத்திரத்து விருத்தியுரையில் "தன்னினமுடித்த லென்பதனால் பொன்னுந் துகிரு முத்துமணியும் என இனமாயபொருளே எண்ணப்படும் என்பதுகொள்க." எனச் சேனாவரையர் கூறுதலானே அறியப்படும். யானைமுதலியவற்றிற்குக் காலாள் இனமாதலின் படை என்பதற்குக்காலாள் என்பதேபொருத்தமாகும். அங்ஙனமாயின் காலாட்கு உவமேயம் யாதோ எனின்? அது மகளிர் உள்ளமாம். அஃது அப்புராணத்தில் அக்கினிமுகாசுரன் வதைப்படலத்திலே காலாட்கு உவமை கூறுமிடத்து மகளிருள்ளத்தை உவமையாக்கி விபரீத உவமையாக "வஞ்சநீடியருளற்று மாயமே - யெஞ்சலின் றியிருள்கெழுவண்ணமாய் - விஞ்சுதம்மல்குல் விற்றுணுமங்கையர் - நெஞ்சமொத்தனர் நீள்படைவீரரே" எனக் கூறியதனாலறியப்படும். இன்னும் கண்களுக்குக் குதிரைகளை உவமையாக்கி அவ்வுவமையாக "மண்ணிற்பாய்வனமாதிரஞ்சூழ்வன - விண்ணிற்றாவுவ வீதியிற்செல்வன - வெண்ணிற்பல்பொரு ளிச்சைகொள்வேசியர் - கண்ணுங்கொப்பன கந்துகராசியே." எனவும் கூறுதல் காண்க. ஏனைய வெளிப்படை, இஃதன்றியும் எத்தனையோ பல செய்யுள்கள் இவ்வாறு பொருள்கொள்ளக் கிடக்கின்றன. அவற்றைச் சமயநேர்ந்துழி விளக்கிக்காட்டுதும்.

இங்ஙனமே இராமாவதாரத்துப் பலசெய்யுள்கள் உரைக்கக் கிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றைச் செந்தமிழ் அ-ம் தொகுதி உ-ம் பகுதியுள் விளக்கியுள்ளாம். ஆண்டுநோக்கி யுணர்க.

இன்னும் இரகுவம்மிசத்தில் நகரப்படலத்திலுள்ள

"மறநண்ணின நடுநண்ணின வுயிர்வாயிலி னுலீர்
திறநண்ணின கீழ்மேலுல கெங்குந் தெரியகமே
யுறநண்ணின புறநண்ணில வுயர்மாமதி லிதனீள்
புறநண்ணின வகநண்ணில பிறிதென் புகல்வதுவே."



என்னும் உஉ-ம் செய்யுள், ஷை துறைகூறுபடலத்திலுள்ள உ0-ம் செய்யுள்நோக்கிப் பொருள் கொள்ளத்தக்கது.

இனி, இவற்றானும் பொருள்கோடல் கூடாதயின், பிறகாப்பியங்களிலே இவற்றின் பொருளமைந்தனவாகக் கூறப்பட்ட செய்யுள்கள் உளவோ என நோக்குதல்வேண்டும். அநேக செய்யுள்களுக்கு அவ்வாறு பொருள்கொள்ளப்பட்டிருப்பதைப் பல உரைநூல்களிலே கண்டிருக்கின்றேம். நாமும் அவ்வாறு பலசெய்யுள்களுக்குக் கொண்டிருக்கின்றேம். இரகுவம்மிசத்திலே நாட்டுப்படலத்துள்ள "நீக்குமானமைழக்குமாயர்" என்னும் (சுக-ம்) செய்யுளும் அவ்வாறு சிலப்பதிகாரம் நோக்கி நம்மாற் பொருள்கொள்ளப்பட்டது, அதனைச் செந்தமிழ் அ-ம் தொகுதி கூ-ம் பகுதியுட்காண்க. இன்னும் இரகுவம்மிசத்திலே நகரப்படலத்திலுள்ள,

பகாம ரர்க்கிறை முனிய வெருக்கொடு பல்கேள்சூழ்
சகரர்தொ டத்தியி னிடைபுதை வெற்பது தளவானைச்
சிகரவி னப்படை கொடுசெரு வைப்பயில் செய்மாபோன்
மகரவி னத்தொடு சமரம் விளைப்பன வன்பினே.

என்னும் கஅ-ம் செய்யுளும் சிந்தாமணியிலே கூரு-ம் செய்யுள் நோக்கிப் பொருள் கொள்ளத்தக்கன. எங்ஙனமெனின்? அதில் "கோட்சுறவினத்தொடு முதலைக்குப்பைக—ளாட்பெறுதிரிகர" என்பதனால், இதில் சமரம் விளைத்தல் மகரவினத்தோடன்று; கரையில் வரும் ஆளோடு என்பது நன்கு பெறப்படுதலின், மகரவினத்தொடு சமரம் விளைப்பன எனக்கொள்ளின், அஃது உவமையோடும் மாறுபடும்.

இன்னும், இவ்வாற்றானும் பொருள்கூடல் கூடாதாயின், அவற்றின் முதனூலிலாதல் அப்பொருள் கூறப்பட்டுளதோ என நோக்குதல் வேண்டும். அவ்வாறு நோக்கியும் எத்தனையோ பல செய்யுள்கள் நன்கு பொருள்கொள்ளக்கிடக்கின்றன. இரகுவம்மிசத்திலே குறை கூறுபடலத்துள்ள,

என்றினி, துரைக்கும், வேலை யெறிபுனற் காசன் யாக
நின்றுள சுரபி தேவ நிலையினு லுணர்ந்து யாச
வன்றுயர்ப் பகைஞன் சிந்தை செய்தலின் வந்திட்டாங்குத்
துன்றுசெஞ் சுடர்சேண் சுற்றச் சூழுறைத் தோன்றிற் றன்றே.

என்னும் ௬௨-ம் செய்யுளின் பொருள் அதன் முதனூலாகிய வடமொழி இரகுவம்மிசத்திலுள்ள,

ஜதிவாஹிந ஸேவாஸ்ரு ஷோத ஸ்நாஸஸ்திவாயபாரு ।
ஸந்திஷ்ராஸந்கிநீநாமெ பஸ்நாவஸ்ரு ஷெதவநாஸ ॥

என்னுஞ் சுலோகத்தானே நன்குணரக்கிடக்கின்றது. எங்ஙனமெனின்? அதன்கண், நந்திநீநாமெ பஸ்நாவஸ்ரு ஷெதவநாஸ॥ (நந்தினி என்னும் பெயரையுடைய பசு வனத்தினின்றும் திரும்பியது) எனக் கூறுதலின் இதன் கண்ணும் (வந்திட்டாங்கு) என்பதில் ஆங்கு என்பதை உவமவாசகமாக்கி, (தேனு) வந்தாற்போல (நந்தினி காட்டினின்றும் வந்து) தோன்றிற்று எனப் பொருள்கொள்ளக்கிடந்தலின். இங்ஙனமே அந்நூலிலுள்ள "நேருமிகனுற்றுழி" என்னும் (அ-கச.) செய்யுளும் முதனூற் கருத்துக்கிசைய, சுன்னாகம், வித்துவசிரோமணி, ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்புலவரவர்களால் இரகுவம்மிசக் கருப்பொருளின்கண் எழுதப்பட்டுளது. அதனை ஆண்டுநோக்கியுணர்க.

காப்பியங்களுக்கெல்லாம் இவ்வாறு பொருள் கொள்ளுதலே மிக இனிதும் பொருத்தமுமாகும்.

சி. கணேசையர்.

---

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

## ௫-வது சதுர்த்தாரிகாலம்பகம் ௨-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

—:o:—

அதற்கவள் இது முடியாது ஏனெனில், அந்தத் தடாகமோ குரூரர்களான இராக்கதர்களால் காக்கப்பட்டிருக்கின்றது என்று பலமுறையவனைத்தடுத்தும் அசோகதத்தனதற்கிணங்காது எப்படியிருந்தாலும் சரி, என்னை அவ்விடத்துக் கழைத்துச்செல்லவேண்டுமென்று நிர்ப்பந்தித்தனன். பின்பு அவள் அவனது நிர்ப்பந்தத்தினாலவனையங்கழைத்துச் செல்லலும் உன்னதமாயிருக்கின்ற மலையின் பக்கத்தை அடுத்திருக்கின்றதும் மிக அழகியதும் தடாகங்களிற் சிறந்ததுமான அதனைச் சேய்மையிற் கண்டனன்.

கண்டதும் எப்பொழுதும் மேல்நோக்கிய வண்ணமாகயிருத்தலால் சூரியகிரணங்களைக் கவர்ந்து அத்தன்மையையடைந்திருக்கின்றனபோற் காணப்படுகின்றனவும், இடைவெளியின்றி உத்தண்டமாய்ப்பிரகாசிக்கின்றவைகளுமான பொற்றாமரை மலர்களால் நிறைந்திருக்கின்ற அத்தடாகத்தையடைந்து அவனதிலுள்ள தாமரைமலர்களைப்பறிக்க, அதற்குள் அதனைக்காக்கின்ற குரூரர்களான ராக்ஷசர்கள் வந்து அவனைத்தடுத்தனர். அப்போது ஆயுதத்துடன் வந்திருக்கின்ற அசோகதத்தன் அவ்விராக்கதர்களோடு யுத்தஞ்செய்து அவர்களிற்பலரைக் கொன்றனன். உடனே அவர்களிற்சிலர் பயந்தோடிச் சென்று தமதரசனாகிய கபாலஸ்போடனென்பவனிடமதனைத் தெரிவித்தனர். அதையறிந்ததும் ராக்ஷசர்கட்கதிபதியான கபாலஸ்போடன் கோபமுற்றவனாய் ஆயுதத்தையெடுத்துக்கொண்டு தானங்கு வந்து தாமரைமலர்களைப் பறித்தெறிகின்ற அசோகதத்தனைக் கண்டனன்.

கண்ட அப்பொழுதே ஆச்சர்யத்தையுடையவனாக ஓஹோ! நமதுப்ராதாவான அந்த அசோகதத்தன் இவன் எப்படியிங்குவந்து சேர்ந்தானென்றெண்ணினன். பின்பு தன் கையிலிருந்த ஆயுதத்தைக் கீழேபோட்டுவிட்டு ஆனந்த பாஷ்பத்தால் நனைக்கப்பட்ட கண்களையுடையவனாக விரைவாக ஓடிச்சென்று அசோகதத்தன் கால்களில் வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து அவனைப்பார்த்து ஐயாயான் விஜயதத்தனென்னும் பெயரையுடைய உன்பின் பிறந்த சகோதரன்; நாமிருவரும் பிராமணர்களிற் சிறந்த கோவிந்தஸ்வாமி யென்பவருடைய புத்திரர்கள்; யானிதுவரை நெடுநாளாக விதிவசத்தா லித்தகைய பிராக்கதனாயினேன். சிதையிலுள்ள கபாலத்தையுடைத்துப் பிளந்ததனால் கபாலஸ்போடனென்னும் பெயரையுமுடையவனாயினேன். உன்னைக்கண்டதனாலிப்போது அத்தகையவெனது பிராமணத் தன்மையானது என்னிடத்திற்கு வந்தது. மோகத்தினால் அறிவை மறைத்திருக்கும் எனது ராக்ஷஸத்தன்மையானது நீங்கிவிட்டது என்றனன். இவ்விதம் சொல்லுகின்ற விஜயதத்தனை அவ்வசோகதத்தன் ஆவலுடன் கட்டித்தழுவிக்கொண்டு ஆனந்தபாஷ்ப ப்ரவாஹத்தினால் ராக்ஷஸத்தன்மையா லிகழப்பட்டுள்ள அவனதவயவங்களைக் கழுவுகின்றவன்போலாயினன்.

இதற்குள் ஆகாசத்தினின்றும் ப்ரஜ்ஞப்தி கௌசிகனென்று பிரசித்திபெற்ற வித்யாதர குருவானவனிறங்கி, அவ்விடம் வந்து அந்த வித்யாதர குருவானவர் அவ்விருவர்களையு நோக்கிச் சிறுவர்காள், நீங்களெல்லோரும் முற்பிறப்பில் வித்யாதரர்களாக யிருந்தீர்கள். ஒருசாபத்தினா லிந்நிலைமையையடைந்தீர்கள். இப்பொழுதோ உங்களனைவர்க்கு மந்தச் சாபம் நீங்கிவிட்டது. ஆதலால் வித்யாதரர்கள் யாவர்க்கும் பொதுமையான உங்கள் வித்யையை யிதோ அனுக்கிரஹிக்கின்றேன் கைப்பற்றுங்கள்; கைப்பற்றிக்கொண்டு நீங்களிருவரு முங்களைச் சார்ந்தவர்களோடு உங்களிருப்பிடம்போய்ச்சேருங்கள், என்றுகூறி யவர்கட்கு வித்யையை யுபதேசித்துவிட்டு அந்த ப்ரஜ்ஞப்திகௌசிகனென்ற வித்யாதர குருவானவர் ஆகாயத்திற் கிளம்பிச்சென்றனர்.

உடனே அசோகதத்தன் விஜயதத்தனென்ற யிருவரும் வித்யாதரர்களாகபவித்துச் சிறந்த அறிவுடன் கூடியவர்களாகத் தங்கட்கு வேண்டிய கனகாம்புஜங்களையுங் கிரகித்துக்கொண்டு அவ்விடத்தினிருந்து ஆகாசமார்க்கத்தினால் ஹிமாலத்தின் சிகரத்தையடைந்தனர். அவ்விடத்தில் அசோகதத்தன் தனது மனைவியான ராக்ஷசராஜன் புதல்வியிடம் செல்லலுமவளும் அப்பொழுதே சாபத்தினின்றும் விடுபட்டு வித்யாதர ஸ்திரீயாயினள். உடனே நல்லழகு வாய்ந்தகண்களையுடைய அம்மங்கையோடு அசோகதத்தன் விஜயதத்தனென்ற இருவரும் தங்கள் வித்யாப்ரபாவத்தினால் ஆகாசத்திற் செல்கின்றவர்களாகி க்ஷணநேரத்தில் காசிநகரத்தையடைந்தனர்.

அவ்விடம் சேர்ந்ததும், இவர்களது பிரிவென்னும் அனலால் தாபமுற்றிருந்த தாய்தந்தையரிருவரையும் தங்கள் காட்சியாகிய நீரைவருஷிக்கின்றவர்களாய் ஆற்றுவித்தனர். அன்றியும், மற்றொரு சரீரத்தைப் பெறுமலே ஆச்சர்யமான ஜன்மாந்தரத்தை யடைந்திருக்கின்ற அவ்விருவரும் தமது மாதாபிதா யிவ்விருவர்கட்கேயன்றி யுலகிலுள்ள அனைவர்க்கும் சந்தோஷத்தை யுண்டாக்குதற் கிடமாயிருந்தனர். அப்பொழுது விஜயதத்தன் தன்னை நெடுநேரம் ஆவலுடனிருகத் தழுவிக்கட்டிக்கொண்டவரான தன் பிதாவினுடைய மார்பகத்தைப் பூர்த்திசெய்ததுபோலவே அவருடைய *மனோரதத்தையும் பூர்த்திசெய்தனன்.

பின்பு அசோகதத்தனது மாமனான ப்ரதாபமுகுடனென்னுமரசன் அசோகதத்தன் முதலானோர் வந்திருக்கின்ற சமாசாரத்தையறிந்து சந்தோஷத்தினா லவ்விடத்திற்கே வந்து அசோகதத்தனையுபசரிக்க அவனுந் தன்வரவைக்கேட்டுச் சந்தோஷமுற்றிருக்கின்ற பிரியநாயகியான இராஜகுமாரிவசிக்கு மரமனைக்கு யாவருமுத்சவங் கொண்டாடும்படி தன்னினத்தவரோடு சென்று அரசனிடம் தான் கொணர்ந்த கனகாம்புஜங்கள் பலவற்றையும் கொடுக்க, அரசனுந் தனதெண்ணத்திற்கதிகமாய்க் கிடைத்ததைப்பற்றி மகிழ்ச்சியடைந்தனன்.

பின்பு யாவருமிவ்வாறிருக்கும்போது அந்த இளையகுமாரனை விஜயதத்தனை நோக்கி அவன் பிதா கோவிந்தஸ்வாமி யென்பவர்

* மனோரதம் - எண்ணம்.

ஆச்சர்யத்தையும் சந்தோஷத்தையுமுடையவராகி குழந்தாய், அன்
றிரவினில் ஸ்மசானத்தில் ராக்ஷசத் தன்மையையடைந்தபின்பு நடந்த
வுனது விருத்தாந்தத்தைச் சொல்லென்றனர். அதற்கு விஜயதத்
தன் தன் பிதாவைக் குறித்து ஐயனே! யான் ஆலோசியாது சிதை
யிலெரிந்துகொண்டிருந்த கபாலத்தினை யடித்துப்பிளந்தவுடன் அக்
கபாலத்தினின்றும் வெளியேறிய மாம்சமானது விதிவசத்தா லென்
வாயில் வந்து வீழவும், உடனே யான் ராக்ஷசனாகி மாயையினால்
மறைக்கப்பட்டவனாக உம்மால் காணப்பட்டேன்; பின்பு வேறு சில
ராக்ஷசர்கள் என்னைக் கபாலஸ்போடனென்ற பெயரிட்டழைக்க
அவர் மத்தியில் யானுஞ்சேர்ந்துவிட்டேன். அப்பொழுது அவர்க
ளென்னைத் தமது எஜமானனை ராக்ஷசாதிபதியினது பக்கத்தில்
கொண்டுசேர்க்க அந்த ராக்ஷசராஜன் என்னைப்பார்த்தது மென்னி
டத்தில் மிகவும் பிரீதியுற்றவனாக என்னை அவ்விராக்ஷதர்களனைவருக்
கும் சேனாதிபதியாய் நியமித்தனன்.

இவ்வாறு சிலகாலங் கழிந்தபின் ஒருநாள் அந்த ராக்ஷசராஜன்
தன் மதத்தினால் கந்தர்வர்களோடு யுத்தத்திற்குச் சென்றனன்.
அங்கு நெடுநேரம் யுத்தஞ்செய்தும் வெற்றியடையாது சத்துருக்க
ளான கந்தருவர்களாற் கொல்லப்பட்டனன். அப்போதே அவனு
டைய வேலைக்காரரனைவரும் எனதுத்தரவின்படி நடப்பதாயொப்புக்
கொண்டமையால் யான் அவர்கள் நகரத்திலிருந்துகொண்டே ராக்ஷ
சர்கள் ராச்சியத்தை யாண்டுவந்தேன்.

அவ்விடத்தில் நினைப்பின்றிப் பொற்றாமரைமலரின் நிமித்த
மாய் வந்தவரான எனது சகோதர னசோகதத்தனைக் கண்டதும்
என்னிலைமை மாறிவிட்டது. பின்பு நாங்கள் சாபத்தினின்றும்
விடுபட்டு வித்யாதரர்களான எங்கட்குரிய வித்தைகளையடைந்த விவ
ரமெல்லா மிங்கிருக்கின்ற மேன்மைதங்கிய அசோகதத்தன் தெரி
விப்பாரென்று விஜயதத்தன் கூறியவுடன் அசோகதத்தனவர்களைப்
பார்த்து ஹே தாய்தந்தையர்களே! நாங்களிருவரும் முற்காலத்தில்
வித்தியாதரர்களாயிருந்தோம். அப்போதொருநாள் ஆகாசமார்க்க
மாய் நாங்களிருவரும் காலவ மகரிஷியினது ஆச்சிரமத்திற் செல்
லுங்கால் கங்காநதியில் ஸ்நானஞ் செய்துகொண்டிருந்த சில முனி

கன்னிகைகளைக்கண்டோம்; அவர்களுமெங்கள்மீது காதல்கொள்ள நாங்களும் விரைவினிலவர்கள்மீது இரகசியமாய்க் காதல்கொண்டோம்.

இதனை அக்கன்னிகைகள் பிதாவான முனிவர்கள் ஞானதிருஷ்டியாலறிந்து கோபத்தாலெங்களைநோக்கி, பாபகிருத்தியத்தையுடைய நீங்களிருவரும் மனுஷ்யயோநியில் ஜனிப்பீர்களாக. அதிலும் நீங்களிருவரும் ஒருவரைவிட்டொருவர் விசித்திரமாய்ப் பிரியும்படியும் நேரிடும். பின்பு மனுஷ்யர்களாற் செல்லுதற்கரிய நெடுந்தூரமான தேசத்தில் ஒருவனை மற்றொருவனெப்போது சந்தித்து நல்லறிவையடைவானோ, அப்போது வித்யாதர குருவான ப்ரஜ்ஞப்திகௌசிகன்மூலமாயுங்கட்குரிய வித்தைகளைப்பெற்று சாபத்தினின்றும் விடுபட்டு மறுபடியும் வித்யாதரர்களாகி யுங்கள் பந்துக்களோடு சேர்வீர்களென்று இவ்விதம் முனிவர்களாற் சபிக்கப்பட்டவர்களாக நாங்களிருவரு மிவ்வுலகில் ஜனித்தோம். இவ்விடத்திலுங்களைவிட்டுப் பிரியும்படிநேர்ந்தமை யாவும் தங்கட்குத் தெரிந்தவிஷயமே. இப்பொழுது யான் தாமரைமலரின் நிமித்தமாய் எனது மாமியாரான ராக்ஷஸஸ்திரீயினது சித்திப்ரபாவத்தால் ராக்ஷஸராஜனுடைய நகரத்தையடைந்து என் தம்பி விஜயதத்தனையுங் காணப்பெற்றேன்.

அவ்விடத்திலேயே ப்ரஜ்ஞப்திகௌசிகரென்ற வித்யாதர குருவிடத்தினின்றும் வித்தைகளையுமடைந்து உடனே நாங்கள் வித்யாதரர்களாகி விரைவில் இங்குவந்தோம். என்றுசொல்லி விசித்திர சரித்திரமுடைய அவ்வசோகதத்தன் உடனே சாபமென்னு மிருளினீக்கத்தால் சந்தோஷமடைந்தவனாக அப்போதே தனது வித்யாவிசேஷங்களால் தன் தாய்தந்தையரையும் பிரியமுள்ள மனைவியான ராஜகுமாரியையும் சீக்கிரத்தில் நல்லறிவுடன்கூடிய வித்யாதரர்களாகும்படி செய்தனன்.

பின்பு அவ்வசோகதத்தன் அரசனையும் சந்தோஷிக்கச்செய்து விடைபெற்றுக்கொண்டு தாய்தந்தையர்களோடும் தன்னிரண்டுமனைவியர்களுடனும் உயரக்கிளம்பித் தனக்குரிய ப்ரயோஜனத்தைப்பெற்றவனாய் விரைவில் ஆகாசமார்க்கத்தால் தங்கள் சக்ரவர்த்தியான

வித்யாதர ராஜனிருக்குமிடத்தை யடைந்து அங்கு அவ்வரசனைக் கண்டுவணங்கி அவனுத்தரவைப்பெற்று அவனால் தான் அசோகவேகனென்ற பெயரைப்பெற்றதுடன் தன் தம்பியாகிய விஜயதத்தனும் அவ்வரசனால் விஜயவேகனென்ற பெயரையுமடைய அவ்விருவரும் யௌவன வயதுள்ள வித்யாதரர்களாய் தன்னினத்தவருடன் தனது வாசஸ்தானமாகிய கோவிந்தகூடமென்னும் பெயரையுடைய பர்வதத்தினையடைந்தனர்.

பின்பு காசீநகரத்திற் கதிபதியான ப்ரதாபமுகுடனென்ற அரசனும் ஆச்சரியத்தையுடையவனாகத் தனது தேவாலயத்தின்மீதுள்ள மற்றொரு கலசத்திலும் பொன்மலரைக் கலங்கரித்து மற்றுமுள்ள பொற்கமல மலர்களால் முக்கண்ணனை அர்ச்சித்து அசோகதத்தனைச் சார்ந்த பெருமையால் மகிழ்ச்சியுற்றவனாகத் தன் குலத்தையும் பயன்பெற்றதெனக் கருதினன். இவ்வண்ணம் தெய்வத்தன்மை வாய்ந்தவர்களு மிந்த ஜீவலோகத்தில் ஒருகாரணத்தா லவதரித்தவர்களாய் அவித்தையினால் தேகாத்மாபிமானமுடையவர்களாக உத்பவிக்கின்றனர். அன்றியும், அவர்கள் தத்தமக்கிசைந்த முயற்சியையும் உத்சாகத்தையுமுடையவர்களாய்ப் பிறரால் எளிதிலடையத்தகாத பொருட்பேற்றையு மடைகின்றனர். ஆதலால் முயற்சிக்குக் கடலாயிருக்கின்ற வோ! சக்திதேவ, உன்னையும் ஒரு தேவாம்சமுடைய புருஷனென்றே யறிகின்றேன் யான்; உனதிஷ்டசித்தியும் நிறைவேறப்போகின்றது. ஏனெனில், ஒருவனுக்கு மகான்களாலு மெளிதிற் செய்தற்கரிய காரியங்களில் உத்சாகமுண்டானால் அது பெரும்பாலும் அவனது ப்ரக்ருதி விசேஷத்தையே கூறுகின்றது.

ஆனால் உன்னாற்கருதப்பட்ட அந்த ராஜகுமாரியான கனகரேகை யென்பவளும் தேவாம்சமுடையவளாகவே யிருத்தல்வேண்டும். இல்லாவிடிற் குழந்தைப் பருவத்திலேயுடைய அவள் கனகபுரியைப் பார்த்திருக்கின்றவனையே கணவனாக அடையவேண்டுமென்று எதற்காக விரும்புகின்றனள் என்று விஷ்ணுதத்தனிவ்விதமாகக் கூறிய சரசமான கதையைக்கேட்ட அந்த சக்திதேவனென்பவன் மனதிற் கனகபுரியைப் பார்க்கவேண்டுமென்று கருத்துடையவனாய்த் தைரியத்தையடைந்து அன்றிரவைக் கழித்தனன்.

கதாசரித்சாகரத்தில் சதுர்த்தாரிகாலம்பகத்தில்
இரண்டாவது தரங்கம் முற்றிற்று.



## 3-வது தரங்கம்.

பின்பு அந்த உத்தலத்வீபத்திலிருக்கின்ற நெய்தனிலமாக்களுக்
கரசனான சத்தியவிருதனென்பவன் காலையிலெழுந்து மடத்திலிருக்
கின்ற அந்த சக்திதேவனிடம் வந்து ஓய் பிராமணரே, உமதிஷ்ட
சித்தியின்பொருட்டு ஒருபாயம் செய்வதாய் நினைத்திருக்கின்றேன்.
அஃதாவது சமுத்திரத்தின்மத்தியில் த்வீபங்களிற்சிறந்ததான இரத்
தினகூடமென்றொரு த்வீபமிருக்கின்றது. அதில் பகவானான நாரா
யணன் சமுத்திரராஜனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர்.
அவ்விடத்தில் ஆடிமாசம் சுக்லபக்ஷ த்வாதசிதோறும் சிறப்பாய்
நடந்துவருகின்ற யாத்ரோத்சவத்திற் பகவானைப் பூஜிப்பதற்காக
எல்லா த்வீபாந்தரங்களினின்றும் ஆவலோடு வெகு ஜனங்கள் வரு
கின்றனர். அங்கு சென்றால் ஒருவேளை கனகபுரியின் சமாசாரந்
தெரியும்; ஆதலால் நாமிருவருமவ்விடத்திற்குச் செல்வோம்; ஆனால்
அந்த உத்சவ தினமும் சமீபித்ததாகவேயிருக்கின்றது என்று
சத்தியவிருதன் சொல்லியதைக்கேட்ட அந்த சக்திதேவனுமப்படி
யேயாகட்டுமென்றொப்புக்கொண்டு விஷ்ணுதத்தனால் வழிக்கென்று
கொடுக்கப்பட்ட ஆகாரத்தையும் சந்தோஷத்துடன் வாங்கிக்கொ
ண்டு சத்தியவிருதனாற் செலுத்தப்பட்ட கப்பலிலேறி அவனுடன்
கூடவே கடல்மார்க்கமாய்ச் சென்றனன். ஆச்சரியங்களுக்கிருப்பிட
மாகியும், இடையிடையே காணப்படும் த்வீபங்கள்போற் பெரிதா
யிருக்கின்ற முதலைகளையுடையதுமான அக்கடலிற் செல்கின்ற சக்தி
தேவனென்பவன் கப்பலை நடாத்துகின்ற சத்தியவிருதனைப்பார்த்து
ஹே சத்தியவிருதராஜனே, இங்கு சற்றுதூரத்திற் பெரிய வுருவத்
தையுடையதாகவும் உன்னதமாய் இறகுகளுடன் கூடிய மலையானது
தன்னிஷ்டப்படி சமுத்திரத்தினின்றும் வெளிக்கிளம்பியதுபோற்
றோன்றுவதுமான இஃதென்ன என்று கேட்டனன். அதற்குச் சத்
திய விருதன் ஓஹோ! இது தேவாம்சமுடைய ஆலவிருக்ஷம்; இதன்
கீழ்மிகப்பெரிய சூழி ஒன்றுண்டென்றும் அதனை வடவாமுகமென்
றும் சொல்லுவதுண்டு.

இப்படியிருத்தலா லிவ்விடத்தைவிட்டு வெகுதூரம் விலகிச் செல்லவேண்டும். இச்சுழியிற் சென்றவர்கள் மறுபடியும் மீள மாட்டார்கள். என்றிவ்விதம் சத்தியவிருதன் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே தண்ணீர் வேகத்தினாற் கப்பலானது அத்திசையைக் குறித்தே செல்லுதற்காரம்பித்தது. அதனைக்கண்டு சத்தியவிருதன் மறுபடியும் சக்திதேவனைக்குறித்து ஓய் பிராமணரே! நமக்கிப்போது நிச்சயமாய் விநாசகாலம் வந்துவிட்டது. ஏனெனில் இக்கப்பல் யாதொரு காரணமுமில்லாது அவ்விடத்திற்கே போகின்றது பாரும். நானிப்பொழுது எவ்வளவோ பிரயாசத்துடனிதனையங்கு செல்லவிடாது தடுத்தும் முடியவில்லை. உளம்வலியாலிழுக்கப்பட்டு மிருத்யுவின் வாயில் வீழ்கின்றவர்போல நாமும் தண்ணீராலிழுப்புண்டு ஆழமாயிருக்கின்ற இச்சுழியினில் வீழப்பட்டவர்களாகவேயிருக்கின்றோம். ஐயோ! இதுவுமெனக்கொரு துக்கமன்று; ஏனெனில் உலகத்தில் எவனுடைய சரீரந்தான் ஸ்திரமாயுள்ளது; எதுவும் அழியக்கூடியதே. ஆனாலிவ்வளவு வருந்தப்பட்டும் உமது மனோரதம் சித்திக்கவில்லையே யென்பதுதான் எனக்குத் துக்கமாகவிருக்கின்றது. ஆதலால் நானிந்தக் கப்பலை மெல்ல நிறுத்துகின்றேன். அதற்குள் இந்த ஆலமரத்தின் கொப்பை சீக்கிரம் பிடித்துக்கொள்ளும்; அப்படிச்செய்தால் மங்களமான வடிவினையுடையவுமக்கு ஜீவிப்பதற்குபாயமொருவேளை நேரிடும்; விதியின் விலாசங்களையும் சமுத்திரத்தின் அலைகளையும் இத்தன்மையவென்றாகித் தறியத்தக்கவன் யாவனிருக்கின்றானிவ்வுலகத்தில். என்றிவ்வாறு சொல்கின்ற மகாதீரனான சத்தியவிருதனுடைய கப்பலானது அவ்வாலமரத்தின் சமீபத்தையடைந்தது. உடனே சக்திதேவன் சற்றும் பயமற்றவனாய் ஓரேகிளம்பாய்க் கிளம்பி அவ்வால மரத்தின் பெரியதொரு கொப்பைக் கைப்பற்றிக்கொண்டனன். கப்பலை நிறுத்துவதற்கு முயன்ற சத்தியவிருதனென்பவனோ பிறருக்கென்றே ஏற்படுத்தப்பட்டுச் செல்கின்ற தனது சரீரத்துடனும் கப்பலுடன்கூடவே வடவாமுகத்தினில் பிரவேசித்தனன்.

(இன்னும் வரும்.)

---

உ

சிவமயம்.

# சேதுபுராண அரும்பதவிளக்கம்.

(முற்றொடர்ச்சி.)

---

(௩௧.) தென்றிசையிலுள்ள பாண்டிநாடு, துளைபொருந்திய முள்ளரையையுடைய கால்பொருந்திய பதுமநிதியோடும், உயர்ச்சி பொருந்திய சங்கநிதியைப் பெற்றோங்கும் குபேரனைப்போலக் கிளைத்தெழுகின்ற பொருநையோடும் கேடில்லாத வைகையோடும் கூடி அழகைப்படைத்தது. பொருநையும் வைகையும் சங்கநிதி பதுமநிதிகளை நிகர்த்தனவென்பதாம்.

(௩௬.) பொழில் வேரி - சோலையிலுள்ளதேன்.

(௩௮.) மெய்த்தவத்தேறுபாத்திரம் -மெய்ம்மையாகிய தவத்தினையுடைய சற்பாத்திரம். சேறுபார்ப்பவராய் நாறுபார்ப்பவர்கள். நாடெல்லாம் - நாட்டிலுள்ளோர்களெல்லாம்.

(௪௧.) இரட்டியுண்டென்ன — பயிர்வளர்ச்சி யோர்நாட்கோர் நாள் இருமடங்கு "இரட்டித்ததென்றுசொல்ல" உளதென்க.

(௪௫.) பாலிகையாரமுது - அதரபானம்.

(௪௬.) மாந்துவார் மள்ளர் - குடிப்பவராகிய மள்ளர்.

(௪௭.) காரி - நஞ்சு, காரியுண்டிகொட்சியென்றது - கொடுமைக்கு.

(௪௮.) ஏகுமினென்னவருவார் - செல்லுங்களென்னவருவார். வேறுவினாவிடை - மாறானவினாவும் விடையும்.

(௫௦.) வெங்கள் - விரும்பத்தக்ககள். மருங்கில் - இடையைப் போல.

(ருக.) காடுசேர்மலர்க்காமதுவண்டுடன் கூடவுண்டு - கூட்டமாய்ச்சேர்ந்த மலர்களையுடைய சோலையில் மதுவைவண்டோடுங் கூடவுண்டு. குமட்டியெடுத்தல் - உவட்டியெடுத்தல்.

(ருங.) ஓடுவார்பின்றொடர்வதையுற்றெதிர் நாடுதிக்கினடந்திடுவார் சிலர் - ஓடுபவருக்குப்பின்றொடர்தலை மனத்திற்கருதி எதிராய் நாடுகின்ற திக்கில் நடந்திடுவார்சிலர்.

(ருசு.) நடுந்தன்மையை முயன்றுகாண்பவர்கள், நிரம்பிய நீரில் அவர் அதரங்களும், கண்களும் தோன்று நீழலைக்கருதாதவர்களாய், இந்த நாறுகளையெல்லாம் இத்தடாகத்துளூன்றுவீர். இதுஎன்னென்று சொல்வார்கள்.

(ருஅ.) அளறு - சேறு.

(ருகூ.) படர்மழைதந்தளித்த தகைமையையுணர்ந்த போல் - மிகுந்த மழையைத்தந்து காத்ததகைமையையறிந்தனபோல. முந்திமேகமுகத்தினைமோந்த - முன்னரே மேகமுகத்தினைமுத்தமிட்டன.

(சு0.) இழைத்தசாலியெழுங்களை - நட்டநெல்லுக்கெழுங்களைகளை.

(சுக.) செந்தாமரைமலர்களைப் பிடுங்காதவர்களாய்த்தெரிந்துதெரிந்து விரிந்த வாசம் பொலிந்த சுத்தமாகிய வெண்டாமரைப்பூக்கள் பலவற்றைப்பிடுங்குவார்கள். வாசனைபொருந்திய செவ்வாம்பல்களைப் பிடுங்காமல் வெள்ளாம்பல்களை அழகியகைகளாற் பிடுங்கியெறிவார்கள். அவைகளைப்பிடுங்க மனம் பொருந்தார்கள்.

(சுங.) நின்றெரிகின்ற ஒளிபொருந்திய தாமரைகளின் நிரையை இரண்டு கரைகளினூடும் முன்னேதெரிந்து களைந்திடுபவர்கள் முயன்றெழுந்த வஷயின் பெயர்ப்பைப்பின் கண்டு, சிலதாமரைகள் பிழைத்தனவென்று கூறக்காணுதவர்களாய், மின்றெரிதலைப்போலச் சிரிப்பை விளைக்க அவர் வெள்குவார்கள்.

(சுச.) நெருங்கியழகிய மலர்களையுடைய களைகளைப்பிடுங்குபவராகிய பெண்கள் சிறியமலர்போன்ற கால்களை ஆமையின்மீது செல்லவைத்துப் பின் பெண்களே நம்முடைய புறவடியையாம் மிதித்த பிழையைப் பொறுங்களென்று சொல்லி யிரங்கிப்பின் பொருந்திய இனத்தால் இறுமிடையாருடைய கால்களைப் பிடிப்பவராய் இளமை பொருந்தியவரால் மீன்களைப்பிடிப்பார்கள். புறவடியால் என்பதில் ஆல் - அசை.



(சுரு.) ஆடுகின்ற சிறந்த விளையாட்டில் முகங்களிற் கண்ணைப் புதைப்பவர்களாய்ப் பெருமைபொருந்திய நாளத்தையுடைய தாமரையிற் பிறழும் வரிகளையுடைய கயல்களை மூடிப்பக்கத்தே யலர்கின்ற செவ்வாம்பலில் வண்டுகளொலிக்கும் ஒலியைக்கேட்டுக்கண்கள் மூடப்பட்டவர் கோபித்துச் சொல்வார்களென்று மூடியகையைப் பெயர்ப்பார்கள். சேதாம்பலை வாயாகவும், வண்டு முரலலைச்சொல்லுதலாகவும் கொள்க. உறுமினத்தாலென்பதையிதனோடுங் கூட்டுக.

(சுசு.) வரம்புகளையுடைய வயலிலுள்ள நெற்களை முழுதையும் களைந்திடுமுன்னம் தங்களுடைய உடற்களையைக்களைவாராய்விசலித்தவரம்பிற் செல்வார். இரண்டுகண்களிலும் முகத்திலும் விளங்குகின்ற அதரத்திலும் சூழ்ந்து நீங்காமல் கிளருகின்ற வண்டுகளால் வழிமயங்கிப் போதலின்றி நிற்பார்.

(சுகூ.) நூல் முதலியன தந்நிறத்தைக் காரியமாகிய புடைவைகளில் தருவனபோல எந்நிறத்தவிதைகள் திரையெறிகின்ற நீரையுடைய பெரியவயலில் இடப்பட்டனவோ அந்நிறத்தையுடைய வெள்ளிய கதிர்களை அலர்ந்தன. அவ்விடத்தே உழவர்கள் செந்நிறம் பொருந்திய நெற்களிவை செழுமையாகிய கரும்பன்றெனத்தெளிந்தார்கள்.

(எ0.) பூமியை வளந்தருகவென்று ஒரு வெற்றியையுடைய சூரியகுலத்தரசன் முன்செலுத்திய மரகதத்தாலாகிய காம்பையும், வைரத்தாலாகிய நுதியையுமுடைய பாணங்களையெல்லாம்.

(எக.) மகிழ்ந்தெழுந்த தருக்கத்தில் பொருந்திய சமயக்கோட்பாட்டைச் சொல்லுகின்ற தவத்தில் வேறுபட்ட போதிமங்கையிலுள்ள பௌத்தரைப் போற்றலை நிறுவி. தமிழ்விரகர் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்.

(எ௨.) பாண்டியனுடைய பூமாலையிற் பொருந்திய வேப்பிலை போன்ற வாயையுடைய, முழங்கொலிவாய - முழங்குகின்ற ஒலியையுடைய கிளை. அரி - உப்பட்டி. மைதவழ்கந்தரன்வணக்காவட சிகரி - சிவன்வில்லாகவளையாத மேருகிரி.

(எ௩.) உடங்கு - ஒருங்கே.

(எ௪.) பலாலம் - வைக்கோல்.

(எ௫.) வாழை - சுரபுன்னை. அருக்கம் - குங்குமமரம் மரம் - கடம்பு.

(எ௬.) ஞெள்ளல் - வீதி.

(எ௮.) குளிர்ந்த கரும்பை நெரித்து வீழ்ந்த சாற்றைக்காய்ச்சுகின்ற பாகின் வாசனையும், திண்ணிய கவர்களையுடைய சோலையிலுள்ள பல தேன்பொருந்திய பூவின் வாசனையும், கமுகினது கண்ணைக் கவர்கின்ற பாளையின் வாசனையும் சேர்ந்து ஒவ்வொருதரமும் அழகிய சுவர்க்கத்திற்பொருந்திய ஐந்தருவின் மலர்களினாற்றம் வெவ்வேறுகநாறும்.

(எகூ.) பெண்களுடைய கோட்டுப்பூநிறைந்த நெடிய கூந்தலின் மயிர்ச்சாந்தின் வாசனையை வாங்குவன.

(அக.) பரந்த நீரையுடைய தடாகத்தினடுவே இசையைப்பாடுகின்ற வண்டுகளலர்த்திய ஆராயப்பட்ட இதழ்களையுடைய தாமரையாகிய படுக்கையிற் கிடக்கும் அன்னமானது சுவாலிக்கின்ற அக்கினித் தூணினுச்சியைக் காணுதவராய்க் கலக்கத்தைமேற்கொண்டு ஓயும் மயக்கத்துடனுறங்கும் பிரமாவுடைய உறக்கத்தைக்காட்டும்.

(அ௨.) கார்கண்டு - மேகம் பெய்தலைக்கண்டு. துதைதல்- நெருங்குதல். குயிலினம் கூவல் காட்டும்என்றது பெண்களுடைய வசனங்களை.

(அ௩.) வல்லகி - வீணை.



(அ௬.) இஞ்சிதுஞ்சிடு மஞ்சிற்றேன்றும் விளங்கொளிமின்னுதுளங்குவாள்போலும். காவிசிளங்குயிலன்னார் தங்களிடுகிடை அன்ன வித்துத்துப்போலும். வாளரியேறு ஏழைநல்லார் வளங்கொள் நுண்மருங்குபோலும். இஞ்சி - மதில். வித்துத்து - மின்.

(அஅ.) அலைநொள்நீர் - கடல்நீர். அறல்-மழை. உடம்பொடு புணர்த்தலால் வளர்புயமலையமாசிகரம் போலுமென்க.

(அகூ.) ஆகாயத்திற் பொருந்திய சந்திரன் மேகம்போலுங் கூந்தலையுடைய பெண்களின் மாற்றுயர்ந்த பொன்போல விளங்குகின்ற ஒளியையுடைய முகம்போலும், பெண்கள் சுவர்க்கத்தில்வரும் இந்திராணிபோல்வர். சோலையிற்பொருந்திய வாழை பெண்களது தொடைபோலும், அந்நாட்டுப்பெண்கள் சுவர்க்கத்தரம்பையரை நிகர்ப்பர்.

(கூ0.) உடுக்குப்போலு மிடையையுடைய பெண்களின் ஸ்தனங்கள் இரண்டாகிய யானைக்கோட்டை நிகர்க்கும். அந்நாட்டிலுள்ள ஊர்களெல்லாம் எவரும்விரும்பி அணையுஞ் சுவர்க்கம்போலும். பெண்களுடைய நாசிகொம்பரிலுள்ள சண்பகப்பூவைப் போலும். பெண்கள் கூந்தலிலுள்ள வண்டுபுணரும் இசையையுடைய தநாசியைப்பாடும்.

(தொடரும்.)

ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை.

உ

சிவமயம்.

# நல்லொழுக்கம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

லாக் ஹார்ட் (Loc-hart) உடைய விசுவாசமுள்ள நடத்தையும் அவருடைய பெருமை பெற்ற பந்துவுக்குத் தக்கதாயிருந்தது. பிற்காலத்தில் அவர் எழுதிய லைப் ஆப் ஸ்காட் (Life of scott) என்னும் கிரந்தமானது அவருக்குப் பல வருஷங்கள் பிடித்து மிகவும் சிறந்த நூலாக முடிவுபெற்றது. ஆகிலும் அவர் அதினின்றும் யாதொரு பணப்பிரயோஜனத்தையும் அடையவில்லை.

---

## ஏழாவது அதிகாரம்.

—:o:—

### கடமை - உண்மை.

“இப்பிறவியானது இனிமையானதென்று சொப்பனங்கண்டு தூங்கினேன். நான் விழிக்கவும் அது கடமை மயமென்று கண்டுகொண்டேன்”

“கடமை ஆசைகாட்டிய தந்திரத்தாலாவது, முகஸ்துதியாலாவது, வேறு பயமுறுத்தலாலாவது முயற்சியாமல், ஆனாற் கேவலம் வெறும் விதியையே பற்றிக்கொண்டு முயன்று பிறருடைய பணிவை எப்பொழுதும் கிரஹியாவிட்டாலும் எப்பொழுதும் பூஜிதையைப் பெற்று, இச்சைகளனைத்தும் அந்தரங்கத்தில் எவ்வளவு போராடினும் அவற்றை அடக்கிக்கொள்ளுந் தன்மையுடைய ஆச்சரியகரமான மனோ சங்கற்பமே!”—கென்ட் (Kent).



“யோக்கியமான எண்ணமே கவசமாகவும் வெள்ளையான உண்மையே மிக்க சாமர்த்தியமாகவும் கொண்டு மற்றொருவனுடைய மனப்போக்கினுக்கு அடிமைப்படாதவனுடைய ஜன்மமும் கல்வியும் எவ்வளவு சந்தோஷகரமானவை.

“அவனுடைய இச்சைகளுக்கு அவன் கீழ்ப்படிகிறதில்லை. பிறனை அபகீர்த்தியாலாவது, சொந்த அதிருப்தியாலாவது உண்டாகிய கவலையால் இவ்வுலக பாசத்திற்குட்படாமல் மரணத்தை என்றும் எதிர்பாரா நிற்கின்றனன்.

“ஆக்கத்தின் இன்பம் அல்லது அழிவின் பயமாகிய இழிவான பந்தங்களினின்றும் இவன் விடுபட்டிருக்கிறான். தனக்குப் பூஸ்திதியில்லாவிடினும், தனக்குத்தானே எஜமானாயிருக்கிறான். யாதொரு பொருளுமில்லாதவனாயினும், தான் எல்லாம் உடையவனாயிருக்கிறான்.”

அவன் இல்லையென்றால் இல்லை. மறுக்க முடியாது. அவன் உண்டென்றால் உண்டு. முற்றும் சக்தியுள்ளவன் மிகவும் ஜாக்கிரதையுடன் அவன் ஆம் எனின் அவனுடைய எண்ணங்களும் வார்த்தைகளும் நன்றாய் ஒற்றுமைப்பட்டிருப்பனவாயின. அவனுடைய வார்த்தையே பத்திர ஆதாரவும் முத்திரையுமாயிருக்கிறது.”

கடமையென்பது நாம் செலுத்தவேண்டிய ஓர் பொருளாயிருக்கிறது. தற்கால நாணயக்கேட்டையும் அதனாலுண்டாகிற சன்மார்க்க வறுமையையும் நீக்க விரும்புகிற ஒவ்வொருவராலும் அது செலுத்தப்படவேண்டும். அது ஒரு பொறுப்பாகிய கடன். அதை ஒருவன் தன் உலக காரியங்களிலுள்ள சுவய முயற்சியாலும் தீர்மான முற்ற செயலாலும் தான் நிவிர்த்திக்கக்கூடும்.

மனிதனுடைய ஆயுசு முழுதும் கடமை மயமாயிருக்கின்றது. அது வீட்டிற் றொடங்குகின்றது. அங்கே மக்கள் தந்தைகளுக்குச் செய்யவேண்டியதும், தந்தைகள் மக்களுக்குச் செய்யவேண்டியதுமாகிய கடமைகளும், அவ்வாறே கொழுநர், மனைவிகளுடைய கடமைகளும், எஜமான் ஊழியக்காரருடைய கடமைகளும் நிகழ்கின்

றன. புறம்பில் ஸ்திரீகளும் புருஷர்களும், ஒருவர் மற்றொருவருடன் இஷ்டராகவும், அந்யராகவும், வேலை கொடுப்பவராகவும் வேலை பெறுபவராகவும், ஆள்பவராகவும், ஆளப்படுபவராகவுமாகிய நிலைமைகளிலுள்ள கடமைகளை உடையராகின்றனர்.

"ஆகையாற் கரம் செலுத்தப்படுபவர்க்குக் கரத்தையும், வழக்கம் செலுத்தப்படுபவர்க்கு வழக்கத்தையும், பயம் செலுத்தப்படவேண்டுபவர்க்குப்பயத்தையும், கனம் செலுத்தப்படவேண்டுபவர்க்குக்கனத்தையும், (இவ்வாறு) அவர்களுடைய கடன்களனைத்தையும் செலுத்துங்கள். ஒருவர் மற்றொருவரை நேசிக்கவேண்டுவதைத் தவிர, எவருக்கும் யாதொன்றிலும் கடமைப்படாதேயுங்கள். ஏனெனின் மற்றொருவனை நேசிக்கிறவன் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றியவனாயிருக்கிறான்" என்றுசெஸன்ட் பால் (Sent. Paul) என்பவர் செப்புகின்றனர்.

இவ்வாறு நாம் பிறந்து இறக்கிற மட்டும், நம் ஜன்ம முழுதும் உயர்வு தாழ்வு, ஒப்புடையோருக்கும், ஆகவே மனிதனுக்கும், கடவுளுக்கும் செய்யத்தக்க கடமையானது சூழ்வுற்றிருக்கின்றது. உபயோகிக்க அல்லது செலுத்துவதற்குச் சக்தி எங்கே இருக்கிறதோ, அங்கே கடமை இருக்கின்றது. ஏனென்றால், நாம் நம்முடைய சொந்தமும் மற்றவர்களதுமான நன்மைக்காக நம்பால் ஒப்புவிக்கப்பட்ட சாதனங்களைப் பிரயோகிப்பதற்கு ஏற்பட்ட காரியஸ்தர்களாகத்தான் இருக்கிறோம்.

கடமை பற்றிய ஞானத்தை வஹித்தலே, ஒழுக்கத்திற்குச் சிரோபூஷணமாயிருக்கின்றது. அது மனிதனை உயர்ந்த நிலைமையில் நிறுத்தும் நியாயப் பிரமாணமாகவிருக்கின்றது. அஃதின்றேல், முதல் முதற் றுன்பகாலமாவது மோக இச்சையாவது நேரிடுங்கால் மனிதன் நிலை குலைந்து விழுகிறான். ஆனால் அஃதுண்டேல் மிக்க பலஹீனனும் பலமும் தைரியமுமுள்ளவனாகிறான். "கடமையானது சன்மார்க்கமாகிய முழுக் கட்டிடத்தையும் ஒன்று சேர்க்கிற சாந்துபோலாகின்றது. அஃதின்றி, சகல திறமையும் சற்குணமும் ஞானமும், உண்மையும் சந்தோஷமும் அன்பும் நிலைபெறமுடியாது;



நம் வாழ்விற்குரிய சகல சாதனங்களும், நம்மாலேயே கெட்டுப்போய்க், கடைசியாய்க் கெட்டொழிந்தவற்றின் நடுவேயிருந்துகொண்டு, நம்முடைய கெடுதியைப்பற்றி நாமே ஆச்சரியப்படும்படி யாக்கிவிடுகின்றன." என்று மிஸ்டர்ஸ் ஜேம்ஸன் (Mrs. Jamson) என்பவள் சொல்லுகின்றனள்.

கடமையானது நீதியின் ஞானத்தினின்றும் உண்டாகின்றது. அந்த நீதியானது நன்மையின் முழு வடிவமாகிய அன்பனின்றும் ஜனித்ததாயிருக்கின்றது. கடமையானது, ஓர் மனக்கொள்கையன்று. ஆனால் வாழ்நாளிற் புகுந்து பரவுகின்ற ஓர் ஒழுக்கமாயிருக்கின்றது. அது மனிதனுடைய மனச் சாக்ஷியும், சுவாதீன சித்தமும், முக்கியமாய் அனுமதி கொடுக்கிற நடக்கையிலும் செயல்களிலும் விளங்குகின்றது.

மனச்சாக்ஷியின் வாக்கானது செய்யப்பட்ட கடமையிற் பிரவிர்த்திக்கின்றது. அது ஒழுங்கு செய்து ஆளவில்லையானால் மிகவும் பிரகாசமும் விசேஷமுமாகிய யூகமானது, வழி தப்பிச்செலுத்துகிற ஒளிக்குச் சமானமாகத்தான் ஆகலாம். மனச்சாக்ஷியானது ஓர் மனிதனை அவனுடைய பாதங்களின் மீது, நிற்கச் செய்கின்றது. ஆனால் அவனுடைய சித்தமானது அவனை நேரே நிற்கச் செய்கின்றது. மனச் சாக்ஷியானது சரியான செயலையும் சரியான எண்ணத்தையும், சரியான நம்பிக்கையையும், சரியான ஒழுக்கத்தையும் ஆளுகிற நாயகனாக ஆகவே இருதயத்தை ஆளுகிற சன்மார்க்க நாயகனாகவிருக்கின்றது. அதனுடைய அதிகார சக்தியாற்றான் மேன்மையும் நேர்மையுமான ஒழுக்கமானது முற்றும் பக்குவம் அடையக்கூடும்.

ஆகிலும் மனச்சாட்சியானது ஒருக்காலும் மிகவும் உரக்கப் பேசமாட்டாது. ஆனால் ஊக்கமான சித்தமில்லாவிடில் அதன் வாக்கானது பயனற்றதாகின்றது. சித்தமானது நல்வழியையும் தீயவழியையும் பகுத்தெடுக்கச் சுவாதீன முடையது. ஆனால் அங்ஙனம் எடுத்தலும், உடனே தீர்மான புத்தியுடன் செலுத்தினாலன்றிப் பயன்படமாட்டாது. கடமையின் உணர்ச்சி பலமாயும், செய்யு

[illegible] தெளிவாயும் இருப்பின், ஊக்கமுள்ள சித்தமானது [illegible]யால் ஆதரிக்கப்பட்டு, ஓர் மனிதனை அவன் கைக்கொ[illegible] மார்க்கத்தைத் தைரியமாய் நடத்தவும், இடையூறுகள் கஷ்ட[illegible] எல்லாவற்றையும் எதிர்த்து அவனுடைய காரியங்களை நிறை வேற்றவும், திறப்படுத்துகின்றது. காரியசித்தி இல்லாவிடிற் குறைந்தபக்ஷம், கடமைக்காகச் செய்யப்பட்டதென்கிற திருப்தியாவது இருக்கும். (இன்னும் வரும்.)

---

உ

திருச்சிற்றம்பலம்.

# திருக்குறளாராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

---

௧௧௮௭. புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு.

இதன் விசேடவுரைத் தொடக்கத்தில் "கொளவென்பது குறைந்து நின்றது." என்றொரு வாக்கியம் பழைய அச்சுப்பிரதிகளிலெல்லாங் காணப்படுகின்றது. மதுரை விவேகபாநு முத்திராசாலையிற் பதிப்பிக்கப்பட்டுச் சின்னாட்களின் முன்னர் வெளிவந்துள்ள (பாக்கெட் எடிஷன்) புத்தகத்தில் இவ்வாக்கியம் "கொளலென்பது குறைந்துநின்றது" என்று காணப்படுகிறது. ஆசிரியர் பரிமேலழகர் உரையில்—அள்ளிக்கொள் வென்பதற்கு அள்ளிக் கொளவென்றாவது, அள்ளிக்கொளலென்றாவது கூறாது "அள்ளிக் கொள்வது" என்றுகூறி, இது வினையாலணையும் பெயர் (தொழிற்பெயரன்று) என்பதை—"அள்ளிக்கொள்வது—அள்ளிக்கொள்ளப்படும் பொருள்" என்னும் விசேடவுரை வாக்கியத்தால் விளக்குகின்றாராகலின் அவற்றிற்கேற்பக் "கொள்வதென்பது கொள்வெனக்குறைந்து நின்றது" என்று கூறவேண்டுமேயன்றி "கொளவென்பது குறைந்துநின்றது" என்றாவது "கொளலென்பது குறைந்துநின்றது" என்றாவது கூறுதல் பொருந்தாதாம். ஆகவே அச்சுப்புத்தகபாடமிரண்டுங் கொள்ளத்தக்கனவல்ல.



இனி, இவ்வாக்கியம மதுரைத் தமிழ்ச்சங்கத்துள்ள ஏட்டுப் பிரதிகள் பெரும்பான்மையவற்றுள் "கொள்வெனக்குறைந்துநின்றது" என்று காணப்படுகிறது. "அள்ளிக்கொள்வற்று" என்பதற்கு "அள்ளிக்கொள்வதுபோல வந்து செறிந்தது." என்றெழுதியுள்ள உரைக்கும் "அள்ளிக்கொள்வது அள்ளிக்கொள்ளப்படும் பொருள்." என்னும் விசேடவுரை வாக்கியத்திற்கும் இடையில் "கொள்வெனக்குறைந்து நின்றது." என்னும் வாக்கியங்காணப்படுதலின், முன்பின் தொடர்ச்சி நோக்க "கொள்வது என்பது கொள்வெனக் குறைந்துநின்றது" என்னும்பொருள் தானே பெறப்படும். விகாரம் வந்துள்ள இடங்களிலெல்லாம், சொல்லின் முழுநிலைமையையேனும் விகாரப்பட்டு நின்றநிலைமையையேனும் ஒன்றைக்காட்டி ஒன்றை உய்த்துணரவைப்பது * ஆசிரியர் பரிமேலழகரது வழக்கமாம். இதனை ௧௬-ம் குறள் விசேடவுரையிலே "குன்றியக்காலென்பது குறைந்துநின்றது எனவும், ௩0எ-ம் குறளின் விசேடவுரையிலே "பிழையாததற்றென்பது குறைந்துநின்றது" என்வும், ௧உ௬௬-ம் குறளின் விசேடவுரையில் கொளவெனத்திரிந்து நின்றது" எனவும், ௧உ௫௬ - ம் குறளின் விசேட வுரையில் "†வேண்டியெனத் திரிந்து நின்றது." எனவும் கூறியிருப்பனவற்றால் அறியலாம்.

ஆகலே மேலேகாட்டிய எல்லாக் காரணங்களாலும் "கொள்வெனக் குறைந்துநின்றது" என்னும் ஏட்டுப்பாடமே ஆசிரியர் பரிமேலழகர் கொண்ட பாடமென்பதும், அதனால் இதுவே கொள்ளத்தக்கதென்பதும் போதரும்.

௧உ௧௬. நனவினானல்காரைநோவர்கனவினாற்
காதலர்க்காணா தவர்.

---

* இடர்ப்பட்டுப்பொருள் கொள்ளவேண்டிய விடத்தின்மட்டும் இருநிலைமையையுங் காட்டுவர்.

† இவ்வடையாளமிடப்பட்டுள்ள இரண்டுவாக்கியங்களும் யான் பார்த்த ஏடுகளிலெல்லாம் இவ்வாறே காணப்படுகின்றன. இவைபோலும் பாடபேதம் பலவுள; அவை சமயம் நேர்ந்தபொழுது காட்டப்படும்.

இதன் விசேடவுரையில் "இயற்பழித்தது பொறுது புலக்கின்றாளாகலின் நன்மைதோன்றக் கூறினாள்." என்றச்சுப் பிரதிகளிலெல்லாம் காணப்படுகிற வாக்கியம் சில ஏடுகளில் "இயற்பழித்தது பொறுது புலக்கின்றாளாகலிற் பன்மை தோன்றக்கூறினாள்." என்று காணப்படுகிறது. இக்குறளிலே தலைமகள் தோழியை ஒருமையாற் கூறாது "காணாதவர், நோவர்" எனப்பன்மைப்பாலாற் கூறியிருப்பினும், புலந்து கூறியதாகலின் அமையுமென, வழுவமைதி கூறுவான் இவ்வாக்கியம் எழுந்ததாகலின் "இயற்பழித்ததுபொறுது புலக்கின்றாளாகலிற் பன்மை தோன்றக் கூறினாள்." என்னும் ஏட்டுப்பாடமே பொருத்தமுடைத்தாம்.

௧௨௨௯. பதிமருண்டுபைதலுழக்குமதிமருண்டு
மாலைபடர்தரும்போழ்து.

இதன் விசேடவுரையிற்றில் "மாலைமயங்கிவரும் போழ்தென மதிநிலைகலங்கிநோயுழக்குமென்றுரைப்பாருமுளர்." என்றொரு வாக்கியம் பழைய அச்சுப்பிரதிகளிலெல்லாங் காணப்படுகின்றது. இவ்வாக்கியத்தின்பொருள் தெளிவுற விளங்கவில்லை. இவ்வாக்கியத்துள் "போழ்தெனமதி" என்பது அவ்வாறு படிக்கும்வண்ணம் "பொழுதெனமதி" என்று சில ஏடுகளிலும், "பொழுதெனமதி" என்று சில ஏடுகளிலும் காணப்படுகிறது. இவ்வாறு காணப்படினும் இவ்விரண்டையும் முறையே *"போழ்தென்மதி" "பொழுதென்மதி" என்று படிக்கலாமென்பது ஏட்டுப்பழக்கமுள்ளவாறிந்த விஷயம். இவ்வாறு படிக்கவே இவ்வாக்கியம் "மாலைமயங்கி வரும்பொழுது என்மதி நிலைகலங்கி நோயுழக்கு மென்றுரைப்பாருமுளர்." என்று படிக்கப்பட்டுப் பொருட்பொருத்தமுடையதாகும்.

இனி இவ்வாக்கியம் பொருட்பொருத்தமுடையதாமாறு எங்ஙனமெனின்;— ஆசிரியர் பரிமேலழகர் இக்குறளுக்குத் தாமொரு பொருளுரைத்துப் பின்னர், 'இவ்வாறு பொருளுரைப்பாருமுளர், எனப் பிறன்கோட் கூறல் வாயிலாகப் பிறிதோருரை கூறுவான் இவ்வாக்கியங்கூறுகின்றார். "பதிமருண்டு பைதலுழக்கும் மதிமருண்டு, மாலைபடர்தரும்போழ்து." என்னுங் குறளினை "மாலைமருண்டுபடர்தரும்போழ்து, மதி பதிமருண்டு பைதல் உழக்கும்." என்று அந்நுவயப்படுத்தின்— "மாலைமயங்கிவரும்பொழுது, (என்) மதி, நிலைகலங்கி நோயுழக்கும்." என்பது பொழிப்புரையாய்ச் செவ்வனே யமைவுபெறும். பெறவே "மாலைமயங்கி வரும்பொழுது என்மதி நிலைகலங்கி நோயுழக்கும் என்றுரைப்பாருமுளர்." என்பதுபொருட் பொருத்தமுடையதாமென்க. ஈண்டு, பதிமருளுதல்—நிலைகலங்குதல்.

* இவ்விரண்டு பாடத்திற்கும் பொருள் ஒன்றுமாயினும், மூலத்திலுள்ள போழ்தென்பதின் பிரதிபதமாயிருத்தலின் "பொழுது" என்பது ஈண்டு எடுத்துக்கொள்ளப்பட்டது.



இனி இவ்வாக்கியம் விவேகபாநு முத்திராசாலைப் பதிப்புப்புத்தகத்தின் மட்டும் "மாலைமயங்கி வரும்போழ்து என்பதி மதிநிலைகலங்கி நோயுழக்கு மென்றுரைப்பாருமுளர்." என்று காணப்படுகிறது. இதனைப்பரிசோதித்தச்சிட்டவர்கள் இப்பாடத்தில் எங்ஙயங்கண்டாரகளோ தெரியவில்லை. இரண்டோரேட்டில் இவ்வாறிருப்பினும் இப்பாடம் பொருத்தமுடையதன்றென்பது உற்றுநோக்குவார்க்கினிது விளங்கும்.

௧௩௧௧. பெண்ணியலாரெல்லாருங்கண்ணிற்பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

இதன் விசேடவுரையிற்றிலே "தானோக்கியின்புற்றவாறே அவருநோக்கியின் புறுவரென வாசங்கித்து அவர்பாற் பொறாமையெய்துதலின் நுணுக்கமாயிற்று" என்று அச்சுப்பிரதிகளிலெல்லாங்காணப்படும் வாக்கியம் சிலஏடுகளில் "தானோக்கியின்புற்றவாறே அவருநோக்கி யின்புறுவரென ஆசங்கித்து அவள் அவர்பாற் பொறாமையெய்துதலின் நுணுக்கமாயிற்று," என்று காணப்படுகிறது. தலைமகள் தலைமகனைப்பார்த்து இன்புற்றவாறே, அப்பரத்தையரும் அவனைப்பார்த்து இன்புறுவரென ஆசங்கித்து, அத்தலைமகள் அப்பரத்தையர்பாற் பொறாமையெய்துதலின், நுணுக்கமாயிற்று எனப்பொருள்படுதலின், ஏட்டுப்பாடமே பொருத்தமுடைத்தாம்.

அ. கோபாலையன்.

உ

# பத்திராசிரியர் குறிப்பு.

மகா-ள-ள-ஸ்ரீ:அ. கோபால ஐயர் அவர்கள் எழுதிவரும் "திருக்குறளாராய்ச்சி" இம்முறையும் பதிப்பிக்கப்பட்டுளது. இவ்வாராய்ச்சியிலே, முன்னையவற்றினும் சிறந்தனவாகக் கருதி இவர் குறிப்பிட்டுள்ள பாடங்கள் பலவற்றில் ஆக்ஷேபங்கள் நிகழ்தலால், அவற்றை ஈண்டு விசாரிக்கலாயினேம். சில வாரங்கட்கு முன் வெளிவந்த திருக்குறட் (பாக்கெட் எடிஷன்) பதிப்பிலே:—

> ௧௧௮௭. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவில்
> அள்ளிக்கொள் வற்றே பசப்பு.

என்னுங் குறளின் விசேடவுரையில், "கொளல் என்பது குறைந்து நின்றது" என்றபாடம் பொருந்தாதென இவரால் மறுக்கப்பட்டது. இப்பாடம்பற்றி இவர் எழுதுவதுவருமாறு:—"ஆசிரியர் பரிமேலழகர் "அள்ளிக்கொள்வற்று" என்பதற்கு 'அள்ளிக்கொளல்' என்றுகூறாது அள்ளிக்கொள்வது என்றுகூறி, இது வினையாலணையும்பெயர் (தொழிற்பெயரன்று) என்பதை "அள்ளிக்கொள்வது - அள்ளிக்கொள்ளப்படும்பொருள்" என விசேடவுரைவாக்கியத்தால் விளக்குகின்றாராகலின், அதற்கேற்பக் கொள்வதென்பது குறைந்து நின்றது எனக்கூறல்வேண்டுமேயன்றி "கொளல் என்பது குறைந்து நின்றது" எனக்கூறல் பொருந்தாது" என்பதே.

இக்கூற்றினின்று, ஐயரவர்கள், "கொளல் என்பது குறைந்து நின்றது" என்ற பாடத்திற்கு உண்மைப்பொருள் ஒன்றுநிற்க, வேறுபொருள் கொண்டாரென்பது வெளியாகிறது. "அள்ளிக்கொள்வற்று" என்பதற்குப் பரிமேலழகர் எழுதிய பதவுரைவிசேடவுரைகளை நோக்க, அள்ளிக்கொள்வது என்பதே குறைந்துநின்றதென அவ்வுரையாளர் கருதுகின்றார் என்பது யாவர்க்கும் எளிதிற் புலப்படும். அங்ஙனம் புலப்படக்கூடிய கருத்தைத்தான், "கொளல் என்பது குறைந்து நின்றது" என விசேடவுரையிற் பரிமேலழகர் குறிப்பிட்டதூஉமென்க. கொளல் என்னுந் தொழிற்பெயர் குறைந்துநின்றதென்பதன்றே, அவ்வாக்கியப்பொருளெனின், அன்று; பொருளைக் கம்பற்றி உரையாசிரியர் அவ்வாக்கிய மெழுதலின், அதற்கு—கொள் என்னும் முதனிலையடியாகப்பிறந்த வினைவிகற்பங் குறைந்துநின்றதென்பதே கருத்தாம் எனவுணர்க. எனவே, அவ்வினைவிகற்பமாவது "கொள்வது" என்னும் வினைப்பெயர் என்று முன்பின்தொடர்ச்சிநோக்கிக் கொள்ளப்படும். பரிமேலழகர் மூலங்களில்வரும் வினைமுற்று வினைப்பெயர் வினையெச்சமுதலியவற்றுக்கு விசேடமுரைக்குமிடங்களிலே, அவ்வினைவிகற்பங்களை உள்ளபடி எடுத்துரையாது, அவற்றுக்குத் தொழிற்பெயரைக்காட்டி எழுதிச்செல்லும் வழக்குடையர் என்பது அவருரையை நீளநோக்குவார்க்கு நன்கு வெளியாகும். இவ்வழக்கை, "சிறுமை நமக்கொழிய" (௧௨௩௧) என்னுங் குறளில், "உள்ள எனக் காரணம் காரியத்திற்காயிற்று" எனற்பாலதை, உள்ளுதலெனத் தொழிற்பெயராற்காட்டி, அதற்கேற்ப "உள்ளுதலென்பது காரணப்பெயர் காரியத்திற்காய ஆகுபெயர்" எனவுரைத்தும், "உழந்துழந்து" என்னுங் குறளின் விசேடவுரையிலே 'அறுகஎன இடத்துநிகழ் பொருளின்றொழில் இடத்தின்மேலேற்றப்பட்டது" எனற்பாலதை, "அறுதல்" எனத் தொழிற்பெயராற் காட்டியுரைத்தும் இங்ஙனமே எண்ணிறந்த இடங்களில் எழுதிச்செல்லுதல் நோக்கிக்கொள்க. இம்முறையே ஈண்டும், "கொளல் என்பது குறைந்து நின்றது" என்பதற்கு—"புல்லிக்கிடந்தேன்" என்ற குறளில்வரும் சொற்களிலே, கொள் என்பதனடியாகப்பிறந்த வினை யாது, அது (கொள்வது என்றபடி) குறைந்து நின்றது—எனப் பொருளைக்கம்பற்றி உரைகொள்ள வேண்டுமேயன்றி, சொல்லைக்கம்பற்றி, கொளல் என்னுந் தொழிற்பெயர் குறைந்துநின்றதெனக்கருதிக் குற்றங்கூறல் பெருங்குற்றமாமென்க.

இனி, "கொள்வதென்பது குறைந்துநின்றது" எனப்பரிமேலழகர் விளங்க எழுதியிருப்பின், ஆராய்ச்சியே நிகழ்தற்கிடமின்றாகும். அவ்வாறு ஒருபிரதியினும் காணப்படாமை "திருக்குறளாராய்ச்சிக்கார"ரும் நன்கறிந்தது. இங்ஙனம் உரையாளர் விளங்கவெழு

தாமற் சென்றது, மாணுக்கர் முன்பின்தொடர்ச்சிநோக்கி உய்த்துணர்தற்கே என இவர்கருதியது பொருந்தியதேயாம். ஆயின், அங்ஙனம் உய்த்துணரவைத்த உரையாளரெழுத்து— "கோள்வ் எனக் குறைந்து நின்றது' எனத்தாம் அருமையாகக்கண்ட பாடமே என்பது இவர்கூற்று. இப்பாடப் பொருத்தத்தைச் சிறிது விசாரிப்போம். தாம்கண்ட ஏட்டுப்பிரதிகளில், "கொள்வெனக்குறைந்து நின்றது' என்று காணப்படுகிறது."—என, கொள் என்பதிலுள்ள ளகரம் புள்ளியிட்டதிலேயோடு—பிரதிகளிலுள்ளதாகக் கூறுகின்றார். பழைய ஏட்டுப்பிரதிகளில் புள்ளியிட்டுக்காட்டும் முறையை யாம் கண்டதில்லை; "கொளவென" என்று புள்ளியின்றித்தான் இவர் பார்த்த ஏடுகளில் உள்ளன. இவர்கூற்று உண்மையேயாயினும், பரிமேலழகர் நடைமுறையைநோக்க, இவர்பாடம் பொருத்தமற்றதாம்; என்னை? பரிமேலழகர் விகாரப்பட்ட சொற்றொடர்களை விளக்குமிடங்களிலெல்லாம், அவற்றின் இயற்கைநிலையைக் குறிப்பிட்டு, "பிழையாததற்றென்பது குறைந்துநின்ற" தென்றாற்போலவேனும், இயற்கைநிலை விகாரநிலை இரண்டையுங் குறிப்பிட்டு "கலந்ததற்றென்பது கலந்தற்றென விகாரமாயிற்று" என்றாற்போலவேனும் எழுதிச்செல்வதல்லது, விகாரநிலைமட்டிற் காட்டியொழியார். ஒருகால் உய்த்துணருமாறுகாட்டினரெனினும், ஈண்டு "கொள்வற்றெனக் குறைந்து நின்ற" தெனவே எழுதுவர். அங்ஙனமின்றி, விகுதிநீக்கிப் பகுதி இடைநிலைகள் மட்டுமுள்ள குறைச்சொற்களைக்காட்டி, "கலந்த்" "பிழையாத்" "கொள்வ்" இவை குறைந்து நின்றன" என்றெழுதிச் செல்லுதல் பரிமேலழகர் கொண்டமுறையன்றென உணர்க. இவற்றால், ஐயரவர்கள் காட்டிய "கொள்வ்" என்னும் பாடம் சிறிதும் பொருந்தாமை தெளிவாம். ஆகவே, "கொள்வதென்பது குறைந்து நின்றது என்பதை உய்த்துணரும் வகையாற் பரிமேலழகர் அமைத்தவாக்கியம்—"கொளல் என்பது குறைந்துநின்றது" என்பதேயன்றிப் பிறிதில்லை என்பது பெறப்படும்.

கஉகக. நனவினு னல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணு தவர்.

இக்குறளின் விசேடவுரையிலே, "இயற்பழித்தது பொறாது புலக்கின்றாளாகலின், நன்மை தோன்றக்கூறினாள்" என்ற வாக்கியத்துள்ள "நன்மை" என்பது 'பன்மை' எனக் காணப்படுகின்றதென்றும், அதுவே பொருந்துவதென்றும் எழுதினார். தோழியைப்பன்மையாற் கூறியவழுவை அமைத்தற்கே மேற்குறித்தவாக்கியம் எழுந்ததென்று இவர் துணிந்ததற்கும், "நன்மைதோன்றக்கூறினாள்" என்ற பாடம் பொருந்தாதென்றதற்கும் பரிமேலழகர் கூற்றினின்று இவர் கண்ட சிறந்த ஆதாரங்களின்னவென்பது விளங்கவில்லை. 'பன்மை' என்பதே பாடமாயின் "பன்மையாற் கூறினார்" எனவே அமையும். (ருருசு-ம் குறளின் விசேடவுரையிலும் 'அவர்வயின்விதும்பல்' என்னும் அதிகாரத்துக்கு விசேடங்கூறுமிடத்தும் பிறவிடங்களிலும் "பன்மையாற் கூறினார்" என்றே எழுதல் காண்க.) அங்ஙனமன்றி, "தோன்றக்கூறினார்" என்ற சொல்வருதலின், அஃது ஒரு பொருட்பேற்றையே விளக்கத்தக்கதாகும். (சுஉஉ-ம் குறள் விசேடவுரை முதலிய பலவிடங்களினுங் கண்டுகொள்க.) தலைவன் தன்பாற்றவறிழைத்தனனாயினும், தோழி அதனை எடுத்துரைக்கப்பொறாது தலைமகள் புலந்து, தன்காதலர் கனவின்கண் ஆற்றி நல்குகின்றார் எனத் தலைவனுக்கு நன்மைகற்பித்தலை விளக்குதல் கருத்தாகலின், "நன்மை" என்றபாடம் குற்றமுடையதன்றென உணர்க.

இனி, யாங்கண்ட வேறு பிரதியொன்றில் "இயற்பழித்தது பொறாது புலக்கின்றாளாகலின் அயன்மைதோன்றக் கூறினாள்" எனக் காணப்படுகின்றது. தன்னொடு வேற்றுமையில்லாத தோழியைக் "காணாதவர், "நோவர்" எனப் பிறள்போற் புலந்துகூறுகின்றாளாகலின், "அயன்மைதோன்றக் கூறினாள்" என்றபாடமே பரிமேலழகர் கொண்டதென்பது துணியப்படும். அடுத்துவருந் திருக்குறளினும் இதனோடொத்த கருத்து வெளிப்படுதலைப் பரிமேலழகர் உரைநோக்கியுணர்க.

கஉஉக. பதிமருண்டு பைதலுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

இதன் விசேடவுரையிற்றிற் பிறன்கோட் கூறலாகப் பரிமேலழகர் காட்டியுள்ள "மாலைமயங்கிவரும்போழ்து என்பதி மதிநிலைகலங்கி நோயுழக்கு மென்றுரைப்பாருமுளர்" என்னும் உரைப்பாடத்தில், ஒருநயமுமில்லையென்று ஒதுக்கினர்! "மாலைவரும்பொழுது என்மதி

நிலைகலங்கிநோயுழக்கும்" என்ற வேறுபாடத்தில், இவர் கண்டுகொண்ட பொருணயமின்னதென்று தெரிந்திலது. பொழிப்புரை, செவ்வனே அமைந்த நயம்போலும்! பரிமேலழகர் மதிமருண்டு என்பதை மாலையுடன் சேர்த்துப் பொருணயம்படக்கூறி, "மருண்டு மாலை படர்தரும்போழ்து, பதி மதிமருண்டு பைதலுழக்கும்" என, மதியை வேறிடத்திலைத்த பிறர்கருத்தையுங் காட்டினர். இவ்வாறே அவ்வுரையாளர், தம்முரையின்வேறாகப் பிறர் கூறும் சிறுவேற்றுமைகளையும் எழுதிச்செல்வதைப் பல்லிடங்களினுங் காணலாம். இங்ஙனம் நிற்க, "மதியுமடந்தை முகனும்" என்றகுறளில், மீன்கள் ஓரிடத்து நில்லாதியங்குதல்பற்றிப், பதியிற்கலங்கிய என்பதற்கு, நிலையிற்கலங்கித் திரியாநின்றன என்று தாற்பரியமாகப் பரிமேலழகர் எழுதியபொருளையே, ஈண்டுப் பதிமருண்டு என்பதற்கும் கொள்ள வேண்டுமென நியமித்தற்கு, பரிமேலழகரேனும் அவர்குறித்த வேற்றுரைகாரரேனும் திருக்குறளாராய்ச்சிக்காரருக்குத் தனித்துபதேசித்ததுண்டுபோலும்! அங்ஙனமாயின் பிறன்கோள்கூறும் இடங்கட்கெல்லாம் இவரிடமே நயங்கேட்டுத் தமிழறிஞர் மகிழ்க்கடவர்!

பத்திராசிரியர்.

---

# கரவைவேலன் கோவை.

(முற்றொடர்ச்சி.)

---

## பாங்கி ஐயமுற்றோர்தல்.

பாங்கி யையமுற்றோர்தலாவது தலைவியின் மாட்டுத்தோன்றிய மேனியின்மெலிவைப் பாங்கிநோக்கி இப்போது இஃது எய்தியவாறென்னை யென்று பலவாறு சந்தேகமுற்று ஆராய்ந்தறிதல்.



### செய்யுள்.

௧௧. ஆடுஞ் சுனைகுடைந் தோவண்ட லாடி யயர்ந்திளைத்தோ
கூடும் புதுமலர் கொய்தோ வயற்கரைக் கோடுமன்னப்
பேடும் பயிலுங் கரவையில் வேலன் பெருஞ்சிலம்பிற்
கோடும் புருவச் சிலைமான்பொன் மேனி குழைந்ததுவே.

புருவச்சிலைமான் பொன்மேனி குழைந்தது,

சுனைகுடைந்தோ? வண்டலாடி அயர்ந்திளைத்தோ? புதுமலர் கொய்தோ? எதனாலாயிற்று? எனமுடிக்க. சுனை - வாவி. குடைதல் - முழுகல். வண்டல்-... வயற்கரை - வயலருகு கோடு - சங்கு. அன்னப்பேடு - அன்னப்பேடை. கோடும் - வளைந்த. புருவச்சிலைமான் - புருவமாகிய வில்லினையுடைய பெண். பொன் - அழகு. குழைதல் - மெலிதல்.

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருட் சொல்லினாடல்.

மெய்யினும் - மெய்ப்பொருளானும். பொய்யினும் - பொய்ப்பொருளானும். வழிநிலை - குற்றேவல். கவர்பொருள் - மெய்யும் பொய்யும் விரவுவதாகவும், பிறவாறாகவும் கூறும்பொருள். நாடல் - ஆராய்தல்.

### செய்யுள்.

௧௨. இன்றொன் றதிசயங் கண்டோய் வெளுப்பு மிதழ்செம்மையும்
ஒன்றொன்று மாற்றிக் கொளச்செய்த தேயசைந் தோடுதென்றற்
கன்றொன்று சோலைக் கரவையில் வேலன் கனகிரிமேற்
குன்றொன்று வார்முலை நீர்நீர் படிந்த குளிர்சுனையே.

குளிர்சுனை மாற்றிக்கொளச் செய்தது என முடிக்க. இன்றொன்று அதிசயம் - இன்றைக்கு ஓரதிசயம் (கண்டாம். அஃது யாதெனின்.) கண்தோய் வெளுப்பும், இதழ்செம்மையும் ஒன்றையொன்று மாற்றிக்கொளசெய்தது - கண்ணானது தன்பாற்பொருந்திய வெளுப்பும், இதழானது தனது செம்மையுமாக இரண்டும் இரண்டையும் ஒன்றற்கொன்று மாற்றிக்கொள்ளும்படி செய்தது. கண்சிவந்தது

எனவும், இதழ்வெளுத்தது எனவும் கொள்க. தென்றற்கன்று-இளந் தென்றல். வார்முலை - விளி.

## பெயர் வினுதல்.

இருவருமுள்வழிச்சென்று ஏதிலன் போலநின்று அவர்களை நோக்கி நும்பதியாது என வினவிய தலைமகன் அவ்வினுவிற்கு விடை பெருனாய்ப் பின்னர்ச்சிறிதே உறவுதோன்றநின்று நும்பெயர் கூறுமின் என அவர்பெயர் வினவிநிற்றல்.

### செய்யுள்.

கங. முத்தம் பொதியும் பவளந் திறந்து முறையினும்பேர்
துத்தம் பயின்மொழி யாற்சொல்லுஞ் சால்வழிச சூல்பெருரும்
நத்தம் பயிலுங் காவையில் வேலனஞ் ஞட்டிலுங்கள்
சித்தம் பயில்பதி சொல்லா திருக்குந் தெரிவையரே.

தெரிவையரே! நும் பெயர் சொல்லும் எனமுடிக்க. முத்தம் பொதியும் பவளந்திறந்து என்பது உருவகவுயர்வு நவிற்சியணி. வாயைத்திறந்து எனப் பொருள்படும். முத்தமென்றது பற்களை. பவளம் என்றது வாயினை. துத்தம் பயில்மொழி - பாலினை ஒத்த சொல். சூல்பெருகும் நத்தம் - கருமுதிர்ந்தசங்கு. சித்தம்பயில்பதி- மனம்பயின்ற ஊர்.

## எண்ணந்தெளிதல்.

பதிவினுதல் முதலிய பலவகை வினுக்களையுங்கேட்ட பாங்கி இடமுறச்சூழ்ந்து இத்தலைவருடைய மனக்கருத்து இதுவே என்று தெளிதல்.

### செய்யுள்.

கச. எடுத்தார் வினுமுத லும்பதி யேதென் றிதனைவிட்டுத்
தொடுத்தார் வினுமுகம் பற்பல வாதலி ஞற்றுணையே
அடுத்தாரை வாழ்விக்கும் வேலன் காவை யணிவரைமேல்
வடுத்தாரை நோக்கி பொருட்டென்று காணு மனத்தினுக்கே.

முதல் நும் பதி ஏது என்று வினு எடுத்தார் எனவும், இதனை விட்டுப் பற்பல வினு முகந் தொடுத்தார் எனவும் இயையும். முகம்-



வாய். வடு - மாம்பிஞ்சு. நோக்கி - கண்ணுடையவள். (இத்தலைவர் இங்ஙனம் வினவித்திரியும் கருத்தெல்லாம்) மனத்தினுக்கு வடுத்தாரை நோக்கி பொருட்டு என்று காணும். காணும் - தோன்றும்.

## கெடுதி வினுதல்.

கெடுதி வினுதலாவது தலைவன் தான் பெற்றிருந்து இழந்து போன யானை, புலி, கலை, நெஞ்சு முதலியவற்றுள்ளே ஒன்றினை வினுவுதல். புகுந்தது என்னும் பொருளைப் புகுதி என்பது விளக்கிநிற் போலகெடுத்தது என்னும் பொருளைக்கெடுதி என்பது ஈண்டு விளக்கி நின்றது. கெடுத்தல் - இழத்தல். சந்திரனை இழந்த உரோகிணியை "மதியங் கெடுத்த வயமீன்" என்று சீவகசிந்தாமணிகாரரும் கூறுவர். இங்கே கெடுதி என்றது கலைமானை. கெடுதி என்பது இங்கே வினையடியாகப் பிறந்த ஒரு பெயர்.

### செய்யுள்.

கரு. எழுமுகி றம்மி லிரண்டெனப் பூசுரற் கென்றுந் தெண்ணீர்
விழுமிய பொன்பொழி வேலன் காவையில் வெற்பிலென்னே
வுழுகரு மேனிசெந் நீர்பாய்ந் துதிரம் பொழியிறுதிச்
செழுமுகில் போலொரு மான்வந்த தோவித் தினைப்புனத்தே.

எழுமுகிறம்மி லிரண்டெனப் பொழி வேலன் என இயையும். தம்மில் இரண்டு என - எழுவகை முகில்களுள்ளே சம்வர்த்தம், புட்கலாவர்த்தம் என்னும் இருமுகில்களையும் போல் என்க. பொன் பொழிதற்குப் புட்கலாவர்த்தமும், அப்போது பொழியுந் தண்ணீர்க்கு சம்வர்த்தமும் உவமானம். சம்வர்த்தம் - வெகு நீர்சொரியும் மேகம். புட்கலாவர்த்தம் - வெகு பொன்சொரியும் மேகம். இதனுற் காவைவேலனுடைய சொர்ணதானத்தின் பெருக்கம் உரைக்கப்பட்டது.

என் ஏ. உழு கரு மேனி - என்னது பாணந்தைத்த கரிய சரீரம். செந்நீர் - இரத்தம். உதிரம் பொழி இறுதி செழுமுகில் - உதிரோற்காரி. உதிரோற்காரி என்பது உதிரத்தினைக் கால்வது எனப் பொருள்படும். உதிரம் - இரத்தம். உற்காரி - கக்குவது.

## தலைவனவ்வகை வினாதல்.

தலைவன் அவ்வகை வினாதலாவது முன்னரே வினாவியது போலப் பின்னும் கெடுதி வினாவுதல்.

### செய்யுள்.

கசு. திருமா னிரண்டனை யீருங்க ளஞ்சனச் செவ்வரிக்கண்
பொருமான வாளியி லெய்தேன் வனத்திற் புரியுங்கள்ளந்
தருமானை யெய்த கரவையில் வேலன் றடஞ்சிலம்பில்
ஒருமான் கலைவந்த துண்டாயிற் சொல்லு முறையின்றே!

திருமானிரண்டனையீர் என்றது பாங்கியுந் தலைவியும் பகர்ந்து மற்றியை யாங்ஙனமிருந்துழிச் சென்று வினாவுகின்றானாதலின் அவ்விருவரையும் விளித்துக் கூறியது என்க. திருமான் - இலக்குமி. இரண்டு இலக்குமிகள் போலுள்ளீர் என்க. அஞ்சனம் - மை. கண்பொரும் மானவாளி என்பது விபரீதவுவமை. மானம் - பெருமை. வாளி - அம்பு. கள்ளம் தரும் மான் என்றது மாரீசனாகிய மானை.

## ஒளிந்தன வினாதல்.

தலைவன் ஊரும், பேரும், கெடுதியும், பிறவும் வினாவியபின் அவையல்லாதனவாகிய சில வினாவி நிற்றல். அவை யல்லாதனவற்றுள்ளே, பேசாதிருக்கும் வகையையே ஈண்டு வினாவுகின்றான்.

### செய்யுள்.

கஎ. மாசால மோமணி வாய்நோகு மோநும் மரபியலின்
ஆசார மோவிர தத்தடை வோதிரை யாடை சுற்றுந்
தேசாதிபர் மெச்சும் வேலன் கரவைச் சிலம்பனையீர்
பேசா திருக்கும் வகையின்ன வாறென்று பேசிடுமே.

மாசாலம் - மகாபூயம். ஆசாரம் - வழக்கம். விரதத்து அடைவு - விரதமுறை. திரையாடை - கடலாடை. தேசாதிபர் - அரசர். இன்னவாறு - இன்ன காரணம். சிலம்பனையீர்! பேசிடும் என முடிக்க.

## எதிர்மொழி கொடுத்தல்.

தலைமகன் ஒருமான்கலை வந்ததுண்டோ? என்று வினாவிய வினாவுக்குப் பாங்கி மறுமொழி கூறல். எதிர்மொழி - மறுமொழி.



162403

### செய்யுள்.

கஅ. பொற்கலை மாதவன் சேயனை யாயருள் பொங்குமுக
விற்கலை மாமதி வேலன் கரவையில் வெற்பகத்தே
நற்கலை யாயு முனிவோர் புரத்து நடுந்தருவின்
வற்கலை யன்றி யிவண்கண்டி லேமொரு மான்கலையே.

பொற்கலைமாதவன்சேய் - மன்மதன். பொற்கலை - பீதாம்பரம். மாதவன் - நாராயணமூர்த்தி. சேய் - புத்திரன். முகவிற்கலைமாமதி - முகமாகிய பூர்ணசந்திரன். விற்கலைமா என்பது இடைப்பிறவரல். வில் - ஒளி. கலை - கூறு. மா - பெருமை. நற்கலை - வேதாகமங்கள். புரம் - நகரம். தரு - மரம். வற்கலை - மரவுரி. மான்கலை - ஆண்மான். வற்கலையன்றி மான்கலை கண்டிலம் என்பது ஒருவகைப் பிரேளிகை.

## இறைவனை நகுதல்.

இவ்வாறு மறுமொழி கூறக்கேட்ட தலைவன்சிறிதே மனஞ்சோர்ந்து அப்பாற் சென்றானாகத் தலைவியைப்பாங்கி முன்னிலையாக்கித் தலைவன் செயலை எடுத்துக்கூறி அவனை அசதியாடல். அசதியாடல் - மிகச்சிறித்துரைத்தல்.

### செய்யுள்.

ககூ. தேடிய சீர்த்திக் கரவையில் வேலன் சிலம்பிற்குழை
சாடிய வேல்விழி மானே மதியைத் தலைவன் செங்கை
கூடிய மாந்தளி ரம்புபட் டோடிக் குலைந்துவெரீஇ
ஓடிய மான்புகுந் தன்றே குரங்கியென் றோதுவதே.

வேல்விழிமானே! மதியைக்குரங்கி என்று ஓதுவது தலைவன் செங்கையம்பு பட்டோடிக் குலைந்துவெரீஇ ஓடிய மான்புகுந்தன்றே! என முடிக்க. இது தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரம். சீர்த்தி - மிகுபுகழ். குழை - காது. விழிமான் - கண்களையுடைய பெண். மதி - சந்திரன். வெரீஇ - பயந்து. அன்றே! என்பது பிரசித்தியை உணர்த்தும் ஓரிடைச்சொல். குரங்கி-குரங்கமுடையவன்; சந்திரன். குரங்கம் - மான், மான்களங்கம்.

### மதியினவுரவர் மனக்கருத்துணர்தல்.

தலைவன், தலைவி என்னும் இருவரும் தத்தம்சிந்தையிற் கருதியிருக்குஞ் செயலைப்பாங்கி தன்புத்தியினாலே நிச்சயித்துணர்தல். கருத்து - கருதப்பட்டது.

### செய்யுள்.

௨௦. திருவள ராகன் காவையில் வேலன் சிலம்பகத்தில்
இருவரு மோருயிர் கூடிரண் டென்ப திவர் விழித்தேன்
உருவளர் வேளனை யான்விழிப போதினுடன் கலந்து
மருவுத லாலவர் தங்கண்க ளேசொல்லும் வாயின்றியே.

அவர்தங்கண்களே வாயின்றி இருவரும் ஒருயிர்கூடு இரண்டு என்பது சொல்லும் எனமுடிக்க. திருவளராகன் - இலக்குமிதங்கும் மார்புடையவன். கூடு - உடம்பு. தேன் - வண்டு. கண்கள் வாயின்றிச் சொல்லும் என்பது சமாதி என்னும் குணவலங்காரம்.

### இறையோனிறைவிதன்மையியம்பல்.

இறையோனிறைவிதன்மை யியம்பலாவது பாங்கி அறியாள் போன்று வினய வழித்தலைவன் தன்னை வருத்திய தலைவியின் தன்மையைப் பாங்கிக்குக் கூறுதல்.

### செய்யுள்.

௨௧. சுந்தர மாரன் காவையில் வேலன் சுரும்பனையாய்
அந்தர நீன்முகில் கூன்மதி யார மணிந்தசங்கம்
மந்தர நேரிடை வார்குழல் வாணுதல் வாய்ந்தமணிக்
கந்தர மாமுலை யாமென தாவியின் கண்மணிக்கே.

மாரன் - மன்மதன். சுரும்பனையாய் என்றது பாங்கியை. கண்மணிக்கு அந்தரம் இடை எனவும் முகில் குழல் எனவும், மதிநுதல் எனவும் சங்கம் கந்தரம் எனவும் மந்தரம் முலை எனவும் முடிக்க. அந்தரம் - ஆகாயம். மதி - சந்திரன். ஆரம் - முத்து. கந்தரம் - கழுத்து.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---



# சோதிடகணிதம்.

(முற்றொடர்ச்சி.)

## புத வாக்கியபலன்கள்.

—:(o):—

| எண். | மந்தசா | | மகரசா | | கடகசா | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 19 | 19 | 63 | 62 | 141 | 141 | |
| 2 | 38 | 19 | 125 | 62 | 279 | 138 | |
| 3 | 55 | 17 | 187 | 62 | 409 | 130 | |
| 4 | 72 | 17 | 248 | 61 | 532 | 123 | |
| 5 | 88 | 16 | 308 | 60 | 646 | 114 | |
| 6 | 103 | 15 | 367 | 59 | 752 | 106 | |
| 7 | 116 | 13 | 425 | 58 | 846 | 94 | |
| 8 | 129 | 13 | 483 | 58 | 931 | 85 | |
| 9 | 141 | 12 | 540 | 57 | 1006 | 75 | |
| 10 | 151 | 10 | 595 | 55 | 1070 | 64 | |
| 11 | 161 | 10 | 650 | 55 | 1125 | 55 | |
| 12 | 170 | 9 | 703 | 53 | 1171 | 46 | |
| 13 | 178 | 8 | 754 | 51 | 1207 | 36 | |
| 14 | 185 | 7 | 805 | 51 | 1237 | 30 | |
| 15 | 191 | 6 | 853 | 48 | 1258 | 21 | |
| 16 | 196 | 5 | 900 | 47 | 1273 | 15 | |
| 17 | 201 | 5 | 945 | 45 | 1280 | 8 | |
| 18 | 205 | 4 | 988 | 43, | 1284 | 3 | |
| 19 | 208 | 3 | 1029 | 41 | 1280 | 4 | வக்கிரம். |
| 20 | 210 | 2 | 1018 | 39 | 1272 | 8 | |
| 21 | 212 | 2 | 1104 | 36 | 1259 | 13 | |
| 22 | 214 | 2 | 1137 | 33 | 1242 | 17 | |
| 23 | 214 | ... | 1168 | 31 | 1221 | 21 | |
| 24 | 215 | 1 | 1197 | 29 | 1197 | 24 | |

## குருசுத்தஸ்புடம்.

மேலே செவ்வாய்க்கு செய்ததுபோலவே இதற்கும் 4-சம்ஸ்காரங்களுஞ் செய்யவேண்டியது. மத்தியஸ்புடம் வரையில்மேலே அட்டவணையிற் கொடுபட்டிருக்கும் எண்ணைக்கொண்டு செய்து துருவம் கூட்டி அதற்குமேல் சம்ஸ்காரங்கள் செய்யவும்.

## குருவாக்கிய பலன்கள்.

| நிர். | மந்தசா. | | மகரசா. | | கடகசா. | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 20 | 20 | 36 | 36 | 56 | 56 | |
| 2 | 40 | 20 | 74 | 38 | 111 | 55 | |
| 3 | 60 | 20 | 111 | 37 | 165 | 54 | |
| 4 | 81 | 21 | 147 | 36 | 216 | 51 | |
| 5 | 101 | 20 | 183 | 36 | 266 | 50 | |
| 6 | 121 | 20 | 217 | 34 | 312 | 46 | |
| 7 | 141 | 20 | 252 | 35 | 357 | 45 | |
| 8 | 161 | 20 | 284 | 32 | 398 | 41 | |
| 9 | 180 | 19 | 316 | 32 | 437 | 39 | |
| 10 | 199 | 19 | 348 | 32 | 472 | 35 | |
| 11 | 217 | 18 | 378 | 30 | 504 | 32 | |
| 12 | 234 | 17 | 407 | 29 | 533 | 29 | |
| 13 | 250 | 16 | 435 | 28 | 558 | 25 | |
| 14 | 266 | 16 | 462 | 27 | 581 | 23 | |
| 15 | 280 | 14 | 487 | 25 | 600 | 19 | |
| 16 | 293 | 13 | 511 | 24 | 615 | 15 | |
| 17 | 305 | 12 | 533 | 23 | 628 | 13 | |
| 18 | 315 | 10 | 554 | 21 | 638 | 10 | |
| 19 | 324 | 9 | 573 | 19 | 645 | 7 | |
| 20 | 331 | 7 | 589 | 16 | 648 | 3 | |
| 21 | 337 | 6 | 604 | 15 | 649 | 1 | |
| 22 | 342 | 5 | 617 | 13 | 647 | 2 | வக்கிரம் |
| 23 | 343 | 1 | 628 | 11 | 644 | 3 | |
| 24 | 344 | 1 | 637 | 9 | 637 | 7 | |



| | | | |
|---|---|---|---|
| இதன்படி நவக்கோள்கண்டம் 147130-க்கு குருமத் | R | ō | 1 |
| தியஸ்புடம் துருவம்உள்பட இராசி ... ... | 5. | 13. | 33 |
| முதல் சம்ஸ்காரஞ் செய்தபலன் ... ... | 5. | 14. | 27 |
| இரண்டாஞ் சமஸ்காரஞ் செய்தபலன் ... ... | 5. | 19. | 15 |
| மூன்றாஞ் சம்ஸ்காரஞ் செய்தபலன் ... ... | 5. | 14. | 33 |
| குருசுத்தஸ்புடம் ... ... ... .. | 5. | 24. | 11 |

## சுக்கிரஸ்புடம் செய்ய.

மேலே அட்டவணையிற் கொடுத்தபடி சுக்கிரமத்தியஸ்புடம் செய்துகொண்டு புதனுக்குச் செய்த சமஸ்காரங்களைச்செய்ய சுக்கிர சுத்தஸ்புடம் ஆகும்.

## வாக்கிய பலன்கள்.

| எண். | மந்தசா | | மகரசா | | கடகசா | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11 | 11 | 95 | 95 | 616 | 616 | |
| 2 | 21 | 10 | 190 | 95 | 1106 | 550 | |
| 3 | 30 | 9 | 285 | 95 | 1618 | 452 | |
| 4 | 38 | 8 | 380 | 95 | 1967. | 349 | |
| 5 | 46 | 8 | 473 | 93 | 2230 | 63 | |
| 6 | 53' | 7 | 567 | 94 | 2421 | 191 | |
| 7 | 59 | 6 | 660 | 93 | 2561 | 140 | |
| 8 | 64 | 5 | 753 | 93 | 2657 | 96 | |
| 9 | 69 | 5 | 845 | 92 | 2717 | 60 | |
| 10 | 73 | 4 | 937 | 92 | 2752 | 35 | |
| 11 | 76 | 3 | 1028 | 91 | 2767 | 15 | |
| 12 | 79 | 3 | 1119 | 91 | 2762 | 15 | வக்கிராரம்பம் |
| 13 | 81 | 2 | 1209 | 90 | 2747 | 15 | |
| 14 | 82 | 1 | 1297 | 88 | 2720 | 27 | |
| 15 | 83 | 1 | 1386 | 89 | 2684 | 36 | |
| 16 | 84 | 1 | 1474 | 88 | 2641 | 43 | |
| 17 | 85 | 1 | 1559 | 85 | 2591 | 90 | |
| 18 | 85 | ... | 1645 | 86 | 2535 | 56 | |
| 19 | 85 | ... | 1729 | 84 | 2475 | 60 | |
| 20 | 86 | 1 | 1811 | 82 | 2413 | 62 | |
| 21 | 86 | ... | 1894 | 83 | 2347 | 66 | |
| 22 | 86 | ... | 1974 | 80 | 2276 | 71 | |
| 23 | 86 | ... | 2052 | 78 | 2204 | 72 | |
| 24 | 86 | ... | 2129 | 77 | 2129 | 75 | |

| | இ | ° | ′ |
|---|---|---|---|
| முன் நவக்கோள்கண்டம் 147 130-க்கு | | | |
| சுக்கிரமத்தியஸ்புடம் இராசி | 3 | 17 | 27 |
| அர்த்தசீக்கிரம் அல்லது 1 சம்ஸ்காரம் | 9 | 29 | 15 |
| பூர்ணமந்தம் அல்லது உ-ம் ஸம்ஸ்காரம் | 9 | 23 | 34 |
| சுக்கிரசுத்தஸ்புடம் இராசி | 10 | 9 | 37 |

## சநிசுத்தஸ்புடம் செய்ய.

மேலே அட்டவணையிற் கொடுத்தபடி சநிக்கு மத்தியஸ்புடம் செய்துகொண்டு செவ்வாயைப்போல் நான்கு சம்ஸ்காரங்களுஞ் செய்ய சுத்தஸ்புடமாகும்.

## வாக்கிய பலன்கள்.

| எண். | மந்தசா | | மகரசா | | கடகசா | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 26 | 26 | 22 | 22 | 28 | 28 | |
| 2 | 57 | 31 | 45 | 23 | 56 | 28 | |
| 3 | 82 | 25 | 65 | 20 | 83 | 27 | |
| 4 | 112 | 30 | 88 | 23 | 109 | 26 | |
| 5 | 142 | 30 | 109 | 21 | 134 | 25 | |
| 6 | 172 | 30 | 129 | 20 | 157 | 23 | |
| 7 | 205 | 33 | 148 | 19 | 180 | 23 | |
| 8 | 236 | 31 | 167 | 19 | 201 | 21 | |
| 9 | 268 | 32 | 185 | 18 | 221 | 20 | |
| 10 | 299 | 31 | 202 | 17 | 239 | 18 | |
| 11 | 330 | 31 | 218 | 16 | 257 | 18 | |
| 12 | 360 | 30 | 234 | 16 | 271 | 14 | |
| 13 | 389 | 29 | 249 | 15 | 285 | 14 | |
| 14 | 416 | 27 | 262 | 13 | 298 | 13 | |
| 15 | 442 | 26 | 276 | 14 | 309 | 11 | |
| 16 | 464 | 22 | 287 | 11 | 318 | 9 | |
| 17 | 487 | 23 | 298 | 11 | 326 | 8 | |
| 18 | 506 | 19 | 309 | 11 | 333 | 7 | |
| 19 | 522 | 16 | 317 | 8 | 338 | 5 | |
| 20 | 536 | 14 | 324 | 7 | 341 | 3 | |
| 21 | 547 | 11 | 331 | 7 | 344 | 3 | |
| 22 | 555 | 8 | 335 | 4 | 345 | 1 | |
| 23 | 559 | 4 | 340 | 5 | 344 | 1 | வக்கிரம் |
| 24 | 561 | 2 | 343 | 3 | 343 | 1 | |



| | இ | ° | ′ |
|---|---|---|---|
| நவக்கோள்கண்டம் 147 130க்கு | | | |
| சநிமத்தியஸ்புடம் | 0 | 2 | 20 |
| அர்த்தமந்தம் அல்லது 1 சமஸ்காரம் | 11 | 28 | 48 |
| அர்த்த சீக்கிரம் | 11 | 26 | 16 |
| பூர்ணமந்தம் | 11 | 24 | 40 |
| சநிசுத்தஸ்புடம் | 11 | 19 | 47 |

இனி, இராகு சுத்தஸ்புடஞ்செய்ய மத்தியஸ்புடஞ்செய்துகொண்டு 12 இராசியிற் கழித்துவரும் மிச்சமே சுத்தஸ்புடமாகும். இதன்படி ராகுக்கு ஆயிற்று 1 10 34

கேதுக்கு இராகு சுத்தஸ்புடத்தில் 6 இராசிகூட்டிவருவது கேது சுத்தஸ்புடமாகும். இதன்படி சுத்தஸ்புடம் 7 10 34

(இன்னும் வரும்.)

இலக்கணவிளக்க பரம்பரை,

சோமசுந்தரதேசிகன்.

# கம்போடியா பருத்தி.*

இவ்வுலகின்கண் மனிதர்களுக்கு ஊணுக்குப்பின் உடைமுக்கியமாதலாலும், மிக்க உஷ்ணப்பிரதேசமான இந்தியாவில் நம் வறுமையையும், பருத்திநூலினாலாக்கப்படும் ஆடைகளின் விலைசரசத்தையும் உத்தேசித்து இந்தியர்கள் வெகுவாய்ப் பருத்தியாடைகளையே உபயோகித்து வருவதாலும், உணவுப்பொருள்களுக்குப்பின் விசேஷித்துப்பருத்தி பயிரிடுவதைப்பற்றியும், பருத்தியாடைகளையுண்டாக்குவதற்கான கைத்தொழிலைப் பற்றியும் நமக்கு எவ்வளவு சிரத்தையும் கவனமும் இருக்கவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். ஆகையால் இனி இந்தியாவில் விசேஷப் பிரதான்யமடைந்து தேசக்ஷேமத்தையும் செல்வத்தையும் வெகுவாய் அபிவிருத்தி செய்யப்போகிறதென்று எதிர்பார்க்கப்படுகிறதும், உலகத்திற் பேர்போன பருத்தியினங்களுள் ஒன்றுமான 'கம்போடியா பருத்தி' யைப்பற்றிச் சில விஷயங்கள் கூறுவேன் :—

உலகத்தில் பருத்தி விசேஷமாய் விளையும் நாடுகள் இந்தியா, அமெரிக்காவில் ஐக்கியமாகாணங்கள், ஈஜிப்ட்தேசம், இந்துசீன தீபகற்பமுமாவன. அமெரிக்கா, ஈஜிப்ட் முதலிய நாடுகளில் பருத்தி விளைச்சற்குறைவினால் 'தற்போது வியாபாரவுலகம்' பருத்திக்கு இந்தியாவையே எதிர்பார்க்கிறது. வெகுமட்டமான பருத்திக்கும் நல்ல விலைகொடுத்து வாங்குகிறார்களாம்.

கல்கத்தாவிற்கூடிய இரண்டாவது இந்தியக் கைத்தொழிற்சங்கத்துத் தலைமைவகித்த 'சர்விடில்தாஸ் தாமோதர் தியாகர்ஜி' பின் வருமாறு சொன்னார்:—"இந்தியாவில் பஞ்சாலை வைத்திருக்கிறவர்கள் மட்டதினுசு துணிகள்தான் நெய்யக்கூடியதாயிருக்கிறது. இதற்கு தற்காலத்தில் இந்தியாவில் உண்டாக்கப்படும் மட்டமான பருத்திதான் காரணம். உயர்ந்ததரப்பருத்தியுண்டாக்கும் வரையில் இந்தியாவில் நெய்யப்படும் துணியின் தன்மையை விருத்தி செய்யநினைப்பது வீண். உயர்ந்ததரப்பருத்தி இந்தியாவிலேயே உண்

* இந்த வியாசம், 1910-ஆம் ஏப்ரல்மீ 26உ மதுரையில் நடைபெற்ற கால்நடைக்காட்சியிற் கூடிய சபையிற் படிக்கப்பெற்றது. ப—ர்.



டாக்கப்படுமானால், நம்முடைய தேவைக்குத் தகுந்தபடி உயர்ந்த ஆடைகளும் நெய்யக்கூடுமென்பதில் சற்றும் சந்தேகமில்லை. அப்பொழுதுதான் நம்முடைய உடைசம்பந்தமாய் நமக்குள்ள சுதேசிய நோக்கங்கள் முற்றும் நிறைவுறும். அதுவரையில் உயர்ந்த தினுசு வஸ்திரங்களுக்கு அந்நியநாட்டுத் தொழிலாளிகளை எதிர்பார்க்கவேண்டியது தான்."

இந்தக்குறையை நிவர்த்திசெய்து இப்பொழுது சாதாரணமாய்ப்பயிர்செய்யப்படும் மட்டமான பருத்தியினங்களுக்குப்பதிலாக நாடெங்கும் ஒரேவிதமாய்ப் பயிரிடக்கூடிய உயர்ந்தவிதமான பருத்தி இன்னதென்று கண்டுபிடித்து அதைப்பழக்கத்துக்குக் கொண்டுவரவேண்டுமென்ற பெருத்த நோக்கத்துடன் கிருஷ்ணாஜில்லாவில் முனகாலா ஜமீந்தாரவர்கள் 'மாதிரிப்பருத்திப்பண்ணை' யொன்று ஏற்படுத்தி அதில் உலகத்திற் பிரசித்திபெற்ற ஆறுவகைப் பருத்திகளுள் படமொத்தம் பதினொருவகைப் பருத்திகள் பயிரிடப்பட்டனவாம். அந்த மாதிரிப்பண்ணையிற் பயிரிடப்பட்டுவந்த உலகத்திலே மிகவும் முக்கியமான ஆறுவகைப் பருத்திகளாவன:—

(1) எந்தப்பருத்தியும் நிகரில்லாத ஐக்கியமாகாணங்களிலுண்டாகிற 'ஸீ ஐலண்ட் பருத்தி.'

(2) ஈஜிப்ட்தேசத்துப் பருத்தி.

(3) 'டாக்டர் தொமாடிஸ்'ஆல் கண்டுபிடிக்கப்பட்ட 'கரவோனிகா பருத்தி'

(4) 'ஸ்பென்ஸ் ட்ரீ பருத்தி.'

(5) 'கிட்னி பருத்தி.'

(6) இந்துசீன தீபகற்பத்தில் உண்டாகிறதும் கண்ணைப்பறிக்கும்படியான வெண்மைநிறமுள்ளதும் நீண்ட 'இழை'யுடையதுமான பஞ்சைத் தரக்கூடியதும் உறுதியான வருஷார்த்தரப் பயிருமான 'கம்போடியா பருத்திய'மாம்.

மேற்சொல்லிய 'மாதிரிப்பண்ணையை' மேற்பார்த்துவருகிற 'மிஸ்டர். பி. வெங்கய்யா' இவற்றுள் ஒன்றுக்கு மற்றொன்றுக்குமுள்ள ஏற்றத்தாழ்வையும், குணகுணங்களையும் நம்முடைய பூமிகளுக்குமுள்ள பொருத்தத்தையும் பற்றிக் கருணைகூர்ந்து எழுதியிருக்கிறார். 'ஸீ ஐலண்ட் பருத்தியும்' கரவோனிகா பருத்தியும் பெரும்பாலும் கடற்காற்றுவேண்டியிருப்பதால் திருப்திகரமான பலனைக் கொடுக்கவில்லையாம். ஈஜிப்ட் பருத்திக்கு செய்நேர்த்தியில் அதிகப் பராமரிப்பும் ஏராளமான பாசனமும் வேண்டியிருப்பதால் இந்த இராஜதானியிற் சாதாரண சம்சாரிக்கு அவ்வளவுக்கு சக்தியில்லாமையால் நம்முடைய பண்ணை நிலங்களில் நன்றாய் வரவில்லையாம். 'கிட்னிபருத்தி' முதல்வருஷத்தில் சுவல்ப பலனைத்தான் கொடுத்ததாம். ஆனால் "கம்போடியா பருத்தி" மட்டும் மிகவும் சிலாக்கியமான பலனைத்தந்ததாம். ஒருகண்டி கம்போடியா பருத்தி 270 ரூ விலையாம். ஒரு ஏக்கர் நிலத்தில் சராசரி ஒருகண்டி பருத்தி விளைகிறது. பருத்தி வெள்ளைவெளேரென்றும் பட்டுப்போல் மிருதுவாயும் இழை ஒன்றரை அங்குல நீளமுள்ளதாயுமிருக்கிறது. பொதுவாய் முன்னேக்குவதில் ஊக்கக்குறைவுடைய சம்சாரிக்கு இதைவிட என்னவேண்டும்? இந்தியாவில் தற்காலத்தில் நீண்ட இழையுடைய பருத்தி தேவையென்ற பெருங்கூக்குரலை நிவர்த்திசெய்வதற்காகவே இயற்கையில் இந்தப்பருத்தியமைக்கப்பட்டிருப்பதுபோல் தோன்றுகிறது. இந்த கம்போடியா பருத்தியின் தன்மையானது இந்தியக்கைத்தொழிலாளிகளுக்கே புதிதாய் ஒரு வாயிலைத் திறந்துவிடும்படியானதும் நம் தேசத்தின் க்ஷேமத்தையும் செல்வத்தையும் அபிவிருத்தி செய்யக்கூடியதுமான அவ்வளவு சிலாக்கியமாயிருக்கிறது. இதைப்பற்றி எவ்வளவு சொன்னாலும் அதிகமாகமாட்டாது. இந்தப்பருத்தியின் விசேஷங்களாவன :—

(1) இது உறுதியான ஒருவருஷத்துப் பயிராயிருப்பதினால் நோய்களுக்கும் பூச்சி முதலிய தொந்தரவுகளுக்கும் அவ்வளவாயுட்படுகிறதில்லை.

(2) தகுந்தபூமி, சாகுபடிகாலம், செய்நேர்த்தி முதலியவைகளில் மற்ற இந்தியாவிலுண்டாகிற பருத்திநூல்களைப் போல் தான்.



(3) இதற்குப் பாசனம் வேண்டியதில்லை.

(4) வறுமையடைந்த குடிகளுக்கு மற்றப்பருத்திகளைக் காட்டிலும் அதிகமாய் விலை சம்பாதித்துக் கொடுக்கிறது.

(5) சாதாரணப் பருத்தியுண்டாகிற எந்த நிலத்திலுமுண்டாகிறது.

(6) இவையெல்லாவற்றிற்கு மேலாய்த் தற்காலத்தில் இந்தியாவில் நீண்ட இழையுடைய பருத்தியில்லாததால் தொழிலாளிகளுக்குள்ள கஷ்டநிஷ்டூரங்களை நிவர்த்திக்கிறது.

இந்த தினுசு பருத்தியைத் தங்கள் நிலங்களிற் சாகுபடிசெய்ய விருப்பமுள்ளவர்களின் நன்மைக்காக ஒரு ஏக்கராவுக்கு ஒரு வீசை விதை போதுமென்றும் அதின் விலை ஐந்து ரூபாவென்றும் பிரதி வருஷமும் விதைப்புக் காலமான ஆகஸ்டுமாதம் 15 தேதிக்குள் தமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாமென்று மிஸ்டர். பி. வெங்கய்யா தெரிவிக்கிறார்.

கரிசற்காட்டுப் பூமிகளும் மணற்பாங்கான நிலங்களும் இந்த வருஷாந்தரப் பருத்தி பயிரிடக்கூடிய தக்க நிலங்கள். அதாவது நாட்டுப்பருத்திகள் உண்டாகக்கூடிய பூமிகளில் யாதொரு தடையுமில்லாமல் வெகு சுலபமாயுண்டாகிறது. மழையாரம்பித்தவுடனே பூமியை நன்றாய் நாலைந்து தடவை உழுது இரண்டரையடி வித்தியாசமுள்ள உழவுசால்கள் ஏற்படுத்தவேண்டியது. பூமியில் போதுமான ஈரமிருக்கும்போதே சால்களில் இரண்டடி வித்தியாசத்தில்விதை தெளிக்கவேண்டும். விதை தெளிப்பதற்கு முன்னே விதைகளைப் பசுவின் சாணத்திலும் மண்ணிலும் நன்றாய்த் தேய்க்கவேண்டும். இப்படிச்செய்வது விதையில் ஒட்டிக்கொண்டிருக்கும் பஞ்சு முதலானவற்றைத் தொலைப்பதுமல்லாமல் முளை கிளம்புவதையும் துரிதப்படுத்துகின்றது. பூமியெங்கும் முளைகள்கிளம்பினவுடன் சுற்றிப்பார்த்து காலியாயிருக்குமிடங்களில் மறுபடியும் விதைதெளிக்கவேண்டும். புன்செய் நேர்த்தியெல்லாம் மற்ற நாட்டுப்பருத்திக்கொப்பந்

தந்தான். பொதுவாய் ஆகஸ்ட்மாதம் மத்திதான் விதை தெளிப்பதற்கேற்றகாலம். விதைதெளித்த மூன்றாவது மாதத்தில் பூக்கவாரம்பித்து ஐந்தாவது மாதத்திற் காய்க்கிறது. பிறகு தொடர்ச்சியாய் மூன்றுமாதங்கள் காய்க்கிறது. முதற்பறியில் எடுக்கப்படும் பருத்தி சிலாக்கியமாகக் கொள்ளப்படுகின்றது. ஆகையால் பிந்தின பறிகளில் எடுக்கப்படும் பருத்திகள் இதனுடன் கலந்துவிடாமல் சாக்கிரதையாயிருக்கவேண்டும். அப்படிக் கலந்துவிட்டால் வாங்குகிறவன் மட்டமான பருத்திக்குக் கொடுக்கிற விலையைத்தான் கொடுப்பான்.

மற்றப்பருத்திக்கொப்பந்தம் இதற்கும்விசேஷப்பாசனந்தேவையில்லை. அல்லாமலும் நீர்வடியப் போதுமான வடிகால்கள் வெட்டி வசதியேற்படுத்தியிருக்கவேண்டும். வேரில் நீர்தங்கினால் செடிக்கு உடனே அபாயமுண்டாகுமென்பதை நன்றாய் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

பூமியெங்கும் காய்கள் நன்றாய் வெடித்தவுடன் பருத்தி தரையில் விழ ஆரம்பிப்பதற்கு முன்னால் பறிக்கவாரம்பித்துவிடவேண்டும். தரையில் விழுவதினால் இலை அல்லது சருகு முதலானவை பஞ்சில் நன்றாய் ஒட்டிக்கொள்ளுகிறது. பிறகு இதைப் பறிக்க வெகு சிரமப்படுகின்றது. நன்றாய் முதிராத காய்களிலிருந்து பறிக்கக்கூடாது.

அப்படிப் பறிப்பதினால் பருத்திமுறிந்துபோம். அன்னியதேசங்களில் இந்தியப்பருத்தி தாழ்ந்த விலைக்குப் போவதற்கு முக்கிய காரணம் பருத்திப்பதியில் இந்திய சம்சாரியின் கவனக்குறைவும் அசாக்கிரதையுந்தான்.

பருத்தி பறிக்கப்பட்டவுடனே சுத்தமாய் ஈரமில்லாமல் வெயிலில் உலர்த்தவேண்டும்; காய்ந்துகொண்டிருக்கும் போதே மாசுபடிந்து கெட்டுப்போனவைகளை அப்புறப் படுத்தவேண்டும்.

நல்ல விதைகளைப் பொறுக்கித் தயார் செய்வது மிக அத்தியாவசியமானது. சிலாக்கியமில்லாத விதையிலிருந்து நல்லபயிர் உண்டாகமாட்டாது. மேல் நாடுகளில் எந்தப் பயிருக்கும் நல்ல விதைகளென்று தீர்மானிக்கப் பட்டவிதைகளை விற்பதே தங்களுக்குப் பிழைப்பாகக்கொண்ட நம்பிக்கையான விதைவியாபாரிகள் அநேகரிருக்கிறார்களாம். இந்த தேசத்தில் அப்படியில்லாமையால் ஒவ்வொரு சம்சாரியும் தனக்குவேண்டிய விதைகளைத்தானே தயார்செய்து வைத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. பின் சொல்லப்படும் விஷயங்கள் பருத்தியைப் பற்றின இந்த வியாசத்தில் இருந்தாலும் அவைகள் பொதுவாய் எல்லாப் பயிர்வகைகளுக்கும் பொருந்தும். சாகுபடி எவ்வளவு நன்றாய்ச் செய்தாலும், எவ்வளவு தாராளமாய் எருவிட்டாலும் நல்ல விதை விதைக்கப் படாதவரை சிலாக்கியமான பயிரையும் நல்ல கண்டுமுதலையும் எதிர் பார்க்க முடியாது. விதை பொறுக்குவதில் அனுசரிக்க வேண்டிய சில வழிகளாவன:—



(1) நிலத்தின் சிலாக்கியமான பாகத்தை விதைக்கென்றே தனியாக எருமுதலானவை நன்றாய்ப் போட்டுச் செய்நேர்த்தி செவ்வனே செய்து இந்தப்பாகத்திலுண்டாகும் பயிரை மறு வருஷத்து விதைக்காக நிறுத்தி விடவேண்டியது.

(2) நிலத்தில்பயிரிருக்கும்போது சுற்றிப்பார்த்துச் சிலாக்கியமான பயிரிருக்கும் பாகங்களைக் குறித்துவைத்து இவைகளிலிருந்து விதை எடுத்து வைத்துக்கொள்வது.

(3) சீக்கிரமாய்க் காய் முதிரும்படியான பயிரை உண்டாக்க வேண்டுமானால் இவ்விரண்டு வகையும் உதவாது. சீக்கிரமாய் முதிருங் காய்களைப் பொறுக்கி எடுத்து அவைகளிலிருந்துமட்டும் விதைகளைப்பொறுக்கி வைக்கவேண்டும்.

(4) இன்னொருவிதமென்னவென்றால் பயிர் முழுமையிலும் நன்றாய்ப்பருத்து முதிர்ந்து காத்திரமாயிருக்கிற காய்களிலிருந்து விதை எடுத்துவைப்பது.

இந்த விதைகளுக்குப்பயிரில் வியாதி முதலியவை அண்டவிடாமற் செய்யவும் அகஸ்மாத்தாய் வருபவைகளிலிருந்து இலகுவாய் ஈடேறவும் போதுமான வலிமையும் வீறுமிருக்கும்.

பெரிய பருத்தியந்திர சாலைகளில் விதை விலைக்கு வாங்கும் வழக்கத்தைத் தவிர்க்கவேண்டும். அவைகளிற் பல சாதி விதைகள் கலந்தும் விதைகள் உடைந்தும் இருக்கும். ஆகையால் ஒவ்வொரு சம்சாரியும் தனக்கு வேண்டிய விதைகளைக் கையந்திரங்களினாலடித்துச் சாக்கிரதையாய் எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும்.

விவசாய இலாகா டிப்டி டைரக்டர் மிஸ்டர். எச். ஸி. ஸாம்ஸன் இந்தப் பருத்தியைப் பற்றிப் பின்வருங் குறிப்பொன்றைஎழுதிப் பிரசுரித்திருக்கிறார்.

"திருநெல்வேலிஜில்லாவிற் புகையிலை, மிளகாய், கேப்பை, இன்னும்மற்றத்தோட்டப்பயிர்களுக்குப் பதிலாய் இப்பொழுது இந்தப்பருத்தியையே தோட்டக்காற் பயிராகச்சாகுபடி செய்கிறார்கள். இதற்குக்காரணம் இந்தப் பயிர் சாகுபடி செய்திருக்கிற எவருக்கும் பிரத்தியக்ஷமாய்த் தெரியும். மழையில்லாத காலத்தில் மாதம் ஒன்று அல்லது இரண்டு பாசனம் வேண்டியிருப்பதைத்தவிர சாகுபடிச் செலவுகள் சாதாரணப்பருத்திப் பயிருக் கொப்பந்தான். நன்றாய்ச் செய்நேர்த்திசெய்யப்பட்ட தோட்டக்கால் நிலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு-1000 முதல் 1250-பவுண்டு வரையிலும், சில நிலங்களில் 2000-பவுண்டு வரையிலும் பருத்தி விளைகிறது. பருத்தி வியாபாரிகள் 250-பவுண்டு கொண்ட பொதி ஒன்றுக்குச் சாதாரண பருத்தியைக்காட்டிலும் 5-ரூபா விலை அதிகம் கொடுத்து வாங்குகிறார்கள்.

இதற்குக் காரணம் மற்றப்பருத்தி 2000-பவுண்டு நிறையிலிருந்து எவ்வளவு பஞ்செடுக்கப் படுகிறதோ அவ்வளவு இந்தப் பருத்தி 1500-பவுண்டிலிருந்து எடுக்கப்படுகிறது. செய்நேர்த்தியெல்லாம் வெகு சாதாரணம். ஒரு ஏக்கருக்கு 10-பவுண்டு விதை போதும். விதைத்தவுடன் நீர்பாய்ச்ச வேண்டும். பயிர் இரண்டு இலைகள் விட்டவுடன் கொத்திக் களைகள் எடுக்கவேண்டும். செடி ஒருசாண் உயரமிருக்கும் பொழுது இரண்டடி வித்தியாசமிருக்கும்படியாய்க் கலைத்துவிடவேண்டும். பயிருக்குத் தண்ணீர் வேண்டியிருந்தால்மட்டும் பாசனம் கொடுக்கவேண்டும். பருத்திவெடிக்க ஆரம்பித்தது முதல்



பறித்துத்தீருகிறவரை நீர்பாய்ச்சக்கூடாது. தான்யவகைகள் பயிரிடுவதற்குப் போதுமான தண்ணீர் தங்கள் கிணறுகளிலில்லாத சம்சாரிகளுக்கு இந்தப்பயிர் மிகவும் ஏற்றது."

ஆகையால் விவசாயிகள் இந்தப் பருத்தியைப் பயிரிட்டுத் தேச நன்மையை யபிவிர்த்தி செய்வதோடு தாங்களும் லாப மடைவார்களென்று நம்புகிறேன்.

B. V. இராமகிருஷ்ணய்யர்.

---

உ

# சிறுவர்க்குரிய உபந்நியாசங்கள்.

## பிழைபொறுத்தல்.

(முற்றொடர்ச்சி.)

விதுரன் தன்னைவிட்டகன்ற சில காலங்கழித்துத் தன்னுடைய ஸஹோதரனைச் சினந்துகொண்டதற்காகத் திருதராஷ்டிரமன்னன் வருத்தமுற்றான். பின் திருதராஷ்டிரன் தன்னுடைய தூதனாகிய ஸஞ்சயனைவிளித்து "ஓ, ஸஞ்சயா! என் கோபத்தீயால் வெருட்டியோட்டுவித்த விதுரன் இன்னும் ஜீவந்தனாயிருக்கிறானா? பார்த்துவா! நான்கோபித்தாலும் என்மேல் அவன் கோபிக்காதவனாயிருக்கிறான். இங்ஙனம் அவன்பால் கோபித்து அவனுக்குப் பிழைசெய்தேன், அதுபற்றி வருத்தமுறுகிறேன். அத்தகையோனைக்கண்டு கடிதினில் அழைத்துவா" என்றான்.

அரசகுமாரருடன் வசிக்கும் விதுரனிருக்குங்காட்டிற்குச் சஞ்சயன் சென்றான். திருதராஷ்டிரமன்னன்செய்த பிழையினைப்பொறுத்த விதுரனும் நாட்டுக்குத்திரும்புவது இயலுமோஎன்று ஸஞ்சயன் மனதிலே களங்கமும் ஆச்சரியமுமுற்றிருந்தான்.

அரசகுமாரருடனிருந்த விதுரனும் ஸஞ்சயனைக் கண்டவளவில் மிகவும் கௌரவத்துடன் நல்வரவேற்று அவனைமிகுதியும் நேசித்

தான். பின்னர், அரசனை மன்னிக்குமாறும் தன்னுடன் நாட்டுக்குத் திரும்பிவரவேண்டுமாறும் ஸஞ்சயன் விதுரனைப் பிரார்த்தித்தான்.

விதுரன் மீண்டுங்கோபங்கொண்டு திருதராஷ்டிரவரசனிருக்கும் நாட்டிற்குத் திரும்பிவருதலில்லையென்று மறுத்தளித்தனனா? அன்று! அன்று!! விதுரனும் உடனே தன்னுடைய ஸஹோதரனிடம் விரைந்து சென்றான்; சென்று "ஓ, மன்னா! யான் உன்னை மன்னித்தேன், நீர் என்னுடைய மூத்தஸஹோதரராகிறீர்; உம்மைப்பார்த்து நெடுநாட்களாயினமையான், உன்முகத்தைப் பார்க்க அவாவுற்றவனாய் இங்குவந்து சேர்ந்தேன்; சந்தோஷஹீனனாயிருக்கிற என்னுடைய ஸஹோதரனின் குமாரர்களுக்காக மிக்கவருத்தமுற்றிருந்தேன். ஆனால் நின்னுடையமக்களும் எம்மருமைமக்களேயாவார்" என்று விதுரன் கூறினான். தனக்குச்செய்த எல்லாத்தீமைகளுக்கும் தான்முழுவதும் மன்னித்துவிட்டதாக விதுரன், தன்னுடைய மூத்த ஸஹோதரனிடத்து மிகுதியும் அமைதியாய்ச்சொன்னான்.

வனவாஸங்கழித்து மீண்டும் தம் நாடு வந்தடைந்தபோதும் பாண்டவர்கள் எவ்வாறு திருதராஷ்டிர மன்னனிடம் நடந்து கொண்டார்கள் என்பதையும் நாம் அறிந்துகொள்ளலாம். கிழவரசனிடத்து அவர்கள் அப்ரியம் பாராட்டினார்களா? உண்மையில் அவர்கள் ப்ரியஹீனர்களாய் நடந்துகொள்ளவில்லை. அம்மன்னனின் சொற்படியே பதினைந்துவருஷகாலம் அவர்கள் இராஜ்யபாரம் நடத்தினார்கள். அவனுக்குக் கீழ்ப்படிந்தும், அவன் பக்கலில் உட்கார்ந்தும், உண்மையான விசுவாஸத்துடனும், மரியாதையுடனும் அவனுக்கு முன்னே தலைவணங்கியும், முதுமையான மாமன் மாமியர்களை நடத்துவதுபோன்ற விசேஷ மரியாதையுடன் அரசனையும், இராணியையும் அவர்கள் நடத்திவந்தார்கள். பாண்டவசிரேஷ்டனான யுதிஷ்டிரன், தம்பிள்ளைகள் நூற்றுவரையும் இழந்த திருதராஷ்டிரமன்னன், இவர் தம்மால் கூடியவரையில் துன்புறாவண்ணம் பார்க்கவேண்டுவது தமது தவறாக்கடப்பாடாகுமென்று தனது ஸஹோதரர்களுக்கு அடிக்கடி கூறுவதுண்டு. ஸஹோதரர்களும் தம்முடைய ஜ்யேஷ்டனாகிய யுதிஷ்டிரன் வார்த்தைகளுக்குட்பட்டவராய் முதுமன்னனிடத்து முக்கியமாய் விசேஷமாய்ப்படிந்து ஒழுகிவந்தார்கள். பலவருஷங்கள் காறும் நாட்டிலிருந்து தாங்கள் காட்டுக்குத்துரத்தப்பட்டமையைப்பற்றிக் கோபியாமல் அவனை மன்னித்தார்கள்.



தங்களை மிகுதியும் பொறுக்கமுடியாத கஷ்டநஷ்டங்களுக்கும் துக்கங்களுக்கும் உள்ளாக்கிய அரசனை அவர்கள் மன்னித்தார்கள். அம்மன்னனிடத்து அவர்க்ள் சிறிதேனும் வெறுப்புக்காட்டினார்களிலர். அவர்களில் ஒருவனே ஒருவன்தான் திருதராஷ்டிரமன்னனை மன்னியாதவன்; அவன்தான் பீமனாவான்; அவன்தான் அவன்மீதுகோபமிக்குடையோனாயிருந்தான். கல்வி கேள்விகளில் வல்லபெரியோராவார், பிறர் தமக்குச்செய்த நன்மைகளையே விசேஷமாகப் பாராட்டுவார்களேயன்றி, அவர் தமக்குச்செய்த தீமைகளைப்பற்றி ஒருநாளும் கருதவே கருதார் என்னும் நீதிமொழிகளை யுதிஷ்டிரனும் அர்ஜுனனும் சேர்ந்து பீமனுக்கு எவ்வளவுபோதித்தும், பீமன் கோபந்தணிந்தானில்லை.

"இன்னாசெய்தாரை யொறுத்தலவர் நாண
நன்னயஞ் செய்துவிடல்."

கிழமன்னனாகிய திருதராஷ்டிரனிடத்து மிகுதியும் இவன் கொடுமையாய் நடந்துகொண்டமைபற்றி, அம்மன்னனும் கடையில் மிகுதியும் துக்கமுற்றவனாய் நாட்டைவிட்டுக் காட்டிற்சென்று காலங்கழிக்கத்தீர்மானித்தான். ஆனால் யுதிஷ்டிரன் கிழமன்னனிடத்து மிகுதியும் அன்புகூர்ந்தவனாய் "ஓ! மன்னர்மன்னா! என்னைவிட்டு நீவிர்காட்டிற்குச்செல்ல ஸம்மதித்தீராயின், யானும் உம்முடன் காட்டிற்கேகுவேன்," தங்களிடத்துத் தாஸனாயிருந்தும் தங்கள் ஏவல்களைக் குறைவறச்செய்தும், தங்களுடைய மிகுதியான துக்கத்தை அறவொழிப்பதாக வெண்ணமிட்டிருந்தேன் என்று அம்மன்னனிடத்து மொழிந்தான்.

தன்பாற்செய்த அகிருத்யங்கள் பலவற்றிற்காகவும் யுதிஷ்டிரன் தான் அவனை நன்குமதித்ததாக இவ்விதம் காட்டினமைபற்றி திருதராஷ்டிரன் அவனைத்தன் குமாரனாகவே மதித்து நேசித்தான்.

நமக்குத்தீமை செய்தவரிடத்தும், நன்மையே புரியவேண்டுமென்பது இக்கதையினால் அறியக்கிடக்கின்றது. அப்ரியமான வார்த்

தைகளையும், கோபமானவார்த்தைகளையும், உபயோகிக்காமல் சாந்தமாய் அடங்கிப் பேசுவோமாக.

> "அடக்க மமரரு ளுய்க்கும் அடங்காமை
> யாரிருளுய்த்துவிடும்."

---

## ௭. ஆறுவது சினம்.

—:o:—

> "உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குசினங்காத்துக்
> கொள்ளுங் குணமே குணமென்க." (நன்னெறி.)

சினங்கொண்டவன் செய்யாதகாரிய மொன்றில்லை; அவன் வாயினின்றும் பிறவாத வார்த்தைகளுமில. கர்ணகடூரமானவார்த்தைகளினால் தன்னினும் மேலோரையும் சினங்கொண்டவன் தூஷிப்பான். ஞானவான்களே தம்மினின்று எழுஞ்சினத்தையடக்குவார். கண்ணியமும் மன்னிக்கும் இயல்பும்வாய்ந்த மனிதரே எப்போதும் வெற்றியடைபவராவார் என்று மஹாபாரதத்தில் வனபர்வத்தில் கூறப்பட்டிருக்கிறது.

> "பெரியவர்தம்மைக் காய்ந்தான் பிறங்கல்லிய
> கோழிலாப்பான்."

பகைவர்கள் தமக்கு மிக்கதீமைகளையே அநேகம் செய்தவராயிருந்தாலும், நல்லவராயினோர் அவர்கள் செய்துள்ள நற்காரியங்களையே மதித்து எஞ்சியவற்றை மறந்துவிடுவார். நல்லவர்கள் பிறர்க்கு நன்மை செய்வதில்மட்டுமே யில்லாது, அவர்களிடத்திருந்து எவ்வித பிரதியுபகாரம் கருதாதும் அவர்களுக்கு நன்மையையே புரிவார் என்று மஹாபாரதத்தில் ஸபாபர்வத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

> "கைம்மாறுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
> தம்மாலியலுதவி தாம்செய்வர்."

இராமச்சந்திரன் வனவாஸம் செய்துகொண்டிருக்கும் பொழுது, காட்டில் நெடுந்தூரத்தில் ஸேனா ஸமுத்திர கோஷமொன்றினைக் கே



ட்டான். ஓ! லக்ஷ்மணா! அவ்வானளாவிய உயர்ந்த மரத்திலேறி, வருபவர் யாவரென்றறி" என்று அவன் கூறினான். லக்ஷ்மணன் மரத்திலேறி, தன்னுடைய இளைய ஸஹோதரன் பெரிய சேனையுடன் வருகின்றதைக் கண்டு, நாட்டை விட்டுக் காட்டுக்கு வந்த நம்மின் உயிரையும் மாய்க்கப் பரதன் இங்கு வந்தனனென்றும், ஆதலின் அவனை யெதிர்த்துச் சண்டை செய்ய ஆயத்தமாயிருத்தல் வேண்டுமென்றும் மிகுந்த சினத்துடன் மொழிந்தான். பொறு, பொறு, லக்ஷ்மணா, அற்றன்று; துன்பம் செய்ய நம்முடைய ஸஹோதரன் இங்கு வருகின்றானிலன். உன்னுடைய இராஜ்யத்தை லக்ஷ்மணனுக்குப் பட்டாபிஷேகம் செய் என்று என்னிடத்திலிருந்து ஒரு சொல் பிறந்தமாத்திரத்திலே அவன் அந்தக்ஷணமே அவ்வாறு செய்தே தீருவான் என்று இராமச்சந்திரன் புன்சிரிப்புடன் கூறினான். பிறகு லக்ஷ்மணர் சினமொழிந்து தன்னுடைய ஸஹோதரனாகிய பரதனை இனிமையாய் ஸந்திக்க எல்லாஞ்சமாதானமாகவே முடிந்தது.

ஒருநாள் மிக்ககோபிஷ்டனான பீமஸேனன் தனனுடைய ஜ்யேஷ்ட ஸஹோதரனிடத்து மிகுதியும் கோபங்கொண்டவனாய் "நீர் சூதாடி நம் நாட்டை இழந்தீர்; நம்முடைய தனமெல்லாவற்றையுங் கொள்ளைவிட்டீர்; போதாக்குறைக்கு வனவாஸம் போகும்படியும் நேர்ந்தது, இப்பொழுதோ சூதாடிகளுக்குச் செய்த சபதத்தை நிறைவேற்றப் பின்வாங்காத கௌரவத்தைப் பூஷணமாகக்கொண்டு, க்ஷத்ரிய குலதர்மத்தை முற்றிலும் மறந்து பகைவர்மேல் போர்செய்யாமல், கோழைத்தனமுள்ளவர் போல் உழறுகிறீர்; நீவிர் நிரம்ப நல்ல ஸஹோதரர் எங்களுக்கென்று அகப்பட்டீரே" என்று கூறினான். இதைக்கேட்ட யுதிஷ்டிரர் மிகுதியும் வருத்தமுற்றவராய், தானும் கோபத்தால் ஏதாவது தாறுமாறான விஷயங்களைச் சொல்ல நேரிடுமோ வென்று பயந்தவராய்ச் சிறிதுநேரம் மௌனமாயிருந்தார். ஓ! பீமா, என்னுடைய அருமைச்சகோதரனே! நீ சொல்வது முற்றிலும் சரியே! இதுகாறும் நமக்கு நேரிட்டதுரதிர்ஷ்டங்கள்யாவும் என் தவறுதலினாலேயே நேர்ந்தன; ஆதலால், நீ என்பாற்சினந்துகொண்டமைக்காக யான் நின்னை நிந்திக்கின்றேனில்லை. எனினும் என்னை மன்னி! கிஷ்பக்ஷமாய்ப்பேசாதே! உன்னைச் சந்தோஷிப்பிக்கவேண்

டியாவது, என்னுடைய வாக்குத்தத்தத்தினின்றும் ஒருநாளும் பிறழேன்; சிறிதுகாலம்பொறு; நல்லகாலம்பிறக்கும் என்று மிகச்சாந்தமாய் யுதிஷ்டிரர் பீமனுக்குச்சொன்னார். பின்னர் பீமன் வெட்கமுற்றவனாய்த் தன்னுடைய ஜ்யேஷ்டனுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான்; சண்டையும் நின்றது.

> "இன்சொலாலன்றியிருநீர்வியனுலகம்
> வன்சொலாலென்றுமகிழாதே—பொன்செ
> யதிர்வளையாய்பொங்காதழற்கதிராற்றண்ணென்
> கதிர்வரவாற்பொங்குங்கடல்."

யாரிடத்திலும் சாந்தமாகப்பேசு; பயமுறுத்திப்பேசி அதனால் நம்முடைய கார்யங்களை நிறைவேற்றிக் கொள்வதைக்காட்டிலும், இன்சொற்கள்கூறி அவ்வாறான காரியங்களை முடித்தல் மிக்கமேன்மையாகும். ஆதலால் எப்போதும் சாந்தமாய்ப் பேசு. நாமிவ்விடத்திற் செய்யக்கூடிய நன்மையை நமக்குஞ்சொற்கள் கெடுத்துவிடும்.

(இன்னும் வரும்.)

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

உ

சிவமயம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

---

(௫௯.) மனம்நிரம்ப நிதியைக் கொடுத்தாற் றருவாருளர். நானிங்குய்ய நீ பயந்தோனை.

(௬௦.) குடுமியைமுடித்து முகத்தைத்துடைத்து, காதணியிலும் அரைஞாணிலுமுள்ளதுகளை நீக்கி மஞ்சள் அழிந்ததற்காக இரண்டிமையையுங் கண்ணின் பக்கத்தே ஒதுக்கி.



(௬௧.) பயம்பொருந்திக் கறியமுதாமென்னும் அதனால் அரிய புதல்வனது உச்சிமோவார், மார்பிலணைத்து முத்தமிடார், பொய்யில்லாத திருத்தொண்டரானவர்.

(௬௨.) கலன் - பாத்திரம்.

(௬௩.) இனிய புதல்வனது கிண்கிணிக் காலிரண்டையும் மடியின்புடையே இடுக்கி. மிகமகிழ்ச்சி பொருந்துகின்றாரென்று மகிழ்ந்து சிரிக்க.

(௬௪.) தந்தையாரும் உவமையில்லாத பெருமையையுடைய புத்திரன் தான் பிறந்ததனாலாய மெய்த்தன்மையைத் தந்தானென்று பொலிந்துபொருந்தும் மகிழ்ச்சியையுடைய அவருடைய மனைவியாரும் தங்கணவனாருடைய அரிய உயிரை எனக்குத்தந்தானென்று மிகவும் மனம்மலர கணவனாரது அருமையுயிரை எனக்களித்தான் என்றது என்கொலோவெனின், இப்புதல்வன் பயிரவசமயத்தொண்டருக்குக் கறியமுதாக்கப் பெறுதற்காகத்தன்னையரிதற் குடன்படானாயின், தந்நாயகர் அவருக்கு வாக்குத்தவறினமையால் உயிர்விடுவர்; உடன்பட்டானாதலின், அவருயிரை எனக்குத் தந்தானென்றாரென்க. இதற்கு வேறுபொருள் கூறுதலுமொன்று.

(௬௫.) மறைத்துநீங்கும்படி சந்தனநங்கையார் கையிற்கொடுத்து.

(௬௬.) நறையால் - நறும்புகையோடு.

(௬௮.) நான் அன்புசெய்தேனாய்ப் பசித்தருளத் தாழ்த்தது எனினும் கட்டளைப்படியே சமைத்தேன்.

(௭௦.) தவிசு - தடுக்காக.

(௭௨.) படைக்குந்தன்மையை.

(௭௩.) நிலையான முக்காலியின்மீதே விரித்தவெள்ளிய வஸ்திரத்தின்மீது வைக்க.

(௭௭.) நானுந்திருநீற்றைப்பூமியில் இடுவாரைக்கண்டே திருநீற்றை இடுவேனென்று நமஸ்கரித்துவணங்க; என்றது, அடியேனை

யும் சிவனடியார்க்கடியனுகக் கொண்டு உடன்வைத்தமுதுசெய்தருள்க என்னுங் கருத்தாமென்க. இனி அடியேனும் பூமியில் விபூதி இடுவாரைக்கண்டே அன்னமிடுவேனென்று வணங்க என வேறுமொருபொருடொனிக்கின்றவாறு கண்டுகொள்க.

(எஅ.) அவரை ஊட்டவேண்டித் தாமுண்ணப்புகுதலும்.

---

## கழறிற்றறிவார் நாயனர் புராணம்.

(க.) பாவீற்றிருந்த - பாவில் வீற்றிருந்த, பாக்களில் வீற்றிருந்த எனப்பன்மையாக உரைக்க.

(உ.) காலையில் எழும் பல்கலையினொலி, யானைக்கன்றை வசமாக்குமொலி, துரகச்செருக்காற்சுலவுமொலி - குதிரைக்களிப்பாற்சூழுமொலி, பாலவிபஞ்சிபயிலுமொலி- பாலையாழின்பயிலுமொலி, பாடலினொலியும், ஆடலினொலியும், முழவினொலியும்.

(ங.) பயில்சட்டறங்கள் பல்குவன - சொல்லப்படுகின்ற செப்பமான தருமங்களைச் செய்கின்றமிகுதியானவொலி; தத்தம்வருணத்திற்கேற்பச் சொல்லப்படுகின்ற ஆருகிய குலதருமங்களைப் பழகுமொலிஎன்றலுமாம்.

(ச.) கோதையரசர் - சேரராசர்; இராசாவினது எனவிரிக்க.

(ரு.) வாசனைவிரியும் மலர்பொருந்திய சோலைசூழ்ந்த பழையநகரின்கண் முறையான மரபின்அருகி அழிதற்குரிய கலியைநீக்கித் தருமம்பொருந்திய சைவத்திறந்தழைப்ப.

(கஈ.) இருமை உலகுக்கு - இரண்டாகிய உலகுக்கு.

(உஉ.) உலகைக்காக்குங்கொடையையுடைய சோழர்,உரிமையையுடைய பாண்டியருடன் சேரவிளங்கு மூவரசராய்.

(உஅ.) உதியர் - சேரர்.



(உகூ.) தலைச்சங்கப் புலவருடைய.

(ஙo.) ஓட்டத்தம்பொன் - ஓடவிட்டமாற்றுயர்ந்தபொன்.

(சஎ.) சோதிடர் இட்ட நல்லநாளில் நல்லலக்கினத்தில் சிவனுடைய திருவஞ்சைக்களத்தில்.

(சஅ.) யானைஅணிகள் பரந்து வழியெவ்விடங்களினும் நிரந்து செல்லுதல். மானம்பொருந்திய மலைநாட்டின் மலிந்தமலைகளுடனே போதல்போன்றன. சேனைவீரர்பக்கத்தே பரந்துசெல்வார், அப்படிச் செல்லுதல் அவ்விடத்தே மலைசூழ்ந்தகாடு ஒருசேர உடனே படர்தல்போலும் காட்சிபோன்றது.

(சகூ.) மிசையும் அவலும் - மேடும் பள்ளமும்.

(ருக.) மலையையுங் காட்டையுமுடைய குறுநிலமன்னர். முரம்பு - மேட்டுநிலம்.

(ருரு.) கண்டத்தில் நஞ்சைவைத்துத் தேவருக்கமுதங்கொடுத்த கருணையையேயன்றி யிந்தக்கருணையை வழுத்தினர்.

(ருஎ.) சிவபிரானுக் கெதிரேநின்று தமிழ்ச்சொன்மாலையைக் கேட்பிக்கத் தேவர்வாழ நடனமாடும் எகர் அதற்குப்பரிசாகப்பொன்னம்பலத்தில் எடுத்த செந்தாமரை மலர்போன்ற பாதத்திருச்சிலம்பினது இவ்வுலகம் வாழவெடுத்த வொலியைத் தாமுமெதிராகக் கேட்பித்தருளினர். பஞ்சகிருத்திய நிருத்தமாகலின் பிரமா முதலிய உம்பர்வாழ எனவிதந்தார்.

(ருஅ.) தில்லைவட்டம் - சிதம்பரத்தெல்லை.

(ருகூ.) கனகசபையில் நடனஞ்செய்கின்ற நடேசபிரான் சுந்தரமூர்த்தி நாயனருடைய பாடலைக்கேட்டருளித் தாழ்த்தபடியை அவரைக் கூடும்படியால் முன்னரே அருளிச்செய்த.

(சாக.) உகமுடிவிற் பெருவெள்ளத்தாலுங் கொள்ளப்படாத வயல்சூழ்ந்த.

(சாஉ.) நம்பி தாமும் - சுந்தரமூர்த்தி நாயனரும்.

(௬௫.) சேரமான் றோழரென்று நிலவுலகம் பரவும் மேன்மை நாமம் சுந்தரமூர்த்தி நாயனாருக்குண்டாகி விளங்கியது.

(௬௭.) உடையநம்பி முன்னாக - சுந்தரமூர்த்தி நாயனாருக்கு முன்னாக வணங்கிச் சேரமான் பெருமாணாயனார் தோத்திரஞ் செய்தார்.

(௭0) பொற்காலமளி - பொற்காலையுடைய கட்டில.

(௭௧.) ஈண்டு - விரைவாக.

(௭௨.) அரசனுக்கு அமைத்த சிறப்பினும் மேலாக அடியாருக் கேற்கும்படியாக; இச்சேரமான் பெருமாணாயனார் அரசரும் அடியாரும் ஆதலின் இவ்வாறு கூறினார். பரவைப்பிறந்த - பாற்கடலிற் பிறந்த.

(௭௩.) நாம்செய்த தவத்தால் சேரமான் எழுந்தருளி அமுது செய்ய. பூமியின் மலிந்த சிறப்பையுடைய வன்றொண்ட ரருளிச் செய்ய உண்கலங்களை அழகோடு விளங்கத்திருத்தி இருமுக்காலிகளையும் அவ்வவர் தகுதிப்படி வைத்தலும்.

(௭௪.) சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான்பெருமாளை உடனே அமுது செய்தருளல் வேண்டுமென்று வேண்ட அவரும் விரைந்து வணங்கி உருத்திரகணிகையர் வீடாதலின் உலகர் பழிமொழிக்காக அஞ்சுதலும். பொறைக்கிறையனார் - சேரமான் பெருமாணாயனார்.

(௭௬.) பனிநீரளாய சந்தனத்தின் பசிய கருப்பூர வாசனை பொருந்திய கலவையைப் பெண்கள் சமைத்தெடுப்பப் பரவையார் கொடுத்து.

(௭௭.) பொருந்திய சிறப்பிற் பூசனைகளாய் அளித்தவெல்லாவற்றையும் விரும்பியருளிச் சுத்தமாகிய விபூதியைத்தமது திருமுடியில் வாங்கியணிந்து. தம் என்றது சேரமான்பெருமாளை.

(௮௮.) பாடிக்காடுகொள் புணர்ந்த பரிசையும் பதிகத்தில்வைத்தார்.

(௯௫.) உதியர்-சேரமான் பெருமாணாயனார்.



(௧௧௦.) நஞ்சுதங்கும். பருச்சுழியத்துடன் - பருத்தமாலையோடு.

(௧௧௧.) செங்கையிற் பொற்செண்டும் திருமுடியிற் சுழியமுகமாகிய இவற்றினுடன்.

(௧௧௪.) ஆனைத் தூரத்தேகாண அஞ்சிய நீர்நாய் அயலே வாளை மச்சம் பாய்கின்ற சேற்றையுடைய வயல்சூழ்ந்த.

(௧௨௫.) நிலத்தில் நின்றெறியும் பந்தும், குதிரையிலிருந்தெறியும் பந்தும், வீசினாடோறும் மகிழ்வைப் பொருந்தித் தடுத்தற்கரிய போரையுடைய ஆட்டுக்கடாய்களின் பாய்ச்சலைக் கண்டருளி வெற்றிபெற மலைக்கும் நெடிய முட்போன்ற, காலையுடைய கோழிச்சண்டையை மகிழ்ந்தருளி அலைக்கும் கவுதாரி காடை முதலிய புட்களின் மறை விரும்பி இருக்கின்றார்.

(௧௪௦.) நாங்கள் பெருமானனவர் தோழனாராகிய நம்பிதம்பிரான் றோழர்.

(௧௫௨.) கைகோட்டி - கையைவளைத்து. வன்றொண்டருக்குச் சாத்தி மிக்கனவற்றைத் தமக்காக்கி.

(௧௫௩.) பாடலும், ஆடலும், இனிய வாத்தியங்கள் பழகன் முதலாம் மகளிர் விளையாட்டில்.

(௧௫௪.) பந்துவிளையாடுந் தொழிலும், நட்பமான மகரந்தங்கள் வீசி விளையாடலின் சிறப்பும்.

(௧௬௦.) அவரும் வணங்கி யிசைந்தே மந்திரிகளை யழைத்து அழகு நிறைந்த பழையநகரில், இற்றைக்கு முன்னரே புகுந்த.

(௧௬௧.) பக்கத்தே நிறைந்த வாசனை வருக்கம்.

(௧௭௨.) மகோதையினில் முன்னரே புகுந்து கல்லால விருக்ஷத்தையுடைய.

## கூற்றுவநாயனார் புராணம்.

(எ.) ஒருமை யுரிமையையுடைய தில்லைவாழந்தணர்களானவர்கள் தம்மிலொருகுடியை.

(அ.) தேனும் வேய்ங்குழலும் பிழைத்த திருமொழியையுடைய பாவையாரது, புலவியைத்தீர்க்கச் சந்திரனையும், பாம்பையும், பகை நீக்குஞ் சடையாரைத் தூதுதருந் திருநாளில். (அவரால்) கூனுங் குருடுந் தீர்ப்பித்து ஏவல் கொள்ளப்பெற்றவரது விளங்கு மலர்ப்பாதங்களை.

---

## புகழ்ச்சோழநாயனார் புராணம்.

(க.) குலமலையாகிய மேருவின் கொடுமுடிமேல் வேங்கையின் குறியையெழுதி, உலகில் வளர்கின்ற அளிகளுக்கெல்லாம் சாரமாகிய ஊர் உறையூர்.

(உ.) அளவிறந்த பெரும்புகழையுடைய அந்நகரத்தில் அழகிய இரத்தினம் விளக்குகின்ற இளவெய்யிலின் ஒளிப்படலை இரவு நீங்க எரிப்பனவாய் விளங்குகின்ற ஒளியையுடைய.

(ங.) நாகலோகத்தும், பாதலத்தும், நான்காக வகுக்கப்பட்ட நிலத்திலும் நன்மை சிறந்த போகத்திற்குறுப்பாம். அளவிறந்த வளத்தினவாய் அளவில்லாத ஆவணவீதிகளெல்லாம், ஆகாயம் வரைக்கு முயர்ந்த அளவிறந்த பலபொருள் விளங்கும் ஆகாரத்தை நிகர்த்துள்ளன.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
22 JUL 1910
MADRAS.

உ
கடவுள் துணை.
# செந்தமிழ்.

தொகுதி-அ.] சாதாரண-ஸு வைகாசிமீ. [பகுதி-எ.

## இருகண் ணொருமணி.

இவள்வயிற் செலினே யிவற்குடம்பு வறிதே
யிவன்வயிற் செலினே யிவட்கு மற்றே
காக்கை யிருகணி னொருமணி போலக்
குன்று கெழு நாடற்குங் கொடிச்சிக்கு
மொன்றுபோன் மன்னிய சென்றுவா ழுயிரே.

என்னுமிச்செய்யுளை நோக்குமிடத்து, காக்கையின் இரு கண்களுக்கும் ஒருமணியே அமைந்துள்ளதாகத் தெரிகின்றது. அதற்குக் காரணம் யாதென ஆராயுமிடத்து, அது இந்திரன் குமாரனாகிய சயந்தனாற் சம்பவித்ததாகக் காணப்படுகின்றது. எங்ஙனமெனின்,—

ஸ்ரீராமபிரானும் சீதாபிராட்டியும் வனம்புகுந்து சித்திரகூட பருவதத்திலிருந்தபொழுது, ஒருநாள் தேவராசன்குமாரனாகிய சயந்தன் சீதாபிராட்டியுடைய பேரழகைக்கண்டு மோகமுற்று, அப்பிராட்டியை பரிசிக்குமாறு விரும்பிக், காக்கையின் வடிவுகொண்டுவந்து அப்பிராட்டியின் மார்பின்மீது தன் கால்நகங்களாற் கீறினான். அப்பொழுது அதனைக்கண்ட ஸ்ரீராமபிரான் கோபமுற்று அம்மலையின் கண் முளைத்த ஒருபுல்லைப் படையாகக்கொண்டு செலுத்தினார். அப்பொழுது காக்கைவடிவான சயந்தன் அதனைக்கண்டு அச்சமுற்றுப் பிரமாமுதலியதேவர்களது உலகங்களிற்புக்கு அவர்களைச்சரணடைய, அவர்கள் உன்னால் ஒருபோது எங்களுக்குந் தீமைசம்பவிக்கும்; நீ இங்குவரற்பாலையல்லை எனத்தடுத்தார்கள். அதனால் அவன் யாதொரு புகலிடமுமின்றிவருந்தி அலைவுற, அதனைக்கண்ட தேவர்கள் இனி உனக்கு வேறுபுகலிடமின்று, ஸ்ரீராமபிரானுடையபாதங்களே புகலிடமென்றார்கள். அதுகேட்ட சயந்தன் ஸ்ரீராமபிரானை அடைந்து ஐயனே! உனதுபாதமே தஞ்சம் என்று வணங்கினான். அப்பொழுது அவனைக்கொல்லுமாறு படையுந் தொடர்ந்துவந்தது. அதைக்கண்ட ஸ்ரீராமபிரான் அப்படையைநோக்கி நீ இக்காக்கைவடிவான சயந்தனுடைய கண்களிரண்டையுமாத்திரமே ஊடுருவிச்செல்லுதி என்று பணித்தருளினார். படையும் அங்ஙனமேசெய்தது. பின் ஸ்ரீராமபிரான் அச்சயந்தனைநோக்கி நீ என்னைச்சரண் புக்கமையால் உன் பிழையைப்பொறுத்தனம்; உன்னாற்கொள்ளப்பட்டவடிவையுடையஇக்காக்கையினினங்கட்கெல்லாம் இருகண்களுக்குமொருமணி

யே பார்வையின்பொருட்டு நிலைபெறுக எனக்கூறிவிடுத்தனர் என்க. இதனைக்கம்பர்,—

நாகமொன்றிய நல்வரை யின்றலை மேனு
வாகம் வந்தெனை யள்ளுகிர் வாளி னளைந்த
காக மொன்றை முனிந்தயல் கல்லெழு புல்லால்
வேக வெம்படை விட்டது மெல்ல விரிப்பாய். எனவும்,

நாகம் - ஆகாயம். வரை - சித்திரகூடபருவதம். ஆகம் - மார்பு. உகிர்வாள் - நகமாகியவாள். கல்லெழுபுல் - மலையின்கண்முளைத்தபுல். புல்லென்பதற்குத் தருப்பைப்புல் என்பாருமுளர். வேகம் - விரைவு.

அங்க தஞ்சி நடுங்கி யயன்பதி யண்மி
யிங்கு நின்வர வென்ன வேனக்கனல் வெய்த
மங்கை பங்கனொ டெண்டிசை யுஞ்செல மற்றோர்
தங்க டங்க ளிடங்கண் மறுத்தமை தைப்பாய். எனவும்,

அயன்பதி - பிரமலோகம். கனல்வெய்த - கோபமுற. தைத்தல் - மனத்திலழுந்தக்கூறல்.

இந்தி ரன்றரு மைந்த னுறுந்துயர் யாவு
மந்த ரத்தினி னின்றவர் கண்டினி யந்தோ
எந்தை தன்சர ணன்றியொர் தஞ்சமு மின்றால்
வந்த வன்சரண் வீழ்கென வுற்றதும் வைப்பாய். எனவும்,

இந்திரன்றருமைந்தன் - சயந்தன். சரண் - பாதம். தஞ்சம் - புகலிடம். உறுதல் - அடைதல்.

ஐய நின்சர ணஞ்சர ணென்றவ னஞ்சி
வையம் வந்து வணங்கிட வள்ளன் மகிழ்ந்தே
வெய்ய வன்க ணிரண்டொடு போகென விட்ட
தெய்வ வெம்படை யுற்றுள தன்மை தெரிப்பாய். எனவும்,

சரணம் - பாதம். சரண் - புகலிடம். வையம் - பூமி. வள்ளல் - ஸ்ரீராமன். வெய்யவன் - தீயோனாகிய சயந்தன். தெய்வவெம்படை - தெய்வத்தன்மைபொருந்திய கொடியபுல்லாகியபடை. தேவமந்திரத்தோடு செலுத்தினமையின் தெய்வவெம்படை என்றார்.

எந்தை நின்சர ணஞ்சர ணென்றவி தன்னுன்
முந்து நின்குறை யும்பொறை தந்தன முந்துன்
சந்த மொன்று கொடித்திரள் கண்க டமக்கே
வந்தோர் நன்மணி நிற்கென வைத்ததும் வைப்பாய். எனவும்,

குறை - குற்றம். சந்தம் - வடிவு. இராமாவதாரத்துக்கூறிய வாற்றானையறிக.

இன்னும் இக்காதையை யுள்ளிட்டு,

"காகத்திருகண்ணிற்கொன்றேமணிகலந்தாங்கிருவ
ராகத்துளோருயிர்கண்டனம்யாம்." என்றுதிருவர்தலூராடிகளும்,
"காதுமொருவிழிகாகமுறவருள்மாயனதுதிருமருகோனே." என்று திருப்புகழாசிரியருங் கூறுதல்காண்க.

சி. கணேசையர்.

௨

# *நமது புராதன நாகரீகம்.

கனம் அக்கிராசனாதிபதியவர்களே! சகோதரர்களே!!

நமது இந்தியாவின் புராதன நடபடிமிகவே ஆச்சரியமுள்ளது; ஆம், அதின் ஜீவத்துவம் மஹா புதுமைக்குரியது. இதற்கு நம் இதிகாச புராணங்களும் பஞ்சகாவியங்களும் பஞ்ச இலக்கணமுதலிய வனையகிரந்தங்களுமே போந்தசான்றுதருகின்றன. ஆயினும் நமது நாகரீகமுதல் நற்குணநற்செய்கைகளையிட்டு நாமே மேம்பாடாகப் பேசிக்கொள்ளுதல் அத்துணை உருசிகரமன்றென்பதூஉம் அதனைப் பற்றி அயல்நாட்டார்சொல்லி அல்லது வரைந்துவைத்திருப்பதே நிரம்பவும் அநுசரிக்கக்கூடியதென்பதூஉம் எனது சித்தாந்தம். இந்த சித்தாந்தமே நம்முன் மற்றும் பெரும்பாலரும் கொள்ளற்பாலதென்பதும் வெளிப்படை. ஆகவே இந்தியராகிய நம்பேரில் நமது அந்நியதேசப் பெரியவர்கள் யாதுரைத்திருக்கின்றனர் என்பதை மாத்திரம் விசாரித்து அவர் கூற்றை நன்கு இடைக்கிடைபெய்து என தெளிய உபந்நியாசத்தை நடாத்துகின்றேன். கேளுங்கள்.

கிரேக்கருடைய பிராசீனமும் எகிப்தியரது பூர்வீகமும் நம்மவரின் மகோன்னத புராதனத்தின்முன் கேவலம் நேற்றுமழை இற்றைக்குப் பருத்திபோன்றன. ஏனெனில் நமது நாகரீகமே இப்பிரபஞ்சத்தின் மற்றுமுறையிராச்சியத்து நாகரீகங்கட்கெல்லாம் முற்பிறந்ததென்பதற்கு வெள்ளிடைமலைபோல் பல்வேறு ஆதாரங்கள் தெள்ளிதில் கிடக்கின்றன. ஜனசமூகங்கள் உயர்ந்தனவுமுண்டு, தாழ்ந்தனவுமுண்டு; சக்கராதிபத்தியங்கள் ஸ்தாபிக்கப்பெற்றனவுமுண்டு, அழிக்கப்பட்டனவுமுண்டு; வம்சவரிசைகள் தோன்றியனவுமுண்டு, மறைந்தனவுமுண்டு; ஆனால், அவ்வவற்றின் உயர்வையும், தாழ்வையும், ஸ்தாபனத்தையும், அழிவையும், தோற்றத்தையும், மறைதலையும் இமைகொட்டாது பார்த்துக்கொண்டுவந்த நமது இந்தியாவோ இன்றளவும் நம்மோடு நிலைத்திருக்கின்றது.

* இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஒன்பதாம் வருஷோற்சவ காலத்தில் (25—5—10-ல்) ஸ்ரீமத்-M. P. மாஸ்கரன்ஹாஸ் (M. P. Mascuranhas) அவர்களாற் படிக்கப்பெற்றதாகும்.

விலமண்டலமுழுவதுடைம் என்தரிசனத்தைச்செலுத்தி இவ்வுலகத்தில் நிறைந்த அழகும் மிகுந்தபிரதாபமும் வளர்ந்ததிரவியமும் பூலோகமோட்சம் போன்றதுமான தேசம்யாதெனக்கண்டுபிடிக்கப் பிரயத்தனப்படுவேனேயாகில், என் எண்ணத்திற்கிசைந்தவிதமாய் அந்த இந்தியாவையன்றோ பார்க்கக்கூடுமென்றும், கடல்சூழ்ந்த இக்காசினியில் மிகவும் மேலான சாமர்த்தியசாதுரியங்களில் சரிவரத்தேர்ச்சியடைந்தவர்களும் ஜீவப்பிரதிக்ஞையை முறையே சீர்தூக்கிப் பார்த்தவர்களும் "பிலாத்தோ" "காந்த்" என்னும் தத்துவசாஸ்திரிகள் முதலாக ஆராயத்தக்கதான விஷயச்சிக்கறுத்தலில் விசேஷித்தவரும் யாண்டிருக்கின்றனர்-எனநாம் கேட்கப்படுவேனேயாகில் திரும்பவும் அந்த இந்தியாவையன்றோ! இந்தியாவையன்றோ!! சுட்டிக்காட்ட வேண்டிவரும் என்றும் "புரோபெசர் மாக்ஸ்முல்லர்" என்பவர் விரிவாய்ச் சொல்லியிருப்பது இத்தருணத்தில் மறந்துவிடற் பாலதன்றாம்.

இப்பொழுது, முதலாவதாக நம்புராதன இந்தியாவின் துரைத்தனத்தை எடுத்துக்கொள்வோம். "எத்தேசத்தில் அதின் குடித்தனமானது சீரும் செழுமையும் நெடுந்தொகை கொண்டதுமாய் இருக்கின்றதோ அத்தேசத்தின் துரைத்தனம் சீர் கெட்டதாய் இருத்தல் ஒருக்காலும் கூடாதென" இராஜதந்திர வியவகார சிம்மமாகிய "எட்மண்ட்பர்க்" என்பவர் உரைக்கின்றதறிவோம். நமது தேசவாசிகளையோ சீரும் செழுமையுடையவரும் பெருந்தொகை கொண்டவருமென்று பூர்விக கிரேக்க சரித்திராசிரியர்களும் பலதேச சஞ்சார பிரயாண வர்த்தமானிகளும் ஒரேமனதுடன் சம்மதித்திருக்கின்றனர். மஹா பிரக்யாதிபெற்ற "புரொபொசர் டங்கென்" என்பவரும் இதற்கு ஒப்பமிடுகின்றார். அங்ஙனமாகையில் நம்முடைய உத்தம சரித்திராசிரியர் "பர்க்" என்பவர் அபிப்பிராயப்படி நம் இந்திய துரைத்தனம் எவ்வளவு பிரபலம் பொருந்தியதும் எவ்வளவு கௌரவம் பொருந்தியதுமாய் இருந்திருக்கக்கூடுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இரண்டாவதாக நம்புராதனத்தார் ஒருவர் ஒருவருக்குள் கொண்டிருந்த அந்நியோந்நியம் எத்தன்மைத்தாயிருந்ததென்பதை ஆராயப்புகில், அந்நியோந்நியம் அல்லது ஒற்றுமையாகிய அது நன்மையான சாஸ்திரக்கோட்பாடுகளின்மேல் ஸ்தாபிக்கப்பெற்றுக்கட்சிபிரதிகட்சிகள் கடுகளவும் கிடையாது, நாட்டின் க்ஷேமலாபத்திற்கு நிரம்பவும் ஒத்தாசையாகப் பாராட்டப்பட்டு வந்ததென்னலாம். பொதுஜனங்களின் ஒருபாகத்தில் திரண்டதிரவியமும் மற்றொருபாகத்தில் நிறைந்த தரித்திரமும் காணப்படவேயில்லை. மேலும் ஒரு கூட்டத்தைச் சதாசம்பத்துள்ளதாக்கவும், வேறொன்றை நிலையான எளிமைத்தனத்தில் வைத்திருக்கவும் எவரேனும் பிரயாசைப்படுகிறதுமில்லை. தேசநிர்மாணத்தின் பிரதான நோக்கமானது தேசாபிமானத்தைப் பொறுத்ததாகவேயிருந்தது. அத்தேசாபிமானத்தை ஆதாரமாய்க்கொண்டுநிலவிய ஒவ்வொருவரின் சக்தியும் ஆண்மையும் பொதுஜன உபகாரம் என்பதொன்றைமாத்திரம் இலக்குவைத்துக்கொண்டிருந்தன. இவ்வுத்தம செய்கையானது சத்தியவேதாகமத்தில் "மன்னா" வென்கிறபோசனம் வானத்தில்நின்று இசராயேல் கோத்திரம் முழுவதிற்கும் பொழியப்பெற்றதெனக் கூறியிருக்கின்றவண்ணம், இந்தியபிரஜையொவ்வொன்றையும் திறமையிலும் திரவியத்திலும் பங்குபெறச்செய்தது. அக்காலத்திற் பிராமணன் மகன் பிராமணனேயென்றும், சூத்திரன்மகன் சூத்திரனாய்த்தான் இருக்கவேண்டுமென்றும் பாரம்பரிய உரிமை என்பதும் கிடையாது. ஒழுக்கத்தின் மேலேயே வகுப்புகளும் வரிசைகளும் தீர்மானிக்கப்பெற்றன. இனி,



22 JUL 1910

மூன்றாவதாக நமதுபுராதன ஒழுக்கம் எப்படிப்பட்டதென நிர்ணயிப்போம். ஒரு துரைத்தனத்தின் பாக்கியமான எல்லை ஆங்குள்ள குடித்தனத்தின் நற்குண நற்செய்கையினின்று ஏற்படவேண்டுமென்று நமது புராதன இந்தியாவிற்குப் பூரணமாய்த்தெரியும். நம் பூர்விகரின் தாராளமும் கபடின்மையும், நேர்மையும் சத்தியமும் ஆண்மையும் அமைதியும் நாகரீகமும் நாவடக்கமும் ஜெகத்பிரசித்தமானதுமல்லாமல், எந்நிலத்தோராலும் உபமானத்திற்காக அவ்வந்நேரங்களில் எடுத்தாளப்பட்டவை. 'மனிதன்' என்னும்மொழிக்குரிய அர்த்தபுஷ்டியுடன் விளங்காநின்றவர் நம்புராதனத்தாரே யென்பதற்குப் பலப்பலகாரணங்களிருக்கின்றன. விசேஷமாய் உண்மைபேசுவதில் நம்முன்னையோர் ஒவ்வொருதேசத்தாராலும் கொண்டாடப்

பெற்றிருக்கின்றனர். இந்தியவாசிகள் தமதுவீடுகளைப்பூட்டிவைக்கப்பூட்டுவேண்டாமலும் ஒப்பந்தம்பண்ணுவதில் தஸ்தவேஜ்முதலிய எழுத்துலிகிதங்கள் வேண்டாமலும் அவ்வளவு நேர்மையுள்ளவராயிருக்கின்றனரென்று "ஸ்ட்ராபோ" என்பவர் கூறியிருக்கிறார். மேலும் கிறிஸ்துபிறந்த பதினொராம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற பூகோளசாஸ்திரத்தில் "இத்ரிசி" என்பவர் இயற்கையிலேயே இந்தியர் சன்மார்க்கச்சார்புடையவரென்றும் எவ்விதசங்கடத்திலும் நீதிப்பிரமாணத்திற்கு எதிர்நில்லாரென்றும் அவர்கள் எந்தவேலையைத்தொட்டபோதிலும் அதில் தாம்காட்டுகின்ற சமயோசிதமதிநுட்பும், நேர்மை, சத்தியமிவற்றிற்கு உலகத்தெத்திசையாலும் மெச்சப்படுகிறவர்களென்றும், அக்காரணம்பற்றியே இங்கிலவலயத்தின் ஒவ்வொருகோணத்திலும் நின்று ஜனங்கள் கும்பல்கும்பலாய் ஆதியிலிருந்தே இந்தியநாட்டை நோக்கிப்போய்க்கொண்டிருக்கின்றனரென்றும் மொழிந்திருக்கின்றதானது அக்கிரந்தகர்த்தாவினால் நம்மவருக்குக் கிடைத்திருக்கின்றது ஓர் நல்லகொடையேயொழியவேறில்லை.

நாலாவதாக நம்மேலையோரின் பராக்கிரமமும் புயவலிமையும் எப்படிப்பட்டவையெனப்பார்க்குமளவில், அவையனைத்தும் அவரது சரித்திர கிரந்தங்களையும் நடையுடை பாவனைகளையும் தெற்றென அறிந்தவருக்கு எட்டாதிரா. பிறருக்கு அனுப்பிரமாணமும் இன்னுசெய்யாதிருக்குந்தன்மையும் அடைக்கலம் புகுந்தாருக்குக்காட்டும் ஆதரவும் கேவலம் எளியவரிடத்தெல்லாம் தமதுவீரத்தனத்தைக்காட்டிக்கொள்ளாத சுபாவமும் நமது தேசவாசிகளின் பராக்கிரமத்தை யொருங்கே உறுதிப்படுத்துகின்றன. நமதுராஜபுத்திரசகோதரருக்குள் "சுராஜ்மாலுக்கும்" "பிர்த்ராஜனுக்கும்" இடையில் நடந்தயுத்தத்தின் பராக்கிரமம் நாம் அடிக்கடி நினைக்கத்தக்கதாயிருக்கின்றது. "எல்பின்ஸ்டோன்" என்பவர் இந்தியர் எப்பேர்ப்பட்ட உக்கிரம சூரரும் கொண்டிராத வீராவேசமுடையவரென்றும் மானத்திற்காக உயிரையுங்கூடத் தத்தம் பண்ணுவதில் பின்வாங்கமாட்டாதவர்களென்றும் எழுதியிருக்கிறதையும் இப்பொழுது விவரித்துவருகிற காரியத்திற்கு ஆதாரமாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

ஐந்தாவதாகத் தேசாபிமானத்திற்கு நமதுபூர்வீகத்தார் எந்தப்படியிருந்தாரென்பதில் பொதுப்படையாக சர்வதேசத்தவர்களும் அதிசயப்படக்கூடிய விதமாயிருந்தார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. நம்மவரின் அபிமானத்தின்முன் கிரேக்கர் ரோமானித்தருடையவும் தற்கால மேனாட்டுவாசிகளுடையவும் தேசாபிமானம் சூரியன் முன் கேவலம் மின்மினிபோன்றதெனச் சொல்லவேண்டும். நம்முன்னையோரின் தேசாபிமானத்தின் விரிவையும் விஸ்தீரணத்தையும் இன்னமும் அறியவேண்டுமாயின் ஆசியாக்கண்டத்தின் மிகப்பெரிய சக்கரவர்த்தியாயிருந்த அக்பருக்கும் மீவாரின் ரஜபுத்திர அரசனாகிய "பிரதாப்" என்பவனுக்கும் நடந்த அகோரயுத்தத்தைக்கொண்டு கண்கறியலாம்.

ஆறுவதாக, நம்பெண்பாலாருக்கு அந்நாளில் இருந்த சுவாதீனம் மிகவே மெச்சத்தக்கதெனத் தெரிகிறது. இன்றைக்கு நம்மகளிர் அநுபவிக்கும் நிர்ப்பந்தமும் கட்டுப்பாடும் மகம்மதியர் படையெடுப்போடு வந்ததென்பதை இங்கு அநேகர் அறிவார்கள். நமது மடந்தையர் நம்மிடத்திற் பெற்றிருந்த சுவாதீனத்திற்கத்தாட்சியாக H. H. வில்சன் என்பவர், இந்தியர்களைப்போல் தமது மகளிர்களை மதிப்பாகவும் மரியாதையாகவும் நடத்தினவர்களை வேறெந்த இராச்சியத்திலும் காணமுடியாதெனப் பரிஷ்காரமாய்த்தீட்டி வைத்திருக்கின்றனர்.

ஏழாவதாக நம்பெரியோர் அந்நியர் கூட்டுறவு விஷயத்தில் எங்ஙனம் நடந்துகொண்டனர் என்பதைக்கவனிப்போமானால் அவர்கள் ஒருவன் சண்டைசெய்து அடையக்கூடிய வெற்றியைப்பார்க்கிலும் சமாதானத்தால் பதின்மடங்கு அடையலாமென்பதை மனப்பூர்வமாய் அறிந்துள்ளாராதலின் ஒற்றுமைக்கும் அந்நியோந்நியத்திற்கும் மூர்த்தின ஆட்களாயிருந்தார்களென்பது வெளிப்படையாயிருக்கிறது. கிரேக்கதேசத்திறைவனாகிய "செலுக்கஸ்" என்பவன் தனது மகளை நமது சந்திரகுப்த மகாராஜாவிற்கு மணஞ்செய்து கொடுத்ததாக "வீலர்" இந்தியசரித்திரம் என்கிற புத்தகத்தில் நாம் வாசிக்கின்றோம். பாரசீக சக்கரவர்த்தி "நவுஷேரவான்" என்பவன் தனது குமாரத்தியை நம்தேயத்தில் சித்தூர் அரசனொருவனுக்கு பனிவியாகத்தந்தானென்பதும் நம்மில் அநேகருக்குத் தெரியாதிராது. மேலும் பாண்டிய ராஜாக்களுள் ஒருவர் உரோமையை அரசாண்ட

அருள்துஸ்ராயனுக்குத்தனது ஸ்தானாதிபதியை அனுப்பியிருக்கிறார் என "ஸ்ட்ரா போ" என்பவர் தமது கைப்படக் குறித்திருக்கிறது நமது பூர்விகத்தாருக்கும் அயல்தேசவாசிகளுக்கும் மத்தியிலுள்ள அந்நியோக்கியப் பற்றுவரவை அதிகமாய் விளக்குகின்றதென்னலாம்.

எட்டாவதாகப் புறதேசங்களின் குடியேற்றத் தொடக்கத்தை யோசிக்குமிடத்து எகிப்தியர் எத்தியோப்பியர் பாரசீகர் கிரேக்கர் ரோமானித்தர் ஜெர்மானியர் பிரித்தானியர் முதலான ஜனங்களெல்லாப் பெரும்பான்மையும் நமது புராதன இந்தியரே யென்று சரித்திர ஆதாரத்தோடும் சாஸ்திரயுக்தமாகவும் ஸ்தாபிக்கக்கூடியதாயிருக்கிறது.

ஒன்பதாவதாக நமது மருத்துவ ஆராய்ச்சி எந்தவரை இருந்ததென்கையில் அதுவும் மற்றச்சாஸ்திர விற்பனத்தைப்போலவே வெகு மேன்மை பெற்றிருந்ததாகத்தான் சொல்லவேண்டும். இதற்கு நமது தேசத்துள் கிடைக்கக்கூடிய மலை மூலிகைகளும் தாவரவர்க்கங்களும் மிகவும் அநுசரணையாயிருந்ததென்னலாம். 1905-ம் வருடத்தில்சென்னைகவர்னர் ஆம்தில்பிரபுவானவர் இந்தியரின் சுகாதாரவிளக்கநூல்னது சிறந்த மருத்துவ சாஸ்திர மேம்பாட்டிற்கு ஒருசிறிதும் குறைந்ததல்லவெனவும் புராதன சட்ட நிரூபணராகிய மனு, உலகத்தில் மஹா கீர்த்திபெற்ற சுகாதார விளக்க போதனாசிரியர்களில் ஒருவராயிருந்தாரென்றும் சொல்லியது நாம் அறியாததல்ல. அஃதன்றியும் நமது இரணவயித்திய சம்பந்தமான ஆயுதங்கள் நுண்ணிதோர் உரோமத்தையுங்கூட பிளவுபடுத்திவிடக்கூடியவிதமாய் அவ்வளவு கூர்மையுடைத்தானதென Mis. மானிங் என்பவள் விளம்பியிருக்கின்றாள். சரித்திர சம்பந்தமாகச் சொல்லவேண்டின் நாம் நமது வயித்தியத்தை முதன்முதல் அரேபியாவுக்குக் கொடுத்தோமென்றும் அதனை அங்கிருந்து மேனாட்டார் கொண்டுபோயினரெனவும் கூறுதல் நிரம்பவும் பொருத்தமுடைத்து. பாம்பின் விஷத்தைப்போக்கடிக்கும் முறையை நமது பூர்விகர் படித்துக்கொடா முன்னர் அம்முறை கிரேக்கருக்கு முதலாய்த்தெரியாது. இந்த முறையின் நற்பயனை நமது முன்னோர்கள் மஹா அலெக்சாந்தரின் சபா



மண்டப மத்தியில் முதலாய்ப் பலதடவைகளில் ருஜுப்படுத்தியிருக்கின்றாரென Wises (History of medicine) என்னும் புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம். இஃதுடன் 1880-ம் வருடத்தில் வெளிவந்த இங்கிலீஷ் மன்பத்திரிகை இந்தியரின் ஆதிமருத்துவ நூலை நன்கு படித்தவர்கள் வயித்தியத்தொழிலில் அவர்கள் கிரேக்கர் ரோமானித்தாருக்கு மாத்திரமல்ல, தற்போதய மேனாட்டு வயித்திய சிரேட்டர்களுக்கு முதலாக உயர்ந்தவர்களாய் இருந்தார்களென்பதை ஒப்புக்கொள்ளாதிரார் எனப்பிரசுரித்தது நம்மில் அநேகருக்கு ஞாபகமிருக்கக்கூடும்.

பத்தாவதாக நமது கலைக்யான நூல்களைக் கவனிக்கவேண்டி வந்ததாகும். இது காரியத்தில் "புரொபெசர் மாக்ஸ் முல்லர்" பல்வேறு காரணங்களினால் இந்தியாவில் அழிந்துபோய்விட்ட கோடிக்கணக்கான அரும்பெரும் சாஸ்திர கிரந்தங்கள் போகட்டும். தற்போது ஆங்கிருக்கும் பிரபந்தங்களின் எண்ணத்தையேனும் புத்தகசாலைகளால் கீர்த்திபெற்ற கிரீசும் இத்தாலியும்சேர்ந்து தமது தொகையைத்தொண்டு தாண்டிவிடக்கூடுமா எனக்கேட்கிறதும், Mr. வார்ட் என்பவர் புராதன இந்தியரது சாத்திர ஆராய்ச்சியின் மகத்துவத்தை நீதிக்கு பயந்தவர் ஒருக்காலும் மறுக்கார் என்றும், Mis. மானிங் என்பவள் மானிட சிருஷ்டி எவ்வளவு மனோசக்தியையடையக்கூடுமோ அவ்வளவையும் இந்தியர் அடையக்கூடியவர் என்றும், Mr. பிரௌன் என்பவர் இந்தியாவே சர்வசாஸ்திரங்களுக்கும் தாயென்றும் சொல்லியிருப்பனவனைத்தும் நம்மவரின் கலைமாட்சியைக் காட்டாமலிரா.

நல்லது கனவான்களே! என் உபந்நியாசத்தை இன்னமும் தொடருவதற்கு அஞ்சுகின்றனன். காரணம் தங்கள் காருண்யசமுகம் நெடுநேரம் காத்திருப்பவேண்டியதாதலின். ஆகவே இன்னும் இரண்டொரு வார்த்தையோடு எனது வியாசத்தை இறுதிக்கு கொணர்தல் உத்தமமாயிருக்குமென்று நம்புகின்றேன். மேலும் நம் புராதன இந்தியாவின் மகத்துவமும் மாட்சிமையுமோ எண்ணிறந்தவையாயிருக்கின்றன. அவையனைத்தையும் நான் தெரிந்து சொல்வதென்றால் என் ஆயுள் காலமும் போதாது. அன்றியும் இது

வரையும் நான் சொல்லி வந்தது யாவும் நமது தேசவளத்துச்சிறிதோர் பாகத்தின் முகவுரைக்குக்கூட ஒவ்வாதென்னலாம். இதுநிற்க நான் எனது உபந்யாசமாக நமது புராதன நடைபடிகளை எடுத்துக் கொண்டதற்குக் காரணமெல்லாம் நாம் நமது சீரையும் செழுமையும் திரும்பப்பெற்றுக்கொள்ள வேண்டுமேயாயின் "பழமைபாடிச்செழுமை தேடு" என நாம் கேள்விப்படுகின்ற பிரகாரம் நமது முந்தையோரின் பேரையும் பெருமையையும் அடிக்கடி ஞாபகத்திற்குக்கொணர்தல் அத்யாவசியமாயிருக்கின்றதென்னும் சாதாரண எண்ணமேயொழிய விசேஷம் வேறொன்றுமில்லை. அஃது அங்ஙனமாக இனி நாம் செய்யவேண்டியது யாதென்றால் மேலே முதற்குறிப்புப்போல நிற்கும நமது புராதனத்தைப் பலதரமும் நினைவுகூர்ந்து நம் தற்கால நூதனத்தை அப்புராதனத்துடன் ஒப்பிட்டுப்பார்ப்பதில் தெரியக்கூடிய பாரதூர வித்தியாசங்களையுணர்ந்து கொஞ்சத்திற்குக்கொஞ்சமாகிலும் நம்மைத்திருத்திக்கொள்ள வேண்டுமென்பதே. அவ்வண்ணமாக நாம் இனியாகிலும் நமது பழமை பாராட்டி நம்மைக் கவனித்து நடாத்திக்கொள்ளக்கூடிய நல்லெண்ணம் நமக்கு உண்டாகக்கூடுமென்று நம்புகின்றேன். அந்த நல்லெண்ணத்திற்கு சாக்ஷாத் ஈசுவரனும் அருள்புரிவானாக.

---

௨

# காவைவேலன் கோவை.

(முற்றொடர்ச்சி.)

---

### தன்னிலைதலைவன்சாற்றல்.

தன்னிலை தலைவன்சாற்றலாவது வேட்கைநோய் மீதூர்ந்து வருந்துகின்ற தனதுநிலையைத் தலைவன் பாங்கிக்குக் கூறுதல்.

#### செய்யுள்.

௨௨. போதுற்ற கோதையுன் கையிலென் னாவி பொருஞ்சமரில்
ஊதொற்றை வால்வளை வேலன் காவை யுயர்சிலம்பிற்
காதொற்று வேல்விழிக் கன்னிலன் னாகக் களபக்கொங்கை
வேதொற்றி னலன்றி மீளாதென் காம வினைக்குளிரே.



போது - பூ. கோதை - கூந்தல்; ஆகுபெயர். என்னாவி உன் கையில் என இயையும். அது வருவிக்கப்பட்ட இருக்கின்றது என்பதனோடு முடியும். தலைவியைக் கூட்டிவையாது கைவிடுவையாயின்; என்னுயிர் நிலையாது என்பது இதன்கருத்து. வளை - சங்கு. காதுஒற்று - காதிற்கிட்டுகின்ற. வேது - வெம்மை.

---

### கொண்டுநிலைகூறல்.

கொண்டுநிலை கூறலாவது இறந்துபடும் நிலையடைந்து நிற்குந் தலைமகனைப் பாங்கிதேற்றி உயிர்தாங்கிக்கொண்டு நிற்றற்குரிய சொற்களைக் கூறுதல். கொண்டுநிலை - தாங்கிக்கொண்டு நிற்றல்.

#### செய்யுள்.

௨௩. அலைப்பெண்ணை வெல்லு மியல்சேரு மாகத் தரும்பு கொம்மை
முலைப்பெண்ணை வேண்டுவ னென்மறுத் தான்மொழி நாவகத்தே
கலைப்பெண்ணை மேவுங் கரவையில் வேலன் கனகவெற்பிற்[னே.
குலைப்பெண்ணை கொண்டுன் குறைமுடிப் பாய்பினைக் கொற்றவ

அலைப்பெண் - இலக்குமி. அலை - கடல். ஆகம் - மார்பு. நான் வேண்டுவன் என இயையும். கலைப்பெண் - சரச்சுவதி. கனகம் - பொன். பெண்ணை - பனைமடல்; ஆகுபெயர். மொழிநாவகத்தே கலைப்பெண்ணைமேவுங் கரவையில் வேலன் என்பதனால் அவன் கல்விப்பயிற்சி கூறப்பட்டது. நீ விரும்பிய தலைவியை யான்வேண்டுவேன்; அவளுடன்படாளாயின் மடன்மாவூர்ந்து நின்குறை முடிப்பாய் எனப்பாங்கி கூறினாள் என்க.

---

### என்னைமறைப்பினெளிதெனநகுதல்.

அஃதாவது பாங்கிதலைவனை நோக்கி - எனக்கு நீ மறைப்பாயாயின்; நின்னெண்ணம் எளிதின் முடியும் என்று நகையாடிக்கூறுதல்.

#### செய்யுள்.

௨௪. நெய்யுந் திரியும் விளக்கிருந் தாலு நிறைவிளக்கஞ்
செய்யுங் கருவி முதற்றூண்டு கோறிகழ் வாயுங் கண்ணுங்
கையுஞ் சிவந்த காவையில் வேலன் கனகிரியில்
எய்யுஞ் சிலையண்ண லென்மறைத் தாலஞ் ஙியல்வதன்றே.

விளக்கம் - பிரகாசம். வாயுங்கண்ணுங் கையுஞ்சிவந்த கரவையில் வேலன் என்றது விட்டுணுமூர்த்தியை ஒக்கும் ஒருபுருடன் என்பது தோன்ற என்க. என்மறைத்தால் - என்னைமறைத்தால். இயல்வது - நடப்பது.

---

### பாங்கிகையுறையேற்றல்.

அஃதாவது தலைமகன் கொண்டுவந்த பைந்தழையாகிய கையுறையைப் பாங்கி அங்கீகரித்துக்கொண்ட செய்தியைக் கூறுதல். கையுறை - கையிலுறுவது.

#### செய்யுள்.

௨௫. மதிவண்ண வேணி யிருவண்ண மேனி மறைக்கொழுந்தைத்
துதிவண்ண வாயன் கரவையில் வேலன் சுரும்பிற்பொறி
பதிவண்ண லோசன மாலனை யானந்த பைந்தழைதான்
விதிவண்ண மேபெரி தாமெனும் பேரை விளக்கியதே.

மதிவண்ணவேணி யிருவண்ணமேனி மறைக்கொழுந்து - சிவபெருமான். மதி - சந்திரன். வண்ணம் - அழகு. வேணி - சடை. இருவண்ணமேனி - தேவியின் பச்சைநிறமும், தனது செந்நிறமுமாகிய இருநிறமும் விரவியதிருமேனி. சுரும்பு - மலை. பொறிபதிவண்ணலோசனம்மால் - தாமரைப்பூப்போன்ற கண்களையுடைய விட்டுணுமூர்த்தி. பொறிபதி - இலக்குமியின்வீடு; தாமரை. வண்ணம் - நிறம். விதிவண்ணம் - விதியின்செயல்.

---

### பாங்கிதலைவியைக்குறியிடத்துய்த்துநீங்கல்.

குறியிடத்துய்த்து - குறியினிற்கச்செய்து.

#### செய்யுள்.

௨௬. சந்தன நீழனஞ் சாரலின் வாய்தில்லுர் தாரணிக்குள்
ஐந்தரு வான கரவையில் வேல னணிவரைமேற்
செந்திரு மால்பிறப் பீரஞ்சின் மூன்றன்ன சேய்யவிழி
சுந்தர மேவும் புறவடி நாடிடைத் தோகையரே.



தோகையரே நில்லும் என முடிக்க. தாரணிக்குள் ஐந்தருவான வேலன் என்பதனால் அவனது வரையாது கொடுக்கும் வள்ளன்மை கூறப்பட்டது. செந்திருமால் பிறப்பீரைந்தின் மூன்று - மீன், ஆமை நரசிங்கம் என்பன. மீன் விழிக்கும், ஆமை புறவடிக்கும் சிங்கம் இடைக்கும் உவமானம்.

---

### புகழ்தல்.

புகழ்தலாவது தலைவன் தலைவியைப் புகழ்ந்து கூறுதல்.

#### செய்யுள்.

௨௭. முகத்தான் மதியை மறுவாக்கி னீர்முலை கொண்டுவெல்லைச்
சகத்தா ரறிந்திடக் காசாக்கி னீர்குழை சாடியவம்
பகத்தாலு மாவை வடுவாக்கி னீரொழு பாரிற்சத
மகத்தா னனைய கரவையில் வேலன் வரையணங்கே.

வரையணங்கே மறுவாக்கினீர், காசாக்கினீர், வடுவாக்கினீர், என முடிக்க. வல் - சூதாடுகருவி. காசாக்கினீர், வடுவாக்கினீர் என்பன சிலேடை. காசு - மணி, குற்றம்; வடு - பிஞ்சு, குற்றம். அம்பகம் - கண், சதமகத்தான் - இந்திரன்.

### பாங்கி தலைவியைச்சார்ந்து கையுறை காட்டல்.

அஃதாவது தலைவியைக் குறிவயின் நிறுவிப் போனபாங்கி தலைவன் புணர்ந்து மகிழ்ந்து புகழ்ந்து போனபின் வந்து கையுறையாகிய பூக்களை இவை இவை என்று காட்டிக் கூறுதல்.

#### செய்யுள்.

௨௮. பூமேவு தாமரைப் போதிவை காவியம் போதிவைமாந்
தேமேவு வாசத் தளிரிவை காணிவை சேர்த்தணிவாய்
காமேவு செங்கைக் கரவையில் வேலன் கனகிரிமேன்
மாமேவு முண்டக மேலுறை யாத மடமயிலே.

பூ - பூமி. போது - மலர். கா - கற்பகச்சோலை. மா - பெருமை. முண்டகம் - தாமரை. காமேவு செங்கை என்பதனால் அவன் கொடைச்சிறப்புக் கூறப்பட்டது.

### தலைவியைப் பாங்கிகுறிவரல் விலக்கல்.

அஃதாவது பாங்கி தலைவியை நோக்கிக் குறிக்கப்பட்ட இடமாகிய சோலையின்கண் வாரற்க என்று அவள் வருதலை விலக்குதல்.

#### செய்யுள்.

உ௯. வண்டலை தண்டலை வாரலை நீயினி மாகத்தெழுங்
கொண்டலை நேர்கொடை யான்புகழ்க் கங்கை குலத்துதித்தோன்
மிண்டினர் சிங்கங் கரவையில் வேலன் வியன்சிலம்பிற்
கண்டினை வென்று கசப்பாக்கு மென்மொழிக் காரிகையே.

வண்டு அலை - வண்டுகள் அலைகின்ற. தண்டலை - சோலை. வாரலை - வாராதே. கொண்டல் - மேகம். கங்கை குலத்துதித்தோன் என்பதனால் கரவை வேலனுடைய வேளாண் குலமும், மிண்டினர் சிங்கம் என்பதனால் அவனுடைய பராக்கிரமமுஞ் சொல்லப்பட்டன. மிண்டினர் - நெருங்கி எதிர்த்தோர். கண்டு - கற்கண்டு.

---

### நெடுந்தகை குறிவயினின்றிரங்கல்.

அஃதாவது தலைமகன் தலைவியைக் காணப்பெறுமற் குறிவயினின்று மனம் நொந்து புலம்புதல்.

#### செய்யுள்.

௩௦. களிகாண் மயிலினங் காண்மலர்ச் சோலையிற் கீதம்பயில்
அளிகாள் பசுங்கொடி யன்னார் விளங்குமென் னம்பகமுன்
வெளியாக நின்றில ரந்தோ நதிக்குல வேந்தன்றமிழ்
தெளிவாய கும்பன் கரவையில் வேலன் சிலம்பகத்தே.

கீதம் - இராகம். பசுங்கொடியன்னார் என்றது தலைவியை. அம்பகம் - கண். தமிழ்தெளிவாய கும்பன் என்பதனால் கரவைவேலனுடைய தமிழ்நூற் பயிற்சி கூறப்பட்டது.

### தாய்துயிலறிதல்-

தாய்துயிலறிதலாவது பாங்கி தலைமகனைக் குறியிடத்து நிறுவித் தாயினித்திரையை இயைவன கூறி அறிதல்.



#### செய்யுள்.

௩௧. மேதினி யாடந்த வேலன் கரவை வியன்சிலம்பில்
ஊதி யுலாவி யளிசூழ் கருங்குழ லொண்டொடியே
போதிசை நாகர் தழுவிய பீலியம் பொன்மயில்கள்
பாதி யிராவுந் துயிலா மிகுந்த பரிவுகொண்டே.

மேதினியாள் தந்த - பூமிதேவிபெற்ற. இதனாற் கரவைவேலனுடைய வேளாண்குலம் கூறப்பட்டது. அளி - வண்டு. போது-பூ. நாகம் - மலை. பீலி - தோகை. பாதியிரா - அர்த்தராத்திரி. பரிவு - துயர்.

---

### தலைவியைக் குறிவயினுய்த்துநீங்கல்.

அஃதாவது பாங்கிதலைவியைக்கொண்டு சென்று குறிவயினிறுவித் தான் நீங்குதல்.

#### செய்யுள்.

௩௨. இனபரி பாலன் கரவையில் வேல னெழிற்கிரிமேற்
கனமனை கோதைக் கருங்குயி னீகலந் தேயணியப்
புனல்வரி வாளை விளையாடும் வாவியிற் போதுமது
வனமுறுங் காவியுங் கொண்டிவண் மீண்டு வருகுவனே.

இனபரிபாலன் என்பதனால் வேலனுடைய சுற்றங்கிளை தாங்குஞ் சிறப்புக்கூறப்பட்டது. கனம் அன-முகிலையொத்த. போது-பூ.

---

### தலைவியைத்தலைவன் குறியிடத்தெதிர்ப்படல்.

௩௩. குவிகறை மேகம் பயில்சோதி மின்னெனக் கூண்டிருண்டு
கவியிரு ணீவரக் கண்டவென் கண்கள் கவிக்குவிழிச்
செவிமணி நல்குங் கரவையில் வேலன் சிலம்பகத்திற்
புவியினி லென்றவ மாற்றிய தோமணிப் பூங்கொடியே.

கறை - கறுப்பு. கூண்டு - கூடி. மணிப்பூங்கொடியே! மின்னென நீ வரக்கண்ட என் கண்கள் என்ன தவம் ஆற்றினவோ? என

முடிக்க. கவி - பாட்டு. விழிச்செவிமணி - நாகரத்தினம். இதனால் அவன் செல்வப்பெருமை கூறப்பட்டது.

---

## புகழ்தல்.

௨. கலவிநிகழ்ந்தபின் தலைமகன் தலைவியைப் புகழ்தல்.

### செய்யுள்.

விண்டோயுஞ் சோலையின் மேகார மாட விரைமலரில்
வண்டோசை பாடுங் காவையில் வேலன் மணிவரையில்
கண்டோது மென்மொழி யுன்னருங் கண்டத்தைக் கண்டபின்[னும்
உண்டோ சுரிமுக மில்லாத சாதி யொளிவளையே.

மேகாரம் - மயில். ஓசை - இசை. கண்டம் - கழுத்து. வளை - ங்கு.

---

## தலைமகளவலம் பாங்கிதணித்தல்.

அவலம் - துயர்.

### செய்யுள்.

௧௫. அடிப்பூ மயினின் குறிப்பிழை யேவிடை யண்ணல்பதம்
முடிப்பூ வெனவைத்த வேலன் காவை முதுசிலம்பிற்
கொடிப்பூ மரத்திற் புனல்வா யரும்பிய கோகனகக்
கடிப்பூ விருந்த தவர்பாற் குறிப்பிழை கண்டிலமே.

அடிப்பூமயில் - பாதமாகிய தாமரைமலரையுடைய பெண்ணே! விடையண்ணல் - சிவபிரான். கொடிப்பூமரத்தில் - கொடிபடர்ந்து பூத்திருக்கும்மரத்தில். கடி - பரிமளம்.

---

## இறைவிமேலிறைவன் குறிபிழைப்பேற்றல்.

அஃதாவது தலைவன் தான் அல்லகுறிப்பட்டு வருந்திய குற்றத்தைத் தலைவிமேலேற்றிக் கூறுதல்.



### செய்யுள்.

௧௬. பெருக்கான் கீர்த்திக் காவையில் வேலன் பெருஞ்சிலம்பின்
மருக்கா லுந்தாமரை வாண்முகச் செந்திரு மங்கையன்ன
முருக்கா ரிதழி யெனைமறந் தாலு மொழியி னுண்மை
ஒருக்கா லு நெஞ்சின் மறந்திலன் வேல்விழி யொண்டொடியே.

பெருக்கு - வளர்ச்சி. மரு - வாசனை முருக்கு ஆர் - முருக்கம்பூவை ஒத்த. இதழி - அதரமுடையவள்.

---

## அவள்குறிமருண்டமை யவளவற்கியம்பல்.

அஃதாவது தலைவி குறியின்மயங்கிய தன்மையைப் பாங்கிதலைவனுக்குரைத்தல்.

### செய்யுள்.

௧௭. கருமா னிகருங் கொடைக்கரத் தானுயர் காசினிமான்
மருமான் காவையில் வேல மகீபன் மணிவரையில்
திருமானிகரும் புகழண்ண லேதுணைச் செப்புமுலை
ஒருமான் குறிமருண் டேயுடன் மீண்டுவந் துற்றனளே.

கரு மால் நிகரும் - கரியமுகிலையொத்த. காசினிமான் மருமான் - பூமிதேவியின்மகன். மகீபன் - அரசன். திருமால் நிகரும் - விட்டுணுமூர்த்தியையொத்த. செப்புமுலை ஒருமான் என்றது தலைவியை. இங்கே கருமான், காசினிமான், மருமான், திருமான், ஒருமான் என அஞ்சுமான் பெயர் தொனித்தல் அறிக.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

## ௫-வது சதுர்த்தாரிகாலம்பகம் ௨-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

எல்லோருடைய தலைகளிலு மிடைவிடாது தன்னிஷ்டப்படி கால்களை வைத்து மிதித்துக்கொண்டு செல்கின்றதும் ஐசுவரியம் முதலிய அறுகுணங்களையுடையதுமான ஊழை எவனால் விலக்கமுடியும் என்றிவ்விதம் தன்னிலைமைக்குத் தக்கபடி ஆலோசனை செய்தனன். இவ்வண்ண மாலோசனை செய்கின்ற பிராமணயுவாவான அந்த சக்திதேவனுக்கு மரத்தின் கிளையிலிருந்த வண்ணமே யன்றுபகல் கழிந்தது. சாயங்காலமானவுடன் அவன், எல்லா விடங்களினின்றுமவ்வாலமரத்தில் வந்தடைகின்றவைகளும் சப்தத்தினால் திசைகளெங்கும் நிரப்புகின்றவைகளுமான பருத்தவுருவத்தையுடைய பற்பல கழுகுகளைக் கண்டனன். அப்பக்ஷிகள்வருங்கால் அவற்றின் பெரிய இறகுகளின் காற்றினால் கிளம்புகின்ற கடலலைகள் அப்பக்ஷிகளிடத்துள்ள பழக்கத்தினால் அவற்றிற்கெதிர்சென்றெழுவன போற் காணப்பட்டன. பின்பு கொப்புகளையடைந்துள்ள அப்பக்ஷிகள் மனுஷியர்கள் பேசும்வண்ணமே ஒன்றோடொன்று பேசிக்கொள்ள அதனையவன் அவ்வாலமரத்தின் அடர்ந்த இலைகளில் மறைந்திருந்தபடியே கேள்வியுற்றனன்.

அப்பொழுது அவைகளிலொருபக்ஷி அன்றுதினம் தான் த்வீபாந்தரஞ் சென்றிருந்ததாய்க் கூறிற்று. ஒன்று சிறந்ததொரு மலைக்குத் தான் போயிருந்ததாய்ச் சொல்லிற்று; ஒன்று வேறோர் திசைக்குத் தான் போனதாக வுரைத்தது. இவ்வாறு ஒவ்வொன்றும் தாங்கள் சென்றிருந்தவிடத்தைப்பற்றிப் புகழ்ந்துபேசியபின் அப்பக்ஷிகள் நடுவில் வயதுமுதிர்ந்த ஒரு பக்ஷியானது யானின்று உத்



சாகமாய் விளையாடுவதற்காகக் கனகபுரிக்குச் சென்றிருந்தேன்; நாளைக்காலையிலும் சுகமாய்ச் சஞ்சரிப்பதற்காக அவ்விடத்திற்கே செல்லப்போகின்றேன்; வருத்தத்தைத் தருகின்ற தூரதேச கமனத்தினாலெனக்கு வேறென்ன பிரயோஜனமிருக்கின்றது.—என்றிவ்விதம் நினைப்பின்றி அமுதத்தினையொத்த அப்பக்ஷி கூறிய வசனத்தினால் சக்திதேவன் தாபமற்றவனாய் ஓஹோ! தெய்வகதியா லந்நகரமொன்றிருக்கின்றதென்பது முண்மையே. அதனை யடைவதற்கு மிதுவே உபாயமெனக்கு; ஆனால் மிகப்பெரிய சரீரத்தையுடைய இப்பக்ஷியானது வாகனமாகவே யேற்பட்டது என்று ஆலோசனைசெய்துகொண்டு மெல்லக் கிட்டநெருங்கிச்சென்று உறங்குகின்ற அப்பக்ஷியினிறகில் சேர்ந்து மறைந்திருந்தனன்.

காலை வேளையில் மற்றைப்பக்ஷிகள் யாவும் பற்பல இடங்களை நாடிச்சென்றபின் சக்திதேவனுக்கிருப்பிடமாகிய அப்பக்ஷியானது ஆச்சர்யமான * பக்ஷபாதத்தைக் காண்பிக்கின்ற ஊழைப்போலவே அவனுக்கு ஆதாரமாகி முதுகினில் மறைந்துகிடக்கின்ற சக்திதேவனை வஹித்துக்கொண்டபடியே மறுபடியும் தான் சஞ்சரிப்பதற்காக க்ஷணநேரத்தினிலக் கனகபுரியை யடைந்தது. அஃது அவ்விடத்திலுள்ள ஓர் உத்யானவனத்தின் நடுவிலிறங்க உடனே அந்த சக்திதேவனும் அசையாமல் மெல்ல அதன் முதுகினின்றும் குதித்தனன். இறங்கியதும் தன் பக்கத்தைவிட்டு அந்த உத்யானவனத்தினில் அவனுலாவிக்கொண்டிருக்கும்போது அவ்விடத்தில் பூக்கொய்துகொண்டிருந்த அதிசௌந்தர்யவதிகளான இரண்டு பெண்களைக்கண்டனன்.

அவர்களுமிவனைக்கண்டவுடன் ஆச்சரியமடைய அவன் அவர்கள் சமீபத்தில், மெல்லச்சென்று, ஹே மங்களவடிவுள்ளமாதர்களே! இது எந்த இடம், நீங்களிருவரும் யாவரென்றனன். அதற்கவர்களவனைப்பார்த்து நண்பனே! இதுவித்யாதரர்கட்கிருப்பிடமாகிய கனகபுரியென்னும் பெயரினையுடைய நகரம். இந்நகரத்தினில் சந்திரப்ரபையென்ற வித்யாதரஸ்திரீ வாசஞ்செய்கின்றனள். நாங்களிருவருமவளுடைய உத்யானவனத்தைக் காக்கின்றவர்கள். அவளுக்காக

* பக்ஷபாதம் - அன்புடைமை, இறகுகளின் இடக்கை.

வே பூப்பறிக்கின்றோமென்றனர். அதற்கந்தப்ராமணன் உங்களௌஜமானியான அவளை யிப்போது யானுமெவ்விதம் பார்க்கும்படி நேருமோ அவ்விதம் நீங்கள் செய்யவேண்டுமென்றனன். அதைக் கேட்டதுமவ்விரண்டு ஸ்திரீகளும் அப்படியே செய்கிறோமென்று கூறி அந்த யுவாவான சக்திதேவனை யந்நகரத்தின் மத்தியிலுள்ள ராஜகிரகத்திற்கழைத்துச் சென்றனர்.

அவனும் மாணிக்க ஸ்தம்பங்களாலழகியதும் சுவர்ணமயமான சுவர்களுடன்கூடிச் செல்வங்கள் யாவும் தங்கியிருக்கின்ற இடம்போற் காணப்படுகின்றதுமான அந்த ராஜகிரகத்தைக் கண்ணுற்றனன். அவ்விடத்திற்கவன் வந்தவுடனவனைக்கண்டு அங்குள்ளவேலைக்காரஜனங்கள்யாவரும் விரைவிற்சென்று மனுஷியசஞ்சாரமில்லாத இவ்விடத்தில்மனுஷியனொருவன் வந்திருக்கின்றானென்ற ஆச்சரியத்தைத் தங்களரசியாகிய சந்திரப்ரபையென்பவளிடம் தெரிவித்தனர். உடனே அவளும் வாயில்காவலனுக் குத்திரவளித்துத்தாமசியாது அவனையுள்ளே தன் சமீபத்திற்கழைத்து வரும்படிசெய்ய; அவிடம் சென்ற சக்திதேவன், தன் கண்களுக்கானந்தத்தைவிளைவிக்கின்றவளும் ப்ரமதேவனுடைய அற்புதமானபடைப்புத்தொழிலின் முடிவே ஒரு உருவெடுத்து வந்திருக்கின்றதுபோலக் காணப்படுகின்றவளுமான அம்மங்கையைக்கண்டனன்.

அவளுமவன்தூரத்தில் வருகின்றபோதே சிறந்த இரத்தினசிம்மாசனத்தினின்று மெழுந்து அவனைக்கண்டமாத்திரத்திலவன்வசப்பட்டவளாய்த்தான் நல்வரவுகேட்டவனை ஆதரித்து ஆசனத்தில் வீற்றிருக்கும்படிசெய்து அவனைப்பார்த்து, ஹே ! நங்களமுள்ளவரே? இப்படிப்பட்ட நீர்யார்? மனுஷ்யர்களாலடையத்தகாத இவ்விடத்திற்கெப்படிவந்தீர்? என்றுசந்தோஷத்துடன்கேட்க சக்திதேவன் தன்தேசத்தையும் ஜாதியையும் பெயரையும் தெரிவித்து வர்த்தமானபுரத்தரசன் புதல்வி கனகரேகை யென்பவள் கனகபுரியைப் பார்த்திருக்கின்றவனையே தான் விவாஹஞ் செய்துகொள்வதாய் நிச்சயித்திருக்கின்றதையும் அவளையடைவதற்காகத்தானவ்விடம்வந்த சமாசாரத்தையும் விவரித்துரைத்தனன்.



அதைக்கேட்டதும் சந்திரப்ரபை யென்பவள் ஏதோ ஒன்றைச் சிந்தித்துப் பெருமூச்சுவிட்டுப் பின்பு அந்த சக்திதேவனைத் தனித்தவிடத்திற் கழைத்துச்சென்று ஆசனத்திலிருக்கச்செய்து, ஓய் நற்புகழ் வாய்ந்தவரே! இப்பொழுது நானுமக்கொன்று சொல்லுகிறேன் கேளும், இப்புவியிற் சசிகண்டரென்னும் பெயரையுடைய வித்யாதரபதி ஒருவரிருக்கின்றனர். அவருக்கு நாங்கள் நாலுபுத்திரிகள் முறையே ஜனித்தோம். அவர்களில் மூத்தவள் சந்த்ரப்ரபை என்பவள்யான், எனக்கிளையவள் சந்த்ரரேகை யென்பவள். அவளுக்கிளையவள் சசிரேகை யென்பவள். நாலாவதுபெண் சிப்ரபை என்பவள். நாங்கள் நால்வரும் முறையே யெங்கள் பிதாவினது கிரகமாகியவிடத்தில் வளர்ந்துவந்தோம். யான் கன்யாவ்ருதத்திலிருக்கும்போது ஒருசமயத்தி லெனதுசகோதரிகள் மூவரும் ஒருங்குசேர்ந்து ஸ்நானஞ்செய்வதற்காக கங்காநதிதீரத்திற்குச் சென்றனர்.

அவ்விடத்திலவர்கள் நீர்விளையாட்டிற் காரம்பித்ததும் தங்கள் யௌவன மதத்தினால் அந்நீரில் தவம்புரிந்துகொண்டிருந்த அக்ரியதபசென்னும் முனிவர்மேல் தண்ணீரை வாரியிறைத்து மிகவும் நிர்ப்பந்தம் செய்ய அம்முனிவர் கோபமுற்றவராய் அவர்களை நோக்கி நீங்களனைவரும் பூலோகத்தில் நிந்திக்கத்தக்க கன்னிகைகளாகப் பிறக்கக் கடவீர்களென்று சபித்தனர். அவரவ்வாறு சபித்தனரென்பதையறிந்து எங்கள் பிதாவானவர் அம்முனிவரிடஞ்சென்று பிரார்த்திக்க அந்த மஹாமுனிவர் சாபத்தின் முடிவை அவர்கட்கெவ்விதம் சொல்லவேண்டுமோ அவ்விதம் சொல்லிவிட்டு அவர்களெல்லோர்க்கும் மானிடத்தன்மையோடுகூடப் பூர்வஜன்ம விருத்தாந்தத்தையறியும் ஞானத்தையும் கட்டளையிட்டனர். பின்பு என் சகோதரிகள் மூவரும் சரீரத்தைவிட்டு நீங்கி, மனுஷ்யலோகத்தையடைய எனது பிதாவானவர் இந்நகரத்தை யெனக்குக் கொடுத்துவிட்டு வியசனத்தினாற் காட்டையடைந்தனர். பின்பிவ்விடத்தினில் வசிக்கின்ற எனது சுவப்பனத்தில் அம்பிகாதேவியானவள் வந்து என்னைப்பார்த்து ஹே புத்திரி! உனக்குமானிடனே கணவனாகப் பவிக்கப்போகின்றானென்றுத்தரவளித்தனள்.

ஆதலால் என்பிதா எனக்குப் பற்பல வித்தியாதரர்களைப் பார்த்தாவாக வுத்தேசித்தும் நான் சம்மதியாது அவரை மறுத்துவிட்டு,

இப்பொழுது கன்னிகையாகவே யிருக்கின்றேன். இப்போதோ ஆச்சரியமான வுமது வாவினாலும் வடிவினாலும் ஈடுபட்டு உமக்கே யென்னை யர்ப்பணஞ் செய்துவிட்டேன். ஆகலா லும்மைப்பற்றி யென்பிதாவிடம் தெரிவிப்பதற்காக வருகிற சதுர்த்தசி தினத்தன்று ரிஷபமகாகிரிக்குச் செல்லுகின்றேன். அவ்விடத்தி லந்த சதுர்த்தசிதிதியில் சிவபிரானைப் பூஜிப்பதற்காக எல்லாத்திசைகளினின்றும் சிறந்த வித்யாதரர் யாவரும் வருஷந்தோறும் வந்து சேருகின்றனர். எனது பிதாவும் அவ்விடத்திற்கே வருவார். யானவரனுமதியைப் பெற்றுக்கொண்டு சீக்கிரமிவ்விடம் வருகின்றேன். பின்புநீர் என்னை விவாகம் செய்துகொள்ளும், எழுந்திருமிப்பொழு தென்று சொல்லி அந்தச் சந்திரப்ரபை யென்பவள் வித்யாதரர்கட்குரிய சிறந்த ஆசாரங்களால் சத்திதேவனை யுபசரித்தனள்.

அவள் சொல்லியதற்கிசைந்து அப்படியே செய்கிறேனென்று கூறிய அங்கிருந்த சத்திதேவனுக்கு அப்போது காட்டுத்தீயினால், தாபத்தையடைந்தவனுக்கு அமிருதச் சுனையில் மூழ்கினா லெவ்வளவு சுகமுண்டாகுமோ அவ்வளவு சுகமுண்டாயிற்று. இப்படிச் சிலதினஞ்செல்லலும் அந்தச் சதுர்தசிதினம் வர அவள் சத்திதேவனைப்பார்த்து இப்பொழுது நானும்மைப்பற்றி என் பிதாவுக்குத் தெரிவிப்பதற்காகப் போய்வருகின்றேன். இங்கிருக்கிற வேலைக்காரர்யாவரும் என்னுடன் வருவார்கள். தனித்திருக்கின்ற நீர் இரண்டு நாள்வரை வருந்தாதிருத்தல் வேண்டும். அன்றியும், இந்தமாளிகையி லொருவராகவிருக்கின்ற நீர் தன்மேல்மாடியிலெவ்விதத்தாலும் ஏறக்கூடாது என்று சொல்லி அச்சந்திரப்ரபை யென்பவள் தன் மனதை அந்தயுவாவான சத்திதேவன் சமீபத்தில் வைத்துவிட்டு அவன் மனது தன்னுடன் பின்சென்றுவர அங்கிருந்து புறப்பட்டனள்.

அவள் வெளியேறிச்சென்றபின் அம்மாளிகையில் தனித்திருக்கின்ற சத்திதேவன் மனதிற்கு விநோதத்தையுண்டுபண்ணுகின்றவனாக யாவரும் கண்டு மகிழத்தக்க பெருஞ்செல்வம் நிரம்பிய அங்குள்ள ஒவ்வோரிடங்களிலும் உற்சாகத்தோடு சுற்றியுலாவிக்கொண்டிருந்தவன், நம்மை யந்த வித்யாதர கன்னிகையான சந்திரப்ரபை யென்பவள் இம்மாளிகையின் மேல்மாடியிலேறக்கூடாதென்றெதற்



காகத் தடுத்தனளென்று கருதி அங்குள்ள புதுமையைக் காண வேண்டுமென்ற ஆவலுற்றவனாய் அவன் அதே மாளிகையின் மேல்மாடியிலேறினன். ஏனெனில், உலகத்தில் மனிதர்கள் மனதின் ப்ரவிருத்தியானது பெரும்பாலும் ப்ரதிகூலமானவற்றை மாற்றிக்கொண்டு செல்லுகின்றதாகவே யிருக்கின்றது.

ஆதலால் அவன் அதிலேறியதும், மறைக்கப்பட்டிருக்கின்றவும் இரத்தினமயமாயுமிருக்கின்ற மூன்று மண்டபங்களைக் கண்ணுற்றனன். அம்மண்டபங்களிலொன்றின் வாயில் திறக்கப்பட்டிருந்தது. அதன் நடுவிற் பிரவேசித்தனன். பிரவேசித்ததும் உள்ளே வுயர்ந்த இரத்தினங்களாலியற்றிய கட்டிலிற் போடப்பட்டிருக்கின்ற மெத்தையில் விலைமதித்தற்கரிய வஸ்திரத்தினாற் சரீரம் மூடப்பட்டுச் சயனித்துக்கொண்டிருக்கின்ற ஒன்றனைக்கண்டான். உடனே அவனதன் சமீபத்திற்சென்று மூடியிருக்கின்ற வஸ்திரத்தை மெல்லத் திறந்துபார்க்க, வர்த்தமானபுராதிபதியான பரோபகாரி மகாராஜன் புதல்வியான மேன்மைதங்கிய கனகரேகையென்னுங் கன்னிகையை அப்படியே மரணமடைந்து கிடக்கின்றவளாகக்கண்டு ஓ ஹோ! இஃதென்ன ஆச்சர்யம்! இவள் தன்னறிவில்லாதுறங்குகின்றாளா என்ன, அல்லது தடையில்லாத நமது ப்ராந்தி தானோ; எவளை யடையவேண்டிய நிமித்தம் யான் புறப்பட்டேனோ அவளே யிங்கிருக்கின்றனள்; ஆனாலிவளந்த வர்த்தமானபுரத்தினில் ஜீவனோடிருக்கின்றனள்; இவ்விடத்திலோ பிராணனற்றவளாய்க் கிடக்கின்றனள். இவளது குறைவற்ற தேககாந்தியானது அதனைப்படைத்த பிரமதேவனால் ஏதோ ஒரு காரணத்தினா லிந்திரஜாலமாக விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. இஃதெனக்குண்மை.

என்றிவ்விதம் பலவாறுயாலோசித்துக்கொண்டு அவனவ்விடத்தினின்றும் வெளியேறிக் கிரமமாக மற்றைய யிரண்டு மண்டபங்களினுள்ளே பிரவேசிக்க அம்மண்டபங்களிலும் அதே விதமாய் ஜீவனற்றவர்களாய்க் கிடக்கின்ற வேறிரண்டு கன்னிகைகளையுங் கண்டனன். உடனே யவன் ஆச்சரியத்தையுடையவனாயங்கிருந்து வெளியேறி அந்த மேல்மாடியின் ஓரத்தில் நின்றுகொண்டு பார்க்கும்போது கீழே மிகவும் சிறந்ததொரு வாவியைக்கண்டனன். அந்த

வாவியின் கரையினில் இரத்தினமயமான கல்லணையுடன் கூடிய ஒரு குதிரையையும் கண்டனன். உடனே அவன் தான் உபாச்சென்ற வழியே இழேயிறங்கி சந்தோஷத்தோடு அக்குதிரையின் பக்கத்திற் சென்று அங்கொருவருமில்லையென்றறிந்து அக்குதிரையின் மீதேற வேண்டுமென்று நினைக்க அக்குதிரை யவனைக் காலாலுதைத்து அந்த வாவியினில் தள்ளிற்று. அந்நீரில் மூழ்கிய சக்திதேவனும் விரைவினில் தனது வர்த்தமானபுரத்தி லுத்தியானவனத்திலுள்ள நடைவாவியின் நடுவில் பரபரப்புடன் வெளியேறினன்.

உடனே அவன், ஜனனபூமியில் உத்தியானவாவியின் நீரில் *சந்திரப்பிரபையை விட்டு நீங்கிய வாட்டமுற்றிருக்கின்ற தன்னை அதிலுள்ள ஆம்பல்களோடொத்தவனாகக் கண்டனன். உடனே அந்த சக்திதேவன், ஓ ஹோ! இந்த வர்த்தமானபுரமெங்கே யிருக்கின்றது. வித்யாதரர்கட் கிருப்பிடமாகிய அக்கனகபுரியென்னும் நகரமெங்கே யிருக்கின்றது. இதென்ன ஆச்சர்யமான மாயாடம்பரத்தா லேற்பட்டது. அற்பமான பாக்கியத்தையுடைய யான் எதனாலோ வஞ்சிக்கப்பட்டேன். என்ன கஷ்டமோ அல்லது இதிலுள்ள உண்மையை யெவ்வறிகின்றோனோ, ஊழ்வலிதா னெவ்விதமாயிருக்கின்றதோ என்றிவ்வாறு பற்பலபடியாய்ச் சிந்தையுற்றவனாகி அந்த வாவியின் நடுவினின்றும் வெளியேறி ஆச்சர்யத்துடன் கூடியவனாகத் தன் பிதாவினது கிரகத்திற்குச் சென்றனன்.

அவ்விடத்திலவன் தன்வரவினா லுத்ஸவங் கொண்டாடுகின்ற பந்துஜனங்களோடு தன்பிதாவினாற்கொண்டாடப்பட்டவனாகிக் குதூகலத்துடன்கூடியவனாக முரசு சுற்றிவருவதை லக்ஷியம் பார்த்துக்கொண்டிருந்தான். மறுநாள் தன் கிரகத்தினின்று மவன் வெளியேறிச்செல்லும்பொது அந்நகரத்தில் முரசடித்துக்கொண்டவண்ணமே பிராமண க்ஷத்திரியரென்ற இருதிறத்தாருள் எவராற் கனகபுரியானதுண்மையாய்ப் பார்க்கப்பட்டிருக்கின்றதோ, அவர் சொல்ல வேண்டும் அவருக்கு மகாராஜர் இளவரசுப்பட்டத்துடன் தன் புத்திரியைக் கொடுக்கின்றாரென்று கூறுகின்ற சொல்லைக் கேட்டனன்.

(தொடரும்.)

---

* சந்திரப்பிரபை என்ற சொல், சந்திரப்பிரபை என்ற பெயருள்ள வித்தியாதர கன்னிகை, சந்திரனது காந்தி என்னு மிருபொருள்படுகின்றது.

உ

சிவமயம்.

# நல்லொழுக்கம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

## ஏழாவது அதிகாரம்.

(முற்றொடர்ச்சி.)

---

"வாலிபனே"! உன்னைச்சுற்றிய மற்றவர்கள் மோசடியாலும் அநீதியாலும் செல்வர்களாக வளரட்டும். நீ ஏழையாகவேயிருந்து வா. அவர்கள்மேற்போவதற்கு யாசிக்கட்டும். உனக்கு ஸ்தானமாவது அதிகாரமாவதுவேண்டாம்; மற்றவர்கள் தம்காரியங்களை முகஸ்துதியால் நிறைவேற்றிக்கொள்ளட்டும். நீ எதிர்பார்த்த காரியங்கள் தவறியதாலுண்டாகுந் துன்பங்களைச் சகித்துக்கொள். மற்றவர்கள் பல்லைக்காட்டிச் சாஷ்டாங்கம்செய்துபெற்றுகொள்ளுகிற கைகோத்துப்பிடிக்கும் இஷ்டமரியாதை உனக்குவேண்டாம். உன் சொந்தயோக்யதையினாலே உன்னைப்போர்த்துக்கொள். ஓர் நண்பனையும் உன்நித்திய ஆகாரத்தையும் தேடிக்கொள். வெளிப்படாத கண்யதையுடன் உன்காரியத்தையேகவனித்து வார்த்திகதசையடைந்தவனாயிருந்தாற் கடவுளைத்துதித்து, மரணத்தை யடைவாயாக." என்று ஹெயின்ஸல் மேன் (Heinzel-mann) என்பவர் சொன்னார்.

உயர்ந்த ஒழுக்கங்களாற் பிரேரிக்கப்பட்ட மனிதர்கள் தங்கள் கடமையில் தவறுதலைக்காட்டிலும், தாங்கள் மதித்து விரும்புகிற அனைத்தையும் இழக்கும்படி நேர்டுகின்றது. கடமையின்விஷயமான இந்த மேலானபற்றுதலைப்பற்றிய பழமையான இங்கிலீஷ் கருத்தானது சமஸ்தான கவிஞரால் தன் அரசனுக்காக ஆயுதமெடுக்குங் காலத்தில் தன் ஆசைநாயகியை நோக்கி "அன்புடையாளே, நான் உன்னை அவ்வளவு நேசிக்கமுடியாது. கண்யதையையும் அதிகமாய் நேசித்ததில்லை," என்றுகூறிய வாக்கியத்தால் வெளிப்படுத்தப்பட்டது. "கௌரவமான ஒழுக்கமுடைய மனிதன் கண்யதையுடன்

செல்லவேண்டும். தன் உயிரைக்காக்கும் விஷயத்திலுங்கூட ஏதேனும் இழிவானவழியை உபயோகப்படுத்தக்கூடாது" என்று ஸெர்ட்டோரியஸ் (Sertorius) சொல்லியிருக்கிறார். அவ்வாறே ஸென்ட்பால் (St-paul) என்பவர், கடமையாலும் பக்தியாலும் தூண்டப்பட்டு ஜெருசல (jerusulem) த்துக்குச் செல்லமட்டுமன்று, அங்கே சாகவும் சித்தமாயிருந்ததாக அறிவித்தனர்.

பெஸ்காரா (Pescara) வின்மார்க்குவிஸ் (Marquis) என்பவர் கன்யகையினால் தான் கட்டுப்பட்டிருந்த ஸ்பேனிஷ் (Spanish) கட்சியை விட்டுவிடும்படி இத்தாலியா (Italy) தேசத்து ராஜாக்களால் விரும்பிக்கொள்ளப்பட்ட பொழுது விக்டோரியா கலோனு (Vittoria-Coloonna) என்னும் அவருடைய கௌரவமான மனைவியானவள், அவருடைய கடமையைப்பற்றி அவருக்கு ஞாபகப்படுத்தினாள். அவள் அவருக்கு எழுதியது வருமாறு; "உமது கௌரவத்தை ஞாபகத்தில்வையும். அது உம்மைச் செல்வத்தை விடவும், அரசர்களைவிடவும் மேன்மைப்படுத்துகின்றது. அதனால் தான் உம்முடையசந்ததிக்கு மறுவற்றதாகக் கொடுக்கத்தக்கதும், உமக்கு இன்பமும் பெருமையும் ஜனிக்கத்தக்கதுமான மகிமையானது பெறப்படுகின்றது. கௌரவப்பட்டங்களால் மகிமை உண்டாகமாட்டாது," என்பதாம். இத்தன்மையதாகத்தான் அவள் தன்கணவனுடைய கௌரவத்தைப்பற்றிக்கொண்ட மேலான நோக்கம் அவர் பேவியா (Pavia) வில் இறந்தபொழுது, அவள் இளமையும் அழகும் வாய்ந்தவளாய், அநேக இச்சகர்களால் விரும்பப்பட்டிருந்தும், தன் கணவனுடைய மரணத்திற்காகத் துக்கப்பட்டு அவருடைய வீர்யங்களைக்கொண்டாடுவதற்குத் தனிமையாயிருக்கத் தலைப்பட்டாள்.

உள்ளபடியே ஜீவிப்பதென்பது ஊக்கத்துடன் முயற்சிப்பதேயாம். இப்பிறப்பானது வீரத்துடன் போராடத்தக்க போர்க்களமாயிருக்கின்றது. மனிதனானவன் உயர்வும் கௌரவமுமான தீர்மானத்தால் தூண்டப்பட்டுத் தன்னுடைய ஸ்தானத்தில் நிலைபெறவேண்டும். அவசியமானால் அதில் உயிரைக் கொடுத்தலும்வேண்டும். பழையடேனிஷ் (Danish) வீரனைப்போல் "கௌரவமாய்த்துணிவும் திடமாய்மனவூக்கங்கொள்ளவும், கடமையின்மார்க்கத்தில் ஒருக்காலும் தடுமாறாதிருத்தல்வேண்டும்." கடவுள் நமக்கு அளித்திருக்கிற மனோசக்தியானது பெரிதாயினும் சிறிதாயினுமாகுக. அது ஈசுவரகடாக்ஷமாயிருக்கிறது. அதைப்பிரயோகியாமையாற் கெடவிடவும் கூடாது. மற்றொன்று இழிவானகாரியங்களில் அதனைப்ரயோகிப்பதால் அசுத்தப்படுத்தவுங்கூடாது. ஒவ்வொருவனும் தன்சொந்த இன்பத்தையும் புகழையும் ஆக்கத்தையும் தேடிக்கொள்வதால் மனிதனுக்கு உண்மையான பெருமை உண்டாகிறதில்லையென்றும், தன் சொந்தஉயிரைக் காத்தல் வேண்டுமென்பதும், தன்சொந்த மகிமையைத் தேடவேண்டுமென்பதும் அல்லவென்றும் ஆனால் ஒவ்வொருவனும் தன் சொந்தக்கடமையைச் செலுத்தவேண்டுமென்பதே துணிபு என்றும் பிரைட்டன் (Brighton) தேசத்து ராபர்ட்டஸன் (Robertson) என்பவர் உள்ளவாறே உரைத்திருக்கின்றனர்.



கடமையைச் செலுத்துவதற்குப் பெரும்பாலும் இடையூறாய் நிற்பதியாதெனின், தீர்மானபுத்தியின்மையும் கொள்கையின் தளர்ச்சியும், சஞ்சலபுத்தியுமாம். ஒருபக்கத்தில் மனச்சாக்ஷியும், நன்மை தீமைகளின் பகுத்தறிவும், மற்றொருபாகத்திற் சோம்பலும், தன்னயம் பாராட்டலும், இன்பம் அல்லது காமஇச்சையும் நிகழ்கின்றன. இவற்றின் அதிகாரங்களின் நடுவே, தளர்வும் துர்ப்பழக்கமுள்ள மனசானது, சிறிதுகாலம் தங்கிக்கிடக்கலாம். ஆனாற் கடைசியில் மனசின் நிலையானது, காரியத்திற் பிரவேசிப்பதற்கு அல்லது பிரவேசியாமைக்குத் தக்கவாறு ஒருவழி அல்லது பிறவழிச்சார்கின்றது. அது சும்மாயிருக்கவிடப்பட்டால் தன்னயம் அல்லது காமஇச்சையாகிய அற்பகுணமானதுமேலிடும். ஆகவே மனுஷத்தன்மையை இழந்து, தானெனும்பெருமையையும் கைவிட்டு, ஒழுக்கத்தையும் இழிவாக்கி, மனிதனானவன் தன்புலன்களின் கேவலம் பராதீனப்பட்ட அடிமையாகவே ஆக்கிக்கொள்கின்றனன்.

ஆகவே மனச்சாக்ஷியின் கற்பனைகளுக்குத் தடையின்றிக்கீழ்ப்படியுமாறு மனசைப்பழக்கி அதினால் அற்பசுபாவத்தின் இச்சைகளை அடக்கும்படியான திறமையானது சன்மார்க்கசிக்ஷைக்குமுக்கியாம்சமாகவும் ஒழுக்கத்தை நல்லமாதிரியில் உருப்படுத்துவதற்கு இன்றி

பழமையானமையாகவும் இருக்கின்றது. நன்மைசெய்யும் வழக்கத்தை எய்துதற்கும் தீயகுணங்களைத்தடுத்தற்கும், ஐம்புலஇச்சைகளோடு, போராடுதற்கும், ஜன்மப் பிரகிருதியாகிய சுவயாபிமானத்தை வெல்லுதற்கும் நீண்டகாலம் விடாமுயற்சியுடன் சிக்ஷிக்கப்படல்வேண்டும். ஆனால், ஒருமுறை கடமையின் பழக்கம், உணரப்படில், அது வழக்கத்துடன் ஒன்றுபட்டு அதுமுதல் தக்கவாறு இலகுவாகின்றது.

தைரியமுள்ள நல்லமனிதன் யாரெனின் தன்சுவாதீன சித்தத்தைத் தீர்மான புத்தியுடன் செலுத்துவதால் நல்லொழுக்கத்தின் பழக்கத்தைப் பழகிக்கொண்டவனேயாம். கெட்டமனிதன் யாரெனின், தன்சுவாதீனசித்தத்தைச் சோம்பியிருக்கவிட்டும் விருப்பங்கள் இச்சைகளின்வயப்படுத்தியும் துன்மார்க்கப்பழக்கத்தை எய்திக்கடைமுறையில், இருப்புவிலங்கினாற்போல, அதினால் தன்னைப் பந்தப்படுத்திக்கொண்டவனேயாம்.

தன்சொந்தசுவாதீன சித்தத்தைக்காரியப்படுத்துவதால்தான் ஒருமனிதன் கருத்தைப்பலப்படுத்திக் கொள்ளக்கூடும். தான் நேரேநிற்க வேண்டுமானால் தன் சொந்த முயற்சியால்தான் ஆதல்வேண்டும். ஏனெனின் மற்றவர்களுடையவுதவியால் ஆதரித்துவைக்கப்படக்கூடாது. தனக்கும் தன்செயல்களுக்கும், தானே நாயகனாயிருக்கிறான். அவன் பொய்யைநீக்கி உண்மையாயிருக்கக் கூடும். காம இச்சையை அடக்கி அடங்கியிருத்தல்கூடும், கொடுமை செய்வதைவிடுத்து உபகாரியும் க்ஷமிக்கும் தன்மையனாகவு மிருக்கக்கூடும். இவையனைத்தும் சொந்தமுயற்சியின் ஆதீனத்தில் உண்டாய்ச் சிக்ஷையின் அதிகாரத்திற்குட்படுகின்றன. இன்னோரன்ன விஷயங்களில் மனிதர்கள் சுவாதீனமாகவும் சுத்தமாகவும், நன்மையாகவுமிருப்பதோ, அல்லது பராதீனப்பட்டுப் பரிசுத்தமின்றித் துன்பப்பட்டும் இருப்பதோ அவர்களுடைய சொந்தநிலைமையைப் பொறுத்திருக்கின்றது.

(இன்னும் வரும்)

---

உ

# சிறுவர்க்குரிய உபந்நியாசங்கள்.

## அதிதி பூஜை. (விருந்தோம்பல்)

அருளுடைமை, இன்னாசெய்யாமை, பிழைபொறுத்தல் முதலிய கடமைகளைக் காட்டிலும், பிறருக்குச் செய்யவேண்டிய கடமைகள் வேறு சில உள. ஒரு விருந்தினன் நம்மகம் நாடிவந்தால் அவனுக்கு ஆஹாரமளித்துபசரிக்கவேண்டும். இக்கார்யத்தைத்தான் வடமொழி வல்லுநர் அதிதி ஸத்காரமென்றும், தென்மொழி வல்லுநர் விருந்தோம்பல் என்றுங் கூறுவார்கள். ஒவ்வோர் குடும்பத்தில் ஜனித்த ஹிந்துவும் தம்மகம் நோக்கிவந்த எவருக்கும் த்ருப்தியாக அன்னமளிப்பான் என்பதே 'விருந்தோம்பல்' என்ற நீண்ட சொல்லுக்குப் பொருளதாகும்.

"வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்"
"இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு."

நாம் உண்ணும் பொருள் யாதாயினும் தன்னை நோக்கிவந்த விருந்து நம் வீட்டுப்புறத்திருப்ப நாம் அன்னவருக்குப் பார்த்து கொடுக்காது நாம் உண்ணல் முறைமையானதன்று.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று."

அந்நியனொருவனை நம் க்ருஹத்தில் வற்றால், ஆஹாரமும் உறைவிடமும் அவனுக்குக் கொடுத்துபசரிப்பதே மேன்மை. அவ்வாறுபசரிப்பதனால் நாம் நம் மநுதர்மசாஸ்திரத்தை அனுஷ்டித்தவராகிறோம்.

தம்மிடத்து ஆஹாரார்த்தமாக வந்தவருக்குத் தளராமல் கொடுத்த ரந்திதேவனின் சரிதையை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்கள். இன்னும் பழைய புத்தகங்கள் பலவற்றில் பண்டைக் காலத்தில் ஹிந்துக்கள் விருந்தோம்பல் என்னும் கடமை எவ்விதந்

கைக்கொண்டு அநுஷ்டித்துவந்தார்கள் என்பது பண்டைக்காலத்தில் சரித்ர புஸ்தகங்கள் விஸ்தாரமாய்க் கூறும்.

ஒருகாலத்தில் யுதிஷ்டிரன் என்னும் மன்னன் ஒருபெருயாகம் இயற்றினன். அவ்வியாகத்திற் கிண்ணங்கள், பாத்திரங்கள் யாகமண்டபங்கள், யூபஸ்தம்பங்கள் முதலியனவெல்லாம் பொன்னினாலேயே செய்யப்பட்டிருந்தன. அவ்வேள்வி மிகப்பெரிதாயும், ஆடம்பரமாயுமிருந்தமையின் ஏறக்குறைய எல்லாரும் ஆங்கு ப்ரசன்னமாயிருந்தனர்.

ஓர்சிறிய நகுலமும் அங்கு வந்திருந்தது; அதனுடைய தேஹத்திற் பாதி பொன்மயமாயிருந்தது. உன்னுடைய தேஹத்திற்பாதி பொன்மயமாயிருப்பதற்குக் காரணம் யாதென்று சொல்லுவாயாகவென்று ஜனங்கள் கிரியைக்கேட்டார்கள். இங்குள்ள எல்லா ஸ்வர்ணமும் எல்லா நவரத்னங்களும் வாற்கோதுமையின் ஒரு சிறு புடிமாவுக்குக்கூடக் காணாது நான் சொல்லுவேன் என்று நகுலம் பதில் சொல்லிற்று.

வயலிற் சிந்திக்கிடக்கின்ற தானியங்களையே தினந்தோறும் பொறுக்கிப் பக்குவப்படுத்தி பாகஞ்செய்துண்பது என்னும் வ்ரதத்தைமேற்கொண்ட அந்தணனொருவன் ஒரு காலத்திலிருந்தான். ஒரு மனைவி, மகன், மருமகள் முதலியவர்களடங்கிய குடும்பஸ்தன் இவ்வந்தணன்.

ஒருகாலத்திற் பூமியில் பயங்கரமான பெரும்பஞ்சமொன்று நேர்ந்தது. போரடிப்போரால் ஸொற்ப தான்யமே நிலத்தில் விடப்பட்டிருந்தமையால் பொறுக்கவும் அற்பமே அகப்பட்டன. ஆதலின் அந்தணனுடைய குடும்பத்திற்குத் தினந்தோறும் அப்போது ஒருவேளைக்கு மாத்திரம் மிக்க ஸொற்ப ஆஹாரமே கிடைக்கலாயிற்று. ஆகையால் அவர்கள் தேஹவலிமையற்றவர்களாய் ப்ருங்கிமகருஷிபோல் சதைப்பற்றுக்குறைந்து எலும்புக்கூடாயினர்.

ஒருநாள் அந்தணன் கொஞ்சங்கோதுமையைக் கண்டெடுத்து மனைவிகையிற்கொடுக்க அதனை அவள் அரைத்து, தங்களுள் ஒவ்வொருவருக்கும் பாகமாக நான்குபகுதிகளாகப் பகிர்ந்தாள். அவர்கள் மிகவும் ஸந்தோஷ சித்தர்களாய் அதனை உண்ணவுட்கார்ந்தார்கள்.



அவர்கள் உண்ண ஆரம்பித்ததுதான் தாமதம். விருந்தினனொருவன் அவர் வாயிற்புறத்துவந்து நின்றான். அந்தணனும் சரேலென எழுந்து அவனுக்கு அர்க்யபாத்யாசமனம் வழங்கி அவனைப் போஜனத்திற்குட்காரவைத்தான். உட்காரவைத்துத் தனக்குவந்த சிறிய ஆகாரபாகத்தை அவனெதிரில் வைக்க விருந்தினனும் அதனைத் தின்றான்.

அவ்வாஹாரம் மிகவும் கொஞ்சமாயிருந்தபடியால், அவ்வுணவை யுட்கொண்ட விருந்தினனுக்குப் பசியின்னும் அதிகரித்தது. பிறகு அந்தணன் மனைவி அதிதி உண்டுத்ருப்தியடையுமாறு தன்னுடைய ஆகாரத்தைத் தன் நாயகன்கையிற்கொடுத்து, அதிதிக்குக் கொடுக்கச்சொல்லினள். அந்தணன் தன்மனைவி எலும்புக்கூடாயிருப்பதைப்பார்த்து மனந்தளர்வுற்றவனாய், "ஓ, என் புத்திரனை யீன்ற தாயே! அவ்வாஹாரத்தை நீயேயருந்துவாயாகவெனலும், தன்னில்லத்து வந்த அதிதி பசியுடன் வருந்தப்பொறாதவளாய் அவ்வாகாரத்தை அவள் உட்கொள்ளவில்லை. ஆகையால் வந்துள்ள அதிதி அவளது பாகத்தையும் தான் அருந்தினன்; ஆனால் அவனுக்குப் பசிப்பிணி பின்னுமிகுதியாய் மற்றும் ஆகாரம் வேண்டினன். பின்னர் அவனதுகுமாரனும் தன்னுடைய ஆகாரப்பங்கைக்கொண்டு அதிதி முன்னே இட, அதனையும்உட்கொண்ட அதிதிக்குப் பசிதணிந்தபாடில்லை, பிறகு புத்ரனுடைய இளவயதுள்ள மனைவியும் தன்பாகத்திற்குவந்த சொற்ப ஆகாரத்தை அந்தணன் முன்னிட்டு அதிதி அருந்தும்படிவேண்டினள்.

உன்னுடைய ஆகாரத்தைக் கொடுக்காதே! கொடுக்காதே! சிறிய பெண்ணே! என்று ப்ராமணன் அப்பெண்ணின் இளமைத் தன்மையையும், சக்தியின்மையும் பார்த்துக்கூறினன். ஆனால் அவள் ஓ! எந்தையே, எனது குமாரனின் தந்தையின் தந்தையே! தாங்கள் செய்யும் நற்காரியத்தில் எனக்கும் பங்குண்டாவதற்காக என்னுடைய பங்கு ஆகாரத்தையும் அதிதிக்குக் கொடுங்கள், நம்மகத்து

வந்த அதிதியைத் தேவதையைப்போற் பூஜிக்கவேண்டும், என்று சொல்லி மன்றாடிக்கேட்டுக்கொண்டாள்.

ஆதலின் அப்பாகத்தை அவ்வமைதியான பெண்ணிடமிருந்தும் வாங்கி அதிதிக்கு ஈந்தான். உணவருந்தியபின் அதிதி எழுந்தார். அவரைச்சுற்றிப்பிரகாசமானதோர் ஜோதி ஜ்வலித்துக்கொண்டு வீசிற்று. உண்மையில் அவரை அவர்கள் தேவதையென்றே உணர்ந்தார்கள். அத்தேவதையும் அழகாயும் பிரகாசமாயும் அவர்கள் முன்னிலையில் விளங்கியிருந்தது. பிறகு அத்தேவனால் உண்ணப்பட்ட ஆகாரம், சேஷம், உண்ணப்படாமல் சிந்திக்கிடந்த அந்தப்ரஸாத குண்டத்தில் புரண்ட தன்னுடைய தேகம், அச்சேஷம்பட்ட இடமெல்லாம் பொன்னாகமாறியதென்றும், அதிதி ஸத்காரத்தின் மகிமை இத்துணைப்பயன் தரவல்லதென்றுமான புண்ணிய விஷயத்தை நகுலம் ஆங்குக்கூடியிருந்த ஜனங்களுக்கு நன்கு கூறிற்று.

நகுலத்தின் பாதிதேஹம் ஸ்வர்ணமயமாயதற்குக் காரணமும் இதுதான்.

## ௯. ஏழைகளுக்கன்னமிடு.

—:(o):—

நற்குணத்தினாலேயே சம்பாதிக்கக்கூடிய மேன்மையான பிரயோசனத்தை நீவிர் அடையவிரும்பினால் பிரதியுபகாரஞ்செய்யக்கூடிய தனிகன்விஷயமாக உங்களது பெருஞ்செல்வத்தைச் செலவழியாதிருங்கள்.

உங்களது திரவியத்தினைப் பணக்காரர்களுக்குப் பங்கிடாதேயுங்கள்; தேவையான எளிய ஜனங்களுக்கு ஒத்தாசைசெய்யுங்கள்; உங்களது அவசியமான செலவுபோக எஞ்சியதிரவியத்தினால் ஏழைகளையும் பசியினால் வருந்துமற்றவர்களையும் போஷியுங்கள்.

“பாத்திரமறிந்து பிச்சையிடு, கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு” என்னும் முதுமொழியை யநுஸரித்து உங்களிடத்திலிருந்து உபகாரம் பெறுமவர்கள் அவற்றைப் பெறுவதற்கருகர்களாவென்றும், அப்படிச்செய்வது முற்றிலும் அவசியமாவென்றும் நிதானியு



ங்கள்! நீங்கள் உபகாரம் செய்யுமுன், எவ்விதமாக எங்கு எப்பொழுது அவற்றைச்செய்யவேண்டுவதென்று தீர்க்காலோசியுங்கள்.

## ௰. கைங்கர்யம்.

—:( ):—

ஈஸ்வரனாலளிக்கப்பட்ட நேத்திரமொன்றினால் பிறருக்குப்பயன்றருங்கார்யமொன்றினையும், ஹிருதயத்தினால் மற்றவருக்கு உபயோகமான கர்மமொன்றினையும் செய்வதோடு (மாற்றான் விருந்தினையும் தீன் விருந்தினனாகக்கொண்டு) தன்விருந்தினனைப் பின்பற்றி அவனை உபசரித்து வழிபடவும் வேண்டுமென்று மஹாபாரதத்தில் அநுசாஸனிகபர்வம் உபதேசிக்கின்றது.

சிறுகுழந்தை தான் அற்பவலிமையுடனும், அற்பப்புத்தியுடனுமிருந்தாலும் அபிமானமான எத்துணை நற்கார்யங்களைச் செய்யவல்லதாயிருக்கின்றது பாருங்கள்!

ஒருகுழந்தையானது மற்றவர்களுக்குத் தன்னன்பினால் எவ்வளவு சாதகங்களைச் செய்யக் கூடுமென்பதைத் தெரிவிப்பதற்கு அதற்குத்தேகவலிமையைக்காட்டிலும் அன்பைக் காட்டவேண்டுமென்னும் ஆவலே அதிகம்வேண்டும்.

## ௧௧. சகோதரவாஞ்சை.

சகோதர சகோதரிகள் தமக்கிடையிலுள்ள வாஞ்சையைக்காட்டிலும் சிறந்ததும், நல்லதுமான பொருள் கடலாடையுடுத்த மண்ணுலகிற் பிறிதொன்றில்லை. மூத்தோர் இளையோரை மெலியோரென்று பக்ஷமாய்ப்பார்த்தலும், இளையோர் மூத்தோரைப் பெரியவரென்று விசுவாசமுள்ள மரியாதையுடன் நடத்தலுமே இவ்வாஞ்சைக்குற்ற அறிகுறிகளாகும்.

உதாரணமாக என்றும் ஒருவரைவிட்டொருவர்பிரியா ராமலக்ஷ்மணர் முறையே ஒருவரோடொருவர் எத்துணை நேசப்பான்மையுற்றிருந்தனர்? ஸ்ரீ ராமச்சந்திரன் வனவாசம் சென்றபோது அவரை

நீங்கா லக்ஷ்மணபிரான் அவருடன் அவரது நிழற்போற்சென்று ராமன் துயில்கொள்ளுங்காலையில் இவர் விழித்து ஆயுதபாணியாய் நின்று அவருக்கு அந்தச்சமயத்தில் யாதொரு இடையூறும் நேரா வண்ணம் பாதுகாப்பதுண்டு.

அவன் ராமனை மிகுநியும் நேசித்தும், அவருக்குற்ற கைங்கரியங்களை வழுவறச்செய்துமிருந்து அவர்தம்மோடு உடனிருந்து உண்டாலொழிய தனக்குக்கிடைக்கும் எவ்வித அமிருதபோஜனத்தையும் புசிக்கமாட்டான். அவர்கள் ஆரண்யவாசமாயிருந்தபோது, ராமனும், ஸீதாதேவியும் ஆநந்தமாய் வஸிக்கத்தக்க மரங்களினாலாகிய பர்ணசாலையை அமைத்தவனும் ஸ்ரீ லக்ஷ்மணபிரானேயாவார்.

மாயாமாரீசமானை எய்தற்பொருட்டுச்சென்ற அக்காலையில் ஸீதாதேவி லக்ஷ்மணபிரானது பாதுகாப்பில் விடப்பட்டிருந்தபோது எவ்வளவு வாஞ்சையுடன் அவர் அவளிடத்து நடந்துகொண்டார்? ஹா! ஸீதா! ஹா லக்ஷ்மணா உதவிபுரிய வரலாகாதா! என்ற மாய ராக்ஷஸனாகிய மாரீசன் குரலைக்கேட்டு ராமர்குரலென்று ஏமாந்தபொழுது மாத்திரந்தான், ஸீதாதேவியின் அநுமதியின்மீது அவளை விட்டு லக்ஷ்சுமணபிரான் அகன்றார்.

ஸீதாதேவியானவள் கொடிய ராக்ஷஸனாகிய தசக்ரீவனாற்சிறைபிடிக்கப்பட்டு லங்கைக்குக்கொண்டுபோகப்பட்டபொழுது, அவளைத்தேடும்பொருட்டு ஸ்ரீ ராமருடன் நாற்றிசைகளிலும் லக்ஷ்மணரும் திரிந்தார். தன்னாற்கூடுமானவரையில் ராமரைத்தேற்றி, ஸீதாதேவியைத் தேடும் முயற்சியில் பொறுமையாயும் சாந்தமாயுமிருக்கும்படியாய் அவருக்குச்சாந்தமாய் ஒத்தாசைசெய்தார். ராமனும் லக்ஷ்மணனிடத்தும் அத்தியந்தம் வாஞ்சையுடனிருந்தான். யுத்தரங்கத்தில் லக்ஷ்மணன் காயப்பட்டுக்கிடந்தபொழுது ராமனதுமனம் சிறிதேனும் அமைதியுடனிருக்கவில்லை.

ஐயோ! என் ஸஹோதரனே, நாட்டைவிட்டு என்னுடன் ஆரண்யத்திற்கு அன்புடன்சென்ற என்னுடன் அன்புடனேயே நமனுலகத்திற்கு யானும்வருவேன். அவன் தன் ஸஹோதரனுடன் இறக்கவே நினைத்தான்; ஆனால் கடவுளர் அவனுடைய பாயங்களை ஆற்றி



ராமனிடம் திரும்பக்கொடுத்தபொழுது, அவனைப்பெற்றதனால் அவர் அடைந்த ஸந்தோஷத்தினையும், தான் அடைந்த லக்ஷ்மணனைத் தன்னுடலுடன் சேர்த்து மார்புறத்தழுவிய விதத்தினையும்பற்றி வாயினாற் கூறிமுடியா. ஆ! என் ஸஹோதரனே! எவ்வுலகத்திலும், எங்குபோனாலும் ஸ்நேஹிதர் அகப்படுவார்கள்! ஆனால் எவ்வுலகத்திலும் உடன்பிறந்த ஸஹோதரன் தேடினாலும் கிடைக்கமாட்டான் என்று ராமர் லக்ஷ்மணருக்குக் கூறினார்.

லக்ஷ்மணன் தன் மரணபர்யந்தம் நன்றியறிதலுள்ளவனாயிருந்தான்; தன்னுடைய கௌரவத்தைக்காட்டிலும், தன்னுடைய ஸஹோதரனின் கௌரவத்தையே பெரிதென்று மிகுதியும் கருதி நடந்து வந்தான். ஒருகாலத்தில் ராமன், காலனிடத்தில் (இயமன்) தான் தனித்திருந்து சிறிதுநேரம் பேசுவதாயும், அங்ஙனம் இவர்களுக்குள் நிகழும் ஸம்பாஷணைக்காலத்தில் எவரும் நடுவட்புகுந்து தொந்தரவு செய்யக்கூடாதென்றும், ஒருவாக்குத்தத்தஞ்செய்திருந்தான். இந்த சம்பாஷணைக்காலத்தில் எவர் உட்புகுந்தாராயினும் அவர்கள் அப்பொழுதே கொல்லப்படுவார்கள் என்றநியதியுமிருந்தது. இந்த சம்பாஷணைக்காலத்தில் லக்ஷ்மணனே எவரும் உட்புகாமற் பாதுகாக்குங் காவலாளியாகவிருந்தான்.

இவ்வாறு ராமனும் யமனும் (காலனும்) ஸம்பாஷித்துக்கொண்டிருக்குங்கால் மாத்ஸர்யம் மிக்கதுர்வாஸமுனி அவ்விடத்துப்போந்து அரசனைப் பார்க்கவேண்டுமென்றார். அரசன் ஏதோகாரியமாயிருப்பதாகவும் தற்போது அவரைப்பார்த்தல் ஸாத்தியமாகாதென்றும் லக்ஷ்மணன் கூறினான். இப்படிச் சொல்லியதும் துர்வாஸமுனிமிகுதியும் சினந்து லக்ஷ்மணனை நோக்கி நான் வந்திருப்பதை மன்னனிடம்சென்று அறிவிக்காமற்போனால் உன்னையும் உன்னுடைய சகோதரனையும், அவனது ராஜாங்கத்தையும் நாசமாய்ப்போகும்படி சபிப்பேன் என்று கூறினார்.

என்னுடையசகோதரனும், அவனுடைய ராஜாங்கமும் வருந்தி நாசமாய்ப் போவதைக்காட்டிலும் நான் இறப்பதேமேல் என லக்ஷ்மணன் தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டான். ஆதலின் தான் செய்யும் கார்யத்தினால்தான் சாகப்போவது நிச்சயமென்றறிந்தும்

லட்சுமணன், தன்னுடைய சகோதரனிடம் சென்று துர்வாஸமுனி வருகையைத்தெரிவித்தான். காலனுக்குத்தான்செய்தவாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும், எப்போதும் சத்தியவாக்கு நிலைநிற்கச் செய்யப்படல் வேண்டுமென்றும் நினைத்த ஸ்ரீராமர் லட்சுமணனை மிகுதியும் கடிந்தார். பின்னர் லட்சுமணன் நதிதீரத்தருகிற்சென்று ஸ்நானஞ்செய்து ஜபம் செய்துகொண்டிருக்கையில், ஸாக்ஷாத் ஸ்ரீ ராமபக்தனாகிய இலட்சுமண பிரானைக்கடவுளர்கள் தூக்கிச்சென்றார்கள். ஸ்ரீராமனிடத்து நேசமிகுதியால் லட்சுமணபிரான் முதலில் உயிர்துறந்தார். ராமச்சந்திரமூர்த்தியும் தன் பொய்யுடலை நீத்துவிண்ணுலகம்புக்கபோது, ஆண்டுள்ள லக்ஷ்மணர் இவரைநல்வரவேற்க அவ்விருவரும், எப்பொழுதும் யாதொரு சுகதுக்கங்களும் கலப்பில்லாமல், நிரதிசயானந்தத்தை கொடுக்கக்கூடியதான மோக்ஷ வீட்டினையடைந்து ஆங்கு இன்புற்றிருந்தார்கள்.

சகோதரவாஞ்சைமிக்க இணைபிரியா ராம லட்சுமணரின் சரிதையாகும் இது; அவர்களிலிருந்த நேசம்போல் உங்களிடத்திலும் அம்மாதிரியான நேசம் எந்நாளும் அழிவுறாது நிலைநிற்கட்டும்.

தந்தையிறந்த அக்காலையில் அவருடைய ஜ்யேஷ்ட குமாரன், மற்றைய இளையோர்களால் அவன்பிதாவென மதிக்கப்படவேண்டும். இதுபற்றியன்றோ வடமொழி வல்லுநரும்.

## ஜ்யேஷ்டப்ராதா பிதுஸ்ஸம:

என்று கூறியதூஉம் உய்த்துணர்க. அம்மூத்தமகனின் ஆணைக்கடங்கியே அவனுடைய ஸஹோதரர்கள் நடத்தல் இன்றியமையாதது. மூத்தஸஹோதரனும் தன்னுடன்பிறந்தாரை நன்குநேசித்துக்காப்பாற்றவேண்டும் என்று மகாபாரதம் அநுசாசனிகபர்வம் கூறுகின்றது. இளவரசர்களாயிருந்த பஞ்சபாண்டவர்களுடைய அழகிய சரித்திரமொன்றுளது. யுதிஷ்டிரன், பீமன், அர்ஜுனன் முதலியோர் சஹோதரர்களாவார். இவர்களெல்லாரும் தங்களில் ஜ்யேஷ்டனான யுதிஷ்டிரனையே, யொப்பற்ற தலைவனாக மதித்துவந்தார்கள். துர்யோதனன், தங்களுடைய ஜ்யேஷ்டனாகிய யுதிஷ்டிரனிடம் மாறுகொண்டு அவனுக்கெதிராக அவருடைய ஸஹோதரர்களைத் திரும்பும்படி செய்தவக்காலத்தும், அந்த ஸஹோதரர்கள் யாதுசொல்லினர் என்பதை நீவிர் அறிவீர்களோ? யுதிஷ்டிரர்தான் எங்களுடைய எவ்வித வல்லமைகளுக்கும் மூலமூர்த்தி, எங்களுடைய உயிர்களுக்கும்கூடத்தலைவன் அவரேயாவார் என்றன்றோ கூறினார்கள்!



துர்யோதனன் என்னும் கொடியமன்னன் யுதிஷ்டிரன் காட்டுக்கு அனுப்பப்படல்வேண்டுமென்று, தன் தந்தை திருதராஷ்டிரனைத் தூண்டியபொழுது, அவனுடைய ஸஹோதரர்கள், தங்களது ஜ்யேஷ்டனைமட்டும் தனியே காட்டுக்கனுப்பினார்களில்லை; அவனுடைய ஸஹோதரர்களெல்லாரும் அவனுடனேயே காட்டிற்குச்சென்று ஆங்குபன்னிரண்டுவருஷகால வரையில் வனவாஸமே செய்துவந்தார்கள். அவருக்காக அவர்கள் சண்டையிட்டார்கள்; செல்வம் ஸம்பாதித்தார்கள். இவற்றிற்குமாறாக யுதிஷ்டிரன் அவர்களைநன்கு நேசித்தார் கடவுளர்களால் யுதிஷ்டிரர் ஸ்வர்க்கலோகத்திற்கொண்டுய்க்கப்பட்ட அக்காலத்து, இவர் அவ்வின்பவுலகத்திலேயேயிருக்குமாறு ஆஞ்ஞாபிக்கப்பட்டார். இவர் அவ்வாறு அவ்வின்பவுலகத்திலேயே தனியேயிருந்து வஸிக்கப்பிரியமுற்றனரா? என்று, ஆங்குள்ளகடவுளர், மஹத்தான ரிஷீச்வரர்களுக்கும் இவர்வந்தனைகள் புரிந்தபின்னர், தன்னைச்சுற்றிலுமிருக்கவேண்டிய மனைவிமக்களையும், ஸஹோதரர்களையும் நோக்கித்தேடினார். ஆனால் அன்னோர்கள் இவருடன் இருந்தார்களில்லை. (இன்னும் வரும்.)

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

# சோதிடகணிதம்.

(முற்றொடர்ச்சி.)

## லக்னஸ்புடம்.

சென்ற மாதவாக்கியத்தை வேண்டிய மாத வாக்கியத்திலிருந்து கழித்து விநாடிக்குக் கொண்டுவந்து வேண்டிய மாதத்தின் நாள் நாழி வகையராக்களையும் விநாடியாக்கி அந்த மாதத்தின் ராசிமான சங்கையாற் பெருக்கி மேலே செய்து வைத்திருக்கும் மாதவாக்கியத்தால் வகுத்து வந்தது அந்த மீனத்தில் சூரியன் செல் கதி. அதற்கு மேல் பாக்கி எடுத்துக்கொண்டு வேண்டிய அளவு ஜனனமான நாழிகை வரைக்கும் உள்ள ராசியாகிய லக்னத்திற் சென்றது இவ்வளவென அறிக. அதை விநாடியாக்கி லக்ன ராசி மானத்திற்கு விநாடிக்கு 30 பாகையாக சென்றதற்கு பாகையும் ராசியும் அறிக.

| | ரா | ◌ | । |
|---|---|---|---|
| இதன்படி கிடைத்தது இராசி | 7 | 13 | 29 |

மாதவாக்கியம் முன்னமே கொடுத்திருக்கிறோம். சுதேச அக்ஷாம்சமும் அதற்குரிய ராசிமான சங்கியையும் கீழே கொடுக்கிறோம்.

# அக்ஷாம்சம்.

| நகரங்களின் பெயர். | பா. கலை. | நகரங்களின் பெயர். | பா. கலை. |
|---|---|---|---|
| சிங்கப்பூர் ... | 1.17 | செங்கற்பட்டு ... | 12.32 |
| பினாங்கு ... | 5.24 | காஞ்சிபுரம் ... | 12.50 |
| காலி ... | 6. 1 | மங்களூர் ... | 12.52 |
| கொழும்பு ... | 6.57 | ஆற்காடு ... | 12.55 |
| கண்டி ... | 7.17 | பெங்களூர் ... | 12.59 |
| கன்யாகுமாரி ... | 8. 8 | சென்னை ... | 18. 4 |
| அனந்தச்சயனம் ... | 8.81 | சித்தூர் ... | 13.22 |
| திருநெல்வேலி ... | 8.44 | நெல்லூர் ... | 14.28 |
| தூத்துக்குடி ... | 8.47 | கடப்பை ... | 14.29 |
| கொல்லம் ... | 8.53 | பல்லாரி ... | 15. 9 |
| இராமேசுவரம் ... | 9.18 | கோவா ... | 15.29 |
| இராமநாதபுரம் ... | 9.22 | கர்நூல் ... | 15.50 |
| யாழ்ப்பாணம் ... | 9.43 | பெல்காம் ... | 15.52 |
| மதுரை ... | 9.55 | மசூலிபட்டணம் ... | 16. 9 |
| கொச்சி ... | 9.58 | குண்டூர் ... | 16.18 |
| புதுக்கோட்டை ... | 10.23 | மோல்மீன் ... | 16.29 |
| நாகப்பட்டினம் ... | 10.46 | ரங்கூன் ... | 16.45 |
| தஞ்சாவூர் ... | 10.47 | பீஜப்பூர் ... | 16.50 |
| பாலக்காடு ... | 10.47 | காக்கிநாடா ... | 16.57 |
| திருச்சிராப்பள்ளி ... | 10.50 | ராஜமகேந்திரபுரம் ... | 17.11 |
| கும்பகோணம் ... | 10.52 | ஹைதராபாத் ... | 17.22 |
| கோயம்புத்தூர் ... | 11. 1 | புனா ... | 18.30 |
| கள்ளிக்கோட்டை ... | 11.15 | ஜயப்பூர் ... | 18.51 |
| நீலகிரி ... | 11.24 | பம்பாய் ... | 18.54 |
| சேலம் ... | 11.39 | கஞ்சம் ... | 19.23 |
| கூடலூர் ... | 11.43 | நாகப்பூர் ... | 21.10 |
| கண்ணனூர் ... | 11.52 | படோதா ... | 22.18 |
| புதுச்சேரி ... | 11.56 | கல்கத்தா ... | 22.33 |
| திருவண்ணாமலை ... | 12.15 | காசி ... | 25.18 |
| மைசூர் ... | 12.18 | டில்லி ... | 28.39 |



0 முதல் 26 பாகை வரையிலுள்ள அக்ஷாம்சங்களுக்கு ராசிமான சங்கை நாழி விநாடிகள்.

| பாகை | மேஷம். | | ரிஷபம் | | மிதுனம் | | கடகம் | | சிம்மம் | | கன்னி | | துலாம் | | விருச்சிகம் | | தனுசு | | மகரம் | | கும்பம் | | மீனம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 4 | 53 | 5 | 17 | 5 | 25 | 5 | 5 | 4 | 43 | 4 | 37 | 4 | 53 | 5 | 17 | 5 | 25 | 5 | 5 | 4 | 43 | 4 | 37 | 0 |
| 1 | 4 | 51 | 5 | 16 | 5 | 25 | | 7 | 5 | 45 | | 39 | 4 | 55 | 5 | 18 | 5 | 25 | 5 | 3 | | 41 | | 35 | 1 |
| 2 | | 49 | | 15 | | 26 | | 8 | | 47 | | 41 | | 57 | | 19 | | 24 | | 2 | | 39 | | 33 | 2 |
| 3 | | 48 | | 14 | | 26 | | 9 | | 49 | | 43 | | 58 | | 20 | | 24 | | 1 | | 37 | | 31 | 3 |
| 4 | | 46 | | 13 | | 26 | | 11 | | 51 | | 45 | 5 | ... | | 21 | | 24 | 4 | 59 | | 35 | | 29 | 4 |
| 5 | | 44 | | 12 | | 26 | | 13 | | 53 | | 47 | 5 | 2 | | 22 | | 24 | 4 | 57 | | 33 | | 27 | 5 |
| 6 | | 42 | | 11 | | 27 | | 14 | | 55 | | 49 | | 4 | | 23 | | 23 | | 56 | | 31 | | 25 | 6 |
| 7 | | 40 | | 10 | | 27 | | 15 | | 57 | | 51 | | 6 | | 24 | | 23 | | 55 | | 29 | | 23 | 7 |
| 8 | | 38 | | 9 | | 27 | | 17 | | 59 | | 53 | | 8 | | 25 | | 23 | | 53 | | 27 | | 21 | 8 |
| 9 | | 37 | | 8 | | 28 | | 18 | 5 | 1 | | 55 | | 9 | | 26 | | 22 | | 52 | | 25 | | 19 | 9 |
| 10 | | 35 | | 7 | | 28 | | 20 | | 3 | 4 | 57 | | 11 | | 27 | | 22 | | 50 | | 23 | | 17 | 10 |
| 11 | | 33 | | 6 | | 29 | | 21 | | 5 | 5 | ... | | 13 | | 28 | | 21 | | 49 | | 21 | | 14 | 11 |
| 12 | | 31 | | 5 | | 29 | | 23 | | 7 | 5 | 2 | | 15 | | 29 | | 21 | | 47 | | 19 | | 12 | 12 |
| 13 | | 29 | | 4 | | 29 | | 24 | | 9 | | 4 | | 17 | | 30 | | 21 | | 46 | | 17 | | 10 | 13 |
| 14 | | 27 | | 3 | | 30 | | 25 | | 11 | | 6 | | 19 | | 31 | | 20 | | 45 | | 15 | | 8 | 14 |
| 15 | | 25 | | 2 | | 30 | | 27 | | 13 | | 8 | | 21 | | 32 | | 20 | | 43 | | 13 | | 6 | 15 |
| 16 | | 24 | 5 | 1 | | 31 | | 29 | | 16 | | 10 | | 22 | | 33 | | 19 | | 41 | | 10 | | 4 | 16 |
| 17 | | 22 | 5 | 0 | | 31 | | 30 | | 18 | | 13 | | 24 | | 34 | | 19 | | 40 | | 8 | 4 | 1 | 17 |
| 18 | | 20 | 4 | 59 | | 32 | | 32 | | 20 | | 15 | | 26 | | 35 | | 18 | | 38 | | 6 | 3 | 59 | 18 |
| 19 | | 18 | | 57 | | 32 | | 34 | | 22 | | 17 | | 28 | | 37 | | 18 | | 36 | | 4 | 3 | 57 | 19 |
| 20 | | 16 | | 56 | | 33 | | 35 | | 24 | | 20 | | 30 | | 38 | | 17 | | 35 | 4 | 2 | | 54 | 20 |
| 21 | | 14 | | 55 | | 33 | | 37 | | 27 | | 22 | | 32 | | 39 | | 17 | | 33 | 3 | 59 | | 52 | 21 |
| 22 | | 12 | | 54 | | 33 | | 39 | | 29 | | 25 | | 34 | | 40 | | 17 | | 31 | | 57 | | 49 | 22 |
| 23 | | 9 | | 53 | | 34 | | 40 | | 31 | | 27 | | 37 | | 41 | | 16 | | 30 | | 55 | | 47 | 23 |
| 24 | | 7 | | 52 | | 34 | | 42 | | 34 | | 29 | | 39 | | 42 | | 16 | | 28 | | 52 | | 45 | 24 |
| 25 | | 5 | | 51 | | 34 | | 44 | | 36 | | 32 | | 41 | | 43 | | 16 | | 26 | | 50 | | 42 | 25 |
| 26 | | 3 | | 50 | | 35 | | 46 | | 32 | | 34 | | 43 | | 44 | | 15 | | 24 | | 47 | | 40 | 26 |

இவ்விதமாகச் செய்துவந்ததை வேறொருமாதிரி குறுக்கு வழியாகச் செய்யலாமாயினும் தவறுதல் என்பது எல்லோருக்கும் ஏற்பட்டதாகையால்தான் இந்த மாதிரி கணிதம் செய்யவேண்டியிருக்கிறது. குறுக்குவழி எதென்றால், பஞ்சாங்கத்தில் கொடுபட்டிருக்கிற பாதசாரம் சரியெனக்கொண்டு, பிறகு நக்ஷத்திர சாரம் பாதம் ஒன்றுக்கு பாகை 3 கலை 20 ஆக சென்ற நாழிகைக்குப்பார்க்க வேண்டியது. இதுவும் இந்தக் கணக்குக்கு பஞ்சாங்கத்தில் தவறு இல்லாவிட்டால் ஒத்தேவரும்.

---

## V. அதிகாரம்.

---

### ஷட்வர்க்க சக்கரம் வரைதல்.

இதுவரையில் ஸ்புடம் செய்துகொண்டோம், சக்கரம் வரைந்து அதனுள் கிரகாதிகள் இருக்கவேண்டிய இடங்களில் அவைகளை வைப்பதுதான் ஜாதகம் எழுதலென்பர். இது ராசி, ஹோரா, திரேக்காணம், நவாம்சம், துவாதசாம்சம், திரிம்சாம்சம் என அறு வகைப்படும். இன்னும் பலவகையிருப்பினும் அவைகள் அவ்வளவு முக்கியமல்ல வென்பர். எல்லோரும் இராசி சக்கரமிட்டுவிடுவர். நவாம்சமும் சேர்த்து எழுதுபவர் சிலரேயாவார். மற்றைய நான்குமறிந்தோர் ஒரு சிலரே. ஸ்திரீகளுக்கு மற்றவை யில்லாதபோதிலும் திரிம்சாம்சம் செய்துபார்க்கவேண்டியது அத்தியாவசியம்.

ராசி என்பதுதான் பிறந்த லக்னத்தை வைத்து ஸ்தூலமாக மற்றைய கிரகங்களை வீடு ஒன்றுக்கு 30 பாகைகொண்டு ஏற்றுவது.

ஹோரா என்பது ஒவ்வொரு இராசியையும் இரண்டாகப் பிரித்து 15-பாகை கொண்டது. இதற்குச் சூரிய ஓரையென்றும் சந்திர ஓரையென்றும் பெயர். ஒற்றை இராசிகளுக்கு முதலில் சூரிய ஓரையும் பிறகு சந்திர ஓரையும், இரட்டை இராசிகளுக்கு முதலில் சந்திர ஓரையும் இரண்டாவதாக அதாவது 15-பாகைக்குமேல் 30-பாகை வரையில் சூரிய ஓரையும் ஏற்படும்.



ஒற்றை அல்லது ஆண் இராசிகள் என்பனமேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம்.

இரட்டை அல்லது பெண் இராசி, அல்லது உக்மம் என்பன. ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம்.

3. திரேக்காணமாவது ஒரு இராசிக்கு ஏற்பட்ட 30 பாகையை சமானமான 3 பாகமாக அதாவது பத்துப்பத்தாகப் பிரித்து முதல் திரேக்காணம் கிரகம் இருந்ததும் இரண்டாம் திரேக்காணம் 5-வது இராசியும் மூன்றாந்திரேக்காணம் 9-வது இராசியுமாகக் கொள்ளவும்.

4. நவாம்சமாவது இராசி ஒன்றுக்கு ஒன்பது பாகமாகச் செய்வது, அதாவது அம்சம் ஒன்று பாகை 3 - 20 இது நக்ஷத்திரம் ஒன்றுக்கு 4 பாதமாக 27 நக்ஷத்திரங்களுக்கும் கூடியது 108-பங்கை 12 இராசிக்குப்பங்கிட ஒன்பதாகும். இராசிஒன்றுக்கு இரண்டேகால் நக்ஷத்திரமாகும். இந்த 108-யும் மேஷம் முதலாக வரிசையாகப் போட்டுவந்தால் பின் வருமாறு வரும்.

| | |
|---|---|
| மேஷசிம்மதனுசு | மேஷமுதல் |
| ரிஷபகன்னியாமகரம் | மகரமுதல் |
| மிதுனதுலாகும்பம் | துலாம் |
| கடகவிருச்சிகமீனம் | கடகம் |

5. துவாதசாம்சமாவது இராசி கொண்டபாகைகளை பன்னிரண்டு பாகுபாடுசெய்து எந்த இராசிக்குள் விழுகிறதோ அதேதான். இதற்கு எந்தெந்த இராசியில் கிரகம் இருக்கிறதோ அது முதற்கொண் முதல்துவாதசாம்சம் ஆரம்பம்.

6. திரிம்சாம்சமானது 5, 5, 8, 7, 5-பாகங்கள் முறையே செவ்வாய், சனி, குரு, புதன், சுக்கிரனுக்கு ஒற்றை இராசியிலும், இரட்டை இராசியில் தலைகீழாகவும் ஏற்படும். அதாவது ஒரு கிரகத்திற்கு ஏற்பட்ட பாகைகளில் ஒற்றை இராசியில் முதல் ஐந்துபாகை செவ்வாயின் திரும்சாம்சமாகவும் மறுபடி முறையாகவும் வரும். இரட்டை இராசியாக இருக்குமாயின் சுக்கிரனது திரிம்சாம்சமாக ஏற்படும்.

இனி நமக்கு மேலே கிடைத்தவைகளைக்கொண்டு இந்த ஷட்வர்க்கத்தைச் செய்ய.

| | இராசி. | பாகை. | கலை. |
|---|---|---|---|
| சூரியசுத்தஸ்புடம் | 9 | 23 | 44 |
| சந்திரன் | 8 | 2 | 7 |
| செவ்வாய் | 0 | 16 | 48 |
| புதன் | 8 | 28 | 25 |
| குரு | 5 | 24 | 11 |
| சுக்கிரன் | 10 | 9 | 37 |
| சனி | 11 | 19 | 47 |
| இராகு | 1 | 10 | 34 |
| கேது | 7 | 10 | 34 |
| லக்கினம் | 7 | 13 | 29 |

இதற்கு





இதனை விபரமாயெழுத

1. இராசிக்கு விருச்சிக இலக்கின முதயமாக, இலக்கினத்தில் கேது, 2-ல் சந்திரன் புதன். 3-ல் சூரியன், 4-ல் சுக்கிரன், 5-ல் சனி, 6-ல் செவ்வாய், 7-ல் இராகு, 11-ல் குரு.

2. ஹோரையில், விருச்சிகலக்கின முதயமாக, இலக்கினத்தில் செவ்வாய், கேது, 2-ல் சந்திரன், 4-ல் சூரியன், சுக்கிரன், சனி, 5-ல் புதன், 7-ல் இராகு, 8-ல் குரு.

3. திரேகாணத்திற்கு மீனலக்கின முதயமாக, லக்கினத்தில் கேது, 3-ல் குரு, 5-ல் சனி, 6-ல் செவ்வாய் புதன், 7-ல் சூரியன் இராகு, 10-ல் சந்திரன், 12-ல் சுக்கிரன்.

4. நவாம்சத்தில் விருச்சிக லக்கின முதயமாக 2-ல் புதன், சுக்கிரன், சனி, 6-ல் இராகு, சந்திரன், 10-ல் செவ்வாய், குரு, 11-ல் சூரியன், 12-ல் கேது.

5. துவாதசாம்சத்தில் மேஷ லக்கினமுதயமாக 2-ல் சுக்கிரன், 3-ல் குரு, 6-ல் இராகு, 7-ல் சூரியன் செவ்வாய், சனி, 8-ல் புதன், 9-ல் சந்திரன், 12-ல் கேது.

6. திரிம்சாம்சத்தில் மீனலக்கின முதயமாக, லக்கினத்தில் சூரியன், குரு, சனி, 2-ல் சந்திரன், 3-ல் இராகு, 8 ல் புதன், 9-ல் கேது, 10-ல் செவ்வாய் சுக்கிரன்.

இவைகளைக்கொண்டே காலத்திய கோசாரங்களுக்குள்ள நக்ஷத்திரங்களையறியக்கூடும்.

(இன்னும் வரும்.)

இலக்கணவிளக்க பரம்பரை,

சோமசுந்தரதேசிகன்.

---



சிவமயம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(௪.) பூமியினைய மதம்பொழிந்து குளிர்ந்த முகிலைக்கொள்ளுமாறு முழங்குகின்ற போர் முகத்தையுடைய யானையும் பக்கத்தே இணையென்று ஒருசேரவருகின்ற சோர்கின்ற மழையாகி யொழுகின்ற மதத்தையும் சுடருகின்ற கொடியமின்னோடையையு முடைய கரிய முகிலும் பலதெரியா.

(௫.) ஓசையுண்டாகின்ற மணியும் குதிரைக்கனைப்பும் கடல் ஒலிபோலுக்கிளர, பயில்கின்ற குதிரையினெடுகிரை முன்னரே புல்லையுண்ண வாயிலுள்ள நீர்த்திரை நுரையை நிகர்ப்பன; ஒளிவிடுகின்ற போர்வையாகிய மலையிற்படியும் முகில்படிய விளங்குதலினால் சகரராலே தோண்டப்பட்ட கடல்களைநிகர்ப்பன. நெடுநிரையும், நீரும், தரங்கத்தையும், நுரையையும் நிகர்ப்பன.

(௬.) அவ்விடத்தே மதிலைச்சூழ்ந்த மலர்களையுடைய அகழ்க்கிடங்கு, உட்டுளைபொருந்திய கையையுடைய அயிராவத யானையையும் உச்சயிச்சிரவமென்னும் அரசகுதிரையையும் இலக்குமியையும் கடையப்பட்ட அமுதையும் கற்பகதருவையும் சிந்தாமணி கௌத்துவ மணியென்னும் மணிகளையும் தேவர்கொண்டுசெல்ல, வருந்திய கடல் இவற்றிலொன்றைப் பெறவேண்டித் தேவரூரைவளைத்தது போன்றது.

(௭.) கோபுரங்களில் முகில்படியும் மலர்பொருந்திய சோலையிற் சூரியசந்திரர் நகருவர், அழகிய வீதிகளிற்றேர் பரவும், வசையற்ற அளி நிக்கிற்பரக்கும், கச்சையணிந்தஸ்தனங்களையுடைய பெண்களது இடைகாரணமாக ஆடவரிடத்தே பூம்பாணம் வடுருவும்.

(தேர்செல்லுகின்ற அழகிய வீதி திக்குகளிற்போய்முடியும், வகையில்லாத கச்சைபணிந்த (ஆடவரது மார்பில்) ஏறுகின்ற ஸ்தனங்களையுடைய) மருங்கு ஆகுபெயராய் அல்குலின்மேற்று,

(௮.) திருக்குலத்துவழிமுதலோர் - வம்மிசத்திற்கு வழிமுதலாயுள்ளவர்.

(௧௭.) அதிகனெனவன் சமீபமாக. மலையரணம் - மலைத்துருக்கம்.

(௨௪.) இரத்தநீரானது ஓடும்பாறுபோன்றது, பிணமலையானது கரைபோன்றது.

(௩௦.) அதிகனுடைய படையில் போர்பொருது வெட்டுண்ட தலைப்பொதியின் குவை. அளவிறந்தனபோயினபின், நிதிக்குவையையும், பெண்களையும், நீண்டகுதிரைகளையும், எண்ணிலர் எதிரும் யானைகளையும் பிடித்தனர்.

(௩௧.) நடுக்கண் - நடுவிடத்தே. பொருந்திய ஒருபுன்சடையைக் கண்டனர்.

(௩௫.) வெற்றிமுரசையுடைய திண்ணிய படையைக்கொடுசென்று முதன்மையையுடைய மந்திரியர் போர்முனையழித்தலால் வந்தவார்த்தை சிறக்கும் புகழ்வென்றியானது ஒன்றொழிய ஒன்றாகும்.

---

## நரசிங்கமுனையரையநாயனார் புராணம்.

(௧.) தேடாத - உலகிலேதேடி யறிதற்கரிய.

(௩.) கோபம்பொருந்திய இடபத்தையுடைய சிவபிரானது கோயில்தோறும் அழகிய செல்வத்தைப்பெருக்கு நெறியாயவற்றில் அரிய உயிர்துறக்கவருமாயினும் அவைதளைக்காத்துச் சோலைகளிடையிலுடைய ஆமைபோட்டாலாகிய தொடையலையணிந்த திரு



மார்பையுடைய சிவபெருமானது வழித்தொண்டைக் கனவினும்பிலும் வழுவாதகடனைச்செய்து.

(௫.) மாணநிலையழிகின்ற தன்மைபொருந்தும் காமக்குறிமலர்ந்த கேடுபொருந்தும் மேனியையுடையராய்.

(௬.) விசாலித்தயானை மதத்தைச்சொரியக் கரையிற்சொரியுந் தோணிசேருங் கடல்சூழ்ந்த நாகபட்டணத் ததிபத்தநாயனாரது கடமையாகிய திருத்தொண்டினதழகைக் கூறுவாம்.

---

## அதிபத்தநாயனார் புராணம்.

(௧.) நிலையாய் நீடிய சூரியனது சந்ததிமரபின் பழமையாம். முதன்மையையுடைய் சோழர்களது அழகிய குலவுரிமையையுடைய சோழநாடென்னும் கற்பகப் பூங்கொடியிலுள்ள மலர்போல நாகபட்டினம் என்னும் திருநகரம் நன்மைமிக்கது.

(௨.) தாமம் - ஒளி. மாளிகை - மாளிகைகளில்.

(௩.) பெரியபுகழையுடைய கிலம்பதினெட்டினும் நிறைந்த பெருமைதங்கிய பலபொருள்களையுடைய மாக்தர்கள் கோடியாக மிக்க தனங்களையுடைய குடியோடு பெருகிப் பூமிதேவியைக் காண்கின்ற கண்ணாடி மண்டிலம் போல்வது.

(௫.) இடத்தின்பக்கங்கள் நிலையான பழமையினையுடையவலைவனத்தாற்பொருந்தும் உணவின்மிகுந்த தன்மையோடு வாழ்கின்ற.

(௬.) முகிலை அளப்பன என்றுசொல்லத்தக்க அலைசெறிந்த பக்கத்தையடைந்த குரம்பைகளினயலில்மீன் விற்றலாலாய பயிற்றுயர்ந்தபொன்மலை அளக்கப்படுவன, பரந்த சமுத்திரத்தில் விடுகின்ற தோணியையுடைய பரதவர்கள்கொண்டுவந்த கயல்மற்சங்கள் பரத்தியருடைய நெடியகண்களை யளப்பன.

(௭.) உணங்கல் மீன் - காய்ந்தமீன்.

(௮.) வலையாகிய நெடியதொடரையுடைய இடத்தைப்பக்கத்தே வலிப்பவர்களுடைய ஒலியும், மீன்குவையைக் கொடுப்போராகிய நெய்தனிலப்பெண்கள் விலையைப்பகர்ந்து அழைக்குமொலியும், இடங்களிலேசிறந்த வெள்ளிய சங்குகளைச்சொரிவோருடைய முழங்கொலியும்.

(௧௧.) முட்டில்லாத மீன்கொலைத்தொழிலாலாய வளத்தையுடைய அதிபத்தர் வலையால் முகந்து அகப்படுத்தப்பட்ட மீன்களில் ஒருசிறந்த மீன்படுந்தோறும்.

(௧௨.) சேர்ந்த மாகாகியவலையில் ஒருநாள் ஒருமீனேவரினும். மாகு வலையின்பரியாயநாமங்களுள் ஒன்று. அது, மாகுசூழவுந் தப்பியவரிசிறமாபோல். என்பதனானுமறிக.

(௧௫.) அவ்வாறாய நாளொன்றில் அந்த ஒருமீனையும் அவ்விடத்தொழித்துச் சுத்தமான நிறத்தையுடைய பசியபொன்னில் நல்ல ஒளியையுடைய நவரத்நத்தால் மீனுறுப்புப்பொருந்த அமைத்துவிற்றால் உலகடங்கலும் விலையாகும் பான்மையையுடைய அற்புதப்படியதாய ஒன்றை இடுகின்றவலையில் அகப்படுத்தினார்.

(௧௬.) வளைந்தநெடியவலை அலையையுடைய கடலினுள்ள திரையால்வந்து கரையேற.

(௧௮.) சகலலோகமும் பொருளைமுதலாக உடைத்தாம் என்கின்ற அளவிற்புகலும் அப்பொன்னூசையைக் களங்கமற எறிந்த.

(௨௦) தம்முடைய கொலைத்தொழிலைச்செய்கின்ற.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
23 AUG 1910
MADRAS.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௮.] சாதாரண-௵ ஆனி௴. [பகுதி-௮.

## தொல்காப்பியத்துக்கண்ட
## பழைய வழக்குகள்.

இக்காலத்து வழங்கும் தமிழ்நூல்களிலே, பழமையும் பெருமையும் வாய்ந்து விளங்குவது தொல்காப்பியமென்னும் இலக்கண நூலே என்பது அறிஞர்க்கெல்லாம் ஒத்தமுடிபாம். பன்னிரு படலமுதலிய இலக்கணங்களும் இந்நூலோடொத்த பழமையுடையவேனும், அவை நம் காலத்தில் அருகியதேயன்றி, தொல்காப்பியம் போன்ற அத்துணைப் பெருமைக்குரியனவல்ல. "ஆறுப் பெருமை அகத்தியனென்னும்—அருந்தவ முனிவ னாக்கிய முதனூல்-பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்—நல்லிசை நிறுத்த தொல்காப்பியனும்" எனப் பன்னிருபடலப் பாயிரத்தும், "கூறிய குன்றினு முதனூல் கூட்டித்—தோமின் றுணர்தல் தொல்காப் பியன்றன்—ஆணையின் தமிழறிந் தோர்க்குக் கடனே" எனப் பல்காப்பியத்தும் தொல்காப்பியமுனிவர் புகழப்பட்டிருத்தலே அவரது பழமைபெருமைக்குத் தக்கசான்றாம். இடைச்சங்க நாளிலிருந்த நூல்களெல்லாம் இறந்தொழியவும், இந்நூல்மட்டும் இன்றுவரையும் நின்று நிலவுவது தமிழணங்கு செய்த தவமேயன்றோ. தொல்காப்பியத்தின் காலம்வரலாறு முதலியவற்றைப்பற்றி நம்மால் அறியக்கிடப்பவை மிகச்சிலவேயாயினும், கடைச்சங்கத்தார் நாளிலே இறந்தொழிந்த வழக்குகளும் மரபுகளும் பலவாக இந்நூலிற் காணப்படுதலை நோக்கும்போது, இதன் தொன்மைப்பெருமையும் தமிழ்மொழியின் பண்டைமாட்சியும் நன்கு விளங்குகின்றன. கடைச்சங்கநூல்

களினும் வழங்கப்பெறாத் தமிழ்வழக்குகளே தொல்காப்பியத்துக் காணப்படுவனவாயின், இக்காலத்தில் வீழ்ந்தனவாக அந்நூலிடை எத்தனை வழக்குகள் இரா? இங்ஙனம் எண்ணிறந்த வழக்குகளும் மரபுகளும் வீழ்ந்தமை பற்றியன்றே, நன்னூல் சின்னூல் முதலிய இலக்கணங்கள், காலத்துக்குத்தக்க கோலத்தோடு தோன்றுவனவாயின. ஆயினும், கடைச்சங்ககாலத்தும் அதன் பிற்காலத்தும் வீழ்ந்த தொல்காப்பியவழக்குகளும் மரபுகளும், பழந்தமிழ்மக்கள்கொண்ட முறையை நமக்கறிவித்து இன்பம் பயப்பதோடு, சரித்திரவாராய்ச்சி செய்வோர்க்கும் மிகப்பயன்படுவதாதலால், அவற்றுள் யான்தெரிந்து கொண்ட சிலவற்றை இவ்வியாசத்துக் குறிப்பிடலாயினேன்.

**மெய்ம்மயக்கம்.**

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபியலில், தனிமெய்கள் பிறமெய்களோடு மயங்கும் மயக்கத்தில், ஞநமவ என்ற எழுத்துக்கள் யகரத்துடனும், மகரம் வகரத்துடனும் மயங்குமென்பதை உணர்த்தற்கு:—

"ஞநமவ வென்னும் புள்ளி முன்னர்
யஃகா னிற்றல் மெய்பெற் றன்றே"
"மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்."

என்ற சூத்திரங்கள் வருகின்றன. உரையாசிரியர் முதலாயினோர், இம்மெய்ம்மயக்கங்கள்—உரிஞ்யாது பொருந்யாது; வரும் வண்ணக்கன் என்றல்லது ஒருமொழிக்கண் வாராமைகண்டு அவை இருமொழிக்கண்ணே மயங்குவனவாகக் கொண்டார். ஆனால், நச்சினார்க்கினியர்—இருமொழி புணர்தற்குப் புணரியலென்று வேறோர் இயல்கூறி, அதன்கண் ஆசிரியர் ஈறுகளை எடுத்தோதிப்புணர்ப்பராகலின், மெய்ம்மயக்கங்கூறும் ஈண்டு அவ் விருமொழிப்புணர்ச்சி காட்டுதல் கூறியது கூறலாம்—என மறுத்து ஒருமொழிக்கண் வந்தனவே இம்மெய்ம்மயக்கங்களென்றும், "இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ் செய்தலின், அக்காலத்து ஒருமொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்றாம். (உதாரணங்கள்) இக்காலத்திறந்தன" என்றும் எழுதினர். இவர் கருத்துப்படி, தான்யம், சம்யக், பவ்யம் முதலிய வடசொற்கள்போலத் தமிழ்ச்சொற்களும் தொல்காப்பியர் காலத்து வழங்கியவாதல் வேண்டும். இவர் கூறியவாறு, அச்சொற்களின் வழக்கத்



தைப்பற்றிய உண்மைநிலை இப்போது தெரியவில்லையேனும், ஆராய்ச்சிக்குரியவாதலின், ஈண்டுக் காட்டப்பட்டன.

**மொழிக்குமுதலாகாத எழுத்துக்கள்.**

தமிழ்மொழியில், "பன்னீ ருயிருங் கசதநபமவய—ஞஙவீ ரைந் துயிர் மெய்யு மொழிமுதல்" லாகுமென்பது பிரசித்தம். இவற்றுள் வயஞங என்ற எழுத்துக்களொழிந்தவை, எல்லாவுயிர்களோடுஞ் சேர்ந்து மொழிக்கு முதலாக இப்போது வழங்குகின்றன. இங்ஙனம், மொழிமுதல்வரும் எழுத்துக்களுள் ஒன்றான சகரம், தொல்காப்பியர் காலத்தில், அ ஐ ஔ என்னும் மூன்றுயிர்களோடும் சேர்ந்து வழங்கினவல்ல என்பது—

"சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அஐ ஔவெனு மூன்றலங் கடையே"

என்னும் மொழிமரபுச்சூத்திரத்தால் தெரியலாம். "கடிசொ லில்லைக் காலத்துப் படினே" என்ற எச்சவியற் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியரும்—"சட்டி, சள்ளை, சமை எனவும், "சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே" (நாலடி அவையறிதல்-௬) "தையலாய் சமழாதுரையென்றதே" (சீவகசிந்-குணமாலை-௧௫௦) எனவும் சகரம் மொழிக்கு முதலாக வந்தவாறு காண்க. இவை "சகரக்கிளவியும்........ கடையே" என ஆசிரியர் விலக்கலின், அக்காலம் மொழிக்கு முதலாகாது விலக்கிய சகரம் பிற்காலத்து வழங்கியதாயிற்று. ஞெண்டென்பது ஞண்டாய்ப், பின்னர் நண்டாயிற்று"—எனக்கூறுதல்காண்க. இவற்றால், "சமன்செய்து" (௧௧௮) "சலத்தாற் பொருள்செய்து" (௬௬௦) "சலம்பற்றி" (௯௫௬) எனத் திருக்குறளினும், "மன்பதை சவட்டுங் கூற்ற முன்ப" எனப் பதிற்றுப்பத்தினும் (௨௪) பிரசங்கச் செய்யுள்களினும் சகரமுதலாகவருமொழிகள் வழங்குவது, தொல்காப்பியர் காலத்துக்கு அவை பெரிதும் பிற்பட்டவை என்பதை நன்கு குறிக்கவல்லது.

**சுட்டு முதலாகிய இகரவிறுதிச் சொற்கள்.**

தொகைமரபில், இடப்பொருளுணர்த்தும் இகர ஐகாரவீற்று இடைச்சொன் முடிபு கூறும் சூத்திரத்தில் (௧௭) "சுட்டுமுதலாகிய இகரவிறுதியும்" என்புழி, சுட்டெழுத்தினை முதலாகவுடைய இகரவீற்று இடைச்சொற்களை ஆசிரியர் குறிப்பிட்டார். அவை—அதோளி, இதோளி, உதோளி

என்பன. அதோளி - அவ்விட மென்னும்பொருட்டு. இச்சுட்டு முதலாகிய இகரவிறுதிச்சொற்கள், கடைச்சங்கத்தார் காலத்தேயே வழக்கு வீழ்ந்தன என்பர் பேராசிரியர்; அவர் எழுதுவன:—"ஒரு காலத்து வழங்கப்பட்டசொல் ஒருகாலத்து வாராதாகப் பொருள் வேறுபடுதலுமுடைய; அதோளி, இதோளி, உதோளி எனவும் குயி னெனவும் நின்ற இவை ஒருகாலத்துளவாகி இக்காலத்திலவாயின: யிவை முற்காலத்துளவென்பதே கொண்டு வீழ்ந்தகாலத்துஞ் செய் தெ செய்யப்படா. அவை ஆசிரியர் நூல்செய்தகாலத் துளவாயி மு கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினுந் தொகை செய் அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர், அவற் கேற் இது மரபிலக்கண மாகவினென்பது" (செய்யுளியல்-௮௦.) ரக் கண்டுகொள்க.

"சுட்டுமுதலாகிய பெண்டென் கிளவி." இவ்வாறே, தொல்காப்பியனார் பெயரியலில், உயர்திணைப் பெயர்களிவை எனவுணர்த்தும் சூத்திரத்திலே (௯), "அவைமுதலாகிய பெண்டென் கிளவியும்" என்றார். அவை முதலாகிய என்பது சுட்டெழுத்துக்களை முதலாகவுடைய எ - று. அச்சுட்டைமுதலாகவுடைய பெயர்கள்:—அப்பெண்டு, இப்பெண்டு, உப்பெண்டு என்பவை. இதனால் தொல்காப்பியனார் காலத்தில், சுட்டொடுகூடிய பெண்டென்னும் பெயர், வழக்கு மிகுதியாக விருந்ததென்பது விளங்கும். நச்சினார்க்கினியரும் "தொல்காப்பியனார்காலத்து (அப்பெண்டெனச்) சுட்டொடு வழங்கிய சொல்லே, "கடிசொல்லில்லை" என்பதனால் (இக்காலத்து) பெண்டென நின்றது" என்றார்; ஆனால் "வண்டும் பெண்டும்" (எழுத்ததிகாரம் - ௪௨௦) "பெண்டென் கிளவிக்கு" (ஷ ௪௨௧) எனத் தொல்காப்பியனாரே வழங்கலின், அவர்காலத்து அப்பெண்டு, பெண்டு என்ற இருவழக்குகளும் உயர்திணைப் பெண்பாற்கு உள வெனத் தெரிகின்றது.

(தொடர்ச்சி)

பத்திராசிரியர்.

—

OFFICE OF ... REGISTERED BOOKS
23 AUG 1910
MADRAS.

உ

சிவமயம்.

# ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளது

# மணிரத்தினமாலை.

## முன்னுரை.

இந்த 'மணிரத்தினமாலை' என்னும் கிரந்தமானது சுலோக பூர்வமாக உள்ளது. சிஷ்யன் குருவினை ஒன்றன்மேல் ஒன்றாக கேட்குமுகமாக ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகளாற் செய்யப்பட்டது. அதிலுள்ள நன்னெறியினையும் சிவஞானபோதத்தினையும் சகலரும் அறிந்து ஆனந்தமடையும்பொருட்டு, இமயமலைச் சாரலிலுள்ள மாயாவதிமடத்தாரால் 'பிரபுத்தபாரதா' வென்னும் மாஸிக சஞ்சிகையில் வெளிவந்தபடி எழுதப்பட்டது.

1. ஹே! கிருபாசமுத்திரமான குருவே! இப்பொழுது நான் கரையற்ற சம்சாரமாகிய சமுத்திரத்தில் மூழ்கப்போவதால் அதனைக் கடக்கக்கூடிய வழியொன்றுமில்லையோ அதனைச் சொல்லீரோ? இந்த சமுத்திரத்தைக் கடக்கக்கூடியது விசுவேசுரனது பாதாம்புயமான கப்பலைத்தவிர்த்துவேறு இன்று. நீ யதனைப்பற்றுவாயாக.

2. யார் பந்தப்பட்டோர், பந்தமில்லார்யார்? விஷயாதிகளில் மனதைப்புகவிட்டோனும், இவ்வுலகவாழ்க்கையில் விரக்தியுடையவனுமாவர். பெரும்பயங்கரமான நரகம் யாது? ஒருவனுடைய சரீரமே. மோக்ஷமெது? புலனுகர்ச்சியை விரும்பும் இச்சையைக் களைதல்.

3. பிறப்பிறப் பெனும் பாசத்தை யறுக்கக்கூடியதெது? அறிவுடன்கூடிய ஆத்மபோதம். (மோக்ஷம்) அதாவது பாசநீக்கத்திற்கு வழி எது? வேதாகமங்களிற் கூறப்பட்ட அப்பதிதான். நரகத்தில் நிச்சயமாய்க்கொண்டுவிடுவதெது? ஸ்திரீகளைக்காமாகாரனாய்ப் பார்ப்பது; இதற்குமாறாக நிச்சயமாய் மோக்ஷத்திற்சேர்ப்பது எது? அஹிம்சை.

4. சாந்தியுடனிருப்பவர்யார்? யார்பதியினையறிந்து நிஷ்டை கூடிவிடுகின்றனரோ அவர்களே. யார்விழிப்புடனிருப்பவர்? அசித்து சித்தினையறிந்து அதனை நாடுபவர்கள். பகைவர்யார்? ஐம்புலன்களே. நண்பர் யார்? அவ்வைம்புலவேடரைச் சர்வர அடக்கியாளுவோமாயின் அவைகளே.

5. ஏழையினும் கடையர் யார்? யாருக்கு புலனுகர்ச்சிப் பற்று அதிகமோ அவரே. லக்ஷ்மிகடாட்சமுடையவன்யாவன்? எவனுக்குத் திருப்தி இருக்கின்றதோ அவனே; பிராணன் இருந்தும் இல்லாதவர் யார்? யாருக்கு சக்தியிருந்தும் அதனை பிரவர்த்திக்கவிடாமற்றடுக்கின்றனரோ அவர்; ஜீவனுக்கு அமிர்தத்திற்குச் சமானமாக இருப்பவர் யாவர்? இச்சை நீங்கினவர்.

6. எல்லோரையும் அமிழ்த்தக்கூடிய பாசக்கயிறு எது? நான் எனது என்னும் எண்ணம். மதுவைப்போன்று உன்மத்தனாக்கச்செய்யக்கூடியதெது? மங்கையினிடத்துண்டாயகாமம்; உண்மையில்கண்ணிருந்து மிழுந்தோர்யார்? காமக்குரோதத்தால் மூடப்பட்டவர்; இறப்பாவது யாது? நாமஅழிவு.

7. குருயார்? பிரயோஜனப்படக்கூடியவைகளை போதிப்பவர். சிஷ்யன்யார்? குருபக்தியிற்சிறந்தவன்; அதிகமாக நீண்டகாலம் துன்பப்படுத்தும் வியாதி எது? பிறப்பிறப்பு; ஹே குரோத்தமா, இவற்றிற்கு பரமௌஷதம் யாது? நித்யாநித்தியவஸ்து விவேகம்.

8. பூஷணரத்தினமாய் விளங்குவதெது? நற்குணம்; ஸ்தலங்களில் மேலானது எது? சுத்தமனம்; இவ்வுலகத்தில் நீக்கவேண்டிய வஸ்துக்கள் எவை? காமார்த்தம்; எப்பொழுதும் சிந்திக்கவேண்டிய பொருளெது? கிரந்தங்களிலும் குருவினிடத்தும் அறிந்தது.

9. பிரமத்தை அநுபவித்தற்குரிய சாதனங்கள்யா? சாதுசங்கம், தன்னடக்கம், விவேகம், திருப்தி இவைகளையுடையோரது பழக்கம்; நல்லொழுக்கமுடையோர்யார்? அநித்தியவஸ்துக்களின் பற்றற்று நித்தியமாயுள்ள சிவத்தினிடத்து பற்றுதலுடையோர்.



10. ஜீவன்களைப்பீடிக்கும் ஜ்வரம் எது? கவலை; மூடன்யார்? நித்தியாநித்தியவஸ்து விவேகமில்லாதவன்; நான் செய்யவேண்டிய சற்கருமங்கள்யா? சிவபெருமானையும் மகாவிஷ்ணுவையும் அநவரதமும் சிந்தனைசெய்தல்; வாழ்வென்பது என்? பிறஹிம்சை என்பது செய்யாமல் வாழ்வது.

11. உண்மையான கல்வியென்பதெது? கற்றதனாலாயபயன் வாலறிவன் நற்றொழல்; போதம் என்பதென்ன? எவ்விதமான பாசங்களினின்றும் நீக்கம்; லாபங்களிற்சிறந்ததெது? ஆன்மாவையறிதல்; இவ்வுலகைஜயித்தோர்யார்? தன்மனதைஜயித்தவர்கள்தாம்.

12. சூரர்களிற் பெரியோன்யார்? மன்மதபாணங்களை இலக்ஷியஞ்செய்யாதவன். மஹா ஞானியென்றும், சாந்தமூர்த்தியென்றும், நடுநிலைமை தவறாதவனென்றும் சொல்லக்கூடியவர்யார்? ஸ்திரீகளைக் கண்டும் அவர்களிடம் மையலைமறந்தவன்.

13. விஷங்களிற் கெடுதியுள்ள விஷமெது? விஷயநுகர்ச்சிக்குடையவை; யார் எக்காலத்தும் துன்பமுடையவர்? ஐம்புலன்செல்வழி இன்பமடைய விருப்பமுள்ளவன்; எந்த ஜீவன் அநுக்கிரகமுடையது? பிறர்நன்மையையே நாடுபவன்; யாருக்கு உலகம் பூஜ்யதை செய்யவேண்டியது? தத்வநிஷ்டையுடையவருக்கு.

14. எந்தவகை ஆபத்துவந்தபோதிலும் நல்லறிவாளன் செய்யக்கூடியதெது, எவ்விதத்திலும் செய்யவேண்டியதெது? மிதமற்ற ஆசையை நீக்கியும் பாபகார்யங்களைச் செய்வதினின்றும் விலகவும் வேண்டும்; வேதாகமங்களையோதி அதிலுள்ளபடி ஒழுகவேண்டும். உலக வியாபாரத்திற்கு மூலம் எது? அறியாமை.

15. இருடிகளிலுயர்ந்தோர் யார்? அருவருக்கத்தக்க சிற்றின்பத்தினால் மோசம்போகாதவன்; மனிதனுக்கு பெரியவிலங்காயிருப்பதெது? மனைவி; பிரதிக்ஞைகளிற் சிறந்ததெது? எல்லோருக்குந் தைந்யனாகவிருப்பது.

16. யாவராலும் அறியமுடியாததெது? ஸ்திரீகளின் இருதயமும் அவர்களுடைய நடத்தைகளும்; ஒருவராலும் நிக்கிரகிக்கப்

படாதெது? அதிக கஷ்டப்பட்டாலொழிய கிடைக்காத வஸ்துக்களிடத்தில் இச்சை; மிருகத்தையொத்தவன் யாவன்? அறிவில்லாதவன்.

17. கூடக்கூடாதவர்கள் யார்? மூடன், பாபி, அற்பன், பிறர் வாழ்வது பொறாதவன்; மோக்ஷத்தை விரும்பியவர்கள் செய்யவேண்டியதென்ன? சத்சங்கம், பற்றறல், சிவத்தினிடத்துப்பற்று.

18. அவமானத்திற்குக் காரணம் யாது? ஒருவனது இச்சையை நிறைவேற்றுவதன்பொருட்டு இரப்பது; கௌரவத்திற்குக்காரணமாயுள்ளதெது? இரவாமை; 'பிறந்தோர்' என்று சொல்லுவது யாரை? மறுபிறப்பற்றவர்களை; யாரையிறந்தோரென்பது? யாருக்கு இறப்பதென்பதில்லையோ அவர்களை.

19. யார் உண்மையில் செவிடும் ஊமையும்? சபைநடுவே குறிப்பறிந்து பேசாதவன் ஊமை; நற்புத்தி கேளாதவன் செவிடன்; யாரை நம்பலாகாது? ஸ்திரீகளை.

20. உண்மைப்பொருளென்ன? சிவமத்துவிதம்; இந்த உலகிற் பெருமையுடையதெது? களங்கமற்ற ஆன்மா; எந்தக்கர்மத்தைச் செய்வதால் துக்கமுண்டாவதில்லை? காமதகனனான சிவபெருமானையும் கம்சவதனான பரந்தாமனையும் வழிபடுவது.

21. மனுஷியர்களுக்கு ஜயிக்கமுடியாத சத்துரு யார்? கோபம், அசத்தியம், பேராசை, பொறாமையோடுகூடிய தணிக்கமுடியாத காமம்; ஒன்றினை அடைந்தும் திருப்தியாகாத பொருளெது? மேலே கூறிய இச்சையே; துன்பத்திற்கு வித்து எது? நான் எனது என்னும் எண்ணம்.

22. முகத்திற்கு ஆபரணமெது? கல்வி; சத்தியமாவது என்ன? எல்லா ஜீவன்களுக்கும் பிரயோஜனமாயுள்ளது; எவ்விதமான இன்பம் நிக்கிரஹிக்கப்படவேண்டியது? சிற்றின்பம்; எல்லோரும் அநுபவிக்கும்படி அடையவேண்டியதென்ன? எவ்விதமான கட்டுமில்லாத ஸ்வேச்சை.

23 AUG 1910 MADRAS.



23. எதுகெட்டால் மோக்ஷங்கிட்டும்? மனம்; எந்த நிலையடைந்தால் பயம் நாஸ்தி? அநுபவமாகிய பாசநாசமான ஞானத்தில்; ஒருவனுக்கு இருக்கும் உபத்திரவங்களில் அதிகூர்மையானதெது? அறியாமை; மரியாதைக்குரியார் யார்? நாம் பிரயோஜனப்படும்படி புத்திகற்பிப்பாரும் மூத்தோரும்.

24. யமன் வருங்கால் புத்தியுள்ளவன்செய்யவேண்டிய காரியமென்ன? அப்பொழுது ஏகாக்கிர சித்தனாய் எல்லாம் வல்லசித்தனிடத்துலயிக்கவேண்டும்.

25. எவர்கள் திருடர்களாக இருக்கிறார்கள்? கெட்டசகவாஸத்தால் நிறைந்தவர்கள்; ஒரு சபையில் சோபிப்பவர் யார்? நல்ல கல்விமான்கள்; ஜீவியகாலத்தில் இன்பத்தையும் சமாதானத்தையும் கொடுப்பதெது? கல்வி; கொடுக்கக் கொடுக்கப் பெருகுவது எது? கல்வி;

26. நாம் யாரை எப்பொழுதும் நம்பக்கூடாது? தன்வசப்பட்ட பொதுஜனாபிப்பிராயத்தையும் பொதுஜனங்களையும்; நண்பனு யார்? உண்மையிற் பெற்றோர் யார்? ஆபத்துக்காலத்தில் உதவுபவனுந்தூய் சிநேகன்; ஒருவனை உள்ளளவும் காப்பாற்றுபவனே பெற்றோன்.

27. எதையறிந்தபிறகு பிறிதொன்றும் அறியக்கிடக்கவில்லை? சச்சிதானந்த சொரூபியாகிய சிவத்தையறிந்தபின் அறியவொன்றுமில்லை; எதை அறிந்தால் உலகமுழுதும்விளங்கும்? சர்வவியாபியையறிந்தால் உலகம் தானே விளங்கும்.

28. இவ்வுலகில் அருகிக்காணப்படுவதென்ன? பிரம்மவிசாரணைபுரிந்து சோதியுடன் கலப்புற்ற சுவாநுபூதிச் செல்வராயுள்ளாரை; ஜயிக்கமுடியாமற்றமொறுவதெது? ஆண் பெண்ணென்ற வித்தியாசத்தினையும் பெண்பாலால் கவரப்படுவதையும்.

29. மிருகங்களினும் கேவலம் யார்? நியாய வழியினும் தர்மவழியினும் நடவாதவனும் வேதமுதலியவைகளை யறிந்தும் அவ்வழியொழுகாதவனும்; விஷமாயினும் அமிர்தம்போல் இனிமையுடையதெது? ஒருவனது பாரியையே (இவள்மோஹத்தாற்றன் சுகவா

னிடம் பக்திகுறைகிறது); சிநேகனைப்போல் நடித்தாலும் சத்துருயார்? ஒருவனுடைய புத்திரமித்திரர்களே.

30. மின்னலைப்போல் நிலையற்றசெது? தனம், இளமை, ஜீவன்; நன்கொடை எப்பொழுது பிரயோஜனமுடையது? பாத்திரமறிந்து இட்டபோது; மூச்சுப்போகுமுன்கூட நிக்கிரம்செய்யவேண்டியதுங்கட்டாயஞ்செய்யவேண்டியதுமென்ன? துஷ்கிருத்தியங்களை விலக்கலும் சச்சிதானந்தமான சிவத்தைத் துதித்தலும்.

31. சிவபெருமானுக்கு உகந்த கைங்கரியம் என்ன? முராசுரனைவதஞ்செய்தோனை வணங்குதல்; அல்லும் பகலும் சிந்திக்கவேண்டியபொருளெது? உலகம் அநித்தியம் என்பதையும் சச்சிதாநந்த சொரூபத்தையும்.

32. இந்த 'மணிரத்தினமாலை' என்னும் கிரந்தத்தை ஒருவன் சிரத்தையுடன் கவனிப்பானேயாகில் சிவ விஷ்ணுக்களுடைய பெருமையைக் கூறுவனத்தவிர்த்து வேறொன்றும் போதிக்கவில்லையாகையால் மங்களமுண்டாகுமென்பது நிச்சயம்.

இலக்கணவிளக்க பரம்பரை,

சோமசுந்தரதேசிகன்.

முற்றும்.



# *கல்வி.

—:(o):—

முத்தமிழ்த்துறை மூழ்கிய உத்தமப்புலவர்களே!

உலகத்திலே பலவேறுவகைப்பட்ட பிறவிகளில் மானிடப்பிறவியினும் விழுமியதொன்று இன்றென்பது யாவரும் அறியக்கிடந்த தொன்றாம். அத்தகைய பிறவியின்கண் ஒருவன் தேடற்பாலனவாயது, கல்விப்பொருள், செல்வப்பொருள் என்னும் இரண்டாம். இவ்விரண்டினுள்ளும் கல்விப்பொருளே இன்றியமையாச் சிறப்பிற்றாதலால் அக்கல்வியின் மாக்ஷிமையைச் செந்தமிழ் அறிவிற்செம்மைசான்ற அறிஞர் சூழ்ந்த இப்பெரும் பேரவையின்கண்ணே,

"பல்லியின்சொல்லும்சொல்லாக்கொள்வதோ
வுண்டுபெண்டுபெண்டே."

என்றோதிய மூதறிஞர் மொழியைப்பின்பற்றி எனது சிற்றறிவிற்கெட்டியவண்ணம் சில சொல்வான் புக்கேன்.

ஈண்டுக்கல்வியென்பது பொதுவகையில் கற்றற்குரிய நூற்களைக்கற்றல், சிறப்புவகையில்தமிழ்க்கல்வி என்பது அமைவுடைத்து.

கல்வியானது தன் உன்னத நிலையினின்றும் சலியாத் தன்மையானும், அருமை, பெருமை, தூய்மை, உலகப்பிரகாசம் முதலிய குணம்பற்றி மேருகிரி என்றும், எவரானும் அளத்தற்கொண்ணா விரிவுடைமையும், பலபொருண்மார்க்கத்துறையொடு குலவும் உரிமைபற்றியும் சுவைப்போர்க்கு இனிமை பயத்தலானும், வாரிதி என்றும், நிரம்பிய உள்ளத்தே எப்பொருள் விழையினும் அவ்விழைந்தபொருள்களை நினைக்குந்தோறும் இடையீடின்றித்தருதலின் கற்பகதரு என்றும், இரகசியமான பொருளை வெளிப்படுத்தலினானும் கலைமகள் அகமலரிற்றங்குதலினானும், பிரமன் என்றும், ஆன்மாக்கள் விரும்பியவற்றைத் தருதலானும் அவர்க்குளதாம் அறியாமையைப் போக்கலானும் நீணிலங்கடந்த நெடியோன் என்றும், இறுதிக்

* 1910-ஆம் மேமீ 25உ காலையில், தஞ்சையிற் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஒன்பதாம் வருஷக்கூட்டத்தில் ஆசிரியராற் படிக்கப்பெற்றது.

காலத்தும் சற்றேனும் அசைபா நிலைமையானும் மறுமைப்பயனை உதவுதலானும், பெண்ணிடங் கலந்த புண்ணியனாகிய சிவபெருமான் என்னவும், மாணவர் குழாமும் மற்றேற்போரும் வேண்டுவனமுகந்து செலவிற்சிறிதுங் குறைவுறப்பெறாமையால் நிறை உள்ளத்தினையும் அருளினவும்,

இதனை

கலையினிற்சலியாநிலைமையானும்
பலவுலகெடுத்தவொருதிறத்தானும்
கிளையும்பொறையும்பெறுநிலையானுந்
தேவர்மூவருக்காவலானுந்
தவலிப்பாலிற்செலவமைதியு
மனக்கெடுதலையாப்பரப்பின்றாது
மமுதமுந்திருவுமுதவுதலானும்
பலதுறைமுகத்தொடுபயிலுதலானு
முன்னுடைக்கோட்டுமுனைபெறுதலை
பதிவனத்தடியுமகக்காதொடு
நிறையுளக்குறிநிகழ்பவைநிகழ்பவை
தருதல்வானத்தருவைத்தாதொடு
மறைகெளிப்பதித்தலிற்கலைமகளிருத்தலின்
அமரர்வாழ்த்தலிற்பிரமனுதவு
முயிர்பரித்தளித்தலிற்புலமிசைபோக்கலிற்
படிமுழுதளித்தநெடியோனுதவு
சிறுமிற்சலியாதிருத்தலானு
மறுமைத்தருதவுமிருமையானும்
பெண்ணிடக்கலந்தபுண்ணியனுதவு
மருள்வழிகாட்டவினிருவிழியாதவுங்
கொள்ளுநர்கொள்ளக்குறையாதாதலின்
நிறையுளக்கொடைப்பருளாதவும்,

என்கல்லாடனார் கூறினர். ஆசிரியர் தொல்காப்பியனார் மக்கட்கு இயல்பாகப் பிறக்கும் மெய்ப்பாடு கூறுமிடத்து பெருமித மென்னும் மெய்ப்பாடு சிறப்புடைத்தென்பது தோன்றயாவராலும் புகழ்தற்குரிய நான்குபொருள் [illegible]கன் அடக்கிக்கூறியவர், அவற்றுள்ளும் கல்வி, சிறந்ததென்பது தோன்ற "கல்வி தறுகண் இசைமைகொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதநான்கே" என்னும் [illegible] கல்வியை முற்கூறினர்.



மனமொழி மெய்களால் ஆசிரியற்கு வேண்டுவன உதவிபுரிந்தும், மிகுதியான பொருள் வேண்டுவன நல்கியும் கல்வியைப் பயிற்றல்வேண்டும். அஃது கண்போல் நலம்பயப்பதன்றியும், உண்மைப்பொருளை விளக்கியும் மனத்தளர்ச்சி நேர்ந்துழி சிறந்த உதவியுமாகும். இதனை,

"உற்றுழியுதவியுமுறுபொருள்கொடுத்தும்
பிற்றைநிலைமுனியாதுகற்றனன்றே"

என்றும்,

"கைப்பொருள்கொடுத்துங்கற்றல்கற்றபின்கண்ணுமாகும்
மெய்ப்பொருள்விளக்குநெஞ்சின்மெலிவிற்கோர்துணையுமாகும்."

என்றும்,

"தளர்ந்துழியுதவுங்கல்விதானென
கள்வாராலும்மாற்றாராலும்"

என்ற சிவப்பிரகாசரும், வேந்தராலுந் தாயத்தாராலுங் கவரப்படாமையாலும் வேண்டியார்க்கு வேண்டுவன நல்கினும் சிறிதுங்குறைபாடின்மையாலும் இப்பெற்றிசிறிதும் பெறாதபொருட் செல்வத்தினும் கல்வி நனிசிறந்ததெனவென்பது நன்கு விளங்கும். இதனைத் தெய்வப்புலவரும்,

"கேடில்விழுச்செல்வங்கல்வியொருவற்கு
மாடல்லமற்றையவை" என்றார்.

கல்வியுடையான் சென்றவிடத்திற் சிறப்புறுதலும், அவையுள் ளோரால் நன்குமதிக்கப்படுதலுமாயின் ஒருவன் இறக்குமளவும் கல்லாது வாளா வாளாகழிப்பதென்னோ? இதனை,

"யாதானுநாடாமாலூராமாலென்னொருவன்
சாந்துணையுங்கல்லாதவாறு." என்றோதினர்.

இளம்பருவத்திலே கல்விபயில யாரும் முந்துறல்வேண்டும். அக்காலத்து இளைஞர் மனநிலையானது உலகப்பற்றுக்களிடத்துச் செல்லாது கல்வியைப்பின்பற்றிச் சேர்ந்து செல்லாநிற்கும். வேறொன்றில் செல்லாது கல்வியைப்பற்றிக் கூறப்புகாது ஒன்றையே பற்றத்தம்மனம் முந்துறுமாயின் தண்ணிய

மதியினிடத்து இலகுவிலேபற்றி நாளேற நாளேற வன்மையுற்று நலம்பாடு மிகவுண்டாம். இதனை, இளமையிற்கல் என்றும், இளமையிலே வளையாது முதுமையிலே வளையாது என்றும், இளமையில் வளைத்த மூங்கில் மன்னர்மாமுடி மீதும் அவ்வாறு விளக்கப்படாதன களைக்கூத்தர் காற்கீழாம், என்பதும் பழமொழி.

முற்பகுதியில் துன்பத்தினை விளைவித்து நவிலுந்தொறும் நிரம்பிய இன்பத்தை விளைவிப்பது கல்வி ஒன்றே; அஃதொழிந்தவெல்லாம் முன்னர் இன்பம்போல் பின்னர்ப் பலதுன்பத்தை எய்துவிக்கும். இதனை,

"தொடங்குகாற்றுன்பமாயின்பம்பயக்கு
மடங்கொன்றறிவகற்றுங்கல்வி—நெடுங்காம
முற்பயக்குஞ்சின்னீரவின்பத்தின்முற்றிழாய்
பிற்பயக்கும்பீழைபெரிது." எனக்கூறியதும்,

மக்கட்குற்ற அறியாமையாகிய பிணிக்கு மருந்தாகவுள்ளதும் அறம், பொருள், இன்பம், வீடென்னும் நால்வகைப்பயனையும் கொடுக்குமாற்றலுள்ளதும் கல்வியை யின்றி எவ்வுலகத்தும் எவ்வகைப்பொருளும் காண்டல் கூடா. இதுபற்றியே,

"எம்மையுலகத்தும்யாங்காணேங்கல்விபோல்
மம்மாறுக்குமருந்து" என்றும்,
"அறம்பொருளின்பம்வீடும்பயக்கும்" என்றார்.

உலகத்தில் நிலைத்த இன்பம் எதுவோ அன்னதைப்பெற விரும்புங்கால் தொடக்கத்திற் றுன்புறுவான் என்பதொருதலை. காட்சிப்பிரமாணத்தான் அறியக்கிடந்த காலத்தும் கல்விப் பயிற்சிக்குப் படும்பாடு அளவிறந்தனவாகின்றன. பூர்த்தியுற்றபின்னர் அதனால் அடையும்பயனையும், கீர்த்தியினையும் நோக்குழி முற்படுதுன்பமனைத்துமின்றிக் கவானிடத்து மகனைக்கண்டபொழுது தாய்க்குளதாம் உவகையோடொக்கும். இம்மட்டோ! இவ்வரிய பெரிய கல்வி இன்பத்தினைப்பெற்ற தான்மாத்திரமன்று; ஈன்ற அன்னையும், உலகமும் கண்டு உவப்புறுமென்பது நன்கு விளங்கும். இதனைத்தெய்வப் புலவரும்,



"வயாவும்வருத்தமு மீன்றக்கா ளேவுங்
கவாஅன்மகற்கண்ட தாய்மறந் தாஅங்கு" (நாலடியார்)
"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந்தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்டதாய்" என்றும்,
"தாமின்புறுவதுலகின்புறக்கண்டு
காமுறுவர்கற்றறிந்தார்." (என்றும் பணித்தார்.)

ஒருபிறவியினிடத்துத்தாம் கற்றகல்வியானது தொடர்ந்து வரும் பிறவியினிடத்தும் மேவிப் பேரின்பத்தை விளைவிக்கும். உயிருக்கு அரணுதலுமுடைத்து. ஞானசம்பந்தப்பெருமான் பூர்வம்கலைஞான முதிர்ச்சி பெற்று ஞானபோனகம், அருந்தி இன்புறுவான் இப்பிறவியுற்றனரெனவும் அஞ்ஞான்று கல்விஞானம் ஞானமயமான தன்னிடையில் தானாகவே தோன்றியதெனவும் உணர்தற்பொருட்டே. "சிவனடியேசிந்திக்கும்,, என்னும் செய்யுளில், "உவமையிலாக் கலைஞானம்,, என்று, இடையிற்பெய்துவைத்தார். இதனை

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப்புடைத்து." (என்றும் பணித்தார்.)

ஆகவே, தொல்லைநாண்முதல், முதன்மை, உரிமை, அருமை, பெருமை, பெரிதும் அடைந்து பிறபாடைகளிலில்லாத பல சிறப்பியல்களைத்தனக்கே உரிமையாக்கித் தலைசிறந்து நின்ற தமிழ் மொழியின் பெயராகிய "தமிழ்" என்னுஞ்சொல்லை ஆசிரியர் தொல்காப்பியனார் "தமிழென் கிளவியுமதனோரற்றே,, என்னுஞ் சூத்திரத்தாற் கூறியிருக்கவும் இதன் பழமையை உற்றுநோக்காது தமிழ் மொழியை நன்கு பயிலாதாராகிய சிலர், அவர் நாவிற்பயின்று பழகாத "ழ" கரவெழுத்தை மொழிப்படுத்துக் கூறுமிடத்து ஆற்றலிலராகித்தம்பாடை நடைவழியே திரித்துக்கூறிய திரமிடம், திராவிடம் முதலாகிய மரூஉச்சொற்களை ஒரு பொருளாகக்கொண்டு அவற்றின்வழி தமிழ் என்னுஞ்சொல் தோன்றிற்றென்பது சிறிதும் பொருத்தமில்கூற்றாகும்: இதன்பெருமையைச் சிறிதுகூறி மேற்றொடர்வாம்.

"வழங்குவதுள்வீழ்ந்தக்கண்ணும்பழங்குடி
பண்பிற்றலைப்பிரிதலின்று." என்றும்,

வள்ளுவர் மொழிக்குத் தெள்ளிய உரைகண்டாரும் உள்ளது உள்ளபடியே கூறுவாருமாகிய ஆசிரியர், பரிமேலழகர், அதன் உரையின் (தொன்று தொட்டுவருதல் சேரசோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டுவருதல்) என்றார். ஆனமைபற்றி நந்தமிழ்மொழி இவ்விந்தியசமூகத்திற் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டுவந்திருத்தல் தெற்றெனவிளங்கும். இதுபற்றியே கம்பநாடரும்,

நின்றவனை வந்த நெடியோனடிபணிந்தா
னன்றவனு மன்பொடு தழீஇ யமுத கண்ணன்
நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தா
னென்றுமுளதென்றமி ழியம்பியிசைகொண்டான்.
என்றும் பணித்தார்.

தமிழ்மணங்கமழும் இச்செந்தமிழ் நாட்டிற்கிணையாக அவ்வும்பர் வாழ்பதி எட்டுணையும் ஒவ்வா; உரையினுமடங்கா; என்னை, ஏழுலகமும் ஏத்தும் சீர்சான்ற முத்தன்ன முத்தமிழினையும் அவ்வான்பதி வழங்குமோ! இதனைக் கம்பநாடர்,

“அத்திருத்தகுநாட்டினை யண்டர்நா
டொத்திருக்குமென்றுரைக்கி னொக்குமோ
வெத்திறத்தினு மேழுலகும்புகழ்
முத்துமுத்தமிழுந்தந்து முற்றுமோ” என்றும்,
“தமிழ்நிகர் நறவமுந்தனித் தண்டேறலும்,, என்றும்,
“தமிழ்ப்பாட்டிசைக்குந்தாமரையே” என்றும்,

தமிழ்மறையாகிய திருவாய்மொழியினும், “அந்தமிழின்பப்பாவினை” என்றும் “வேதமுரைத்து இமையோர் வணங்குஞ்செந்தமிழ் பாடுவார் தாம் வணங்குந்தேவர்” என்றும், “செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி” என்றும், “செந்தமிழும் வடகலையுந் திகழ்ந்த நாவர்” என்றும், தென்னன்றமிழை வடமொழியை” என்றும் ஆழ்வார்கள் எடுத்தோதினர்கள். “செய்யதமிழ்மாலைகளுந்தெளியவோதித் தெளியாதமறைநிலங்கள் தெளிகின்றோமே” என்று, வேதாந்ததேசிகரும் பணித்தருளினர். அநாதிதொட்டு தமிழ்ப் பெயரே என்பது தோன்ற,



“ நின்றநிந்துணர்ந்தவுந் தமிழ்ப்பெயர்நிறுத்தவு
மெடுத்துப்பரப்பியவிமையவர்நாயகன் ”

மெய்த்தவக்கூடல் என்று தமிழின் பெயர் உண்மைபறியக் காட்டிய கல்லாடத்தானுமுணர்க.

ஆகவே இன்னதன்னதொன்மைவாய்ந்த தமிழ்க் கல்வியொழிய பிறகல்விகளெல்லாம் பலதிருத்த விருத்திசெய்யப்பட்டு மேம்பட்டு வருகின்றன. இஃதொன்றே அத்தகைய திருத்தங்கள் வேண்டப்படாது தனித்த அழகோடு இனித்து விளங்குகின்றன. இவ்வாறு கூறிய கல்விப்பயிற்சிக்கு முக்கியமான அம்சம் கேள்வியாகும். ஒருவர்க்கு அடையவேண்டிய செல்வம் பலவற்றுள் கேள்விச்செல்வமே நிரம்பவும் சிறப்புடையதாகின்றது. இதுபற்றியே,

“செல்வத்துட்செல்வஞ்செவிச்செல்வமச்செல்வஞ்
செல்வத்துளெல்லாந்தலை.” எனவும்,

“வானோர் கேள்விச் செல்வந்துய்க்க” என்றார் கம்பநாடரும், நலம்பாடு பயக்கும் நுண்ணியநூற் பொருளை ஒருவன் சிறிதேனும் கேட்க அஃது அத்துணையாயினும் நிறைந்த பெருமையைப் பயக்குமென்பது கூறவேண்டா. இதனை,

“எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு
மான்ற பெருமைதரும்” என்றும்,

மக்கட்பிறப்பினர் யாவரேயாயினும் சன்மார்க்கநெறிக்கண்சேறற்குச்சிறிதேனும் உறுதிப்பொருள் கேளாவிடின் வெற்றெனிகேட்டின்புறும் பழையதுணை துணையாகாதென்பது யார்க்கும் புலனும். இதனை,

“கேட்பினுங்கேளாத்தகையவேகேள்வியாற்
றோட்கப்படாதசெவி” என்றும்,

நூற்களிடத்துக் கனிந்துகிடக்கின்ற உண்மைப் பொருளைக்கேட்டு அதனால் உண்டாகும் கேள்வி இன்பத்தை அநுபவியாது உலக இன்பத்திலே பட்டுழலல் தீங்காம். இதனைக்கம்பநாடரும்,

“ நூலேந்துகேள்விநகராப்புலனோக்கலுற்றார் ” என்றோதினர்.

கல்விகேள்விகளில் நிறைந்த ஆன்றோரிடத்து அரியவிடந்த நுணுக்கமான பொருள்களை ஒருவன் செவியினடமடுத்து, ஆழ்ந்து சிந்திக்குங்காலத்து அதன் உள்ளுறை சுவையாய் விளங்குவன் இறைவன்.

இதனைக் "கேட்டனன் என்பமன்னோ கேள்வியாற் செவிகள் முற்றத்தோட்டவர் உணர்வின் உண்ணும அமுதத்தின் சுவையாய் நின்றான்" என்று கம்பநாடரும் பணித்தார். தனக்கு எஞ்ஞான்றும் பற்றுக்கோடாய் நின்று உதவி புரியுமாற்றலினும் பரந்தனூற்பொருளை எளிதிற்றெரிந்து கோடலினும் கேள்வியே மிகச்சிறப்பிக்கும் இதனை,

> "கற்றிலனாயினுங் கேட்க அஃதொருவற்கு
> ஒற்கத்தினூற்றாந்துணை" என்றும்,

"கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" என்று ஆளுடைய பிள்ளையாரும் பணித்தார்.

"கற்றலிற் கேட்டலேநன்று" எனவும், கேட்டல், சிந்தித்தல் எனவும் கேள்வியாலாயபயன் செவிப்புலத்திற்கு அருமருந்தன்ன விருந்தா மென்பதும்பற்றியே "அறம்கேள்வியாலாம்பயன்" என்றும் "விருந்தாக யாம்பண்ணி" என்றும் கூறப்பட்டது. கேட்டலே மிகுமகிழ்ச்சியுடையனவாம். இதுபற்றியே நக்கீரனார்பாடிய திருமுருகாற்றுப் படையை முருகவேள், பன்னிருசெவியும் சாய்த்துக் கேட்டு உவப்புற்றனர். இதனை,

> "புலவன் கூறுந்தமிழ்செவி தாழ்த்துக்கேளா
> அங்கிலமனக்களிப்புற்றறுமுகம்படைத்தகோமான்"

என்று சிவப்பிரகாசமுனிவரும் கூறினர். இப்பெற்றித்தாய கேள்வியின்பந் துய்த்தற்குரியவை தமிழ்க் கல்வியை யொழிய பிறவற்றிற் பெறமுடியா. இதனை,

> "இக்கிலவரைப்பினுள்ளோர் யாவர்க்குங்கேள்வியின்பந்
> தன்னையே பிறந்தவத்திற் தமிழ்"

என்றார், சிவப்பிரகாசமுனிவரும். இனிக், கல்வி கேள்விப்பயனை யடைதற்குக் கல்வி, அறிவு, உரு, நலன், புகழ், சொல்வன்மை, பொ



றுள், அவாவின்மை, பொறையுடைமை இன்னன, நற்குணம்செறிந்தாராய், மாணாக்கனது செயல்முற்றுமுணர்ந்தாராய் தடைவிடைநேர்ந்துழிகரதலாமலகமாய்த் திடம்படவுரைக்குந் தெள்ளியோரே போதகாசிரியராவர். இப்பெருந்தகையார் மாட்டுமாணவர்பணிவுடைமை வாய்மையுடைமை, செய்ந்நன்றியறிதல் முதலிய சுகுணசீலனாய்ச்சென்று செல்வமலிந்தார்மாட்டு வறிஞர் நின்றேற்கும் பெற்றிபோல் நின்று நூற்பொருளைச் செவிசாய்த்துக் கேட்கக்கடவர். இதனை,

> "உடையார்முன்னில்லார்போல் ஏக்கற்றுங்கற்றார்
> கடையரே கல்லாதவர்" எனவும்,

சொன்னிறைந்த கேள்வியுடையாராகிய ஆன்றோருடைய நட்பையே மிகுதியும் நாடமுயறல்வேண்டும். அன்னாருடைய கூட்டுறவைப்பெற்று அவர்களுடன் அளவளாவித்தாம் கற்றகல்வி நலங்களைமொழிந்து மகிழும் இன்பத்தினும் விழுமிய இன்பம்வேறொன்று மின்றென்பது தெற்றனவிளங்கும்.

(இன்னும் வரும்.)

முத்துரத்ந முதலியார்.

---

உ

## விவசாயிகளால் ஆளப்படும் டென்மார்க் தேசம்.

---

ஐரோப்பாவில் டென்மார்க் என்ற ஒரு சிறுதேசம் இருக்கிறது. அதனுடைய விஸ்தீரணம் 15,300-சதுரமைல். அதில் வசிக்கும் ஜனங்கள் 25-லட்சத்துக்கு மேலில்லை; அதாவது நமது திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள ஜனத்தொகைக்கும் குறைவு. அத்தேசத்தில் விவசாயத்தைத்தவிர வேறு தொழில்களில்லை. இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற தேசங்களில் பெரியபட்டணங்களில் கோடிக்கணக்கான பெரும்முதல்கள்வைத்துக் கைத்தொழில்கள் செய்யப்படுவது போல் செய்யப்படுவதில்லை. ராஜாங்கத்துக்குத் தலைவரான அரசனொருவனிருந்தாலும் அது பார்லிமெண்டுமூலமாய் ஜனங்களாலேயே நடத்தப்படுகின்றது. ஜனநாயகமென்பதை அங்குதான் பார்க்

கலாம். பொதுவாய், விவசாயம் முக்கியத்தொழிலாயிருக்கும் தேசங்களில் ஜனங்கள் ஏழைகளாயிருப்பார்களென்று சொல்லப்பட்டாலும் டென்மார்க் ஜனங்கள் ஏழைகளல்ல. விவசாயம் செய்துவரும் வரும்படியல்லாமல் ஜனங்கள் தங்களிருப்பிடத்திலேயேயிருந்து செய்யக்கூடிய பல சில்லரைத்தொழில்கள் செய்து கிடைக்கக்கூடிய வரும்படிகளும் பெற்று திருப்தியாயும் சுகமாயும் ஜீவிக்கிறார்கள். உலகத்தில் முக்கியவல்லரசுகள் என்று பெயர்பெற்றுப் பெரும்படைகளாலும், குவிந்த செல்வங்களாலும், தூரமான அந்நியதேசங்களோடு செய்யப்படும் வியாபாரங்களாலும், மனிதவர்க்கத்தின் கதியையே மாற்றிவரும் மற்றத்தேசங்களைவிட இந்த டென்மார்க்கே குறையின்றிச் சந்தோஷமாய்வாழும் தேசமாகக் கருதப்படுகிறது.

இதற்கு மூன்றுகாரணங்கள் சொல்லப்படுகின்றன. டென்மார்க் தேசத்து விவசாயிகள் தாங்களே நிலத்துக்குச் சொந்தக்காரர்கள். பெரிய மிராசுதாரர்களும் ஜமீந்தாரர்களும் சொந்தக்காரர்களாகி அவர்களின் கீழ்க்கூலிக்கோ அல்லது குடிவாரம் பெற்றோ ஜீவிக்கிறவர்களல்ல. அங்கு விவசாயம் செய்யப்படும் பூமியின் விஸ்தீரணம் 10-லக்ஷம் ஏகரா. இந்த 10-லக்ஷம் ஏகரா, விவசாயிகளில் தலைக்கு 40-ஏகரா கொண்ட பண்ணைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஒவ்வொரு குடும்பத்துக்கும் சொந்தமான நிலம் 40-ஏகராவுக்கு மேலில்லை. இந்த நிலத்திலிருந்து எவ்வளவு வரும்படிபெறக்கூடுமோ அவ்வளவு வரும்படியைத் தங்கள் சாமர்த்தியத்தால் பெற்று மாடுகள் எதேஷ்டமாய் வளர்த்து வெண்ணெய்செய்து அந்நியத் தேசங்களுக்கு விற்றும் அப்படியே கோழி முதலியவைகளின் முட்டைகளை விற்றும், மாடுபன்றி முதலிய மிருகங்களின் மாம்சங்களை விற்றும் ஏராளமான லாபம் பெற்று ஜீவிக்கிறார்கள். இது டென்மார்க் தேசத்தின் வளப்பத்துக்கு முதற்காரணம்.

இரண்டாவது காரணம் ஜனங்களுக்குள்ளிருக்கும் ஒற்றுமை. விவசாயம் செய்வதும் விளைபொருள்களைச் செய்வதும் அவைகளை விற்பதும்—எல்லாம் கூட்டுமுயற்சியினாலேயே செய்யப்படுகின்றன. சுமார் 1850-ஐக்கியநாணயச் சங்கங்களிருந்து நிலம் வாங்க விரும்பும் விவசாயிகளுக்குக் கடன்கொடுத்து உதவுகின்றன. கவர்ன்மெண்டும் தங்கள் பொக்கிஷத்திலிருந்து கடன்கொடுக்கிறார்கள். எவனேனும் நிலம்வாங்க விரும்புவானானால் அந்த நிலத்தினுடைய விலையில் 10-ல் 1-பாகம் அவன் கையிலிருந்தால்போதும். பாக்கி 9-பாகம் கவர்ன்மெண்டு பொக்கிஷத்திலிருந்தே கொடுக்கப்படுகிறது. இதற்கு 100-க்கு 4-விகிதம் விவசாயிகள் வருஷாவருஷம் கொடுக்கவேண்டும். இந்த 4-ல் வட்டிக்கு 3-ம் முதலுக்கு 1ம் ஆக உளவடையும். இப்படி வாங்கப்படும்நிலம் 12-ஏகராவுக்கும் 300-பவுனுக்கும் அதிகப்படக்கூடாது. மேற்கண்ட ஐக்கியநாணயச் சங்கங்களாலும் கவர்ன்மெண்டின் உதவியினாலும் ஜனங்கள் விவசாயத்தைக்கைவிட்டுப் பட்டணங்களில் வந்து குவியாமலிருக்கிறார்கள். மேல்நாடுகளில் எதுவும் இந்தவிஷயத்தில் டென்மார்க்கைப் போலில்லை. பட்டணங்களில் ஏராளமான ஜனங்கள் குவிந்து அனேக தீங்குகள் விளைவதுபோல் டென்மார்க்கில் விளைவதில்லை. விவசாயிகளே ராஜாங்கத்தை நடத்துவதால் விவசாயத்துக்குவேண்டிய சகல செளகரியங்களும் கவர்ன்மெண்டால் செய்யப்படுகின்றன. விவசாயிகள் உழைப்பதும் பட்டணவாசிகள் சுகிப்பதுமாய் இந்தியாவிலுங்கூட விருப்பதுபோல் டென்மார்க்கிலில்லை. அவர்கள் செய்யும் தொழிலால் கிடைக்கும் லாபமனைத்தும் அவர்களையே யடைகின்றது.

உதாரணமாக, அவர்கள் செய்யும் வெண்ணெயையும், உண்டாக்கும் முட்டைகளையும் நடுவிலிருக்கும் வர்த்தகர்கள் வாங்கி லாபத்தைக்கொண்டு போவதாயில்லை. விவசாயிகளே எல்லாலாபத்தையுமடைகிறார்கள். சுமார் 25-வருஷத்துக்கு முன்னால் அவர்களுக்கு வெண்ணெய்செய்தல்முதலிய தொழில்கள் தெரியாமலிருந்தன. அயர்லாந்து தேசத்தில் இவைகள் செய்யப்படுகின்றனவென்றறிந்து அத்தேசத்துக்கு டென்மார்க் தேசத்தார் சிலர்போய் அவைகளைக் கற்றுக்கொண்டுவந்து, அது முதல் அயர்லாந்து தேசத்தாரைவிட அதிகமாயும் திறமையாயும் அவைகளைச் செய்துவருகிறார்கள். தற்காலம் அத்தேசத்தில் 1087-சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வெண்ணெய் செய்து வருகின்றன. இச்சங்கங்களில் 1,58000 விவசாயிகள் மெம்பர்கள். சங்கங்களில்லாமல் தனியாய் வெண்ணெய்செய்கிறவர்கள் வேறு 200-பேர் இருக்கிறார்கள். இவர்களனைவரும்சேர்

ந்து இங்கிலாந்துக்கு அனுப்பும்வெண்ணெய் பிரதிவருஷமும் 2,00000 பவுன் அல்லது 30,00,000 ரூபா மதிப்புள்ளது.

இவ்வாறே முட்டைகளுண்டாக்குவதிலும் அங்கங்கே சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச்சங்கங்களுக்கு மேலாகப் பெரிய சங்கமொன்றிருந்து அந்தச்சங்கம் சிறிய சங்கங்களனுப்பும் முட்டைகளை அந்நிய தேசங்களுக்கு அனுப்புகின்றன. அந்தந்த வீடுகளில் உண்டாக்கப்படும் முட்டைகள் வெகு சாக்கிரதையாய்க் காப்பாற்றப்பட்டு, அங்கங்குள்ள சிறிய சங்கங்களுக்கனுப்பப்பட்டு அங்கிருந்து பெரிய சங்கத்துக்கு அனுப்பப்படும். இந்தப்பெரிய சங்கத்தில் 57,000 மெம்பர்களிருக்கிறார்கள். எந்தச்சங்கத்திலும் விவசாயிகளைத்தவிர வேறுமெம்பர்களில்லை. டென்மார்க் தேசத்து முட்டைகளென்றால் லண்டன்பட்டணத்தில் என்னவிலையேனும் கொடுத்து வாங்கப்படுமாம். இப்படி ஏற்றப்படும் முட்டைகளின் மதிப்பு வாரம் ஒன்றுக்குச்சுமார் 1,320,000-பவுன் அல்லது 2-கோடி ரூபாய் எனச்சொல்லப்படுகிறது. இந்தச் சங்கங்களுக்குப் பணம் வேண்டுமானால் சேவிங்ஸ்பாங்குகளிலிருந்து கடன்வாங்கப்படுகின்றது. இந்தச் சேவிங்ஸ் பாங்குகள் 536-ல் போடப்பட்டிருக்கும் பணம் மொத்தம் 41,700000-பவுன். இந்தப்பணம் 1352,000 பேர்களால் போடப்பட்டிருக்கிறது. அதாவது தலைக்கு 31-பவுன் வீதமாகிறது. விவசாயிகள் அவர்களுக்கு மிகும்பணத்தை இந்தப் பாங்குகளிலேயே போடுகிறார்கள். கடன் வேண்டுமானால் இவைகளிலேயே வாங்குகிறார்கள்.

இந்த அதிசயமான ஜனங்களுடைய ஐக்கியசக்தி இத்துடன் நிற்கவில்லை. விவசாயத்துக்குவேண்டிய கருவிகளையும் மாடுமுதலிய மிருகங்களையும் வெளித்தேசங்களிலிருந்து மொத்தமாய் வாங்கிச் சில்லரையாய்விற்கச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. பெரிய சங்கமொன்றும் அவ்விடங்களில் சிறிய சங்கங்கள்பலவும் ஒவ்வொரு சங்கமுமாகப் பெரியசங்கம் வாங்கும் சாமான்கள் கிராமத்துக்கு எட்டுகின்றன. இதில் தரகரிகளாவது சில்லரை வியாபாரிகளாவது லாபத்தைக்கொண்டுபோகிறவர்களில்லை. கொண்டவிலைக்கே விவசாயி



களுக்கு விற்கப்படுகின்றன. இப்படி வாங்கப்பட்ட சாமான்களின் மதிப்பு 1907-ம் வருஷத்தில் 25-லக்ஷம் பவுன்கொண்டது.

இவ்வளவும் செய்யும் ஜனங்கள் 25-லக்ஷத்துக்கு மேலில்லை. இவர்களே விவசாயம்செய்து இவர்களே ராஜாங்கத்தை நடத்துகிறவர்கள். லக்ஷாதிபதிகளாயும் கோடீஸ்வரராயுமிருந்து விவசாயிகளைச் சிறுமைப்படுத்துவோரில்லை. செல்வத்தை உண்டாக்குவோரும் செல்வத்தை அனுபவிப்போரும் விவசாயிகளே. இவர்களுக்குச்செல்வத்தில் பேராசையுமில்லை. அயலார் சொத்தை அடிபிடியாய்ப்பிடுங்கிக் கட்டிக்கொண்டு பெரியமிராசுதார்களாக வேண்டுமென்ற ஆசையில்லை. ஜமீந்தார்களும் இவர்களிலில்லை. மிதமான சொத்துள்ளவர்களாய்த் தங்கள் சொத்தைக் காத்து விருத்திசெய்வதில் சகல சக்திகளையும் பிரயோகித்து மிதமான சுகங்களில் திருப்திகொண்டு குறையின்றி வாழ்கிறார்கள். ராஜாங்கமும் ஜனங்களும ஒன்று என்பதை இந்த டென்மார்க்கிலேயே காணலாம்.

சுதேசமித்திரன்.

---

௨

# சிறுவர்க்குரிய உபந்நியாசங்கள்.

(முற்றொடர்ச்சி.)

என்னுடைய ஸஹோதரர்கள் யாண்டிருந்தாராயினும் சரியே! அவ்வுலகம் இன்பத்தையளிப்பதானாலும் துன்பத்தையளிப்பதானாலும் சரியே! ஆண்டே என்மனம்பூர்த்தியாய்வசிக்க உடன்பட்டேன்; அத்தகைய விடமில்லாமல் வேறெங்கும் யானேகப்பிரியப்பட்டேனில்லை' என்று யுதிஷ்டிரன் மனமுவந்து கூறினார். கடவுளர்கள் மீண்டும் யுதிஷ்டிரரை நோக்கி நீவிர் ஈண்டேயிருத்தல்வேண்டும் என்று அநேகவிதமான ஸமாதானமுறைகளாற் சொல்லித்தங்களால் கூடியமட்டும் முயன்றார்கள்; ஆனால், அவ்வாறு ஆண்டு இருக்கப்

பிரியப்பட்டாரில்லை; "எவ்விடத்தில் என்னுடைய ஸகோதரர்களும் திரௌபதியும் போய் இருக்கின்றார்களோ அவ்விடத்தேதான் யானிருக்கமனமுடையேன்" என்று அவர் கூறினார்.

பின்னர், ஓர் ஸ்வர்க்கதேவதூதன் தோன்றி, ஜோதிமயமான அழகிய பொன்னுலகமாகிய ஸ்வர்க்கத்தைவிட்டு, அந்தகாரம் நிறைந்து மூடியிருக்கிற ஒரு லகத்திற்கு யுதிஷ்டிரரை அழைத்துச் சென்றான். பறவைகளும் பூச்சிகளும் பறந்து இவர்களைத்தொடர்ந்து இவரை அலைகளாய்ப் பயங்கரமாய்ப் பற்றிக்கொண்டன. அவ்வுலகம் வலிமையாயிருந்ததோடு முழுதும் கல்மயமாயும், முள்மயமாயுமிருந்தது.

பின், "இவ்விடம் யாது? நான் இங்குவந்தவரலாறென்னை? என்னுடைய ஸஹோதரர்கள் இங்கிருக்கமாட்டார்களே! என யுதிஷ்டிரர் தேவதூதனை வினவினார்; வினவலும், தேவதூதன் நின்று, கடவுளர்கள் இவ்விடம் வரையில்தான் என்னை வருமாறு கூறினார்கள்; உமக்கிளைப்பாக விருக்குமாகில், ஓ மன்னர் மன்ன! நீவிர் என்னுடன் திரும்பிவரலாம் என்றான். யுதிஷ்டிரர் மிகுதியும் விசனமுற்று, இத்தகைய கொடிய நரகில் தம்முடைய ஸஹோதரர் முதலியோர் இருக்கமாட்டார்களென நினைத்து, அப்புறம்திரும்ப நினைத்தலும் ஓ! அரசனே சிறிது நேரம் இங்கு தங்குவாயாக. ஓ பரதா! நின்னுடையவருகை எமக்கு மிகுதியும் ஸந்தோஷமுண்டாக்குகின்றது; ஆதலின் நீவிர் இங்குசற்று நில்லுங்கள். என்றோர் பரிதாபமான குரல் எழும்பியதை யுதிஷ்டிரர் கேட்டார். நாலாபக்கத்திலுமிருந்தும் இத்தகைய பரிதாபமான குரலைக்கேட்டலும், கருணாகரமூர்த்தியான யுதிஷ்டிரர் அசைவற்று நின்றார். இக்குரல்கள் அவருக்குமிகுதியும் பழக்கமுள்ளனபோற் காணப்பட்டு "நீவிர்யார்? நீவிர் இங்குவந்தவரலாறென்னை" எனக்கேட்டார். நான் கர்ணன், நான் பீஷ்மன், நான் அர்ஜுனன், நான் நகுலன், நான் திரௌபதி என்று நாலாபக்கத்திலுமிருந்தும் பரிதாபமான குரல்கள் எழும்பின. யுதிஷ்டிரர், தன்னுடன் வந்த ஸ்வர்க்க தேவதூதனைப் பார்த்து வெருண்டு "நீ எவருடைய தூதனோ, அவரிடம்மீண்டுச் செல்வாயாக; அவர்களிருக்குமிடத்திற்கு யான்வருதற்கில்லையென்று அவர்களுக்குரை; என்னுடைய இந்த ஸகோதரர்கள் இருக்குமிடத்தி



லேயே யான் உடனிருந்து அவர்களுக்கு ஆறுதலுண்டாகுமாறு செய்யும் மனமுடையேன்" என்று கூறினார். அவர் திரும்பி அந்தகாரத்திலைப் பார்த்தார்.

பின்னர், ஓர் ஆச்சர்யகரமான மாறுதலுண்டாயிற்று; ஜோதிமயமான பிரகாசமொன்றுண்டாகி, அந்தகாரமும் திடீரெனமறைந்தது.

கோரமான காட்சிகளும் ஸஹிக்கக்கூடாத துர்நாற்றங்களும் அங்கு இல்லனவாயின. மனோகரமான ஸுகந்த வாஸங்களும், மெல்லியதான தென்றற்காற்றுகளும் கலந்துவீசியடிப்பதாயிற்று. கற்கள் முட்கள்மயமாயிருந்த பாதை மெல்லியமெத்தென்ற புஷ்பங்கள் நிறைந்த அழகியபாதையாக மாறிற்று.

கடவுளர்கள் அவரைச்சுற்றிமொய்த்து நின்றார்கள். தன்னுடைய ஸஹோதரர்களும் திரௌபதியும் அப்பயங்கரமான நரகத்தில் வந்தவரலாற்றினைப்பற்றி அவர்கடவுளர்களைக் கேட்டலும், "கொடுவினைகளைச்செய்த மனிதர் பலரோடும் அவரிறந்தபிறகு சற்றுநேரம் இக்கொடிய நரகத்திற்கொண்டுய்க்கப்பட்டு வருந்துவார்கள்; நீ அநுபவிக்கவேண்டியதும் தீர்ந்தது; அந்தகாரமே நிறைந்த இக்கொடிய நரகத்தில் உன்னுடைய ஸஹோதரர்களுடன் நீயும் தங்கியிருக்கக்கூடும்; இப்போது ஸந்தோஷமாயிரு; உண்மையில் உன்னுடைய ஸஹோதரர்கள் இங்கு இருக்கின்றார்களில்லை; ஆனால் இவ்வளவுநேர்ந்ததும் உன்னுடைய பொறுமையையும் பிறவற்றையும் பரீக்ஷிப்பதற்காகச் செய்யப்பட்டது; நேர்ந்தவையாவும் கனவேயென்றறி என்றார்கள். யுதிஷ்டிரனும் கடவுளர்களோடு ஸ்வர்க்கலோகம் புக்கான். இறப்பு, பாவம் என்னுமிரண்டினைக்காட்டிலும் நேசமே மேன்மையானது. இவ்விதமாகத்தான் இந்தஸஹோதரர்கள் மண்ணுலகில் நேசப்பான்மையுற்றிருந்தனர்; இந்நேசமே மண்ணுலகுநீத்துப் பொன்னுலகு சென்றவர்களையும் என்றும் ஸந்தோஷத்தையும் ஸுகத்தையும் அநுபவிக்கும்படியான ஸ்வர்க்கத்தில் ஒருசேரக்கொண்டுசேர்த்தது.

தினந்தோறும் மண்பதைகள்செய்யு மெக்காரியங்களும் நன்கு செய்யப்படட்டும்; இரவில் நீவிர் அமைதியாயிருந்து இளைப்பாறுங்

ள். நீவிர் இளமையிற் செய்யும் நற்காரியங்கள் பலவும் முதுமையிற் சுகமாய்க் காலங்கழிப்பதற்குதவியாயிருக்கும். ஆதலின் உம்முடைய நற்காரியங்களாற் கண்டிப்பாய் விண்ணுலக இன்பம் கிடைக்குமென்று நினைத்தாலும், உம் வாணாளை வீணாக்கிப் பாழாக்காதீர் என்று மஹாபாரதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

## ௧௨. கணவனும் மனைவியும்.

நீங்கள் குழந்தையாயிருக்கும்போது ஸஹோதர ஸஹோதரி வாஞ்சையை நன்கு உணர்கின்றீர்கள்! உண்மையில் இவ்வித வாஞ்சை மிக்க இனிமையேபயப்பது. ஆனால் நீங்கள் வயதில்முதிர்ந்து பெரியவராம்போது, உங்கள் எல்லாரிடத்தும், கணவன் என்றும மனைவியென்றுமான காதல்கள் மிகுகின்றன. மனைவியும் கணவனும் ஒருவரே என்று மநுதர்மசாஸ்திரி கூறுகின்றார். அவர்கள் தங்களுக்கு வந்த துக்கத்திலும் ஸந்தோஷத்திலும் ஒரேவிதமான பாத்யதையுடையவர்களேயாவர். கணவன் எவ்விதத்திலாவது துக்கமடைந்தால் அவ்விஷயத்தையுன்னி மனைவிமிகுதியும் வருத்தமுறுவாள். மண்ணுலகில் ஸந்தோஷம் வந்தாலும் துக்கம்வந்தாலும் சேர்ந்து அநுபவிக்கவேண்டியவர்களும் அவர்களேயாம். அவர்களுக்குள் நிலைத்திருக்கும் உள்ளன்பும் விசுவாஸமும், காதலுமே அவர்களைக் கணவன் மனைவிகளாக்குகின்றன.

கணவன் மனைவிமார் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் எவ்விதமாய்க் காதல் என்னும் பாசத்தினாற் பிணிப்புண்டிருந்தனர் என்பதைப்பற்றிக் கூறும் சரிதைகள் எண்ணிறந்தனவுள. ஸ்ரீராமசந்திரன், ஸீதாதேவி என்னும் அரசிளங்குமரனும், அவனது ராணியும் வெகுகாலம் தங்கள் தந்தையினுடைய ராஜ்யத்தில் வெகு ஸுகமாய் வாழ்ந்துவாராநின்றனர். ஸ்ரீராமச்சந்திரன் நாட்டிலிருந்து காட்டிற்குச்சென்று வனவாஸம்செய்யவேண்டுமென்று ஆஜ்ஞாபிக்கப்பட்டபொழுது, ஸீதாதேவிவேண்டினது, தன்கணவனுடன் வனத்திற்குச்சென்று அங்குவஸிக்கவேண்டும் வரத்தைக்கொடுக்க வேண்டுமென்று மட்டுமே விரும்பினள்.



ஸ்ரீராமசந்திரரோ, ஸீதாதேவியின் பூப்போன்ற மெல்லிய மேனி வனவாஸத்தினால் மிகுதியும்வாடி தேகக்கட்டுக்குலையுமென்றஞ்சி, தன்னுடைய தகப்பனாரண்மையில் ஆறுதலடைந்து, தான் திரும்பிவரும்வரையில் இருத்தல்வேண்டுமென்று மிகுதியும் வேண்டிக்கொள்வதானான். இதைக்கேட்டவுடன் ஸீதாதேவி மிகுதியும் துக்கிப்பதானாள். ஆனால் காட்டிற்குடன்வர அநுமதிபெற்றபிறகு அவளது ஸந்தோஷத்திற்குக் கங்குகரையில்லாதாயிற்று.

வனவாசத்தில் வலியுள்ள ராவணன் என்னும் பெரிய அரக்கனால் ஸீதாதேவி சிறைதூக்கிப் போகப்பட்டனள்; ராமரும் அவளை அங்குமிங்கும் போனவிடம்தெரியாது இராப்பகல் ஓயாது தேடுகின்றார். அவளைத்தேடுவதில் அவர் அலுத்தாரிலர்; ஒன்றியாய் இராவணனது பயங்கரமான சிறைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள ஸீதாதேவியோ ஆங்கும் ஸ்ரீராமரிடத்து உண்மையான பக்திபூண்டிருந்தாள். எவ்வளவு செல்வத்தினாலும் பிறவற்றினாலும் என்னை நீ மயக்கமுடியாது, எவ்வாறு ஸூர்யனது கிரணங்கள் அவனுக்கேயுரியனவோ அவ்வாறே நான் ஸ்ரீராகவமூர்த்திக்கே உரியேன் என்று ஸீதை கூறினாள். சாவித்திரியின் அழகிய கதையினால் மனைவியின் கணவன்மேலுள்ள மிகுந்த காதலின் தன்மையை நாம் நன்கு அறிகிறோம்.

ஒருகாலத்தில் அச்வபதி என்னுமோர் அரசன் இருந்தான். அவன் நல்லவனும், தூய்மையுடையவனும், முன்யோசனைக்காரனும், பிழைபொறுக்கும் தன்மைவாய்ந்தவனாகவுமிருந்தனன். அவன்வரவர வயதுமுதிர்ந்து, தனக்குப்பின் தன் ராஜ்யபட்டாபிஷேகத்திற்குரிய புத்திரனில்லாமையாலே மனதில்கிலேசமுற்றிருந்தான். ஆதலின் அது முதற்கொண்டு தன்வாணாளை வீணாக்காது பெருந்தவமியற்றிக் கடவுளர் அருளினால் ஒரு மகளைப்பெற்று அவளுக்குச் சாவித்திரி யென்னும் பெயருமிட்டான். சாவித்ரி மென்மைத்தன்மை வாய்ந்தவளும் சற்குணவதியும் தயாளசீலையும், விவேகியுமாய் பொன்னினாற்செய்த சித்ரப்பதுமைபோன்று அழகிற் சிறந்திருந்தாள். தேவதையே, பூர்வபுண்ணிய பூஜாபலத்தினால் தங்களைப்பார்க்க அவதரித்த தேவதையேயென்று ஜனங்கள் நினைத்தார்கள்.

ஒருநாள் அவளுடைய தந்தை அவள் கன்னிப்பருவங் கடந்தமைகண்டு, "பாவாய்! உனக்குற்றகணவனைத் தேடித்தெரிந்துகொள்" என்று கூறினான். அவள் செல்லுமிடமெல்லாம் அவளைத்தொடர்ந்து செல்லுவீராகவென்று அவளுடைய தோழிகளுக்குங் கட்டளையிட்டான். அம்மெல்லியலும் தன்னுடைய தகப்பனார்க்குத் தலைவணங்கி வந்தனைகள்செய்து, அவளுடைய தந்தை கட்டளைப்படி செய்ய உலகத்திலே உலவுவாளாயினாள். ராஜ்யத்திலுள்ள அறிவிற்சிறந்த பெரியோரும் பின்தொடரத், தன்னுடைய அண்மையிலும் சேய்மையிலுமுள்ள மஹத்தான ருஷியாச்ரமங்களுக்குச் சென்றாள்.

கடைசியில் அவள் தன்னுடைய தந்தையின் மாளிகைவந்து சேர்வதானாள். நாரதமஹரிஷி தன்னுடைய தந்தைபக்கலில் வீற்றிருப்பதை நோக்கி அவள் அவருக்குந் தந்தைக்குந் தலைவணங்கி வந்தனைவழிபாடுகளியற்றி, தான் தனக்கென்று தேர்ந்து மனதில் நியமித்துவந்த கணவனைப்பற்றிக் கூறினாள். சாலவதேசத்திலே சாலவர்களுக்கு அரசனாய்ச்செங்கோல் செலுத்திய த்யுமற்சேனனென்னும் நல்லரசன் ஒருவனுண்டு; நரைதிரை மூதிர்ந்து நயனவொளிகெட அவர் சத்துருக்கள் சண்டையிட்டு வலிமையுடையாராய அவரையவரது ராஜ்யத்தினின்றுந் துரத்திவிட்டார்கள். அன்னவர் துறவுபூண்டு தம்முடைய மனைவியுடனுஞ் ஸத்தியவான் என்னும் பெயரிய ஒரு இளங்குமாரனுடனுங் காட்டில் வெகுகாலமாக வசித்து, வாராநின்றனர். யான், இவ்விளங்குமரனை, என்னின்னுயிர் மணவாளனாக மனப்பூர்வமாக நினைத்து, அவரையே எனது ஒப்பற்ற தலைவனாக மனதால் ஒப்புக்கொண்டேன் என்றாள் ஸாவித்திரி. நாரதமுனிவர் இவற்றைச்செவிசாய்த்துக்கேட்டலும் ஐயோ! மகளே என்று ஒருவாறு வருத்தப்பட்டு, ஓ அரசனே! ஸாவித்திரிதெரியாமல் தவறுசெய்துவிட்டாள் என்று வ்யஸனமுற்றுக் கூறினார். அஃதெப்படி ஸத்யவானுக்கு ஏன் என்மகள் மணவாட்டியாகக்கூடாதென்று எனக்கு விளங்கவில்லை? ஸத்தியவான் கல்வியறிவு, தேஹவலிமை இரக்கம் தைரியம் முதலிய புருஷலக்ஷணங்களிற் குறைவுள்ளவனா? அவன் இவையெல்லாம் உடையன் என்றார் நாரதர்; நேர்மையிலும் பிரபுத்துவத்திலும் அவன் சிறந்தவனா? என்றான் அச்வபதியரசன், உண்



மையில் அவன், இவையெல்லாமுடையன்; அவன் ஸூர்யன் திடமும் ப்ரஹஸ்பதியின் ஞானமும், தேவர்களின் தைர்யமும், ஜீவப்ராணிகள் யாவற்றையும் தயவாய்ப்போஷித்து அவற்றுள் எத்தனையும் அலக்ஷ்யம் செய்யாத பூமிதேவியின் பொறுமையும் உடையன் என்றார். "அவன் எல்லா நற்குணங்களையும் உடையவனாயிருக்கின்றானே" என்மகள் அவனைமணக்க ஆக்ஷேபம்பின்னர் என்னை தான் இருக்கின்றது என்று அரசன் கேட்டான். கடைசியாக அவர் "அரசனே! ஸத்யவானுக்கு இப்பூமியில் இன்னும் பன்னிரண்டுமாத வாழ்க்கையேயுள்ளது; ஆதலின் அவன் இன்னுயிர் பன்னிரண்டாவது மாதத்தில் அவனுடலினின்றும் நீங்கி இறந்துபோவான்" என நாரதர்மொழிந்தார்.

அரசன் நாரதர் கூறிய வார்த்தைகளைக்கேட்டு வ்யாகூலம்நிறைந்து "ஓ! ஸாவித்ரீ! என் அருமைப்பெண்ணே உன்னுடைய கணவனாக வேறொருவரை வரி" என்றான். ஆனால் ஸாவித்ரி "என் உள்ளத்தை ஒருதரம் கொள்ளைகொடுத்தபின்பு அதனை மெள்ளக்கள்ளமாகக் கவர்தல் அரிது! அரிது!! மாறிமாறி இரண்டுதரம் அதனை இரண்டுபெயருக்கு அளித்தல் கூடாதாகும். ஒரு நாயகனை ஒரேதடவையில் வரித்துக்கொண்டேன். பிறனொருவனை இனி இச்சித்தல் அறநெறிக்கு வழுக்காகும். மனமும் அதற்கு ஒவ்வாது என்றாள்.

"முன்னஞ்சிலமாதர் மொழிந்திடலா
லென்னெஞ்சிலவன்றனை யெண்ணினன்வே
றின்னுங் கொழுநற்பெற வெண்ணுவனோ
மன்னுந் திருமேவிய வண்புயனே.
முன்னாக வரித்த முதற்குரிசில்
தன்னாயு விறந்திடினுந் தகைநா
டொன்னார் கொளினும்மெவனுற்றிடினும்
மென்னாயகனன்னவனென் றனளால்."

ஸாவித்ரியின் மனப்பற்றையும் உறுதியையுங்கண்ட நாரதமுனிவர் இறும்பூதடைந்தவராய் ஓ! ஸாவித்ரியே! உனக்கு சர்வமங்களாசீர்வாதமும் செய்கின்றேன்; கடவுளின் வழிகள் அதியற்புதமானவைகளாயிருக்கின்றன. எல்லாம் தெய்வசங்கற்பம்; அவனன்றி யோரணுவும் அசையாது. எல்லாம் ஊழின்படி நடந்தேறும்.

"ஆவதுவிதியெனிலனைத்துமாயிடும்
போவதுவிதியெனிலெவையும் போகுமால்
தேவருக்காயினுந் தீர்க்கத்தக்கதோ
எவருமறியொணுவீசற்கல்லதே!"

ஏ! ஸாவித்திரியே மனம் சஞ்சலப்படாதே! ஸம்பவங்கள் இருட்டும் மப்புமாயிருப்பினும் வானம்வெளுத்து மந்தாரம் நீங்கவே நீங்காது என்று சொல்லக்கூடியதுமில்லை. ஆகவே கன்னிகையே! நின் கருத்துப்படியே கார்யம் நடக்கட்டும், மேல் ஆவனவற்றிற்குக்கடவுளின் கதியே நம்புக என்றார். நாரதமகரிஷி, பின் அச்வபதிராசன் ஆசார்யருடனும், குலகுருக்கள், மந்திரி முதலாயினோருடனும் திபுமற்சேனரென்னும் வயோதிக ஸந்யாசியினிடம் அவருடைய குமாரனைத் தன் மகளுக்கு மணம்செய்விக்கக் கேட்குமாறு சென்றான்.

(இன்னும் வரும்.)

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

உ

சிவமயம்.

# நல்லொழுக்கம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

## ஏழாவது அதிகாரம்.

(முயற்சி.)

எபிக்டெட்டஸ் (Epictitus) உடைய ஞானவாக்கியங்கள் வருமாறு:—நம் பிறப்பில் நம்முயற்சிகளை நாமேதெரிந்தெடுத்துக்கொள்ளுகிறதில்லை. அவற்றினை நன்குபுரிவதில்மாத்திரம் நம்கடமையானது தங்கியிருக்கின்றது. ஓர் அதிகாரியைப்போல அடிமையானவனும் சுவாதீனமுள்ளவனு யிருக்கிறான். சுவாதீனமானது முக்கியமான தெய்வானுக்கிரகமாயிருக்கின்றது. அஃது ஏனையவனைத்தையும் மேம்



படுத்துகின்றது. அத்துடன் ஒப்பிடின் மற்றவையனைத்தும் பொருளற்றனவாகின்றன. அது உளதேல் மற்றவை யனைத்தும் அனுவசியமாகின்றன. அஃது இலதேல் ஏனையவை இருத்தல் கூடாது. மனிதர்களுடைய ஆனந்தமானது குருட்டுத்தனமாய்த் தூக்கத்துடன் அவர்கள் தேடுகிறவிடத்தில் இன்றென அவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும். அது பலத்தினாலும் அடையத்தக்கதின்று. ஏனெனின் மைரோ (Myro) வும் அப்பெல்லியஸ் (ofellius) உம் சுகிகளாயிருந்ததில்லை. செல்வத்தினாலும் அன்று. ஏனெனின், கிரீசஸ் (Croesus) சுகியாயிருக்கவில்லை. அதிகாரத்தினாலும் அன்று. ஏனெனில் கன்சல்ஸ் (Consuls) என்ற அதிகாரிகள் சுகிகளாயிருந்ததில்லை. இவையனைத்தும் ஒருங்கேபெறுவதினாலும் ஆனந்தமானது கிடைக்கமாட்டாது. ஏனெனின், நீரோ (nero) வும் சர்தானபாலஸ் (Sardanapalus) உம் அகமெம்நன் (Agamemnon) உம் பெருமூச்செறிந்து அழுது தங்கள் உரோமத்தைப்பிடுங்கி, கஷ்டநஷ்டங்களின் வயப்பட்டுத் தோற்றங்களை நம்பி மோசம்போனார்கள். அது உங்களிடத்தில் தானே இருக்கின்றது. இழிவான பயத்துக்குட்படாமல் உண்டாகிய உண்மையான சுவாதீனத்திலும், பூரணமான தன்னடக்கத்திலும், திருப்தியும் அமைதியுமான திறத்திலும் வறுமை, ஊர்விட்டோடல், பிணி; அதுமட்டோ! மரணதுன்பத்திலுங்கூட சமமாயிருத்தலிலும் அது உண்டாகின்றது.

கடமையின் உணர்ச்சியானது ஒரு தைரியசாலிக்குங்கூட ஆதாரசக்தியாயிருக்கின்றது. அது அவனை நேர்மையுடையவனுக்கிப் பலமுள்ளவனுகச் செய்கின்றது. பாம்பி (Pompy) ஆனவர் ஓர் புயற்காற்றில் ரோம் (Rome) க்குக் கப்பல் ஏறுகையில் அவருடைய இஷ்டர்கள், அவருடைய பிராணனுக்குப் பெரிய சேதம் உண்டாகுமென்று சொல்லித் தடுக்க எத்தனித்தபொழுது, "நான் போகவேண்டுவது அவசியமானது உயிருடன இருத்தல் அவசியமன்று." என்று அவர் கௌரவமாய்க் கூறினர். அவர்செய்யக் கடன்பட்ட சரியான காரியத்தை அபாயம் நேரிடினும் புயலையும் எதிர்த்துச் செய்வர்.

பெரிய உவாஷிங்டன் (Washington) பால் எதிர்பார்க்கத்தக்க வண்ணம், அவருடைய ஜன்மத்தில் முக்யமான பிரோகசக்தியானது

கடமையின் குணமாயிருந்தது. அது அவருடைய ஒழுக்கத்திற் பிரதானமும் மேலானதுமாகிய அம்சமாயிருந்து, அதற்கு ஒருப்பாட்டையும், ஸ்திரத்தையும், ஊக்கத்தையும் கொடுத்தது. அவர் தன்னுடைய கடமையைப் பரிஷ்காரமாய்க் கண்டபொழுது, அவர் அதைச் சகல அபாயங்களிலும், தளர்ச்சியற்ற சத்தியத்துடன் செய்வாராயினர். அவர் அதைப் பயன்கருதிச் செய்தவரல்லர். மகிமை, கீர்த்தி, கீர்த்தியின் வெகுமானங்களாகிய இவற்றை அவர் நினைத்ததில்லை. ஆனாற் செய்யவேண்டிய சரியான காரியத்தையும் அதனைச்செய்யுஞ் சிறந்த வழியையுந்தான் அவர் கவனிப்பாராயினர்.

ஆகிலும் உவாஷிங்டன்(Washington)ஆனவர் தன்னைப்பற்றி மிகவும் தாழ்ந்த அபிப்பிராயமுடையவராயிருந்தனர். அமெரிக்காவின் சுதேசாபிமானச் சேனையின் சேனாதிபத்யத்தை அவருக்கு நயந்து கொடுத்தபொழுது, அவரை நெருக்கிக்கட்டாயப்படுத்துமளவும் அதனை அங்கீகரிக்க ஐயப்பாடுற்றவராயினர். தன் தேசத்தின் எதிர்காலஸ்திதிக்குக் காரணமாயிருந்த இந்த முக்யமான கடமைக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட கண்யத்தை ஆலோசனைச் சபையார்முன், தான் அங்கீகரிக்கையில் உவாஷிங்டன் (Washington) சொன்னதாவது:—“ஏதேனும் துரதிருஷ்டமான சங்கதி சம்பவித்து என் கீர்த்திக்குக் கெடுதல் விளையாவண்ணம் எனக்கு இன்று கொடுத்துக் கண்யப்படுத்தியிருக்கிற உத்தியோகத்திற்குத் தகுதியுள்ளவனாக, என்னை நானே நினைத்துக்கொள்ளவில்லையென்று மிகவும் உண்மையுடன் அறிவித்துக்கொள்வதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.”

தன் சேனாதிபத்ய நியமனத்தைப்பற்றித் தன்மனைவிக்கு எழுதிய கடிதத்தில் அவர் கூறியது வருமாறு:—“உன்னையும் சம்சாரத்தையும் விட்டுப்பிரியாமை மட்டுமன்று. இவ்வுத்தியோகம் எனக்குத் தகுதிக்கு மிஞ்சினதாக உணர்ந்து அதைவிட்டு நீங்கிக்கொள்ள என்னாற் கூடியமுயற்சிசெய்து பார்த்திருக்கிறேன். வெளியேறி ஏழு வருஷம் தங்கியிருந்து வெகுதூரத்திற்குப்பின் எய்தற்பாலதாகிய இன்பத்தினும் உன்னுடன் வீட்டில் ஒருமாதம் கூடியிருந்து ஒருமாதத்தில் அதிகமான உண்மையின்பத்தை நுகருவேன். இந்த உத்



தியோகம் எனக்குக்கிடைத்தது; ஒருவகை விதிவசத்தாலாதலால் நான் இதில் தலையிடுவதானது, ஏதோ ஒரு நல்லகாரியத்தை உத்தேசித்ததாக நம்பிக்கொள்வேன். இந்த உத்தியோக நியமனத்தை மறுப்பதற்கு முற்றிலும் நான் அசக்தனாய்விட்டனன். மறுத்திருந்தால் என் யோக்யதைக்குக் கௌரதைக் குறைவுவரும்படியான மிகுதியுற்ற நிந்தைகளும் என் இஷ்டர்களுக்கு மனவருத்தமும் உண்டாயிருக்கும். இது உனக்குச் சந்தோஷமாயிருக்கவுங் கூடாது. இருக்கவும் முடியாது. சொந்த மதிப்புக்கு மிகுந்த குறைவை உண்டாக்கியிருக்கவேண்டுமென்பது உறுதி.”

உவாஷிங்டன் (Washington)முதலில் முக்கிய தளகர்த்தராகவும், அப்பால் பிரசிடெண்டு, கடமையினெறியில் தவறாமல் தன் ஜன்ம முழுதும் நேர்மையான ஒழுக்கத்தையே பின்பற்றினவராயிருந்தனர். வெகுஜனப் புகழை அவர் கவனித்ததில்லை. தன் அதிகாரத்திற்கும் சொற்சக்திக்கும் அடிக்கடி அபாயம் விளையத்தக்க நன்மையும் தீமையுமான சம்பவசமாசாரங்களினடுவே தான்கொண்ட கருத்தை விடாது பற்றுடையவராயிருந்தனர். இவ்வாறு ஒரு சமயத்தில் மிஸ்டர். ஜே (Mr. Jay) என்பவர் கிரேட் பிரிட்டன் (Great-Britain) உடன் ஒப்பந்தம் செய்த உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதில் தர்க்கம் நிகழுகையில் அதனை ஸ்திரப்படுத்தக்கூடாதென்று உவாஷிங்டன் (Washington) விசேஷமாய்க் கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஆனால் அவருடைய கண்யமும், அவர்தேசத்தின்கண்யமும் குறைவுபடத்தக்கதாயிருந்ததால் அங்ஙனஞ்செய்ய உடன்படாராயினர். அந்த உடன்படிக்கைக்கு விரோதமாகப் பெருங்கூக்குரல் உண்டாகி அவர்மீது ஜனங்கள் உள்ளவாறே கல்லெடுத்தெறியுமளவிற்கு வெகுஜன விரோதத்தையடைந்தார். அப்படியிருக்கும் அவ்வுடன்படிக்கையை ஸ்திரப்படுத்துவதே கடமையாகக் கடைப்பிடித்தனர். நாலுபக்கங்களிலுமிருந்து மனுக்கள் ஆக்ஷேபனைகள் வந்தும் அதை நிறைவேறச் செய்தனர். ஆக்ஷேபனைக்காரர்களுக்கு அவர்கொடுத்த மறுமொழி வருமாறு:—“என் தேசத்தார் பலமுறை என்னைப் புகழ்ந்ததற்காக உற்சாகத்துடன் நன்றியறிவுடையவனாயிருக்க உணர்கையில், என் மனச்சாக்ஷியின் உபதேசங்க

ளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதைவிட வேறு வகையில் அதற்குப் பாத்திரனாகமாட்டேன்."

உவாஷிங்க்டன் (Washington) ஐப்போல, உவெல்லிங்க்டன் (Wellington) உம கடமையென்பதை உபதேசமொழியாக வுடையவராயிருந்தார். அவரைவிட மற்றியாரும் அதிகமாய் அதற்கிணங்க நடந்திருக்கமுடியாது. இவ்வுலகத்தில் நாம் வசிக்க யோக்யமானது வேறொன்றுமின்று. ஆனால் நாம் அனைவரும் நேரேபோய் நம் கடமையைச் செலுத்தக்கூடும்," என்று அவர் ஒருக்காற் சொன்னார். கீழ்ப்படிந்து முழுமனதுடன் கடமையைச் செலுத்துவதைக் களிப்புடன் மேற்கொண்டவர் வேறொருவருமில்லை. ஏனென்றால் மனிதர்கள் விசுவாசத்துடன் வேலைபார்த்தாலன்றி மற்றவரைப் புத்திசாலித்தனத்துடன் ஆளுவது கூடாது. புத்திசாலிக்கு உகந்த வாக்கியமானது "நான் ஊழியஞ்செய்கிறேன என்பதும், நின்றுகொண்டு எதிர்பார்ப்பவர்தான் ஊழியஞ் செய்கிறவர்கள்" என்பதுமேயாம்.

ஓர் உத்தியோகஸ்தனை அவன் தகுதிக்குக் குறைந்ததாக நினைத்த அதிகாரத்தைச் செலுத்த நியமித்ததால் அவருக்குண்டாகிய கோபத்தைப்பற்றி, டியூக் (Dufie) பட்டம்பெற்ற உவில்லிங்க்டன் (Wellington) இடம் சொன்னபொழுது அவர் "நான் சேனையின் யுத்தகாரியங்களிற் பிரவிர்த்திக்கையில் பிரிகேட் (Brigade)சொற்ப சேனையின் ஆதிபத்தியத்திலிருந்து ரெஜிமெண்ட் (Regiment) என்னும் பெரியசேனைக்குத் தலைவனாகவும போயிருக்கிறேன. உத்திரவிற்குக் கீழ்ப்படிந்து ஒரு பெரிய சேனையின் தலைமையிலிருந்து பிரிகேட் (Brigade) என்னும் சொற்பச் சேனையை நடத்தவும் போயிருக்கிறேன், அதுவிஷயத்தில் எனக்குக்கோபமே வந்ததில்லை என்று சொன்னார்."

(தொடரும்.)

---

# சுக்ர நீதி.

[வடநூல் மொழிபெயர்ப்பு.]

பார்க்கவர் பூர்வதேவர்களால் நமஸ்காரபூர்வகமாகத்தோத்திரஞ் செய்யப்பட்டவராய் உலகத்திற்கு ஆதாரவாகவும், முத்தொழிலுக்குங்காரணமாகவுமுள்ள கடவுளைவணங்கி அந்தப்பூர்வதேவர்களைப்பார்த்து நீதிகளின் சாரமாயும், நூறு லக்ஷம் சுலோகமுள்ளதாயுமிருக்கின்ற நீதிசாஸ்திரத்தைச் சொன்னார்.

பிறகு பிரமன் உலகத்தின் நன்மையைக்கருதி நூறுலக்ஷமளவையுள்ள நீதிசாஸ்திரத்தின் சாரத்தைச் சுருக்கமாய், உலகவிருத்திக்காக வசிஷ்டர்முதலிய நம்மால் விவகார விரிவாயிருக்கும்படி அற்ப ஆயுள்களான அரசர்களுக்காக கிரியைகளின் சிலவற்றை யறிவிக்கக்கூடிய வேறுசாஸ்திரங்களிருக்கச்செய்தே, உலகவாழ்க்கையை நிலைநிறுத்தக்கூடியதாயும், உலக இருப்புக்கு ஏதுவாயும் தர்மார்த்தகாமங்களை யுண்டுபண்ணுவதோடு மோக்ஷத்தையுங்கொடுக்கக்கூடியதென்று பிரசித்தமாய் நிச்சயிக்கப்பட்டுமுள்ள நீதிசாஸ்திரத்தை யேற்படுத்தினார். ஆகையால், எப்பொழுதும் அரசன் ஊக்கத்துடன் அப்பியாசஞ் செய்யவேண்டும். அதை நன்கு அறிவதனால் அரசன் சத்துருக்களை ஜயிக்கக்கூடியவனாகவும், உலகத்தைச்சந்தோஷப் படுத்துபவனாகவும், நீதிசெலுத்துவதில் சக்தியுள்ளவனாகவு மாகிறான்.

உலகத்தில் சப்தார்த்தங்களின் நிச்சய அறிவுக்கு எப்படி வியாகரண சாத்திரப்பயிற்சி முக்கியகாரணமோ, பிராகிருத பதார்த்தங்களின் அறிவுக்கு நியாயதர்க்கங்கள் எப்படியோ, வேள்வி முதலிய வேற்பாட்டிற்கு மீமாம்சை யெவ்விதமோ, அநித்தியத்தை வேதாந்த சாஸ்திரமெப்படி யுணர்த்துகிறதோ, அவ்விதமிந்த நீதிசாஸ்திரமும் தங்கள் தங்களுடைய இஷ்டத்தை நிறைவேற்றக்கூடியது.

ஆனால், அந்தந்தச் சாஸ்திரங்களின், அறிவாற் புத்திக்குச் சாமர்த்தியமுண்டாகுமே யல்லது, அதனால் விவகாரிகளுக்குப் பயனேற்படமாட்டாது.

பின்னும், நீதிசாஸ்திராப்பியாசமில்லாமல் எப்பொழுது மெல்லாவுலக விவகார நிலைமையும் நிலைநிற்காது, எவ்வண்ணம் மனிதர்களின் சரீர இருப்பு ஆகாரமில்லாமல் நிலைக்காதோ அதுபோல. ஆனால் உலகத்தில் யாவரும், எல்லாவெண்ணங்களுக்கும் நீதிசாஸ்திரத்தை யப்பியசிக்கவேண்டியது முக்கிய கடமையாயினும், அரசன் எல்லாவற்றையுங் காப்பாற்றக் கூடியவனுகையாலும், பிரபுவாகையாலும், முக்கியமாய் அப்பியாசஞ் செய்தே தீரவேண்டும். எப்படி நோயாளி யபத்தியத்தினல் வருந்துவனே அதுபோல் அரசனும் நீதியில்லாமலிருப்பானுகில் சீக்கிரத்தில, இருந்துமில்லாதவன் போலாவான். அரசனுக்கு நல்லபிரஜைகளைக் காப்பாற்றுவதும், துஷ்டப்பிரஜைகளைச் சிக்ஷிப்பது மெப்பொழுதும் நியாயமாகவே ஏற்பட்டுள்ள தர்மம். அரசனுக்கு அநீதியே எப்பொழுதும் பயத்தைக் கொடுக்கக்கூடியது, சத்துருக்களை விருத்திசெய்யக் கூடியது.

தன் சைன்னியங்கள் மிகவுந் துன்பத்தை யுண்டுபண்ணவுஞ் செய்யும். சுவதந்திரனுக ஏந்தவரசனிருக்கிறனே அவன்வருத்தத்தையனுபவிப்பான். தன்வழிச்செல்கின்ற அரசனது சேவையானது கத்தியின் தாரையிற்பழகுவதொப்பாகும். நீதிமானுன அரசன் எளிதிலாராதிக்கக்கூடியவன். அநீதியுள்ளவரசன் எப்பொழுது மாராதிக்கக் கூடியவனே யல்லன்; எந்த அரசனிடத்தில், நீதியும் பலமுமுள்ளதோ அவனிடத்தில் லக்ஷ்மியானவள் எல்லாவழியாலும் விருத்தியடைவாள். அரசன் தன்னிராஜ்யத்திலுள்ளவர்கள் தன்னலேவப்படாமலே மிகவும் நன்மையையே தனக்கு நாடக் கூடியவர்களாக எவ்விதமாவார்களோ அவ்வண்ணஞ் செங்கோல் செலுத்தக் கடவன். எந்த அரசனிடத்து அநீதி எப்பொழுது மிருக்கின்றதோ அவனுடைய பலமும் பேதமடைந்துவிடும். அவனது மந்திரி வர்க்கமும் பேதமாய்விடும். அநீதி அரசனது ஆளுகைத்திறமைக்குறைவைக் காட்டும். சாஸ்திரவறிவுடன் ஜனங்களுக்குத் திருப்தி யுண்டாகும் வண்ணம் அளிப்பவனுகி முன்ஜன்மத்திற் செய்த தவத்தினுலிப்பூமியைக் கைக்கொள்ளுகிறன்.

காலமானது ஒழுக்கக்குறைவினல், மழை, குளிர், உஷ்ணமிவைகளின் வேறுபாட்டை யுண்டுபண்ணுகிறது.



இஷ்டம், அநிஷ்டம், அதிகம், குறைவு இவைகளின் ஆசாரங்களாற் காலம் வேறுபாடு அடைகிறது. அரசன் ஒழுக்கத்தினலேயே யேவக்கூடியவனுயிருக்கிறன். ஒழுக்கமே காலத்துக்குக்காரணம்.

அரசனுடைய தண்டனைக்குப்பயந்து உலகமானது தன்னுடைய தர்மத்திலொழுகுகின்றது. இவ்வுலகத்தில், எந்த அரசன் தன் தர்மத்தைச் சரியாய் நடத்துவதிலூக்கமுடையவனே அவனே தேஜோவானுக ஆகின்றன். அரசனுக்குத்தன் தர்மாநுஷ்டானமின்மையாற் சுகமுண்டாவதில்லை. அவனுக்குத்தன்னுடைய தர்மாநுஷ்டானமே முக்கியமான தபசு. எந்த அரசன் துஷ்டநிக்ரஹ, சிஷ்டபரிபாலன ரூபமான தன் தர்மத்தை விருத்திசெய்கிறனே அந்த அரசனுக்குத் தேவர்களும் வேலைக்காரர்களாக ஆகின்றனர்கள். ஆகையால், மனிதர்கள் பூமியில் வேலைக்காரர்களென்பதற்கோ ஐயமேயில்லை. தர்மத்தினின்றும் வழுவாதஅரசன் பிரஜைகளைப் பயத்தினின்றுங் காப்பாற்றுகின்றன். சுவதர்மத்திலூக்கமுடையவரசனே, தேஜஸ்ஸைக் கிருப்பிடமாகிறன்.

அரசன் பட்டாபிஷேகஞ்செய்யப்பட்டவனுனுலுஞ்சரியே, அல்லது செய்யப்படாதவனுனுலுஞ்சரியே, அரசனுகவிருக்குந்தன்மையை யடைந்துவிடும் பக்ஷத்தில், தன்னுடைய புத்தியினுலும், பலத்தினுலுஞ், சூரத்தனத்தினுலும், நீதியாலுமெல்லாப் பிரஜைகளையுந் தினந்தோறுமெப்பொழுதும், கண்டகராகவிடைவிடாது பாலனஞ் செய்யக்கடவன். எப்பொழுதும் புத்திசாலியான வரசனுக்கு, அற்பப்பொருளிருந்தாலும் அதுவிருத்தியாகும். அவனுக்குச்சூரத்தனத்தினுலும், நீதியினுலும், பலத்தினுலும், தனங்களாலும், திரியங்குக்களும் சுவாதீனமாகின்றன. சாத்விகமென்றும், ராஜஸமென்றும், தாமஸமென்று மூன்றுவிதமான தபசுள்ளது. அதில், எவ்விதமான தவத்தையரசன் செய்கின்றனே, அவ்விதமானபலனை யடைகின்றன். எந்தவரசன் தன்னுடைய தர்மத்திலேயே ஊக்கமுடையவனே, பிரஜைகளைச்சரியாய்க் காப்பாற்றுகிறவனே, யாகசீலனே, எல்லாவேள்விகளையும்நடத்திவைக்கின்றவனே, சத்துருகணங்களைத்தனக்கு வசமாக்குபவனே, கொடைவள்ளலோ, பொறுமையுடையவ

னே, சூரனே, பேராவலற்றவனே, விஷயங்களில் விரக்தனே, சாத்விகனே, அரசன் பூமியைச்சரியாய் ஆண்டு கடைசியில் மோக்ஷத்தை யடைவன்.

எந்தவரசனிரக்கமற்றவனே, கொழுப்புடையவனே, சூடிகாரனே, துன்பப்படுத்துகிறவனே, சத்தியமில்லாதவனே, டம்பமுடையவனே, பேராசையுடையவனே, விஷயப்பற்றுள்ளவனே, வஞ்சனையுள்ளவனே, மறைவாய்க்கெடுதி செய்பவனே, மனதிலொன்றும் வாக்கிலொன்றுஞ் செய்கையிலொன்றுமாய்க்காட்டுகிறவனே, கலகஞ்செய்வதிற் பிரியமுள்ளவனே, நீசரிடத்தன்புவைக்கின்றவனே, தான் நினைத்தபடிசெய்கிறவனே, நீதியற்றவனே, காரியமத்தியிற் கபடத்தைக் காட்டுபவனே, விபரீதனே, தாமஸகுணமுள்ளவனே அப்படிப்பட்ட இழிந்தவரசன்முடிவில் திரியக்காயிருக்குந்தன்மையையுந் தாவரமாயிருக்குந் தன்மையையுமடைவான்.

சாத்விகனான வரசன் தேவாம்சங்களை யநுபவிக்கிறான். தாமஸனான வரசன் அரக்கர்களின் அம்சத்தை யநுபவிக்கிறான். ராஜஸகுணமுடையவன் மானவாம்சத்தை யநுபவிக்கின்றான். ஆகையால், சத்துவகுணத்திலேயே மனதைத் தரித்திருக்கச்செய்யவேண்டும். சத்துவகுணத்தைத் தமோகுணத்தோடு, ஒப்பிடுவதால் மானிடப்பிறவியுண்டாகின்றது. மனிதனெந்தக்குணத்தைக் கைக்கொள்ளுகிறானே, அந்தக்குணத்திற்குத் தக்கபடி தெய்வத்தினாலேற்படுத்தப்படுகிறான். இவ்விஷயத்தில் நல்லகதியையுங், கெட்டகதியையுமுத்தேசித்துக் கர்மமுங்காரணமாக ஆகின்றது. ஒருவன் சாதியினாற் பிராமணனென்றும், க்ஷத்திரியனென்றும், வைசியனென்றும், சூத்திரனென்றும் இல்லை. குணத்தினாலும் தொழிலினாலுமே ஆகின்றான். எல்லாரும் பிரமனிடத்து நின்றும் பிறந்தவர்களேயல்லது வேறில்லை. ஒருவனுக்குப் பிராமணத்தன்மை பிராமணஜாதியிற் பிறந்தமையினாலே மட்டுமுண்டாவதில்லை.

ஞானகர்மோபாசனைகளாலும், தேவதாராதனங்களாலும், அந்தரிந்திரியங்களையும், பாகியேந்திரியங்களையும் அடக்கியிரக்கமுடையவனாய், எவனாகின்றானே அவன் குணகர்மங்களாலேயே பிராமணனாகின்றான்.



எவன் லோகாக்ஷணத்திலூக்கமுள்ளவனாகவும், ராஜ்ஜியத்தை வகிக்குஞ் சக்தியுள்ளவனாகவும், பொறுமையுடையவனாகவும், பராக்கிரமமுடையவனாகவும், துஷ்டர்களையடக்கி யாளுபவனாகவுமிருக்கின்றானே அவனே க்ஷத்திரியனென்று சொல்லப்படுவான்.

எவர்கள் கொள்முதல்செய்து விற்பதிலும், பசுக்களைக்காப்பாற்றுவதிலும், உழவுதொழில் செய்வதிலும் ஊக்கமுடையவர்களோ, பூமியிலவர்கள் வைசியர்களென்று சொல்லப்படுகிறார்கள்.

(இன்னும் வரும்.)

வி. ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

உ

சிவமயம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

## கலிக்கம்பநாயனார் புராணம்.

(க.) மேலைத்திசையிலுள்ள பெண்ணாகடம் என்னும் பழையவூர் உரிமையான ஒழுக்கத்தினின்ற உயர்ந்த பழைய மரபில்மிகும் மனைவாழ்க்கையால் வாழுங்குடிகள் தழைத்துவளரும் தன்மையதாய் வருகின்ற முகில்படியும் மலையையுடைய சோலைப்பக்கத்தே சூழ்ந்த வளத்தையுடைய புறவினது பெருமையை உலகுபெறவிளக்கும்.

(உ.) அற்றைக்கு - மறுமைக்கு.

## கலியநாயனார் புராணம்.

(௩.) சாணைதீராத வெயிலணி பன்மணிமுதலானவற்றை விளங்கச் செய்கின்ற தைலவினை.

(சு.) பலகோடிவெல்லையபுற்டைய தனத்து.

(எ.) உயர்த்தப்படும் வினைச்செயலொழிந்து பூமியிலவருடைய இருவினையைப்போல மாட்சிமைத்தாக அழிந்தது.

(அ.) வருமின்ற மரபிலுள்ளோரிடத்தே எண்ணெயையாதிக் கொணர்ந்தும்.

(கூ.) வட்டமாகிய எந்திரத்தை ஆட்டும் இடத்தில்.

(க0.) செக்குநிறைய எள்ளைவிட்டு ஆட்டிப்பக்குவத்தையறிந்து எண்ணெய்ப்பக்கத்தே எழும்படி மிகவருந்தியும், சுற்றிவரும் எருத்தைச்செலுத்தியும்.

(கக.) உவமையில்லாத வீட்டிலுள்ள விற்று எரித்தற்குரிய மிக்கபொருளும் முடிந்தபின்.

(கஉ.) திருவிளக்குப்பணிவழுவக் கனவிலும் முன் அறியாதவர்.

(கங.) படம்பக்கநாயகர் - திருவொற்றியூரிலிருந்தருளுஞ்சுவாமி பெயர்.

(கச.) எண்ணெய்க்கு உடலா - எண்ணெய்க்குமாறாக. உடலல் - மாறுபடல். பிரதியாக என்பது கருத்து.

## சத்திநாயனார் புராணம்.

(க.) களமர் - உழவர். கோலொன்றில் - ஒரு செங்கோலால்.

(ங.) வலித்து - இழுத்து.

## ஐயடிகள் காடவர்கோனாயனார் புராணம்.

(உ.) சேணிலம் - தூரதேயம்.

(ங.) அரசரும்பணிசெய்ய, வடநூல், தமிழ்நூல், முதலாங் கலைஞானங்கள்பணிசெய்ய.



(அ.) மனத்தில் ஒரு நடுக்கமில்லேம், உலகமீடேற இருண்ட திருக்கண்டத்தையுடைய திருமுதுகுன்றர் தந்தபொன்னை ஆற்றிலே இட்டு.

## கணம்புல்லநாயனார் புராணம்.

(உ.) அந்நகரில் அந்தணருக்கு அதிபராய் அளவிறந்த.

(ரு.) காயமுயற்சியில் - சரீரமுயற்சியில்.

(சு.) அரிந்த அப்புல்லினைமாட்டி அழகியவிளக்காக எரிப்பார்.

## காரிநாயனார் புராணம்.

(க.) பிராமணர்கள் வதிகின்ற திருக்கடவூரில் வந்தவதரித்து அழகியதமிழ்த்துறையானவற்றைப் பழகிச்சொல்விளங்கிப்பொருள் மறையக் குறையாத்தமிழ்க்கோவையை (காரிக்கோவையை) தம்பெயரால் குலவும்படி முறையால்தொகுத்து உண்டாக்கி.

## நின்றசீர் நெடுமாறநாயனார் புராணம்.

(க.) தருமாறம்வழியைத் தவமொன்று கருதித் தம்முடம்பை வாட்டி ஒழுகும் அவர்வலையிலகப்பட்டு.

(உ.) சொல்லப்படும் வழியைப்பாதுகாத்து இந்திரனிடத்துக் கொண்டபொன்னாரத்தை அணிந்த அழகிய மார்பையுடைய பாண்டியனார் பொலிகின்றார்.

(ங.) பொருந்திய அரசனிப்பாரிடத்தே யுத்தத்தை விரும்பி வந்தெதிர்த்த தூரதேயத்துப் பகைவரசரெதிரே திருநெல்வேலியிலுள்ள யுத்தகளத்து.

(௪.) படைபெற்று மாறுபட்டபோர்முனையில் இருசைவிப க்களிலும் பொருகின்ற படைஞர்கொன்ற நெடியயானைத்துண்ட மும் பாய்கின்ற குதிரையினற்றுண்டையும் எதிர்த்துப்போர்செய்கி ன்ற வீரருடைய கரியதலைமயிலும்சேர்த்த அலையைப்புடைய இரத்த வெள்ளம் மடுத்தகடலானது முன் ஹக்கிரகுமாரரால்வேல்வாங்கிய தேயன்றி பின்னரும் வேல்வாங்குமாறுபெருக.

(௫.) வெற்றியையுடைய குதிரையின் களிப்பொலியும் வீரரு டைய படைக்கலஒலியும் மிகக்கின்ற உகமுடிவுகாலத்தை மேகமுழக் கைப்போல மூள வெற்றிபொருந்திய தொடரையுடைய விலங்கை யும் இன்றைக்குத்தாமம் வைக்குமாறு தயங்க.

(௬). முன்பருவத்தே பணிகொண்ட பூதங்களுக்குணவளித் ததேயன்றிப் பின்பேய்களும் இரத்தமடுவிலே குளித்து நிணத்தைத் தய்த்துக் கூத்தாடிப்பேயும் அரியபணியைச்செய்ய உணவை அளி த்ததென விளங்க.

## வாயிலார்நாயனார்புராணம்.

(௧). நூல் விளங்குகின்ற.

(௨). நெடிய சமுத்திரமானது தன்பாட்டுள்ள திரவியத்தை வைக்கத்தேடப்படும் பெரிய பண்டாரமென்று ஆடுகின்ற பொலி வாகிய கொடிகட்டிய மாளிகையையுடைய அப்பதியில் திரவியத்தை மரக்கலமாகிய செப்பினால் தள்ளும.

(௩.) ஒலிக்கின்ற தெளிந்த திரையையுடைய கானலின் பரப் பெல்லாந் தோணிசொரிந்த யானையின் கரியகன்றும் முத்தனை யுங்கடலிற்படிந்தமிழ்கின்ற மேகமும் தன்மையைச் சொல்கின்ற எருமையினல்லதாரும், வேற்றுமை தெரிக்கமுடியா.

(௪). வெண்மையான மாளிகைகளின் சாலைகளில் தங்கியிருக் கின்ற.

(௫). வீதியிடங்களிலெல்லாம் திருவிழாவினலங்காரம், பெண் களுடைய கூந்தலினெல்லாம் காளையர்களுடைய தாரகச் செல்



கின்ற வண்டின்வரிசைகளாம் சுண்ணச்சாந்தால லங்கரிக்கப்பட்ட மாடங்களிலெல்லாம் ஒழியாத அணிவிதிகளாம்.

(௭.) வாயிலாரென்று, பெருமைமிக்க.

## முனையடுவார்நாயனார் புராணம்.

---

(௩.) ஆற்றும்பரிசு - மனமியையும்படி.

## கழற்சிங்கநாயனார் புராணம்.

---

(௧.) பல்லவர்குலமெனினுங் காடவர்குலமெனினும் பொருந் தும்.

(௨.) காடானது தருமவழியிலே தங்க.

(௩.) சிவபுரி - சிவலோகம்.

(௪.) மலர்திருமுற்றம் - புஷ்பமண்டபம்.

## வெள்ளானைச் சருக்கம்.

---

(௧.) இத்திருத்தொண்டர் பெரியபுராணத்துக்கு முதனூலா யுள்ள திருத்தொண்டத்தொகைக்கு முதல்வராய் இந்நிலவுலகமுய் யத் திருவவதாரஞ்செய்தருளிய நம்பியாகிய தம்பிரான்றோழர் உதய காலத்துச் செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய சேரமான் பெருமாளோடு ஒருசேர.

(௨.) சுந்தமூர்த்தி நாயனருடைய செம்பொன்மேனியானது உலகில் மிகுந்த பத்தியாகிய வேரைக்கொண்டு, அன்பாகிய நீர்ப்பரு த்துவளர்ந்து வடிவையுடைய அழகாக மிக்கொடிய இருவினையா கிய களைகள் கட்டப்பட்டு எழுந்து கதிர்களைப்பரப்பி அழியாத சிவ போகமும் முதிர்ந்து முறைவிளைந்தது.

(ஈ.) தெய்வப்பெருமான் - விநிவிடங்கப்பெருமான்.

(ச.) முல்லைச்செடிகள் செறிந்த கொல்லையில்மான்.

(கரு.) முன்னாளிலே முதலையாயிற்புக்க புதல்வன் முன்போல வரமீட்டு. பொன்னூர்கிழி - பொன்முடிச்சு. பொழிந்தளித்தல் - அள்ளிக்கொடுத்தல்.

(கக.) மலையாளதேசத் தெல்லையினுட் புகுத. மேருகிரியிற் புலிக்கொடியை நாட்டிய. அன்றலர்ந்த கெடுதலில்லாத பலகலைஞானங்களில் நாட்டப்பட்ட அமுதத்தையுடைய.

(உ0.) மனம் மகிழுஞ்சேரமான் பெருமாணாயனார், சுந்தரமூர்த்தி நாயனாரென்னும் இவர்கள் தங்கள் தங்களுடைய அழகிய மேனிகள் வேறுமெனினும் ஒன்றாந்தன்மையராய். உதியர் - சேரர்.

(சச.) பெரியதேவர் - நந்திதேவர். வென்றிவானவர்க் கருளிப் பாடென-ஞானவென்றியையுடைய சேரமானுக்கு உள்ளேவர அநுக்கிரகமாயிற்றென்று திருநந்திதேவர் திருவாய்மலர்ந்தருள. திருத்தொண்டர்பெரியபுராண காடின்னிய சத்தார்த்த நிரூபணம் ஒருவாறு முடிந்தது.

பெரியபுராண அரும்பதவுரை,

முற்றுப்பெற்றது.

ஜி. சதாசிவம் பிள்ளை.

---

உ

# புத்தகக்குறிப்பு.

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு:—இந்நூற்றாண்டிற் கவிஞர்பெருமானாக நம் நாட்டில் விளங்கிய பிள்ளையவர்களது அருமை பெருமைகளைக் கண்டுகேட்டுங் களிக்காத தமிழ்மக்கள் யாவர்? பிள்ளையவர்களால் இயற்றப்பெற்ற நூல்கள் சிறியவும் பெரியவுமாக எத்தனையோ வழங்குகின்றன. அவர்கள் அவ்வக்காலங்களிற் பாடிய புராணங்களிலே பல அச்சிடப்பட்டுள்ளனவாயினும், பிள்ளையவர்களது சிறு பிரபந்தங்கள் அநேகம் வெளிவந்தனவல்ல. ஸ்ரீ குமரகுருபர முனிவர், சிவப்பிரகாச முனிவர் முதலிய கவிஞர் பெருமக்களது பிரபந்தங்கள் ஒன்றாகத் திரட்டப்பட்டு வெளிவந்திருத்தல் போலவே, பிள்ளையவர்களது பிரபந்தத்திரட்டும் வெளிவருதல் விரும்பத்தக்கதன்றோ. இப்போது, அவ்விருப்பம் நிறைவேறுமாறு மேற்கூறிய தலைப்பெயருடன் பிள்ளையவர்களது அரும்பெறன் மாணாக்கர்களாய் தமிழ்நாட்டுக்குத் திலகம்போல் விளங்கும் மஹாமஹோபாத்தியாயர் பிரமஸ்ரீ வே. சாமிநாதையரவர்களால் திரட்டப்பெற்று வெளியிடப்பட்டிருத்தல், தமிழகத்துக்குப் பெருமகிழ்வளிக்கத் தக்கதென்பது திண்ணம். பிள்ளையவர்களால் அவ்வக்காலத்தில் இயற்றப்பட்ட பிரபந்தங்களிலே, பதிகங்கள் (௬) பிள்ளைத்தமிழ்கள் (௮,) கலம்பகங்கள் (௨,) உலா (௧,) அந்தாதிகள் (௧௧,) மாலைகள் (௭,) நெஞ்சுவிடுதூது (௧,) கோவை (௧.) குமரகுருபரர்சரிதம், பூர்த்தியாகாப் புராணப்பகுதிகள், சிறப்புப்பாயிரங்கள் முதலாகச் சிறுநூல்கள் நாற்பது இப்புத்தகத்தில் முறையாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் அருமை பெருமைகளைப்பற்றி பிள்ளையவர்கள் புகழ்பரவிக்கிடக்கும் தமிழகத்துக்குப் புதியதாக உரைக்கத்தக்கதொன்றுமில்லை. இப் பிரபந்தத்திரட்டை, ஐயரவர்கள், செந்தமிழ்க் கருணைவள்ளலாய்க், கல்வியறிவொழுக்கங்கள் நிரம்பி விளங்கிய-திருவாவடுதுறை யாதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களது ஞாபகசின்னமாக்கி, உருக்கமும் இனிமையும் வாய்ந்த உரிமையுரையுடன் வெளியிட்டிருக்கின்றார்கள். இத்தகைய

பிரபந்தத்திரட்டு, தமிழ்மக்களது அவாக்களு ளொன்றைப் பூர்த்தி செய்தருளிற்றலால், இதனை உபகரித்த ஐயரவர்கட்கு நம்மவர் புதுக் கடமை செலுத்தற்குரியராவர். இப்பிரபந்தத் திரட்டுப்பதிப்பு, உயர்ந்த காகிதத்தில் 724-பக்கங்கள் கொண்டு மிக அழகான கட்டிடத்துடன் சிறக்கின்றது. விலை ரூ 2—8—0.

தமிழ்ப்பேயரகராதி:—தமிழ் நாட்டில் இப்போது வழங்கும் அகராதிகளினும் பெரியதாகச் சென்னையில் சமீபத்தில் வெளியிடப்பெற்ற "தமிழ்ப்பெயரகராதி"யைக்கண்டு களிப்புற்றேம். இது, முன் வெளிப்போந்த அகராதிகளினும் அதிகச்சொற்களுடையதாயிருத்தலோடு பல 'பொருள்கட்குச் சித்திரப்படங்கள் அமைக்கப்பெற்றுந் திகழ்கின்றது." பழைய அகராதிகளிற் காணப்படும் பதங்கட்குமேல், 10341 புதியபதங்கள்" இவ்வகராதியிற் சேர்க்கப்பட்டும், உயர்ந்தகாகிதத்தில் 1720-பக்கங்களில் அமைக்கப்பெற்றும் மிகச்சிறந்த கட்டடம் வாய்க்கப்பெற்றும் மிக மிளிர்கின்றது. இவ்வகராதியின் அமைப்பை நோக்கும்போது, "ஆங்கில பதிப்புக்கள் போலத் தமிழ்நூல்கள் அழகுதக அச்சிடப்படுதல் அரிது" என்ற குறையை ஒருபடியாக இது நீக்கவல்லது என்பதும், தமிழ்மக்கள், முன்பு பெரிதும் அலங்காரந் தரக்கூடியதென்பதும் நன்கு விளங்கும். இத்தகைய சிறந்த மாதிரியில், ஓர் அகராதியைத் தமிழ்நாட்டாருக்குதவியவர் சென்னை ஸ்ரீமாந்: P. இராமநாதமுதலியாரவர்கள், B. A., M. R. A. S., இவர்கட்கு, தமிழகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளதென்பதில் ஐயமில்லை. இதன் விலை ரூ. 10. இப்புத்தகம் சென்னை ஹிக்கின்பாதம் கம்பெனியிலும் பிறவிடங்களிலும் பெறத்தக்கது.

ஸ்ரீ இராமாயண வினாவிடை:—சென்னையைச்சார்ந்த மைலாப்பூர் ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரால் வெளிப்படுத்தப்பட்ட ஸ்ரீ இராமாயணவினாவிடையின் மூன்றாம்பதிப்புப் பிரதியொன்று எமது பார்வைக்கு வந்துளது. இந்நூல், ஸ்ரீ வான்மீகிபகவான் அருளிச்செய்த இராமாயணம் ஸப்தகாண்டங்களையும் பாலர்களும் பிறர்களும் எளிதினறிந்துய்யுமாறு வினாவிடை ரூபமாக மைலாப்பூர் S. P. G. ஹைஸ்கூல் முதலுதவிப்போதகர் ஸ்ரீமத் ஆ. ஸி. கஸ்தூரி ரெங்கையரவர்கள் B. A. L. T., யால் எழுதப்பட்டது. நம் சிறுவர்களது நல்லொழுக்கத்தையும், பிற உயர்ந்த குணவிசேடங்களையும் பெருகச்செய்வதற்கு, ஸ்ரீ ராமசரிதத்தை அவர்கட்குப் புகட்டுவதினும் சிறந்த முயற்சி வேறு யாது? இங்ஙனஞ் செய்யும் முயற்சியில் இவ்வினாவிடையானது, அன்னோர்க்கு இராமசரிதாமிர்தத்தை ஊட்டுஞ் சிறந்த கருவியென்றே கூறலாம். ஏனெனில், சிறுவர்க்கேற்ற விதமாக ராமசரிதங்களையும் தர்மங்களையும் எளியநடையில் இந்நூல் விளக்கிச்செல்கின்றது. இப்புத்தகத்தினிடையிடையே கதா சந்தர்ப்பத்துக்கேற்ற அழகிய சித்திரபடங்கள் அமைக்கப்பெற்றிருப்பது இந்நூலின் அழகைச் சிறப்பிக்கின்றது. இவ்வாறு சிறந்த மாதிரியில் இந்நூலை எழுதி வெளியிட்டவர்களுக்கு நம்மவர் பெரிதும் நன்றியறிதற்பாலர். இதன் விலை ரூ 1.



திருநெல்வேலிப் புராணவசனம்:— இப்பெயர்கொண்ட நூல், ஸ்ரீ நெல்லையப்பக் கவிராயரவர்களால் செய்யுள்ரூபமாக முன்பு அமைக்கப்பெற்ற பெரியதொரு புராணத்தை, யாவரும் படித்துணருமாறு, நடைப்படுத்தப்பெற்றதாம். இப்புராணத்திற் கூறப்படும் சரிதங்கள் மிகப்பலவாதலால், நம்மவர் அப்பெருநூலைக்கொண்டவற்றைத் தெரிந்துகொள்வதினும் எளிதில் இவ்வசனத்தால் அறிந்துகொள்ளலாம். இப்புராணத்தின் நடை இனிமைவாய்ந்தது. இதனுடன், அச்சு கட்டட முதலியவும் நன்கமைக்கப்பட்டுள்ளன. இப்புத்தகம் மதுரை "ஸ்ரீ சிவஞானதீபசபை"க் காரியதரிசி ஸ்ரீமத்-ம. அழகர்சாமி பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றதாம்.

ஸ்ரீபகவதனுகீதை:—குருக்ஷேத்திரத்தில் நடந்தபாரதப் போரிடையிலே கண்ணபிரானால், அருச்சுனற்கு உபதேசிக்கப்பட்ட தோசாஸ்திரத்தின் அருமை பெருமைகள் ஏறக்குறைய உலகமுழுதும் நன்கறிந்தவை. அப்போரில் வெற்றிபெற்றுப் பாண்டவர் நாடாண்டு வாழுங்காலத்தில், அவருடன் மகிழ்ந்துவந்த பகவான் பின் துவாரகை செல்ல விடைபெறும்போது, அருச்சுனன், அவர் திருவடிகளை வணங்கி "பகவானே! தேவரீர் யுத்தகாலத்தில் உபதேசித்த தோத்தங்கள், அப்போது மைந்தர் முதலியோர் மரணத்தால் மறந்துபோயின. அவற்றை மற்றும் ஒருமுறை திரும்ப உபதேசித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, பகவானும் இவ்வனுகீதையை அவற்குபதே

சித்தாக, ஸ்ரீ மகாபாரதம் அசுவமேதபர்வத்துக்காணப்படுவதென்பர். இது, முப்பத்தாறு அத்தியாயங்களுடையது. இந்நூலின் விஷயங்களின்னவையென்பது, மேற்கூறிய சரித்திரமே நன்குவிளக்கும். இவ்வுயர்ந்த ஞானசாஸ்திரத்தை திருவிசைநல்லூர்-பௌராணிகர் ஸ்ரீமத்-சிங்கயநாயக்கரவர்கள் 665-விருத்தங்களாற் பாடி இப்போது வெளியிட்டிருக்கிறார்கள். இவர்கள் வாக்கு எளிதாயுள்ளமையால், யாவர்க்கும் விளங்கத்தக்கதாயிருக்கிறது. இந்நூல், சென்னை, இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-வடிவேலு செட்டியாரவர்களாற் பார்வையிடப்பெற்றது. இதன் விலை ரூ 1.

இயற்கையறிவு:—தாவரசம்பந்தமாகச் சிறுவர் தெரிந்துகொள்ளற்குரிய விஷயங்களை விளக்கும் இச்சிறுநூலை இயற்றியவர், சென்னைப்பாடசாலை லப் அஸிஸ்டண்டு இன்ஸ்பெக்டர் ஸ்ரீமத்-என். சுவாமிநாத ஐயரவர்கள். நம் சிறுவர்கள் இயற்கைச் சம்பவங்களைக் கூர்ந்து கவனிப்பது குறைவாயிருப்பதைநிவர்த்திக்கவேண்டி, "இயற்கை யறிவு சம்பந்தமாகத் தாவரநூலும் தோட்டவேலையும் எலிமெண்டரிப் பாடசாலைகளிற் கற்குமுறை" யாய, சிறுவருணருந்வகையில் இப்புத்தகம் அமைக்கப்பட்டது. இதனில், மாணாக்கர்க்கு இத்தகைய அறிவைப் புகட்டுதற்குரிய வழிகளைப் பற்பல படங்களுடன் சுருங்க விளங்க எழுதியிருப்பது, ஐயரவர்களது போதனைத்திறமையைக் குறிப்பதாம். இவர்கள் கூறுமாறு, எலிமெண்டரிப்பாடசாலை உபாத்தியாயர்கள் செய்விப்பராயின், அதனால் சிறுவரது அறிவு பெருகத்தடையில்லை. டிப்டி கலெக்டர் ஸ்ரீராவ்-தர்மரங்கராஜு அவர்கள் இந்நூலின் உபயோகத்தைப்பற்றி முகவுரையில் காரணங்காட்டி எழுதியிருப்பதே இதன் பெருமைக்குத்தக்க சாக்ஷியாம். இத்தகைய மாதிரியில் நூலெழுதி உதவிய ஐயரவர்கட்கு நம்மவர் மிகவும் கடமைப்பட்டவராவர். இதன் விலை ரூ 1. இது, சென்னை சின்னத்தம்பித் தெரு, 35-நிம்பர் குமாரசுவாமி அண்டு ஸன்ஸ்—இடம் பெறத்தக்கது.

பத்திராசிரியர்.

---

OFFICE OF THE REGI[STRAR OF BO]OKS
REGISTERED
26 SEP 1910
MADRAS.



கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-அ.] சாதாரண-ஸு ஆடிமீ. [பகுதி-கூ.

## தொல்காப்பியத்துக்கண்ட
## பழைய வழக்குகள்.

(முற்றொடர்ச்சி.)

தொல்காப்பியனார், அகரவிற்றன் ஒருசாரனவற்றிற்கு இயல்பு கூறும் "அன்ன வென்னு முவமக் கிளவியும்" என்ற சூத்திரத்தில்—"செய்ம்மன வென்னுந் தொழிலிறு சொல்லும்" என மனவிற்றுத் தொழிற்சொல்லொன்று எடுத்தோதினார். அவை, உண்மன, செய்ம்மன முதலியன. இவை, செயயுமென் வினைபோல, உண்மன் குதிரை (உண்ணுங் குதிரை) எனப் பெயரெச்சமாகவும், குதிரை உண்மன (குதிரை உண்ணும்) என முற்றாகவும் அக்காலத்து வழங்கினவாகும். இம்மன விறுதிச்சொல் எதிர்காலமொன்றே யுணர்த்துவதென்பதும், இருதிணை ஐம்பாற்குமுரியவிரவுவினையாம் என்பதும்,—"முன்னிலைவியங்கோள்" (வினையியல் - உ௯) "எஞ்சிய கிளவி" (ஷை - உ௮) என்னுஞ் சூத்திரங்களை நோக்கி உணர்க.

மனவிற்று வினைச்சொல்

இனி, இம் மனவிறுதிச்சொற்பற்றி நச்சினார்க்கினியர் எழுதுவது வருமாறு:—"உண்மன குதிரை செந்நாய் தகர் பன்றி ஏன்பவற்றுக்கு உண்ணுமென விரித்தும், யானுண்மன, நீயுண்மன, அவனுண்மன என நிறுத்திக் கூழ் சோறு தேன் பால் என வருவித்தும் முடிக்க. இன்னனம் செய்யுமென்பொருட்டாகிய மனவெனிறுதிச்

சொல் அக்காலம் வழங்கியதாகலின் ஆசிரியர் அதனை வேறாக எடுத்தோதினர்." (எழுத்ததிகாரம் - உ௯௦) எனவும், "இச்செய்யுமென் வாசகம் அக்காலத்து மனவென்னும் வாசகத்தாலும் வழங்கலின் ஆசிரியர் கண்டு வேறாக எடுத்தோதி, எழுத்தோத்தினுள்ளும் "செய்ம்மன வென்னுந் தொழிலிறு சொல்லும் என்றார்." (சொல் - உஉஎ) எனவும் கண்டுகொள்க. இவற்றால் தொல்காப்பியர் காலத்தே செய்யுமென்பதுபோற் செய்ம்மனவென்னும் வினைச்சொலொன்று வழங்கியதாகல் உணர்க. "ஆயிரு திணையி னிசைக்குமனசொல்லே." என்புழி ஆசிரியர், இசைக்குமன என்றது, இம்மனவிறுதிவினைச்சொல்லே போலும்.

தொல்காப்பியனார், புள்ளிமயங்கியலில், இயற்பெயர் சிலவற்றின் முன் தந்தை முதலிய சொற்கள் புணரும் விதிகூறுமிடத்தே "தானும் பேனுங் கோனு மென்னும், ஆமுறை யியற்பெயர் திரிபிட னிலவே" என்பதனால் தான், பேன், கோன் எனச் சில இயற்பெயர்களைக் குறித்தார். இப்பெயர்கள், தந்தையொடும் மக்கண்முறைமையொடும் புணரும்வழி இயல்பாகும் என்பது இச்சூத்திரக்கருத்து. தான்றந்தை பேன் கொற்றன் என உதாரணங்காண்க. தான் பேன் எனப்பெயரிடும் வழக்குப் பிற்காலத்து வீழ்ந்ததென்பது, நச்சினார்க்கினியர், "பேன், கோன் என்பனமுற்காலத்து வழக்கு" எனக்கூறுதலால் விளங்குகின்றது.

**சில இயற்பெயர்கள்.**

இனித், தொல்காப்பியனார் "அழனே புழனே யாயிரு மொழிக்கும்" (எழுத்ததி-கூ௫௩.) "அழனெனி றுதிகெட" (ஷை-௩௫௪.) என்ற சூத்திரங்களால், அழன் புழன் என்ற சொற்கள் தங்காலத்து வழங்கியவற்றைக் குறிப்பிட்டார். அழன் - பிணமென்பர் நச்சினார்க்கினியர். இச்சொற்கள், ஆசிரியர் காலத்துக்குப்பின் வழக்கு வீழ்ந்தொழிந்தனவென்பது, "முதல்வழியாயினும்" என்னும் மரபியற் சூத்திரத்து, உரைகாரர், "அழன் புழன் என்பனபோல்வன இக்காலத்தில்லவென்று களைந்து யாத்தச்செய்யினும்" எனவும்; நச்சினார்க்கினியர், "கடிசொல்லில்லை" என்னும் எச்சவியற் சூத்திரத்தே "புதியனதோன்றி

**அழன், புழன், குயின் என்ற சொற்கள்.**



னாற் போலப் பழயன கெடுவனவுமுள; அவை அழன், புழன் முதலியனவும், எழுத்திற் புணர்ந்தசொற்கள் இக்காலத்து வழங்காதனவுமாம்" எனவும் கூறியவனவற்றால் தெளியப்படும். இனி, மொழிமரபியலில்,

> "மகாரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
> னகாரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
> புகரறக் கிளந்த அஃறிணை மேன."

என்னுஞ் சூத்திரத்தே, (நிலன் நிலம் என்பதுபோல) மகரத்தொடு மயங்காத னகாரவிற்று அஃறிணைப்பெயர்கள் ஒன்பதென ஆசிரியர் கூறினர். அவை எகின் செகின் விழன் பயின் குயின் அழன் புழன் கடான் வயான் என எண்ணினர் உரைகாரர். இவ்வெண்ணப்பட்ட சொற்களிலும் சில, தொல்காப்பியர் காலத்துக்குப்பின் இறந்தொழிந்தன என்பது, மரபியலில் எதிர்பொருளுணர்த்தலென்னும் உத்திக்குப் பொருள்கூறுமிடத்தே, உரைகாரர் "மகரத்தொடர்மொழி ......மேன" என்றோதிய இலக்கணத்துச் சில பிற்காலத்துக்குறைய வருதல் எதிர்பொருளெனப்படும். அதனைத்தான் உணர்ந்து "கடிசொல்லில்லைக்காலத்துப்படினே" என்று கூறினன்" என எழுதிச்செல்லுதலான் அறிக. இவ்வொன்பது பெயர்களுள் அழன், புழன், என்பனவன்றி வேறுசிலவும் ஆசிரியர்காலத்துக்குப்பின் வீழ்ந்தன போலும். இவற்றுள் "குயின்" என்றசொல் கடைச்சங்கத்தார் காலத்திலேயே வழக்குவீழ்ந்ததென்பது "மரபேதானும்" என்னுஞ்செய்யுளியற்சூத்திரத்துப் பேராசிரியர், இச்சொல்லையுமெடுத்தோதி "அவை ஆசிரியர் நூல்செய்தகாலத்துளவாயினும் கடைச்சங்கத்தார்காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினுந்தொகையினுங் காட்டுக்கொண்டு செய்யுள் செய்திலர்" எனக்கூறுதலால் நன்குவிளங்கும். "குயின் - மேகம்: அஃது அஃறிணைப்பெயர்" என்பர் நச்சினார்க்கினியர். இவற்றால், மேகத்துக்குக் குயின் என்ற வழக்கு இக்காலத்தவர்க்குப் பொருந்தாதென்பது முன்னோர் கருத்தாயிற்று. இனி மணிமேகலைச் சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதையில் "அழற்பெய் குழிசியும் பு (புழ) றச்செய் மண்டையும்" எனவரும் அடிகள் முற்காட்டிய அழன் புழன் என்ற வழக்குக்களைக் குறிப்பனபோலும்.

இனி, "ஞெமெனொருபெயராவொடுசிவனும்" என்னும் உயிர்மயங்கியற் சூத்திரத்து, ஆசிரியர் எடுத்தோதிய 'ஞ' என்ற ஓரெழுத்தொருமொழியும் தொல்காப்பியர்காலத்தே வழங்கிப் பின்வீழ்ந்ததாம். "ஞ என்பது தசையை உணர்த்தி நின்ற வழக்கு: ஆசிரியர் நூல்செய்த காலத்துவழக்கு" என்றார் நச்சினார்க்கினியரும்.

'ஞ' என்னு மொழி.

இனித், தொல்காப்பியனார், பெயரியலில், பாலறியவின்ற உயர்திணைப்பெயர்களை உணர்த்திவருமிடத்தே "பெண்மைபடுத்தமகனென் கிளவியும்" என எண்ணினார். இதற்கு நச்சினார்க்கினியர்— "கட்புலனாயதோர் அமைதித்தன்மையடுத்து நானுவரையிறந்து புறத்து விளையாடும் பருவத்தாற் பால்திரிந்த பெண்மகன் என்னும் பெயர்ச்சொல்லும்" என்று பொருளும்; "பெண்மகனென்பது அத்தன்மையாரை அக்காலம் அவ்வாறே வழங்கினாராயிற்று, இன்னும் கூறலின்". என விசேடமும் கூறினர். உரையாசிரியர், "புறத்துப்போய் விளையாடும் பேதைப்பருவத்துப் பெண்பாலாரை பெண்மகன் என்று வழங்குப" என்றும், சேனாவரையர் "மாறோக்கத்தார் அப்பருவத்துப் பெண்பாலாரை இக்காலத்தும் பெண்மகனென வழங்குப" என்றும் எழுதினர். இப்பெண்மகன் என்னும் பால்திரிந்து நிற்கும்பெயர் வினையேற்குமிடத்துப் "பெண்மகன்வந்தாள்" என்றே முடித்து வழங்கப்பட்டதென்பது "மகடூஉ மருங்கிற் பாறிரி கிளவி-மகடூஉ வியற்கைத் தொழில்வயினான" என ஆசிரியர் தனித்து விதிகூறுதலால் விளங்கும். இவற்றால் பெண்மகன் என்னும் ஒருவகைவழக்குத் தொல்காப்பியனார் காலத்துப் பிரபலமாக வழங்கியமை தெளியப்படும். பிற்காலத்திலும் "பெய்த மலரோதிப் பெண்சக்கரவர்த்தியுட - னெய்திய பள்ளி யினிதெழுந்து" (விக்கிரமசோழனுலா) என்புழி "பெண்சக்கரவர்த்தி" எனக்கூறியதும், மலையாளநாட்டார் "பெண்ராஜு" என இன்றும் வழங்குவதும் பெண்மகன் என்பதுபோன்றனவாதல் காண்க.

பெண்மகன் என்னும்வழக்கு.

(தொடரும்.)

பத்திராசிரியர்.

---

28 SEP 1916

உ

# கம்போடியா பருத்தி.

1. திருநெல்வேலிஜில்லாவில் முன் தோட்டக்கால் நிலங்களில் பயிரிட்டு வந்த புகையிலை, கேழ்வரகு, மிளகாய் முதலாகிய இறைவைப் பயிர்கள் செய்த இடங்களிலெல்லாம் 'கம்போடியா பருத்தி' யென்றுசொல்லப்பட்ட பருத்திப்பயிரை இப்பொழுது வழக்கமாய்க் கையாடிச் சாகுபடி செய்கிறார்கள். இதன் காரணம் அந்தப் பயிரைச்சாகுபடி செய்தவர்களுக்கு நன்றாய்த் தெரியும். சில இயல்புக்குத் தக்கபடி நிலத்தின் மண்படை ஆழமாயிருந்தாலும், இல்லாமற்போனாலும், இந்தப் பயிர் சாகுபடி செய்வதிற் பிடிக்கும் செலவெல்லாம், மாதம் ஒன்று அல்லது இரண்டு தண்ணீர் இறைப்பதைத் தவிர, மற்ற சாதாரண பருத்திச் சாகுபடிக்கு எவ்வளவு செலவு பிடிக்குமோ அவ்வளவு தான் பிடிக்கும்.

2. சரியானபடி எருவிட்டுப் பறவப்படுத்திய நல்ல தோட்டக்கால் நிலங்களைப்போலொத்த நிலங்களில் இந்தப்பருத்தியை விளைவிக்கும் கிருஷிகருக்கு ஏகரா ஒன்றுக்குச் சாதாரணமாய் 1,000 முதல் 1,250 இராத்தல் நிறைவரை மாசூல் கிடைக்கிறதாம். சில இடங்களில் ஏகரா ஒன்றுக்கு 2,000 இராத்தல்நிறை மாசூல் கிடைத்திருப்பதாயும் தெரியவருகிறது. 250 இராத்தல் நிறைகொண்ட பொதி ஒன்றுக்குச் சாதாரணபருத்திக்குக் கிடைக்கும் விலையைவிட இந்த வகைப் பருத்திக்கு ஒரு பொதிமேல் ரூபா 5 அதிகவிலை கிடைக்கிறது. இப்படி அதிகவிலை கிடைப்பதின் காரணம் என்னவென்றால், இந்தப் பருத்தியிலிருந்து அதிகப் பஞ்சு கிடைப்பது தான். சாதாரண பருத்தி 2,000 இராத்தல் நிறையை அரைத்தால் 500 இராத்தல் பஞ்சுகிடைக்கும்; ஆனால் இந்தப் பருத்தியிலிருந்து 500 இராத்தல் நிறை பஞ்சுகிடைக்க 1,500 இராத்தல் பருத்தி அரைத்தால்போதும். மேலும் திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கும் நூலாலையின் வியாபாரிகள் இந்தப்பருத்தி பாரம் ஒன்றுக்குச் சாதாரண பருத்தி விலையைவிட ரூபா ஐந்து அதிகம் கொடுக்கிறார்கள்.

3. இந்தப்பயிரைச் சாகுபடிசெய்யும் முறை மிக எளிது. எருச்செய்த நீர் வடிவுள்ள தோட்டக்கால் நிலங்களில் நல்லபலிதம் கொடுக்கும். இதை விதைக்கும் நிலத்தை நன்றாயுழுது பண்படுத்தி, பருத்தி விதைக்கும் பட்டத்தில் விதையை வைசிதைப்பாய் வீசி கட்டைக் கலப்பையால் லேசாய் ஒரு சால் உழுது விதையை மறைக்கவேண்டும். ஒரு ஏகரா நிலத்தில் விதைக்க 10 இராத்தல் விதை போதுமானது. விதை விதைத்த பிற்பாடு தண்ணீர் இறைவைக்கு வேண்டிய பிரகாரம் பாத்திகளும் கால்களும் கட்டவேண்டும். பயிர் முளைத்து மேல் வந்து செடிகளில் இரண்டு இலைகள் உருவியிருக்கும்போது, களைகளை வெட்டி நிலத்தின் மேற்பரப்பை கொத்திக் கொடுக்கவேண்டும். செடிகள் ஒருச்சாண் உயரமிருக்கும்போது ஒருசெடிக்கும் மற்றொரு செடிக்கும் இரண்டடி தூரமிருக்கும்படி செடிகளைக் கலைத்து விடவேண்டும். நிலத்தில் தக்கபடி எருவிட்டிருந்தால் செடிகளுக்கு மத்தியில் 2½ முதல் 3 அடி இடம் விட்டு கலைப்பிக்கலாம். இப்படிச் செடிகளைக் கலைப்பிக்காவிட்டால் செடிகள் அடர்ந்து நெருங்கி, அதன் கிளைகள் சிறுத்துக் கோணுருவி, சன்னமாகி, அவைகளில் பிடிக்கும் பருத்த காய்களின் பளுவைத் தாங்கமுடியாது. செடிகள் வளர்ந்து நிலத்தை அடைத்து மூடிக்கொள்ளுமுன் இரண்டாந்தரம் ஒருகளை வெட்டவேண்டும். இதற்குப்பின் செடிகளின் நிழல் நிலத்தை மூடிக்கொள்ளுமானதால், களைப்பூண்டுகள் வளரவொட்டாதபடி அடக்கிக்கொள்ளும். இந்தப் பயிருக்குத் தண்ணீர் அவசியமாக வேண்டியபொழுது மாத்திரம் இறைத்தால் போதுமானது. செடிகளில் பிடித்திருக்கும் காய்கள் வெடிக்க ஆரம்பித்த பிற்பாடு, முதல் வெடிப்புப் பருத்தி எடுத்தாகும் வரை தண்ணீர் பாய்ச்சக்கூடாது. அப்பால் காய்கள் காய்த்து தீர்ந்துபோன செடிகளில் மறுபடியும் துளிர்த்துப் பூத்து காய்கட்டும் பொருட்டு ஜலம் இறைக்கவேண்டும். இந்தப் பருத்தியைச் செடிகளிலிருந்து எடுப்பது மிகவும் எளிது. ஏனென்றால் காய்கள் பெரிதாயும் சுளைகள் நன்றாய் வெடித்துமிருக்கும். பருத்தி எடுப்பதில் அனுபோகமுள்ள ஓர் ஆள் நாள் ஒன்றுக்கு 100 முதல் 125 இராத்தல் பருத்திவரை சாதாரணமாய் எடுக்கக்கூடும்.



தானியப் பயிர்களை நிச்சயமாய்ப் பயிரேற்றிப் பலனடையப் போதுமான தண்ணீர் வசதியில்லாத கிணற்றிறைவை நிலங்களை வைத்துச் சாகுபடி செய்யும் ஒவ்வொரு கிருஷிகரும் இந்தப் பயிர் சாகுபடி செய்வது நிரம்ப நலம்.

எச். சி. ஸாம்ப்ஸன்,
ஆக்ரிகல்சர் டிப்டி டைரக்டர்.

# மிளகு.

மிளகுக்கொடியானது மலபாரில் (மலையாளதேசத்தில்) ஒரு விசேஷமானபயிர். இது தற்காலத்திற்கூட மலைத்தொடர்களிலுள்ள உன்னதமானகாடுகளில் யாராலும் பயிரிடப்படாமலே தானாயுண்டாகும் காட்டுச் செடிகளைப்போற் காணப்படுகின்றது. இங்கேயிருந்து ஒரு திக்கில் குடகு (Coorg) வைனாட் (Wynaad) பரியந்தமும் மற்றொரு திக்கில் நேர் குறுக்கே சமுத்திரபரியந்தமும் பரவியிருப்பதுடன், மரங்களடர்ந்த ஒவ்வொரு தோட்டத்திலும் ஒரு சிறு மிளகுத்தோட்டம் வைத்துண்டாக்கப்பட்டிருக்கிறது. மிளகுச்செடி பூர்வீகத்தில் மலபார் (மலையாளதேசத்து) பயிராகவேயிருந்ததென்றாலும் அது மற்றப்பாகங்களுக்குப் பரவித் தற்காலத்தில் ஆஸ்திரேலியாபரியந்தமுள்ள எல்லாத்தீவுகளிலும் ஏராளமாய்ப் பயிரிடப்படுகின்றன. இக்காரணத்தால் மிளகின் முக்கிய வியாபாரஸ்தலம் இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கு மாறிவிட்டது. தெல்லிச்சேரி (Tellicherry) யைவிட சிங்கப்பூரில் நூறு மடங்கு சரக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் மலபார் (மலையாளதேசத்து) மிளகு, ஏற்றுமதியின் அளவில் பின்தாங்கிவிட்டபோதிலும், வியாபாரிகள் தெல்லிச்சேரி மிளகையே அதிசிலாக்கியமானதென்று இன்னும் எண்ணுகிறார்கள். இது இந்தியாவின் மேற்கு சமுத்திரக்கரையில் மாத்திரம் பயிரிடத்தக்கது.

இந்து தேசசரித்திரத்தில் மிளகின் சம்பந்தமானது மிகவும் விசேஷமானதாயிருக்கிறது. இந்தியாவின் தற்காலநிலைமைக்கு அநுகுணமாயிருந்தது மற்றெல்லாப் பயிரையும்விட மிளகேயென்று ஒருவகையாகச்சொல்லவேண்டியதாயிருக்கிறது. இந்தியாவைச் சுற்றி

ப்பார்த்து ஆராய்ந்துபோகவந்த ஐரோப்பியர்களுடைய கவனத்தையும், ஐரோப்பிய வியாபாரிகளுடைய முக்கியகருத்தையும் முதல்முதல் கவர்ந்தது இந்தமிளகேயாம். நன்னம்பிக்கை முனையை (Cape of Good Hope) சுற்றி, பெயர்பெற்ற கப்பல் யாத்திரைசெய்தவான் கோடிகாமா (Vasco de Gama) என்பவர் மலபாருக்கு (மலையாள தேசத்துக்கு) வந்ததும் மிளகின் விலையை ஸமமாக்குவதற்கு வழி ஏதாவது உண்டாவென்று கண்டு பிடிப்பதற்காகவே. மேல்சமுத்திரக்கரையில் போர்த்துக்கல்தேசத்தார்(Portuguese)குடியேறினதற்குக் காரணமும் அதுவே. ஐரோப்பாவில், இந்த மிளகுவியாபாரத்தில் வேறொருவருக்கும் யாதொரு பாத்தியதையுமில்லாமல் தாங்களே ஒப்பந்தமாய் வியாபாரம் நடத்திவந்த டச்சுத்தேசத்தார்கள் (Dutch) இதற்கு பின்வந்தார்கள். இவர்கள் மிளகின் விலையை உயர்த்தினதினால்தான், தனவந்தர்களாகிய சில லண்டன் (London) வியாபாரிகள் ஒன்று கூடி இந்தியாவுடன் மிளகு வியாபாரம் நேரே செய்யத் தீர்மானித்து ஈஸ்டு இந்தியா கம்பெனி (East India Company) யென்ற ஒருசங்கம் ஏற்படுத்தினார்கள். ஆகவே இந்துதேச சரித்திரத்திலே எப்போதும் ஒரு முக்கிய அடையாளமாயிருந்த ஓயாத உள்நாட்டுக்கொரே சண்டை சச்சரவுகளை ஓய்த்துப்பற்பலநாட்டார்களையும் ஒற்றுமைப்படுத்தி, ஓரே ஆளுகைக்குள்ளாக்கி இத்தேசத்தை ஆங்கிலேயர் சுவாதீனமாக்கியாள மிளகே முதற்காரணமாயிருக்கிறது.

மிளகுக்கொடி சாகுபடி செய்தல் மிகவும் வருத்தமில்லாத காரியம். கொடிவளர்ந்து தொத்துவதற்கு ஆதாரமாய் நடப்பட்ட மரத்தில் கொடி தொத்திக்கொண்டபின் இந்தப்பயிருக்கு அதிகக் கவனம் செலுத்தவேண்டியதில்லை. எவ்வளவு அஜாக்கிரதையாயும் கவனம் செலுத்தாமலும் பயிர்செய்தாலும இஃது ஒவ்வொருவருஷமும் தோட்டக்காரர்களுக்குத் தீர்வையைச் செலுத்த உபகாரமாகும்படி கொஞ்சம் நன்மையாகிலுங்கொடுக்கும். ஆனால் எந்தத் தோட்டத்திலிருக்கும் மிளகுக்கொடிகளும் பலன் தருவதிலும் மற்ற விஷயங்களிலும் வெவ்வேறுவகையாயிருப்பது ஒவ்வொருவருக்குந்தெரிந்த விஷயம். சில வகைகள் நன்றாயும் சில மாதிரிகள் கேவலமாயும் வளர்



கிறது. சிலவகைகள் நன்றாய்க் காய்பிடித்துப் பலன் கொடுக்கும். மற்றும் சில எட்டிலோ பத்திலோ காய்த்து அற்பசொற்பமாய்ப் பலன்கொடுக்கும். மிளகுச்செடிகளின் குணலக்ஷணங்களை அறிந்து, அதை விருத்திசெய்து, மிளகுத்தோட்டக்காரர்களுக்கு உபகாரம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் கவர்ன்மெண்டார் தளிப்பரம்பா (Taliparamba) என்னுமிடத்தில் மிளகு சாகுபடிசெய்ய ஒரு பண்ணையை ஸ்தாபித்தார்கள். மிளகுக்கொடிகள் நடுமுன்னே இன்னின்ன ஜாதிகள் நல்லதென்றும், இன்னின்னவைகள் நல்ல பலன் தராவென்றும் பகுத்தறிவது இப்போது மிக எளிதான காரியமென்று தெரியவந்திருக்கிறது. இவ்விஷயங்களைக் குறித்து வேண்டிய சமாசாரங்களை அறிய விரும்புகிறவர்கள், அந்தப் பண்ணை மானேஜர் அவர்களைக்கேட்டுக்கொண்டால் அவர் மிகச் சந்தோஷத்துடன் தெரிவிப்பார். நல்ல மாதிரிச்செடிகளையும் உபயோகமற்றவைகளையும் வைத்துப்பயிராக்கச்செல்லுஞ் செலவு ஒன்றாகவே இருக்கும். மிளகைச்சாகுபடிசெய்வதில் தற்காலத்தைவிடச்சற்று அதிகக்கவனம் செலுத்துவதினால், அப்படிச் செலுத்திய கவனத்திற்கு மிகவும் அதிகமாகவே அதன் மகசூல் வருஷாவருஷம் இருக்கும். மிளகுச்செடியிலிருந்து மகசூல் கிடைக்க மிகுந்தநாள் ஆகுமென்பது வாஸ்தவம். இக்காரணத்தைக்கொண்டு அனேகர் அப்படிப் பிரயாசை எடுப்பதில் பிரயோஜனமில்லையென்று சொல்ல இடமுண்டு. வெகுநாட்சென்று விசேஷபலன் தராத ஒரு வகைச் செடியைவைத்துப் பரிபாலிப்பதைப்பார்க்கிலும், நெடுநாட்சென்று காய்ப்புக்கு வரக்கூடியதாயும் சரியானபடி பலன்தரும் வகைச்செடியைவைத்துப் பரிபாலிப்பது உத்தமம். பின் சந்ததிகளின் பிரயோஜனத்தையும் இலாபத்தையும் உத்தேசித்தாவது சீதோஷ்ண மழைப்பேதங்களால் எளிதில் கெடுதியடையாமல் பொறுத்துக்காக்கும் வலியமாதிரி மிளகுச் செடிகளுக்குச்சற்றுகவனம் செலுத்துங்கள். நல்லமாதிரிகளைப்பார்த்துத்தெரிந்தெடுங்கள். வேர்களைச்சுற்றிக் கொஞ்சம் ஒவ்வொரு வருஷமும் தோண்டி, தோட்டத்தின் மற்றப் பாகங்களிலிருந்து மட்கிய இலைச்சருகுகளையும் வீட்டைச்சுற்றி அகப்படும் குப்பையையும் சேகரித்து அக்கொடிகள் தொத்தியிருக்கும் மரத்தின் அடியில் ஒரு சிறுகுவியலாகப்போடுங்கள்.

ஸி. ஏ. பார்பர்,

கவர்ன்மெண்டு தாவரசாஸ்திரி.

உ

# கம்பளிப்பூச்சியைப்பற்றிய குறிப்பு.

தமிழ் ஜில்லாக்களில் "கம்பளிப்பூச்சி" என்று சொல்லுகிற மயிருள்ள புழுக்கள் பயிரைச்சேதப்படுத்தும் ஜெந்துக்களென்று தென்னிந்தியாவிலுள்ள எல்லாருக்குந் தெரியும். மழைக்காலத்தில் திடீரென்று உண்டாகி வேளாண்மைகளுக்கு அதிகக் கெடுதி செய்கிறது. அவைகள் சோளம், கம்பு, நிலக்கடலை, பயறுவகைகள் இவைகளைத்தான் விசேஷமாய் அழித்துவிடுகின்றன.

இந்தக் கம்பளிப்பூச்சிகள் பயிர்களைத்தின்றபின் மண்ணுக்குள் நுழைந்துகொண்டு பேரிச்சங்கொட்டையைப்போல் உருமாறி மறு வருஷம் மழைக்காலம் வரும்வரையில் அந்தப்படியே (மண்ணுக்குள்) கிடக்கும். அக்காலம் ஆரம்பித்துத் தரைபோதுமானபடி நனைந்ததும் இந்தப்பூச்சிகள் மேல்நோக்கித் துளைத்துக்கொண்டு தரைமட்டத்துக்கு வந்து, பொட்டுப் பொட்டாயிருக்கும் சிறகுகளுடனும் மஞ்சள் அல்லது சிவப்பு வரிகளுள்ள உடம்போடுங்கூடிய வெள்ளைப் பூச்சிகளாக வெளிக்கிளம்புகின்றன. இந்தப்பூச்சிகள் சாதாரணமாய்க் கொள்ளை கொள்ளையாய் ஒரேதடவையில் ஒருசேரக் கிளம்புகின்றன. அப்போது கிராமாந்தரங்களில் விளக்கைச்சுற்றிலும் இவைகள் கூட்டமாய்த் திரண்டுகொண்டிருப்பதைப் பார்க்கலாம். பெட்டைப்பூச்சிகள் இலைகளில் அநேக முட்டைகளிடுகின்றன. கம்பு, சோளம், நிலக்கடலை இவைகளின் இலைகளின் கீழ்ப்பக்கத்தில் திரள்திரளாய் முட்டைகளிருக்கக் காணலாம். இந்த முட்டைகள் பொரித்து பின் கம்பளிப்பூச்சிகளாகும்.

இதற்குப் பரிகாரமான உபாயங்கள்:—இந்தப் பூச்சிகள் முட்டையிடுவதால் தான் திடீரென்று புழுக்கள் உற்பத்தியாகின்றன. ஒரு பூச்சி 500 முதல் 1,500 முட்டைவரையிலும் இடும். ஆகையால் ஒரு பூச்சியைக்கொன்றால் பின்னிட்டு 500 முதல் 1,200 புழுக்கள்வரையிலும் கொன்றதுபோலாகும். நல்ல மழைபெய்து தரை தக்கபடி நனைந்ததும் உடனேயிருந்து நாற்றுக்களைக்காப்பூச்சிகள்



புறப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு விளக்கண்டை வந்து சேர அதிக ஆவல். இந்தப் புழுக்களின் தொந்தரவுள்ள இடங்களில் சமயம்பார்த்து விளக்குப்பொறிகளை வைத்தால் இந்தப்பூச்சிகளை ஒருமிக்கத்தொலைத்துவிடலாம்.

விளக்குப்பொறி என்பது விளக்கண்டை வரும்பூச்சிகளைத்தானே கக்கொல்லும் ஒரு சூத்திரம். இச்சூத்திரம் பூச்சிகளை இழுக்கிறதற்கு விளக்கொன்றும், அதன்கீழ் வந்தபூச்சிகளைக்கொல்ல மண்ணெண்ணெய் கலந்த தண்ணீருள்ள தட்டம் ஒன்றும் சேர்ந்து அமைந்துள்ளது. ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கை உள்ளே வைக்கக்கூடிய நான்குமூலைக்கண்ணாடி லாந்தரை வைத்துக்கொண்டு விளக்குப்பொறி செய்துவிடலாம். இதன் விலை சொற்பம். இது எல்லா ஊர்களிலும் சுமார் 6 அணாவுக்கு வாங்கலாம். தேங்காய் எண்ணெய் பாதி மண்ணெண்ணெய் பாதியாகக் கலந்து உபயோகிக்கவேண்டும். தனி மண்ணெண்ணெயைவிட இந்தக்கலப்பு பிரகாசமாய் எரியும். புகையும் பிடியாது. பூச்சிகளைப்பிடிப்பதற்கான மண்ணெண்ணெய்கலந்த தண்ணீரின் விஸ்தீரணம் அதிகமாய் இருக்கும்படி தட்டம் அகன்று இருக்கவேண்டியது அவசியம். 2½ முதல் 3 அங்குல ஆழமும் இரண்டடி சதுரமும் உள்ள ஒரு தகரத்தட்டம் இதற்கு ஏற்றதென்று அநுபோகத்தில் தெரிந்திருக்கிறது. 6 அல்லது 8 அணாவுக்கு எந்தத் தகரக்கடைக்காரனும் செய்துகொடுப்பான். இதில்லாவிட்டால் ஏற்றச்சால்போல அகன்ற வாயுள்ள எந்தப்பாத்திரமும் இதற்கு உதவும்.

தனியாக ஒரு மூங்கிற்கால் நட்டு அதிலிருந்து தட்டத்திற்கு மேலே லாந்தரைத் தொங்கவிடவேண்டியது. ஆழமில்லாத பாத்திரமாயிருந்தால் அதன் நடுவில் ஒரு கல் வைத்து அந்தக்கல்லின்மேல் லாந்தரை வைத்துவிடலாம். எந்தப்பயிருக்காக இந்த ஏற்பாடு செய்கிறோமோ அந்தப் பயிர்மட்டத்திற்குமேல் இந்தக்கருவி முழுதும் உயர்ந்திருக்கவேண்டும். தூரத்திலிருந்து பார்த்தால் விளக்குத் தெரியும்படி ஒரு மண்குவியலின்மேல் வைக்கலாம்.

விளக்குப்பொறிச் சோதனைகள்.—இந்த உபாயம் பலிக்கிறதா என்பதைச் சோதித்தறியும்பொருட்டு 1909 வருஷம் ஜூலை ஆகஸ்டு

மாதங்களில் மஞ்சகுப்பஞ் ஜில்லாவிலிருக்கிற பன்னிகுப்பம் கிராமத்து நிலங்களில் 15 விளக்குப்பொறி வைத்திருந்தது. முதலில் ஒரு சிறுகூட்டம் முந்தியநாள்பெய்த 1 அங்குல மழைக்கப்புறம் ஜூலைமீ 23உ இரவிலும், பிறகு அதிலும்மிகப்பெரிய கும்பல் ஆகஸ்டுமீ 8உ பெய்த $1\frac{1}{2}$ அங்குல மழைக்குப்பின் 10உ சாயந்திரமும் ஆக இரண்டு வெவ்வேறுகும்பலாக அவ்வருஷம் இப்பூச்சிகள் புறப்பட்டன; முதற்கூட்டமோ கொஞ்சம் 400 பூச்சிகள்தான் 4 ராத்திரியில் பிடிபட்டன. இரண்டாவது கும்பலில் நாலிரவில் 7,400 பூச்சிகள் பட்டிறந்தன. அதில் 3,800 முதனாளிரவிலேயே பிடிபட்டன. இந்த 7,400 பூச்சிகளிற் குறைந்தபட்சம் அரைவாசி பெட்டைகளாயிருக்கவேண்டும். ஒரு பெட்டை 500 முதல் 1,200 முட்டைகள்வரை யிடுகிறதென்பதை யோசித்துப்பார்க்கும்போது இந்தப்பொறி எவ்வளவு சிறந்ததென்பது தெளிவாய் நாம் காண்கிறோம். (இந்த உபாயத்தால்) தப்புவிக்கப்பட்ட நிலங்களுக்கருகில் ஒரு பூச்சிகூடக் காணாததினாலே பன்னிகுப்பங்கிராமத்துக் குடியானவர்கள் இது ஒரு கைகண்ட முறை என்று செவ்வையாய் அறிந்துகொண்டார்கள்.

முடிவு.—இந்தத் தந்திரத்தினால் பூரண நன்மையடையவேண்டுமானால் ஒரு கிராமத்திலிருக்கும் இரண்டொரு குடியானவர்கள் மட்டும் தங்கள் நிலங்களில் விளக்குப்பொறிகளை வைத்தால் போதாது. அப்படிச் செய்வதனால் அந்தப்புலங்களிலும் அவைகளுக்கடுத்த புலங்களிலும் உள்ள பூச்சிகள் தப்பாமற் பிடிபட்டிறக்குமென்றாலும், இந்த விளக்குப்பொறிகளுக்கு எட்டாத தூரத்திலுள்ள மற்றப்புலங்களில் இடப்பட்டிருக்கும்முட்டைகள்பொரித்தபுழுக்கள் கடைசியில் இங்கும் வந்து சேர்ந்துவிடும் ஆகையால் ஒரு இடத்திலுள்ள எல்லாக்குடிகளும் ஏகோபித்துக் கொல்லைகளெங்கும் விளக்குப்பொறிகளைக் கட்டாயம் வைக்கவேண்டும். இப்படி எல்லாரும் ஒருமித்துச்செய்வதால் இந்த உபாதையை வரவொட்டாமல் தடுக்க முடியும் என்று நம்பலாம். ஒன்றுசேராமற் போனாலோ இப்பொறிகளெல்லாம் வேடிக்கைக்குத்தான் இடமாகும். கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் (முதல்) மழைபெய்து



நின்ற உடனே விளக்கு ஏற்றிவிடவேண்டும்; முதனாளிரவு பிடிபடும் பூச்சிகளின் தொகை பின்னிட்டுப் பிடிபடும் பூச்சிகளெல்லாவற்றையும் விட அதிகமாயிருக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்தபின்னிட்டு விளக்கண்டை பூச்சிகள் ஆவலோடு விசேஷமாய் வருகிறதில்லை. இந்த உபாயம் கைகூடவேண்டுமானால் (மழை நின்றவுடனே) சற்றும் தாமதம் செய்யாமல் விளக்குப் பொறிகளை வைத்து விடவேண்டியது அவசியம்.

விளக்குப் பொறிவைத்தல்.—செலவுசுருக்கமான விஷயம் அதற்குவேண்டிய கைம்முதல் ஒரு ரூபாவுக்குமேலில்லை. லாந்தர் 6 அணா. தகரத்தட்டம் உபயோகிப்பதானால் அது ஒரு 6 அல்லது 8 அணா. மூங்கிற் காற்சட்டம் வகையராவுக்கு ஒன்று அல்லது இரண்டணாவுக்குமேற் செல்லாது. பத்திரமாய் வைத்துக்கொண்டால் பலவருஷமிருக்கும். ஒரு ராத்திரிக்கு ஒரு விளக்குக்கு 6 அல்லது 8 பைசா எண்ணெய் செல்லும். மொத்தத்தில் இரண்டு வாரத்துக்கு மேல் விளக்குவைக்கவேண்டியிராது. ஆகையினாலே எண்ணெய்ச் செலவு சுமார் 8 அணா பிடிக்கும். (இக்கம்பளிப்பூச்சிகளால் விளைகிற நஷ்டத்தைப் பார்த்தாலோ) அரைவாசி,முக்கால்வாசி பயிரைச் சேதப்படுத்தி நிலத்தின் வயத்திற்கும் பயிரின் உயர்ச்சிக்கும் தக்கபடி ஏகர் என்றக்கு 20 ரூபா முதல் 50 ரூபா வரையில் நஷ்டம் உண்டாகிறது.

---

உ

# கரவைவேலன் கோவை.

(முற்றொடர்ச்சி)

## நாய்துஞ்சாமை.

நாய்துஞ்சாமையாவது அவ்விடத்துள்ள நாய்கள் நித்திரை சிறிதுமின்றி அடிக்கடி குரைத்து நிற்றலைக் கூறுதல். அவ்வாறு குரைக்குங்கால் இவ்விடத்தே அடிக்கடி நாய்கள் குரைத்தற்குக் காரணம் என்னை கொல்லோ; என்று ஆராய்ச்சி வரும். அதனால் வருந்தொழிற்கருமை பொருந்தி இரவுக்குறியிடை யீடுபடும் என்க.

### செய்யுள்.

௩௮. கஞ்சமின் சேருங் காவையில் வேலன் கனகவெற்பா
பஞ்சிலுந் தீண்டப் பனித்திடுஞ் சீறடிப் பாவைகொடு
நஞ்சினுங் கோரம் பயிலன்னை துஞ்சினு ஞாளிக்குலந்
துஞ்சலென் ணாது குரற்காட்டுங் கங்குற் றொடர்நெறிக்கே.

கஞ்சமின் - இலக்குமி. கனகம் - பொன். கோரம் - கொடுமை. ஞாளிக்குலம் - நாய்க்கூட்டம். குரற்காட்டும் - குரைக்கும். கங்குல் - இரா.

---

### நிலவு வெளிப்படுதல்.

நிலவு வெளிப்படுதலாவது ஞாயிறு பட்டபோதே நிலவு வெளிப்பட்டுத் தலைவன் வருந்தொழிற் கருமையாய் இரவுக்குறியிடையீடுபடுதலைக் கூறுதல்.

### செய்யுள்.

௩௯. தாதே யளகமுஞ் சூதேய் முலையுந் தயங்குமின்ப
மாதே கருந்திரைப் பட்டாடை சுற்றிய வையமங்கை
மீதே நிலாக்கதிர் பொங்கிய தால்விதுற் பாண்டவர்க்காய்த்
தூதே நடந்த காவையில் வேலன் சுரும்பகத்தே.

தாது ஏய் - மகரந்தம் பொருந்திய, சூது ஏய் - சூதாடு கருவியை ஒத்த. கருந்திரைப்பட்டாடை - கடலாகிய பட்டாடை. வையம் - பூமி. பாண்டவர்க்காய்த் தூதே நடந்த காவையில் வேலன் என்றது பாட்டுடைத்தலைவனைப் புருடோத்தமன் என்னும் மரபு பற்றிய வழக்கு. சுரும்பு - மலை.

---

### வருந்தொழிற் கருமைசாற்றல்.

வருந்தொழிற் கருமைசாற்றலாவது தலைவன் இடையீடின்றி வருதற்குத் தடையாய் ஆண்டு நிகழும் இடையூறுகள் பலவற்றானும் உளதாகிய அருமையைக் கூறுதல்.



### செய்யுள்.

௪௰. பாய்பரி யூருங் காவையில் வேலன் பனிவரைமே
லாய்குரன் ஞாளியில் வூர்துயின் றாலுமக் காவலரோ
காய்வர் நிலாவெண் கதிர்காலு மேயிருட் கங்குன் மூற்றும்
வாயடை யாதுவன் கூகையுஞ் சேவலும் வாள்விழியே.

பரி - குதிரை. ஞாளி - நாய். காவலர் - நகரி காப்போர். கங்குல் - இரா. வாயடையாது - ஒலிக்கும். சேவல் - கோழி. வாள் விழியே என்றது பாங்கியை.

---

### கனவுநலிபுரைத்தல்.

கனவுநலிபுரைத்தலாவது கனவின்கண்ணே தலைவன் வந்து புணரக்கண்ட தலைவி விழித்தபின் ஒன்றுங் காணாது நலிந்த செய்தியைப் பாங்கியோடு பகர்தல்.

### செய்யுள்.

௪௧. இந்நா ளியாமத் திவர்வந்து கூடி யெனைப்புணர்ந்தார்
நன்ற ணனவென்று கண்விழித் தேனென்று நான்கண்டிலேன்
கன்னவ தாரன் காவையில் வேலன் கனகிரிமேல்
முன்னாள் வினைப்பய னேகன வாக முடிந்ததுவே.

நன்னாள் - உதயகாலம். கன்னவதாரன் - கன்னனுடைய அவதாரம் போன்றவன். இதனால் அவனுடைய வள்ளன்மை கூறப்பட்டது.

---

### தன்றுயர் தலைவற்குணர்த்தல் வேண்டல்.

அஃதாவது தலைவி தன்பாலடைந்த துயரைத் தலைவனுக்கு அறிவித்தலைக் குறித்துப் பாங்கியை வேண்டல்.

### செய்யுள்.

௪௨. திசைப்பா லிசைவைத்த வேலன் காவைச் சிலம்பர்தம்பால்
விசைப்பாண மன்ன விழியணங் கேநம் மெலிவையெல்லாம்
நசைப்பான்மை யோடு மவர்காதி னிற்புக நல்வசன
மிசைப்பா ரவரெவ ராயினு மேபுக ழேறுவரே.

பாணம் - அம்பு. மெலிவு - துயர். நசை - விருப்பம்.

---

## வெறியச்சுறுத்தல்.

வெறியச்சுறுத்தலாவது அவளன்னையும், என்னன்னையும் அவளை உற்றுநோக்கி இவளுக்குற்ற பிணியாதென்று சந்தேகமுற்று வேலனையழைத்து வெறியாடல் விரும்பினர் என்று தலைவனுக்கு அச்சமுறுத்திக் கூறுதல்.

### செய்யுள்.

௪௩. அரும்பவிழ் சோலைக் கரவையில் வேல னணிவரைமேல்
வரும்புய னேர்செங்கை மன்னவ னேயிரு மங்கைக்குற்ற
விரும்பிணி யாதென் றயிர்த்தவ ளன்னையு மென்னன்னையும்
விரும்பினர் நெஞ்சில் வெறியாடல் வித்தக வேலனையே.

புயல் - முகில். பிணி - துயர். அயிர்த்தல் - சந்தேகமுறல். வித்தகம் - சாதுரியம். வேலன் - வெறியாட்டாளன்.

---

## பிறர்வரைவுணர்த்தல்.

பிறர் வரைவுணர்த்தலாவது தலைவியைப் பிறரும்வரைந்து கோடற்கு உடன்படுவர் என்பதைப் பாங்கி தலைவனுக்கு அறிவித்தல்.

௪௪. சாதிப் பவளக் கொடிமீதிற் சங்கந் தவழ்துறைவாய்
வாதித் தவர்சிங்கம் வேலன் கரவை மணிவரைமேல்
பாதிப் பிறைநுத லாண்முக ராகப் பனிமதியு
மோதிச் சுருளுங்கண் டார்மயங் காரிவ் வுலகினிலே.

வாதித்தவர் - வாதாடினோர். மணி - அழகு. முகராகப்பனி மதியும் ஓதிச்சுருளுங்கண்டு இவ்வுலகினில் மயங்கார் ஆர்? என முடிக்க.

---



## வரைவெதிர்வுணர்த்தல்.

வரைவெதிர்வுணர்த்தலாவது பாங்கி தலைவனைநோக்கி நீ அருமறை கண்ட அந்தணரோடும் வரைவுகூறி வருவாயாயின், நங்கேளிர் எதிர்கொண்டு வருவார் என்று வரைவெதிர்வை அறிவித்தல்.

### செய்யுள்.

௪௫. பிறைசூடி யைத்தொழு வேலன் கரவைப் பெருஞ்சிலம்பின்
இறைவாநஞ் சாரல் வெறிதே வருதி யியற்சுருதி
மறைவே தியரொடு வந்தானங் கேளிர்நின் சொற்கடவா
குறைவான் கலைமதி கண்டான் மலர்ந்திடு முற்பலமே.

பிறைசூடி - சிவபிரான். வெறிது - வீண். வேதியர் - அந்தணர். கேளிர் - சுற்றத்தார். கலைமதி - பூரணசந்திரன். உற்பலம் - குவளை. பின்னைய அடியிரண்டும் எடுத்துக்காட்டுவமை.

---

## வரையுநாளுணர்த்தல்

வரையு நாளுணர்த்தலாவது மணஞ்செய்யும் நாளினை அறிவித்தல்.

### செய்யுள்.

௪௬. தேங்கமழ் சோலைக் கரவையில் வேலன் சிலம்பின்மின்னார்
கோங்கரும் பன்ன முலைச்சுணங் காகிக் குளிர்சினையாய்
வேங்கையும் பூத்தன செங்கதிர் நாண விளங்குகூட
ரோங்கயி லேந்திய தோளண்ண லேமதி யூர்கொண்டதே.

சுணங்காகி - தேமல்போலாகி, அயில் - வேல். கூர் - பரிவேடம்.

---

## குறிபெயர்த்திடுதல்.

குறிபெயர்த்திடுதலாவது பாங்கிதலைவனை நோக்கி இக்குறி தகுதியன்றென்று மற்றொருகுறியிடை வரச்செய்தல்.

### செய்யுள்.

௪௭. பற்றலர் சிங்கங் கரவையில் வேலன் பனிவரைமே
லுற்றலர் தூற்றப் பெறுஞ்சிறை யார்வண் டெங்கிமூரல்
மற்றொரு காவினிற் சேர்ந்தினி நீகம் மலைக்குயத்துப்
பொற்றொடி யாளுட னேவிளை யாடிதி பூட்புயனே.

3

பற்றலர் - பகைவர். அலர் - பூ. நிறை - நெருங்கு. கா - சோலை. மலைக்குயம் - மலைபோன்ற ஸ்தனம். பூண் - ஆபரணம்.

---

### இரவு வருவானைப் பகல் வருகென்றல்.

அஃதாவது இரவுக்குறிக்கண் வந்தொழுகுந் தலைமகனைப் பாங்கி பகலில் வருக என்று பகர்தல்.

#### செய்யுள்.

௨அ. செருமலிவாகன் காவையில் வேலன்றெண் ணீர்கறங்கு
மருவியஞ் சாரன் மணிச்சிலம் பாவாக் காம்பற் செவ்வாய்
மருவிளங் கோதியும் யானும் புனத்திடை வைகுதுஞ்செம்
பருதிநின் றேங்கும் பகல்வரு வாயினிப் பண்புடனே.

செருமலி வாகன் - போர்த்தொழின்மிகுந்த புயமுடையவன். அரக்காம்பல் - செவ்வாம்பல். மருவிளங்கு - வாசனை விளங்கிய. பருதி - சூரியன்.

---

### இறைமகன் மறுத்தல்.

இறைமகன் மறுத்தலாவது இது காலமேகம் அன்றென்று பாங்கி கூறியதைத் தலைவி ஏதுக்காட்டி மறுத்துரைத்தல்.

#### செய்யுள்.

௨௯. மந்திர நேருங் காவையில் வேலன் மணிவரையிற்
சந்திர னேர்முகத் தையனல் லாயித் தலங்களெங்கு
மிந்திர கோபஞ் செறிந்தன காந்த ளிலங்கினமைக்
கந்தர மாமயி லாலித் தனமழைக் காலமிதே.

மந்திரம் - ஆலோசனை. தலம் - பூமி. கந்தரம் - கழுத்து. ஆலித்தல் - ஆடுதல், சத்தித்தல்.

---

### பாகனொடு சொல்லல்.

தலைவன் மீண்டு வரும்போது விரைந்து தேர்விடுக என்று பாகனொடு சொல்லுதல்.



#### செய்யுள்.

௩௦. நிலவாருங் கீர்த்திக் காவையில் வேல னிழல்வரையி
லிலவா ரிதழி குடபாலிற் செக்கர்வந் தெய்தியக்காற்
சலராசி கண்விட் டலமரு மெங்குந் தயங்குமுயர்
வலவா கடிதில் விடுதேர் முன்போமென் மனத்தினுமுன்னே.

கீர்த்தியை வெண்ணிறம் என்னும் மரபுபற்றி "நிலவாருங் கீர்த்தி" என்றார். சலராசி - கடல்.

(இன்னும் வரும்.)

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

## ௫-வது சதுர்த்தாரிகாலம்பகம் ௨-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

அதனைக்கேட்டதும் புண்ணியசாலியான சக்திதேவன் மூரசனையின்றவரிடஞ்சென்று அக்கனகபுரியை யான் பார்த்திருக்கின்றேனென்று மறுபடியுங்கூறினன். உடனே அவர் அவனை அரசன் முன்புக்கழைத்துச்சென்றனர். அரசன் சக்திதேவனைக்கண்டதும் முன்போலவே யிவன் பொய்கூற வந்திருக்கிறானென்று கருதினன்; அதையறிந்து சக்திதேவன் அரசனைக்குறித்து: அரசே! யானந்தக் கனகபுரியைப் பாராது பொய்சொல்வேனாகிலிப்பொழுதே கொலைத் தண்டனைக்காளாகின்றேன், இதுவே பந்தயம்; அன்றியும் முன்பு கனகபுரியின் விருத்தாந்தத்தை யென்னிடங்கேட்ட உமது புத்திரியே யிப்பொழுதென்னைக் கேட்கட்டும், என்றுசொல்ல அரசன் தன் புதல்வியையவ்விடத்திற்கே யழைத்துவரச்செய்தனன்.

அவள் அவ்விடம் வந்ததும் முன்புவந்த பிராமணனே வந்திருக்கின்றானென்றுகண்டு, அரசனைநோக்கி ஐயா, இப்பார்ப்பானின்னும் ஏதோ பொய்சொல்லப்போகிறான்; என்னையேன் வீணாக இங்கு வரவழைத்தீரென்றனள்.

உடனே சக்திதேவனென்பவன் ஹே! ராஜபுத்திரி, நான் சொல்கின்றதுண்மையோ பொய்யோ, யான்கண்ட புதுமையை யுன்னிடம் கேட்க ஆவலுறுகின்றேன்; அதனை, நீதானின்னதென்று சொல்லவேண்டும். யானோ உன்னைக் கனகபுரியினில் இரத்தினமயமான கட்டிலில் பிராணன்போய்க்கிடக்கின்றவளாகக் கண்டேன். இவ்விடத்திலோ உன்னை ஜீவனோடிருக்கின்றவளாகக் காண்கின்றேன்; இஃதெப்படியோ அறியேன்; என்று அடையாளத்துடன் சக்திதேவன், அரசன் புதல்வியைநோக்கிச் சொல்லலு முடனே, கனகரேகையென்பவள் ஹே! பிதா இந்த மகாத்மாவினுலுண்மையாகவே அக்கனகபுரி நகரம் பார்க்கப்பட்டது. சீக்கிரத்தி லிவரெனக்கு அக்கனகபுரியினிற் கணவனாகப்போகின்றார். அன்றியுமிவர் அக்கனகபுரியிலிருக்கின்ற மற்றைய வென்சகோதரிகள் மூவரையும் மணஞ்செய்துகொண்டு அந்நகரத்திலேயேயிருந்து வித்யாதரர்களின் அரசாட்சியையுஞ்செய்யப்போகின்றார். நானிப்போது எனக்குரியசரீரத்துடன் அந்நகரம்போய்ச்சேர்தல்வேண்டும்; யானோ, முனிவரது சாபத்தினாலும்முடைய இந்த கிரஹத்தில் வந்து பிறந்தேன்.

அம்முனிவரென்னைப்பார்த்து எப்பொழுது ஒருமனிதன் கனகபுரியிலுள்ள சரீரத்தைக்கண்டு உனக்கும் அதற்குமுள்ளபேதத்தை உன்னிடம் வந்துகூறுகின்றானோ அப்போது உன்சாபம் நீங்கிவிடும்; அம்மனிதனே உன் கணவனாவான் என்று மறுபடியும் அவர் சாபத்தின் முடிவையும் கூறினர்—என்றிவ்விதம் அந்த ராஜபுத்திரியான கனகரேகை அரசனிடஞ்சொல்லித்தன் சரீரத்தைவிட்டுநீங்கி மறைந்தனள்.

உடனே அவ்வரமனையில், மிகவும் பெருங்கூச்சலோடழுகுரலுண்டாயிற்று. இவற்றையெல்லாங் கண்டிருந்த சக்திதேவன், இரண்டிடத்துந் தள்ளுற்றவனாகிக், கடத்தற்கரிய பற்பலவிதமான சங்கடங்களடைந்தும் அவ்விருவரையும் மனைவியாகப் பெறவில்லையேயென்று சிந்தித்துக்கொண்டு வாட்டமுற்றவனாகத் தன்னையே சிந்திக்கின்றவனாகித் தன் மனோரதம் நிறைவேறாதவனாய் அரமனையினின்றும் வெளியேறி க்ஷணநேரமிவ்வண்ண மாலோசித்தனன்.



கனகரேகையென்பவள் நமது அபீஷ்டமனைத்தும் நிறைவேறுமென்றனளே; ஆதலால் யானெதற்காக வருந்தவேண்டும். பயனோ முயற்சியின் வயத்ததாகவிருக்கின்றது; முன்புசென்றவழியே மறுபடியும் அக்கனகபுரிக்குச்செல்கின்றேன். தெய்வமானது இன்னும் அவசியமெனக்கவ்விஷயத்திலுதவிசெய்யப் போகின்றது என்று அந்தச் சக்திதேவன் ஆலோசித்துக்கொண்டே அந்நகரத்தினின்றும் புறப்பட்டனன்.

உலகத்தில் முயற்சியுடன்கூடிய தைரியசாலிகள் பயனைக்கைக்கொள்ளாது திரும்பார்களன்றோ. அப்படி வெளியேறிச்சென்ற அவன் பலநாட்களில் விடங்கபுரமென்னும் பிரசித்திபெற்ற அந்நகரத்தையே மறுபடியும் சேர்ந்தனன். அவ்விடத்தில் முன்பு தானெவனுடன் சமுத்திரத்திற் செல்லும்போது கப்பலுடைபட்டதோ அந்த வணிகனையே யெதிரில் வரக்கண்டு, ஓ ஹோ! கடலில் வீழ்ந்த அந்த சமுத்திரதத்தனென்ற வணிகன் எப்படி வெளியேறினனென்று ஆச்சரியப்படவேண்டியதில்லை; நாமே அதற்கு நிதர்சனமாயிருக்கின்றோமே என்றாலோசித்துக்கொண்டு, அவன் கிட்டநெருங்குவதற்குள் அவ்வணிகன், வருகின்றவன் சக்திதேவனென்றறிந்து சந்தோஷத்துடன்வந்து அவன் கழுத்தைக்கட்டிக்கொண்டு ஆதரவுடன் தன் கிரகத்திற்கழைத்துச்சென்று விருந்தினர்க்குச் செய்யுமுபசாரஞ்செய்து அவனைப்பார்த்து ஐயா, கப்பலுடைந்தபின் சமுத்திரத்தினின்றும் நீரெப்படித் தப்பிவந்தீரென்று கேட்டனன். அதற்கந்தச்சக்திதேவனும் தான் மச்சியத்தால் விழுங்கப்பட்டு உத்தலத்வீபம் வந்துசேர்ந்தது முதலிய விருத்தாந்தமனைத்தையும் நடந்தபடி அவனிடம் சொல்லி, அவ்வணிகனைநோக்கி நீரெவ்விதம் சமுத்திரத்தினின்றும் வெளியேறிவந்தீரென்று கேட்க அவ்வணிகன், நண்பா! அப்போது கடலில் வீழ்ந்தவனான யான் ஒருபலகையைப்பற்றிக்கொண்டு சமுத்திரத்திலேயே மூன்றுநாள்வரை யாதொரு புகலுமில்லாமல் பிரமித்துக்கொண்டிருந்தேன்.

இவ்விதஞ்செய்வதினால் அவ்வழியாயொரு கப்பல் வந்துசேர்ந்தது. அக்கப்பலிலிருக்கின்றவர்கள் அலறி வருந்துகின்ற என்னைக் கண்டு அக்கப்பலிலேற்றிவைத்துக்கொண்டனர். யானதிலேறியவுடன் வெகுகாலத்திற்குமுன் த்வீபாந்தரஞ்சென்றிருந்த என்பிதாவை அக்கப்பலிற் கண்டேன். அவர் என்னைக்கண்டதும் தன் புத்திரனென நன்றாய் அறிந்து என் கழுத்தைக்கட்டிக்கொண்டு கண்ணீரைப்பெருக்குகின்றவராகி என் விருத்தாந்தத்தைக் கேட்டனர்.

அப்போது நானவரைப்பார்த்து ஐயா, நீர் நெடுநாளைக்கு முன்பே த்வீபாந்தரஞ்சென்றிருந்தவர் வராமையால் இனிமேலென் செய்வதென்னுங் கவலையுடன் நமது குலதருமமாகிய வாணிகத்தை விட்டுவிடலாகாதெனவெண்ணி, அத்தொழிலிற்பிரவேசித்தேன். சிலகாலஞ்சென்றபின் யான் த்வீபாந்தரஞ் செல்லவேண்டுமென்று சமுத்திரத்திற்போகும்போது கப்பலுடைபட்டு இப்போது கடலில் மூழ்கியவன் உங்களால் வெளியேற்றப்பட்டேன் என்று என் பிதாவிடஞ்சொல்ல, அவரென்னையிகழ்ந்துபேசிக் குழந்தாய், நீ எதற்காகப் பிராணசந்தேகத்தையுண்டுபண்ணத்தக்க இக்காரியங்களிற் பிரவேசிக்கின்றாய்? எனக்கோ மிகுந்த தனமிருக்கின்றது; இன்னும் அதனைச் சம்பாதிப்பதற்கும் யானிருக்கின்றேன்; இதோபார் ஸ்வர்ணம் நிறைந்த இக்கப்பலையும் உனக்குக் கொணர்ந்திருக்கின்றேன் என்று சொல்லி, என்னைத்தேற்றுவித்து அக்கப்பலுடன் என்பிதா இந்த விடங்கபுரத்திலுள்ள எங்கள் கிரஹத்திற்கழைத்துவந்தனர் என்று அவ்வணிகன் சொல்லியதைக்கேட்ட சக்திதேவன், அன்றிரவு அவ்வீட்டிற் றங்கியிருந்து மறுநாளவ்வணிகனை நோக்கி நண்பா! யான் மறுபடியும் அந்த உத்தலத்வீபத்திற்குப்போய்ச் சேரவேண்டுமாதலால் அதற்கென்ன உபாயம் செய்வதென்றனன்.

அதற்கவன் இப்போது என்னைச்சேர்ந்த சில வியாபாரிகள் அந்தத்தீவுக்குப் பிரயாணஞ்செய்கிறார்கள்; அவர்களுடன் நீரும் போகலாமென்றுசொல்ல, அந்தச்சக்திதேவனும் அவர்களுடன் கப்பலிலேறி உத்தலத்வீபம்போய்ச் சேர்ந்தனன். அவன் அவ்விடம் சென்றதும் நமது பந்துவான மஹாத்மா விஷ்ணுதத்தன் இவ்வூரிலிருக்கின்றான்; ஆதலால் முன்போலவே நாமவனுடன் கூடிவசிப்பதற்கு அந்நமடத்திற்கே போகவேண்டுமென்றெண்ணிக் கடைவீதிவழியாய்ச் செல்லும்போது செம்படவர்தலைவனான சத்தியவிரதனென்பவனுடைய புத்திரர்கள் விதிவசத்தால் அவ்விடத்தில் சக்திதேவனைக்கண்டு அவன் சமீபத்தில் வந்து நமதுபிதாவுடன் சென்ற பிராமணன் இவன்தானென்றறிந்து ஓய் பிராமணரே! நீரெங்கள்பிதாவுடன் கனகபுரி என்னும் நகரத்தைத் தேடிக்காணவேண்டுமென்று முன்பு இவ்வூரிலிருந்து சென்றீர்; இப்பொழுதோ நீர்மாத்திரம் தனித்துவந்திருக்கின்றீர்; எங்கள் பிதா எங்கே சென்றனரென்று கேட்டனர்.

அதற்கந்த சக்திதேவன் ஐயோ, அந்த சமாசாரத்தை யேன் கேட்கின்றீர்கள். உங்கள் பிதாவானவர் சமுத்திரத்தில் தண்ணீர் வேகத்தாலிழுக்கப்பட்டுக்கப்பலுடன்கூட வடவாமுகத்தினில் விழ்ந்து உயிரையிழந்தனர் என்றனன்.

அதைக்கேட்டவுடன் அவர்கள் மிகுந்த கோபத்துடன்கூடியவர்களாய் அங்கிருந்த தமதுவேலைக்காரர்களைப்பார்த்து இந்த துராத்மாவான பார்ப்பானைப் பிடித்துக்கட்டுங்கள்; இவன்தான் எங்கள் பிதாவைக்கொன்றவன். இல்லாவிடில் ஒரே கப்பலிலிருக்கின்ற இரண்டுபேர்களில் ஒருவர் வடவாக்கினியில் வீழ்ந்திறக்கவும், மற்றொருவர் அக்கப்பலினின்றும் எப்படி வெளியேறி வரக்கூடும். ஆதலால் எங்கள் பிதாவைக் கொன்ற இப்பாதகனை நமது சண்டிகாதேவியின் முன்பு நாளைத்தினம் காலையிற் பலியிடவேண்டுமென்றுசொல்லி அப்பொழுதே அந்தசக்திதேவனை அக்கடைவீதியினின்றும் அவர்கள், அதிபயங்கரமானதும் அடிக்கடி விழுங்கப்பட்டுள்ள அநேக ஜீவன்களையுடையதும் விஸ்தாரமான * உதரத்தையுடையதும் பிரகாசிக்கின்ற மணிகளின் வரிசையாகிற பல்வரிசையையுடையதுமான எமனது வாய்போலக் காணப்படுகின்ற சண்டிகாலயத்திற் கழைத்துச் சென்று அவ்விடத்திற்கட்டிவிட்டு வந்தனர்.

அன்றிரவு அங்கு கட்டுண்டுகிடக்கின்ற அந்த சக்திதேவனென்பவன் தன் பிராணனில் சந்தேகமுற்றவனாக அங்குள்ள சண்டிகாதே

---

* உதரம் என்பது - வயிறு - மத்திய இடம் என்னுமிருபொருள்படுகின்றது.

விபைக்குறித்து ஹேதேவி! ருருவென்ற அசுரன் கழுத்தினிரத்தத்தைப் பருகிச் சிதறியதாற் சிவந்திருக்கின்றதுபோற் பாலசூரியனுக்கிணையான பிரதிமையுருவுடன் காணப்படுகின்ற நீ யிவ்வுலகமனைத்தையும் காத்தனை; ஆதலால் பக்தர்கள் வேண்டும் வரத்தையருள்கின்றாயே, காரணமில்லாது பிரிவையடைந்திருக்கின்ற இவர்கள் கையில் அகப்பட்டிருக்கின்றவனும், இஷ்டஜனத்தை யடையவேண்டுமென்ற ஆசையால் நெடுந்தூரத்தினின்று வந்திருக்கின்றவனும், உன்னையெப்பொழுதும் வணங்குகின்றவனுமான என்னை ரக்ஷிக்கவேண்டும் என்றிவ்விதம் அவன்தேவியை ஸ்தோத்திரஞ்செய்து தெரிவித்துவிட்டுத் தன்னையறியாது நித்திரைசெய்ய அப்பொழுது அந்த ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தினின்றும் வெளியேறிவருகின்றவளான ஒரு ஸ்திரீயை ஸ்வப்பனத்திற் கண்டனன்.

திவ்ய சௌந்தரியத்தையுடைய அவன் தன்னிடம் வந்து தயவுடன் கூடியவளாக ஹே சக்திதேவ! நீ பயமடையவேண்டாம், உனக்கொருதீங்கும் நேரிடாது; இந்த வலைஞர்களுக்கு பிந்துமதி என்னும்பெயருடன்கூடிய ஒரு சகோதரி யிருக்கின்றாள்; அவள் காலையி லுன்னைக்கண்டதும் உன்னையே கணவனாக விரும்புவாள். நீ அதற்கிணங்கவேண்டும்; அவள் உன்னை யிச்சிறையினின்றும் விடுவிப்பாள். ஆனால் அவளை நீ மீன்பிடிக்கிற ஜாதியிற்பிறந்தவளென்று நினையாதே; அவள் தேவலோகத்திலுள்ளவள்; ஒரு சாபவசத்தால் இக்குலத்திற் பிறந்திருக்கின்றாளேயல்லது வேறில்லை என்றனள்.

இவ்விதம் சொல்லியதைக்கேட்டு அந்தச்சக்திதேவன் விழித்தவுடன் தன் கண்களுக்கு அமுதம்போற்காணப்படுகின்ற வலைஞர்ஜாதியிற்பிறந்த அக்கன்னிகையானவள் காலையில் அந்தத் தேவியின் ஆலயத்திற்கு வந்தனள். அவள் அங்குவந்ததும் கட்டுண்டிருக்கின்ற சக்திதேவனிடம்சென்று அவனைக்காணவும் அவன்மீது காதல்கொண்டவளாகித் தன்னையின்னாளென்று அவனுக்குத்தெரிவித்து நீர் வருந்தவேண்டாம், உம்மைநானிந்த ஆபத்தினின்றும் விடுவிக்கின்றேன்; ஆனால், எனதெண்ணத்தை மாத்திரம் நீர் நிறைவேற்றவேண்டும்; அதாவது இதுவரை எனது சகோதரர்கள் எனக்கு விவாகம் செய்வதற்காக அனேக வரன்களை யுத்தேசித்தும் நானதற்குச்சம்மதியாது மறுத்துவிட்டேன். இப்பொழுதோ உம்மைக்கண்ட மாத்திரத்தில் எனக்கு உம்மிடத்திற் றன்னையறியாது மிகுந்தப்ரீதியுண்டாகின்றது. ஆதலால் என்னை மனைவியாகக் கைப்பற்றவேண்டுமென்றனள். சத்தியவிரதன் கன்னிகையான பிந்துமதியென்பவள் இவ்வாறு சொல்ல, அதைக்கேட்டதும் சக்திதேவன் தான்கண்ட ஸ்வப்பனத்தை நினைத்துச் சந்தோஷமுற்றவனாக அப்படியே செய்கிறேனென்று சம்மதித்தனன் உடனே அவள் அவனைக் கட்டவிழ்த்து விட்டனள்.

(இன்னும் வரும்)

---

உ

கடவுட்டுணை.

# பாடசாலை.

—:(o):—

கல்வியாவது சித்தவிருத்திக்கேதுவான அறிவைக் கொடுப்பன பலவற்றையுங் கற்றல். இக்கல்வி ஒருவர்க்குப் பிறந்தனானறு தொட்டு இறக்கு ஞான்றும் உள்ளதாகின்றது. ஒவ்வொருவரின் கல்வியும் அவரவர் வசிக்குந் தேசகாலங்கட்கும், அவர் செய்யுஞ் சகவாசத்திற்குஞ், சமயத்திற்கும் அடுத்ததாகவே இருக்கும் என்க. இதுவே கல்வி என்பதன் பொதுக்கருத்து. இக்கருத்துப்பற்றியன்றே, ஒரு நூலைப் படித்தலும், ஒருவருடன் நண்பு பூணலும், விதேசங்களிற் சில நாட்கள் வசித்தலும், பெற்றார்க்குஞ் சுவதேசத்திற்குந் தாஞ்செய்கடன் செய்தலும், நீதியையும் ஆசாரங்களையும் அனுசரித்தலும், தர்ம சபைகளின் அங்கத்தவராய் இருத்தலும், இன்ன பிறவும் ஒருவருக்குக் கல்வியைக் கொடுக்கும் வழிகளாக எண்ணப்படும். இனிக் கல்விஎன ஆன்றோரால் விதந்து கூறப்பட்டது கற்றற்குரிய நூல்களைக் கற்றலேயாம். இதுவே கல்வி என்பதன் சிறப்புப்பொருள். இப்பொருளிற்றானே கல்வி என்னும்பதம் இந்நூலினும் மற்றெந்நூலினும் பிரயோகிக்கப்படும். சிறுவரின் மனோவாக்குக் காயங்களை விருத்தி செய்வதற்குப் பெரியோரால் அவருள்ளும் உபாத்தியா

யால் புத்திபூர்வமாகச்செய்யப்படும் பிரயத்தனமே. இக்கல்வியைக் கற்றற்குரிய இடம் பாடசாலையேயாம். பாடசாலைகளோ ஒருவகையினவல்ல, பலதிறத்தனவாகவே இருக்கின்றன. பாடசாலையையும் அதன் வகையையும்பற்றி இப்போது ஆராய்வாம்.

## (1) பாடசாலையும் வீடும்.

இக்காலத்துத் திருத்தமுற்றிருப்பன என்றெண்ணப்படுந் தேசங்களிற் காணப்படும் பாடசாலைவகைகளே ஈண்டு எடுத்துக்கொண்ட விஷயமாயினுஞ், சிறுவர்களைப் பயிற்றுவதற்கு விசேடமான பிறிதொரு சாதனமாயுள்ள வீட்டை (சுவகிருகத்தை) ப்பற்றியும் ஆலோசித்தல் அத்தியாவசியகம். இஃதிங்ஙனமாதல் யாதுபற்றியோவெனின், பாடசாலை வீடு எல்லுமிரண்டன் நோக்கங்கள் ஒன்றற்கொன்று நெருங்கிய தொடர்புடையன வாயிருத்தல்பற்றி மாத்திரமன்று; அவ்விரண்டன் காரியங்களையும் ஒன்றிற்றொனே இயன்றவரை அமைத்துக்கோடலுங் கூடுமாதல்பற்றி என்க. இங்கே வீடு என்றது வீட்டுப் பழக்கத்தை. வீட்டிற் பழகும் பழக்கத்தின் மகத்துவத்தை வியந்துகூறல் அனுவசியகம்.

இரண்டு சிறுவர்கள் ஒரேபாடசாலையில், ஒரே உபாத்தியாயரிடத்தில், ஒரே வகுப்பில், ஒரு பாடங்களையே பயின்றுவருபவர் எனினும், அவர்கள் வெவ்வேறு வீடுகளிலிருந்து வருபவராயின், அவர்களுடைய பொது அறிவும், விருப்பமும், சம்பாஷணையும், ஒழுக்கமும் ஆதியவற்றில் ஒருவர்க்கொருவர் அத்தியந்த வேறுபாடுடையராதலுங் கூடும். வீட்டிற்பழகும் பழக்கந் தீயதாயிருக்குங்கால் பாடசாலையால் வரும் பயனுஞ்சொற்பமே. மனதிற்கருத்துகள் மிக இலகுவிற்பதியும் பாலியப்பருவத்தில் ஒவ்வொருவருக்கும் அவரவர் வீட்டுச் சனங்களே சகவாசிகளாகின்றார். அச்சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லுங்கால் வேறுபலர் அவருக்குச்சகவாசிகளாய் வரினும், அவர்கள்வீட்டுச்சனங்களே மேலுஞ் சிறிதுகாலத்திற்கு அவர்களுடைய நெருங்கிய முக்கிய சகவாசிகளாய் இருப்பர். இரக்கம் வாய்மைமுதலிய பலநற்குணங்களை அடைதற்கு அடியிடும் இடமும் அவ்வீடே.



சிறுவர் நல்லொழுக்கமுடையர்களாய் வருதற்கு அவரவர்வீடுகளோ பாடசாலைகளோ ஏற்ற இடம் என்பதைப்பற்றி வெவ்வேறு மேதாவிகள் வெவ்வேறு அபிப்பிராயம் உடையர்களாயிருக்கின்றனர். வீட்டுக்கு அழகுசெய்பவள் இல்லாள். அவ்வில்லாளும் நற்குணநற்செய்கைகளாலுங் கல்வியறிவாலுஞ் சிறந்தவளாதல் வேண்டும். அதுபற்றியே,

"மங்கலமென்பமனைமாட்சி......"

என்று கூறப்பட்டது. "பாழே மடக்கொடியில்லாமனை" என்றதூஉம் அதுபற்றியே என்க. இல்லாளிடத்து மனைமாட்சி உண்டாயின் அவட்கு நன்மக்கட்பேறும் உளதாம். முற்காலத்துத்தமிழ்நாட்டுப்பெண்களுள்ளே பலர் கல்வியறிவுடையவர்களாய் இருந்ததனால், தமிழர் தங்கள் பிள்ளைகளை பாலியப்பிராயத்திலே தம் வீட்டில் வைத்தே பயிற்றிவந்தனர். மேலைத்தேசவாசிகளாகிய கிரேக்கர் இதற்குமாறான செய்கை உடையராயிருந்தனர். அது அவர்கள் பெண்களின் தாழ்ந்த நிலையினாற்போலும். பிரபல வித்தியாபண்டிதர்களுள்ளே சிலர், சிறுவர்களை அவரவர் வீட்டில்வைத்தே பயிற்றல்வேண்டும் என்னுங் கொள்கையினரா யிருந்தனர். சிலர் 'அவர்களை இளமைப்பருவந்தொட்டு உபாத்தியாயரே பயிற்றற்குரியர் என்னுங்கொள்கை யுடையராயிருந்தனர். ஆயினுஞ் சிறுவர்கள் ஏழாட்டைப்பிராயம் வரையும் இருத்தற்கு ஏற்புடைத்தானம் அவரவர் வீடென்பதே பலர் கொள்கை.

பாலர்கள் தத்தம் வீடுகளில் சுவாதீனமுஞ், சலுகையும் வாத்சல்ய சகவாசமும் உடையவராகி விளங்குவர். வீட்டினைப்போல ஏற்புடைத்தாக அமைக்கப்பெற்ற வேறு சாலைகளுமுளவேல் அவையும் அச்சிறுவர்களைப் பயிற்றற்குரிய இடங்களாகும். பாலர்களைப் பயிற்றும் இடத்தையும் "பாடசாலை" என்றல் பொருந்தாது. என்னை? பாடசாலையாவது மாணுக்கர்கள் புத்திபூர்வமான முயற்சி செய்யும் இடமும், பாலாவத்தை விளையாட்டிற்கே உரியகாலமும் ஆதலின். அதுமட்டோ, "பாலபோதம்" என்னுங்கலையை நிலைகண்டுணர்ந்த "புறாபெல்" என்னுஞ் சேர்மானிய பண்டிதருந் தம் பாலபோத முறையைப் "பாலர் தோட்டம்" எனப்பெயரிட்டு வழங்கினர்.

இம்முறையே பாலர்களைப் பயிற்றுவதற்கு மிக்க அநுகூலகரமானது. இப் "பாலர்தோட்டம்" என்னும் முறையைப்பற்றி மீண்டெழுதப் புகின் விரியுமாதலின் அவகாசம் வாய்ப்புழி மேல் எழுதுதும். பாலியர்சாலைகள் பெரிய நகரங்களுக்கும் செல்வர்களல்லாதார் பிள்ளைகளைப் பயிற்றற்குமுரிய இடங்களாம். செல்வர்கள் தக்க உபாத்தியாயரைக்கொண்டு தம் பாலர்களை வீட்டில் பயிற்றுவித்தலே உத்தமம்.

பாலாவத்தை கழிந்தபின் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று கற்றலே பொருத்தமும் வழக்குமாம். பாலாவத்தையிற் பெற்றாரின் கீழிருந்து வாழும் சுவகிருக வாழ்விற்கும், பின்னர்த் தானே தன் எஜமானாகி வாழுஞ் சுதந்தர வாழ்விற்கும் இடையாக உள்ளது பாடசாலை வாழ்வு. ஆகவே, பெற்றோர் தம் பிள்ளைகளைத் தம் வீட்டிற்றானே வைத்துக் கல்வி பயிற்றுவித்தற்கியன்ற சத்தியும் பிரியமும் உள்ளவர்களாய வழியும் அவர்களைப் பாடசாலைக்கு அநுப்புதலே அவர்களுக்கு மிகுந்த பயனைத்தருவது என்பது யாக்கணிந்து கோடற்குரியது.

(வரும்)

தி. சதாசிவ ஐயர்.

---

உ

# கம்பர் மதம்.

---

ஈந்தமிழ்மொழியின்கண்ணே ஸ்ரீஇராமாயணம் என்னும் பெருங்காப்பியத்தைக் கற்பனைக்காகரமென்னுமாறு பாடி அதனாற் கல்வியிற் பெரியாரென்றும், மகாகவியென்றும், கவிச்சக்கரவர்த்தியென்னும் தமிழ்மக்கள் பலருங்கொண்டாடும் பெரும்புகழ்படைத்த கம்பருடைய சரிதம் சில புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும் மூத்தறிவுடையோர் சிலரால் வரையப்பட்டிருக்கின்றது. அப்பெரியாரது மதத்தினைப்பற்றிய வாராய்ச்சியே ஈண்டெடுத்துக்கொள்ளப்பட்டது. அவர் வைதிகமதத்தினராதல் வெள்ளிடை விலங்கலாதலின் அதுபற்றி யாராய்தல் மிகையே; மற்று வைதிகத்துப்பட்ட சைவ, வைணவமதங்களி லெம்மதத்தின ரென்பதே ஆராயவேண்டும்.



இவரை, வைணவரெனச் சிலரும், சைவரெனச் சிலருங் கூறுகிற்பர். வைணவரென்பார் காட்டும் ஆதாரங்கள்:—இவர், ஸ்ரீமந்நாராயணனது திருவவதாரமூர்த்திகளிலொருவராகிய இராமபிரானது சரித்திரத்தைத் தமிழிற் பெருங்காப்பியமாக வியற்றியதும், வைணவ சமயத்து மெய்யடியார்களிற் சிறந்தவராகிய ஸ்ரீ சடகோபர்மீது அந்தாதி பாடியதும் பிறவுமாம். சைவரென்பார்:—இவர் தம் புதல்வர்க்கு அம்பிகாபதி யென்று பெயரிட்டிருத்தலாலும், தாம்பாடிய ஏரெழுபது என்னும் நூலின்கண் விநாயகர் வணக்கங் கூறியிருத்தலாலும், திருக்கை வழக்கத்தின்கண்ணே "எம்பிரானெம்பெருமானிந்திராதியர்க்கரிய, தம்பிரானுக்குரைத்த சந்தனக்கை" யென்றற்றொடக்கத்து அடிகளினால் சிவனையும், சிவனடியார்களையும் துதித்துச் சேறலாலும், இராமாயணத்திற் சிவபிரானைக் கூறுமிடத்தெல்லாம் இறைவன், பரமன் என்றற்றொடக்கத்துத் தலைமையுணர்த்துந் திருநாமங்களாற் கூறுதலாலும், இராமாயணத்திற் பகீரதன் வரலாறு கூறுமிடத்துக் "காந்தை மத்தமோ டெருக்கலர் கூவிளை கடுக்கை, கிரந்தபொற்சடை நின்மலக்கொழுந்தினை நினையா, அரந்தை யுற்றவனிரண்டரை யாயிரமாண்டு, புரிந்து நற்றவம் பொலிதர வரைமகள் புனிதன்" எனச் சிவபிரானை மனமுருகித் துதித்தலாலும், "சிழற்பொலிகணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட், டழற்புரை சுடர்க்கடவுடந்ததமிழ் தந்தான்" எனத்தமிழுக்கு முதலாசிரியனைச் சிவபிரானையே குறித்தலானும் "உலகம் யாவையு...சரணங்களே" என்பது முதலிய கடவுள் வாழ்த்துச் செய்யுள் மூன்றனையும், திருவள்ளுவனார் கூறியாங்குப் பொதுவேகூறிக் குறிப்பினாற்றங் கருத்துப் பெறவைத்தமையானும், இன்னோரன்ன பிறவற்றானுஞ் சைவரேயாவரென்றுகூறிச், சிவபக்தனாகிய இராமனைப் பாடுதலால் இவர் சைவராதற்கிழுக்கில்லை யென்றும், சடகோபரைப்பாடியது சமயாபிமானமல்லாத வேறுகாரணத்தா னென்றுங் கூறுப.

இருவர் கொள்கையும் இன்னவாக,—நாம் சார்ந்த துவத்தலின்றி ஆய்ந்து செல்வோமாயின் இவர், இருமதத்தினுந் துவேட

மற்ற உத்தம சமனோக்குடையரென்பது—கிட்கிந்தாகாண்டம் நாட விட்ட படலத்தில் இவர்கூறிய "அரனதிக னுலகளந்த வரியதிக னென்றுரைக்கு மறிவிலோர்க்குப், பரகதிசென் றடைவரிய பரிசே போற் புகழரிய பண்பிற் றூமால், சுரநதியி னயனேதுவான் றேய்குடுமிச் சுடர்த் தொகைய தொழுதோர்க் கெல்லாம், வரனதிகந் தருந்தகைய வருந்ததியா னெடுமலையை வணங்கியப்பால்" என்னுஞ் செய்யுள்கொண்டறியலாகும்.

மு. வேங்கடசாமி நாட்டார்.

---

உ

சிவமயம்.

# சேதுபுராண அரும்பதவிளக்கம்.

(முற்றொடர்ச்சி.)

---

(௯௧.) அந்த நெடியமுகிலில் தோன்றுகின்ற அசைகின்ற வொளியையுடைய மின்னலானது அவர்களுடைய சிந்தூரதிலகத்தையணியும் நுதலிற்சேர்கின்ற சீமந்தரேகையைக் காட்டும்.

(௯௨.) அகழ்க்கிடங்கு நெடிய கடலைப்போற் றோன்ற, அகழினருகைச்சூழ்ந்த உறுப்பையுடைய விசாலமாகிய மதில்கெடாத கப்பலிலுள்ள தோணிகளைப்போலாக, இடம்விளங்குகின்ற நடுவில் வாழ்வோர் வறியவணிகரைப்போலாக, ஒருங்கேயிருக்கின்ற தலைவன் மீகாமனையொத்துள ஊர்களெங்கும்.

(௯௩.) ஆலை - கரும்பாலை. வேலை - தொழில்.

(௯௫.) அழுக்கைப்புறத்தே கொள்ளாத செந்நிறத்தையுடைய அக்கினித்தூணின் உச்சியில். மலர்மேலன்னம் - பிரமா.

(௯௬.) வள்ளி. (௧.) உலக்கைப்பாட்டு. (௨.) வள்ளிக்கொடி. அலந்தை - தடாகம். குருகு (௧.) வளையல். (௨.) கொய்யடிநாரை.



முல்லை. (௧) கற்பு. (௨) முல்லைக்கொடி. ஆரம். (௧) முத்து, (௨) சந்தனம்.

(௯௭.) பொறி. (௧.) இலக்குமி. (௨.) தேமல். கலை. (௧.) கலைஞானம். (௨.) மேகலை. வண் - தோடு.

(௯௮.) உழை. (௧) மான். (௨.) யாழிசை. கோடு. (௧.) சங்கு. (௨.) மலை. விசும்பு - ஆகாயம். முளை. (௧.) பாலிகை. (௨.) மூங்கில்.

(௯௯.) குறிய இடையையுடைய பெண்களின் கண்கள் குழலோடுகள்வைக் கூரும். குறிய இடையையுடைய பெண்களின்கண்கள் அவர்களதரத்தோடு பொருந்தி யொருதரம் கோபமிகும். குறிய இடையையுடைய பெண்களின் கண்கள் சுற்றிய கச்சையணிந்த இரண்டு ஸ்தனங்களோடும் சூதைப்பொருந்தும். குறிய இடையையுடைய பெண்களின்கண்கள் அவர்களுடைய ஆலிலைபோன்றவயிற்றின் வுரையோடு அந்தரங்கத்தை நேரும்.

இனிக்களவுநேரும் என்பதற்குச் சிலேடைவகையாற் கூறுங்கால் களாவைநிகர்க்குமெனவும், கோபமூரும்என்பதற்கு இந்திரகோபத்தை நிகர்க்குமெனவும், சூதுசாரும் என்பதற்குச் சூதாடுகருவியை நிகர்க்குமெனவும், அந்தரங்கத்தை நிகர்க்குமென்பதற்கு அழகிய திரையை நிகர்க்குமெனவுங்கொள்க.

குற்றிடைமடவார் நாட்டம் என்பதை முதனிலைத் தீபமாக்கிப் பொருள்கொள்க.

(௧௦௦.) மூங்கிலுக்குச் சுருள்பொருந்திய கூந்தலையுடைய பெண்களின் தோணிகராம். தளவிஙா. இனஉவமவுருபு.

(௧௦௨.) அளிந்தம் - கோபுரவாயிற்றிண்ணை.

(௧௦௩.) பொதிபாசநிலை - பந்திக்கும் பாசத்தினிலை.

(௧௦௮.) அங்கு + உழல் + அளியா + அளி + அன்பு.

(௧௧௦.) கடியகூற்று - வன்சொல். ஆம்பயனடையாமாற்றம்- பயனில்சொல். மருள்கொளுங்கிளவி-பொய். தீயவஞ்சமார் குறளை -

புறங்கூறல். உருச்சொல்லாயும் போதினும் - இந்நால்வகைச்சொற்களைப் பிறர்கூறவாராயும் பொழுதினும். மிறிஞிபோலப்பொருள்கொளார் - இமிஞிமிறிஞி என்றற்றொடக்கத்தனபோலப் பொருள்கொள்ளார்.

(ககக.) மிகுந்த வலிமையுடைய பாண்டிநாட்டிலுள்ளோர். இனியகொடைப்பண்பு தம்மாட்டிலரோ உளரோவெனின் நல்லகொடைப் பொருளையன்றிக் கொடுத்தலியையாத ஆன்மாவை விரும்பினும் விரும்பினோர் கேட்குமுன் கொடுக்கும் பகுதியர்; ஆயின் முழுதையும் நின்றிரந்தாலும் பின்கொடுக்கும் பகுதியராகார்.

(கக௨.) பாண்டியனுடைய குலமுதலோர் மன்மதனுடைய குடையாம். தென்றலையும் சந்தனத்தையும் பொதியந்தருமாதலின் அழகுபொருந்திய பாண்டிநாட்டிலுள்ளதே யின்பம். சொல்லிய அந்நாட்டிலுள்ளவர்களே போகநீங்கியபொழுதடைதலால் மோட்சத்தையும் அடைவர்.

(கக௩.) மாதவிற்குக்கொள்ளுங்கால் முலையாகவும் நாட்டிற்கியையக் கொள்ளுங்கால் திரவியமாகவுங்கொள்க. வரும்படியளித்தலால் அரசனுக்கியையக்கூறுங்கால் பூமியையெனவும், நாட்டிற்கியையக் கூறுங்கால் வருமானம் எனவுங்கொள்க. விடுதவலால் - தேசிகனுக்கியையக்கூறுங்கால் மோட்சமெனவும், நாட்டிற்கியையக்கூறுங்கால் வீடு எனவுங்கொள்க.

(கக௪.) மாலைநல்க, மால் - மயக்கம். புரிகடன்வேலை - செய்கின்ற கடனுயுள்ளவேலை. வேதவேள்வி - வேதங்கள் விதிக்கும்யாகம். வேலை - காலம், வீணிழைப்பதின்றாயிடும் - வீணாய்க்கழிப்பதின்றாம்.

(கக௫.) வாரணகும்பம் - யானைமத்தகம். வாயில்மேயதுபூரணகும்பம். தானம்யாவையும்-இடங்களினெல்லாம். நந்தவனங்களேயாம். வந்தவர்தாம் தவனங்கள் தணிவர். தவனம் - தாகம். பாணம்-தேன்.



கக௬. வளை - { சங்கு. / வள்ளக்கொடி. / வள்ளைப்பாட்டு. }

கக௭. பொருந்தியபெண்களுடையகண்கள் பாணம்போல்வன. காதுகளும் வாளியைச்சேர்வன. ஆடவர்கள் மன்மதனைப்போல்வர். அவருக்குநேராகச் செல்லச்சிங்கமஞ்சும்.

கக௮. வாரணம் { சங்கு. / யானை. மாரணம் - மாரணவித்தை. }

கக௯. திகைப்பன மான்கூட்டம்.

க௨௦. வல்லியைச்சேர்வன முல்லைகள். வல்லி - விலங்கு.

(க௨க.) ஆயிரங்கவர்பொருந்திய நாவையுடைய சேடன்.

## கந்தமாதனச்சிறப்பு.

---

(க.) சேதுவின்கணுள்ள விரிகின்ற திரையையுடைய் கடலாகிய பரந்த நீர்சூழ்ந்த கந்தமாதனத்தின் சிறப்பை.

(௨.) சிவபெருமானுடைய வருவாகிய வருளன்றி உருவாகிய வருளெனச்சிறந்து கடல்சூழ்ந்திடுகின்ற பிறவியைத்தராத நெடிய கந்தமாதன பருவதத்தினழகை அவருடைய திருவருளாற் சிறிது கூறுவாம். சிறந்து - அருள எனமுடிக்க.

(௩.) வெள்ளியநதியையும் தவழ்கின்ற சந்திரனையும் சடையிற்றங்குதலாலும், மணமமைந்த உமாதேவியார் பொருந்தும் பாகினாலும் வலியகொடிய யமன் சேர்கிலாமையாலும் சிவனைநிகர்த்தது கந்தமாதனம். மலைக்கியையக் கொள்ளுங்கால் வெள்ளியநதியைத் தவழ்கின்ற சந்திரனையும் உடைய ஆகாயம்வரைக்கும் உயர்தலாலும் குணமமைந்தபசிய கொடிபடரும் பாங்காலும் யமன் அங்குள்ளார் மாட்டுச் செல்லாமையாலுமெனக்கொள்க.

(௪.) விரிந்த பெரியசக்கரமும் வெள்ளியசங்கும் பொருந்தலாலும் உரியதன்னடியிடத்தில் உலகம் பொருந்தலாலும், விரிந்த தாம

வரமமைவையுடைய உந்தியானும் உலகத்தைத் தாங்குதலானும் விட்டுணுவை நிகர்க்கும் கந்தமாதனம். மலைக்கிளையைக் கூறுங்கால் விரிந்தபெரிய கடலின் கரையிற் பொருந்தலானும், உரிய தன்னடியிடத்திலுலகமடங்கலானும்; மலர் பொருந்திய தடாகத்தானும், பூமியைக் காத்தலானும் எனக்கொள்க.

(௬.) உருவம்பொருந்திய சகல உலகங்களையுந் தரும் பட்டத்துடைப்பொருந்தலானும், இருக்கும் உந்தியங்கமலம்பொருந்தலானும், நான்கு முகங்களும் விளங்கலானும், விருப்போடு சரசுவதி சேருதலினாலும் பிரமனை நிகர்த்தது கந்தமாதனம்; இனி மலைக்கிளையைக் கூறுங்கால் அழகுபொருந்திய குவளைகளைத் தருகின்ற தடாகங்களைப் பொருந்தலானும், இருக்குந் தாமரைகளைப் பொருந்தலானும் நான்கு திசைகளினும் விளங்கலானும் விருப்போடு பெண்மானுங் கலைமானும் பொருந்தலானுமென்க.

(௭.) அனைத்தற்கரியவற்றானும், முத்துப்பொருந்திய கோட்டினாலும், நெடியபொன்மலையையே யேடாகக்கொண்டு எழுதலானும், கரியநிறத்தையுடைய அழகிய நீண்ட வாயோடு பொருந்துங்காவலினாலும் விநாயகரை நிகர்த்தது கந்தமாதனம். இனி மலைக்கிளையைக் கூறுங்கால் அனைத்தற்கரியவாற்றினாலும், சந்தனமரங்கள் செறிந்த சிகரங்களானும் இணங்கி நெடிய மேருமலையைப்போலுயருங்குணத்தானும் அழகுமிகப்பொருந்தும் இடத்தில் மூங்கில்கள் பொருதலானுமென்க.

(௮.) சந்தனத்தைமேலேயணிந்த முலைகளையுடைய வள்ளிநாயகியார் சார்தலானும் அளவிறந்த சூரர்களுடைய கூட்டமறும்படி நெருங்குதலானும் அழகிய மயிலின்மீதுதோன்றுங்காட்சியானும்முருகவேளை நிகர்த்தது கந்தமாதனம்; இனிமலைக்கிளையைக் கூறுங்கால் சந்தனமரங்களின்மீது முல்லைக்கொடி சார்தலானும், அளவிறந்த தெய்வக் கூட்டங்கள் மிக நெருங்கலானும் அழகியமயில் தன்மீது தோன்றுங் காட்சியானுமெனக் கொள்க.

(௯.) தூங்குகின்ற கையையுடைய ஐராவதத்தின் மேலாகுந்தன்மையானும், சுவர்க்கத்திற்செல்கின்ற இந்திராணியைச் சேருந்



தன்மையானும் நெருங்கிய பலகண்களினாலும் விளங்கிய சுவர்க்கத்திலுள்ள இந்திரனைப்போல்வது கந்தமாதனம். மலைக்கிளையைக் கூறுங்கால் ஆகாயத்திற்றகைமைபொருந்திய சுவர்க்கத்தினும் மேலாகுந்தன்மையானும் முகிலிற் செல்கின்ற சந்திரனைச்சேர்தலானும் நெருங்கிய தேனையுடைய பலாவினாலும் விளங்குமென்க.

(வரும்.)

ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை.

# *ஐந்திணைமாக்கள் பூர்வ வரலாறு.

மாட்சிமைதங்கிய பீடாதிபதியவர்களே, செந்தமிழ்ப்பரிபாலன வித்வச்சபையோரே, தமிழ்ச்சங்கத்து ஒன்பதாவது மஹோற்சவம் நடைபெறும் இக்காலத்தில், சுருங்கிய நூற்கேள்வியையுடைய புல்லறிவாளனாகிய சிறியேன் நல்லறிவாளர் முன்சென்று ஐந்திணைமாக்கள் பூர்வ வரலாறு என்ற நுண்ணிய அரியபொருளை உரைத்தலால் நகைமுகமே தோன்றுமென்னும், குற்றங்களைந்து குறைபெய்து கோடல் அன்னோர் கடனெனக் கருதி முன்வந்தேன்.

“அறையுமாடரங் கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ
இறையு ஞான மிலாதவென் புன்கவி
முறையி னூலுணர்ந் தாருமுனிவரோ.”

இவ்வியாசத்திலேயுள்ளனவெல்லாம் பெரும்பாலும் பலநூல்களினின்று உள்ளவாறாகவும் சங்கிரமாகவும் வகுத்தியற்றப்பட்டனவேயன்றி, எம்மதமாகவும் ஊகமாகவுமுள்ளன மிகச்சிலவேயாம்.

பூவுலகத்திலேயுள்ள பாஷைகளுள்ளே தென்மொழியாகிய தமிழ் மிக்க பழமையும் இலக்கணவரம்பும் நூற்பெருக்கமும் அதிபுரா

* இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாம் வருஷோத்சவ காலத்தில் (26—5—10-ல்) ஸ்ரீமத்-Y. S. டேலர் போதகர் (Rev. Y. S. Taylor) அவர்களாற் படிக்கப்பெற்றது.

தன இதிகாசங்களும் நாகரீக வளமுமுடைய பாஷையென்பது ஆய்ந்தோர் துணிபாம். தமிழ் என்ற சொல்லில் த என்ற வல்லினமும் மி என்ற மெல்லினமும் ழ என்ற இடையினமுஞ் சிறப்பாகச் சேர்ந்து தமிழ்எழுத்துக்கள்யாவும் நிறைந்து நிற்றல்போல, மதுரை என்ற பதமும் மெல்லின வல்லின இடையின மூவெழுத்துக்களாலும் தமிழகம் முழுதுக்கும் உரிமையானதாய் தமிழ்மக்கள் யாவரும் கொண்டாடிக்களிக்கும்படி நேர்ந்திருப்பதினால், தமிழ் நிலமாக்களின் வரலாறுகளை ஆராய்ந்துணர்தல் மதுரைத்தமிழ்ச் சங்கத்தார்க்கும் அபிமானிகளுக்கும் இன்றியமையாதனவாம்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணை 5-ம் சூத்திரத்தில்,

“மாயோன்மேய காடுறையுலகமுஞ்
சேயோன்மேய மைவரையுலகமும்
வேந்தன்மேய தீம்புன லுலகமும்
வருணன்மேய பெருமண லுலகமும்
முல்லைகுறிஞ்சி மருதநெய்தலெனச்
சொல்லியமுறையாற் சொல்லவும்படுமே.” என்றும்,

18-ம் சூத்திரத்தில்,

“தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
யவ்வகை பிறவுங் கருவென மொழிப.” என்றுங்கூறினர்.

கடல்வண்ணன் காதலித்த காடுறையுலகமுஞ் செங்கேழ் முருகன்காதலித்த வான் தங்கியவரை சூழுலகமும் இந்திரன் காதலித்த தண்புனனாடும், கருங்கடற்கடவுள் காதலித்த நெடுங்கோட்டெக்கர் நிலனும் முல்லைகுறிஞ்சி மருதம்நெய்தலென ஒழுக்கங்கூறிய முறையானே சொல்லவும்படும். எல்லாத்திணைக்கும் தெய்வம் உணா விலங்கு மரம் புள் பறை தொழிலென்று இவற்றை யாழின் கூற்றோடே கூட்டி அவைபோல்வன பிறவுங்கருவென்று கூறுவர் ஆசிரியர் என்றார்.

உலகத்தைப்படைக்கின்ற காலத்துக் காடும் மலையும் நாடுங்கடற்கரையுமாகப் படைத்து இந்நால்வகை நிலத்துக்கும் ஆசிரியன்தான் படைத்த ஐவகை ஒழுக்கத்திற் பாலையொழிந்தனவற்றைப் பகுத்துக் கொடுத்தான். இப்பாலைவரையைபோல் ஒருபாற்படாது நால்வகைநிலத்திற்கும் உரியவாகப் புலனெறிவழக்கஞ்செய்து வருதலைப்பற்றி பாலைக்கு நடுவணதென்றும்பெயர்; இஃது ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெற்றபெயர். புணர்தல் இருத்தல் இரங்கல் ஊடல் என்பவற்றிற்கு இடையே பிரிவுநிகழ்தலானும், “முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல்பழிந்து நடுங்குதுயருறுத்துப், பாலையென்பதோர் படிவங்கொள்ளும்” என முதற்பொருள்பற்றி பாலை நிகழ்தலாயிற்று. ஆனால், “நடுவணதொழிய” யென்றது ஐந்திணையென்றார், பாலையும் அவற்றோடொப்பச் சேரற்கு. ஆதலின் இவ் ஐவகை நிலமாக்களைப்பற்றித் தொல்காப்பியம் கூறுவது, ஆரியர் தென் இந்தியாவிற் குடியேறிய காலத்திற்கு முற்பட்டதாகும்.



தமிழ்நில வெல்லையைப்பற்றி “வடவேங்கடந்தென்குமரி” எனப் பனம்பாரனாரும், “வேங்கடங்குமரி தீம்புனற்பௌவமென், றிந்நான் கெல்லை தமிழதுவழக்கே” எனச் சிகண்டியாசிரியரும் எல்லைகூறினர்.

இவ்வாறு கூறிய எல்லைக்குட்பட்ட நாடுகள் பலவாகும். இவற்றில் 49-நாடுகள் தலைச்சங்ககாலத்தில் கடல்கொள்ளப்பட்டன.

காலத்தைப்பற்றிப் பேசுங்கால் கிறிஸ்துவுக்குமுன் இத்தனையாம் வருஷம் அல்லது கிறிஸ்துவுக்குப்பின் இத்தனையாம்வருஷம் என்று காலத்தைக்குறிப்பிடுவது சங்கவித்வான்களில் சிலருக்குப்பொருத்தமில்லாததாயிருக்கின்றது. ஆயினும், நாம் இசைவுக் குறிப்புகளினால் ஒன்றை நிச்சயமாய்க் கூறலாம். அஃதாவது, “நான்மறை” என்று தொல்காப்பிய பாயிரத்தில் வருவது தைத்திரியமும் பௌடிகமுந், தலவகாரமும், சாமவேதமுமாம். ஆகவே இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்ற நால்வேதங்கள் திரணதூமாக்கினி முனிவரென வியற்பெயரையுடைய வாசிரியர் தொல்காப்பியனாருக்கும் அவருடன் கற்ற அதங்கோட்டாசிரியர்க்கும் பிற்காலத்தினராகிய வியாச முனிவரால் நான்கு கூறுய்ச்செய்யப்பட்டனவென்பது மறுக்கப்படாத சத்தியம். ஆதலால் ஆரியர் விந்தியமலைக்குத்தெற்கே தொல்காப்பியகாலத்தில் பிரவேசிக்கவில்லையென்பதும், வியாசர் வகுத்த வேதங்களும் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்ற சாதிப்பிரிவும் பிற்பட்டதென்பதும் நிச்சயமே.

முற்கூறிய ஐவகை நிலத்திற் றமிழ்நிலமாக்கள்வரலாறு என்னவென்பதை விசாரிப்போம்.

1. முல்லைநிலமாக்கள்:—வேய்ங்குழலிசை நிரம்பப்பெறலின் காடுடையுலகம் முல்லையென்னப்பட்டது. முல்லைக்கு உணா, வரகுஞ் சாமையும் முதிரையும்; மா, உழையும் புல்வாயும் முயலும்; மரம், கொன்றையுங்குருந்தும்; புள் கானங்கோழியுஞ் சிவலும்; பறை, ஏறுகோட்பறை; செய்தி, நிரைமேய்த்தலும் வரகு முதலியன களைகட்டலுங் கடாவிடுதலும்; யாழ்முல்லையாழ்; பூ, முல்லையும் பிடவுந்தளவுந் தோன்றியும்; நீர், கான்யாறு; ஊர், பாடியுஞ் சேரியும்; முல்லைநிலவாசிகளுக்குக் கோவலர் என்றுபேர். இவர்கள்காடுகளில் வசித்து ஆடுமாடுகளை மேய்த்து கிருஷ்ணன்போன்ற ஒரு கடவுளைவணங்கி வந்தார்கள். அந்தக்கடவுள் இருண்ட நிறமுள்ளவரென்றும், விஷ்ணுவின் அவதாரம் என்றும் கூறியுள்ளது. ஆயர் ஆடுமாடுகளைவளர்த்து அந்நாட்டின் கண்ணுள்ள மான் முயல் காட்டுக்கோழிகளை வேட்டையாடிப் புசித்தார்கள்.

மல்யுத்தஞ்செய்தலும் இடைப்பெண்களோடு புற்றரையிற் கூத்தாடுவதும், புல்லாங்குழல் ஊதுவதும் அவர்களுக்குப்பிரியமான விளையாட்டு. அவர்கள் கிராமங்களில் ஆடுமாடுகளின் இரைச்சலும் பாட்டுகளும் சதா தொனித்துக்கொண்டிருக்கும். அவர்கள் கிராமங்களுக்குப் பாடி யென்றும், சேரி யென்றும் பெயர். தமிழ்ப்பாடி, வாணியம்பாடி முதலிய பேர்களைக்கவனிக்கவும். ஆதியில் அழைக்கப்பட்ட அப்பேர்களே இப்போதும் வழங்கிவருகின்றன. ஆகவே, முல்லைநிலவாசிகள் கோவலரென்றும் அவர்கள் ஆயர் இடையர் முதலியபேர்களால் அழைக்கப்பட்டார்களென்றும், ஆதிமுதல் அவர்கள் முல்லை நிலங்களில் வசித்துவந்தார்களென்றும் பூர்வ கவிஞர் புகழ்ந்தெழுதியிருக்கிறார்கள்.

2. குறிஞ்சிமாக்கள்:—மலைப்பாங்கான இடத்தில் வசித்த நாகரீகமில்லாத ஜனங்களுக்கு குறிஞ்சிமாக்கள் என்று பேர். குறிச்சி மரங்கள் இவ்விடங்களில் ஏராளமாயிருந்ததினால் அம்மரப்பேரால் அழைக்கப்பெற்றனர். அன்றியும், குறிஞ்சிமாக்கள் குறவரென்று சிறப்புப்பெயர் பெற்றனர். மூங்கில் அரிசிகளையும் தினை, சாமை



முதலிய தானியங்களையும் சமைத்துப் புசித்தனர். காடுகளில் தேனையும் காய்கனிகளையும் புசித்து நீரோடைகளிலுள்ள சுத்தஜலத்தைப் பானம் பண்ணினார்கள்.

அவர்கள் வசித்த கிராமங்களுக்குச் சிறுகுடி அல்லது குறிச்சி யென்றுரைக்கப்படும். தூத்துக்குடி, பனைக்குடி, வெள்ளிக்குறிச்சி, பனைக்குறிச்சி முதலிய ஊர்ப்பெயர்களைக் கவனிக்கவும். இந்தியாவிலும், இலங்கையிலுமுள்ள அநேக மலைகளுங் குன்றுகளும் ஸ்கந்தருக்குகந்தது. இலங்கைத்தேச புத்தமதநாளாகமமாகிய மகாவம்சத்தில் இலங்கையிலுள்ள மலைநாடாகிய கதிர்காமமென்றவிடத்தில் ஸ்கந்தருக்குப் பேர்போன ஓர் ஆலயமுண்டு. அந்த ஆலயத்திற்குத் தென் இந்தியாவிலிருந்து இப்போதும் பலர்போய் தரிசிப்பதே சான்றாகும். இலங்கையில் புத்தமார்க்கம் போவதற்குமுன்னுகை கி. மு. மூன்னூறுவருடங்களுக்கு முற்பட்டது இக்கதிர்காமம். மதுரைக்கடுத்த திருப்பரங்குன்றமும். ஸ்கந்தருக்குரிய பூர்வஸ்தலமாம்.

3. மருதநிலமாக்கள்:—கிருஷிமாக்கள் என்று மருதநிலமாக்களுக்குப்பேர். மருதம் செயற்கைநிலப் பாகுபாடு. மருதமரத்தின் பேரால் மருதநிலம் என்றழைக்கப்படுகிறது. கிருஷிகர் செழிப்பான நிலங்களில் வசித்து உழவுதொழில் அபரிமிதமாய்ச்செய்துவந்தனர். வேளாண்மைசெய்வோர் வேளாளர் என்றழைக்கப்பட்டனர்.

வேளாளர் மருதநிலத்தின் தலைவர். இம்மருதநிலத் தலைவரினின்று சேர சோழ பாண்டியர் என்ற அரசர் தோன்றினர். வேள் புலவரசர் வேண்மார் வேளிர்யாதவர் பேளாளர் (கன்னட வழக்கு) எனப் பல சிறப்புப்பெயர்களால் மருதநிலமன்னர் குறுநிலமன்னர் என்றழைக்கப்பட்டனர். பாண்டிய அரசர் ஆரம்பத்தில் நிலச்சுவான்களாய் பயிரிடும் தொழிலை முயற்சியாய் நடத்தி பலன்களைக் குன்றுபோற் சேர்த்துத் திருவிழாக்கள் கொண்டாடினர். பாண்டியரின் மூதூர் மதுரையே. பேரூர் மூதூர் என்று கிராமங்களுக்கும் கிழான், கிழவன், ஊரன் என்று தலைவருக்கும் சாதாரணமாய் வழங்கின. கிழவன் என்றபதம் உரிமையுடையோன் என்ற பொருளில் வரும்.

மருதநிலமாக்கள் யுத்தத்திற்குப் போகும்போது பறையென்னப்பட்ட கொட்டு அடிப்பார்கள். இவர்கள் கிருஷிமாக்களின் அடிமைகளாய் பூர்வம்முதல் பறையடிக்குந் தொழிலை மங்கலத்திலும் இழவுகாலத்திலும் அடித்துவந்தார்கள். அப்பறை மணப்பறையென்றும் பிணப்பறையென்றும் சொல்லப்படும். இச்சாதியார் யாழ்ப்பாணம் முதலிய இலங்கையின் வடபகுதியில் பூர்வமாய் இத்தொழிலையே நடத்திவருகிறார்கள்.

மருதமாக்களுக்கு மருதயாழென்று சொல்லப்பட்ட நரம்புக் கருவியும் உண்டு. மாருதமென்ற ஓர் கோத்திர ராகத்தைச்சேர்த்துப் பாடுவார்கள். மருதமாக்கள் வசித்த கிராமங்கள் கங்காநதிவரை முற்காலத்தில் வியாபித்திருந்ததென்று அங்கு இப்போது கூறப்படும் சில கிராமப்பேர்களால் அறிகிறோம்.

கிழவன் பாண்டியன் என்ற வார்த்தைகள் செந்தமிழில் ஒரே அர்த்தமுள்ளவைகள். ஆரம்பத்தில் வயதுசென்றவன் மூத்தவன் என்ற அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டது. முன் தங்கள் சந்ததியாருக்குப் பாரமாயிருந்த கிழவர் இப்போது தலைவர்களாகி கோத்திரப்பிதாக்களுக்குரிய அதிகாரம் செலுத்தவும் அரசாட்சி செய்யவும் யோக்கியதையானார்கள்.

4. நெய்தநிலமாக்கள்:— கடற்கரையோரங்களில் வசித்த மீன்பிடிக்கிற ஜனங்களுக்குப்பேர். அவர்களைப்பற்றித் திவாகரம் மக்கட்பெயர்த் தொகுதியில் "பரதவர் நுளையர், கடலர், வலையர், சலவர், திமிலர் நெய்த நிலமாக்கள்" என்றுரைக்கப்பட்டன. அவர்கள் குடியிருப்பு பட்டணம் பட்டம் பாக்கம் என்றழைக்கப்படும். சென்னபட்டணம் நாகப்பட்டணம் புரசபாக்கம் முதலிய நாமங்களைக் காரணத்துடன் யூகித்துப்பார்க்கவும்.

5. பாலைநிலமாக்கள்:—பாழான காடுவனங்களில் வசித்த எயினர் முதலிய கள்ளஜாதியார் காளிதேவதையை வணங்கினவர். குறும்பர் என்று தலைவருககுப்பேர். கும்பகோணம் ஒருகாலத்தில் பாலைநிலமாயிருந்ததினால் குறும்பர்கோணம் என்று அழைக்கப்பட்டதாகச்சொல்லப்படுவது பொருந்தாது.



இவ்வாறு மேற்காட்டிய ஐவகை நிலமாக்களும் விந்தியபர்வதத்திற்குத் தெற்கே தெலுங்கு, கன்னடம், மலையாளம், மஹாராஷ்டிரம் முதலிய பிரிவுண்டாகும்முன் வசித்தஜாதியார். கி.மு. 27ல் ரோமராச்சியத்தின் அரசனாகிய அகுஸ்தன் ராயன் ஆண்டகாலமுதல் கி. பி. 491-ல் ஆண்ட சிரோராயன் ஆண்ட காலவரையுள்ள ரோமை நாணயங்களிற்சில, மதுரையிலும் அதற்கடுத்த இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டன. அந்த நாணயங்களை நவீன சரித்திரக்காரர் தம் தம் ஜாதிக்குரிய நாணயங்களாக அக்காசுகளிலுள்ள அடையாளங்களினாற் கூறினும் அது அப்படியல்ல; அவை ரோமை அரசர் நாணயங்கள் என்பது தெளிவு.

கி. பி. 77-ல் பிளினிஎன்ற சரித்திர ஆசிரியன் பாண்டிய நாட்டுக்கு மதுரை தலைப்பட்டணமென்று எழுதினார்.

தமிழ் அகவல் கலிப்பா வஞ்சிப்பாவிற்பாடிய பஞ்சகாவியங்கள் எட்டுத்தொகை பத்துப்பாட்டு முதலியன, நிலமாக்களைப்பற்றி விளக்கிக்காட்டும். புறப்பொருள் வெண்பாமாலையில் தமிழரசர் போர்க்குச்செல்லும்போது அதற்கென்று சூடும் பூக்களைக்கொண்டு போர்த்தன்மை அறிதல் ஆனந்தமாகும். வால்மீகியார் அதை நன்கறிந்து அயோத்தியாகாண்டத்தில் வரைந்தார். தமிழ்ப்பூர்வகுடிகளாக பூக்களிற் சிறப்புடைய நான்கையும், தானியத்திற்சிறப்புடைய நான்கையும் புறப்பாட்டில் எடுத்துக்கூறியதுபோல "பாணன் பறையன் துடியன் கடம்பனென், றின்னான்கல்லது குடியுமில்லை" எனத் தமிழ்க்குடிகளிற்சிறப்புடைய நால்வரைக்கூறியிருத்தலில் இருக்கும் விசேஷமென்ன என்பதையூகித்து அறியவேண்டியதே. ஆரியரது பிரவேசம் தக்ஷணத்தில் நிகழ்ந்தபோது தான் திராவிடம் என்ற பதம் உபயோகிக்கலாயிற்று.

கி. மு. சுமார் 560-ம் வருஷத்தில் சாலமோன் இராஜாவின் காலத்தில் I. இராஜாக்கள், 10-22-ல் தென் இந்தியாவின் திசைகளிலிருந்து பொன்னையும் வெள்ளியையும் யானைத்தந்தங்களையும் குரங்குகளையும் மயில்களையும் கொண்டுவந்தனரென்று எழுதியிருக்கிறது. பழைய வேற்பாடு எபிரேயுபாஷையி லெழுதப்பட்டது. மயில்கள் என்பதற்

குத் தமிழ்ப்பாஷையின்வார்த்தையாகிய தோகை என்றபதம் வேதத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் பூர்வமாய்க்கவனித்தால் எகிப்து ராச்சியத்தில் தென் இந்தியாவிலுள்ள ஆலயங்கள் மாதிரியான ஆலயங்கள் கட்டப்பட்டு வந்தன. இது எப்படி என்று கவனித்தால் மரக்கலங்கள் வழியாய்க் கள்ளிக்கோட்டை முதலிய மலபார்க்கரை சேர்ந்து தென் இந்தியாவின் ஆலயங்களைத்தரிசித்து அவ்விதமே இருண்டகண்டத்திலும் அழகான ஆலயங்களையும் கோபுரங்களையும் நிர்மானித்தார்களென்று கூறலாகும்.

ஆரியரது பிரவேசத்திற்கு பிற்பட்டு உண்டான ஜாதிப்பிரிவுகளைப் பூர்வவரலாற்றுடன் ஒத்துப்பார்க்க அறிஞரை வேண்டுகின்றேன்.

கி. பி. 5000-வருடங்களுக்குமுன் விவில்யவேதத்தில் நாம் வாசிக்கிற தென்னவென்றால் ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான். காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். யாபால் கூடாரங்களில் வாசம்பண்ணுகிறவர்களுக்கும் மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பனானான். யூபால் கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவர்க்கும் தகப்பனானான். தூபால்காயின் பித்தளை இரும்பு முதலியவற்றின் தொழிலாளர் யாவருக்கும் ஆசாரியனானான் என்று வாசிக்கிறோம்.

நல்லது, நிலமாக்களின் பூர்வவரலாறு நமக்கு எதைக்கற்பிக்கிறது.

தொழிலினால் மானிடர் சிறப்புப்பெற்றனர். ஒருவனை நீ யார் என்று வினவினால், அவன் நான் சமுசாரி வியாபாரி கொல்லன் தச்சன் தட்டான் என்றுரைப்பானேயன்றித் தான் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரனென்றுரையான்.

அப்படியே மேலானோரைப்பற்றி இவர்கள்யாரென்று விசாரித்தால், இவர் ராஜா இவர் குறுநிலமன்னர் இவர் அந்தணர்என்றுரைப்பார்.



மேற்குத்தேசங்களில்ஒருவன் எத்தொழிலைச்செய்தாலும் அறிவுநிதி நியாயம் அன்பு இவற்றில் சிறந்தவனாயிருந்தால் அவன் சிறப்புடையவனாய் மதிக்கப்படுவான்.

2. விவசாயத்தொழில் பூர்வத்தில் சிறப்புடைத்தாய் நிலமாக்களால் மதிக்கப்பட்டன.

இக்காலத்தில் விவசாயத்தொழிலில் சிரத்தையுடையோர் மிகச்சிலரே. ஓதுவான் எல்லாம் உழுவான் தலைக்கடையே.

3. சோம்பலுக்கேதுவான ஜீவியத்தை ஒழித்து பூர்வநிலமாக்களைப்போல எத்தொழிலானாலும் அத்தொழிலை நன்றாய்க் கற்றுப் பலன் பெறுவது சிறப்பு. ஒரு தோல்ஷாப்புக்கு சீமையிற் போனால் முதல் அறை வெகு நாற்றமுள்ளதாய்க் காணப்படும். ஆகிலும் நாம் ஒவ்வொரு அறையாய்ப்பார்த்துக்கொண்டு போகும்பொழுது நாற்றமாய்க்காணப்பட்ட அத்தோல் அதற்குள் பட்டுச்சேலைபோல பண்படுத்தப்பட்டு மடிக்கப்பட்டு நமது கைகளில் கொடுக்கப்படும்போது நாம் மெத்த ஆச்சரியப்படுவோம். இஃது தொழில்மாக்களின் சிறப்பு. அப்படியே நிலமாக்களின் தொழிலின் சிறப்பும் இருக்கின்றன. எதில்என்றால், கெட்டுப்போகும் நிலைமையிலிருக்கிறமாக்களை நல்வழியால் மேலானபதவி அடையச்செய்தலே. நிலமாக்களே! கடவுள் மனுஷனைச்சிருஷ்டித்து நீங்கள் பலுகிப்பெருகி பூமியைநிரப்பி அதைக்கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்றுசொல்லி அவர்களை ஆசீர்வதித்தார். பொன்யுகக்காலம் தமிழ்ச்சங்கத்தில் தோன்றவேண்டும். எதினாலென்றால், நீதியே ஜாதியைசனத்தை சங்கத்தை நிலமாக்களைமென்மேலும் உயர்த்தும் என்று உணர்ந்துகொள்வோமாக.

அப்பொன்யுகம் இப்பொழுதே தொடங்கியிருக்கிற தென்று பூரணமாய் நம்புவோமாக.

Y. S. டேலர்போதகர்.

சிவமயம்.

# நல்லொழுக்கம்.

——:(o):——

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

## ஏழாவது அதிகாரம்.

(முற்றொடர்ச்சி.)

———

போர்த்துக்கல் (Portugal) தேசத்தில் நட்பால் ஒன்றுகூடிய சேனையை நடத்துகையில் சுதேசஜனங்களின் நடத்தையானது, பொருத்தமாகவாவது, அல்லது கடமைக்குரியதாகவாவது உவெல்லிங்டனுக்குத் தோற்றவில்லை. "எங்களுக்குவைராக்கியத்திலும் 'விவ' (Viva) என்னும் கூச்சல்களிலும் போதுமானபடி குறைவில்லை. திருஷ்டாந்தங்களும், சுதேசாபிமான பாடல்களும், வீராவேசச்செயல்களும் எங்கும் உடைத்தாயிருக்கிறோம். ஆனால் ஒவ்வொருவனும் தனக்குரிய நிலைமையிற் றன்கடமையை விசுவாசமாய்ச்செலுத்தல் வேண்டுமென்பதும், நியாயமான அதிகாரிகளுக்கு உடனேகீழ்ப்படிய வேண்டுமென்பதுந்தான் குறை.

கடமையின் இத்தகைய நிலைபெற்றமாதிரிதான், உவெல்லிங்டன் (Welligton) உடைய ஒழுக்கத்தில் முதன்மையாயிருந்ததாகத் தோற்றிற்று. இதுவே அவருடைய மனதில் எப்பொழுதும் மேலாக நின்று, அவர்காலத்திலுள்ள பொதுக்காரியங்களிலெல்லாம் கருவியாய் நிகழ்ந்தது. அதேகுணத்துடன், தன்கீழ்வேலைபார்த்தவர்களுக்கும், அதனை ஊக்கப்படுத்துவதில் அஜாக்கிரதைப்படுவதில்லை. உவாட்டர்லூ (Waterloo) வில்தாங்கள் தொகையிற் குறைவுற்று, ஒரு பிரான்சுக்கு திரைப்படையை எதிர்ப்பதற்குச் சதுராகாரமாய்க் கூடியிருந்த தன் காலாட்சேனையிடம் போனபொழுது அவர்களை நோக்கி, "வாலிபர்களே! உறுதியாய் நில்லுங்கள்; இங்கிலாந்தில் நம்மைப்பற்றி என்னசொல்வார்கள் என்பதை நினையுங்கள்"



என்று சொன்னார். அதற்கு அவர்கள் "ஐயா, பயப்படாதீர், எங்கள் கடமை எங்களுக்குத்தெரியும்" என்றுபிரதியுத்தரம் செப்பினர்.

நெல்சன் (Nelson) மனதிலும் கடமையானது பிரதானகருத்தாய் நிகழ்ந்தது. அவர் தன் தேசத்திற்கு ஊழியஞ்செய்த தன்மையானது, டிராபேல்கர் (Trafalgar) க்குப் போருக்குப்போவதற்கு முன்னர், அந்தக்கப்பற்சேனைக்குச் சிறந்தஞாபகமொழியாக அவர் குறிப்பிட்டதும் "இங்கிலாந்து ஒவ்வொருவனையும் அவனுடைய கடமையைச் செலுத்துவதை எதிர்பார்க்கின்றது." என்கிறதுமானவாக்கியத்தாலும், "என் கடமையை நான் செய்தாயிற்று. அதற்காகக்கடவுளை ஸ்துதிக்கிறேன்" என்று அவருடைய உதட்டில் நின்றுங்கடைசிக்காலத்தில் வந்தவாக்கியத்தாலும் வெளியாகின்றது.

தன் கப்பலானது, தன்னைப்பெரிய கடற்போருக்குக்கொண்டு செல்கையில் தன் கொடியவீரனை நோக்கி "இப்பொழுதுதான் நம் மனைவிகள் இங்கிலாந்தில் தேவாலயத்திற்குப் போகிறார்கள்" என்று சொன்னவரும், நெல்ஸன் (Nelson) உக்குத்தோழரும் இஷ்டரும், தைரியமும் அறிவும் குடும்பப்பற்றுடையவருமாகிய கால்லிங்உட் (Calling-wood)என்பவரும், தன் தலைவரைப்போலவே கடமை விஷயத்தில் வைராக்கியமுள்ள சிரத்தையுடையவராயிருந்தனர். இவ்வுலக காரியத்திற் பிரவேசிக்கும் இளைஞரில் அனேகரை நோக்கி, "உங்கள் சக்திக்கு இயன்றமட்டில் உங்கள் கடமையைச்செலுத்துங்கள்" என்னும் உபதேசவாக்கியத்தையே விசேஷவிருப்புடன்கூறுவாராயினர். ஒருகாலத்தில் அவர் ஒரு கப்பல்வேலைக்காரனுக்குக் கீழ்வருமாறு, ஆண்மையும் அறிவும் பொருந்திய போதனையைச்செய்வாராயினர்.

"உன்னுடைய சௌக்கியத்தையும் அபிவிருத்தியையும் அதிகப்படுத்துவதற்குச் சாதனம், மற்றவர்களிடத்திலிருப்பதினும் பெரும்பாலும் உன்னுடைய திறமையிலேயே தங்கியிருக்கிறதென்பதை நம்பு. உன்கடமை விஷயத்தில் இளைப்பின்றிக் கண்டிப்புடன் கவனித்து, உன்மேலானவர்க்குமட்டோ, ஒவ்வொருவருக்கும் இனிமையாகவும் மரியாதையோடும் நடந்தால், நிச்சயமாய் அவர்களால் நன்கு

மதிப்பு உனக்குண்டானால் வெகுமானத்தையும் நீ எய்துவாய் என்பது திண்ணம். அவ்வாறில்லையாயின், அத்தவறுதலினால் உன்மனசுக்கு வெறுப்புண்டாகாதபடி நல்லுணர்வையுடைத்தாயிருப்பாயென்பது திண்ணம். உன்னிடம் அதிருப்திதோற்றும்படி நடந்துகொள்ளாவண்ணம், ஜாக்கிரதையாகக்காத்துக்கொள். அது உன் இஷ்டர்களுக்குத் துக்கத்தையும், உன்னுடன் எதிர்ப்பவர்களுக்கு வெற்றியையும் உண்டாக்குவதோடியாதொரு நன்மையையும் பயவாது உன்னையடையக்கூடிய நன்மைக்குப் பாத்திரமாகும்படி உன்னைநடத்திக்கொள். அது அடையாவிடிலோ, நீ சரியாய் நடந்ததாக நீ உணரும் உணர்ச்சியே உன்னை உற்சாகத்தில் நிலைபெறச்செய்யும். உன்னுடைய எல்லாக்கடமைகளிலும் முதன்மைபெற்றவனாயிருப்பதே, உனக்குப்பெருமையின் விருப்பமாக இருக்கட்டும். முறையைக்கவனிப்பதிற் சாமர்த்தியமாயிருத்தல் வேண்டாம். ஆனால் ஒவ்வொரு காரியத்திற்கும் எப்பொழுதும் உன்னைச்சந்நத்தமாகவைத்துக்கொள். உன் உத்யோகஸ்தர்கள் மிகவும் கவனமற்றவர்களாயிருந்தாலொழிய கிரமமாய் அவர்கள் உனக்குக்கொடுக்கவேண்டியவேலைக்கு அதிகமாய் மற்றவர்கள் உன்னிடம் சுமத்தும்படி இடங்கொடுக்கமாட்டார்கள்."

கடமை விஷயத்தில் இவ்வித அபிமானமானது இங்கிலீஷ் ஜாதியருக்கே விசேஷ குணமாகச் சொல்லப்படுகிறது. வெகுஜன காரியங்களிற்றலையிட்ட நம்முடைய பெரியோர்களிடத்தில் மறக்குறைய இதுவே முக்கிய குணமாயிருந்திருக்கிறது. தன் கொடியில் "மகிமை" அல்லது "ஜெயம்" அல்லது "கனம்" அல்லது "தேசம்" என்று எழுதாமற் "கடமை" என்று மாத்திரம் வரைந்து நெல்ஸன் (Nelson) டிரபால்கர் (Trafalgar)இல் யுத்தம் செய்தது போல எந்தக் காலத்திலாவது வேறு எந்த ஜாதியாரின் சேனாதிபதியாவது, அநேகமாய்ச் செய்தது இல்லை. இவ்விதமான யுத்தகோஷத்தினால் இளைப்பை மாற்றிக்கொள்ளப் பிரியப்பட்ட ஜாதியார் மிகவும் சிலரே யாவர்.

உத்தியோகஸ்தர்களும் வேலைக்காரர்களும், தங்களுடைய பெண்டு பிள்ளைகள் க்ஷேமமாய்ப் படகுகளிற் கரையேறின சந்தோஷத்திலே தம் பிராணனை நீத்துக்கொண்டுசென்ற ஆபிரிக்காக் கடற்கரையின் பிர்க்கன்ஹெட் (Birken-head) கப்பற்சேதத்திற்குப் பின்னர், சொற்ப காலத்தில் பிரைட்டன் (Brighton) இன், ராபர்ட்ஸன் (Robertson) என்பவர், அவ்விஷயத்தைக்குறித்துத் தன்னுடைய கடிதம் ஒன்றில் வரைந்தது வருமாறு:—"ஆம், இங்கிலாந்து தேசம் கண்யப்படுத்துகிற குணங்களானவை நல்லசுபாவமும் கடமையும், தர்மயம் பாராட்டாமையுமேயாம். அது ஓர் அவலட்சணமான பட்டிக்காட்டானைப்போல் அதினுடைய மகத்தான முதிய இருதயத்தை நியாயத்தைத்தவிர மற்றெதிலும் மத்தியமான ஆழ்ந்த நிலைமையின்றும் எங்கும் நெடுக இறங்கும்படி செய்யயாதொன்றாலும் முடியாது. இங்கிலாந்தானது மிகவும் ஆபாசமாகத்தன் ஸால்வை உடையைப் போர்த்துக்கொள்கிறது. ஸ்வீடிஸ் (Swedish) தேசத்துவானம்பாடியையும் வெட்டுக்கிளி முதலிய பக்ஷிகளையும் பகுத்தறிய முடியாமல் ஓர் கானசங்கத்தில் மிகவும் ஆபாசமுள்ளதாயிருக்கிறது. ஆனாற்பெரிதும் நீடித்ததுமான ஆசீர்வாதங்கள் அதற்கு உண்டாகின்றன. அது தன் பிள்ளைகளைச் சுறாமீன்களுக்கும் அலைகளுக்கும் மத்தியில் வீரர்களைப் போலத்தப்பிக்கொள்ளும்படிக்கு ஒழுங்கான சிக்ஷை அப்பியாசமின்றியே, கடமையானது உலகத்தில்மிகவும் இயற்கையான பொருளாயிருந்தாற்போற் கற்பிக்கும் விதத்தை அறிந்திருக்கிறது. அது ஓர் நாடகக்காரனையுத்த வீரனாகவாவது யுத்தவீரனை நாடகக்காரனாகவாவது நெடுநேரம் தப்பர்த்தங்கொள்ளுகிறதேயில்லை.

கடைசியில் ஓர் ஜாதியாரிடத்திற் காணப்படுகிற கடமையின் வியாபக சக்தியானது, மேன்மையான பொருளாயிருக்கிறது. அது நிலைத்திருக்கிற காலம்வரைக்கும் அதன்பின், பலனைப்பற்றி ஒருவரும் அதைரியப்படவேண்டுவதின்று; ஆனால் அது நீங்கிக்கெட்டொழிந்துபோகஇச்சை, அல்லது தற்புகழ்ச்சி, அல்லது பெருமையால் தள்ளுண்டபொழுது, அந்தஜாதியாருக்குத் துர்ப்பாக்கியம் உண்டாகின்றது. ஏனென்றால் அந்தஜாதி சமீபத்திற்கெட்டொழிகின்றது.

பிரான்ச தேசமானது ஓர் ஜாதியராயில்லாமல் துக்கிக்கும்படி கெடுதற்குக்காரணம், இளையதெனத்தீக்ஷணமான புத்திசாலிகள்

விசேஷமாய்க்கூடித் தீர்மானித்த ஒரேவிஷயம் யாதெனில், அந்த பிரான்சு தேசத்தின் ஜனங்கள்மட்டோ, அந்தஜனங்களின் தலைவர்களும் தங்கள் மனதினின்றும் சத்தியத்தை நீக்கிவிட்டதுபோலவே, கடமை விஷயமான உணர்ச்சியையும் நீக்கினதேயாம். பிரெஞ்சு (French) க்காரரின் சேனசம்பந்தமாய், பெர்லின் (Berlin) பட்டணத்திலிருந்த தூதராகிய பேரன்ஸ் டாப்பல் (Baron stoffel) என்பவர் யுத்தத்திற்குமுன்புகொடுத்த பக்ஷபாதமில்லாத சாக்ஷியமே இத்தவிஷயத்தில் தீர்மானமாகிய சித்தாந்தமாயிருக்கின்றது. யுத்தம் உண்டாவதற்குமுன் உத்தேசம் ஒருவருஷத்தில் அதாவது 1869-ம் வருஷம் ஆகஸ்டுமீ த்தில் எழுதப்பட்டதாய் டியூயில்லரீஸ் (Tuileries) ற் கிடைத்ததும் சக்கிரவர்த்திக்கு எழுதப்பட்டதுமாகிய இரகசியவிண்ணப்பத்தில் மேலானபடிப்பும் சிக்ஷையுமுள்ள ஜெர்மன் (German) ஜாதியார் கடமையின் சிரத்தையான உணர்ச்சியால் நிறையப் பெற்றிருந்தார்களென்றும் மேன்மையும் உயர்வுமானவற்றை உண்மையுடன் உபசரிப்பதைத் தங்களுக்கு இழிவானதாக நினைத்ததில்லையென்றும், ஆனால் எல்லாவிஷயத்திலும் பிரான்சுதேசமானது துக்கமான மாறுபாட்டை உடைத்தாயிருந்ததென்றும் சுட்டிக்காட்டுவாராயினர். அங்கே ஜனங்கள் எல்லாக்காரியத்தையும் இகழ்ந்து, எதையும் உபசரிக்கும்படியான தத்துவத்தை இழந்திருந்தார்கள். நல்லொழுக்கம் குடும்பகிருத்யம், தேசாபிமானம், கண்யம், மதமாகிய இவைகள் பரிகாசத்திற்குத்தக்கவிஷயங்களாகத்தான் சிறுமையுள்ள சந்ததிகளுக்கு உணர்த்தப்பட்டிருந்தன. ஐயோ! உண்மையையும் கடமையையும் மீறியபாவங்களுக்குப் பிரான்சுதேசமானது எவ்வளவு பயங்கரமாய்த் தண்டிக்கப்பட்டிருக்கிறது.!

(இன்னும் வரும்.)

---



# பேரகத்தியம்.

## வடபதப்படலம்.

அஃதாவது, வடமொழிகளும் வடமொழிபுணரும் வகையுங்கூறுதல்.

சறுக்கிரகஞ் சங்கத மவப்பிரஞ்சநம் பாகத
மொழிநான் கென்றே மொழியப் படுமே.

(இ-ள்) சொல்லானது; சறுக்கிரகம்.-சங்கதம்-அவப்பிரஞ்சநம்-பாகதம் என நால்வகையாகும்-(எ-று) (க)

சறுக்கிரகஞ் சங்கதந் தேவர்மொழி யென்க.

(இ-ள்) சறுக்கிரகம்-சங்கதம்-இவ்விரண்டுந்தேவர் மொழிகளாம் (உ)

அவப்பிரஞ்சநமொழி யசேதனர்க்காகும்.

(இ-ள்) அவ்ப்பிரஞ்சநமொழி-இழிசனருக்குள் வழங்கும்(எ.று)(ங)

எல்லா நாட்டிலு மியல்வது பாகதம்.

(இ-ள்)எல்லாநாட்டிலும்வழங்குவதுபாகதமொழியென்க.(எ-று)(ச)

பாகதம், தற்பவந் தற்சமந் தேசிக மெனப்படும்.

(இ-ள்)பாகதம், தற்பவம்-தற்சமம்-தேசிகம்-எனமூவகை.(எ-று)(ரு)

ஆரியச் சிறப்பெழுத் தாற்பொதுச் சிறப்பா
லானவீ ரெழுத்தா லமைவது தற்பவம்

(இ-ள்) ஆரியச்சிறப்பெழுத்தாலும்- பொதுவுஞ் சிறப்புமாகிய--இரண்டெழுத்தாலும்-தமிழிற்சிதைந்து வருவது,தற்பவமென்க. (எறு) [உ-ம்]சுகி-போகிஇவை சிறப்பு. அரன்-அரி. இவைபொது. (சு)

ஆரியந் தமிழ்ப்பொது வாமொழி தற்சமம்.

(இ-ள்)ஆரியத்திற்கும்-தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகிய மொழி தற்சமமென்க (எ-று)[உ-ம்] அமலம்-காரணம் இவைபொது. (எ)

தேசிகம் திசைச்சொ லென்று செப்புக.

(இ-ள்) தேசிகம்-திசைச்சொல்லென்றுசொல்லுக.(எ-று) [உ-ம்] தாயை, ஆய். தந்தையை, அச்சன், என்பர். (அ)

தீர்க்கங் குணம்விருத்தி சந்திமூ வகையாம்.

(இ-ள்) தீர்க்கசந்தி-குணசந்தி-விருத்திசந்தி-எனச்சந்தி மூவகையாம்

அம்முன் அஆவரி லிரண்டுங்கெட் டாவாம்.

(இ-ள்) வடமொழி அகரவீற்றின்முன்-அ-ஆ-வரில்-நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெட்டு ஆகாரம் வரும்.(எ-று)[உ-ம்]பாத-அம்புயம்-பாதாம்புயம். சிவ-ஆலயம்-சிவாலயம். எனவரும். (௧0)

ஆமுன் அ-ஆ-வரி லிரண்டுங்கெட் டாவாம்.

(இ-ள்)ஆகாரவீற்றின்முன்-அ-ஆ-வரில்-ஈறும் முதலுங்கெட்டுஆகாரம்வரும் [உ-ம்]சேநா-அதிபதி-சேநாதிபதி.சதா ஆநந்தம்-சதாநந்தம்.

இம்முன் இ-ஈ-வரி லிரண்டுங்கெட் டீயாம்.

(இ-ள்) இகரவீற்றின்முன்-இ-ஈ-வரில்-ஈறும்முதலுங்கெட்டு,ஈகாரம் வரும்.(எ-று) [உ-ம்] மகி-இந்திரன்-மகீந்திரன்.கிரி-ஈசன்-கிரீசன். ()

ஈமுன் இ-ஈ-வரி லிரண்டுங்கெட் டீயாம்.

(இ-ள்) ஈகாரவீற்றின்முன்-இ-ஈ-வரில்-ஈறுமுதலுங்கெட்டு-ஈகாரம் வரும்.(எ-று)[உ-ம்]கரீ-இந்திரன்-கரீந்திரன்-மகீ-ஈசன்-மகீசன்,(௧௩

உம்முன் உ-ஊ-வரி லிரண்டுங்கெட் டூவாம்.

(இ-ள்)உகரவீற்றின்முன்-உ-ஊ-வரில்-ஈறுமுதலுங்கெட்டு-ஊகாரம் வரும், (எ-று) [உ-ம்]குரு-உபதேசம்-குரூபதேசம். தரு-ஊனம்-தரூனம். எனவரும். (௧௪)

ஊமுன் உ-ஊ-வரி லிரண்டுங்கெட் டூவாம்.

(இ-ள்) ஊகாரவீற்றின்முன்-உ-ஊ-வரில்-ஈறுமுதலுங்கெட்டு-ஊகாரம்வரும். (எ-று) [உ-ம்] சுயம்பூ-உபதேசம்-சுயம்பூபதேசம். வதூ ஊரு-வதூரு எனவரும். இவை, தீர்க்கசந்தி. (௧௫)

அ-ஆ-முன் இ-ஈ-வரி லிரண்டுங்கெட் டேயாம்.

(இ-ள்) அகர-ஆகார வீற்றின்முன் இ-ஈ-வரில் ஈறுமுதலுங்கெட்டு ஏகாரம்வரும்.[உ-ம்]நர-இந்திரன்-நரேந்திரன் உமா-ஈசன்-உமேசன்.



அ-ஆ-முன் உ-ஊ-வரி லிரண்டுங்கெட் டோவாம்.

(இ-ள்) அகர-ஆகாரவீற்றின்முன்-உ-ஊ-வரில்-ஈறுமுதலுங்கெட்டு ஓகாரமவரும். (எ-று) [உ-ம்]தாம, உதரன்-தாமோதரன் கங்கா-உற்பத்தி-கங்கோற்பத்தி எனவரும். இவை, குணசந்தி. (௧௭)

அம்முன் ஏ,ஐ-வரி லிரண்டுங்கெட் டையாம்.

(இ-ள்)அகரவீற்றின்முன்-ஏ-ஐ-வரில்-ஈறுமுதலுங்கெட்டு-ஐகாரம்-வரும்(எ-று) [உ-ம்]சிவ-ஏகம்-சிவைகம். சிவ-ஐக்கியம்-சிவைக்கியம்.

ஆ முன் ஏ-ஐ-வரி லிரண்டுங்கெட் டையாம்.

(இ-ள்) ஆகாரவீற்றின்முன் ஏ-ஐ-வரில்-ஈறுமுதலுங்கெட்டுஐகாரம் வரும்.(எ-று)[உ-ம்]தாரா-ஏகவீரன். தாரைகவீரன்-மகா-ஐச்சுவரியம். மகைச்சுவரியம் எனவரும். (௧அ)

அ-ஆ-முன் ஓ-ஔ-வரி லிரண்டுங்கெட் டௌவாம்.

(இ-ள்) அகர-ஆகாரவீற்றின்முன்-ஓ-ஔ-வரில்-ஈறுமுதலுங்கெட்டு ஔகாரம் வரும். (எ-று) [உ-ம்] கலச ஓதனம்-கலசௌதனம்; மந்திர ஔடதம்-மந்திரௌடதம்-எனவரும். இவைவிருத்திசந்தி. (௧௯)

இகர ஏகார முதற்கை யாகும்,

(இ-ள்) மொழிமுதல் இகரம்-ஏகாரம்-இரண்டும் ஐகாரமாம். [உ-ம்] கிரியிலுள்ளன-கைரிகம்; வேரம் வைரம்-எனவரும். (௨0)

உஊ ஓமுத லௌவா கும்மே.

(இ-ள்) உ-ஊ-ஓ-இவைமுதலில்-ஔகாரமாகும்.(எ-று)[உ-ம்] குருகுலத்தார்-கௌரவர் சூரன்மகன்-சௌரி.சோமன்மகன்-சௌமியன்.

மொழிமுத லகரம் ஆவா கும்மே.

(இ-ள்)மொழிமுதல்அகரம் ஆகாரமாய்வரும்.(எ-று)[உ-ம்]தசரதன்மகன்-தாசரதி. சனகன்மகன்-சானகி. எனவரும். (௨௨)

எதிர்மறை வடசொற் கியைந்த மொழிமுதல்
உயிர்வரி லந்து மொற்றுறி லவ்வுமாம்.

(இ-ள்) வடமொழி, எதிர்மறைக்குமொழிமுதலுயிர்வரில்-அந்தும் மெய்வரில், அவ்வும் வரும். (எ-று) [உ-ம்] ஆசாரமின்மை-அநாசார

ம். ஆதியின்மை-அநாதி எனவும் களங்கமின்மை, அகளங்கம். யோக்கியமின்மை, அயோக்கியம் எனவும் வரும். (௨௩.)

நிர்துர் நிகுவி பொருளின்மை நிகழ்த்தும்.

(இ-ள்) நிர்-துர்-நி-கு-வி இவைபொருளின்மைகாட்டும். (எ-று) [உ-ம்] நாமமில்லான் - நிருநாமன். நற்குணமின்மை-துர்க்குணம்-மலமின்மை-நிமலம். குதர்க்கம்-குலமின்மை-விகுலம் எனவரும். (௨௪)

வடமொழி யுயிர்முன் வன்கண மியல்பாம்.

(இ-ள்) வடமொழிஉயிரீற்றின்முன் வலிவரின் இயல்பாம். (எ-று) [உ-ம்] ஆதிபகவன்-அளிகுலம்-தனதடம்-எனவரும். (௨௫)

ஏயன் விகுதி யெய்தும்பிள்ளைக்கே.

(இ-ள்) ஏயன்-விகுதிபிள்ளைப்பொருளில்வரும் (எ-று)-[உ-ம்] கிருத்திகையின்மகன்-கார்த்திகேயன். கங்கையின்மகன்-காங்கேயன். (௨௬)

ஆஐ ஔமுத லாகமந் திரிபாம்.

(இ-ள்) ஆ-ஐ-ஔ-இவைமொழிமுதலில்-தோன்றலுந்திரிபுமாம்(எ-று [உ-ம்]சர்-சரன்-சராசரன். தோன்றல்-வியாகரணமுணர்ந்தோன்-வையாகரணன். துவாரங்காப்பவன்-தௌவாரிகன் இவைதிரிபு. (௨௭)

---

௧

# சுக்ர நீதி.

——:(०):——

(வடநூன்மொழிபெயர்ப்பு.)

(முற்றெடர்ச்சி.)

---

எவர்கள் பிராமண சேவையிலும் அவர்களைப் பூசிப்பதிலும் ஊக்கமுள்ளவர்களாயும், சூரர்களாயும் பொறுமையுடையவர்களாயும் இந்திரியங்களையடக்கினவர்களாயும், கலப்பை புல் முதலியவற்றைச் சுமக்கின்றவர்களாயும் இருக்கின்றார்களோ அவர்கள் சூத்திரர்களென்னும் பெயரையுடையவர்களாகின்றார்கள் எவர்கள் தங்களுக்



குரிய தர்மங்களைக்கைவிட்டவர்களாகவும் இரக்கமற்றவர்களாகவும், பிறர்களை வருத்துபவர்களாகவும், கொடுந்தன்மை யுடையவர்களாகவும், எப்பொழுதும் துன்பப்படுத்துபவர்களாகவும், விவேகமற்றவர்களாகவும் இருக்கிறார்களோ அவர்கள், மிலேச்சர்கள் என்று சொல்லப்படுவார்கள். மனிதர்களுக்குப் பூர்வ ஜென்மத்திற் செய்த கர்மபலாநுபவத்தினாலே அதற்குத் தகுதியான புத்தியுண்டாகின்றது. பாபகார்யத்திலாவது புண்ணியகார்யத்திலாவது வேறுசெய்வதற்குச்சக்தியுடையவனாகிறதில்லை. கர்மபலத்தினுடைய உற்பத்தி எவ்விதம் ஏற்படுகிறதோ அதையனுசரித்தே புத்தியுண்டாகின்றது?

முந்திய கர்மவசத்தினாலேயே எல்லாமுண்டாகிறதென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அதுவிஷயத்திற் செய்யத்தக்கது இது, செய்யத்தகாதது இது என்று போதிக்குங்காரியங்கள் உபயோகமற்றவைகளாம். புத்திசாலிகளாயும் துதிக்கத்தக்க சரித்திரமுடையவர்களாயுமிருக்கின்றவர்கள் புருஷகிருத்தியத்தையே பெரிதென்றெண்ணுகிறார்கள். புருஷகார்யத்தைச் செய்வதற்குச் சக்தியற்றவர்கள் யாரோ அவர்கள்தான் தெய்வத்தையுபாசிக்கிறார்கள். தெய்வீகமான விஷயத்திலும் புருஷகார்யத்திலுமே எல்லாம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. முன்ஜென்மத்திற் செய்தகர்மமே இந்த ஜென்மத்திலும் இரண்டாவதாகச் செய்யப்பட்டதுபோலாகிறது.

பலமில்லாதவனுக்கு எப்பொழுதும் பலமுள்ளதான சகாயம் ஏற்படும் பக்ஷத்தில் அவன் பலாபலஞ்ஞானத்தை யுணர்ந்தவனாய்ப் பலப்ராப்தியிலும் விரோதமற்றவனாக ஆகின்றான். மனிதர்களுக்கு அற்பமான முயற்சியினாலே அதிகமாயுள்ள யாதொரு பிரயோஜனம் ஏற்படுகிறதோ அதுவும் இவ்வுலகில் முன்ஜென்மாந்தர கர்மவசத்தினாலேயே யுண்டானதென்று சிலர் எண்ணுகிறார்கள்.

பின்னும் இவ்வுலகத்தில் மனிதர்களுடைய கிரியையினாலேயே பௌர்ஷம் உண்டாகிறதென்று சிலர்கள் சொல்லுகிறார்கள், அது எதுபோலவென்றால், எண்ணெய், திரி முதலியவற்றால் நிரம்பிய ஒரு விளக்கைக் காற்றினிடத்தினின்றுங் காப்பாற்றுவதுபோல. இவ்வுலகத்தில் நடக்கவேண்டியவிஷயங்கள் நடவாமற்போய்விடும்பக்ஷத்

தில் நடவாமற்போகும்படிசெய்த துஷ்டர்கள் விஷயத்திற் புத்திக்கும் பலத்திற்கும் தக்கபடி அவர்களையடக்குவதே நல்ல காரியமாகும். உலகத்தில் அரசன் பிரதிகூலபலம் அநுகூலபலம் இவைகளால் தெய்வத்தை உத்தமபலத்தைத் தரத்தக்கதென்றும், மத்திமபலத்தைத் தரத்தக்கதென்றும், அதமபலத்தைத் தரத்தக்கதென்றும் நினைக்கக்கடவன்.

இராவணனுடைய விஷயத்திலும், பீஷ்மாதிகள் விஷயத்திலும், அசோகவனத்தினழிவினாலும், கோக்கிரஹணத்தினாலும் வானரனிடத்தினின்றும் ஒரு மனிதனிடத்தினின்றும் விரோதமானது நன்றாயறியப்பட்டுவிட்டது. அப்படியிருந்தும், ஸ்ரீ ராமனென்ன, அர்ஜுனனென்ன ஆகிய இருவர் விஷயத்திலும் தெய்வாநுகூல்யம் பூர்ணமாயிருந்தபடியால் அல்ப முயற்சியினாலேயே பெரியபலமுண்டாயிற்று.

அரிச்சந்திரன் விஷயத்திலும், மகாபலி விஷயத்திலும் தெய்வாநுகூல்யமில்லாமையினாலே மிகவும்பெரிய நல்லகாரியங்களை செய்யப்பட்டிருந்தாலும் அதுவும் பிரதிகூல்யமாகவேயாகிவிட்டது.

நல்ல கார்யத்தினாலே இஷ்டம் உண்டாகும். கெட்டகார்யத்தினாற் கெடுதியுண்டாகும். ஆகையால், சாஸ்திரத்தினாலே நல்லது கெட்டது என்பதையறிந்து கெட்டதைக் கைவிட்டு நல்லதையே செய்யக்கடவன்.

காலத்திற்குக் காரணம் அரசனே யாகிறான். நல்லகாரியங் கெட்டகாரியங்களுக்கும் அரசனே காரணமாக ஆகிறான். ஆகையால் தன்னுடைய பௌர்ஷத்தினாலும், சிக்ஷணத்தினாலும் பிரஜைகளைத் தன்தன் தர்மத்திலேயே நிலைநிறுத்தக்கடவன்.

(இன்னும் வரும்.)

வி. ஸ்ரீநிவாஸாசாரியர்,
செந்தமிழ்க் கலாசாலை ஸம்ஸ்கிருத உபாத்தியாயர்.

---

உ

# புத்தகக்குறிப்பு.

விஜயசுந்தரம்:—இவ்வுலகத்தே, நாகரீகம்வாய்ந்த நாடுகளெல்லாம் தேசபாஷைகளின் வளத்தாலும் செழித்துவிளங்குதலை நாம் காணக்கூடும். இதற்குக்காரணம், மக்களது அறிவுப்பெருக்கத்துக்கு பாஷாஞானம் இன்றியமையாத சாதனமாயிருத்தலேயாம். இங்ஙனம் முக்கியசாதனமாகிய பாஷையின் வளர்ச்சியைத் தம்வளர்ச்சியாகவே கருதி, அவ்வந்நாட்டறிஞர்கள், செய்யுண் மூலமாகவும் வசனமூலமாகவும் நூல்களியற்றித் தேசபாஷைகளைச் சிறப்பித்துவருவாராயினர். இவற்றிற் செய்யுள்வடிவான நூல்கள் பெரும்பான்மை அறிவுப்பெருக்கமுள்ளவர்க்கே ஏற்றனவாதலால், அரியவிஷயங்களை யாவரும் எளிதினுணருமாறு அமைக்கப்பட்ட வசனநூல்களே தற்காலத்தவரால் பெரிதும் விரும்பப்படுகின்றன. பழமையும்பெருமையும் வாய்ந்த தமிழ்மொழியில் முன்னோரியற்றிய நூல்கள்பெரும்பாலும் செய்யுள்வடிவில் அமைந்தவை. தற்காலமுறைக்கேற்ற சிறந்த வசனநூல்கள் தக்கவர்களால் இனித்தான் பெருகவேண்டியிருக்கின்றன. இத்தகைய வசனநூல்களிலே கற்பனைசரிதங்கள் எழுதிவெளியிடுதல், பலதிறமான அறிவுகளை எளிதிற் பரவச்செய்தற்குரியவுபாயங்களில் ஒன்றாக மேனாட்டார் மதிக்கின்றனர். கற்பனை சரிதமென்பது, உலகவியல்புகளையும், நீதிகளையும் தர்மங்களையும் பிறவழக்குகளையும், படிப்போர் மனங்களைக் கவரத்தக்க கதாசந்தர்ப்பங்களுடன் விளக்கி, எல்லாச்சுவைகளும் இயையுமாறு அமைக்கப்பட்ட இனிய கதைகளாகும். இவை தக்க அறிஞரால் எழுதப்படுமாயின் உலகநீதிகளையும் பிறவுயர்ந்த விஷயங்களையும் கதைகளுடன் கலந்தூட்டிப் படிப்பவர் மனங்களைப் பரவசப்படுத்த வல்லனவாம். இம்முறையானது, நமக்கு முன்னிருந்தவர்களால் விசேடமாகக் கொள்ளப்பட்டிலதேனும் மேனாட்டுக்கல்வியின் பயனாக இவை நம்மவரால் பெருவிருப்பத்துடன் இப்போது எழுதவும் படிக்கவும் பெறுகின்றன.

இங்ஙனம் விரும்பப்பெறும் சரிதங்களிலொன்றே இவ்விஜயசுந்தரமும். இஃதியற்றியவர் இரங்கூன் பேபர்கரன்ஸி ஆபீஸ் டிரஷ

ரர்: ராய் ஸாஹிப்: ஸ்ரீமத்-தி. ம. பொன்னுசாமிப்பிள்ளையவர்கள். விஜயசுந்தரன் என்னும் நாயகனைத் தலைவனாகப்பெற்ற இச்சரிதை, உருக்கமும் இனிமையும் வாய்ந்து கற்பவர் மனமுகவருங் காந்தம் போன்றிருத்தலோடு, எண்ணிறந்த தர்மங்களும் நீதிகளும் வழக்கவொழுக்கங்களும் இனியநடையில் மிகக அநுபவத்திறமையுடன் எழுதப்பட்டுள்ளது. இந்நூலினிடையிடையே, வியாபார நுட்பங்களைப்பற்றியும் பெண்கல்வி முதலிய அரிய விஷயங்களைப்பற்றியும் பிள்ளையவர்கள் எழுதியிருப்பவை, உண்மையில், அறிஞரெல்லாம் அறிந்து மகிழ்தற்குரியனவாம்.

சைவசித்தாந்தசாரமாகிய இந்நூலின் ௧௬-வது அத்தியாயம், இந்நூலாசிரியரது சமயஞானத் திறமைக்குத் தக்க சான்றாகின்றது. இவையன்றி இந்நூலினின்று அறியத்தகும் வேறு சிறந்த உண்மைகள்:—கல்வியறிவில்லா இளைஞரின் வார்த்தையைப்பெற்றோர் நன்கு மதிக்கலாகாதென்பதும், கல்வியொழுக்கங்கள் உடையோர் யாண்டும் சிறப்பிக்கப்படுவரென்பதும், மூர்க்கர் மூர்க்கரையே புகழ்ந்து நல்லோரைநிந்தித்துத் துன்புறுவரென்பதும், கற்புடைமங்கையர் எக்காலத்தும், தம்மைக்காத்துத் தம் கொழுநரைப் பேணுமியல்பினரென்பதும், நல்லொழுக்கமுடையார்க்கு இடையூறுகள் தீயோரால் இயற்றப்படினும், கடவுள் அவரை முடிவிலே கைவிடாதருளுவரென்பதும் முதலியவைகளே. இவையெல்லாம் கதாபாகங்களோடு சேர்த்துப்படிக்கப்படும்போது, யாவர்க்கும் வியப்பு முவப்பும் விளைக்குமென்பது திண்ணம். இவ்வாறு, தமிழ்ப்பெருமையைச் சிறப்பிக்கும் விதமாகவும், படிப்போர்க்கு இனிமையுடன் உயர்குணங்களையூட்டக்கூடியவிதமாகவும், இக்கதையையெழுதிய பிள்ளையவர்கள், நம்மவரது உண்மைப்புகழ்ச்சிக்கும் போற்றற்கும் உரியராவரென்பதில் ஐயமில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாம் வருஷோற்சவம் தஞ்சையில் நடைபெற்றபோது, இந்நூல் அச்சபையில் அரங்கேறப்பெற்று, அறிஞர்களாற் கொண்டாடப்பட்டது. இத்தகைய நூல்கள் தமிழ்ச்செல்வியை மிகவும் அலங்கரிக்கத்தக்கனவாதலாற் பிள்ளையவர்கள் இவ்வாறே மற்றும்பல நூல்களியற்றித் தமிழுலகத்தைப் பெரிதும் மகிழ்வூட்டுவார்களென்றே நம்புகிறோம்.

பத்திராசிரியர்.

---

உ

கடவுள் துணை.

OFFICE OF THE REGISTRAR OF B
REGISTERED
18 OCT 1910
MADRAS.

# செந்தமிழ்.

தொகுதி-௮.] சாதாரண-ஹூ ஆவணிமீ. [பகுதி-௧௰.

## அருச்சுனனும் பாண்டியமரபும்.

ஸ்ரீ வியாஸபாரதம் ஆதிபர்வத்தே, தீர்த்தயாத்திரையின் பொருட்டுத் தேசாடனஞ்செய்த அருச்சுனன், நாககன்னியாகிய உலூபியை மணந்தபின், கலிங்கமுதலிய தேசங்களைக்கடந்து பாண்டிநாடு சென்று நிகழ்த்திய சரித்திரம் தென்னாட்டுப்பிரதிகளில் அடியில் வருமாறு காணப்படுகிறது.

*"ஸமர்த்தனான அவன் (அர்ச்சுனன்) கலிங்கதேசத்தைத் தாண்டி அழகான தேவாலயங்களையும் மாளிகைகளையும் பார்த்துக்கொண்டு சென்றான். மஹாபலசாலியான அவன் ரிஷிகளால் சோபிக்கின்ற மஹேந்திர பர்வதத்தைக்கண்டு, அதன்பிறகு கோதாவரியில் ஸ்நானம்செய்து, அதைத் தாண்டி ஸமுத்திரஸங்கமத்தில் பிரசித்திபெற்ற காவேரியையடைந்து ஸ்நானஞ்செய்து, தேவரிஷி பிதிர் தர்ப்பணஞ்செய்து, சமுத்திரக்கரையாலேயே கிரமமாக மணலூர் என்னுமிடத்துக்குச் சென்றான். ராஜாவே! சிறந்தகைகளையுடைய அர்ஜுனன் அவ்விடத்திலுள்ள புண்ணியதீர்த்தங்களையும் தேவாலயங்களையும் அடைந்து தர்மந்தெரிந்தவனான சித்திரவாஹனனென்னும் மணலூர் அரசனிடம் போனான். அவனுக்குச் சித்ராங்கதை என்னும் காட்சிக்கினிய பெண் ஒருத்தி இருந்தாள். அவள் அந்தப்பட்டணத்தில் தன்னிச்சைப்படி ஸஞ்சரிப்பதை அவன் கண்டான். சிறந்த பெண்ணாகிய அந்தச்சித்ரவாஹனன்மகளைக் கண்டு அவன் விருப்புற்றான். ராஜாவிடஞ் சென்று "ராஜாவே! மஹாத்மாவும் க்ஷத்திரியனுமாகிய எனக்கு இந்தப் பெண்ணைக்கொடு" என்று தன் காரியத்தைத் தெரிவித்தான். அவ்வரசன்

---

* ஸ்ரீ வியாஸபாரதம், தமிழ்மொழிபெயர்ப்பு, (ஸ்ரீமத்-ம. வீ. இராமாநுஜாசாரியரவர்கள் பதிப்பு.) பக்கம்-அ௬௬-அ௬௪.

அதைக்கேட்டு, "நீ யாருடைய புதல்வன்? உன்பெயர் என்ன?" என்று கேட்க, அர்ஜுனன் "நான் பாண்டவன்; குந்திபுத்ரனான தனஞ்சயன்" என்று அவனுக்கு உத்தரஞ்சொன்னான். அதன்பிறகு அவ்வரசன், அர்ஜுனனைப் பார்த்துப் பிரியவசனமாகப் பின்வருமாறு சொல்லலுற்றான்.

"பிரபஞ்சனன் என்னும் அரசன் இந்தக்குலத்திற் பிறந்திருந்தான். அவனுக்கு ஸந்ததியில்லாமலிருந்ததனால் ஸந்ததியை விரும்பிச் சிறந்த தவஞ்செய்தான். அர்ஜுனா! அவனுடைய உக்கிரமான தவத்தினால் தேவதேவரும் பினாகமென்னுந் தனுஸைத் தரித்தவரும் உமாபதியுமாகிய சங்கரர் ஸந்தோஷமடைந்தார். தேவர்களுக்குத்தேவரும் பகவானுமாகிய அந்த உமாபதி அவனுக்கு 'இந்தக்குலத்தில் ஒவ்வொரு குழந்தைதான் பிறக்கும்' என்ற வாத்தைக்கொடுத்தார். அதனால் இந்தக்குலத்தில் எப்போதும் ஒவ்வொருஸந்ததிதான் உண்டாகிறது. என்முன்னோர்களெல்லாருக்கும் புத்ரர்களே பிறந்தனர். எனக்கு இந்தக் கன்னிகை ஒருத்திதான். இவள் தான் என்குலத்தை முழுதும் விருத்திசெய்கிறவளென்பது நிச்சயம். புருஷச்ரேஷ்டனே! பரதச்ரேஷ்டனே! * புத்ரிகா தர்மமென்கிற சாஸ்திர விதியினால் இவளைப்புத்ரனென்றே நினைத்துக்கொண்டிருக்கிறேன். பரதவம்சத்தவனே! உனக்கு இவளிடம் பிறக்கும் ஒரு புத்திரன் எனக்குக் கன்யாசுல்கமாக இருக்கக்கடவன். அவன் இங்கிருந்து என்சந்ததியை விருத்தி பண்ணுகிறவனாக இருக்கக்கடவன். இந்த உடன்பாட்டின்படி இவளை நீ விவாகஞ்செய்துகொள்" என்றான். அர்ஜுனன் "அப்படியே ஆகுக" என்று பிரதிஞ்ஞைசெய்து அந்தக்கன்னிகையை வாங்கிக்கொண்டு, பதின்மூன்றாவது மாதத்தில் விவாஹச்சடங்கைச்செய்து அங்கே மூன்றுமாதகாலமிருந்தான்." எனவும், பிறகு அர்ச்சுனன் தெற்குசமுத்திரத்திலுள்ள தீர்த்தங்கட்குச்சென்று அவற்றில் ஸ்நானஞ்செய்துமுடித்து சித்ராங்கதையைப் பார்ப்பதற்காக மறுபடியும் மணலூர்சென்று, பப்ருவாகனனென்னும் ராஜபுத்ரனை அவளிடம் உண்டுபண்ணித் தன்மாமனிடம் அம்மகனைக் கன்யாசுல்கமாகக் கொடுத்துத் தன்கடனைத் தீர்த்துக்கொண்டு தீர்த்தயாத்ரைக்குத் திரும்பவும் புறப்பட்டானெனவும் கூறப்பட்டுள்ளமை காண்க.

இச்சரித்திரத்தால், சித்திரவாஹனனென்னும் மணலூர் புரத்தரசன்மகளை, அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையினிடையில் மணம்புரி

* எவளுக்குப் பிறக்கும்புத்திரனை அவள் தந்தை தனக்குப்புத்திரனாக எடுத்துக்கொள்ளுகிறதென்ற உடன்படிக்கையோடு கன்னிகாதானஞ் செய்கிறானோ அவளுக்குப் புத்திரிகையென்றும், அவளுக்குப்பிறக்கும் பிள்ளைக்குப் புத்திரிகாபுத்ரனென்றும் பெயர்களாம்.



ந்து, பப்ருவாஹனனென்னும் புத்திரனைப்பெற்று, தன்மாமனுக்கே அம்மகனைப் புத்ரிகாபுத்ரனாக அளித்துச்சென்றான் என்பது விளங்கும். இக்கதை நிகழ்ச்சி, ஆதிபர்வம், அம்சாவதரணபர்வத்தும், (அத்-சுஅ.) "அவன், ஒருவருஷமுழுதும் மேலே ஒருமாஸமும் வனத்தில் வசித்துத் தீர்த்தயாத்திரையுஞ்செய்து நாககன்னிகையையும் பாண்டியன் பெண்ணையுமடைந்து அவர்களுடன் அங்கே வாஸஞ்செய்தான்" என்று குறிப்பிக்கப்படுதலால், மணலூர் புரத்தரசன் பாண்டியனாவனென்பது புலப்படும். இவ்வாறே, விஷ்ணுபுராணம் நான்காம் அம்சம், உ0-ம் அத்தியாயத்திலும், பாகவதம், க0-ம் ஸ்கந்தம் அ௯-ம் அத்தியாயத்திலும், பாரதசம்புவிலும் பிறவற்றிலும் மணலூரரசனாகிய பாண்டியன்மகளையே அருச்சுனன் மணந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. இனி, சபாபர்வத்தே, ராஜசூயயாகத்தின்பொருட்டுப் பாண்டவராற் செய்யப்பட்ட திக்விஜயத்தில், தென்றிசையை வெல்லச்சென்ற சகதேவன், பாண்டிநாட்டு மணலூரையடைந்து, தன்தமையன் அருச்சுனனுடைய மகனான பப்ருவாஹனனைக்கண்டு மகிழ்ந்து, அவனுக்கு வேண்டிய வெகுமதிசெய்து திரும்பினனென்று கூறப்படுகிறது. அவ்விடத்தே, அருச்சுனன் மாமனாகிய பாண்டியன் பெயர் மலயத்வஜனென்றும், மற்றோரிடத்து சுவேதனென்றும் வழங்குகின்றது. இங்ஙனமாக, அருச்சுனன் மணந்த சித்ராங்கதை, மணலூரரசனான பாண்டியன்மகளே என்பது, தென்னாட்டுப்பாரதப் பிரதிகளிலும் விஷ்ணுபுராணம் பாகவதமுதலிய புராணப்பிரதிகளிலும் தெளிவாகக் காணப்படுவதாம்.

இனி, வடநாடுகளில் வழங்கும் ஏடு பிரதிகளிலெல்லாம், மணிபுரத்தரசனாகிய சித்ரவாஹனன் மகளையே விஜயன்மணம்புரிந்து பப்ருவாகனனைப்பெற்றானென்று காணப்படுமென்பர். இங்ஙனம் வழங்கிவரும் வடநாட்டுப்பாடமே உண்மையுடையதாகவேண்டுமென்றும், பாண்டியன் மகளென்னும் தென்னாட்டுவழக்கு பிற்காலத்து இடைச்செருகலாகக் கொள்ளத்தக்கதென்றும் விதேசஅறிஞரெல்லாங் கருதியதோடு, சுதேசநிபுணர் சிலரும் அங்ஙனமே எழுதிச்சென்றனர். *

* காலஞ்சென்ற ஸ்ரீ கனகசபைப்பிள்ளையவர்கள் எழுதிய "1800-ஆண்டுக்கு முற்பட்ட தமிழர்" என்ற ஆங்கிலநூலின் 53-ம் பக்கம் பார்க்க.

இவ்வாறெழுதியதற்குக் காரணம், வடநாட்டுப் பிரதிகளில் அதிக மதிப்புவைத்ததேயன்றிப் பிறிதன்றும். ஆனால், தென்னாட்டார் வழக்கு, அன்னோர் கருதியபடி, இடைச்செருகலா? அன்றித் தொன்று தொட்டுவரும் வழக்கா? என்ற கேள்விபிறத்தலால், அவற்றை இங்கே ஆராய்ந்து உண்மையைக்கொள்வது ஆவசியகமாகும்.

வடநாட்டுப் பிரதிகளிலே, அருச்சுனன் செய்த தீர்த்தயாத்திரையில், அவன், கலிங்கதேசத்தைக்கடந்து பற்பலநாடுகளையும் பரிசுத்தஸ்தலங்களையும் பார்த்துக்கொண்டே மஹேந்திரபர்வதமடைந்து, பின் கடற்கரைவழியாகவே சென்று மணிபுரம் போய்ச்சேர்ந்தானென்று கூறப்படுகிறது.* இதனால், கலிங்கதேசத்துக்கும் பலநாடுகளுக்கும் மஹேந்திரமலைக்கும் இப்பால், வெகுதூரத்தே மணிபுரம் இருந்ததென்பது பெறப்படும். இனி, இம்மணிபுரஞ்சென்று அந்நகரத்தரசன்மகளை மணந்து பப்ருவாஹனனென்னும் புத்திரனைப் பெற்றபின், அருச்சுனன் மறுபடியும் யாத்திரைக்குப் புறப்பட்டுச் சேர்ந்ததலம், தென்சமுத்திரக்கரையிலிருந்த தீர்த்தங்களென்று அவ்வடபிரதிகளிலுங் காணப்படுவதால், தென்கடலையடுத்தே அம்மணிபுரமிருந்ததென்பது தெளிவாகும். இன்னும், தென்பக்கத்துத் தீர்த்தங்களிலெல்லாம் ஆடிமுடிந்தபின், அருச்சுனன் திரும்ப ஒருமுறை சித்ராங்கதையைப் பார்க்க மணிபுரம் சென்றான் என்று அவ்விடத்துக் காணப்படுவதாலும், தென்கடலுமணிபுரமும் அதிக தூரமாகாமை காண்க. இவற்றால், தென்னாட்டு வழக்காகிய மணலூர்புரமும் வடநாட்டார் கூறும் மணிபுரமும், இடவேற்றுமையின்றி, ஓரூர்க்கே இரண்டுவகையாக வழங்கிய பெயர்கள் என்றுகருதவும் இடந்தருகின்றது. ஏனெனில், மணிபுரமென்ற தனியானதோர் ராஜ்யம் தென்கடற்பக்கத்திருந்ததாகவேனும், அத்தேசத்தவர் அருச்சுனன் தம்நாட்டுக்கு வந்துசென்ற வரலாற்றை வழங்கியிருப்பதாகவேனும் யாண்டும் கேட்கப்படாமையால் என்க.

இனித், தென்னாட்டுப் பிரதிகளிற் கண்டபடி, அருச்சுனன் மணலூர் புகுந்து சித்திராங்கதையை மணந்துசென்றான் என்னுஞ்சரிதம்,

* ஸ்ரீ பிரதாப சந்திரராய், மன்மதநாததத்தர்களது வியாஸபாரத ஆங்கில மொழிபெயர்ப்புக்களைப் பார்க்க.



18 OCT 1910 MADRAS.

தென்னாட்டாரால் பன்னூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து இன்றுவரை வழங்கப்பட்டுவருவதோடு, மணலூர் என்ற நகரம் மதுரை உண்டாவதற்கு முன்னரே பாண்டியன் தலைநகராகவிருந்தமையும் தமிழ்நூல்களாற் றெளியப்படுதலால், அருச்சுனனது தீர்த்தயாத்திரையைப்பற்றிய தென்னாட்டுவழக்குச் சிறிதும் ஐயுறத்தக்கதன்றும். சித்திராங்கதை பாண்டியன்மகளாகவும், மணிபுரம் மணலூர் புரமாகவும் பிற்காலத்தவர்சிலராற் கூட்டிவழங்கப்பட்டன என்று கூறுவோர், தங்கூற்றுக்குத்தக்க ஆதாரங்காட்டாததோடு, பாண்டிய அருச்சுனர்களது சம்பந்தம்பற்றிய பண்டைத் தமிழ்வழக்கை அறியாமலும் எழுதினராவர். பண்டிநாட்டில் சமீபத்தே அகப்பட்டதும் பன்னூறாண்டுகளுக்கு முற்பட்டதுமான சின்னமனூர்த் தாமிரசாஸனமொன்றில்,* அருச்சுனற்குச் சித்ராங்கதையிடம் பிறந்த பப்ருவாஹனனைப் பாண்டியரது முன்னோர்களில் ஒருவனாகக் குறிப்பிக்கப்பட்டிருத்தல், தமிழ்நாட்டில் வழங்கிய அப்பண்டை வழக்கை மெய்ப்பிக்கின்றது. அச்சாஸனத்தில், "விஜயனுக்கு நேர்ந்த வசுவின்சாபத்தைப் போக்கினவன்" என்று பாண்டியனொருவன் வருணிக்கப்படுகிறான். இது பாண்டியர்க்கு முன்னோனாகிய பப்ருவாஹனனது வரலாற்றை, அவன் வழிவந்தவனுக்கேற்றிக் கூறப்பட்டதாகும். மஹாபாரதம் † அசுவமேதபர்வத்தில் (அத்-அக.) யாக அசுவத்தின் பொருட்டு அருச்சுனற்கும் அவன் மகன் பப்ருவுக்கு நடந்த பெரும்போரிலே அருச்சுனன் வீழ்ந்துமூர்ச்சையடையவும், நாககன்னிகையாகிய அவன்மனைவி உலூபி என்பாள் ஆங்குவிரைந்து வந்து தன் கணவனை மூர்ச்சைதெளிவித்து,—இங்ஙனம் அருச்சுனற்கு நேர்ந்த துன்பம், அவன் பீஷ்மரைப் பாரதப்போரில் வஞ்சகமாகக் கொன்றதைப் பொறாத வசுவொருவனால் இடப்பட்ட சாபமென்றும், அச்சாபம், 'பப்ருவாஹனனென்னும் தன்புத்ரனால் போர்க்களத்தில் விஜயன் வீழ்த்தப்பட்டபின் தீருமென்ற' அவ்வசுவின் நியமனப்படி இப்போது விலகலாயிற்றென்றும் அந்நாககன்னிகை கூறிய செய்தி விரிவாகச்சொல்லப்பட்டிருத்தலால் வசுசாபத்தை

* Ep. An. Rep. for the year 1906—7.

† ஸ்ரீ பிரதாபசந்திரராய் அவர்களது ஆங்கில மொழிபெயர்ப்பு--(சாந்தி பர்வம்-205-6-ம் பக்கங்கள் பார்க்க.)

நீக்கியவன் பப்ருவேயாதல் காண்க. ஆகவே, அருச்சுனன்மகனைப் பாண்டியன் முன்னோனாகப் பன்னூற்றாண்டுகட்கு முன்பே தமிழ் நாட்டார் வழங்கிவந்தமை தெளியப்பட்டது. இன்னும், அருச்சுனனால் மணக்கப்பெற்றவள் பாண்டியன் மகளே என்பதை—

"பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான்
பாண்டியன் மடமகள் பணைமுலைச் சாந்தம்
வேறு தொடங்கிய விசய னெஞ்சத்
தாரழ லாற்றா தைஇ யோகியிற்
பொறியிற் சாந்த மெல்லாம் பொருதிரை
முத்தினு முழங்கற் செந்தீப்
பொத்துவது போலும் புலம்புமுந் துறுத்தே." *

என்னும் பழஞ்செய்யுளுங் கூறுதல் காண்க. வில்லிபுத்தூராரும் இச்செய்தியை அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கத்தே அலங்கரித்துப் பாடியுள்ளார். இவையன்றி, புகழேந்தியார் ஒருசமயத்திற் பாடியதாக வழங்கும் அல்லியரசாணிமாலையிற் கூறப்பட்ட சரித்திரமுழுதும், பாண்டியன் மடமகளைப் பார்த்தன் மணம்புரிந்து பப்ருவாகனனைப்பெற்ற வரலாறுகளேயாகும். இந்நூல், தமிழறிஞர்க்கேற்ற பாஷைநயமுடையதன்றாயினும், இதிற்கண்டவிஷயம்—தமிழ் நாட்டிற் பழங்காலமுதலே வழங்கிவரும் ஒருசரித்திர நிகழ்ச்சியைப் பற்றியதென்பது, படிப்போர்யாவர்க்குந் தோன்றக்கூடியது. இம்மாலையில், சித்ராங்கதையின் பிறப்புவளர்ப்புகளும், அருச்சுனன் அவளைக்கண்டு காமுற்று நிகழ்த்திய செய்திகளும், முடிவில் அவன் அவளை மணந்து பப்ருவாகனனைப்பெற்றதுமாகிய கதைகள் விநோதமாகவும் புனைந்தும் கூறப்பட்டுள்ளன. சித்ராங்கதையை "அல்லி" என்ற பெயரானே இந்நூல் வழங்கியிருத்தலுங் கவனிக்கற்பாலது. இவற்றால், தென்னாட்டு வழங்கும் கன்னபரம்பரைகளும், அருச்சுனனால் மணம்புரியப்பட்ட சித்ராங்கதை பாண்டியன்மகளே என்பதை நன்கு விளக்குதல் காணலாம்.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், ௯௪-ம் சூத்திரவுரையில், நச்சினார்க்கினியர் காட்டிய மேற்கோள்.



இனி, தென்னாட்டுப் பாரதப்பிரதிகளிற் கண்ட மணலூர்புரமென்பது, மதுரையுண்டாவதற்கு முன்பே பாண்டியன் தலைநகராயிருந்ததெனத் திருவிளையாடற்புராணம் படித்தவரெல்லாம் அறிவர். இதனை, மணவூர், மணலூர், மணற்புரம் என்று மதுரைமான்மியங்கள் வழங்கும். இவ்வூர், மதுரைக்குக் கிழக்கேயுள்ளது. வடநாட்டார் வழங்கும் மணிபுரம் என்பதை மணலூர்புரமென்பதன் திரிபாகவேனும், "அயிலிலங்கு மணற் புரத்தரசற் குவந்தறிவித்தனன்" எனவேம்பத்தூரார் திருவிளையாடற்புராணத்திற்(படலம்-௫௩;பாட்டு-௧௦) கண்டவாறு, மணற்புரமென்பதன் திரிபாகவேனும் கொள்ளுதலே முன் கூறிப்போந்த நியாயங்களோடு பொருந்துமென்க. வியாசபாரதம் ஆதிபர்வம் தெலுங்குமொழிபெயர்ப்பில், மணிபுரமென்றே காணப்படுகிறதாயினும், அந்நகரம் காவிரிக்குத் தெற்கேயிருப்பதாக அம்மொழிபெயர்ப்பில் காண்டலால்,* மணலூர்புரம் அல்லது மணற்புரமென்பதன் திரிபே மணிபுரமென்பது வலியுறுகின்றது. இம்மணலூர்புரமென்னும் பாரதவழக்கு, இக்காலத்தவர் சேர்த்ததன்றென்பது "மணலூர்புரமென்னுந் தமிழ் வியாசபாரதத்திற் சென்றது தேசிகம்" எனப் பிரயோகவிவேகநூலார் கூறிச்செல்லுதலாலும் அறிக. (காரகப்-௨.)

இனி, அருச்சுனன் மணலூரரசனிடம் சென்று அவன்மகளை விரும்பிக்கேட்டபோது, அவ்வரசன், தன்மகட்குப் பிறக்கும் புத்ரனைத் தன்சந்ததி விருத்தியின் பொருட்டுப் புத்திரிகாபுத்ரனாக அளிக்குமாறு கேட்டுக்கொண்டபடி, அருச்சுனன் சம்மதித்து அவ்வரசன் மகளைமணந்து பப்ருவாகனனைப்பெற்றுப் பாண்டியற்குதவிச்சென்றானென்ற விஷயம் தலைப்பிற் கூறப்பட்டது. இச்செய்தி, மணலூரரசனாகிய தென்னவனது வமிசம் பாண்டவசம்பந்தம் பெற்றதைக் குறிப்பதோடு, பாண்டவனான அருச்சுனன் மகனாய்த் தென்னாடாண்ட பப்ருவாகனனுக்குப் பின்பே "பாண்டியர்" என்ற சிறப்புப்பெயரைத் தென்னவர் பெற்றாரென்பதையும் வெளியாக்குகின்றது. பாணினிபகவான் அருளிய வியாகரணத்திற்கு வார்த்திகை எழுதியவரும் பிராசீனருமாகிய காத்யாயனமுனிவர், பாண்டியசப்தத்தை

* The Tamils 1800 years ago. pp. 54. (foot note.)

விளக்கவேண்டி, "பாண்டோர்ட்யண்" என்று வார்த்திகை இட்டனர் (அத்-௪, பாதம்-௧, சூத்-௧௬௮). இதனற் போந்தபொருள்:— பாண்டுவமிசத்தவனிடமிருந்து தோன்றியவர் யாவர் அவர் பாண்டியர்—என்பதாம். எனவே, பாண்டவனை அருச்சுனன் தன்மகன் பப்ருவாகனனைச் செழியன்வமிசத்துக்கு அளித்துச்சென்ற பின்னரே, அவனை மூலபுருஷனகவுடைய வமிசத்தவர், பாண்டியரென்ற பட்டப்பெயர் பெற்றனராவரென்பது பெறப்பட்டது. சித்ராங்கதையிடம் அருச்சுனற்குப் பிறந்த பப்ருவாகனனையன்றிப், பாண்டுவமிசத்தவனை வேறு மூலபுருஷன் தென்னவர்மரபுக்கிருந்ததாகத் தெரியாமையால், பாண்டியப் பெயருண்டானதற்குப் பப்ருவே காரணமானவனென்க. பாண்டவசப்தத்துக்குக் காத்யாயனர் மூற் கூறியவாறு வார்த்திகையிட்டது, பாண்டவனை பப்ருவின் பாரத வரலாற்றை உட்கொண்டே என்பதும் உய்த்துணரத்தக்கது.

இவ்வாறு, பாண்டவனிடமிருந்துதோன்றியவரே பாண்டியரென்று, பாரதசரித்திரத்தை உட்கொண்டு கருதிய காத்யாயனர்கொள்கையைக் 'கௌரியர்' "பஞ்சவர்" எனத் தென்னவர்க்கு வழங்கும் வேறுபெயர்களும் வலியுறுத்துகின்றன. இவற்றுள்முன்னது, "செருமாண்பஞ்சவரேறே" எனப் புறப்பாட்டினும், "பழியொடுபடராப் பஞ்சவவாழி" எனச்சிலப்பதிகாரத்தும் பண்டுதொட்டே வழங்குதல் காண்க. இப்பஞ்சவரென்னும் வழக்கும், பாண்டவரதுசம்பந்தம் பற்றித் தென்னவர்க்கு வழங்கியதென்பது எளிதில் விளங்கத்தக்கதாம். இவ்வாறே கௌரியரென்னும் பாண்டியர் சிறப்புப்பெயரும், கௌரவனை அருச்சுனன் அல்லது பப்ருவாகனனது வழியில் வந்தவரென்பதைக் குறிக்கவல்லது. கௌரவர் அல்லது கௌரவ்யர் என்பது கௌரியரெனத் தமிழில் திரிந்ததுபோலும்.* இவ்வாறு, தென்னவர் பாண்டவருடன் சம்பந்தம்பெற்றவரென்பது, அவர்க்கு வழங்கும் பெயர்களாலும் அறியப்படுதல் காண்க.

இனி, இற்றைக்கு 2300-ஆண்டுகட்குமுன், சந்திரகுப்தசக்ரவர்த்தியிடம் ராஜதூதராய்வந்துசென்ற மெகாஸ்தனிஸ் என்ற யவனாசிரியர், ஸ்திரீகளால் ஆளப்பட்டுவந்ததாகக் கருதப்பெற்ற தென்னாட்டரசியலைப்பற்றித் தங்காலத்தில் கேள்வியுற்ற சிலசெய்திகளைக் குறிப்பிட்டிருக்கின்றார். *அவை—"ஹெர்குலஸ்போன்ற பெரியவீரனாகிய அரசனொருவன், பாண்டியை என்று சொல்லப்பட்ட ஒரே புத்ரியைப்பெற்றான். அவ்வரசன், கடல்வரையுள்ள தென்பக்கத்து ராஜ்யத்தை அவளுக்களித்தான். அந்நாட்டை 365-ஊர்களாகப்பிரித்துத் தன்கீழ்ப்பட்ட சிற்றரசரிடம் அவற்றை ஒப்புவித்து, ஒவ்வோரூர்த்தலைவரும், தத்தம் திறைப்பணத்தை நாள்தோறும் அவட்களித்துவரும்படி ஒழுங்குசெய்து—இவ்வாறு அவ்வரசியானவள் எக்காலத்தும் அத்தலைவர்களுடைய உதவியோடு வாழவும், கொடியபஞ்சகாலத்திலும் அவள் எவ்விதக்குறைவுமில்லாதிருக்கவும் தக்கதிட்டங்களைச் செய்திருந்தான்—என்பதே. இச்செய்தியையே, பிற்காலத்துவந்த அர்யன் முதலிய யவனாசிரியரும் வற்புறுத்துவதோடு, அவ்வரசியின் படைவன்மையையும் திறமையையும் பற்றித் தாம்கேட்டிருந்த வேறுசில விஷயங்களையுங் குறிப்பிட்டனர். இங்ஙனம், பண்டைக்காலத்திருந்த அந்நியர்களும், தென்னாட்டு ராஜாங்கமுறையைப் பற்றிக் கேள்வியுற்றதாக எழுதிய விஷயங்கள், அருச்சுனன் மணந்த சித்ராங்கதையைக் குறித்தனவாகவே கருதத்தக்கன. அல்லி என்ற தமிழ்ப் பெயர்பெற்ற அவ்வரசி, இளமையிற் பற்பல போர்களில் வெற்றியுற்றுப் பாண்டிநாட்டை மிக்க திறமையுடன் ஆட்சிசெய்த சரிதம், அல்லியரசாணிமாலையாலும் நன்கறியப்படும். இதனால், பன்னூற்றாண்டுகட்குமுன்னிருந்த யவனர்களெழுத்தாலும், பாண்டியன் மகளாகிய சித்ராங்கதையைப்பற்றிய வழக்குப் பிரபலமாயிருந்தமை தெளியப்படுகின்றது.

இவ்வாறு, பாரதமுதலாய நூல்களாலும் பழைய வழக்குகளாலும், சித்ராங்கதை என்பாள் பாண்டியன்மகளே என்பதும், அவளையே அருச்சுனன் மணந்து பப்ருவாகனனென்னும் புத்ரனைப்பெற்றானென்பதுந் தெளியப்படுதலால், தென்னாட்டுப் பிரதிகளிற்கண்ட செய்திகள் இடைச்செருகலென்று சிலராற் கூறப்படுவது எவ்வாற்றானும் பொருந்தாமை கண்டுகொள்க.

* கௌரியாரிய ஸ்ரீமீனாக்ஷியின் திருக்குலத்தவராகிய பாண்டியர் "கௌரியர்" எனப்பெயர் பெற்றனர் என்பது மொன்று.

* Vincent. A. Smith's "The Early History of India" Second Edition. pp. 407.

இனி, அருச்சுனன் மகனும் பாண்டியனுமாகிய பப்ருவாகனன், தர்மபுத்திரரால் நடத்தப்பெற்ற அசுவமேதயாகத்துக்கு அழைக்கப் பட்டு இந்திரப்பிரஸ்தஞ்சென்று ஆங்குப் பாண்டவராற் பேரன்புடனும் மிக்க சிறப்புடனும் வரவேற்கப் பெற்றானென்றும் அவ்யாகத்தில் விருந்தினரெல்லார்க்கும் உண்டியளித்து உபசரிக்குங் காரியத்தை பப்ருவே மேற்கொண்டு நடத்தினனென்றும் வியாசபாரதம் அசுவமேதபர்வத்தில் (அத்தி-அக.) கூறப்பட்டுள்ளது. பாரதப் போரில், உதியன் சேரன் என்னும் தமிழரசன், பாண்டவசேனைக்கு இவ்வாறே உணவளித்துப் பேர்பெற்ற செய்தியை முரஞ்சியூர் முடிநாகராயரென்ற தலைச்சங்கத்துப் புலவரும் பிறரும் பாடியுள்ளார். சோழனும் உணவளித்தவனென்று சிலப்பதிகாரங் கூறும் (காதை-உக, அடி-ருரு.) இவற்றால் தமிழரசர்கள், பாண்டவர்க்குத் தக்கசமயங்களிலெல்லாம் உணவளித்துதவியவரென்ற விஷயமும் கவனிக்கற்பாலதாம்.

இனிப் புறநானூற்றில் "விழுக்கடிப்பறைந்த" என்னும் கூ௬௬-ம் பாட்டு தருமபுத்திரனைக் கோதமனார் என்ற புலவர் பாடியதாகக் காணப்படுகின்றது. இச்செய்தியை மேலேகுறித்த விஷயங்களோடு சேர்த்து நோக்கும்போது, அசுவமேதயாகம் போன்ற சந்தர்ப்பமொன்றில், தமிழரசருடன்சென்ற தமிழ்ப்புலவரொருவர் பாண்டவரின் முன்றோன்றலையே அவ்வாறு பாடினரோ? என்று கொள்ளக் கிடக்கின்றது. அப் புறப்பாட்டில் "அறவோன் மகனே" எனத் தர்மபுத்திரர் அழைக்கப்படுதலும், தலைச்சங்கத்தவர்களிலே கோதமனார் என்ற பெயருடைய புலவரொருவர் காணப்படுதலும் இங்கு அறியத்தக்கன.

பத்திராசிரியர்.

---

உ

சிவமயம்.

# திருக்குறட் பரிமேலழகருரை விளக்கம்.

(முற்றொடர்ச்சி.)

---

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

இ - ள். வேண்டுதல்......................உளவாகா. எ-று.

ஒருபொருளையும் என்றது உலகினுள் எல்லாப்பொருளையும் என்றபடி.

விழைதலும் என்றது நன்மை செய்ததென்று விரும்புதலும் என்றபடி.

வெறுத்தலும் என்றது தீமைசெய்ததென்று வெறுத்தலும் என்றபடி.

இங்ஙனம் கூறலாமா? நன்மைசெய்ததென்று விருப்பும், தீமை செய்ததென்று வெறுத்தலும் இல்லாதவராயின்; சிலவுயிர்க்கு இன்பமயமாகிய தேவாதி சரீரங்களையும், சிலவுயிர்க்குத் துன்பமயமாகிய மானுடாதிசரீரங்களையும் கொடுத்தல் எற்றிற்கெனின்? அச்சரீரங்கள் அவ்வுயிர்கள்செய்த கன்மங்காரணமாக அவற்றிற்கெய்துகின்றனவேயன்றி, அவர்கொடுக்கின்றன அல்லராதலின், அதுகடாவன்றென விடுக்க. உயிர்களுக்குச் சரீராதிகள் கன்மங்காரணமாகவே அடைகின்றதென்பதை "ரமணீயசரணா ரமணீயாம் யோனிமாபத்யேரன் கபூயசரணா: கபூயாம்" (சாந்-ரு-க௦.) என்பதனானும், "புண்யோ வை புண்யேன கர்மணா பவதி பாப: பாபேன" (ப்ருஹ-உ.-௩.௰௩.) என்பதனானுமறிக.

அடியை என்றது திருவருளை.

சேர்ந்தார் என்றது ஏகனாகி இறைபணிநின்றார் என்றபடி. ஏகனாகி நிற்றலாவது "இரண்டாம்பயனென்னுந் திருவருடனியிற்—சென்று சென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றா—மென்றிறையியற்கையியம்புதற்கும்" எனக் கூறியவாறு நிற்றல். இறைபணி நிற்றலாவது "நாமல்லவிந்திரிய நம்வழியினல்லவழி—நாமல்ல நாமுமாறுடைமை" என்று உள்ளவாறுணர்ந்து செய்வனவெல்லாம் இறைவனருளின்வழி நின்றுசெய்யுஞ் செயலாய்க்கண்டு நிற்றல். இங்ஙனம் நின்றார்க்கே பிறவித்துன்பமறுமென்க. அது "எத்தனுவினின்று மிறைபணியார்க் கில்லைவினை—முற்செய்வினையுந்தருவான்முன்" என்பதனானறியப்படும்.

எக்காலத்தும் என்றது இகத்தும் பரத்தும் என்றபடி. பிறவித்துன்பங்களென்றது ஈண்டுப்பிராரத்தவினைகளை.

உளவாகா என்றது, இங்குளிவாங்குங்கலம்போலப் பிராரத்த வினை வாசனைமாத்திரையாய் மெலிதாய் (உடனுழாய்) வந்துதாக்குதலேயன்றி, உயிருழாய்வந்துதாக்காதென்றபடி. இதனை "இங்குளிவாங்குங்கலம்போல ஞானிபால்—முன்செய்வினைமாயை மூண்டிடினும்" என்பதனானும், "முற்செய்வினையங்குத்—தங்கிப்போம் பாத்திரமுங் குலாலன் வினைதவிர்ந்த சக்கிரமுங் கந்தித்துச் சுழலுமாபோல்—மங்கிப்போயவாதனையாலுழல்விக்கும்" என்பதனானுமறிக.

தன்னைப்பற்றிவருவன சரீரத்தாலும் மனத்தாலும் அடையுந் துன்பங்கள். இவற்றை ஆதியாத்தியான்மிகமென்பர்.

பிறவுயிர்களைப்பற்றி வருவன குளிரும், வெப்பமும், மழையும், காற்றும், இடியுமென்றின்னோரன்ன வற்றாலடையுந் துன்பங்கள்; இவற்றை ஆதிபௌதிகமென்பர்.

தெய்வத்தைப்பற்றிவருவன மாதாவின் கருப்பத்தினாலும், சநந மரணங்களாலும், யமதண்டமுதலியவற்றாலுமடையுந் துன்பங்கள். இவற்றை ஆதிதைவிகமென்பர்.

இவற்றின் விரிவை,—



ஆதி தைவிக மாதி பௌதிக
மாதி யாத்தியான் மிகமென வோதிய
துக்க மூன்றினு ளாத்தியான்மிக
மெய்யின் மனத்தி லையமி ரண்டே
வளியிற் பித்தின் விளியா வினையி
னானுகு தொழுனையி னுதகக் கொட்டின்
வெப்பிற் சூலையின் மக்களின் விலங்கி
னலகையிற் கள்வரிற் பறவையி னிருதரின்
மைந்தர் மகளிர் மணந்திடை தணப்பிற்
போறம் வளர்ப்பிற் பெருந்திரு நுகர்விற்
சீரிய யாக்கை மாதுயர் மாசு
மனத்துறு துயர நினைப்பருஞ் சோக
மறிவுருவாக்க மடையுநர்ப் பொறாமை
மான மாக்கலம் பூணாது மறுத்த
லிச்சையி னிசைத விருஞ்சின மிருத்த
லினையவை முதல நினைவருந் திறத்த.
ஆதி பௌதிகஞ் சீதமா மழை
யுருப்பவிர் வேனி லுட்குவரு கடுங்கா
லிருள்கிழி மின்னுப் பெருவிற லசனி
மன்னுயிர்க் குறுகண் டுன்னியா றருந்த
லாதி யாய வீவருந் திறத்த.
ஆதி தைவிகம் பேதையர் வயினக்
கருக்குழி யழுங்க பிறப்பிறும் பூது
திரைவருந் தீமை வரைவில் பேதைமை
மடங்க லாருயிர் தொடங்கினன் வெளவல்
யாவரும் விழையாக் கோள்வாய் நிரயத்து
வீழ்ந்தன ரெழாஅ வான்கழி துன்ப
மினைய மாலைய துயரிடை வினைகர்க்
கருங்கைக் கயமைக் களிறுகைத் திரும்புலப்
பெரும்படை விரிந்து சூழத் திருந்தா
நாற்கதிப் பவனி யுலாஅ
யார்த்தவிழ் திறம்பிற போற்றுமதி புரிந்தே.

என்பதனானறிக.

அடிசேர்ந்தார்க்கு மவ்விரண்டுமின்மையின் அவைகாரணமாக வரும் மூவகைத் துன்பங்களுமிலவாயின என்றது எல்லாமிறைவன் செயலேயெனக்கண்டு அவன்றிருவருளிலழுந்தி நிற்பார்க்கு பிரபஞ்சப் பற்றின்மையாற் பிராரத்தவினைகள் உடலூழாய்வந்து அவரைத் தாக்குதலொழிய வாதியாதென்றபடி. அது; அங்கித்தம்பனை வல்லார்க் கனல்சுடாதாகு மௌடத மந்திரமுடையார்க் கருவிடங்களேறு—வெங்குற்ற கன்மமெலாஞ் செய்தாலுஞ் ஞானிக்கிருவினைகள் சென்றணையாமுற்செய்வினையிங்குத்—தங்கிப்போம் பாத்திரமு...... காயமொடுமாயுமன்றே'' என்பதனானறியப்படும். மாணிக்கவாசகசுவாமிகளும், திருநாவுக்கரசசுவாமிகளும் முறையே பாண்டியனாலும் சமணர்களாலும் அடைந்த துன்பங்களால் வாதிக்கப்படாமையாலும் இது நன்கறியப்படும்.

சி. கணேசையர்.

---

உ

# மூவகையான்மாக்களிலக்கணம்.

செந்தமிழ் 8-வது தொகுதி இரண்டாம் பகுதியில் சங்கத்து சைவநூற் பரிசோதகரவர்களால் மேலேகூறிய விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இலக்கணவிளக்க பரம்பரை ஸ்ரீ சிதம்பரநாததேசிகர் எழுதிய சிவஞானசித்தியார் பொழிப்புரையில் இன்னும் விசேஷமாக இருக்கும் பாகத்தினை சிவநேசச் செல்வர்கள் அறியும் பொருட்டு வெளியிடுகிறேன்.

கூ0சு-ம் பக்கம் உகூ-வது வரியில் சிவர் என்று எழுதப்பட்டிருப்பது ஈசுரர் என்று காணப்படுகிறது.

கூ0எ-ம் பக்கத்தில் கூ-வதுவரிக்குப்பிறகு, அதாவது இரண்டாவது பாராவின்கீழ் இவர்கட்குப் படைப்புமுதலிய தொழில் எக்காரணத்தாலெனின், சாந்தமூர்த்தியாயிருக்கிற சதாசிவர் அவர்களெண்மரையும் தமது சரீரத்தினின்றும் தோற்றுவிக்கையாலுண்டாயதெனவறிக'' என்று காணப்படுகிறது.



அடுத்தவரியில், அதாவது, ஆனுலிவர்களெண்மரும் தம்மிலொத்திருப்பரோவெனில், என்றதன்மேல் "அநந்த தேவநாயனாரைப் பற்ற மற்றவர்களுக்கு ஒவ்வொருகலை அடைவே குறைந்து குறைந்து வருகையால் உத்தரோத்தரம் ஒருவருக்கொருவர் விசிட்டரென வறிக'' என்று காணப்படுகிறது.

மேல் கூ0அ-ம் பக்கத்திற்கு மேல் "முற்கூறினவர்களன்றிச் சேடித்துள்ளாரிற் சிறிதுபெயரை செய்தகன்மத்தாலே பிரளயாகலர்களாயிருந்தார்களே யாயினும்—அவர்களுக்கு மலபரிபாகம்வராதபடியாலே அநந்ததேவநாயனார் மாயாகர்ப்பாதிகாரிகளாக கலாமத்தகத்திலேயிருக்கும் கணேசர் முதலிய வெண்மரையும், குணதத்துவமத்தியிலிருக்கும் குரோதமுதலிய வெண்மரையும், நூறுருத்திரருக்கும் அதிட்டாதாவாய் சூக்குமப்பிரகிருதியிலிருக்கும் வீரபத்திரரும், ஸ்ரீகண்ட பரமேசுரன், அதற்குக்கீழ்ப்பட்ட புவனங்களிலிருக்கும் பிரும்மா முதலாயினோர்க்கும், பிரம்மாண்டகாரராகியகாபாலீசர் முதலிய உருத்திரர்கள் நூற்றிருபத்தெண்மரையும் அதிபராகயோசிப்பன். ஆக பிரளயாகலரு மூவகையரெனவறிக. இவர்கள் சிருட்டிகாலத்தில் பந்தத்தாலே கலாதிகளுடனே பந்தப்படினும், கலாதிகளாற் சகலரைப்போல் வருப்பரல்லர்; அஃதென்போலென்னில் பாம்பினிடத்திலிருக்கிற விடமானது அதனைவாதியாதுபோல இவர்களும் அதனால் வாதையுறார்களெனவறிக.

கூ0கூ-வது பக்கத்தில் 20-வது வரியில் "காமியகிருகப்படலத்தும்'' என்பது "காமியத்துப்பாதாறுக்கிருகப் படலத்தும்" எனக் காணப்படுகிறது.

இம்மூவரையும் தொகுத்தறியிற் பதின்மரென வறிக.

"விஞ்ஞானர்..............என்ற திருமந்திரச்செய்யுள் காணப்படுகிறது.

இலக்கணவிளக்க பரம்பரை,
திருவாரூர். சோமசுந்தரதேசிகன்.

---

அடிசேர்ந்தார்க்கு மவ்விரண்டுமின்மையின் அவைகாரணமாக வரும் மூவகைத் துன்பங்களுமிலவாயின என்றது எல்லாமிறைவன் செயலேயெனக்கண்டு அவன்றிருவருளிலழுந்தி நிற்பார்க்கு பிரபஞ்சப் பற்றின்மையாற் பிராரத்தவினைகள் உடலூழாய்வந்து அவலமாத் தாக்குதலொழிய வாதியாதென்றபடி. அது; அங்கித்தம்பனை வல்லார்க் கனல்சுடாதாகு மௌடத மந்திரமுடையார்க் கருவிடங்களேறு—வெங்குற்ற கன்மமெலாஞ் செய்தாலுஞ் ஞானிக்கிருவினைகள் சென்றணையாமுற்செய்வினையிக்குத்—தங்கிப்போம் பாத்திரமு..... மாயமொடுமாயுமன்றே" என்பதனானறியப்படும். மாணிக்கவாசகசுவாமிகளும், திருநாவுக்கரசுசுவாமிகளும் முறையே பாண்டியனாலும் சமணர்களாலும் அடைந்த துன்பங்களால் வாதிக்கப்படாமையானும் இது நன்கறியப்படும்.

சி. கணேசையர்.

---

௨

# மூவகையான்மாக்களிலக்கணம்.

செந்தமிழ் 8-வது தொகுதி இரண்டாம் பகுதியில் சங்கத்து சைவநூற் பரிசோதகரவர்களால் மேலேகூறிய விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இலக்கணவிளக்க பரம்பரை ஸ்ரீ சிதம்பரநாததேசிகர் எழுதிய சிவஞானசித்தியார் பொழிப்புரையில் இன்னும் விசேஷமாக இருக்கும் பாகத்தினை சிவநேசச் செல்வர்கள் அறியும் பொருட்டு வெளியிடுகிறேன்.

௧௦௬-ம் பக்கம் ௨௯-வது வரியில் சிவர் என்று எழுதப்பட்டிருப்பது ஈசுரர் என்று காணப்படுகிறது.

௧௦௭-ம் பக்கத்தில் ௯-வதுவரிக்குப்பிறகு, அதாவது இரண்டாவது பாராவின்கீழ் இவர்கட்குப் படைப்புமுதலிய தொழில் எக்காரணத்தாலெனின், சாந்தமூர்த்தியாயிருக்கிற சதாசிவர் அவர்களெண்மரையும் தமது சரீரத்தினின்றும் தோற்றுவிக்கையாலுண்டாயதெனவறிக" என்று காணப்படுகிறது.



அடுத்தவரியில், அதாவது, ஆனவிவர்களெண்மரும் தம்மிலொத்திருப்பரோவெனில், என்றதன்மேல் "அநந்த தேவநாயனாரைப் பற்ற மற்றவர்களுக்கு ஒவ்வொருகலை அடைவே குறைந்து குறைந்து வருகையால் உத்தரோத்தரம் ஒருவருக்கொருவர் விசிட்டரென வறிக" என்று காணப்படுகிறது.

மேல் ௧௦௮-ம் பக்கத்திற்கு மேல் "முற்கூறினவர்களன்றிச் சேடித்துள்ளாரிற் சிறிதுபெயரை செய்தகன்மத்தாலே பிரளயாகலர்களாயிருந்தார்களே யாயினும்—அவர்களுக்கு மலபரிபாகம்வராதபடியாலே அநந்ததேவநாயனார் மாயாகர்ப்பாதிகாரிகளாக கலாமத்தகத்திலேயிருக்கும் கணேசர் முதலிய வெண்மரையும், குணதத்துவமத்தியிலிருக்கும் குரோதமுதலிய வெண்மரையும், நூறுருத்திரருக்கும் அதிட்டாதாவாய் சூக்குமப்பிரகிருதியிலிருக்கும வீரபத்திரரும், ஸ்ரீகண்ட பரமேசுரன், அதற்குக்கீழ்ப்பட்ட புவனங்களிலிருக்கும் பிரும்மா முதலாயினோர்க்கும், பிரமாண்டகாரராகியகாபாலீசர் முதலிய உருத்திரர்கள் நூற்றிருபத்தெண்மரையும் அதிபராகயோசிப்பன். ஆக பிரளயாகலரு மூவகையரெனவறிக. இவர்கள் சிருட்டிகாலத்தில் பந்தத்தாலே கலாதிகளுடனே பந்தப்படினும், கலாதிகளாற் சகலரைப்போல் வருப்பரல்லர்; அஃதென்போலெனில் பாம்பினிடத்திலிருக்கிற விடமானது அதனைவாதியாதுபோல இவர்களும் அதனால் வாதையுறார்களெனவறிக.

௧௦௯-வது பக்கத்தில் 20-வது வரியில் "காமியகிருகப்படலத்தும்" என்பது "காமியத்துப்பாதாறக்கிருகப் படலத்தும்" எனக் காணப்படுகிறது.

இம்மூவரையும் தொகுத்தறியிற் பதின்மரென வறிக.

"விஞ்ஞானர்..............என்ற திருமந்திரச்செய்யுள் காணப்படுகிறது.

இலக்கணவிளக்க பரம்பரை,
திருவாரூர். சோமசுந்தரதேசிகன்.

---

உ

# நல்லைவெண்பா.

இது யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சுப்பிரமணியக்கடவுள்மீது பாடப்பட்ட ஒரு பிரபந்தம். இதன்கண் நூறு செய்யுட்கள் உள்ளன. அவைகளெல்லாம் சிலேடையாகவும், யமகமாகவும் பாடப்பட்டிருக்கின்றன. இதனை இயற்றினோர், ஏறக்குறைய ஐம்பது வருஷங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்துள்ள இருபாலை என்னும் ஊரிலே அதிகாரம், செல்வம், கல்வி, உயர்குடிப்பிறப்பு முதலியவற்றாற் பெருஞ்சிறப்புற்று விளங்கிய மஹாவித்துவான் சேனாதிராய முதலியார். நல்லைத்திரிபந்தாதி, நல்லைக்குறவஞ்சி, நீராவிக்கலிவெண்பா முதலிய நூல்களை இயற்றினோரும் இவரேயாவர். இவராற் பாடப்பட்ட முத்தகச்செய்யுட்களும் எத்தனையோபல. இவர் தந்தையார் பெயர் நெல்லைநாதபண்டிதர். இவர் உரியகாலத்திலே வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று, அதிக ஞாபகசக்தியும், அதிக நுண்மதியுமுடையராய் இலக்கியப்பயிற்சி செய்துவருங்காலத்திலே, தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம்வந்த கூழங்கைத்தம்பிரான் எனப் பெயரிய தமிழ்ப்பண்டிதர் ஒருவரிடம் நன்னூல் முதலிய இலக்கண நூல்களைப் பெருந்தொகைப் பொருள்கொடுத்து விரைவிற் கற்றுணர்ந்தார் என்பது கர்ணபரம்பரை. இவர், யாழ்ப்பாணத்துள்ள நியாயசபையிலே நியாயப்பிரதிநிதியாக அமர்ந்திருந்தனராகலின், அவ்வுத்தியோகம்பார்க்கும் நேரமொழிந்த மற்றைக்காலங்களிலெல்லாம், தாம் அரிதிற் கற்றுணர்ந்த செந்தமிழ்க் கல்வியை வளர்க்கக் கருதி, அதனை இடைவிடாது மாணவர்களுக்குக் கற்பித்துவருவாராயினர். யாழ்ப்பாணத்துள்ள பல இடங்களினுமிருந்துவந்து இவரிடம் கல்விகற்றோர் அநேகர். அவருள்ளே, சிவபதமடைந்த பிரபல வித்துவான்களாகிய நல்லூர் மனப்புலிமுதலியார் குமாரர் சரவணமுத்துப்புலவர், மறைசைக்கலம்பகம், நீர்வைவெண்பா முதலிய நூல்கள் இயற்றிய நீர்வை பீதாம்பரப்புலவர், தெல்லியம்பதி அம்பலவாணபண்டிதர் என்பார் சிரேட்டர். இவர்களும் தமது ஆசிரியர்போலப்



பலமாணாக்கர்களுக்குக் கல்விகற்பித்துச் செந்தமிழ்ப்பரிபாலனஞ் செய்து வருவாராயினர். சரவணமுத்துப்புலவர் சைவசிகாமணியாகிய ஆறுமுகநாவலர், உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், நல்லூர் கார்த்திகேய உபாத்தியாயர் முதலியோர்க்கு முறையாக நெடுங்காலம் கல்வி கற்பித்ததோடு ஒரு சிறந்த வேதாந்த நூலும் இயற்றிவைத்தனர். ஆங்கில திராவிட சம்ஸ்கிருத பண்டிதராய் அதிகாரபுருடராய் இப்பொழுது கொழும்புமாநகரில் வசிக்கும் திருநல்லூர் வெள்ளியந்திருமலைகிழார் எனப் பரியாயநாமம் பூண்ட இலங்கைத் தேசாதிபதியவர்களின் தமிழ் முதலியார் ஸ்ரீமாந்-சிற். கைலாசபிள்ளை அவர்கள், இச்சரவண முத்துப்புலவருக்குத் தௌஹித்திரராவர். முன்னாளிலே யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராஜசேகர மகாராஜாவுக்குச் சகோதரராகிய செகராஜசேகர மகாராஜாவினாலே சங்கஸ்தாபித்து வளர்க்கப்பட்டுப் பிற்றைஞான்று சற்றேகுன்றிய நம் செந்தமிழ்ப் பாஷையானது மீளப்பண்டைநிலை அடைவதற்கு முக்கிய காரணராய் விளங்கியவர் சேனாதிராய முதலியாரே என்பது பலரும் அறிந்த உண்மை. இவர் நல்லூர்ச் சுப்பிரமணியக் கடவுள்மீது மிகுந்த பத்தியுடையரென்றும், சுவாமிதரிசனத்துக்குச்செல்லுங் காலங்களிலெல்லாம் தோத்திரப்பாக்களைப் புதியனவாக இயற்றுவாரென்றும், அவ்வாறியற்றப்பட்டன அளவிறந்தன என்றும் இக்காலத்து வயோதிகர் சிலர் கூறுவர். அச்செய்யுட்களெல்லாம் காலக்கிரமத்திற் சிதைந்தொழிந்தன. நல்லைக்குறவஞ்சி நல்லைத்திரிபந்தாதி முதலிய நூல்களிற் சிலசில பாக்களே அடிகளும் சீர்களும் குறைந்தனவாகக் கேட்கப்படுகின்றனவன்றி முற்றாகக்கிடைக்கப்பெற்றில. நல்லைவெண்பாவும் நீராவிக்கலிவெண்பாவும் முன்னரே இவர் மாணாக்கருள் ஒருவராகிய அம்பலவாணபண்டிதரால் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவற்றுள் நல்லைவெண்பாவிலுள்ள சில கவிகளை ஈண்டு எடுத்துக் காட்டி விளக்கிச் செல்லுதும்.

தும்பி மருப்பொசித்துச் சூழ்ந்தவனை மாலையினாற்
கம்பமருங் கையினனோர் நல்லையே—யும்பருறை
மாகனக வில்லார் மகனா ரடியருளக்
கோகனக வில்லார் குலம்.

முதலடி விஷ்ணுவுக்கும் நல்லூருக்கும் சிலேடை. மூன்றும் நான்கும் யமகம்.

தம்பி-யானை; வண்டு. மருப்பு ஒசித்து-கொம்பை முரித்து. மருப்பொசித்து-தேனை உண்டு. வனமாலை - துழாய்மாலை; சோலையினது ஒழுங்கு. கம்பு - சங்கு. கனகவில்லார் - மேருமலையாகிய வில்லையுடையவர். உளக்கோகனகஇல் - இருதயகமலமாகிய வீடு.

நத்தமூ ருங்கயத்தா னன்கிளைகொள் பாடலத்தாற்
சித்தசவேள் போலுந் திருநல்லை—முத்திற்
றிருத்தணிகை மாமலையுந் தின்கோட்டிற் காட்டு
திருத்தணிகை மாமலையான் சேர்வு.

முதலடி மன்மதனுக்கும், நல்லூருக்கும் சிலேடை. மூன்றும் நான்கும் யமகம்.

நத்தம் ஊருங்கயம் - இருளாகிய ஊர்ந்து செல்லப்படும் யானை; சங்குகள் ஊருகின்ற வாவிகள். கிளைகொள் பாடலம் - கிளியாகிய குதிரை; கொம்பர்களையுடைய பாதிரிமரம். முத்திற்றிருத்து அணிகைமாமலை - முத்தினாற்செய்த ஆபரணத்தை அணிந்தயானை. கோடு- சிகரம்.

பொன்னங் கலையார் விலோதனத்தான் மாதிரம்போய்த்
தன்னியசீ ராலுமைநேர் தாநல்லை—முன்னயனைத்
தாரகங்க டாவினான் றாபரக்கட் பீலியைச்சூர்
போரகங்க டாவினான் பூ.

முதலடி உமாதேவிக்கும் நல்லூருக்கும் சிலேடை. மூன்றும் நான்கும் யமகம்.

பொன் - இலக்குமி. கலை - சரஸ்வதி. "திருமகள்வலக்கண் வாக்கின் சேயிழையிடக்கண்" என்பது திருவிளையாடற் புராணம். பொன்னங்கலை - பொன்னால் அலங்கரிக்கப்பட்ட வஸ்திரம். விலோதனம் - கண்; கொடி. மாதிரம் - மலை; திக்கு. தாரகம் கடாவினான்- பிரணவப்பொருளை வினவியவர். தாபரம் - உடம்பு. பீலி - மயில். பூ- இடம்.



ஓங்கு வளைக்குழையா ரொண்கண்ணுஞ் செங்காமுந்
தேங்குவளை காட்டுந் திருநல்லூர்—பூங்குறிஞ்சிக்
கார்த்திகையா ரும்பல் கனங்கிரியான் காயமுலாங்
கார்த்திகையா ரும்பல் களம்.

இரண்டாமடியிலே "தேங்குவளை" என்பது சிலேடை. மூன்றும் நான்கும் யமகம்.

வளைக்குழை - வள்ளையிலைபோன்ற காது. வளை தொருத்தல் விகாரம். தேம் குவளை - தேன்பொருந்திய குவளைமலர். தேங்குவளை - நிறைந்தவளையல். கார்த்திகை ஆரும் பல் கனம் கிரியான் - காந்தள் மலர்கள் பொருந்திய பல பெரியமலைகளையுடையவர். காயம் - ஆகாயம். கார்த்திகையார் உம்பல் - கார்த்திகைப்பெண்களுடைய குமாரர். களம் - இடம்.

சிலம்புவளை யார்பதம்போற் செவ்விப் பறம்புஞ்
சிலம்புபுனை செய்யதிரு நல்லூர்—வலஞ்சேர்
சதகோடியன் னான்கைத் தாக்குமுக்க ணன்பொன்
சதகோடி யன்னான் றலம்.

இரண்டாமடியிலே "சிலம்புபுனை" என்பது சிலேடை. மூன்றும் நான்கும் யமகம்.

சிலம்புவளையார் - ஒலிக்கின்ற வளையலையுடைய பெண்கள். பறம்பு - முலை. சிலம்புபுனை - சிலம்பை அணிகின்ற; மலையை ஒக்கின்ற. வலம் - வலப்பக்கம். சதகோடி - குலிசம். நான்கைத் தாக்குமுக்கண்- பன்னிரண்டு திருக்கண்கள். சதகோடி பொன் அன்னான் - நூறு கோடி பொன்னை ஒத்தவர்.

பாகனசொல் லார்நகையும் பன்னு சிலதூலும்
மாகதியைக் காட்டு மணிநல்லை—நாகவுரி
போர்க்குமரன் சத்திதரப் போந்தசுரர் மாளவடும்
போர்க்குமரன் சத்திதான் பூ.

இரண்டாமடியில் "மாகதி" என்பது சிலேடை. மூன்றும் நான்கும் யமகம்.

மாகதி - முல்லையரும்பு; மோக்ஷம். நாகவுரி - பாம்பின்தோல். சத்தி - உமை; வேல். போர்க்குமரன் - போரையுடைய குமரன்.

இரவலராய் வாய்மலர்வ தீர்ங்குயிலா முன்னு
வாவலரே வாய்ந்தவெழி லல்லை—இராமா
மூரவா குலையுய்த்தான் பின்னவ னேற்பேறு தி
வாரவாகு வையுய்த்தான் வைப்பு.

முதலடியிலே "இரவலராய்வாய்மலர்வது" என்பது நியமச்சிலேடை. மூன்றும் நான்கும் யமகம்.

இரவலர் - வறியவர். இரவு அலர் - இரவிலே மலரும்பூக்கள். வரம் - மேன்மை. இராமாம் உரஆகு - நிலையான வலிமையுடைய ஆகுவாகனம். வாகு - வீரவாகுதேவர்.

ஐயமினோர் சிற்றிடையே யன்றி யெவரிடத்து
மையமெனோர் வாழு மணிநல்லை—பையரவை
வாட்டுமொக ரத்தன் மகரவரை மாத்திரைசேர்
நீட்டுமொக ரத்த னிலம்.

முதலடி நியமச்சிலேடை. மூன்றும நான்கும் யமகம்.

ஐயம் - சந்தேகம்; பிச்சை. எனோர் - என்று கேளாதவர். அரவைவாட்டு ஒகரம் - பாம்பைக்கொல்லுகிற மயில். மகர அரைமாத்திரை—மகரமெய். நீட்டும் ஒகரம் - ஓகாரம். பிரணவப்பொருளாயுள்ளவர் என்பது கருத்து.

இந்நூலாசிரியர் சிவபதமடைந்தபொழுது வித்துவான்கள் பலரால் சரமகவிகள் பாடப்பட்டன. அவற்றுள் உடுப்பிட்டி குமாரசுவாமி முதலியார் கூறியது பின்வருவது.

"நாளு திராவிடமு நன்னிலக்க ணூறுநச்செய்
சேணு திராயினையோ செத்ததென் றீர்—வாணுதி
பொன்னிலத்து முண்மை புகலு துரைப்ப தற்கோ
விண்ணிலத்தை விட்டெடுத்த தே."

ச. கந்தையபிள்ளை,
தமிழ்ப் பண்டிதர்.

---



உ

# சுக்ரநீதி.

——:(o):——

(வடநூன்மொழிபெயர்ப்பு.)

(முன்றொடர்ச்சி.)

---

இராஜ்யத்திற்கு எஜமானனாயிருக்குந் தன்மையென்ன, மந்திரியாயிருக்குந் தன்மையென்ன, சுகிருத்தாயிருக்குந் தன்மையென்ன, பொக்கிஷமென்ன, ராஜ்யமென்ன, அரணென்ன, சைந்யமென்ன ஆகிய ஏழும் அங்கமென்று சொல்லப்படுகின்றன. அவற்றினுடைய சிரஸ்தானத்தில் அரசன் இருக்கிறானென்று ஸ்மரிக்கப்படுகின்றது. மந்திரிகள் நேத்திரமென்றும், சுகிருத் செவியென்றும், முகம் பொக்கிஷமென்றும், சைந்யம் மனமென்றும், அரண் கைகளென்றும், ராஜ்யம் கால்களென்றும் ராஜ்யத்திற்கு அங்கங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

அரசர்கள் உலகத்தில் யாதொரு குணங்களோடுகூடி விருத்தியடைகின்றார்களோ, அப்படிப்பட்ட அங்கங்களின் குணங்களைக் கிரமமாகச்சொல்லுகிறேன். கண்களின் ஆனந்தத்தைக்கொடுக்கக்கூடிய சந்திரன் சமுத்திரத்தின் விருத்திக்கு எப்படியாகின்றானோ அப்படி அரசனுமிவ்வுலகத்துக்கு, விருத்திக்குக் காரணமென்று பெரியோர்களால் நன்குமதிக்கப்பட்டிருக்கிறான்.

அரசன் பிரஜைகளை நன்றாய்க் காப்பாற்றாதவனாக இருப்பானாகில், அவன் துடுப்பு இல்லாத ஓடம் சமுத்திரத்தில் தத்தளித்தாற்போலப் பூமியில் தத்தளிப்பான்.

அவனுக்குட்பட்ட பிரஜைகள் தங்களொழுக்கத்தைக் கைவிடுகிறார்கள். அரசனும் நன்றாய் விளங்குகிறானில்லை.

நீதிவழியிலொழுகும் அரசன் தன்னையும் பிரஜைகளையும் திரிவர்க்கப்பலத்தையும் அநுபவிக்கக்கூடிய நிலைமையிலாக்கிக்கொள்கிறான். விபரீதனாகிற் கெட்டுவிடுகிறான்.

பவனன் என்ற அரசன் பூமியில் டம்பத்தினாலேயே பூமியை முதன்மையாயிருக்கும்படி அநுபவித்தான். நகுஷன் அதர்மத்தினாலேயே பாதாளத்தை யடைந்தான். அதர்மத்தினாலே வேனன் என்ற அரசன் கெட்டுவிட்டான்.

தர்மத்தினாலே பிருது என்ற அரசன் விருத்தியடைந்தான்; ஆகையால் அரசன் தர்மத்தையே முன்னிட்டு முயற்சி செய்யக்கடவன். எந்த அரசன் தர்மசிந்தையை யுடையவனாகின்றானோ அவன் தேவாம்சத்தை அடைகிறான். தர்மவிரோதியான அரசன் ராக்ஷஸாம்சத்தை யடைந்து பிரஜைகளை வருத்துபவனாக ஆகின்றான். அரசனானவன், இந்திரன், அக்கி, யமன், வருணன், சூர்யன், வாயு, சந்திரன், குபேரன் ஆகிய எட்டுப்பேர்களுடைய நித்தியமாயுள்ள அம்சங்களாலே சிருஷ்டிக்கப்பட்டவனாகின்றான்.

ஜங்கமஸ்தாவரங்களுக்கு ஈசனாகிய அரசன் தன்னுடைய தவத்தினாலே உலகத்தைரக்ஷிக்கும் விஷயத்தில் சாமர்த்தியமுள்ளவனாகி இந்திரனுக்கு ஒப்பாகத் தர்மபாகத்தை யநுபவிக்கக்கூடியவனாகின்றான். அரசன் நல்லகார்யம் கெட்டகார்யம் இவைகளையறிந்து அதர்மத்தைத் தொலைத்துத் தர்மத்தைநடக்கும்படி செய்கிறான். அரசன் துஷ்டர்களைச் சிக்ஷிக்கிறபடியால் எமனென்றும் பரிசுத்தனாயிருப்பதால் அக்கி என்றும், ரக்ஷிப்பதினால் இந்திரனென்றும், எல்லாப்பொருள்களினுடைய பாகத்தையும் அநுபவிக்கக்கூடியவனாக ஆகின்றான். வருணனானவன், ஜலங்களின் ரஸங்களாலே எல்லாவற்றையும் எப்படி விருத்திசெய்கின்றானோ, அதுபோலவும், சந்திரன் தன் கிரணங்களாலே எப்படிச் சந்தோஷப்படுத்துகிறானோ அதுபோலவும், அரசன் தன்னுடைய குணம் தொழில் பொருள் ஆகிய இவைகளால் உலகத்தை விருத்திசெய்கின்றான். குபேரன் தன்னிதிகளையெல்லாம் எவ்விதம் காப்பாற்றிவைத்துக்கொள்ளுகிறானோ அவ்விதமே அரசன் பொக்கிஷங்களைக் காப்பாற்றுவதில் சாமர்த்தியமுள்ளவனாக ஆகக்கடவன். சந்திரனுடைய அம்சமில்லாமல் மற்ற எல்லா அம்சங்களையும் அரசன் உடையவனாயிருந்தாலும் விளங்குகிறானில்லை. அரசன் பிதாவாகவும் மாதாவாகவும் குருவாகவும் உடன்பிறந்தவனா-



கவும் உறவினனாகவும் குபேரனாகவும் எமனாகவும் ஆகின்றான். வேறுவிதமாய் நினைக்கக்கூடாது.

தகப்பன் மகனைச் சிக்ஷைமுதலியனசெய்து நல்லகுணங்களையுண்டுபண்ணி எவ்விதம் சாமர்த்தியமுள்ளவனாக ஆக்குகின்றானோ அவ்விதமே பிரஜைகளைத் தீச்செயல்களினின்றும் நீக்கி நல்லகார்யங்களில் ஒழுகும்படி செய்வதால் அரசன் தகப்பனாகின்றான். தாயானவள் மக்களின் குற்றங்களைப் பொறுத்து ரக்ஷிப்பதிலேயே யெவ்வாறு ஊக்கங்கொண்டிருப்பாளோ அவ்வாறே குற்றங்களைப் பொறுத்துப் பிரஜைகளை ரக்ஷிப்பதால் அரசன் தாயாக ஆகிறான். குருவானவர் எவ்வாறு மாணாக்கன் விஷயத்தில் ஹிதோபதேசத்தைச்செய்து நல்ல கல்வியைப் பயிற்றுவிக்கிறாரோ அவ்வாறே ஹிதோபதேசஞ்செய்வித்து நல்ல கல்வியையும் கற்கும்படி செய்வதால் அரசன் குருவாக ஆகின்றான். உடன்பிறந்தவன் தகப்பன் பொருளில் தனக்குரியபாகத்தை எவ்வண்ணம் அடைகிறானோ அவ்வண்ணமே பிரஜைகளிடத்தினின்றும் தனக்குச் சாஸ்திரவிதியாலேற்பட்ட திறையைக்கொள்ளுவதால் அரசன் உடன்பிறந்தவனாக ஆகிறான்.

(இன்னும் வரும்.)

வி. ஸ்ரீநிவாஸாசாரியர்.

162403

---

உ

# தமிழ்ச்சங்கமும் ஈழநாடும்.

முதற்சங்கமுதலாய முச்சங்கத்திலும் விளங்கிய புலவர் பல்லாயிரவர். அவர்கள் ஒருஜாதியினரும் ஒரு சமயத்தினரும் ஒருதேயத்தினரும் ஒரு தொழிலினருமல்லர். அவர்கள் பலஜாதியினரும் பலசமயிகளும் பலதேயத்தினரும் வேறுபட்ட தொழிலினருமாயே யிருந்தாரென்பது அவர்கள் பெயரூர் முதலியவற்றால் நன்குதுணியப்படும்.

தமிழ்நாடு செந்தமிழ்நாடும் கொடுந்தமிழ்நாடுமென இருபாற்படும். அவற்றை மருவிச் சூழ்ந்துள்ள நாடுகள் பதினேழு. அவை, "சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங், கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம்வங்கம், கங்கமகதங்கவுடங் கடாரங் கௌங்குசலந், தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதினேழ்புவி தாமிவையே" என்னுஞ் செய்யுளாலறியப்படும்.

அவற்றுள், சிங்களம் என்பது தென்பாண்டிபுனாடுகளுக்கணித்தாயுள்ளது. ஈழம் என்பது சிங்களத்தின் பரியாயமும் பகுதியுமாயடங்குமென்பது இலக்கணவிளக்கம்—"செந்தமிழ்நிலஞ்சேர்" என்னுஞ் சூத்திரவுரையாற் கொள்ளப்படும். மண்டலப்பெயர்கொண்டு வழங்கும் நாடுகளுள்ளே ஈழமுமொன்றும். சேரமண்டலம் சோழமண்டலம் பாண்டிமண்டலம் ஈழமண்டலம் தொண்டைமண்டலம் எனவருதல் காண்க.

சிங்களமென்னும் பெயர் சிங்கவாகுவின் புத்திரன் ஆண்டமையால் வந்ததென்பது பொருந்தாது. சிங்கவாகுவின் புத்திரன் இலங்கைக்கு வந்தது இற்றைக்கு இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன்னராம். இற்றைக்கு ஐயாயிரம் வருஷத்துக்கு முன்னுள்ள பாரதத்திலே சிங்களமென்னும் பெயர் கேட்கப்படுகின்றது. இலங்கைக்குச் சிங்களமென்னும்பெயர் அங்குள்ள கறுவாப்பட்டையால் வந்தது. சிங்களம் என்பதன்பொருள் பட்டை. சிங்களத்துவீபம்-பட்டைத்தீவு. (லக்ஷ்மன் ராமச்சந்திர வைத்தியபண்டிதர் M.A. செய்த சம்ஸ்கிருத ஆங்கில அகராதியிற் காண்க.)

சிங்களத்தீவின் வடபாகமும் மேற்பாகமுமே பெரும்பாலும் ஈழமண்டலமென வழங்கப்பட்டது. இவ்வீழமண்டலம் இலங்கைக்கு விஜயராஜன் வந்த (543 B. C.) காலத்துக்குமுன், அஃதாவது இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருஷத்துக்குமுன்னரும் பல்லாண்டுகளுக்கு முன்பே தமிழ்மக்கள் குடிகொண்டிருந்த நாடாம். இவ்வுண்மை விஜயராஜன் வரும்போது திருக்கேதீச்சரம் சிவமாயிருந்ததென்றும், பின்னரதனை அவன் ஜீர்ணோத்தாரணம் பண்ணுவித்தானென்றும் வரும் வைபவமாலையாற் றுணியப்படும். (Brito's Vaibava malai.)



இன்னும் பாலாவி, மாதோட்டம், மாந்தை என்னும் தமிழ்ச்சொற்கள் இடப்பெயராய்ப் பண்டைக்காலந் தொட்டங்கே வழங்குதலும், தேவாரத்திலே பாலாவி, மாதோட்டம், திருக்கேதீச்சரம் திரிகோணமலை என்னும் பெயர்கள்வருதலும், பெட்டோலக்சி, பென்னட் (Bertolocci, Bennet) முதலிய ஐரோப்பிய பண்டிதர்கள் எழுதிய இலங்கை வரலாற்றில் "விஜயன் வருதற்குப் பன்னெடுங்காலத்துக்கு முன்னே தமிழர் இலங்கையிற் குடிகொண்டிருந்தார்களெனக் கூறுதலும், "ராயல் ஏஷியாடிக் சொசைட்டி" (Journal of the Royal Asiatic Society, Ceylon Branch 1848. p. 73.) யாரது பத்திரிகையிலே, "ரோமர் இலங்கையிலே வர்த்தகஞ் செய்த காலத்திலே தமிழர் மாதோட்டத்தை இராசதானியாகக்கொண்டு அரசுசெய்தார்கள்" என்றும் "அவ்வரசு விசயன்காலத்துக்கும் யாழ்ப்பாடி காலத்துக்கும் மிகவும் முந்திய பழமையினையுடையது" என்றும் வருதலும், இதற்குப் பிரமாணமாம்.

இவ்வாறு இலங்கையில் அரசுகொண்டிருந்த தமிழரசர் சோழ பாண்டிமண்டலத் திராசபரம்பரையினரும் அவரோடு கலப்புடையவருமாயிருந்தார்கள். அவர்கள் மாதோட்டத்திலே கட்டியிருந்த கோட்டை மிக்க வலிமையும் அழகும் அற்புதமுமுடையது. பெருமரக்கலங்கள் மன்னார்க்கடலில் வருமாயின் அவைகளைத் தன்மாட்டிழுத்துக்கொள்ளும் காந்தப்பொறியுடையதாயிருந்ததென்பர். இத்துணைச் சிறந்தநாகரிகம் வாய்ந்த அந்நகரத்து மக்கள் தமிழ்க்கல்வியிலே பேரபிமானமும் பாண்டித்தியமுமுடையராயே விளங்கினராதல் வேண்டும். அவர்கள் காலம் முதற்சங்கமும் இடைச்சங்கமும் நடைபெற்றகாலம். அச்சங்கங்கள் நடைபெற்ற நகரங்களுமோ மிகச்சமீபத்தே எதிர்க்கரையிலேயிருந்தன.

மாதோட்டத்துப் புலவர்க்கு அக்கரையிலேயுள்ள சங்கமும், அக்கரையிலேயுள்ள புலவர்க்கு இக்கரையிலேயுள்ள இராசசபையும், பிரபுக்கள் பிரகுதியும், திருக்கேதீச்சர சிவாலயமுங் காதற்பொருளாமன்றோ. அதனால் அங்குள்ளார் இங்கும், இங்குள்ளார் அங்கும் போக்குவரவுடையாயிருந்தனர். தமிழ்ச்சங்கத்திலே ஆசனம்பெ

ற்று வீற்றிருத்தற்குச் சிங்காசனம்பெற்ற அரசரும் விரும்பித்தம் புலமை நாட்டினரென்றால் அக்காலத்தில் அச்சங்கப்பலகையேற்றம் போலும் பெரும்பேறும் பெரும்போகமும் வேறில்லையெனல் வேண்டும். எனவே ஈழநாட்டுப் புலவரும் அரசரும் அதனைப்பெரிதும் விரும்பினராதல்வேண்டும்.

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு."

இத்திருவாக்குக் கொடுந்தமிழ் நாட்டிலே புலைக்குலத்திலே பிறந்தவரும் கடைச்சங்கப்பலகையேறித் தம்மைப் பிரமதேவரது அமிசாவதாரமென நாட்டினவருமாகிய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரது சுவானுபவமன்றோ. இவ்வுண்மை மூந்திய சங்கத்தாருக்கு மொப்பாமன்றோ. அதனை ஈழநாட்டுமக்கள் கடைப்பிடியாதிருந்தவரல்லர். ஆகவே ஈழநாட்டுப்புலவர்களும் அரசரும் தமிழ்ச்சங்கமேறியிருந்தாராதல் வேண்டும்.

முதற்சங்கத்திலேயிருந்த முடிநாகராயர் என்பவர் ஈழநாட்டு வேந்தராதல்வேண்டும். இலங்கையிலே விஜயராஜன் காலத்துக்கு முன்னே நெடுங்கால மரசுசெய்தவர்கள் நாகராயரென்னும் பெயர் புனைந்திருந்தனர். முன்னொருகாலத்திலே இலங்கையிலே நாகர்கள் மிக்கநாகரீகமும் பராக்கிரமமுடையராயிருந்தாரென்பதும், அவர்கள் இராச்சியம் ஒருகாலத்திலே இமயம்வரைக்கும் வியாபித்திருந்ததென்பதும், நாகபட்டினம் நாகபுரம் நாகர்கோயில் முதலிய நகரப்பெயர்களால் அநுமிக்கப்படும். நாககன்னிகை வயிற்றிலே சோழராசனுக்குப் புத்திரனாய்ப்பிறந்து நாகபட்டினம்போய்த் தந்தையைக்கண்டு தொண்டைநாட்டுக்கு அரசனாய் முடிசூட்டப்பெற்றவன் ஒருவனுளனென்பது பத்துப்பாட்டிலே கூறப்படுகின்றது. அந்நாககன்னிகை இந்நாகர்குலக் கொடியாதல் வேண்டும். இந்நாகர்கள் பின்னர்க்காலத்திலே தமிழரால் அடிப்படுத்தப்பட்டரசிழந்து சுருங்கினார்கள். அவர் வழிவந்தோரே இக்காலத்திலே விந்தனையிலுள்ளவேடரென்பது அநேகர் துணிபு. (See "Sketches of Ceylon History" by P. Arunachalam, M. A. Cantab.)



இன்னும் ஈழநாட்டிலே நாகர்கோயில் என்னும் பெயரால் ஒரூருளது. யாழ்ப்பாணம் பூர்வம் சிங்களரால் நாகத்தீவு என வழங்கப்பட்டது. இதுவும் பூர்வம் நாகர்கள் இங்கிருந்தமைக்குச் சான்றாம். அரசிழந்தநாகர்கள் ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்திலும் விந்தனைப்பகுதியிலும் நயினார்தீவிலும் போயொதுங்கி யிருந்தாராதல் வேண்டும்.

இன்னும் கடைச்சங்கத்திலிருந்த இளநாகனாரும் இலங்கை அரசருளொருவராதல் வேண்டும். இளநாகன் என்னும் பெயருடைய அரசன் ஒருவர் கிறிஸ்தாப்தம் 38-ல் அரசுசெய்தவர். அவர்பின்னர் அரசிழந்து பாண்டிநாடுசென்று அங்கே சிறிதுகாலம்வசித்துப் பாண்டியன்கொடுத்த சேனைகொண்டு தமதரசு மீட்டவர். அவர் அங்கிருந்தகாலத்தில் இறையனாரகப் பொருளுரை கேட்டார்போலும். இறையனாரகப்பொருளுரையை ஆசிரியபரம்பரையாகப் பாடங்கேட்டாருள்ளே இளநாகருமொருவராகக் கூறப்படுவர். அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்குரைத்தாரெனக் கூறப்படுதலால் நீலகண்டனார் அவர்க்கு மாணாக்கராவர். முசிறி என ஈழநாட்டகத்துமோரூருளது. ஆதலின் நீலகண்டனாரும் ஈழநாட்டுப்புலவராதல் வேண்டும்.

இன்னும் மாந்தையிலும் மணற்றியிலும் பாண்டியர் போர்புரிந்து பெற்ற கொற்றமும் இறையனாரகப் பொருட்கோவையிற் கூறப்படுகின்றது. மாந்தையென்பது மாதோட்டத்துக்குச் சமீபத்தேயுள்ளவூர். மணற்றி என்பது யாழ்ப்பாணம். அது மணல் நாடு என்றும் மணற்றிடல் என்றும் ஒரு காலம் வழங்கப்பட்டது. அஃதொருகாலம் இலங்கையரசர் பாண்டியரோடும் சோழர்களோடும் எதிர்பொருதற்குப் போர்க்களமாகவிருந்தது. அதன்பகுதிகளுளொன்று இன்றும் களபூமி என்னும் பெயரால் வழங்கும். மாந்தையிலும் மணற்றியிலும் கிறிஸ்தாப்தத்துக்குமுன்னே (103. B. C) 103-ம் வருஷத்தில் ஒரு பெரியயுத்தம் நடந்தது. அதிலே பாண்டியர் வாலகம்பாகுவைப் புறங்கண்டு அவன்மனைவியையும் புத்தபாத்திரத்தையும் கவர்ந்துகொண்டேகியதோடு ஈழநாட்டையும் தமதடிப்படுத்திப் போயினர் என மகாவமிசங் கூறுகின்றது.

இன்னும் சிலப்பதிகாரத்துக்குரைசெய்த அடியார்க்கு நல்லாரும் ஈழநாட்டாரெனப்படுவர். அவர் குணபூஷண சிங்காரியராஜா

வுக்கு மந்திரியாயிருந்து ஈழநாட்டில் அநேக தருமாலயங்களும் வித்யாசாலைகளும் ஸ்தாபித்தவர். அவர் அமைப்பித்த திருக்குளம் இன்றுமுளது. அஃதடியார்க்குநல்லார் குளமென வழங்குகின்றது. அது வண்ணைச்சிவாலயத்துச் சந்நிதித்தெருவிலுள்ளது. அதற்கயலிலே அவர்தமது அரசன்பெயராலே அமைப்பித்தகுளம் ஆரியகுளமென இக்காலத்து வழங்குகின்றது. அவர் இருந்தமனைநிலமும் அவர்பெயராலேயே வழங்குகின்றது. அவர்காலத்திலேயே தமிழ் யாழ்ப்பாணத்திலே மிகவிருத்திபெற்றது. அவரே அறுபத்துமூன்று நாயன்மாருக்கும் ஆலயமும் பூசைக்கு நிபந்தமும் யாழ்ப்பாணத்தில் முதன்முதல் வகுத்தவர். அவ்வாலயமிருந்தவிடம் நாயன்மார்கட்டு என இன்றும் வழங்குகின்றது.

முதிரம் மாந்தை என்னும்பெயர்களையும் தம்பிக்கஞ்சிக்கடுகொண்டிருந்த ஸ்ரீசங்கபோதியினது சரித்திரத்தையும் நோக்கும்போது

> "அந்தநாள் வந்திலை யருங்கவிப் புலவோய்
> இந்தநாள் வந்துநீ நொந்தனை யடைந்தாய்
> தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
> விலைதனை மீட்டுன் வெறுமைநோய் களையே."

> "வெம்புங் காலை வெதும்பி விழுஞ்சிரம்
> செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தான்
> உம்பர்நாடு முலகினுந் தேடினும்
> எம்பி போலெமக் கியாவரி னியரே."

எனக்கூறிய குமணனும் ஈழநாட்டிலுள்ளான் எனத் துணிதற் கிடமாகின்றது. ஸ்ரீ சங்கபோதியினது இயற்பெயர் குமணன்போலும். மகாவமிசத்திலே கூறப்படும் ஸ்ரீ சங்கபோதி சரித்திரமும் புறநானூற்றிலும் பிறவற்றிலும் வருங் குமணன் சரித்திரமும் காலமும்பெரிதுமொத்திருக்கின்றன.

யாழ்பாணத்திலேயுள்ள செம்பியன்பற்று, பல்லவராயன்கட்டு, தொண்டைமானாறு, பாண்டியன்றாழ்வு முதலிய இடம் பெயர்களை நோக்குமிடத்துத் தமிழ்நாட்டுவேந்தர்கள் யாழ்ப்பாணத்தொடர்புடையாரயிருந்தாரென்பது நன்கு துணியப்படும்.



இன்னும் மாதோட்டத்துக்குத் தெற்கேயுள்ள குதிரைமலைமிக்க பழமையும் யவனதேசம்வரையும் பரந்த கீர்த்தியுமுடையது. அஃதொரு காலம் சிற்றரசர்க்கு இருக்கையாயுமிருந்தது. இதற்குத் தலைவராயிருந்த சிற்றரசருள்ளே எழினியும் பிட்டங்கொற்றனும் புறநானூற்றிற் பாடப்பட்டோர்.

இங்ஙனம் வருமேதுக்களால் தமிழ்ச்சங்கப் புலவருள்ளே ஒரு சிலர் ஈழநாட்டுப்புலவராதல் வேண்டும் எனவும், தமிழ்ச்சங்கப்புலவராற் பாடப்பட்டாருள்ளும் ஒரு சிலர் ஈழநாட்டாராதல் வேண்டுமெனவும் அவரே ஈழநாட்டிலே முதலில் தமிழ்வளர்த்தாராதல்வேண்டுமெனவும் அநுமிக்க இடமாகின்றது.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

---

உ

சிவமயம்.

# முத்தமிடலின் வரலாறு.

## HISTORY OF KISSING.

——o()o——

எச்சில், தீட்டு, அநாசாரம், முதலியவற்றை முழுவதும் தமக்காகாதென்று வெறுத்து, ஆசாரதர்மமே ப்ரதமமாகக்கொண்டிருக்கும் இப்பரதகண்டத்தில், ப்ரம்ம, க்ஷத்ரிய, வைசியர் என்னும் இருபிறப்பாளரிலுங்கூட தொன்றுதொட்டு, எச்சலிட்டு முத்தமிடும் வழக்கம், அநுஷ்டானத்திலிருப்பதைப் ப்ரத்யக்ஷமாகவும், புஸ்தகப்பிரமாணங்கள் மூலமாகவும் நாம்நன்கு அறிவோம். கடலிற்சிப்பிகளிலும், மழை, மதி, கரி, சங்கம், கரும்பு முதலிய இருபது இடங்களிலும் அகப்படக்கூடிய விலையேறப்பெற்ற முத்தங்களைக்காட்டிலும், நம்மவர் இம்முத்தமிடலை அதிகம் விலையுள்ளதெனவே கருதுகின்றனர்போலும். இம்முத்தமிடும் வழக்கம் ஜப்பான்தேசத்திலும், மற்று

முள்ள பல மேல்நாடுகளிலும் இன்னதென்று அறியப்படாத தன்மையிலும், இதனவசியம் குழந்தைகள் வளர்ப்பதில் இன்றியமையாததென்று இவர்களுக்குத் தோன்றாமற்போயினும் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய எண்ணிறந்த தேசங்களின் நாலா மூலைகளிலும் இவ்வழக்கம் பிரபலமாய்க் கையாளப்பட்டு வருகிறதெனத் தெரியவருகிறது. பூலோகவிஷயங்களை தீக்ஷண்யமாய்ப் பரிசோதித்தறிவதிலேயே காலங்கழியாநிற்கும், மேனாட்டு நிபுணர்கள் பல்லோர் இம்முத்தமிடலின் வரலாற்றிலும் தம் கவனத்தைச்சிறிது செலுத்தமறந்தாரிலர். குசாக்ரபுத்தியுள்ள மேனாட்டு வித்வானொருவர் இம்முத்தமிடும் வாடிக்கை, பூர்வத்தில், மனிதர்கள் மாம்ஸபக்ஷணிகளாய் (Cannibals) இருந்தகாலத்தில், புருஷன் தான் ஸ்திரீயொருத்தியினிடம் கொண்ட விசேஷப்பிரியத்தை அவளுக்குச்செவ்வனே தெரிவிப்பதற்காக தன்னுடைய பற்களினால் அவள் உதடுகளிலும், கதுப்புகளிலும் (Cheeks) கடித்து, அவளை ரஸமுள்ள மாம்பழம்போல் விழுங்கவேண்டுமென்ற தன்னுடைய அவாவைக்காட்டும் அவ்வாடிக்கையிலிருந்து மாறி நாகரீகத்தினால் உண்டான அநுஷ்டானமே இம்முத்தமிடுதல் எனக் கூறுகின்றார். மற்றும் பிரக்யாதியுள்ள ஒருவர், தென் அமெரிக்காவின் தென்பாகத்திலுள்ள டெரடெல் பியூயகோவில், (Tierradel Faego in South America) இது நாள்காறும் நடந்து வருகிற ஒருபிராசீன வழக்கத்தினின்று குழந்தைகளை முத்தமிடல் ஜனித்ததென்று ஆதாரங்காட்டி வரைகிறார். அந்நாட்டில் தண்ணீரெடுத்தருந்தும் கோப்பைகளும், கிண்ணங்களும், பாத்திரங்களும் இன்றும் உபயோகியாமலே, குழந்தைகளைப்பெற்ற தாய்மார்கள், ஆடுமாடுகளாகிய சதுஷ்பாதங்களேபோல், தண்ணீரகப்படக்கூடிய ஆற்றோரங்களிலும், நீர்நிலைகளிலும் சென்று தம்வாய்நிறையத் தண்ணீர் உறிஞ்சி, தம்தம்குழந்தைகளின் வாய்ப்புகட்டித் தாஹசாந்திசெய்வது இன்னும் வழக்கமாயிருந்து வருவதைக்காணலாம். மாநுஷீகத்தின் இந்தப்பழைய வழக்க வாஸனையைக் கொண்டே இன்றும் இம்முத்தமிடல் அநுஷ்டானத்தில் நிலைநின்று நீங்காதாகின்றது என்றும் அவர் கூறுகிறார். ஓர் ஆண்புறா தன் பேடையினிடத்துண்டாய அன்பின் மிகுதிபற்றி மூக்குடன் மூக்குச்சேர்த்து உராய்ந்து கொண்டிருந்ததைப்பார்த்த தலைவனும் தலைவியும் அவ்வாறே



தம்முடைய உதட்டுடன் உதட்டை அன்புறச்சேர்த்துவைத்துக்கொண்டனர் என்னும்விஷயம் இங்குஞாபகப்படுத்திக்கொள்ளுதல்தகும். பக்தி, விசுவாஸம், மரியாதை, முதலியவைகளைக் காட்டுமறிகுறியாகப்பழையகாலத்திய யூதர்களில்(Tews)இம்முத்தம்கொடுக்கும் வாடிக்கையிலிருந்து அவர்களிடத்திலிருந்து கிறிஸ்தவமதத்தினை யநுஸரிக்கும் மேனாட்டாருக்குப் போனதாகவும், இன்றைக்கும் க்ரீக்சர்ச் (Greek church) என்னும் வகுப்பினராகிய கிறிஸ்தவர்கள் இக்காலத்தும் ஈஸ்டர்கிஸ் (Easter kiss) என்ற மதஸம்பந்தமான கோட்பாட்டை அநுஷ்டானத்திற் கொண்டுவந்திருக்கிறார்களென்றும் நன்றாய் விளங்குகிறது. அராபிய பாரஸீக கிரந்தங்களினின்று இவ்வழக்கம் அவ்வத்தேசங்களில் பிராசீனமேயென்று தெரியவருகின்றது. மகம்மது தீர்க்கதரிசியின் (Mahomed the Prophet.) ஸந்ததியாராகிய ஸயட்ஸாக்களும் (Sayyids) தம்மதஸ்தர்களில் ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதையைக் காட்டுவதற்காக ஒருவருக்கொருவர் கரங்களை முத்தமிட்டுக்கொள்ளுகின்றனர். நாம் முன்னே கூறியவாறு நம் பரதகண்டத்தில், தமிழ், ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலான பதினெண் பாஷையிலுள்ள செய்யுள்பிரபந்தங்களில் இம்முத்தமிடுதலைப்பற்றி ஏராளமான உதாரணங்கள் காணப்படுகின்றன. இம்முத்தமளித்தலைப்பற்றிப் பிள்ளைத்தமிழ் முதலான சிறுக்ரந்தங்களிலும், மஹாபாரதம், இராமாயணம் முதலான இதிஹாஸங்களிலும் எண்ணிறந்த பாக்கள் காணக்கிடைத்தபோதிலும், நாம் முத்தங்கொடுத்தற்கு ஸஹஜமாயுள்ள இரண்டொரு ஸந்தர்ப்பங்களுக்கறிகுறியாக இரண்டொரு பாக்களையும் அவற்றினடிகளையும் ஈண்டு வரையத்துணிவோம்.

"வள்ளியாணிகழ்ந்திடு மதுரநல்லிதழ்த்
தள்ளருந்துறிகளைத் தான்மறைக்கிய
தெள்ளமிழ்துறழ்மொழித்தேவசேனைமுன்
கிள்ளையொன்றேந்திறைன்சீர்த்திபாடுவோம்."

"............................................தனவும்,
போன்முளைத்தமுறுவற்செங்கனிவாய்முத்தந்தருகமுத்தமே."

"..................................................
முருகுவிரியுநறுங்களபமுலையாய்முத்தந்தருகவே."

" ..........................................................
முனிவர்கள மரர்கள்வர்அடிதாழ்பவன் முத்தமளித்தருளே "

" ..........................................................
செங்கழுநீர்மதக்களிறுணிவாயின் முத்தமருளே."

" ............ ..............................................
முத்துநிறைத்தகனிவாயான்முத்தந்தருகமுத்தமே."

" ..................................................
முகிலெளித்தமுத்தமருள்முத்தேமுத்தந்தருகவே."

" ..................................................
மொய்வானறுமீனுவர்தளித்தமுத்தேமுத்தந்தருகவே."

" ..................................................
முதிருஞ்சுவையமுதொழுகுர்துவரிதழ்முத்தமளித்தருளே."

ஆனால் நம்மதஸ்தர்களுள் எங்கேயாயினும் குருபக்தி மர்யாதையைக்காட்டுவான்வேண்டி சிஷ்யகோடிகளாகிலும் பிறராகிலும் முத்தமிடும் வழக்கம் கொண்டிருக்கிறார்களென நாம் அறியக்கூடவில்லை. இம்மாதிரியான குருபக்தி மர்யாதையை நம்மவர் எதிர்கொள்ளல், நமஸ்கரித்தல், அர்க்யபாத்யாசமனீயங்கள் கொடுத்துபசரித்தல் முதலியவற்றினால் செய்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். குசேலருக்குக் கிருஷ்ணபகவான் இம்மர்யாதைகளைச் செய்துபசரித்ததாக நாம் பாகவதக்ரந்த பூர்வமாய் அறிகிறோம். மேனாட்டு நாகரீகர்கள் காலைத்தொட்டு முத்தமிடுதல் (Kissing the feet) இந்தியாவில் அநுஷ்டிக்கப்படுவதொரு வழக்கமென்று சொல்லினும், விச்வாசத்தைக் காட்டுவதற்கு, காலினை எச்சமிட்டு முத்தமிடுவதை நாம் கேட்டதுமில்லை; கண்டதுமில்லை.

மேனாட்டு மேதாவிகள் நாம் முன்னமே சொல்லியிருக்கிற இரண்டொரு ப்ராசீன வாடிக்கைகளிலிருந்து முத்தமிடுதல் ஜனித்திருக்கலாமோவென்ற காரணத்தைச் சொல்லிவிட்டு, பரிபூர்ணமாய் புத்தியையும் இவ்விஷயத்திற் செலவழித்துத் தங்களால் முடிவானதொன்று இவ்விஷயத்திற் சொல்லமுடியாதென்று தீர்மானித்துவிட்டார்கள். பூர்வகாலத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் தலை



வலிக்கொருமருந்து அழகியமாதர்திலகமொன்றை முத்தமிடல் என்று ஆங்கு அகப்படக்கூடிய பழைய ஔஷத சாஸ்த்ரங்களிலிருந்து அறியக்கிடக்கின்றது! தலைவலியினின்றும் கஷ்டப்படும் மானுஷிகத்தைக் கண்டு பரிதபித்து இவ்வைத்யத்தைப் புனர்ஸ்தாபனம் ஏன் எவராவது செய்யலாகாது? இம்மருந்தின் விசேஷ குணத்தைப்பற்றி நாம் ஸந்தேகிக்கவேண்டுமோ? இந்த ஔஷதப்ரயோகத்தின் மஹிமை பயன் முதலாயவற்றை உலகம் முழுவதும் அறியுமானால் தலைவலியிலிருந்து வருந்துபவர்களுடைய சங்க்யை அதிகமாகுமென்பதில் ஐயமேயில்லை. இவ்வியாதியினால் வருந்துபவர்களுக்கேற்றபடி அழகிய மருந்தகப்படுவதுதான் கஷ்டஸாத்யமாகும்.

ப்ரியத்தை முத்தமிட்டுக் காட்டுமிவ்வாடிக்கை நம்மை விட்டகலாத பேய்போற் பிடித்திருந்ததாயினும், எல்லா நாட்டிலும் இவ்வாடிக்கையை வெறுக்கும் புத்திமான்களைக் காண்கிறோம். நாளடைவில் 'இம்முத்தமிடும் வாடிக்கையே மனுஷ்யஸமூகத்தினின்றும் கொஞ்சங்கொஞ்சமாக நீங்கிவருமாயின், அவ்வனுஷ்டானத்திற்குப் பிரதியாக எது ஏற்படக்கூடியதோ என்று மேனாட்டுப்புத்திமான்களிலொருவர் ஆலோசனைக்கடலிலாழ்கிறார். கை குலுக்கலும் (Hand Shake) வணங்குதலும் (Bowing) பூரணப்ரியத்தைக் காட்டக்கூடியவல்லவே என்றும் விசாரப்படுகிறார். ஈஜிப்டில் (Egypt) அனுஷ்டானத்திலிருக்கிற வழக்கத்தை யேற்றுக்கொள்ளலாமோவென்றும் ஸந்தேஹிக்கிறார். அவ்வாடிக்கை தன்கையைத் தானே முத்தமிட்டு, பிறகு அக்கரத்தினைச் சிரத்தினில் ப்ரியத்திற்கறிகுறியாகச் சூட்டிக்கொள்ளுதலேதான், முத்தமிடுதலை யொழித்தும் எச்சலாக்கும் இவ்வாசாரம் அநாசாரமாயிருக்கிறதே! அபிஸீனியாவில் (Abyssinia) மண்டிபோட்டுட்கார்ந்து பூமியை முத்தமிட்டு அவர்களுள்ள அத்யந்த விச்வாஸத்தையும் அன்பையுங்காட்டுகின்றார்கள். இன்னும் டாக்டர் நைரப் (Nyrop) முத்தமிடும் வழக்கத்தைத் தள்ளினால், அதற்குப்ரதியாகப் பின்னால் சொல்லப்படும் வழக்கங்களிலொன்றை நம்மனோபீஷ்டப்படி அனுஷ்டிக்கலாமென்று கூறுகிறார். பரஸ்பரம் கையொடு கைதட்டல், தோளோடுதோள் தொட்டிடித்தல், காதொடு காதுறைத்தல் முதலாய பலவேறுவகைப்பட்ட மூலை

களிலுள்ள பல்வேறு வகைத்தான விசித்ரமான தேசாசாரங்களி லொன்றை அங்கீகரிக்கச்சொல்லுகிறது. முத்தமிடும் அவச்யத்தையும், அநுஷ்டானத்தையும் பாராட்டாத தேசங்கள் பல இப்பூமண்டலத்திலிருப்பதினால், மாநுஷீகத்திற்கு இம்முத்தமிடல் அத்யாவச்யமானதல்லவென்றும் அஃது அறவே நம்மினின்றும் நீக்கப்படுவதற்கு முகாந்திரங்கள் பலவுள்ளனவென்றுங் கூறுகிறார், உலகத்தில் இவ்வாடிக்கை பற்பல தேசங்களில் இல்லை என்னும் விஷயம் அனேகருக்கு இன்றையவரையில் தெரியாமலிருக்கலாம். மாடகாஸ்கர (Madagascar) பாலினீஷ்யா (Polynesia) என்னுமிடங்களிலும், நீகிரோ ஜாதியினரில் பலபேர்களுள்ளும், இன்னும் மற்றவிடங்களிலும் முத்தமிடுதல் இன்னதென்று தெரியாது. ஆப்பிரிகா நீகிரோஸ்திரீயைத்தான் முத்தமிட்டவுடன் அதனைப்ரியத்தினால் செய்கிற கார்யமென்றறியாது அவள் பயந்து கதறினாள் என்று ரீட் என்ற (Mr. Read, a Traveller) யாத்ரீகர் ஒருவர் கூறுகிறார் பின்லாண்டு (Finland) தேசத்து ஸ்திரீயொருத்தி, ஸ்திரீபுருஷர் ப்ரியத்தினால் முத்தமிடும் விஷயத்தைக் கேட்டபொழுது "என் புருஷன் இவ்வாறுசெய்ய எண்ணினால், அவனுடைய காதினை ஒரு வாரம் வரையில் நோகும்படியாகக் கையினால் பிசைந்து கிள்ளிவிடுவேன்." என்று கூறினளாம் ஆறுமாதம் பகலும் ஆறுமாதம் இராத்திரியுமாய், பனியால் ஸதாஸர்வகாலமும் மூடப்பட்டு மஹாமேருவென்றும், ஹிந்து பௌராணிகளால் சொல்லப்பட்ட உத்தரமஹாஸமுத்ரத்திலிருக்கும் (Arctic Ocean) க்ரீன்லாண்டிலும் (Green land) நம் இந்தியாவிற்குத் தென்கீழ் பாரிசத்திலுள்ள மலேயாவிலும் (Malaya) இன்னும் பிறஜாதியார்களிலும் ரோஜாமுத்தம் (Rose Salute) என்னும் வழக்கம் ஸஹஜமாயிருந்து வருகிறது. டார்வின் (Mr. Darwin) என்பவர் பின்வருமாறு ரோஜாமுத்தம் அல்லது மலேயா முத்தத்தைப் பற்றி விவரிக்கிறார். ஸ்திரீகள் தம்மேல் நோக்கிப் பார்த்த முகங்களுடனுட்கார அத்தேசத்துப் புருஷர்கள் பக்கத்தில் நின்று அவர்கள் பாரிசத்தில் சாய்ந்து தங்களது மூக்கினுச்சியை அவர்கள் மூக்குகளுக்குக்குறுக்கேவைத்து சற்றுநேரம் ஹாங்காரசப்தத்துடன் தேய்த்து ஆநந்திக்கிறார்கள்.



ஸூர்யோதய பூமியென்றழைக்கப்படுகிற ஜப்பான் தேசத்திலும் மேனாட்டு நாகரீகம் பரிபூர்ணமாய் தங்களுக்குவந்துள்ளதென்று தற்புகழ்ச்சி செய்துகொள்ளும் அந்நாட்டினரும் முத்தமிடும் வாடிக்கை இன்றுங்கிடையாதென்று மிகவும் திருப்தியுடன் நோக்கவேண்டியதாயிருக்கிறது. அத்யந்த பிரியத்தினைத்தன குழந்தைகளிடத்துப் பாராட்டும் ஜப்பானியத்தாயும், தன் குழந்தையை ஒரு பொழுதேனும் முத்தமிடுவதில்லை யென்பதற்கு நல்ல ஆதாரமிருக்கின்றது. ஆனால் அதற்குப்பதிலாக ஜப்பானியத்தாய் தன்குழந்தையின் சிறிய கன்னங்களைத் தன் கன்னத்தோடுசேர்த்து அழுத்தி கூவென்றபுறாச் சப்தத்துடன் மெதுவாகச் சப்தம் செய்கிறாள். காதரின் சால்டிஸ் (Katharine chaldis) என்னும் ஐரோப்பியமாது தன்னுடைய ஜப்பானிய அநுபோஹங்களைச் சொல்லிவருங்கால், தான் பால்யமுதற்கொண்டு அத்தேசத்திலிருந்ததாகவும், தாய் குழந்தையை முத்தமிடக்காணாது அந்நியர்களினெதிரில் அம்மாதிரியாகச்செய்ய ஸங்கோஜத்தினால் என்று யூகித்து அநேகதடவை ஒளிந்துபார்த்துக் கடைசியில் அத்தேசத்தில் குழந்தைகளை முத்தமிடுவதே கிடையாதென்பது தெரிந்துகொண்டு, தாய்க்கு முத்தமிட்டுச் சீராட்டிச்சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று கருதி, தாயின் கையிலுள்ள குழந்தைக்கு முத்தமிட்டுத் தாய்க்குக்காட்ட, அதற்கு அந்தக்குழந்தை பயந்து வீறிட்டுக்கதறியதும், தாய் அதிசயித்து மயங்கினின்றதும், தான் என்றைக்கும் மறக்கமுடியாதென்றும், அன்றுதொட்டு மறுபடியும், குழந்தையைச் சீராட்டிப் பாராட்ட ஜப்பானிய ஸ்திரீகளுக்குக் கற்றுக்கொடுக்கத்தான் முயல்வதே இல்லையென்று தீர்மானித்ததாக வேடிக்கையாகச் சொல்லியிருக்கிறாள்.

வீ. சுப்பிரமணிய ஐயா,

தமிழ்ப் பண்டிதர்.

---

முள்ள பல கீழ்நாடுகளிலும் இன்னதென்று அறியப்படாத தன்மையிலும், இதனவசியம் குழந்தைகள் வளர்ப்பதில் இன்றியமையாததென்று இவர்களுக்குத் தோன்றுமற்போயினும் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய எண்ணிறந்த தேசங்களின் நாலா மூலைகளிலும் இவ்வழக்கம் பிரபலமாய்க் கையாளப்பட்டு வருகிறதெனத் தெரியவருகிறது. பூலோகவிஷயங்களை தீக்ஷண்யமாய்ப் பரிசோதித்தறிவதிலேயே காலங்கழியாநிற்கும், மேனாட்டு நிபுணர்கள் பல்லோர் இம்முத்தமிடலின் வரலாற்றிலும் தம் கவனத்தைச்சிறிது செலுத்தமறந்தாரிலர். குசாக்ரபுத்தியுள்ள மேனாட்டு வித்வானொருவர் இம்முத்தமிடும் வாடிக்கை, பூர்வத்தில், மனிதர்கள் மாம்ஸபக்ஷணிகளாய் (Cannibals) இருந்தகாலத்தில், புருஷன் தான் ஸ்திரீயொருத்தியினிடம் கொண்ட விசேஷப்பிரியத்தை அவளுக்குச்செவ்வனே தெரிவிப்பதற்காக தன்னுடைய பற்களினால் அவள் உதடுகளிலும், கதுப்புகளிலும் (Cheeks) கடித்து, அவளை ரஸமுள்ள மாம்பழம்போல் விழுங்கவேண்டுமென்ற தன்னுடைய அவாவைக்காட்டும் அவ்வாடிக்கையிலிருந்து மாறி நாகரீகத்தினால் உண்டான அநுஷ்டானமே இம்முத்தமிடுதல் எனக் கூறுகின்றார். மற்றும் பிரக்யாதியுள்ள ஒருவர், தென் அமெரிக்காவின் தென்பாகத்திலுள்ள டெரெடெல் பியூயகோவில், (Tierradel Faego in South America) இது நாள்காறும் நடந்து வருகிற ஒருபிராசீன வழக்கத்தினின்று குழந்தைகளை முத்தமிடல் ஜனித்ததென்று ஆதாரங்காட்டி வரைகிறார். அந்நாட்டில் தண்ணீரெடுத்தருந்தும் கோப்பைகளும், கிண்ணங்களும், பாத்திரங்களும் இன்றும் உபயோகியாமலே, குழந்தைகளைப்பெற்ற தாய்மார்கள், ஆடுமாடுகளாகிய சதுஷ்பாதங்களேபோல், தண்ணீரகப்படக்கூடிய ஆற்றோரங்களிலும், நீர்நிலைகளிலும் சென்று தம்வாய்நிறையத் தண்ணீர் உறிஞ்சி, தம்தம்குழந்தைகளின் வாயிற்புகட்டித் தாஹசாந்திசெய்வது இன்றும் வழக்கமாயிருந்து வருவதைக்காணலாம். மாநுஷீகத்தின் இந்தப்பழைய வழக்க வாஸனையைக் கொண்டே இன்றும் இம்முத்தமிடல் அநுஷ்டானத்தில் நிலைநின்று நீங்காதாகின்றது என்றும் அவர் கூறுகிறார். ஓர் ஆண்புறா தன் பேடையினிடத்துண்டாய அன்பின் மிகுதிபற்றி மூக்குடன் மூக்குச்சேர்த்து உராய்ந்து கொண்டிருந்ததைப்பார்த்த தலைவனும் தலைவியும் அவ்வாறே



தம்முடைய உதட்டுடன் உதட்டை அன்புறச்சேர்த்துவைத்துக்கொண்டனர் என்னும்விஷயம் இங்குஞாபகப்படுத்திக்கொள்ளுதல்தகும். பக்தி, விசுவாஸம், மரியாதை, முதலியவைகளைக் காட்டுமறிகுறியாக ப்பழையகாலத்திய யூதர்களில்(Tews)இம்முத்தம்கொடுக்கும் வாடிக்கையிலிருந்து அவர்களிடத்திலிருந்து கிறிஸ்தவமதத்தினை யநுஸரிக்கும் மேனாட்டாருக்குப் போனதாகவும், இன்றைக்கும் க்ரீக்சர்ச் (Greek church) என்னும் வகுப்பினராகிய கிறிஸ்தவர்கள் இக்காலத்தும் ஈஸ்டர்கிஸ் (Easter kiss) என்ற மதஸம்பந்தமான கோட்பாட்டை அநுஷ்டானத்திற் கொண்டுவந்திருக்கிறார்களென்றும் நன்றாய் விளங்குகிறது. அராபிய பாரஸீக கிரந்தங்களினின்று இவ்வழக்கம் அவ்வத்தேசங்களில் பிராசீனமேயென்று தெரியவருகின்றது. மகம்மது தீர்க்கதரிசியின் (Mahomed the Prophet.) ஸந்ததியாராகிய ஸையட்ஸுகளும் (Sayyids) தம்மதஸ்தர்களில் ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதையைக் காட்டுவதற்காக ஒருவருக்கொருவர் கரங்களை முத்தமிட்டுக்கொள்ளுகின்றனர். நாம் முன்னே கூறியவாறு நம் பரதகண்டத்தில், தமிழ், ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலான பதினெண் பாஷையிலுள்ள செய்யுள்பிரபந்தங்களில் இம்முத்தமிடுதலைப்பற்றி ஏராளமான உதாரணங்கள் காணப்படுகின்றன. இம்முத்தமளித்தலைப்பற்றிப் பிள்ளைத்தமிழ் முதலான பிறபந்தங்களிலும், மஹாபாரதம், இராமாயணம் முதலான இதிஹாஸங்களிலும் எண்ணிறந்த பாக்கள் காணக்கிடைத்தபோதிலும், நாம் முத்தங்கொடுத்தற்கு ஸஹஜமாயுள்ள இரண்டொரு ஸந்தர்ப்பங்களுக்கறிகுறியாக இரண்டொரு பாக்களையும் அவற்றினடிகளையும் ஈண்டு வரையத்துணிவோம்.

“ வள்ளியாணிகழ்ந்திடு மதுரநல்லிதழ்த்
தெள்ளருந்தறிகளைத் தான்மறைக்கிய
தெள்ளமிழ்துறழ்மொழித்தேவசேனைமுன்
கிள்ளையொன்றேந்தினன்சீர்த்திபாடுவோம்.”

“ ........................................................தனவும்,
போன்முளைத்தமுறுவற்செங்கனிவாய்முத்தந்தருகமுத்தமே.”

“ ........................................................
முருகுவிரியுநறுங்களபமுலையாய்முத்தந்தருகவே.”

களிலுள்ள பல்வேறு வகைத்தான விசித்ரமான தேசாசாரங்களிலொன்றை அங்கீகரிக்கச்சொல்லுகிறா. முத்தமிடும் அவச்யத்தையும், அநுஷ்டானத்தையும் பாராட்டாத தேசங்கள் பல இப்பூமண்டலத்திலிருப்பதினால், யாறவீகத்திற்கு இம்முத்தமிடல் அத்யாவச்யமானதல்லவென்றும் அஃது அறவே நம்மினின்றும் நீக்கப்படுவதற்கு முகாந்திரங்கள் பலவுள்ளனவென்றுங் கூறுகிறார், உலகத்தில் இவ்வாடிக்கை பற்பல தேசங்களில் இல்லை என்னும் விஷயம் அனேகருக்கு இன்றையவரையில் தெரியாமலிருக்கலாம். மாடகாஸ்கா (Madagascar) பாலினீஷ்யா (Polynesia) என்னுமிடங்களிலும், நீகிரோ ஜாதியினரில் பலபேர்களுள்ளும், இன்னும் மற்றவிடங்களிலும் முத்தமிடுதல் இன்னதென்று தெரியாது. ஆப்பிரிகா நீகிரோஸ்திரீயைத்தான் முத்தமிட்டவுடன் அதனைப்ரியத்தினால் செய்கிற கார்யமென்றறியாது அவள் பயந்து கதறினாள் என்று ரீட் என்ற (Mr. Read, a Traveller) யாத்ரீகர் ஒருவர் கூறுகிறார் பின்லாண்டு (Finland) தேசத்து ஸ்திரீயொருத்தி, ஸ்திரீபுருஷர் ப்ரியத்தினால் முத்தமிடும் விஷயத்தைக் கேட்டபொழுது "என் புருஷன் இவ்வாறுசெய்ய எண்ணினால், அவனுடைய காதினை ஒரு வாரம் வரையில் நோகும்படியாகக் கையினால் பிசைந்து கிள்ளிவிடுவேன்." என்று கூறினளாம் ஆறுமாதம் பகலும் ஆறுமாதம் இராத்திரியுமாய், பனியால் ஸதாஸர்வகாலமும் மூடப்பட்டு மஹாமேருவென்றும், ஹிந்து பௌராணிகளால் சொல்லப்பட்ட உத்தரமஹாஸமுத்ரத்திலிருக்கும் (Arctic Ocean) க்ரீன்லாண்டிலும் (Green land) நம் இந்தியாவிற்குத் தென்கீழ் பாரிசத்திலுள்ள மலேயாவிலும் (Malaya) இன்னும் பிறஜாதியார்களிலும் ரோஜாமுத்தம் (Rose Salute) என்னும் வழக்கம் ஸஹஜமாயிருந்து வருகிறது. டார்வின் (Mr. Darwin) என்பவர் பின்வருமாறு ரோஜாமுத்தம் அல்லது மலேயா முத்தத்தைப் பற்றி விவரிக்கிறார். ஸ்திரீகள் தம்மேல் நோக்கிப் பார்த்த முகங்களுடனுட்கார அத்தேசத்துப் புருஷர்கள் பக்கத்தில் நின்று அவர்கள் பாரிசத்தில் சாய்ந்து தங்களது மூக்கினுச்சியை அவர்கள் மூக்குகளுக்குக்குறுக்கேவைத்து சற்றுநேரம் ஹூங்காரசப்தத்துடன் தேய்த்து ஆரம்பிக்கிறார்கள்.



ஸூர்யோதய பூமியென்றழைக்கப்படுகிற ஜப்பான் தேசத்திலும் மேனாட்டு நாகரீகம் பரிபூர்ணமாய் தங்களுக்குவந்துள்ளதென்று தற்புகழ்ச்சி செய்துகொள்ளும் அந்நாட்டினரும் முத்தமிடும் வாடிக்கை இன்றுங்கிடையாதென்று மிகவும் திருப்தியுடன் நோக்கவேண்டியதா யிருக்கிறது. அத்யந்த பிரியத்தினைத்தன குழந்தைகளிடத்துப் பாராட்டும் ஜப்பானியத்தாயும், தன் குழந்தையை ஒரு பொழுதேனும் முத்தமிடுவதில்லை யென்பதற்கு நல்ல ஆதாரமிருக்கின்றது. ஆனால் அதற்குப்பதிலாக ஜப்பானியத்தாய் தன்குழந்தையின் சிறிய கன்னங்களைத் தன் கன்னத்தோடுசேர்த்து அழுத்தி கூவென்றபுறாச் சப்தத்துடன் மெதுவாகச் சப்தம் செய்கிறாள். காதரின் சால்டிஸ் (Katharine chaldis) என்னும் ஐரோப்பியமாது தன்னுடைய ஜப்பானிய அநுபோஹங்களைச் சொல்லிவருங்கால், தான் பால்யமுதற்கொண்டு அத்தேசத்திலிருந்ததாகவும், தாய் குழந்தையை முத்தமிடக்காணாது அந்நியர்களினெதிரில் அம்மாதிரியாகச்செய்ய ஸங்கோஜத்தினால் என்று யூகித்து அநேகதடவை ஒளிந்துபார்த்துக் கடைசியில் அத்தேசத்தில் குழந்தைகளை முத்தமிடுவதே கிடையாதென்பது தெரிந்துகொண்டு, தாய்க்கு முத்தமிட்டுச் சீராட்டிச்சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று கருதி, தாயின் கையிலுள்ள குழந்தைக்கு முத்தமிட்டுத் தாய்க்குக்காட்ட, அதற்கு அந்தக்குழந்தை பயந்து வீறிட்டுக்கதறியதும், தாய் அதிசயித்து மயங்கிநின்றதும், தான் என்றைக்கும் மறக்கமுடியாதென்றும், அன்றுதொட்டு மறுபடியும், குழந்தையைச் சீராட்டிப் பாராட்ட ஜப்பானிய ஸ்திரீகளுக்குக் கற்றுக்கொடுக்கத்தான் முயல்வதே இல்லையென்று தீர்மானித்ததாக வேடிக்கையாகச் சொல்லியிருக்கிறாள்.

வீ. சுப்பிரமணிய ஐயா,

தமிழ்ப் பண்டிதர்.

---

உ

# விவசாயக்குறிப்புக்கள்.

நெல்லிக்குப்பத்துக்கடுத்த பாலூர் விவசாயப் பண்ணையிற்செய்யும் பயிர்களைப் பார்ப்பதற்குரிய காலங்களாவன.

## செப்டம்பர் 1-20 தேதிவரை, புன்செய்நிலங்களில்,

(1.) பலவித்தகதிர் தானியப்பயிர்களுடன் மணிலாக்கொட்டை (நிலக்கடலை) கலந்துசெய்யும் பரிசோதனைப்பயிர்களும்.

(2.) நஞ்சையில் பசுந்தழைக்காக விதையெடுக்கவேண்டிப் புன்செயில் பயிராகும் பசுந்தழைப்பயிர்களும்.

(3.) பல மணிலாக்கொட்டை வகைகளும்.

(4.) நன்செயில் ஒற்றை அலகு நட புன்செயில் தெளிவாக விட்டிருக்கும் நெல்நாற்றங்கால்களும் பார்வையிடலாம்.

**நன்செயில்,**

மத்தியமாகாணத்திய அநேகவித முதற்போகத்துக்குரிய நெல்தினிசுப் பயிர்களும்.

பசுந்தழை எருவிட்ட பூமியில் செழிப்பாய் நெற்பயிர் வளர்ந்திருப்பதையும் பார்க்கலாம்.

கரும்புப்பயிர் செய்பவர்கள் அநேக கரும்புதினிசுகள் பயிராயிருப்பதைப் பார்க்கலாம்.

நன்செயில் பசுந்தழைக்கென்று பயிராகிவரும் சில பசுந்தழை எருத்தினிசுகளும் பார்க்கத்தக்கவை.

## ஜனவரி, பிப்ரவரி மாதங்களில்,

ஒற்றை அலகு நட்டுப்பயிராகிக் கதிரிலிருக்கும் அநேகவித சம்பா நெல் தினிசுகள் பார்க்கத் தகுந்தவை.

அப்பொழுது நன்றாய் வளர்ந்த கரும்பையும் பார்க்கலாம்.

இறைப்புப்பூமியிற் பயிராகும் பரிசோதனைப் பருத்தி வகைகளும் பார்க்கலாம்.

தென்னார்க்காடு ஜில்லாவிற்கு கம்போடியா பருத்தி மிக சிலாக்கியமானதும் லாபகரமானதுமாகக் காணப்படுகிறது.

## மே, ஜூன் மாதங்களில்.

நன்செய்நிலமுள்ள தாலூகா தாசில்தார்கள் வந்துபார்த்தால் நன்செய்ப் பூமிகளில் பசுந்தழை எருவகைகள் சாகுபடி அவர்களது மனதைக் கவரும்.

நெல்லிக்குப்பத்துக்கடுத்த பாலூர் விவசாயப்பண்ணை மானேஜருக்கு முன்னமே தெரிவித்தாற் பண்ணைக்கு ஒரு மைலிலிருக்கும் பாலூரில் தங்குமிடத்திற்கும் ரயில்மார்க்கமாய் வரப்பட்டவர்களுக்கும் நெல்லிக்குப்பத்திலிருந்து விவசாயப்பண்ணைக்கு வரவண்டிமுதலானவைகளும் ஏற்பாடு செய்யப்படும்.

(Sd.) H. C. SAMPSON,
Dy. Director of Agricultural.

---

உ

# சங்கீதசாஸ்திரம்.

—:(×):—

சங்கீத சாஸ்திரம், வேதப் பிரவசன கால்முதல் தற்காலம்வரையில், நம்மவர் உடைத்தாயிருந்த விதத்தைத் தெரிந்துகொள்வது நலமாதலால், அவ்விஷயத்தைச் சுருக்கமாய் இங்கெடுத்துக் கூறுவோம்.

நமது முன்னோர்களான ரிஷிகள் ஆதிகாலத்தில் வேதகீதங்களை இசைப்படுத்திப் பாடிக்கொண்டிருந்தார்களென்றும், ருக்வேதத்தில் அர்ச்சிநோகாயத்தி, கந்திநோகாயந்தி, லாமிநோகாயந்தி என்று அர்

க்க, காத, ஸாமவேதங்களை பாடுவதாக அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறதென்றும் சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கிறது. பின்னர் பாணினி முதலான வித்தியா சாரியர்களாலும் சாஸ்திரமுறைகள் கிரந்தங்களில் எழுதப்பட்டு வந்தன. அர்க்கமுறையாவது-ஒரு சுவரத்தை ஆதாரமாக வுடையது. காதிக முறைக்கு இரண்டு சுவரமும், ஸாமிக முறைக்குமூன்று சுவரமும் ஆதாரமாயுள்ளன. பிறகுநான்கு சுவரத்தை அநுசரித்திருக்கிற சுவராந்தரம் என்று மற்றொருமுறை இதனுடன் சேர்க்கப்பட்டது. ரிஷிகளா லநுசரிக்கப்பட்ட முறைக்கும், ஆசாரியர்கள் அநுசரித்த முறைக்கும் முக்கியமான வித்தியாசமுண்டாயிருந்தது. பாணினியானவர்-தாம் செய்த வியாகரண சூத்திரங்களில் உதாத்த, அநுதாத்த, சுவரிதமென்று மூன்று சுவரங்கள் எடுத்திருந்தபோதிலும், சிக்ஷை என்கிற கிரந்தத்தில் மூன்று சுவரங்களாலான முறைக்கும் சப்த சுவரங்களாலான முறைக்கும் சம்பந்தம் அடியில் வருமாறு காட்டியிருக்கின்றனர். அதாவது-உதாத்தத்தில் நி, கா என்கிற இரண்டு சுவரங்கள் சேர்ந்தனவென்றும், அநுதாத்தத்தில் ரி, தா என்கிற இரண்டு சுவரங்கள் கூடினவென்றும், சுவரிதத்தில் ஸா, மா, பா என்கிற மூன்று சுவரங்கள் சேர்ந்தனவென்றும் அவர் சொல்லுகிறார்.

ஷட்ஜசுவரத்தின் குறிப்பு ஸா என்றும் ரிஷபசுவரத்தின் குறிப்பு ரீ என்றும், காந்தாரசுவரத்தின் குறிப்பு கா என்றும், மத்தியமசுவரத்தின் குறிப்பு மா என்றும், பஞ்சமசுவரத்தின் குறிப்பு பா என்றும் தைவத சுவரத்தின் குறிப்பு தா என்றும், நிஷாதசுவரத்தின் குறிப்பு நி என்றும், காட்டுகிறது. இவ்விதமான சப்த சுவரங்களில் ஷட்ஜசுவரம் நாதமாத்திரையாக வைத்துக்கொள்ளப் பட்டது ஏனெனில், மற்ற ஆறு சுவரங்களும் அதினின்று புறப்பட்டு அதன் மாத்திரையை உயர்த்தி நீட்டுவதால் உண்டாகின்றன. நிஷாதமும் காந்தாரமும் சேர்ந்து ஒன்றாய் உதாத்தமென்றும், ரிஷபம்-தைவதம் இரண்டும் சேர்ந்து அநுதாத்தமென்றும், ஷட்ஜ பஞ்சமங்கள் கூடி ஸ்வரிதமென்றும் எண்ணவேண்டியது. மத்தியமமானது பஞ்சமத்துடன் கலக்கிறதுமன்றி எல்லாச்சுவரங்களுடனும் கலக்கிறபடியால் அது தனியாயிராமல் அவற்றுடன் கூடினதாகக் கொள்ளவேண்டியதாயிற்று. இதினால் அர்ச்சிக, காதிக, ஸாமிக வேதங்கள் மூன்று சுவரங்களால் பாடப்பட்டனவென்றும் இம்மூன்றும் பிற்காலத்திய சப்த சுவரங்களின்கலப்பென்றும் கொள்ளவேண்டியது. இவ்வாறு பாணினி முதலான ஆசாரியர்கள் காலத்தில் ஸாமமுறையை அநுசரித்து சப்த சுவரங்களாற் பாடப்பட்ட சங்கீதம் நான்கு பாகமுடையது. அதாவது—பிரஸ்தாவம், உத்கீதம், பிரதிஹாரம், நிதானமாகும். தற்காலத்திய துருவபதமுறையும் அஸ்தாயி, அந்தரம், ஸஞ்சாரம், அபோகம் என்று நான்கு பிரிவுகளுள்ளது. இதனால் இவ்விரண்டு முறையு மொன்றென்றும் பின்சொன்ன முறைக்கு ஆதிகர்த்தாவாகிய தனசேனன் வேத முறையை நன்றாய் அறிந்தவரென்றும் தோன்றுகிறது. துருவபதமுறை ஏற்படுவதற்குமுன் சங்கீதசாஸ்திரமடைந்த மேற்சொன்ன நானாவிதப் படிகளெல்லா மொருங்கு கூடியதைத்தான் சம்ஸ்கிருத கிரந்தகர்த்தர்கள் "மார்க்கம்" என்கிற முறையென்று வகுத்திருக்கிறார்கள். சம்ஸ்கிருத கிரந்த கர்த்தர்கள் இச்சாஸ்திரத்தின் அபிவிருத்தி காலத்தில் ஏற்படுத்தி வகுத்திருக்கிற முறைகளைப் படிப்படியாய் அறியவேண்டியது அவசியமானது. ஆனால் எண்ணிறந்த கிரந்தங்கள் இச்சாஸ்திர சம்பந்தமாய் ஏற்பட்டிருந்தனவென்றும், இந்நூலின் ஒழுங்கு தக்கமுறையுடன் உண்டானதென்றும், இந்து தேசத்தில் தற்காலத்தில் கிடைத்த கிரந்தங்களின் பிரதம பாகத்திற் கூறியிருப்பதால் தெரியவருகிறது. மேற்சொன்ன பெயர்களையும் கிரந்தங்களையும் தவிர மற்றப்படி அவர்களின் சரித்திரம் சிறிதேனும் தெரியாது. கிரந்த கர்த்தர்களின் பெயர்களில் முக்கியமானவை அடியில் வருமாறு காட்டப்பட்டன:—

சதாசிவன், சிவன், பிரம்மா, பரதன், காசியபர், மதங்கன், பார்ஷிங்கன், துர்க்கை, சக்தி, சார்த்தூலன், கோஹலன், விசாகிலன், தந்திலன், கம்பலன், அச்வதரன், வாயு, விசுவாவசு, ரம்பை, அர்ச்சுனன், நாரதன், தும்புரு, ஆஞ்சநேயன் (ஹநுமான்), மாத்ருகுப்தன், வருணன், நந்திகேசுரர், சுவாதிர்க்கணன், தேவராஜன், க்ஷேத்திரஜன், ராஹலன், தூர்ஜயபூபாலன், போஜன் என்கிற பூவல்லபன், பரமர்த்தி, சோமேசன்.

மேற்சொன்னவர்களால் செய்யப்பட்ட கிரந்தங்களைப் பிரவர்த்திப்பித்து அவற்றிற்கு வியாக்கியான முதலானவைகள் செய்து விள

க்கினவர்கள் - சோல்லடன், உதபடன், சங்குகன், பத்திராபிகவகுப்தன், கீர்த்திதரன், ஹா ஹா, ஹூஹூ, இராவணன், வாணாசுரன், பெண்ணைவ உஷை, ஆதிசேஷன் முதலானவர்களாம். சார்ங்கதேவனும் செய்யப்பட்ட சங்கீதரத்நாகரம் என்கிற கிரந்தந்தான் இப்போது சங்கீத சாஸ்திர விசாரஞ்செய்கிற வித்தியார்த்திக்கு மிக முக்கியமானது. இச்சாஸ்திர விஷயமாய் இந்து தேசத்தில் அகப்படும் கிரந்தங்கள் பலவற்றிற்கும் இதுவே ஆதாரமானது. இந்த புராதன கிரந்தத்தில்தான் மேற்சொன்ன பெயர்கள் காணப்படுகின்றன. பிற்பட்ட கிரந்தங்கள் எல்லாம் ரத்நாகரத்தைத் தொடர்ந்து எழுதப்பட்டதும் அல்லது அதன் சங்கிரகமுமாயிருக்கின்றனவேயன்றி வேறன்று.

சமஸ்கிருத கிரந்தகர்த்தர்கள் எல்லாரும்-சங்கீதம் மூன்றுபாகுபாடுடையதென்பதில் ஒரேவித அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். அவையாவன:—1-வது கீதம் அல்லது வாயினாற்பாடுவது. 2-வது வாத்தியம் அல்லது ஆயுதங்களால் நாதம் எழுப்புவது. 3-வது நிருத்தனம் அல்லது இசைக்குத்தக்கபடி நடனஞ்செய்வது. அவற்றின் தன்மையையும் ஒன்றற்கொன்றுள்ள சார்பையும் யோசித்தேதான் இவ்வரிசைக்கிரமமு மேற்பட்டதாகவிருக்கிறது. இம்மூன்று பாகுபாடுடைய நூல்-மார்க்கம் என்றும், தேசி என்றும் இரண்டு முறைப்பாடுள்ளதாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இதில் "மார்க்க" முறை பிரதமத்தில் பிரமாவினால் அப்பியசிக்கப்பட்டு பரதனுக்கு உபதேசம்பண்ணப்பட்டது. பிறகு பரதர் தாம் அப்பியசித்ததைக் கந்திருவர்களைக்கொண்டு ருத்திரனுக்கு முன்னே பிரகாசிப்பித்தார். இதுதான் ரிஷிகளாலும் கந்திருவர்களாலும் முதல் முதல் ஏற்பட்டு வரன்முறையாய் ஆரியர்களிடத்தில் வழங்குகிற முறை. இவ்வாறு "மார்க்க" முறையின் ஆரம்பமும் சரித்திரமும் சொன்னபடியால் "தேசி" முறை என்பது இப்படிப்பட்டதென விசாரிக்கப்புகுவது அத்தியாவசியமானதெனத் தோன்றுகிறது. இந்த முறை நானா தேசங்களிலுள்ள நானா வர்ணத்தாரும் தங்கள் தங்களுக்கு ஏற்றபடி செவிக்கு இனிப்பாய் பலருக்கும் சுகமுண்டாகும்படி ஏற்படுத்திக்கொண்டது. இது இடத்தைப் பொருத்தினதான



படியால் அங்கங்குள்ள ஜனங்களின் நடக்கைக்கும், வழக்கங்களுக்கும், ஆசாரங்களுக்கும், உல்லாசத்துக்கும், ஒத்து அவரவர்களுக்கு ஏற்றபடி கர்ணானந்தம் விளைவிப்பது. மார்க்கமுறை சமஸ்கிருத கிரந்தங்களில் விவரித்துக்காட்டியெழுதப்பட்டிருந்தபோதிலும், அப்பியாசமின்மையாலும் ராச்சியாதரணை குன்றினதாலும், மற்றுமுள்ள அனேகமாறுதல்களினாலும், பெரிதும வழக்கத்தினின்று நீங்கிவிட்டதென்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது. இந்து தேசத்தில் தற்காலத்திலே வழங்குகிறமுறை தேசியந்தான். மார்க்கமுறை "நிபத்தம்" என்றும் "அநிபத்தம்" என்றும் இரண்டுவிதமானது. நிபத்தமானது-கீதம், வர்ணம் என்று ஏற்பட்டுப் பெரியவர்களாலே குறிக்கப்பட்ட மெட்டுக்குட்பட்டுப் பாடுவது. அநிபத்தமாவது-கீதவர்ணங்களைத் தொடர்ந்து மனதுக்குச் சுகமானபடி ஏற்படுத்திப்பாடுவது.

தேசிமுறை முதல்முதல் புத்தசமயத்துப் பாடகர்களால் உண்டாக்கப்பட்டு ஹிந்துஸ்தானிபாஷை பேசும் துருஷ்கர்களால் விசேஷ விருத்திக்குக் கொண்டுவரப்பட்டது. ஹிந்துக்கள் ஏற்படுத்திய துருவபத முறையிலிருந்தெடுத்து துருஷ்கர்கள் "கியால்" என்று ஒருவிதமும் அதினின்று "டப்பா" என்னும் விதமும் உண்டாக்கினார்கள். இதுதவிர தென் இந்தியாவில் "கர்நாடகம்" என்று மேற்சொன்னவற்றிற்கு வேறான மற்றொருபாகம் சங்கீத சாஸ்திரத்தில் பிரிவுபட்டிருக்கிறது. ஆலாபனை செய்வதில் ஹிந்துஸ்தானிமுறையில் வழக்கத்திலுள்ளவைகள்.—துருவபதம், தில்லானா, சுரவர்த்தனம், கியால், டப்பா, தம்பாரி, கஜஜல், ஹோரி, ரிக்தா, தாதிரா, சத்திரோக், லாவணி என்பவைகள். கர்நாடகத்தில் வழங்குகிறவை பல்லவி, கீர்த்தனை, பதம், தானவர்ணம், சவுக்கவர்ணம் ஜாவளி, கீதை, ராகமாலிகை என்பவையாம்.

நமது தேசத்தில் ஆதிகாலம் முதற்கொண்டே வாத்தியங்களைக்கொண்டு இசை மீட்டுவது வழக்கமாயிருந்தது. யாகஞ்செய்யுங் காலங்களில் இரண்டு பிராமணர்கள் வீணையை மீட்டியும் ஒருவர் வாயினாற் பாடிக்கொண்டுமிருந்தாலல்லது பலனில்லையென்று கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு மூன்று பிராமணர்கள் வாத்தியங்களில்இசை

மீட்டியும், வாயினாற் பாடிக்கொண்டு மிருந்தால்தான் (தர்ம அர்த்த காம மோக்ஷம்) அறம்பொருளின்பம் வீடென்கிற நான்கு புருஷார்த்தங்களையும் பெறலாமென்றெண்ணப்பட்டிருந்தது. பரமசிவனுக்கு மிகப்பிரியமான வாத்தியம் வீணைதான். நாரதர் சரஸ்வதி தும்புரு முதலானவர்களும் யாழ் கரையெடுத்து கானம் பண்ணினார்கள். திருமதுரையில் வீற்றிருக்கும் சோமசுந்தரக்கடவுள் செய்த திருவிளையாடல்களுக்குள்ளே விறகுவிற்ற படலத்தில் சிவபெருமான் ஒரு விறகுக் கட்டைத் தூக்கிக்கொண்டுவந்து அதை யிறக்கிவிட்டு தெருத்திண்ணைமீதமர்ந்திளைப்பாறி இன்னிசை தொடுத்துப் பாடினதாயும், ஏமநாதன் என்னும் பெயருள்ள இசைவல்லானொருவன் விறகு விற்பவன் கோலங்கொண்ட சிவபிரானைச் சுருதி மடுத்துப்பாடும் நீர் யாரென்று கேட்கத் தான் "பண்டருவிபஞ்சியாணபத்திரனடிமை" என்று சொல்லவும் பாடினவிசையையா ற்றொருகாற் கேட்க விரும்புகிறேனென்று ஏமநாதன் கூற சுந்தரேசர் பாடினதாயும் அது அனைவருக்கும் கர்ணானந்தத்தையும் நயத்தையும் உண்டாக்கிப் பெரும் வியப்பை விளைவித்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

இனி தாளம், பரதம் ஆகிய இவ்விரண்டையும்பற்றி ஒருவாறு கூறி முடிப்பது நலமெனத்தோன்றுகிறது. தாளமென்பது யானையை யடக்குவதற்குபயோகமான இரும்புத் துண்டென்று காத்தியாயனராற் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு தாளம் என்பது கையைத் தட்டுவதால் காலத்தை நிர்ணயிக்கிறதென்று பொருள்பட்டது.

இசை யாரம்பமுதல் முடிகிறவரையில் தாளத்துக்கு ஆதாரபூதமாயுள்ள மாத்திரையின் ஏற்பாட்டுக்குட்பட்டு சந்தஸ்ஸையொத்து நடக்கும் அளவுக்கு லயம் என்று பெயர். இது மூன்றுவிதமானது. அதாவது-விளம்பிதம், மத்தியம், துருதம். நாலுமாத்திரையென்பது நிர்ணயமாக வைத்துக்கொள்ளப்பட்ட அளவு. அதற்குக் குறைவாயிருப்பதில் லயம் தோன்றாது. காலம், கிரியம், மானம் (நிறுத்துதல்) இவை கலந்து உண்டாகும் செய்கைக்குத்தான் தாளமென்று சம்ஸ்கிருத சாஸ்திரங்களில் கூறியிருக்கிறது. கீதம், வாத்தியம், நிருத்தம் இவைகளெல்லாம் தாளத்தினாற்றான் குறிக்கப்பட்டிருக்கிறது.



பரதசாஸ்திரமாவது பிரமாவினால் பரதரிஷிக்கு முதலில் கற்பிக்கப்பட்டுப் பரமேசுவரன் நிருத்தம் பண்ணுங்காலத்தில் அவர்க்கு எதிரில் தெரிவிக்கப்பட்டது. பிறகு சிவன் தன் சிஷ்யராகிய நந்திகேசுவரருக்குப் போதித்தார். பரதர் பிறகு நந்திகேசரிடத்திலிருந்து புருஷர்கள் அப்பியசிக்கும் தாண்டவம் என்னும் வித்தையைக்கற்று ரிஷிகளுக்கு உபதேசித்தார். ரிஷிகளால் மனிதர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. ருத்திரனால் பார்வதி தேவிக்கு ஸ்திரீகள் அப்பியசிக்கும் பாகம் போதிக்கப்பட்டது. அந்த பாகத்திற்கு லாஸ்யம் என்று பெயர். தாண்டவம் என்பது ஆண்மையும் சௌரியமுமுள்ளது. லாஸ்யமென்பது மிருதுவும் நயமுமுள்ளது. பார்வதி தேவியானவள் வாணாசுரன் பெண்ணாகிய உஷைக்குக் கற்பித்தாள். லாஸ்யமானது உஷையினால் துவாரகாவாசிகளான கோபிகளுக்குப் போதிக்கப்பட்டு அவர்களால் துவாரகைக்கு வெளியிலிருந்தவர்களுக்குக் கற்பிக்கப்பட்டுப் பின்னால் எங்கும் பரவிற்று. இப்பரத சாஸ்திரம் நாட்டியம், நிருத்தம், நிருதம் என்று மூன்று பிரிவுடையது. இவைகளின் பேதங்களை விவரித்து அந்தந்த சாஸ்திரங்களிற் கண்டுகொள்ளலாம்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுக்குள்ளே ஆனாயநாயனார் என்பவர் வேய்ங்குழலைக்கொண்டு வாசித்தபோது சராசரங்கள் யாவும் இயக்கமற்று அவ்வினிய ஓசை யென்னும் தேனையுண்டு தியங்கிய பிரமரங்கள்போல் சலனமற்று நின்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. சங்கீதத்துக் குருகாத கன்னெஞ்சமுடையான் மானிட இயல்புடையவனல்லனென்றும் சகல துர்க்குணங்களுக்கும் அவன் மனம் இலேசாய் இணங்குமென்றும் இங்கிலாண்டு தேசத்தின் காளிதாசரென்று பெயர்பெற்ற ஷேக்ஸ்பியர் என்னும் நாடககவி கூறுகின்றனரென்றால் சங்கீதத்தின் பெருமையை இன்னும் என்னென்று வியப்பது! —ஜனவிநோதினி.

இசைத்தமிழன்.

உ

சிவமயம்.

# ஓர் ஆசங்கை.

இப்பூவுலகின்கண் மனிதரால் எய்தற்பாலன அறம் பொருள் இன்பம் வீடென்பன. இவற்றையடைவதற்குக் கல்வி இன்றியமையாததாம். இக்கல்வி தமிழ்நூல்களில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் இலக்கணங்களும் இலக்கியங்களுமாம். இவற்றைக் கற்பதற்கு எழுத்துக்கள் இன்றியமையாதன. இவ்வெழுத்துக்களை அகரமுதல் னௗ, ஈறாக ஒன்றன்பின்னொன்றாக வைத்ததற்கு நன்னூல் விருத்தியுரையில் காரணங்கூறப்பட்டுளது. இதுபோல வடநூலெழுத்துக்களுக்கும் காரணம் இருக்குமென்பது திண்ணம். இவைகளில் தமிழ் எழுத்துச்சுவடியில் ஹரி: நமோ த்து சித்தம் என்றும், வடவெழுத்துச் சுவடிகளில் ஹரி: ஓம் நமோ நாராயணாய என்றும் எழுதப்பட்டு சைவம் வைணவம் என்னும் இருமதத்தினர்க்கும் பிரதமத்திற் கற்பிக்கப்படுகின்றன. இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவாக்கியமாகி நந்நான்கு பதங்களாகப் பிரிக்கப்படுகின்றன. அம்முதல் னௗஈறாக உள்ள எழுத்துக்கள் முறையே வைத்ததற்குக் காரணம் புலப்படுவதுபோல் இப்பதங்களும் ஒன்றன்பின்னொன்றாக வைக்கப்பட்டதின் காரணமும் அவற்றின் பொருள்களும் என் சிற்றறிவிற்கு எட்டாமையால் இவற்றை அறிஞர் யாவரேனும் விவர்த்திசெய்வார்களாகில் எம்போலியர்க்கு ஓர் பேருதவியாகும். அன்றியும் அவர்பால் நன்றிபாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

இராமநாதச்செட்டி,

கண்டனூர்.

---

உ

# சில தனிப்பாக்கள்.

———o(::)o———

பழனித்தலம் முத்தமிழ்ச் சக்கரவர்த்தியாகிய ஸ்ரீமத்-மு. மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் இயற்றியருளிய பாக்களையெல்லாம் முதற்பாகம் இரண்டாம் பாகமாக மார்க்கயன்கோட்டை ஸ்ரீமத்-M. P., பழனிச்சாமியாசாரியார் அச்சிட்டதைக் கண்ணுற்றனன். மேற்படி கவிராயரால் இயற்றிய தனிப்பாக்களில் சில மேற்படி புத்தகத்தில் இல்லை. ஆகையால், அத்தகைய பாக்களும் பொன்றாவண்ணம் தமது பத்திரிகையில் ஒரு பாகம் இடம்தந்து உபகரிப்பீர்களென்று கேட்டுக்கொள்ளுகின்றனன்.

அப்பாக்கள் வருமாறு:—

மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் சமஸ்தானம் ஸ்ரீமாந்-பொன்னுச்சாமித் தேவரவர்கள் மீது அஷ்டநாகபந்தனம்.

வேண்பா.

காத லதிக கடின மெனமேவு
சீதமதி தாவு சினமாமா—நீதகிச
சூரா கமபோத சோதி வதனகன
மாராமச் சந்திரபூ மா.

ஸ்ரீமான்-திருமலையப்பன் என்பவர்பேரில் சதுரங்கயானையடி க

கலித்துறை.

கன்னு தருமமகலா மனக்கர ளேவாத
தென்னு மனுமுறை மன்னுகர் தாநயச் சீருலவும்
பொன்னு வதனச்சொல் மானு பாரபப்ர பூப்பரவு
மன்னு கனக திருமலை யப்ப வசீகரனே.

ஸ்ரீமத்-மு. மாம்பழக் கவிச்சிங்க நாவலர் அவர்கள் ஓர்தரம் இராமநாதபுரம் சென்றிருந்த போழ்து ஸ்ரீமாந்-பொன்னுச்சாமித்

தேவரவர்கள் ஷை கவிராயருக்கு ஒரு பிராமணர் வீட்டில் உண்டிக்கு ஏற்பாடுசெய்தார்கள். மேற்படி கவிராயர் ஆங்கு உண்டபின்னர் தேவரவர்களிடம் பொழுது போக்காகப் பேசிக்கொண்டிருக்கச் சென்றபொழுது, தேவரவர்கள் கவிராயரைப்பார்த்து "இன்று சாப்பாடு எப்படி இருந்தது" என்று வினவ,

இப்புவியெ லாம்புரக்கு மெங்கள்பொன்னுச் சாமிமன்னா
விப்பிரன்கைச் சோறின்று வேகவில்லை—அப்படியே
கத்தரிக்கா யுப்பேபீர்க் கங்காய் பருப்புமணல்
வைத்தரசம் வாந்தி வரும்.

என்ற வெண்பாவைச் சொல்லி விடைபகர்ந்தார்.

அ. சிதம்பர முதலியார்.

---

# மதுவிலக்கு.

சகோதரரே!

இவ்வுலகின்கண்ணுள்ள நம் மானிட ஜன்மத்திலே, வாழ்வடையக்கூடிய சாதகமான வழிகள் அநேகமும் தாழ்வடையக்கூடிய பாதகமான வழிகள் அநேகமும் இருக்கின்றன. கடவுள் மனிதருக்குத் தந்தருளிய சுவாதந்திரியத்தால் புத்தியுற்றவர்கள் நல்லமுறைகளைக் கைக்கொண்டு வாழ்வுபெற்றோங்கவும் புத்தியற்றவர்கள் கெட்டமுறைகளைக் கைக்கொண்டு தாழ்வுபெற்றேங்கவும் காண்கின்றோம். மேலும், நன்மையான காரியம் இன்னின்னவென்றும், தீமையான காரியமின்னின்னவென்றும் மனச்சாட்சியுள்ளார் ஒவ்வொருவரும் அறிந்தேயிருக்கிறார்கள். ஆயினும், நம் மானிட சிருஷ்டிக்குச் சுபாவமாய் ஏற்பட்டிருக்கும் பெலவீனத்தினால் மனச்சாட்சியுள்ளவர்களுங்கூட சன்மார்க்கத்தை நெகிழ்ந்து ஓரோர்வேளை துன்மார்க்கத்திற் பிரவேசிக்க நேரிடுகிறது. நேர்ந்தாலும் அத் துன்மார்க்கத்தினின்றும் தன்னை அப்புறப்படுத்திக்கொள்ள மனிதன் மனத்திட



முடையவனாயிருக்கின்றானென்ப துண்மை. இப்படி அப்போதைக்கப்போது தம்மைத் திருத்திக்கொள்ளும் குணமுள்ளவரைத் தங்கள் வசமாக்கி அவர்களைக்கொண்டே உலகத்திற்கு அநேக நன்மைகளைச் செய்துமுடிக்க அறிவுடையார் பலர் சமயம் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அங்ஙனமிருக்க அறிவில்லானாகிய நானோ அவ்வறிவாளரைப்போல் தகுந்த சமயத்திற்கெதிர்பார்த்துக் கொண்டிராமலும் அயலாரைத் திருத்தும் ஆண்மையற்ற எனது புல்லறிவைச் சற்றும் ஆலோசியாமலும் இந்நேரத்தில் திடும்பிரவேசமாய் வெளிவந்ததற்குச் "சகோதர நஷ்டம் ஸர்வ நஷ்டம்" எனப்பெரியோர் சொல்லிவைத்த சூத்திரமும் அதன்மேல் நான்கொண்ட ஆத்திரமுமே காரணமென்னலாம்.

சகோதரரே! நேசமானது ஒருவரையொருவர் பார்த்தவுடன் பல்லைக்காட்டிச் சிரிப்பதன்று. அப்படி வெறிதாய்ச் சிரிப்பது முகநட்பேயாகும். வேறென்னெனக் கேட்பின், காலமாறுபாட்டால் ஒருவர் கெடுதியானவழியில் பிரவேசிக்கக்கண்டால் மற்றவர் உடனே அவருக்கு இடித்துப் புத்திசொல்லிக் கெடுதியானவழியிலிருந்தும் அவரை நல்வழிக்குத்திருப்பிக்கொள்வதுதான் நேசம். இதுவே உண்மையான சகோதரவாஞ்சை. இதைத்தான் அகநட்பென்பர். அவ்வகநட்பின் வசப்பட்டு உதவிதருபவரில் நாம் இன்னின்ன முறைகளைக் கொள்ளவேண்டுமென்பாரும் இன்னின்ன குறைகளைத் தள்ளவேண்டுமென்பாரும்உண்டு. இவையிவை நற்காரியங்களென்று ஆதாரங்காட்டுவதைப்பார்க்கிலும் இவையிவை துர்க்காரியங்களென்று ஆதாரங்காட்டுவது எளிதெனல் நம்மிற் பெரும்பாலார்க்குத் தெரியும். இவ்வுறுதியைக்கொண்டே நற்கிரியைகளைக்கொள்ளுவதிலும் துர்க்கிரியைகளைக் கிள்ளுவது எவருக்கும் இலகுவென்பது திண்ணம். நான் எடுத்துக்கொண்டதும் நம்மைவிட்டு நீக்கவேண்டிய துர்க்கிரியை இன்னதென்று கூடிய அளவு விரித்துக்கூறி அத்துர்க்கிரியை இனிமேல் நமக்குள்ல்வலேசமும் இருக்கக்கூடாதென வெகு தாழ்மையோடு கெஞ்சிக் கேட்பதுதான். ஆகவே, அப்படிக்கெஞ்சிக் கேட்பது, கேட்கும் எனக்கு மாத்திரமல்ல; அதன்படி அநுசரிக்கத் தயவு செய்யப்போகும் உங்களுக்கும் சுலபமானது. எவரும் வெறுக்கவேண்டிய இத்

துர்க்கிரியையைச் சித்தமுங்கொண்ட நம் சகோதரர் வெறுத்துவிடுவதை எளிதேயென்றாலும் அப்படி வெறுத்துவிடுவதால் உண்டாகும் பிரயோஜனமோ மிகவும் பருவானது. முழு உலகத்திற்கும் நன்மை தரக்கூடியது. விசேஷமாய் நம் சகோதரர் சகலரையும் சம்பூரண பாக்கியத்திற்கு ஆளாக்கிவைப்பது. அந்த மகத்தான பாக்கியத்தை நாம் அநுபவிக்க இதுவரை நமக்கு இடையூறாயிருக்கும் அத்துர்க்கிரியையின்விஷயந்தான் இப்பொழுதெடுத்தோதப்போகிறேன்.

இத்துர்க்கிரியையின் கொடுமையையும் குரூரத்தனத்தையும் அதனால் நமக்கு விளைந்துவரும் சங்கடங்களையும் விளக்கிக்காட்டும்படி தேர்ந்த அறிவும் திடகாத்திர தேகமுமுடைத்தான மாதுரிய பிரசங்கியொருவன் தலைப்படுவனாயினும் அவன் ஜீவியகாலமெல்லாம் அதனைச்சொல்லியும் முடிவுபெறாமல் அக்கஷ்டநஷ்டங்களை விரித்துரைக்கத் தனது வாழ்நாள் பற்றாதென அவனும் ஓய்ந்துவிடவேண்டியதுதான். அப்படிப்பட்ட கருமத்தை எளிய அறிவும் இளைத்த தேகமுமுடைய என்போல்வார் சொல்லவதென்றால் முடியாததேயாம். மேலே சொன்னபடி நாம் நீக்கவேண்டிய துர்க்கிரியையைத் தூண்டுவதென்றால் நீக்கவேண்டிய கிரியையோ கொடிய கிரியை. கிரியை கொடிதென்பது மாத்திரமல்ல; அதற்கு இலக்காகும் வஸ்துவும் கொடியது. அது விஷம் போன்றது. போன்றதல்ல இயல்பிலேயே விஷந்தான்; இது மறுக்கப்படாத சத்தியம். அது யாது? சகோதரரே! அதன் பெயரைச் சொல்கின்ற நாவும், கேட்கின்ற செவியும், அதனைக்காண்கின்ற கண்ணும், தொடுகின்ற உறுப்பும் தீங்குறுமென்பர் பெரியோர். நான் சிறியேனாகையால் சொல்லுகிறேன் கேளுங்கள். அதுதான் மதுபானம். பரீக்ஷித்துப் பார்க்கின் பாஷாணம் என்பதும் இதுவே. இது சாராயம், கள், பிராந்தி, விஸ்கி முதலிய லாகிரி வஸ்துக்களேயாம். என்ன இது பாஷாணமா? பாஷாணமெனப் பல்லாயிரரும் பல்லாயிரமுறை பகருகிறார்கள். அப்படிச் சொல்லுவதற்கு அநேக ஆதாரங்கள் ஆங்காங்கிருக்கின்றன. அவற்றிற் சிலவற்றை இங்குத் தருகிறேன்.

மேற்சொன்னபடி, இலாகிரி வஸ்துக்களாகிய அவற்றைப் பாஷாணமென்று ஸ்தாபிப்பதற்கு ஆன்றோரால் அதற்கிடப்பட்டிருக்கும் காரணப்பெயரொன்றே போதுமென்றெண்ணுகிறேன் அப்படி அக்காரணப்பெயரைக் கண்டுபிடிப்பதற்குமுன் இப்போது நமக்குள் வழங்கப்பட்டுவரும் ‘வெறி தருவதும்’ ‘வெறி தராததுமான’ இரண்டுவகைப் பானங்களுள் இம்மதுபானம் எவ்வகுப்பைச்சேர்ந்ததென்று பார்ப்போம். பார்க்குமிடத்து, மதுபானம் முன் சொன்ன இருவகுப்பில் வெறியைத்தரும் பானவகுப்பைச் சேர்ந்ததெனப் பட்சபாதமில்லாத புத்திமான்கள் சகலரும் ஒப்புக்கொள்வர். இதற்கு அப்பாஷணப் பழக்கமுடையாரும் சாட்சி தருவார்கள். இங்ஙனம் நிற்கும் ‘வெறியுள்ளவை’ என்னும் தமிழ்ப்பதத்திற்கு ‘இண்டோக்ஸிக்கெண்ட்ஸ்’ (Intoxicants) என்ற ஆங்கிலேயமொழி பிரயோகிக்கப்பட்டு வருகிறது. இண்டோக்ஸிக்கெண்ட்ஸ் என்னும் இந்த மொழி ஆதியில் ‘டோக்ஸிக்கன்’ “Toxicon” என்னும் ‘கிரீக்’ வார்த்தையினின்று உற்பத்தியானது. இத்தகைய கிரீக் பாஷையை மூலோற்பத்திகொண்ட ‘டோக்ஸிக்கன்’ என்னும் சொல்லிற்கு அப்பாஷையிலேயே பாஷாணமென்பதுதான் பொருள். அதனை ஆங்கிலேய ஆசிரியர்களும் ஆமோதிக்கின்றனர். அதுவே உலக சம்மதமும். ஆதலால், அருந்தியதும் இலாகிரியைக் கொடுக்கக்கூடியதெதுவோ அவையெல்லாம் விஷ சத்துடையவென்பது. இதுவே வைத்திய நூலுடையார் துணிபு. இதனை ஒவ்வொருவரும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். ஏனென்றால் மேலே கூறிய இருவித பானங்களுள் நாம் உபயோகித்துவருவது வெறியைக் கொடுக்கக்கூடியதா? கூடாததா? அதாவது விஷ சத்துடையவா அல்லவாவெனத் தெரிந்துகொண்டால் அப்படி யுபயோகிக்கும் வஸ்துவினால் நமது தேக சுகத்திற்கு ஏதேனும் விரோதமுண்டா இல்லையாவென்பதையும் அவரவரே தெளிவாய்த்தெரிந்துகொள்ளலாம்.

நல்லது; இந்தமட்டும் வெறியைக் கொடுப்பதனைத்தும் நச்சுப்பண்டமெனக் கிரந்த வாயிலாய் ஒப்பித்தது சரிதான். ஆயினும் இத்தோடு ‘மதுபானம்’ என்கிற வஸ்துவையும் பாகுபாடு செய்து அது உண்மையாகவே பாஷாணந்தானென்று காட்சிப்பிரமாணமாய்க்காட்டவேண்டாவோவென்பார்க்கு இலாகிரி வஸ்துக்களெல்லாம்

'மஸ்து' அல்லது 'மதுசாரம்' என்கிற விஷத்தைக்கொண்டல்லாமல் வேறெவ்வித மூலகருவியாலும் உற்பத்தி பண்ணமுடியாதென ஆன்றோர் யாவரும் ஆதியோடந்தமாய் அறிந்த பின்னர்த்தான் அதற்குப் பாஷாணமென்ற பதத்தை வழங்கினரெனச் சொல்லிவிடுவது இங்கு அநேகருக்குப் பொருத்தமுடையதே. என்றாலும் சித்தவைராக்கியமுள்ள மற்றும் சிலருக்கோ அவ்வஸ்துவை அவர்களே சீர்தூக்கிப்பார்த்துத் தெளிந்துகொண்டாலொழியச் செப்புவதையெல்லாம் ஒப்புக்கொள்ளுதல் சிறிதும் கூடாதாகையால் அம்மதுபானத்தை நாமே சிறிது சோதித்துப்பார்க்கலாம்.

சோதிப்பதில் அது பீர், வயின், ஸ்பிரிட் என மூன்று வகைப்படும். இது ஒவ்வொன்றும் வெறியைத்தரக்கூடியதே. ஏனென்றால் இதில் மதுசாரம் என்கிற விஷம் அதனதன் இனத்திற்குத்தக் கவண்ணம் சேர்ந்திருக்கிறது. 'பார்லி' கஷாயமென்றும், 'கூஸ்பெரி' சத்தென்றும், 'மூந்திரிகை' இரசமென்றும் சொல்லப்படுகிறதும் மேனாட்டுக் குடிவகைகளுக்கு இந்நாட்டுப் பனம்பாலும், தென்னங்கள்ளும், சாராயமும் முறையே ஒக்குமெனச் சித்தபூர்வமாய்ச் சொல்லலாம். 'மதுசாரம்' என்கிற விஷத்தை அந்நாட்டு மதுபானங்களுக்குச் செயற்கையில் சேர்க்கவேண்டியிருக்க நம் நாட்டு மதுபானங்களுக்கோ அதிர்ஷ்டமாய் அவ்விஷம் இயற்கையிலேயே அமைந்து கிடப்பதென்பதைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றோம். இதற்கு முக்கிய திருஷ்டாந்தம் அவற்றைப் பருகியதும் வெறியைக் கொடுப்பதொன்றே. மேலும் "நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்னும் திருக்குறள் இங்கு கவனிக்கத்தக்கது. இன்னமும் வெறியைக் கொடுப்பதெல்லாம் விஷ சத்துடையவென்று ஏற்கனவே ஒப்பித்தாயிற்று. அப்படியானால் அம்மதுசாரம் என்பது என்ன ? இது எவையெல்லாம் சேர்ந்துண்டாகிறது என்பார்க்கு இது பிராணவாயுவும் ஜலவாயுவும் கரியும் சேர்ந்துண்டாய ஓர் திராவகம் என்பது. இதை ஆங்கிலத்தில் 'ஆல்கஹால்' (Alcohol) என்பார்கள். இம்மதுசாரம் திராட்சப்பழ முதலியவற்றைப் புளிக்கவைத்துப் பக்குவமாய்ச் சேர்க்கப்படுகிறது. இது பார்வைக்கு சுத்த ஜலத்தைப்போல் தெளிவாயிருக்கும். ஆனால் ஜலத்தைவிட இலகுவானது. பின்னும் இத



திராவகம் மூக்கில் சுளீரென்று ஏறத்தக்க மிகக் காரமான காற்றமுள்ளது. மீளவும், நெருப்பினால் எரியத்தக்கது. எரியும்போது புகையையும், எரிந்தவிடத்தில் புகைக்கறையையும் காணுவதாயிராது. இது சிலவிடங்களில் அடுப்புகளுக்கு ஏற்பட்டிருக்கும் விளக்குகளுக்கு உபயோகித்துவருவது பார்க்கலாம். இப்படியுபயோகிப்பது சுத்த திராவகமல்ல. சுத்த திராவகமோ சிறிது சாப்பிட்டாலேபோதும் ஒரு மனிதனைத்தொலைக்க. மீண்டும், உண்ட உயிரைப் பெரும்பாலும் தின்றுவிடுவதுதான் இம்மதுசாரத்தின் தொழில்.

இக்கொடிய விஷத்தை மதுபானங்களில் ஏன் சேர்க்கவேண்டுமெனின், இது சேராதேபோனால் மதுபானம் மதுபானமாயிருக்கமாட்டாது. மண்பானமாய் மாறிவிடும். அதாவது அதனைத் தெருவில் கொட்டிவிடவேண்டியதே. ஏன்? மஸ்து இல்லாத மதுபானம் வெகு விரைவில் கெட்டுப்போம். இக்காரணத்தால்தான் "மதுசாரம்" குறைந்த அளவில் சேர்ந்த 'பீர்' 'போட்வயின்' 'ஷெரி' 'கிளாரெட்' இவைகளை மிகுந்த அளவில் சேர்ந்த 'பிராந்தி' விஸ்கி முதலானவற்றைப்போல் நெடுநாளாய் இருப்பில் வைக்கமுடியாது. அப்படியே நம் நாட்டுக் கள்ளில் விஷம் குறைந்த அளவும் சாராயத்தில் மிகுந்த அளவுமிருக்கின்றன. இப்படியிருப்பது செயற்கையல்ல இயற்கையேயென்று முன்னரே சொல்லப்பட்டது. ஆகவே நம் நாட்டுக் குடிவகையாகும் இவ்விரண்டு சரக்குகளிலும் விஷமிருக்கிறது வாஸ்தவமென்பதற்கு இன்னமும் ஆதாரம் தேவையில்லை. இந்தவாறு, மயக்கத்தைக்கொடுக்கும் மதுபானமெல்லாம் நச்சுப்பொருளே யெனச் சாஸ்திரோக்தமாய் ஸ்தாபித்தபின்னர், நஞ்சுகளில் அநேகம் மருந்தாகப் பிரயோகிக்கப்பெற்று அதனால் பலவாகிய பிணிகளும் குணப்படவில்லையோ. அங்ஙனமாயின் நஞ்சாகிய இம்மதுபானமும் மற்ற மருந்துகளுக்குத் துணைமருந்தாகவோ அல்லது அதையே மருந்தின் அளவாகவோ பயன்படுத்தல் பொருந்தாதோவென்பார்க்கு அம்மதுபானமாகிய நஞ்சு மற்ற நஞ்சுகளைப்போலவே கிரம்பவும் கற்றுத்தேர்ந்த வைத்திய சாஸ்திரிகளிடத்திலும் அவ்வைத்திய சாஸ்திரிகள் வெகு ஆராய்ச்சியோடு உதவிய அநுமதியுடையாரிடத்திலும் இருந்து வரலாமேயொழிய மற்றையோர்க்குக்

கிஞ்சித்தும் கூடாதென்பதாம். உண்மையில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் ஓர் பிணிக்கு அதற்கிசைந்த 'தங்களிடத்திலுள்ள விஷஞ்சேராத ஔஷதம் முழுவதையும் உபயோகித்தும் குணப்படாமல் பிணி முற்றி அப்பிணியாளர் திடீரென மரணவேதனைப்பட்டு உயிர் பிரிவதற்கு சில நிமிஷங்களுக்கு முன்னால்மாத்திரம் மதுபானம்போன்ற விஷமருந்தைப் பிரயோகிக்கப் பார்ப்பாரேயொழிய அதற்குமுன் ஒருபோதும் அவைகளைக் கையாடமாட்டாரென்பது போகர் முதலிய சித்தர்களின் கொள்கை. இச்சித்தாந்தம் மேல்நாட்டு வைத்தியர்களுக்கும் உடன்பாடே. இவ்வண்ணம் 'நஞ்சு' என்று ரூபிக்கப்பட்ட மதுபானமானது மற்றப்பாஷாணங்களைப்போல் மருந்திற்காக உபயோகிக்கக்கூடியதுதானென்றபோதிலும் முன்சொன்னவிதமாய் வைத்திய சாஸ்திரிகள் உத்திரவில்லாமல் தனிமதுபானத்தையே உபயோகிப்பதால் அப்படி உபயோகிப்பவருக்கு அம்மதுபானமாகிய பாஷாணம் வேறு பாஷாணங்களைப் போலத் தேகத்தின் மற்ற பாகங்களில் அதன் நச்சுத்திறனைக் காட்டாமல், உட்கொண்டதும் உடனே மூளையையும் அதைச்சேர்ந்த பிரதான நரம்புகளையுமே தாக்கி மயக்கத்துக்குள்ளாக்குவதுடன் வளரும் பருவத்திருக்கும் நமதறிவைத் தளரும்பருவத்திற்குக் கொண்டுவருகிறது.

பாஷாணமானது அதனை உண்டவரை மாத்திரம் உபாதிக்கின்றது. மதுபானமோ அதனை உண்டவருடன் அவர் உற்றார் பெற்றார் மற்றும் சகலரையும் உபாதிக்கின்றது. பாஷாணம் ஓரோர்வேளை இம்மை இன்பத்தைமட்டும் போக்குவதாகலாம். மதுபானமோ மறுமை யின்பத்தையுங்கூடப் போக்கக்கூடியதாயிருக்கிறது. பாஷாணம் அருந்தினரைப் பிறிதோர் அவிழ்தத்தின் மூலமாய் மீட்டுக்கொள்ளலாகும். மதுபானம் அருந்தினரையோ அம்மதுபானமயக்கம் தானாய் நீங்கினாலொழிய மற்றோர்மருந்தால் மீட்கமுடியாமற்போய்விடுகிறது. பாஷாணம் உட்கொண்டவரை மானிடவகுப்பிற் சேர்த்துக்கொள்ளலாம். மதுபானம் உட்கொண்டவரையோ அந்தோ! விலங்குகள் வகுப்பிலேனும் சேர்க்கவழியில்லை. பாஷாணம் புசித்தாரை நித்திரைசெய்வார்க்கு ஒப்பிடலாம். மதுபானம் பருகினரையோ கேவலம் செத்தவர்க்கே ஒப்பிடக்கூடும். இதுபற்றியன்



றோ "துஞ்சினார் செத்தாரின் வேறல்லரெஞ்ஞான்றும், நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்னும் நிகரற்ற வாக்கிற்கு நிரனிறைப் பொருள்கோள் புணர்த்தி நஞ்சுண்டவரையும் தூங்குகின்றவரையும் ஒருபாற்படுத்திக் கள்ளுண்டாரையும் செத்தாரையும் மற்றோர்பாற்படுத்திப் பொருள் கூறுகின்றார் உரையாசிரியர் சிலர்.

இவ்வண்ணம் மதுபானத்தைப் பாஷாணத்தினுங் குரூரமுடையதெனக் காட்டுவதற்குச் "சித்தமும் அவசமாம் செயல் விகற்பமாம், நித்தமு மரணமாம் நெடிய துன்பமாம், அத்தமும் நாசமாம் அவிழ்தமின்மையால், பித்தினும் நஞ்சினும் பெரிது கள்ளரோ." என்னும் நீதிநூற்செய்யுளும் நிறைந்த சான்றாகும். இவ்வுத்தமசூத்திரத்தில் "பித்து" என்ற மொழியைக்கண்டதும் அன்றொருகால் தோபியால் என்பவரின் குருட்டுக்கண்ணைப் பிரகாசமுடையதாய்ச் செய்த அருமருந்தன்ன மீன்பித்து அநேகரது ஞாபகத்திற்கு வரலாம். அந்தப்பித்துக் குருடனைப் பார்வையுள்ளவனாக்கியதெப்படியோ அப்படியே மதுபானமாகிய இந்தப்பித்து பார்வையுள்ளவரைக் குருடராக்கிவைக்கிறது. நன்று! இவ்விரண்டும் அதனதன் வேலையில் பரபரப்புடன் திரிகிறது நிரம்பவும் மெச்சத்தக்கதே. ஆயினும், பித்தென்பதற்குப் பயித்தியமென்பதுவே இவ்விடத்தில் பொருள். இத்தகைய நியாயங்களைக்கொண்டு மதுபானம் பாஷாணத்தைப் பார்க்கிலும் பன்மடங்கு துஷ்டத்தனம் பொருந்தியதென்பது பசுமரத்தாணிபோல் நாட்டப்படுகின்றது.

இப்படியிருக்க இத்துணை யோக்கியதையின்மேல் ஆசனங்கொண்ட இம்மதுபானத்திற்குத் தேன் என்று ஒருபிரதிபதம் வழங்கப்பெறுவதால் இது சிலவேளை தேன்போலும் தித்திப்புடையதோவெனத் தேடியலைவர் சிலர். தேன்போலவோ, பால்போலவோ தித்திப்புடையதென்றால் மதுபானிகள் மதுவை வாய்க்குள் போட்டபோதே முந்நூறுதடவை மூஞ்சியைச் சுளிப்பதும் தொண்ணூறுதடவை துப்பித்தொலைப்பதும் நானூறுதடவை நாக்கை அழுத்துவதும் என்னத்திற்கோ? வாய்க்குள் புகுந்ததும் மதுபானியை இம்மட்டுத்திக்குமுக்காடச்செய்யும் இம்மதுபானம் வயிற்றுக்குள் நுழைந்துவிட்

டால் எம்மட்டு ஆரவாரமெல்லாம் இயற்றுமோ இது ஈசனுக்குத் தான் வெளிச்சம். ஆகவே வெறியைத்தரும் மதுவைத் தேனென மொழிதல் உயிரைக்கவரும் யமனைத் தருமனென்று மொழிதலை நிகர்க்கும்.

நாம் உண்கின்ற ஒவ்வோர் ஆகாரமும் நமது உள்ளுறுப்புக்களினால் மாறுதலடைந்து நம்மை மென்மேலும் போஷித்துக்கொண்டு வருவதாயிருக்க மதுசாரத்திற்கு மாறுதல் பெறும் குணமில்லாததால் அது உடலை வளர்க்கின்றதென்பதற்கும் போதிய ஞாயமில்லை. ஆயினும் அஃது அறவே நமது இரத்தத்துடன் கலந்துவிடுகிறதென்மைத்தான். அப்படிக்கலப்பதால் அது நமக்கேதுமோர் நன்மையையும் செய்கிறதில்லையென்பதுமட்டுமோ? இல்லை. இல்லை. இம்மதுபானம் இரத்தத்தின் சத்தைக்குறைக்கிறது. தீவிர இரத்த ஓட்டத்தைத் தாமதப்படுத்துகிறது. ஜீரணக்கருவிகளைத் தளரவைக்கிறது. இறுதியில் இரத்தத்தையே ஒன்றுக்குமுதவாமல் தீதிப்போகப் பண்ணுகிறது. இதனாலன்றோ மதுபானப் பழக்கமில்லாருக்கு யாதேனும் பரிகாயங்கள், இரணங்கள் நேர்ந்தாழி வெகு விரைவில் குணமாகிப்போகிறதும் மதுபானப் பழக்கமுள்ளாருக்கு அப்புண்கள் பெரும்பாலும் ஆறாமலிருக்கிறதுடன் ஒருவேளை அன்னார் மரணத்திற்குங்கூட அந்தப்புண்களே ஏதுவாயிருப்பதும் நாம் பலதரமும் பார்த்துவருகின்றோம்.

மதுபானத்தால் தேகத்திற்கு ஒருவித உஷ்ணம் பிறப்பித்துக் கொள்ளலாமென நம்பி வருகின்றார் சிலர். இதற்கு நார் பசைமாறியிருக்கும்பொழுது வாடைகாலத்தில் கூதிர்காயும் வழக்கமுண்டே. அதற்கான நெருப்பினால் நாது உடலிற்கொள்ளும் வெப்பத்தைக் காட்டிலும் அதிக வெப்பத்தை இம்மதுபானத்தால் பெற்றுக்கொள்ளமுடியாதெனத் திட்டமாய்ச் சொல்லலாம். மதுபானம் இத்தனை சிற்றளவான சூட்டைக்கொடுத்த பின்னால் என்ன செய்கிறது தெரியுமா? "உள்ளதும்போயிற்று நொள்ளைக்கண்ணே" என்றபடி அதனை உபயோகிப்பதற்கு முன்னால் நமது தேகத்தில் இயல்பாயிருந்த உஷ்ணத்தையுங்கூட அளவுக்குமிஞ்சியே தணித்து விடுகின்றதென்பதற்குச் சந்தேகமில்லை.



பிரான்சியநாட்டின் சக்கரவர்த்தியான முதல் நெப்போலியன் சென்ற 1812-ஸு ருஷியதேசத்தை நோக்கிப் படையெடுத்துப் போனதை வாசித்திருப்பீர்கள். பட்டாளம் பெருந்தொகைகொண்டதும் மிக வீராவேசம் உடையதுமானது. குளிர்காலமாயிருந்ததால் "மோஸ்கோ" பட்டணம் வரையும் போன இராணுவம் அதற்கப்புறம் செல்லக்கூடவில்லை. சீதளமிகுதியால் சேனைவீரர் தேகம் நடுங்கினார்கள். பலர் நடக்கமுடியாமல் தள்ளாடினார்கள். அநேகாயிரம் பேர் மாண்டும்போனார்கள். உலகத்தின் பலத்த சைனியங்களுள் ஒன்றாக மதிக்கப்பெற்ற இச்சேனை ஏறக்குறைய நிர்மூலமாகவே போயிற்று. இப்பெண்ணம்பெரிய நஷ்டத்தால் பிரான்சியமண்டலம் கொண்டகவலை சிறிதல்லவே? இந்நஷ்டம் எவ்வாற்றால் விளைந்ததென்பீர்கள்? எதிரிகளது சனாதி பலத்தினாலேயோ? அவர்கள் பொழிந்த குண்டுகளினாலேயோ? அல்லது சுழற்றிய வாளினாலேயோ வேலினாலேயோ? ருஷியர் பிரான்சியரைக்கண்டு ஓட்டப்பிடித்தார்களேயொழிய முன்விழுந்து எதிர்த்தார்களில்லை. அப்படியிருக்க நஷ்டம் வந்த காரணம் என்னை? இதற்கு தற்செயலாய் அந்நாட்டிலிருந்த சகிக்கமுடியாத குளிரே காரணம். ருஷியரைப் பிடிக்காத குளிர் பிரான்சியரை எப்படிப் பிடித்ததோ எனின், இப்படைவீரரிற் பெரும்பாலார் மனம்போனபடி குடிக்கும் மதுபானிகளாயிருந்ததே அக்குளிரைப் பொறுக்கக்கூடாமல் அந்தச்சிறந்தசேனை சின்னபின்னமாகிப் போகக்காரணமெனச் சரித்திராசிரியர் சரியாய் எழுதிவைத்தார்கள்.

(இன்னும் வரும்.)

M. P. மாஸ்கரன்ஹாஸ்.

உ

# கலிங்கத்துப்பரணியாராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

## எ. இந்திரசாலம்.

[இது "காளிக்குப் பேய் சொல்லல்" என்று காணப்படும்.]

இவ்வண்ணத் திருதிறமுந் தொழுதிருப்ப
வெலும்பின் மிசைச் சுடர்மென் கச்சிற்
செவ்வண்ணக் குருதிதோய் சிறுபூதத்
தூபக்காற் றொட்டி விட்டே.

என்பது வட்டுப் பிரதியில்,

இவ்வண்ணத் திருதிறமுந் தொழுது நிற்ப
எறும்பினகைத் தொடர்சுடரா மினிய கச்சிற்
செவ்வண்ணக் குருதிதோய் சிறுபூ தக்காற்
சில்லரிய பலமணவு கட்டி விட்டே.

எனக் காணப்படுகின்றது. முன்னைப்பாடத்துப் பின்னிரண்டடிகளும் பொருட்பொருத்தம் பெறாமையும், பின்னையபாடத்தில் அவை பெறுதலுங்காண்க. எறும்பி - யானை. யானையின் ஒழுங்குபெற்ற சுடராகிய கச்சினையுடைய பூதக்காலில் மணவுகட்டிவிட்டென்க. சில்லரிய பலமணவு - சிலவாகிய பரல்கள் வாய்ந்த பல அக்குமணிகள்.

சு. அப்பேயி னொருமுதுபேய் வந்து நின்றிங்
கடியேனை விண்ணப்பஞ் செய்க வென்றது.

என்பது—

அப்பேயி னொருமுதுபேய் வந்து நின்ற
தடியனேன் விண்ணப்பஞ் செய்யக் கேண்மோ."

எனக்காணப் படுகின்றது.

எ. "பிழைக்கவந்தனம் பொறுத்தெமக்கருள்செய்" என்பது "பிழைக்கவந்தனைபொறுத் தெமக்கருள்செய்" என்றுளது; இதுவே பொருட்பொருத்தமாமாறு கண்டுகொள்க.



கஉ. "வெம்மைபார்" என்பது "நன்மைபார்" எனவும் "கடக்க வென்றபயன் வென்றி வென்றிகொள்" என்பது "கடக்க வின்ற பயன் வென்று வென்றிகொள்" எனவுங் காணப்படுகின்றன. இவற்றிற் பிற்கூறிய பாடங்களே பொருந்துவன.

ககூ. "எயிற்றை யதுக்கி நிணைத்திடு பேய்க - ளிரைத்து நிரைத்தனவே" என்பது—"எயிற்றை யதுக்கி நிரைத்திடு பேய்கள் இரைத்தன மேல்விழவே" என்றுள்ளது.

உ௦. "முதுகுந் திறம்ப லிலாவிறல் யோகினிமாதர் சிரித்து முலாவுவரே" என்பது—முதுகுந், திறம்பலிலாவிறயோகினிமாதர்" எனப் பொருத்தமாக அமைந்துள்ளது.

உஉ. கொற்றவர்கோன் வாளபய னறிய வாழுங்
குவலயத்தோர் கலையனைத்துங் கூற வாங்கே
கற்றுவந்தார் கற்றவவன் சானு மாபோற்
கடைபோகக் கண்டருளென் கல்வி யாறே.

என்பது.

கொற்றவர்கொற் றவனபய னறியு மென்று
குவலயத்தோர் கலையனைத்துங் கூற வாங்கே
கற்றனகற் றனகண்டே யருளு மாபோற்
கடைபோகக் கண்டருளென் கல்வி யீங்கே.

என நயம்படக் காணப்படுகிறது.

உங. "மாயப்பாலி" என்பது "வெரீஇமாமாலீ" எனவும், "வணங்குமிப்போது" என்பது "வணங்கியிப்போ"தெனவும் காணப்படுகின்றன.

## அ. இராசபாரம்பரியம்.

[இது "தலைவன் கீர்த்திசொலல்" எனக் காணப்படும்.]

ச. பாரதத்தினுள வாகிய பவித்ர கதையெம்
பரம நற்சரிதை மெய்ப்பழைய நான்மறைகளே
யோதற்கிதனை நான்மொழிய நீயு மெழுதி
நெடிய குன்றின்மிசை யேயிசைவ தான கதையே.

என்பது—

பாரதத்தினவ வன்றிது பவித்திர கதை
பழைய வச்சிர தான்பரவு நான்மறைகளே
நோதற் கிதனை நான்மொழிய நீயெழுதுமுன்
நெடிய குன்றின்மிசை யேயிசைவ தான கதைகேள்.

எனவும், "அதன் முதற்கண் வரு" என்னும் ஐந்தாவது தாழிசை—

" அதன்முதற்கண்வரு மாதிமுதல் யாயவனெனு
மைய னும்பாணவ மாகவடை வேதமுமதன்
பதம்வகுக்கவரு பாதமதுவும் பதமுடன்
பாதமானசில வந்தபல வந்தவகையும்.

எனவும் காணப்படுகின்றன. சிறந்தவற்றை ஆராய்ந்துகொள்க.

சு. " வாய்மை வேதியர்கடாம்விதி யெனும்வகையுமே " என்பது " வாய்மை வேதியர்கள் சாமவிதி போதும் வகையும் " எனக் காணப்படுகின்றது.

எ. " அமலவேதமிது காணுமிதிலாரணநிலத், தமலனேயபய ஞகி வருகென்றருளியே "—என்பது, " அமலவேதமிது காணுமிதிலா ரணபதத் - தமலனேயபயனுக வறிகென்றருளியே " என்றுள்ளது.

கூ-ம் பாட்டு—

ஆதிமா லமல நாபிகம லத்தி னிடையே
யயனுதித்தவன் மரீசியை யளித்த பரிசுங்
காதல்கூர்தரு மரீசிமக ஞகவருமக
காசிபன்கதி ரருக்கனை யளித்த பரிசும்.

என்று வேற்றுமை கொண்டுள்ளது.

கக. "இகலுவோ னிகலுரஞ்செய்து புரந்தரனெனுஞ்-சக்கு வாயிரமுடைக்களிறு வாகனமென" என்பது "இகலுரஞ்செயவருஞ் சய புரந்தரனெனுஞ்—சக்குவாயிர முடைக்களிறும் வாகனமென " எனக் காணப்படுகிறது. போராற்றனக்கு வலியுண்டாகுஞ் சயத் தையுடைய இந்திரனையும் வாகனமாகக் கொண்டவன் " எனப் பின் னையபாடம் பொருட் பொருத்தமுறல் காண்க.

கரு. " காலனுக்கிதுவழக்கெனவுரைத்தவனும் " என்பது, " காலனுக்கிலை வழக்கென வுரைத்தவனும் " எனவும், " மேலனைத் துலகுமிவ்வகில லோகமுமெலாம் வென்றுகொண்டவனும் " என் பது, " மேலனைத்துலகும் விவதிலை யாக நமன்மேல் வென்றிகொண் டவனும் " எனவும் காணப்படுகின்றன.

கஎ-ம் பாட்டு அடியில்வருமாறு காணப்படுகிறது:—

நங்கு மூன்றெயி லெறிந்தவனு மிந்திரன் மணிச்
சுடர் விமானமது வான்மிசை யுயர்த்த வவனுந்
தாங்கள் பாரத முடிப்பளவு மின்று விசயன்
றருமனுக்குண வளித்தருள் பொழிந்த வவனும்."



க௯-ம் பாட்டில்- "தளவழிக்குநகைமேல்விழி பிலத்தின் வழி யே" என்பது "தளவழிக்குநகை யாளிழி பிலத்தின் வழியே" எனப் பொருட்பொருத்தமுறக் காணப்படுகிறது.

உ0. "தொடரவந்திலா முகரி என்பது—தொடரவந்திடா முகரி" என்றுள்ளது பொருத்தமாம்.

உச. "உதயபானுவொத் துக்கை வென்றகோன்" என்பது, உதயபாநுவொத் துதகைவென்ற கோன்" என்றுள்ளது. உதகை- ஊரூர்.

ஙச-ம் பாட்டு அடியில் வருமாறு உள்ளது—

உலகையெலாங் கவிக்கின்ற வொருகவிகைச்
சயதரன்றன் மரபு கீர்த்தி
யலகையெலாங் கற்றுறுமி னகிலபுவ
னங்காப்பா னவனே யென்ன.

(தொடரும்.)

பத்திராசிரியர்.

# புத்தகக்குறிப்பு.

—:(X):—

**மதுரைக்கலம்பகம்:**—இந்நூல், இரங்கோன் நகரத்திற் பெரிய பிரபுவாகவும் 'ஹானரரி மாஜிஸ்ட்ரேட்'டாகவும் விளங்கும் ஸ்ரீமாந்- மதுரைப் பிள்ளையவர்கள் மீது இயற்றப்பெற்ற பிரபந்தமாகும். இப் பாட்டுடைத்தலைவர், அறிவாற்றல் பெருமை முதலிய சீரிய குணங் கள் வாய்ந்த சீமானாக விளங்குதலோடு, கற்றார்க்கும் மற்றார்க்குங் கைம்மாறு கருதாதுதவும் கடப்பாட்டாலும் புகழ் பெற்றவர். இப் பிரபுவின் பெருந்தகைமைகளைத் தமிழ்க்கவிகள் பலர் அறிந்து வியந் து, பலவகைப் பிரபந்தங்களையும் பாடல்களையும் அன்னோர்மீது பொழிந்து பயன் பெற்றுள்ளார். இங்ஙனம் வேற்றுப்புலவர்க்கே பிள்ளையவர்களது அருமை பெருமைகள் வியப்பூட்டுமாயின், சிறு பிராயமுதலே அச்சீமானது ஆதரவுமன்புங்கொண்டு கல்விமுதலிய வை கணிப்பெற்ற பண்டிதரொருவர்க்குத் தம்பிரபுவினிடம் எத் துணை யீடுபாடிருத்தல் வேண்டும்! இங்ஙனமாக ஆதரிக்கப்பெற்ற புலவர்கூறும் புகழ்ச்சிகளே உள்ளுருக்கமுடையனவாகவும், தந் தலை வரினியற்கைகளைத் திறமையோடு கூறுவனவாகவும் விளங்குமெனலாம். கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாடர் முதலியோர் தம்மையாத

ரித்த அருமை வன்னல்களைப் பற்றிப்பாடிய பாக்களை நோக்குவார்க்கு இதனுண்மை புலப்படும். இவ்வாறு, உள்ளன்புமிக்கு உதித்ததே இக்கலம்பகமும் என்பது இதன் வாக்காலும் போக்காலும் நன்குணரப்படுகின்றது. இந்நூலியற்றியவர், சாஹிப் பஹதூர்: எம். கே. எம். அப்துல்காதிர ராவுத்தரவர்கள். இவர்க்கு இரங்கோனிலுள்ள தம் ஆங்கில கலாசாலையில் ஆங்கிலப்பயிற்சியும், அக்கலாசாலைத் தமிழ்ப் பண்டிதராற் றமிழ்ப்புலமையும் பெருகுமாறு செய்வித்தவர் ஸ்ரீமாந்-மதுரைப்பிள்ளையவர்களே; இவ்வாறு ஆங்கிலத்திறமை பெற்றதன் பயனாக, ராவுத்தரவர்கள், மதுரைஜில்லா இளையான்குடி ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட்ஷிப், ஷையூர் யூனியன் செயர்மென்ஷிப், டிஸ்டிரிக்ட் தாலூக் போர்டுகளின் மெம்பர்ஸ்தானம், சென்னை கவர்ன்மெண்ட் காஸ்பாண்டெண்டர் முதலிய உத்யோக வரிசைகளையும், தமிழ்ப் புலமை படைத்ததன் பயனாக—மதுரைத்தமிழ்ச்சங்க வித்வான்களிலொருவராகவும், இளையான்குடி தமிழ்ச்சங்கஸ்தாபகராகவும், தமிழ்ச்சங்கமான்மியம், இந்தியாவிறைமாட்சி, நெல், ஈகை, கற்பு முதலிய நூல்கட்கும் வியாசங்கட்கும் ஆசிரியராகவும் விளங்கிவருதல் பலரும் அறிந்ததே. இப்பெருமைக்கெல்லாம் காரணமானவர்கள் ஸ்ரீமாந்-பிள்ளையவர்களேயாதலால், ராவுத்தரவர்களது புகழ்கள் அச்சீமானது புகழ்களேயாகும். இத்தகைய உதாரத்தைத் தம்மிடம் வைத்தபிமானித்த பிரபு விஷயத்தில், தம் புலமைத் திறமையெல்லாம் உபயோகித்து ராவுத்தரவர்கள் இக்கலம்பகத்தை இப்போது பாடியிருப்பது, இவரது செய்ந்நன்றியறிதல் என்னும் உத்தமகுணத்தை உலகிற்கு உணர்த்துகின்றது. இப்பிரபந்தம் பலதிறப்பட்ட முப்பது செய்யுள்களிற் கலம்பகவுறுப்பெல்லாம் அமையவும், சொற்செறிவும் பொருட்பொலிவும் பொருந்தவும் பாட்டுடைத்தலைவரின் அருமைபெருமைகள் நன்குவிளங்க அமைக்கப்பெற்றுள்ளது. இதன் முதலுறுப்பாகிய ஒருபோகு, செவ்விதினமைந்து இந்நூற்குத் தலையணிபோற் றிகழ்கின்றது. சுருங்கவுரைக்குமிடத்து, இக்கலம்பகத்தை, பிள்ளையவர்களது "புகழ்க்களஞ்சியம்" எனனத் தடையில்லை. இந்நூலைப்பற்றித் தமிழறிஞர் பலர் சிறப்புக்கவிகள் பாடியிருத்தலோடு, இரங்கோன் அக்கௌண்டண்டு ஜெனரல் ஆபீஸ் அஸிஸ்டெண்டு சூப்பிரின்டெண்டெண்டு ஸ்ரீமத்-T. பாலசுப்பிரமணிய முதலியார் (B. A.) அவர்களால் ஆங்கிலமுகவுரையும், நூலாசிரியரால் தமிழ்முகவுரையும் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு, செந்தமிழ்ச் செல்வராகிய பிள்ளையவர்களது அருங்குணங்களையும் பெருந்திறமைகளையுஞ் சிறப்பித்து "நன்றியறிதல்" என்னும் நற்குணத்தை விளக்கிய ராவுத்தரவர்கள், நம்மவரது புகழ்ச்சிக்குரியரென்பது திண்ணம்.

பத்திராசிரியர்.

---

௫.

… OF BOOKS … MADRAS.

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-அ.] சாதாரண-ஹூ புரட்டாசிமீ. [பகுதி-கக.

## பிரமதேவரும் திருவள்ளுவரும்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரை நான்முகனமிசமென்று கூறும் வழக்குப் பண்டுதொட்டே வழங்கிவருகின்றது. திருவள்ளுவமாலையிலே,

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த - நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி"

என உக்கிரப் பெருவழுதியாரும் (௪)

"ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப் - பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
யந்தா மரைமே லயன்"

எனக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனாரும் திருவள்ளுவனாரைப் பிரமதேவ ரவதாரமாகக் கூறுதல் காண்க. "வேதப் பொருளை விரகால் விரித்துலகோர் - ஓதத் தமிழா லுரைசெய்" தமை பற்றித் திருவள்ளுவர் முன்னோரால் இவ்வாறுபசரித்துக்கூறப்பட்டார் என்பது ஒரு கொள்கையாயினும், இதனினுஞ் சிறந்த காரணமொன்று இப்போது அறியப்படுகின்றது. அஃதாவது பிரம

தேவர் திரிவர்க்கம் அல்லது தண்டநீதி என்று வழங்கும் மஹாசாஸ்திரத்திற்கு ஆசிரியரென்னும் செய்தியேயாம். மஹாபாரதம் சாந்திபர்வம், 58-ம் அத்தியாயத்தில், உலகம் ஒரு காலத்தே தர்மங்குன்றி அதர்மந் தலையெடுத்தாடியபோது தேவர்கள் பிரமதேவரிடம் சென்று முறையிட, அப்பகவான் தேவர்களெல்லாருக்கும் ஆறுதல் சொல்லிவிட்டு, லக்ஷம் அத்யாயமுள்ள சாஸ்திரத்தைத் தம்புத்தியால் இயற்றினரென்றும், அதனில் திரிவர்க்கம் என்று பிரஸித்திபெற்ற அறம்பொருளின்பங்கள் அவரால் விஸ்தாரமாகவுரைக்கப் பட்டிருக்கின்றன என்றும் மற்றும் அம்மஹா சாஸ்திரத்தில் அடங்கியுள்ள விஷயங்களின்னின்னவையென்றும் விவரிவாகச் சொல்லப்படுகிறது. பின்பு, அத்திரிவர்க்கமென்னுந் தண்டநீதி சிவபிரானால் கிரகிக்கப்பட்டு, பதினாயிரம் அத்யாயமுள்ள "வைசாலாக்ஷம்" என்னும் சாஸ்திரமாகவும், அது தேவேந்திரனால் ஐயாயிரம் அத்யாயமுள்ள "பாஹுதந்திகம்" என்னும் நூலாகவும், அது பிரகஸ்பதியால் "பார்ஹஸ்பத்தியம்" என மூவாயிர அத்யாயங்கொண்ட கிரந்தமாகவும், சுக்கிரபகவானால் ஆயிரம் அத்தியாயமுள்ள நூலாகவும் சுருக்கிச்செய்யப்பட்டன என்னும் அவ்வத்யாயத்தில் விரித்துக் கூறப்படுகின்றன.

இதனை நோக்கின், பிரமதேவரியற்றிய மஹாசாஸ்திரம் முப்பாலாக ஆதியில் பிரவர்த்தித்ததென்பதும், அதனினின்றே ஏனைய நீதி சாஸ்திரங்களெல்லாம் கிளைத்தன என்பதும் நன்குவிளங்கும். இவ்வாறே, வள்ளுவனார், தம்அரிய பெரிய நூலை முப்பாலாக (திரிவர்க்கமாக) வகுத்துப் பிரமதேவர்கூறிய திரிவர்க்கப் பொருள்களைச் சுருங்க அருளியமைபற்றி முன்னோர், "நான்முகன் அவதாரம் திருவள்ளுவர்" எனக் கூறினர் என்றல் பெரிதும் பொருத்தமுடையதாதல் காண்க.

பத்திராசிரியர்.

---

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

## ரு-வது சதுர்த்தாரிகாலம்பகம் உ-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

அதேசமயத்தினில் அம்பிகாதேவியானவள் பிந்துமதியினது சகோதரர்களின் கனவிலுந்தோன்றி அவர்களைநோக்கி, இந்த சக்திதேவனே உங்கள் சகோதரிக்குக் கணவனாகப்போகின்றான்; நீங்கள் எதற்காகஇவனை வீணில் கொல்ல நினைக்கின்றீர்கள். இவன் உங்கள் பிதாவைக் கொன்றவனல்லன் என்று கூறியிருந்தமையால் அவர்களும் வந்து சக்திதேவனை யன்புடன் அழைத்துச்சென்று தங்கள் சகோதரியை அவனுக்கே சந்தோஷத்துடன் மணம்புரிவித்தனர். பின்பு அந்தசக்திதேவனும் தனது புண்ணியத்தினாலேற்பட்ட இன்பமே வேற்றுருவத்துடன் வந்திருக்கின்றதுபோலத் தோற்றுகின்ற அத் தெய்வமகளிருடன், அங்கு சுகமாய் வசித்தனன்.

இப்படியிருக்கின்ற சமயத்தில் ஒருநாள் அரமனைமேன்மாடியிலிருக்கின்ற சக்திதேவன் கோமாம்சபாரத்தைச் சுமந்துகொண்டு வழியில்வருகின்ற சண்டாளனொருவனைக்கண்டு தன் மனைவியைக்குறித்து வடிவழகுடைய பாவாய்! எவை பசுக்களென்றிருக்கின்றனவோ அவைகள் மூவுலகத்தாராலும் வணங்கப்பெற்றவைகள்! அவற்றின் மாம்சத்தைத் தின்கின்ற இவன் எத்தகையபாவச்செய்கையையுடையவன் பார் என்றுசொல்ல, அதனைக்கேட்ட பிந்துமதியென்பவள் அப்பொழுது தன் கணவனை நோக்கி, நாதா இப்பாவம் இத்தன்மைத்தென்று கருதவும் முடியாது. ஆதலால் இஃதென்னவென்று சொல்லுவது. யான் பசுக்களின் ப்ரபாவத்தினால் சுவல்ப அபராதஞ் செய்த நிமித்தத்தால் இக்குலத்திற் பிறந்தேன். ஆதலாலித்தகைய பாவத்திற்கு ப்ராயச்சித்தமே கிடையாது என்றனள்.

அதைக்கேட்ட சக்திதேவன் தன் மனைவியைப் பார்த்து ஹே ப்ரியே! இஃதென்ன ஆச்சரியம்! நீ யார்? இந்த ஜன்மம் உனக்கெப்படி வந்தது? அதனைச் சொல்லவேண்டுமென்று அதிக நிர்ப்பந்தஞ் செய்து கேட்க, அவள் சக்திதேவனைக்குறித்து ஹே நாதா! யான் ரகசியமான விஷயமொன்று சொல்லுகின்றேன். அதை நான் சொன்னபடி நீர் செய்வீராகில் என் விருத்தாந்தத்தை உம்மிடம் கூறுகின்றேன் என்றனள். அதற்கந்த சக்திதேவன் நானப்படியே செய்கிறேனென்று சபதத்துடன் சொல்ல, அப்பொழுதவள் ப்ராணநாதா உமக்கிந்தத்வீபத்தில் இன்று மொருமனைவி கிடைக்கப்போகின்றாள். அவள் காலதாமதமின்றிக் கர்ப்பவதியாவாள். கர்ப்பமாயிருக்கின்ற எட்டாவது மாதத்தில் நீர் அவள் வயிற்றைக்கீறி அந்தக்கர்ப்பத்தை இழுக்கவேண்டும். இதிற்சற்று மிரக்கம்வைக்கக்கூடாதென்றனள்.

அதைக்கேட்டசக்திதேவன் இஃதென்ன ஆச்சரியமென்றுநினைத்து ஒன்றும்பேசாது இரக்கக்குறிப்புடனிருக்க மறுபடியும் அந்த பிந்துமதி என்பவள் நான் சொல்லியபடியே நீர் செய்யவேண்டும். இதற்கொருகாரணமிருக்கின்றது. யான் இன்னாரென்பதையுமெனக்கிந்த ஜன்ம மெப்படிவந்ததென்பதையுங் கேளும் சொல்லுகிறேன். யான் முற்பிறப்பில் வித்யாதர ஸ்திரீயாகவிருந்தேன். இப்பொழுது ஒருசாபத்தினால் இம்மானிடவுலகத்தில் வந்து பிறக்கும்படிசம்பவித்தது. யான் வித்தியாதரத்தன்மையுடனிருக்குங்கால், வீணாகானஞ் செய்யுந்தருணத்தில், வீணையிற்பூட்டியிருந்த பசுவின் நரம்பாகிய தந்திகளைப் பற்களாற்கடித்து வீணைகளில் இசைத்தேன். அதனால் தான் இந்தச் செம்படவர்வீட்டிற் பிறந்தேன். பசுக்களின் உலர்ந்த நரம்பை வாயில்வைத்துக் கடித்ததினாலித்தகைய தாழ்ந்தகதி எனக்குக் கிடைத்ததென்றால் அப்பசுக்களின் மாம்சத்தையே புஜித்தால் சொல்லவேண்டுவ தென்னவிருக்கின்றது? என்றிவ்விதம் அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போது அந்த பிந்துமதியின் சகோதரர்களில் ஒருவன் பரபரப்புடனோடிவந்து சக்திதேவனைப்பார்த்து நீர் சீக்கிரமெழுந்திரும். மிகப்பெரிய சரீரத்தினையுடையதொரு பன்றியானது எங்கிருந்தோ வெளியேறி அநேக ஜனங்களைக்கொன்றுவிட்டுக் கொழுப்புடன் இவ்விடத்திற்கே நேராக வருகின்றதென்றனன்.



அதனைக்கேட்டவுடன் சக்திதேவன் தானிருந்த மேன்மாடியிலிருந்திறங்கி சக்தியென்ற ஆயுதத்தைத் தன்கையிலெடுத்துக்கொண்டு குதிரைமீதேறிப் பன்றியை நோக்கிச் சென்றனன். அந்த வீரனை சக்திதேவனென்பவன் தன்மீது எதிர்த்து வருகின்றதைக் கண்ட அப்பன்றியானது திரும்பியோடத் தலைப்பட்டது. அவனும் அதைப் பின்றொடர்ந்து சென்று தனதாயுதத்தினாலெறிந்து அந்தப் பன்றியின் சரீரத்தில் புண்படுத்த அது ஒருமலையினதுகுகையிற் பிரவேசித்தது. சக்திதேவனும் அந்தப்பன்றியைத்தேடிக்கொண்டு அந்தப்பிலத்துவாரத்தினுட் பிரவேசிக்க அங்கொரு மாளிகையுடன் கூடியிருக்கின்ற பெரிய உத்தியானவனத்தைக்கண்டனன்.

அவ்விடத்திற் சக்திதேவன் மிகவுமத்புதமான வடிவழகுடன் கூடிய ஒரு கன்னிகை அன்புடனங்குள்ள வனதேவதையே பரபரப்புடன் தன்னைநோக்கி வருகின்றாளோவென்று தோன்றும்படி தன் சமீபத்தில் வர அவளைப்பார்த்து ஹே கல்யாணி! நீ யார்? உனக்கென்ன இவ்வளவு அவசரம் என்றனன். அதற்கவள் அந்தச் சக்திதேவனைப்பார்த்து, நல்லழகுடைய நண்பா! சண்டவிக்கிரமனென்ற ஓர் அரசன் தென்றிசைக்கதிபதியாக விருக்கின்றான். யானே அவ்வரசன் புதல்வியான கன்னிகை. பிந்துரேகையென்ற பெயரையுடையவள்.

இவ்விடத்தில் எரிகின்ற கண்களையுடைய பாவியான அசுரன் ஒருவன் யாதுகாரணத்தினாலோ என் பிதாவினது கிரகத்தினின்றும் என்னை அபகரித்துக்கபடத்தாலிப்பொழுதிங்கே கொணர்ந்திருக்கின்றான். அவ்வசுரன் பசியினாற்பீடிக்கப்பட்டு மாம்சத்தையுண்ணக் கருதிப் பன்றியுருவத்தை யெடுத்துக்கொண்டு வெளியேறிச்சென்றவன் எவனோ ஒரு வீரனாற் சக்தியென்ற ஆயுதத்தினால் இப்பொழுதுதான் அடிக்கப்பட்டான். அவன் அடிபட்டமாத்திரத்திலிங்கு ஓடிவந்து வீழ்ந்து மரணமடைந்தான். ஆதலால் யான் கற்பழியாதவளாய் வெளியேறப்பெற்றேனென்று கருதி வெளியேறியோடிவருகின்றேனென்றனள்.

அதைக்கேட்டு சக்திதேவன் ஹே ராஜகுமாரி! நீயேன் பயத்துடன் அவசரப்படுகின்றாய். யானே அந்தப்பன்றியைச் சக்தியென்ற

ஆயுதத்தினுலெறிந்து கொல்லுறேனென்றனள். அதற்கவன் அப்படியானால் நீர் யார்? எனக்குச்சொல்லவேண்டுமென்று கேட்க, அவன் நான் பிராமணனுஞ் சக்திதேவனென்ற பெயரையுடையவனென்று விடையுரைத்தனன்.

அதைக்கேட்டதுமவள் ஆனால் நீரே எனது பர்த்தாவாகின்றீர் என்றுசொல்ல உடனே அந்தவீரனான சக்திதேவனும் அதற்கிணங்கி அவளைத் தன்னுடனழைத்துக்கொண்டு அந்த பிலத்துவாரத்தினின்றும் வெளியேறிக் கிரகம்வந்துசேர்ந்து, தன்பாரியை பிந்துமதியிடம் நடந்த விருத்தாந்தமனைத்தையும் சொல்லி அவள் முன்பு தன்னிடம் சொல்லியதில் நம்பிக்கையுடையவனாக அந்த பிந்துரேகை யென்பவளையும் விவாகம் செய்துகொண்டனன்.

பின்பு அவனவ்விருமனைவிகளோடும் கூடிச் சுகித்திருக்குங்கால் அவ்விருவர்களில் பிந்துரேகையென்ற பாரியை கர்ப்பவதியாயினள். ஆகவே அவளுடைய எட்டாவது கர்ப்ப மாசத்தில் முதல் மனைவியான அந்த பிந்துமதி தானாகவே சக்திதேவனிடஞ்சென்று ஹே வீர! நீர் எனக்கு வாக்களித்ததை நினைத்துப்பார்க்கவேண்டும். உம்முடைய இரண்டாவது பாரியை பிந்துரேகையென்பவள் கர்ப்பவதியாயிருக்கின்றனள். எட்டாவது மாசமிது: ஆதலால் நீரிப்பொழுது சென்று அவளுடைய வயிற்றைக்கீறி அந்த கர்ப்பத்தைக்கொண்டு வரவேண்டும்; ஏனெனில் நீர் முற்கூறிய சத்தியவசனத்தைத் தவிர்க்கக்கூடாதென்றனள்.

அவள் சொல்லியதைக்கேட்ட சக்திதேவன் தன் மனைவியிடத்திலுள்ள சிநேகத்தால் கலக்கமுற்றவனாகவும், தான் செய்திருந்த பிரதிக்ஞையினாற் பராதீனனாகவும் க்ஷணநேரம் பதிற்சொல்லாமலிருந்தான். பின்பு வருத்தத்துடன் கூடியவனாகவே அவ்விடத்தினின்றுமவன் வெளியேறி பிந்துரேகையின் சமீபம் வந்துசேர அவளும் வாட்டமுற்றவனாகத் தன்சமீபத்தில் வந்திருக்கின்ற சக்திதேவனைக் கண்டு, ஹே! *ஆரியபுத்திர, ஏனிப்பொழுது சோர்ந்து நிற்கின்றீர்.

* ஆரியபுத்திர என்று ஸ்திரீகள் தம் கணவனை அழைப்பது வடநூல் வழக்கு. ஆர்யபுத்திரன் என்பதற்கு புருஷன் மகனென்று பொருள்.



னது கர்ப்பத்தைக் களையும்படி பிந்துமதியினால் நியமிக்கப்பட்டிருக்கிறீரென்பதை யானறிவேன். நீரவ்விதஞ்செய்யவேண்டியதும் அவசியந்தான். அதற்கொரு பிரயோஜனமு மிருக்கின்றது. இப்படிச்செய்வதில் குரூரத்தன்மையென்ப தொன்றுமில்லை; இரக்கம் வைக்கவேண்டாம். இதற்கு நிதர்சனமாக ஒரு கதை உண்டு சொல்லுகிறேன் கேளும் நாதா:—

நாதா, முற்காலத்தில் கம்புகமென்னும் பெயருள்ள நகரத்தில் ஹரிதத்தனென்றொரு பிராமணனிருந்தனன். நிரம்பிய செல்வத்தையுடைய அந்த அந்தணனுக்கு தேவதத்தனென்றொரு புதல்வனிருந்தான். அவன் பாலியதசையிற் கல்வியனைத்துங்கற்றவனாயிருந்தும், யௌவனவயதிற் சூதாடுந்தொழிலையே கைக்கொண்டிருந்ததினால் ஒருநாள் சூதாட்டத்தில் தன்னரையிலுடுத்திருந்த வஸ்திர முதலனைத்தையும் இழந்து பிதாவின் கிரகத்திற்குச் செல்ல அஞ்சிக் கவலையுடன் அந்நகரத்திற்கு வெளியிலிருக்கின்ற பாழ்ங்கோவிலிற் பிரவேசித்தான்.

ஏகாங்கியாய்ச்சென்ற அந்ததேவதத்தன் அவ்விடத்தினில் ஜாலபாதரென்று பெயரையுடைய ஒரு மஹாவிரதி, அநேகத்தொழில்களைச் சித்திசெய்து தனித்தவராகவிருந்து ஜபம் புரிந்துகொண்டிருக்கக்கண்டு மெல்ல அவரருகிற்சென்று அவரை நமஸ்கரிக்க அவ்விரதி மௌனத்தைவிட்டு தேவதத்தனை நல்வரவுகூறி மகிழ்வித்து அந்த க்ஷணத்தில் தேவதத்தனைப்பார்த்து நீ யிவ்விடத்திற்குத் தனிமையாய் வந்ததன் காரணமென்னென்று கேட்க அவன், சூதாட்டத்தினாற் பொருளனைத்துந் தொலைந்து தானடைந்த விபத்தை அவரிடம் சொன்னான்.

பின்பு அந்த மஹாவிரதியானவர், குழந்தாய்! உலகத்திற் சூதாடுகின்றவர்களுக்கு அவர்கள் மனக்குறையை நிரப்புவதற்குப் பொருள்கள் கிடையா. ஆனாலிப்பொழுது உனக்கு நேர்ந்திருக்கின்ற விபத்தை நீக்கவேண்டுமென்ற எண்ணமிருந்தால் யான் சொல்லுகிறபடிசெய். அஃதாவது யான் வித்தியாதரத் தன்மையை அடைவதற்காகவேண்டிய சமாரம்பம் செய்திருக்கின்றேன். ஆதலால் நல்ல

வடிவிலக்கணங்களமைந்திருக்கின்ற நீயும் என்னுடன் இதனைச்சித்தி செய்யவேண்டும். எனது ஆக்ஞையைப் பரிபாலிப்பாயாகில் உனது விபத்துக்களனைத்தும் நீங்கிவிடும் என்றனர்.

அதற்கந்தேவதத்தன் ஸ்வாமீ! தங்களுத்தரவின்படியே செய்கிறேனென்று பிரதிக்ஞைசெய்து அன்றுதினம் அவர் அருகிலிருந்தனன். மறுநாளந்தவிரதியானவர் தேவதத்தனைத் தன்னுடனழைத்துக்கொண்டு அதி பயங்கரமாயிருக்கின்ற ஸ்மசானத்தின் சமீபத்திற்சென்று, அங்குள்ளதோர் ஆலமரத்தின்கீழ் அன்றிரவினில் அநேகவிதமான பூஜைகள்செய்து பாயசம் முதலியவற்றை நிவேதனஞ்செய்து திக்குகளிற் பலிகளெறிந்து, அவ்வாலமரத்தின்பூஜையை முடித்துவிட்டுத் தன்பக்கத்திலிருக்கின்ற தேவதத்தனைப் பார்த்து நான் செய்தபடியே நீ பிரதிதினமும் பூஜை செய்யவேண்டும். பூஜை செய்தவுடன் ஹே வித்யுத்ப்ரபே! நீ யிந்தப்பூஜையை யேற்றுக் கொள்ளென்று சொல்லவேண்டும். இப்படி நீ நடத்திவந்தால் பின்பு நம்மிருவருக்கும் நிலைபெற்ற சித்தியுண்டாகும்--என்று தேவதத்தனிடம் சொல்லி அவர் அந்த தேவதத்தனைத் தாமிருக்கு மாலயத்திற்கழைத்துச் சென்றனர். அவனும் அவர்சொல்லியபடியே தினந்தோறும் சென்று அவ்வாலமரத்தின்கீழ் அவர்செய்த முறைப்படி பூஜைசெய்துவந்தான்.

இவ்வண்ணம் பூஜைசெய்துவந்தபின் ஒருநாள், பூஜையின்முடிவில் திடீரென்று அவ்வாலமரம் இரண்டுகூறாய்ப் பிளக்க, அதிலிருந்தும் அவன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே நிஷ்காரணமாய் திவ்ய வடிவுடன்கூடிய ஒருஸ்திரீ வெளியேறிவந்து தேவதத்தனைப்பார்த்து ஹே மங்களவடிவுள்ளவரே! உம்மை எங்கள் எஜமானியானவள் அழைத்துவரும்படி உத்தரவளித்திருக்கின்றனள்: வாருமென்று சொல்லி அவனையழைத்துக்கொண்டு அந்த விருக்ஷத்தின் நடுவிற் பிரவேசித்தனள். அவ்விருவரும் உள்ளே சென்றதும் அவ்விடத்தில் அவன் இரத்தினமயமான மாளிகையொன்றைக் கண்டான்.

அந்த மாளிகையின் உள்ளே மிகவுமழகிய சுவர்ணமயமான கட்டிலின்மீது சர்வாலங்காரபூஷிதையாய் உத்தமலக்ஷணங்களமைந்



துள்ள ஒரு ஸ்திரீ வீற்றிருக்க அவளைக்கண்டு அந்த தேவதத்தன் நாம் செய்த பூஜையின்பயனே உருவெடுத்து வந்திருக்கிறதோவென்றெண்ண, அதற்குள் அவ்வழகிய நங்கை தனதவயவங்களிலணிந்திருக்கின்ற ஆபரணங்கள் கலீர் கலீரென்று ஒலித்ததால் அவ்வவயவங்களும் தேவதத்தனை நல்வரவுகூறி விசாரிக்கின்றனபோல் தோன்ற அக்கட்டிலினின்றும் எழுந்துவந்து அதிதிகட்குச்செய்ய வேண்டிய உபசாரமனைத்துஞ்செய்து அந்த தேவதத்தனைத் தான் வீற்றிருந்த மஞ்சத்தில் உட்காரும்படி செய்தனள்.

உடனே தேவதத்தன் அவளைப்பார்த்து நீ யார்? உனது விருத்தாந்தம் யாதென்று கேட்க, அதற்கவள் யான் யக்ஷர்கட்கெல்லாம் அதிபதியாகிய இரத்தினவருஷன் என்பவருடைய கன்னிகை: என் பெயர் வித்யுத்பிரபையென்று சொல்லுவார்கள். என்னை ஜாலபாதரென்ற மஹாவிரதியானவர் நெடுநாள் ஆராதித்து வந்ததனால் அவருக்கு வேண்டிய சித்தியைக் கொடுக்கின்றவளாக விருக்கின்றேன். ஆனால் நீரோ எனது பிராணன்கட்கும் எஜமானாயிருக்கின்றீர். ஆதலாற்றானும்மைக் கண்டமாத்திரத்தில் உம்மிடத்திற் காதலுற்றவளாயினேன். என்னை நீரே விவாஹஞ் செய்துகொள்ளவேண்டுமென்றனள்.

அதற்கிணங்கியதேவதத்தன் சந்தோஷத்துடன் அந்தயக்ஷகன்னிகையை மணம்புரிந்துகொண்டு அவளுடன் அங்கே சிலகாலம் சுகமாய் வசிக்குங்கால் அவள் கர்ப்பவதியாயினள். இப்படியிருக்குஞ் சமயத்தில் அந்த தேவதத்தன் மறுபடியும் அந்த மகாவிரதியான ஜாலபாதரிடம் செல்லக்கருதி அங்கிருந்து புறப்பட்டுவந்து அவ்விரதியைக்கண்டு பயத்துடன் நடந்த விருத்தாந்தமனைத்தையு மவரிடம் தெரிவித்தனன். தனது சித்தியையே கருதுகின்ற அந்த ஜாலபாதனும் தேவதத்தா! பயப்படவேண்டாம்: நன்கு செய்தனை: நீசெய்தது தவறன்று; ஆனால் நானிப்பொழுது சொல்வதைக்கேள்: நீ போய் அந்தயக்ஷஸ்திரீயினுடைய வயிற்றைக்கீறி அதற்குள்ளிருக்கிற கர்ப்பத்தையெடுத்துச் சீக்கிரம் கொண்டுவரவேண்டும். நான் சொன்னபடி கேட்பதாக முன்பே நீ பிரதிக்ஞை செய்திருக்கின்றாய். ஆதலா

விப்பொழுது நான் சொன்னபடியே செய்யென்றேவ அந்த தேவதத்தன் மறுபடியும் தன் காதலியான யக்ஷஸ்திரீயினிடம் சென்று அவ்விரதி சொல்லிய கொடுந்தொழிலை நினைத்து மனவருத்தமுற்றவனாய் அவளருகில் நிற்க அதற்குள் அந்த வித்யுத்ப்ரபை யென்பவள் தன் கணவனை தேவதத்தனை நோக்கி, ஆரிய புத்திர! ஏன் வாடியிருக்கின்றீர்: ஜாலபாதர் எனது கர்ப்பத்தைச்சிதைத்துக் கொண்டுவரும்படி உமக்குத்திரவு செய்திருப்பதை யானறிந்தேன். எனது வயிற்றைக்கீறி இந்தக்கர்ப்பத்தை எடுத்துக்கொள்ளும். இல்லாவிட்டால் யானே இவ்விதம் செய்கிறேன். இப்படிச் செய்வதில் உமக்குமொரு பிரயோஜனமிருக்கின்றது என்று அவள் சொல்ல அப்பார்ப்பான் தேவதத்தன் அதனைச்செய்வதற்கு மனஞ்சகியாதவனாய் நிற்க, அப்பொழுது அவள் தானாகவே தன் வயிற்றைக்கீறி கர்ப்பத்தைக்கையாற்பிடுங்கி முன்னே வைத்துவிட்டு இந்தக்கர்ப்பமாம்சத்தை உண்கின்றவன் வித்யாதரத்தன்மையை அடைவான்: இதை எடுத்துக்கொள்ளும்: யான்முன்பு வித்யாதரஸ்திரீயாயிருந்தவள் ஒரு சாபத்தினால் யக்ஷஜாதிஸ்திரீயாய் வந்து பிறந்தேன். இப்படிச்செய்தபின் சாபம் நீங்குமென்றிருந்தமையால் எனதுசாபம் நீங்கிற்று. யானும் பூர்வஜென்ம விருத்தாந்தத்தை அறிந்தவளாயினேன். ஆதலாலிப்போது எங்களிருப்பிடமாகிய வித்யாதரஸ்தானம்போய்ச் சேருகின்றேன். ஆனால் மறுபடியும் நம்மிருவருக்கும் அவ்விடத்தில் தான் சேர்க்கை நேரிடுமென்றுசொல்லிவிட்டு அந்த வித்யுத்ப்ரபை என்பவள் எவ்விடத்திலோ மறைந்துபோயினள்.

அங்கிருந்த தேவதத்தன் வருந்திய மனதையுடையவனாய் விசனத்துடன் அந்தக்கர்ப்பமாம்சத்தைத் தன் கையிலெடுத்துக்கொண்டு அந்த ஜாலபாதரென்னும் விரதியின் சமீபஞ்சென்று சித்தியைத்தரத்தக்க அந்தக்கர்ப்பமாம்சத்தை அவரிடம் கொடுத்தனன்.

உலகத்திற் கிடைத்தற்கரிய பதவி கிடைப்பதாகவிருந்தாலும் சாதுக்கள் தங்கள் காரியத்தைப் பெரிதாக நினையார்களன்றோ. அந்த மாம்சத்தைப் பெற்றுக்கொண்ட ஜாலபாதன் சந்தோஷத்துடன் அதனைப் பக்குவஞ்செய்து தன்னிடம் வைத்துக்கொண்டு பைரவதேவனைப் பூஜித்துவரும்படி சொல்லி தேவதத்தனைக் காட்டுக்



கனுப்ப அவனங்குச்சென்று அவ்விரதியின் அனுமதிப்படி பைரவனைப்பூஜித்துப் பலி முதலியவற்றைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வருவதற்குள் அவ்விரதி அந்த மாம்சமனைத்தையும் தானே தின்றனன்.

பைரவனைப் பூஜைசெய்துவிட்டுத் திரும்பிவந்த தேவதத்தன் மாம்சம் யாவையும் ஜாலபாதர் தின்றாரென்பதை அறிந்து அவரைப்பார்த்து ஐயா, எனக்குச் சிறிதும் கொடாது நான் கொணர்ந்த மாம்ச மனைத்தையும் நீரே யெப்படித்தின்றீரென்று கேட்க அக்கபடியான ஜாலபாதன் ஆகாயம்போற் கரியநிறமுள்ளகத்தியையுடையவனாகவும் ஹாரகேயூரங்களுடன் பிரகாசிக்கின்றவனுமாய் வித்தியாதர வடிவத்தையடைந்து ஆகாயத்திற் கிளம்பிச் சென்றனன்.

(தொடரும்.)

உ

# * நமது பூர்வகாலக் கப்பற்றொழில்.

## சீன வியாபாரம்.

முன்னாளில் இந்தியாவினின்றும் சமய வுணர்ச்சிகள் அக்காலத்தில் மற்றநாடுகளில் பரவ இடமுண்டானபோது, சமுத்திரமே பெரிய ராஜபாட்டையாகவிருந்தது. கீழ்கரையில் சீனா, ஜப்பான் தேசங்களும், மேல் கரையில் அரேபியா எகிப்து தேசங்களும் இதற்கிடையே சமுத்திரத்திலிருக்கும் பல சிறு தீவுகளும் இந்திய வர்த்தகர்களாற் கட்டுப்பட்டிருந்தன. மிஸ்டர் சகா அஞ்ஞா குரா எழுதிய தி-ஐடியல்ஸ் ஆப்தி ஈஸ்டு (The Ideals of the East) என்னும் புத்தகத்தில் 1-2 பக்கங்களில்"முகமதியப்படையெடுப்பு வரையில் வங்காளக்கரையிலுள்ள தைரியசாலிகளான மாலுமிகள், லங்கை, ஜாவா, சுமத்ரா முதலிய தீவுகளிற் குடியேறியும் சமுத்திரக்கரை யோரமாக வசிக்கும் பர்மர்கள்சீயத்தாருள் ஆரியவீரியம் பிரவேசிக்கும்படிக்கும், சீனாவை இந்தியாவுடன் பரஸ்பரநேசத்திலும் கட்டுப்படுத்தி

* முதன்முதலாக "சுதேசமித்திர"னில் வந்த ஒருபாகத்தை வைத்துக்கொண்டு வரிசையாக எழுதப்படும்.

[illegible] என்றெழுதுகிறார். தென் சமுத்திரங்களில் ஐரோப்பியர் புகுந்து வியாபாரத்தைக் கைக்கொள்ளும் வரையில், இந்தியர் மகோன்னதமாக வியாபாரஞ்செய்த நாடுகளில் சீனதேசமுமொன்று. சீனவில் கப்பல்வழியாகத்தான் இந்திய நாகரீகமும் கல்வியும் சென்றன. எப்படியெனில், கரைவழியை விட்டு சமுத்திர வழியாகவே, புத்த குருமார் சீனதேசத்தில், அதன் ராஜர்களும் மன்னர்களும் எதிர்த்தபோதிலும் இளைக்காது, தமது மதக்கொள்கைகளை உபதேசித்து தம் வசப்படுத்தலாயினர். இன்னும் ஐத்லாங்போன்ற யாத்திரிகர்கள் சீனவினின்றும் இந்தியாவை யடைந்து அதனிலுள்ள சிறப்புற்ற ஸ்தலங்களையும் சமணர்களையும் கண்டு அவர்களைப்பின்பற்றி நடந்ததும் தம்நாட்டிற்றிரும்பப்போய் இவ்விந்தியதேச வழக்கவொழுக்கங்களைக்காட்டி நடக்கும்படி செய்ததும் இந்தியர்களுடைய கப்பல்மூலமாகத்தான். இவ்விதமாய்ப்பரவிய எண்ணந்தான் சீனர்களுள் இன்னும் எதைத் தொட்டாலும் இந்திய நடவடிக்கைகளாகக் காணப்படுகின்றது. இதுவரையில் சீனர்களுடைய புத்த கிரந்தங்களில் எதைப்பார்க்கினும் ஆரிய (சம்ஸ்கிருத) பாஷையினின்றும் மொழி பெயர்க்கப்பட்டனவாகவே காணப்படுகின்றனவென சீனப்புத்த கிரந்தங்களை ஆராய்ச்சிசெய்த ஒரு ஜெர்மன் நிபுணர் சொல்லுகின்றார். ஒவ்வொரு புத்தகத்திலும் சம்ஸ்கிருத வாக்கியங்கள் நிறைந்திருப்பதையும், ஒவ்வொரு ஸ்தோத்திரமும் சம்ஸ்கிருதத்திலுள்ளதை யுள்ளபடியே சீன பாஷையில் எழுதியிருப்பதையும் இன்னும் நாம் நன்கு காணலாம். இதுவன்றியும் சீனக்கோயில்களில் இந்தியப் பெரியோரது பிம்பங்களைவைத்து ஆதரிப்பது சகஜமாக விருக்கின்றது.

## சீனவுடன் புத்தகாலத்திற்கு முந்திய உறவு.

—:(o):—

இந்தியாவின் மகத்தான ஆன்மலாபக் கொள்கைகளும், தேசக்ஷேமத்திற் குரித்தான வியாபார முறைகளுந்தான், வெகு தூர தேசங்களிலெல்லாம் வியாபாரம் செய்யவும், அதனால் ஒருவருக்கொருவர் நேசப்பான்மையோடு வாழவும், அதிலும் சீனவோடு மிகப்பழமையானமுதற் [illegible] முன்வரையில் அந்நியோந்யமாய் உறவாடவும் காரணமாயின. இவ்விதமாய்ப் போக்குவரத்து ஏற்பட்டதால் சீனவின் ஒரு பாகத்திற் கூட இந்தியர் குடியேறி இருந்ததாகச் சொல்லக்கூடிய அநேக ஆதாரங்களிருக்கின்றன. சர் ஹென்றி யூல் C. B., K. C. S. I. தாமெழுதிய 'காதேயும் அதற்கு வழியும்' * என்னும் புத்தகத்தில் "வானசாஸ்திரத்தின் ஒரு பகுதியில் இரு தேசத்தினரும் கிறிஸ்து பிறக்க 3000-வருடங்களுக்கு முன்னரே போக்கு வரத்துடையவர்களா யிருந்தன ரென்பதற்கு உற்ற பலமான அறிகுறிகள் இருந்தனவென்றும், புராதன கிரந்தங்களுடைய சீனவிற் கூட அதன்மூலம் தெரியாதபடி காலமாகிவிட்டது" என்றும் எழுதுகிறார். சம்ஸ்கிருத கிரந்தங்களில் சீனர்களைப்பற்றியும், சீனவைப்பற்றியும், பட்டு, கர்ப்பூரம், சுக்கு, மஞ்சள் முதலியவைகளைப் பற்றியும் அநேக விடங்களில் கூறப்பட்டிருப்பதைத் தவிர்த்து, மனுஸ்மிருதியிலேயே † சீனர்கள் பிராமணர்களைக் கையாளுவதையும், க்ஷத்திரிய பரம்பரைக்குரிய நித்திய கர்மானுஷ்டானங்களை விட்டதினின்றும் கீழ்த்தர க்ஷத்திரியர்களாகிக் காலக்கிரமத்தில் சூத்திரர்களானார்கள், என்றும் காணப்படுகிறது. இந்த விஷயத்தைப்பற்றியே கீர்த்திபெற்ற பிராஞ்சியவித்வானை முசியே (பிராஞ்சிலுள்ள பிசான்சன் என்னும் ஊரில் பிறந்தவர் 1801-1873.) போத்தியர் தாமெழுதிய "மார்க்கோ போலோவின் யாத்திரைகள்" என்னும் புத்தகத்தில் "மனுஸ்மிருதியில் எழுதியவை யொருபாகம் உண்மைதான். இந்தியர் சீனதேசவியாபாரத்தின் ஆசையால் ஷென்ஸி என்னும் கோடியான பாகத்தில் குடியேறிச் சின என்ற பதத்தைப்போன்ற தின் (Thisn) என்ற நாட்டை உண்டாக்கினார்கள்" என்றெழுதுகின்றார். ருக்வேதத்தில் ‡ வெகு இடங்களில் இந்தியர் மரக்கலத்தொழிலில் வெகுபெயர் பெற்றவர்களென்றும், மரக்கலங்களிற் சென்று அந்நியரோடு வியாபாரம் செய்தனரென்றும் காணப்படுவதைக் கொண்டு இந்த க்ஷத்திரியரில் ஒரு பாகத்தினராவது சமுத்திர வழியாகச் சென்றன ரென்று கொள்ளுதல் தவறாகாது.

* Kathay and the Way. By Sir. Henry Yule. Vide pXXXIV கதே என்பது சீனம்.
† மனு அத் X, 43, 44 ஸ்லோகங்கள்.
‡ இதைப்பற்றி, தனிமையாக எழுதப்படும்.

## சீனாவுடன் கிறிஸ்துகாலமுதல் அதிகமானபோக்குவரவு

——:(x):——

புத்த காலத்தில் இந்தியாவினின்றும் வரவர அதிமான கப்பல் போக்குவரத்து இருந்தது என்பதற்குச்சாதனங்கள் சீன கிரந்தங்களிலும் இராச்சிய பரிபாலன தஸ்தவேசுகளிலும் இருக்கின்றன. அன்றியும், கி. பி. ஐந்தாவது நூற்றாண்டுவரையில் சீனர் * மலேய நாடுகளில் பிரவேசிக்கவில்லை என்பதைக்கேட்க ஆச்சரியப்படாதார் ஒருவருமிரார்கள் என்பது திண்ணம். 1895-ம் வருஷத்து ராயல் ஏஷியாட்டிக் ஸொஸைடியின் † பத்திரிகையில் "இந்தியர்களும் பாரசீகர்களும் தமது கப்பல்களில் சீனாவிற்கு இந்த சகாப்த ஆரம்பத்திற்போனதோடு அதேமாதிரியாகவெகுகாலம்சென்றுவந்தனர். சீனர்கள் மலேய நாடுகளில் ஐந்தாவது நூற்றாண்டுக்கு முன்னர் பிரவேசிக்கவில்லை; பிறகு ஒரு நூற்றாண்டு வரையில் இந்தியா, அரேபியா, பாரசீகம் முதலிய தேசங்களுக்குச்செல்ல வில்லை" என்றெழுதுகின்றனர். இந்தக்காலத்தில் தான் சீனாவில் புத்தமதம் தேசமன்னனால் அங்கீகரிக்கப்பட்டதென்பதும், அதனால் உண்டான அனுதாபமும் சொந்தமும் இந்தியர் விருத்திக்கு ஏதுவாயிற்றென்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை. இந்தியாவையாண்ட பெரிய சக்கிராதிபதியான அசோகனது நாளில் புத்தகுருமார் தங்கள் சக்கிராதிபத்தியம் மாத்திரமன்றி, நாட்டுக்குப்புறம்பிலுள்ள கீழ் ஐரோப்பா, மேல் ஆசியா, ஆப்பிரிக்காவின் வடபாகமெல்லாம் தங்கள் மதத்தைப்பற்றிப் பிரசங்கித்தும் வந்தனர். கி. மு. 250-ல் 18-பேர்வரையில் புத்த குருமார் சீனதேசம் சென்றுபோதிக்க அவர்களது பிம்பம் இன்னும் கோயில்களில்வைத்துக் கொண்டாடப்படுகிறது. (புத்த சமயம் Dr. E. J. எதியல்) சிலர் புத்தமதம் சீனாவில் கி. மு. 117-ல் பரவிற்றென்றும் வேறுசிலர் 22-ல் பரவிற்றென்றும் சொல்லுகிறார்கள். ஆயினும் கி. பி. முதல்நூற்றாண்டு வரையில் புத்தமதம் பரவ

* மலேய நாடுகள் இப்பொழுதைய பினாங்கு, சிங்கப்பூர், பெராக், சிலாங்கர் முதலியவை.

† ராயல் ஏஷியாடிக் ஸொஸைடி யென்பது பூர்வீக ஆசியர்களது விசேஷங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் சபை.



வில்லை என்பது நிச்சயம். ஏனெனில் கி. பி. 67-ல் தான் சீனசக்கரவர்த்தியின் வேண்டுகோளுக்கிரங்கி காசியபமதங்கர், கோபரணர் என்னும் இரண்டு புத்தசந்நியாசிகளும் புத்தவிக்கிரகங்களுடனும் கிரந்தங்களுடனும்சென்று புத்தமதத்தை அதிகமும்மரமாக போதிக்க ஆரம்பித்தனர். இந்தக்காலமுதல் சீனாவானது இந்தியாவுக்கு நல்லசீடனாயேற்பட, மரக்கலப் போக்குவரத்தும் அதிகப்பட்டது.

## சீனாவுடன் கப்பல் வியாபாரம்.

——:o:——

இதற்கு முன் இந்தியாவுடன் சீன வர்த்தகம் கப்பல் மூலமாய் எப்படி இருந்தபோதிலும் இந்தக்காலமுதலே, அதிகப்பட ஆரம்பித்தது. கி. பி. ஒன்று இரண்டாவது நூற்றாண்டுகளில், சீனதேசத்தில் அந்நியருடன் வியாபாரஞ்செய்தல் இராஜாங்க சுதந்தரமாக இருந்தபடியால் இந்தியாவிலுள்ள மகுட மன்னர்களிடமிருந்து பண்டங்கள் நிறைந்த மரக்கலங்கள் காணிக்கையாக வந்ததாகச் சீனதஸ்தாவேஜுகளில் காணப்படுகின்றன. இவைகளைக் கொண்டுவரும் வியாபாரிகள் தூதர்களென அழைக்கப்பட்டனர். இந்தத்தூதுகள் என்று சொல்லப்படுபவையெல்லாம் கப்பல்மார்க்கமாகப்போனதாக ஏற்படுகின்றனவேயொழிய வேறன்று. இப்படி மொகலாய படையெடுப்பு வரையில் நடந்து வந்தது; இந்தத் தூதுகளில் இருக்கும் விநோதமென்னவெனில், சாதாரணமாக ஓர் அரசனிடமிருந்து மற்றொரு மன்னனுக்கு க்ஷேமாதிசயங்களை விசாரிக்க அனுப்பப்படும் தூதுகளையும் நிகர்க்கவில்லை; மத சம்பந்தமானதாகவும் ஏற்படவில்லை; அல்லது ராஜீய விஷயமாகவும் ஏற்படவில்லை; அப்படியொன்றுமில்லாமல் தூதர்கள் என்று சொல்லிக் கொள்ளுவதும் காணிக்கையென்று சொல்லிக்கொள்ளுவதும் அக்காலத்திய சீன வியாபாரமுறையென்றேற்படுகிறது. இந்த வழக்கமான வியாபார முறை இவ்வளவு உயர்விலிருந்ததென அறிய இதனுடைய உள் அந்தரங்கங்களை முதலில் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது. இதைப்பற்றிச் சவிஸ்தாரமாக ராயல் ஏஷியாட்டிக் ஸொஸைடியின் 1896-ம் வருடத்திய ரிப்போர்ட்டுகளில் சொல்லப்பட்

டிருக்கிறது. "அந்நிய வியாபாரம் என்பது வெகு காலமாக 'கப்பம்' என்ற பேரால் வழங்கி வந்தது. 'கப்பம்' என்ற பதத்திற்குச் சரியான 'கும்' என்ற சீனப்பதத்திற்கு 'பண்டமாற்றல்' அல்லது 'வியாபாரம்' அதாவது இராஜாங்கத்தாரால் புற நாட்டாருடன் செய்யும் வியாபாரம் என்று அருத்தமாரும். சீனர் இந்த மாதிரிசெய்ய இஷ்டமில்லாவிடில் அதாவது அந்நியர் தங்களுக்குக் கீழ்ப்பட்டிருந்து அதன் பலனாக காணிக்கை செலுத்துவது போலவும், இவர்களைப் பார்த்து ஆனந்த முறுவதாகவுஞ் செய்யாவிடில் வியாபாரஞ்செய்ய ஒப்புவதில்லை. ஒவ்வொரு தடவையிலும் அதற்குப் பெறுமான முன்னதாக மாற்றுச் சன்மானங்கள் செய்யப்பட்டு வந்தன. இப்படி மாற்றுச் சன்மானங்கள் ஏற்படாமலிருக்குமாயின் வெகுதூரமான இந்தியா, அரேபியா, பெர்ஷியாவினின்றும் வியாபாரிகளைக் காணமாட்டோம். ஆகையால் சிலவற்றைத் தவிர்த்து, இந்தக் கப்பம் கொண்டுவந்தவர்களெல்லாம் உண்மையில் வியாபாரிகளே யொழிய வேறல்லர். அவர்கள் வெகுதூரத்திலிருக்கும் அரசர்களிடமிருந்து காணிக்கை கொண்டுவருவதாகச்சொல்லி வாணிபம் செய்தல் இயல்பு. அப்படிக் கப்பம் கொண்டுவருவதாகச் சொல்லும் வர்த்தகர்களுக்குப் பிரதியாக அளிக்கப்படும் சம்மானங்கள் இன்னின்னவையென ஒவ்வொரு சமயங்களில் இராசாங்கத்து சரித்திரகாரர்களால் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்க்கும்போது, தற்காலத்தில் வியாபார உடன்படிக்கைகளின் பேரில் செய்யப்படும் வியாபாரம் எவ்வளவு லாபம் தரக்கூடியதோ அவ்வளவு லாபம் தரக்கூடியதாக அந்த நாளிலேயே இருந்திருக்கிறது. இப்படிப்பட்ட சம்பந்தம் சீனாவிற்கும் அதனையடுத்த நாடுகளுக்கும் வெகு காலந்தொடங்கியே இருந்திருக்கிறது. ....... அதுவன்றியும் இது மாதிரி கிரமமாக நடந்து வந்ததால் இதற்கென்று சொல்லி இராஜாங்கத்தில் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்." ஆயினும் கி. பி. ஏழாவது நூற்றாண்டில் நான்கு திசைகளிலிருந்து வரும் தூதர்களை வரவேற்று அவர்களுக்குத் தகுந்தபடி நடத்தவும் பண்டமாற்றல் செய்யவும் நான்கு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்—என்பதைக் கொண்டும், இந்த அந்நியரோடு னைக்கன் ஒரு பணமேனும் வியாபாரம் செய்வார்களாயின் தகுந்த தண்டனை விதிக்கப்பட்டு வந்தனரென்பதைக் கொண்டும், அந்த நாளில் அந்நிய வியாபாரம் முழுவதும் இராஜாங்கத்தாராலேயே செய்யப்பட்டு வந்ததென்பதும் நிதரிசனம். லங்கைத் தீவைப்பற்றி யெழுதிய சர் எமர்ஸன் டெனன்டு கூட, லங்கையினின்றும் சீனாவிற்குச் சென்ற அநேக தூதுகளைப்பற்றி யெழுதும்போது அவை வியாபாரத்திற்குச் சென்றபோதிலும், சீனர்கள் வியாபாரமென்பதை அவ்வளவு கேவலமாக நினைத்ததால் வியாபாரம் என்றெழுதாமல் கப்பம் கட்டியதாகவும், அதற்குப் பதில் சன்மானம் செய்ததாகவும் சீன சரித்திரக்காரர்கள் எழுதியிருக்கின்றனரென அபிப்பிராயப்படுகிறார். இதே மாதிரி சீனசக்கிரவர்த்திகளும் லங்கைமுதலான விடங்களுக்குப் புத்த விக்கிரகங்கள் முதலியவை சேகரித்துவர அனுப்பிய தூதுகளெல்லாம் வியாபாரத்தை விருத்தி செய்வதற்கென்றே அவர் அபிப்பிராயப் படுகிறார்.

## பூர்வீக இந்திய அந்நிய வியாபாரத்துக்குச் சில பழைய ஆதாரங்கள்.

---

சீனாவுடன் நடந்த பழைய வியாபாரத்தைப்பற்றி எழுதியிருந்ததில், இருக்குவேத முதலியவற்றில் ஆதாரங்களிருப்பதாகச் சொன்னோம். அவற்றை இங்கே எடுத்துக் காட்டுகிறோம். இருக்குவேதத்தில் வேதாயோ என்ற 1-25-7-ல் சமுத்திரவழிகளை வருணன் நன்குஅறிந்ததாயும், "யே அஸ்யா ஆதரஷேஷ" என்ற 1-48-3-ல் ஆசைமேலிட்ட வியாபாரிகள் கப்பலனுப்புவதைப்பற்றியும் "தஹுர்த்தயோ என்ற 1-56-2-ல் வியாபாரிகள் கடல்வழியாக பலவிடங்களுக்குச் செல்வதைப்பற்றியும் சொல்லப்படுகிறது. ஆயத்ர ஹாவவருணஉச என்றுதொடக்கத்து V11-88 324 ஸ்லோகங்களில் வசிஷ்டரும் வருணனும் செம்மையாகச்செய்யப்பட்ட கப்பலொன்றில் ஏறிச்சென்றதும் அது அலைகளில்மோதுண்டதா லுண்டான ஆட்டத்திலுண்டான சந்தோஷத்தையும் பற்றிசொல்லப்படுகிறது. துயோஹ என்ற (1) 116, 3-ல் இராஜரிஷியான துக்ரன் தூரதேசத்திலுள்ள பகைவனொருவனை ஜயிப்பதற்காக தன்மகனைக்கப்பற்படையொன்றுடனனுப்பியதைக்குறிப்பிடுகிறது.

இராமாயணத்தில் கிஷ்கிந்தாகாண்டத்தில் சீதாதேவியைத்தேடும் பொருட்டு சுக்ரீவன் தன் வானரசைந்யங்களுக்கு இராவணன் இன்னின்னவிடங்களில் வைத்திருக்கக்கூடுமெனச் சொல்லுவதை வாசிக்கிறோம்; மேல்போக ஓரிடத்தில் சீதையை கோஷக்ர தேசத்தில் பார்க்கும்படி சுக்ரீவன் சொல்லுகிறான்; இந்தக் கோஷக்ரதேசத்தை உரைகாரர்கள் பட்டுப்பூச்சி பட்டு இழைக்கும் ஸ்தலமென்கிறார். அதாவது சீனதேசமொன்றே பூர்வம்முதல் பட்டுத்தொழிலில் பேர்போனது. பத்ரவந்தி என்ற மற்றொரு சுலோகத்தில் யவத்தீவு, சுவர்ணதீவுகள் குறிக்கப்படுகின்றன. இவைகள் தான் ஜாவா, சுமத்ராதீவுகள். மற்றொருசுலோகம் லோஹித சாகரம் அல்லது செங்கடலைப் பற்றிக்கூறுகிறது, அயோத்தியாகாண்டத்து சுலோகமொன்றில் கப்பற்சண்டைக்கு தயாராகும்படி ஆக்ஞாபிப்பதாகக்காணப்படுகிறது. மஹாபாரதத்தில் திக்விஜயம் செய்தபோது சகதேவன் இந்தியாவிற்குப் புறம்பாயுள்ள தேசங்களிற் சென்று மிலேச்சர்களாயுள்ளோரையும் ஜயித்ததாகக் கூறப்படுகிறது.

இதைத் தவிர்த்து தர்மசாஸ்திரங்களிலும் ஆதாரங்களிருக்கின்றன. போதாயனதர்ம சூத்திரம் II. 2-2-ல் பிராமணர்கள் சமுத்திரயாத்திரைசெய்யக்கூடாதென்றும் செய்வதற்கு பிராயச்சித்தமும் கூறுகிறது. இன்னும் I. 18-14-ல் கடல் வழியாக வரும் பண்டங்களுக்கு தீர்வை குறிக்கிறது. இதேமாதிரி கௌதமராலும் II×33-ல் கூறப்படுகிறது. மனு சாஸ்திரத்திலும் III. 158ல் கப்பலேறிவந்த பிராமணன் சிரார்த்தத்திற்கு அருகனல்லனென்று கூறுகிறது. இதைத் தவிர்த்து ஆற்றைக்கடக்கவும் கப்பலேறுவதற்கும் இவ்வளவுதான் விகிதம் எனச் சொல்லுவதோடு, சமுத்திரத்திலுண்டாகும் நஷ்டத்திற்கு ஈடு செய்வதைப்பற்றிக்கூடச் (VIII 408-9) சொல்லுகிறது. லாபத்தின் பொருட்டு கப்பலிற் செல்லுவதுண்டென யாக்ஞவல்கிய சம்ஹிதை மிதாக்ஷரம் வியவகாராத்யாயத்தில் கூறப்படுகிறது. இன்னும் இதைத்தவிர்த்துப் புராணங்களிலும். எதேஷ்டமான ஆதாரங்களிருக்கின்றன. தமிழ் ஆதாரங்களைப்பற்றி மற்றொருமுறை கூறுவோம்.

ஒற்றன்.

உ

சிவமயம்.

# திருவலஞ்சுழி

——:(o):——

திருக்குடந்தைக்கு மேற்கில் நான்கு மைல் தூரத்தில் அரசலாற்றின் றென்கரையில் தஞ்சையிலிருந்து திருக்குடந்தைக்குப் போகும் பாட்டையின்மேல் திருவலஞ்சுழி என்றோர் சிவக்ஷேத்திரமிருக்கிறது. அதுவே சிறந்ததொரு விக்னேச்சுரத் தலமுமாம். சிவபிரான் பெயர் கபர்த்தீச்வரர் (கற்பகத் தீசர்) உமாதேவியார் பெயர், ப்ருகந்நாயகி (பெரியநாயகியம்மை,)விநாயகர்பெயர், சுவேதவிக்நேச்வரர் (வெள்ளைப்பிள்ளையாரென்றும், வெண்ணைப்பிள்ளையாரென்றும், தமிழில் வழங்குவது.)

இத்தலத்தின் பெருமை யனேகர்க்குத் தெரிந்திராதாதலின், (புராணத்திற் கூறியபடியே முழுது மெழுதுவது, மிக்விரியுமாதலால்), இங்கு அவச்யமாய்ச் சொல்லவேண்டிய வற்றை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதை எழுத எனக்குநேர்ந்த ஏதுவை இவ்வியாசத்தின் முடிவிற்றெரிந்து கொள்க.

திருவலஞ் சுழி என்ற பெயர்வரக் காரணம்:— பூர்வத்தில் சோழதேயத்தரசர்களிற்சிறந்த அரித்துவசன் என்பான், தன்னாட்டிலாறு ஒன்று வெட்டுவிக்க வேண்டுமெனக் கருதி, மேற்றிசையை நோக்கித் தன் சைன்யத்திரளுடன் சென்ற வளவில், குடவரையினின்று பிரவகித்து வந்த காவிரிநதியைக்கண்டான். தானினைத்த காரியமினிது முடியுமென்பதற்கிதுவே அறிகுறி யென்றகமகிழ்ந்து, அந்நதி ஓடிவந்த பாதையில், மரங்கொடி செடி முதலிய விடையூறொன்று மில்லாமல் அகற்றிக் கொண்டு வந்தான். காவிரியோ இத்தலம் வந்ததும் கோயிலுக்குள்ளிருக்கிற ஒருபெரிய பிலத்திற்குள் முழுதும் வலமாய்ச் சுழித்துக்கொண்டு பிரவேசித்து விட்டது. இதைக் கண்ணுற்றவரசன், அநேகவிதத்தில் அடைத்துப்பார்த்தும்

பயன்படாதது கண்டு, ஆற்றைச் சமுத்திரத்திற் சேர்ப்பிக்கக் கூடாமற் போயிற்றே யென்று துயர்முற்றுத் தன் மந்திரிகளிடத்தில் ஆலோசித்தான். அவர்கள் "இப்பெருங்காரியம் பிராம்மணோத்தமர்களினுதவியாலே ஆகவேண்டு" மென்றுசொன்னார்கள். நான்கு வேதம், ஆறுசாஸ்திரம், கலைக்ஞானம், மனுவிக்ஞான முதலியவற்றிற் றேர்ச்சியுள்ளவராய், நித்திய கருமங்களை முறைவழுவாதநடாத்தி வருமொரு வந்தணரைத்தேடிச் சென்றஅரசன், இத்தலத்திற்கு வடகிழக்கில் மூன்று மைல்தூரத்தில் காவிரி யாற்றின் வடகரையில் இருக்கிற திருக்கொட்டையூரிற் கொட்டைமரத்தடியிற் றவஞ்செய்து கொண்டிருந்த ஏரண்ட விருடியைக் கண்டனன். தனக்கு நேர்ந்திருந்த மனக்கவலையை அரசன் அவரிடத்திற் றெரிவித்துக் கொண்டதும், அத்தவச் செல்வர், தம் ஞானத்திற் றோன்றியவற்றைப் பின் வருமாறு கூறினர். "அரசனே! முப்பத்திரண்டு இலக்கணங்களும், அஷ்டைச்சுவரியமும் பொருந்தி, இராஜ தர்மமனைத்தையுமறிந்து அதற்கேற்பச் செங்கோல் செலுத்திவருகின்ற ஓர் அரசனாவது, வேதத்திற் கூறப்பட்டுள்ள சகலதர்ம கருமங்களையும் விதிப்படி செய்து வரும் ஓர் அந்தணச்ரேஷ்டராவது அப்பிலத்தி லிறங்கினால், அடைபடும்" என்றார். அக்காலத்தில், சோணாட்டி லெல்லாநீதியும் பொருந்திய அரசன், அரித்துவசனொருவனே. அந்தணர்களிற் சிறந்தவன் ஏரண்டனொருவன்றான். ஆதலின் இவ்விருவரி லொருவர் இறங்கவேண்டு மென்று கொள்ளப்பட்டது. அரசன், காவிரிநதியைச் சமுத்திரத்திற் சேர்ப்பிக்க வேண்டு மென்ற கருத்துக்கொண்டவனாதலின், தானிறங்கினாலவ்வெண்ணம் நிறைவேறாதே யென்று கலங்கி, ரிஷியை நீரிறங்கு மென்றால் கோபித்துச் சபித்துவிடுவரோவென்று அச்சமுற்று, நீர் நேரிலப் பிலத்தைப் பார்த்துச்சொன்னால் மிகுந்த திருப்தியடைவேனென்று பிரார்த்தித்தான். இவனது உட்கருத்தையறிந்த தவசி "அப்படியே ஆகட்டு" மென்று அரசனோடு இத்தலத்திற்குவந்து கோயிலுக்குள்ளிருக்கும் பிலத்திற்குக் கீழ்ப்புறத்தில் மேற்கு முகமாய்ச் சிவபிரானுக் கெதிரில் நின்று கொண்டு, தன் உயிரைத்துறந்தாகிலும் பிறருக்குதவிசெய்வ தவனிமிழ்விப்பது தர்மமெரும்.



MADRAS

"என்னனு மோருதவி யதொருவன் யார்க்கெனினுந்
தன்னால் முடிவ தெனிற்றனே முடித்தறலே
சொன்னான் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னாண் மறுத்துப் புரிதல் கடைப் பாண்மை யதே"

என்று கந்தபுராணத்திற் கூறியபடி, ஏதாவது ஓர் உபகாரத்தை எவனாவதொருவன், எவனாவதொருவனுக்குத் தன்னால் செய்யக்கூடுமானால், அவன் கேட்கு முன்னமே செய்துகொடுப்பது உத்தமகுணமாயிருக்க, அரசன் கேட்டுக்கொண்டுந் தாமதிப்பது தகுதியன்றென்று நினைத்து "ஸிதனுவாவ்யூஸிதனுவாவ்யூ ஸிதா ஸிதம்வெவ நஸாவிநீயம । ஷொஸம்ஸகோநா கவொஷஹி ஸிகொதவெஷெஸ நவிஷாவ்யூவெஸ ॥" என்ற சுலோகத்தைச் சொல்லிக் கொண்டு அப்பிலத்தி லுட்கார்ந்தார்.

அந்நீர்ச்சுழல், இவரை முழுதுங் கீழேபோகவிடாமல், மேலே கிளப்பி, மேற்புறத்திலிருக்கிற கபர்த்தீச்வரரை வலமாகத் தன்னோடு அவ்வந்தணரையுஞ் சுற்றுவித்துப் பிலத்தின் வாயிலில் திரும்பவும் நின்றது. அங்கு இவ்வதிசயத்தைப் பார்க்க வந்திருந்தோர் யாவரும், மற்றுமுள்ள தேவர்களும் இவரது பரோபகாரச் சித்தத்தின் பெருமையை மெச்ச சிவபிரான் இவரை வலஞ்சுழி நாதரென்று பெயர் வைத்துக் கொண்டு, தன் மாதிரி ஓர் இலிங்க வடிவமாய் அங்கேயே இருக்கும்படி கட்டளையிட்டருள, அவரது ஆக்ஞைப்படி ஓர் இலிங்கவடிவமாய்த் தோன்றினர். காவிரி நதியின் நீரோட்டம், மேலே குறிப்பிட்ட கொட்டையூருக்கடுத்த கீழ்புறமிருக்கின்ற, மேலக் காவிரி என்று தற்காலம் வழங்குகின்ற ஊரில், மேலே குமிழியிட்டுக் கொண்டு கிளம்பிற்று. (காவிரி மேலேகிளம்பிய தானத்திற்கு மேலக்காவிரி என்று வழங்குவது காரணப்பெயர்.) நீரோட்டம் வலமாய்ச் சுழித்துக்கொண்டு பிலத்திற் புகுந்ததாலும், கபர்த்தீச்வரரைத் தானும் தன்னோடு ஏரண்டரையும் வலமாய்ச் சுற்றுவித்ததாலும் திருவலஞ்சுழி என்று பெயர்வாய்ந்தது. மேலும் சிவபிரானது நெற்றியில் வலமாய்ச் சுழிக்கப்பெற்ற ஒரு சுழியுந் தோன்றுகிறது. கொட்டையூருக்கு மிவ்வூருக்கு மிருக்கிற நெருங்கிய சம்பந்தம்:—இவ்வூரிற் பாடியிருக்கிற ஒவ்வொரு திருத்

தாண்டகத்தின் இறுதியிலும் "கொட்டையூரிற் கோடீச் சரத்து றையுங் கோமானே" என்று பிரயோகித் திருப்பதாலுமினிது விளங்கும்.

கபர்த்தீச்வரரென்று பெயர்வரக் காரணம்:—உமாதேவியார் மணலால் ஓர் இலிங்கம் பிடித்து, அபிஷேகஞ் செய்யும் பொழுது அது கரையாதிருக்குமாறு தம் சடைப்பின்னலால் சுற்றிக்கொண்டு நீராட்டினாள் என்றும், அவளால் தோண்டப்பெற்ற "புஷ்கரணி" ஜடாதீர்த்த மென்றும், சடையால் சுற்றிக்கொண்டு அபிஷேகஞ் செய்த காரணத்தால் கபர்த்தீச்வரரென் றழைக்கப்பட்டாரென் றும் புராணங்கூறுகிறது. (கபர்த்தம் - ஜடை) இவரது பெருமை நான்கு உபகதைகளால் விளங்குகிறது. அவைகளை ஒவ்வொன்றாய் விஸ்தரித்து எழுதுவது விரியுமாதலால், கருத்தை மட்டும் நான்கு வாக்கியங்களிற் றெரிவிக்கிறேன்.

(1) மாதுர்கமனஞ்செய்த ஒரு மகாபாதகனை, தன்னைச் சரண மடைந்து சேவித்ததினால், மன்னித்து மோட்சங்கொடுத் தாரென்றும்,

(2) ஒரு ஸ்திரீ, கணவனைத் தன்வசமாக்கிக்கொள்ள நினைத்து பிரயோகித்த ஒளஷதம், அவனை அவள் நினைப்பிற்கு மாறாய்க் கொன்றுவிட்டது. அதனால் அவள் தேகமுழு துங் குட்டநோயுண்டாகிப் புழுத்து, ஊர்களோறுமலைந்து திரிகையில், இத்தலத்துக்குத் தற்செயலாய் வந்து சிவ பிரானைத் தெரிசித்தவுடன் வியாதி நீங்கி, சுய உருவத் தோடு தோன்றினாள். பிறகு, அவளுக்குத் தன்னிடத்தி லிருந்த பக்தியைக்கண்டு, கபர்த்தீச்சுவரர் அவளை மோட்ச த்திற்கு அனுப்பினாரென்றும்,

(3) ஒரு வணிகனுக்குப் புத்திரப்பேறுண்டாக்கினாரென்றும்,

(4) அற்பாயுளுள்ள ஒருவனுக்குப்பூரணவயசு கொடுத்தா ரென்றும், நான்கு கதைகள் சொல்லப்படுகின்றன.

சுவேத விக்நேச்வரரது வரலாறு:—தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்த காலத்தில், அமிர்தமுண்டாகாமல் விஷம்வரவே, இது யாது காரணத்தா லுண்டாயிற்றென்று ஆலோசித்தவளவில், விக் னேச்சுர பூசை செய்துகொள்ளாமல் இக்காரியம் ஆரம்பித்தமை யால் வந்த தீங்கென்று தெரிந்துகொண்டு, மந்தரகிரியாகிய மத்தி லிருந்து சிறிது வெண்ணுரையைத்திரட்டி, ஒருவிநாயகராய்ப் பிடித்துப் பூசித்து பிறகு கடைந்தார்கள். உடனே அமிர்தமுண்டாயிற்று. அக்காலத்திலுண்டான விநாயகர், தேவேந்திரனது ஆத்மபூஜையி லிருந்துகொண்டிருந்தார். இந்திரன் கைலைக்குச் சமானமான சிவ க்ஷேத்திரங்கள் பூலோகத்தில் எங்கிருக்கின்றனவென்று நாரதரைக் கேட்க, நாரதர் திருவலஞ்சுழியையும் ஒன்றாய்ச்சொன்னதால் சுவாமி தெரிசனத்திற்குப் பூஜையோடு திருவலஞ்சுழிக்குவந்தான். சிவா லயத்திற்குள் ஆத்மபூஜையை யெடுத்துப்போவது சாஸ்த்ரவிரோத மாதலின், வெளியிலிருந்த பலிபீடத்தில் வைத்துவிட்டுப்போவோ மென்று இந்திரன் நினைத்தபோது, கோயிலுக்குள்ளிருந்து வந்த ஒரு பிரம்மசாரியைக் கண்டான். (அவர் கபர்த்தீச்சுவரர்.) அவ ரைப்பார்த்து இந்திரன், "சிறுவ! இப்பூசைச் சம்புடத்தைக் கீழே வைப்பது உசிதமன்று: சிறிதுநேரம் இதை நீ தாங்கிக்கொள்வாயா கில், சுவாமி தெரிசனமுடித்துக்கொண்டு வாங்கிக்கொள்ளுகிறேன்." என்று கேட்க, பிரமசாரியான கபர்த்தீசர் "நான் மூன்றுதரங் கூப்பிடுமுன் நீர் வந்து பெற்றுக்கொள்ளாவிடில் கீழே வைத்து விடுவேன்" என்று சொன்னார். இந்திரன் அதற்குடன்பட்டு, கோயி லுக்குள் புகுந்தான். அவன் மறைந்தவுடனே கபர்த்தீச்வரர் மூன்று தரங் கூப்பிட்டுங் காணாமையால், பலிபீடத்தில் பூசைப்பெட்டியை வைத்துவிட்டுத் தம் இருப்பிடத்தை யடைந்தார். இந்திரன் சுவாமி தெரிசன முடித்துக்கொண்டு வெளியில்வந்து பார்த்தபோது கீழே வைத்திருக்கிற பூசையைமட்டுங் கண்டான். அதற்காக மனம்வருந்தி அவன் பூசையைக் கையிலெடுத்தான். அஃது எடுபடாது வேரூன்றி விட்டது. உடனேயிந்திரன் குதிரைகள் யானைகள் முதலியவைகளி னுதவியால் நிலத்தோடு இழுக்கயத்தனித்தும் பயன்படவில்லை. செய் வதின்னதென்று அறிந்துகொள்ளக்கூடாத இந்திரன், பூமியில் விழு ந்து இறக்க யத்தனித்ததைப்பார்த்து விநாயகர் கிருபைகூர்ந்து, "இந்திரா, இஃதொர் சுயம்புத்தலமாதலின் எனக்கு இங்கேயேஇருக்க இஷ்டம் இன்று ஆவணிமீ வளர்பிறை சதுர்த்தியாதலால் இன்றைக்கு

என்னைப் பூசிப்பாயானின் வருடமுழுதும் உனக்கு அளிக்கும் பயனைத்தருவேன். என்று திருவாய்மலர்ந்தருள, இந்திரன் அவரது கட்டளையைச்சிரமேற்கொண்டு, அன்றுபூசித்துத் தன் இருப்பிடஞ்சேர்ந்தான். அதுமுதல் நாளிதுவரையில், விநாயகசதுர்த்தியன்றையதினம் தேவேந்திரனது பூசையென்று வெகுவிமரிசையாய்நடத்தப்படுகிறது. (பதினாறுவகைக் கணபதிகளுள் இவர் பச்சை கணபதி) இவரது பெருமை மேற்கூறிய ஐந்து கதைச்சுருக்கங்களால் வெளியாகிறது.

(1) ஊமையாய் இருந்த ஒருவனைப் பேசும்படி செய்தது.

(2) முழுமூடனாக இருந்த ஒருவனை மகா பண்டிதனாகச்செய்தது.

(3) ஓர் அரசனுக்கு அவனிழந்த பட்டத்தை மீட்டுக்கொடுத்தது.

(4) ஓர் தட்டானுக்கு நல்ல புத்தியளித்தது.

(5) ஓர் ஏழைப் பார்ப்பானுக்கு மிகுந்த செல்வத்தையளித்தது. ஆகிய ஐந்து முகவுரையோடு கூறப்பட்டுள்ள கதைகளால் தெரிகிறது.

நிற்க, கோயிலுக்குள் புகுந்தவுடன் இருக்கிற சந்நிதி, விநாயகர் சந்நிதி. அச்சந்நிதியில், ஒரு சதுரமான அறைக்குள், இரண்டடி உயரமும், ஒன்றரையடி அகலமுள்ள ஒரு மாடத்திற்குள், வெண்ணிறமான ஒரு விநாயகரது உருவம் சுவரோடு ஒட்டிக் காணப்படுகின்றது. அபிஷேகம் எக்காலத்திலுஞ் செய்வதில்லை. அனுதினமுஞ்செய்கிற அர்ச்சனையில் உபயோகிக்கிற புஷ்பத்தின் வேகமான காற்றுப்பட்டால் அங்கங்களுக்குக் குறைநேருமோவென்று நினைத்து அவ்விநாயகர் இருப்பிடத்திற்கு முக்காற்சாணுக்கு முன் நான்கு விரலுயரத்தில் ஒருதகடு பதித்திருக்கிறார்கள். அர்ச்சனைப்புஷ்பமும் அச்சிறு தகட்டைத் தாண்டுவதில்லை. அவ்வளவு நுட்பமானசிலை. பச்சைக்கர்ப்பூரமே சாத்துவார்கள். நாஸ்திகனும் எதிரில்வந்தமாத்திரத்தில், மயிர்க்கூச்சலையும், தானறியாதுண்டாகிற பயபக்தி விசுவாசத்தையுமடைவான் என்பதிற்சந்தேகமேயில்லை. இவரது கோயிலைச் சுற்றிலும் புராணத்திற் கூறியதையொத்து, இந்திரனுடைய விமானம்போலவும், விநாயகரை நிலத்தோடே பெயர்க்க யத்தனித்துக் குதிரை, யானை முதலியனகட்டிக் காலாள் இழுப்பதுபோலவும் கல்லிற் செய்துவைத்திருக்கிற உருவந் தோன்றுகிறது. மேலண்டைச் சுவருக்குப் பிரதியாக அமைத்திருக்கும் பலகணி (ஜன்னல்) பார்ப்போரது மனதில்மிகுந்த வியப்பை உண்டுபண்ணும்.



தேவகோட்டைச்செட்டிமார்கள் திருப்பணிசெய்வதற்கு முன் எழுதச்செய்கிற உடன்படிக்கையில் "திருவலஞ்சுழிப் பலகணி, ஆவுடையார்கோயில் கொடுங்கை, திருவீழிமழலை வௌவால் மண்டபம் தவிர்த்து பாக்கிசெய்துகொடுப்போம்" என்றெழுதுவது வழக்கமாம். 15 அடி உயரமும் 10 அடி அகலமுமுள்ள ஒரு கருங்கல்லிற் செய்திருக்கிற நுட்பமான வேலைத்திறமை, வேறெங்குங்காணமுடியாதது. தேக்குமரத்திலும் செய்யக்கூடாததான அவ்வளவு பெருமைவாய்ந்திருப்பதால், தேவதச்சனை மயனால் நிருமிக்கப்பட்டதென்றே சொல்லவேண்டும்.

இவருக்குப்பத்தினிகளிருவர்—பிரமனின்புத்திரி வாணியும் (புத்தி) விஷ்ணுவின்புத்திரி கமலாம்பாளுமாம் (சக்தி) மார்கழிமாதம் வளர்பிறைச் சஷ்டியன்றையதினம் மகாவிஷ்ணுபூஜையென்று ஆகமங் கூறுகின்றது. இவ்விநாயகர்பேரில் காளமேகப்புலவர் பாடிய துதிகள் வருமாறு:—

"பறவாத தும்பி கருகாத வெங்கரி பண்புரண்டே
பிறுகாத தந்தி யுருகாத மாதங்க நிந்துநுதல்
நிறவாத சிந்தூரம் பூசாக்களபம் நெஞ்சுனையிற்
பிறவாத வாம்பல் வலஞ்சுழிக்கே வரப்பெற்றனனே."

தும்பி, கரி, தந்தி, மாதங்கம், சிந்தூரம், களபம், ஆம்பல் முதலியன யானையின் மறுபெயர்கள். அடியார்கள் எத்தலத்திற்குச் சென்றாலும், ஆங்காங்குள்ள கடவுளையே சிறப்பாகக்கூறுவது இயல்பாயினும், எல்லாத்தலங்களினும் இதுமிகச் சிறந்ததென்று மேற்கூறிய செய்யுட்களானினிது விளங்கும்.

"என்னபுண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்துள்
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே."

"கயிலை நாதன் கறுத்தவர் முப்புர
மெயில்க ளெழ வெல்லவல வித்தகன்
மயில்களாலும் வலஞ்சுழி யீசனைப்
பயில்கிலார் சிலர் பாவித் தொழும்பரே."

"இலங்கை வேந்த னிருபது தோளிற
வலங்கொள் பாதத் தொருவிர லூன்றினன்
மலங்குபாய் வயல்சூழ் வலஞ்சுழி
வலங்கொள் வாரடி யென்றலை மேலவே."

முதற்செய்யுளில், தன்மனத்தைப்பார்த்துப், பூர்வசென்மத்தில் எத்தனை மேன்மையான புண்ணியஞ்செய்ததால் இத்தலத்துக்குவரநேர்ந்ததென்றும், இரண்டாஞ்செய்யுளில், திருவலஞ்சுழியிலெழுந்தருளியிருக்கிற சிவபிரானைத் துதியாதவர்கள் பாவிகளே என்றும், மூன்றாஞ்செய்யுளில், திருவலஞ்சுழியை ஒருபிரதக்ஷிணம் எவன்செய்வானோ அவனது பாதம் என்சிரசின்மீதிருக்கவேண்டுமென்றும் துதித்திருப்பதைப் பார்க்குமிடத்து இஃது ஒப்பற்றதலமென்று துணியப்படும்.

காவிரிசூழ்வலஞ்சுழி என்றமையால், இக்காலத்தில் அரசலாறு என்று வழங்கப்படுவதே காவிரியென்று தெரிகிறது. மேலும் திருவேரகமென்ற சுவாமிமலைத் தலபுராணத்தில், இப்போதுகாவிரியென்று வழங்கப்படுகிற ஆற்றை குமாரதாரையென்றுங் கூறியிருக்கிறது. திருக்குடந்தையில் நடத்தப்படுகிற சப்தஸ்தானஉற்சவத்தில் சுவாமியை எழுந்தருளச்செய்கிற ஏழூர்களில் இஃதொன்று. இத்தலத்திற்கும் இதைச்சுற்றிலுமிருக்கிற தாராசுரம், திருச்சத்திமுற்றம், பட்டீச்சுரம், பிரும்ம நந்தீச்சுரன்கோயில், திருப்பாற்றுறை முதலியஸ்தலங்களுக்கும், நான்குகாலம்பூசைக்குக்கூடப்போதாததான சிறிதளவுபொருள் இருப்பதை ஆலோசிக்குமிடத்து, இவையாவும் இவ்வூர்க்குத் தென்கிழக்கில் அரைமைல் தூரத்திலிருக்கிற சோழன்மாளிகையென்ற ஊரிலப்போது இந்த அரசனுடைய நேர்விசாரணையிலிருந்தனவென்று கர்ணபரம்பரையாய்க் கேள்வியுறலை நம்பவேண்டியிருக்கிறது.

சென்னை பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய மகாமகோபாத்தியாயர் ஸ்ரீமத்-உ. வே. அய்யரவர்களும், திருக்குடந்தையிருக்கிற நேட்டிவ்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய ஸ்ரீமத்-ம. வீ. ஆசார்யரவர்களும் (Editior, Tamil Translation of Sri Mahabharatam), அவ்வூரிலிருக்கிற மாஜி தாசில்தார் மகா-ள-ளஸ்ரீ ஐயாசாமி சாஸ்திரிகளவர்களும், அவ்வூரிலிருந்த சிவசாமியுடையாரவர்களும் அடிக்கடி சுவாமிதரிசனத்துக்கு வருவதுண்டு. அவர்களே இத்தலத்தின் பெருமையை உள்ளபடியறிந்தவர்கள்.



கடைச்சங்கத்துப் புலவர்களுள் ஒருவராகிய நக்கீரர், தமக்கு நேர்ந்த சாபத்தை அகற்றிக்கொள்ளுமாறு, சிவதலங்களைத் தேடிச் சென்றபோது இவ்வூரிற்றங்கி மும்மணிக்கோவை பாடியிருக்கிறார். (பதினோராந்திருமுறையிலுள்ளது.)

கோவிலுக்குள்ளிருக்கின்ற பிடாரி அம்மனையும், பைரவனையும் அவசியம் ஒவ்வொருவரும் பார்க்கவேண்டியது. இவர்கள் ஒரு காலத்தில் மகா வரப்பிரசாதிகளாய் இருந்ததாயும், தங்களை ஆசிரயித்து வந்த பூசகரிலொருவர் (குருக்கள்) தமக்கு நேர்ந்த ஓர் அபகாரத்தைச் சகிக்காமல், மந்திரத்தால் இவர்களது சக்தியை கிரகித்து அவயவங்களையுங் குறைத்து விட்டதாகக் கேள்வி. சமீபத்தில் போய்ப்பார்த்தால் உயிரோடுகூடிய ஒரு மனிதன், ஸ்திரீ, பேசுவதுபோலத் தோன்றும். இது சனிபகவான் சுயம்பு க்ஷேத்திரமென்றுங் கூறப்படுகிறது. சனிபகவான், இவ்வூரிலிருப்பதுபோல் இந்தராஜதானியில் திருநள்ளாறு என்ற ஊரில் தான் காணக்கூடும். கோயிலுக்குள் அநேக சுரங்கங்களிருக்கின்றன. பூமிக்குள் மார்க்கமாய் நெடுந்தூரம் போவதாயும், அச்சுரங்கங்களில் முக்கியமான ஒன்றில், சிறிதுதூரம் போனவுடன் துர்வாசரென்ற ரிஷியும் இன்றும் அகோரதவஞ்செய்துகொண்டிருப்பதாயும் சொல்லுகிறார்கள். உள்ளே எவ்வாறிருக்கிறதென்று பார்க்கக்கூடாதபடி இருட்டாயும் பயங்கரமாயுமிருக்கிறது. இன்னும் இந்த க்ஷேத்திரத்தைப்பற்றித்தெரிந்துகொள்ளவேண்டியவைகள் மூன்றுவிஷயங்கள்:—

(1) அட்டதிக்குப்பாலகர்கள், ஒவ்வொருவரும், தாம்தாம் தம் தம்முடைய திக்கில் தத்தம்பேரால் ஓர் இலிங்கமும் ஒரு புஷ்கரணியும் பிரதிஷ்டை செய்திருக்கிறார்களென்று புராணத்திற்கூறியிருப்பதை யொத்து, எல்லாப்பக்கங்களி

னும் இன்றைக்கும், தீர்த்தமும், லிங்கமும் காணப்படு கின்றன.

(2) மரணகாலத்தில் ஒவ்வொரு ஜீவனுடையவலது காதிலும், சிவபிரான் உமையவள் சகிதமாகவந்து பிரணவோபதேசம் தாரகத்தையுபதேசிக்கிறாரென்று புராணத்திற் சொல்லியிருப்பதால் ஜீவன் முக்திக்ஷேத்திரம்.

(3) திருவிடைமருதூரில் இருக்கிற மகாலிங்கத்துக்கு பஞ்சமூர்த்திகளும் அவரவர்கள்திக்கில் அமைந்திருக்கிறார்களென்பர்; அதாவது தென்மேற்கில் விநாயகரும், மேற்கில் சுப்பிரமணியரும், வடக்கில் சண்டிகேச்வரரும், கிழக்கில் நந்திதேவரும், தெற்கில் தக்ஷிணாமூர்த்தியும் முறையே திருவலஞ்சுழி, ஸ்வாமிமலை, சேயனூர், திருப்பங்கூர், ஆலங்குடி முதலிய தலங்களில் அமர்ந்திருக்கிறார்கள். சிவபிரானுக்கு இடதுபாகத்தில் உமையவளிருப்பது பெரும்பான்மை வழக்கம். இத்தலத்தில் வலப்புறத்திருக்கிறாள்.

இவ்வளவு மகிமைதங்கிய ஊர் பாழடைந்து நாளுக்குநாள் கோயிலும் க்ஷீணகதியடைந்துவருகிறது. ஆதலின் ஒவ்வொரு சிவனடியாரும் தம்வாணாளில் ஒருமுறையேனும் இவ்வூருக்குப்போய் சுவாமி தெரிசனம் செய்யவேண்டியது இன்றியமையாத ஒரு காரியம். தம்மாலான பொருளுதவிசெய்து இவ்வூர்ப்புராணத்தைத்தமிழில்மொழி பெயர்த்து அச்சிடச்செய்யவேண்டியதுடன், கோயிலுக்கு அவசியமாகச்செய்யவேண்டிய சில கட்டிடப்பழுதுகளையும் திருத்தவேண்டும்.

மடாதிபர்களான தம்பிரான்களும், தேவகோட்டைச்செட்டிகளும் சாதாரணதலங்களைக்கூடத் தம் நேர்பார்வையில் வைத்துக்கொண்டு நடத்திவருவதைப்பார்க்கிறபோது, இதை இதுவரையில் ஒருவரேனும் கவனியாதிருப்பதற்கு, இதைப்பற்றிக்கேள்விப்பட அவகாசமில்லையென்பதைத்தவிரவேறு காரணமிராது.



இவ்வூரில், பரம்பரையாய்ச் சிவபிரானுக்குத் தொண்டுசெய்வதிலேயே தம்பொருளைச் செலவிடுகிற இயல்பினராய் வாழ்ந்துவருகிற ஸ்ரீமாந்-கல்யாணசுந்தரம்பிள்ளையவர்கள், இக்கோயிலைக் கவனியாதிருந்திருப்பார்களாயின், நெடுநாளைக்குமுன்னரே க்ஷீணத்தையடைந்திருக்கும். அவர்களுடைய பக்தியும் ஈச்வரகார்யத்திலவர்களுக்கிருக்கிற சிரத்தையும் யாவராலும் கொண்டாடத்தக்கவை. நெடுநாளாக நடத்தப்படாமலிருந்த சில உற்சவங்களைச் சிலகாலமாய் நடத்திவருகிறார்கள்.

இது சம்பந்தமாய் இன்னுங்கேட்க ஆவலுடையவர்களை நான் தெரிந்துகொண்டால் அவர்களது மனோபேக்ஷையை உடனே எவ்விதத்திலும் நிறைவேற்றுவேன்.

தி. ப. சுப்பிரமணியன்,
தென்னிந்தியா ரெயில்வே, ஆடிட்டர் ஆபீஸ், திருச்சி.

---

உ

சிவமயம்.

# ஸெபன்னிஸா.

## அவுரங்கஸீப் தர்பாரில் ஒருபண்டித சிரோமணி.

---

மொஹுலாய வம்சத்தில் பிரக்யாதிபெற்ற மன்னர்களில் ஒருவனாகிய அவுரங்கஸீப் அரசன் ஸிவாஜி என்னும் மஹாராஷ்டிரத்தலைவனை அவமானப்படுத்த எண்ணங்கொண்டு. ஒருகால் அவனைத் தர்பாருக்கு வரக்கட்டளையிட்டான். அவுரங்கஸீபின் ஆணையைச் சிரமேற்கொண்ட ஸிவாஜியரசனோ தன் மன்னனுக்கு நஸராக (Nazr)ச்செலுத்தவேண்டிய ரூ 30,000-த்துடன், தனிமையிற்போயினன். ஸபாமண்டபத்தில் பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், மந்திரிகள், பிரபுக்களனைவருடனும் கோலாகலமாய்க் கொலுவீற்றிருந்த அவுரங்கஸீப், இவனைப்பங்கம்செய்விக்கவும், தன் உன்னதபதவியை ஸிவா

யிச் சிறிக்கவும் கருதி, அம்மஹாராஷ்ட்ரத்தலைவனை லக்ஷியம்செய்யாது, தன் பின்புறத்தே நிற்கும் மன்னர்களில் மூன்றாவது வரிசையில் நிற்கவைத்தனன். இம்மானக்குறைவை ஸஹிக்கமாட்டாதவனாக ஸிவாஜிக்குக் கண்களில் தீப்பொறிபறந்தது. மிகவும் கோபித்துக்கொண்டு உரத்தகுரலில் வாயில் வந்தவாறெல்லாம் வைதுகொண்டே தர்பார்மண்டபத்தை விட்டுச்சென்றான். அவுரங்கஸீபும் அதன்மீது கோபமிக்கோனாய் "இனிக் கூப்பிடப்பட்டாலல்லது ஸிவாஜி தர்பார்மண்டபத்திற்கு வருதல் தகாது" என்று மற்றொரு கண்டிப்பான திட்டமுமிட்டான். இது கேட்டும் ஸிவாஜி இவ்வார்த்தைகளுக்குச்செவிகொடாதவன்போலவும், மன்னனாகிய அவுரங்கஸீபையாயினும்; அவன் ஸபையோர்களையாயினும் மதியாதவன்போலவும், மிக்க அலட்சியத்தோடும் கம்பீரமாய்ச் சென்றான்.

இவன் செய்கையை மன்னன் முற்றும் கவனித்திருந்தானாயினும் யாதொன்றும் பேசிலன். மஹாராஷ்ட்ர மன்னனின் வீரதீர சௌர்ய பராக்ரமத்தைப்பற்றி ஆங்கிருந்தோர்யாவரும் வியந்துமெச்சினர். ஸிவாஜி அவனுடைய அடாதவார்த்தைகளின் நிமித்தம் எங்கு அவுரங்கஸீபினால் பிடிக்கப்பட்டுக் கொல்லப்படுவானோ என்று ஐயப்பட்டனர் சிலர்.

ஆனால் அக்காலத்தில் அவுரங்கஸீபின் குமாரத்தியின் வேண்டுகோளே யில்லாமற் போயிருந்தால், ஸிவாஜி அப்போதே கொல்லப்பட்டுப் போயிருக்க வேண்டியவன்தான். அவுரங்கஸீபின் தர்பாரில் அக்காலத்திய வழக்கப்படி திரை மறைவில் தன்னுடைய தாதிமார்களுடன் இனிதிருந்த அம்மஹாராஷ்ட்ர மன்னனின் அபூர்வமானஸதைர்யத்தை மெச்சிப் பாராட்டிய அவுரங்கஸீபின் குமாரி, ஸிவாஜியை உயிருடன் விடும்படி தன் தந்தையை மிகுதியும் மன்றாடிக் கேட்டுக் கொண்டாள்; அவளது வேண்டுகோட் கிசைந்து அவனை மன்னன் யாதும் செய்யாது விட்டனன்.

இத்தகைய தயாளகுணமும், அதிமேதையான புத்தியும் வாய்ந்த மாதர் திலகத்தின்பெயர் ஸைபன்னிஸா (Zebunnisa) அப்பெயரின் பொருள் மாதர் திலகமே. பூவும் மணமும் போல புத்தியும், யுக்தியுங்கொண்ட ஸைபன்னிஸா விடத்தில் முரட்டுஸ்வபாவமுள்ள அவள் தந்தை அவுரங்கஸீப் அத்யந்தம் விசுவாசமுள்ளவன். 1639-ம் வருஷத்தில் அவுரங்கஸீபுக்கு ஜனித்த ஸீமந்தபுத்ரியாகிய ஸைபன்னிஸாவைப்பற்றிச் சரித்ரக்காரர்கள் மிகுதியும் புகழ்ந்து கூறினர். இம்மாதுசிரோமணி மனோக்யமான மனோபாவங்களும் ஸ்வதந்த்ர யூகமும், பொது நோக்குள்ள உறுதியான அபிப்ராயங்களை வெளியிட்டு அவற்றின்படி எவற்றையும் நடத்துங்கருத்தும் கொண்டவள். ஸ்திரீகள் நம் நாட்டில் நடத்தப்படுவதை ஒப்பாமல் தன் ஸ்வதந்த்ரத்தை நாட்டிக் காலங்கழித்து வந்தவள்; பொம்மைக் கல்யாணங்கள் போற்செய்யும், தற்கால வழக்கத்திற் கேற்ற விவாகங்களைச் செய்துகொள்ள ஸைபன்னிஸா ஒருநாளும் ஸம்மதிக்கவில்லை. அக்காலத்தில் அந்நங்கையர் திலகம் பாரஸீக பாஷையில் வித்வக்குழாங்கள் போற்றிப்புகழும் பண்டிதை சிரோமணியாக விளங்கினாள். கவிகள் புனைவதில் தன்னினும் வல்லவர் இப்பூமண்டலத்தில் எவருமிலர் என்ற பேரும் படைத்தாள். தன்னிஷ்டப்படி வஸிக்குமாறு தன்னுடைய பிதாவிடமிருந்து அநுமதியும் பெற்றாள். இந்தியாவிலும் பாரஸீகத்திலுமுள்ள பாவலர் பலருக்கும் திருப்பம் போக்கி, டில்லியில் ஒரு வித்வத்ஸபை ரமணீயமாய் ஏற்படுத்தினாள்.

அந்தர்யாமி (The Hidden one) என்னும் அரும்பெயர்தானே புனைந்து கண்திறந்து எவரும் எதன்பொருட்டும் தன்னைப் பார்க்கா திருக்கும் வண்ணம் எப்போதும் முகபடாமணிந்திருந்தாள். தர்பாருக்கு வந்து ஸபையில் மனித ஸமூகத்துடன் கலந்து இராஜகாரியங்களில் ஸமயோசிதமாய்த் தன் தந்தைக்கும், பிறருக்கும் புத்தி புகட்டுவாளே யாயினும், இவர்களை அவள் எக்காலும் கண்ணெடுத்துப் பாராமல் முககவசத்துடனேயே பேசி ஸபாரஞ்சிதம் செய்து வந்தாள். பொம்மைக்கு ஸ்ரீங்காரம் செய்வதுபோல் தன்னை நகைகளினால் அலங்கரித்துக் கொள்வதை வெறுத்தவளானபடியால், அவள் வாழ் நாளில் அவளணிந்த ஆபரணங்கள் மிகஸ்வல்பமே.

## அவள் கொண்ட காதலின் கோரமான முடிவு

---

அவள் அபிமானித்த ஆசை நாயகனின் சரித்ரம் மட்டும் துக்ககரமானது.

பால்ய வயதுடைய அகில்கான் (Akilkhon) என்னும் கவியொருவன் ஸெபன்னிஸா விடத்துவருவதும் போவதும் அன்பாய்ப் பேசுவதும் குலவுவது மாயிருந்தான். கடைசியில் அவனே ஸெபன்னிஸாவின் மனதைக் கவர்வதில் வெற்றி பெற்றான். அவுரங்கஸீப் இதற்கிடையில் ஸெபன்னிஸாவைக் கல்யாணஞ்செய்து கொள்ளக்கட்டாயப் படுத்தினான். அப்போது தன்னுடைய தந்தையிடத்திலிருந்து ஸ்வயம்வரம் தனக்கு வேண்டுமென்று வேண்டிக்கொண்டாள். அவள் விருப்பின்படியே நாட்டிலுள்ள தக்க தனவான்கள் படங்களெல்லாம் அவள் கையின்கணிடப்பட்டன. அப்படங்களில் அகில்கானையே அவள் தன் கணவனாக வரித்தாள்.

அவுரங்கஸீபும் அகில்கானுக்குச் சொல்லியனுப்புவித்தான். தன்னந்தஸ்துக்கு மிஞ்சின இராஜனின் பெண்ணை விரும்பினதற்காகத் தன்னைத் தண்டித்து விடுவான் மன்னன் என்று அவளை மணந்துகொள்ள வீணாய் ஆவல் கொண்ட மற்றொருவனிடமிருந்து கேட்ட அகில்கான் கோழைத்தனமுள்ளவனாய், தனக்குக் கல்யாணம் வேண்டாமென்று ராஜஸேவகத்தையும்விட்டு, டில்லிநகரினின்றும் தப்பியோடினான். ஸெபன்னிஸாவும் மிகுதியும் வருத்த முற்றாள். பயத்தினால் அவளை விட்டு நீங்கின அகில்கானும் காமவசத்தினால் இழுக்கப்பட்டு மீட்டும் டில்லிநகர் சேர்ந்தான். இருவரும் ஸந்தித்தார்கள். ஓர் நாள் இவர்கள் அரண்மனை அந்தப்புரத்து வஸந்தச் சோலையில் தனித்திருக்கும் ஸமயத்தை எப்படியோ அறிந்த அவுரங்கஸீபு திடீரென அவ்விடம் தோன்றினான். மன்னன் வருகிறான் என்பது கேட்டுணர்ந்த ராஜகுமாரத்தி தனக்கு நேரக்கூடிய அகௌரவம் ஒன்றையே பெரிதெனக்கருதி தன் ஆசை மணாளனை, ஆங்கிருந்த டெக் (Deg) என்ற நீண்ட சமையல் பாத்ரத்தில் புகுத்தி மறைத்தாள். அயோக்யமுள்ள வேலைக்காரனிடமிருந்து இது செய்தி உணர்ந்த அவுரங்கஸீபு ஆங்குத் தோன்றியதும், சமையற் பாத்ரத்திலுள்ள தென்னென்று தன்மகளைக் கேட்டான். கொதிப்பிக்க வைத்திருக்கிற நீர்தான் என்று அவள் மறுமொழி பகர்ந்தாள். மன்னனும் ஆனால் அந்நீரை அடியில் நெருப்பிட்டுக் கொதிப்பி என்று உத்தரவிட்டான். அவ்வாறே அப்பாத்திரத்தின் அடியில்



தீ மூட்டப்பட்டது. அப்போதும் ஸெபன்னிஸா தன்னாசை மணாளனிலும் தன்மானமே பெரிதென்று கருதி, அப்பாத்ரத்தருகிற் சென்று, "என்னாசைமணாள! என்னின்னுயிர் நண்ப! என்னுடைய கௌரவத்தை உத்தேசித்து நீ வாய்திறவாதொழி" என்று முணுமுணுத்தாள். அகில்கானும் அச்சமயற்பாத்ரத்தில் பக்குவமாய்மாண்டான். பாரஸீக பாஷையில் கவிசெய்வதில் வல்லவளாகிய இவள் தன்னுடைய பாடல்கள் ஒன்றில் "ஓர் ஆசை நாயகனின்கதி என்கொலோ? மற்றொருவனினது திருப்திக்காகப் படுகொலை புரியப்படுவதே". என்று எழுதியிருக்கிறாள். இவளால் செய்யப்பட்ட பாரஸீகப்பாடல்கள் இன்றும் எல்லோராலும் மிகுதியும்போற்றிப் பாராட்டப் பட்டுவருகின்றன.

இவள் இராஜாங்கக் குற்றமொன்றின் பொருட்டு நெடுங்காலம் வரையில் ஓர் கோட்டையில் அடைக்கப்பட்டுக் கிடந்தாள்.

இத்தகைய ஸெபன்னிஸாவின் சரித்ரத்தினால், முற்காலத்திய பிடிவாதமும் மூர்க்கமுங்கொண்ட கீழ்நாட்டு மன்னர்களுங்கூட மேதையர்களான நங்கையர் மணிகளின் ஸ்வதந்திர யூகத்தினையும், பின்னும் அவருக்குள்ள மேன்மைக் குணங்களையும் மிகுதியும் வியந்து பாராட்டிப் போற்றி வந்தார்கள் என்பது பெறப்படுகின்றது. ஸாதாரணமாய் அக்காலத்தில் தங்கள் கல்யாணவிஷயங்களில் ஸ்வயம் வரம் என்னும் ஸ்வதந்த்ரம் அவர்களுக்கு கொடுக்கப் பட்டிருந்ததோடு, நாட்டின் நான்குமூலைகளினின்றும் பாவலர் குழாங்களைத் தருவித்துச் சேர்த்து வித்வஸபைகளிற் சேர்ந்து பழகி நல் வித்தை கற்று பண்டிதைகளாகவும் கவிதைகளாகவும் விளங்கிவரும்படி பூர்வகாலத்து மன்னர்கள் அவர்களை விட்டிருந்தார்கள்.

முற்காலத்தில் பாஷா ஞானம் மிகுதியும் வாய்ந்த தன்னிடத்து வித்யாவிஷயங்களில் வாதித்து ஜயித்தோனையே விவாகம் செய்து கொள்வேன் என்று தருக்கிச் சபதங்கூறிய, பூர்வகாலத்திய இந்திய இராஜ கன்னிகையின் சரித்ரத்தை ஞாபகப் படுத்திக்கொள்ளலாம். அன்னவளைக் கைப்பிடிக்கக்கருதி நாட்டின் எல்லா மூலைகளினின்று வித்வான்கள் இராஜகுமாரர்கள் பலரும் வந்து வாதித்துத்

தோல்வியுண்டனர். அப்பண்டிதையும் நெடுநாட்கள் காறும் தான் நினைத்த மாதிரியான கணவனை வாய்க்கப் பெறாது, கன்னிகையாகவே யிருந்தனள். பின்னர் அவ்வரசாங்கத்தின் மந்த்ரிகள் அவள் கூட்டத்தையை நோக்கி வெறுப்புற்றவர்களாய், அவளை அவமானப் படுத்தக்கருதி, ஹரி என்ற அக்ஷரங்கூடத் தெரியாத இடைப்பையனை அவளுக்குக் கணவனாகச் செய்விக்க. அவனே பிற்காலத்தில் பூர்வஜன்மாந்தர வினைப்பயன்முதிர்ச்சியினால் மஹா கவியாக உலகம் புகழும் காளிதாஸனானான் என்பது உலகப்ரஸித்தம்.

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

௨

சிவமயம்.

தணிகைப்புராண

# அருஞ்செய்யுள் விளக்கம்.

## கடவுள் வாழ்த்து.

### சுப்பிரமணியக்கடவுள்.

ஓங்கொளியாய் விசும்பாதி தொறுமியலுந்தனதியல்பையுருவின்மாட்டும், பாங்குபெறத்தெரித்ததுபோற்பல்பொறியாப்பரமர்விழிபயந்தஞான்று, தேங்கொளியாய் வெளியடர்ந்து வளிதொடர்ந்தொள்ளொளி படர்ந்து தெளிநீர்ப்புக்கு, நீங்கிவிளையாட்டயர்ந்து தணிகையமர்பெருவாழ்வைநினைந்து வாழ்வாம்.

இதன் பொருள். பேரொளியாய் ஆகாயமுதற் பிருதிவியீறாய பூதங்கள் யாவினும் வியாபித்தியலுந்தமது சொரூப விலக்கண வியல்பினையேனைத்தடத்தவடிவின் மாட்டும் உரிமை பெறத்தெரித்தாங்கு சிவபிரான் திருநுதல் விழி பலபுலிங்கங்களாகக்கான்ற வஞ்ஞான்று நிரம்பு மொளியாய் வெளியினையடர்ந்து, வளியினிற்றொடர்ந்து, ஒள்ளிய வொளியினிற் படர்ந்து, நின்மலமாய நீரின்கட்புக்கு, அதனி னீங்கி, நிலனின்கட்டிரு விளையாட்டினைப்புரிந்து, தணிகைவரையின் கண்விற்றிருக்கின்ற பெருவாழ்வாய சுப்பிரமணியப்பிரானை நினைந்துவாழ்வாம் என்றவாறு.



பரமர் விழிப்பயந்தஞான்று என்று பாடமாயின் பரமர் விழியாற்பயந்தவஞ்ஞான்றென்று பொருள் கூறுக.

அடர்ந்து, தொடர்ந்து படர்ந்து, புக்கு, நீங்கி, அயர்ந்து, அமர்வாழ் வெனவியையும்.

"ஆதிநடுவந்த மிலாவளவில் சோதி" எனவும், "ஓங்கொளியாய்" எனவும், சிவஞானசித்தியினும், சிவப்பிரகாசத்தினும், பதிவணக்கங் கூறிப்போந்த முறையானே மீண்டுமாசிரியர் "ஓங்கொளியாய்" என்று விதந்து கூறினர் என்க.

"அருவமுமுருவுமாகி யநாதியாய்ப்பலவா யொன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பு" என்று கச்சியப்பசிவாசாரியரருளிச் செய்ததூஉம் இப்பொருட்டெனவுணர்க. ௧

இனி, இவ்வொளியேனைய பூதவொளிகள்போலாது சுத்தசைதன்னியமாயபதவொளியென்பார் ஓங்கொளியென்றும், அஃதனுக்கட்கருள் செய்வானிங்ஙனமாய வடிவினைக்கொண்டதென்பார் ஒளியாயென்றும், அவ்வொளியாகாய முதலாய பூதங்கள்யாவினும் வியாபிக்குமியல்பினதென்பார் விசும்பாதிதொறுமியலுமென்றும், அங்ஙனமியலுமச்செயறானுஞ் செயற்கையானன்றி யியற்கையானேயுளதென்பார் தனதியல்பென்றும், அகரமேனையவக்கரங்களின் கண்ணும் வியாபித்து நின்றாங்கு அருவமாயவற்றின்கண் வியாபித்தொழுகுந்தாமுருவின்கண்ணுமுளராதல் வேண்டுமென்பார் உருவின்மாட்டுமென்றும், உலகெலாமாகி வேறாயுடனுமாய் நிற்றலானேயங்ஙனமருவன் முறையென்பார் பாங்குபெறவென்றும், நம்மனோரதனையறிந்துய்வானென்பார் தெரித்தென்றும், அது தமக்குளதாய நியதியன்றென்பார் போலவென்றும், அவ்வியல்பினர் தோன்றற்குத் தாரகமாவாரெவரினும் மிக்காராகவேண்டுமென்பார் பரமரென்றும், அப்பரமரது பாலவிழியேனைய ஆதித்தன் அம்புலியாம்விழிகள்போலாது ஞானநாட்டமாய அங்கிவிழியென்பார் பரமர் விழியென்றும், ஐந்துமுகத்தோடதோமுகமுமாய தொல்லைத்திருமுகங்களாறன்கண்ணுமுளவாயவாறுநுதல் விழிகளினுந்தோன்றியனவென்பார் பல்பொறியென்றும், ஞானந்தானுருவாகிய வென்பார் பொறியாவென்றும்,

அப்பெருந்தகையினரைப்பயக்குமியல்பினது மங்ஙனமாய விழியே யென்பார் விழிபயந்தவென்றும், எஞ்ஞான்றுமன்று வேண்டுமவதிக் கணென்பார் ஞான்றென்றும், யாங்கணுமிடையீடின்றி நிறைந்தென் பார் வெளியடர்ந்தென்றும், வளியினூற்றொடரப்பெற்றமையின் வளி தொடர்ந்தென்றும், படருந்தூய்மையினையுடைத்தென்பார் ஒள்ளொ ளியென்றும், அதன்கட்பரந்து படர்ந்தாரென்பாரொளிபடர்ந்தென் றும், தம்மாட்டுமூழ்குவோரையுந் தூய்மைசெய்து தாமுமெஞ்ஞா ன்றுந் தூய்மையுடையவென்பார் அவர் புக்க கங்கையினையும் அதன் மருங்கினதாய சரவணத்தினையுந் தெளிநீரென்றும், மேல்வருமுறை க்கியையவாண்டுப் புக்காரென்பார் புக்கென்றும், அங்ஙனமே நில னின்கண்ணு நிலவவேண்டுமென்பார் நீங்கியென்றும், அலகிலாட லையாண்டுப் புரிந்தமையின் விளையாட்டயர்ந்தென்றும், அவர் செங்க ண்வெய்ய சூர்ச்செருத்தொழிலினுஞ் சிலைவேடர்தங்களிற் செயுஞ்செ ருத்தொழிலினுந் தணிந்து வந்தெழுந்தருளிய கிரியென்பார் தணிகை யென்றும், அக்கிரியே பிரமன் நந்தி அகத்தியன் நாரதன் முதலிய சத்திநிபாதர்க்கருள் செயுந்தரத்ததாகலின் தனையமர்ந்தென்பார் அம ரென்றும், அழிதன் மாலையவாய நம்போலிகளது சின்னாட் பல்பிணி வாழ்வு போலாது நித்தமாய நிரதிசய வாழ்வென்பார் பெருவாழ் வென்றும், அங்ஙனமாயவாழ்வினை யுடையாரை நினைந்துழியன்றி யவ்வாழ்வு வாராதென்பார் நினைந்தென்றும், அங்ஙனமப்பெருந்தகை யினரை நினைப்பவரதனையடைதலொருதலை யென்பார் வாழ்வாமென் றுங் கூறினாரெனவறிக.

இனி: ஓங்கொளியாய் விசும்பாதிதொறுமியலுந் தனதியல் பெண்வே சுத்தசிவன், சதாசிவன், மகேசன், உருத்திரன், மால், அயன் என்னுமாறுகர்த்தர்களாவா ரிவரென்பதூஉம், அவரியற்றுஞ் செயல்களனைத்தையு மியற்று தியற்றுமியல்பின ரிவரென்பதூஉம் இறைக்குளவாய குணங்களாறுமே செய்க்கு முகங்களாயமர்ந்தவெ ன்பவாகலின் அக்குணங்களாறனையுமம்முகங்களாறுமுளவாவன வெ ன்பதூஉம், தணிகையமர் பெருவாழ்வெனவிதந்த மையானே இக்கா ப்பியம் இப்பெற்றியினையுடைய தன்னிகரிலாத் தலைவனையுடைத்தெ ன்பதூஉம், கடவுள்வாழ்த்து முதலாகப்பெருங் காப்பியத்திற்குவே



ண்டப்படுமிலக்கணங்கள் பெரும்பாலுங் கூறப்படலினிது பெருங் காப்பியமாமென்பதூஉம், இந்நூலாசிரியரது நுண்ணறிவு விரிதன் மான இதன்பொருளும் மொருங்கேவிரித்துரைப்பதூஉம் பெற்றாம்.

இனி: வெளிமுதலிய பூதங்கட்குளவாய தொழில்களனைத்திற் கும் காரணராதலானே வெளியடர்ந்து, வளிதொடர்ந்து, ஒள்ளொளி படர்ந்து, தெளிநீர்ப்புக்கு, நீங்கி, விளையாட்டயர்ந்து என்பனவற்றி ற்குமுறையானே யுளவாயசெயல்கடமையுங் கொள்க.

"பெருங்காப்பியநிலை பேசுங்காலை, வாழ்த்துவணக்கம் வருபொருளிவற்றி னொன், றேற்புடைத்தாகி முன்வரவியன்று, நாற்பொருள்பயக்குநடைநெ றித்தாகித், தன்னிகரில்லாத் தலைவனையுடைத்தாய், மலைகடனாடு வளநகர் பருவம், இருசுடர்த்தோற்றமென் றினையனபுனைந்து, நன்மணம்புணர்தல் பொன்முடிகவித்தல், பூம்பொழினுகர்தல் புனல்விளையாடல், தேம்பிழிமது க்கழி சிறுவரைப்பெறுதல், புலவியிற்புலத்தல் கலவியிற்களித்தலென், றின் னனபுனைந்தநன்னடைத்தாகி, மந்திரந்தூதுசெலவிகல்வென்றி, சந்தியிற்றொ டர்ந்து சருக்கமிலம்பகம், பரிச்சேதமென்னும் பான்மையின் விளங்கி, நெ ருங்கிய சுவையும் பாவமும்விரும்பக், கற்றோர்புனையும் பெற்றியதென்ப."

## சமயகுரவர்.

முன்னாலுந்துளைக்காத்தோன்முருகவேள்பிடித்தெழுந்தமொய்ம்பிற்றாவப்
பின்னாலுங்கதிர்ச்சடிலப்பிஞ்ஞகனடித்தொண்டின்பெருக்கவீறு
பொன்னாலும்பெண்ணாலுமறிவுறாத்திவ்வுலகினிடர்பொன்றியாண்ட
வந்நால்வர்பதகமலமகந்தழீஇப்புகழ்ந்திறைஞ்சியரந்தைதீர்வாம்.

இ - ள். முன்றாங்காநின்ற புழைக்கையினையுடைய மூத்த நா யனாரும் முருகவேளும் பிடித்தெழுந்த மொய்ம்பின்கட்டாவப் பின் றாங்காநின்ற கதிர்ச்சடிலப் பிஞ்ஞகனது திருவடித்தொண்டின் பெருக்கவீற்றினைப் பொன்னினாலும் பெண்ணினாலுந் தெரித்திந்நில வுலகின்கண் வாழ்வாரது இடரினைப்பொன்றுவித்தாண்டருளிய வவ் வியல்பினையுடைய ஆளுடையபிள்ளை, ஆளுடையவரசு, ஆளுடைய நம்பி, ஆளுடையவமைச்சு என்னுஞ் சமயகுரவர் நால்வரது பாததா மரையினை மனத்தின்கட்டழீஇப்புகழ்ந்து வணங்கித் துன்பினீங்கு வாம். எ - று.

நாலல். - ஆங்கள், முருகவேள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை; என்று மிளமையினையுடைய வேட்கப்படுவோன் என்பது பொருள். இடர்பொன்றுவித்தென்பது இடர்பொன்றியென விவ்விகுதி தொக்குநின்றது. "குடிபொன்றிக் குற்றமுமாங்கேதரும்" என்புழிப் போல.

திருத்தொண்டின்பெருக்கவீறு "கல்லிற்கமரில்" என்னுந்திருக்களிற்றுப்படியார்ச் செய்யுளாற் பெறப்படும்.

இனி, ஈண்டுத்திருத்தொண்டின் பெருக்கவீறு பொன்னும் பெண்ணுமறிவுறுத்தன்மை, ஆளுடையபிள்ளை ஆவடுதுறையினும் வீழிமிழலையினும் பொற்கிழியும் படிக்காசும் பெற்றமையானும், மயிலைக்கண்ணென்பைப் பெண்ணாக்கியமையானும், ஆளுடையவரசு வீழிமிழலையிற் படிக்காசு பெற்றமையானும், புகலூரின்கணுழைவாரப்பணிசெயுங்காற்படும் பொன்னைப் பருக்கைக்கற்களினோடொருங்கே வீசியமையானும், அரம்பையராடலா னிடர்ப்படாமையானும், ஆளுடைய நம்பி பலபதிகளினும் பொன்னினைப்பாடிப் பெற்றமையானும், பரவை சங்கிலியென்னும் பாவையரைப் பால்வகையாற் பெற்று மணந்தமையானும், சிங்கடி வனப்பகைகட்கப்பனாயினமையானும், ஆளுடைய வமைச்சு, அரிமர்த்தனவழுதி யளித்தவப்பொனைப்பினை நாற்பானென்பதுமோ டியினை நம்பனடியினயந்தளித்தமையானும், பௌத்தர் சிறைய வினக்கட்கு மூங்கைமகளாரை யெதிர்மொழிமொழிவித்தமையானும், முறையே புணரக்கிடந்தமையறிக.

இனி, ஆளுடையபிள்ளை அயமுகத்திறையினமிசமாகலானும், ஆளுடையவரசு முன்னமே முனியாகலானும், ஆளுடையநம்பி அரனது விம்பத்தாடியினெழுந்தோராகலானும், ஆளுடைய வமைச்சு நந்திகணத்தலைவ ராயிரத்தவரின திகரித்தோராகலானும், ஆற்றலும் காதலுமிலாத பிராகிருதர் வவயிகர்போலாது முற்செய்தவவிசேடத்தானே சாமுசித்தராய்த் தோன்றிச் சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்த தபோதனர் என்க.

இனி, மூன்றுவர் அனேக்கரத்தோன் எனவே, சகத்தினதுதோற்றத்திற்குக் காரணமாய குடிலைப்பொருளாயுள்ளார் மூத்தநாயனு



ரென்பதூஉம், முருகவேளெனவே, முகத்தின்றொன்றதாமவ் வெழுத்துடைய முருகவேளுமங்ஙனமாவாரென்பதூஉம், பின்னுங்கதிர்ச்சடிலப்பின்னகனெனவே, என்றுமழியாத வொள்ளியஞானமாயசடையினையுடைய சர்வஞ்ஞரென்பதூஉம், நடுவணைவைத்துக் கூறியமையிற் சுத்தமத்திய நிட்களநிருத்த சோதியென்பதூஉம், பின்னர் அடித்தொண்டைக் கூறியமையானே, பசுபதியாகிய வச்சிவத்தினை முன்னாகக்கொண்டு ஆன்மாவாகிய தன்னைப் பின்னாகக்கொண்டு அவரது அடிக்குச்செய்யுந் தொண்டானன்றி முத்திசித்தியாதென்பதூஉம், அத்தொண்டுகடாமு மளவிடற்கரிய வெஞ்சார்பெருக்கமென்று கூறியதென்பதூஉம், பிறரெவர்க்குமில்லாத பெருமை யென்பார் வீறென்றருளியதென்பதூஉம், பொன்னும் பெண்ணும் எனவே, உலகியலவற்றோடு விரவியல்லது கடைபோகாதென்பதூஉம், அறிவுறுத்தெனவே, அவற்றுடன்விரவியும் விரவாத பெருந்தகையினரே அவற்றையறிவுறுத்து மியல்பினரென்பதூஉம், இவ்வுலகினிடர்பொன்றியெனவே, அவைமுதலிய பலவற்றானு மிந்நிலவுலகின்கண் வாழ்வாருக்குவருந் துன்பினைப் பொன்றுவிக்கும் வன்மையினையுடையார் இவர்தாமேயென்பதூஉம், ஆண்டவெனவே, அங்ஙனஞ்செய்து ஆண்டருளியவருமவரே யென்பதூஉம், அ என்னும் பண்டறி சுட்டானே யங்ஙனமவர் செய்தருளிய வற்புதங்களனைத்தினையும் யாவருமறிவாரென்பதூஉம், நால்வரெனவே, வேதநான்கினையுஞ் செந்தமிழின்கட்டந்து நிலையியினாரிவரென்பதூஉம், பதகமலம் அகந்தழீஇ எனவே, அரனடியாரது அடியினையு மரனடிபோல நினைத்தல் சாலுமென்பதூஉம், புகழ்ந்திறைஞ்சியெனவே, அவரது மெய்ம்மையமைந்த சீர்த்தியினை யெஞ்ஞான்று மிறைஞ்சல் வேண்டுமென்பதூஉம், அரந்தைதீர்வாமெனவே, அங்ஙனமிறைஞ்சுபவர் பிறவித்துன்பினீங்குதலொருதலை யென்பதூஉம் பெற்றாம்.

## திருநாட்டுப்படலம்.

சிலையலங்கணிச்சிவெண்ணெய் தெவ்விவானிமிர்ந்துவாரி
நிலைபுகுந்துழக்கியொல்குநிலனெடுத் திருவியண்ட
ருலைதரவெறிக்கொண்டெற்றியுறகலிமுடிவுதோற்றித்
தலைவருமாயோனென்னத்தவழ்ந்ததுபுதவத்தம்மா.

இ - ள். வில்லினையும், கலப்பையினையும், மழுவினையும், வெண்ணெயினையுங் கவர்ந்து, வானின்கணெழுந்து நிமிர்ந்து, நீர்நிலையின் கட்புகுந்தழுக்கி, நிலவனைபோல்காலிற்கு நிலத்தினையெடுத்திருத்தி முல்லைநிலமாக்களுலைவினையடைய மதர்ப்பினைக்கொண்டெற்றி, மிகுதியாயவாரவாரத்தினுக்கு முடிவினைத் தோற்றுவித்து அந்நிலத்தினுக் கதிதெய்வமாய மாயோனை நிகர்த்து முல்லைநிலத்தின் கண்ணே பெருகியது. எ - று.

கலி - நிரப்பெணினுமமையும்.

மாயோனுக்குக் கொள்ளுங்கால், சிலை அலம் கணிச்சிவெண்ணெய் தெவ்வி - தசரதராமனாய் வில்லினையும், பலராமனாய்க் கலப்பையினையும், பரசுராமனாய் மழுவினையும், கிருட்டினனாய் வெண்ணெயினையுங்கோடலானும், வான்நிமிர்ந்து - வாமனராய்ச்சென்றதாற் றிரிவிக்கிரமராய் வானின்கணெழுந்து நிமிர்தலானும், வாரிநிலைபுகுந்து - மீனமாய்ச் சமுத்திரத்தின் கட்புகுதலானும், (வாரிநிலை) யுழக்கி - ஆமையாய்ச் சமுத்திரத்தினுட் சென்றுழக்கலானும், ஒல்கும் நிலன்எடுத்து இருவி- வராகமாய்ச்சென்று ஒடுங்கும் பூமியினைக்கோட்டாலெடுத்திருத்தலானும், அண்டர் உலைதரவெறிக்கொண்டெற்றி- நரசிங்கமாய்த்தோன்றித்தேவருலைவினையடைய வெறியினைக்கொண்டு இரணியனைக் கீண்டெறிதலானும், உறுகலிமுடிவுதோற்றி - கற்கியாய்த்தோன்றிக் கலிக்கு முடிவினைச்செய்தலானும், தலைவருமாயோன் என்ன—தேவர்யாரினுந்தலையாயவாதிநாராயண மூர்த்தியினை நிகர்த்து, என இங்ஙனங்கொள்க. இது சிலேடையுவமையணி.

மாயோன்முல்லை நிலத்திற்குத்தலைவராதலை, "மாயோன் மேய காடுறையுலகமும்" என்பதனானறிக. இனி, மாயோன் றேவரிற்றலைவராதலை "தேவிற்றிருமால்" என்பதனானறிக.

இனி, சிலையினை, ஸ்ரீராமசந்திரனுக்கு வென்றியிக்க கருவியாகலானும், கல்வியிற்பெரியன் கம்பனென்று கூறுங் கவிச்சக்கிரவர்த்தியும், இராமாவதாரத்தின் பயனைக்கூறுஞ்செய்யுட்கண் "வாகைசூடிய சிலையிராமன்" என விசேடித்தவ் விராகவனுக்கேயடையாக்கலானும், முன்னரும் பின்னருந்தோன்றிய விராமரினுமிடையிற் றோன்றிய விவ் வவதாரமே "நடையினின் றுயர்நாயகன்றோற்றத்தி-னிடைநிகழ்ந்தவிராமாவதாரம்" என்பதனாற்சிறந்ததாகலானும், அவர்க்குரிய சிறந்த கருவியாகலானும், அதனை முன்னரும், ஏனையவற்றையும், திணை முறையானுரியார்க்கமைந்தவாறே பின்னரும் முறையேவைத்துக் கூறினாரெனவுணர்க.

(தொடரும்.)

ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை.

---

# மதுவிலக்கு.

(முற்றொடர்ச்சி.)

---

மேலும் 1870—71-ல் நடந்த பிரான்ஸ் ஜெர்மானியா யுத்தத்தில் பிரான்ஸ் முறியடிக்கப்பட்டதற்கும் பிரான்சியச் சேனையுள் அநேகர் குடியர்களாயிருந்ததே காரணம். இதனை மேற்சொன்ன போர்க்களத்தில் உதவிசெய்துகொண்டிருந்த பெரிய வைத்தியர் ஒருவர் "எங்களிடத்தில் ஒவ்வொரு வகைகளிலும் மிகுதியாக மதுபானமிருந்தது. இது தட்டுத்தடையில்லாமல் தளவீரர்க்குள் பரிமாறப்பட்டது. நாங்கள் "பாரீஸ்" நகருக்கு வெளிப்புறத்தில் படுத்துக்கொள்ளவேண்டியதாயிருந்தது. சீதளமோ பொறுக்கமுடியவில்லை. மதுபானத்தைத் திட்டமில்லாமல் மாந்திமாந்திப்பார்த்தோம்; ஒன்றும் சாயவில்லை. எமது உடலின் இயற்கையான உஷ்ணத்தையுங்கூட கொடியபானம் கொள்ளைகொண்டுபோனதே மிச்சம். விடியற்காலை எழுந்திருக்கக்கூடவில்லை. மரத்துண்டங்களைப்போல் அசைவில்லாமல் படுத்தபடுக்கையிலேயே கிடக்கவேண்டியதாயிருந்தது. இவ்வகையாய் மதுபானப்பழக்கம் உள்ளதையும் கொள்ளைகொண்டு கைசலாட வைத்ததென" ஓலமிட்டுச்சொல்லி உறுதிபண்ணுகிறார்.

முத்துச்சலாபங்களில் அராபியரும் சோனகர்களும் சிப்பிகுளிக்கிறார்கள். இவர்களுடன் இதரஜாதியாரையும் அநேகமாய்ப்பார்க்கலாம். முன்சொன்ன இருதிறத்தாரும் குடிகாரர்களல்லர்; ஆனால் குளிகாரர்கள்; அவர்கள் சிப்பிகுளித்தலைக் காலை 5-மணிக்கு முன்னரே தொடங்கிவிடுகிறார்கள். மற்றவர்களோ காலை 9-மணிக்குமுன் ஆரம்பிக்கிறதில்லை. அராபியரும் சோனகர்களும் குளிக்கும் இடத்தைக் கண்டமாத்திரத்தில் மதயானையின்மேல்பாய்ந்து அதன் மத்தகத்தைப் பிளக்கும் வீரசிங்கங்கள்போல் விழுந்து விளையாடி வெண்முத்துச்சிப்பிகளை வேண்டியமட்டும் கொண்டுவந்து நிறைக்கின்றார்கள். பின்சொன்னவர்கள் கடல் முகட்டெழுந்த காந்திபொருந்திய சூரியன் தன் கதிர்களாகிய கரங்களால் அடித்தடித்துப் பார்த்தும் தமது கடுந்தூக்கத்தையும் சோம்பலையும் விட்டுக்கிளம்பாமல் செத்த பிணம்போற் கிடக்கின்றனர். ஆயினும் தொந்தரவு சகியாது தலையைத் தூக்கிப்பார்க்கிறார்கள். உடல் நடுங்குகிறது. வாடைவாய் திறக்க முடியவில்லை. வாயில் கொள்ளிக்கட்டை (சுருட்டு) வைக்கவேண்டுமென்று சைகைகாட்டுகின்றனர். குளியாளுக்குக் குற்றேவல் செய்யுமுன் தோடையும் மண்டக்கும் துவண்டுபோக நேரிடுகிறது. குளியாள் சுருட்டும் புகைத்தார், வெறுவாய்க்கு மெல்லிலையும் போட்டுக்கொண்டார். குளிர் இங்கேயும் முடியுமாவென்கிறது. குளியாள் கோழிக்குஞ்சுபோல் குழைந்து சாய்கிறார். பசப்புக்கு ஆற்றாமல் கடலிலும் விழுந்தார். தாமே விழுந்தாரோ. தோடைமண்டக்குத் தூக்கித்தொப்பென்று போட்டாரோ தெரியாது. ஒருவர் தரையைத் தொட்டார். மூச்சு முட்டிவிட்டது. மேலே ஓடிவந்துவிட்டார். மற்றொருவர் சிப்பி இரண்டோ மூன்றோ எடுத்தார். வெளிக்கு வந்துவிட்டார். இன்னொருவர் நிலத்தைத்தொட்டார் மூச்சில்லை; வெகுபரபரப்புடன் கையிலகப்பட்ட கல்லையோ கரட்டையோ கட்டிபிறக்கிக்கொண்டு கயிற்றைச் சுண்டிவிட்டார். இப்படியாகக் கிடந்து திண்டாடுகிறார்கள் இவர்கள். இன்னார் மதுபானம் வாடையைப் போக்குமென முந்தினநாள் மாலை 3-மணிதொடுத்து இரவு 12 மணிவரையும் குடித்துத் திரிந்தார்கள். பிந்தினநாள் காலையிலேயே இத்துணை அல்லோலகல்லோலப்படுகிறார்கள். முன்சொன்னவர்கள் மதுபானிகளல்லாமையாற்றான் கொக்கரிக்கின்ற கொந்த



ளிப்பான சமுத்திரத்திலும் கும்மாளம் போடுகின்றனர். பின்சொன்னவர்கள் மதுபானக்கடலிலேயே மூழ்கிக்கிடப்பதால் தோடைமண்டக்கு செய்தபாவம் இரவுகளில் தோணிமட்டும் தூக்கிச்சுமக்க வேண்டியிருக்கிறது. இத்தகை மண்டக்கு மார்பிலும் தொடை தோளிலும் இரவெல்லாம் பட்டணப்பிரவேசப் பவனியில்வந்து தோணியில் படுத்துக்கொண்ட இவர்கள் மறுநாட்காலை அமைதியான கடலிலுங்கூடப் பானஞ்செய்கின்றனர்.

அராபியரின் நடையுடை பாவனையைப்பற்றித்தான் நமக்குச் சரியாய்ப் புலப்படாதென வைத்துக்கொள்வோம். இக்கரைத்துறைகளில் வசிக்கும்சோனகர்களில் பெரும்பாலார் சிறிதுகாலத்திற்குமுன் தமிழர்களாயிருந்தவர்தானே: இதனைத் "தீன் விளக்கம்" முதலிய கிரந்தங்கள் தெளிவாய்ச் சொல்லுகின்றன. அங்ஙனம் சிறிதுகாலத்திற்குமுன் மரபுமாறிய சோனகக் குளியாள்கள் வாடை குளிந்தோன்றாமல் வலிமையோடிருப்பதற்கும் மரபுமாறாதமற்றவர்கள் வாடை குளிரால் வருத்தப்படுவதற்கும் விவரமென்னை? அவர்கள் குளிகாரர்: ஆனால்இவர்களோ குடிகாரர்-இம்மட்டுத்தான் வித்தியாசம். ஏன்? இவர்கள் குளிரைப்போக்கவன்றோ குடிக்கிறதாய்ச் சொல்லுகிறார்கள். அப்படியானால் இரவுமுழுதுங் குடித்த மதுபானத்தால் சேகரித்த வெப்பம் எங்கேபோய்விட்டது? யார் கொண்டுபோனார்கள்? இப்போதாவது காரணத்தைக் கண்டுபிடித்தீர்களா சகோதரரே? கண்டுபிடித்தீராயின் மிதமிஞ்சின வாடைக்கும் குளிருக்கும் மதுபானமே காரணம் மதுபானமே காரணமென்று நெஞ்சின்மேல் கையை வைத்து அஞ்சாது கூறுங்கள். நம்மையடுத்த சகோதரருக்கு எடுத்துச்சொல்லுங்கள். மேலும் இடித்துச்சொல்லுங்கள். இப்படிச் சொல்வதுதான் சகோதரவாஞ்சையென்றும் முன்னமே சொல்லியிருக்கிறேன். ஆகவே மதுபானம் வெப்பத்தைக்கொடுத்துக் குளிரைப்போக்காதென்பது மாத்திரமன்று, சுகதேகிகளின் சுபாவமான உஷ்ணத்தையுங்கூடத் தொலைத்துத் துன்பத்திற்காளாக்கி விடுமென்பதை வெள்ளிடை மலைபோல் விளக்கவும் காணலாம்.

மதுபானமானது, உள்ள உஷ்ணத்தையுங் கொள்ளையடிச் செல்லுமென்பது சென்றபகுதியில் நன்று கூறினேன். இதற் கேற்ற

துணையாய், ஜாயில் பார்க்ஸ் என்னும் சிறந்தவைத்தியரின் வாக்கு மூலம் வருமாறு கேளுங்கள்:— "மதுபானிகள் மிகுந்தகுளிர் தேசத்தில் இருப்பவரெனினும் மிகுந்தஉஷ்ண தேசத்தில் இருப்பினும், அவர் தேகசம்பந்தத்துக்குரிய வேலைசெய்பவரெனினும் மூளை சம்பந்தத்திற்குரிய வேலைசெய்பவரெனினும், மதுபானம் எத்தேசத்தாருக்கும் எத்திறத்தாருக்கும் கெடுதியை விளைவித்தேதீரும். எந்தக் காரணங்களைக் கொண்டேனும் மதுபானத்தை ஆகாரங்களுள் ஒன்றென்று சொல்வதற்கில்லை. நிலையான வெப்பத்தையேனும் நீடிய உற்சாகத்தையேனும் கொடுக்கிறதுமில்லை. இளைத்த தேகத்தைப் பெலத்தநிலைக்குக் கொண்டுவருகிறதுமில்லை. அது இரத்த வோட்டத்துள் கலந்து (பனையேறி விழுந்தவனைக்கடாவேறித் துவைத்ததைப்போலக்,) கஷ்டவேலைசெய்து களைத்துப்போன ஒருவனைத் திரும்பவும் கஷ்டவேலையாற்களைத்துப் போகப்பண்ணுகிறது. இஃதெப்படி யென்றால், தேவசித்தத்திற்கு ஒத்தமேதையாய்த் தக்க அளவோடு நடந்துகொண்டிருக்கும் மென்மையான நமது இருதய கமலத்தை, இம்மதுபானம் பாகனில்லாத குதிரையைப்போல்முறை தவறி வரம்புகடந்து ஓடச்செய்து அப்படி ஓடுவதால் நேரிடக்கூடிய சிரமத்திற்குப் பரிகாரம் பண்ணவும் திறமை இல்லாததாய், நம்மானிடவாழ்வுக்கு இன்றியமையாத தாயிருக்கும் அவ்விருதயத்தைமிகவே மயங்கவும் தயங்கவும் வைக்கிறது. இவ்வண்ணம், மிதமிஞ்சினவேலையால் தளர்ந்துபோன இருதயத்தின் வெப்பமானது, படிப்படியாய்த்தசைக்கும் தசைக்குவந்த வெப்பம் தோலுக்கும் வந்து அவ்வாறே தோலுக்கு வந்த வெப்பம் உடனுக்குடன் வெளியேறிவிடுவதால் இருந்த வெப்பத்தில் பெரும்பான்மை இந்த வகையாயும் நாளடைவில் வெளியேறிக்கொண்டிருக்க, அதனால் அநேகர் அகால மரணத்திற் காளாகின்றனர். இரவில் நிறையமதுவுண்டு பனியில் படுத்துக்கொண்டவர்களிற் பலர் விடியற்காலையில் பிணமாய்க்கிடந்ததை அநுபவத்தில் நாம் காண்பதே இதனைமெய்ப்பிக்கும்.

இவ்வுண்மையெல்லாம் பகல் வெளிச்சமாயிருக்க, மதுபானம் குளிரைப்போக்குமென்றும் களைப்பைப்போக்குமென்றும் நம்சகோத



ரருட்சிலர் எந்த ஆதாரங்களைக்கொண்டு சொல்லிவருகிறார்களோ யானறியேன். நோவுக்கும் குளிருக்கும் மதுபானப்பழக்கமே காரணமாயிருக்க, அந்நோவையும் குளிரையும் போக்குவது மதுபானமேயென்பது குதிரைக்கும் கொம்புண்டு என்பதுபோலாம்; அங்ஙனமின்றி நாலும் இவரோடு ஒத்துப்பாடுவதென்றால், மதுபானம் அதனை உண்ணுமுன்னரே உணரக்கூடியதாயிருந்த குளிரையோ வலியையோ, அதனை உண்டபின்னால் உணரக்கூடாதவிதமான அம்மட்டு மழுக்கத்தைத் தருகிறதென்று மாத்திரம் சம்மதிக்கக்கூடுமே யொழிய மற்றப்படியல்ல. ஆகவே மழுக்கத்தாலேயே குளிர் தெரியாமலிருப்பதும், அம்மழுக்கத்தாலேயே வலிதெரியாமலிருப்பதும் என்போம். உதாரணமாக நமது ஐம்பொறிகளின்வளர்ச்சியையோ தளர்ச்சியையோ, நுகர்ந்து கொள்வதற்கு அவ்வைம்பொறிகளின் உதவியே வேண்டும். அங்ஙனமே மெய்யுணர்ச்சியையறிவதற்கு மெய்யுணர்ச்சியே தேவையாயிருக்கிறது. அப்படியானால் மெய்ம்மறந்திருக்கும் ஒருவனுக்கு ஸ்பரிசவுணர்ச்சி யிருத்தல் கூடாது. எப்பொழுது ஒருவனுக்கு ஸ்பரிசவுணர்ச்சி யில்லையோ அப்பொழுதே அவனுக்கு உடலின்குளிர் முதலியவற்றை அறியக்கூடிய உணர்ச்சி கிடையாது. இதுபண்டிதர்மட்டுமல்ல பாமரரும் அறிந்த விஷயம். ஆகவே மதுபானம் சரீரத்தின் நோவுமுதல் பல துன்பங்களையும் போக்குகிறதென்பதல்ல, அவற்றைத் தெள்ளிதில் உணரும் சக்தியைப் போக்குகிறதென்பது திண்ணம். அப்படியானால் மதுபானத்தால் நோவு குளிர் அகன்றதெனல்கூடாது. அந்நோவு குளிரை அறிந்து கொள்ளும் வன்மையானது நம்மை விட்டு அகன்றுபோனதென்பதே உண்மை.

சகோதரரே! தேர்ந்த வைத்தியரின் சிறந்த சாட்சிகளைக் கொண்டு, மதுபானம் ஆகாரமில்லை யென்றும், தேகபுஷ்டிக்கு உதவிசெய்கிறதில்லை யென்றும், இளைத்ததேகத்தை பலத்தநிலைக்குக் கொண்டுவருகிறதில்லையென்றும், இயற்கை வெப்பத்தைக் கெடுக்கிறதொழிய அதிகப்படுத்துகிறதில்லை யென்றும், அது பாஷாணமேயென்றும், பாஷாணத்திலுங் கொடியதேயென்றும், இதுவரை அறிந்து கொண்டாலும் சிலர், ஆயின் மதுபானமெல்லாம் எவ்வளவும் பிர

யோசனம் இல்லாதனவோ எனக்கேட்பார்கள் போலும்; இல்லை, இல்லை. உலகத்தில் உண்டான ஒன்றேனும் உபயோகமற்றதாயில்லை. ஒவ்வொன்றும் தகுந்த இடத்தில் தகுந்த பிரயோசனத்தைத் தந்துகொண்டு வருவது சத்தியமே. ஆனால் இம் மதுபானம் எந்த இடத்தில் என்ன பிரயோசனத்தைக் கொடுக்கிறதெனின், அது வீரம், பூரம், வெள்ளைப்பாஷாணம், அபின், இரசம், புனுகு திராவகம் முதலிய பாஷாண வகுப்பினுள் ஒன்றாய் வைக்கப்பட்டு, மேற்சொன்ன வீரம் முதல் ஒவ்வொன்றும் வைத்தியசாஸ்திரிகளால் எந்தெந்த விடத்தில் எவ்விதப்பயனுக்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றதோ அதுபோல மதுபானமும் தேவையான பிரயோசனத்திற்காக ஆளப்படவேண்டியதாயிருக்கிறது. இப்படி மருந்திற்காக உபயோகப்படுத்துவது நல்லபாண்டித்யமுடைத்தான வைத்திய சிரோமணிகளின் இஷ்டத்தைப்பொறுத்து அவ்வைத்தியருக்குரியவேலையாயிருக்கிறது. இதனை முன்பே சிறிது விளக்கியிருக்கிறேன். உண்மை இப்படியிருப்பதால், மதுபானம் வைத்திய முறைமைக்கு மற்றப் பாஷாணங்களைப்போல மருந்தாக உபயோகப்படுகிறதே தவிர அவ்வைத்திய முறைமையை அநுசரியாத மற்றவர்க்கோ அது இம்மியளவும் பொருந்தியதேயன்று. அவ்வாறு மருந்தின் முறையிலுங்கூட அது மதுபானப் பழக்கமில்லாருக்குச் சிலவேளை திருப்திகரமான பலனைக்கொடுக்கலாமன்றி உத்தமவைத்தியரின் சித்தாந்தப்படி, மதுபானப் பழக்க முள்ளாருக்கோ, அம் மதுபானமாகிய மருந்து அவரது உயிரைவாங்கும்யமனாகவேயிருக்கிறதென்னலாம்.

இத்தகை நியாயங்கள் கொத்துக் கொத்தாயிருத்தலால் “அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் விஷம்” என்னும் அருமை வசனத்தை ஆதாரமாய் வைத்துக்கொண்டு, எதுவும் அளவுகடந்து பாவிப்பது கெடுதியாம். ஆனால், நாங்களோ அளவுக்குமிஞ்சிப் பாவிக்கிறதில்லையென்று சிலர் தாங்கள் சொல்லுகிற வண்ணம் சிற்றளவாய் மதுபானத்தை யநுபவித்து வருகிறார்கள். இவர்களுக்கும் மனம்போனபடி குடிக்கும் மற்ற மதுபானிகளுக்கும் நிச்சயமாகவே பாரதூர வித்தியாசமிருந்து வருவதால் தாங்கள் அளவுகடவாமல் நடக்கிறோமென்னும் தற்கால உறுதியைக்கொண்டு தங்களை உலகத்தார் “பெரும் மதுபானிகள்” என்றழைத்தல் [illegible] ஒவ்வாதென்றாலும் அவர்கள் “மித மதுபானிகள்” என்றாவது ஓர் நாமஞ்சூடிக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், மித மதுபானிகளாயினோர் சொல்லிவரும் “மித மதுபானம்” என்னும் வார்த்தைக்குப் பொருள் கூறுவதுதான் ஈங்கு கஷ்டத்திலிருக்கிறது. ஏன்? “மிதம்” என்பது எந்த அளவு கொண்டது? மலையளவா? அணுவளவா? அல்லது சொக்கனுக்குச் சட்டியளவென்பது போலவா? இந்நேரத்தில் நான் கர்ணபரம்பரையாய்க் கேட்டுள்ள அரிய சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது:— நமது வீரமாமுனிசுவாமிகள் ஒருநாள் உலாவப்போய்க் கொண்டிருக்கும் வேளையில் சில வித்வான்கள் ஒருங்குகூடி அவரைக் கேள்வியில் மடக்க நினைத்தவராய், ஐயா! புலவர் பெருமானே! அதோ தெரிகிற மணற்குன்று எத்தனை பெட்டிமணற் பிடிக்குமென்று தாங்கள் ஓர் அளவிட்டுச் சொல்ல முடியுமாவெனக்கேட்க, சுவாமிகள், அம்மணல் முழுவதும் அடங்கக்கூடியவிதமாகப் பெட்டியொன்றிருந்தால் ஒரு பெட்டியளவிருக்குமென்று விடைவழங்கவும், கேட்ட வித்வஜனர் நாணித்தலைகுனிந்தனரென்பதே. மணற் குன்றைக் காட்டி எத்தனை பெட்டியளவிருக்குமென்றுகேட்டவர் பெட்டியின் நீளம்அகலம்ஆழம்இவ்வளவென்று சொல்லியிருக்கவேண்டுமன்றோ? ஆகையால் மடக்கநினைத்தவர் தாமே மடங்கினது மெத்தச்சரி, அவ்வாறே இங்கேயும் “மிதம்” என்பதற்கு ஓர் அளவு வேண்டியதவசியம். ஆனால் ஒருவர் காட்டுகின்ற அளவை மற்றொருவர் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பது வேதவிதியன்று; ஒருவருக்குஆழாக்குக்கொண்டதுமிதமாயிருக்கும்; மற்றொருவருக்குப்படிகொண்டதுமிதமானது; வேறொருவருக்கு குடங்கொண்டதுதான் மிதம்; பிறிதொருவருக்குப் பீப்பாய்க் கணக்கேமிதமென்பது; இன்னொருவருக்கு இதுவும் பற்றாததாகும். அங்ஙனமாயின் ‘மிதம்’ என்ற பதத்திற்கு எல்லையற்றது, அளவுகடந்ததென்பதா பொருள்? ஆகவே அளவுக்கு அளவில்லாததே அளவாய் முடிகிறது. ஆயினும் “மிதம்” என்கிற வார்த்தை மட்டில் நம்மை ஒருவகையில் சமாதானப்படுத்திக் கொள்ளவேண்டுமானால் உபயோகிப்பாருக்கு வெறியைக் கொடுக்கக்கூடாததோர் அளவென்பதாம். இக்கருத்தை மேற்சொன்ன

மிதமதுபானிகளும் ஒப்புக்கொள்ள வேண்டியதைத் தவிர வேறு வகையில்லை.

வெறிக்கு ஆளாகாத மிதமதுபானிகள் ஒரு புறமிருக்கட்டும். அவரையிட்டு இந்நேரத்தில் நான் ஒன்றும் சொல்லவரவில்லை. சமயம்வரும்; அப்போது பேசிக்கொள்ளுகிறேன். ஆனால் அவர்களிடத்தில் என் சகோதர உரிமைகாட்டிச் சில கேள்வி கேட்கவேண்டியது என் கடமையும் அதற்கு விடையளிக்கவேண்டியது அவர் கடமையுமாயிருக்கிறது. அதாவது:—இப்போது பெருமதுபானிகளாயிருப்பவரெல்லாரும் முன்னொருகாலத்தில் மிதமதுபானிகளாயிருந்தவர்தானே? முன்னொருகாலமென்றால், அதிகதூரமென்று நினையாதீர்கள். இரண்டொரு வருடங்களுக்கு முன்புதான். எத்தனைபேர் தங்கள் மதுபானப்பழக்கம் தம் பத்தினிகளுக்குங்கூடத் தெரியாதிருக்கவேண்டுமென்று வெகு ஜாக்கிரதையாய் ஏலம் கிராம்பு முதலிய வாசனைத்திரவியங்களை வாயில்போட்டுக்கொள்ளும் மிதமதுபானிகளாயிருந்தார்கள். எத்தனைபேர் நகர்மத்தியிலிருக்கும் கடைகளுக்குகளென்றால் மிகவே கூச்சப்பட்டுக்கொண்டு அடர்ந்த பனங்காடுகளிலும் ஆள் அதிக நடமாட்டமில்லாத வெளியிடங்களிலும் உருவம் தெரியாமல் முக்காடுபோட்டுக்கொண்டு புசிக்கும் மிதமதுபானிகளாயிருந்தார்கள். எத்தனைபேர் பகிரங்கமண்டிகளில்போய்க் குடித்தல் கேவலமென்று சீசாக்களில் வாங்கி வீட்டில் வைத்துக்கொண்டு அரவங்காட்டாமல் அநுபவிக்கும் மிதமதுபானிகளாயிருந்தார்கள். தவறணையின் பெரியவாயில்வழியாகப்போக நாணமுற்று ஜன்னல் தூரத்தில் மறைந்திருக்கும் மறைவிடங்களில் நின்றுகொண்டு பலகணிவழியாய்ப் பருகும் மிதமதுபானிகளாயிருந்தவர் எத்தனைபேர். நாடகங்களில் காப்பிகுடிக்கப்போகலாமென மக்களையும் இட்டுக்கொண்டுபோய் மக்கள் கோப்பையில் காப்பியும் தமதுகோப்பையில் மற்றொன்றுமாக அருந்தும் மிதமதுபானிகளாயிருந்தவர் எத்தனைபேர்! இன்னமும் சொல்லவேண்டுமா சகோதரரே! தேவையில்லையென்று நினைக்கிறேன். அக்காலத்தில் மிதமதுபானிகளாயிருந்த பலரையிட்டுப் பலவாறாய் நீங்களே கண்டுங்கேட்டுமிருப்பீர்கள். இவர்களெல்லாம் அளவுக்குமிஞ்சி உபயோகித்தல் கூடாதென ஒருகாலத்



தில் பெருந்த ஆணையிட்டுத் தம்மைத் திருப்திப்படுத்திக் கொண்டவர்களன்றோ? ஆதலால் நாங்கள் மிதமதுபானிகள்; எங்களுக்கு ஒருமோசமும் வாராதென இறுமாப்புடன் இருப்பவர்கதி இனி என்னாகப்போகிறதோ? இற்றைக்கு மிதமதுபானிகளாகிய இவர்கள் நாளைப் பெருமதுபானிகளாகமாட்டார்களென்பதற்கு என்ன ஆதாரம்? "மிதம் மிதம்" எனச்சொல்லிய அநேகர் ஏமாந்துபோகவில்லையோ! இன்று பெருமூச்செறிந்து ஏக்கமுறுகின்ற இவர்கள் அன்று மிதமதுபானிகளாயிருந்தவரன்றோ? புத்தியை விற்றுப்போட்டோமென்று தங்களைத்தாங்களே இன்று நொந்துகொள்ளுகிற இவர்கள் அன்று மிதமதுபானிகளாயிருந்தவரன்றோ? இப்பெருமதுபானிகள், இப்போது தம்மை மிதமதுபானிகளென்று மெச்சிக்கொள்ளுகிறவர்களைப் பார்க்கிலும் மனத்திடனில் ஒரு சிறிதுங்கூடக் குறைந்தவராயிருந்ததில்லையே. அப்படியிருக்கத் தற்காலத்து நமது மிதமதுபானிகளின் உதாரத்தை எவ்வளவுதூரம் நம்புகிறது? நம்புவதற்கிடமில்லை.

(தொடரும்.)

M. P. மாஸ்கரன்ஹாஸ்.

உ

# மதுரை நாயக்கர்ஸம்ஸ்தானம்.

[மதுரைமாநகரை ராஜதானியாகக்கொண்டு, பாண்டிநாட்டை மிக்க சிறமையுடனும் நீதியுடனும் ஆட்சிபுரிந்துவந்த நாயக்க அரசர்களின் சரித்திரம், கோயம்புத்தூர்க் "கலாநிதி"ப்பத்திராசிரியர்: ஸ்ரீமாந்-பகடால. நரசிம்மலு நாயடுகாருவால் செவ்வையாக ஆராய்ச்சி செய்யப்பெற்று "பலிஜவாரு புராணம்" என்னும் நூலினொருபகுதியாக வெளியிடப்பட்டுள்ளதை செந்தமிழபிமானிகளும் அறிந்து மகிழுமாறு, நாயுடு அவர்கள் உத்தரவின்மேல் பதிப்பிக்கலாயினோம்.—பத்திராதிபர்.]

மதுரையில் (பாண்டிநாட்டில்) நாயடுகாரு சம்ஸ்தானத்தை ஸ்தாபித்தவர்களில் முதன்மையானவர் ஸ்ரீ விசுவநாத நாயடுகாரு

என, ஸ்ரீஸ்தலபுஸ்தகத்திலும், மிஸ்டர் டெயிலர் (Mr Taylor) கிரந்தத்திலும், கவர்ன்மெண்டு ரிக்கார்டுகளிலும் தெளிவாகின்றது. இந்த விசுவநாத நாயடு மதுரையில் நாயக்க சம்ஸ்தானத்தை ஸ்தாபித்தகாலம் கி. பி. 1559-ஆம். இவருடைய தந்தை விஜயநகர ஸம்ஸ்தான உக்கிராணகர்த்தராயும், பிறகு ஸமஸ்தான தளகர்த்தராயுமிருந்த கோட்டய-நாகம அல்லது நாகப்பநாயடு. அவர் அப்போது விஜயநகரசம்ஸ்தானத்துக்கு இருந்த 56-இராஜ்யங்களில் நாற்பதினாயிரம் குதிரைப்பட்டாளமும், நாலாயிரம் யானைப்பட்டாளமும், பத்தாயிரம் ஒட்டகைப்பட்டாளமுமாகிய பெரிய சேனைகளுக்கு சிரேஷ்ட தளகர்த்தராக இருந்ததோடு, தம்சொந்தக் காப்புக்கு ஆறாயிரம் குதிரைப்பட்டாளத்தையும், 20,000 பதாதிகளையும் வைத்துக்கொள்ளவும், அவைகளின் செலவுக்காக, ஆர்க்காடுமுதல் திருவநந்தபுரம் உட்படவிருந்த குறுநிலமன்னர்களிடம் கப்பம் வாங்கிக்கொள்ளவும் அதிகாரம்பெற்றிருந்தார். அவருடைய தவப்புதல்வர்தாம் விசுவநாத நாயடு.

அந்தக் கோட்டய-நாகமநாயடுகாருக்கு புத்திரசந்தானமில்லாத கவலையால், அநேகவிரதங்களைப்பூண்டு, கடைசியாக காசிக்ஷேத்திரத்திற்குப்போய் கங்காநதிக்கரையில் அகோர தபசுசெய்துவந்ததின் பயனாக ஓர் ஆண்குழந்தைபிறந்தது. அக்குழந்தை ஸ்ரீகாசிவிசுவநாதருடைய கிருபையாற் பிறந்தமையால், தம்மகனுக்கு விசுவநாதன் என்று பெயரிட்டார். இந்த விசுவநாதன் பிறந்த வருஷம் 1500 என்று சிலசாதனங்களிற் காணப்பெறினும், வேறு சில சாதனங்களால் 1510-ம் வருஷம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இவர்பிறந்த வயதைப்பற்றி வித்தியாசம் பெற்றிருக்கினும், இவர் மதுரைக்கதிபதியாம்போது உத்தேசம் நாற்பது வயதுக்குள் இருக்கவேண்டும்.

இந்த விசுவநாதர் சிறுபிள்ளையாயிருக்கும்போதே கல்விகேள்விகளில் அதிக விருப்பமுள்ளவராக இருந்ததன்றித், தன் தந்தையைப்போலவே யுத்தத் தொழிற்பயிற்சியிலும் சிறந்து சுத்தவீரனாகி, அப்போது விஜயநகரத்தைநாடிவந்த மகமதியரைத் தாக்கித் தன் தோள்வலிமையைக் காட்டியதனால், 1535-ம் வருஷம் அச்சமஸ்தானத்தின் சேனைத்தலைவராக நியமிக்கப் பெற்றார்.



மதுரையைப் பாண்டியருடையவமிசத்தில் ஒருவராகிய சந்திரசேகரபாண்டியன் ஆண்டுவரும்போது, தஞ்சையிலிருந்த வீரசேகர சோழன் படையெடுத்துப்போய்ப் போர்செய்து, ஜயித்துப் பாண்டிய நாட்டைச் சோழநாட்டோடு சேர்த்துக்கொள்ள; அப்போது சக்திசகாயமற்ற சந்திரசேகரபாண்டியன் இமிசைப்பட்டு, விஜயநகர சமஸ்தானாதிபதி அச்சுத தேவராயலு அவர்களிடம்போய் முறையிடவும் விஜயநகரஸமஸ்தானபதி அப்பாண்டியன் விஷயத்தில் பரிதபித்து, 1564-ம் வருஷம் தம் தளகர்த்தர் நாகமநாயடுகாருவைத் தருவித்து, தக்கதண்டு தளாதிகளைக் கொடுத்துத் தெற்கே தஞ்சைக்குப்போய் வீரசேகரனுடைய கொட்டத்தை யடக்கி, மதுரையைச் சந்திரசேகர பாண்டியனிடம் கொடுத்து வரும்படி சொன்னார். அந்த நாகமநாயடும் ஸமஸ்தானத்தின் உத்தரவின்படி சாலிவாகன சகாப்தம் 1400-ம்ஆம் காலயுக்திஆம்-ம் பங்குனிமாதம் 15-ம்தேதி தஞ்சைக்குவந்து வீரசேகரசோழனைத் தாக்கி மதுரையைப்பிடித்து சந்திரசேகர பாண்டியனுக்குக் (கட்டளைப்படி) கொடுக்காமல், பேராசையினால் தாமே பாண்டியனென்ற பட்டத்தைக் கொண்டு ஆண்டுவரவும், அச்செய்தி விஜயநகரசமஸ்தானபதிக்குத் தெரிந்ததில், அதிகவிசனப்பட்டு, தமது ஸமஸ்தான மந்திரி பிரதானி போர்வீரர் கூடியசபையைக் கூட்டி, அச்சபைக்கு முன்பாக நாகமநாயடு செய்த ராஜதுரோகத்தையும், அக்கிரமத்தையும் பற்றிப் பிரஸ்தாபித்தும்; இப்படிப்பட்ட இராஜதுரோகியின் சிரசைக்கொண்டுவந்து எனது பாதத்தண்டையில் வைக்கும் வீரன் இச்சபையில் இல்லையோ? என்று பலதரம் வீரகோபத்துடன் கர்ச்சித்துஞ் சொன்னார்.

அப்போது அந்தச் சபையில் ஒருவராக இருந்தவரும், பாண்டியனை மோசஞ்செய்த ஷை நாகம நாயடுவின் குமாரருமாகிய இந்த விசுவநாதநாயடு எழுந்து வணங்கி, "பிரபு துரோகியும், எனதுபிதாவுமாகிய நாகம நாயடுவின் சிரசைக் கொண்டுவந்து, தங்கள் பாதத்தடியில் வைத்து, தங்கள் புகழைப் பாண்டியநாடெங்கு மோங்கும்படி செய்விக்க இதோ சித்தமாக இருக்கிறேன், உத்தரவு தரவேண்டும்" என்று கேட்க; விஜயநகர சம்ஸ்தானாதிபதி கேட்டு இந்த விசுவநாதன், நாகம நாயடுவின் குமாரனாகையால், இவனும் தனது தந்

தையோடு சேர்ந்துகொண்டு, பின்னும் பலவித வம்புகளைப்பாண்டிய
நாட்டிற்குச் செய்துவிடுவாரோ என்று சந்தேகமுற்றாராம்; பின்பு,
விசுவநாதன் சிறுபிராய முதல் சத்தியம், சுவாமி பக்தி, இராஜ பக்தி
களிற் சிறந்தவனென்று நேரிலே கண்டிருந்தவராகையால், அவரிட
மிருக்கவேண்டிய சந்தேகத்தைவிட்டு, பூரண நம்பிக்கை வைத்துத்
தக்க தண்டுதளாதிகளை அவர்க்குக் கொடுத்து அனுப்பினார்.

இராஜவிசுவாசத்தில் சிறந்த விசுவநாதரும் தெற்கேமதுரைக்கு
வந்து, தமது தகப்பனாராகிய நாகம நாயடுவுடன் பிரமாதயுத்தஞ்
செய்து அவரைப்பிடித்துச் சிறையில் வைத்தும், ஊர்க்கலகத்தை
யடக்கிச், சந்திர சேகர பாண்டியனைச் சிங்காசனமேற்றியும், இப்
படி நடந்த சங்கதிகள் யாவற்றையும் விஜயநகர ஸமஸ்தானத்துக்
குத்தெரிவிக்க ; இராயனு கேட்டு, விசுவநாதருடைய வீரதீரத்தை
யும், இராஜ விசுவாசத்தையும் பற்றிப்புகழ்ந்து, இவ்விசுவநாதரால்
சிறையாகப் பிடிக்கப் பட்டிருந்த நாகமநாயடுவை விசுவநாத நாயடு
மேலிருந்த விசுவாசத்தின் பொருட்டு விடுதலைசெய்யும்படியாகவும்,
விசுவநாதரைப் பாண்டியனுக்குக் கொஞ்சகாலம் உதவியாகவிருந்து
சகாயம் செய்யும்படியாகவும் சொல்லியனுப்பினர்.

இப்படிப் பட்டம்பெற்ற இந்தச்சந்திரசேகர பாண்டியன், வைப்
பாட்டி மகன் என்றும், அன்றியும் இராஜ்ய பரிபாலனம் செய்யும்
சக்தியும் சேனையும் அற்றவனென்றும் ; ஆகவே, மதுரையில் மறு
படியுங் கலகங்களுண்டாகுமென்றும், அப்போது விசுவநாதரிடம்
போதுமான தண்டுதளாதிக ளிருப்பதோடு அவருடைய இனத்
தார் இத்தென்னாட்டில் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்
குடியேறி இருப்பதால், அரசருக்கு அவர்களுடைய சகாயமும்
கிடைக்குமென்றும், கூடியாக விசுவநாதர் சத்தியம், சாந்தம்,
சுவாமிபக்தி, பரோபகாரம், குடிகளிடத்து பச்சாத்தாப முதலான
குணச்சிறப்புகளை இயற்கையாகவே பெற்றிருப்பதால், இப்படிப்
பெற்ற விசுவநாதரென்னும் உத்தமனை மதுரையிற் சில காலம் தங்
கும்படி செய்யவேண்டுமென்றும், மதுரைக்குடிகள் திரண்டு விஜய
நகரத்தாரிடம் முறையிட்டுக்கொள்ள ; அவ்விஜயநகரத்தாருஞ் சந்
தோஷமடைந்து, விசுவநாதரை மதுரையிலிருந்து பாண்டியனுக்கு



வேண்டிய உதவியையும், குடிகளுக்கு வேண்டியசகாயத்தையும் செய்
யும்படி உத்தரவனுப்பினர். விசுவநாதரும் சமஸ்தான உத்தரவின்
படி பாண்டியனுக்கு உதவிகள் செய்துகொண்டும், அப்போதுபழனி
திண்டுக்கல் மதுரைக்கடுத்த பயங்கரமான காடுகளைக் களைந்து விவ
சாயம்செய்து ஜீவனம் செய்யும்படி தம்மினத்தாருக்கு நிலங்களைக்
கொடுத்தும், குடித்தனத்துக்குவேண்டிய சாதனங்களைச் செய்தும்
வருகையில் ; சந்திரசேகரபாண்டியன் காலஞ்செல்ல, அவனுடைய
பால்ய குமாரன் வீரபாண்டியனைச் சிங்காசன மேற்றினார். அந்த
இளம் பாண்டியனும் அற்பாயுசாக இறந்துவிடப், பாண்டிய நாட்
டிற்கு சந்ததிகளில்லாத குறையைப்பற்றி விஜயநகரத்தாருக்கு அறி
விக்க; அவர் விசுவநாதருடைய உண்மையையும், உதாரத்தையு மறி
ந்து அவரையே பாண்டிநாட்டிற் கதிபதியாக்கிச் சிங்காசனமேற்றி
ஆண்டுவரச் செய்யவேண்டுமென்று தீர்மானித்து, மகுடாபிஷேக
த்துக்குக் கங்கை ஜலத்தோடும், விஜயநகர துர்க்கையின் பிரதிமை
யோடும், பிராமணபண்டிதர்களையனுப்ப அவர்களும் மதுரைவந்து
விசுவநாதருக்கு ரௌத்திரிநாம வருஷம், கார்த்திகை மாதம் 15-ம்
தேதி கூடிய சுபதினத்தில் விசுவநாதநாயக்கரவர்களைப் பாண்டிய நா
ட்டுக்குப் பட்டங் கட்டி வைத்தார்கள்.

## விசுவநாத நாயக்கரது சம்ஸ்தானம்.

## கி. பி. 1559-ஹு முதல் 1563-வரை.

இப்படிப்பாண்டியநாட்டுக்குப் பட்டங்கட்டப்பெற்ற விசுவநாத
நாயடுகாரு சிங்காசனமேறி இராஜ்யபாரத்தைத் தாமே நேரில் நட
த்த வாய்க்கவே ; பாண்டிய நாட்டுக் குடிகள் இவருடையதருமகுண
ங்களையும், சுத்த வீரத்தனத்தையும் கண்டு இவரிடம் நம்பிக்கை
யுண்டாகி நாட்டுப்புறங்களுக்கு வலசையாகப் போயிருந்த பெரும்
பான்மையான மானமுள்ள குடிகளெல்லோரும் மறுபடியும் நாட்
டில் வந்து வசிக்க ஆரம்பித்தார்கள். குடித்தனம் விவசாயம் செய்
யும் கிருஷிகர் குதூகலமடைந்து கிருஷிக்கு வேண்டிய காடு நிலங்
களைத் தர்காஸ்துசெய்து தரும்படி தேடிக்கொண்டுவந்தார்கள். பிர

ம்மஞானத்திற் சிறந்த பிராமணர்களெல்லோரும் தங்களுக்கு வேண்டிய அக்கிரஹாரங்களையும், கோயில் குளங்களையும் நியமித்துத் தரும்படி தோத்திரஞ் செய்துகொண்டு வந்தார்கள். விசுவநாதர் சோழன்மீது படையெடுத்து வந்தபோது அவருக்குத் துணைநின்று உதவி செய்த உற்றாருறவினர் முதலானவர்கள் "தங்கள் விசுவாசத்துக்கும் உதவிகளுக்கும் தக்கபடியாக மிராசு மானியங்களைத் தரும்படி கேட்க எதிர்பார்த்தார்கள். மேலும் புராதன பாண்டியர்களுடைய வைப்பாட்டி மக்களிற் சிலர் கள்ளர் மறவர் முதலான சிலருடன் கூடி நாட்டிலே குட்டிக்கலகங்கள்செய்ய ஆரம்பித்தார்கள். இப்படிப்பாண்டிய நாடு தலைவிரிகோலமாக இருப்பதையறிந்தவிசுவநாத நாயடுகாரு, இக் குறைகளை நீக்கிக் குடிகளுக்குச் சுகவாழ்வை உண்டாக்கவேண்டிய வன்மையைத்தரும்படி தமது இஷ்டதேவதையை வணங்கிவேண்ட; அத்தேவதையின் அருளால் அப்போது அரியநாயகம் என்னும் உத்தம மந்திரி அவர்க்கு அகப்பட்டார்.

---

## அரியநாயக முதலியார்.

—:(×):—

இந்த அரியநாயகம் யாவரென்றால், காஞ்சீபுரத்துக்கு அருகில் மெய்ப்பேடு என்னும் கிராமத்தில் ஓர் ஏழைவேளாளர் குடும்பத்திற் பிறந்தவர். இவர் சிறு குழந்தையாக இருந்தபோது, பெற்ற தாயார் இவரை ஓர் பாயின்மேற் படுக்கவைத்து ஜலத்துக்கு வெளியே போயிருக்கும்போது, ஒரு பெரிய நாகம் வந்து இக்குழந்தையின் உடலைச் சுற்றிக்கொண்டு தன் படத்தைக் குழந்தையின் தலைக்குமேல் குடைபோல் மறைத்து நிற்க; மாதா வந்துபார்த்து பயந்து பாம்பைபோட்டிப் பிள்ளைக்குண்டான பயங்கரத்தை பெரியோரிடம் சொல்லவும், அப்பெரியோர்கேட்டு, இந்தப்பிள்ளை பிரபல பிரபுவாக வாழ்வானென்று சொல்லினராம். பிறகு பிள்ளைக்குப் பதினைந்து வயதானபோது ஒரு பிராம்மண ஜோசியர் கண்டு "நீ பிரபல பிரபு ஆவாய்! அப்போது உனக்குண்டாகும் சொத்தில் கால்பாகம் எனக்குத்தரவேண்டும்" என்று ஜோசியம் சொன்னாராம்.



இப்படி அரியநாயகம் சிறுபிள்ளையாக இருந்தபோதே இவருடைய பிற்காலத்துப் பிரபலத்தைச் சொல்லுவதற்குத் தகுந்தபடி, இவர் கல்வியில் முக்கியமாகக் கணிதத்தில் நிபுணராயும், மல்யுத்தம், வில்யுத்தம் முதலான யுத்தப்பயிற்சிகளிற் சிறந்தவராயும் இருந்தபடியால், விஜயநகரசமஸ்தானபதியினிடம் ஏதாவது ஒருவேலையைச் சம்பாதிக்கலாமென்று போக; அங்கு இராயலு சமஸ்தானத்தில் ஓர் சிக்குமுக்கலான கணக்கைப்பற்றிச் சபையார் சர்ச்சித்துக்கொண்டிருந்ததை இந்த அரியநாயகம் கண்டு, உடனுக்குடனே அக்கணக்கின் விவரத்தை வெட்ட வெளியாக்கியும், இராயருடைய ஜாதகத்தைப் பரிசோதித்து ஜோசியம் சொல்லியும்; நவராத்திரிகாலத்தில் கொல்லும் எருமைக்கழுத்தின் குறிப்பான இடத்தைக் காட்டியும் வந்ததினால் இராயருக்குச் சந்தோஷமுண்டாகி, தமது அரண்மனையில் ஒரு கணக்குப்பிள்ளைவேலையில் அமர்த்திக்கொண்டார். இவ்வாறு இவர் அச்சிறுவேலையில் அமர்ந்திருக்கும் நாளில், இவருடைய புத்தி யூகத்தை இராயலுகண்டு இவரைத் தமது மந்திரிகளில் ஒருவராக்கியும் இவருக்குப் பல்லக்கு மரியாதையையும், முதலியார் என்றபட்டத்தையும் கொடுத்தும் மரியாதைசெய்தார்.

அதாவது விஜயநகர ஸமஸ்தான பிரபுக்கள் பிரதிவருஷமும் காட்டிற்குள் வேட்டைக்குப்போய், ஒருகாட்டெருமையை வலைவீசிப்பிடித்துவந்து, தமது சமஸ்தானத்தில் ஆண்டுதோறும் நடக்கும் நவராத்திரிக் கொலு உற்சவகாலத்தின் பத்தாம்நாள் கோட்டைக்காவல் காளிகாதேவியின் முன் ஒரேவெட்டில் சிரம்வேறு முண்டம்வேறாக வெட்டிப்பலிகொடுப்பது புராதன வழக்கமாம். அவ்வழக்கத்தை அனுசரித்து அந்த வருஷம் காட்டிற்குட்சென்று கம்பீரமான ஒரு காட்டெருமையைப் பிடித்துக்கொண்டு வந்து, கோட்டைக்காவல் காளிகாதேவியின்முன் பலிகொடுக்க வந்தபோது, அந்தக் காட்டெருமையின் கொம்புகள் அதிகமாகநீண்டும் விரிந்தும் இருந்தமையால், அப்படிப்பட்ட பயங்கரக் கொம்புகளையுடைய எருமையை ஒரேவெட்டில் வெட்ட முடியாமல் காவலாளிகள் மனோராச்சியம் செய்தார்கள். அந்தஎருமையின் சிரம் ஒரேவெட்டில் துண்டிக்கப்படாவிட்டால், சமஸ்தானத்துக்கே கெடுதியுண்டாகுமென்ற

சகுன பயமிருப்பதால், அந்தப்பயத்தைக் கருதி இக்கருமத்தைச் செய்ய இராயலு முதலானவர்கள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கமுற்றிருக்கையில்; இச்செய்திகளையறிந்த அரியநாயகம் ஓடிவந்து அந்த எருமையை, எப்படி நிற்கவைத்து எந்தவிடத்தில் எப்படிவெட்டினால் துண்டாகும் என்னும் உபாயத்தைச்சொல்ல; அந்த உபாயத்தின்படி காவற்காரர்கள் வெட்ட, எருமையின் கழுத்து ஒரே வெட்டில் வெட்டப்பட்டதைக் கண்டு, இராயரும் மற்றுமுள்ள ஸமஸ்தானத்தாரும் அரியநாயகத்தின் ஆழ்ந்தயுக்திக்கு ஆநந்தித்து, அவரை அரண்மனையில் மேன்மையான உத்தியோகத்தில் அமர்த்தினார்கள். இந்த விருத்தாந்தத்தைப் பற்றி கனம் டெயிலர் (W. Taylor') வேறுவிதமாக எழுதியிருக்கிறார். அதாவது அப்போது 16-வயதையுடைய இந்தவிசுவநாத நாயடுகாரின் சொப்பனத்தில் காளிகாதேவியார் வந்து அந்த எருமையின் கழுத்தை வெட்ட வேண்டியவிடத்தைக் குறிப்பாகத்தெரிவித்துச்சொல்ல அந்த சொப்பனத்தின்படி விசுவநாதநாயடு எழுந்து சமஸ்தான ஆயுதச்சாலையிலிருந்த 2, முதல் 8 அங்குல அகலமுள்ள கத்தியைக்கொண்டு வந்து எருமையின் கழுத்தை வெட்டிக் கீர்த்திபெற்றாராம். (Vide Pages 7. 15 Vol 2 O. H. N. by W. Taylor)

(இன்னும்வரும்.)

---

## பிழைதிருத்தம்,

சென்ற ஆவணி மாதச் "செந்தமிழி" லே பிரகடனஞ்செய்யப்பட்ட "நல்லைவெண்பா" என்னும் விஷயத்திலே, பின் வரும் திருத்தங்களைச் செய்து வாசிக்க.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௪௧௪ | ௪ | யமகமாகவும் | யமகதிரிபுகளாகவும் |
| ,, | ௬ | ஐம்பது | எழுபது |
| ௪௧௬ | ௫ | யமகம் | திரிபு |
| ,, | ௨௪ | ,, | ,, |
| ௪௧௮ | ௭ | வாரவாகு | வரவாகு |
| ,, | ௯ | யமகம் | திரிபு |
| ,, | ௧௭ | ,, | ,, |

ச. கந்தையபிள்ளை.



கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௮.] சாதாரண-௵ ஐப்பசி௴. [பகுதி-௧௨.

## தொல்காப்பியத்துக்கண்ட
## பழைய வழக்குகள்.

(முற்றொடர்ச்சி.)

---

சுட்டு முதலாகிய வகர வீற்றுப் புணர்ச்சி.

சுட்டெழுத்தை முதலாகவுடைய அவ், இவ், உவ் என்னும் வகரவீற்றுப்பெயர் மூன்றும், அல்வழியில் வல்லினம் வந்து புணருமிடத்து ஆய்தமாகும் என்பது, "வேற்றுமை யல்வழி யாய்த மாகும்" (எழுத்-௩௭௯) என்னுந் தொல்காப்பிய சூத்திரத்தாற் பெறப்படுகிறது. அவ்+கடிய= அஃகடிய என்பன முதலாக உதாரணங்காண்க. இவ்வாறு அஃகடிய, இஃகடிய, உஃகடிய எனப் புணரும் வழக்கு இக்காலத்தரிய என்பர் நச்சினார்க்கினியர்.

சிறப்புப்பெயரும் இயற் பெயருந் தொடரு முறை.

ஆசிரியர் தொல்காப்பியனார் "சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு-மியற்பெயர் கிளவி முற்படக் கிளவார்" (சொல்-௪௧) என்னுஞ் சூத்திரத்தால்—அரசராற் பெறும் ஏனாதி காவிதி முதலிய சிறப்புப்பெயர்களும், தவம் கல்வி குடி முதலியவற்றை உணர்த்தும் முனிவன ஆசிரியன் பாண்டியன் முதலிய பெயர்களும் இயற்பெயர்களோடு சேர்த்து வழங்குங்கால், சிறப்புப் பெயரைமுன்னும் இயற்பெயரைப்பின்னுமாகவே வைத்துக் கூறல்வேண்டுமென்றும், மாறிவழங்கின் வழுவாமென்றுங் குறிப்பிட்டார். இவ்விதிப்படி, ஏனாதி நல்லுதடன்; முனிவன் அகத்தியன், தெய்வப்புலவன் திருவள்ளுவன், பாண்டியன் குலசேகரன் என உதாரணங்காண்க. *

எனவே, அகத்தியமுனிவன், திருவிரவாசிரியன், குலசேகரபாண்டியன் முதலாக இயற்பெயர் முன்னும் சிறப்புப்பெயர் பின்னுமாகப் பிற்காலத்தார் வழங்குமுறை தொல்காப்பியர்நாளில் வழுவாகக் கருதப்பட்டமை விளங்கும். நச்சினார்க்கினியரும் "திருவிரவாசிரியன் என்றாற்போல இயற்பெயர் முற்கூறுவனபிறவும்..."கடிசொலில்லை' என்பதனாற் கோள்க" என்றமையுங் காண்க. சேனாவரையர் திருவிரவாசிரியன் முதலியவை தொகைச்சொல்லாதலாற் 'பண்புத்தொகையாராய்ச்சிக்கட் பெறுதும்' என வேறுகாரணங்கூறுவர். நன்னூலாரோ "இயற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே" எனக்கூறி முன்வரலை வழுவமைத்துக்கொண்டார்.

*'தூணின்கட் சார்ந்தான்' என வழங்காமை.*

வேற்றுமை மயங்கியலில், இரண்டாம் வேற்றுமைப்பொருளும் ஏழாம்வேற்றுமைப் பொருளும் மயங்குமயக்கங் கூறுமிடத்து "கரும மல்லாச் சார்பென் கிளவிக் - குரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை" (சொல்-அச.) என்றார். இதன் கருத்து:—[இரண்டாம் வேற்றுமைக்கு ஓதிய சார்பு என்னும் பொருண்மை, கருமச்சார்பு கருமமல்லாச் சார்பு என இரண்டு வகைப்படும்; அவற்றுள் கருமச் சார்பாவது தூணைச்சார்ந்தான் என ஒன்றனையொன்று மெய்யுறுஞ் சார்பாகும்; கருமமல்லாச் சார்பாவது அரசரைச்சார்ந்தான் என அங்ஙனம் மெய்யுறுதலில்லாத சார்பாகும். இவ்விருவகைச் சார்புகளிலே,] அரசரைச் சார்ந்தானென்னும் கருமமல்லாதசார்புப்பொருளுக்கு ஏழாம்வேற்றுமை உரித்தாய்வருதலுமுடைத்து—என்பது. கருமம் ஈண்டு மெய்யுறல்.

இதனால், கருமச்சார்பாகிய தூணைச்சார்ந்தான் என்றாற்போல்வனவற்றை, தூணின்கட் சார்ந்தான் என வழாவதற்கும் உரியதாக்கி இக்காலத்தார் கூறுமுறை, தொல்காப்பியர்காலத்து வழக்கன்றென்பதும், அரசரைச்சார்ந்தான் என்னுங் கருமமல்லாச் சார்பையே அரசர்கட் சார்ந்தானென வழாவதுடனும் அக்காலத்தார் வழங்கினர் என்பதுந் தெளிவாம். இதுபற்றியே, சேனாவரையர், "தூணின்கட் சார்ந்தான் என உலகத்தார் வழங்குதல் இடைத்தெரிவின்றி வழங்குகின்றாரெனவே படும், ஆசிரியர் 'கருமமல்லாச்சார்பென்கிளவி' என விதந்து கூறினமையானென்பது" எனவும், நச்சினார்க்கினியர் "தூணின்கட் சார்ந்தான் என்பது வழக்கமின்று, ஆசிரியர் மறுத்தலின்" எனவும் கூறினமைகாண்க.



*எல்லாம் என்னுஞ்சொல் உயர்திணையில், தன்மைப் பன்மை ஒன்றற்கே வருதல்.*

எல்லாம் என்னுஞ்சொல், அஃறிணையிலன்றி உயர்திணைக்கண் வருங்கால், தன்மைப்பன்மையொன்றுக்குமே வருமென்பது "தன்னு ளுளப்படுத்த பன்மைக் கல்லது - உயர்திணை மருங்கி னாக்க மில்லை" (சொல்-கஅகூ) என்ற சூத்திரத்தால் அறியப்படும். இதனால், தொல்காப்பியர் காலத்தே, எல்லாமென்பது அஃறிணைப்பன்மையோடு உயர்திணையில் தன்மைப்பன்மையொன்றற்குமட்டும் வழங்கியமையும், ஏனை முன்னிலைபடர்க்கைப் பன்மைகட்கு அது வழங்காமையும் பெறப்படுவனவாம். சேனாவரையர் "நெறிதா ழிருங்கூந்த லின்பெண்டி ரெல்லாம்' எனப் படர்க்கைக்கண்ணும் வந்ததாலெனின்;—எழுத்ததிகாரத்துள் (எல்லாமென்றசொற்கு) "உயர்திணையாயினம்மிடை வருமே" எனத்தன்மைக்கேற்ற (நம்முச்) சாரியை கூறினமையானும் ஈண்டு நியமித்தலானும், அஃது இடவழுவமைதியாம்" எனக்கூறி, படர்க்கைக்கண் பிற்காலத்தார் வழங்குதலை அமைத்துக்கொண்டார். நச்சினார்க்கினியர், இச்சூத்திரத்துள்ள ஆக்கமென்பதற்குப் பெரும்பான்மை எனக் கருதிக்கொண்டு, "எனவே, சிறுபான்மை முன்னிலைப்பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் வருமாயிற்று" என்று உதாரணங்காட்டினர். நன்னூலாரோ, "எல்லாமெனல் பொது" (உஅரு) "எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்" (உஅஉ) என இருதிணைக்குமுரிய பொதுப்பெயர்களுள் ஒன்றாகவே இதனை எண்ணினர். இவையெல்லாம்; "உயர்திணையாயின் நம்மிடை வருமே" (எழுத்தி-கஅ0) தன்மைப்பன்மைக்கல்லது" உயர்திணை மருங்கி னாக்கமில்லை" என்னுஞ் சூத்திரங்களால் எல்லாமென்னுஞ் சொல்லியல்பை நன்குவிளக்கிய தொல்காப்பியனார் காலத்துக்குப் பெரிதும் பிற்பட்டகொள்கைகள் என்பது தெள்ளிது.

*எண்ணிடைச் சொற்கள்சொற்றோறும் நிற்றல்.*

எண்ணிடைச்சொற்களாகிய என்று என ஒடு என்பவை ஓரிடத்திற் றோன்றி, பிறவழியும் பிரிந்துசென்று, எண்ணப்படும் பொருள்கடோறும் போய்ப் பொருந்துமென்பது—"என்று மெனவு மொடுவுந் தோன்றி - யொன்றுவழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே" (சொல்-உகூசா) என்ற தொல்காப்பிய சூத்திரத்தால் விளங்கும். 'வினைபகை என்றிரண்டினெச்சம்' 'கண்ணிமை நொடியென' 'பொருள் கருவி காலம் வினையிடனோடைந்தும்' என்றவிடங்களில்—வினையென்று, கண்ணிமையென, பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு என்று, அச்சொற்கள் பிறவழியுஞ் சென்று ஒன்றியவாறு

காண்க. இச்சூத்திரத்தே "ஒன்றுவழியுடைய" எனச்சிறுபான்மையே வருமெனக் குறிக்கப்படுதலை நோக்கி, சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் "ஒன்றுவழியுடைய வென்றதனால், சொற்றொறு நிற்பதே பெரும்பான்மை; சொற்றொறுநின்ற எண் இக்காலத்தரிய" என்றனர். எனவே, வினையென்று பகையென்றிப் பண்டிணெச்சம், பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு இடனொடு ஐந்தும் என்று கூறுவதே தொல்காப்பியர்காலத்துப் பெருவழக்கென்பதும், முற்கூறியபடி ஓரிடத்துநின்று பிரிந்துசென்றியைதல் அக்காலத்துச் சிறுபான்மையே வழங்கியது என்பதும் அறியப்படுவனவாம். பின்வரும் "கண்டீரென்று" முதலிய சூத்திரங்களும் இதனை வற்புறுத்தும்.

**வினைச்சொற்களுட் சில அசை நிலையாதல்**

கண்டீர், கேட்டீர், சென்றது, போயிற்று என்னும் சொற்களைன்கும் வினாவோடு பொருந்திநின்ற விடத்தும்; கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்னும் முன்னிலைவினைச்சொல் நான்கும் முன்னிலைப்பொருளை உணர்த்தாத விடத்தும் அசைநிலைகளாகும் என்பது:—

"கண்டீ ரென்று கேட்டீ ரென்று
சென்ற தென்று போயிற் றென்று
வன்றி யனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி யசைக்குங் கிளவி யென்ப" (சொல்லதி-௪௨௫)

"கேட்டை யென்று நின்றை யென்று
காத்தை யென்று கண்டை யென்று
வன்றி யனைத்து முன்னிலை யல்வழி
முன்னுறக் கிளந்த வியல்பா கும்மே" (௸-௪௨௬)

என்ற சூத்திரங்களாற் கூறப்பட்டது. இவை கண்டீரே கண்டீரே என அடுக்கியும், அடுக்கின்றித்தனித்தும் வரும். இவற்றுள் வினாவொடு பொருந்திநின்று அசைநிலைகளாகுஞ் சொற்களுள் கண்டீர் கேட்டீர் என்ற இரண்டுமட்டும் வழக்கிலுள்ளன. ஒருவன் கூறிய சொல்லிற்கு உடம்படாதவன் கண்டீரே, கேட்டீரே என்றால், அச்சொற்கள், வினைச்சொற்பொருண்மையும் வினாச்சொற்பொருண்மையுமின்றி நிற்குமெனவறிக. இவ்விரண்டு சொற்கணீங்க, ஒழிந்த சென்றது போயிற்று என்பவை வினாவொடு பொருந்தி அசைநிலையாதலும்; அடுத்த சூத்திரத்துக்கண்ட கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்ற வினைச்சொல் நான்கும் முன்னிலைப்பொருளை உணர்த்தாது அசைநிலையாதலும் தொல்காப்பியர்காலத்தே வழங்கியவாயினும், உதாரணங்காணாமையின் இக்காலத்தரியவாயின என்பர், சேனாவரையரும் நச்சினார்க்கினியரும். (தொடரும்.)

பத்திராசிரியர்.

உ

சிவமயம்.

# இந்திய அரசர் போர்வீரம்.

முற்காலத்தில் நம் இந்தியாவிலுள்ள அரசர்கள் செய்த போரைக் குறித்துக்கூறிய நூல்களை நாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து, அவர்களதும் அவர்கள் படைவீரர்களதும் போர்வீரம் மிகவும் எவர்களாலும் வியந்து பாராட்டத்தக்கனவேயாம். அவற்றுள் மிகவுஞ் சிறப்புடையவானவீரங்களை இங்கே எடுத்துக் காட்டுதும்:—

அவர்கள் போர்செய்புங்காலத்தில் தமது வீரத்திற்கும் அறத்திற்குமிழுக்கானவற்றைச் செய்யமாட்டார்கள். அது;

வீறின்மையின் விலங்காமென மதவேழமு மெறியா
னேறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்செலென் றெறியான்
மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையு மெறியா
னாறன்மையின் முதியாரையு மெறியானயி லுழவன்.

என்பதனானறியப்படும்.

கையிற் படையில்லாதவர்கண்மீது படைசெலுத்தலும் கொல்லுதலுஞ் செய்யமாட்டார்கள். அது;

கைப்படை யொன்று மின்றிக் கைகொட்டிக் குமரனார்ப்ப
மெய்ப்படை வீழ்த்த வாணி வேழமு மெறிதல் செல்லான்
மைப்படை நெடுங்கண் மாலை மகளிர்தம் வனப்பிற் சூழ்ந்து
கைப்படு பொருளிலாதான் காமம்போற் காளை மீண்டான்.

என்பதனானறியப்படும்.

கண்ணிமைத்தாரையும் புறங்கொடுத்தாராகக் கருதிக்கொல்லமாட்டார்கள். அது;

எத்தறன் கண்கள் வெய்ய விமைத்திட வெறித லோம்பி
சாத்தக வுழவ னானி நக்குநீ யஞ்சல் கண்டாய்
காய்ந்திலே னென்று வல்லே கலினமாக் குன்றிற் பொங்கிப்
பாய்ந்ததோர் புலியின் மற்றோர் பகட்டின்மேற் பாய்வித்தானே.

என்பதனுணரியப்படும். இதனை; வள்ளுவனாரும் "விழித்தகண் வேல்கொண்டெறிய வழித்திமைப்பி - னோட்டன்றோ வன்கணவர்க்கு" என விதந்து கூறுதல் காண்க.

எம்மைப்பொருவாய் என்று எதிர்த்தார் மீதும் முற்படமார்பு கொடுத்தார் என்னும் புகழைப் பெறுவர் என்று படைவழங்கார். அது;

புடைதாழ்குழை பொருவில்லுயர் பொன்னோலையொ டெரிய
வுடைநாணொடு கடிவட்டினொ டொளிர்வாளினொ டொருவ
னடையாளக ரெறிகெனவ துவேயென நக்கான்
இடையாயின னிவனேயெனக் கிளரானழ குடையான்.

என்பதனு னறியப்படும். இதன்கண்; "'அதுவேயெனநக்கான்' என்றது முற்படமார்பு கொடுத்தானென்னும் புகழை நீ யெய்தக்கருதியோ? அப்புகழைத்தாமேனென்று நக்கான் என்றவாறு" என நச்சினார்க்கினியர் கூறுதலால் அது அறியப்படும்.

பகைவன் செலுத்தியவேலுக் கெதிர்சென்று ஏற்குந்திறமுடையவர்கள். அது;

நின்றவப் படையு ளானே யொருமக னீலக் குஞ்சி
மன்றல மாலைசுற்றி மழகளி றன்றி வீழான்
வென்றியங் களிறும் வென்வேன் மின்னென வெருண்டு விட்டான்
சென்றவேல் விருந்து செங்கண் மறவனக் கெதிர்கொண்டானே.

என்பதனுணரியப்படும்.

மார்பிற்றைத்த வேலைப் பறித்துத்தாம் செலுத்துதற்கு வைத்திருப்பார்கள். அது;

மான்வயி றார்ந்து நோக்கும் வெருவுறு மருளி னோக்கிற்
றேன்வயி றார்ந்த கோதைத் தீஞ்சொலார் கண்கள் போலு
மூன்வயி றார்ந்த வெள்வே லொய்யெனப் பறித்து நக்கான்
கான்வயி றார்ந்து தேக்கிக் களிவண்டு கனைக்குந் தாரான்.

என்பதனுணரியப்படும். இதனை; திருவள்ளுவரும் "கைவேல்களிற் றொடுபோக்கிவருபவன் - மெய்வேல் பறியா நகும்" என விதந்து கூறுதல் காண்க.



ஒருவேலன்றிப் பலவேலைத் தம்மார்பிலேற்றுநிற்குந்திறமுடையவர்கள். அது;

விட்டழல் சிந்தி வெள்வேல் விசும்பின்வீழ் மின்னி னெய்தாக்
கட்டழ னெடுங்கண் யாது மிமைத்திலன் மகளி ரோச்சு
மட்டவிழ் மாலை போல மகிழ்ந்துபூண் மார்பத் தேற்றுக்
கட்டழ லெஃகஞ் செல்லக் காளெறி யாயி னானே.

என்பதனுணரியப்படும்.

வாளின் வளைவைப் போக்கும்படி மார்பென்றுகருதாது வேல்தைத்தபுண்ணிற் பலமுறைசெலுத்தும் இயல்புடையவர்கள். அது;

குஞ்சரங் குனிய நூறித் தடாயின குருதி வாட
னெஞ்சக நுழைந்த வேலைப் பறித்தவன் புண்ணு ணீட்டி
வெஞ்சம நோக்கி நின்று மிறைக்கொளி திருத்து வாற்கண்
டஞ்சி மற்றரசர் யானைக் குழாத்தொடு மிரிந்திட் டாரே.

தோட்டுவெண் டொலியன் மாலைத் துடியிடை மகளி ராய்ந்த
மோட்டுவெண் முத்த மின்னு முகிழ்முலை யுழுது சாந்தங்
கோட்டுமண் கொள்ள நின்றான் குரிசின்மண் கொள்ள நின்றான்.

என்னுஞ் செய்யுள்களானறியப்படும்.

இவ்வாறான வீரமுடையவர்களாயிருந்தாலும் பகையரசனொருவன் படைமுதலிய இழந்து தனித்தவனாகுங்காலத்து அவன் மீது இரங்கிப்போரொழிந்து அவனை உய்யும்படி புத்திகூறுவார்கள். அதற்கு மவன் உடன்படானாயின் அவனைக்கொல்லாது படையாதிய வற்றோடு மீளவரும்படி கூறிவிடுப்பார்கள். அஃது; இராவணன் முதனாட்போரில் படையாதிய விழந்து தனித்துநின்றமை கண்டு ஸ்ரீராமபிரான் அவனைநோக்கி,

அறத்தி னாலன்றி யமரர்க்கு மருஞ்சமர் கடத்தல்
மறத்தி னாலரி தென்பது மனத்திடை வலித்தி
பறத்தி நின்னெடும் பதிபுகக் கிளையொடும் பாவி
இறத்தி யானது நினைக்கிலென் றனிமைகண் டிரங்கி.

உடைப்பெருங்குலத் தினமொடு முறவொடு முதவும்
படைக்கலங்களு மற்றுநீ தேடிய பலவும்
மடைத்து வைத்தன திறந்துகொண் டாற்றுதியாயின்
கிடைத்தி யல்லையே லொளித்தியாற் சிறுதொழிற் கிழோய்.

சிறையில் வைத்தவ டன்னைவிட் டெலினிற் றேவர்
முறையில் வைத்துநின் றம்பியை யிராக்கதர் முதற்பே
ரிறையில் வைத்தவற் கேவல்செய் திருத்தியே லின்னுந்
தறையில் வைக்கிலெ னின்றலை வாளியிற் றடிந்து.

அல்லை யாமெனி னாரம ராற்றெனுந் தேற்ற
வல்லை யாமெனி னுனக்குள வலியெலாங் கொண்டு
நில்லை யாவென நேர்நின்று பொன்றுதி யெனினு
நல்லை யாகுதி பிழைப்பினி யுண்டென நயவேல்.

எனக்கூறி அவன் கருத்தைக் குறிப்பானறிந்து,

"ஆனை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூனை யாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் றிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்."

எனக்கூறி விடுத்தமையா னறியப்படும். இதனை; "பேராண்மையென்ப தறுகணொன் றுற்றக்கா—லூராண்மை மற்றத னெஃகு" என்னுங் குறளின் விசேடவுரையின்கண், பரிமேலழகரும் எடுத்துவிதந்து கூறுதல் காண்க. இவற்றால் நம் இந்திய அரசர்களது போர்வீரம் நீதி அருள் முதலியன நன்குணரக் கிடத்தல் காண்க.

சி. கணேசையர்.

---

உ

# *பக்தி.

இதற்கு சித்து அசித்து ஈசுவரன் என்னும் தத்வத்திரயங்களுள் சித்துஎன்னும் ஜீவாத்மா அசித் என்னும் பிரகிருதி சம்பந்தத்தாலுண்டான அநாதி கன்ம பாசம்நீங்கி ஈசுவரனாகிய பரமாத்மாவோடு கலந்துநின்று இன்பம் அநுபவிக்கும் முறையினை உணர்த்துவது கருத்தாம்.

பக்தி, அன்பு, காதல் பற்று என்பன ஒருபொருட் சொற்கள். பற்று என்றவிடத்து, பற்றப்படுவதற்கொருபொருளும், பற்றுவதற்கொருபொருளும், பற்றுதலாகிய ஒருதொழிலும் வேண்டப்படுவன. இனி இவற்றை முறையே விசாரித்தல் இதன் விரிவுரையாம்.

இனி, பற்றுதல் என்பது தன்னொடுதொடர் புடையார்மாட்டு நிகழும் உள்ளக்கிளர்ச்சியாம். தான்என்னும் சொல்லுக்குத் தேகமே பொருளாகக்கொண்டு அதன் சம்பந்தமான பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்களாகிய, பிரபஞ்சப்பொருள் ஒன்றும், அந்தத்தான் என்னும் சொல்லுக்கு ஜீவாத்மாவைப் பொருளாகக்கொண்டு, அதன் சம்பந்தமான பரமாத்மா ஒன்றும், ஆகப்பற்றப்படும் பொருள்கள் இரண்டாம். பற்றும் பொருள், ஜீவன். பற்றுதல் செய்வதற்குக் கருவியாயுள்ளது, உள்ளம் அல்லது மனம். ஆகவே ஜீவாத்மா, மனத்தைக் கருவியாகக்கொண்டு பிரபஞ்சப்பொருளினிடத்தும், பரமாத்மாவிடத்தும், பற்றுதலைச் செய்வதற்குப் பற்றென்று சொல்லப்பெறும்.

இப்பற்று, பாசவிஷயமாகிய, பிரபஞ்சப்பொருளைப் பற்றுகையால், "மாறிமாறிப் பல்பிறப்பும் பிறந்துஞ்செத்தும்" என்றபடி, பிறந்திறந்துழலுவதாகிய, "துக்கச்சுழலையிற் சூழ்ந்துகிடந்தவலை"

* இது தஞ்சையில் 1910-ஞு மேமீ 24உயில் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஒன்பதாம்வருஷ மகோற்சவத்தில் சாலியமங்கலம் போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீமத்-T V. கோபாலசாமி நாயடுகாருவால் வாசிக்கப்பெற்றது.

என்னலாம் படியான துன்பமும், பரமான்மாவைப் பற்றுகையால் அத்துன்பங்களினின்று நீங்கி, "அந்தமில்பேரின்ப"மான நித்யானந்தப் பெருவாழ்வடைதலாகிய இன்பமும், பெறுவது பயனும். ஆதலால், பெறுதற்கரிய மானிடவகுப்பில் அறி[illegible]றிந்த மக்களாய்ப்பிறந்த நாம், "பிறந்தேன் பெற்றமக்கள் பெண்டிரென்றிவர் பின்னுதவா,தறிந்தேன் நீ பணித்த அருளென்னும் ஒள்வாளுருவி, எறிந்தேன் ஐம்புலன்களினிடர் தீரவெறிந்துவந்து, செறிந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகரமேயவனே" என நம்மாழ்வாரருளிய ஈரச்சொற்களின்படி பிரபஞ்சவிஷயத்தில் பற்றுதலைத் துறந்து "துறந்தமையால் சிறந்தேன் நின்னடிக்கே அடிமை" என, பரமாத்மாவிடத்தில் பற்றுதலைச்செய்ய முயலவேண்டும்.

நல்லொழுக்கம், தீயொழுக்கம், கூடாவொழுக்கம் என ஒழுக்கம் பலவகையாயினும், அடைகொடாது ஒழுக்கம் என்று கூறுதலினானே நல்லொழுக்கம் ஒன்றனையே குறிப்பிப்பதுபோல, ஈண்டு அடையின்றிக் கூறும் பத்தி என்னும் சொல்லுக்குப் பரமாத்மாவிடத்துப் பத்திசெய்வதாகிய, ஈசுவரபத்தியையே பொருளாகக்குறிக்கும். இந்த ஈசுரபத்தியில் உறைந்து நிற்பதினாற்றான், அநாதியாய் ஜன்மங்கடோறும், தொடர்ந்துவரும் பாசப்பற்றுநீங்கவேண்டும். இதுபற்றியே, "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப் பற்றுகபற்றுவிடற்கு" எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் திருவாய்மலர்ந்தருளியதூஉமென்க. இப்பாசப்பற்று, அற்றவிடத்தே பிறப்பற்று, வீடுபேறாகும். இதனை, "பற்றற்றகண்ணேபிறப்பறுக்கும்" எனவும், "அற்றதுபற்றெனில் உற்றதுவீடு" எனவும், கூறியுள்ளவைகளால் தெள்ளிதினுணர்க.

ஒருவர்மற்றொருவர்பால் பற்றுவைக்குங்கால் அவருக்கும், இவரிடத்துப் பரஸ்பரம் பற்றுண்டாவது இயல்பே. அங்ஙனம் பற்றுண்டாகாதிருக்குமாயின், அவரையாரும் மதியுடையாரென மதியார். இது போலவே, எல்லாம்வல்ல பேரறிவுடைய ஈசுவரனிடத்துப் பத்திவைக்குங்கால் அவரும் நம்மிடத்துப் பத்திவையாதிருப்பதில்லை. ஆனால் நாம் அவரிடத்துவைக்கும் பத்திக்கும் அவர் நம்மிடத்துவைக்கும் பத்திக்கும், வித்தியாசமுண்டு. யாங்ஙனமெனிற் கூறுதும்.



நாம் அவரிடத்துவைக்கும் பத்திக்கு, அன்பு என்றும் ஈசுவரன் நம்மிடத்துவைக்கும் பத்திக்கு அருள் என்றும் பெயராம். இன்னும் இதன் உண்மையைச் சுருங்கக்கூறுமிடத்துத் தாழ்ந்தோர் உயர்ந்தோரிடத்துவைக்கும் பக்தி அன்பென்றும், உயர்ந்தோர்தாழ்ந்தோரிடத்து வைக்கும்பக்தி அருள் என்றும் சொல்லப்பெறும். இதனை "அருளொடுமன்பொடும் வாராப்பொருளாக்கம் புல்லார்புரளவிடல்" என்னும் திருக்குறளுக்கு, உரையாசிரியர் உரைகூறுமிடத்து, அருளொடு மென்னும் பதத்திற்கு அரசன் குடிகளிடத்துவைக்கும் பத்தியையும், அன்பொடுமென்னும் பதத்திற்கு குடிகள் அரசனிடத்துவைக்கும் பத்தியையும், குறித்துப்பொருள்கூறி வலியுறுத்தினமை காண்க.

இவற்றுள் பத்தி என்பதும், அன்பு என்பதும் ஒருபொருள் பயப்பனவாயிருப்பினும், ஈசுவரனிடத்தில் விருத்தியோடுகூடிநின்ற நிலைக்குப் பத்தியென்றும், விருத்தி இறந்துநின்றநிலைக்கு அன்பு என்றும், அநுபவமுதிர்ந்த ஆன்றோர் கூறுவர். அவற்றுள் பத்தி விருத்தியோடு கூடிநின்றதென்பதை "முத்திநெறியறியாதமூர்க்கரொடு முயல்வேனைப்பத்திநெறியறிவித்து" என்றும் அன்பு விருத்தி இறந்தநிலை என்பதனை "அன்பினில்விளைந்தஆரமுதே" என, ஸ்ரீமாணிக்கவாசகப்பெருமானும், "அன்பாவாய் ஆரமுதமாவாய் அடியேனுக்கின்பாவாய் எல்லாமுநீயாவாய்" "ஆராவமுதே அடியேனுடலம் நின்பாலன்பாயே நீராயலைந்து கரையவுருக்குகின்றநெடுமாலே" என ஆழ்வாரும் திருவாய் மலர்ந்தருளினரென்க.

இனி இப்பத்தி எண்வகையாகவும்; அன்பு ஒன்றாகவும், ஆக ஒன்பதுவகையாகக் கூறுவர். அவற்றுள், பத்தி எண்வகையாவன:—

1. சிரவணம். 2. கீர்த்தனம். 3. ஸ்மரணம். 4. சேவனம். 5. அர்ச்சனம். 6. வந்தனம். 7. தாஸத்துவம். 8. சிநேகத்வம்.

இவற்றுள்,

1. சிரவணம்:—ஈசுவரனுடைய அநந்தகல்யாண குணகணங்களை ஆன்றோர்முகமாகக்கேட்டு மகிழ்தல்.

2. கீர்த்தனம்:—அத்தகைய கல்யாண குணங்களை, இடைவிடாமல் துதித்துப் பாடி ஆடி அனலிலிட்ட வெண்ணெய்போல உள்ளம் நெக்குருகிக் கசிந்து நிற்றல்.

3, ஸ்மரணம்:—புறக்கரண வியாபாரமின்றி; அகக்கரணங்களினால், "என்னரங்கத்தின்னமுதர் குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில் எழுகமலப்பூவழகர்" என்றபடி, ஈசுவரனுடைய அப்ராக்ருத தேஜோமய திவ்யமங்களவிக்ரஹ சௌந்தர்ய சௌலப்ய வடிவழகில், ஈடுபட்டு உருகிக் கசிந்து தியானித்து நிற்றல்.

4. சேவனம்:—ஈசுவரனுக்கு உவப்பாகப் பூமாலைகட்டல் நந்தவனம் வைத்துப் பாதுகாத்தல் ஆலயங்களிலே "கடைத்தலைசீக்கப் பெற்றால் கடுவினைகளையலாமே" என்றபடி சீத்தல், திருமெழுகிடல், கோலமிடுதல் முதலிய கைங்கர்யங்களைச் செய்தல்.

5. அர்ச்சனம்:—மந்த்ரபூர்வகமாக, "மாயவன் றன்னைவணங்க வைத்தகரணமிவை" என்றபடி புறக்கரணங்களினாலும், அகக்கரணங்களினாலும், "நாடாதமலர்நாடி நாடோறும் நாரணன்றன் மலரடிக்கீழ்" என்றபடி, மலராலும், பாவனையாலும், அர்ச்சித்தல்.

6. வந்தனம்:—புறக்கரணங்களினால் அகக்கரணங்களுமொவ்வ, "என்னரங்கத்தின்னமுதனைக் கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே" என எம்பெருமானது திவ்யமங்களவிக்ரஹ அர்ச்சாவதாரத் திருவுருவைக்கண்டு சாஷ்டாங்கமாதி வந்தனம் செய்தல்.

7. தாஸ்யத்வம்:—கர்மவசத்தால் தான்செய்யும் செயல்களையும் தனக்குப்பிறர்செய்யும் செயல்களையும் செய்யும் சுதந்தரம் தனக்கும் பிறர்க்கும் இல்லையென்றும், அச்சுதந்தரமுடைய ஈசுவரன் திருவருளானே அவைநிகழ்வனவென்றும் தன்னறிவிற்கண்டு, பாரதந்தரிய விருத்தியிலிருந்து ஈசுவரனுக்குவப்பாய், அடிமைசெய்தல்.

8. சிநேகத்வம்:—"அன்பீனுமார்வமுடைமைஅதுவீனும்நண்பென்னும் நாடாச்சிறப்பு" என்னும் திருக்குறளின்படி, அன்பினாலே, ஈசுவரனிடத்துப் பிரேமையுண்டாகி அதன்வழியே நட்புப்பாவனை முதிர்ந்து நட்பிற்குரிய சிறந்தகுணங்களுள் தங்குறைகளையெல்லாம் மறையாதுகூறிப் பரஸ்பரம் நட்பாங்கிழமைகொண்டு மகிழ்தலும், நட்புக்கொண்ட ஈசுவரனிந்தை கேட்டவிடத்துச் சகியாமையுமாம். இவ்வாறு பத்தி எண்வகை முடிந்தன.



இனி அன்புவகை ஒன்று: ஆத்மநிவேதனமாம். ஆத்மநிவேதனமாவது:—மேற்கூறிய, பத்திவழிபாடுகளையியற்றிக் கன்மபாசவலிமை குன்றித், திருவருள் வியாபித்திருக்கப்பெற்று அத்திருவருளே துணையாக அவ்வருளோடு பிரிப்பின்றி நிற்கும் ஈசுவரனிடத்து, அவன்வேறு தான்வேறெனும் பேதமற "ஊனொட்டிநின்றென்னுயிரிற்கலந்து" என்றும், "தானும்யானும்எல்லாம் தன்னுள்ளேகலந்தொழிந்தோம்" என்றும்,

"எனதாவியுள்கலந்த பெருநல்லுதவிக்கைம்மாறு
எனதாவிதந்தொழிந்தேன் இனிமீள்வதொன்றுண்டே
எனதாவியாவியுநீ பொழிலேழுமுண்டவெந்தாய்
எனதாவியார்யானார் தந்தநீ கொண்டாக்கினையே."

என்றும், நமது பரமகாருணிகரான நம்மாழ்வாரருளிச்செயல்களின்படி ஜீவபோதம் சிறிதும் எழாமல் அறப் பேரானந்தப்பெருங் கடலில், அமிழ்ந்து நிற்றலாம்.

இங்ஙனம் நிற்குங்கால் தொடக்கத்தில் தானும் தலைவனும், தான் தலைவனைக் கூடுதலாகிய தொழிலும் காணப்படினும், முடிவில் வேற்றுமை ஒன்றும் காணப்படாததாயும், அவ்வேற்றுமைக்குரிய இப்பொருள்கள் இல்லையென்று சொல்லமுடியாததுமாய்நிற்கும். இந்நிலைமையைத்தான், "தானானதன்மயமேயல்லாலொன்றைத்தலைபெடுக்கவொட்டாது தலைப்பட்டாங்கே, போனாலுங்கர்ப்பூரதீபம்போலப் போயொளிப்பதல்லாது புலம்வேறின்றாம், ஞானாகாரத்தினொடு ஞேயமற்றஞாதுருவும் நழுவாமல் நழுவிநிற்கும், ஆனாலுமிதன்பெருமையெவர்க்கார்சொல்வார் அதுவாலைதுவாவர் அதுவேசொல்லும்" என்ற திருவாக்கால், ஸ்ரீ தாயுமான சுவாமிகளும், திருவாய்மலர்ந்தருளினரென்க.

இனி இத்தகைய ஒன்பதுவகைப் பத்திசெய்து முத்திபெற்றார் பலராவர் அவர்களுள்;

"விஷ்ணோஸ்துஸ்ரவணே பரீக்ஷிதபவிருத், வையாசுகீர்த்தனே, ப்ரஹ்லாதஸ்மரணே, ததங்க்ரிபஜனே, லக்ஷ்மீம், ப்ருதுப்பூஜனே, அக்ரூரஸ்வபிவந்தனேச்ச, ஹனுமான் தாஸ்யேச்ச, ஸக்யே யர்ஜ்ஜுனஹா, ஸர்வஸ்வாத்மநிவேதனே பலிரபூத், கைவல்ய மேஷாம் சமம்."

என்ற பகவத் வாக்கியப்படி, ஸ்ரீயப்பதியினது, திவ்யகதாஸ்வரணம் பண்ணுதலினால் பரீக்ஷித்து மகாராஜரும்; எமதருட்கடலாகிய எம்பிரானது, அதிமானுஷ சேஷ்டித லீலாரஸ புஞ்சங்களைச் சதா கீர்த்தனம் பண்ணுதலினால், ஸ்ரீ: சுகப்பிர்ம ரிஷியும், அப்ராகிருத திவ்யமங்களவிக்ரஹ சௌந்தர்யத்திலீடுபட்டு, சர்வதா, ஸ்மரணம் பண்ணுதலினால், ஸ்ரீ: பிரக்லாதாழ்வாரும், அந்த சர்வேஸ்வரனது சேவனம் பண்ணுதலினால், ஸ்ரீ: மஹாலக்ஷ்மியும், ஸ்ரீ: சர்வேசுவரனுக்கு அர்ச்சனம் பண்ணுதலினால், பிருது சக்ரவர்த்தியும், பரமதயாளுவாகிய ஸ்ரீ: கிருஷ்ணபகவானுக்கு வந்தனம்பண்ணுதலினால், அக்ரூரஸ்வாமியும், ஜகத்ஸ்வரூபியாகிய ஸ்ரீ: ராமச்சந்திரமூர்த்திக்கு அடிமைசெய்தலினால், ஸ்ரீ: சிறியதிருவடியும், வெண்ணெயுண்ட கண்ணபிரானுக்கு இடைவிடாத பரஸ்பர விசுவாசத்துடன் சிநேகவிருத்திபண்ணினமையால், அர்ச்சுனனும், அந்த பரமாத்மாவுக்குத் தன்னுடைய சர்வசொத்துடன், ஆத்மசமர்ப்பணம் செய்ததினால், பலிச்சக்கரவர்த்தியும், முத்திபெற்றமை பிரசித்தம். இதன் விரிவஞ்சி விரித்திலன். நிற்க,

குருபத்தி:—மேற்கூறிப்போந்த இவ்வொன்பது வகைப் பாகுபாட்டினையுடைய பத்திநெறிகளை நான்முகமாய்க் கண்டாலும் இவற்றினுண்மைகள் ஆசிரியன் உணர்த்த உணருந்தன்மைய: ஆதலில், அவ்வாறுணர்த்தி "அம்பொனரங்கர்க்கும் ஆவிக்கும் அந்தரங்க- சம்பந்தங்காட்டித் தடைகாட்டி- உம்பர்- திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்தநெறி காட்டும்- அவனன்றோ ஆசாரியன்" என்று ஸ்ரீ விளாஞ்சோலைப் பிள்ளையார் அருளியபடிக்குள்ள, இலக்கணமமைந்த நல்லாசிரியனையடுத்துப், பத்திபுரிதலும் முத்திக்குவழியாம். இதனையே, "தீங்கேதுமில்லாததேசிகன்றன் சிந்தைக்குப் பாங்காகநேரே பரிவுடையோர்-ஓங்காரத் தேரின்மேலேறிச் செழுங்கதிரினூடுபோய்ச்-சாருவரேயந்தாமந் தான்" எனப்பிள்ளையார் விளக்கினாரெனக.



இனி அக்குருபத்திமுறையாவன:—அங்கம், தானம், சத்பாவம், குற்றேவல் என நான்கு வகையாகும். அவற்றுள் ஆசிரியனுக்கு, அனுகூலவிருத்தி புரிவது அங்கம். தனக்குரியபொன்மணி முதலிய, சர்வசொத்தையும், "பொருளுமுயிரும் உடம்பும் புகலும்- தெருளுங்குணமுஞ்செயலும்- அருள்புரிந்த- தன்னாரியன் பொருட்டாச் சங்கற்பஞ்செய்பவர்நெஞ் - சென்னாளுமானுக்கிடம்" என எம் அருளாளப்பெருமாள் எம்பெருமானார் திருவாய்மலர்ந்தருளியபடி, ஆசிரியனுக்கர்ப்பணஞ்செய்தல் தானம். அவ்வாசிரியனை, "மானுடவனென்றுங் குருவை மலர்மகள்கோன் - றானுகந்தகோலமுலோகமென்றும்- ஈனமதாய், எண்ணுகின்ற நீசர் இருவருமேயெக்காலும், நண்ணிடுவர்கீழாநரகு" என்றஞானசாகரத்திருமொழியையும், "குருவுருவங்கொண்டிக் குவலயத்துட்டோன்றிப், பருவரலைநீக்கும்பரன்"என்னும் வள்ளலார் வாக்கினையும்,"அருபரத்தொருவன் அவனியில் வந்து,குருபரனாகியருளியபெருமையைச்,சிறுமையென்றிகழாதே" என்ற மாணிக்கவாசகத்தையும் கருத்திற்கொண்டு அவ்வாசிரியனை எச்சமயங்களிலும், மானிடசரீரியென்றுநினையாது, "தேனார்கமலத்திருமாமகள்கணவன், தானேகுருவாகித் தன்னருளால்-மானிடர்க்கா, இந்நிலத்தேதோன்றுதலால்" என்றபடி, "பிதகவாடைப்பிரானார்பிரமகுருவாகி" வந்ததாய்ப்பாவித்தல், சத்பாவம். அவ்வாசிரியரின் சமுகத்திருந்து, "ஞானநெறிக்கேற்ற குரு நண்ணரியசித்திமுத்தி, தானந்தருமந்தழைத்தகுரு-மானமொடு, கோயிலெனவா தாயெனவும்வந்தென்னைத் தந்தகுருவென்சிந்தை, கூசியிடாதிட்டபணிசெய்யுங்குரு" எனமதித்து அவ்வாசிரியன், "குருபத்தி குறையிலராய்நம்பி னராய்த்துரோகமொன்றுமின்றி - மாசிலராய் மனவாக்குக் காயத்தால் குருவின்வாக்கிய பரிபாலனஞ்செய்மதிமானுமாயே" என்றபடி, அவனுவந்தபணியைச் செய்தல், குற்றேவல். இவ்வாறு ஆசிரியனிடத்துப் பத்திசெய்முறை சுருங்க முடிந்தது.

அடியார் பத்தி:—இங்ஙனம் ஆசிரியனிடத்துப் பத்திபுரிந்து, அவனருளால் ஈசுவரனிடத்துப் பத்திபுரியும் முறைமை தெரிந்தும், அம்முறை, தன்னறிவினிடத்தமுந்துவதற்குப் பின்முறையும் கேட்

டுச் சிந்தித்துப் பழகவேண்டுமாதலானும், "இறைவன்றொண்டருள்ளத்தொடுக்கம் எனவும், "தொண்டர்தங்கள் அகமேபொற்கோயிலெனமகிழ்ந்தேமன்றுளாடியகற்பகம்" எனவும், "பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரியவித்தகன்" எனவும், கூறியபடி ஈசுவரன் அடியார்கள் வசப்பட்டவனாகையாலும் அவ்வாசிரியனேயன்றி "குற்றங்குறைந்து குணமேலிடுமன்பர்கூட்டத்தையே முற்றுந்துணையெனநம்பு" என்றபடி ஏனைமெய்யடியார்களின் சகாயமும் வேண்டப்படும். ஆதலால் அடியார் பத்திபுரிதலும் வேண்டும்.

(தொடரும்.)

---

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

## ௫-வது சதுர்த்தாரிகாலம்பகம் ௨-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்கார் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

இவ்விதம் செல்கின்ற ஜாலபாதனைக்கண்ட தேவதத்தன், இதென்ன கஷ்டம் சம்பவித்தது, கெட்டவெண்ணத்தையுடைய இவன் நம்மைவஞ்சித்துவிட்டான், உலகத்தில் ஒருவன் சற்றேனுங் கபடமில்லாது உண்மைவழியில் நடப்பானாகில் அது அவனுக்கவமானத்திற்கே இடமாகுமென்பது சரியாய் முடிந்தது; ஆதலால் இவன்செய்த அபகாரத்திற் கெவ்விதம் பிரதிசெய்வது; வித்தியாதரனாய்ப் பவித்த இவனை யெப்படிச்சென்றடைவது, ஆனாலிவனை வெல்வதற்கு வேதாளத்தைச்சித்திசெய்து அதைக்கருவியாகக் கைக்கொண்டாலல்லது வேறுபாயமில்லையென்று நிச்சயித்து அங்கிருந்தும் அவன் அன்றிரவில் ஸ்மசானம்போய்ச்சேர்ந்து அங்கொரு விருக்ஷத்தின்கீழ் பனிதனுடைய பிரேதசரீரத்தில் வேதாளத்தை வாவென்றழைத்து ஆவாகனம் செய்து பூஜித்து அதற்கு நரபாம்சபலி கொடுத்தர்ப்பணம் செய்தனன்.



அவனவ்விதம் செய்தும் அவ்வேதாளம் திருப்தி அடையாததாய்த் தன்னை மற்றொருவனழைத்துத் தான் செல்வது தகாதென்றெண்ணிச் செருக்குடன் பிரத்தியக்ஷமாகாதிருக்க, மறுபடியும் தேவதத்தன் வேதாளத்தைத் திருப்திசெய்யக் கருதித் தன் சரீர மாம்சத்தையே சிதைத்துப்பலிகொடுக்க ஆரம்பித்தனன். ஆரம்பித்த அக்கணமே அவ்வேதாளம், பெரிய முயற்சியையுடைய தேவதத்தனை நோக்கி ஹே தேவதத்தா! உன் மனஉறுதியைக்கண்டு மகிழ்ந்தேன். இனிமேற் சாகசத்தொழில் செய்யவேண்டாம், உனதெண்ணத்தை நிறைவேற்றுகின்றேன், நீ நினைத்திருக்கின்றதைச் சொல்லென்று கூற அவ்வீரனான தேவதத்தன் வேதாளத்தைநோக்கி நம்பினோர்களை வஞ்சிக்கின்ற ஜாலபாதனென்றவிரோதிக்குத் தக்க சிக்ஷைசெய்யவேண்டுமாதலால் என்னை அவன் சென்றிருக்கும் வித்தியாதரஸ்தானத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும் என்று சொல்ல, உடனே அவ்வேதாளமும் அப்படியே செய்கிறேனென்று தேவதத்தனைத் தன்தோளிலேற்றி வைத்துக்கொண்டு வித்தியாதரஸ்தானம் போய்ச்சேர்ந்தது. அவ்விடத்தில் அப்பொழுது அந்தஜாலபாதன் அதிரமணீயமாயமைந்துள்ள ஒரு கட்டிடத்தின் மேன்மாடியில் இரத்தினமயமான ஆசனத்தினிலிருந்துகொண்டு வித்தியாதரர்களுக் கரசனாயினேனென்ற கர்வத்துடன் முன்பு யக்ஷஸ்திரீயாகவிருந்து அப்பொழுது வித்தியாதரஸ்திரீயின் பதவியையடைந்து அங்கிருக்கின்ற ஆந்த வித்யுத்ப்ரபை யென்பவளைத் தான் மனைவியாக அடையவேண்டுமென்று கருதி அவள் தன்மீது விருப்பமில்லாதிருக்கின்றதைத் தானறிந்தும் அவன் அவளைப்பற்பலவிதமான பேச்சுக்களால் வஞ்சிக்க அப்பொழுது அதனைக்கண்டதும் வேதாளம் ஜாலபாதன்மீது பாய சகோரங்கட்குச் சந்தோஷிக்கின்ற வித்யுத்ப்ரபையினது கண்களாகிய சந்திரன்போற் காணப்படும் வேதாளம் நினைப்பின்றி வந்ததைக்கண்டதும் ஜாலபாதனும் பயந்து தன் அமுதத்தை வருஷிக்கின்ற கையிலிருந்த கத்தியைப்போட்டுவிட்டு ஆசனத்தினின்றும் கீழேயிறங்கினன்.

அப்பொழுது தேவதத்தன் அந்த ஜாலபாதனாற் கீழேபோடப்பட்ட கத்தியைத்தான் பெற்றிருந்தும் அக்கத்தியினாலவனைக்கொ

ல்ல நினைக்கவில்லை. ஏனெனில் உலகத்தில் நல்லமனதையுடையவர்
கள் தமது சத்துருக்களிடத்திலும் தயவுடன் கூடியவர்களாகவிருப்
பார்களன்றோ. இப்படியிருக்கும் சமயத்தில் அவ்வேதாளமானது
அடங்காத கோபாவேசத்துடன் ஜாலபாதனைக்கொல்வதற்காக எத்த
னம் செய்ய தேவதத்த னுடனே வேதாளத்தை நோக்கி இப்பாஷ
ண்டியான அற்பனைக்கொன்றதனால் நமக்கென்ன பயனிருக்கின்ற
து: வீணிலிவனைக்கொல்ல வேண்டாம். ஆனாலிவனைக்கொண்டுபோ
ய் இப்பொழுதே பூலோகத்திலிவனிருந்த இடத்தில் மறுபடியும் விட்
டுவிடு என்று சொல்ல, அத்தருணத்தில் ஆகாயத்தினின்றும் சாக்ஷா
த் பார்வதிதேவி பிரத்தியக்ஷமாய் வந்து தோன்ற தேவதத்தன் அவ
ளைக்கண்டு பக்தியுடன் வணங்கி நிற்க, அப்பரமேசுவரியான பார்வதி
தேவி அவனைப்பார்த்து ஹே புத்திரா! இப்போதுனது ஒப்பற்ற சத்
துவத்தினால் மகிழ்வுற்றேன், உனக்கிப்பொழுது இவ்விடத்திலேயே
வித்தியாதரர்கட்கெல்லாமரசனாயிருக்குந் தன்மையை அளித்தேனெ
ன்று சொல்லி அவனுக்கு வித்தியாதரர்களுக்குரிய வித்தியையையுமு
பதேசித்துவிட்டு அந்தக்ஷணமே அவள் அப்படியே கண்ணிற்குக் கா
ணாது மறைந்தனள். உடனே வேதாளம் ஜாலபாதனென்னும்விரதி
யைத்தனது சித்தியெல்லாமிழந்து பரிதபிக்கும்படி பூலோகத்திற்
கொண்டுபோய்ச் சேர்த்தது. ஏனெனில் அதர்மமானது உலகத்
தில் ஒருவனுக்கு நெடுநாள் விருத்திக்குக் காரணமாகாததன்றோ.
பின்பு தேவதத்தன் அந்த வித்புத்ப்ரபை என்பவளுடன் வித்தியாத
ரர்களனைவர்க்கும் அதிபதியாகி மிகவும்மேன்மையை அடைந்தனன்.
என்று இக்கதையை பிந்துரேகை தன் கணவனான சக்திதேவனிட
ம் சொல்லி விரைவுடன் மறுபடியும் தனது பர்த்தாவைப்பார்த்து
ஹே நாதா! இப்படிப்பட்ட காரியங்கள் உலகத்தில் பற்பலவிருக்கின்
றன. ஆதலால் பிந்துரேகை சொல்லியபடி நீர் எனது கருப்பத்தை
ச்சற்றும் வியசனமில்லாது கிறியெடுத்துக்கொள்ளுமென்று மிருது
பாஷிணியான அந்த பிந்துரேகையென்பவள் சொல்ல சக்திதேவன்
இதனை யெப்படிச் செய்வது, செய்தாற் கொடியபாவமன்றோ நம்
மை வந்து சூழுமென்று சந்தேகிக்க அப்போது ஆகாயத்தினின்று
ம் ஹே சக்திதேவ! நீ சற்றும் சந்தேகிக்கவேண்டாம். இவள் வயி
ற்றைக்கிறி அதிலுள்ள கர்ப்பத்தையெடுத்து அக்குழந்தையின் கழு



த்தை உன்கையாற் பிடிப்பாயாகில் அஃது உனக்கு வெற்றியைத்தர
த்தக்க ஒரு கத்தியாய்ப் பலிக்கும் என்று ஒரு வாக்குண்டாயிற்று.
அதைக்கேட்டதும் சக்திதேவன் துணிவுடன் விரைவில் அவள் வயி
ற்றைக்கீறி அதிலுள்ள கர்ப்பத்தைத் தன்கையாலிழுத்து அதன்
கழுத்தைப்பிடிக்க உடனே அஃது அவன் கையினிற் கத்தியாய்ப்
பலித்தது. நீண்டதும் கரிய நிறத்தினையுடையதுமான அக்கத்தி
யானது அவன் தன் பெலத்தினாற்கைப்பற்றிய சித்தியாகிய மங்கை
யினது கேச பாசம்போலிருந்தது.

பின்பு அப்பார்ப்பான் சக்திதேவன் வெகு சீக்கிரத்தில் வித்தி
யாதரவடிவத்தையுடையவனாக ஆயினன். அந்தக்ஷணமே அந்த பிந்
துரேகையென்பவள் கண்ணிற்குத்தோன்றாது மறைந்து போயினள்.
அவள் வயிற்றிலிருந்த கர்ப்பம் ஒரு கத்தியாய் பலித்ததையும் அவ
ள்தன் கண்களுக்குத் தோன்றாது மறைந்து போனதையும் கண்டு
வித்தியாதரனான சக்திதேவன் ஆச்சரியத்துடன் சென்று தனது
மற்றொரு மனைவியான பிந்துமதியிடம் விருத்தாந்தமனைத்தையும்
சொல்ல அவள் சக்திதேவனைப்பார்த்து ஹே ப்ராணநாத! நாங்கள்
வித்தியாதர ராஜனது புத்திரிகள், மூன்று சகோதரிகள், கனகபுரியை
விட்டுநீங்கிச் சாபத்தினால் வந்து பிறந்தவர்கள். எங்களில் வர்த்த
மானபுரத்தினில் அரசன் புதல்வியாய் ஜனித்திருந்த கனகரேகையெ
ன்பவள் ஒருத்தி சாபத்தினின்றும் நீங்கினளென்பது நீரே ப்ரத்ய
க்ஷமாய்க் கண்டிருக்கின்றீர், அவளும் தன்னிருப்பிடமாகிய கனகபுரி
யைச் சென்றடைந்தனள்.

தெய்வவசத்தினாலவளுக்கு சாபத்தின் முடிவும் விசித்திரமாயே
ற்பட்டது. ஆனால் யானேயிவர்களில் மூன்றாமவள். இப்பொழுதே
யெனக்கும் சாபம் தீர்ந்து விட்டது. ஆதலால் யானும் இப்பொழு
தே எமக்குரிய அக்கனகபுரிக்குச் செல்லவேண்டும், எங்களுடைய
வித்தியாதர சரீரங்களும் அவ்விடத்திலேயிருக்கின்றன. எங்கள் மூவ
ருக்கும் மூத்தசகோதரி சந்திரப்பிரபை யென்பவளு மவ்விடத்திலே
யேயிருக்கின்றாள். ஆதலால் நீரும் சீக்கிரம் உமது கத்தியினது சித்
திப்பிரபாவத்தால் அவ்விடம் வந்துசேரும். வனாந்தரம்சென்றிருக்கி
ன்ற எங்கள் பிதாவினால் விவாஹம் செய்து கொடுக்கப்பட்ட எங்க

ள் நால்வரையும் பாரியைகளாக அடைந்து சந்தோஷத்துடன் அக்கனகபுரியிலேயே அரசாட்சி செய்யப்போகின்றீர்—என்று அவள் தனது விருத்தாந்தத்தினுண்மையைச் சொல்லிவிட்டு அப்படியே ஆகாயத்திற் கிளம்பிச்செல்ல அந்த சக்திதேவனுமவள்சொல்லியதற்கிணங்கி அவளுடன் கூடவே ஆகாயமார்க்கத்தாற் கனகபுரியை அடைந்தனன்.

அக்கனகபுரியினில் சக்திதேவன் தான் முன்பு வந்திருந்தபொழுது அழகிய ஒரு கட்டிடத்தின் மேன்மாடியிலுள்ள மூன்று மண்டபங்களில் சுவர்ணமயமான கட்டில்களில் திவ்விய வடிவழகுள்ள எந்த ஸ்திரீகளுடைய சரீரங்களை உயிரில்லாதவைகளாகக் கண்டிருந்தானோ அதே சரீரங்களில் தனது பாரியைகளான கனகரேகை முதலிய மூவரும் தங்கள் ஆத்துமாக்களுடன் அநுப்பிரவேசம் செய்து எழுந்து வந்து அவர்களே மறுபடியும் தன்னை வணங்கி நிற்கக் கண்டான்.

அன்றியும் அந்த மூன்று மங்கையர்கட்கும் மூத்தவளான சந்திரப்ரபையென்பவளும் மங்களகரமான அலங்காரத்தையுடையவளாய் அவனருகில் வந்து நெடுநாளாய் அவனைப்பார்க்கவேண்டுமென்று விருப்பமுற்றிருந்த கண்களாற்பருகி மகிழ்வதையும் கண்டான். அப்போது அவ்விடத்தில் சந்திரப்பிரபையினுத்தரவின்படி தங்கள் தங்கள் வேலையைச் செய்துகொண்டிருந்த ஸ்திரீஜனங்களனைவரும் சக்திதேவன் வருதலைக்கண்டு மகிழ்ச்சியடைய அவன் சந்திரப்ரபை வசிக்கின்ற மாளிகைக்குள் ப்ரவேசித்தான். உடனே சந்திரப்ரபை சக்திதேவனை உபசரித்து ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து அவனைப்பார்த்து நற்புகழுடன் கூடியவரே! நீர் இராஜ புத்திரியான கனகரேகையென்றவளை அந்த வர்த்தமானபுரத்தில் கண்டீரோ! அவள்தான் இதோ நிற்கின்ற என் சகோதரி; இவள் சந்திரரேகையென்ற பெயரையுடையவள். செம்படவன் புத்திரியாகிய பிந்துமதியென்றவளை நீர் முதலில் உத்தலத்வீபத்தில் விவாஹம் செய்துகொண்டீரே? அவள்தானிதோ இருக்கின்றவள்; இவள் என்னுடன் பிறந்த மற்றொரு சகோதரி; சசிரேகையென்றபெயருள்ளவள். இவளை மணம் புரிந்த பின்பு ராஜகன்னிகையான பிந்துரேகையென்றவள் அந்த



பிலத்துவாரத்தினிற்பன்றிருபத்துடன் சென்றிருந்த அசுரனிடத்தினின்றும் கொண்டுவரப்பட்டு அப்பொழுதே உமக்கு பாரியையாயினளே; அவள்தானிதோ நிற்கின்றவள்; இவள் என் மற்றொரு சகோதரி, சசிப்ரபையென்று பெயருள்ளவள். ஆதலால் நானொன்று சொல்கின்றேன் கேளும், நீரெங்களுடன் எங்கள் பிதாவான வித்யாதராபதியிருக்கின்றவிடம் வந்து சேர்ந்தால் அவர் எங்களை உமக்கே விவாஹம் செய்து கொடுப்பார்.—என்று இவ்வாறு அங்கிருந்த சந்திரப்ரபை யென்பவள் மன்மதாஞ்ஞையினாற் பெருந்தகைமையுடன் விரைவினிற் சொல்ல அதற்கிசைந்து சக்திதேவன் அம்மங்கையர் நால்வருடன் அவர்கள் பிதாவிருக்கின்ற வனமத்தியம் போய்ச்சேர்ந்தான். அவ்விடத்தினில் அப்பெண்கள் நால்வரும் தமது பிதாவைக்கண்டதும் சந்தோஷத்துடன் அவர் சரணாரவிந்தங்களில் வீழ்ந்து வணங்கித் தங்கள் விருத்தாந்தத்தை அவரிடம் தெரிவிக்க அதற்கிணங்க ஆகாயத்தினின்றுமொரு வாக்குண்டாயிற்று. அதனைக்கேட்ட அப்பெண்கள் பிதாவான வித்தியாதரேந்திரன் சந்தோஷித்து அந்த சக்திதேவனுக்கே தன் புத்திரிகள் நால்வரையும் ஒரே காலத்தில் மணம்புரிவித்து வித்தியாதரர்கட்குரிய சமஸ்த வித்தைகளையுமவனுக்குபதேசித்து அக்கனகபுரியினில் வித்தியாதர அரசாட்சியையும் கொடுத்துத் தம்மினத்தவர்களான வித்தியாதரர்கட்கிசைந்த சக்திவேகனென்ற பெயரையும் மேன்மைதங்கிய அந்த சக்திதேவனுக்குக் கொடுத்தான்.

மறுபடியுமந்த வித்தியாதரேந்திரன் சக்திவேகனைப்பார்த்து இவ்வுலகினில் உன்னையொருவராலும் ஜயிக்கமுடியாது; ஆனால் மிகுந்தப்ரபாவத்தையுடைய உதயன மகாராஜனிடத்தினின்றும் நரவாகனதத்தனென்ற பெயரையுடைய ஒரு புத்திரன் உங்கள் சக்கிரவர்த்தியாக உண்டாகப் போகின்றான்; அவன்தானுனக்கு எஜமானனாவான், அவனை நீ வணங்கவேண்டும் என்று சொல்லி வித்தியாதராதிபதியான பெருமைதங்கிய சசிகண்டபதனென்பவன் தன் மாப்பிள்ளை சக்திவேகனை உபசரித்து அவன் மனைவிகளுடன் அவனைத்தானிருந்த அந்தபோவனத்தினின்றும் தமது ராஜதானியாகிய கனகபுரிக்கனுப்பினன். பின்பு அந்த சக்திவேகனும் அரசனாகித் தன் மனைவிய

## விசுவநாத நாயடுகாருவும், அரியநாயக முதலியாரும் பாண்டிநாட்டிற் செய்த காரியங்கள்.

——:(o):——

மஹாபதியூகியாகிய அரியநாயக முதலியாரை மந்திரியாகக்கொண்ட விசுவநாத நாயடுகாரு, முதலில் மதுரை மீனாக்ஷியம்மன் கோயிற் சுவரின் ஓரமாகக் கட்டப்பெற்றிருந்த புராதன பாண்டியருடைய கோட்டை கொத்தளம் அகழ் இவைகளை இடிப்பித்து; அவ்விடத்தில் இரட்டைச் சுவர்க் கோட்டையைக் கட்டுவித்தனர். புராதனக் கோயில் கோபுரம் குளங்களைச் செப்பனிட்டுப் பிராமணர்களுக்கு வேண்டிய அக்கிரஹாரங்கள், வீதிகள், வாசல்கள், குளங்கள், குட்டைகளை உண்டாக்கினார். கிருஷித் தொழிலுக்குப் போதுமான பாசன வசதிகள் தக்கவாறு இல்லாமையால், வைகை நதியின் மேல் பேரணை சிற்றணைகளைக் கட்டி நதியின் மேற்பாகத்தில் அநேகங் கால்வாய்களை வெட்டியதோடு, அவ்விடங்களிலுள்ள நிலங்களை உழுது பயிரிட்டுக் குடிகள் வசிக்கத்தக்க கிராமங்களையும் கட்டுவித்தார்கள். இத்தகைய செலவுகளுக்கு ஸமஸ்தானத்தில் போதுமான திரவியமில்லாமையால், விசுவநாத நாயடுகாரு தமது தந்தை நாகம நாயடுவினுடைய சொந்தப் பொக்கிஷத்திலிருந்து மிக்க பொருளைத் தருவித்தும், மந்திரி அரியநாயக முதலியாருடைய யுக்தியோசனையின்படி பணத்தைச் செலவழித்தும் குடிகளுடைய சுகத்தை விருத்தியாக்கினார். இப்படிச் செய்யவே, இதற்கு முன்பு ஒரு காணிபூமியைக்கூடக் கிருஷிசெய்யாதவர்களெல்லோரும், கிருஷி வேலை ஆரம்பித்ததில் நாட்டுப்புரத்தில் பயிரிடாத பூமியைக்காண்பது அபூர்வமாகி விட்டது; அன்றியும்; அக்காலத்தில் தஞ்சை ஸமஸ்தானத்தைச் சார்ந்திருந்த திருச்சிராப்பள்ளிவரைக்கும் பயிரிட்டுச் சில சமயங்களில் தஞ்சைமன்னருடைய பூமியிலும் பயிரிடநேர்ந்ததால் இரண்டு இராஜாக்களுக்குள்ளும் (பாண்டிய தஞ்சைராஜர்கள்) எல்லை வழக்கும் உண்டாகச் சம்பவித்தது. அன்றியும் அக்காலத்தில் இராமேசுவரம் ஸ்ரீரங்கம் யாத்திரை செய்யும் சாதுக்களுக்குத் தக்கவழிகளும் வசதிகளும் இல்லாமையால், யாத்திரைக்காரர் காடுகரடுகளிலும் கள்ளர் மறவர் கைகளிலும் சிக்கித் தத்தளிப்பதை நீக்கக்



கருதித் திருச்சிராப்பள்ளி நாட்டை மதுரைக்கும் மதுரையைச் சார்ந்த வள்ளங்கோட்டையைத் தஞ்சாவூருக்கும் மாற்றிக் கொண்டால் நலமெனத் தகுந்த நியாயங்களுடன் தஞ்சைமன்னருக்கு அறிவிக்க, அவரும் தமது கேவலஸ்திதியைக்கருதிச் சம்மதித்துக் கொண்டார்.

இப்படிச் சம்மதித்துத் திருச்சிராப்பள்ளியைக் கொடுக்கவே, அங்கிருந்த புராதனக் கோட்டையை நீக்கி, அதே இடத்தில் புதுக்கோட்டையைக் கட்டியும் அந்நகரத்தைச் சுற்றிலும் இரட்டை மதிற் சுவரெழுப்பியும் அதன்கீழ் அகன்ற வாய்க்கால்களை வெட்டிக் காவிரி ஜலத்தால் நிரப்பியும், கோட்டைக்குள் அநேக அக்கிரஹாரங்கள், வீடுகள், வீதிகள், கிணறுகள், கோயில்கள், கடைகள் பண்டசாலைகள் முதலானவைகளை நியமித்தும், நானாதேசத்துக்குடிகள், கிருஷிகர், வர்த்தகர், கைத்தொழிலாளிகள் வந்து வசிக்கும்படியான வசதிகளை ஏற்படுத்தியும், காவிரிநதியின் இருபக்கங்களிலுமிருந்த பயங்கரமான காடுகளைவெட்டி யாத்திரைக்காரர் நிர்ப்பயமாகச் சஞ்சாரம் செய்தற்கு அவர்களுடன் துணையாகப் போய் வரச் சில சிப்பாய்ச் சேவகர்களை நியமித்தும் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் அநேகவேலைகளைச் செப்பனிட்டுப்புதுப்பித்தும் மானியங்களைக் கொடுத்தும் வரவே, பற்பல நாட்டுப் பணக்காரரான யாத்திரிகர் பணபயம்பிராணபயமற்று யாத்திரை செய்யவும், இந்நாட்டின் செழிப்பையும் சுதந்திர சுகவாழ்வையும் கண்டு இந்த ஸமஸ்தானத்தில் வந்துதங்கி வர்த்தக வியாபாரம் முதலானவை செய்யவும் ஆரம்பித்தனர். இப்படி விசுவநாதநாயடு திருச்சிராப்பள்ளியிலே சீர்திருத்தங்கள் செய்துவரும்போது, தெற்கே திருநெல்வேலியைச் சீர்திருத்தப்போயிருந்த அரியநாயக முதலியாரைப் "பஞ்சபாண்டியர்கள்" என்ற சிலர், தாங்கள் பழைய பாண்டியர் வமிசத்தவரென்றும், ஆதலால் விசுவநாதருடைய ஆக்கினைக்குத் தாங்கள் அடங்கி நடக்கமாட்டோமென்றும் சொல்லிக் காயத்தட்டூரில் எதிர்த்தார்கள். அவர்களுக்கு அரியநாயகம் பலவிதமான புத்திமதிகளைச் சொல்லியும், தந்திரங்களைச் செய்தும் வெல்லக்கூடாமையாலும், அப்போது தம்மோடு இருந்தசேனை கொஞ்சமாக இருந்தபடியாலும் இக்கஷ்டத்தை விரைவில் விசுவநாதருக்கு அறிவித்தார்.

விசுவநாதர் இச்சங்கதியைக் கேட்டவுடனே காலதாமத மின்றிக் காலாள் குதிரைப் பட்டாளங்களுடன் திருநெல்வேலிக்கு வந்து அந்தப் பஞ்சபாண்டியர்களைக் கண்டு பகிரங்கச் சண்டைக்கு வரும்படிகேட்க, அவர்கள் விசுவநாதநாயடுவின் பட்டாளவல்லமையைக்கண்டு அவருடன் எதிர்த்துச் சண்டை செய்யச் சேனையும் திரவியமுமில்லை யென்றும், விசுவநாதர் ஒருவருடனே ஒரே காலத்தில் மல்லயுத்தம் செய்யமாத்திரம் தங்கள் ஐவருக்கும் சக்தி இருக்கின்றதென்றும் சொல்லியனுப்ப, விசுவநாதரும் அதற்குச் சம்மதித்துத் தமது சேனையையும், ஆயுதத்தையும் அரியநாயகரிடம் கொடுத்துவிட்டு, அவருக்கு எதிராகவேவந்து அந்த ஐந்து பாண்டியரோடும் தாம் தனியாகநின்று மல்லயுத்தஞ்செய்து எதிரிகளில் முக்கியமானவனைக்கொன்று ஜயித்ததில், மற்றநால்வரும் விசுவநாதருடைய தோள்வலிமைக்கு மெச்சி திருநெல்வேலியையும், அதையடுத்த நாடுகளையும் விட்டுப்போய்விட்டார்கள். (Vide the History of Carnatic Governors) இப்படி ஜயித்த விசுவநாதநாயடுகாரு திருநெல்வேலியைப்புதிய கட்டிடங்களினாலும், கோயில், கோபுரங்கள், குளங்களினாலும் புதுப்பித்தும், தாமிரபர்ணி நதிக்கரை யோரமாக விருந்த அசங்கியமான குடிசைகளை நீக்கிப் புதுவீடுதிகளைக் கட்டுவித்தும், தாம்ரபர்ணி நதியின் ஜலத்தைக் குடிகளும், கிருஷிகர்களும் உபயோகப்படுத்திக்கொள்ளக் கால்வாய், வாய்க்கால் முதலிய பாசனவசதிகளை நியமித்தும், பிராமணருக்கு வேண்டிய கோயில், கோபுரம், அக்கிரஹாரங்களை நியமித்தும் குடிகளால் நல்ல புகழையும் பிரதிஷ்டையையும் பெற்றார்.

விசுவநாதர் இப்படித் தெற்கே திருநெல்வேலியிற் சீர்திருத்தங்களைச் செய்து வருகையில், திண்டுக்கல்லை யடுத்த சம்பம் கூடலூர்த்தலைவன், சோழன் தன்னைத்தாக்கியபோது, பாண்டியருதவி செய்யாமல் விட்டுவிட்டபடியால், தான் விசுவநாதருக்குக் கிரமப்பிரகாரம் கப்பம் கட்டுவதில்லையென்று கலகஞ்செய்ய ஆரம்பித்தபடியால், உடனே தக்க தண்டுகளுடன் திண்டுக்கல் சார்புக்குப்போய்க் கலகக்காரனுடன் போர்செய்து அவன்கோட்டையைப் பிடித்து அவன்கொட்டத்தை யடக்கினார்.



இப்படித் தென்னாடுகளின் கலகங்களை யடக்கி நாட்டை நல்ல
ஸ்திதிக்குக்கொண்டுவந்தாலும், வேறொரு கஷ்டம் சம்பவித்தது.
அதாவது, விசுவநாதநாயடு மதுரைக்கு வரும்போது அவர்கூடவந்த
நாயடுமார்களும், கன்னடியர்களும், வேறுசிலரும் வேண்டிய உதவி
களை யுண்மையோடு செய்துவந்தமையால், அவர்கள் விசுவநாத நாய
டே பாண்டியநாட்டிற்குச் சக்கிரவர்த்தியானதில், தமக்குத்தக்க சிறு
சம்ஸ்தானங்களையும் சம்பத்துக்களையும் வெகுமானங்களையும் கொடுப்
பாரென்று பொறுமையோடு காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்
களுக்குத் திருப்தியாகக்கொடுத்துக் கௌரவிப்பது கஷ்டமாகவிருந்
தது. ஆயினும், விசுவநாதநாயடுவும் அரியநாயக முதலியாரும் இக்
கஷ்டத்தை நீக்க ஒருபாயம் செய்தார்கள். அதாவது, பாண்டியநா
ட்டைச் சுற்றிலும் 72-கொத்தளங்களிருந்தமையால், அக்கொத்தள
ங்களுக்குத்தக்க வீரரைத் தலைவர் அல்லது பாளையக்காரராக நியமித்
து; அவர்கள், இராஜாங்கத்துக்கு உதவியாக வருஷாந்தரம் இவ்வ
ளவு ரொக்கம் கப்பமாகக் கட்டும்படிக்கும் ஸமஸ்தானத்தின்மேல்
எதிரிகள் சண்டைசெய்ய வரும்போது தக்கதண்டு தளாதிகளைக்கொ
ண்டுதவி செய்யும்படிக்கும், இந்தச் செலவுகளுக்குச் சிலபல கிரா
மங்களையும் பட்டவிருதுகளையும் அப்பாளைய காரர்களுக்குக் கொடுத்
துக் கௌரவித்தால், அவர்கள் ஆனந்தமடைந்து இராஜ விசுவாசமா
கவும், தம்பின் சந்ததியாருக்கு உதவியாகவும் இருக்கக்கூடுமென்று
எண்ணியதேயாம்.

## பாண்டியநாட்டின் பாளையப்பட்டுக்கள்.

——:O:——

இந்த எண்ணத்தின்படி 72-பாளையப்பட்டுக்களைத் தாபித்தும்,
அவைகளுக்குத் தம்பினத்தாரில் உதவிசெய்த வீரர்களையும், மற்றப்
படி பொதுவாகப் பாண்டிய நாட்டிற்குதவிசெய்தவர்களையும் பாளை
யக்காரர்கள் அல்லது ஜமீந்தார்களாக நியமித்ததுடன், அவர்களுக்கு
இனமாக அநேக கிராமங்களையும், விருதுகளையும் கொடுத்தார்கள்.
மதுரைச்சீமையின் விருத்தாந்தத்தில், மதுரையைச்சுற்றியும் அம்
மையநாயக்கனூர், நிலக்கோட்டை, வடகரை, போடிநாயக்கனூர்,
கோம்பை, தேவாரம், கண்டப்பநாயக்கனூர், தோட்டயநாயக்கனூர்

காமனாயக்கனூர், மாதவநாயக்கனூர், தம்பிச்சிநாயக்கனூர், சந்தையூர், எழுமலை, பாவாளி, கவுண்டன்கோட்டை, கன்னிவாடி, விருப்பாக்ஷி, ஆயக்குடி, எமக்கலாபுரம், ஒன்பதூர், கூளப்பநாயக்கனூர், நிலக்கோட்டை, இராசக்கநாயக்கனூர், சத்திரப்பட்டி, மாரூ, மருங்காபுரி, செங்குறிச்சி, பிள்ளைவிழுந்தி, இராமகிரி, இடையகோட்டை, தோகைமலை, விரபலை, வெள்ளியகுன்றம், சிறுபாலை, மாம்பாறை, பள்ளியப்பநாயக்கனூர், எரியோடு, சொக்கம்பட்டி, மாறனூற்று, தவசிமடை, அம்பட்டரை, தேவதானப்பட்டி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரமாகிய 47-பாளையப்பட்டுக்களை மாத்திரம் குறித்திருக்கின்றன. மற்ற 25-பாளையப்பட்டுக்கள் மறைந்திருக்கும் காரணம் தெரியவில்லை.*

இப்படிப்பட்ட 72-பாளையப்பட்டு ஜமீந்தார்களுக்கு பிரபுவாகவும், பாண்டியநாட்டு குடிகளுக்கு பிதாவைப்போல இருந்தும், சாலி

*எட்டைய புரநாக லாபுரம் மணியாச்சி யிரசக்க னூர்கோட் டையூர்
எழாயி ரம்பண்ணை சந்தையூ ரூற்றுமலை யெழுமலை மருங்கை நல்லூ
ரிலகுமன் னூர்கோட்டை பாவாலி சிவகிரி யிலக்கைய னூர்முல் லையூ
ரிடையகோட் டைப்பதி நிலக்கோட்டை தேவாரம் ராமகிரி கன்னிவாடி
தொட்டப்ப னூர்கம்பை காசைவா ராப்பூரு தோகைமலை யளகாபுரி [மாத்
சுரண்டைதலை வன்கோட்டை பழனியாய்க் குடிசமுத் தூர்விருப் பாச்சிபட
தூர்கடம் பூர்பெத்த னன்னூற்று நகர்குளத் தூர்காமனூர் சாப்டூர்
தம்பிச்சி நாய்க்கனூர் நத்தமூர்க் காடுசேற் றூர்வெள்ளி குன்ற வலைய
பட்டிவட கரையமைய நாயக்க னூர்கொல்ல பட்டிசக் கந்தி கோலார்
பட்டிமத வானையூர் மேன்மாந்தை ரோசலைப் பட்டிவீ ரமலை சிங்கம்
பட்டிநெற் கட்டுசெவல் நற்பெரிய குளமாத்தி பட்டிகுரு விகுள மதுவார்
பட்டிகரி சற்பட்டி நடுவுக் குறிச்சிகோம் பைகவுண் டன்கோட் டையூர்
நட்டபொம் மன்னூர்கு மாரவாடி கவினிலைசை கடலூர்நல் லுதயப்பனூர் [மூங்
கனகொலங் கொண்டானொ டெழுபத்தி ரண்டுடன் கருதுமெண் ணேழ்தேச
கவியருமை யறியவர்க ளுண்டதிலு நின்போற் கவித்திறமி யாவரறிவார்
கனமேவு புனல்சூழும் வயல்நீடு மலைமேவு கதிர்காம வடிவேலனே.

இக்கவியிற் பாண்டிய நாட்டிலுள்ள ௭௨-பாளயப்பட்டுக்களும் கூறப்பட்டுள்ளமை காண்க. (செந்தமிழ்-தொகுதி-௫; பகுதி-௨; பக்கம்-௩௦௩.)



வாகன் சகாப்தம் 1380-வருஷம், பரிதாபி நாம வருஷம் முதல், ஈசுவர நாம வருஷமாகிய 26-வருஷங்கள் வரையில், தருமராஜ்ய பரிபாலனம் செய்துவந்த புகழுடம்பினராகிய ஸ்ரீ விசுவநாத நாயடுகாரு கி. பி. 1563-வருஷம் டிசம்பர் மீ பெருங்கீர்த்திமானாய் பூத உடலைவிட்டுப் புகழுடம்பைப்பெற்றுப் பரமபதமடைந்தார். அவர் மரணத்தைப்பற்றி அக்காலத்துக்குடிகள் அழுதகண்ணும் சிந்தியமூக்குமாகக் கவலைப்பட்டவராயினர். இக்காலத்தாரும் மதுரைசுந்தரேசுவரர்கோயில் வசந்தமண்டபத்தில் சிலாரூபமாக வைத்திருக்கும், இந்த உத்தமன் விக்கிரகத்துக்குமேலாக மகா-ா-ா-ஸ்ரீ விசுவநாதநாயுனி ஐயனுகாரு என்று எழுதிவணங்கி வருகிறார்கள். இம்மட்டோ, இவருடைய குமாரர் முதலான பின் சந்ததியார்களும் இவர் பெயரை மறைக்க மனமில்லாமல், அவர்கள் செய்துவந்த தருமசாசனங்களுக்கு மேல், இந்த விசுவநாத நாயடுகாரு பெயரை மகுடமாக முன்னம் எழுதி, பிறகு தம்பெயர்களை எழுதிவைத்தார்கள். இவர் உருவத்தில் நீண்ட ஆஜானுபாகுவாகவும், சற்று கறுத்தமேனியை யுடையராகவும், நீண்டமுகமும், நெரித்தபுருவங்களும், துடிக்கும்மீசைகளை உடையவராகவும், பார்வைக்கு பயங்கர புருஷராகவும் இருக்கினார், ஜீவதயை, பச்சாதாபம், தருமம், தானம், சத்தியம், சாந்தம், சுவாமிபக்தி முதலான குணபூஷணங்களை உடையவராக இருந்தார்.

இப்படிப்பட்ட மஹாநுபாவராகிய விசுவநாதநாயடுகாருக்குப் பிறகு பாண்டிய நாட்டிற்கு இவர் குமாரராகிய கிருஷ்ணப்ப நாயடுகாரு அரசரானார்.

(தொடரும்.)

உ

திருச்சிற்றம்பலம்.

# சிவராத்திரிபுராண அரும்பதவிளக்கமும் பாடபேதமும்.

## சிறப்புப்பாயிரம்.

(௧) கரதராசனையமொழி - கையிலுள்ள தராசுபோன்ற நடுவுநிலைமொழி. (2), இங்கம் - அறிவு.

## கடவுள் வாழ்த்து.

(௪.) சூர் - தெய்வமகளிர். (௬.) வேரலைவாய் - மூங்கிலின் அழகியவிதத்தை. (௭.) இனன் - சூரியன். ஊர்கா - ஊர்சூழ்சோலை (௮.) சிவசத்தி தருசத்தி - உமையம்மையினாற் கொடுக்கப்பட்டவேல்; அது, "வேல்கொடுத்தாய்திருச்செந்தூரற்கு." என்னுந் தனிப்பாடற்செய்யுளானறிக. (௧௨.) அமலம் - பரிசுத்தம். (௧௪.) சண்டேசுரர் எனப்பாடங்கொள்க. (௧௬.) சந்து - தூது. (௧௭.) கடவுளர்க்காச்சென்று எனப்பாடங்கொள்க. (௧௮.) உடல்சுமக்கும் எனப்பாடங்கொள்க. (௨௦) கண்டிகை - ஒருசொல்.

## பாயிரம்.

(௧.) பந்தமறுத்திடு சிவராத்திரிஎனப் பாடங்கொள்க. (௨.) ஆல்வித்து - ஆலமரத்தின்வித்து; இந்தப்பேறானது புகழப்படும் நிலைபேறுபொருந்திய இடமாக நன்குமதிக்கப்படுஞ் சிவலோகத்தின்கண் (என்னை) இருத்தும் எனும் விருப்பானது (எனது) உள்ளத்தையீர்த்தலினால் அதைநாடிச் சற்றும் பேணிலன் என்க. பேணுதல் - பொருட்படுத்தல்.

## சிவராத்திரியுற்பவச் சருக்கம்.

(௪.) கருதுமக்குசைதங்கிய காரணமதனால் எனப்பாடங்கொள்க. (௭.) இறைஞ்சி - மரவுரி. (௮.) அம்புதம் - முகில். பாதகங்களைக்களைந்திடும்படிவர் என்றும் பாடம். (௧௫.) வழுவை - யானை. உழுவை - புலி. (௧௬.) சிவனிசியென்பதுபாடம். இங்ஙனம் வருமிடந்தோறுங் கொள்க. (௨௪.) உமா அருச்சனை புரிந்தாள் எனமுடிக்க. உமா - உமை. (௨௬.) பரமனிரவினின்றேற்றக் கின்னுமோர் காரணமுளதென்று எனப்பாடங்கொள்க. (௨௮.) முன்னமே மொழிந்தபிரளயப்புனல் எனப்பாடங்கொள்க. (௨௯.) வேறிலானகண்டபூரணமானவெறுவெளி எனப்பாடங்கொள்க. வாழ்நாட்சிறிலாமுதல்வன் என்றும் பாடம். (௩௦.) கரியமேனியனழிந்த சராசரமனைத்தும் எனப்பாடங்கொள்க. மீதெடுத்துயர்த்ததற்பின் என்பதும் பாடம். (௩௧.) உந்தியம்போருகத்துதவி என்பது பாடம். (௩௨.) அமலனங்கறிந்திலமர்ந்தான் என்பது பாடம். (௩௪.) இரவிகுளிர்கதிர்மதி



யந் தோற்றுவித்தனன் என்பதுபாடம். (௩௬.) "என்னினுமுதல்வரினிப்பிறரொருவ ரிலரெனவிருஞ்செருக்குற்றான்" என்பதுபாடம். (௩௭.) தவன் - நாயகன். தாமத்துளவணிமருமத்திரி எனப்பாடம். (௩௯.) சகலங்களுமுதவும்பொருள் என்பதுபாடம். (௪௨.) அடன் மாயையென்பது பாடம். கண்ணன் குனிவித்து என்பது பாடம். (௫௧.) வண்டு - அம்பு. (௫௨.) 'அரியம்புயர்' என்பதுபாடம், (௫௭.) "மணிமுடிதுருவிப்போனான்" என்பதுபாடம். (௫௮.) "சேவடிமுடிகள்காணார்" என்பதுபாடம். (௫௯.) "வெற்பினமைந்து" என்பது பாடம். (௭௨) "சலத்தானைமுசலபுயாசலத்தானை தனைச்சூழத்தருக்கி வாழ்தென்புலத்தானை" எனப்பாடங்கொள்க. முசலபுயாசலத்தானை தனைச்சூழ-முசலப்படையைத் தாங்கிய புயமாகிய மலையையுடைய சேனைகள் தன்னைச்சூழ்ந்து சேவிக்க. (௭௫.) 'நின்றவிராச்சிவனிசியர்நிசிவருநாளினில்' என்பதுபாடம். (௭௬.) பூதி - நரகம். (௭௭.) வாமங்கோவிந்தன் - இடக்கண் சந்திரனாகவுடையவன். கோ - கண். இந்து - சந்திரன். (௭௯.) நினைத்தமனப்படிபடைத்து - சங்கற்பத்தாலேபடைத்து.

## சிவராத்திரிமான்மியச் சருக்கம்.

(௧.) "பன்னமாமலர்" என்பது பாடம். பன்னம் - பத்திரம். (௩.) பைத்திடுபாமனை என்பது பாடம். (௮.) மான்மதி - மகரமாசம். (௯.) குடத்திங்கள் - மாசிமாதம். (௧௭.) நாழிகையின்பின்கூடும் என்பது பாடம். (௧௮.) தொட்டத்தோடு என்புழி அது என்னுஞ்சுட்டு அத்து என நின்றது. அது என்றது சதுர்த்தசியை. (௨௦.) கூசுநரகங்கடமிற்கொடிய ரௌரவமதினிற்குளிப்பர் என்பது பாடம். (௨௧.) துறில் இருகத்தருக்கு என்பது பாடம். (௨௨.) இரண்டும் படில் என்றற்பாலது மகரத்தொக்கு இரண்டு படில் என நின்றது. விரத்தர் என்பதற்குச் சைவர் எனப்பொருள் கோடலே இவ்வாசிரியர்கருத்து. (௨௩.) அற்றை - அத்தினம். (௨௪.) சைவநெறித்துறை நின்றோர்க்கே என்பது பாடம். (௨௯.) நேத்திரம்-பட்டுவஸ்திரம். (௩௦.) சந்நிதி என்றது பரார்த்தலிங்காலயத்துச் சந்நிதியை. (௩௫.) சித்ததந்திரநூல் என்பதுபாடம். (௩௬.) கூவிளமுத்தளக்கிளை என்பது பாடம். (௩௭.) சாத்தனன்றும் என்பது பாடம். (௩௯) "சறுவனோயுக்கிரனோ" என்பது பாடம். (௪௩.) செய்தார்

என்பது பாடம். (௪௪.) சிவகதியிற் சேர்வதன்றி என்பது பாடம். (௪௮) பன்னல்வேண்டும் என்பது பாடம். (௪௯) கருதுஞ்சாந்தி பேரணங்கில் எனவும் பாடம். (௫௨) நானிலம் என்பது பாடம்.

குமாரச்சருக்கம்.

(௫.) புகல்வதோர் நகரம் எனவும் பாடம். (௧௧) பரிபுரஞ்சயன் எனப் பாடங்கொள்க. (௨௩.) தொழுந்தினதருள் பெறப்பிறந்தான் என்பது பாடம். (௨௫.) ஓரை - முகூர்த்தம். (௨௭.) மாறருந்தனங் காட்டி என்பது பாடம். மாறு - ஒப்பு. (௩௦.) சொன்னம்-பொன். விண்டு - மூங்கில். நாமநாவினில் என்பது பாடம். (௩௪.) சுடுவ்ாடைமற்றிலே பனமெனுமருந்தியற்றி - இடுமருந்து மணமருந்து பூசுமருந்து என்பவைகளையியற்றி. (௩௫) உலக்குநாளுரித் தாயினர்க் கொழிக்குமீன் - அருந்ததி. முல்லையாந்தருக்களை என்பது பாடம். முல்லை - கற்பு. (௩௭.) படிறு - வஞ்சமாகிய தூர்த்தநடை. உணர்த்த வத்தனையனைக்கூவி என்பது பாடம். (௩௯.) கைவித்தம்-கைப்பொருள். (௪௦.) மரத்தூரி - புல்லுருவி. (௪௧,) உபலம் - கல். (௪௨.) கப்பி - குறுணல். (௪௪.) தமருநேயநீத்தனர் என்பது பாடம். (௪௭.) முத்தம் - அதரம். (௪௯.) மாதர்நம்மொழிப்படி என்பது பாடம். (௫௦.) கலிக்கரி ஆடை-பாவமாகிய கரிய ஆடை. (௫௧) மானவேல்வழிகண்டநெஞ்சர் - மானமாகிய வேல்வழிகாணத் துளைத்துப் புறம்போய மனதினையுடையார். (௫௪.) அகல்கரவு - யோனிக்கரவு, அகல் - அல்குல். (௫௮.) முரசுசாண என்பது பாடம். (௬௧) உகத்தீ - ஊழித்தீ. (௬௩.) ஆறெனக்கவிழ என்பது பாடம். (௬௪.) கோடுதல் - வளைதல். பனைக்கைமால் யானை எனவும் பாடம். (௬௮) மூளரி - நீர். தழனிகேட்டெழுந்து என்பது பாடம். (௭௨) சிரலை வென்கி என்பது பாடம். சிரலை - மீன்கொத்தி. (௭௩.) ஒண்டழை சிறைப்பாலன்னம் என்பது பாடம். (௭௫.) அவள்வந்தாள் என்பது பாடம். (௭௬) வேறுலகிலொன்றுண்டென்றவள் என்பது பாடம். (௭௭.) ஆர்பதம் - வண்டு. (௯௪.) பச்சை - தோல். (௯௯.) புன்மாலைதனில் என்பது பாடம். மாலை - மாலைக்காலம். (௧௦௨.) போதாகொக்கு என்பது பாடம். (௧௦௫) உடற்பொறைசோர்ந்துவிழும் என்பது பாடம். (௧௧௪.) முரிதிரையெறிவாரிதிப்பிறந்த என்பது பா



டம். செதுக்கை - தழும்பு. (௧௨௧) சீயமுயலெண்கு என்பது பாடம். முடுக்கர் - குகை. (௧௨௨) கையரிக்கொண்டிடுசேனைக் கணங்கண்டு - கொள்ளைகொள்கின்ற சேனைசமூகத்தைக்கண்டு. நெய்யரியிற் றீக்கொண்டு நன்ககற்றும் - பன்னாடையைப்போலத் தீயவைகளைத் தாங்கி நல்லவைகளை ஒழுகவிடும். நெடி - சிள்வண்டு. அரில் - சிறுதூறு. (௧௨௩) வளைவதேயம் - ஒருதேசம். (௧௨௫) நாகைநகர்என்பதுபாடம். (௧௨௭) ஐயனுறைந்தருடிரு நாகேச்சுரத்தில் என்பது பாடம். (௧௩௧) தீபத்தட்டேந்திப் பணிமாறுஞ்சமயந்தன்னில் என்பது பாடம். (௧௩௨) சின்னாள்கழிந்தபின்னர் என்பதுபாடம். (௧௩௩) காலதூதர்பலர் கடுகினர் என்பது பாடம். (௧௩௪) வளைத்ததாமென வளைத்தரோ எனவும் பாடம். (௧௩௬) மெய்பிடிப்பர் என்பது பாடம். (௧௩௯) பெருக்கநற்பேறணிந்து என்பது பாடம். (௧௪௧) புயமெனும்பெரியகிரியிழந்து என்பது பாடம். (௧௪௨) இனையராயிது செய்தநீரெவர் யாவரேவலினெய்தினீர் என்பது பாடம். (௧௪௪) கங்கைமாந்தி என்பது பாடம். (௧௪௫) ஓலோலமேபென என்பது பாடம். (௧௪௬) திரிகோணாசலமதனை என்பது பாடம். (௧௪௭) மானவர்க்கிடையூறுறுமல் என்பது பாடம். (௧௪௮) பற்கடகர்த்துளஞ்சாலுமாமதிவிட்டு என்பது பாடம். (௧௫௦) எவமாமிவணெய்துகின்றனம் என்பது பாடம். (௧௫௨) வெந்நரகெரிந்தனர் என்பது பாடம். (௧௫௪) மானம் - விமானம். ஆரம் - சந்தனமரம் (௧௫௯) இறையளவுமிலனெனப்பின் என்பது பாடம். (௧௬௦) கைலை என்பதற்கு மனோரஞ்சிதமான இடம் என்பது பொருள். (௧௬௨) ஆதிருடுவீறிலியாயாண்பெணலிப்பகுப்பிலியாயவையுமாகி என்பது பாடம். (௧௬௪.) பராபரனேயம்பொற்றேட்டுச் சலசமலர் என்பது பாடம். (௧௬௬) தண்டமெனப்புரிதி என்பது பாடம். (௧௬௮) நகர்ந்தங்கவடனக் கின்புதல்வியரைப் புணர்ந்து என்பது பாடம். (௧௭௧) வனவரிவாலுகங்கடமை என்பது பாடம்.

(௧௭௫.) கள்ளூன் என்பது பாடம். சொனகுலர் - சொன்னகூட்டத்தவர். தினகரனையராத்தீண்டுதினமேகாதசி என்பதும் பாடம். (௧௭௬) விள்ளல் - சொல்லல். பன்னல் - பருத்தி. (௧௭௭) பயன்றராவே என்பது பாடம். (௧௭௮) என்னுருநற்கணங்களுடன்கூடு

இன்ற வின்பமுத்தியெய்தப்பெற்றான் என்பது பாடம். (கஅக) புனிதநீர் படிந்தாடி என்பது பாடம். மற்றிவரெவர்க்கு முதல்வராவர் என்பதுபாடம்.

அங்குலச்சருக்கம்.

(சு.) உடுக்குமின்றிருந்திடை - உடுக்கையுமின்னலும் போலுந் திருந்திய இடை. (உச) வருதல்போல்வந்ததுமாலை என்பது பாடம். (உள) தடி - மாமிசம். குழி - வாவி. (கூச) சரி - வழி. (கூகூ) உலகினீடிருள் கடிபகற்கதிரு மொத்துளவால் என்பது பாடம். (சக) செப்பம் - வழி. (சசு) சிலாதரன்மகன் - நந்திபெருமான். (ருO) மேவவுஞ்ஞமினிவிடோமென என்பது பாடம். உவண் - உவ்விடம். (ருகூ) சாலமொழிமாதர்பலர் என்பது பாடம். சாலம் - நடிப்பு. (சுO) அனைவருக்கும் - எங்களனைவருக்கும். (சுகூ) உள்ளமொத்து உயர்ந்து ஓரணு எனப்பிரிக்க. (சுச) வசி - கூர்மை. சம்பம் - வச்சிரம். (சுசு) மறைக்கொடி - வேதவல்லி. (எஉ) கரம் - நஞ்சு. நுங்கல் - விழுங்கல். குதித்தெழுமற்றநோக்கி என்பது பாடம். (எகூ) கால்வரை - சிறுவரை. (எசு) மூந்தைநாள்களின் என்பது பாடம். (அரு) கொன்று, மாய்த்து என்பதுபாடம். (அஎ) சரியாவெண்ணில் என்பது பாடம். (சுகூ) கண்கடம்மின் என்பது பாடம். அதிற்பன்னம்பண்ணி அவ்வில்வத்தினிலைகளைக் கிள்ளியிட்டு. (கூச) பசிதம் - நீறு. (கூரு) யாமவனுவன் என்பதற்கு அவன்யாம் ஆவன் எனப்பொருள் கொள்க. (கOஉ) அரும்பெரும் பொருள்என்பது முத்தியை. இது இவர்க்கு அரன் மருது தந்தருள எனப்பிரிக்க.

சவுமினிச்சருக்கம்.

(க.) பின்னும் என்பதும் பாடம். (கூ) வடிவாடித்த எனப்பாடம். (உஎ) கொச்சை - வெள்ளாடு. நாகு - எருமை. (உகூ) புள் - வண்டு. புள்ளம் - அரிவாள். (கூO) வடிவான்மென்கிழக்கன்றினை என்பது பாடம். (கூஉ) பொய்ச்சமைமின்னிடை - பொய்யாலாகிய முகிலினிடத்துள்ள மின்போலுமிடை. மை - மூங்கில். மச்சம் - மீன். (சக) கண்ணிணையன்றி என்பது பாடம். (சகூ) களத்துஅமர்ஐமூதிர்ந்திட எனப்பிரிக்க. ஐ - சிலேற்பனம். (சகூ) அடிசிலேற்க என்பது பாடம். (ருO) கொளுந்திய என்பது பாடம். வெந்துயர்க்களவி



லைப்பின் என்பது பாடம். (ருச) மதிக்கடவுள் பூஞ்சலச நட்புடைய என்பது பாடம். (ருஅ) உழலை - தாகம். உபயக்கழலை என்பது பாடம். (சுO) கூறுமித்தனிமடந்தை என்பதுபாடம். (சுஉ) புனைநெடுஞ்சடைச் சூதமாமுனிவரன் புகன்றான் என்பது பாடம்.

கன்மாடபாதச்சருக்கம்.

(உ.) பைம்புலி பசிய சந்தனக்கோலமெனக்கொள்க. அச்சம் புலி - பயம்பொருந்தி. (ககூ) வலினர் விரைவார் என்பது பாடம். (கஅ) சாலிதவன்றனையழைத்துத் தாளிற்றாழ்ந்தான் என்பது பாடம். சாலிதவன் - வசிட்டன். (உகூ) மாடமென - உழுந்தைப்போல. கன்மாடபாதன் என்பதற்குக் கல்வடிவமான கறுத்த பாதன் என்பது கருத்து. (உரு) தோன்றன்மான் என்பது பாடம். (உகூ) அரக்கன்றிரிதருகாலை என்பது பாடம். (கூக) முளிதரல் - காய்தல். ஈதியென்றிரந்தே என்பது பாடம். (கூஉ) ஒழுகலின்றிறங்கி என்பது பாடம். (கூச) குஞ்சரமுனிவன்பிடிகடிரிசரிகடெரிந்தரிதுருவும் என்பது பாடம். காமுனி என்புழி, முனி - வில்லு. (கூரு) மலர்கள்கன்றிச் சிவப்பூரஎன்பதும் பாடம். (கூஅ) தருபொருளாய்ந்தைந்தவித்து என்பது பாடம். (சஅ) நோன்புகளுண்மேலாம் என்பது பாடம். உணர்ந்திலைபோலுமன்றே என்பது பாடம். (ருக) தந்திடுஞ்சடிதி என்பது பாடம். (ருகூ) திக்குமுகத்தோன்றல் என்பது பாடம். (சுகூ) சிவை - வேர். (சுஎ) பணைக்கரத்தால் என்பதும் பாடம். (எரு) தேர்தனில்தவமகளை என்பது பாடம்.

விபரீசச்சருக்கம்.

(ந.) கதைபினங்கமுற என்பது பாடம். (அ) கைவிளையாளர்கண்டெனக்கடிந்திட என்பது பாடம். (கO) பிஞ்ஞகன்றனையே என்பது பாடம். (கஉ) வந்தநற்றிங்கடொறும் என்பது பாடம். (உக) துணைவியாவாய் என்பதும் பாடம். (உசு) மண்டபங்கோடித்து என்பது பாடம். கோடித்தல் - அலங்கரித்தல்.

குபேரச்சருக்கம்.

(கூ.) கவரி - எருமை. முட்புறப்பழப்பனசம் என்பதே பாடம். (எ) முதுக்குறைவு-பேரறிவு. (கO) நாடொறுந்தோற்பான் என்பது பாடம். (கரு) சூளை - பரத்தை. (கஎ) புட்டகம் - சேலை. (கூO)

கொடுசென்றிடு யமதூதர் என்பது பாடம். (௪௪) அரன்றிருக்கை யான் மற்றவன் என்பதும் பாடம்.

### சாலிகோத்திரச்சருக்கம்.

(௧.) இதுகாறுஞ் சிவராத்திரிவிரத மறுமைப்பயன்கூறி இச்சருக்கத்துள் இம்மைப்பயன் கூறப் புகுகின்றாராகலின், முதற்செய்யுளால் வழிபடுகடவுள் வணக்கங் கூறினாரென்க. கழனி - வயல். மலை - பொருகின்ற. அழனிமலை - பிணமாகிய மலை. (௫) காலிகோத்திரத்தியல்பிற் புரந்தருளுங்கண்ணன்-நிரைகளை இடையர் கோத்திர முறைமையாற் காத்தருளுங் கண்ணன். நிரைகளைக்கோவர்த்தனகிரியினாலே முறையாகக்காத்தருளுங் கண்ணன். கோத்திரத்தவர் - மலைவில். கோத்திரவருள் - தலைமையாகிய நிலைபெற்ற அருள். கோ - தலைமை. (௬) விண்மணி - சூரியன். (௭) சிறுமைசேர என்பதும் பாடம் (௮) கொண்டுமுனைங்குடிக்க என்பது பாடம். (௯) உளத்தருள் கூர்ந்தந்தணனை என்பது பாடம். (௧௧) ஓதிபயிலறிஞன் என்பது பாடம். ஓதியென்றது ஈண்டுப் பொதியமலை; ஞானமுமாம். (௧௨) இருட்கொண்டனிறம் என்பது பாடம். (௧௩) தன்றுருவந்தரு மதனுலத்தலத்துக்கிணை புகலத்தலமொன்றுண்டோ என்பது பாடம். (௧௭) முனி - வில்லு. (௨0) விரகத்திச்சேதகன் என்பது அத்தலவிநாயகருக்குப்பெயர். அருச்சித்தற் கெழுவாய் நான்மறையென்க. அருச்சித்த என்னும் பெயரெச்சவிறு தொக்கது. யாழைப்பழித்தமொழியம்மை விஞ்ஞான விதூஷணியென்பது வடமொழிப்பெயர். களக்கோலம் - களங்கனியினது கோலம். குறிக்குங்கோவுடையானே - குறிக்கப்படுந்திக்கை வஸ்திரமாகவுடையவனே. (௨௬) சூகரத்தடி பன்றியிறைச்சி. (௨௭) கிளையின்கிளை - குதிரைக்கூட்டம். கிள்ளைகிளை யெனநின்றது. கயக்கம்புக்குழையானே - துன்பம் புகப்பெற்று வருந்தாதவனே. (௨௮) குளிர்புனல் என்பது பாடம். அக்கு - சங்குமணி. அச்சு - சரீரம்.

சிவராத்திரிபுராண அரும்பத விளக்கமும் பாடபேதமும்,

முற்றுப்பெற்றன.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

---

௨

# தஸ்யுக்களும் திராவிடர்களும்.

## த்ராவிடர்களின் ஆர்யோத்பத்தி.

*[ஸ்ரீ. க. சுந்தரராமையரவர்கள் எம். ஏ. ஹிந்து பத்திரிகைக்கு எழுதிய விஷயத்தின் மொழிபெயர்ப்பு.]

மஹேசகுமாரசர்மா மொழிபெயர்ப்பு.

——:(o):——

பண்டைக்காலத்து ஆரியர்கள் தஸ்யுக்கள் என்றும், தாஸர்கள் என்றும் சொல்லப்பட்டவர்களுடன் அடிக்கடி போர் செய்து அவர்களை வென்று துரத்துவாராயினர். இந்த தஸ்யுக்கள் அல்லது தாஸர்கள் என்பவர் யார் என்பதைப்பற்றி பண்டிதர்களுக்குள் பெரிதும் தர்க்கம் நடந்துவந்திருக்கிறது. காலஞ்சென்ற ஸ்ரீயுத-ரமேச சந்த்ர தத்தரின் கொள்கைப்படி இவர்கள் கரியமேனியும் சப்பைமூக்கும் உள்ள பூர்வ குடிகளாவர். இந்தப் பூர்வகுடிகள் இந்தியாவின் மீது படையெடுத்துவந்த ஆரியர்களுக்குத் தாழ்ந்தடங்கிப்போனவர்கள்; அல்லது காடுகளுக்கும் குன்றுகளுக்கும் ஓடிப்போனவர்கள். இந்தக்காடுகளிலும் குன்றுகளிலும் இவர்களின் சந்ததியார்கள் இன்றுவரையில் வசித்து வந்திருக்கிறார்கள். இந்தக்கொள்கையின்படி இவர்கள் முன் ஒருகால் பரதகண்டத்தின் வெவ்வேறு பிரதேசங்களில் வசித்துவந்து, பின்னர் ஆரியர்கள் மேல்நோக்கி வந்தமையாலும் மறைந்தும் அவர்களின் ஆதிக்யம் நாட்டில் நிலைபெற்றமையாலும் ஒடுங்கிப்போன கொலேரியர்களையன்றி வேறல்லவென்று ஏற்படும். ஸூர், கொர்ரெலியோ, மாக்ஸ்முல்லர், உவேபர், முதலிய மேற்றிசைப்பண்டிதர்கள் கூட இவர்கள் இந்தியாவின் அநாகரிக பூர்வகுடிகளும், அநார்யர்களுமான ஜனத்திரளென்றே அபிப்பிராயப்படுகின்றனர். ப்ரஸிடென்ஸீ காலேஜைச்சார்ந்த ப்ரொபெஸர் ரங்காச்சார்யாரவர்களும் 'ஜனசமூஹ க்ரம விகாசத்திலே மதம்புரியும் கார்யம்' என்னும் தமது பிரசங்கத்தின் 22-வது பக்கத்தில், "பஞ்சாப் நாட்டில் ஆர்யர்கள் எவர்களுடன் போர் புரிந்தனரோ அந்த தஸ்யுக்கள் எல்லோரு

ம் த்ராவிடர்களே யாவர் என்னும் அபிப்பிராயத்தைப்" பற்றி ம்ராஸ்வம் செய்துவிட்டுப் பிறகு "த்ராவிடர்கள் வெல்லப்பட்டமை"யைப்பற்றிப் பேசுகிறார். இந்தக்கொள்கைப்படி, ஆரியருக்கு முற்பட்ட அதிபுராதன காலத்தில் இந்தியாவின் ஜனங்களெல்லாம் திராவிட மூலவம்சத்தைச் சேர்ந்தவராய், மனித நூல் தத்வரீதியாய் ஒரே தன்மையுள்ளவராவர். சிறிது காலத்துக்குமுன் கூட தமிழ்ப்பாஷாபிமானிகளான கல்விமான்கள் சிலர் நவீனமாகத்தோன்றிய இந்தக் கொள்கையை முற்றிலும் தழுவா நின்றனர்; இதனால் சிற்சில இடங்களில் ஒரு சிறிது உள்ளக் கிளர்ச்சியும் உற்சாக உத்வேகமும் தலைக்காட்டா நின்றது.

இவ்விஷயத்தில் முக்கியமான பிரமாணங்கள் வேதங்கள், ராமாயணம், மஹாபாரதம் முதலிய நூல்களாம். இந்த நூல்கள் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்த ஆரிய அரசர்களை எதிர்த்து அந்த முயற்சியில் அவர்களால் பங்கமுற்று வெற்றி கொள்ளப்பட்ட தஸ்யுக்களைப்பற்றிப் பேசும்போது த்ராவிடர்களையே குறிக்கின்றன என்னும் அபிப்பிராயத்தைத் தழுவி நிற்க நாம் முயலும் பக்ஷத்தில் அந்நூல்களுக்கு நாம் சரியானபடி பொருள் கூறினவராவோமாவென்று மிக்க ஐயமுறுகின்றோம். கீழ்த்திசை மொழிவல்லவரான ரோத் என்னும் ஜர்மன் பண்டிதர் 'தஸ்யுக்களென்போர் தேவருக்கும் மக்களுக்கும் கேடுசூழும் இயல்பினரும் முக்யமாய் இந்திரனையும் அக்நியையும் வெல்லப்பட்டவருமான ஒருவகை அதிமாநுஷ வர்க்கத்தவராவார்'' என்று கருதுவது வெளிப்படையாய்த் தவறேயாம். தஸ்யுக்கள் என்னும் வார்த்தை அஸுரர் ராக்ஷஸர் முதலிய அதிமாநுஷ வ்யக்திகளுக்கு மாத்திரமல்லாமல் மனிதர்களுக்குக்கூட பிரயோகப்பட்டு வந்ததென்பது—அவர்கள் விச்வாமித்ர ரிஷியின் வம்சத்தில் ஜனித்தவர்களென்றும், ஆர்ய அரசர்கள் அவர்களுடன் நேருக்குநேர் சமர்புரிந்து பற்பல யுத்தங்களில் அவர்களைத் தோற்கடித்தனரென்றும் கூறும் வேத வாக்கியங்களால் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. அல்லாமலும், மநுஸ்ம்ருதி பத்தாம் அத்தியாயம் 45-ம் சுலோகத்திலே, "'இவ்வுலகத்தில் எந்த ஜாதியார்கள் (சிருஷ்டி கர்த்தாவின்) முகம், தோள், துடை, பாதங்களினின்றும் தோன்றிய வர்



ணங்களின் வரம்புக்குப் புறம்பானவர்களோ அவர்கள், மிலேச்சர்களின் பாஷையைப்பேசினும், ஆரியர்களின் பாஷையைப்பேசினும் அவர்களெல்லோரும் தஸ்யுக்களேயாவர்'' என்னும் புராதன ஐதிகம் கண்டோக்தியாய்க் காணப்படுகிறது. ஆகவே, தஸ்யுக்கள் என்னும் வார்த்தையானது அஸுரர், ராக்ஷஸர் முதலிய அதிப்ராக்ருதவ்யக்திகளை மாத்திரமன்றி, நரவர்க்கத்தாரைக்கூட சாதுர்வர்ணியத்தின் எல்லைக்குப் புறம்பான சகலரையும் குறிப்பதாக அதற்குப் பொருள் கொள்ளவேண்டும். அன்றியும், பாண்டவர்கள் "பர்வத வாசிகளான ஏழு தஸ்யுக்கூட்டங்களைவென்ற"தாக மஹாபாரதமுங் கூறுகின்றது.

இனி, சில கல்விமான்கள் கருதுவது போல், தஸ்யுக்களென்பார் தென் இந்தியாவிலுள்ள திராவிடர்களிலும் வேறல்லர் என்று துணியமுடியுமா என்னும் விஷயத்தைக் குறித்துப் பரியாலோசிப்போம். அப்படித் துணியமுடியாதென்று கருதுவதற்குத் தக்க ஆதாரங்கள் இருக்கின்றனவென்பது எமது கொள்கை. ஏனெனில், முதற்கண், ஐதரேய ப்ராஹ்மணமானது "தஸ்யுக்களில் பெரும்பான்மையோர் விச்வாமித்திரரிடத்திலிருந்து தோன்றியவர்" என்று கூறுகின்றது. இந்த வாக்கியம் காணப்படுகிற ஸுநச்சேப உபாக்யானத்திலே, விச்வாமித்ரர் பரதவம்சம் அல்லது கௌசிக கோத்திரத்தைச் சேர்ந்தவரென்றும், ஹரிச்சந்த்ர மஹாராஜாவின் ஹோத்ரு புரோகிதராயிருந்தவரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. விச்வாமித்ரர் ஸ்வயமாகவே ரிஷி; ரிக்வேதம், மூன்றாம் மண்டலத்தைச் சேர்ந்த மந்திரங்களைக் கண்டறிந்தவர் (மந்த்ர - த்ருஷ்டா) ராமாயணத்திலோ அவரை ராக்ஷஸர்கள் புரியும் கொடுஞ்செயல்களினின்றும் ராமர் ரக்ஷிக்கின்றார். (ரிக்வேதம்) முதல் மண்டலத்திலுள்ள ஒரு மந்த்ரத்திலே, கௌசிகன் அல்லது குசிக புத்ரன் என்னும் விசேஷணம் இந்திரனுக்குப் பிரயோகித் திருக்கிறது. இதற்கு ஸாயணாசார்யர் பாஷ்யம் எழுதும்போது இந்த்ரன் விச்வாமித்திரரின் பிதாவாகிய காதியாகப் பிறந்திருந்தான் என்று பொருள் கூறுகிறார். விச்வாமித்திரர் ஆதியில் க்ஷத்திரியர் என்பதும் நம்தேசத்து ஐதிகங்களெல்லாவற்றாலும் நன்கு நிலைநாட்டப் பெற்றிருக்கிறது. தஸ்யுக்கள் விச்வாமித்திர வம்சத்தில் உண்டானவர்

ளாக யிருப்பின், அவர்களும் வம்சக்கிரமத்தில் ஆர்யர்களும் க்ஷத்திரியர்களும் ஆதல்வேண்டும். இது மஹாபாரதத்தைச் சேர்ந்த ஸபா பர்வத்திலுள்ள ஒரு வாக்கியத்தினாலும் ஸ்தாபிக்கப் படுவதாகத் தோற்றுகிறது; அந்த வாக்கியத்திலே 'தஸ்யு' என்னும் வார்த்தையானது கிருஷ்ணனுடைய ஸாரதியாகிய சைனேயனால் கொல்லப்பட்டதாக அதற்குமுன் எடுத்துக்கூறப்பட்ட காம்போஜர், சகர், சபரர், கிராதர் முதலிய ஜாதியார்களைக் குறிக்கும் ஜாதிப் பொதுப் பெயராகப் பிரயோகம் செய்யப் பட்டிருக்கிறது. இந்தக் கூட்டத்தார்களில் சிலராவது ஒரு வேளை எல்லோருமாவது ஆர்யர்களாக்கப்பட்ட கூட்டத்தாராவர். இனி வட திசையிலிருந்து வெற்றி வீரர்களாய் வந்த ஆர்யர்கள் தங்கள் மதத்தையே சேர்ந்த ஆர்யர்களென்ன, தங்கள் மதத்தையனுசரியாத தஸ்யுக்களென்ன ஆகிய இருசாராருடனும் சண்டையிட வேண்டியிருந்ததென்பது ப்ரசித்தமானதேயாம்.

அவ்வாறாயின், மநுஸ்மிருதி, பத்தாம் அத்யாயம், 45-ம் சுலோகத்திலே அவர்களை ஆரியர்களின் நாலு வர்ணங்களிலிருந்து விலக்கியதன் கருத்தென்ன? அவர்களை யப்படி விலக்கியதற்கு அவர்கள் ஆர்ய தர்ம பாஹ்யர்களாக யிருந்தமையே காரணமென்று எமக்குத் தோற்றுகிறது. தஸ்யுக்களென்பார் ஆர்யர்களின் யாகயஞ்ஞாதி வேத விஹித கர்மங்களை அனுஷ்டிக்காம லிருந்தவர்கள். அவர்களுக்கு அவ்ரதர்கள் எனவே, புண்யகர்மங்களாகிய விரதங்கள் அற்றவர்கள் என்று பெயரிடப்பட்டது; அது காரணமாகவே அவர்களுக்கும் ஆரியர்களுக்கும் இடையில் சண்டை மூண்டிருக்க வேண்டும். ஆரியர்கள் அவர்களது தேவர்கள் ஆகிய இருவகையாருக்கும் சத்துருக்களா யிருந்தவர்கள் தஸ்யுக்களெனப் பட்டனர்; இந்த தஸ்யுக்கள் விஷயமாக பிரயோகிக்கப் பட்டிருக்கும் 'அநாஸ' என்னும் வார்த்தைக்கு ஸாயணாசார்யர் விளக்கியுள்ளபடி (ஆஸ்யரஹித) 'முகமற்ற' என்று அர்த்தமாகுமே யன்றி "மூக்கற்ற" என்று அர்த்தமாகாது. ஒரு மனித வகுப்பார் பேசும் பாஷையைக் கொண்டே அவர்கள் இன்ன ஜாதியாரென்று அறிய முடியாது; ஒரே வம்சத்தைச் சேர்ந்தவர்களே பரஸ்பரம் சம்பந்தமற்ற பாஷைகளைப் பேசிவருவதற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டென்பது



ப்ரஸித்தம். 'அநாஸ' என்பதற்கு 'மூக்கற்ற' என்று மாக்ஸ் முல்லர் பொருள் கூறுகிறார்; ஆனால் வில்ஸன் பண்டிதர் "ஸாயணர் சொல்வதே வெகுவாய்ச் சரியாயிருக்கிறது" என்று எண்ணுகிறார்.

தென் இந்தியாவில் ஆர்ய தர்மத்தை ஸ்தாபிப்பதற்காக யுத்தங்கள் எவையும் நடக்கவில்லை யென்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். "ஹிந்து மதத்துக்குள் த்ராவிடர்களைச் சேர்த்துக் கொண்டவிதம் ஆர்யர்கள் அவர்களை யுத்தத்தில் வென்றதனால் அன்று; ஆனால் யுத்தமில்லாமல் தேசம் நிம்மதியாயிருக்கையில் நடந்தேறிய குடியேற்றத்தினாலும் நாகரிகாபிவிருத்தியினாலுமே யென்று தோற்றுகிறது" என்று டாக்டர் கால்ட்வெல் அபிப்பிராயப் பட்டிருக்கிறார். ஆகவே, தென்னிந்தியாவில் த்ராவிடர்களை அடக்கியாளும்பொருட்டு ஆர்யஜயப்ரதாபங்களைக் காட்டும் யுத்தம் நடந்திருப்பதற்கு இடமில்லையாயின், வடதேசத்து த்ராவிடர்களையடக்கி யுத்தம் நடந்ததென்று நம்புவதற்குள்ள காரணம் இன்னும் துர்பலமாயிருக்கிறது. ஏனெனில், ஆர்யர்கள் எவர்களுடன் போர்புரிந்தார்களோ அந்த வடதேசத்து தஸ்யுக்கள் தாங்கள் கைக்கொண்ட பூஜாக்ரமங்களிலும் பேசினபாஷைகளிலும் ஆர்யர்களினின்றும் வேற்றுமைப்பட்டிருந்தாலும், வம்சக்கிரமத்தில் பின் சொன்னவர்களுடன் சம்பந்தப்பட்டவர்களாகவே யிருந்தனர்.

இனி, தென் இந்தியாவிலுள்ள திராவிடர்கள் யார்? திராவிடர்களென்பார் "புண்ணிய கர்மங்களைச் செய்யாது விட்டதனாலும் பிராமணர்களைப் பாராமையினாலும்" அதாவது பிராமணர்களுடன் வைதிக லௌகிக ஆசார விவஹாரங்களில் ஸம்பந்தம்வைத்துக்கொள்ளாமையாலும் "சூத்திரர்களின் நிலைமைக்கு இவ்வுலகத்தில் தாழ்ந்துவிட்ட" பதினொரு க்ஷத்திரிய வம்சங்களில் ஒரு வம்சத்தார் என்று மநுஸ்ம்ருதி பத்தாம் அத்தியாயம் 43, 44-வது சுலோகங்களிலே காணப்படுகிறது. இஃது எப்படி சேர்ந்திருக்கலாம் அல்லது சேர்ந்தது என்பதைக்குறித்து நாம் இங்கே தர்க்கிக்க வேண்டியதில்லை. ஆயினும் மநுஸ்ம்ருதியில் காணப்படும் ஐதிகவரலாற்றைத் தள்ளிவிடுவதற்கு யாதுகாரணமும் காணேம். அந்தஐதீகத்தால் திராவிடர்களென்பார் ஒரு காலத்தில் க்ஷத்திரியர்களாயிருந்து பிறகு செ

ன்ற காலசரித்திரத்தின் சில அபூர்வமான நிலைமைகள் காரணமாக சூத்திரஸ்திதியை யடைந்தவர்களேயன்றி வேறல்லர். ஆதலின், அவர்களை ஒரு ஜனமாக நோக்கிப் பேசுமிடத்து, அவர்கள் ஒருகாலத்திலும் ஆர்யதர்மத்துக்கும் ஆசாரவ்யவஸ்தைக்கும் புறம்பாயிருந்ததில்லை. ஆகவே, அவர்கள் எக்காலத்தும் தஸ்யுக்களைச் சேர்ந்தவர்களா யிருந்திருக்க மாட்டார்கள். அன்றியும், ஸகல க்ஷத்ரியர்களும் வம்சத்தினாலும் மதத்தினாலும் ஆரியர்களான படியால், திராவிடர்கள் கூட, ஒருகாலத்தில் அந்த ஆர்யசமூகத்தில் அடங்கியிருந்த காரணத்தினால், சென்ற காலத்தில் ஆர்யர்களாயிருந்தது மாத்திரமல்லாமல் இன்றும் ஆர்யர்களாகவே யிருக்கிறார்கள். இப்போது எடுத்துக்காட்டப்பட்ட செய்திகளைக்கொண்டு பார்க்கும்போது, ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள் சென்னையிற் செய்த மஹோபந்யாஸங்களொன்றிற் காணப்படும் அடியிற்கண்ட பொருள் பொதிந்த வார்த்தைகள் கருத்துடன் சிந்திப்பதற்குரியனவா யிருக்கின்றன.:—"மானுடவர்க்கத்தில் த்ராவிடரென்னும்பெயருடைய ஒருவம்சத்தார் தென் இந்தியாவில் இருந்தார்களென்றும், அவர்கள் வட இந்தியாவிலுள்ள ஆரியர் என்னும் இன்னொருவம்சத்தாரிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்களென்றும், தென் இந்தியாவிலுள்ள பிராமணர் மாத்திரமே வடக்கேயிருந்து வந்த ஆரியர்களென்றும், தென்னாட்டிலுள்ள மற்ற மானுடவர்க்கமெல்லாம் தென் இந்திய பிராமணர்களினின்றும் வர்ணத்திலும் வம்சத்திலும் முற்றிலும் வேறுபட்டவர்களென்றும் ஒருகொள்கை நடமாடிக்கொண்டிருக்கிறது. இது முற்றிலும் ஆதாரமற்றது. இதற்குள்ள ஒரே அத்தாட்சி என்னவெனில், வடதேசத்துக்கும் தென்தேசத்துக்குமுள்ள பாஷை வேற்றுமையைத் தவிர்த்து வேறொரு வித்தியாஸமும் எனக்குத் தெரியவில்லை. நாங்கள் இத்தனை பேர் வட நாட்டார் இங்கே இருக்கிறோம். இந்தச் சபையிலே வடதேசத்தார்களையும் தென் தேசத்தார்களையும் பிரித்துப் பொறுக்கி யெடுக்கும்படி என் ஐரோப்பிய நண்பர்களைக் கேட்கிறேன். அவர்களாலாகுமா? அந்த வேற்றுமை எங்கே யிருக்கிறது? கொஞ்சம் வேற்றுமைதான் பாஷை. ஆனால் ப்ராஹ்மணர்கள் ஸம்ஸ்கிருதம் பேசிக்கொண்டு இங்கே வந்தவர்களல்லவா? அதனாலென்ன? இங்கே வந்தவுடன் அவர்கள் தமிழ் பேசத்தொடங்கி ஸம்ஸ்கிருதத்தை மறந்துவிட்டார்கள். மற்ற வர்ணத்தார்களும் ஏன் அப்படியே செய்திருக்கக்கூடாது? மற்ற எல்லா வர்ணத்தார்கள் கூட அவ்வாறே வட இந்தியாவிலிருந்து ஒருவர்பின் ஒருவராய் வந்து தங்கள்பாஷையை மறந்து த்ராவிட பாஷையைப் பேசத்தொடங்கி யிருக்கக்கூடாதா? இந்த வாதம் இருபக்ஷத்துக்கும் பொருந்துமே. ஆகையால் அப்படிப்பட்ட விஷயங்களை நம்பவேண்டாம். இங்கிருந்து மறைந்துபோய்விட்ட ஒரு த்ராவிடஜனம் ஒருகால் இருந்திருக்கலாம், அவர்களுள் எஞ்சியிருக்கிற சிலரும் காடுகளிலும் மற்ற இடங்களிலுமே இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பாஷையைப் பின்வந்தவர்களாகிய த்ராவிடர்களென்பார் எடுத்துக் கொண்டிருக்கலாம் என்பது முற்றிலும் சாத்தியமே; ஆனால், அவர்களனைவருங்கூட வடக்கேயிருந்துவந்த ஆரியர்களே; இந்தியாமுழுவதுமே ஆர்ய ஜனமயமே யன்றி வேறன்று."



த்ராவிடர்களை நமது ஆர்யவர்ணாச்ரம தர்ம ஸம்பிரதாயத்தைச்சேர்ந்த க்ஷத்ரியர்களுடன் சம்பந்தப்படுத்தும் தென்னாட்டு ஐதீகங்களும் இருக்கின்றன. மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தாரால் பிரசுரிக்கப்படும் செந்தமிழ்ப் பத்திரிகையின் கல்விகேள்விகளிற்றேர்ந்த ஆசிரியர் இப்போது வெளிவந்துள்ள மேற்படி பத்திரிகைப் பகுதியிலே அர்ஜுனன் ஒரு பாண்டிய அரசன்மகளை மணம்புரிந்துகொண்ட செய்தியை மிகப் பழைய தமிழ் நூலாகிய தொல்காப்பியம் * எடுத்தோதுகின்றதென்னும் விஷயத்தை எடுத்துக்காட்டியிருக்கிறார். மேற்படி பண்டிதர் மேற்கண்ட பத்ரிகையில் தாம் எழுதியுள்ள முந்திய ப்ரபந்தமொன்றில் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த (கண்ணபிரான் வம்சமாகிய) வ்ருஷ்ணி வம்சத்துக்கும் தென்னாட்டு வேளாளர்களுக்குமுள்ள நெருங்கிய உறவைப் பழைய தமிழ் நூல்களினின்றும் பிரமாணங்களெடுத்துக்காட்டி நிரூபித்திருக்கிறார். நிச்சயமாகவே, இவைகள், த்ராவிடர்கள் ஒருகாலத்தில் க்ஷத்ரியராயிருந்தவர்களென்னும் மனுவின்உரையை வலியுறுத்தும் செய்திகளாம்.—சுதேசமித்திரன்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், ௬௩-ம் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் காட்டிய "பூண்டாழ்மார்பின்" என்ற பழைய செய்யுள்—ப - ர்.

உ

# தமிழர் சீனரா?

ஆரியனொருவனையும், சீனனொருவனையும், மலாயனொருவனையும், அமெரிக்கவேடனொருவனையும், காப்பிரியொருவனையும் நிரையே நிறுத்தி, இவரெல்லாம் ஒரு சாதிமக்களா பல்வேறு சாதியினராவென்று எவனையினுமொருவனை வினவினால், அவன் இவ்வைவரும் ஐவேறு சாதியினரென்று கூசாது கூறுவனன்றோ. உலகத்து மனுஷவர்க்கமெல்லாம் வடிவம் குணமுதலியவற்றால் இவ்வைந்து கணங்களிலடங்குவர்; ஐரோப்பியருள் வடகோட்டிலுள்ள சிலரொழிய ஏனையரெல்லாம் வடிவொப்புமையால் ஆரியரின் வேறல்லர். ஐரோப்பியரும் சீனரும் தம்முள் வடிவத்தால் ஒருசிறிது மொவ்வார். அதுபோலவே தமிழ்நாட்டுமக்களும் சீர் அமைவால் ஆரியரின் வேறல்லர். அவருஞ் சீனரும் வடிவத்தால் ஒரு சிறிதும் ஒவ்வார்; இது சாமானிய சிறுவர்க்கும் வெள்ளிடைமலைபோற் புலனாவதோருண்மையாம்.

இங்ஙனமாகவும், "தமிழர்மங்கோலியவகுப்பைச் சார்ந்திருத்தலாலும், சீனதேயத்திலுள்ள மேட்டுத்தரையில் வசிப்பது பற்றிச் சீனர் தம்மை வானவர் (Celestials) என வழங்கும் பெயரையே அந்நாட்டினின்று மிங்குவந்த தமிழரசருளொருவராய சேரரும் பெற்றிருத்தலாலும், சீன பாஷையில் ழகரப்பிரயோகமுண்மையாலும், சோழவகுப்பில் திரையரிற்சிலர் தம்மைச் சீனத்திரையர் என்னும் பெயர் புனைந்து சாசனங்களில் வழங்குதலாலும், நீ, நான் யாம், பெண் முதலிய தமிழ்மொழிகள் சீனபாஷையிலும் காணப்படுதலாலும் பிறவற்றாலும் தமிழரின் ஆதிநாடு சீனமேயாகும்" என்பது தமிழ்ச்சரிதகாரர் சிலரால் மேற்கொள்ளப்பட்டது. அதனை ஈண்டாராய்வாம்.

1. தமிழர் மங்கோலியவகுப்பைச் சேர்ந்தவரல்லரென்பது. மங்கோலியராகிய சீனருக்கும் தமிழருக்கும் தம்முள் வடிவொப்புமை சிறிதுமில்லையென்பது பிரத்தியக்ஷப்பிரமாணத்தாற் றுணியப்படும். தட்டைமுகமும் சாய்ந்தகண்ணும் முகரோமக்குறைவும் மங்-



கோலியருக்குச் சிறப்பியல்பாம். தமிழருக்கோ இச்சின்னங்கள் சிறிதும் பொருந்தாமையால் அவரை மங்கோலியவகுப்பிலே சேர்த்தல் வியர்த்தமாம். (Encyclopaedia Britanica) "என்சைக்ளோபீடியா பிரித்தானிக்கா" என்னும் வித்தியாகோசநூலாசிரியருக்கு மிதுவேகருத்தாம்.

2. வானவன் என்னும்பெயர் சேரனுக்குவந்தது தனது நாட்டில் மழைப்பெயல் மிகுதியுடையனாதலின். மேகங்கள் படியும் மலையை எல்லையாகவுடையனாதலின் வானவரம்பன் என்றும் பெயர்பெறுவன். மேல்கடலை எல்லையாகவுடையனாதலின் வானவரம்பன் என்பாருமுளர். மழைமிகுதியால் சேரனுக்கு வானவன் என்னும் பெயர் வந்ததுபோலச் சோழனுக்குப் புனல்மிகுதியாற் புனனாடன் என்னும் பெயர்வந்தமையுங் காண்க. இவ்வாறன்றிச் சீனதேசத்திலிருந்து வந்தமையால் வானவன் என்னும் பெயர்வந்ததன்று.

3. சீனபாஷையில் ழகரப்பிரயோகமுண்மையை ஓரேதுவாகக் கொண்டனர். ழகரப்பிரயோகம் பிராஞ்சுப்பாஷையிலுமுண்டன்றோ. Logic "லாஜிக்" என்பது பிரான்சு பாஷையில் "லொழிக்" என்றும், General என்பது "ழெனரால்" என்றும், Journal என்பது "ழூர்னால்" என்றும் பெருவழக்காய் வருதலால் பிராஞ்சுபாஷையும் தமிழ்மினமெனல் சாலுமோ? ஆதலால் அதுபோலியேதுவென்க.

4. சீனத்திரையன் என்பது சீனதேசஞ்சென்று மீண்டதிரையன் என்னும் பொருள் பொய்க்குமாறென்னையோ? இவ்வாறன்றிச் சீனத்திரையன் என்பதற்குச் சீனதேசத்திலிருந்து வந்த திரையனெனப் பொருள் கொள்ளற்குச் சாதனம் யாதோ?

5. "நீ, நான், யாம், பெண் முதலிய தமிழ்ச்சொற்கள் சீனபாஷையிற் காணப்படுதலாலும்" என்றனர். நீ நான் யாம் பெண் என்னுஞ்சொற்கள் அவ்வப்பொருளோடு சீனபாஷையில் வழங்குதலை நிரூபித்தல் அத்தமிழ்ச்சரிதகாரர் கடனாம்.

பாஷைகளுக்கிடையேயுள்ள சம்பந்தமெடுத்துக் காட்டுவார் அப்பாஷைகளுக்குப் பொதுவாயுள்ள சொற்களும், சொற்பகுதிகளும், பால், காலம், வேற்றுமை இவற்றினைக்காட்டும் விகுதிகளும், கருத்தொப்புமையும், திரிபு சிதைவுகளும், அப்பாஷையாளர் ஒழுக்கவழக்க வொப்புமையும் எடுத்துக்காட்டி நிறுவுதல்வேண்டும்.

தமிழர் சீனதேசத்திலிருந்து வந்தவரேயானால் அவரோடுவந்த சீனபாஷை சிறிதாவது தமிழென இப்போதுவழங்கும் பாஷையில் வழங்கல்வேண்டும். அஃதில்லாமற்போனமைக்குக் காரணங் காண்கிலம். தமிழர் பூர்வத்திற் சீனராயின் இன்றும் சீனராகவேயிருப்பர். அவர் சீனர்தாம், அவர்வந்து பூர்வக்குடிகளோடு கலந்தமையால் பாஷைவேறுபாடும் நடைவேறுபாடுங்கொண்டாரென்னில், அவரோடு கலப்புற்றபூர்வக்குடிகள் யாவர்? அவர் வழங்கியபாஷைதான் யாது? அங்ஙனமில்லையாயின், அவர் தம் பாஷை நடை யுடையோடு இன்றுஞ் சீனராகவே யிருத்தல் வேண்டுமன்றே. தேசவேறுபாட்டால் அத்தேசவியல்புக்கேற்பத் தமதுடையை மாற்றிக்கொண்டாலும், பாஷையைமாற்றிக்கொண்டமை யாது பற்றியோ? இங்கிலாந்திலிருந்தோடிப்போய் நெடுங்காலத்துக்குமுன் அமெரிக்காவிலே குடிகொண்ட ஜனங்கள் பேசும்பாஷை இன்றும் இங்கிலீஷாகவேயிருக்கின்றதன்றே. இற்றைக்கீராயிர வருஷத்துக்கு முன்னே தமிழ்நாட்டைவிட்டு யாழ்ப்பாணத்திலே குடியேறிய தமிழர் இன்றுந் தமிழ்மக்களாகவே யிருக்கின்றார்களன்றே. அவர் பேசும் பாஷையுந் தமிழேயன்றே. தற்கால ஆங்கில பாஷையிலே கட்டுமரம், கறி, கூலி, காசு முதலிய தமிழ்ச்சொற்கள் காணப்படுதலால், ஆங்கிலேயர்க்கு ஆதிநாடு தமிழ்நாடெனப் போமா? இன்னும் ஐஞ்ஞூறு வருஷஞ் சென்றபின் வரும் ஒருபாஷாவிற்பனன் எமது பாஷையில் இப்போது அளவின்றிக் கலந்து வழங்கும் "கிளீயர்" "நைஸ்" "கோடு" முதலிய ஆங்கில பதங்களைக் கண்டு தமிழர்க்குப் பூர்வநாடு ஆங்கில தேசமென்றால் யாது செய்வோம்?

இந்நியாயம்பற்றியே தொல்லாசிரியர்கள் தமிழில் அந்நியமொழிகளைப் பெரிதும் எடுத்தாளாமலும், அவசியம்பற்றி எடுத்தாண்டவிடத்து இது தேசியம், இது பாகதம், இது வடசொல் எனக்கூறி



யொதுக்கியும் போவாராயினர். செந்தமிழைச் செந்தமிழாகவைத்துப் போகவிரும்பும் தற்காலத்து மூதறிஞரும் தாமெழுதும் நூல்களிலேயே இயன்றமட்டுங் காத்துப்போதலைக் கடனாகக்கொள்ளக்கடவர்கள். தமிழ்மாது தன்னரசிழந்து அந்நிய பாஷையாளராயவேற்றரசர்கள் பலர் கைப்பட்டும் தன் தூய்மை குன்றாவண்ணம் தன்னைப் பரிதுகாக்கவல்ல நல்லபிமான புத்திரரை யீன்று வைத்தமையால் அவரால் இதுகாறும் நன்கு காக்கப்பட்டனள். அது நிற்க,

சீனபாஷையில் நான் நாம் பெண் முதலிய தமிழ்ப் பதங்களுண்டென்பது ஆராயத்தக்கது. சீனபாஷையில் "உவோ" (wo) என்பதன் பொருள் நான். "உவோமம்"—நாங்கள். "நெயு" (New) - பெண். இவ்வாறிருக்க நான் நாம் பெண் முதலிய பதங்கள் சீனபாஷையில் வழங்குகின்றனவென்றல் எங்ஙனமோவறியேம். இன்னும் சீனபாஷையில் வழங்குஞ் சாதாரணசொற்கள் சிலவற்றை எடுத்துநோக்கி அவற்றுக்கும் நம் பாஷைச் சொற்களுக்கும் சிறிதாயினுமொப்புமையுண்டோவென வாராய்வாம்.

| சீனபாஷை. | தமிழ். | சீனபாஷை. | தமிழ். |
|---|---|---|---|
| ஜிஃ | ஞாயிறு (சூரியன்) | லுஃ | ஆறு |
| யிஃ | ஒன்று | த்செய்ஃ | ஏழு |
| உர்ஃ | இரண்டு | பா | எட்டு |
| சான் | மூன்று | கியு | ஒன்பது |
| ஸ்ஸெ | நான்கு | ஷிஃ | பத்து |
| உஊ | ஐந்து | | |

இவற்றுள் எள்ளளவேனும் ஓசையொற்றுமையுளதோவெனப், பாஷாவிற்பன்னர்கள் ஆராய்ந்து கூறுவாராக. பாஷையொற்றுமை ஆராய்வாரெல்லாம் முதலில் ஆராய்வது இயற்சொற்களின் ஒற்றுமையேயாம். அச்சொற்கள் கல்விப்பயிற்சியால் அறியப்படுஞ்சொற்கள் போலாகாது, கற்றார் கல்லாதார் சிறுவர் பெரியர் ஆண்பெண்யாவராலும் மழலைப்பருவமுதலாகச் சாமானிய வியவகாரத்துக்கின்றியமையாது வழங்கப்படுவனவன்றே. தந்தேசத்தைவிட்டுத் தங்கு

லங்குடியோடு அந்நியதேசம் புகுந்து வாழும் சனங்கள்பால் அச்சொற்களிலேயே ஒப்புமைதோன்றல் எளிதன்றும். அச்சொற்களிலேயே ஒப்புமைதோன்றல் இயல்பாம். அவைகளிற்காணப்படாத ஒப்புமை மற்றைச் சொற்களிலே காணப்படுமா? தங்குலங்குடியோடு வேற்றுநாடுபுகுந்த சனங்கள் தமது பாஷையை விடுத்துவேறு பாஷை தழுவுதல் இயல்பன்று. வேறு சாதியோடு கலந்து வாழுங் காலத்து மாத்திரம் அவர் பாஷைதிரிந்து சங்கரபாஷையாகும். அங்ஙனமின்றி நவீனதமிழ்ச்சரிதகாரர் மதப்படி, சீனதேசத்தை விடுத்துக் கங்கைநாட்டிற் குடிகொண்டு, பின்னர் அங்குநின்றுந் தென்னாட்டிற் புகுந்து வாழுஞ்சீனர், குலங்குடியோடு புகுந்தவராதலின் தம் பாஷை சீனமணஞ் சிறிதேனுமின்றி மாறப்பெற்றமைக்குக் காரணம் இதுவெனக்கூறுது வாளாமொழிதல் சரிதவன்மைக்கழகன்று. தமிழ்நாட்டில் வந்துவழங்கும் பல அந்நியபாஷைச் சொற்களுள்ளே பிங்கான் என்பதொன்றுமே சீனபாஷைச் சொல்லாம்.

இதுகாறுங் கூறியவாற்றுல் தமிழ்ச் சரிதகாரர் சிலர் தமிழர் சீனரேயென மேற்கொண்ட விஷயம் போந்தவலியுடையதன்றென்பது இனிது துணியப்படும்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

# நமது பூர்வகாலக் கப்பற்றெழில்.

## சீனவியாபாரம்.

### சீனுவில் இந்திய வியாபாரிகளின் குடியேற்றம்.

(முற்றொடர்ச்சி)

சீனுவில் கண்டுபிடிக்கப்பட்ட பழமையான நாணயங்களாலும், சீன கிரந்தங்களாலும் கி. மு. ஏழாவது நூற்றாண்டுக்கு முன் இந்தியர்கள் சீனுவில் தனிமையாக ஓரிடத்தில் குடியேறி முதன் முதலாக நாணயம் இன்னதென அங்கு வெளியிட்டு ஒப்புயர்வற்று வாழ்ந்து தம் தாய்நாட்டுடனும் சீனுவுடனும் வியாபாரம் செய்ததுமன்றி சீன நாகரீகத்தில் ஒருவிதமான செல்வாக்கையும் உண்டுபண்ணினார்களென்றும் ஏற்படுகிறது. இந்து சமுத்திரத்திலுள்ள சமுத்திர வியாபாரிகள், இப்பொழுது ஜர்மானியர்கள் தங்கள் கடற்படைக்கு இருப்பிடமாகக் கொண்டிருக்கும் கயாசோகுடாவைச் சுற்றிலும் ஒரு நாட்டினை யுண்டாக்கிக் குடியேறினார்கள். அவ்விடத்து அரசன் கி. மு. 680-ல் அவர்களை எதிர்க்க அவனை ஜெயித்தும், அந்தப் பிரதேசத்தைத் தெற்கிலுள்ள லங்காபுரியின்பேரால் லங்கா என்றழைத்தும் அவ்விடத்திற் சந்தையும் நாணயமுத்திராசாலையும் உண்டாக்கிக்கொண்டும் சுயேச்சையாக வாழ்ந்தனர். கி. மு. 631-ல் குட்னு என்னும் ஓர் இந்துத் தலைவனுக்கு அவனுடன் ஒருபசு வந்ததென்னும் காரணத்தால் அக்காலத்து அரசனுல் வெகு மரியாதைகள் செய்யப்பட்டனவென்றும், சீன விஷயங்களில் பேர்போன* தெரியன் தெலக்கூப்பரி Ph. D. L L. D. தமது "பூர்வீக சீனநாகரீகத்திற்கு மேல்நாடு ஆதாரம்" என்னும் புத்தகத்தில் (Western origin of the Early Chinese civilization) இந்தக்குடியேற்ற நாடு சுயேச்சையாகவிருந்ததென்றும், சீனர்கள் அக்காலத்தில் அங்குப் பரவவில்லையென்றும், அவர்கள் சீனர்களுக்குக் கப்பங் கட்டும் நிபந்தனைப்படி வியாபாரம் செய்யவில்லையென்றும் ஊகிக்க இடமிருக்கிறது என்று எழுதுகின்றார்.

இந்திய வியாபாரிகளைத் தலைமையாகவுடைய இந்தக்குடியேற்ற நாட்டினருக்கு மிக்க செல்வாக்கிருந்ததென நாணய் பரிசோதனையால் ஏற்படுகிறது. அவர்கள் ஒரு பலமான கூட்டமாகக் கூடியிருந்ததுமன்றி, கி. மு. 675, 670-ல் முதன் முதலாக அந்நாட்டில் உலோகத்தில் எழுத்து வெட்டப்பட்ட நாணயவாரிகளை யுண்டாக்க, அது சிநேகப்பான்மையையுடைய பக்கத்திலுள்ள சீன இராச்சியங்களிற் பரவிற்று என்று சொல்ல ஸ்பஷ்டமான சாக்ஷியங்களிருக்கின்றன. ஆறும் நூற்றாண்டின் பிற்காலத்தில், அதாவது 580-550-ல் அநேக உள்நாட்டுச் சீனராச்சியங்களுடன் ஒன்று கூடி எல்லோருடைய பெயர்களாலும், நாணயம் அச்சிட்டனர். மறுபடியும் லங்கை வியாபாரிகள் இரண்டு சீனவியாபாரக் கூட்டங்களுடன் சேர்ந்து சதுரமான நாணயங்கள் அச்சிட்டனர். இந்த நாணயங்களின்

* Professor. TERRIEN DE LACOUPERIE Ph. D. LITTD.

பலமாதிரிகள் கண்டெடுக்கப்பட்டு அவைகளில் நாணயசாலை"(Mint) யிருந்த விடமான த்ஸிமோ (Tis-moh) என்ற ஊரும் அச்சடிக்கப்பட்டிருப்பதாக T. தேலக்கூப்பரி தாமெழுதிய "கி. மு. ஏழாவது நூற்றாண்டு முதல் கி. பி. 621 வரையிலுள்ள சீன நாணய ஜாப்தா" என்னும் புத்தகத்தில் சொல்லியிருக்கிறார். கூட்டுப் பெயரால் வெளியிடப்பட்ட நாணயங்களைக் கொண்டு இந்த வியாபாரிகள் அநேக உள் நாடுகளுடனும் சமுத்திர ஓரமாக விருந்த சீனதேசங்களுடனும் வியாபாரம் செய்ததுமன்றி அதிகச் செல்வாக்குடையவர்களுமா யிருந்தனரென வெளியாகிறது.

## ஆதியில் இந்தியர்களின் கப்பல்கள்.

இந்தியாவினின்றுஞ் சென்ற தடிகள், பக்ஷிகளைப்போல் செய்யப்பட்டதும், அணியில் கண்கள் எழுதப்பட்டதுமான மரக்கலங்களிற் சென்றனரென்றும், அவை போனிஷியரைப் பின்பற்றிச் செய்யப்பட்டனவாயிருக்கலாமென்றும் லக்கூப்பரிவித்துவான் அபிப்பிராயப்படுகிறார். அதற்குப் போதிய ஆதாரமில்லை. தொன்றுதொட்டு நம் நாட்டு மரக்கலங்களின் முன்னும் பின்னும் மயில், மகரம் முதலியவை தீட்டப்பட்டும், கண்கள் எழுதப்பட்டுமிருந்தன. வடக்கேயிருக்கும் சஞ்சியில் முதல்கோபுரத்தில் வரையப்பட்டிருக்கும் கப்பலொன்றில், மகரமும் ஒரு புறம் மச்சமும் வெட்டப்பட்டுள்ளன. இது கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இன்னும் அஜண்டாகுகையில் வெட்டப்பட்டிருக்கும் உருவங்களில், லங்கையில் முதன்முதல் விஜயன் கப்பலில் இறங்குவதைப்போல் வெட்டப்பட்டிருப்பதிற் கூட முன்னும் பின்னும் பக்ஷிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் அதே இடத்தில் எழுதப்பட்டிருக்கும் பெருமரக்கலமொன்றிலும், உல்லாசக்கப்பலொன்றிலும் முன்புறம் பக்ஷி மாதிரியும் பின்புறம் மத்தகமாதிரியும் எழுதப்பட்டிருக்கின்றன. நம் நாட்டிலும்கூட போட்டுகளில் அப்படி கண்கள் வரையப்படுவதைக் காண்கிறோம். சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்த காதையில் "பரிமுகவம்பியும் கரிமுகவம்பியும், அரிமுகவம்பியு மருங்கறையியக்கும், பெருந்துறை" என்ற அடிகளால் (௧௭௬-௮) குதிரைமுகவோடம், யானைமுகவோடம், சிங்கமுகவோடங்களும் முற்காலத்தே தமிழ்நாட்டில் உபயோகிக்கப்பட்டமை விளங்கும்.



## இந்தியரது அதிர்ஷ்ட வசங்கள்.

அநேக குப்பைகளைக்கிளறி, வெகு சாவதானமாக லாகூப்பரி வித்துவான் எழுதிய "பூர்வ சீனர்களின் நாகரிகத்திற்கு மேல்நாடு ஆதாரம்" என்பதை ஊன்றி வாசிக்கும்போது, சீனதேசத்திலுள்ள லங்யா (Lang-ya) த்ஸிமோ (Thsi-moh) நாடுகளிற் குடியேறிய இந்தியர்கள் கி. மு. ஏழாவது நூற்றாண்டு முதல் கி. பி. முதல் நூற்றாண்டு வரையிலும் விடாது மரக்கலங்களிற் சென்றுவந்தாலும் முடிவாகக் கம்போடியா * நாட்டையுண்டாக்கிக் குடியேறும்வரை இவர்கள் பட்டதுன்பங்களும் இடப்பெயர்ச்சியும் கொஞ்சமல்லவென ஏற்படும். அவர் எழுதுவதாவது:—ஆரம்ப முதற்கொண்டே இந்தக் குடியேற்றநாடுகள் சுயேச்சையுடையவாயும் சீனஆட்சிக்குப் புறம்பாகவுமே இருந்துவந்தன. சீனராஜ்யம் பலத்துவரவே இவர்கள் வியாபாரத்துக்கு சௌகரியமாயும் முதன்மையாயும் வைத்திருந்தவிடங்களை விடும்படியேற்பட்டது. அவர்கள் எப்பொழுதும் கடலோரமாயும், சீனதேசத்திற்குச் சமீபமாயும், ஆனாலும் அவர்களாட்சிக்குப்புறம்பாயுமுள்ள பட்டினங்களையே உண்டாக்கிவந்தனர். சீனவியாபார ஸ்தலங்களோடு சௌகரியமாக வியாபாரம் செய்யும்படியாயும் தங்களுடைய சுயேச்சையை இழக்காமலும் தங்கள் சொத்துக்களைப் பிடித்துச்சீனர் அதிகத்தீர்வை வசூலிக்காமலுமிருக்கும்படியான வழிகளை அநுசரித்தேவந்தனர். முதலில் சீனர்கள் ஹ்வாங்ஹோ (Hwang-Ho) வளநாட்டில் தங்கியபோது அதனைச்சுற்றிக் காடுகளாயிருந்த நாடுகளைத்திருத்தி கியோசோகுடாவிலிருக்கும் ஷாண்டுங் (Shan-Tunq) தீபகற்பத்துக்குத் தெற்கில் குடியேறினர். அதனில் கி. மு. 675—375-வரையிற் றங்கினர். கி. மு. 547-ல் அவர்கள் பக்கத்திலிருந்த சீன இராச்சியத்தின் ஆதிபத்தியத்துக்கு உட்

* கம்போடியா என்பது செய்கோன் என்று வழங்கும் பிராஞ்சிய கொச்சின் சைனாவாகும்.

படவேண்டியதாயிற்று. அந்தச் சீன இராச்சியம் கி. மு. 493-ல் மற்றொரு இராச்சியத்தாலும், அது ஓயுவே (Yueh) என்னும் வமிசத்தால் கி. மு. 472-லும் ஆளப்பட்டது. இந்த உள்நாட்டுக் குழப்பங்களால் இவர்கள் லங்கா த்ஸமோ நாடு பட்டினங்களைவிட்டு குவேகி (Kwei-ki) துங்யே (Tung-yeh) என்ற துறை முகங்களையடைந்தனர். இவைகளிலும் முன்னதை 207-லும் துங்யேயை 140-110-ல் நடந்த உள்நாட்டுக் குழப்பத்திலும்விட நேர்ந்தது. இவைகளைவிட்டுக்கடைசியாக* அன்னும்தேசக்கரைகளில் குடியேறினர். இவர்களுடைய குடியேற்றநாடான லங்யாவைச் சீனர் அவர்களுக்கு ராஜஸ்தலயாகக்கொண்டனர். அக்காலத்தில் அங்கே வியாபாரத்தின்பொருட்டு வந்திருந்த மரக்கலங்களை இந்தியர்கள் அவர்களுக்கு உதவ, அவைகளில் 2800 சிப்பாய்கள் கொண்டுபோகப்பட்டனர். இதற்கு (அதாவது 425-375-ல்) சீன வியாபாரம் முழுவதும் செய்த இந்திய கப்பல்களில் இந்தியமாலுமிகளே இருந்து நடத்திவந்தனர். ஆயினும் இவர்கள் யாதுகாரணம்பற்றியோ நேராகப்போய்க்கொண்டிருந்தவர்கள் சுமத்திரா சாவகத்தீவுகளுக்குத் தென்புறமாக, சுற்றுப்பாதையாகவிருப்பினும், அதனை உபயோகப்படுத்திவந்தனர். †

இந்தக் காலங்களில் சீனதேசத்திலும் சுற்றுவட்டங்களிலும் கண்டும் கேட்டுமறியாத அநேக சாமான்களைக் கொண்டுவந்து சேர்த்தனர். 324 - 310-ல் வடஇந்தியாவினின்று காண்டா மிருகமும் படாகூதனிலிருந்து இரத்தினங்களும் கொண்டுவந்தனர். முத்துக்களும் எதேஷ்டமாகக் கொண்டுபோகப்பட்டன. கி. மு. 3-ம் நூற்றாண்டில் தான் முதன்முதலாகச் சர்க்கரையும் கற்கண்டும் கொண்டுபோகப்பட்டன. அந்தக் காலத்தில் இந்தியா ஒன்றுதான் சர்க்கரை கற்கண்டுகள் உண்டாக்கும்தேசம்.

---

* அன்னும்தேசம் சீனாவிற்குத் தெற்கிலுள்ளது; செய்கோனுக்கு வடக்காம்.

† சீனதேசத்தினின்றும் இந்தியாவுக்கு வரும் நேர்வழி சிங்கப்பூர்மார்க்கம் பின்னுக்கு வந்தவாவேண்டும். இவர்கள் சென்றவழி சிங்கப்பூரை மேற்வத்து நேரே தெற்கேசென்ற சாவகத்தீவை(Java)யடைந்து சுமாத்ரா மேற்கேபோய்ச் சுற்றிவந்திருக்கின்றனர்.



இரண்டாம் நூற்றாண்டில் செங்கடலினின்றும் அநேகர் தோன்றியபடியால் இந்தியர்கள் தங்களுக்கு லாபகரமாயுள்ள ஸ்தலங்களையெல்லாம் பிடித்துக்கொள்ளவேண்டியிருந்தது. பூர்வம் பூர்வமாகவியாபாரம் செய்துகொண்டிருந்த மயில் அப்பொழுதுதான் சீனாவிற்குக் கொண்டுவரப்பட்டது. பவளமும் வந்தது. இவர்கள் ஏற்கெனவே இலங்கைத்தீவுப்புறத்தில் முத்துச்சலாபம் குளிப்பதறிந்தவர்களாகையால் ஹேநான் துறைக்குப்பக்கத்தில் முத்து இருக்கக் கண்டனர். இன்னும் வாவா அதாவது 111-ல் சீனசக்கரவர்த்தியின் சிங்காரவனத்தில் அதுவரையிற் பார்த்திராத அநேக புதிய மாதிரியான இந்தியச் செடிகள் மரங்கள் வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்தன. இதற்குப்பிறகு ஒருவர்த்தகன் சக்கரவர்த்திக்கு நல்ல ஆணிமுத்துக்களும் இரத்தினங்களும் இப்போது ஆப்கானிஸ்தானமெனவழங்கும் பழயகாந்தாரதேசத்திற் செய்யப்பட்ட வருணக் கண்ணாடிகளையும் கொடுக்கப்பார்த்த சக்கரவர்த்தி, அந்தக்கண்ணாடிகளில் இன்னும் கொஞ்சம்வாங்க இந்தியக் குடியேற்றவியாபாரஸ்தலத்திற்கு ஒரு தூது அனுப்பினர்.

கிறிஸ்தாப்தத்தொடக்கத்தில்-அதாவது கி.மு. 53-ல் கம்போடியா இராச்சியத்தை ஸ்தாபித்த குந்தியுன் என்னும் இந்திய வீரனும் அவனது தோழர்களும் இறங்கியதைத் தவிர்த்து வேறொன்றும் காணவில்லையென்று புனம் டியு சூ த்சுவன் (Funam-Tu-Suh-Tchuan) என்னும் கிரந்தத்திற் காணப்படுவதாக லாகூப்பரிகித்துவனே அபிப்பிராயப்படுகிறார்.

இதேமாதிரியாக சமீபகாலம் வரையில் இந்திய வர்த்தகர்கள் கூட்டங்கூட்டமாக வசித்ததாகத் தெரிகிறது. அந்நியரின்வர்த்தமான பொருள்படும் சவோ-போ-சிஹ் (Chau-Fau-Chih) என்னுங் கிரந்தத்தை எழுதியவரும், பூ-கியான் (Fu-kien) துறைமுகத்தில் அந்நியவியாபார பரிசோதகருமான சவோ ஜூயுகவா (Chao-Jukua) என்பவர் பதின்மூன்றும் நூற்றாண்டில் ஜாவாவுக்குத் தென்புறமாய் மலையாளத்தினின்றும் சிலப்பசனுக்கன் என்ற தகப்பனும் பிள்ளையும் வியாபாரம்செய்துகொண்டிருந்ததாக எழுதுகிறார். அதே ஆதாரத்தில் அந்நியக் குடியேற்றநாட்டுக்குத் தென்புறமாக

ஒரு புத்தாலயம் லோகுநாவால் கட்டப்பட்டதாகத் தெரிவிக்கிறார். 984-988-ல் நாகுலன் என்னும் புத்த சந்நியாசி அவ்விடம் செல்ல அவருக்கு வந்த காணிக்கைகளைக்கொண்டு ஒரு புத்தாலயம் கட்டினதாகத் தெரிகிறது (J. R. A. S. 1896-P. P. 75, 486, 489).

இப்பொழுது சர்வசங்கிரகம் எனப்பொருள்படும் என்ஸைக்கிளோபேடியா என்றெழுதப்படுகிற ஐரோப்பிய அகராதிகளுக்கு அடிப்படையான சீனகிரந்தகர்த்தா மாதுவான்லின்(Ma-Tudn-Lin) தாமெழுதிய நூறுபாகமுடைய என்சைகிளோபேடியாவில் "அந்நியரின் கோரிக்கையின்பேரிலும் அவர்களுக்கு அநுகூலமாகவும் இன்ஸ்பெக்டர்கள் சீனதுறைமுகங்களில் கி. பி. 999-ல் நியமிக்கப்பட்டார்கள்" என்றும் "அக்காலத்தில் அரேபியர், பாரசீகர், இந்தியர்கள் தங்கள் தங்கள் ஜாதியாரையே நியாயாதிபதிகளாகக்கொண்டு அடங்கியிருந்தனரென்றும் ராயல் ஏஷியாடிக் ஸொஸைட்டியின் சஞ்சிகையில் (1896-p-69) டாக்டர் ஹிர்த்து கூறுகிறார்.

(வரும்.)

ஒற்றன்.

---

௨

# வியாழமண்டலம்.

-:(o):-

மானிடர் பசு பக்ஷி மிருகம் முதலிய ஜீவவர்க்கங்களும் செடி கொடி முதலிய விருக்ஷவகைகளும் வாழ்வதும் வளர்வதும் இப்பூமண்டலத்திலேமாத்திரமன்று; இப்படியே செவ்வாய் முதலிய கிரகங்களிலும் பலவிதமான உயிர்களும் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அவற்றுள் பிரகஸ்பதி மண்டலத்தில் உயிர்வாழ்க்கை உண்டென்று சொல்லச் சிறிது விரோதம் தோன்றுவதனால் முதலில் அதைச் சற்று விசாரிப்போம்.

சோதிடசாஸ்திரத்தில் சொற்பஞானமுள்ள சிலர், இவ்வுலகத்தைப்போலப் பல உலகங்களுண்டென்பதைமட்டும் உறுதியாய் நம்பியிருந்தாலும், பிரகஸ்பதி மண்டலத்தில் உயிர்வாழ்க்கை உண்டோ இல்லையா என்பதைப்பற்றி விசாரிக்கும்போது அதற்குச் சில



விரோதங்களும் ஆக்ஷேபங்களும் உளவென நினைக்கிறார்கள். மேற்பார்வையாய்ப் பார்க்கும்போது அந்த ஆக்ஷேபங்கள் சகஜமாகவே தோன்றுகின்றன. சூரியமண்டலத்திலிருந்து பிரகஸ்பதிமண்டலம் வெகுதூரத்துக்கப்பாலிருக்கின்றமையால், சூரியனிடத்தினின்றும் வருகின்ற வெளிச்சமும் உஷ்ணமும் அந்தக் கிரகத்தில் எப்படி நன்றாய் உறைக்கும்? அப்படிச் சூரியகிரணம் செம்மையாய்ப் படாமற்போனால், இப்பூமியில் உற்பத்தியாவதுபோல் அங்கே ஜீவவர்க்கங்களும் விருக்ஷவர்க்கங்களும் எப்படி உற்பத்தியாகும்? எந்தக் கிரகத்திற்காகட்டும் உஷ்ணம்முழுதும் சூரியகிரணத்தினாலேயே உண்டாகவேண்டுமென்றிருந்தால், பிரகஸ்பதியினிடத்தில் குளிர்ச்சி மிகவும் அதிகமாயே இருக்கவேண்டும்; அது காரணமாக அந்தக் கிரகத்திலிருக்கிற தண்ணீரும்திரவமாயிருக்கக்கூடாது; அதிலுள்ள நதி சமுத்திரம் முதலியவெல்லாம் உறைந்து கட்டியாய்ப் போயிருக்கவேண்டும். ஆயினும் உண்மை அப்படியில்லை; கிரகங்களின் சீதோஷ்ண நிலைக்கு வேறுகாரணங்களுமுண்டு: அந்தந்தக் கிரகத்தைச் சூழ்ந்திருக்கும் வாயுமண்டலத்தின் நிலைமையினாலும் அந்தக் கோளத்திற்குள்ளேயிருக்கும் உஷ்ணத்தாலும் சீதோஷ்ண நிலை மாறுகின்றது. இப்பூமியின் சீதோஷ்ணநிலை எப்படிப்பட்டதெனில், வாயுமண்டலத்திலேறிச் சூரியனுக்குச் சமீபமாய்ப் போகப்போக உஷ்ணம் குறைந்துபோகிறது; பூமிக்குள் பள்ளத்திலிறங்கிச் சூரியனுக்குத்தூரமாய்ப் போகப்போக உஷ்ணம் அதிகமாகின்றது. ஆதலால், ஆகாயத்தில் வெகு தூரத்திலிருந்து புகைக்கூண்டில் பூமியைக் கிட்டிவரும்போதும், ஒரு பெரிய மலையின் உச்சியிலிருந்து இறங்கிவரும்போதும் உஷ்ணம் அதிகரிப்பது இப்பூமியைச் சுற்றியிருக்கும் வாயுமண்டலத்தின் நிலைமையால்; அப்படியே பிரகஸ்பதி கிரகத்திலும், சூரியகிரணம் வெகுதூரத்திலிருந்துவந்தாலும் அதன் வலிமை அதிகமாய்க் குறைவுபடாதபடி, அதைச் சுற்றிய வாயுமண்டலம் அதை ஒருவாறு காக்கத்தக்க தன்மையோடு நிருமிக்கப்பட்டிருக்கலாம். மேலும் பிரகஸ்பதி கோளத்திற்குள் அடங்கிய சூடு, அதிலுள்ள ஆறு ஏரி முதலியவை உறைந்துபோகாமல் திரவமாகவே இருக்கும்படி செய்யவும், நமது பூமியில் வளருவதுபோல் ஜீவவர்க்கங்களும் விருக்ஷ

வர்க்கங்களும் செழிப்பாய் வளர்வதற்குப் போதுமான சமசீதோஷ்ண நிலையைக்காக்கவும் போதுமானதாய் அமைக்கப்பட்டிருக்கலாம். ஆயினும் வெகுதூரத்திலிருந்துவருவதனால் மந்தமாய்ப் போகிற சூரியகிரணத்தை இந்த ஏற்பாடுகள் அதிக பிரகாசமாய்ச் செய்யமாட்டாவென்றாலும், பார்வைக்கு அதிக இருளாயிருக்க வேண்டுவதில்லை; கண்ணுக்குள்ளிருக்கிற பாபா கொஞ்சம் பெரிதாயிருந்து கருவிழிக்கும் உணர்ச்சி அதிகமாய் அமைக்கப்பட்டிருக்குமானால், சூரியகிரணம் நமக்குத் தெரிவதுபோல் அவ்வளவு பிரகாசமாய் அவர்களுக்கும் தெரிவிப்பதற்கு அதுவே போதுமானது. இப்படிப்பட்ட ஏற்பாடுகள் இல்லாமற் போனாலும், பிரகஸ்பதி மண்டலத்துச் சந்திரனிடத்தில் பிரதிபலிக்கின்ற மந்தமான சூரியகிரணங்கள், நமக்கு நமது சந்திரனொளி எப்படித் தோன்றுகிறதோ, அப்படியே அவர்களுக்குத் தோன்றமாட்டும். அதன் விவரத்தை இங்கு எடுத்துரைக்கப்புகின் வளரும்; சூரிய கிரணங்களின் செயலினால் உபக்கிரகங்களுக்கு உஷ்ணமில்லாத உயர்ந்த ஒளி உண்டாகும்.

பிரகஸ்பதிமண்டலத்தில்தினங்கள் மிகவும் குறுகியிருக்கின்றனவென்று ஒரு ஆக்ஷேபமுண்டாகின்றது. ஆயினும் அது அவ்வளவு முக்கியமானதன்று. அங்கே பத்துமணிநேரம் ஒரு தினமாயிருப்பதால், நாம் நமது உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய வேலைசெய்து அதனால் உண்டாகும் சரீரசிரமத்தை ஆற்றுவதற்குப் போதுமான தருணம் அதில் வாய்ப்பதுகடினமென்று ஆக்ஷேபமுண்டாகிறதென்றாலும் அதற்குச் சமாதானம் சொல்வது எளிதுதான்; ஐந்து மணிநேரம் வேலைசெய்தால் அதற்கு இளைப்பாற ஐந்துமணி நேரம் போதுமானதன்றோ? நமது பூமியில் சமசீதோஷ்ண தேசத்தார் அநேகர் சுதேசத்தைவிட்டுத் துருவதேசங்களுக்குப் போய் அங்கேயே வெகுகாலம் வாசம்செய்கிறார்கள். அங்கே இரவும் பகலும் ஒருபோதும் ஒரு அளவாயிருப்பதில்லை; ஆயினும் அவர்கள் தங்கள் சுதேசத்தில் எப்படியோ அப்படியே அங்கும் தமது வேலைகளைச் செய்துவருகிறார்களல்லவா?

அதைப்பற்றி இன்னொரு ஆக்ஷேபமுமுண்டு. அந்த ஆக்ஷேபம் முதலில் கொஞ்சம் கடினமாகவே தோன்றும்: பிரகஸ்பதி நக்ஷத்



திரம் மிகப் பெரிதாகையால் அதற்குள்ள இழுப்புக்கவர்ச்சியும் (force of gravity) அதிக வலிமையுடையதாயிருக்குமல்லவா? அதனால் எந்தப்பொருளும் அதிக பளுவாயிருக்குமதாலால், விருக்ஷவகைகளின் அடிமரங்களும், கட்டிடத்துச் சாமான்களும், இவைமாத்திரமேயல்லாமல் மனிதசரீரமுங்கூட அவ்வவற்றிற்குள்ள பளுவினாலேயே நசுங்கிப்போகவேண்டுமல்லவா? இந்த ஆக்ஷேபம் மேற்பார்வைக்குக் கொஞ்சம் கொடியதாகவே தோன்றினாலும், வியாழனுடைய இழுப்புக்கவர்ச்சியின் வலிமை இவ்வளவென்று சரியாய்க் கணக்கிட்டுப்பார்ப்பதனாலும், அல்லது அந்தக்கிரகத்திலுள்ள வஸ்துக்களின் பளுவுக்கும் அதற்குமுள்ள வாசி இவ்வளவென்று கண்டுகொள்வதனாலும் அடங்கிப்போம். வியாழன் இப்பூமியைப்போல் 1230-மடங்கு பருத்திருக்கின்றது. ஆதலால் வியாழனும் பூமியும் ஒரேதன்மையான பொருளினால் உண்டாக்கப்பட்டிருக்குமாயின், இப்பூமியில் எட்டுமணங்கு எடையுள்ள மனிதன் பிரகஸ்பதி கிரகத்திலே, பூமியின் மையத்திலிருந்து அதன் மேற்புறம் எவ்வளவு தூரமோ, பிரகஸ்பதி கோளத்தின் மையத்திலிருந்து அவ்வளவு தூரத்தில், அதாவது பிரகஸ்பதியின் மையத்திலிருந்து சுமார் 4000-மைல் தூரத்தில் $(8\times1230)=9840$ மணங்கு எடையுள்ளவனாயிருக்கவேண்டும். ஆயினும் பிரகஸ்பதியின் மையத்திலிருந்து அதன் மேற்புறம் வரையுள்ள தூரம் பூமியைப்போலப் பதினொருபங்கு இருப்பதனால் அதன் மேற்புறத்திலிருக்கிற பொருள்களின் பளுவு அந்தத் தூரத்தின் சதுரவளவிற்கேற்றபடி குறைவுபடும்; அதாவது, ஒன்றுக்கு $(11\times11)=121$ மடங்கு குறைவுபடும். ஆதலால் 9840-ஐ 121னால் வகுத்தால் 80 ஆகின்றது. இதனால் இப்பூமியில் எட்டு மணங்கு எடையுள்ள மனிதன் வியாழனில் சுமார் 80 மணங்கு எடையுள்ளவனாயிருப்பானென்றாகிறது. அதாவது, ஒன்றுக்குப் பத்துபங்காகின்றது. மேலும் வியாழனிடத்திலுள்ள பொருள்கள் இப்பூமியின் பொருளைப்பார்க்க மிகவும் இலேசானவை. பூமியின் பொருள் 100 மணங்கு எடையுள்ளதானால் வியாழனுடைய பொருள் 24 மணங்கு எடையுள்ளதாயிருக்கிறது. ஆதலால் இப்பூமியில் 80 மணங்கு எடையுள்ளபொருள் வியாழனில் 19 மணங்கு தான் எடையுள்ளதா

யிருக்கும். அதாவது, கொஞ்சம் ஏறக்குறைய ஒன்றுக்கு இரட்டிப்பாகிறது. இது ஒரு பெரிய வித்தியாசமன்று. இப்பூமியிலேயே இந்த வித்தியாசம் வெகுவாயிருக்கக்காண்கிறோம். ஆதலால் நம்மைப்போல் உருவம் அமைக்கப்பட்டிருக்கிற மனிதன் ஒரு வருத்தமுமில்லாமல் வியாழனில் வசித்துக்கொண்டிருக்கக்கூடும்; இழுப்புக் கவர்ச்சியைப்பற்றி விசாரிக்குமளவில் மரஞ்செடி முதலியவெல்லாம் இப்பூமியிலிருப்பவைபோலவே அங்கும் செம்மையாய் வளரக்கூடும்; கட்டிடங்களும் ஸ்திரமாயிருக்கலாம்.

P. G.

---

உ

# புத்தகக்குறிப்பு.

**ஸ்ரீ வியாசபாரத மொழிபெயர்ப்பு:**—ஸ்ரீ வேதவியாசபகவான் வடமொழியில் அருளிய மஹாபாரதமானது தக்கபண்டிதர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று, கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-ம. வீ. இராமாநுஜாசாரியரவர்களால் சஞ்சிகைரூபமாக வெளியிடப்படுதல் தமிழபிமானிகள் பலரும் அறிந்தது. இம்மொழிபெயர்ப்பில், ஆதிபர்வமும் சபாபர்வமும் முற்றுப் பெற்றிருத்தலோடு, அடுத்துத் தொடங்கப்பெற்ற சாந்திபர்வத்தில் கசக-அத்தியாயங்கள் வரை இப்போது நடந்திருக்கிறது. இது காறும் வெளிவந்துள்ள ஒன்பது சஞ்சிகைகளையும் முறையே படித்து வருந் தமிழபிமானிகள் எண்ணிறந்த உபாக்யானங்களும், அக்காலத்து வழக்கவொழுக்கங்களும், ஐகிக ஆமுஷ்மிக தர்மங்களும், நீதிகளும், ராஜ்யதந்திரங்களும், அழகிய பாரதக்கதையுடன் அறிந்திருக்கக்கூடுமென்பது திண்ணம். இவ்வாறு ஸர்வசாஸ்திர சாரமாய் மகருஷிகளால் அருளப்பெற்ற இம்மகாகிரந்தத்தை அபிமானித்துப் பாராயணஞ்செய்வோர், புண்யவான்களாவதேயன்றி, லௌகிக வைதிக விஷயங்களில் ஏறக்குறையஎல்லாவற்றினும் சநாதன தர்மத்தை யறிந்துவிவகரிக்கத்தக்க ஞானவன்மையுமுடையராவர் என்பதில் ஐயமில்லை. இப்போது நடைபெறும் சாந்திபர்வம், கும்பகோ



ணம், வேதாந்தகேசரி ப்ரம்மஸ்ரீ: கணபதிசாஸ்திரிகளால் மொழிபெயர்க்கப்படுகின்றது. இம்மொழிபெயர்ப்பு, முன்னவைபோலவே, இனியதும் எளியதும் சுத்தமுமான தமிழ்நடையில் அமைந்துள்ளது. இத்தகைய அரிய பெரிய முயற்சியில் ஊக்கத்துடன் உழைக்கும் ஸ்ரீமத்-இராமாநுஜாசாரியரவர்களைத் தமிழ்நாட்டாரெல்லாம் தக்கபடி அபிமானித்தல், கடமையும் புண்ணியமுமாகுமென்பதை நாமும் வற்புறுத்துதல் மிகையாகாது. இந்நூற்பகுதிகளோவ்வொன்றையும் எமதுபார்வைக்கு அன்புடன் அனுப்பிவரும் ஆசாரியரவர்கட்குப் பெரிதும் நன்றியறிதற் கடப்பாடுடையேம்.

**ஸ்ரீமத்-விவேகானந்த சுவாமிகள் உபந்நியாசங்கள்:**—சில வருஷங்கட்குமுன் இவ்வுலகிற் றம்புகழ்பரப்பிச் சென்ற இச்சுவாமிகளைப்பற்றி அறியாதார் யாவர்? இம்மாஹானது உபந்யாசங்களிலே முக்கியமான சிலவற்றைத் தமிழ்நாட்டார்க்கு உபயோகமாம்படி மொழிபெயர்த்து, திருத்தருப்பூண்டி ஸ்ரீமத்-R. நாராயணசாமி ஐயரவர்கள் தனித்தனிப் புத்தகங்களாக இப்போது வெளிவிட்டு வருகின்றனர். இவ்வாறு அவர்களால் இதுவரை வெளிவந்தவை:— (1) சிகாகோ ஸர்வமதசபையில் சுவாமிகள் செய்த உபந்யாசங்கள், (2) கர்மயோகம்-முதற்பாகம், (3) என்னுடைய குருநாதர் என்ற உபந்யாசம், (4) வேதாந்த தத்துவம் என்ற நான்கு சிறு புத்தகங்கள். இவைகளைப் படிப்போர் வேதாந்த விஷயமான அரியவிஷயங்கள் பலவற்றை எளிதில் அறியவல்லவராதலோடு, சுவாமிகளின் அபாரமான ஞானவன்மையும் நாவன்மையுங்கண்டு, வியப்புறவும் கூடுமென்பது திண்ணம். இம்மொழி பெயர்ப்புக்கள், ஸ்வாமிகளின் ஆழ்ந்த கருத்துக்களை ஆங்கிலமறியாத நம்மவர் அறிந்து மகிழ்தற்குரிய கருவியென்னத்தடையில்லை. இவ்வுபந்யாசங்கள் நான்கின்விலை அணா 12-ஆகின்றது. புத்தகங்கள் கிடைக்கும் விலாசம்:—ஸ்ரீமத் R. நாராயணசாமி ஐயரவர்கள், 241. தம்பு செட்டித்தெரு, சென்னை.

**யுத்தலோலன்:**—இது ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கில மகாகவியின் அற்புதநாடகங்களின் ஒன்றாகிய "ஒதெல்லோ" வை அநுசரித்து நம்நாட்டு இடம்பெயர்களுடன் அமைக்கப்பட்டதோர் நாடகமாகும். ஷேக்ஸ்பியரின் அருமை பெருமைகளைத் தமிழ்மக்கள் உ

ந்து மகிழ்தற்கு இந்நூல் ஒருதக்க கருவியேயாம். இந்நூலினிடை, ஆங்கில மூலத்தின் ஆழ்ந்த கருத்துக்களைக் கூடியவரை தெளிவுபடுத்திச் செல்கின்றது. கதாசந்தர்ப்பங்களின் அமைப்பழகும் அவ்வப்பாத்ரங்கள் தத்தம் நிலையினின்று கூறுங் கூற்றுக்களும் பெரிதும் அருமைப்படத்தக்கனவாம். இதனை இயற்றிய ஸ்ரீமத்-P. S. துரைசாமி ஐயங்காரவர்கள் தம் நூலை, கனம். ஜஸ்டிஸ் வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கட்கு ஸமர்ப்பித்திருக்கின்றனர். இதன் விலை அணா 8. புத்தகவிலாசம்- "ஸ்ரீமத்-P. S. இராஜகோபால ஐயங்காரவர்கள், 101. கைநாபசார் வீதி, சென்னை" என்பது.

**சந்திரவல்லி**:—இப்பெயர் புனைந்த கற்பனைக்கதையைப் பார்வையிட்டு மகிழ்ந்தேம். மிகவும் அருமையான மாதிரியில் எழுதப்பட்டுள்ளது. அன்பு அடக்கம் வாய்மை முதலிய அருங்குணங்களின் பெருமையையே இக்கதை முழுதும் அழகாக வருணிக்கின்றது. சந்திரவல்லி, தன் தந்தைபால் வைத்த அன்புவிசேஷம் படிப்பவர் மனதைப் பரவசப்படுத்த வல்லதாம். சிலவற்றிற்போலக், கதாசந்தர்ப்பங்கள் அதிகமில்லையாயினும், உயர்ந்த தர்மங்களும் வருணனைகளும் இந்நூலிடை மிகுதியாகக் காணப்பட்டு மனதிற்கு ஒருவகை மகிழ்ச்சி விளைக்கின்றது. இதனை யெழுதியவர், மகா-௱-௱-ஸ்ரீ R. P. குழைந்தைசாமிப்பிள்ளையவர்கள் B. A. L. T. இது சென்னை மைலாப்பூர் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை அணா-12.

**பாநுமதி**:—இஃது ஒரு நாடகம். சேதுமான்மியத்துள்ள வேதாள வரதீர்த்த மகிமையிற் கூறப்பட்ட சரித்திரத்தை நாடகப்போக்கிற்கேற்ப அமைத்து, அலகரை, திரு. அ. சுப்பிரமணிய பாரதியாரவர்களால் இயற்றப்பட்டது. இந்நூல், பழைய புராணகதையைப் பற்றியதேயாயினும், கதாசந்தர்ப்பங்கள் அழகாக அமைக்கப்பட்டிருத்தலால், படித்தற்கு இனிமைதருகின்றது. இதனைப்படிக்கும் சிறுவர் சிறுமியர்க்கு உபயோகமாக ஆசிரியர் இந்நூலினிடையிடையே விருத்தம், தரு, கண்ணி, கீர்த்தனம், பத்தியம், கும்மி முதலியவைகளை அமைத்திருக்கின்றார். இதன் விலை அணா-12. புத்தகவிலாசம்:- சென்னைத் திருவல்லிக்கேணி, எஸ். ஜி. ஐயர் அன்டு கம்பேனி.



**கமத்தொழிற்போதம்**:— "கமத்தொழிற்போதமாவது பயிர்ச்செய்கையைப் பற்றியபோதனையாகும்" இது, யாழ்ப்பாணம் ஸ்ரீ C. M. சின்னையமுதலியாரவர்களால் இயற்றப்பெற்றது; பொதுவியல் சிறப்பியல் என இரண்டு பகுதிகளுடையது. முதற்பகுதியில்—முகவுரை, மூலப்பொருள், தரை, நிலக்கசிவு, தரையின் தன்மையை மாற்றல், தரையைப் பண்படுத்தல், மரம், நீர்ப்பாய்ச்சல், பசளை, பசளையிடுங்காலம், தூர்வைப்படுத்தியும் பசளையிட்டும் திருந்தாத நிலத்தைத் திருத்துதல், மாற்றுப்பயிரிடல், வித்துத்தெரிதல், கமவாயுதங்கள், பயிரின் நோய்கள் என்ற விஷயங்களும்; இரண்டாம் பகுதியாகிய சிறப்பியலில்—முகவுரை, நெற்செய்கை, புகையிலைச்செய்கை, தென்னமரச்செய்கை என்ற விஷயங்களும் அடங்கியுள்ளன. இவற்றுடன் இத்தேசத்துக்கேற்ற கலப்பைகளைக்காட்டும் படங்களும் வேறுசில படங்களும் அநுபந்தமாக நூலிறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல், சீரிய செந்தமிழ் நடையில் விவசாய நுட்பங்கள் பலவற்றை விளக்கிச்செல்லுதலால், நம்மவர், இதனைப் படித்து ஏற்பனவற்றைத் தழுவிக்கொள்ளுதல் ஆவசியகமாகும். இப்புத்தகம், யாழ்ப்பாணத்து, நாவலர் அச்சுக்கூடத்தில் நன்குபதிப்பிக்கப்பெற்றதாம். விலை சதம்-30. இப்புத்தகம், ஆக்கியோரிடத்தும் ஷை நாவலரச்சுக்கூடத்தும் கிடைக்கும்.

**மதுரைப்பிள்ளைத்தமிழ்**:—இந்நூல், ரங்கோன் நகரத்திற் பெரிய பிரபுவாகவும் ஹானரரி மாஜிஸ்டிரேட்டாகவும் விளங்கும் ராவ்பஹதூர்: ஸ்ரீமாந்-மதுரைப்பிள்ளையவர்கள் மீது இயற்றப்பட்ட பிரபந்தமாகும். இப்பாட்டுடைத்தலைவர், அறிவு ஆற்றல் பெருமை முதலிய சீரிய குணங்கள்வாய்ந்த சீமானாய்த் திகழ்தலோடு, தம் விதரணசீலத்தாற் கற்றோர்க்குமற்றோர்க்கும் பெருங்களைகணாயும் விளங்குபவரென்பது தமிழ்நாடு நன்கறிந்தது. இப்பிரபுவின் பெருந்தன்மைகளை வியந்து தமிழறிஞர்பலர் ஏறக்குறைய எல்லாப்பிரபந்தமாலைகளாலும் இன்னோரை அலங்கரித்திருக்கின்றனர். சமீபத்தில் இவ்வாறு பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ்ப் பிரதியொன்று எமது பார்வைக்கு அனுப்பப்பட்டதுகண்டு களிப்புற்றேம். இது, மதுரை: வித்தியாபாநுபத்திராதிபர்—ஸ்ரீமத்-மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் ஷை

பிரபுவின்மீது பாடியது. இப்பிரபந்தம், பலவகை விருத்தங்களினும் சந்தங்களினும் ஆண்பாற் பிள்ளைக்கவிக்குரிய பத்துப்பருவங்களும் வருணிக்கப்பட்டு, பருவமொன்றுக்கு ஐந்துபாடலாக ௫0-செய்யுள்களில் முடிந்துள்ளது; சொற்செறிவும் பொருட்பொலிவுங்கொண்டு, பாட்டுடைத்தலைவரின் அருமைபெருமைகளை மிகவழாகப் புகழ்கின்றது. முற்காலத்து வள்ளலாகிய குமணனதுசரித்திரத்தைப் பிரபந்தரூபமாகப் பாடித் தம்வாக்கினிமையால் தமிழகத்தை மகிழ்வூட்டிய கவிராயரவர்கள், இக்காலத்து விளங்கும் விதரணசீலரொருவரையும் அவ்வாறு பிரபந்தவகையாற் சிறப்பித்திருப்பது, பெரிதும் கொண்டாடத்தக்கதேயாகும். சுருங்கவுரைக்குமிடத்து, இப்பிள்ளைத்தமிழ் பெருந்தமிழாகவே விளங்குதலால், பாவலர்க்கு ஒருநல் விருந்தென்னத் தடையில்லை. இப்பிரபந்தத்திறுதியில், பிள்ளையவர்கள்மேற் கவிராயரவர்கள் பாடிய தனிக்கவிகள் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றின் சொற்பொருணங்களும் அறிஞர் அறிந்துசுவைக்கத்தக்கனவாம். இப்பிரபந்தப்பிரதியொன்றை எமது பார்வைக்கு அனுப்பிய ஷை பிரபுஅவர்களதன்பு எம்மால் என்றும் மறக்கத்தக்கதன்று.

**தசகாரியம்**:—இந்நூல், சைவசித்தாந்தத்தில், ஆன்மா முத்தியடைதற்குரிய நெறிகளாகக் கூறப்பட்ட, தத்துவரூபமுதற் சிவபோகமிறுதியாய தசகாரியங்களின் இலக்கண முதலியவற்றை உணர்த்துவதாம். இது, தூத்துக்குடி ஸ்ரீமத்-பொ. முத்தையபிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது. சைவசாத்திரங்கள் பலவற்றை நன்காராய்ந்து தசகாரியவியல்புகளைச் சுருங்கவிளங்க, நல்ல தமிழ்நடையிற் பிள்ளையவர்கள் எழுதியிருத்தலால் சமயஞானம் விரும்புவோர்க்கு இந்நூல் தக்க சாதனமாகத் தடையில்லை. இப்புத்தகம், சிறிய வடிவில் சிறக்க அச்சிடப்பட்டுளது. விலை அணா-8. இப்புத்தகம், தூத்துக்குடி மேலூர் பங்களாத்தெரு, மு. பொன்னம்பலம்பிள்ளையவர்களிடத்தும், தஞ்சை ஸ்ரீபால்சுவாமிமடத்தின் அதிபரிடத்தும் கிடைக்கும்.

**குலோத்துங்க சோழன்கோவை**:—இக்கோவை நம்நாட்டிற் பிரபலமாக வழங்கிய நூல்களில் ஒன்றென்பதற்கு, இதன் பாடல்கள்



பல எங்குங்கேட்கப்படுதலே போதிய சான்றாகும். இக்கோவையிற் சிலபல செய்யுள்களன்றி, நூன்முழுதும் ஒருசேர இதுவரை அச்சிடப்பட்டிலது. இப்போது இந்நூலைப் பல பிரதிகளைக்கொண்டு நன்காராய்ந்து சேற்றூர்: ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இக்கோவை ஒட்டக்கூத்தராற் பாடப்பட்டதென்னுங்கொள்கை தவறென்பது, செந்தமிழ்ப்பத்திராசிரியராயிருந்த ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்களால் தக்க காரணங்காட்டிமுன்னரே எழுதப்பட்டது. இக்கொள்கையினுண்மையைத் தழுவி, கவிராயரவர்கள் இதன்முகவுரையில் அவ்விஷயத்தை விளக்கியுள்ளார்கள். இந்நூலின் சொன்னயம் பொருணயங்கள், அறிஞரெல்லாம் அறிந்து மகிழத்தக்கனவாம். இப்பதிப்பினிறுதியில், இந்நூற்கரும் பதவுரையொன்று கவிராயரவர்கள் எழுதிச்சேர்த்திருப்பது, இதனைப்படிப்போர்க்குப் பேருதவியேயாகும். இக்கோவை, மதுரைஜில்லா முறையூர் ஸ்ரீயூத்-பழ. சி. சண்முகஞ் செட்டியாரவர்கள் விருப்பத்தின்படி, அவர்களுதவியால் அச்சிடப்பெற்றது. இதன் விலைஅணா-12. இப்புத்தகம்—மதுரை விவேகபாநு அச்சுக்கூடத் தலைவர்க்கெழுதிப் பெறத்தக்கது.

**பத்மாவதி**:—(மூன்றாம்பதிப்பு) ஸ்ரீமத்-அ. மாதவையரவர்களால் இயற்றப்பெற்ற "நாவல்"களில் ஒன்றாகிய இச்சரித்திரம், முன்பு அவர்களால், இருமுறை, இரண்டுபகுதிகளாகவெளியிடப்பெற்று நம் நாட்டாரால் விரும்பிப்படிக்கப்பட்ட செய்தி, "நாவல்" அபிமானிகள் பலரும் அறிந்ததாம். இப்போது, அவ்விரண்டுபகுதிகளும் ஒரே புத்தகத்தில் அமைக்கப்பட்டு, மதுரைப் புதுமண்டபம் புக்ஷாப்-ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரால் அழகாக அச்சிடப்பட்டுள்ளன. இப்பதிப்பின் மற்றொருவிசேஷம், கதாசந்தர்ப்பத்துக்கேற்ற சித்திரபடங்கள் அங்கங்கே அமைக்கப்பட்டிருத்தலாம். இக்கதை, எளிய செந்தமிழ்நடையில், உலகவியல்புகளையும் பல தர்மங்களையும், இனியகதைகளுடன் கலந்தூட்டுகின்றது. மற்றும் இதன் அமைப்பினழகு பலரும் நன்கறிந்ததாதலால், நாம் அதனைப்பற்றிக் கூறுவது மிகையேயாகும். இப்புத்தகவிலை ரூ. ஒன்று. வேண்டியோர், மேலே குறித்த கோனாரவர்கட்கு எழுதிப்பெறுக.

**கல்வியே கருந்தனம்:**—"ஓராணுவாசகவரிசை" என்னும் சிறு பதிப்புத்தொகுதிகளில், ௧௧-வது புத்தகமாக, சென்னை-வேப்பேரி. எஸ். பி. ஜி. ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் **ஸ்ரீமத்-கா. நமச்சிவாய முதலி** யாரவர்கள் எழுதியது. கல்விப்பெருமையை விளக்கி, அதற்கு திருஷ்டாந்தமாக கம்பரைப்பற்றி விநோதரசமஞ்சரி முதலியவற்றிற்கண்ட கதை எழுதப்பட்டுள்ளது. இக்கதையில். செந்தமிழ்ப்பத்திரிகையிலே ஆராய்ச்சியுடன் வெளிவந்த கம்பர்செய்திகளில் ஒன்றும் காணப்படாததன் காரணம் என்னையோ? இத்தகைய பதிப்பை மாதமொருமுறை வெளியிட்டுவருவதாக, இதனுக்கியோர் எழுதியுள்ளார். இப்புத்தகம் ஷையாரிடம் கிடைக்கும்.

**மதுரைப்பிரமஞான சங்கத்தில்** (Madura Hall of Theosophy) பதிப்பிக்கப்பட்ட துண்டுப்பத்திரிகைகளில்,(No-26) ஸ்ரீமத்-சங்கராசாரியஸ்வாமிகள் சரித்திரச்சுருக்கம், (No-27) மடங்கள், மடாதிபதிகள், அவர்களின் கடமை, (No-29) சுகிர்தம் பயக்கும் வாழ்நாள் முறை, (No-16) அன்பு-அதனுண்மை-என்ற விஷயங்களைப்பற்றி விரிவாகப் பல ஆதாரங்காட்டி எழுதப்பட்ட பத்திரிகைகளை, எமது பார்வைக்கனுப்பிய ஷை சங்கத்தார்க்குப் பெரிதும் நன்றியறிதற் கடப்பாடுடையேம்.

பத்திராசிரியர்.

---

## பிழைதிருத்தம்.

செந்தமிழ் தொகுதி ௪-பகுதி ௧௧-ல் கதாசரித்சாகரம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௫௪௨ | ௬ | இன்றுமொ | இன்னுமொ |
| ௫௪௪ | ௨௭ | வாட்டமுற்றவளாக | வாட்டமுற்றவளுக |
| ௫௪௫ | ௧௬ | ஏகாங்கி | ஏகாகி |

உ

சிவமயம்.

# ஞானமிர்தக்கட்டளை.

பதி, பசு, பாசங்களுக்கிலக்கணங்கூறுவாம்.

பசுக்கள் சுதந்திரமில்லாதவைகளாதலாலும், பாசங்கள் சடமாயிருக்கையினாலும், பதி சுதந்தரஞான முடைமையாலு முதலிற்பதிக்கு, மிரண்டாவது பசுக்களுக்கு, மூன்றாவது பாசங்களுக்குமிலக்கணங்கூறத் தொடங்கி, முதலிற் பதியிலக்கணங் கூறப்படுகின்றது.

பதி - சொரூபமென்றுந், தடத்தமென்று மிருவகைப்படும். சொரூபமாவது-முதனடு விறுதியில்லாததாய்த், தூலசூக்கும சூநிய ரூப மில்லாததாய்க், குணங்குறி யில்லாததாய், ஒன்றாய், அசலமாய் அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சோதியாய்ப், பஞ்சகிருத்தியத்திற்கதீதப்பட்டு நின்மலவடிவாய் விளங்குவது.

இனித்தடத்தவிலக்கணமாவது - சிருட்டி, திதி, சங்காரந், திரோபவம், அநுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியங்களைப் பண்ணுவதாம்.

பதியாகிய சிவத்தை யக்கினிக்குஷ்ணம்போலப் பிரிவற்றிருக்குஞ் சத்தியானது - நித்தமாய், ஒன்றாய், இச்சாஞானக்கிரியா சொரூபமாயிருக்கும். இது காரியபேதத்தினாலே பரைமுதலாகவநேகபேதப்படும்; சத்தியுடைய பேதத்தினாலே சிவனுஞ்சத்தர் யுத்தியுத்தர், பிரவிருத்தரென மூவகையாய்ப் பேதப்படுவர்.

சத்தரென்பவர் காரியத்தைப் பண்ணவுத்தி யோகியாமற், காரியம் பண்ணத்தொடங்காமலிருக்கிற சத்திமாத்திரமா யிருக்கிறவர்; இவர் சத்திகலையற்றிருக்கிறவராகையால், நிட்களராயிருப்பர். இவருக்கு ஞானமாத்திரமே திருமேனி; இவருக்கு இலயரென்றுஞ், சத்தரென்றும் பெயர்.

இனியுத்தி யுக்தராவார் காரியம்பண்ணவுத்தியோகிக்கிற சத்தியுடையவர்; காரியம்பண்ண வுத்தியோகிக்கிறபொழுது ஞானக்கிரியா சத்திகளொப்பிலுண்டானவர்; பரையாதியிச்சை ஞானக்கிரியையென்னும் பஞ்சசத்திகள் சுத்தமாயையிலே பதிந்தபொழுதுண்டாகிய ஈசாநாதி பஞ்சப்பிரமங்களையே திருமேனியாகவுடையவர் பாசகலைகளுடன்கூடியிருத்தலாற் சகளமுஞ், சத்திகலைகளுடன் கூடியிருத்தலால் நிஷ்களமுமுடைமையாற் சகள நிஷ்களராம்; இவர்க்குச் சதாசிவரென்றும் போகரென்றும் பெயர்.

இனி பிரவிருத்தராவார் காரியங்களைப் பண்ணத்தொடங்கிய சத்தியையுடையவர், காரியம் பண்ணுகிறவேளையிற் கிரியை யதிகமாகவேண்டுமாதலான் ஞானசத்தி கொஞ்சமுங், கிரியாசத்தி யதிகமுமாகவுடையவர்; இவர் பாசகலைகளுடனே கூடியிருக்கையாற் சகளராம்; இவர்க்கு மகேசுரரென்றும் அதிகாரரென்றும் பெயர்.

இந்தப்பதி, சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், விட்டுணு, பிரமா என்று நிட்களம், சகளநிட்களஞ், சகளமாக வொன்பது பேதப்படும்; இவர்களிற் சிவத்திற்குச் சத்தியும் நாதத்திற்கு விந்துவும், இவ்விரண்டுமொழிந்த மூர்த்திகளைவர்க்கு முறையே, மனோன்மனியென்றும், மகேசையென்றும், உமையென்றும், இலக்குமியென்றுஞ், சரசுவதியென்றுஞ் சத்திபேதமைவகைப்படும்; காரியபேதத்தினாலே சத்திசிவங்களும் பேதமாயின வென்க. பதிக்கு இந்தச் சிற் சத்தியே தேகங்கரணமிட மெல்லாமெனவறிக. இப்படிக்கர்த்தவுண்டென்பதற்குப் பிரமாணமாவது :—

ஆண், பெண், அலி முதலான தேகாதி பிரபஞ்சங் காரியமாதலாற் கடாதிகளைப்போலக் கர்த்தாவையுடையன.

மாயை சடமாயிருத்தலாலும், ஆன்மாக்கள் தடைபட்ட ஞானக்கிரியைவுடைமையாற் சுதந்தரவீனமுடையராயிருத்தலாலும், இவ்விரண்டையுந்தொழிற்படுத்துங் கர்த்தாவுண்டென்பது புலப்படும்.

ஆன்மாக்கள் மலத்தையுடைமையினாலுங் கர்த்தா நிர்மலரான ஆன்மாக்களுக்கு வேறாகியும், எள்ளுக்குள் ளெண்ணெய்



போலப்பிரிவற்றிரண்டற நின்றுங், கன்மத்துக்கீடாகத் தனது *சமவாய சத்தியினாலே சுத்தாசுத்த மாயைகளைச்சேர்த்துத் தனுகரணாதிகளையுண்டாக்குவர்.

இவ்வாறுதலாற் கர்த்தாவானவர் குலாலனைப்போலச் சரீர முதலானவைகளையுடையவராகவேண்டுமெனில்? அற்றன்று. காலம் போல அரூபியாயிருந்து சிருட்டியாதிகளைப் பண்ணுதல்கூடும்; அவர் தேகத்தையுடையவராகில், அவருடைய தேகத்தை யுண்டுபண்ண வேறேயொரு கர்த்தாவேண்டுமென்ற அவத்தை வருமாதலாற்றேகாதிசகலவுபாதியுமற்றவரே கர்த்தாவாம். தேகாதிகளையுடைய †அனந்தேசுரர் முதலானவர்கள் அவாந்தரகர்த்தாக்களாம்.

அவ்வாறன்றிச் சூரியனிர் விகாரியாயிருந்து அவன் சன்னிதானத்திற்றாமரை மொட்டலரவும், ஆம்பல் குவியவுஞ், சேறிறுகவும், வெண்ணெயிளகவும் பண்ணுமாறுபோலக்கர்த்தா காரியத்திலே யுன்முகமாயிருக்கிற சத்தியுடனே கூடியிருப்பவராதலாலவர் சந்நிதிமாத்திரத்திலே சிருட்டியாதிகளைப் பண்ணுவரென்க.

இந்தக்கர்த்தா சத்தராயிருந்து பண்ணுங்கிருத்தியமாவது தீவிரதரசத்தி நிபாதத்தையுடையவர்களை யனுக்கிரகித்துப் பரமுத்தியில் விடுவதுந், தீவிரசத்தி நிபாதத்தையுடையவர்களை அபரமுத்திதானத்தில் வைப்பதுமாம்.

இவர் சுத்தமாயையைத்தனது சத்தியாற்கலக்கிச் சத்தரூபமாகிய நாதவிந்துக்களையும், அர்த்தரூபமாகிய நாதவிந்துவென்னும் பெயரையுடைய சிவதத்துவஞ் சத்திதத்துவங்களையும், இந்தத்தத்துவங்களிலே புவனங்களையும் இந்தப்புவனங்களிலேயிருக்கிறவர்களுக்குத் தனுகரணாதிகளையும், விந்து தத்துவத்திலே நின்றுஞ் சதாசிவதத்துவத்தையுமுண்டாக்கி, அந்தச்சதாசிவ தத்துவத்துக்குச் சதாசிவரை நாயகராகப்பண்ணி, யவரை வேறக்கூடிநின்று சிருட்டியாதிகளைப் பண்ணுவரென்க.

---

* சமவாயம் - விட்டுப்பிரியாமை.

† மகேசுரரென்றும் பாடம்.

இனியுத்தியுத்தராகிய சதாசிவராயிருந்து பண்ணுங் கிருத்தியமாவது:—சதாகாலமு மநுக்கிரகித்து மிருந்திருக்கிற விஞ்ஞானகலரிலே தீவிரசத்தி நிபாதமுடையவர்களை யநுக்கிரகித்துப் பரமுத்தியில் விடுவதுங், தீவிரசத்தி நிபாதமுடையவர்களை யநுக்கிரத்து மலபரிபாகத்துக்கீடாகச் சிவதத்துவ முதலான பஞ்சதத்துவங்களிலும், ஞானக்கிரியைகளை விளக்கிய பரமுத்தராகவுஞ், சிவசமனாகவும், அணு சதாசிவர்களாகவும், வித்தியேசுரர்களாகவு, முருத்திரர்களாகவும் வைப்பதும், நாதரூபமாகிய அந்தப்பரஞானத்தை யீசானாதியைந்து முகங்களால் வேதங்களாகவும் பிரணவர் முதலியோர்க்குக் காமிகாதியாகமங்களாகவும் பிரித்து அநுக்கிரகிப்பதுஞ், சாதாக்கிய தத்துவத்திலே நின்று ஈசுவரதத்துவத்தையும் அதிலே புவனங்களையும் அந்தப்புவனநாயகரான அனந்தர் முதலான அட்டவித்தியேசுரர்களுக்குத் தநுகரணாதிகளையுண்டாக்குவதும், இந்தஈசுவரதத்துவத்துக்கு நாயகராக மகேசுரரைப்பண்ணுவதும், இந்தத்தத்துவத்திலே நின்றுஞ் சுத்தவித்தியாதத்துவத்தை யுண்டாக்குவதுஞ், சுத்தவித்தையிலே யிருக்குஞ் சத்தகோடி மகாமந்திரர்களுக்குத் தநுகரணாதிகளையுண்டாக்குவதுமாம்.

இனிப்பிரவிருத்தராகவிருந்துபண்ணுங்கிருத்தியமாவது:—பிரளயாகலரிலே தீவிரதரசத்திநிபாதத்தை யுடையவர்களை அநுக்கிரகித்துப் பரமுத்தியடையப் பண்ணுவதுந், தீவிரசத்திநிபாதமுடையவர்களைச் சகல கன்மங்களையும் போக்கி யதிகாரமலமாத்திரமாக நிறுத்தி யுருத்திரராகப்புவனேசுரர்களாகப் பண்ணுவதும், அசுத்தமாயையைக் கலக்கி மாயை காலம் நியதி கலை யென்னுந் தத்துவங்களை யுண்டாக்குவதும், இவைகளிலே புவனங்களையுண்டாக்குவதும், இந்த நான்கு தத்துவங்களிலே யிருக்கிறவர்களுக்குத் தநுகரணாதிகளையுண்டாக்குவதும், ஸ்ரீ கண்டபரமேசுரனை யதிட்டித்து நின்று கலையிலே பிரகிருதியையும் வித்தையையு, மிராகத்தையுமுண்டாக்குவதுங், காலாதிகளின் கூட்டத்திலே புருட தத்துவத்தையுண்டாக்குவதும், பிரகிருதியைக் கலக்கிக் குணங்களைப் பிரிப்பதுந், தம்முடைய வலப்பாக மிடப்பாக மார்பென்ற வங்கங்களிலே யுண்டான பிரம விட்டுணு நீலருத்திரரென்னு மும்மூர்த்திகளையும் ஸ்ரீ கண்ட பரமேசு



ரனால் நாளடைவிலே இராசத சாத்துவீக தாமதங்களாற் சிருட்டிப்பித்துக்குணமுதலாகப் பிருதிவியீறான விருபத்து நான்கு தத்துவங்களிற் சிருட்டிதிதி சங்காரம் பண்ணுவதுமாம்.

இனிக்கர்த்தாவானவர் சுத்தாத்துவாவுக்குச் சத்தரும் யுத்தியுக்தரும், அசுத்தாத்துவாவுக்கு அநந்தேசுரராகிய பிரவிருத்தருமாக வருவாரென வறிக.

பதியிலக்கண முற்றிற்று.

---

## பசுவிலக்கணம்.

—:(o):—

ஆன்மாவில்லையென்று சிலர்சொல்லுகின்றமையாலதையுண்டென்று நிரூபிக்கப்படுகின்றது.

அஃதாவது சூநியமென்பதின்றி; என்னுடைய தேகமென்று சொல்லுவதுமின்றி, இந்திரியங்களொழிந்திருக்கிற சொப்பனவத்தையினுமறிகையா லிந்திரியங்களு மல்லவாய்ச், சுழுத்தி துரியந் துரியாதீதங்களிலே யந்தக் காரணங்களும் பிராணவாயு மற்றிருக் கையாலந்தக்கரணங்களுக்கும் பிராணவாயுவுக்குமந்நியமாய், விளித்தபோது முன்பண்ணின காரியக்குறைகளைப்பண்ணவும் அறியவுஞ் செய்கையாற்கணிகனுமல்லாமற், தேகத்திற் கப்புறத்திலேயிருக்கின்ற பதார்த்தத்தைக் கிரகிக்கையா லணுபரிமாணனு மத்தியபரிமாணனுமல்லாமற், றானே யொன்றையு மறியமாட்டாமலிருக்கையாற் சுதந்தரனுமல்லாமற், சுகதுக்கங்களாற் பலவகைப்பட்டிருக்கையா லொருவனுமல்லாமற், சுகதுக்க பலத்தைப் புசிக்கையாற் கர்த்தாவுமல்லாமல், நித்தியனாய் வியாபகனாய் அசுதந்தரனாய் அநேகனுமா யகர்த்தாவாய் மலத்தினாலே தடையட்ட ஞானசொரூபியா யிருக்கிறவனென்னவறிக.

இந்தவான்மா அந்தக்கரணங்களுக் கந்நியனாயிருந்தாலும் இராசாவும் மந்திரியுங் கூடியிருக்குமாறுபோல அந்தக்கரணங்களுடன் விடயபோக நிமித்தங் கூடிக்கொண்டிருப்பன்; மலத்தாற் றடைட

ட்ட ஞானசொரூபியாகையால் ஐந்தவத்தையைப் பொருந்தியிருப்பன்; இவ்வாறொரு ஆன்மாவுண்டென்பதற்குப் பிரமாணம் தொழிலைப் பொருந்தியிருக்குந் தேகாதிகள் சடமாகையாற் கடாதிகளைப் போலத்தானே சேட்டிக்கமாட்டா; இவற்றைச்சேட்டிக்கிறவனெவனோவவனே யான்மாவென்பதாம்.

இனி யான்மாக்களுக்குக் கேவலஞ், சகலஞ், சுத்தமென ஆணவ மாயை சிவசத்தியான் மூன்றவத்தைவரும்.

இவற்றுட் கேவலாவத்தையாவது:—தேகாதிக ளொன்றுமற்றுக், குணமற்றுத், தொழிலற்றுப், போகமற்றுக், கர்த்தாவாகையற்று, மைக்குண்மணிபோல ஆணவமலத்தினாலே மூடப்பட்டு ஓரறிவுமற்று, வியாபியாயிருக்குமவதரமெனவறிக.

சகலாவத்தையாவது:—பஞ்சகோசபெத்தனாய், அதனாலே பரிச்சின்னனாகிக், கிஞ்சிக்ஞனாய் அநாதிகன்மத்துக்கீடாய், அநேக யோனிகளிலுஞ் சஞ்சரித்து விடயங்களைப் புசிக்குமவதரமெனவறிக.

சுத்தாவத்தையாவது—இருவினையொப்பு மலபரிபாகமுஞ்சத்திநிபாதமும் வந்தகாலத்துச், சரியை கிரியை யோகஞான பாதங்களையுணர்ந்த குருகடாக்ஷத்தினாலே மும்மலங்களையு நீங்கிச் சச்சிதானந்த சிவமாக விளங்குமவதரமெனவறிக.

இனியிந்தவான்மாக்கள் அதமரான சகலர், மத்திமரான பிரளயாகலர், உத்தமரான விஞ்ஞானகலரென மூவகைப்படுவார்கள். இவருட் சகலராவார் ஞானக்கிரியையைத் தடுக்குமாணவ மலத்தையும், அது சிறிது நீங்குதனிமித்தமாக மாயாகாரியமாகிய கலாதிகளையும், போகத்தின்பொருட்டுக் கன்மமுமாகிய மும்மலத்தையுமுடையவராக விருப்பார்கள்.

பிரளயாகலராவார்:—ஞானக்கிரியைகளைத் தடுக்குமாணவமலத்யுடையவர்களாய்க், கன்மபரிபாகத்தினாலே காலாதிகளைத் தங்கள் வசம்பண்ணிக்கொண்டு ஈசுராத்துவாவிற் போகத்திற்கேதுவான கன்மத்தையுமுடையவர்களாய் இவ்வாறாணவகன்மமென் றிருமலபக் [illegible]யிருக்கிறவர்கள்.



விஞ்ஞானகலராவார் ஆணவமலத்திலே தடைபட்ட ஞானக்கிரியையுடையவர்களாதலாலில்லை யென்பதற்கொத்த ஞானக்கிரியையுடையவர்களா யொரு மலத்தராயிருக்கிறவர்கள்.

இந்த மூவகையான்மாக்களும் மாயையினுடைய வடிவென்னு மான்மதத்துவமிருபத்து நான்கிலும், நடுவென்னும் வித்தியாதத்துவமேழிலு, முடிவிலுமிருப்பார்கள். விஞ்ஞான கேவலரநுக்கிரகம் பெற்றதற்குப் பின் சிவதத்துவங்களிலே யிருப்பார்களெனவறிக.

---

## இனிப்பாசவிலக்கணம்.

பாசம் ஆணவந், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை, கன்மமென வைந்தாம்.

இவற்றுள், ஆணவமலமாவது:—நித்தியமாயொன்றாய்,விபுவாய், அநாதியா, யான்மாக்கடோறுஞானத்தைத் தடுக்குமெண்ணிறந்த சத்திகளையுடையதாய்ச் செம்புக்குக் களிம்புபோலச் சகசமாயிருக்கும்; இதற்குப் பரியாய நாமமாவன:— பசுநீகாரம், பசுத்துவம், மலம், அஞ்சனம், அவித்தை, ஆவிருதம், மூலமலம், மிருத்தியு, தமசு, சென்மபீசம், ஆவரணம், அசுத்தி, மோகஞ், சகசமலம் எனப்பலவாம்.

இவ்வாறாகிய ஆணவமலமுண்டென்பதற்குப் பிரமாணம் ஆன்மாவொன்றினாலே யாவரிக்கப்பட்ட சர்வஞ்ஞனாகவேண்டும்,

அற்பவறிவனாகக் காண்கையால் அற்பவறிவில்லாதவன் மலரகிதனுமல்ல, சிவனைப்போலவான்மாவுக் கற்பவறிவியல்பல்ல, எல்லாருக்கு மொருபடித்தன்றாய் ஞானமிருக்கையாலு, மோக்ஷத்திலே சர்வஞ்ஞனாகக் கேட்கப்படுகையாலும், இவையன்றியும்; அசுசியாய்த் துக்கமயமாயிருக்கிற விடயபோகங்களிலே யாசைவருவதும் ஆணவமலத்தினாலே யென்பது பிரமாணமாம்.

இனித்திரோதாயியாவது:—ஆணவஞ்சடமாகையாலிந்த வாணவசத்திகளைச் சேடிப்பது, ஞானசொரூபியாகிய வாதிசத்தியேயாம்;

இந்த வாதிசத்தியானது பாசகன் மத்துக்குப்பின் சொல்லுகையா லிதையும் பாசமென்று பசாரமாகச் சொல்லப்படும்.

இனிச் சுத்தமாயையாவது:— நித்தியமாய், யொன்றாய்ச், சடத்துவாவையும் வியாபித்திருப்பதாய்ச், சடமாய்ச், சுத்தமாய்ச் சூக்குமை முதலிய நான்கு வாக்குக்களுக்குஞ் சடத்துவாக்களுள்ளே மந்திரம் பதம் வன்னங் கலை யென்னு நான்குக்குஞ்சிவதத்துவ முதலிய சுத்த தத்துவங்களைந்துக்கும் அவைகளிலுள்ள புவனங்களுக்கும் அந்தப்புவனங்களிலுள்ள விஞ்ஞானகலருக்கும் அந்தப்புவனநாயகராகிய மந்திரமகேசுரர் மந்திரங்களென்னும் அனுசதாசிவராதியோர் தனுவாதிகட்கு முதற்காரணமாய்ச், சிவனுக்குவைப்புச்சத்தியென்று சொல்லப்படும் பரிக்கிரகசத்தியாயிருப்பது; இதற்குக் குண்டலி, குடிலை, மகாமாயை, ஊர்த்துவமாயை, விந்துவென விவைபோலப் பரியாயநாமங்களுமுண்டு; இஃதுண்டென்பதற்குப் பிரமாணம் இங்ஙனங் கூறிய காரியங்கள் காரணமன்றி யுண்டாகாவென்பதாம்.

இனி ஊர்த்துவபாகமாகிய சுத்தமாயையினுடைய அதோபாகமாகிய அசுத்தமாயையாவது:—நித்தமாய், ஒன்றாய்த் தன்னுடைய காரியங்களைக் காரணமின்றி வியாபித்திருப்பதாய், வஸ்துரூபமாய்க் கன்மத்துக் கிருப்பிடமாய், யசுத்தமாய்ச், சகலர் பிரளயாகலர் என்னுமான்மாக்களுக்குப் பொதுவாய்ப், பிரளயகாலத்திலே தேகாதிகளற்றிருக்கிறவான்மாக்களுக்குச் சிருட்டி காலத்திலே காலாதி தத்துவங்கள் தூல சூக்குமமுதலானவைகளுண்டாவதற்குப் பிறப்பிடமாய்ச், சிவனுக்கு போகசத்தியாகிய பரிக்கிரகசத்தியாகியிருப்பது. இதற்கு அதோமாயை, மோகினி முதலான வநேக பரியாய நாமங்களுண்டு. இவ்வசுத்தமாயை யுண்டென்பதற்குப் பிரமாணம் இந்தக்கலாதிகாரியங்கள் மாயையாகிய வுபதானமின்றியுண்டாகா; மண்ணுண்டையின்றிக் கடமுண்டாகாததுபோல வென்க. கன்மஞ்சடமாகையாலான்மாவினிடத்திலிராது; இருக்கில், ஆன்மாச் சடமாகத்திரியும்; சுத்தமாயை கன்மத்துக்கு மேற்பட்டிருப்பதாற் சுத்தமாயையிலுமிராது; ஆகவே சங்காரகாலத்திலே இதிலிருக்க வேண்டுமென்பதறிக.



இனிக் கன்மமலமாவது:— மனோவாக்குக் காயங்களாற் பண்ணப்படுகையாற் கன்மமென்றும், பண்ணின கன்மம் நசித்துப்பலமுண்டாகுமட்டும் புவனத்திலும், மருந்தெண்ணை வாசனைபோலப் புத்தியிலுந் தங்கிக் கண்ணுக்குக் காணப்படாதிருக்கையால் அதிட்டமென்றுந், தேகாதிகளைப் பலவகையாயுண்டாக்குகையாற் சனகமென்றும், எல்லாவற்றையுந் தரிக்கையாற் றாரகமென்றும், புசிக்கப்படுகையாற் போக்கியமென்றுஞ் சொல்லப்படுவதாய், அத்தியான்மிக முதலிய துக்கத்திரயத்திற்குக் காரணமாய், ஆன்மஞானமுமாயாகாரியங்களுங் கூடினவிடத்திலே, யுண்டாகுகையாற் றன்மாதன்மசொரூபமாய்ப், பிரளயகாலத்திலே பக்குவப்படுவதாய்ச், சிருட்டிகாலத்திலே தேகாதிகளுக்கேதுவாவதாய்ச், சங்காரகாலத்திலே மாயையிலே யிருப்பதாய்ப் புசித்தாலொழியத் தொலையாமலிருப்பது; இது காயிகம், வாசிகம், மானசமென மூவகைப்படும்.

இவற்றுட்காயிகமாவது:— தெய்வங்களைப் பூசித்தல், ஒருவனையடித்தன் முதலிய புண்ணிய பாவங்களாம்.

வாசிகமாவது:—வேதாகம ஞானசாத்திர புராணங்கடங்கன்முறை முதலிய திருமுறைகளை யோதுதல், ஓதுவித்தல், பொருளைக் கேட்பித்தல், வேதாகம மந்திரங்களை வாக்கு, மந்தம், மானதமாகச் செபித்தல், ஒருவனை வைதன்முதலிய புண்ணியபாவங்களாம்.

மானசமாவது:—முக்கூற்றுவகைச் சமயத்திற்கதீதப்பட்ட வகச்சமயமாறினுட் சைவர்கள் பண்ணும் அதோபாகமாகிய தியான நீக்கிச் சைவசித்தாந்திகள் ஐந்தெழுத்துந், திருநீறுங், கண்டிகையும் பொருளாகக்கொண்டு, பரசிவத்தின் றடத்தலக்கண சொரூப லக்கணங்களையறிந்து தியானித்தன் முதலிய தியானமும், பிறருடைமையை யபகரிக்கச் சிந்தித்தன் முதலியனவுமாகிய புண்ணிய பாவங்களாம்.

இந்தக்கன்மஞ் சாதியாயுப் போகங்களைக்கலந்து அகந்தைபண்ணி நிற்கும்; அஃதொழிந்து ஒருவர்க்காயினுந் தீர்க்காயுவும் நல்ல சாதியு நல்லபோகமும் பண்ணாது; புண்ணியத்தினாலே பாவமும் பாவத்தினாலே புண்ணியமு மழியாது.

ஆகம புராணவிதிப்படி பிராயச்சித்தம் பண்ணினாற் புசிப்பியாமற்போகும்; அவ்வண்ணம் பரிகாரஞ்செய்யாவிடில் ஆன்மாப்பாவ கன்மங்களுக்கு ரௌரவங் கும்பிபாக முதலிய துக்கக்கிலேசங்களை யநுபவித்துப் பாடாணம்போற் கிடக்குமன்றிப் புசித்தாலொழியத் தொலையாது; புசிக்குமிடத்து இதாகிதங்களான் மேலைக்குக்கட்டுப் பட்டிருப்பதும், மனோவாக்குக் காயங்களாலுண்டாகையா லுற்பத்தியையும், புசித்துத் தொலையப்படுகையாலே நாசத்தையுமுடையதாம்; இதுதொன்றுதொட்டு வருகையால் நெற்றெழுக்குப்போலப் பிரவாகாநாதியாம்; இந்தத் தன்மாதன்ம சொரூபமான கன்மத்துக்கு மூலகாரண கன்மம் ஆணவமாயைகளைப்போல நித்தியமாய்ச் சகசமாயிருக்கும்;

இப்படி யொருகன்ம முண்டென்பதற்குப் பிரமாணமாவது:—இருவர் ஒத்த நிலத்திலே திருவள்ளுவர் குறளின்படி உழவு முதலியன சரியாகச்செய்து பயிரிட்டிருக்க ஒருவனுக்கு விளைகின்றது மற்றொருவனுக்கு விளையாமற்போகின்றது; இதற்குக்காரணமியாது? "பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்" என்றபடி, புண்ணியபாவ வன்மை மென்மையெனக் கூறநிற்குங் கன்மமாம்; அன்றியும், ஒருவன் சுவர்க்கத்திலே சுகமநுபவிக்கின்றான்; மற்றொருவன் நரகத்திலே துக்கமநுபவிக்கின்றான்; இதற்குக் காரணமியாது? அதுவே கன்மமாமெனவறிக.

இனிச்சிருட்டி வரலாறுவது:—சுத்தமாயையிலேநின்று சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரியென நான்கு வாக்குகளும், சிவஞ் சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தையென்னுஞ் சுத்த தத்துவங்கள் ஐந்துமுண்டாம்.

அசுத்தமாயையிலே நின்று, மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் என ஏழு தத்துவங்களுண்டாம்.

பிரகிருதி மாயையிலே சித்தம், புத்தி, அகங்காரம், மனம், சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம், வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம், சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவியென்னு மிருபத்திநான்கு தத்துவங்களுண்டாம்.



இனிச், சுத்தமாயையிலே வாக்குகள் தோன்றுமாறு:—சுத்த ருடையசத்தி சுத்தமாயையைக் கலக்கிக் காரியவுன்முகமாய்க் கூடி நின்றபொழுது சந்திரகிரணங் கூடும்போது சமுத்திரமுப்பி யெரியுண்டாவதுபோல ஒருநாதமுண்டாம்; அந்தநாதம் பரசரீரத்தி லுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குவதா யெல்லா அர்த்தத்தை புஞ் சாமானியமாய் விளக்குவதாய் மூவகை யான்மாக்களுக்கும் ஞானப்பிரகாசத்திற் கேதுவாய், சூக்குமையென்றும் பேர்பெற்றி ருக்கும்; அது தானே விருத்தியாய்ப் பஞ்சவர்ணங்களையுஞ் சூக்கும ரூபமா யொடுக்கிநின்ற மயின்முட்டைக்குள்ளிருக்கிற நீர்போலப் பிரிக்கப்படாத வர்ணங்களை யுடைத்தா யுன்முகமா யர்த்தவிசேடத் தைப் போதிக்கப்படாமற் சிந்தையிலிருக்கிற சத்தம் பைசந்தியாம்.

அது தானே விருத்தியாய், விந்துவிலதோ பாகத்திலுண்டாகிய அம்பிகை, வாமை, சேட்டை, ரௌத்திரியென்னும், நான்குசத்திகளி லூம் ஜயை, விஜயை, அசிதை, பராசிதை, நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, வியோம ரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதையென்னும் பதினாறுசத்திகளி லுமுண்டாகிய புத்தியிலிருக்கும் அகாரமுதலிய ஐம்பத்தோரக்கரங் களையும் அவற்றின் வடிவையுமுடைத்தாய்ச்செவிக்குக்கேட்கப்படாத தாய், உள்ளேயுணரப்படுவதாய், உதானவாயுவின் றொழிற்பாடுபெற்றி ருப்பதாய்க் கண்டத்திலடங்கியிருக்குஞ் சத்தம் மத்திமையாம்.

பிராணவாயு வியாபாரமாய், மேலே யெழுந்து தன்செவிக்கும் பிறர் செவிக்குங் கேட்க யோக்கியமா யர்த்தத்தைச் சொல்லுவதா யிருக்கிற சத்தம் வைகரியாம்.

இந்த நான்கு வாக்குகளும் நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளைப் பற்றுக்கோடாகச் சார்ந்து ஐவகைப்பட்டுச் சிவதத்துவ முதலிய பஞ்ச தத்துவங்களிலுமிருக்கும்; மூவகை யான்மாக்களிடத்திலும் பந்தித்திருக்கும்; இந்த வாக்குகள் தனக்கந்நியமாக ஒருவன் சிவ ஞானத்தாற்கண்ட காலத்திலே ஆணவமலத்துடனே நீங்குமல்லது ஒருவருக்கும் நீங்காது; இந்தவாக்குகளை ஞானவான் யாவன் அந்நிய மாகக்காண்கின்றான் அவன் நித்தியனாகி நினைப்பு மறப்புமற்றவனாகி விகாரமில்லாதவனும் சுதந்திரனாகி ஞானானந்த சொரூபியாவன்;

எவ்வாறென்னில், சூரியவுதையத்திலே நட்சத்திரப் பிரகாசமும் அக்
தகாரமும்போலச் சிவஞானப்பிரகாசத்திலே அஞ்ஞானமாகியவாண
வமலத்துடனே இந்தவாக்கு ரூபமாகிய விஞ்ஞானமும் போம். இது
சுத்தமாயையிற் சுத்தமுண்டாமாறு சொல்லப்பட்டது.

சுத்தமாயையிற் றத்துவங்களாகிய அர்த்தவடிவென்றும், ஒலி
வடிவென்று மிருவிதமுடையவத்துவாக்களி லர்த்தவடிவாகிய சிவஞ்
சத்தி, சாதாக்கியம், ஈசரம், சுத்தவித்தை யென்னுமைந்திற் சிவதத்
துவ மாவது:—சுத்தமாயையினுடைய முந்தினவிகாரமென வறிக.
இதிலே சூக்குமையென்னும் வாக்கு மிருத்துக் காமிகாதி சொரூப
மாயிருக்கிற சிவாகமவழி முத்தியையிச்சிக்கிறவரிடத்திற் சிவஞான
விளக்கமதிகம், அதிலுஞ்சிறிததிகம், மிகவுமதிகம் என்பதை விளக்
கும் ; இன்னும் அவ்வாக்கு ஈசுரசக்திக்கு ஏவல் செய்துகொண்டிருக்
கும் ; இன்னுமச் சிவதத்துவம், மலத்தைப்போக்குஞ் சத்திக்குஞ்
சிவபதத்தையடைவிக்குஞ் சத்திக்கு மேபாதியாயிருக்கிற, இந்திகை,
தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகாமினியென்னுங் கலைக
ளுக்கு மிருப்பிடமுமாய், நாதமென்று சொல்லப்படுவதாய்த் தன்ம
ரூபமாயிருப்பதெனவறிக.

இனிச் சத்திதத்துவமாவது காமிகாதி அபரஞானத்தையுடைய
பைசந்தி வாக்குவிருத்திக்குக் காரணமாய்; ஆன்மாவுக்குச் சமுசார
நிவர்த்திக்குப் பகையாயிருக்கிறதிலே பிரவர்த்திக்கை, இதிலே விஷ
யமோகாசரமாயிருக்கிற பசுஞானத்தை விடுத்துச் சிவஞானத்தைச்
சாட்சாத்காரமாய்ப் பிரகாசிப்பிக்கிறதற்குத் தாபத்திரய முதலான
சர்வதுக்கங்களையும் போக்குகை ஆகிய இவற்றைப் பண்ணுகையால்
நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதையென்னுஞ்
சத்திகளுக்கிருப்பிடமாய், விந்துவென்று சொல்லப்படுவதாயிருக்கிற
சிவதத்துவ காரியமாம்.

இனிச் சாதாக்கிய தத்துவமாவது:—காமிகமுதலான வபரஞா
னத்தையுடைய மத்திமையென்னும் வாக்கு விருத்திக்கிருப்பிடமா
ய்க், காமிகமுதலான தந்திரங்கள் வேருகிறதற்குக் காரணர்களா
யிருக்கிற பிரணவாதிகட்குஞ் சாமீப்பிய முதலானவற்றை படைந்
தோர்க்குந் தநுகரணாதிக்குக் காரணமாகிய சத்திதத்துவ காரியமாம்.



இனி ஈசுர தத்துவமாவது:—அநந்தேசுராதிகட்கு மவர்களையு
பாசிக்கையா லவர்களுடைய பதத்தை யடைந்திருக்கிறவர்கட்குந்
தநுகரணபுவனாதியை யுண்டாக்குவதான சதாசிவதத்துவ காரிய
மாம்.

இனிச், சுத்தவித்தியா தத்துவமாவது:—காமிக முதலான
வாகமங்களுடைய வைகரி வாக்குவிருத்திக் கிருப்பிடமாய்ச், சத்த
கோடி மகாமந்திரங்களுக்கும், கணேசுரர்களுக்கும், இந்திரன் முத
லான திக்குப்பாலகர்களுக்கும், தநுகரணபுவன முதலானவற்றிற்
குக் காரணமாய்; ஈசுவரதத்துவ காரியமாயிருப்பதாம்.

சிலபெயர் வருமாறு:—

பரமான்மா ஞானமாத்திரத்துடன் கூடியிருக்கிறபொழுது,
அவர்க்குச் சிவமென்று பெயர். அவரிருக்குந் தத்துவத்திற்குஞ்
சிவமென்றுபெயர். தொழின்மாத்திரத்துடன் கூடியிருக்கிறபொ
ழுது அவருக்குச் சத்தியென்று பெயர். அவரிருக்குந் தத்துவத்
திற்குஞ் சத்தியென்று பெயர். ஞானக்கிரியைகள் சரியாயிருக்கக்
கூடியிருக்கிறபொழுது அவர்க்குச் சதாசிவமென்று பெயர். அவரி
ருக்குந்தத்துவத்திற்குஞ் சதாசிவமென்று பெயர். கிரியையதிகமாய்
ஞானங்குறைந்திருக்கக் கூடியிருக்கிற வப்பொழுதவர்க்கு ஈசுரரெ
ன்று பெயர். அவரிருக்குந் தத்துவத்திற்கும் ஈஸ்வரமென்று பெயர்.
ஈஸ்வரரெனினும் மஹேஸ்வரரெனினு மொக்கும். ஞானமதிகமாய்க்
கிரியை குறைந்திருக்கக்கூடியிருக்கின்றவப்பொழுது அவர்க்குச் சுத்
தவித்தையென்று பெயர். அவரிருக்குந் தத்துவத்திற்குஞ்சுத்தவித்
தையென்று பெயர். அப்பரமான்மாவுக்கு இவ்வைவகைத்தத் றுவ
முஞ் சுதந்திரவடிவமாம்.

மாயா தத்துவமாவது:—ஆன்மாவுக்கு மயக்கவறிவைப் பண்
ணுவது.

கலையாவது:—நியதியின்பின் மாயையினின் றுந் தோன்றுவதாய்
ஆணவத்தை யேகதேசத்திலே நீக்கி ஆன்மாவின் கிரியாசத்தியை
விளக்குவதாய் மாயாகாரியமாயிருப்பது. இதுவுண்டென்பதற்குப்
பிரமாணம்; இதுவே ஞானக்கிரியைகளை விளக்கும் பின்னையொன்றி
னாலே யவ்விளக்கம் வராதென்பது.

வித்தையாவது:—கலையிலேயுண்டானதாய் ஆன்மாவுக்கு ஞான சத்தியை விளக்குவதாய்ப் போகத்தைக் கிரகிக்கிறதற்குக் காரணமாயிருப்பது.

இராகமாவது:—வித்தையிலே யுண்டானதாய் ஆன்மாவினிச்சா சத்தியை விளக்குவதாய்ப், புத்திதருமமான அந்தந்தவிஷயங்களிலாசையை யுண்டாக்குவது.

காலமாவது:—மாயையினின்றுந்தோன்றி, இலவந்துடி யென்பது முதலியவற்றிற்குக் காரணமாய், இம்மட்டென்று போகத்தை யளவிடுவதாய், எல்லை, பலம், புதுமைகளைப் பண்ணுவதாய்ச் செல்கால நிகழ்கால மெதிர்காலமுதலாக வநேக பேதப்பட்டிருப்பது.

நியதியாவது:—காலத்தின் பின் மாயையினின்றுந் தோன்றி ஒருவன்செய்தகன்மபலத்தை விஷயான்றாயிருக்கிறதென்று புசியாமலும், தான்செய்த கன்மபலத்தை விஷயான்றாயிருக்கவில்லையென்று புசியாமலிராதபடியும், ஒருவர் தேசாதிகன் மற்றொருவருக்குப்போகவேதுவாகாதபடியும், அவரவர்செய்த கன்ம மவரவரேதுகரும்படி இராசாக்கினைபோல, நிச்சயம்பண்ணி நிறுத்துவது.

புருடதத்துவமாவது:—இங்ஙனங் கூறிய கலைமுதலான பஞ்ச தத்துவங்களையும் பொருந்திப் பஞ்சகஞ்சுகமுடைய வுயிரே முற்கூறிய இச்சா ஞானக்கிரியை மருவிப் புருடதத்துவமெனப் பெயர்பெற்று போகத்துன்முகமாய் நிற்பது.

இனிப் பிரகிருதியாவது:—கலையிலே நின்றும் ஸ்ரீகண்டபரமேசுரனாலுண்டாக்கப்பட்டதாய்க், குணமுதலான விருபத்துநான்கு தத்துவங்களுக்குக் காரணமாய்ப், பிரிக்கப்படாமற் குணங்களைச் சரியாகக்கூட்டி யிருப்பதாய், விபரீதவுணர்வை யுடையதாகிய அவிச்சையைத் தோற்றுவிப்பது; இதற்கு மூலப்பிரகிருதியென்றும் பெயர் கூறப்படும்.

இனிக், குணதத்துவமாவது:—பிரிக்கப்பட்ட குணங்கள் சரியாய்க் கூடியிருக்கு மவதரம் ஆகையாற் பிரகிருதிக்குங் குணதத்துவத்திற்கும் பேதயில்லை; இக்குணதத்துவஞ் சாத்துவிகம், ராசதம்



தாமதமுதலிய மூன்றாய் ஒவ்வொன்று மூத்திறப்பட்டு ஒன்பதுவகையாயிருக்கும்.

* சித்தமாவது:—பிரகிருதியினதோர் பாகமே; அதுபோகத்திலே சாமானியமாயிருக்கச் சிந்திக்கப்பண்ணும்; குணஞ், சித்தம், பிரகிருதியென்ற மூன்றுமவதார நாமங்களாம்.

இனிப்புத்தியாவது:—குணதத்துவத்திலே நின்று முண்டானதாய், உயிர்கள்செய்த புண்ணியபாவங்கள் தன்பாற் சாரப்பட்டும், இருவினைக்கீடாகவந்த விடயத்தை யஃதின்னதென நிச்சயித்தும், நிற்பது; இது தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம், என்னுமெட்டினுக்குங் காரணமாயிருப்பது.

இனி, அகங்காரமாவது:—என்னோடொப்பவர் ஒருவருமில்லையென அகந்தைக்குக் காரணமாய், யான் எனதென்னு மபிமானத்துக்குக் காரணமாய்ப், புத்தியிலே யுண்டானதாயிருப்பது; இது சாத்துவிக முதலிய குணங்களுடைய மிகுதியினாலே தைசதம், வைகாரிகம், பூதாதிகமென மூன்றுபேதப்படும்; இவைகள் மனமுதலியவற்றிற்குக் காரணமாயிருக்கும்.

மனமாவது:—தைசதவகங்காரத்திலுண்டானதாய், விகற்பமென்னுஞ் சந்தேக நினைவுஞ், சங்கற்பமென்னு நினைவும், இந்திரியங்கள் வழியாய்வந்த பொருள்களைப்பற்றி யறிவுமறிவாம்; இந்த விசேடணத்துடனே கூடினது விசேடியமென்ன விஷயீகரித்துவரும் நிச்சயத்தையும் பண்ணுவது; இதுதான் சுரோத்திராதி யிந்திரியங்களிலே கூடினவடையிலே சத்தாதிஞானங்களையுண்டாக்கும்; ஆகையால், விபுவுமல்ல, பஞ்சாவதானியிடத்திலே யொருங்கே ஞானம் வருகையால் அணுவுமல்ல; விரிதல் குவிதலையுடைய மகத்துவமாம்.

இனிச், சுரோத்திராதியாவன:—முற்கூறியதைசத வகங்காரத்திலேநின்றுஞ் சுரோத்திராதி யிந்திரியங்களுண்டாம்; தன்னை வந்த

* இச்சித்தமானது மனத்தின் பின்னதாயதன்கணடங்குமெனச் சித்தியார்சுபக்க மிரண்டாஞ்சூத்திரம் ருஅ-ஆம் கவியுரையிற் கூறினர்.

டைந்த சத்தத்தைக் காதுவெளியிலாகாசமிடமாயிருந்து கிரகிக்குந் தத்துவஞ் சுரோத்திரம்.

தன்னை வந்தடைந்த பரிசத்தைத் துவக்கில் வாயுவினிடமாக விருந்து கிரகிக்குந் தத்துவம், துவக்கு.

கோளகையிலே யக்கினியினிடமாக வந்தநயனவொளி வழியாகப்போய் ரூபத்தைக்கிரகிக்குந் தத்துவம் சட்சு.

நாக்கிலே அப்புவினிடமாக வந்தடைந்த ரசத்தைக்கிரகிக்குந் தத்துவம் சிங்குவை.

மூக்கிலேயிருந்து பிருதிவியினிடமாக வந்தடைந்த கந்தத்தைக் கிரகிக்குந் தத்துவம் ஆக்கிராணம்.

காது முதலான தானங்களிருக்கவுஞ் செவிடர் முதலோர்களுக்குச் சத்தாதிகளறியப்படா திருக்கையாலந்தத் தானங்களிலிந்திரிய மில்லையென்க.

இவற்றிற்கந்நியமாய், வைகரி யகங்காரத்திலே வாக்கு முதலான கன்மேந்திரியங்களுண்டாம்.

இவற்றில், நாக்கினிடமாக நின்று சொற்களை வசனிக்குந் தத்துவம் வாக்கு; கால்களிடமாக நின்று நடத்தல் ஓடன் முதலியவற்றைச் செய்விக்குந்தத்துவம் பாதம்; கைகளினிடமாக நின்றுஈதலேற்றன் முதலிய தொழில்களைச் செய்யுந் தத்துவம் பாணி; குதத்திலே நின்று மலவிசர்க்கங்களைப் பண்ணுந் தத்துவம் பாயு; குய்யத்திலே நின்று ஆனந்தத்தைப்பண்ணுந் தத்துவம் உபஸ்தம்.

இனிப்பூதாதி யாங்காரத்திலே நின்று பஞ்சதன்மாத்திரையுண்டாம்; அர்த்தந்தரும் விசேடமின்றியிருக்குஞ் சாமானிய சத்தம் சத்ததன்மாத்திரை; குளிர்ச்சி யுஷ்ணமுதலான விசேடணமற்றுச் சாமானிய சத்தமும் சாமானிய பரிசமுமாயிருப்பது பரிசதன் மாத்திரை; வெண்மை, கருமை, செம்மை முதலிய விசேடங்களற்று ரூபசாமானியச் சத்தபரிசரூபமாயிருப்பது ரூபதன்மாத்திரை; மதுரமுதலான விசேடமற்று ரசசாமானியமாய்ச் சத்தபரிசரூபரசமாயிருப்பது ரசதன் மாத்திரை; நற்கந்தந் துர்க்கந்தமாகிய விசேடமற்றுக் கந்தசாமானியமாய்ச் சத்த பரிச ரூப ரச கந்தமாயிருப்பது கந்ததன் மாத்திரை.



இவ்வாறாகிய பரிசமுதலான தன்மாத்திரைகளிலொவ்வொரு குண மதிகமதிகமாகக் கூடியிருக்கையால், வாயுவாதி பூதங்களினுமொவ்வொரு குணமதிகமெனவறிக.

இந்தச்சத்தாதி தன்மாத்திரைகள் ஆகாசாதி பூதங்களுடைய சூக்குமாவத்தைச் சத்தாதிதன்மாத்திரையிலே நின்றும் ஆகாசாதி பூதங்களுண்டாம்.

ஆகாயம் சத்தத்தன் மாத்திரையிலேயுண்டானதா, யிடங்கொடுப்பதாய்த், தூலமாய்ச், சுத்தமாய், வன்னரூபமாய்ச், சத்தத்தைக் குணமாயுடையதாயிருக்கும்.

வாயு, சத்தத்துக்குப் பேரிமுதலான நிமித்தமொழிந்து குணியல்லதாய்ப், பரிசதன்மாத்திரையிலே யாரம்பிக்கப்பட்டதாய், உஷ்ணமு மநுஷ்ணமுமல்லாத பரிசத்தையுடையதாய்ச், சத்தத்தையுடைத்து; இது பிராணன், அபானன் முதலாக வநேகபேதமுடையதாய்த் திரட்டுதலென்னுந் தொழிலைப்பண்ணும்.

அக்கினி, ரூபதன்மாத்திரையிலுண்டானதாய்ச், சிவந்தரூபத்தையுடையதாய்ப், பிரகாசரூபமாய், உஷ்ணபரிசத்தையுடையதாய்ச், சத்தத்தையுடையதாய்ப், பாகத்தைப் பண்ணுவதாயிருக்கும்.

அப்பு, ரசதன்மாத்திரையிலுண்டானதாய், வெண்ணிறத்தையும் ரசத்தையுங்குளிர்ந்த பரிசத்தையுஞ் சலசலசத்தத்தையுமுடையதாய், நெகிழ்ச்சியாய்த், தூள் முதலியவற்றை வலியவுண்டையாகப் பண்ணுவதாயிருக்கும்.

பிருதுவி, கந்ததன்மாத்திரையிலுண்டானதாய்ச், சுகந்த துர்க்கந்தங்களையு மதுரமுதலான வாறு ரசங்களையும் வெண்ணிறமுதலிய நானாவித வன்னங்களையுஞ் சூரியன் அக்கினி முதலியவைகளின் கூட்டுறவின் பாகத்திலுண்டானதாய், உஷ்ணமுமநுஷ்ணமுமல்லாத

பரிசத்தையுங்கூட கடசத்தத்தையுமுடையதாய்க், கடினதாரகரூபமா யிருக்கும்.

இந்த பஞ்சபூதங்களொன்றி லொன்றுண்டாகாது. காரணகு ணங்காரியத்திலே வரவேண்டுமென்னும் வாக்காலென்க.

தத்துவமாவது, பிரளயமட்டாக விருக்கிறதாகையாற் சரீராதி கள் தத்துவமல்ல பூதவிகாரமாம்.

இச்சிவ தத்துவமுதற் பிருதிவிதத்துவமீறான முப்பத்தா றுஞ் சாதாரண மசாதாரணமென்றிருவகைப்படும்; சாதாரணமாவது புவனத்திற்காதாரமாய்த் தூலமாயிருக்கும்; அசாதாரணமாவது, சூக்குமரூபமாய் ஞானக்கிரியையை விளக்குவதாக வான்மாக்கடோ றும் வெவ்வேறாயிருக்கும்.

இனிச், சுத்தமாயாகாரிய மைந்திற்குஞ் சிவதத்துவமென்றுஞ், சுத்ததத்துவமென்றுஞ், சுத்தாத்துவாவென்றும், பிரேரககாண்டமெ ன்றும் பெயர்.

மாயாதிகளேழுக்கும் வித்தியாதத்துவமென்றும், ஈசுவரதத்து வமென்றும், போக காண்டமென்றும், மிச்சிராத்துவாவென்றுஞ், சுத்தாசுத்த தத்துவமென்றும் பெயர்.

சித்தமுதலான விருபத்துநான்கு தத்துவங்களுக்குமான்மதத் துவமென்றும், அசுத்ததத்துவமென்றும், போக்கியகாண்டமென் றும் அசுத்தாத்துவாவென்றும் பெயர்.

இந்தத்தத்துவங்களால் வருங்காரியங்கள் சாதாரணமென்றும், அசாதாரணமென்றும், பொதுச்சிறப்பாகிய உபையரூபமென்று மூ வகைப்படும்; இவற்றிற் புவனங்களெல்லார்க்கும் போகவேதுவாகை யாற் சாதாரணமாம். பஞ்சதன்மாத்திரைகள், மனவகங்காரபுத்தி களிந்த வெட்டுத்தத்துவங்கள் கூட்டுறவினாலுண்டான புரியட்டக தேகம் அவரவர்களுக்குப் போகவேதுவாகையால் அசாதாரணமாம். இந்தப்புரியட்டக தேகத்திலே நின்றுமான்மாவொருலோகத்திலே போக்குவரவுடையவனாவன். ஸ்திரீமுதலியவருடைய தூலதேகம் அவர்



களுக்குப் போகத்துக்கு ஏதுவுமாய்க் கணவனுக்குப் போக்கியமுமா யிருக்கையாலுபையரூபமாம். இவ்வாறு மற்றைத்தேகங்களுமுபைய ரூபமெனவறிக.

இனித், தூலதேகமானது சூக்குமபூதங்களைவிட்டு நீங்காமன் மாதாபிதாக்களுடைய சுரோணித சுக்கிலங்களுடனேயுண்டாம்.

அவ்வாறுண்டாகுமாறு, எலும்பு, மாமிசம், மயிர், தொக்கு, நகம், தந்தம், நரம்பு இவை முதலியன சூக்குமபிருதிவியிலும்; மூத் திரம், இரத்தம், கபம், வேர்வை, சுக்கிலமிவைமுதலியன சூக்குமமான அப்புவிலும்; இருதயதாபங் கண்களிற் பித்தபாக முதலானவை சூக்குமமான வக்கினியிலும்; பிராணன், அபானன், உதானன், வியா னன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்ச யன் இவைபத்துஞ் சூக்குமவாயுவிலும்; ஆகாசமானது, சூக்குமாவ காசத்திலுமுண்டாம். இவ்வாறு சூக்கும பூதத்தினின்றுந் தூலதே கமுண்டாமெனவறிக.

இவ்வாறாணவமாயை கன்மங்களாலே தத்துவதாத்துவிகமான சகலபந்தங்களுடனுங் கூடினசகலருக்கு முன்சொன்ன கேவலாதியவத் தைகள் சாக்கிராதியாக வொவ்வொன்றைந்து வகையாகப் பதினைந் து பேதப்படும்.

---

கேவலாவத்தையைந்திற் சகலாவத்தையைந்திற்கு மிலக்கணம் வருமாறு;

கேவலத்திற் சாக்கிரஞ், சொப்பனஞ், சுழுத்தி, துரியந், துரியா தீத மென்றைந்துவகையாகும்.

கேவலத்திற் சாக்கிரமாவது; ஆன்மாமுப்பத்தாறு தத்துவங்க ளுடனுந் தாத்துவிகங்களறுபதுடனுங் கூடச் சகலவிடயபோகங்களையு மநுபவித்துக்கொண்டிருக்கும் வேளையிலே போகவேதுவான கன்ம மில்லாதிருக்கையாற் பிரேரககாண்டமாகிய சுத்ததத்துவங்களைந்தும், போககாண்டமாகிய கலாதிகளேழும், பிருதிவிமுதலான பூதங் களைந்துமாகப் பதினேழு நீங்கச் சுரோத்திரமுதலாகிய ஞானேந்திரிய

ங்களைந்தும், வாக்குமுதலாகிய கன்மேந்திரியங்களைந்தும், சத்தமுதலாகிய தன்மாத்திரைகள் ஐந்தும், வசனமுதலாகிய தாத்விகமாகிய வசனாதிகளைந்தும், *பிராணன் முதலாகிய தாத்துவிகமாகியவாயுக்கள்பத்தும், மனமுதலாகிய வந்தக்கரணங்கள் நான்குமாகிய முப்பத்துநான்கு கருவிகளுடனுங்கூடிக் கேத்திரிகனாகிய °வான்மாவுங்கூட முப்பத்தைந்தாய்ச்சாக்கிரதானமாகிய லலாடத்திலேநின்று மேற்கூறிய பிரேரிக்கிற தத்துவமும் புசிக்கிறதத்துவமுந் தாரகமாகிய பூதங்களுநீங்குகையால் ஆணவமலமேலிட்டுக் கண்டுங்காணாமற்கேட்டுங் கேளாமன்மயங்கி யிருக்குமவதராம். இது அறிவில்லாச்சாக்கிரம்.

பிறம்பேவிடயங்களைக்கிரிக்கு ஞானேந்திரியமைந்துங், கன்மேந்திரியங்களைந்துமாக இப்பத்து நீங்கநின்ற சத்தாதியைந்தும், வசனாதியைந்தும், பிராணாதிவாயுபத்தும், மனாதியந்தக்கரணநான்கும், கேத்திரிகனுமாகிய விருபத்தைந்துங் கண்டத்தானத்திலேநின்று சாக்கிராவத்தையிலே நின்றனுபவித்த போகத்தை நினைக்கவுந் தற்காலத்திலே வருஞ்சூக்குமதேகபோகமாகிய ஆனையேறிமலைசூடுதன் முதலிய வற்றையனுபவிப்பது கேவலசொப்பனம்.

முற்கூறிய சொப்பனாவத்தையிற் கூடியிருந்த விருபத்துநான்கு கருவியில் இருபத்திரண்டு நீங்கநின்ற சித்தமும் பிராணவாயுவுங்கேத்திரிகனுங் கூடியிருதயதானத்திலே நின்று சுகமாய்த்தூங்குவது கேவலசுழுத்தி.

சித்தமுநீங்கவுச்சவாச நிச்சுவாசம் பண்ணிக்கொண்டு தேகத்துக்குக் காவலாயிருக்கிற பிராணவாயுவுடன் கேத்திரிகனுங் கூடி நாபித்தானத்திலே நின்று, ஒன்றுந்தெரியாமற் றூங்குவது கேவலதுரியம்.

பிராணவாயுவைநீக்கிக் கேத்திரிகனாகிய ஆன்மா வொருவனே தனித்து மூலாதாரத்திலே யாணவமலத்துடனே கூடியோரறிவுமற்றிருப்பது கேவலதுரியாதீதம். இந்தவதீதவவத்தை தானே நித்தியகேவலவவத்தையாம்; இவற்றிற்குக் கீழாலவத்தையென்றும் பெயராம்.



சகலத்தின் மத்தியாலவத்தையாவது:—இலாடத்தானத்திலே நின்று ஆன்மாச் சகல விடயங்களையுமனுபவிக்கிற வேளையிலே கல்லெறி முதலியவைகளாலுஞ் சிசுமரணங்கேட்பது முதலியவைகளாலுந் திடுக்கிடப் பிராணவாயுஞ் சீவியாமலொன்றையுமறியாமன் மூர்ச்சித்து மயங்கி நின்றவவதரஞ் சாக்கிராதீதம்.

அற்பமாகப்பிராணவாயு சீவித்துப் பெருமூச்செறிவது சாக்கிரத்திற் றுரியம்.

சித்தத்துடனும் பிராணவாயுவுடனுங் கேத்திரிகன்கூடித் துக்கமாத்திரத்தையறிவது சாக்கிரத்திற் சுழுத்தி.

ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும், பிராணாதி வாயுக்கள்பத்தும், அந்தக்கரணநான்கு, மாகவிருபத்துநான்குடன் கேத்திரிகனுங்கூடியிருபத்தைந்தாய்த் துக்கமிதனாலே வந்ததென்ற துர்ச்சிந்தையுடனே துக்கத்தையனுபவிப்பது சாக்கிரத்திற் சொப்பனம்.

தத்துவ தாத்துவிகங்களெல்லாவற்றினுங் கூடிச்சர்வவிடயங்களையு மநுபவிப்பது சாக்கிரத்திற் சாக்கிரம்.

சகலாவத்தையுடையவனாகிக் கலையினாலே விளங்கப்பட்ட ஞானக்கிரியா சொரூபமான சைதன்னியத்தையும் வித்தையினால் விளங்கப்பட்ட விடய ஞானத்தையும், இராகத்தினாலே விடயத்திலேயிச்சையுங், குணரூபமான பிரதானத்தினாலும் புத்திமுதலான கரணசமூகத்தினாலும் அவற்றின் காரியங்களாற் போதிக்கப்படும் புருடனாகி, நியதியுடன் கூடுகையாற்றான் புசிக்கப்பட்ட போகங்களிலே நியமிக்கப்பட்ட காலத்திலே அந்தக்காலத்தி லெண்ணப்பட்டபோகத்திலே மோகிதனாகி, இவ்வாறு தத்துவகலாபந்தங்களுடையனாய்க், கிஞ்சித்துவமுள்ளவனாய்த், தூலசூக்குமதேகங்களுடன் கூடினவனாய், மாயாபோகங்களிலே கூடித் தன்வயனாகித், தேகாதிகளே தானென்று விசாரித்து மூடனாகித்திரிகிற காலத்தில், வேதபாகியமான சமயங்களிலேயிருந்து பண்ணின புண்ணிய விசேடங்களினால் வேதத்துக்குள்ளாயிருக்கிற சமயங்களையடைந்து, அவைகளிலிருந்து பண்ணின புண்ணிய விசேடங்களினாலே, அவற்றின் விசிட்டமு

ன வைதிகசைவ சமயத்தை யடைந்து, சமயவிசேடதீக்கை பெற்றுச் சாலோகாதிகளை யடைந்து, அங்கே யிருந்துவந்து, புண்ணியபூமியிற் செனித்துக், கிரியைமுதலிய வற்றை யநுஷ்டித்து அவைகளினாலே யிருவினையொப்பு மலபரிபாகம்வர, நிவிர்த்திமுதலிய மந்திரசத்தியும் பதிய, நல்லாசிரியனைத் தேடுங்கால், யார்க்குமனுக்கிரகமாயிருக்கிற சிவமே கிருபையினாலே கிருதகாடின்னியம்போல் ஆசாரியனாகக்கண்ணப் பட்டுத் திருநோக்கமுதலியவற்றால் மந்திராதி பஞ்சாத்துவாகற்பித நிவிர்த்தியாதிகலைகளைச்சோதித்துப், பாசச்சயம்பண்ணிப், பரிபாகத் துக்கேடாகச் சுத்தாத்துவிலே யிருக்கயோக்கியனாகச்செய்துசச்சிதா னந்த சிவமாகப்பண்ணும்.

உத்தமவிலக்கணனான ஆசாரியன் உத்தமவிலக்கணனாயிருக்கிற சீடனுக்குச் சாத்திரத்திலே சொன்னபடி சமயவிசேட நிருவாண வபிடேகங்களைப் பண்ணுவன்; அவன் ஆலோகனஞ்செய்தமாத்திரத் திலே பரமானந்தமுண்டாகும்; அவனே ஞானாசாரியனெனவறிக.

அவ்வாசாரியன் சத்திநிபாதமுடைய தீவிரதரபக்குவனுக்குச் சாம்பவதீக்கை பண்ணுவன்.

சாம்பவதீக்கையாவது:— ஞானதீக்கை கிரியாதீக்கை யென வநேக பேதமாயிருக்கிற நிருவாண தீக்கையினும் வேறாய்ச் சிவசீவர் களுடையதாதான்மியத்தை விளக்குவதெனவறிக.

இவ்வாறு சாம்பவதீக்கை பெற்றுச் சிவசொரூபமான ஆசாரி யனாலே இந்திரிய வேடருடன் கூடி நம்மிலங்கியமானவுனது சொரூபத் தை யறிந்தாயில்லை நாமே நீயாவாயென்று போதிக்கப்பட்டவன் றான் சிவனைக்காட்டினு மகியனென்றுசிந்தித்தல் தெளிதல்செய்து, ஆணவாதிபாசங்களை நீக்கிச், சச்சிதானந்த சொரூபமான சிவத்தை யே யநியமாகச் சாட்சாற்கரித்து, அதிலே யழுந்தி யதுவேயாய்க், காசமற்றகண் சூரியப்பிரகாசத்துடன்கலந்து பின்னொன்றுங் காணா ததுபோலப் பசுகரணஞ் சிவகரண மாகையாலே நின்மல சாக்கிராதி யான அத்தாவத்தைகளைப் பொருந்துவன்; அவை வருமாறு?

நின்மல சாக்கிரமாவது:— நின்மலசாக்கிராவத்தைக்குத் தான மாகிய திருவபுத்திலே [illegible] உப்பனத்திலே



யழுந்து உப்பாமாறுபோல, ஜீவிபூதமாய், அகார உகார மகார விந்து நாதங்களுடன் கூடிய மனம், அகங்காரம், புத்தி, சித்தம், உள்ளம் என்னும் அந்தக்கரணமைந்துடன் கூடினவாகிய இந்திரியங்களாற் காணப்பட்ட சத்தாதி விடயங்களைச் சிவாகாரமாகவும் விடயசுகங் களைச் சிவானந்தமாகவுமனுபவிப்பது நின்மல சாக்கிரமாம்.

நின்மல சாக்கிராவத்தைக்குக் காரணமான அகாரம் உகாரத்தி லும், புறம்பே விடயங் களைப்பற்றுமனம் அகங்காரத்திலும், கிரி யாசத்தி ஞானசத்தியிலுமொடுங்க, அகங்காராதி நான்குடனும் அத ற்குப் பிராணனாகிய ஞானசத்திமுதல் நான்குடனுஞ் சொப்பனாவத் தைக்குத் தானமாகிய கண்டத்தானத்திலே அந்தக்கரண விருத்தியு டன் சிவோகம்பாவனை பண்ணி நிற்பது நின்மல சொற்பனம்.

நின்மல சொப்பனவத்தைக் காரணமாகிய உகாரம் மகாரத்தி லும், நானென்றுகிரிக்கிற வகங்காரம் புத்தியிலும், ஞானசத்தி இச் சாசத்தியிலும் ஒடுங்கப்,புத்திமுதன் மூன்றும் அவற்றைப் பிரேரிக்கு மகாராதி மூன்றும் அவற்றிற்குப் பிராணனாகிய இச்சாசத்தி முதன் மூன்றுடனுஞ் சுழுத்தித்தானமாகிய மூலத்திலே தேகவிந்திரிய வியா பாரமற்று வாசாமகோசரமாய் ஞாதுருஞான ஞேய மூன்று மூன் றாகச் சுகத்தை யனுபவித்து நிற்பதுநின்மல சுழுத்தி.

நின்மல சுழுத்தியவத்தைக்குக் காரணமான மகாரம் விந்துவி லும், பகுத்து நிச்சயிக்கிற புத்தி சித்தத்திலு மொடுங்கச், சித்தமு தலாகிய விரண்டும் அவற்றைப் பிரேரிக்கிற விந்துநாதங்களும் அவ ற்றிற்குப் பிராணனாகிய ஆதி பரை யென்னு மிரண்டு சத்திகளுடனு ந்துரியாவத்தைத் தானமாகிய புருவமத்தியிலே நின்று, தேகேந்திரி யவந்தக்கரண வியாபார மொன்றுமற்றுக்கேவல ஞானமாத்திரமாயி ருப்பது நின்மலதுரியம்.

நின்மலதுரியாவத்தைக்குக் காரணமான விந்துவும் அர்த்த நா தமுங் குடிலையிலுஞ், சித்தம் 'பிரகிருதியிலும்' ஆதிசத்தி பராசத்தியி லுமொடுங்க, நின்மல துரியாதீதவவத்தைக்குக் காரணமாகிய அநாத நாதமென்னும் பராசத்தியுஞ் சிவானந்தானுபவியாகிய சொரூப ஞா னமாகிய வுள்ளமுமடங்க, நின்மல துரியாதீத வவத்தைக்குத்தா—

மாகிய பிரமரந்திரத்திலே அகண்டாகாரசச்சிதானந்த பரிபூரணசிவா னந்தானுபோகத்தை யிரண்டறப்பெற்றிருப்பது நின்மலதுரியாதீதம்; இதுவே, உண்மைக்குமேற்பட்டிருக்கிற மோக்ஷம்.

இந்தநின்மல சாக்கிராதீதத்தைப்பெறவே நிவிர்த்திமுதலான பஞ்சகலைகளும், அன்னமய முதலான பஞ்சகோசங்களும், அகராதி சூக்குமபஞ்சாக்ஷரமும், நகராதிதூலபஞ்சாக்ஷரமுஞ், சத்தியோசாதாதி பஞ்சமந்திரங்களும்,பிரமாமுதலான பஞ்சகர்த்தாக்களுஞ்,சுத்தவித்தைமுதலான பஞ்சதத்துவங்களும், உள்ளத்துடன் மனமுதலான வந்தக்கரணங்களைந்தும், வைகரி முதலான வாக்குக்களைந்துங், கிரியாசத்தி முதலான பஞ்சசத்திகளும், ஆணவாதிபஞ்சபாசங்களுஞ், சர்வவுபாதிகளுநீங்கும்.

இவ்வாறு நின்மலதுரியாதீதவவத்தையை யொருபசுக்கறக்கிற நேரமாயினும், வில்லம்பு பூமியில் விழுகிற நேரமாயினுங் கண்ணிமை பொருந்துநேரமாயினும் பெற்றவர் பூமியின் மீளப்பிறவார்; இவ்வாறு நிட்டைகூடியவர்க்கு விதிநிடேத புண்ணியபாவமொன்றுமில்லை; இவர்செய்தபுண்ணிய பாவமிவர்க்கிதாகிதஞ் செய்பவனுக்குச் சாரும். இவ்வாறு நின்மலசாக்கிராதியனுபவித்துக்கொண்டு சீவன்முத்தராயிருந்து தேகாந்திரத்திலே பரமபேரட்சத்தையடைவர்.

---

இனி, பரமதத்தை நிராகரியாதிருக்கிற் றன்மதம் பிரதிட்டையாகாதென்கிற நியாயத்தாற் பராது மோக்ஷத்தை நிராகரித்துச்சித்தாந்தத்திலே முத்திசொரூபங் கூறுவாம்.

சாருவாகன் முதலானவர்கள், தங்கடங்கள் புத்திக்குத் தக்கதாகவெவ்வேறேமோக்ஷ நிரூபிப்பார்கள்; சௌத்திராந்திகன் சகலமாயிருக்கிறதுக்கங்களுக்குங் காரணமாயிருக்கிற தேகமென்கிற அவாவிடய்நாசமே பரமுத்தியென்றும், பௌத்தரிலே சிலர் உபத்திரமற்றிருக்கிற சித்தசந்ததியே மோக்ஷமென்றுஞ், சிலர் சித்தசந்தானமற்றுப்போவதே பரமமோக்ஷமென்றும், ஆருகதனைப்போது மேலேபோகிறதே பரமமோக்ஷமென்றுஞ், சாங்கியர் பிரகிருதியின்



விகாரங்களுடைய வியாபாரமற்ற வளவிற் புருடனுக்குச்சொரூபமாயிருக்கிறதே பரமமோக்ஷமென்று கூறுவர்.

போகர் சித்தவிகமாயிருக்கிற பிரகிருதி போகமே பரமமோக்ஷமென்றும்; அவரவர்கள் பத்தர்கள் கணபதி, இந்திரன், சூரியன், பிரமா, விட்டுணு, ருத்திரனிவர்களுடைய சாலோக்கியஞ் சாமீப்பியஞ் சரூப்பியஞ் சாயுச்சியமே பரமமோக்ஷமென்றும்; சிலர் சீவான்மாவுக்குப் பரமான்மாவிலே லயிக்கிறது பரம மோக்ஷமென்றும்; வைராயிகர் அத்தியந்தமான துக்கமற்றுப்போகிறது பரம மோக்ஷமென்றும்; பாட்டாசமயிகள் நித்தியமான சுகம் விளங்குவதே பரமமோக்ஷமென்றுஞ்சொல்வர். சிலர் முத்தியிலே யான்மாக்களுக்கெல்லாங்கிரியாசத்திவிளங்குகிறது மாத்திரமன்று, பின்னென்னெனிற் கிருத்தியம் பண்ணுகிறது முண்டு; சிவன் றனக்கொத்திருக்கிற முத்தான்மாவிலே சகத்துண்டாக்குகிறதுகூடுமென்றும், மறைகையினாலே கர்த்தாவல்லவாகையாற் கர்த்தாவாயிருக்கிற சிவனைக்காட்டிலும் அதிக கிருத்தியம் பண்ணுகிறது பரமமோக்ஷமென்றுஞ்சொல்வர்; சிலர் சர்வக்கியனாயிருக்கிற சிவனைக்காட்டிலும் முத்தனுக்காதிக்க மிருக்கப்பெற்றுஞ் சர்வகர்த்தாவாயுஞ் சர்வக்கியனாயுமிருக்கிற சிவனுடனே சரியாயிருக்கிறது முத்தியென்றுஞ்சொல்லுவார்.

இன்னுஞ் சாமீப்பியத்தை நான்காகச் சொல்வார்கள்; எவ்வாறெனில்? பாசுபதர்கள் ஈசானிடத்திலேயிருக்கிற சருவக்கியத்துவம் ஆன்மாவினிடத்திலே சங்கிரமிருக்கிறது பரம மோக்ஷமாமென்றும்; மகாவிரதர் தமக்கு அப்போது சர்வஞ்ஞத்துவமுண்டாகிறது பரம மோக்ஷமென்றும்; சிலர் சர்வக்கியனுக்கயின் சமாவேசமே பரம மோக்ஷமென்றும்; சைவ ஏகதேசிகள் சத்தியமாய் மலத்திலே யடைவரிக்கப்பட்டிருக்கிறதினாற் சர்வக்கியனாகைக்குஞ் சர்வகர்த்தாவாகைக்குந்தடையான மலம் போகையினாலே விளங்குகிறதே பரமமோக்ஷமென்றும்; மாயாவாதிகள் அநிர்வசனமான அவித்தியா நிவிர்த்தியினாலே ஆனந்தத்தைப் பெறுதல் பரம மோக்ஷமென்றுங் கூறுவர்; இவைகளெல்லாம் பரமமோக்ஷமல்ல.

சரீரநாசஞ், சித்தசந்தானங்கெடுதல், சிவலயஞ், சொரூபாவத்தானம், அத்தியந்தமான துக்கங்கெடுதல் இவைபரமபுருடார்த்தமல்ல, அறியப்படாதிருக்கையால்; அறியப்படாதது புருடார்த்தமல்லாதது; ஆகையாற் சரீரநாசஞ், சித்தசந்தானங்கெடுதல், சிவலயமென்னு மூன்றுமறிகிறவனே யில்லாமற்போகையால், மற்றைச்சொரூபாவத்தான முதலான மூன்றினுஞ் சரீரமுதலானவைகள் அங்கீகரியாதிருக்கையாற் சுயம்பிரகாசமாக வங்கீகரியாதிருக்கையால், அறிகிறது கூடாதிருக்கையால், காணாபத்தியமுதலான சாரூப்பியாதிகளுக்கும்புராணங்களினு மாகமங்களினு மோக்ஷமென்று சொல்லப்பட்டாலுஞ் சரீரபந்த முண்டாகையாலஃதுள்ளபொழுதே துக்கமுதலானவையும் அவசியம்வேண்டுகையால், அச்சரீரங்காரியமாகையினாலே, அவசியங்கெடுதல் கூடுகையால், முத்தனுக்குத் திரும்பச்செனனம் வர்த்திக்கையினாலே, திரும்பச்செனியாதிருக்கிற பரமபுருடார்த்தமான பரமமோக்ஷமாகைகூடாது; பின்னையாதெனில்? குணமுத்தியாதல் கூடுமாகையினாலே அருவும், தானேயெப்பொழுதும் ஊர்த்துவ கமனஞ் சாத்தியமாயிருக்கிற பிரகிருதிபோகமும், பரமமோக்ஷமாகை கூடாது; இவைகளிரண்டுஞ் சரீரமாகையினாலே முன்சொன்ன பக்ஷத்திலேயுள்ள தூஷணங்களிவற்றிற்கும் வருகையால், உபத்திரவமற்ற சித்தசந்ததியும் அப்பிரமாணியமாகையினாலும், புருடனாலே யபேக்ஷிக்கப்படாதிருக்கையினாலும், பரமமோக்ஷமல்ல; சிவனைக்காட்டிலுமதிகமாகை யொருக்காலுங்கூடாதாகையாற், சிவாதிக்கமும் பரமமோக்ஷமல்ல; சங்கிராந்தரூபமாகிய சாம்மியம் சிவனிடத்திலே ஞானமில்லாமற் போகப்பண்ணுகையால் அதுவும் யோக்கியமல்ல; ஆதலாற் பரமமோக்ஷமல்ல; உற்பத்திசாம்மியமும், அநித்தியமாகத் தெரிகையாற் கூடாது; ஆகையால் பரமமோக்ஷமல்ல, ஆட்சேபமான சாம்மியம் முத்தனுடைய ஞானத்தைத்தெரியாதபடி பண்ணுகையால், அபேக்ஷிக்கப்படாதிருக்கையாற், பரமமோக்ஷமல்ல; சைவ ஏகதேசிகள் சொல்லுகின்றவேறேயொருபடித்தான சாம்மியம், ஏகதேசத்திலேயொப்பாகி எல்லாருக்குஞ் சாதாரணமாகையால், சாமீயம் ரூபமல்ல, எல்லாமொத்தார்த்தமாயிருக்கிற முத்தியென்கிறதிற் சங்கையேயில்லை; நித்தியமான சுகம் விளங்குமென்கிற பக்ஷத்திலே விளங்குதலாவது ஆணவம் அழிபலப்படுவது





மாதுரமாகில் அப்போது நமது மதத்தைப்பிரவேசித்ததே. ஞானம் அப்போதாகில் அநாதியாகிற புருடார்த்தமல்ல; உண்டானதாகில் அநித்தியமாகும்; அநிர்வசனீயமான அவித்தையிலே பிரமாணமில்லாதிருக்கையால் மாயாவாதிசொல்லுகிற முத்தியும் பரமமோக்ஷமல்ல; பின்னைப்பரமமோக்ஷம் யாதெனில்? ஆவாரகமாயும், விட்சேபமாயுமிருக்கிற மலமாயாதிபாசச்சயத்திலே பரமானந்தமான சிவதாதான்மியத்தினுடைய அபிவியாப்தியே பரமோக்ஷமாம்.

இனி, மோக்ஷசாதனம், ஞானம், பிரபத்தி, வைராக்கியமென மூன்று. இவற்றின்ஞானமாவது—தத்துவரூபம், தத்துவதெரிசனந், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதெரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபஞ், சிவதெரிசனஞ், சிவயோகஞ் சிவபோகமிந்தத்தசவிதத்தையுங் குருகடாக்ஷத்தினாலேயறிந்து அநந்நியமாயிருக்கிற சிவபோகமேயெனவறிக.

இவ்வாறு கூடுவதரிதாகில், எங்குஞ்சிவம் வியாபகமாயிருக்கிறதையு, மவனிடத்திலே யெல்லாமிருக்கிறதையு மவனருள்வழித்தன்றி யொன்றையினுமறிய முடியாதென்பதையு மறிந்து, அவனேவற்படிசெய்கிறோமென்று எல்லாப் போகத்தையுஞ் சிவார்ப்பணம் பண்ணி, நாமொருவனேவற்பணிசெய்கையால், நமக்குப் புண்ணியபாவமென்று தன்னைப்பின்னிட்டுச் சிவனை முன்னிட்டுக்கொண்டு அவனுடைய வாசீனாகிப்பஞ்சாக்கரத்திலே திரிபதார்த்தத்தினுண்மையையறிந்து பாசத்தைக் கீழாக்கிப் பரசிவத்தை முன்னாக்கி விதிப்படியுச்சரித்துக் கொண்டு வாசனாச்சயம்பண்ணி, சிற்பன்னாகியருப்பதாகப் பாவித்துத் தான்செய்கின்ற கிரமத்திலே முன்சொன்ன சிவானுபவங்கூடும். இதுவுமரிதாகிற் குருலிங்கசங்கமத்திலே வழிபட அஞ்ஞானம்போய்ச் சிவஞானம் பிரகாசித்து, முன்சொன்ன சிவானுபவம் பெற்றிருப்பன்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க.

ஞானாமிர்தக்கட்டளை முற்றிற்று.

## [illegible]கட்டளை.

எ-வது பக்கத்திற் கூறிய ஆணவத்தின் பெயர் வேறுபாடும் பொருளும்.

ஆவிருதி - பிரச்சன்னபடம் போல மறைப்பது. ஆவரணம் - பித்திகைபோல மறைப்பது. அவித்தை - அறிவின்மையுடையது. மிருத்திபு - மரணக்குறியைக்காட்டுவது. மூர்ச்சை - செயலற்று கிடத்தலைச்செய்வது. பசுத்துவம் - ஆன்மாவின்றன்மையாயிருப்பது. மலம் - அழுக்குடையது. அஞ்சனம் - களங்கத்தையுடையது. பாசம் - கயிற்றையொத்திருப்பது. தமசு - தன்னையுஞ் சிவத்தையுமறியவொட்டாமல் அந்தகாரம் போன்றிருப்பது. ஜென்மபீசம் - ஜனிப்பதற்கு மூலமாயிருப்பது. மூலமலம் - அடிவேர்போல மலமாயிருப்பது. மோகம் - மயக்கத்தைப்பண்ணுவது. பந்தம் - கட்டுவது. அசுத்தி - சுத்தமில்லாதது. அஞ்ஞானம் - அவித்தை. சகசமலம் - இயற்கையாயுள்ளது. திமிரம் - தமசு. க்ஷயம் - குறைவுசெய்வது. வியாகதம் - கேடுசெய்வது. சடம் - அறிவில்லாதது. நிரோதம் - தடையாயுள்ளது. விலாணிபாவம் - வாடுந்தன்மையைச் செய்வது. ஆணவம் - வியாபகமாகிய வுயிரையு மணுத்தன்மைப்படுத்துவது. இவ்வாறிந்நூலிலெழுதப்பட்டிருக்கிறது.

—:(o):—

இந்நூல்செய்தார் பெயர் காலமுதலியன எழுதப்படவில்லை. திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தில் எனக்குக் கிடைத்தகால முதலிதுவரை யிருப்பத்தைந்து வருடமாக வைத்திருந்து வேறுமொரு பிரதிதேடிக்கொண்டிருந்தேன்; கிடைக்கப்பெறாமையால் இன்னுங் காலத்தைக்கழிப்பது நீதமன்றென்று நினைந்துச், சைவசித்தாந்த நூல் கற்கப்புகுவோர்க்குச் சிவப்பிரகாசக்கட்டளை, திருவாலவாய்க்கட்டளை முதலிய கட்டளைகட்கெல்லாஞ் சிறப்புடையதாயிருத்தலாற் பேருபகாரமாகுமென்று கருதிச் செந்தமிழ் வாயிலாக வெளியிடுவித்தேன். இனி, பிறவினுஞ் சிறந்தபிரதி கிடைப்பதாயின் ஒப்புநோக்கித் திருத்தங்களை வெளியிடுகின்றேன்.

இங்ஙனம்,

[illegible]. [illegible]. சுப்பிரமணியக்கவிராயர்.

162403

031m 211 N10